# மாஓ சேதுங்

## தேர்ந்தெடுக்கப்பட்ட ராணுவப் படைப்புகள்



# மாஓ சேதுங்

## தேர்ந்தெடுக்கப்பட்ட ராணுவப் படைப்புகள்

SEELAN BOOKS
SIGNATURE
NORWAY

**விடியல்**
கோயம்புத்தூர்

மாஓ சேதுங்
தேர்ந்தெடுக்கப்பட்ட
ராணுவப் படைப்புகள்

வெளியீடு :
விடியல்
3, மாரியம்மன் கோயில் தெரு
உப்பிலிப்பாளையம்
சிங்காநல்லூர்
கோயம்புத்தூர்

இரண்டாம் பதிப்பு :
ஜனவரி 1999

அச்சாக்கம்:
அலைகள் அச்சகம்
சென்னை

விலை :
ரூ. 175

# உள்ளடக்கம்


சீனுவில் சிவப்பு அரசியல் அதிகாரம் இருக்க முடிவது ஏன்? (1928, அக்டோபர் 5) 1

1. உள்நாட்டு அரசியல் நிலைமை 1
2. சீனுவில் சிவப்பு அரசியல் அதிகாரத்தின் தோற்றத்திற்கும் அது நிலைத்திருப்பதற்குமான காரணங்கள் 4
3. ஹுனன்-கியாங்சி எல்லைப் பிரதேசத்திலான சுதந்திர ஆட்சியும் ஆகஸ்ட் தோல்வியும் 9
4. ஹுனனிலும் ஹுபெயிலும் கியாங்சியிலும் ஹுனன்-கியாங்சி எல்லைப் பிரதேசச் சுதந்திர ஆட்சியின் பங்கு 12
5. பொருளாதாரப் பிரச்சினைகள் 14
6. ராணுவத் தளப்பிரதேசங்களின் பிரச்சினை 15

சிங்காங் மலைகளிலான போராட்டம் (1928, நவம்பர் 25) 21

ஹுனன்-கியாங்சி எல்லைப் பிரதேசத்திலான சுதந்திர ஆட்சியும் ஆகஸ்ட் தோல்வியும் 21

சுதந்திர ஆட்சியின் கீழான பிரதேசத்தில் தற்போது நிலவும் நிலைமை 33

ராணுவப் பிரச்சினைகள் 36

நிலப் பிரச்சினைகள் 51
அரசியல் அதிகாரப் பிரச்சினைகள் 59
கட்சி ஸ்தாபனப் பிரச்சினைகள் 63
புரட்சியின் தன்மை பற்றிய பிரச்சினை 74
எமது சுதந்திர ஆட்சி அமையும் ஸ்தலம் பற்றிய பிரச்சினை 78

**கட்சியில் நிலவும் தவருன கருத்துக்களைத் திருத்துவது பற்றி** (1929, டிசம்பர்) 91

சுத்த ராணுவக் கண்ணோட்டம் பற்றி 93
அதீத ஜனநாயகம் பற்றி 98
ஸ்தாபனக் கோட்பாட்டுக்குப் புறம்பான கண்ணோட்டம் பற்றி 100
பூரண சமத்துவவாதம் பற்றி 102
மானசீகவாதம் பற்றி 104
தனிநபர்வாதம் பற்றி 106
அலைந்துதிரியும் கிளர்ச்சிக்காரர் குழுக்களின் சித்தாந்தம் பற்றி 109
கண்மூடித்தனவாதத்தின் மிச்சசொச்சங்கள் பற்றி 111

**சிறு பொறி பெருங் காட்டுத் தீயை மூட்டமுடியும்** (1930, ஜனவரி 5) 115

**சீனவின் புரட்சிகர யுத்தத்தில் யுத்ததந்திரப் பிரச்சினைகள்** (1936, டிசம்பர்) 140

**அத்தியாயம் I**

யுத்தத்தை ஆராய்வது எப்படி 140

1. யுத்தத்தின் விதிகள் அபிவிருத்தி ரீதியானவை 140
2. யுத்தத்தின் குறிக்கோள் யுத்தத்தை ஒழித்தல் 148
3. யுத்ததந்திரமென்பது ஒரு முழுமையான யுத்த நிலைமையின் விதிகளை ஆராய்வதாகும் 150
4. முக்கியமான காரியம் கற்பதிற் சிறந்தவர்களாக இருப்பதே 157

அத்தியாயம் II

சீனக் கம்யூனிஸ்ட் கட்சியும் சீனுவின் புரட்சிகர யுத்தமும் 167

அத்தியாயம் III

சீனுவின் புரட்சிகர யுத்தத்தின் குணுதிசயங்கள் 174
1. இவ்விஷயத்தின் முக்கியத்துவம் 174
2. சீனுவின் புரட்சிகர யுத்தத்தின் குணுதிசயங்கள் எவை? 177
3. இந்தக் குணுதிசயங்களிலிருந்து பிறக்கும் எமது யுத்ததந்திரமும் தந்திரோபாயங்களும் 183

அத்தியாயம் IV

''சுற்றிவளைத்து அடக்குத''லும் அதற்கு எதிரான நடவடிக்கைகளும் — சீனுவின் உள்நாட்டு யுத்தத்தின் பிரதான வடிவம் 186

அத்தியாயம் V

யுத்ததந்திர ரீதியான தற்காப்பு 196
1. செயற்படும் தற்காப்பும் செயற்படாத் தற்காப்பும் 196
2. ''சுற்றிவளைத்து அடக்கும்'' நடவடிக்கைகளை எதிர்த்துப் போரிடுவதற்கான தயாரிப்புகள் 204
3. யுத்ததந்திர ரீதியான பின்வாங்கல் 209
4. யுத்ததந்திர ரீதியான எதிர்த்தாக்குதல் 237
5. எதிர்த்தாக்குதலைத் தொடங்குதல் 241
6. துருப்புகளைக் குவித்தல் 259
7. நடமாட்ட யுத்த முறை 272

8. விரைவில் வெற்றி தோல்வி காணும் யுத்தம் 283
9. அழித்தொழிக்கும் யுத்தம் 291

**ஜப்பானிய-எதிர்ப்புக் கொரில்லா யுத்தத்தில் யுத்ததந்திரப் பிரச்சினைகள்** (1938, மே) 307

**அத்தியாயம் I**

கொரில்லா யுத்தத்திலான யுத்ததந்திரம் என்ற பிரச்சினையை ஏன் எழுப்ப வேண்டும்? 307

**அத்தியாயம் II**

யுத்தத்தின் அடிப்படைக் கோட்பாடு தன்னைப் பேணிக்கொண்டு எதிரியை அழித்தல் 312

**அத்தியாயம் III**

ஜப்பானிய-எதிர்ப்புக் கொரில்லா யுத்தத்திலான ஆறு குறிப்பான யுத்ததந்திரப் பிரச்சினைகள் 314

**அத்தியாயம் IV**

தற்காப்பிற்குள் தாக்குதல்களும், நீண்டகால யுத்தத்திற்குள் விரைவில் வெற்றி தோல்வி காணும் சண்டைகளும், உட்புற முனை நடவடிக்கைகளுக்குள் வெளிப்புற முனை நடவடிக்கைகளும் நடத்துவதில் முன்னோட்டமும் வளைந்துகொடுக்கும் தன்மையும் திட்டமிடுதலும் 315

**அத்தியாயம் V**

கிரமமான யுத்தத்துக்கு இசைவாக நடத்தல் 334

**அத்தியாயம் VI**

தளப்பிரதேசங்களை ஸ்தாபித்தல் 339
1. தளப்பிரதேசங்களின் ரகங்கள் 342

2. கொரில்லாப் பிராந்தியங்களும் தளப்பிரதேசங்களும் 346
3. தளப்பிரதேசங்களை ஸ்தாபிப்பதற்கான சூழ்நிலைகள் 350
4. தளப்பிரதேசங்களின் ஸ்திரப்படுத்தலும் விரிவுபடுத்தலும் 356
5. நாமும் எதிரியும் ஒருவரையொருவர் சுற்றிவளைக்கும் வடிவங்கள் 357

அத்தியாயம் VII

கொரில்லா யுத்தத்தில் யுத்ததந்திர ரீதியான தற்காப்பும் யுத்ததந்திர ரீதியான தாக்குதலும் 360
1. கொரில்லா யுத்தத்தில் யுத்ததந்திர ரீதியான தற்காப்பு 361
2. கொரில்லா யுத்தத்தில் யுத்ததந்திர ரீதியான தாக்குதல் 367

அத்தியாயம் VIII

கொரில்லா யுத்தம் நடமாட்ட யுத்தமாக அபிவிருத்தியடைதல் 370

அத்தியாயம் IX

படைத்தலைமையின் உறவு 376

நீண்டகால யுத்தம் பற்றி (1938, மே) 384

பிரச்சினையை எடுத்துக்கூறல் 384
பிரச்சினையின் அடிப்படை 400
தேசிய அடிமைப்பாட்டுத் தத்துவத்திற்கு மறுப்புரை 406
சமரசமா எதிர்ப்பா? சீரழிவா முன்னேற்றமா? 415
தேசிய அடிமைப்பாட்டுத் தத்துவம் தவறு, விரைவான வெற்றித் தத்துவமும் அவ்வாறே தவறு 422
ஏன் ஒரு நீண்டகால யுத்தம்? 426
நீண்டகால யுத்தத்தின் மூன்று கட்டங்கள் 432

திருகுவாள் வடிவிலான யுத்தம் 451
நிரந்தரச் சமாதானத்திற்காகப் போரிடுவது 458
யுத்தத்தில் மனிதனின் இயக்கப் பாத்திரம் 463
யுத்தமும் அரசியலும் 467
ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தத்திற்கான அரசியல் அணி திரட்டல் 470
யுத்தத்தின் குறிக்கோள் 473
தற்காப்பிற்குள் தாக்குதல், நீண்டகால யுத்தத்திற்குள் விரைவான வெற்றி தோல்விகள், உட்புற முனைகளுக்குள் வெளிப்புற முனைகள் 478
முன்னோட்டமும் வளைந்துகொடுக்கும் தன்மையும் திட்டமிடுதலும் 486
நடமாட்ட யுத்தம், கொரில்லா யுத்தம், ஸ்தான யுத்தம் 508
தேய்க்கும் யுத்தமும் அழித்தொழிக்கும் யுத்தமும் 516
எதிரியின் தவறுகளைப் பயன்படுத்திக் கொள்ளும் சாத்தியக்கூறுகள் 523
ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தத்தில் தீர்க்கமான கைகலப்புகளின் பிரச்சினை 529
சேனையும் மக்களுமே வெற்றியின் அத்திவாரம் 536
முடிவுகள் 544

**யுத்தமும் யுத்ததந்திரமும் பற்றிய பிரச்சினைகள்** (1938, நவம்பர் 6) 557

1. சீனாவின் தனியியல்புகளும் புரட்சிகர யுத்தமும் 557

*2. சீனக் கோமிந்தாங்கின் யுத்த வரலாறு* *566*

*3. சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் யுத்த வரலாறு* *570*

*4. உள்நாட்டு யுத்தத்திலும் தேசிய யுத்தத்திலும் கட்சியின் ராணுவ யுத்ததந்திரத்தில் ஏற்பட்ட மாற்றங்கள்* *573*

*5. ஜப்பானிய-எதிர்ப்புக் கொரில்லா யுத்தத்தின் யுத்ததந்திரப் பாத்திரம்* *579*

*6. ராணுவ விஷயங்களைப் படிப்பதில் அதிக கவனஞ் செலுத்துவது* *584*

**இரண்டாவது கம்யூனிஸ்ட் கட்சி-எதிர்ப்புத் தாக்குதலை முறியடித்தது பற்றிய முடிவுகள்**
(1941, மே 8) *592*

**இரண்டாவது உலக யுத்தத்தின் திருப்புமையம்**
(1942, அக்டோபர் 12) *605*

**கூட்டரசாங்கம் பற்றி (''மக்கள் யுத்தம்'' ''மக்கள் படை'' என்ற இரு பகுதிகள்)** (1945, ஏப்ரல் 24) *616*

**ராணுவத்தில் சுயதேவைக்கான உற்பத்தி பற்றியும், மாபெரும் சீர்செய் இயக்கம் உற்பத்தி இயக்கம் இவற்றின் முக்கியத்துவம் பற்றியும்**
(1945, ஏப்ரல் 27) *629*

**எதிரிப்படைகளை ஒவ்வொன்றாக அழிப்பதற்கு மேம்பாடான படையொன்றை ஒன்றுகுவிப்பது**
(1946, செப்டம்பர் 16) *639*

மூன்று மாதகாலத் தொகுப்புரை (1946, அக்டோபர் 1) 649

வடமேற்கு யுத்த அரங்குக்கான போர்நடவடிக்கைக் கோட்பாடு (1947, ஏப்ரல் 15) 661

விடுதலை யுத்தத்தின் இரண்டாவது ஆண்டுக்கான யுத்ததந்திரக் கோட்பாடு (1947, செப்டம்பர் 1) 665

சீன மக்கள் விடுதலைச் சேனையின் பிரகடனம் (1947, அக்டோபர்) 679

மூன்று பிரதான கட்டுப்பாட்டு விதிகளினதும் கவனத்திற்கான எட்டம்சங்களினதும் மறு வெளியீடு பற்றி — சீன மக்கள் விடுதலைச் சேனையின் பொது ஆணைப்பகுதியின் உத்தரவு (1947, அக்டோபர் 10) 693

இன்றைய நிலைமையும் நமது கடமைகளும் (இவ்வறிக்கையின் முதல் மூன்று பகுதிகள்) (1947, டிசம்பர் 25) 696

ராணுவத்திலான ஜனநாயக இயக்கம் (1948, ஜனவரி 30) 712

வடமேற்கில் ஈட்டிய மகத்தான வெற்றி பற்றியும் விடுதலைச் சேனையில் நடத்திய புதியரகச் சீர் செய் இயக்கம் பற்றியும் (1948, மார்ச் 7) 715

லியௌசி-ஷென்யாங் போரியக்கத்திற்கான நடவடிக்கைக் கோட்பாடு (1948, செப்டம்பரும் அக்டோபரும்) 729

ஹுவய்-ஹாய் போரியக்கத்திற்கான நடவடிக்கைக் கோட்பாடு (1948, அக்டோபர் 11) 742

சீனுவின் ராணுவ நிலைமையிலேற்பட்ட பிரமாண்ட மாற்றம் (1948, நவம்பர் 14) 749

பெய்ப்பிங்-தியென்சின் போரியக்கத்திற்கான நடவடிக்கைக் கோட்பாடு (1948, டிசம்பர் 11) 754

புரட்சியை இறுதிவரை நடத்துக (1948, டிசம்பர் 30) 764

ராணுவத்தை ஒரு வேலைப்படையாக்குக (1949, பெப்ரவரி 8) 783

நாடு தழுவிய முறையில் முன்னேறும்படி ராணுவத்திற்கு இட்ட உத்தரவு (1949, ஏப்ரல் 21) 789

சீன மக்கள் விடுதலைச் சேனையின் அறிவிப்பு (1949, ஏப்ரல் 25) 807

# சீனாவில் சிவப்பு அரசியல் அதிகாரம் இருக்க முடிவது ஏன்?*

(1928, அக்டோபர் 5)

## 1. உள்நாட்டு அரசியல் நிலைமை

கோமிந்தாங்கைச் சேர்ந்த புதிய யுத்தப்பிரபுக்களின் தற்போதைய ஆட்சி நகரங்களில் தரகுமுதலாளி வர்க்கத்தினதும் நாட்டுப்புறத்தில் உள்ளூர் கொடுங்கோலர் தீயபிரபு[1] வர்க்கத்தினதும் ஆட்சியாகவே இருந்து வருகிறது; இது அந்நிய உறவுகளில் ஏகாதிபத்தியத்திற்குத் தலைபணிந்துள்ளதும், உள்நாட்டில் பழைய யுத்தப்பிரபுக்களினிடத்தில் புதிய யுத்தப்பிரபுக்களை வைத்தும், தொழிலாளி வர்க்கத்தையும் விவசாயி வர்க்கத்தையும் இன்னும் அதிகமாகவே ஈவிரக்கமற்ற பொருளாதாரச் சுரண்டலுக்கும் அரசியல் அடக்குமுறைக்கும் உட்படுத்தியுமுள்ளதுமான ஒரு ஆட்சியாகும். குவாங்துங் மாகாணத்தில் ஆரம்பித்த முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சி அரை

*இந்தக் கட்டுரை, ஹுனன்-கியாங்சி எல்லைப் பிரதேசத்தின் இரண்டாவது கட்சி மாநாட்டிற்காகத் தோழர் மாவோ சேதுங் அவர்களால் எழுதப்பட்ட, ஆதியில் ''அரசியற் பிரச்சினைகளும் எல்லைப் பிரதேச கட்சி ஸ்தாபனத்தின் கடமைகளும்'' என்ற தலைப்பிலான தீர்மானத்தின் ஒரு பகுதி.

வழி தான் முன்னேறியிருந்த வேளையில் தரகுமுதலாளி வர்க்கமும் உள்ளூர் கொடுங்கோலர் தீயபிரபு வர்க்கமும் தலைமையைக் கவர்ந்துகொண்டு உடனே அதை எதிர்ப்புரட்சிப் பாதைக்குத் திருப்பிவிட்டன; நாடு எங்கணும் தொழிலாளர்களும் விவசாயிகளும் சாதாரண மக்களின் பிற பிரிவினரும், முதலாளித்துவ வர்க்க[2]த்தினரும் கூட, எதிர்ப்புரட்சிகர ஆட்சியின் கீழேயே இருந்துவந்துள்ளனர், துளியளவும் அரசியல் அல்லது பொருளாதார ஈடேற்றம் பெறவில்லை.

பீக்கிங்யும் தியென்சினையும் தாம் கைப்பற்றியதற்கு முன் புதிய கோமிந்தாங் யுத்தப்பிரபுக்களின் நான்கு கும்பல்க[3]ளுமான சியாங் கை-ஷேக், குவாங்சி யுத்தப்பிரபுக்கள், ஃபுங் யு-சியாங், யென் சி-ஷன் ஆகியோரின் கும்பல்கள், சாங் சுவோ-லின்[4]னிற்கு எதிராகத் தற்காலிகக் கூட்டணியொன்றை உருவாக்கிக் கொண்டன. இந்த நகரங்கள் கைப்பற்றப்பட்டதுதான் தாமதம், இந்தக் கூட்டணி தகர்ந்து நான்கு கும்பல்களுக்கும் மத்தியில் கடும் போராட்டத்திற்கு இடமளித்தது; இப்போது சியாங் கும்பலுக்கும் குவாங்சி கும்பலுக்குமிடையில் போர் மூண்டுகொண்டிருக்கிறது. சீனுவில் யுத்தப்பிரபுக்களின் கும்பல்கள் மத்தியிலான முரண்பாடுகளும் போராட்டங்களும் ஏகாதிபத்திய வல்லரசுகள் மத்தியிலான முரண்பாடுகளையும் போராட்டங்களையும் பிரதிபலிப்பவை. எனவே, சீனு ஏகாதிபத்திய வல்லரசுகள் மத்தியில் பிரிக்கப்பட்டிருக்கும் வரை யுத்தப்பிரபுக்களின் பல்வேறு கும்பல்களால் எந்தச் சூழ்நிலைகளின் கீழும் இணக்கத்திற்கு வர முடியாது, அவை அடையும் சமரசங்கள் எதுவும் தற்காலிகமானவையாக மட்டுமே இருக்கும். இன்று ஒரு தற்காலிக சமரசம் நாளை இன்னும் பெரிய ஒரு யுத்தத்தைத் தோற்றுவிக்கிறது.

சீனுவுக்கு ஒரு முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சி அவசரம் தேவையாக உள்ளது; இப்புரட்சி பாட்டாளி வர்க்கத்தின் தலைமையின்கீழ் மட்டுந்தான் பூர்த்தி செய்யப்படவும் முடியும். குவாங்துங்கிலிருந்து தொடங்கி யாங்சி நதியை நோக்கிப் பரவிய 1926-27 புரட்சியில் பாட்டாளி வர்க்கம் தன் தலைமை அதிகாரத்தை உறுதியாக பிரயோகிக்கத் தவறியதால், தலைமை தரகுமுதலாளி, உள்ளூர் கொடுங்கோலர் தீயபிரபு வர்க்கங்களால் பிடித்துக்கொள்ளப்பட்டு, புரட்சி ஒழிந்து அதனிடத்தில் எதிர்ப்புரட்சி ஏற்பட்டது. முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சி இவ்வாருகத் தற்காலிக தோல்வி ஒன்றை உற்றது. இத்தோல்வி சீனப் பாட்டாளி வர்க்கத்திற்கும் விவசாயிகளுக்கும் ஒரு கடும் அடியாகவும் சீன முதலாளித்துவ வர்க்கத்திற்கும் (ஆனுல் தரகுமுதலாளி, உள்ளூர் கொடுங்கோலர் தீய பிரபு வர்க்கங்களுக்கல்ல) ஒரு அடியாகவும் இருந்தது. இருந்தும் கடந்த சில மாதங்களில், வடக்கிலும் தெற்கிலும், கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில், நகரங்களில் தொழிலாளர்களின் ஸ்தாபன ரீதியான வேலை நிறுத்தங்களினதும் நாட்டுப்புறத்தில் விவசாயிகளின் கிளர்ச்சிகளினதும் வளர்ச்சி ஒன்று ஏற்பட்டுள்ளது. பசியும் குளிரும் யுத்தப்பிரபுச் சேனைகளின் வீரர்கள் மத்தியில் பெரும் அமைதியின்மையைச் சிருஷ்டிக்கின்றன. இதற்கிடையில், வாங் சிங்-வெய்யினதும் சென் குங்-போவினதும் தலைமையிலான கும்பலால் தூண்டப்பட்டு, முதலாளித்துவ வர்க்கம் கரையோரப் பகுதிகளிலும் யாங்சி நதி நெடுகிலும் கணிசமான அளவிலான சீர்திருத்த இயக்க[5]மொன்றை நடத்துகிறது. இந்த இயக்கத்தின் வளர்ச்சி ஒரு புதிய விஷயமாகும்.

கம்யூனிஸ்ட் சர்வதேசத்தினதும் எமது கட்சியின் மத்திய

கமிட்டியினதும் உத்தரவுகளின் பிரகாரம் சீனுவின் ஜனநாயகப் புரட்சியின் உள்ளடக்கம், தேசியப் புரட்சியைப் பூர்த்திசெய்யுமாருகச் சீனுவில் ஏகாதிபத்தியத்தினதும் அதன் யுத்தப்பிரபுக் கைக்கருவிகளினதும் ஆட்சியை வீழ்த்துவதாலும், விவசாயிகள்மீதான உள்ளூர் கொடுங்கோலர் தீயபிரபு வர்க்கத்தின் நிலப்பிரபுத்துவச் சுரண்டலை ஒழிக்குமாருக நிலப்புரட்சியை நடத்துவதாலும் ஆனதாகும். இத்தகைய ஒரு புரட்சிகர அனுஷ்டான இயக்கம் 1928 மேயிலான ஜினன் படுகொலை[6]க்குப் பின் நாளுக்கு நாள் வளர்ந்து வந்துள்ளது.

## 2. சீனுவில் சிவப்பு அரசியல் அதிகார[7]த்தின் தோற்றத்திற்கும் அது நிலைத்திருப்பதற்குமான காரணங்கள்

ஒரு நாட்டிற்குள்ளே ஒரு வெள்ளையாட்சியால் முற்ருகச் சூழப்பட்ட, சிவப்பு அரசியல் அதிகாரத்தின் கீழான பிரதேசம் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவை நீண்ட காலம் நிலைத்திருப்பது உலகில் வேறெங்கும் என்றும் நிகழ்ந்திராத ஒரு நிகழ்ச்சியாகும். இந்த அசாதாரண நிகழ்ச்சிக்கு விசேஷ காரணங்கள் உள்ளன. இது தக்க சூழ்நிலைகளின் கீழ் மட்டுமே இருக்கவும் விருத்தியுறவும் முடியும்.

முதலாவதாக, அது எந்த ஏகாதிபத்திய நாட்டிலுமோ அல்லது நேரடியான ஏகாதிபத்திய ஆட்சியின் கீழான எந்தக் காலனியிலுமோ இருக்க முடியாது[8], மறைமுகமான ஏகாதிபத்திய ஆட்சியின் கீழுள்ளதும் பொருளாதார ரீதி

யில் பின்னடைந்ததும் அரைக்காலனித்துவ நாடுமான சீனு வில் மட்டுமே இருக்க முடியும். ஏனெனில் இந்த அசா தாரண நிகழ்ச்சி மற்ருெரு அசாதாரண நிகழ்ச்சியுடன் அதா வது, வெள்ளையாட்சிக்கு உள்ளே யுத்தத்துடன், தொடர் பாக மட்டுமே இருக்க முடியும். குடியரசின் முதலாவது ஆண்டு (1912) தொட்டுப் பழைய, புதிய யுத்தப்பிரபுக் களின் பல்வேறு கும்பல்களும், ஏகாதிபத்தியத்தினதும் உள் நாட்டில் தரகுமுதலாளி, உள்ளூர் கொடுங்கோலர் தீயபி ரபு வர்க்கங்களினதும் ஆதரவுடன், ஒன்றுக்கொன்று எதி ராக இடையீடற்ற யுத்தங்கள் நடத்தியுள்ளன என்பது அரைக்காலனித்துவ சீனுவின் ஒரு குணுதிசயம். இத்த கைய ஒரு நிகழ்ச்சி உலகம் பூராவிலும் ஏகாதிபத்திய நாடுகளில் எதிலுமோ அன்றிப் பார்க்கப் போனுல் நேரடியான ஏகாதிபத்திய ஆட்சியின் கீழான எந்தக் கால னியிலுமோ காணக் கிடைப்பதில்லை, மறைமுகமான ஏகா திபத்திய ஆட்சியின் கீழுள்ள சீனு போன்ற ஒரு நாட்டில் மட்டுமே காணக் கிடைக்கிறது. இது இருப்பதற்கு இரு காரியங்கள் அதாவது, (ஒருமுகப்பட்ட முதலாளித்துவப் பொருளாதாரமல்லாத) ஸ்தலவாரியான ஒரு விவசாயப் பொருளாதாரமும் பிரித்துச் சுரண்டுமுகமாகச் செல்வாக் குப் பிராந்தியங்களை வரையறுத்துக் கொள்வதான ஏகா திபத்தியக் கொள்கையும் காரணமாகின்றன. வெள்ளை யாட்சியினுள்ளேயான நீண்ட காலம் நீடிக்கும் பிளவுகளும் யுத்தங்களும் வெள்ளையாட்சியின் சுற்றிவளைப்பின் மத்தியில் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையின் கீழான ஒரு, அல்லது அதற்கு மேற்பட்ட, செம்பிரதேசங்கள் தோன்றுவதற்கும் நின்றுபிடிப்பதற்குமான ஒரு சூழ்நிலையைத் தருகின்றன.

ஹுனுன், கியாங்சி மாகாணங்களின் எல்லைகளில் துண்டித்தெடுத்துக்கொள்ளப்பட்ட சுதந்திர ஆட்சி இத்தகைய பல சிறு பிரதேசங்களில் ஒன்று. கஷ்டமான அல்லது நெருக்கடியான காலங்களில் சில தோழர்கள் பல சமயம் இத்தகைய சிவப்பு அரசியல் அதிகாரம் பிழைத்திருப்பதைப் பற்றி ஐயங்கள் கொண்டு நம்பிக்கையீனமடைகின்றனர். இதற்குக் காரணம் அவர்கள் இத்தகைய சிவப்பு அரசியல் அதிகாரம் தோன்றுவதற்கும் பிழைத்திருப்பதற்குமான சரியான விளக்கத்தைக் கண்டுகொள்ளாதிருப்பதுதான். சீனுவில் வெள்ளையாட்சிக்குள்ளே பிளவுகளும் யுத்தங்களும் ஒருபோதும் நிற்கமாட்டா என்பதை மட்டும் நாம் உணர்வோமானுல், எமக்குச் சிவப்பு அரசியல் அதிகாரம் தோன்றுவதையும் பிழைத்திருப்பதையும் நாளாந்தம் வளர்வதையும் பற்றி எந்த ஐயங்களும் இரா.

இரண்டாவதாக, சீனுவின் சிவப்பு அரசியல் அதிகாரம் முதலில் தோன்றியும், நீண்ட காலத்திற்கு நிலைத்திருக்கக் கூடியதாயிருந்தும் உள்ள பிரதேசங்கள் சுச்சுவானையும் குவெய்சௌவையும் யுன்னுனையும் வடக்கு மாகாணங்களையும் போன்று ஜனநாயகப் புரட்சியால் பாதிக்கப்படாதிருந்த பிரதேசங்களல்ல, மாறுக 1926, 1927ன் முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சியின் போது, தொழிலாள, விவசாயி, படைவீர வெகுஜனங்கள் பெருந்தொகையில் எழுச்சியுற்ற ஹுனுன், குவாங்துங், ஹுபெய், கியாங்சி மாகாணங்களைப் போன்ற பிரதேசங்களே. இந்த மாகாணங்களின் பல பகுதிகளில் தொழிற்சங்கங்களும் விவசாயிச் சங்கங்களும் பரவலான ரீதியில் உருவாக்கப்பட்டு, தொழிலாளி வர்க்கத்தாலும் விவசாயி வர்க்கத்தாலும் நிலப்பிரபுத்துவ

வர்க்கத்திற்கும் உள்ளூர் கொடுங்கோலர் தீயபிரபு வர்க்கத்திற்கும் முதலாளித்துவ வர்க்கத்திற்கும் எதிராகப் பல பொருளாதார, அரசியல் போராட்டங்கள் நடத்தப்பட்டன. குவாங்செள நகரில் மக்கள் அரசியல் அதிகாரத்தை மூன்று நாட்களாகப் பிடித்து வைத்திருந்ததற்கும், ஹாய்ஃபெங்கிலும் லூஃபெங்கிலும், கிழக்கு, தெற்கு ஹூனானிலும், ஹூனான்-கியாங்சி எல்லைப் பிரதேசத்திலும், ஹூபெய் மாகாணத்தில் ஹுவாங்ஆனிலும் விவசாயிகளின் சுதந்திர ஆட்சிகள்[9] தோன்றியதற்கும் காரணம் இதுவே. தற்போதைய செஞ்சேனையைப் பொறுத்தவரையில் அது, ஜனநாயக அரசியற் பயிற்சிக்கு ஊடாக சென்றதும் தொழிலாள, விவசாயி வெகுஜனங்களின் செல்வாக்கின் கீழ் வந்ததுமான தேசியப் புரட்சிகரச் சேனையிலிருந்து பிளவுபட்டு வந்ததாகும். செஞ்சேனையை ஆக்கும் நபர்கள், எந்த ஜனநாயகப் பயிற்சியையும் பெற்றில்லாதவையும் தொழிலாளர்களினதும் விவசாயிகளினதும் செல்வாக்கின் கீழ் வராதவையுமான யென் சி-ஷன்னினதும் சாங் சுவோ-லின்னினதும் சேனைகளைப் போன்ற சேனைகளிலிருந்து வருவது சாத்தியமில்லை.

மூன்றாவதாக, சிறு பிரதேசங்களிலான மக்களின் அரசியல் அதிகாரம் நீண்ட காலம் நின்றுபிடிப்பது சாத்தியமா என்பது தேச விசாலப் புரட்சிகர நிலைமை தொடர்ந்தும் அபிவிருத்தியடைகிறதா என்பதால் நிர்ணயிக்கப்படும். அது அவ்வாறு அபிவிருத்தியுற்றால், அப்போது சிறு செம்பிரதேசங்கள் ஐயத்திற்கிடமின்றி நீண்ட காலம் நின்றுபிடிப்பதோடு, தவிர்க்க முடியாதபடி தேச விசால அரசியல் அதிகாரத்தை வென்றெடுப்பதற்கான பல சக்திகளில் ஒன்றாகவும் ஆகும். தேச விசாலப் புரட்சிகர நிலைமை தொ

டர்ந்து அபிவிருத்தியடையாமல் நீண்ட காலத்திற்குத் தேங்கிக் கிடப்பதென்ருல், அப்போது சிறு செம்பிரதேசங்கள் நீண்ட காலத்திற்கு நின்றுபிடிப்பது அசாத்தியமாயிருக்கும். இப்போது, உள்நாட்டுத் தரகுமுதலாளி, உள்ளூர் கொடுங்கோலர் தீயபிரபு வர்க்கங்களினதும் சர்வதேச முதலாளித்துவ வர்க்கத்தினதும் அணிகளுக்குள்ளேயான தொடர்ச்சியான பிளவுகளோடும் யுத்தங்களோடும் சீனுவில் புரட்சிகர நிலைமை தொடர்ந்து அபிவிருத்தியடைந்தே வருகிறது. ஆகவே சிறு செம்பிரதேசங்கள் ஐயமின்றி நீண்டகாலத்திற்கு நின்றுபிடிப்பதோடு, தொடர்ந்து விரிவடைந்தும் தேசம் எங்கணும் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதான இலக்கைச் சிறிது சிறிதாக அண்மிக்கொண்டும் வரும்.

நான்காவதாக, போதிய பலமுடைய கிரமமான செஞ்சேனையொன்று இருப்பது சிவப்பு அரசியலதிகாரம் இருப்பதற்கான ஓர் அவசியச் சூழ்நிலையாகும். எமக்கு ஸ்தலச் செங்காவலர் படைகள்[10] மட்டும் இருந்து கிரமமான செஞ்சேனை இல்லாவிட்டால் எம்மால் கிரமமான வெள்ளைப் படைகளுக்கு ஈடுகொடுக்க முடியாது, நிலப்பிரபுக் கட்டாயப் படைகளை மட்டுமே சமாளிக்க முடியும். ஆகவே, தொழிலாள, விவசாயி வெகுஜனங்கள் தீவிரமாக உள்ள போது கூட, எமக்குப் போதிய பலமுள்ள கிரமமான படைகள் இருந்தாலல்லாமல், நிலைத்துநிற்க வல்லதும் நாளுக்குநாள் வளர்வதுமான ஒரு சுதந்திர ஆட்சி ஒரு புறமிருக்க, எந்த விதமான சுதந்திர ஆட்சியையுமே சிருஷ்டிப்பது நிச்சயமாக அசாத்தியம். ''தொழிலாளர்களினதும் விவசாயிகளினதும் சுதந்திர ஆட்சிகளை ஆயுதந் தரித்த பலாத்காரம் கொண்டு ஸ்தாபிப்பது'' என்ற கருத்து கம்யூனிஸ்ட் கட்சியாலும்

சுதந்திர ஆட்சியின் கீழான பிரதேசங்களில் உள்ள தொழிலாள, விவசாயி வெகுஜனங்களாலும் பூரணமாகத் தேர்ந்துகொள்ளப்பட வேண்டிய முக்கியமான ஒரு கருத்தாகும்.

ஐந்தாவதாக, சிவப்பு அரசியலதிகாரம் மிக நீண்ட காலம் இருந்துவருவதற்கும் விருத்தியடைவதற்கும் மேற் கூறியவற்ருேடு மற்றுமொரு முக்கிய சூழ்நிலேயும், அதாவது, கம்யூனிஸ்ட் கட்சி ஸ்தாபனம் பலமாயும் அதன் கொள்கை சரியானதாயும் இருப்பதும் தேவை.

## 3. ஹுனன்-கியாங்சி எல்லேப் பிரதேசத்திலான சுதந்திர ஆட்சியும் ஆகஸ்ட் தோல்வியும்

யுத்தப்பிரபுக்கள் மத்தியில் பிளவுகளும் யுத்தங்களும் வெள்ளே ஆட்சியின் வலிமையைக் குறைக்கின்றன. இவ்வாருகச் சிறு பிரதேசங்களில் சிவப்பு அரசியலதிகாரம் தோன்றுவதற்குச் சந்தர்ப்பங்கள் தரப்படுகின்றன. ஆனுல் யுத்தப்பிரபுக்களிடையில் போர் தினமும் நடப்பதில்லே. ஒரு மாகாணத்தில் அல்லது பல மாகாணங்களில் வெள்ளே ஆட்சி தற்காலிக ஸ்திரத்தன்மையை அனுபவிக்கும் போதெல்லாம் அங்குள்ள ஆளும் வர்க்கங்கள் தவிர்க்க முடியாதபடி ஒன்றுபட்டு, சிவப்பு அரசியலதிகாரத்தை அழிக்கத் தம்மாலியன்றதையெல்லாம் செய்கின்றன. சிவப்பு அரசியலதிகாரம் ஸ்தாபிக்கப்படுவதற்கும் நிலேத்திருப்பதற்கும் அவசியமான சூழ்நிலேகள் எல்லாம் பூர்த்தியாக இல்லாத பிரதேசங்களில் அது எதிரியால் வீழ்த்தப்பட்டுவிடும் அபாயத்தில் இருக்கிறது. கடந்த

ஏப்ரலுக்கு முன் சாதகமான தருணங்களில் குவாங்செள, ஹாய்ஃபங்கும் லூஃபங்கும், ஹுனன்-கியாங்சி எல்லைப் பிரதேசம், தெற்கு ஹுனன், லீலிங், ஹுவாங்ஆன் ஆகியன போன்ற இடங்களில் தோன்றிய பல சிவப்பு ஆட்சிகள் ஒன்றன் பின் ஒன்றாக வெள்ளையாட்சியால் நசுக்கப்பட்டதற்குக் காரணம் இதுதான். ஏப்ரல் தொட்டு, ஹுனன்-கியாங்சி எல்லைப் பிரதேசத்திலான சுதந்திர ஆட்சி தெற்கில் தற்காலிகமாக ஸ்திரப்பட்ட ஆளும் சக்தியொன்றை எதிர்ப்பட்டிருந்தது, ஹுனனும் கியாங்சியும் எம்மை "அடக்க" வழமையாக எட்டு, ஒன்பது அல்லது அதற்கு மேற்பட்ட — சில சமயங்களில் பதினெட்டு வரையான — ரெஜிமென்டுகளை அனுப்பின. இருப்பினும் நான்கு ரெஜிமென்டுகளுக்குக் குறைவான படையொன்றைக் கொண்டு நாம் எதிரியுடன் நீண்ட நான்கு மாத காலமாகப் போரிட்டு, நாளுக்கு நாள், எமது சுதந்திர ஆட்சியின் கீழான பிரதேசத்தை விரிவுபடுத்தி, நிலப்புரட்சியை ஆழமாக்கி, மக்களின் அரசியலதிகார ஸ்தாபனங்களை விஸ்தரித்து, செஞ்சேனையையும் செங்காவலர் படைகளையும் பலப்படுத்தினோம். ஹுனன்-கியாங்சி எல்லைப் பிரதேசத்திலான கம்யூனிஸ்ட் கட்சியின் (ஸ்தல, சேனை) ஸ்தாபனங்களின் கொள்கைகள் சரியாக இருந்ததனால் இது சாத்தியமாயிற்று. அப்போது கட்சியின் எல்லைப் பிரதேச விசேஷ கமிட்டியினதும் சேனைக் கமிட்டி[11]யினதும் கொள்கைகள் பின்வருவனவாக இருந்தன:

எதிரிக்கெதிராக உறுதியுடன் போராடுவது, லோஸியாஓ மலை[12]த் தொடரின் நடுப்பிரிவில் அரசியலதிகாரத்தை நிறுவுவது, பயந்தோடும் போக்கை எதிர்ப்பது;

சுதந்திர ஆட்சியின் கீழான பிரதேசங்களில் நிலப்புரட்சியை ஆழப்படுத்துவது;

சேனைக் கட்சி ஸ்தாபனத்தின் உதவியோடு ஸ்தலக் கட்சி ஸ்தாபனத்தின் அபிவிருத்தியை முன்னேற்றுவதும் கிரமமான சேனையின் உதவியோடு ஸ்தல ஆயுதப் படைகளின் அபிவிருத்தியை முன்னேற்றுவதும்;

செஞ்சேனைக் கூறுகள் எதிர்ப்பட்டிருந்த எதிரியுடன் சமயம் வாய்ப்பாக உள்ள போது போரிட அவற்றை ஒன்று குவிப்பதும், ஒவ்வொன்ருக எதிரியால் அழிக்கப்படுவதைத் தவிர்க்கக்கூடியதாகப் படைகளைப் பிரிப்பதை எதிர்ப்பதும்;

சுதந்திர ஆட்சியின் கீழான பிரதேசத்தை விஸ்தரிக்க அடுக்கடுக்கான அலைகளாக முன்னேறுவதென்ற கொள்கையைக் கைக்கொள்வதும், குருட்டுத்தனமான முன்னேறுதலால் விஸ்தரிக்கும் கொள்கையை எதிர்ப்பதும்.

இந்த உகந்த தந்திரோபாயங்களினதும், எமது போராட்டத்திற்குச் சாதகமான தரையமைப்பினதும், ஹூனுனிலிருந்து படையெடுத்து வந்த துருப்புக்களுக்கும் கியாங்சியிலிருந்து படையெடுத்து வந்த துருப்புக்களுக்குமிடையில் இணைப்படுத்தல் போதாததாய் இருந்ததினதும் பயஞக ஏப்ரலிலிருந்து ஜூலை வரையான நான்கு மாதங்களில் எம்மால் பல வெற்றிகளை ஈட்ட முடிந்தது. எம்மை விடப் பல மடங்கு எண்ணிக்கையினராயிருந்தும் எதிரியால் எமது ஆட்சியை அழிப்பது ஒரு புறமிருக்க அதன் இடையருத விரிவுபடுத்தலைத் தடுக்கவே இயலவில்லை; எமது சுதந்திர ஆட்சி ஹூனுன்மீதும் கியாங்சிமீதும் வர வர அதிகரிக்கும் செல்வாக்கைச் செலுத்தவும் தலைப்பட்டது. ஆகஸ்ட் தோல்விக்கான ஒரே காரணம் சில தோழர்கள் அக்

காலகட்டம் ஆளும் வர்க்கங்களுக்குத் தற்காலிக ஸ்திர நிலைக் காலகட்டமென்பதை உணரத் தவறி, ஆளும் வர்க்கங்களுள் அரசியற் பிளவுக் காலகட்டமொன்றிற்கு உகந்ததான யுத்த தந்திரத்தைக் கைக்கொண்டு, குருட்டுத்தனமான முன்னேறுதலுக்காக எமது படைகளைப் பிரித்து, அவ்வாறாக எல்லைப் பிரதேசம், தெற்கு ஹுனான் இரு இடங்களிலும் தோல்வியை விளைவித்தமைதான் ஹுனான் மாகாணக் கமிட்டியின் பிரதிநிதியான தோழர் டு ஸியூ-சிங் உள்ள நிலைமையை விளங்கிக் கொள்ளத் தவறி, கட்சியின் விசேஷ கமிட்டியினதும் சேனைக் கமிட்டியினதும் யுங்ஸின் மாவட்டக் கமிட்டியினதும் கூட்டுக் கூட்டத்தின் தீர்மானங்களைப் புறக்கணித்தார்; அவர் ஹுனான் மாகாணக் கமிட்டியின் உத்தரவை வெறுமனே யாந்திரிக ரீதியில் அமுல்படுத்தி, போராட்டத்தைத் தவிர்த்துச் சொந்த ஊர் திரும்ப விரும்பிய செஞ்சேனையின் 29வது ரெஜிமெண்டின் கருத்துக்களையும் எதிரொலித்தார்; அவரது தவறு மிக மிகப் பாரதூரமானதாக இருந்தது. இந்தத் தோல்வியிலிருந்து எழுந்த நிலைமை கட்சியின் விசேஷ கமிட்டியாலும் சேனைக் கமிட்டியாலும் செப்டம்பரின் பின் எடுக்கப்பட்ட திருத்த நடவடிக்கைகளின் பயனாக ஒருவாறு சரி செய்யப்பட்டது.

## 4. ஹுனானிலும் ஹுபெயிலும் கியாங்சியிலும் ஹுனான்-கியாங்சி எல்லைப் பிரதேசச் சுதந்திர ஆட்சியின் பங்கு

நிங்காஙை மத்தியாகக் கொண்ட, ஹுனான்-கியாங்சி எல்லைப் பிரதேசத்திலான, தொழிலாளர்களினதும் விவசாயிகளினதும் ஆயுதந் தரித்த சுதந்திர ஆட்சியின் முக்கியத்துவம்

நிச்சயமாக எல்லைப் பிரதேசத்திலான ஒரு சில மாவட்டங்களுக்கு மட்டும் எல்லைப்பட்டதல்ல; இந்த ஆட்சி ஹூனன், ஹூபெய், கியாங்சி மாகாணங்களில் தொழிலாளர்களினதும் விவசாயிகளினதும் எழுச்சிகளினூடாக அவற்றில் அரசியல் அதிகாரம் கைப்பற்றப்படும் போக்கில் பிரமாண்டமான ஒரு பங்கை வகிக்கும். பின்வருவன ஹூனனிலும் ஹூபெயிலும் கியாங்சியிலும் மலர்ந்துவரும் எழுச்சிகள் சம்பந்தமாக எல்லைப் பிரதேசத்திலான கட்சிக்கான பெரும் முக்கியத்துவம் வாய்ந்த பணிகள்: எல்லைப் பிரதேசத்திலான நிலப்புரட்சியினதும் மக்களின் அரசியல் அதிகாரத்தினதும் செல்வாக்கை ஹூனனிலும் கியாங்சியிலும் சியாங், கான் இரு நதிகளின் தாழ்ந்த அந்தங்களுக்கு, ஹூபெய் வரையும் விஸ்தரிப்பது; மூன்று மாகாணங்களினதும் எதிர்வரும் பொதுவான எழுச்சியில் செஞ்சேனை அதன் உரிய பணியைப் பூர்த்திசெய்யவல்லதாயிருக்கப் போராட்டத்தின் ஊடாக அதனை இடையறுது விஸ்தரிப்பதும் அதன் தரத்தை உயர்த்துவதும்; மாவட்டங்களிலுள்ள ஸ்தல ஆயுதப் படைகள், அதாவது செங்காவலர்ப்படைகளும் தொழிலாளர்களினதும் விவசாயிகளினதும் எழுச்சிப் படைப்பிரிவுகளும், இப்போது நிலப்பிரபுக் கட்டாயப்படைகளையும் சிறிய ஆயுதந்தரித்த கூறுகளையும் எதிர்த்துப் போரிடவும் எதிர்காலத்தில் எல்லைப்பிரதேசத்தின் அரசியலதிகாரத்தைப் பாதுகாக்கவும் வல்லவையாயிருக்கக் கூடியதாக அவற்றை விஸ்தரித்து, அவற்றின் தரத்தையும் உயர்த்துவது; எல்லைப் பிரதேச வேலைக்குப் பொறுப்பேற்கத் தன் சொந்த ஆட்களை உடையதாயும் செஞ்சேனைக்கும் சுதந்திர ஆட்சியின் விஸ்தரிக்கப்பட்ட பிரதேசத்திற்கும் ஆட்களைத் தரவும் கூட இயல்வதாயும் இருக்கக் கூடியதாக, ஸ்தல வேலை ஆட்கள் செஞ்சேனை ஆட்களின் உதவியில்

தங்கி நிற்கும் அளவைச் சிறிது சிறிதாகக் குறைத்து, முற்றுகத் தம் பலத்தில் தங்கி நிற்கக் கூடியதாகச் செய்வது.

## 5. பொருளாதாரப் பிரச்சினைகள்

வெள்ளைச் சக்திகளின் சுற்றிவளைப்பிற்குள், அவசியப் பொருட்களினதும் பணத்தினதும் பற்றுக்குறை சேனைக்கும் மக்களுக்கும் மிகப் பெரிய ஒரு பிரச்சினையாகியுள்ளது. எதிரியின் இறுக்கமான முற்றுகை காரணமாக உப்பு, துணி, மருந்துகள் போன்ற அவசியப் பொருட்கள் சுதந்திர ஆட்சியின் கீழான எல்லைப் பிரதேசத்தில் கடந்த ஆண்டு முழுவதும் மிக அருகியும் ஒறுப்பாயும் இருந்தன; இது தொழிலாள, விவசாயி, சிறு முதலாளித்துவ வர்க்க[13] வெகுஜனங்களினதும் செஞ்சேனை வீரர்களினதும் வாழ்வை, சில சமயம் மிகக் கூர்மையாகப் பாதித்துள்ளது. செஞ்சேனை ஒரேபோதில் எதிரியுடன் போரிடவும் தனக்குப் பண்டங்கள் தேடிக்கொள்ளவும் வேண்டியுள்ளது. தானியத்தோடு கூடவே கொடுக்கப்படும் தலா தினசரி 5 சதம் உணவுப் படியைக் கொடுக்கக்கூட அதனிடம் பணமில்லை; படைவீரர்களுக்குப் போஷாக்குக் குறைந்து, பலர் நோய்வாய்ப்பட்டு உள்ளனர்; வைத்தியசாலைகளில் உள்ள காயமுற்றோர் இன்னும் மோசமான நிலைமையில் உள்ளனர். இத்தகைய கஷ்டங்கள் அரசியலதிகாரம் தேச விசால ரீதியில் கைப்பற்றப்படுமுன் தவிர்க்க முடியாதவைதான், இருப்பினும் வாழ்வை ஓரளவாவது சுலபமாக்குவதற்கும், விசேஷமாக, செஞ்சேனைக்கு ஓரளவுக்குப் போதிய பண்டங்களைப் பெறுவதற்கும்

இவற்றைச் சிறிதளவிற்காவது கடக்க வேண்டிய அவசரத் தேவை உள்ளது. எல்லைப் பிரதேசத்துக் கட்சியால் பொருளாதாரப் பிரச்சினைகளைச் சமாளிப்பதற்குத் தகுந்த வழிவகைகளைக் கண்டு பிடிக்க முடிந்தாலன்றி, எதிரியின் ஆட்சி ஸ்திரமாக இருக்கப் போகும் ஒப்புநோக்காக நீண்ட காலகட்டத்தின்போது சுதந்திர ஆட்சிக்குப் பெரும் கஷ்டங்கள் ஏற்படும். இந்தப் பொருளாதாரப் பிரச்சினைகளின் தகுந்தபடியான தீர்வு ஐயமின்றி ஒவ்வொரு கட்சி அங்கத்தினரினதும் கவனத்திற்கு உரியது.

## 6. ராணுவத் தளப்பிரதேசங்களின் பிரச்சினை

எல்லைப் பிரதேசத்திலான கட்சிக்கு மற்றுமொரு பணி உள்ளது. அதாவது, ஐந்து சிங்க[14]ளிலும் கியூலுஙிலுமான ராணுவத் தளப்பிரதேசங்களை ஸ்திரப்படுத்துவது. இரண்டுமே தரையமைப்பு ரீதியில் சாதகமானவையான, யுங்ஸின், லின்ஸியென், நிங்காங், சுய்ச்சுவான் மாவட்டங்களின் சந்திப்பிலுள்ள ஐந்து சிங்கள் மலைப்பிரதேசமும் யுங்ஸின், நிங்காங், சாலிங், லியன்ஹுவா மாவட்டங்களின் சந்திப்பிலுள்ள கியூலுங் மலைப் பிரதேசமும் தற்போதைக்கு எல்லைப் பிரதேசத்துக்கு மட்டுமல்லாமல் எதிர்காலத்தில் ஹுனனிலும் ஹுபெயிலும் கியாங்சியிலும் ஏற்படும் எழுச்சிகளுக்கும் முக்கியமான ராணுவத் தளப்பிரதேசங்களாக விளங்கும்; இது எமக்கு மக்களின் ஆதரவு உள்ளதும், மிகக் கஷ்டமானதும் யுத்ததந்திர ரீதியில் முக்கியமானதுமான தரையமைப்பைக் கொண்டது

மான ஐந்து சிங்களுக்கு விசேஷமாகப் பொருந்துவதாகும். இந்தத் தளப்பிரதேசங்களை ஸ்திரப்படுத்திக் கொள்வதற்கான வழி, முதலாவதாகத் திருப்தியான பாதுகாப்புகளை நிறுவிக் கொள்வதும், இரண்டாவதாகப் போதிய தானியத்தைச் சேமித்து வைப்பதும், மூன்றாவதாக ஒப்புநோக்காகச் சிறந்தவையான செஞ்சேனை வைத்தியசாலைகளை நிறுவுவதுமாகும். எல்லைப் பிரதேசத்திலான கட்சி உண்மையில் இம்மூன்று பணிகளையும் நன்றாகச் செய்ய முயல வேண்டும்.

## குறிப்புகள்

1. உள்ளூர் கொடுங்கோலரும் தீயபிரபுக்களும் நிலப்பிரபு வர்க்கத்தின் அரசியற் பிரதிநிதிகளாகவும் நிலப்பிரபுக்களில் மிகக் கொடியவர்களாகவும் இருந்தனர். பணக்கார விவசாயிகளிலும் ஒப்பீட்டளவிற் சிறிய கொடுங்கோலரும் தீயபிரபுக்களும் காணப்பட்டனர். (மொழிபெயர்ப்பாளர் குறிப்பு)

2. ''முதலாளித்துவ வர்க்கம்'' என்ற பதத்தால் தோழர் மாஓ சேதுங் அவர்கள் கருதுவது தேசிய முதலாளித்துவ வர்க்கத்தையாகும். இந்த வர்க்கத்திற்கும் பெரும் தரகுமுதலாளி வர்க்கத்திற்கும் இடையிலான வேறுபாடு பற்றிய அவரது விபரமான விளக்கத்திற்கு, ''ஜப்பானிய ஏகாதிபத்திய-எதிர்ப்புத் தந்திரோபாயங்கள் பற்றி'' (1935 டிசம்பர்), ''சீனப் புரட்சியும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியும்'' (1939 டிசம்பர்) ஆகிய கட்டுரைகளைப் பார்க்கவும்.

3. இந்த யுத்தப்பிரபுக்கள் கும்பல்கள் நான்கும் சாங் சுவோ-லின்னிற்கு எதிராக ஒருங்கே போர் செய்து, 1928 ஜூனில் பீக்கிங்கையும் தியென்சினையும் கைப்பற்றின.

4. ஃபெங்தியென் யுத்தப்பிரபுக்கள் கும்பலுக்குத் தலைவராயிருந்த சாங் சுவோ-லின் 1924ல் இரண்டாவது சிஹ்லி-ஃபெங்தியென் (சிஹ்லி ஹோபெய் மாகாணத்தின் பழைய பெயர், ஃபெங்தியென் லியௌனிங் மாகாணத்தின் பழைய சுருக்க பெயர் — மொழிபெயர்ப்பாளர்) யுத்தத்தில் வூ பெய்-ஃபுவைத்

தோற்கடித்த பின் வட சீனுவில் மிகப் பலம் வாய்ந்த யுத்தப்பிரபுவானுன். 1926ல் அவன், வூ பெய்-ஃபுவைத் தன் சகாவாகக் கொண்டு, பீக்கிங்மீது படையெடுத்து அதைக் கைப்பற்றினுன். 1928 ஜூனில் புகையிரத மூலம் வடகிழக்கிற்குப் பின்வாங்கும் வழியில், தான் கருவியாகச் சேவை செய்த ஜப்பானிய ஏகாதிபத்தியவாதிகளாலேயே வைக்கப்பட்டிருந்த ஒரு வெடிகுண்டு வெடித்ததில் இறந்தான்.

5. இச்சீர்திருத்த இயக்கம் 1928 மே 3ந் திகதி ஜப்பானியப் படையெடுப்பாளர்கள் ஜினுனைக் கைப்பற்றியதற்கும் சியாங் கை-ஷேக் வெளிப்படையாகவும் வெட்கக்கேடான முறையிலும் ஜப்பானுடன் சமரசப்பட்டதற்கும் பின்னர் தோன்றியது. தன்னை 1927ம் ஆண்டின் எதிர்ப்புரட்சிகரக் குடை கவிழ்ப்புடன் சம்பந்தப்படுத்திக்கொண்டிருந்த தேசிய முதலாளித்துவ வர்க்கத்திற்குள் தன் சொந்த நலன்களுக்காகச் செயல்பட்டு ஒரு பிரிவு சிறிது சிறிதாகச் சியாங் கை-ஷேக் ஆட்சிக்கு எதிரான ஒரு கும்பலை உருவாக்கத் தொடங்கியது. இந்த இயக்கத்தில் தீவிரமாயிருந்த வாங் சிங்-வெய்யினதும் சென் குங்-போவினதும் பிறரினதும் பதவி வேட்டைக்கார எதிர்ப்புரட்சிகரக் கோஷ்டி கோமிந்தாங்கிலான ''புனரமைப்புக் கும்பல்'' எனப் பெயர் பெற்ற கும்பலை ஆக்கியது.

6. 1928ல் சியாங் கை-ஷேக், பிரித்தானிய, அமெரிக்க ஏகாதிபத்தியங்களின் பின் பலத்துடன், சாங் சுவோ-லின்னைத் தாக்க வடக்கே படையெடுத்தான். ஜப்பானிய ஏகாதிபத்தியவாதிகள் அப்போது, பிரித்தானிய, அமெரிக்க செல்வாக்கு வடக்கே விரிவடைவதைத் தடுக்க ஷன்துங்கின் மாகாணத் தலைநகரான ஜினுனைக் கைப்பற்றி, தியென்சின்-பூகோ புகையிரத மார்க்கத்தையும் துண்டித்தனர். மே 3ந் திகதி, படையெடுத்திருந்த ஜப்பானியத் துருப்புக்கள் ஜினுனில் பெருந்தொகையான சீனர்களைக் கொன்று குவித்தனர். இது ஜினுன் படுகொலையெனப் பெயர் பெற்றது.

7. சீனுவின் சிவப்பு அரசியலதிகாரத்தின் ஸ்தாபன வடிவம் கிட்டத்தட்ட சோவியத் அரசியலதிகாரத்தினுடையதை ஒத்திருந்தது. சோவியத் ஒரு பிரதிநிதிகள் சபை, 1905ம் ஆண்டுப் புரட்சியின் போது ரஷியத் தொழிலாளி வர்க்கத்தால் சிருஷ்டிக்கப்பட்ட ஒரு அரசியல் நிறுவனம் ஆகும். மார்க்ஸிஸத் தத்துவத்தினடிப்படையில் லெனினும் ஸ்டாலினும் ஒரு சோவியத் குடியரசே முதலாளித்துவத்திலிருந்து சோஷலிஸத்திற்கு மாறுவதற்கு மிக உகந்ததான சமூக, அரசியல் ஸ்தாபன வடிவமென முடிவுக்கு வந்தனர். லெனினினதும் ஸ்டாலினினதும் பொல்ஷ்விக் கட்சியின் தலைமையின்கீழ் 1917ம் ஆண்டின்

ரஷிய அக்டோபர் சோஷலிஸப் புரட்சி உலக வரலாற்றில் முதற் தடவையாக இத்தகைய ஒரு பாட்டாளி வர்க்க சர்வாதிகாரச் சோஷலிஸ சோவியத் குடியரசைத் தோற்றுவித்தது. சீனவில் 1927ம் ஆண்டுப் புரட்சியின் தோல்வியின் பின், தோழர் மாஓ சேதுங் அவர்களைத் தலைவராகக் கொண்ட சீனக் கம்யூனிஸ்ட் கட்சியால் தலைமைதாங்கப்பட்ட வெகுஜனப்புரட்சிகர எழுச்சிகளில் பல்வேறு இடங்களில் மக்களின் அரசியல் அதிகாரத்தின் வடிவமாகப் பிரதிநிதிகள் சபை கைக்கொள்ளப்பட்டது. இருப்பினும் சீனப் புரட்சியின் அந்தக் கட்டத்தில் அரசியலதிகாரம் அதன் இயல்பிற் சோவியத் யூனியனிலான பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தினின்றும் வேறுபட்டதான, பாட்டாளி வர்க்கத்தின் தலைமையிலான ஏகாதிபத்திய-எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ-எதிர்ப்பு, புதிய ஜனநாயகப் புரட்சியின் ஒரு மக்கள் ஜனநாயக சர்வாதிகாரமாக இருந்தது.

8. முன்னர் பிரித்தானியாவினதும் அமெரிக்காவினதும் பிரான்ஸினதும் நெதர்லாந்தினதும் ஏகாதிபத்திய ஆட்சியின்கீழிருந்த கீழைக் காலனித்துவ நாடுகள் பல 2ம் உலக யுத்தத்தின்போது ஜப்பானிய ஏகாதிபத்தியவாதிகளால் கைப்பற்றப்பட்டன. இந்நாடுகளின் கம்யூனிஸ்ட் கட்சிகளின் தலைமையில் இந்நாட்டுத் தொழிலாளர்களும் விவசாயிகளும் நகர சிறு-முதலாளித்துவ வர்க்கத்தினரும் தேசிய முதலாளித்துவ வர்க்கத்தின் அங்கத்தினர்களும் ஒருபுறம் பிரித்தானிய, அமெரிக்க, பிரெஞ்சு, டச்சு ஏகாதிபத்தியவாதிகளுக்கும் மறுபுறம் ஜப்பானிய ஏகாதிபத்தியவாதிகளுக்கும் இடையிலான முரண்பாடுகளைச் சாதகமாக்கிக் கொண்டு, பாஸிஸ ஆக்கிரமிப்பிற்கு எதிராக ஒரு பரந்த ஐக்கிய முன்னணியை அணிதிரட்டி, ஜப்பானிய-எதிர்ப்புத் தளப்பிரதேசங்களைக் கட்டியெழுப்பி, கடினமான ஜப்பானிய-எதிர்ப்புக் கொரில்லா யுத்தம் நடத்தினர். இவ்வாறுக, 2ம் உலக யுத்தத்திற்கு முன்பிருந்த அரசியல் நிலைமை மாறத் தொடங்கியது. 2ம் உலக யுத்தத்தின் இறுதியில் ஜப்பானிய ஏகாதிபத்தியவாதிகள் இந்த நாடுகளிலிருந்து விரட்டப்பட்டபோது, அமெரிக்காவினதும் பிரித்தானியாவினதும் பிரான்ஸினதும் நெதர்லாந்தினதும் ஏகாதிபத்தியவாதிகள் தமது காலனித்துவ ஆட்சியைத் திரும்ப ஏற்படுத்த முயன்றனர்; ஆனுல் ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தத்தின்போது கணிசமான பலமுடைய ஆயுதப் படைகளைக் கட்டி வளர்த்திருந்த இந்தக் காலனித்துவ மக்கள் பழைய வாழ்க்கை முறைக்குத் திரும்பிச் செல்ல மறுத்தனர். மேலும், சோவியத் யூனியன் பலமுடையதாக ஆகியிருந்ததாலும் அமெரிக்கா நீங்கலாக எல்லா ஏகாதிபத்திய வல்லரசுகளும் யுத்தத்தில் ஒன்றில் வீழ்த்த அல்லது பலவீனப்படுத்தப்பட்டிருந்ததாலும், குறிப்பாக

ஏகாதிபத்திய முனே வெற்றிகரமான சீனப் புரட்சியால் சீனுவில் உடைக்கப்பட்டிருந்ததாலும், உலகெங்கணும் ஏகாதிபத்திய அமைப்பு அனைத்தும் ஆழமாக ஆட்டங்கண்டிருந்தது. இவ்வாருக, பெரிதும் சீனுவிற் போலவே, கிழக்கிலுள்ள காலனித்துவ நாடுகள் எல்லாவற்றினதும், அல்லது குறைந்த பட்சம் சிலவற்றினதும் மக்கள் பெரியவையும் சிறியவையுமான புரட்சிகரத் தளப்பிரதேசங்களையும் புரட்சிகர ஆட்சிகளையும் நீண்ட காலத்திற்கு நிலைநிறுத்தி வைத்திருப்பதும், நாட்டுப்புறத்திலிருந்து நகரங்களைச் சுற்றிவளைப்பதற்கான புரட்சிகர யுத்தங்களை நீண்டகாலமாக நடத்துவதும், பின்னர் நகரங்களைக் கைப்பற்றுவதற்கும் தேச விசால வெற்றியை ஈட்டுவதற்கும் சிறிது சிறிதாக முன்னேறுவதும் சாத்தியமாகியுள்ளன. நேரடியான ஏகாதிபத்திய ஆட்சியின் கீழான காலனிகளில் சுதந்திர ஆட்சிகளை ஸ்தாபிக்கும் பிரச்சினையில் தோழர் மாஓ சேதுங் அவர்கள் 1928ல் கொண்டிருந்த கருத்து மாறிவிட்ட நிலைமைகளின் விளைவாக மாற்றமடைந்துள்ளது.

9. இவையே 1927ல் சியாங் கை-ஷேக்கும் வாங் சிங்-வெய்யும் அடுத்தடுத்துப் புரட்சிக்குத் துரோகிகளாக மாறியதன் பின்னர் எதிர்ப்புரட்சியின் சக்திகளுக்கு எதிராக கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையின்கீழ், பல்வேறு இடங்களிலுள்ள மக்கள் தொடுத்த முதற் பதிற் தாக்குதல்கள். 1927 டிசம்பர் 11ந் திகதி குவாங்சௌ தொழிலாளர்களும் புரட்சிகரப் படைவீரர்களும் ஐக்கியமுற்று ஓர் எழுச்சியை நடத்தி, மக்களின் அரசியல் அதிகாரத்தை நிறுவினர். அவர்கள் நேரடியாக ஏகாதிபத்தியத்தினுல் ஆதரவு தரப்பட்டவையான எதிர்ப்புரட்சிகரப் படைகளுக்கு எதிராக உக்கிரமாகப் போரிட்டனர். ஆனுல் பலத்திலான ஏற்றதாழ்வு ஆகப் பெரிதாயிருந்ததானுல் தோல்வியுற்றனர். குவாங்துங் மாகாணத்தின் கிழக்குக் கரையோரத்தில் ஹாய்ஃபெங்கிலும் லூஃபெங்கிலுமான விவசாயிகள், கம்யூனிஸ்ட் கட்சியின் ஒரு அங்கத்தினரான தோழர் பெங் பாயின் தலைமையின் கீழ் 1923-25ம் ஆண்டுகளின்போது சக்திமிக்க புரட்சிகர இயக்கமொன்றை ஆரம்பித்திருந்தனர்; இந்த இயக்கம் தேசியப் புரட்சிகரச் சேனையால் சென் சியுங்-மிங்கின் தலைமையிலான எதிர்ப்புரட்சிகரக் கும்பலுக்கு எதிராகக் குவாங்சௌவிலிருந்து தொடுக்கப்பட்ட கிழக்கு முகமான படையெடுப்புகள் இரண்டினதும் வெற்றிக்குப் பெரிதும் உதவியது. 1927 ஏப்ரல் 12ந் திகதி சியாங் கை-ஷேக் புரட்சிக்குத் துரோகம் செய்ததன் பின் இவ்விவசாயிகள் ஏப்ரலிலும் செப்டம்பரிலும் அக்டோபரிலுமாக மூன்று எழுச்சிகளை நடத்தி, 1928 ஏப்ரல் வரை நின்று பிடித்த புரட்சிகர ஆட்சியொன்றை நிறுவினர். கிழக்கு ஹுனன்

மாகாணத்தில் எழுச்சிகளில் எழுந்த விவசாயிகள் 1927 செப்டம்பரில் லியூ யாங், பிங்கியாங், லீலிங், சூசௌ ஆகிய இடங்களை உள்ளடக்கிய பகுதியொன் றைக் கைப்பற்றினர். ஏறத்தாழ அதே சமயம், வடகிழக்கு ஹூபெய் மாகாணத் தில் பத்தாயிரக்கணக்கான விவசாயிகள் சியாஓகான், மாசெங், ஹுவாங்ஆன் ஆகிய இடங்களில் ஓர் ஆயுதந்தரித்த எழுச்சியை நடத்தி, ஹுவாங்ஆனின் மாவட்டப்பட்டினத்தை முப்பது நாட்களுக்கு மேலாகக் கைப்பற்றிவைத்திருந் தனர். தெற்கு ஹூனனில், யீச்சாங், சென்சௌ, லெய்யாங், யுங்சிங், ஸெசிங் மாவட்டங்களில் விவசாயிகள் 1928 ஜனவரியில் ஆயுதமேந்தி எழுச்சியுற்று, மூன்று மாதங்கள் நிலைத்திருந்த புரட்சிகர ஆட்சியொன்றை நிறுவினர்.

10. செங்காவலர்படைகள் புரட்சிகரத் தளப்பிரதேச வெகுஜனங்களின் ஆயு தந் தரித்த கூறுகளாகும், அவற்றின் அங்கத்தினர்கள் ஒழுங்கான உற்பத்தி வேலையில் ஈடுபடுகிறார்கள்.

11. இங்கு விசேஷக் கமிட்டி என்பது சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஹூனன்-கியாங்சி எல்லைப் பகுதியிலான விசேஷப்பிரதேசக் கமிட்டியைக் குறிக்கிறது. இது அப்போது மாகாணக் கமிட்டிக்கும் மாவட்டக் கமிட்டிக்குமிடைப்பட்ட ஒரு கட்சி ஸ்தாபன வடிவமாக இருந்தது. இங்கு சேனைக் கமிட்டி என்பது ஹூனன்-கியாங்சி எல்லைப்பகுதியிலான தொழிலாள-விவசாயிச் செஞ்சேனையின் நான்காவது சேனையின் கட்சிக் கமிட்டியைக் குறிக்கிறது. (மொழிபெயர்ப்பாளர் குறிப்பு)

12. லோஸியாஓ மலைகள் கியாங்சி, ஹூனன் மாகாணங்களின் எல்லைகள் நெடுகில் விரிந்துள்ள ஒரு பெரிய மலைத்தொடர், சிங்காங் மலைகள் அதன் நடுப் பிரிவில் உள்ளன.

13. ''சிறு முதலாளித்துவ வர்க்கம்'' என்ற பதத்தால் தோழர் மாஓ சேதுங் அவர்கள் கருதுவது விவசாயிகள் நீங்கலாகக் கைப்பணிக்காரர்களையும், சிறு வியாபாரிகளையும் பல்வேறு வகைத் தொழிற் துறையினரையும் சிறு முதலாளித் துவ வர்க்கத்தில் தோன்றிய புத்திஜீவிகளையும் ஆகும். சீனவில் அவர்கள் அனே கமாக நகரங்களிலேயே வசிக்கின்றனர், ஆனல் நாட்டுப்புறத்திலும் கணிசமான தொகையினர் உள்ளனர்.

14. ''ஐந்து சிங்கள்'' என்பது சிங்காங் மலைகளில், மேற்கு கியாங்சியில் யுங்ஸின், நிங்காங், சுய்ச்சுவான் ஆகிய இடங்களுக்கும் கிழக்கு ஹூனனில் லின்ஸியென் மாவட்டத்திற்கும் இடையில் அமைந்துள்ள தாசிங், ஸியாஓசிங், ஷாங்சிங், சுங்சிங், ஸ்யாசிங் ஆகிய கிராமங்களைக் குறிக்கிறது.

# சிங்காங் மலைகளிலான போராட்டம்*

(1928, நவம்பர் 25)

## ஹுனான்-கியாங்சி எல்லைப் பிரதேசத்திலான சுதந்திர ஆட்சியும் ஆகஸ்ட் தோல்வியும்

சிவப்பு அரசியல் அதிகாரத்தின் கீழான சிறு பிரதேசம் ஒன்றோ அதற்கு மேற்பட்டவையோ அவற்றைச் சூழ்ந்திருக்கும் வெள்ளை ஆட்சியின் நடுவில் தோன்றியுள்ள ஒரே ஒரு நாடு இன்று உலகில் சீனா தான். இந்த நிகழ்ச்சிக்கு ஒரு காரணம், சீனாவின் தரகு முதலாளி, உள்ளூர்க் கொடுங்கோலர் தீயபிரபு வர்க்கங்களுக்குள்ளேயுள்ள இடையறாத பிளவுகளும் யுத்தங்களுமாகும், என ஆராய்கையில் எமக்குப் புலப்படுகிறது. இந்தப் பிளவுகளும் யுத்தங்களும் தொடர்கின்ற வரை தொழிலாளர்களினதும் விவசாயிகளினதும் ஆயுதந்தரித்த சுதந்திர ஆட்சியொன்று தொடர்ந்து பிழைத்திருப்பதும் வளர்வதும் சாத்தியம் இத்துடன் கூடவே அது பிழைத்திருப்பதற்கும் வளர்வதற்கும் பின்வரும் சூழ்நிலைகள் தேவை: (1)

*இது தோழர் மாஓ சேதுங் அவர்களால் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டிக்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஓர் அறிக்கை.

ஸ்திரமான ஒரு வெகுஜன அடித்தளம், (2) சரியான ஒரு கட்சி ஸ்தாபனம், (3) கணிசமானளவு பலமான ஒரு செஞ்சேனே, (4) ராணுவ நடவடிக்கைகளுக்குச் சாதகமான தரையமைப்பு, (5) நிலேத்து நிற்பதற்குப் போதுமான பொருளாதார வளங்கள்.

ஒரு சுதந்திர ஆட்சி, ஆளும் வர்க்க ஆட்சி தற்காலிகமாக நிலேயானதாக இருக்கையிலும், அது பிளவுபட்டிருக்கையிலும், சுற்றிவளேத்திருக்கும் ஆளும் வர்க்கங்களுக்கு எதிராகத் தனது யுத்ததந்திரத்தை மாறுபடுத்திக்கொள்ளவேண்டும். ஹூனன், ஹூபெய் மாகாணங்களில் லீ சுங்-ஜென், தாங் ஷெங்-சி ஆகியோருக்கிடையிலும்[1] குவாங்துங் மாகாணத்தில் சாங் ஃபா-குவெய், லீ சி-ஷென் ஆகியோருக்கிடையிலு[2]மான யுத்தங்களின் போதைப் போல், ஆளும் வர்க்கங்கள் பிளவுபட்டிருக்கும் ஒரு காலகட்டத்தில் எமது யுத்ததந்திரம் ஒப்புநோக்காகத் துணிகரமானதாகவும் ராணுவ நடவடிக்கைகளால் பிடிக்கப்படும் பிரதேசம் ஒப்புநோக்காகப் பெரிதாகவும் இருக்கலாம். இருப்பினும், வெள்ளேப் பயங்கரம் வந்து சாடும்போது நாம் தங்கிநிற்பதற்குப் பாதுகாப்பானதாக ஏதும் இருக்கக்கூடியதாக நாம் மத்திய டிஸ்திரிக்டுகளில் ஒரு கெட்டியான அஸ்திவாரத்தை அமைத்துக்கொள்ள இன்னும் கவனம் எடுக்க வேண்டும். தெற்கு மாகாணங்களில் இந்த ஆண்டு ஏப்ரலின் பின் இருந்தது போல் ஆளும் வர்க்கங்கள் ஒப்புநோக்காக நிலேயானவையாக இருக்கும் ஒரு காலகட்டத்தில் எமது யுத்ததந்திரம் சிறுகச் சிறுக முன்னேறுவதாக இருக்க வேண்டும். இத்தகைய ஒரு காலகட்டத்தில், ராணுவ விவகாரங்களில் மிக மோசமான காரியம் குருட்டுத்தனமான ஒரு முன்னேறுதலுக்காக எமது படைகளேப் பிரிப்பதும், ஸ்தல வேலேயில் (நிலத்தைப் பங்கிட்டளிப்பது, அரசியல் அதிகாரத்தை ஸ்தாபிப்பது, கட்சி

யை விரிவுபடுத்துவது, ஸ்தல ஆயுதப் படைகளை அணிதிரட்டு வது ஆகியவற்றில்) மிக மோசமான காரியம் எமது ஆட்பலத் தைச் சிதறலாகப் பரவுவதும் அதனால் மத்திய டிஸ்திரிக்டுக ளில் கெட்டியான அஸ்திவாரமொன்றை அமைப்பதைப் புறக் கணிப்பதுமாகும். பல சிறு செம்பிரதேசங்கள் உற்றுள்ள தோல்விகளுக்குக் காரணமாக இருந்துள்ளவை ஒன்றில் தேவை யான புறநிலைச் சூழ்நிலைகள் இல்லாமை அல்லது தந்திரோ பாயங்களில் அகநிலைப்பட்ட தவறுகள் ஆகும். தந்திரோபா யங்களிலான தவறுகள் முற்றுக ஆளும் வர்க்கங்களின் ஆட்சி தற்காலிகமாக நிலையானதாக உள்ளதும் அது பிளவுபட்டிருப் பதுமான இரு வேறுபட்ட வகையான காலகட்டங்களைத் தெளி வாகப் பிரித்தறியத் தவறியதன் காரணமாகவே செய்யப்பட் டுள்ளன. ஆளும் வர்க்க ஆட்சி தற்காலிகமாக நிலையாக இருந்த ஒரு காலகட்டத்தில் சில தோழர்கள், எதிரி வெறு மனே நிலப்பிரபுக்களின் கட்டாயப் படைகளைக் கொண்டு மட் டுமல்லாமல் கிரமமான துருப்புகளைக் கொண்டு செறிவான நடவடிக்கைகளாலும் தாக்க முடியும் என்ற உண்மையைச் சிறிதளவேனும் உணராதவர்கள் போல, குருட்டுத்தனமான ஒரு முன்னேறுதலுக்காக எமது படைகளைப் பிரிப்பதைக் கோரி, விசாலமான பகுதிகளின் பாதுகாப்பைத் தனியச் செங் காவலர் படைகளிடம் விட்டுவிடுவதைக் கூடப் பிரேரித்தனர். ஸ்தல வேலையில் இவர்கள் மத்திய டிஸ்திரிக்டுகளில் கெட்டி யான அஸ்திவாரமொன்றை அமைப்பதை அறவே புறக் கணித்து, எமது வல்லமைக்கு உட்பட்டதா இல்லையா என்ப தைப் பொருட்படுத்தாது, வரையறையற்ற விசாலிப்பிற்கு முயன்றனர். எவராவது ராணுவ நடவடிக்கைகளில் சிறுகச் சிறுக முன்னேறும் கொள்கையொன்றையோ, அல்லது ஸ்தல

வேலையில் எமது பிரயத்தனத்தைத் தோற்கடிக்க முடியாத ஒரு ஸ்தானத்தைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக மத்திய டிஸ்திரிக்டுகளில் உறுதியான ஒரு அஸ்திவாரத்தை அமைக்கச் செலுத்தும் கொள்கையொன்றையோ ஆதரித்தால், இவர்கள் அவருக்குப் ''பழமைபோற்றுபவன்'' எனப் பெயரிட்டனர். இவர்களின் தவறான இக்கருத்துக்களே கடந்த ஆகஸ்டில் ஹுனன்-கியாங்சி எல்லைப் பிரதேசமும் தெற்கு ஹுனனில் செஞ்சேனையின் நான்காவது சேனையும் உற்ற தோல்விகளுக்கு மூலகாரணம்.

ஹுனன்-கியாங்சி எல்லைப் பிரதேசத்திலான எமது வேலை கடந்த ஆண்டு அக்டோபரில் தொடங்கியது. தொடக்கத்தில் மாவட்டங்களிலான எமது கட்சி ஸ்தாபனங்கள் எல்லாம் செயல்படாது போயிருந்தன; ஸ்தல ஆயுதப் படைகள் சிங் காங் மலைகளின் அருகாமையில் யுஅன் வென்-சாய், வாங் சுவோ ஆகியோரின் கீழிருந்த, ஒவ்வொன்றும் பெரிதும் பழு தடைந்த அறுபது துப்பாக்கிகளைக் கொண்டவையான, இரு கூறுகளால் மட்டுமே ஆனவையாக இருக்கையில், யுங்ஸின், லியன்ஹுவா, சாலிங், லின்ஸியென் மாவட்டங்களிலான விவசாயித் தற்காப்புப் படைகள் உள்ளூர்க் கொடுங்கோலர் தீய பிரபுவர்க்கத்தால் முற்றுக் நிராயுதபாணிகளாக்கப்பட்டு வெகு ஜனங்களின் புரட்சிகர உற்சாகமும் அடக்கப்பட்டிருந்தது. இவ்வாண்டு பெப்ரவரியளவில் நிங்காங், யுங்ஸின், சாலிங், சுய்ச்சுவான் ஆகியவற்றில் மாவட்டக் கட்சிக் கமிட்டிகளும், லின்ஸியெனில் ஒரு விசேஷ டிஸ்திரிக்ட் கட்சிக் கமிட்டியும் இருந்ததோடு, லியன்ஹுவாவிலும் ஒரு கட்சி ஸ்தாபனம் செயல்படவும் வாந்ஆன் மாவட்டக் கமிட்டியுடன் தொடர்புகளை ஏற்படுத்தவும் தொடங்கிக்கொண்டிருந்தது. லின்ஸியென் நீங்

கலாக எல்லா மாவட்டங்களும் சில ஸ்தல ஆயுதந்தரித்த கூறு களைக் கொண்டிருந்தன. நிங்காங், சாலிங், சுய்ச்சுவான், யுங்ஸின் மாவட்டங்களில், விசேஷமாகக் கடைசி இரண்டிலும், உள்ளூர்க் கொடுங்கோலர் தீயபிரபுக்களுக்கு எதிராக வெகு ஜனங்களைத் தட்டியெழுப்பிய மிகப் பல கொரில்லா எழுச்சிகள் நடைபெற்று, அவை எல்லாமே கணிசமானளவு வெற்றிகர மாகவும் இருந்தன. அந்தக் காலகட்டத்தில் நிலப் புரட்சி இன்னும் மிக ஆழமாக நடத்தப்பெற்றிருக்கவில்லை. அரசியல் அதிகார அங்கங்கள் தொழிலாளர், விவசாயிகள், படைவீரர் களின் அரசாங்கங்கள் என அழைக்கப்பட்டன. சேனையில் படைவீரர் கமிட்டி[3]கள் அமைக்கப்பட்டன. கூறுகள் வெவ் வேறான பணிகளிலீடுபட்டுச் சென்றபோது அவற்றை வழி நடத்த நடவடிக்கைக் கமிட்டிகள் அமைக்கப்பட்டன. அங்கு கட்சியின் உயர் தலைமை அங்கமாக இருந்தது இலையுதிர்கால அறுவடை எழுச்சியின்போது ஹுனான் மாகாணக் கமிட்டியி னால் நியமிக்கப்பட்டிருந்த (மாஓ சேதுங்கைச் செயலாளராகக் கொண்ட) முனைக் கமிட்டியாகும். மார்ச் ஆரம்பத்தில் தெற்கு ஹுனான் விசேஷக் கமிட்டியின் வேண்டுதலின் பேரில், முனைக் கமிட்டி ரத்துச் செய்யப்பட்டு, (ஹோ திங்-யிங்கைச் செயலா ளராகக் கொண்ட) டிவிஷன் கட்சிக் கமிட்டியாகப் புனரமைக் கப்பட்டு, அவ்வாறுகச் சேனையிலான கட்சி ஸ்தாபனங்களுக்கு மட்டும் பொறுப்பானதும் ஸ்தலக் கட்சி ஸ்தாபனங்கள்மீது அதிகாரம் இல்லாததுமான ஒரு அங்கமாக ஆகியது. இதற் கிடையில் மாஓ சேதுங்கின் படைகள் தெற்கு ஹுனனிலான விசேஷக் கமிட்டியின் வேண்டுதலின் பேரில் அங்கு அனுப் பப்பட்டு, அதன் விளைவாக ஹுனன்-கியாங்சி எல்லைப் பிர தேசம் ஒரு மாதத்திற்கு மேலாக எதிரியால் கைப்பற்றி வைத்

இணைபாடு போதாமலிருந்ததினதும் நற்பயனுக, எம்மால் ஏப்ரல் முதல் ஜூலை வரையான நான்கு மாதங்களில் பல ராணுவ வெற்றிகளை ஈட்டவும் மக்களின் சுதந்திர ஆட்சியை விரிவுபடுத்தவும் முடிந்தது. எம்மைவிடப் பன்மடங்கு அதிக பலமானவனுக இருந்தும் எதிரியால் எமது சுதந்திர ஆட்சியை அழிப்பது ஒருபுறமிருக்க, அது விரிவுபடுவதைத் தடுக்கவே இயலவில்லை. எமது சுதந்திர ஆட்சி ஹுனுன் மீதும் கியாங்சி மீதும் வர வரப் பெரிதான செல்வாக்கைச் செலுத்தத் தலைப்பட்டது. ஆகஸ்ட் தோல்விக்கான ஒரே காரணம், அது ஆளும் வர்க்கங்களுக்குத் தற்காலிக ஸ்திரப்பாட்டின் காலகட்டம் என்பதை உணரத் தவறிச் சில தோழர்கள் ஆளும் வர்க்கங்களுள் பிளவுகளின் காலகட்டமொன்றிற்கு உகந்ததான ஒரு கொள்கையைக் கைக்கொண்டு, எமது படைகளைப் பிரித்துத் தெற்கு ஹுனுனை நோக்கிக் குருட்டுத்தனமாக முன்னேறி, அவ்வாறுக எல்லைப் பிரதேசம், தெற்கு ஹுனுன் ஆகிய இரு இடங்களிலும் தோல்வியை விளைவித்ததுதான். ஹுனுன் மாகாணக் கமிட்டியின் பிரதிநிதி டு ஸியூ-சிங்கும் மாகாணக் கமிட்டியால் நியமிக்கப்பட்டிருந்த எல்லைப் பிரதேச விசேஷக் கமிட்டிச் செயலாளர் யாங் காய்-மிங்கும் பலமாக எதிர்ப்புத் தெரிவித்த மாஒ சேதுங்கும் வான் ஸி-ஸியனும் பிற தோழர்களும் மிகத் தொலைவில் யுங்ஸினில் இருந்தமையைச் சாதகமாகக் கொண்டு, உள்ள நிலைமையைத் தேர்ந்துகொள்ளத் தவறி, ஹுனுன் மாகாணக் கமிட்டியின் கருத்துக்களை ஆட்சேபித்திருந்த கட்சியின் சேனைக் கமிட்டியினதும் விசேஷக் கமிட்டியினதும் யுங்ஸின் மாவட்டக் கமிட்டியினதும் கூட்டுக் கூட்டத்தின் தீர்மானங்களைப் புறக்கணித்தனர். அவர்கள் தெற்கு ஹுனுனுக்குப் படையெடுக்கும்படியான ஹுனுன் மாகாணக்

கமிட்டியின் உத்தரவை வெறுமனே யாந்திரிக ரீதியில் அமுல் படுத்தி, போராட்டத்தைத் தவிர்த்துச் சொந்த ஊருக்குத் திரும்புவதற்கான (யீச்சாங்கைச் சேர்ந்த விவசாயிகளாலான) செஞ்சேனையின் 29ம் ரெஜிமெண்டின் விருப்பத்துடன் ஒத்துப் போய், அவ்வாருக எல்லைப் பிரதேசம், தெற்கு ஹூனன் ஆகிய இரு இடங்களிலும் தோல்வியை விளைவித்தனர்.

ஆதியில், ஜூலை நடுப் பகுதியில், ஹூனனைச் சேர்ந்த ஹூ ஷாங்கின் கீழான எதிரியின் எட்டாவது சேனை நிங்காங்கிற் படையெடுத்து, யுங்ஸினுக்கு ஊடுருவிச் சென்று, எம்முடன் சண்டை செய்ய வீணில் முயன்று (எமது வீரர்கள் அதை ஒரு பக்கத்து வீதியிலிருந்து தாக்க முயன்றனர், ஆனுல் தப்ப விட்டுவிட்டனர்), பின்னர், எம்மை ஆதரித்த வெகுஜனங் களுக்குப் பயந்திருந்ததனுல் அவசர அவசரமாக லியன்ஹூவா வழியாக சாலிங்கிற்குப் பின்வாங்கியது. இதற்கிடையில், லின்ஸியெனையும் சாலிங்கையும் தாக்குவதற்கு நிங்காங்கி லிருந்து முன்னேறிக்கொண்டிருந்த செஞ்சேனையின் பிரதான பிரிவு லின்ஸியெனை அடைந்ததும் தன் திட்டங்களை மாற் றிக்கொண்டு தெற்கு ஹூனனை நோக்கித் திரும்பியபோதில், வாங் ஜூன், சின் ஹ்ான்-திங் ஆகியோரின் கீழான மூன்ரும் சேனையின் ஐந்து ரெஜிமெண்டுகளும் ஹூ வென்-தொவின் கீழான ஆருவது சேனையின் ஆறு ரெஜிமெண்டுகளும் அடங்கிய, கியாங்சியிலிருந்து வந்த எதிரிப் படைகள் யுங்ஸின் மீது கூட் டான தாக்குதலொன்றைத் தொடுத்தன. அந்தத் தருணத்தில் எமக்கு யுங்ஸினில் ஒரு ரெஜிமெண்ட் மட்டுமே இருந்தது; அது, பரந்த வெகுஜனங்களால் தரப்பட்ட மறைப்பின் கீழ், எல்லாத் திசைகளிலுமான கொரில்லாத் தாக்குதல்கள் மூலம் இந்தப் பதினெரு ரெஜிமெண்டுகளையும் இருபத்தைந்து நாட்

ளுடன் சேர்ந்துகொண்டது; கூட்டான படைகள் சிங்காங் மலைகளுக்கே, சுங்யீ, ஷாங்யூ வழியாகத் திரும்பிச் செல்ல வேண்டுமென முடிவுசெய்யப்பட்டது. நாம் சுங்யீயை அடைந்த போது பட்டாளத் தளபதி யுஅன் சுங்-சுவான் ஒரு காலாட் கொம்பனியுடனும் ஒரு பீரங்கிக் கொம்பனியுடனும் மாறிச் சென்றார்; இரு கொம்பனிகளும் திரும்பக் கொண்டுவரப்பட்டனவாயினும் எமது ரெஜிமென்ட் தளபதி வாங் எல்-சுவோ இந்த நடவடிக்கையில் உயிரிழந்தார். எமது வீரர்கள் திரும்பிச் சென்றுகொண்டு, ஆனால் இன்னும் சென்று சேராமல் இருக்கையில், அச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஹுனுனையும் கியாங்சியையும் சேர்ந்த எதிரிப் படைகள், ஆகஸ்ட் 30ந் திகதி, சிங்காங் மலைகளைத் தாக்கின. ஒரு பட்டாளத்திற்கும் குறைவான எண்ணிக்கையினவான எமது பாதுகாப்புத் துருப்புகள் தங்கள் சாதகமான ஸ்தானங்களை உபயோகித்து, எதிர்த்துச் சண்டையிட்டு எதிரியைப் புறமுதுகிடச் செய்து, இத்தளப்பிரதேசத்தையும் காப்பாற்றின.

எமது ஆகஸ்ட் தோல்விக்கான காரணங்கள் பின்வருமாறு: (1) ஊசலாடியவர்களும் வீடு திரும்பும் ஆவல் கொண்டவர்களுமான சில அதிகாரிகளும் வீரர்களும் தங்கள் போரிடும் திறனை இழந்துவிட்டிருக்க, தெற்கு ஹுனுனுக்குச் செல்ல மனமின்றியிருந்த பிறர் உற்சாகம் போதாதவர்களாக இருந்தனர்; (2) தகிக்கும் கோடை வெப்பத்தில் நீண்ட பயணங்களால் எம் வீரர்கள் களைத்திருந்தனர்; (3) லின்ஸியெனிலிருந்து பல நூறு லீ தூரம் குருட்டுத்தனமாகச் சென்றுவிட்டதால் எமது வீரர்கள் எல்லைப் பிரதேசத்துடன் தொடர்பை இழந்து தனிப்பட்டவர்களானுர்கள்; (4) தெற்கு ஹுனுனில் வெகுஜனங்கள் இன்னும் எழுச்சியுறுத்தப்படாதிருந்த

தால், படையெடுப்பு சுத்த ராணுவத் துணிச்சல்வாத நட வடிக்கையாகவே முடிந்தது; (5) நாம் எதிரியின் நிலைமையைப் பற்றித் தகவலின்றியிருந்தோம்; (6) தயாரிப்புகள் போத வில்லை, அதிகாரிகளும் வீரர்களும் போர்நடவடிக்கையின் நோக் கத்தை விளங்கிக்கொள்ளாதிருந்தனர்.

## சுதந்திர ஆட்சியின் கீழான பிரதேசத்தில் தற்போது நிலவும் நிலைமை

இவ்வாண்டு ஏப்ரலிலிருந்து செம்பிரதேசங்கள் படிப்படி யாக விரிவாக்கப்பட்டுள்ளன. கியாங்சி எதிரிப் படைகளை நாம் நான்காவது தடவையாகத் தோற்கடித்த ஜூன் 23ந் திகதிய லுங்யுவான்கோ (யுங்ஸினினதும் நிங்காங்கினதும் எல் லைகளில்) போருக்குப் பின்னர் எல்லைப் பிரதேசம், நிங்காங், யுங்ஸின், லியன்ஹுவா ஆகிய மூன்று மாவட்டங்களையும், கிஆனினதும் அன்ஃபுவினதும் சிறு பிரிவுகளையும், சுய்ச்சுவா னின் வடக்குப் பிரிவையும், லின்ஸியெனின் தென்கிழக் குப் பிரிவையும் தழுவியதாய், அதன் அபிவிருத்தியின் உச்சத்தை எட்டியது. செம்பிரதேசங்களில் நிலத்தில் பெரும் பகுதி பங்கிட்டளிக்கப்பட்டிருந்தது, எஞ்சியது பங்கிட்டளிக்கப்பட் டுக்கொண்டிருந்தது. அரசியல் அதிகார அங்கங்கள் டிஸ் திரிக்டுகளிலும் வட்டாரங்களிலும் எங்கும் நிறுவப்பட்டன. நிங்காங்கிலும் யுங்ஸினிலும் லியன்ஹுவாவிலும் சுய்ச்சுவானி லும் மாவட்ட அரசாங்கங்கள் நிறுவப்பட்டன, எல்லைப் பிர தேச அரசாங்கமொன்றும் அமைக்கப்பட்டது. கிராமங்களில்

பொது அளவில் தொழிலாளர்களினதும் விவசாயிகளினதும் எழுச்சிப் படைப் பிரிவுகள் ஸ்தாபிக்கப்பட்டன, டிஸ்திரிக்ட், மாவட்ட மட்டங்களில் செங்காவலர் படைகள் ஏற்படுத்தப் பட்டன. ஜூலையில் கியாங்சி எதிரிப் படைகள் தாக்குதல்கள் தொடுத்ததோடு, ஆகஸ்டில் ஹூனன், கியாங்சி எதிரிப் படைகள் கூட்டாக சிங்காங் மலைகளைத் தாக்கின. எல்லைப் பிர தேசத்திலான எல்லா மாவட்டப் பட்டினங்களும் சமவெளி களும் எதிரியால் கைப்பற்றப்பட்டன. எதிரியின் ஓநாய்கள்—அமைதி பேணும் படைகளும் நிலப்பிரபுக்களின் கட்டாயப் படைகளும்—தறிகெட்டலைந்து, பட்டினங்கள், நாட்டுப்புறம் எங்கணும் வெள்ளைப் படுபயங்கரம் தாண்டவமாடியது. கட்சி, அரசாங்க ஸ்தாபனங்களில் அனேகமானவை தகர்ந்தன. பணக் கார விவசாயிகளும் கட்சியிலிருந்த சுயநலவாதிகளும் பெருந் தொகையில் எதிரியின் பக்கத்திற்குச் சென்றனர். ஆகஸ்ட் 30ந் திகதிய சிங்காங் மலைப் போர் நடத்தப்பட்ட போதுதான் ஹூனன் எதிரிப் படைகள் லின்ஸியெனிற்குப் பின்வாங் கின; ஆனல் கியாங்சி எதிரிப் படைகள் இன்னும் மாவட்டப் பட்டினங்கள் எல்லாவற்றையும் கிராமங்களில் அனேகமான வற்றையும் பிடித்துவைத்திருந்தன. இருப்பினும், நிங்கா னின் மேற்கு, வடக்கு டிஸ்திரிக்டுகள், யுங்ஸினின் வடக்கு, மேற்கு, தெற்குப் பிரிவுகளில் முறையே தியென்லுங், ஸியா ஒஸிஜியாங், வாந்நியென்ஷன் டிஸ்திரிக்டுகள், லியன்ஹூவாவின் ஷாங்சி டிஸ்திரிக்ட், சுய்ச்சுவானின் சிங்காங்ஷான் டிஸ்திரிக்ட், லின்ஸியெனின் சிங்ஷுகாங், தாயுவான் டிஸ்திரிக்டுகள் ஆகி யவற்றை அடக்கும் மலைப் பிரதேசங்களை எதிரியால் ஒருபோ தும் கைப்பற்ற முடியவில்லை. ஜூலையிலும் ஆகஸ்டிலும் செஞ் சேனையின் ஒரு ரெஜிமென்ட், பல்வேறு மாவட்டங்களினதும்

செங்காவலர் படைகளுடன் இணைவாக, பெரியவையும் சிறியவையுமாக ஸ்கோர் கணக்கான போர்களை நடத்தி, முப்பது துப்பாக்கிகளை மட்டுமே இழந்து, இறுதியில் மலைகளுக்கு வாபஸாகியது.

எமது வீரர்கள் சுங்யீ, ஷாங்யூ வழியாகச் சிங்காங் மலைகளுக்குத் திரும்பிச் சென்று கொண்டிருக்கையில், தெற்குக் கியாங்சியைச் சேர்ந்த எதிரிப் படை, லியூ ஷு-யீயின் கீழான சுதந்திரமான 7வது டிவிஷன், எம்மை சுய்ச்சுவான் வரை துரத்தி வந்தது. செப்டம்பர் 13ந் திகதி நாம் லியூ ஷு-யீயைத் தோற்கடித்து, பல நூறு துப்பாக்கிகளைக் கைப்பற்றி, சுய்ச்சுவானையும் பிடித்தோம். செப்டம்பர் 26ந் திகதி நாம் சிங்காங் மலைகளுக்குத் திரும்பினோம். அக்டோபர் 1ந் திகதி நிங்காஙில் நாம் சியுங் ஷு-ஹுய்யின் படையைச் சேர்ந்த சோ ஹுன்-யுவானின் ஆணையிலான பிரிகேட்டுடன் போர் தொடுத்து அதைத் தோற்கடித்து, நிங்காங் மாவட்டம் முழுவதையும் திரும்பப் பிடித்தோம். இதற்கிடையில், குவெய்துஙில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த, யென் சுங்-ரூவின் கீழான, ஹுனன் எதிரிப் படைகளின் 126 வீரர்கள் எமது பக்கத்திற்கு மாறி வந்து, பி சான்-யுன்னை ஆணையாளராகக் கொண்ட ஒரு விசேஷ சண்டைப் பட்டாளமாக அணிப்படுத்தப்பட்டனர். நவம்பர் 9ந் திகதி நாம் நிங்காங் மாவட்டப் பட்டினத்திலும் லுங்யுவான்கோவிலும் சோவின் பிரிகேட்டின் ஒரு ரெஜிமென்டைப் புறமுதுகிடச் செய்தோம். மறுநாள் நாம் முன்னேறி யுங்ஸினைக் கைப்பற்றினோம், ஆனால் சற்றுப் பின்னர் நிங்காங்கிற்கு வாபஸானோம். தற்போது, தெற்கில் சுய்ச்சுவான் மாவட்டத்தில் சிங்காங் மலைகளின் தெற்குச் சரிவுகளிலிருந்து வடக்கில் லியன்ஹுவா மாவட்டத்தின் எல்லை வரை உள்ள

எமது பிரதேசம் நிங்காங் முழுவதையும் சுய்ச்சுவான், லின் ஸியென், யுங்ஸின் ஆகியவற்றின் பகுதிகளையும் உள்ளடக்கும், வடக்குத் தெற்காக உள்ள, ஒடுங்கிய, தொடர்ச்சியான பிரதேசமாகும். இருப்பினும், லியன்ஹுவாவின் ஷாங்சி டிஸ்திரிக்டும் யுங்ஸினின் தியென்லுங், வாந்நியென்ஷன் டிஸ்திரிக்டுகளும் இந்தத் தொடர்ச்சியான பிரதேசத்துடன் உறுதியாக இணைக்கப்பட்டில்லை. எதிரி எமது தளப்பிரதேசத்தை ராணுவத் தாக்குதல்களாலும் பொருளாதார முற்றுகையாலும் அழிக்க முயல்கிறான்; நாம் இப்போது அவனது தாக்குதல்களைத் தோற்கடிக்கத் தயாராகிவருகிறோம்.

## ராணுவப் பிரச்சினைகள்

எல்லைப் பிரதேசத்திலான போராட்டம் முற்றாக ராணுவ ரீதியானதாகையால், கட்சியும் வெகுஜனங்களும் யுத்த நிலையிலிடப்பட வேண்டியுள்ளது. எதிரியை எப்படிச் சமாளிப்பது, எப்படிப் போரிடுவது என்பது எமது நாளாந்த வாழ்வில் மையமான பிரச்சினையாகி உள்ளது. ஒரு சுதந்திர ஆட்சி ஆயுதந் தரித்த ஓர் ஆட்சியாக இருக்க வேண்டும். அத்தகைய ஒரு பிரதேசம் எங்கு இருந்தாலும், ஆயுதப் படைகள் இல்லாமலோ போதாமலோ இருந்தாலோ அல்லது எதிரியைச் சமாளிப்பதில் பிழையான தந்திரோபாயங்கள் உபயோகிக்கப்பட்டாலோ அது உடனடியாக எதிரியால் கைப்பற்றப்படும். இப்போராட்டம் நாளுக்கு நாள் உக்கிரமுற்று வருகின்றதாகையால், எமது பிரச்சினைகள் மிக மிகச் சிக்கலானவையாயும் பாரதூரமானவையாயும் ஆகியுள்ளன.

எல்லைப் பிரதேசத்திலான செஞ்சேனை, (1) முன்னர் ஸாஓ சௌவிலும் ஷன்டோவிலும் யெ திங், ஹோ லுங் ஆகியோரின் கீழிருந்த துருப்புகள்[5], (2) வூசாங்கிலான முன்னைய தேசிய அரசாங்கத்தின் காவலர் ரெஜிமென்ட்[6], (3) பிங்கியாங்கை யும் லியூயாங்கையும் சேர்ந்த விவசாயிகள்[7], (4) தெற்கு ஹூனானைச் சேர்ந்த விவசாயிக[8]ளும் ஷுய்கோஷனைச் சேர்ந்த தொழிலாளர்க[9]ளும், (5) ஷி கே-சியாங், தாங் ஷெங்-சி, பய் சுங்-சி, சு பெய்-தே, வூ ஷாங், சியுங் ஷு-ஹுய் ஆகி யோரின் கீழான படைகளிலிருந்து கைப்பற்றப்பட்ட வீரர்கள், (6) எல்லைப் பிரதேசத்திலான மாவட்டங்களைச் சேர்ந்த விவ சாயிகள் ஆகியோரிலிருந்து எடுக்கப்பட்டது. இருப்பினும், முன்னர் யெ திங்கினதும் ஹோ லுங்கினதும் ஆணையின் கீழி ருந்த துருப்புகள், காவலர் ரெஜிமென்ட், பிங்கியாங்கையும் லியூயாங்கையும் சேர்ந்த விவசாயிகள் ஆகியோரில், ஒரு வரு டத்திற்கு மேற்பட்ட காலச் சண்டையிடலின் பின்னர், இப் போது மூன்றிலொரு பங்கினர் மட்டுமே எஞ்சியுள்ளனர். தெற்கு ஹூனானைச் சேர்ந்த விவசாயிகள் மத்தியிலும் நஷ் டங்கள் அதிகமாக இருந்துள்ளன. இவ்வாறாக, முதல் நான்கு பிரிவுகளுமே இதுநாள்வரை செஞ்சேனையின் நான்காவது சேனையின் முதுகெலும்பாக இருந்து வருகின்றன என்ற போதிலும், அவற்றைவிட எண்ணிக்கையில் இப்போது கடைசி இரண்டு பிரிவுகளும் மிக அதிகமாக உள்ளன. மேலும், பின்னவற்றில் விவசாயிகளைவிடக் கைப்பற்றப்பட்ட எதிரிப் படைவீரர்களே எண்ணிக்கையில் அதிகமாக உள்ளனர்; இந்த வழியில் காலியிடங்களுக்கு ஆள் பெறுவது இல்லாவிட்டால் பாரதூரமான ஆள் பலப் பிரச்சினையொன்று இருக்கும். அப் படியும் கூட ஆள் தொகையிலான அதிகரிப்பு துப்பாக்கிகளின்

அதிகரிப்புடன் நிகராக இல்லை. துப்பாக்கிகள் இலகுவில் இழக்கப்படுவதில்லை, ஆனால் வீரர்கள் காயமுறுகின்றனர் அல்லது கொல்லப்படுகின்றனர், நோய்வாய்ப்படுகின்றனர் அல்லது சேனையை விட்டு ஓடிவிடுகின்றனர், எனவே அவர்கள் அதிக இலகுவாக இழக்கப்படுகின்றனர். ஹுனன் மாகாணக் கமிட்டி எமக்கு அன்யுவானிலிருந்து தொழிலாளர்க[10]ளை அனுப்புவதாக வாக்களித்துள்ளது, அவர்கள் அவ்வாறு செய்வர் என நாம் ஆவலுடன் நம்பி இருக்கிறோம்.

வர்க்க மூலத்தைப் பொறுத்த வரையில் செஞ்சேனை ஒரு பகுதி தொழிலாளர்களாலும் விவசாயிகளாலும் ஒரு பகுதி உதிரிப் பாட்டாளிகளாலும் ஆனது. பின்னவர்களில் ஆக அதிகப் பேரை வைத்திருப்பது புத்தியல்லத்தான். ஆனால் நாளாந்தம் சண்டை நடந்து ஆள் நஷ்டங்கள் அதிகரித்து வருவதாலும், அவர்களால் சண்டையிட முடிவதாலும், அவர்கள் மத்தியிலிருந்து கூடக் காலியிடங்களை நிரப்ப ஆட்கள் திரட்டுவது ஏற்கனவே கஷ்டமான காரியமாகிவிட்டது. இந்தச் சூழ்நிலைகளில் உள்ள ஒரே ஒரு தீர்வு அரசியல் பயிற்சியை உக்கிரப்படுத்துவதுதான்.

செஞ்சேனை வீரர்களில் பெரும்பான்மையினர் கூலிச் சேனைகளிலிருந்து வருகின்றனர், ஆனால் அவர்கள் ஒருகால் செஞ்சேனையில் சேர்ந்ததும் அவர்களின் இயல்பு மாறுகிறது. அனைத்திற்கும் முதலில், செஞ்சேனை கூலிப் படை முறையை ஒழித்து, வீரர்களைத் தாம் தமக்காகவும் மக்களுக்காகவுமே சண்டை செய்கின்றனர், பிறரெவருக்காகவுமல்ல என உணரச் செய்துள்ளது. இதுவரை செஞ்சேனையில் கிரமமான ஊதிய முறை எதுவும் இல்லை, பதிலாக அது தானியமும், சமையல் எண்ணெய், உப்பு, விறகு, மரக்கறிகள் ஆகியவற்றிற்குப் பணமும்

சிறிது கைச்செலவுப் பணமும் வழங்குகிறது. எல்லைப் பிர தேசத்தின் சுதேசிகளான செஞ்சேனை அதிகாரிகளுக்கும் வீரர் களுக்கும் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது, ஆனால் நாட்டின் பிற பாகங்களைச் சேர்ந்தோருக்கு நிலம் ஒதுக்குவது சிரமம்.

அரசியல் போதனை பெற்ற பின்னர், செஞ்சேனை வீரர்கள் எல்லாரும் வர்க்க உணர்வுடையவராக மாறியுள்ளனர்; நிலப் பங்கீடு செய்வது, அரசியல் அதிகாரத்தை ஸ்தாபிப்பது, தொழி லாளர் விவசாயிகளை ஆயுதபாணிகளாக்குவது முதலியவை பற் றிப் பொதுவாக அறிந்துள்ளனர். தாம் போரிடுவது தமக் காக, தொழிலாளர், விவசாயி வர்க்கங்களுக்காக என்பதை எல்லாரும் அறிந்து கொள்கின்றனர். எனவே, கஷ்டங்களி லும் கசப்பான போராட்டங்களிலும் அவர்கள் முறையீடு செய்யாமல் இருக்கின்றார்கள். ஒவ்வொரு கொம்பனியிலும், பட்டாளத்திலும் ரெஜிமென்டிலும், அவற்றுக்குச் சொந்தமான படைவீரர் கமிட்டிகள் இருக்கின்றன. அவை படைவீரர்க ளின் நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதோடு, அரசியல் வேலை, வெகுஜன வேலை இரண்டையும் செய்கின்றன.

கட்சிப் பிரதிநிதிகள் முறை[11] ரத்துச் செய்யப்படக் கூடாது என அனுபவம் நிரூபித்துள்ளது. கட்சிக் கிளைகள் கொம்பனி வாரியாக ஸ்தாபிக்கப்படுகின்றனவாகையால், கொம்பனி மட் டத்தில் கட்சிப் பிரதிநிதி குறிப்பாக முக்கியம். அவர் படை வீரர் கமிட்டி அரசியல் பயிற்சியை நடத்துமாறு பார்த்துக் கொள்ளவும், வெகுஜன இயக்கங்களிலான வேலைக்கு வழிகாட் டவும், அதே நேரத்தில் கட்சிக் கிளையின் செயலாளராகப் பணி யாற்றவும் வேண்டும். கொம்பனிக் கட்சிப் பிரதிநிதி எவ்வ ளவுக்குச் சிறந்தவரோ அவ்வளவுக்குக் கொம்பனியும் திறமா னதாக இருக்கிறதென்றும், கொம்பனித் தளகர்த்தரே இந்த

முக்கிய அரசியல் பங்கையும் வகிப்பது அரிதென்றும் உண்மைகள் காண்பித்துள்ளன. தாழ்ந்த இயக்குனர்கள் மத்தியில் ஆள் நஷ்டங்கள் பெரிதாக இருப்பதால், கைப்பற்றப்பட்ட எதிரிப்படைவீரர்கள் பல சமயம் மிகக் குறுகிய காலத்திற்குள்ளாகப் பிளட்டூன் தலைவர்கள் அல்லது கொம்பனித் தளகர்த்தர்கள் ஆகிவிடுகின்றனர்; இவ்வாண்டு பெப்ரவரியில் அல்லது மார்ச்சில் கைப்பற்றப்பட்டவர்களில் சிலர் ஏற்கனவே பட்டாளத் தளகர்த்தர்களாகிவிட்டனர். எமது சேனை செஞ்சேனையென அழைக்கப்படுவதால் அதற்குக் கட்சிப் பிரதிநிதிகள் இல்லாவிட்டாலும் பரவாயில்லை எனத் தோன்றலாம், ஆனல் அது பெரும் தவறு. ஒரு சமயம் தெற்கு ஹுனனிலான 28வது ரெஜிமென்ட் இந்த முறையை ரத்துச் செய்தது, ஆனல் பின்னர் திரும்பப் புகுத்தியது. கட்சிப் பிரதிநிதிகளுக்கு ''டிரெக்டர்கள்'' எனப் பெயரை மாற்றுவது அவர்களைக் கைப்பற்றப் பட்ட படை வீரர்களால் வெறுக்கப்படுபவர்களான கோமிந்தாங் சேனையிலுள்ள டிரெக்டர்களுடன் குழப்புவதாக இருக்கும். பெயர் மாற்றம் முறையின் இயல்பைப் பாதிப்பதில்லை. எனவே மாற்றமெதுவும் செய்வதில்லை என நாம் முடிவுசெய்துள்ளோம். கட்சிப் பிரதிநிதிகள் மத்தியில் இழக்கப்படுவோர் தொகை மிக அதிகமாக உள்ளது; பயிற்சியளிக்கவும் அவர்களிடங்களை நிரப்பவும் நாம் வகுப்புகளை ஆரம்பித்திருக்கையில், மத்திய கமிட்டியும் ஹுனன், கியாங்சி மாகாணக் கமிட்டிகளும் எமக்குக் கட்சிப் பிரதிநிதிகளாகச் சேவை செய்ய வல்லவர்களான குறைந்த பட்சம் முப்பது தோழர்களையாவது அனுப்பும் என நாம் நம்புகிறோம்.

சாதாரணமாகப் படைவீரனொருவன் சண்டையிட வல்லவனவதற்கு முதலில் ஆறு மாதங்கள் அல்லது ஒரு வருடம்

பயிற்சி பெற வேண்டும், ஆனால் நேற்றுத் திரட்டப்பட்ட எமது படைவீரர்கள் கிட்டத்தட்டப் பயிற்சியே இல்லாமல் இன்று சண்டையிட வேண்டியவர்களாக உள்ளனர். ராணுவ நுட்பத்தில் குறைந்த அவர்கள் தனியத் துணிவை மட்டும் கொண்டு சண்டையிடுகின்றனர். நீண்ட இளைப்பாறும், பயிற்சிபெறும் காலகட்டங்கள் என்ற பிரச்சினைக்கே இடமில்லையாகையால், சிற்சில கைகலப்புகளைச் சாத்தியமானல் முயன்று தவிர்த்து, அவ்வாறுகப் பயிற்சிக்குக் காலம் பெறுவதே செய்வதற்குள்ள ஒரே காரியம். எம்மிடம் இப்பொழுது தாழ்ந்த தர தளகர்த்தர்களாகப் பயிற்சிபெறும் 150 பேர்கொண்ட கோர் ஒன்று உள்ளது; இந்தப் பயிற்சித் திட்டத்தை ஒரு நிரந்தர அங்கமாக்க நாம் கருதியுள்ளோம். மத்திய கமிட்டியும் மாகாணக் கமிட்டிகளிரண்டும் எமக்குப் பிளட்டூன் தலைவர், கொம்பனித் தளகர்த்தர் மட்டங்களிலிருந்து உயர் மட்டங்கள் வரையான மேலும் பல தளகர்த்தர்களை அனுப்பும் என நாம் நம்புகிறோம்.

ஹுனன் மாகாணக் கமிட்டி எம்மைப் படைவீரர்களின் லௌகீக நிலைமைகளைக் கவனித்து அவற்றைச் சராசரி தொழிலாளி, விவசாயியின் நிலைமைகளைவிடக் குறைந்த பட்சம் சிறிதளவாவது சிறப்பானவையாக ஆக்கும்படி கேட்டுள்ளது. உண்மையில் அவை இவற்றைவிட மோசமாகவே உள்ளன. தானியம் போக ஒவ்வொரு வீரனும் சமையல் எண்ணெய், உப்பு, விறகு, மரக்கறிகள் ஆகியவற்றிற்காக நாளொன்றிற்கு ஐந்து சதம் மட்டுமே பெறுகையில், இது கூடத் தொடர்ந்து தரப்படுவது கஷ்டமாக உள்ளது. இவற்றின் மாதாந்தச் செலவு மட்டும் பத்தாயிரம் வெள்ளி டொலர்களுக்கு மேற்படுகிறது; இது முற்றுக உள்ளூர்க் கொடுங்கோலர்களிடம் அபராதமாக பெறுவ[12]தன் மூலமே பெறப்படுகிறது. இப்போது எம்மிடம்

அதேயளவு சேனைக்கும் ஜனநாயகம் தேவை. எமது சேனையில் ஜனநாயகம் நிலப்பிரபுத்துவக் கூலிச் சேனையை வேரறுப்பதற்கான ஒரு முக்கிய ஆயுதம்.[14]

கட்சி ஸ்தாபனம் இப்போது கொம்பனிக் கிளை, பட்டாளக் கமிட்டி, ரெஜிமென்ட் கமிட்டி, சேனைக் கமிட்டியாகிய நான்கு மட்டங்களைக் கொண்டுள்ளது. ஒரு கொம்பனியில் ஒவ்வொரு ஸ்குவாட்டிலும் ஒவ்வொன்றான குழுக்களால் ஆன கிளையொன்று உள்ளது. ''கட்சிக் கிளை கொம்பனி வாரியான அடிப்படையில் அமைக்கப்படுகிறது;'' இது செஞ்சேனையால் தகர்ந்து விழுந்துவிடாமல் இத்தனை கடுமையான சண்டையிடுதலைச் செய்து வர முடிந்துள்ளதற்கு ஒரு முக்கிய காரணம். இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர், நாம் கோமிந்தாங் சேனையிலிருந்த போது, எமது கட்சிக்குப் படைவீரர்கள் மத்தியில் ஸ்தாபன ரீதியான வேர்கள் எதுவும் இருக்கவில்லை; யெ திங்கின் துருப்புகள்[15] மத்தியில் கூட ஒவ்வொரு ரெஜிமென்டுக்கும் ஒரு கட்சிக் கிளை மட்டுமே இருந்தது; ஆகவேதான் எம்மால் எந்தப் பாரதூரமான சோதனைக்கும் தாக்குப்பிடிக்க முடியவில்லை. இன்று செஞ்சேனையில் கட்சியினரல்லாதோருக்குக் கட்சியினர் விகிதாசாரம் கிட்டத்தட்ட மூன்றுக்கு ஒன்றுரும்; அதாவது, சராசரி நான்கு வீரர்களில் ஒருவர் கட்சி அங்கத்தினர். சமீபத்தில் நாம் சண்டையிடும் வீரர்கள் மத்தியில், ஐம்பதுக்கு ஐம்பது விகிதாசார[16]த்தை எட்டக் கூடியதாக, மேலும் கட்சி அங்கத்தினர்களைத் திரட்ட முடிவுசெய்தோம். தற்போது கொம்பனிக் கிளைகளுக்குச் சிறந்த கட்சிச் செயலாளர்கள் போதவில்லை; தாம் இப்போதுள்ள இடங்களில் இனியும் கருமமாற்ற இயலாதோர் மத்தியிலிருந்து எமக்குப் பல இயக்குனர்களை அனுப்புமாறு நாம் மத்திய கமிட்டியை வேண்டுகி

றேம். தெற்கு ஹூனனிலான இயக்குனர்கள் கிட்டத்தட்ட எல்லோரும் சேனையில் கட்சி வேலை செய்கின்றனர். ஆனால் ஆகஸ்டில் தெற்கு ஹூனனிலிருந்து பின்வாங்கியபோது அவர் களிற் சிலர் அங்கொருவர் இங்கொருவராகச் சிதறிப் போய் விட்டதால், இப்போது நாம் எவரையும் வெளியே அனுப்ப முடியாத நிலையில் இருக்கிறேம்.

ஸ்தல ஆயுதப் படைகள் செங்காவலர் படைகளாலும் தொழி லாளர் விவசாயிகளின் எழுச்சிப் படைப் பிரிவுகளாலும் ஆனவை. ஈட்டிகளும் வேட்டைத் துப்பாக்கிகளும் கொண்டு ஆயுதபாணிகளான இந்தப் படைப் பிரிவுகள் வட்டார வாரியான அடிப்படையில், ஒவ்வொரு வட்டாரத்துக்கும் ஜனத் தொகைக்கேற்ப வேறுபடும் எண்ணிக்கையான வீரர்களைக் கொண்ட ஒரு படைப் பிரிவாக அமைக்கப்படுகின்றன. அதன் வேலை எதிர்ப்புரட்சியை அடக்குவதும் வட்டார அரசாங்கத் தைப் பாதுகாப்பதும், எதிரி தென்படும்போது போரில் செஞ் சேனைக்கும் செங்காவலர் படைகளுக்கும் உதவி செய்வதுமா கும். எழுச்சிப்படைப் பிரிவுகள் யுங்ஸினில் ஓர் இரகசியப் படையாக ஆரம்பித்தன, ஆனல் நாம் முழுமாவட்டத்தையும் கைப்பற்றியதிலிருந்து அவை பகிரங்கத்தில் வெளிப்பட்டு வந் துள்ளன. இந்த ஸ்தாபனம் இப்பொழுது எல்லைப் பிரதேசத் திலான பிற மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது, அதன் பெயர் மாற்றமடையாமல் இருந்துவருகிறது. செங் காவலர் படைகளின் ஆயுதங்கள் பிரதானமாக ஐந்து-ரவை துப்பாக்கிகள், ஆனல் சில ஒன்பது-ரவை, ஒரு-ரவை துப்பாக்கி களும் அவற்றில் அடங்கும். நிங்காங்ில் 140 துப்பாக்கிகளும், யுங்ஸினில் 220உம், லியன்ஹூவாவில் 43உம், சாலிங்ில் 50உம், லின்ஸியெனில் 90உம், சுய்ச்சுவானில் 130உம்,

காவலர் படைகளுக்கான கோட்பாடு சிதறிப் பரந்திருத்தல். பிற்போக்கு ஆட்சி தற்காலிகமாக ஸ்திரமாக உள்ள தற்போதைய தருணத்தில் எதிரியால் செஞ்சேனையைத் தாக்கப் பிரமாண்டமான படைகளைக் குவிக்க முடியும், எனவே சிதறிப் பரவுதல் செஞ்சேனைக்குச் சாதகமாக இராது. எமது அனுபவத்தில், எண்ணிக்கையில் குறைவான, சமமான, அல்லது சிறிது உயர்வான எதிரிப் படையொன்றுடன் சண்டையிடப் படைகளை ஒன்றுகுவிப்பது பல சமயம் வெற்றிக்கு இட்டுச் சென்றிருக்கையில், படைகளைச் சிதறலாகப் பரவுவது கிட்டத் தட்ட எப்போதுமே தோல்விக்கு இட்டுச் சென்றுள்ளது. மத்திய கமிட்டி எம்மை ஆகப் பெரிதான, நீளம், அகலம் இரண்டிலும் பல ஆயிரம் லீ விசாலித்த ஒரு பிரதேசத்தில் கொரில்லா யுத்தத்தை விருத்தி செய்யுமாறு பணித்துள்ளது; இது அனேகமாக எமது பலத்தைக் கூடுதலாகக் கணித்தது காரணமானதாக இருக்க வேண்டும். செங்காவலர் படைகளுக்குச் சிதறலாகப் பரவுவது சாதகம், அவர்கள் இந்த முறையை இப்போது எல்லா மாவட்டங்களிலும் தங்கள் நடவடிக்கைகளில் உபயோகிக்கின்றனர்.

எதிரிப் படைகளை நோக்கிச் செய்யப்படும் பிரசாரத்தில் மிகப் பயன் தரும் முறை கைப்பற்றப்பட்ட படைவீரர்களை விடுதலை செய்வதும் காயமுற்றவர்களுக்கு வைத்திய சிகிச்சை அளிப்பதுந்தான். எதிரிப் படைகளின் வீரர்கள், பிளட்டூன் தலைவர்கள் அல்லது கொம்பனி அல்லது பட்டாளத் தளகர்த்தர்கள் கைப்பற்றப்படும் போதெல்லாம் நாம் உடனே அவர்கள் மத்தியில் பிரசாரம் நடத்துகிறோம்; அவர்கள் தங்க விரும்புபவர்களும் போக விரும்புபவர்களுமாகப் பிரிக்கப்பட்டு, பின்னவர்கள் பிரயாணச் செலவு கொடுத்து விடுதலை செய்யப்

படுகின்றனர். இது உடனே ''கம்யூனிஸ்ட் கொள்ளைக்காரர்கள் கண்டவுடன் அனைவரையும் கொல்கின்றனர்'' என்ற எதிரியின் அபவாதத்தை முற்றும் ஆதாரமற்றதாக்குகிறது. யாங் சி-ஷெங்கின் 9வது டிவிஷனின் சஞ்சிகையான ''பத்து நாள் ரிவியூ'' இந்தச் செய்கையைப் பற்றி எழுதுகையில், ''எவ்வளவு நயவஞ்சகம்!'' என அங்கலாய்த்தது. செஞ்சேனை வீரர்கள் கைதிகளிடம் மிகுந்த அக்கறை காட்டி அவர்களுக்கு அன்பான பிரியாவிடைகளை ஒழுங்குசெய்கின்றனர்; ''எமது புதிய சகோதரர்களுக்கான பிரியாவிடைக் கொண்டாட்டம்'' ஒவ்வொன்றிலும் கைதிகள் இதயபூர்வமான நன்றியுரைகளை நிகழ்த்துகின்றனர். காயப்பட்ட எதிரிப் படைவீரர்களுக்கு வைத்திய சிகிச்சை அளிப்பதும் பெரும் பாதிப்பை ஏற்படுத்துகிறது. லீ வென்-பின்னைப் போன்ற, எதிரித் தரப்பிலுள்ள புத்தியுள்ளவர்கள் சமீபத்தில் தாமும் எம்மைப் பின்பற்றி, கைதிகளைக் கொல்வதை நிறுத்தி, காயப்பட்டவர்களுக்கும் வைத்திய சிகிச்சையளித்தனர். இருப்பினும் எமது வீரர்கள் அடுத்த கைகலப்பிலேயே மீண்டும் எம்முடன் சேர்ந்துவிடுகின்றனர், தங்கள் ஆயுதங்களையும் கையோடு கொணர்ந்துவிடுகின்றனர்; இது ஏற்கனவே இரு தடவைகள் நடந்துவிட்டது. இத்துடன், நாம் சாத்தியமானளவு எழுத்திலான பிரசாரமும், உதாரணமாக, கோஷங்கள் வரைவது செய்கிறோம். நாம் எங்கு சென்றாலும் அங்கெல்லாம் சுவர்களைக் கோஷங்களால் நிறைத்து விடுகிறோம். ஆனால் எம்மிடம் வரையக் கூடியவர்கள் குறைவாகவே இருக்கின்றனர், மத்திய கமிட்டியும் மாகாணக் கமிட்டிகளிரண்டும் அத்தகைய சிலரை எமக்கு அனுப்பும் என நாம் நம்புகிறோம்.

ராணுவத் தளப்பிரதேசங்களைப் பொறுத்தவரையில், முத

லாவது தளப்பிரதேசமாகிய சிங்காங் மலைகள், நிங்காங், லின்ஸியென், சுய்ச்சுவான், யுங்ஸின் ஆகிய மாவட்டங்கள் நான்கின் சந்திப்பில் உள்ளன. வட சரிவில் நிங்காங் மாவட்டத்தில் உள்ள மாஓபிங்கிற்கும் தென் சரிவில் சுய்ச்சுவானில் உள்ள ஹுவாங்ஆஓவிற்கும் இடையிலான தூரம் 90 லீ ஆகும். கிழக்குச் சரிவில் யுங்ஸின் மாவட்டத்திலுள்ள நாஷனிற்கும் மேற்குச் சரிவில் லின்ஸியெனிலுள்ள ஷுய்கோவிற்கும் இடையிலான தூரம் 80 லீ ஆகும். நாஷனிலிருந்து லுங்யுவான் கோவிற்கும் (இரண்டும் யுங்ஸின் மாவட்டத்தில் உள்ளவை), (எல்லாம் நிங்காங் மாவட்டத்திலுள்ளவையான) ஸின்செங், மாஓபிங், தாலுங் ஆகியவற்றிற்கும், (எல்லாம் லின்ஸியென் மாவட்டத்திலுள்ளவையான) ஷுது, ஷுய்கோ, சியாசுன் ஆகியவற்றிற்கும், (எல்லாம் சுய்ச்சுவான் மாவட்டத்திலுள்ளவையான) யிங்பான்ஸீ, தைசியாபு, தாஃபென், டுய்ஸெசியென், ஹுவாங்ஆஓ, வூடௌகியாங், செஆஓ ஆகியவற்றிற்கும் ஊடாகத் திரும்ப நாஷனுக்குச் செல்லும் சுற்றளவு 550 லீ ஆகும். மலைகளில் தாசிங், ஸியாஓசிங், ஷாங்சிங், சுங்சிங், ஸியாசிங், ஸெபிங், சியாசிசுவாங், சிங்செள, ஸாஓபிங், பய்னிஹு, லோஃபு ஆகிய இடங்களில் நெல் வயல்களும் கிராமங்களும் உள்ளன. இந்த இடங்களில் எல்லாம் கொள்ளைக்காரர்களும் சேனையைவிட்டு ஓடியவர்களும் மலிந்திருந்தனர், ஆனால் இப்பொழுது எமது தளப்பிரதேசமாக மாற்றப்பட்டுள்ளன. இதன் ஜனத்தொகை இரண்டாயிரத்திற்குக் குறைவும், நெல் விளைச்சல் பத்தாயிரம் பிகுல்களுக்குக் குறைவுமாகும், எனவே சேனைக்கான தானியம் முழுவதும் நிங்காங், யுங்ஸின், சுய்ச்சுவான் மாவட்டங்களிலிருந்து பெறப்பட வேண்டும். மலைகளிலுள்ள யுத்ததந்திர ரீதியான முக்கியத்துவமு

டைய கணவாய்கள் எல்லாம் பந்தோபஸ்துச் செய்யப்பட்டவை. எமது வைத்தியசாலேகள், படுக்கை, உடை உற்பத்திச் சாலேகள், ராணுவத் தளபாட இலாகா, ரெஜிமென்ட் பின்புறக் காரியாலயங்கள் ஆகியன எல்லாம் இங்குதான் உள்ளன. தற்போது தானியம் மலேகளுக்கு நிங்காஙிலிருந்து கொண்டு வரப்படுகின்றது. எமக்குப் போதிய சப்ளேகள் இருக்கும் பட்சத்தில், எதிரியால் ஒருபோதும் உள்ளே புக முடியாது. இரண்டாவது தளப்பிரதேசமான கியூலுங் மலேகள், நிங்காங், யுங்ஸின், லியன்ஹுவா, சாலிங் ஆகிய மாவட்டங்கள் நான்கின் சந்திப்பில் உள்ளன. அது சிங்காங் மலேகளேவிட முக்கியத்துவம் குறைந்தது, ஆனுல் நான்கு மாவட்டங்களினதும் ஸ்தல ஆயுதப் படைகளுக்கு ஆகப் பின் அந்தத்துத் தளப்பிரதேசமாகப் பயன்படுகிறது; அதுவும் பந்தோபஸ்துச் செய்யப்பட்டுள்ளது. வெள்ளே ஆட்சியினுல் சுற்றிவளேக்கப்பட்டுள்ள சுதந்திரச் சிவப்பு ஆட்சியொன்று மலேகள் தரும் யுத்ததந்திர ரீதியான சாதகத்தை உபயோகப்படுத்திக் கொள்வது அத்தியாவசியம்.

## நிலப் பிரச்சினேகள்

எல்லேப் பிரதேசங்களில் நில நிலேமை. பொதுவாகப் பேசுவதாயின், நிலத்தில் 60 சத விகிதத்திற்கு மேற்பட்ட பாகம் நிலப்பிரபுக்களுக்கும் 40 சத விகிதத்திற்குக் குறைவான பாகம் விவசாயிகளுக்கும் சொந்தமாக இருந்தது. கியாங்சிப் பிரிவில், நிலத்திற் சுமார் 80 சத விகிதம் நிலப்பிரபுக்களுக்குச் சொந்

தமாயிருந்த சுய்ச்சுவான் மாவட்டத்தில்தான் நில உடைமை மிகச் செறிவுபட்டிருந்தது. சுமார் 70 சத விகிதம் அவ்வா றிருந்த யுங்ஸின் அடுத்ததாக இருந்தது. வாந்ஆன், நிங்காங், லியன்ஹுவா ஆகிய இடங்களில் உடைமையாள விவசாயிகள் கூடுதலாக இருந்தனர், ஆனால் அங்கும் நிலப்பிரபுக்கள் நிலத் திற் பெரும் பகுதியை, அதாவது, மொத்தத்தில் சுமார் 60 சதவிகிதத்தை உடையவர்களாக இருக்க, விவசாயிகள் 40 சத விகிதத்தை மட்டுமே உடையவர்களாக இருந்தனர். ஹுனன் பிரிவில், சாலிங், லின்ஸியென் மாவட்டங்களிரண்டிலும் நிலத்திற் சுமார் எழுபது சத விகிதம் நிலப்பிரபுக்களுக்குச் சொந்தமாக இருந்தது.

இடைப்பட்ட வர்க்கத்தின் பிரச்சினை. இந்த நில நிலைமையி ருக்க, நிலம் முழுவதையும் பறிமுதல் செய்து பங்கிட்டளிப் ப[18]தற்கு பெரும்பான்மையினரின் ஆதரவை வென்றெடுப் பது சாத்தியம். கிராமிய ஜனத்தொகை பெரும்படியாக பெரிய, நடுத்தர நிலப்பிரபு வர்க்கம், சிறிய நிலப்பிரபு, பணக் கார விவசாயி இடைப்பட்ட வர்க்கம், நடுத்தர, வறிய விவ சாயி வர்க்கம் என மூன்று வர்க்கங்களாகப் பகுக்கப்படுகி றது. பணக்கார விவசாயிகளின் நலன்கள் பல சமயம் சிறு நிலப்பிரபுக்களின் நலன்களுடன் பின்னிப் பிணைந்துள்ளன. பணக்கார விவசாயிகளின் நிலம் மொத்தத்தில் ஒரு சிறு சத விகிதத்தையே ஆக்குகிறது, ஆனால் சிறு நிலப்பிரபுக்களின் நிலமும் சேர்த்துக் கணக்கிடப்பட்டால், அளவு கணிசமான தாகிறது. அனேகமாக இதுவே நாடு பூராவிலுமுள்ள நிலை மையாகவும் இருக்கலாம். எல்லைப் பிரதேசங்களில் கைக் கொள்ளப்பட்டுள்ள நிலக்கொள்கை சம்பூரணமான பறிமுத லும் முற்றான பங்கீடுமாகும்; இதன் விளைவாகச் செம்பிரதே

சத்தில் உள்ளூர்க் கொடுங்கோலர் தீயபிரபு வர்க்கம், இடைப் பட்ட வர்க்கம் இரண்டும் தாக்கப்படுகின்றன. கொள்கை இப்படியிருக்கிறது, ஆனால் இதன் நடைமுறை அமுலாக்கத் தில் நாம் இடைப்பட்ட வர்க்கத்திடமிருந்து பெருமளவு தடங் கலை எதிர்ப்பட்டுள்ளோம். புரட்சியின் ஆரம்ப நாட்களில் இடைப்பட்ட வர்க்கம் வெளிப்பார்வைக்கு வறிய விவசாயி வர்க்கத்திடம் பணிந்து போயிற்று, ஆனால் உண்மையில் அவர் கள் நிலப் பங்கீட்டைத் தாமதப்படுத்தும் நோக்கத்திற்காக வறிய விவசாயிகளை மிரட்டுவதற்குத் தங்கள் பாரம்பரியமான சமூக ஸ்தானத்தையும் கோத்திர அதிகாரத்தையும் பயன் படுத்திக் கொண்டனர். மேற்கொண்டும் தாமதப்படுத்துவது சாத்தியமல்லாது போன போது அவர்கள் தங்கள் உண்மை யான நில உடைமையின் அளவை மறைத்தனர், அல்லது நல்ல நிலத்தை வைத்துக்கொண்டு கூடாத நிலத்தைக் கைய ளித்தனர். இந்தக் காலகட்டத்தில் வறிய விவசாயிகள், நெடுங் காலமாகக் காலடியில் மிதிக்கப்பட்டு வந்தவர்களாகையாலும் புரட்சியின் வெற்றி நிச்சயமில்லை என்ற உணர்வைக் கொண் டிருந்ததாலும், இடைப்பட்ட வர்க்கத்திற்கு அடிக்கடி விட்டுக் கொடுத்து, தீவிர நடவடிக்கை எடுக்கத் துணியாதிருந்தனர். புரட்சி பேரெழுச்சித் தசையில் இருக்கும் போது, உதாரண மாக மாவட்டமொன்றிலோ ஒன்றுக்கு மேற்பட்ட மாவட்டங் களிலோ அரசியல் அதிகாரம் கைப்பற்றப்பட்டும் பிற்போக் குச் சேனை பல தோல்விகளை உற்றும் செஞ்சேனையின் ஆற்றல் திரும்பத் திரும்பக் காண்பிக்கப்பட்டும் உள்ளபோது மட்டுமே கிராமங்களில் இடைப்பட்ட வர்க்கத்திற்கு எதிராகத் தீவிர நடவடிக்கை எடுக்கப்படுகிறது. நிலப்பங்கீட்டில் தாமதத்தி னதும் நில உடைமைகள் மறைக்கப்படுவதினதும் மிகப் பார

தூரமான உதாரணங்கள் இடைப்பட்ட வர்க்கம் மிகப் பெரியதாக இருந்த இடமான யுங்ஸின் மாவட்டத்தின்தெற்குப் பிரிவில்தான் நிகழ்ந்தன. இந்தப் பகுதியில் நிலத்தின் உண்மையான பங்கீடு ஜூன் 23ந் திகதி லுங்யுவான்கோவில் செஞ்சேனை பெரும் வெற்றியை ஈட்டியதற்கும், பங்கீட்டைத் தாமதப்படுத்தியமைக்காகப் பலரை டிஸ்திரிக்ட் அரசாங்கம் தண்டித்ததற்கும் பின்னரே நிறைவேற்றப்பட்டது. ஒவ்வொரு மாவட்டத்திலும் நிலப்பிரபுத்துவ குடும்ப அமைப்பே மிகவும் பரந்தளவில் நிலவுவதாலும் ஒரு கிராமத்தில் அல்லது பல கிராமங்களில் உள்ள குடும்பங்கள் எல்லாம் ஒரே கோத்திரத்தைச் சேர்ந்தவையாக இருப்பதாலும், கிராமங்களில் மக்கள் தங்கள் வர்க்கத்தை இனங்கண்டு கொள்வதற்கும் கோத்திர உணர்ச்சி கடக்கப்படுவதற்கும் கணிசமான நீண்ட காலம் பிடிக்கும்.

வெள்ளைப் பயங்கரத்தின் கீழ் இடைப்பட்ட வர்க்கம் மறு பக்கம் சார்ந்தமை. புரட்சிகரப் பேரெழுச்சியின் போது தாக்குதலுக்குட்பட்டிருந்தமையால் இடைப்பட்ட வர்க்கம், வெள்ளைப்பயங்கரம் தாக்கியதுதான் தாமதம், உடனே எதிரியின் பக்கம் சார்ந்து விட்டது. யுங்ஸினிலும் நிங்காங்கிலும் புரட்சிகர விவசாயிகளின் வீடுகளுக்குத் தீயிடுவதில் பிற்போக்குத் துருப்புகளுக்கு வழிகாட்டியவர்கள் அங்கிருந்த சிறு நிலப்பிரபுக்களும் பணக்கார விவசாயிகளுமேதான். பிற்போக்காளர்களின் பணித்தல்களின் பேரில் அவர்கள் வீடுகளை எரித்து ஆட்களைக் கைது செய்தனர், அதையும் மிகப் பட்டவர்த்தனமாகவே செய்தனர். நிங்காங், ஸின்செங், குசெங், லுங்ஷு பிரதேசத்துக்குச் செஞ்சேனை திரும்பிய போது, பல ஆயிரம் விவசாயிகள், தங்களைக் கம்யூனிஸ்டுகள் கொன்றுவிடுவர் என்ற பிற்போக்குப் பிரசாரத்

தால் ஏமாற்றப்பட்டனராகையால், பிற்போக்காளர்களுடன் யுங்ஸினுக்கு ஓடிவிட்டனர். ''எதிரியின் பக்கம் சார்ந்த விவசாயிகள் கொல்லப்பட மாட்டார்கள்'' எனவும் ''எதிரி யின் பக்கம் சார்ந்த விவசாயிகள் திரும்பிவந்து தங்கள் பயிர் களை அறுவடை செய்துகொள்ள வரவேற்கப்படுகின்றனர்'' என வும் நாம் பிரசாரம் நடத்தியதன் பின்னர் மட்டுமே அவர்களிற் சிலர் மெதுவாகத் திரும்பி வந்தனர்.

நாடு முழுமையிலும் புரட்சி இறங்கும் நிலையிலிருக்கும் போது எமது சுதந்திர ஆட்சியின் கீழான பிரதேசங்களில் மிகக் கஷ் டமான பிரச்சினை இடைப்பட்ட வர்க்கத்தை நழுவவிடாது வைத்திருப்பதுதான். இந்த வர்க்கம் துரோகம் செய்வதற் கான பிரதான காரணம் அது புரட்சியிடமிருந்து ஆகக் கடுமை கூடிய அடியைப் பெற்றிருப்பதுதான். ஆனால் நாடு முழுமை யிலும் ஒரு புரட்சிகரப் பேரெழுச்சி உள்ள போது, வறிய விவசாயி வர்க்கத்திற்கு நம்பியிருக்க ஏதோ இருக்கிறது, ஆகவே அது துணிகரமடைகிறது; இடைப்பட்ட வர்க்கத்திற்கோ அஞ் சுவதற்கு ஏதோ இருக்கிறது, எனவே அது மட்டுமீறத் துணி வதில்லை. லீ சுங்-ஜென்னுக்கும் தாங் ஷெங்-சிக்கும் இடை யிலான யுத்தம் ஹூனனுக்குப் பரவிய போது, (அந்தச் சமயம ளவில் செஞ்சேனை ஏற்கனவே சாலிங்லிருந்து சுய்ச்சுவானுக்கு வாபஸாகிவிட்டிருந்த போதுங்கூட) சாலிங்லிருந்த சிறு நிலப் பிரபுக்கள் விவசாயிகளைச் சாந்தப்படுத்த முயன்றனர், சிலர் புதுவருட அன்பளிப்பாக அவர்களுக்குப் பன்றியிறைச்சி கூட அனுப்பினர். ஆனால் அந்த யுத்தம் முடிந்த பின்னர் இத்தகைய காரியங்களை எவரும் மீண்டும் கேள்விப்பட்டதேயில்லை. இப் போது தேசவிசால எதிர்ப்புரட்சிப் பெருக்கொன்று உள்ளதால், வெள்ளைப் பிரதேசங்களிலான இடைப்பட்ட வர்க்கம், கடும்

அடிகள் பட்டதாகையால், தன்னைக் கிட்டத்தட்ட முற்றுகவே உள்ளூர்க் கொடுங்கோலர் தியபிரபு வர்க்கத்துடன் பிணைத்துக் கொண்டுள்ளது, வறிய விவசாயி வர்க்கம் தனிமைப்பட்டுள்ளது. இது உண்மையில் மிகப் பாரதூரமான ஒரு பிரச்சினை.[19]

இடைப்பட்ட வர்க்கம் மறு பக்கம் சார்ந்தமைக்கு ஒரு காரணமாக நாளாந்த வாழ்வின் சுமை. செம்பிரதேசங்களும் வெள்ளைப் பிரதேசங்களும் இப்போது யுத்தம் செய்யும் இரு நாடுகளைப் போன்று ஒன்றையொன்று எதிர்ப்பட்டு உள்ளன. எதிரியின் இறுக்கமான முற்றுகையும் நாம் சிறு முதலாளித்துவ வர்க்கத்தைப் பிழையான முறையிற் கையாண்டமையும் காரணமாக, இரு பிரதேசங்களுக்கும் இடையிலான வியாபாரம் கிட்டத்தட்ட முற்றுக நின்றுவிட்டது; உப்பு, துணி, மருந்துகள் ஆகியன போன்ற அன்றாட அத்தியாவசியப் பொருட்கள் அரிதாகவும் ஒறுப்பாகவும் உள்ளன; மரம், தேயிலை, எண்ணெய் போன்ற விவசாய உற்பத்திகள் வெளியே அனுப்பப்பட இயலாமல், அதனால் விவசாயிகளின் பண வருவாய் நின்றுள்ளது; மக்கள் முழுப் பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர். வறிய விவசாயிகளால் இத்தகைய கஷ்டங்களைத் தாங்கிக்கொள்ளக் கூடுதலாக முடிகிறது, ஆனால் நடுத்தர வர்க்கத்தால் இவற்றை மேற்கொண்டும் தாங்கிக்கொள்ள இயலாது போகும்போது அது உள்ளூர்க் கொடுங்கோலர் தியபிரபு வர்க்கத்தின் பக்கம் சார்ந்து விடும். சீனாவிலுள்ள உள்ளூர்க் கொடுங்கோலர் தியபிரபு வர்க்கத்திற்குள்ளேயும் யுத்தப்பிரபுக்கள் மத்தியிலுமான பிளவுகளும் யுத்தங்களும் தொடர்ந்தாலும், தேசவிசால புரட்சிகர நிலைமையொன்று விருத்தியடைந்தாலும் அல்லாமல், சிறிய சுதந்திரச் சிவப்பு ஆட்சிகள் பெரும் பொருளாதார நிர்ப்பந்தத்திற்கு உட்படும், அவற்றால் நீண்ட காலமாக நிலைத்து

நிற்க இயலுமா என்பதும் ஐயத்திற்கிடமானது. ஏனெனில், அத்தகைய பொருளாதாரத் தாக்கம் நடுத்தர வர்க்கத்திற்குப் பொறுக்க முடியாததாக இருப்பது மட்டுமல்லாமல், என்றோ ஒருநாள் அது தொழிலாளர்களுக்கும் வறிய விவசாயிகளுக்கும் செஞ்சேனை வீரர்களுக்கும் கூடப் பொறுக்க முடியாததாகிவிடும். யுங்ஸின், நிங்காங் மாவட்டங்களில் ஒரு சமயம் சமையலுக்கு உப்பு இருக்கவில்லை; துணி, மருந்துகள் ஆகியவற்றின் வரத்தும் முற்றாக நின்றுவிட்டிருந்தது. இதர பொருட்கள் பற்றிக் குறிப்பிடத் தேவையில்லை. இப்போது உப்பு மீண்டும் கிடைக்கிறது, ஆனால் மிக ஒறுப்பாக உள்ளது. துணியும் மருந்துகளும் இன்னும் கிடைப்பதில்லை. நிங்காங், மேற்கு யுங்ஸின், வடக்கு சுய்ச்சுவான் (எல்லாம் தற்போது எமது சுதந்திர ஆட்சியின் கீழான பிரதேசங்களுக்குள் உள்ளவை) ஆகிய இடங்களில் ஏராளமாக உற்பத்திசெய்யப்படுபவையான மரம், தேயிலை, எண்ணெய் ஆகியனவெல்லாம் இன்னும் வெளியே அனுப்பப்பட முடியவில்லை.[20]

நிலப் பங்கீட்டிற்கான மூலப் பிரமாணம். வட்டாரப் பிரதேசமே நிலப் பங்கீட்டிற்கான மிகச் சிறிய கூறாகக் கொள்ளப்படுகிறது. கம நிலம் குறைந்தவையான, கூடுதலாக மலைகளடர்ந்த பிராந்தியங்களில், உதாரணமாக, யுங்ஸின் மாவட்டத்தின் ஸியாஓஜியாங் டிஸ்திரிக்டில் மூன்று அல்லது நான்கு வட்டாரப் பிரதேசங்கள் சில சமயம் மிகச் சிறிய கூறாகக் கொள்ளப்பட்டன, ஆனால் இது மிக மிக அரிது. அங்கு வசிப்போர், ஆண்களும் பெண்களும், முதியவர்களும் இளையவர்களும், எல்லோரும் சமமான பங்குகளைப் பெற்றனர். இப்போது உழைப்பு சக்தி உள்ள ஒருவர் உழைப்பு சக்தி இல்லாத ஒருவரைப் போல் இரண்டு மடங்கு நிலம் பெறும் விதத்தில்,

யிகளினதும் படைவீரர்களினதும் சபை கிடையாது. வட்டார, டிஸ்திரிக்ட் அரசாங்கங்களின் செயற் கமிட்டிகளும் மாவட்ட அரசாங்கங்களின் செயற் கமிட்டிகளும் கூடத் தவறுது எல் லாமே ஏதேனும் ஒருவித வெகுஜனக் கூட்டத்தில் தெரிவுசெய் யப்பட்டவை. ஆனுல் திடீரெனக் கூட்டப்படும் வெகுஜனக் கூட்டங்களால் பிரச்சினைகளை விவாதிக்கவும் முடியாது, வெகு ஜனங்களுக்கு அரசியல் ரீதியான பயிற்சியளிக்க உதவவும் முடி யாது என்பதோடு அவை புத்திஜீவிகளால் அல்லது பதவி வேட்டைக்காரர்களால் இலகுவில் ஆட்டிப்படைக்கப்படவும் கூடியவை. சில இடங்களில் சபையொன்று இருக்கத்தான் செய்கிறது, ஆனுல் அது வெறுமனே செயற் கமிட்டியைத் தெரிவுசெய்வதற்கான ஒரு தற்காலிக அங்கமாகவே கருதப் படுகிறது; ஒருகால் தேர்தல் முடிந்ததும் அதிகாரம் கமிட்டி யினுல் ஏகபோகமாக்கிக் கொள்ளப்படுகிறது, சபையைப் பற் றிப் பின்னர் பேச்சே இருப்பதில்லை. பெயருக்கேற்ற தகுதி யுடைய தொழிலாளர், விவசாயிகள், படைவீரர் சபைகள் எதுவுமே இல்லை என்பதல்ல, ஆனுல் அவை மிகச் சிலவே. இதற்குக் காரணம் சபை என்ற இப்புதிய அரசியல் அமைப் புச் சம்பந்தமாகப் பிரச்சாரமும் போதனையும் போதாமையே. தன்னிஷ்டமான எதேச்சாதிகாரமாகிய நிலப்பிரபுத்துவக் காலத் தீய பழக்கம் மக்களின் மனங்களிலும் சாதாரண கட்சி அங் கத்தினர்களின் மனங்களிலும் கூட அவ்வளவு ஆழ வேரூன் றியுள்ளதால் அது ஒரே அடியில் அழிக்கப்பட முடியாது; ஏதே னும் எழும் போது அவர்கள் இலகுவான வழியையே தெரிந்தெ டுக்கின்றனர், தொல்லையான ஜனநாயக முறையை விரும்பு வதில்லை. ஜனநாயக மத்தியதிகாரத்துவத்தின் பயன் புரட்சி கரப் போராட்டத்தில் காண்பிக்கப்பட்டு, அதுவே தங்கள் சக்

திகளை அணிதிரட்ட மிகச் சிறந்த வழி என்பதையும் அது தங்கள் போராட்டத்தில் மிக மிக உதவியானது என்பதையும் வெகுஜனங்கள் புரிந்து கொள்ளும் போது மட்டுமே அது வெகுஜன ஸ்தாபனங்களில் பரவலாகவும் உண்மையாகவும் நடைமுறைப்படுத்தப்பட முடியும். முந்திய தவறுகளைச் சிறு கச் சிறுகத் திருத்த வேண்டி நாம் (மத்திய கமிட்டியால் வரையப்பட்டுள்ள சாராம்சச் சுருக்கத்தை அடிப்படையாகக் கொண்டு) சகல மட்டங்களிலுமான சபைகளுக்கு விபரமான கட்டமைப்புச் சட்டமொன்றை யாத்து வருகிறோம். செஞ் சேனையில், படைவீரர்களின் கமிட்டிகளை மட்டும் கொண்டு, படைவீரர்களின் மாநாடுகள் இல்லாமல் இருப்பதான தவறைத் திருத்தக் கூடியதாக, இப்போது படைவீரர்களின் பிரதிநி திகளின் மாநாடுகள் நிரந்தரமான ஒரு அடிப்படையில் சகல மட்டங்களிலும் ஸ்தாபிக்கப்பட்டு வருகின்றன.

தற்போது ''தொழிலாளர், விவசாயிகள், படைவீரர்களின் அரசாங்கம்'' என்பதால் வெகுஜனங்கள் பொதுவிற் கருதுவது செயற் கமிட்டியையே, ஏனெனில் அவர்கள் இன்னும் சபையின் அதிகாரங்களை அறியாமல், செயற் கமிட்டி மட்டுமே உண் மையான அதிகார பீடம் என நினைத்துக்கொண்டிருக்கின்ற னர். தன் பின்னால் சபையொன்று இல்லாத ஒரு செயற் கமிட்டி பல சமயம் வெகுஜனங்களின் கருத்துக்களைப் பொருட் படுத்தாது செயல்படுகிறது; நிலத்தைப் பறிமுதல் செய்து பங்கிட்டளிப்பதில் தயக்கமும் சமரசப்படுதலும், நிதிகளை விர யம் செய்வது அல்லது கையாடுவது, வெள்ளைப் படைகளின் எதிரில் பயந்து பின்வாங்குவது அல்லது போராட்டத்தில் உறு தியின்மை ஆகியவற்றிற்கு உதாரணங்கள் எங்குமுள்ளன. அத் துடன், கமிட்டியும் அரிதாகவே பூரணமாகக் கூடுகிறது, காரி

யங்கள் யாவும் அதன் நிரந்தரக் கமிட்டியினுலேயே முடிவுசெய் யவும் கையாளவும் படுகின்றன. டிஸ்திரிக்ட், வட்டார அர சாங்கங்களில், நிரந்தரக் கமிட்டி கூட அருமையாகத்தான் கூடுகிறது; காரியங்கள் காரியாலயத்தில் நிரந்தரமாக வேலே செய்யும் நான்கு தனிநபர்களால், அதாவது, தலேவர், செய லாளர், பொருளாளர், செங்காவலர் படைகளின் (அதாவது எழுச்சிப் படைப் பிரிவின்) ஆணேயாளர் ஆகியோரால் தனித் தனியாக முடிவு செய்யவும் கையாளவும் படுகின்றன. இவ் வாருக அரசாங்கத்தின் வேலேயிற் கூட ஜனநாயக மத்தியதி காரத்துவம் கிரமமான ஒரு நடைமுறையாக ஆகவில்லே.

ஆரம்ப நாட்களில் சிறு நிலப்பிரபுக்களும் பணக்கார விவ சாயிகளும் அரசாங்கக் கமிட்டிகளில், விசேஷமாகப் வட்டார மட்டத்தில், புகுந்துகொள்ள விழுந்தடித்துக்கொண்டு முயன் றனர். சிவப்பு நாடாக்கஃள அணிந்து கொண்டும், உற்சாகம் மிகுந்தவர்களாக நடித்துக்கொண்டும் அவர்கள் தந்திரங்கள் மூலம் அரசாங்கக் கமிட்டிகளில் புகுந்து, அனேத்தினதும் கட்டுப் பாட்டைப் பிடித்துக் கொண்டு, வறிய விவசாயி அங்கத்தினர் களேச் சில்லறைப் பங்கை வகிக்கும்படி தள்ளிவிட்டனர். அவர் கள் போராட்டத்தினூடே அம்பலப்படுத்தப்பட்டு, வறிய விவ சாயி வர்க்கம் தன் அதிகாரத்தை நிலேநாட்டிக் கொள்ளும் போது மட்டுமே அவர்கள் வெளியேற்றப்பட முடியும். இத் தகைய ஒரு நிலேமை, பரவலாக இல்லாவிடினும் கணிசமான எண்ணிக்கையான இடங்களில் இருக்கிறது.

கட்சி வெகுஜனங்கள் மத்தியில் பிரமாண்டமான நன்மதிப் பையும் செல்வாக்கையும் அனுபவிக்கிறது, அரசாங்கத்திற்கு இவை மிகக் குறைவாகவே உள்ளன. இதற்குக் காரணம் வசதிக்காகக் கட்சி பல காரியங்களேத் தானே நேரடியாகக்

கையாள்வதும் அரசாங்க அங்கங்களை ஒதுக்கி விட்டுவிடுவது மாகும். இத்தகைய உதாரணங்கள் பல உள்ளன. சில இடங்களில், அரசாங்க ஸ்தாபனங்களில் தலைமைதாங்கும் கட்சி அங்கத்தினர் கோஷ்டிகள் இல்லை, பிறவற்றில் அவை இருக் கின்றன ஆனால் முறையாகச் செயல்படவில்லை. இப்போதி ருந்து கட்சி அரசாங்கத்திற்குத் தலைமை தருவதான அதன் பணியை நிறைவேற்ற வேண்டும்; பிரச்சாரம் நீங்கலாகக் கட்சி யின் கொள்கைகளும் அது சிபாரிசு செய்யும் நடவடிக்கைகளும் அரசாங்க ஸ்தாபனங்கள் மூலமாக நிறைவேற்றப்பட வேண் டும். அரசாங்கத்தின் மீது நேரடியாக உத்தரவுகளைத் திணிப் பதான கோமிந்தாங்கின் தவறான நடைமுறை தவிர்க்கப்பட வேண்டும்.

## கட்சி ஸ்தாபனப் பிரச்சினைகள்

சந்தர்ப்பவாதத்திற்கு எதிரான போராட்டம். மே 21ந் திகதிய சம்பவத்திற்கு முன் பின்னுன சமயத்தில் எல்லைப் பிரதேச மாவட்டங்களிலான கட்சி ஸ்தாபனங்கள் சந்தர்ப்பவாதி களால் கட்டுப்பாடு செய்யப்பட்டன எனக் கூறலாம். அங்கே எதிர்ப்புரட்சி வந்தபோது உறுதியான போராட்டம் மிகச் சிறிதளவே இருந்தது. கடந்த ஆண்டு அக்டோபரில் செஞ் சேனை (தொழிலாளர்-விவசாயி புரட்சிகரச் சேனையின் முதலாவது சேனையின் முதலாவது டிவிஷனின் முதலாவது ரெஜிமென்ட்) எல்லைப் பிரதேச மாவட்டங்களில் வந்து சேர்ந்த போது, பாதுகாப்பாக மறைந்துகொண்டு விட்ட

ஒரு சில கட்சி அங்கத்தினர்கள் மட்டுமே எஞ்சியிருந்தனர், கட்சி ஸ்தாபனங்கள் எதிரியால் முற்றாக அழிக்கப்பட்டிருந்தன. கடந்த நவம்பரிலிருந்து ஏப்ரல் வரையான காலகட்டம் கட்சியைத் திரும்பக் கட்டியெழுப்புதலின் காலகட்டமும், மேயின் பின்பான காலகட்டம் பெரும் விஸ்தரிப்பின் காலகட்டமும் ஆகும். ஆனால் கடைசிப் பன்னிரண்டு மாதங்களில் சந்தர்ப்பவாதத்தின் வெளிப்பாடுகள் தொடர்ந்தும் பரவலாகவே இருந்துவந்தன. சில கட்சி அங்கத்தினர்கள் சண்டையிடத் துணிவின்றி, எதிரி நெருங்கியதும் தொலைதூரத்து மலைகளில் ஒளிந்துகொண்டு, அதை ''பதுங்கிப் பாயக் காத்திருப்பது'' என அழைத்தும் கொண்டனர். பிற அங்கத்தினர்கள் மிகத் தீவிரமாயிருந்த போதும், குருட்டுத்தனமான எழுச்சிகளை நாடினர். இவையனைத்தும் சிறுமுதலாளித்துவ தத்துவார்த்தத்தின் வெளிப்பாடாகும். நீண்ட காலமாகப் போராட்டத்தினூடாக உரமேற்றப்பட்டதற்கும் உட்கட்சிப் போதனை தரப்பட்டதற்கும் பின்னர் இத்தகைய காரியங்கள் படிப்படியாகக் குறைவாகியுள்ளன. கடந்த ஒரு வருட காலத்தில் செஞ்சேனையிலும் இதே சிறுமுதலாளித்துவ தத்துவார்த்தம் இருந்தது. எதிரி நெருங்கியதும் ஒன்றில் கண்மூடித்தனமான சண்டை அல்லது எடுத்த எடுப்பில் ஓட்டம் பிடித்தல் பிரேரிக்கப்படும். பல சமயம் இந்தக் கருத்துக்கள் இரண்டும், என்ன ராணுவ நடவடிக்கை எடுப்பதென்பது பற்றிய விவாதத்தின் போது; ஒரே நபரிடமிருந்து வந்தன. இந்தச் சந்தர்ப்பவாத தத்துவார்த்தம் நீண்ட உட்கட்சிப் போராட்டங்களினூடாகவும், உண்மையான சம்பவங்களிலிருந்து, உதாரணமாக, கண்மூடித்தனமான சண்டையில் ஏற்பட்ட இழப்புகளிலும் எடுத்த எடுப்பில் ஓட்டம் பிடித்ததில் உறப்பட்ட தோல்விகளிலுமிருந்து,

கற்றுக்கொண்ட பாடங்கள் மூலமாகவும் சிறிது சிறிதாகத் திருத்தப்பட்டுள்ளது.

**ஸ்தலவாதம்.** எல்லைப் பிரதேசத்திலான பொருளாதாரம் விவசாயப் பொருளாதாரமாகும். சில இடங்கள் இன்னும் கை உலக்கை யுகத்தில் இருக்கின்றன (மலைப்பிரதேசங்களில் அரிசி குத்துவதற்கு இன்னும் மர உலக்கை பொதுவாக உப யோகத்தில் இருக்கையில் சமதரைகளில் பல கல் உலக்கைகள் இருக்கின்றன). எங்கும் சமூக அமைப்பின் அடிப்படைக் கூறு ஒரே குடும்பப் பெயரைக் கொண்ட மக்களால் ஆன கோத் திரமாகும். கிராமங்களிலான கட்சி ஸ்தாபனங்களில், கட்சிக் கிளைகள் ஒரே குடும்பப் பெயரைக் கொண்டவர்களும் அருக ருகில் வசிப்பவர்களுமான அங்கத்தினர்களால் ஆனவையாகை யால், கிளைக் கூட்டமொன்று உண்மையில் கோத்திரக் கூட் டமாகவே ஆகிவிடுவதும் பல சமயம் உண்டு. இந்தச் சூழ்நிலை களில் ''போராட்ட உணர்வுள்ள போல்ஷிவிக் கட்சி'' ஒன் றைக் கட்டியெழுப்புவது உண்மையில் மிகக் கடினமாக உள் ளது. இத்தகைய அங்கத்தினர்களுக்குக் கம்யூனிஸ்டுகள் ஒரு தேசத்திற்கும் மற்றொன்றுக்கும் இடையிலோ ஒரு மாகாணத் திற்கும் மற்றொன்றுக்கும் இடையிலோ தெளிவான வேற்று மைக் கோடு எதையும் வரைந்து கொள்வதில்லை என்றோ, அல்லது வெவ்வேறு மாவட்டங்கள், டிஸ்திரிக்டுகள், வட்டாரங் கள் ஆகியவற்றிற்கிடையில் தெளிவான வேற்றுமைக் கோடு வரையப்படக் கூடாது என்றோ கூறப்படும் போது அவர்கள் அதை அவ்வளவாகப் புரிந்துகொள்வதில்லை. மாவட்டங்களுக்கு இடையிலும், ஒரே மாவட்டத்திற்குள் உள்ள டிஸ்திரிக்டுகள், வட்டாரங்கள் ஆகியவற்றிற்கிடையிலும் கூட, ஸ்தலவாதம் பாரதூரமான அளவுக்கு இருந்து வருகிறது. இந்த ஸ்தலவாதத்

தை ஒழிப்பதில் நியாயங்காட்டி வாதிடுவது ஆகப் போனால் எல்லைக்குட்பட்ட பயன்களையே ஏற்படுத்துகிறது; இதைவிட அதிகமாக எதையும் ஏற்படுத்த, எந்த வகையிலும் ஸ்தலவாரியாக ஒடுங்கியதல்லாத வெள்ளை அடக்குமுறையால்தான் முடிகிறது. உதாரணமாக, இரு மாகாணங்களின் எதிர்ப்புரட்சிகர ''கூட்டாக அடக்கும்'' நடவடிக்கைகள் மக்களைப் போராட்டத்தில் ஒரே கதியிற் பங்குகொள்ளச் செய்யும் போது மட்டுமே, அவர்களின் ஸ்தலவாதம் சிறிது சிறிதாகத் தளர்கிறது. இத்தகைய படிப்பினைகள் பலவற்றின் விளைவாக ஸ்தலவாதம் குறைந்து வருகிறது.

**உள்ளூர் வாசிகளும் குடியேறியவர்களும் பற்றிய பிரச்சினை.** எல்லை மாவட்டங்களில் மற்றுமொரு அலாதியான குணுதிசயம் உள்ளது, அதாவது, உள்ளூர் வாசிகளுக்கும் குடியேறியவர்களுக்கும் இடையிலான பிளவு. உள்ளூர் வாசிகளுக்கும் பல நூறு ஆண்டுகளுக்கு முன் வடக்கேயிருந்து வந்தவர்களின் பின் சந்ததியினர்களான குடியேறியவர்களுக்கும் இடையில் நீண்ட காலமாகப் பெரும் பிளவு இருந்து வந்துள்ளது; அவர்களின் பாரம்பரியமான வைரம் ஆழப் பதிந்ததும் சில சமயங்களில் பலாத்காரமான மோதல்களாகக் குமுறுவதுமாகும். பல பத்து லட்சத்தினரான குடியேறியவர்கள் ஃபூகியன்-குவாங்துங் எல்லையிலிருந்து ஹுனன்-கியாங்சி எல்லை நெடுகாகத் தெற்கு ஹுபெய் வரை வியாபித்துள்ள ஒரு பிராந்தியத்தில் வசிக்கின்றனர். மலைகளடர்ந்த பிரதேசங்களில் வசிக்கும் இக்குடியேறியவர்கள் சமதரைகளில் உள்ளவர்களான உள்ளூர் வாசிகளால் ஒடுக்கப்பட்டு வந்துள்ளனர்; இவர்களுக்கு என்றும் அரசியல் உரிமைகள் எதுவும் இருந்ததில்லை. இவர்கள் தாம் தலைநிமிரக் காலம் வந்துவிட்டதென எண்ணிக் கடந்த இரு

ஆண்டுகளின் தேசியப் புரட்சியை வரவேற்றனர். ஆனால் துரதிர்ஷ்டவசமாகப் புரட்சி தோல்வியுற்றது, அவர்கள் தொடர்ந்தும் உள்ளூர் வாசிகளால் ஒடுக்கப்பட்டு வருகின்றனர். எம் சொந்தப் பிரதேசத்திற்குள்ளேயே நிங்காங், சுய்ச்சுவான், லின்ஸியென், சாலிங் ஆகிய இடங்களில் உள்ளூர் வாசிகளையும் குடியேறியவர்களையும் பற்றிய பிரச்சினை இருக்கிறது; அது நிங்காங்கில்தான் மிகப் பாரதூரமாக உள்ளது. கம்யூனிஸ்ட் கட்சித் தலைமையின் கீழ், நிங்காங்கின் உள்ளூர் வாசிகள் மத்தியிலான புரட்சியாளர்கள், குடியேறியவர்களுடன் கூட்டாக, 1926-27ல் உள்ளூர் வாசிகளான உள்ளூர்க் கொடுங்கோலர் தீயபிரபுக்களின் அரசியல் அதிகாரத்தை வீழ்த்தி, மாவட்டம் முழுவதினதும் கட்டுப்பாட்டைப் பெற்றனர். கடந்த ஆண்டு ஜூனில், சு பெய்-தேயின் கீழான கியாங்சி அரசாங்கம் புரட்சிக்கு எதிராகத் திரும்பியது; செப்டம்பரில் உள்ளூர்க் கொடுங்கோலர் தீயபிரபுக்கள் நிங்காங்கிற்கு எதிரான ''அடக்கும்'' நடவடிக்கையில் சு பெய்-தேயின் துருப்புகளுக்குப் பாதை காட்டிகளாகச் செயலாற்றி, மீண்டும் ஒரு கால் உள்ளூர் வாசிகளுக்கும் குடியேறியவர்களுக்கும் இடையிலான மோதலைக் கிளறிவிட்டனர். தத்துவமளவில் உள்ளூர் வாசிகளுக்கும் குடியேறியவர்களுக்கும் இடையிலான இந்தப் பிளவு சுரண்டப்படும் வர்க்கங்களான தொழிலாளர் விவசாயிகள் மத்தியில், அதிலும் கம்யூனிஸ்ட் கட்சிக்குள் கொண்டு வரப்படக் கூடாது. ஆனால் உண்மையில், நீண்டகால பழக்க சக்தி காரணமாக இந்தப் பிளவு இன்னும் இருக்கவே செய்கிறது. இதோ ஒரு உதாரணம்: எல்லைப் பிரதேசத்திலான ஆகஸ்ட் தோல்விக்குப் பின்னர், உள்ளூர்வாசிகளான உள்ளூர்க் கொடுங்கோலர் தீயபிரபுக்கள் தம்முடன் பிற்போக்குத் துருப்புகளையும்

கொண்டு நிங்காஙிற்குத் திரும்பி, குடியேறியவர்கள் உள்ளூர் வாசிகளைக் கொன்று · குவிக்கப் போகின்றனரென்ற வதந்தியைப் பரப்பிய போது, உள்ளூர் வாசிகளான விவசாயிகளில் அனேகமானோர் அவர்கள் பக்கம் சார்ந்து, வெள்ளை நாடாக்கள் அணிந்துகொண்டு, வீடுகளை எரிப்பதிலும் மலைகளிற் தேடுவதிலும் வெள்ளைத் துருப்புகளுக்குப் பாதை காட்டினூர்கள். அக்டோபரிலும் நவம்பரிலும் செஞ்சேனை வெள்ளைத் துருப்புகளைத் தோற்கடித்து விரட்டிய போது, உள்ளூர் வாசிகளான விவசாயிகள் பிற்போக்காளர்களுடன் ஓடிப் போயினர், பதிலுக்கு அவர்களின் உடைமைகள் குடியேறியவர்களால் பிடித்துக் கொள்ளப்பட்டன. இந்த நிலைமை கட்சியிற் பிரதிபலிக்கப்பட்டுப் பல சமயம் அர்த்தமற்ற சச்சரவுகளுக்கு இட்டுச் செல்கிறது. எமது தீர்வு, ஒருபுறம் அவர்கள் உள்ளூர்க் கொடுங்கோலர் தீயபிரபுக்களின் செல்வாக்கை உதறித் தள்ளவும் அச்சங்களின்றி வீடுகளுக்குத் திரும்பவும் அவர்களுக்கு உதவ வேண்டி, ''மறுபக்கம் சார்ந்துள்ள விவசாயிகள் கொல்லப்பட மாட்டார்கள்'' என்றும் ''மறுபக்கம் சார்ந்த விவசாயிகளும் திரும்பி வரும் போது நிலம் தரப்படுவர்'' என்றும் பிரகடனம் செய்வதும், மறுபுறம் எமது மாவட்ட அரசாங்கங்களைக் கொண்டு, குடியேறியவர்களான விவசாயிகளை அவர்கள் பிடித்துக் கொண்ட உடைமைகளெதையும் திருப்பிக் கொடுத்துவிட உத்தரவிடுவதும் உள்ளூர் வாசிகளான விவசாயிகள் பாதுகாக்கப்படுவர் என அறிவித்தல்கள் ஒட்டுவதுமாகும். கட்சிக்குள், அங்கத்துவத்தின் இவ்விரு பிரிவுகளுக்குமிடையில் ஐக்கியத்தை உறுதிப்படுத்தப் போதனை தீவிரப்படுத்தப்பட வேண்டும்.

**பதவி வேட்டைக்காரர்கள் மறுபக்கம் சார்ந்தது.** புரட்சிக

ரப் பேரெழுச்சியின் போது (ஜூனில்) பதவி வேட்டைக்கா ரர்கள் பலர் கட்சியின் அங்கத்தினர் பகிரங்க திரட்டலைச் சாத கமாகக் கொண்டு கட்சிக்குள் புகுந்துகொண்டதன் விளைவாக எல்லைப் பிரதேசத்தில் அங்கத்துவம் துரிதமாகப் பத்தாயிரத் திற்கு மேல் உயர்ந்தது. கிளைகளினதும் டிஸ்திரிக்ட் கமிட்டி களினதும் தலைவர்கள் பெரும்பாலும் புதிய அங்கத்தினர்களா கவே இருந்ததால், சிறந்த உட்கட்சிப் போதனைக்கு இடமே இருக்கவில்லை. வெள்ளைப் பயங்கரம் தாக்கியதுதான் தாமதம், பதவி வேட்டைக்காரர்கள் மறுபக்கம் சார்ந்து, எதிர்ப்புரட்சி யாளர்களுக்கு எமது தோழர்களைத் தேடிப் பிடிப்பதில் பாதை காட்டிகளாகச் செயலாற்றினர்; வெள்ளைப் பிரதேசங்களிலான கட்சி ஸ்தாபனங்கள் அனேகமானவை தகர்ந்தன. செப் டம்பரின் பின்னர் கட்சி அடியந்தமான உட் சுத்திகரிப்பொன் றை நடத்தி, அங்கத்துவத்திற்குக் கருாரான வர்க்கத் தகு திகளை விதித்தது. யுங்ஸின், நிங்காங் மாவட்டங்களிலான கட்சி ஸ்தாபனங்கள் எல்லாம் கலைக்கப்பட்டு, மீண்டும் பதிவுசெய்தல் ஒன்று மேற்கொள்ளப்பட்டது. எண்ணிக்கையில் பெருமளவு குறைக்கப்பட்டாலும் அங்கத்துவம் போரிடும் வலிமையில் உயர்ந்துள்ளது. கட்சி ஸ்தாபனங்களெல்லாம் வெளிப்படை யாக இருந்துவந்தது வழக்கம், ஆனல் செப்டம்பரின் பின்னர், பிற்போக்காளர்கள் வரும் போது தன் நடவடிக்கைகளைத் தொடர்ந்து நடத்துவதற்குக் கட்சியைத் தயார் செய்வதற் காக, இரகசிய ஸ்தாபனங்கள் கட்டியெழுப்பப்பட்டுள்ளன. அதே நேரத்தில் நாம் வெள்ளைப் பிரதேசங்களுக்குள் ஊடுரு வவும் எதிரி முகாமிற்குள் இயங்கவும் சகல பிரயாசைகளையும் செய்துவந்துள்ளோம். ஆனல் அருகாமையிலுள்ள பட்டினங் களில் கட்சி ஸ்தாபனங்களுக்கான அஸ்திவாரங்கள் இன்னும்

மூவரை முதலாவது விசேஷ கமிட்டியின் அங்கத்தினர்களாகத் தெரிவுசெய்தது. ஜூலையில் ஹூனன் மாகாணக் கமிட்டி யாங் காய்-மிங்கை அனுப்பி வைத்தது. அவர் பதிற் செய லாளரானர். செப்டம்பரில் யாங் நோய்வாய்ப்படவே தான் சென்-லின் அவரது இடத்தை எடுத்தார். ஆகஸ்டில் செஞ் சேனையின் பிரதான பிரிவு தெற்கு ஹூனனுக்குச் சென்றி ருக்க வெள்ளைப் படைகள் எல்லைப் பிரதேசத்தைக் கடுமை யாகத் தாக்கிக்கொண்டிருந்த போது, நாம் யுங்ஸினில் ஓர் அவசரக் கூட்டத்தை நடத்தினேம். அக்டோபரில் செஞ்சேனை நிங்காஙிற்குத் திரும்பியதன் பின்னர், எல்லைப் பிரதேசத்தின் இரண்டாவது கட்சி மாநாடு மாஓபிஙில் நடைபெற்றது. அக்டோபர் 14ந் திகதி ஆரம்பித்த அதன் மூன்று நாட் கூட் டத்தொடரில் அது ''அரசியற் பிரச்சினைகளும் எல்லைப் பிர தேசக் கட்சி ஸ்தாபனத்தின பணிகளும்'' பற்றியது உள்ளிட்ட பல தீர்மானங்களை நிறைவேற்றிப் பின்வரும் பத்தொன்பது பேரை இரண்டாவது விசேஷ கமிட்டியின் அங்கத்தினர்களாகத் தெரிவுசெய்தது: தான் சென்-லின், சு தே, சென் யீ, லுங் க்ஷாஓ-சிங், சு க்ஷாங்-சியெ, லியூ தியென்-சியென், யுவான் பான்-சு, தான் ஸூ-ச்சொங், தான் பிங், லீ சியெ-ஃபய், ஸொங் யீ-யுயெ, யுவான் வென்-சாய், வாங் சுவோ-நுங், சென் செங்-ழென், மாஓ சேதுங், வான் ஸி-ஸியென், வாங் சுவோ, யாங் காய்-மிங், ஹோ திங்-யிங். தான் சென்-லின்னை (ஒரு தொழிலாளி) செயலாளராகவும் சென் செங்-ழென்னை (ஒரு புத்திஜீவி) துணைச் செயலாளராகவும் கொண்ட, ஐவரடங்கிய, நிரந்தரக் கமிட்டியொன்றும் அமைக்கப்பட்டது. செஞ்சேனையின் நான்காவது சேனையின் ஆருவது கட்சி மா நாடு நவம்பர் 14ந் திகதி நடத்தப்பெற்று, இருபத்து மூன்று

அங்கத்தினர்களைக் கொண்ட சேனைக் கமிட்டியொன்று தெரிவு செய்யப்பட்டது; இந்த அங்கத்தினர்களில் ஐவர், சு தேயை செயலாளராகக் கொண்ட ஒரு நிரந்தரக் கமிட்டியை ஆக்கினர். எல்லைப் பிரதேச விசேஷ கமிட்டி, சேனைக் கமிட்டி இரண்டும் முனைக் கமிட்டிக்குக் கீழ்ப்பட்டவை. முனைக்கமிட்டி நவம்பர் 6ந் திகதியன்று, மத்திய கமிட்டியினுல் நியமிக்கப் பட்ட பின்வரும் ஐந்து அங்கத்தினர்களைக் கொண்டதாகப் புனரமைக்கப்பட்டது: மாஓ சேதுங், சு தே, ஸ்தல கட்சித் தலைமை ஸ்தானத்தின் செயலாளர் (தான் சென்-லின்), ஒரு தொழிலாளத் தோழர் (ஸொங் சியாஓ-ஷெங்), ஒரு விவசாயித் தோழர் (மாஓ கோ-வென்); செயலாளர் மாஓ சேதுங். தற்போதைக்கு இக்கமிட்டி செயலவையொன்றையும் பிரசாரப் பிரிவு ஒன்றையும், ஸ்தாபனப் பிரிவு ஒன்றையும், தொழிலாளரியக்கக் கமிஷனென்றையும், ராணுவ விவகாரக் கமிஷனென்றையும் நிறுவியுள்ளது. முனைக் கமிட்டி ஸ்தலக் கட்சி ஸ்தாபனங்களுக்குப் பொறுப்பாக உள்ளது. முனைக் கமிட்டி சில சமயங்களில் துருப்புகளுடன் நகர்ந்து திரிய வேண்டியுள்ளதால் விசேஷ கமிட்டியைத் தொடர்ந்து வைத்திருப்பது அவசியம். எமது அபிப்பிராயத்தில், பாட்டாளி வர்க்கத்தின் தத்துவார்த்த ரீதியான தலைமையாகிய பிரச்சினை மிக முக்கியமானது. கிட்டத்தட்ட முற்றுக விவசாயிகளால் ஆனவையான, எல்லைப் பிரதேச மாவட்டங்களிலுள்ள கட்சி ஸ்தாபனங்கள் பாட்டாளி வர்க்கத்தின் தத்துவார்த்த ரீதியான தலைமை இல்லாவிடில் வழி தவறிச்சென்றுவிடும். மாவட்டப் பட்டினங்களிலும் பிற பெரிய பட்டினங்களிலும் தொழிலாளர் இயக்கத்திற்கு உன்னிப்பான கவனம் தருவது போக நாம் அரசாங்க அங்கங்களில் தொழிலாளர்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கவும் வேண்

டும். சகல மட்டங்களிலுமான கட்சியின் தலையாய அங்கங் களிலும் தொழிலாளர்களினதும் வறிய விவசாயிகளினதும் விகி தாசாரம் அதிகரிக்கப்பட வேண்டும்.

## புரட்சியின் தன்மை பற்றிய பிரச்சினை

சீனு பற்றிய கம்யூனிஸ்ட் சர்வதேசத்தின் தீர்மானத்தோடு நாம் பூரணமாக இணங்குகிறேம். சீனு இன்னமும் முதலா ளித்துவ ஜனநாயகப் புரட்சிக் கட்டத்தில்தான் உள்ளது என் பதில் ஐயமில்லை. சீனுவில் ஒரு பரிபூரணமான ஜனநாயகப் புரட்சிக்கான வேலைத்திட்டம், வெளிப்புறமளவில், பூரண தேசிய விடுதலையை அடையக் கூடியதாக ஏகாதிபத்தியத்தை வீழ்த்துதலையும், உட்புறமளவில், நகரங்களில் தரகு முதலாளி வர்க்கத்தின் அதிகாரத்தையும் செல்வாக்கையும் ஒழிப்பதை யும், கிராமங்களில் நிலப்பிரபுத்துவ உறவுகளை ஒழிக்க வேண்டி நிலப் புரட்சியைப் பூர்த்தி செய்வதையும், யுத்தப்பிரபுக்களின் அரசாங்கத்தை வீழ்த்துவதையும் உள்ளடக்குகின்றது. நாம் சோஷலிஸத்திற்கு மாறுவதற்கான உண்மையான அஸ்திவா ரமொன்றை இடுவதற்கு முதலில் நாம் இத்தகைய ஒரு ஜன நாயகப் புரட்சியினூடாகச் செல்ல வேண்டும். நாம் கடந்த ஆண்டில் பல இடங்களில் சண்டை செய்தும், நாடு முழுமை யில் புரட்சிகரப் பெருக்கு வடி நிலையில் உள்ளது என்பதைத் தெளிவாக உணர்ந்து கொண்டும் உள்ளோம். சிவப்பு அரசி யல் அதிகாரம் ஒரு சில சிறுபகுதிகளில் ஸ்தாபிக்கப்பட்டிருக் கையில் முழுமையாக நாட்டில் மக்கள் சாதாரண ஜனநாயக

உரிமைகளற்று இருக்கின்றனர், தொழிலாளர்களுக்கும், விவசாயிகளுக்கும், முதலாளித்துவ ஜனநாயகவாதிகளுக்கும் கூட, பேச்சுச் சுதந்திரமோ, கூட்டச் சுதந்திரமோ கிடையாது, கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்வதே மிக மோசமான குற்றமாயும் உள்ளது. செஞ்சேனை எங்கு சென்றாலும் வெகுஜனங்கள் உற்சாகமின்றியும் ஒதுங்கியுமே இருக்கின்றனர், எமது பிரசாரத்தின் பின்னர் மட்டுமே அவர்கள் மெதுவாக நடவடிக்கையில் இறங்குகின்றனர். நாம் எந்த எதிரிக் கூறுகளை எதிர்ப்பட்டாலும், எம் பக்கம் மாறிவருவதோ கலகங்களோ எதுவும் இல்லாதிருக்கிறது, நாம் சண்டையிட்டே தீர்க்க வேண்டியதாகிறது. இது மே 21ந் திகதிய சம்பவத்தின் பின்னர் மிகப் பெரிய எண்ணிக்கையான ''கலகக்காரர்க''ளைத் திரட்டிக்கொண்டதான எதிரியின் ஆறாவது சேனைக்குக்கூடப் பொருந்துவதாக இருக்கிறது. நாம் எமது தனிமைப்பாட்டைக் கூர்மையாக உணர்கிறோம், அது முடிவுக்கு வருமென்று நம்பியவண்ணமாயும் இருக்கின்றோம். நகர சிறு-முதலாளித்துவ வர்க்கத்தையும் சம்பந்தப்படுத்துவதான, ஜனநாயகத்திற்கான அரசியல், பொருளாதார போராட்டமொன்றைத் தொடுப்பதன் மூலம் மட்டுமே நாம் புரட்சியை முழுநாட்டினூடாகப் பீறிப்பாயும் பெருவெள்ளமாக மாற்ற முடியும்.

இவ்வாண்டு பெப்ரவரி வரை நாம் சிறு-முதலாளித்துவ வர்க்கத்தைக் குறித்த எமது கொள்கையை ஓரளவு நன்றாகப் பிரயோகித்தோம். மார்ச்சில் தெற்கு ஹூனன் விசேஷ கமிட்டியின் பிரதிநிதி நிங்காஙிற்கு வந்து சேர்ந்து, எம்மை வலது புறம் சாய்ந்ததாகவும், ஆகக் குறைவாகவே எரிப்பதும் கொல்வதும் நடத்தியதாகவும், கூறப்படும் ''சிறு-முதலாளித்துவ

வர்க்கத்தினரைத் தொழிலாளர்களாக மாற்றி, பின்னர் அவர்களைப் புரட்சியில் நிர்ப்பந்தித்துச் சேர்ப்பது'' என்ற கொள்கையை நிறைவேற்றத் தவறியதாகவும் கூறிக் கண்டித்தார்; அதன் பேரில் முன்னைக் கமிட்டியின் தலைமை புனரமைக்கப்பட்டுக் கொள்கையும் மாற்றப்பட்டது. ஏப்ரலில், எமது சேனை முழுவதும் எல்லைப் பிரதேசத்திற்கு வந்து சேர்ந்த பின்னர், இன்னும் அவ்வளவு எரிப்பதும் கொல்வதும் இருக்கவில்லை, ஆனால் பட்டினங்களில் நடுத்தர வர்த்தகர்களிடம் பறிமுதல் செய்வதும் நாட்டுப்புறத்தில் சிறு நிலப்பிரபுக்களிடமும் பணக்கார விவசாயிகளிடமும் கட்டாய நன்கொடைகள் வசூலிப்பதும் கறாராக அமுல்படுத்தப்பட்டன. தெற்கு ஹுனான் விசேஷ கமிட்டியால் முன்வைக்கப்பட்ட, ''எல்லாத் தொழிற்சாலைகளும் தொழிலாளர்களுக்கு'' என்ற கோஷமும் விரிவாகப் பிரசித்தப்படுத்தப்பட்டது. சிறுமுதலாளித்துவ வர்க்கத்தினரைத் தாக்குவதான அதி இடதுசாரிக் கொள்கை அவர்களில் அனேகமானோரை உள்ளூர்க் கொடுங்கோலர் தீயபிரபுக்களின் பக்கத்திற்கு தள்ளிவிட, அதன் விளைவாக அவர்கள் வெள்ளை நாடாக்கள் அணிந்து கொண்டு எம்மை எதிர்த்தனர். சமீபத்தில் இந்தக் கொள்கை சிறிது சிறிதாக மாற்றப்பட்டதோடு நிலைமை நிலையாகச் சீர்பட்டு வந்துள்ளது. குறிப்பாக சுய்ச்சுவானில் நல்ல பயன்கள் ஈட்டப்பட்டுள்ளன, ஏனெனில் மாவட்டப் பட்டினத்திலும் பிற சந்தைப் பட்டினங்களிலும் உள்ள வர்த்தகர்கள் இனியும் எம்மிடமிருந்து ஒதுங்குவதில்லை, அவர்களில் கணிசமான சிலர் செஞ்சேனையைப் பற்றி நல்லபடியாகவும் பேசுகின்றனர். ஸாஓலினிலான (மூன்று நாட்களுக்கு

ஒருமுறை நண்பகலில் நடத்தப்படுகின்ற) சந்தை சுமார் இரு பதாயிரம் மக்களை ஈர்க்கிறது; இது முந்திய சாதனைகளையெல்லாம் தாண்டும் தொகையாகும். எமது கொள்கை இப்போது சரியாக உள்ளது என்பதற்கு இது நிரூபணம். உள்ளூர்க் கொடுங்கோலர் தீயபிரபுக்கள் மக்கள் மீது மிகப் பளுவான வரிகளையும் வசூல்களையும் சுமத்தினர்; சுய்ச்சுவானின் அமைதியேற்படுத்தும் காவலர்கள்[22] ஹுவாங்ஆஓவிலிருந்து ஸாஓ வின் வரையான எழுபது லீ நீள வீதி நெடுகிலும் கமப் பொருட்கள் ஒன்றும் விலக்கின்றி எல்லாவற்றுக்கும் ஐந்து வழிவரிகளை வசூலித்தனர். நாம் அமைதியேற்படுத்தும் காவலர்களை நசுக்கி, இந்த வரிகளை ஒழித்து, அவ்வாறாக விவசாயிகள், சிறு, நடுத்தர வர்த்தகர்கள் அனைவரினதும் ஆதரவை வென்றெடுத்தோம்.

மத்திய கமிட்டி எம்மை, சிறு-முதலாளித்துவ வர்க்கத்தின் நலன்களைக் கணக்கிலெடுக்கும் அரசியல் வேலைத் திட்டமொன்றை விடுக்க வேண்டுமென்கிறது; நாம், பொதுவான வழிகாட்டலுக்காக மத்திய கமிட்டி ஜனநாயகப் புரட்சி முழுமைக்கும், தொழிலாளர்களின் நலன்கள், நிலப் புரட்சி, தேசிய விடுதலை ஆகியவற்றைக் கணக்கிலெடுப்பதான வேலைத் திட்டமொன்றை உருவாக்க வேண்டுமெனப் பிரேரிக்கின்றோம்.

✓பெரும்பாலும் விவசாய ரீதியான பொருளாதாரத்தைக் கொண்ட ஒரு நாடான சீனாவிலான புரட்சியின் ஒரு விசேஷ குணதிசயம், கிளர்ச்சியை விருத்தி செய்வதற்கு ராணுவ நடவடிக்கை உபயோகிக்கப்படுவதாகும். மத்திய கமிட்டி ராணுவ வேலைக்குப் பெரும் பிரயாசைகளை அர்ப்பணிக்க வேண்டுமென நாம் சிபார்சு செய்கின்றோம்.

லும் ஒரு சில வாரங்களுக்குள்ளாக மூன்று வெவ்வேறு திட்டங்களை முன்னிட்டது. முதலில் யுவான் தே-ஷெங் வந்து, லோஸியாஓ மலைத் தொடரின் நடுப் பிரிவில் அரசியல் அதிகாரத்தை ஸ்தாபிப்பதான எமது திட்டத்தை அங்கீகரித்தார். பின்னர் டு ஸியூ-சிங்கும் யாங் காய்-மிங்கும் வந்து, செஞ்சேனை சிறிதும் தயக்கமின்றித் தெற்கு ஹுனானை நோக்கி நகரவும், செங்காவலர் படைகளுடன் சேர்ந்து எல்லைப் பிரதேசத்தைப் பாதுகாப்பதற்கு இருநூறு துப்பாக்கிகளைக் கொண்ட படையொன்றை மட்டும் விட்டுச் செல்லவும் வேண்டுமென வற்புறுத்தினர்; அவர்கள் இது தான் ''அறுதியாகச் சரியான'' கொள்கை என்றனர். மூன்றும் தடவை, ஆகப் பத்து நாட்கள் தான் பின்னர், நீட்டி முழக்கி எம்மைக் கண்டித்தது போக, செஞ்சேனை கிழக்கு ஹுனானுக்குப் புறப்பட வேண்டுமென வற்புறுத்திய கடிதமொன்றுடன் யுவான் தே-ஷெங் திரும்பி வந்தார்; இதுவும் மறுபடி, ''சிறிதும் தயக்கமின்றி'' நிறைவேற்றப்பட வேண்டிய ''அறுதியாகச் சரியான'' கொள்கையென வர்ணிக்கப்பட்டது. இந்தக் கறாரான உத்தரவுகள் எம்மை உண்மையாக இரண்டுங்கெட்ட ஒரு நிலையில் இட்டன, ஏனெனில் அவற்றுக்கு அமையத் தவறுவது பணிவின்மைக்கு நிகராகையில் பணிவதோ நிச்சயமாகத் தோல்வியில் கொண்டுவிடும். இரண்டாவது கடிதம் வந்த போது, கட்சியின் சேனைக் கமிட்டி, எல்லைப் பிரதேச விசேஷ கமிட்டி, யுங்ஸின் மாவட்டக் கமிட்டி ஆகியன இணைக் கூட்டம் கூடி, தெற்கு ஹுனானை நோக்கி நகர்வது அபாயகரமானதெனக் கருதப்பட்டதால் மாகாணக் கமிட்டியின் பணித்தல்களை நிறைவேற்றுவதற்கு எதிராக முடிவு செய்தன. ஆனால் சில நாட்கள் பின்பாக, டு ஸியூ-சிங்கும் யாங் காய்-மிங்கும், மாகாணக்

கட்சிக் கமிட்டியின் திட்டத்தில் விடாப்பிடியாக இருந்து, 29வது ரெஜிமெண்டின் வீடு திரும்பும் ஆவலைச் சாதகமாகக் கொண்டு, செஞ்சேனையை மாவட்டப்பட்டினமான சென்செளவைத் தாக்குவதற்கு இழுத்துச் சென்று, அவ்வாறாக எல்லைப் பிரதேசம், செஞ்சேனை இரண்டிற்கும் தோல்வியைக் கொணர்ந்தனர். செஞ்சேனை அதன் வீரர்களில் சுமார் பாதிப் பேரை இழந்தது, எல்லைப் பிரதேசத்தில் கணக்கற்ற வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன, எண்ணிறந்த மக்கள் கொன்று குவிக்கப்பட்டனர்; ஒன்றன் பின் ஒன்றாக மாவட்டங்கள் எதிரியிடம் வீழ்ந்தன, அவற்றிற் சில இதுநாள் வரை திரும்பப் பிடிக்கப்படவுமில்லை. கிழக்கு ஹூனனுக்கு நகர்வதைப் பொறுத்த வரையில், ஹூனன், ஹூபெய், கியாங்சி மாகாணங்களின் ஆளும் உள்ளூர்க் கொடுங்கோலர் தீயபிரபுக்கள் மத்தியில் பிளவொன்று இருந்தாலல்லாமல், செஞ்சேனையின் பிரதான படைகள் அவ்வாறு செய்வது நிச்சயம் புத்தியல்ல. நாம் ஜூலையில் தெற்கு ஹூனன் மீது முன்னேறாதிருந்திருந்தால், நாம் எல்லைப் பிரதேசத்திலான ஆகஸ்ட் தோல்வியைத் தடுத்திருப்பது மட்டுமன்றி, கோமிந்தாங்கின் ஆறாவது சேனைக்கும் வாங் ஜூனின் கோமிந்தாங் படைகளுக்கும் இடையில் கியாங்சி மாகாணத்தில் சாங்ஷூவிலான சண்டையைச் சாதகமாகப் பயன்படுத்தி, யுங்ஸினிலுள்ள எதிரிப் படைகளை நசுக்கியும், கிஆனையும் அன்ஃபுவையும் விரைவிற் கைப்பற்றியும், எமது முன்னேறிய அணி பிங்சியாங்கை அடைந்து, லோஸியாஓ மலைத் தொடரின் வடக்குப் பிரிவிலுள்ள செஞ்சேனையின் ஐந்தாவது சேனையுடன் தொடர்பேற்படுத்துவதைச் சாத்தியமாக்கியும் இருக்க முடியும். அது எல்லாம் நடந்திருந்தாலும் கூட, அப்போதும் எமது பொதுத் தலைமை ஸ்தானத்திற்கு உகந்த

இடம் நிங்காங்காகவே இருந்திருக்கவும், கொரில்லாப் படைகள் மட்டுமே கிழக்கு ஹூனனுக்கு அனுப்பப்பட்டிருக்கவும் வேண்டும். உள்ளூர்க் கொடுங்கோலர் தீயபிரபுக்கள் மத்தியில் சண்டை மூளாததாலும் வலிமைமிக்க எதிரிப் படைகள் ஹூனன் எல்லையிலான பிங்சியாங், சாலிங், யுஸியென் ஆகிய இடங்களில் இன்னும் இருந்தனவாகையாலும், நாம் எமது பிரதான படைகளை வடக்கு முகமாக நகர்த்தியிருந்தால் எதிரிக்கு அவனது வாய்ப்பைத் தருபவர்களாக இருந்திருப்போம். மத்திய கமிட்டி எம்மைக் கிழக்கு அல்லது தெற்கு ஹூனனை நோக்கி முன்னேறுவதை யோசித்துப் பார்க்கும்படி கேட்டது, ஆனல் இரண்டில் எதுவும் மிக ஆபத்தானது; கிழக்கு ஹூனனுக்கான உத்தேச படையெடுப்பு நடத்தப்பெறவில்லையாயினும், தெற்கு ஹூனனுக்கான படையெடுப்புத் தோல்வியாக நிரூபணமாகியுள்ளது. இந்தத் துன்பகரமான அனுபவம் எப்போதும் எங்கள் நினைவில் வைத்திருக்கத் தகுந்தது.

நாம் இன்னும் உள்ளூர்க் கொடுங்கோலர் தீயபிரபுவர்க்கம் பிளவுபட்டிருக்கும் ஒரு காலகட்டத்திலில்லை; எல்லைப் பிரதேசத்தைச் சுற்றி நிறுத்தப்பட்டிருக்கும் ''அடக்கும்'' படைகளும் இன்னும் பத்து ரெஜிமெண்டுகளுக்கு மேற்பட்டவையாக உள்ளன. ஆனல் எம்மால் தொடர்ந்தும் பணம் பெறும் வழிகளைக் கண்டு பிடிக்க முடிந்தால் (உணவும் துணிகளும் இனியும் ஒரு பெரிய பிரச்சினையல்ல), அப்போது, எல்லைப் பிரதேசத்தில் எமது வேலைக்கான அஸ்திவாரம் அமைக்கப் பட்டுவிட்டதால், நாம் இந்த எதிரிப் படைகளையும், இன்னும் பெரியவற்றையும் கூட, சமாளிக்க வல்லவர்களாயிருப்போம். எல்லைப் பிரதேசம் சம்பந்தப்பட்ட வரை செஞ்சேனை விலகிச் சென்ருல் உடனே அது, ஆகஸ்டில் உற்றது போலவே, விநா

சமுறும். எமது செங்காவலர் படைகள் அனைத்தும் அழித்தொழிக்கப்பட மாட்டா எனினும், கட்சியும் எமது வெகுஜன அடித்தளமும் முடமாக்கும் அடியொன்றைப் பெறும்; மலைகளில் நாம் ஒருவேளை காலூன்றி நிற்கக்கூடிய இடங்கள் இருக்கையில், சமதரைகளிலோ நாம் எல்லோரும் ஆகஸ்டிலும் செப்டம்பரிலும் போல் தலைமறைய வேண்டியுமிருக்கும். செஞ்சேனை விலகிச் செல்லாவிட்டால், அப்போது, எமக்கு ஏற்கனவே உள்ள அஸ்திவாரங்களின் மீது கட்டியெழுப்பி எம்மால் சிறிது சிறிதாகச் சுற்றுமுற்றுமுள்ள பிரதேசங்களுக்கு விரிவடைய இயலுமாகும், எமது எதிர்காலச் சாத்தியப்பாடுகளும் ஒளிநிறைந்தவையாயிருக்கும். நாம் செஞ்சேனையைப் பெரிதாக்க விரும்பினுல் அதற்கு ஒரே வழி எமக்கு நல்லதொரு வெகுஜன அடித்தளம் உள்ள சிங்காங் மலைகளின் சுற்றுடலில், அதாவது, நிங்காங், யுங்ஸின், லின்ஸியென், சுய்ச்சுவான் மாவட்டங்களில், ஹுனுன், கியாங்சி மாகாணங்களின் எதிரிப் படைகளுக்கிடையில் நலன்களிலுள்ள வேறுபாட்டையும், தன்னைச் சகல திசைகளிலும் தற்காத்துக்கொள்ள வேண்டிய எதிரியால் தன் படைகளை ஒன்றுகுவிக்க இயலாமையையும் இந்தப் போராட்டத்திற் பயன்படுத்திக் கொண்டு, எதிரியை நீண்ட போராட்டமொன்றில் ஈடுபடுத்தி வைத்திருப்பதுதான். எந்தச் சண்டையையும், அதில் எம்மால் வெல்லவும் ஆயுதங்களையும் படைவீரர்களையும் கைப்பற்றவும் முடியுமென்ருலல்லாமல் செய்யாது, சரியான தந்திரோபாயங்களை உபயோகிப்பதன் மூலம், எம்மால் செஞ்சேனையைச் சிறிது சிறிதாகப் பெருப்பிக்க முடியும். ஏப்ரலுக்கும் ஜூலைக்கும் இடையில் எல்லைப் பிரதேசத்தில் வெகுஜனங்கள் மத்தியில் ஏற்கனவே செய்யப்பட்டிருந்த தயாரிப்பு வேலையிருக்க செஞ்சேனை, அதன் பிரதான

பிரிவு தெற்கு ஹூனனுக்கான அதன் படையெடுப்பைச் செய்யாதிருந்தால், ஆகஸ்டில் ஐயத்திற்கிடமின்றிப் பெருப் பிக்கப்பட்டிருக்க முடியும். அந்தத் தவறு இருந்தும் கூட, செஞ்சேனை தரையமைப்புச் சாதகமாகவும் மக்கள் நட்பாயும் உள்ள எல்லைப் பிரதேசத்துக்குத் திரும்பி வந்துள்ளது, இப் போது கூடச் சாத்தியப்பாடுகள் மோசமாயில்லை. எல்லைப் பிரதேசத்தைப் போன்ற இடங்களில் சண்டை செய்வதென்ற உறுதியின் மூலமும் சண்டை செய்வதில் திடத்தின் மூலமும் மட்டுமே செஞ்சேனை தனது ஆயுதங்களைப் பெருக்கிக் கொள் ளவும் சிறந்த வீரர்களைப் பயிற்றியெடுக்கவும் முடியும். செங் கொடி எல்லைப் பிரதேசத்தில் முழுதாக ஒரு வருடமாக உயர்த்தி வைத்திருக்கப்பட்டுள்ளது. அது ஹூனனினதும் ஹூபெ யினதும் கியாங்சியினதும், உண்மையில் நாடு முழுவதினதும், உள்ளூர்க் கொடுங்கோலர் தீயபிரபு வர்க்கத்தின் கடும் வெறுப் பைச் சம்பாதித்துக் கொண்டுள்ளது, ஆனால் அது சுற்றியுள்ள மாகாணங்களில் உள்ள தொழிலாளர்களினதும் விவசாயிகளி னதும் படைவீரர்களினதும் நன்நம்பிக்கைகளை நிலையாக உயர்த்தி வருகிறது. படைவீரர்களை எடுத்துக் கொள்ளுங்கள். யுத்தப்பிரபுக்கள் எல்லைப் பிரதேசத்துக்கு எதிரான ''கொள் ளைக்காரர்களை அடக்கும்'' நடவடிக்கையைத் தங்கள் பிரதான பணியாக ஆக்கிக் கொள்கின்றனராகையாலும், ''கொள்ளைக் காரர்களை அடக்குவதான பிரயத்தனத்தில் ஒரு வருட கால மும் பத்து லட்சம் டொலர்களும் செலவிடப்பட்டுள்ளன'' (லூ தி-பிங்), அல்லது, செஞ்சேனை ''20,000 வீரர்களையும் 5,000 துப்பாக்கிகளையும் கொண்டுள்ளது'' (வாங் ஜூன்) என்பன போன்ற அறிக்கைகளை விடுக்கின்றனராகையாலும், அவர்களின் படை வீரர்களினதும் மனம் விட்டுப் போன கனிஷ்ட அதிகாரி

களினதும் கவனம் சிறிது சிறிதாக எம்மை நோக்கித் திரும்புகிறது, அவர்களில் வர வர அதிகமானோர் எதிரியிடமிருந்து பிரிந்து வந்து எம் சொந்த அணிகளில் சேர்ந்து, அவ்வாறாகச் செஞ்சேனைக்கு ஆள்திரட்ட மற்றுமொரு வழியைத் தருவர். இது போக, எல்லைப் பிரதேசத்தில் செங்கொடி ஒருபோதும் தாழ்த்தப்படவில்லை என்ற உண்மை கம்யூனிஸ்ட் கட்சியின் பலத்தையும் ஆளும் வர்க்கங்களின் ஆற்றாமையையும் ஒருங்கு காண்பிக்கிறது; இது தேச விசால அரசியல் முக்கியத்துவமுடையதுமாகும். ஆகவே, நாம் எப்போதும் கொண்டு வந்துள்ளவாறே இப்போதும், லோஸியாலை மலைத் தொடரின் நடுப் பிரிவில் அரசியல் அதிகாரத்தைக் கட்டியெழுப்புவதும் விஸ்தரிப்பதும் அறவே அவசியமும் சரியுமாகும் எனக் கொள்கிறோம்.

## குறிப்புகள்

1. இந்த யுத்தம் 1927, அக்டோபரில் நடைபெற்றது.

2. இந்த யுத்தம் 1927, நவம்பரிலும் டிசம்பரிலும் நடைபெற்றது.

3. செஞ்சேனையிலான படைவீரர்களின் பிரதிநிதி மாநாடுகளும் படைவீரர்களின் கமிட்டிகளுமான அமைப்பு பின்னர் ரத்துச் செய்யப்பட்டது. 1947ல் மக்கள் விடுதலைச் சேனை, இயக்குனர்களின் தலைமையின் கீழானவையான சேனைவீரர்களின் மாநாடுகளும் படைவீரர் கமிட்டிகளுமான அமைப்பொன்றை ஏற்படுத்தியது.

4. ''லீ'' என்பது சீனாவின் நீட்டலளவைகளில் ஒன்றாகும். ஒரு லீ அரைக் கிலோமீட்டருக்குச் சமம்.

5. ஆதியில் தோழர் யெ திங், ஹோ லுங் ஆகியோரின் ஆணையின் கீழிருந்த

இத்துருப்புகள் (யெ திங்ஙின் ஆணையின் கீழிருந்த துருப்புக்கள் பற்றி, குறிப்பு 15ஐப் பார்க்கவும்) 1927, ஆகஸ்ட் 1ந் திகதிய நான்சாங் எழுச்சியை நடத்தின. அவை குவாங்துங் மாகாணத்து ஸாஓசௌ, ஷன்டோ ஆகியவற்றை நோக்கி முன்னேறியதிற் தோல்வியடைந்தன; அவற்றில் சில கூறுகள் தோழர்கள் சுதே, லின் பியௌ, சென் யீ ஆகியோரின் தலைமையில், கியாங்சி வழியாகத் தெற்கு ஹுனனுக்கு வாபஸாகி, கொரில்லா யுத்தத்தை நடத்தி வந்தன. 1928, ஏப்ரலில் அவை சிங்காங் மலைகளிலிருந்த தோழர் மாஓ சேதுங் அவர்களின் படைகளுடன் சேர்ந்துகொண்டன.

6. 1927ம் ஆண்டின் புரட்சிகர நாட்களில் வூசாஙிலான தேசிய அரசாங்கத்தின் காவலர் ரெஜிமென்டிலிருந்த இயக்குனர்களில் அனேகமானோர் கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தினர்களாக இருந்தனர். வாங் சிங்-வெய்யும் அவரது கூட்டாளிகளும் புரட்சிக்குத் துரோகம் செய்ததன் பின்னர், அந்த ரெஜிமென்ட் 1927, ஜூலை இறுதியில், வூசாஙை விட்டு, நான்சாஙிலான எழுச்சியிற் சேரச்சென்றது. புரட்சிகரப் படைகள் ஏற்கனவே நான்சாஙிலிருந்து தெற்கு நோக்கிச் சென்றுவிட்டன என வழியில் அறிந்து கொண்டு அந்த ரெஜிமென்ட் மேற்கு கியாங்சியிலுள்ள சியூஷுயை நோக்கித் திரும்பி, பிங்கியாஙினதும் லியூயாஙினதும் விவசாயி ஆயுதப் படைகளுடன் சேர்ந்து கொண்டது.

7. 1927ம் ஆண்டின் வசந்தத்தில் ஹுனன் மாகாணத்திலுள்ள பிங்கியாங், லியூயாங் பிரதேசத்தில் கணிசமான பலமுடைய விவசாயி ஆயுதப் படைகள் உருவாக்கப்பட்டன. மே 21ந் திகதி ஷி கே-சியாங் சாங்ஷாவில் எதிர்ப் புரட்சிகர ராணுவச் சதியொன்றை நடத்தி, புரட்சிகர வெகுஜனங்களைப் படுகொலை செய்தார். எதிர்ப் புரட்சியாளர்களைத் திருப்பித் தாக்க, மே 31ந் திகதி, பிங்கியாங், லியூயாங் பிரதேசத்திலுள்ள விவசாயி ஆயுதப் படைகள் சாங்ஷாவை நோக்கிச் சென்றன, ஆனால் சந்தர்ப்பவாதி சென் து-சியூவினால் தடுத்துத் திருப்பி அனுப்பப்பட்டன. அதன் மேல் அவற்றில் ஒரு பிரிவு கொரில்லா யுத்தத்தில் ஈடுபடுவதற்குச் சுதந்திரமான ஒரு ரெஜிமென்டாகப் புனரமைக்கப்பட்டது. ஆகஸ்ட் 1ந் திகதிய நான்சாங் எழுச்சிக்குப் பின்னர், இந்த ஆயுதந் தரித்த விவசாயிகள் கியாங்சி மாகாணத்திலுள்ள சியூஷுய், துங்கு ஆகிய இடங்களிலும் ஹுனன் மாகாணத்திலுள்ள பிங்கியாங், லியூயாங் ஆகிய இடங்களிலும் வூசாங் தேசிய அரசாங்கத்தின் முன்னைய காவலர் ரெஜிமென்டுடன் சேர்ந்து கொண்டு, கியாங்சி மாகாணத்துப் பிங்சியாஙின் ஆயுதந் தரித்த கரிச் சுரங்கத் தொழிலாளர்களுடன் இணைவாக இலையுதிர்கால அறுவடை எழுச்சியை

நடத்தினர். அக்டோபரில் தோழர் மாஓ சேதுங் அவர்கள் இப்படைகளைச் சிங்காங் மலைகளுக்கு இட்டுச் சென்றார்.

8. 1928ன் ஆரம்பத்தில், தோழர் சு தே தெற்கு ஹுனானில் புரட்சிகர கொரில்லா யுத்தம் நடத்திக்கொண்டிருக்கையில், விவசாயி இயக்கம் ஏற்கனவே திடமாக வேரூன்றியிருந்த யீச்சாங், சென்சௌ, லெய்யாங், யுங்சிங், ஸெசிங் மாவட்டங்களில் விவசாயிப் படைகள் உருவாக்கப்பட்டன. பின்னர் இப்படைகள் தோழர் சு தேயின் தலைமையின் கீழ், சிங்காங் மலைகளுக்கு சென்று, தோழர் மாஓ சேதுங் அவர்களின் கீழான படைகளுடன் சேர்ந்தன.

9. ஹுனான் மாகாணத்தில் சாங்னிங் மாவட்டத்திலுள்ள ஷுய்கோஷன் அதன் ஈயச் சுரங்கங்களுக்குப் பெயர் பெற்றது. 1922ல் அங்குள்ள சுரங்கத் தொழிலாளர்கள் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் தொழிற்சங்கமொன்றை அமைத்து, எதிர்ப்புரட்சிக்கு எதிராகப் பல ஆண்டுகளாகப் போராட்டங்கள் நடத்தினர். 1927ன் இலையுதிர்கால அறுவடை எழுச்சியின் பின் இச்சுரங்கத் தொழிலாளர்களிற் பலர் செஞ்சேனையிற் சேர்ந்தனர்.

10. கியாங்சி மாகாணத்தில் பிங்சியாங் மாவட்டத்திலுள்ள, பன்னீராயிரம் தொழிலாளர்கள் வேலை செய்த, அன்யுவான் கரிச் சுரங்கங்கள் ஹான்-யெ-பிங் இரும்பு எஃகுக் கம்பெனிக்குச் சொந்தமாக இருந்தன. 1921ல் இருந்து அங்கு, கம்யூனிஸ்ட் கட்சியின் ஹுனான் மாகாணக் கமிட்டியால் அனுப்பப்பட்ட ஸ்தாபன அமைப்பாளர்களால் கட்சி ஸ்தாபனங்களும் சுரங்கத் தொழிலாளர் சங்கமொன்றும் நிறுவப்பட்டன.

11. 1929ல் செஞ்சேனையிலான கட்சிப் பிரதிநிதிகளின் பெயர் அரசியற் கொமிஸார்கள் என மாற்றப்பட்டது. 1931ல் கொம்பனி அரசியல் கொமிஸார்களுக்கு அரசியல் டிரெக்டர்கள் எனப் பெயர் மாற்றப்பட்டது.

12. ''உள்ளூர்க் கொடுங்கோலர்களிடம் அபராதமாக பெறுவது'' சேனையின் செலவுகளில் ஒரு பகுதியைச் சமாளிப்பதற்கான ஒரு தற்காலிக நடவடிக்கையாக மட்டுமே இருந்தது. செஞ்சேனையின் வளர்ச்சியும் தளப்பிரதேசங்களின் விரிவடைவும் செலவுகள் வரிவிதிப்பின் மூலம் சமாளிக்கப்படுவதைச் சாத்தியமும் அவசியமுமாக்கின.

13. சமமாக பணம் கொடுக்கும் இந்த நடைமுறை செஞ்சேனையிற் பல வருடங்களாக அமுலிலிருந்தது. அந்தச் சமயத்தில் இந்த நடைமுறை அவசியமாகவிருந்தது. பின்னர் அதிகாரிகளும் வீரர்களும் தரத்திற்கிணங்கச் சிறிதளவு வேறுபட்ட ஊதியங்கள் பெற்றனர்.

14. இங்கு தோழர் மாஒ சேதுங் அவர்கள் புரட்சிகரச் சேனையில் திட்டவட்டமான ஒரு அளவுக்கு ஜனநாயகம் இருக்க வேண்டிய தேவைக்கு விசேஷ அழுத்தம் தருகிறார், ஏனெனில், செஞ்சேனையின் ஆரம்பக் காலகட்டத்தில், ஜனநாயகத்தின் மீதான அழுத்தம் இல்லாமல் எம்மால் புதிதாகப் படையிற் திரட்டப்பட்ட விவசாயிகளினதும் எம் அணிகளில் சேர்ந்திருந்த கைப்பற்றப்பட்ட வெள்ளைத் துருப்பினரதும் புரட்சிகர உற்சாகத்தைத் தட்டியெழுப்பவும் முடிந்திருக்காது, எமது இயக்குனர்களைப் பீடித்திருந்த பிற்போக்குச் சேனைகளின் யுத்தப்பிரபுப் போக்குகளை ஒழிப்பதும் சாத்தியமாக இருந்திராது. இயல்பாகவே, சேனையில் ஜனநாயகம் ராணுவக் கட்டுப்பாட்டின் வரம்புகளைக் கடக்கக் கூடாது, கட்டுப்பாட்டைப் பலவீனப்படுத்தவல்லாது பலப்படுத்தவே உதவ வேண்டும். ஆகவே அவசியமான அளவு ஜனநாயகம் ஊக்குவிக்கப்பட வேண்டுமாகையில், கட்டுப்பாடின்மைக்கு நிகரான அதீத-ஜனநாயகத்திற்கான கோரிக்கை எதிர்த்துப் போரிடப்பட வேண்டும். இத்தகைய கட்டுப்பாடின்மை செஞ்சேனையின் ஆரம்ப நாட்களில் ஒரு சமயம் பாரதூரமாக நிலவியது. சேனையில் அதீத-ஜனநாயகத்திற்கு எதிரான தோழர் மாஒ சேதுங்கின் போராட்டத்திற்கு இந்நூலில், ''கட்சியில் நிலவும் தவறான கருத்துக்களைத் திருத்துவது பற்றி'' என்ற கட்டுரையைப் பார்க்கவும்.

15. 1926லான வடக்குப் படையெடுப்பின் போது தோழர் யெ திங்கின் கீழான படைக் கூறு ஒரு சுதந்திரமான ரெஜிமென்டாக இருந்தது. கம்யூனிஸ்டுகளைத் தன் உட்கருவாகக் கொண்ட அந்த ரெஜிமென்ட் வடபடையெடுப்பில் திறமான ஒரு போர்ப் படையாகப் புகழ் பெற்றது. புரட்சிகரச் சேனையால் வூசாங் கைப்பற்றப்பட்ட பின்னர், அது இருபத்து நான்காவது டிவிஷனாகவும், நான்சாங் எழுச்சியின் பின் பதினோராவது சேனையாகவும் விரிவுபடுத்தப்பட்டது.

16. செஞ்சேனையிலான பிற்காலத்திய அனுபவம், கிட்டத்தட்ட கட்சியினரல்லாதோர் இருவருக்குக் கட்சியினர் ஒருவர் என்ற விகிதாசாரம் போதுமானது எனக் காண்பித்தது. பின்னர் செஞ்சேனையிலும், மக்கள் விடுதலைச் சேனையிலும் இந்த விகிதாசாரம் வைத்திருக்கப்பட்டது.

17. சியாங் கை-ஷேக்கினாலும் வாங் சிங்-வெய்யினாலும் தூண்டிவிடப்பட்டு, ஷி கே-சியாங், ஹோ சியென் ஆகியோருள்ளிட்ட, ஹூனானிலான எதிர்ப்புரட்சிகர கோமிந்தாங் சேனைத் தளகர்த்தர்கள் 1927, மே 21ந் திகதி சாங்ஷாவிலான தொழிற் சங்கங்களினதும் விவசாயிச் சங்கங்களினதும் பிற புரட்சிகர ஸ்தாபனங்

களினதும் மாகாணத் தலைமை ஸ்தானங்களின் மீது தாக்குதலொன்றிற்கு உத்தரவிட்டனர். கம்யூனிஸ்டுகளும் புரட்சிகரத் தொழிலாளர்களும் விவசாயிகளும் தொகையாகக் கைது செய்யவும் கொல்லவும் பட்டனர். இது வாங் சிங்-வெய்யின் தலைமையிலான வூஹான் கும்பல், சியாங் கை-ஷேக்கின் தலைமையிலான நான்கிங் கும்பல் ஆகிய இரு எதிர்ப்புரட்சிகர கோமிந்தாங் கும்பல்களுக்குமிடையில் வெளிப்படையான ஒத்துழைப்பிற்கு அறிகுறியாக இருந்தது.

18. நிலம் முழுவதையும் பறிமுதல் செய்து புனர் பங்கிட்டளித்தல் 1928ல் ஹுனன்-கியாங்சி எல்லைப் பிரதேசத்தில் பிரகடனம் செய்யப்பட்ட நிலச் சட்டத்தின் ஒரு ஷரத்து. நிலப்பிரபுக்களின் நிலத்தை மட்டும் பறிமுதல் செய்வதற்குப் பதிலாக நிலம் முழுவதையும் பறிமுதல் செய்வது ஒரு தவறு, இத்தவறு நிலப் போராட்டங்களில் அனுபவமின்மையினின்றும் எழுகின்றது எனத் தோழர் மாஓ சேதுங் அவர்கள் பின்னர் சுட்டிக்காட்டினர். 1929, ஏப்ரலில் அங்கீகரிக்கப்பட்ட கியாங்சி மாகாணத்து சிங்கோ மாவட்டத்தின் நிலச் சட்டத்தில் ''நிலம் முழுவதையும் பறிமுதல் செய்வது'' என்பது ''பொது நிலத்தையும் நிலப்பிரபு வர்க்கத்தின் நிலத்தையும் பறிமுதல் செய்வது'' என மாற்றப்பட்டது.

19. நாட்டுப்புறத்திலான இடைப்பட்ட வர்க்கத்தை எம்பக்கம் வென்றெடுப்பதன் முக்கியத்துவத்தைக் கருதித் தோழர் மாஓ சேதுங் அவர்கள் அதனை ஆகக் கடுமையாக நடத்துவதான தவறான கொள்கையை விரைவிற் திருத்தினர். இக்கட்டுரை போக, (''கண்மூடித்தனமான கொளுத்துதலையும் கொல்லுதலையும் தடைசெய்தல்'', ''நடுத்தர, சிறிய வர்த்தகர்களின் நலன்களைப் பாதுகாத்தல்'' ஆகியன உள்ளிட்ட) 1928, நவம்பர் செஞ்சேனையின் ஆறாவது கட்சி மாநாட்டிற்கான பிரேரணைகளிலும், (''சிறிது சிறிதாகச் சிறிதளவு சொத்துச் சேர்த்துள்ளவர்களான, நகரங்களிலுள்ள வர்த்தகர்கள் அதிகார வட்டாரங்களுக்குப் பணிந்து நடக்கும் வரை தீண்டாது விடப்பட வேண்டும்'' எனப் பிரகடனம் செய்த) செஞ்சேனையின் நான்காவது சேனையின் 1929 ஜனவரிப் பிரகடனம், 1929 ஏப்ரல் திகதியிடப்பட்ட சிங்கோ மாவட்டத்தின் நிலச் சட்டம் (குறிப்பு 18ஐப் பார்க்கவும்) முதலானவற்றிலும் இந்த வர்க்கத்தைக் குறித்த கொள்கை பற்றிய, தோழர் மாஓ சேதுங் அவர்களின் கருத்துக்கள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

20. புரட்சிகர யுத்தம் பரவியதோடும், புரட்சிகரத் தளப்பிரதேசங்கள் விஸ்தரிக்கப்பட்டதோடும், புரட்சிகர அரசாங்கத்தால் கைத்தொழிலையும் வர்த்தகத்தையும் பாதுகாப்பதான கொள்கை கைக்கொள்ளப்பட்டதோடும், இந்

நிலைமையை மாற்றுவது சாத்தியமாகி, பின்னர் உண்மையில் ஒரு மாற்றம் நிகழவும் செய்தது. கேந்திரமாக இருந்த காரியம் தேசிய முதலாளித்துவ வர்க்கத்தின் கைத்தொழிலையும் வர்த்தகத்தையும் உறுதியாய் பாதுகாப்பதும் அதி-இடதுசாரிக் கொள்கைகளை எதிர்ப்பதுமாகும்.

21. உழைப்பு சக்தி நிலப் பங்கீட்டிற்கு உகந்த ஒரு மூலப் பிரமாணமல்ல. செம்பிரதேசங்களில் நிலம் உண்மையில் நீண்டகாலமாக தலா வீத அடிப்படையில் சமமாகப் புனர் பங்கிட்டளிக்கப்பட்டது.

22. அமைதியேற்படுத்தும் காவலர்கள் ஒருவகையான ஸ்தல எதிர்ப்புரட்சிகர ஆயுதப் படையாவர்.

# கட்சியில் நிலவும் தவறான கருத்துக்களைத் திருத்துவது பற்றி*

(1929, டிசம்பர்)

செஞ்சேனையின் நான்காவது சேனையிலுள்ள கம்யூனிஸ்ட் கட்சி ஸ்தாபனத்திற் பாட்டாளி வர்க்கத்துக்குப் புறம்பான பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. அவை கட்சியின் சரி யான மார்க்கம் அமுல்நடத்தப்படுவதைப் பெரிதும் தடை செய்கின்றன. இந்தக் கருத்துக்களைப் பூரணமாகத் திருத்தா விட்டால், செஞ்சேனையின் நான்காவது சேனை சீனாவின் மகத்

*இக்கட்டுரை செஞ்சேனையின் நான்காவது சேனையின் ஒன்பதாவது கட்சி மாநாட்டிற்காகத் தோழர் மாஓ சேதுங் அவர்களால் எழுதப்பட்ட ஒரு தீர்மா னம். சீன மக்களின் ஆயுதப் படைகள் கஷ்டங்களுக்கு ஊடாகக் கட்டியெழுப்பப் பட்டன. சீனச் செஞ்சேனை (ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தத்தின்போது எட்டாவது மார்க்க ராணுவமும், புதிய நான்காவது சேனையுமாகி, இப்பொழுது மக்கள் விடுதலைச் சேனையாக உள்ளது) 1927, ஆகஸ்ட் 1ந் திகதி, நான்சாங் எழுச்சி யின்போது சிருஷ்டிக்கப்பட்டு, 1929 டிசம்பரளவில் இரு வருடங்களுக்கு மேலாக இருந்து வந்திருந்தது. இந்தக் காலகட்டத்தின்போது செஞ்சேனையிலான கம்யூ னிஸ்ட் கட்சி ஸ்தாபனம் பல்வேறு தவறான கருத்துக்களுக்கு எதிராகப் போரா டுகையில் பெருமளவு அறிவுபெற்றும் மிகுந்த அனுபவத்தைத் திரட்டியும் கொண்டது. தோழர் மாஓ சேதுங் அவர்களால் எழுதப்பட்ட இத்தீர்மானம் இந்த அனுபவத்தைத் தொகுத்துரைத்தது. இது செஞ்சேனையைத் தன்னை

தான புரட்சிப் போராட்டத்தில் அதற்கு விதிக்கப்பட்டுள்ள கடமைகளுக்குத் தோள் கொடுக்க முடியாது என்பது திண்ணம். இந்தக் கட்சி ஸ்தாபனத்தில் உள்ள பல்வேறு பிசகான கருத்துக்களின் ஊற்று மூலம், இயல்பாகவே அதன் ஸ்தாபன அடிப்படை பெரும்பாலும் விவசாயிகளாலும் குட்டி பூர்ஷுவா வர்க்கத்தில் தோன்றிய இதர நபர்களாலும் உருவாக்கப்பட்டதால் ஏற்பட்டதாகும். ஆனால், கட்சியின் தலைமை உறுப்புகள் இந்தத் தவறான கருத்துக்களுக்கு எதிராக ஒருமுகப்பட்ட, உறுதியான போராட்டத்தைப் போதியளவு நடத்தாததும், கட்சியின் சரியான மார்க்கத்தை உறுப்பினர்களுக்குப் போதியளவு போதிக்காததும் அவை நிலவி வளர்வதற்குரிய வேறு முக்கிய காரணங்கள் ஆகின்றன. மத்திய கமிட்டியின் செப்டம்பர் கடிதத்தின் எழுச்சிக்கு இணங்க, இந்தக் காங்கிரஸ் நான்காவது சேனையின் கட்சி ஸ்தாபனத்திற் பாட்டாளி வர்க்கத்துக்குப் புறம்பான பல்வேறு கருத்துக்களின் வெளிப்பாடுகளையும், அவற்றின் ஊற்று மூலங்களையும், அவற்றைத் திருத்

---

முற்றாக ஒரு மார்க்ஸிஸ-லெனினிஸ அடிப்படையில் கட்டியெழுப்பிக்கொள்ளவும், பழைய ரகமான சேனைகளின் செல்வாக்குகள் எல்லாவற்றையும் ஒழிக்கவும் கூடியதாக்கியது. இது செஞ்சேனையின் நான்காவது சேனையில் மட்டுமல்லாமல் செஞ்சேனையின் மற்றெல்லாக் கூறுகளிலும் அடுத்தடுத்து அமுல்படுத்தப்பட்டது; இந்த விதமாகச் சீனச் செஞ்சேனை முழுவதும் சகல வகைகளிலும் உண்மையான ஒரு மக்கள் சேனையாக ஆயிற்று. கடந்த இருபதுக்கு மேலான ஆண்டுகளில் சீன மக்களின் ஆயுதப்படைகள் தம் கட்சி வேலையிலும் அரசியல் வேலையிலும் பிரமாண்டமான அபிவிருத்திகளையும் புத்தியற்றல்களையும் செய்து, இப்போது மிக வேறான தோற்றத்தை அளிக்கின்றன, ஆனால் அடிப்படை மார்க்கம் இந்தத் தீர்மானத்தில் வகுக்கப்பட்ட அதே மார்க்கமாகவே இருந்து வருகின்றது.

தும் வழி முறைகளையும் சுட்டிக்காட்டி, அவற்றைப் பூரணமாக ஒழித்துக்கட்டுமாறு எல்லாத் தோழர்களையும் அறைகூவி அழைக்கின்றது.

## சுத்த ராணுவக் கண்ணேட்டம் பற்றி

செஞ்சேனையில் ஒரு பகுதித் தோழர்கள் மத்தியிற் சுத்த ராணுவக் கண்ணேட்டம் மிகவும் வளர்ந்திருக்கின்றது. அது பின்வருமாறு வெளிப்படுகின்றது:-

1. இந்தத் தோழர்கள் ராணுவ விவகாரங்களையும் அரசியலையும் ஒன்றுக்கு ஒன்று விரோதமானவையாகக் கருதி, ராணுவ விவகாரம் அரசியற் கடமைகளை நிறைவேற்றும் சாதனங்களில் ஒன்று மட்டுமே என்பதை அங்கீகரிக்க மறுக்கின்றனர். ''ராணுவரீதியிற் சிறப்பாக இருந்தால், இயற்கையாகவே அரசியல்ரீதியிலும் சிறப்பாக இருக்க முடியும்; ராணுவரீதியிற் சிறப்பாக இல்லாவிட்டால், அரசியல்ரீதியிலும் சிறப்பாக இருக்க முடியாது'' என்று கூடச் சிலர் சொல்கின்றனர். இது ஒரு படி மேலும் சென்று, அரசியலுக்கு ராணுவ விவகாரங்கள் தலைமை தாங்க வேண்டும் என்று கருதுவதாகும்.

2. செஞ்சேனையின் கடமை, வெண்சேனையின் கடமையைப் போல், போரிடுவது மட்டுமே என்று அவர்கள் எண்ணுகின்றனர். சீனச் செஞ்சேனை என்பது புரட்சியின் அரசியற் கடமைகளை நிறைவேற்றும் ஒரு ஆயுதந் தாங்கிய குழு என்பதை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை. விசேஷமாக இப்பொழுது, செஞ்சேனை போரிடுவதுடன் மட்டும் கண்டிப்பாக நின்றுவிடக்

கூடாது. போரிட்டு எதிரியின் ராணுவ பலத்தை அழிப்பது தவிர, பொதுமக்கள் மத்தியிற் பிரசாரம் செய்வது, பொது மக்களை ஸ்தாபனரீதியாக அணிதிரட்டுவது, பொதுமக்களை ஆயுதபாணிகள் ஆக்குவது, புரட்சிகர அரசியல் அதிகார்ரத்தை ஸ்தாபிக்கவும் கம்யூனிஸ்ட் கட்சி ஸ்தாபனங்களை நிறுவவும் பொதுமக்களுக்கு உதவி செய்வது முதலிய முக்கியமான கடமைகளுக்கும் அது தோள் கொடுக்க வேண்டும். செஞ்சேனை சும்மா போரிடுவதற்காக மட்டும் போரிடுவதில்லை. மாருக, பொதுமக்கள் மத்தியிற் பிரசாரம் செய்வது, பொதுமக்களை ஸ்தாபனரீதியாக அணிதிரட்டுவது, பொதுமக்களை ஆயுதபாணிகள் ஆக்குவது, புரட்சிகர அரசியல் அதிகாரத்தை ஸ்தாபிக்கப் பொதுமக்களுக்கு உதவி செய்வது ஆகியவற்றுக்காகப் போரிடுகின்றது. பொதுமக்கள் மத்தியில் பிரசாரம் செய்வது, அவர்களை ஸ்தாபனரீதியாக அணிதிரட்டுவது, ஆயுதபாணிகள் ஆக்குவது, புரட்சிகர அரசியல் அதிகாரத்தை ஸ்தாபிப்பது ஆகிய லட்சியங்களை நிறைவேற்ருவிட்டால், அது போரிடுவதில் அர்த்தமில்லை, செஞ்சேனை இருப்பதிலும் அர்த்தம் இல்லை.

3. ஆகவே, ஸ்தாபனரீதியில், இந்தத் தோழர்கள் செஞ்சேனையின் அரசியல் வேலை செய்யும் இலாகாக்களை ராணுவ வேலை செய்யும் இலாகாக்களுக்கு உட்படுத்தி, ''ராணுவ ஆணைப்பகுதி வெளிவிவகாரங்களைக் கையாளட்டும்'' என்ற சுலோகத்தை முன்வைக்கின்ருர்கள். இந்தக் கருத்தை வளரவிட்டால், பொதுமக்களிடமிருந்து பிரிந்து, ராணுவம் அரசாங்கத்தைக் கட்டுப்படுத்தி, பாட்டாளி வர்க்கத் தலைமையிலிருந்து விலகிச்செல்லும் அபாயம் ஏற்படலாம். இது

கோமிந்தாங் ராணுவம் யுத்தப்பிரபுவாதப் பாதையை மேற் கொள்வது போன்றது.

4. அதே வேளையில், பிரசார வேலையில் அவர்கள் பிரசாரக் குழுக்களின் முக்கியத்துவத்தை அலட்சியம் செய்கின்றனர். வெகுஜன ஸ்தாபனம் சம்பந்தமான பிரச்சினையில், ராணுவத் திற் படைவீரர் கமிட்டிகளை நிறுவுவதையும் ஸ்தல தொழி லாளர், விவசாயிகளை ஸ்தாபனப்படுத்துவதையும் புறக்கணிக் கின்ருர்கள். இதன் விளைவாக, பிரசார வேலை, ஸ்தாபன வேலை இரண்டும் கைவிடப்படும் நிலை ஏற்படுகின்றது.

5. அவர்கள் சமர் ஒன்றில் வெற்றி பெறும்போது தற்பெரு மையும், சமர் ஒன்றில் தோற்கும்போது மனச்சோர்வும் அடைகின்றனர்.

6. சுய இலாகாவாதம் — அவர்கள் நான்காவது சேனை யைப்பற்றி மாத்திரம் சிந்திக்கின்ருர்கள்; ஆனுல், ஸ்தல பொது மக்களை ஆயுதபாணிகளாக்குவது செஞ்சேனையின் முக்கியமான கடமைகளில் ஒன்று என்பதை உணர்கிருர்களில்லை. இது பெரிய வடிவிற் தோன்றும் சிறுகும்பல்வாதமாகும்.

7. நான்காவது சேனையிற் தமது குறுகிய சுற்ருடலுக்கு அப்பாற் பார்க்க முடியாத ஒரு சில தோழர்கள், தம்மை விட வேறு புரட்சி சக்திகள் இல்லை என எண்ணுகின்றனர். எனவே, பலத்தைச் சேமித்துப் போராட்டத்தைத் தவிர்க்கும் கருத்து மிகப் பாரதூரமாக நிலவுகின்றது. இது சந்தர்ப்ப வாதத்தின் மிச்சசொச்சமாகும்.

8. சில தோழர்கள், அக, புற நிலைமைகளைப் புறக்கணித்து, புரட்சியில் அவசரத் தன்மை என்ற நோயாற் பீடிக்கப்படு கின்றனர்; அவர்கள் பொதுமக்கள் மத்தியிற் சிறிய, நுணுக் கமான வேலைகளைச் செய்யப் பிரயாசை எடுக்க மாட்டார்கள்,

மாருக, பெரிய விஷயங்களை மாத்திரம் செய்ய விரும்புகின்றனர்; அவர்கள் பிரமைகளை மிகுதியும் கொண்டிருக்கின்றனர். இது கண்மூடித்தனவாதத்தின் மிச்சசொச்ச[1]மாகும்.

சுத்த ராணுவக் கண்ணேட்டத்தின் ஊற்று மூலங்கள் பின்வருமாறு:-

1. தாழ்ந்த அரசியற் தரம். இதனுல், ராணுவத்தில் அரசியற் தலைமையின் பாத்திரத்தையும் செஞ்சேனையும் வெண்சேனையும் அடிப்படையில் வேறுபட்டவை என்பதையும் புரிந்து கொள்வதில்லை.

2. கூலிப்படைகளின் மனப்பான்மை. கடந்த காலச் சமர்களிற் கைது செய்யப்பட்ட பல கைதிகள் செஞ்சேனையிற் சேர்ந்திருக்கின்றனர். இந்த நபர்கள் பாரதூரமான அளவு கூலிப்படைகளின் மனப்பான்மையைத் தம்முடன் கொண்டு வந்துள்ளனர். இவ்வாறு கீழ்மட்ட அணிகளிற் சுத்த ராணுவக் கண்ணேட்டத்துக்கான ஒரு அடிப்படை தோன்றுகின்றது.

3. மேற்சொன்ன இரண்டு காரணங்களிலுமிருந்து மூன்ருவது காரணம் தோன்றுகின்றது, அதாவது ராணுவ பலத்தில் மிதமிஞ்சிய நம்பிக்கையும், பொது மக்களின் பலத்தில் நம்பிக்கையின்மையும் தோன்றுகின்றன.

4. கட்சி ராணுவ வேலையை ஊக்கமாகக் கவனித்து, விவாதிக்கத் தவறியதும் ஒரு பகுதித் தோழர்கள் மத்தியிற் சுத்த ராணுவக் கண்ணேட்டம் தோன்றியதற்கு ஒரு காரணமாகும்.

இவற்றைத் திருத்தும் வழிமுறைகள் பின்வருமாறு:-

1. போதனை மூலம் கட்சியில் அரசியற் தரத்தை உயர்த்தி, சுத்த ராணுவக் கண்ணேட்டம் தோன்றும் தத்துவ வேர்களை இல்லாமற் செய்து செஞ்சேனைக்கும் வெண்சேனைக்கும் இடையிலுள்ள அடிப்படை வேறுபாட்டிற் தெளிவாக இருப்பது.

அதே வேளையிற் சந்தர்ப்பவாதம், கண்மூடித்தனவாதம் ஆகியவற்றின் மிச்சசொச்சங்களை ஒழித்துக்கட்டி, நான்காவது சேனையின் சுய இலாகாவாதத்தை உடைத்தெறிவது.

2. அதிகாரிகளினதும், படையினர்களினதும் அரசியற் பயிற்சியை, சிறப்பாக மாஜிக்கைதிகளின் போதனையைத் தீவிரமாக்குவது. அதே வேளையில், செஞ்சேனையிற் சேர்வதற்குப் போராட்டத்தில் அனுபவம் வாய்ந்த தொழிலாளர் விவசாயிகளை ஸ்தல அரசாங்கங்கள் இயன்ற அளவு தேர்ந்தெடுப்பது, இவ்வாறு, சுத்த ராணுவக் கண்ணோட்டத்தின் ஊற்று மூலங்களை ஸ்தாபனரீதியிற் பலவீனப்படுத்துவது அல்லது ஒழித்தே விடுவது.

3. செஞ்சேனையின் கட்சி ஸ்தாபனங்கள்மீதும், அதிகாரிகள், போராளிகள்மீதும் செல்வாக்கு வகிப்பதற்காக, செஞ்சேனைக் கட்சி ஸ்தாபனங்களை விமர்சனம் செய்யுமாறு ஸ்தலக் கட்சி ஸ்தாபனங்களையும், செஞ்சேனையை விமர்சனம் செய்யுமாறு வெகுஜன அரசியல் அதிகார நிறுவனங்களையும் தட்டியெழுப்புவது.

4. கட்சி, ராணுவ வேலையை ஊக்கமாகக் கவனித்து, விவாதிக்க வேண்டும். பொதுமக்கள் அமுல்நடத்துவதற்கு முன், எல்லா வேலைகளும் கட்சியால் விவாதித்துத் தீர்மானிக்கப்பட வேண்டும்.

5. செஞ்சேனைக்கான விதிகளும் ஒழுங்குகளும் வகுக்கப்பட வேண்டும். அவை அதன் கடமைகள், அதன் ராணுவ, அரசியல் உறுப்புகளுக்கிடையிலுள்ள உறவு, செஞ்சேனைக்கும் பொதுமக்களுக்கும் இடையிலுள்ள உறவு, படைவீரர் கமிட்டிகளின் அதிகாரங்கள், பணிகள், ராணுவ, அரசியல் ஸ்தாபனங்களுடன் படைவீரர் கமிட்டிகள் கொண்டுள்ள உறவு ஆகியவை பற்றித் தெளிவாக வரையறுத்துக் கூற வேண்டும்.

## அதீத ஜனநாயகம் பற்றி

செஞ்சேனையின் நான்காவது சேனை மத்திய கமிட்டியின் உத்தரவுகளை ஏற்றுக்கொண்டது முதல், அதீத ஜனநாயகத்தின் வெளிப்பாடுகள் பெரிதும் குறைந்துள்ளன. உதாரணமாக, கட்சித் தீர்மானங்கள் ஓரளவு நன்முக அமுல்நடத்தப்படுகின் றன; செஞ்சேனையில் ''ஜனநாயக மத்தியத்துவ அதிகாரம் கீழிருந்து மேல் வரை'' அமுல்நடத்தப்பட வேண்டும் அல்லது ''எல்லாப் பிரச்சினைகளையும் கீழ் மட்டங்கள் முதலில் விவா தித்து பின்னர் மேல் மட்டங்கள் தீர்மானம் எடுக்க அனுமதிக்க வேண்டும்'' என்பது போன்ற தவமுன கோரிக்கைகளை ஒரு வரும் கொண்டுவருவதில்லை. இருந்தும், இக்குறைதல் உண் மையிற் தற்காலிகமானதும் மேலோட்டமானதும் மாத்திரமே; இதனுல் அதீத ஜனநாயகக் கருத்துக்கள் ஏற்கெனவே ஒழிக் கப்பட்டுவிட்டன என்று அர்த்தமாகி விடாது. வேறு வார்த் தைகளிற் சொன்னுல், தோழர் பலரின் மனங்களில் அதீத ஜனநாயகம் இன்னும் ஆழமாக வேரூன்றியுள்ளது. கட்சித் தீர்மானங்களை அமுல்நடத்தத் தயங்கும் பல்வேறு வெளிப்பா டுகளும் இதற்குச் சான்றுகளாகும்.

இதைத் திருத்தும் வழிமுறைகள் பின்வருமாறு:-

1. தத்துவரீதியில் அதீத ஜனநாயகத்தின் வேர்களை அழிப் பது. முதலாவதாக, அதீத ஜனநாயகம் கட்சி ஸ்தாபனத்தைச் சேதப்படுத்தி அல்லது அதைப் பூரணமாகக் கூட உடைத்து, கட்சியின் போராற்றலைப் பலவீனப்படுத்தி அல்லது அதைப் பூர ணமாகக் கூட சிதைத்து, கட்சி அதன் போராட்டக் கடமை களை நிறைவேற்ற முடியாமற் செய்து, இவ்வாறு புரட்சியைத்

தோல்வியடையச் செய்கின்றது என்பதிற்தான் அதீத ஜன நாயகத்தின் அபாயம் அடங்கியுள்ளது என்பது சுட்டிக்காட் டப்படவேண்டும். அடுத்து, கட்டுப்பாட்டை விரும்பாத குட்டி பூர்ஷுவாத் தனிநபர்ப் போக்கிலிருந்து அதீத ஜனநாயகம் தோன்றுகின்றது என்பது சுட்டிக்காட்டப்பட வேண்டும். இந் தக் கட்டுப்பாட்டை விரும்பாத இயல்பு கட்சிக்குட் கொண்டு வரப்பட்டதும், அது அரசியல்ரீதியிலும் ஸ்தாபனரீதியிலும் அதீத ஜனநாயகக் கருத்துக்களாக வளர்கின்றது. இந்தக் கருத்துக்கள் பாட்டாளி வர்க்கத்தின் போராட்டக் கடமை களுக்குச் சிறிதளவேனும் பொருந்தியவையல்ல.

2. ஸ்தாபனரீதியில், மத்தியத்துவத்தின் வழிகாட்டலில் ஜன நாயக வாழ்வு அமுல்நடத்தப்பட வேண்டும். அதற்கான வழிகள் பின்வருமாறு:-

(1) கட்சியின் தலைமை உறுப்புகள் தம்மைத் தலைமைக் கேந்திரங்களாக ஸ்தாபிப்பதற்காகச் சரியான வழிகாட்டும் மார்க்கத்தை அளித்து, பிரச்சினைகள் தோன்றும்போது, அவற் றைத் தீர்க்கும் வழிகளைக் காண வேண்டும்.

(2) சரியான தலைமை அளிப்பதற்கான புறநிலை அடிப்ப டையைக் கொண்டிருப்பதற்கு, மேல் மட்ட ஸ்தாபனங்கள் கீழ் மட்ட ஸ்தாபனங்களின் நிலைமையுடனும் பொதுமக்களின் வாழ்வுடனும் பரிச்சயமாக இருக்க வேண்டும்.

(3) பல்வேறு மட்டங்களிலுள்ள கட்சி ஸ்தாபனங்களும் பிரச்சினைகளைத் தீர்க்கும் போது முன்னேற்பாடற்ற முடிவுக்கு வரக் கூடாது. ஒரு முடிவு எடுக்கப்பட்டதும் அது உறுதியாக அமுல்நடத்தப்பட வேண்டும்.

(4) கட்சியின் மேல் மட்ட ஸ்தாபனங்களின் ஏதும் முக்கியத் துவமுடைய முடிவுகள் எல்லாம் கீழ் மட்ட ஸ்தாபனங்களுக்

கும் பரந்துபட்ட கட்சி உறுப்பினர்களுக்கும் உடனடியாக அறிவிக்கப்பட வேண்டும். அதற்கான வழிமுறை என்னவென்ருல், உற்சாகிகளின் கூட்டங்களை, அல்லது (சந்தர்ப்பங்கள் அனுமதிக்கும்போது) கட்சிக் கிளைகளின் பொது உறுப்பினர் கூட்டங்களை அல்லது படைக்கொலங்க2ளின் கட்சி உறுப்பினர் கூட்டங்களைக் கூட நடத்தி, அத்தகைய கூட்டங்களில் அறிக்கைகள் சமர்ப்பிக்குமாறு ஆட்களை நியமிப்பது.

(5) கட்சியின் கீழ் மட்ட ஸ்தாபனங்களும் பொது உறுப்பினர்களும் மேல் மட்ட ஸ்தாபனங்களின் உத்தரவுகளின் அர்த்தத்தைப் பூரணமாகப் புரிந்து, அவற்றை அமுல்நடத்தும் முறைகளைத் தீர்மானிப்பதற்காக, அவற்றை விபரமாக விவாதிக்க வேண்டும்.

## ஸ்தாபனக் கோட்பாட்டுக்குப் புறம்பான கண்ணேட்டம் பற்றி

நான்காவது சேனையின் கட்சி ஸ்தாபனத்தில் ஸ்தாபனக் கோட்பாட்டுக்குப் புறம்பான கண்ணேட்டம் பின்வருமாறு வெளிப்படுகின்றது:-

அ. சிறுபான்மை பெரும்பான்மைக்குக் கீழ்ப்படிய மறுப்பது. உதாரணமாகச் சிறுபான்மை அதன் பிரேரணை நிராகரிக்கப்பட்டபோது, கட்சித் தீர்மானங்களை விசுவாசமாக அமுல் நடத்துவதில்லை.

இதைத் திருத்தும் வழிமுறைகள் பின்வருமாறு:-

1. கூட்டங்களிற் பங்குபற்றுவோர் அனைவரும் தமது அபிப்பி

ராயங்களை இயன்ற அளவு வெளியிடுவதற்கு ஊக்கம் அளிக்கப் பட வேண்டும். எந்த விவாதத்திற்குரிய பிரச்சினையிலும் சமரசமோ மழுப்பலோ இல்லாமற் சரியையும் பிழையையும் தெளிவுபடுத்த வேண்டும். தெட்டத்தெளிவான முடிவுக்கு வருவதற்காக, ஒரு கூட்டத்திற் தீர்க்கப்படாத விஷயம் (அது வேலையைத் தடைசெய்யாவிட்டால்), இன்னொரு கூட்டத்தில் விவாதிக்கப்படலாம்.

2. கட்சிக் கட்டுப்பாட்டின் ஒரு அம்சம் சிறுபான்மை பெரும் பான்மைக்குக் கீழ்ப்படிவதாகும். சிறுபான்மையினரின் அபிப் பிராயம் நிராகரிக்கப்பட்டால், அவர்கள் பெரும்பான்மையி னரால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானத்தை ஆதரிக்க வேண்டும். தேவையானல், அவர்கள் அடுத்த கூட்டத்தில் அவ்விஷயத் தைப் புனராலோசனைக்குக் கொண்டு வரலாம், ஆனல், இதை விட்டு எவ்விதத்திலும் தீர்மானத்துக்கு எதிராகச் செயற்படக் கூடாது.

ஆ. ஸ்தாபனக் கோட்பாட்டுக்குப் புறம்பான விமர்சனம்:-

1. உட்கட்சி விமர்சனம் என்பது கட்சி ஸ்தாபனத்தைப் பலப்படுத்தி, அதன் போராட்ட ஆற்றலைப் பெருக்கும் ஒரு ஆயுதம். இருந்தும், செஞ்சேனையின் கட்சி ஸ்தாபனத்தில் விமர்சனம் சில வேளைகளில் இத்தகையதாக இருப்பதில்லை, அது தனிநபர்த் தாக்குதலாக மாறிவிடுகின்றது. இதன் விளை வாகத் தனிநபர்களுக்கு மாத்திரமல்ல, கட்சி ஸ்தாபனத்துக் கும் கேடு விளைவிக்கப்படுகின்றது. இது குட்டி பூர்ஷுவா வர்க் கத் தனிநபர்வாதத்தின் ஒரு வெளிப்பாடாகும். இதைத் திருத்தும் முறை யாதெனில், விமர்சனத்தின் நோக்கம் வர்க் கப் போராட்டத்தில் வெற்றி பெறுவதற்காகக் கட்சியின் போ ராட்ட ஆற்றலைப் பெருக்குவதே என்றும் அதைத் தனிநபர்த்

தாக்குதலுக்கான ஒரு கருவியாக உபயோகிக்கக் கூடாது என்றும் கட்சி உறுப்பினர்கள் புரிந்து கொள்ளச் செய்வதாகும்.

2. கட்சி உறுப்பினர் பலர் தமது விமர்சனங்களைக் கட்சிக்கு உள்ளே அல்ல, வெளியிற் செய்கின்றூர்கள். காரணம், பொதுக் கட்சி உறுப்பினர்கள் கட்சி ஸ்தாபனத்தின் (அதன் கூட்டங்கள் முதலியவற்றின்) முக்கியத்துவத்தை இன்னும் புரிந்து கொள்ளவில்லை; ஸ்தாபனத்துக்குள்ளே செய்யும் விமர்சனத்துக்கும் ஸ்தாபனத்துக்கு வெளியே செய்யும் விமர்சனத்துக்குமிடையில் வித்தியாசம் எதுவும் தெரிவதில்லை. இதைத் திருத்தும் வழிமுறை யாதெனில், கட்சி ஸ்தாபனத்தின் முக்கியத்துவத்தையும், கட்சிக் கமிட்டிகள் அல்லது தோழர்கள் சம்பந்தமான விமர்சனங்களைக் கட்சிக் கூட்டங்களிற் செய்ய வேண்டும் என்பதையும் புரிந்து கொள்ளக் கட்சி உறுப்பினர்களுக்குப் போதனை அளிப்பதாகும்.

## பூரண சமத்துவவாதம் பற்றி

பூரண சமத்துவவாதம் ஒரு காலத்திற் செஞ்சேனையில் மிகப் பாரதூரமான அளவுக்கு நிலவியது. இங்கு சில உதாரணங்களைத் தருகின்றோம். காயப்பட்ட படைவீரர்களுக்கு வழங்கும் படி பற்றிய விஷயத்தில், லேசாகக் காயப்பட்டவர்களுக்கும் பாரதூரமாகக் காயப்பட்டவர்களுக்கும் இடையில் வேறுபாடு செய்வதற்கு எதிர்ப்புக்கள் காணப்பட்டதோடு, எல்லாருக்கும் சமமான படி என்ற கோரிக்கையும் முன்வைக்கப்பட்டது. அதிகாரிகள் குதிரைகளிற் சென்றபோது, அது அவர்

கள் தமது வேலைகளைச் செய்வதற்கு அவசியமான ஒன்று எனக் கருதப்படவில்லை; மாருக, அது அசமத்துவத்தின் நியதி என்று கருதப்பட்டது. பொருட்களின் பங்கீட்டிற் பூரண சமத்துவம் கோரப்பட்டது. விசேஷ நிலைமைகளிலுள்ள பகுதிகளுக்கு ஓரளவு கூடுதலான பங்குகள் தருவது எதிர்க்கப்பட்டது. அரிசி சுமந்து செல்வதில், வயதையோ அல்லது தேக நிலைமையையோ பார்க்காமல், எல்லாரும் சமமான பாரத்தைச் சுமந்து செல்ல வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது. வாழிடங்கள் ஒதுக்குவதில், சமத்துவம் கோரப்பட்டது. கொஞ்சம் பெரிய அறைகளிற் தங்குவதிஞல் ஆணைப்பகுதிகள் தூஷிக்கப்பட்டன. ராணுவம்சாராக் கடமைகளை நியமிப்பதிற் சமத்துவம் கோரப்பட்டது. ஒருவர் செய்வதிலும் பார்க்க மற்றவர் சிறிது கூடுதலான வேலை செய்வதில் விருப்பமின்மை காணப்பட்டது. இரண்டு காயப்பட்டவர்கள் இருந்த வேளையில், ஒரு காவுகட்டில் மாத்திரம் இருந்தபோது, ஒருவர் மற்றவருக்கு விட்டுக்கொடுக்க மறுத்ததால் ஒருவரையும் தூக்கிச் செல்ல முடியாத நிலை கூட ஏற்பட்டது. இவை அனைத்தும் பூரண சமத்துவவாதம் செஞ்சேனையின் அதிகாரிகள், படையினர் மத்தியில் இன்னும் மிகப் பாரதூரமாயுள்ளது என்பதை நிரூபிக்கின்றன.

அரசியல் விவகாரங்களில் அதீத ஜனநாயகம் போல, பூரண சமத்துவவாதம் என்பது கைத்தொழில், சிறு விவசாயப் பொருளாதாரத்தின் உற்பத்தியாகும். இவற்றுக்குள்ள ஒரே ஒரு வேற்றுமை என்னவென்ருல், ஒன்று அரசியல் வாழ்வில், மற்றது பொருளாயத வாழ்வில் வெளிப்படுவதாகும்.

இதைத் திருத்தும் வழிமுறை பின்வருமாறு:- முதலாளித்துவத்தை ஒழிப்பதற்கு முன், பூரண சமத்துவவாதம் என்பது

விவசாயிகள், சிறு உடைமையாளர்களின் வெறும் பிரமையே என்றும், சோஷலிஸ் காலத்திற் கூடப் பூரண சமத்துவம் என்பது இருக்க முடியாது, ஏனென்ருல் அப்பொழுது ''ஆற்றலுக்கு ஏற்ற உழைப்பு, உழைப்புக்கு ஏற்ற ஊதியம்'' என்ற கோட்பாட்டின் அடிப்படையிலும், வேலேயின் தேவையைப் பூர்த்தி செய்யும் அடிப்படையிலும் பொருளாயத விஷயங்கள் பங்கீடு செய்யப்படும் என்றும் நாம் சுட்டிக்காட்ட வேண்டும். செஞ்சேனையிற் பொருளாயத விஷயங்களின் பங்கீடு, அதிகாரிகளுக்கும் படையினருக்குமிடையில் சம சம்பளம் என்பது போல, ஏறக்குறையச் சமமாக இருக்க வேண்டும். ஏனென்ருல் இது இன்றைய போராட்ட நிலைமைகளாற் கோரப்படுகின்றது. ஆனுல் நியாயத்துக்குப் பொருந்தாத பூரண சமத்துவவாதம் என்பது எதிர்க்கப்பட வேண்டும். காரணம் அது போராட்டத்துக்குத் தேவையானதல்ல; மாருக அது போராட்டத்துக்கு ஊறு விளேவிக்கின்றது.

## மானசீகவாதம் பற்றி

சில கட்சி உறுப்பினர் மத்தியில் மானசீகவாதம் பாரதூரமான அளவுக்கு இருந்து, அரசியல் நிலைமையை ஆராய்வதற்கும் வேலேக்கு வழிகாட்டுவதற்கும் பெரும் தீங்கு விளேக்கின்றது. காரணம், அரசியல் நிலைமை பற்றிய மானசீக ஆராய்வும் வேலே பற்றிய மானசீக வழிகாட்டலும் தவிர்க்க முடியாதபடி சந்தர்ப்பவாதத்தில் அல்லது கண்மூடித்தனவாதத்தில் முடிவடையும். மானசீக விமர்சனம், ஆதாரமற்ற வெற்றுப்

பேச்சு அல்லது பரஸ்பர சந்தேகம் ஆகியவற்றைப் பொறுத் தவரையில், இத்தகைய நடைமுறைகள் கட்சியில் இருப்பது அடிக்கடி கட்சியிற் கோட்பாடற்ற தகராறுகளைத் தோற்று வித்து, கட்சி ஸ்தாபனத்துக்கும் குழிபறிக்கின்றது.

உட்கட்சி விமர்சனம் சம்பந்தமாகக் குறிப்பிட வேண்டிய இன்னெரு அம்சம் உண்டு. அதாவது, தோழர்கள் சிலர் விமர்சனம் செய்யும்போது பிரதான பிரச்சினைகளைக் கவனிக் காமற் சிறிய விஷயங்களில் மாத்திரம் தமது கவனத்தைச் செலுத்துகின்றனர். விமர்சனத்தின் பிரதான கடமை அர சியல், ஸ்தாபனரீதியான பிழைகளைச் சுட்டிக் காட்டுவதே என்பதை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை. தனிநபர் குறை பாடுகளைப் பொறுத்தவரையில், அவை அரசியல், ஸ்தாபன ரீதியான பிழைகளுடன் தொடர்புடையவையாய் இருந்தால் ஒழிய, கூடுதலாக விமர்சனம் செய்வது அனுவசியமாகும். அப் படிச் செய்தாற் சம்பந்தப்பட்ட தோழர்கள் யாது செய்வது என்று அறியாமற் திக்குமுக்காடுவர். இன்னும் இத்தகைய விமர்சனம் ஒருகால் வளர்ந்தால், கட்சிக்குட் சிறிய தவறுக ளிற் பிரத்தியேகக் கவனம் செலுத்தப்படும்; ஒவ்வொருவரும் அஞ்சி, மிதமிஞ்சிய எச்சரிக்கை கொள்பவர்கள் ஆகி, கட்சி யின் அரசியற் கடமைகளை மறந்து விடுவர். இது மிகப் பெரிய அபாயமாகும்.

இதைத் திருத்தும் வழிமுறை:- பிரதானமாக, கட்சி உறுப் பினர்களுக்குப் போதனை அளித்து, அவர்களுடைய சிந்தனை யிலும் கட்சி வாழ்விலும் ஒரு அரசியல், விஞ்ஞான உணர்வை வியாபிக்கச் செய்வதாகும். இந்த நோக்கத்துக்காக நாம் (1) அரசியல் நிலைமையை ஆராயும்போதும் வர்க்க சக்திகளை மதிப் பிடும்போதும், மானசீக ஆராய்வு, மானசீக மதிப்பீடு ஆகி

யவற்றுக்குப் பதில், மார்க்ஸிஸ-லெனினிஸ வழிமுறையைப் பிரயோகிக்கும்படி கட்சி உறுப்பினர்களுக்குப் போதிக்க வேண்டும். (2) போராட்டத்தின் தந்திரோபாயங்களையும் வேலை முறைகளையும் நிர்ணயிப்பதற்குச் சமுதாய பொருளாதாரப் பரிசீலனையிலும் ஆராய்ச்சியிலும் கட்சி உறுப்பினர்கள் தமது கவனத்தைச் செலுத்தும்படி செய்து, உண்மையான நிலைமைகளைப் பரிசீலனை செய்யாவிட்டால், அவர்கள் கற்பனுவாதமும் கண்முடித்தனவாதமுமாகிய படுகுழியில் வீழ்ந்து விடுவர் என்பதைப் புரிந்து கொள்ள நமது தோழர்களுக்கு உதவி செய்ய வேண்டும். (3) உட்கட்சி விமர்சனத்தில், மானசீகவாதம், எதேச்சாதிகாரம், விமர்சனத்தை இழிமைப்படுத்தல் ஆகியவற்றுக்கெதிராக ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். கூற்றுக்கள் எப்பொழுதும் சான்றுகளை அடிப்படையாகக் கொள்ள வேண்டும்; விமர்சனம் அரசியல் அம்சத்தை வலியுறுத்த வேண்டும்.

## தனிநபர்வாதம் பற்றி

செஞ்சேனையின் கட்சி ஸ்தாபனத்திற் பல்வேறு தனிநபர் வாதப் போக்குகள் பின்வருமாறு வெளிப்படுகின்றன:-

1. பழிவாங்கும் சுபாவம். சில தோழர்கள் கட்சிக்குட் படைவீரத் தோழர் ஒருவரால் விமர்சனம் செய்யப்பட்ட பின், கட்சிக்கு வெளியிற் பழிவாங்குவதற்கு சந்தர்ப்பத்தை எதிர் பார்க்கின்றனர். சம்பந்தப்பட்ட தோழரை அடிப்பது அல்லது தூஷிப்பது இதில் ஒரு வழியாகும். அவர்கள் கட்சிக்குள்ளும்

பழிவாங்க வழி தேடுகின்றனர். "நீ இந்தக் கூட்டத்தில் என்னை விமர்சனம் செய்தாய், எனவே இதைத் திருப்பித் தர அடுத்த கூட்டத்தில் ஒரு வழி பார்த்துக் கொள்வேன்." இத்தகைய பழிவாங்கும் சுபாவம் முற்ருகத் தனிநபர் கண்ணேட்டத்திலிருந்து, வர்க்கத்தின் நலன்களையும் முழுக் கட்சியின் நலன்களையும் புறக்கணிப்பதனுல் ஏற்படுகின்றது. அதன் இலக்கு எதிரி வர்க்கம் அல்ல, நமது சொந்த அணிகளிலுள்ள தனிநபர்களே ஆவர். இது ஸ்தாபனத்தையும் அதன் போராற்றலையும் பலவீனப்படுத்தும் நச்சுத் திரவம் ஆகும்.

2. சிறு கும்பல்வாதம். சில தோழர்கள் தமது சிறு கும்பலின் நலன்களை மாத்திரம் கவனித்து, பொது நலன்களைப் புறக்கணித்து விடுகின்றனர். மேலோட்டத்தில் அது தனிநபர் நலன்களுக்கானது எனத் தோன்ருவிட்டாலும், யதார்த்தத்தில் அது மிகக் குறுகிய தனிநபர்வாதத்தைப் பிரதிபலிக்கின்றது. இதற்குப் பலமான அரிக்கின்ற, விரிமைய விளைவு உண்டு. இந்தச் சிறு கும்பல்வாதம் செஞ்சேனையில் வழக்கமாக நிறைந்திருந்தது. விமர்சனத்தின் மூலம் இப்பொழுது ஓரளவு திருத்தம் ஏற்பட்டபோதிலும், அதன் மிச்சசொச்சங்கள் இன்னும் நிலவுகின்றன. இதைச் சமாளிப்பதற்கு மேலும் முயற்சி தேவைப்படுகின்றது.

3. கூலி மனப்பான்மை. தாம் அங்கம் வகிக்கும் கட்சியும் செஞ்சேனையும் புரட்சியின் கடமைகளை நிறைவேற்றும் கருவிகள் என்பதைச் சில தோழர்கள் புரிந்து கொள்ளவில்லை. தாங்கள் தான் புரட்சியைச் செய்பவர்கள் என்பதை அவர்கள் உணரவில்லை. தமது பொறுப்பு புரட்சிக்கு அல்ல, தனிநபர்களான தமது மேலதிகாரிகளுக்கு மட்டுமே என்று அவர்கள் எண்ணுகின்றனர். இத்தகைய செயலற்ற, புரட்சியின் கூலி

என்ற மனப்பான்மை கூடத் தனிநபர்வாதத்தின் ஒரு வெளிப்பாடு ஆகும். புரட்சிக்காக நிபந்தனையின்றி உழைக்கும் உற்சாகிகள் மிகக் கூடுதலாக இல்லாததற்குக் காரணம் இதுவே. கூலி மனப்பான்மை ஒழிக்கப்படாவிட்டால், உற்சாகிகளின் தொகை வளரமாட்டாது; புரட்சியின் கடினமான சுமை எப்பொழுதும் ஒருசில நபர்கள்மீது மாத்திரம் இருக்கும்; இது போராட்டத்துக்குப் பெருந் தீங்கு விளைவிக்கும்.

4. இன்ப நாட்டவாதம். செஞ்சேனையில், தனிநபர்வாதம் இன்ப நாட்டத்தில் வெளிப்படும் நபர்களும் கணிசமான அளவு இருக்கின்றனர். தமது படைப்பிரிவு பெரும் நகரங்களுக்குட் பிரவேசிக்கும் என அவர்கள் எப்பொழுதும் எதிர்பார்க்கின்றனர். அவர்கள் அங்கு வேலை செய்வதற்கு அல்ல; இன்பம் அனுபவிப்பதற்கே செல்ல விரும்புகின்றனர். அவர்கள் மிகவும் விரும்பாதது யாதெனில், வாழ்வு கஷ்டமாக இருக்கும் சிவப்புப் பிரதேசங்களில் வேலை செய்வதாகும்.

5. வேலையில் ஊக்கமின்மை. தோழர்கள் சிலர், விஷயங்கள் தமது விருப்பத்துக்குக் கொஞ்சம் எதிராகச் சென்றதும், செயலற்று, வேலை செய்வதையே நிறுத்தி விடுகின்றனர். இதன் பிரதான காரணம் போதனைக் குறைவாகும். ஆனால் இது சில வேளைகளிற் தலைமையினர் தகுதியற்ற முறையில் விவகாரங்களை நடத்துவது, வேலையை நியமிப்பது அல்லது கட்டுப்பாட்டை அமுல்நடத்துவது ஆகியவற்றுற் தோன்றும்.

6. ராணுவத்தை விட்டு நீங்கும் ஆசை. செஞ்சேனையிலிருந்து ஸ்தல வேலைக்கு மாற்றம் கோரும் நபர்களின் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. இதற்கான காரணம் பூரணமாகத் தனிநபர்களைச் சார்ந்ததல்ல. (1) செஞ்சேனையின் பொருளாயத வாழ்வுத்தரம் மிகத் தாழ்ந்தது, (2) நீடித்த

போராட்டத்தின் பின் ஏற்படும் களைப்பு, (3) தலைமையினர் தகுதியற்ற முறையில் விவகாரங்களை நடத்துவது, வேலை நியமிப்பது, அல்லது கட்டுப்பாட்டை அமுல்நடத்துவது ஆகியவற்றையும் சார்ந்ததாகும்.

இதைத் திருத்தும் வழிமுறை:- பிரதானமாகப் போதனையைப் பலப்படுத்தி, சித்தாந்த ரீதியிற் தனிநபர்வாதத்தைத் திருத்துவதாகும். அடுத்துத் தகுதியான முறையில் விவகாரங்களை நடத்தவும், வேலையை நியமிக்கவும், கட்டுப்பாட்டை அமுல் நடத்தவும் வேண்டும். அத்துடன் செஞ்சேனையின் பொருளாயத வாழ்வை விருத்திசெய்ய வழிகள் காணப்பட வேண்டும். பொருளாயத நிலைமைகளை விருத்தி செய்வதற்காக, கிடைக்கக் கூடிய ஒவ்வொரு சந்தர்ப்பமும், ஓய்வுக்கும் புனருத்தாரணத்துக்கும் உபயோகிக்கப்பட வேண்டும். தனிநபர்வாதத்தின் சமுதாய ஊற்று மூலம், குட்டி பூர்ஷுவா, பூர்ஷுவா வர்க்கச் சிந்தனைகள் கட்சிக்குட் பிரதிபலிப்பதேயாகும் என்பதை நமது போதனையின்போது நாம் விளக்க வேண்டும்.

## அலைந்துதிரியும் கிளர்ச்சிக்காரர் குழுக்களின் சித்தாந்தம் பற்றி

செஞ்சேனையில் நாடோடிப் பிரகிருதிகளின் தொகை பெரிதாய் இருப்பதாலும் சீனு முழுவதிலும் சிறப்பாகத் தெற்கு மாகாணங்களில் நாடோடிகள் பெரும் தொகையில் இருப்பதாலும், அலைந்துதிரியும் கிளர்ச்சிக்காரர் குழுக்களின் அரசியற்

சித்தாந்தம் செஞ்சேனையிற் தோன்றியுள்ளது. இந்தச் சித்தாந்தம் பின்வருமாறு வெளிப்படுகின்றது:- (1) சில நபர்கள் அரசியற் செல்வாக்கை அலைந்துதிரியும் கொரில்லா நடவடிக்கைகளால் மாத்திரம் பெருக்க விரும்புகின்றனர். மாறாக தளப்பிரதேசங்களை அமைத்து, பொதுமக்கள் அரசியல் அதிகாரத்தை ஸ்தாபிக்கும் கடினமான வேலைகளைச் செய்வதன் மூலம் அச்செல்வாக்கை அதிகரிக்க விரும்பவில்லை. (2) செஞ்சேனையை விஸ்தரிக்கும்போது, சிலர் ஸ்தலச் செங்காவலர் படைகளையும் ஸ்தலச் செஞ்சேனையையும் விஸ்தரித்து, பிரதான சக்தியாகிய செஞ்சேனையை விருத்தி செய்யும் மார்க்கத்துக்குப் பதில், ''ஆட்களைக் கூலிக்கு அமர்த்திக் குதிரைகளை விலைக்கு வாங்குவது'', ''விட்டோடியவர்களைச் சேர்த்து, கலகக்காரரை ஏற்றுக்கொள்வது'' என்ற மார்க்கத்தைப் பின்பற்றுகின்றனர். (3) சில நபர்கள் பொறுமையாகப் பொதுமக்களுடன் சேர்ந்து கடினமான போராட்டங்களை நடத்த விரும்பாமல், பெரும் நகரங்களுக்குச் சென்று ஆசைதீர உண்ணவும் குடிக்கவும் மாத்திரம் விரும்புகின்றனர். அலைந்துதிரியும் கிளர்ச்சிக்காரர் சித்தாந்தத்தின் இந்த வெளிப்பாடுகள் எல்லாம் செஞ்சேனை அதன் சரியான கடமைகளைச் செய்வதைப் பாரதூரமாகத் தடை செய்கின்றன. எனவே, இதை ஒழித்துக்கட்டுவது உண்மையிற் செஞ்சேனையின் கட்சி ஸ்தாபனத்தில் நிகழும் சித்தாந்தப் போராட்டத்தின் பிரதான இலக்காகும். வரலாற்றில் இருந்த ஹுவாங் சாஓ[3] அல்லது லீ சுவாங்[4] மாதிரி அலைந்துதிரியும் கிளர்ச்சிக்காரரின் முறைகள் இன்றைய நிலைமைகளில் அனுமதிக்கக் கூடாதவை என்பது புரிந்து கொள்ளப்படவேண்டும்.

இதைத் திருத்தும் வழிமுறைகள் பின்வருமாறு:-

1. போதனையைத் தீவிரமாக்கி, தவறான கருத்துக்களை விமர்

சனம் செய்து, அலைந்துதிரியும் கிளர்ச்சிக்காரர் சித்தாந்தத்தை இல்லாமற் செய்வது.

2. நாடோடி நோக்கை எதிர்க்க இப்போதைய செஞ்சேனையின் அடிப்படைப் பிரிவுகளிலும், சமீபத்திற் படையிற் சேர்ந்த கைதிகள் மத்தியிலும் போதனையைத் தீவிரமாக நடத்துவது.

3. செஞ்சேனையின் உறுப்பினர் அமைவை மாற்றுவதற்கு, போராட்டத்தில் அனுபவம் வாய்ந்த ஊக்கமுள்ள தொழிலாளர், விவசாயிகளைச் செஞ்சேனை அணிகளிற் சேர்ப்பது.

4. போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பரந்துபட்ட தொழிலாளர், விவசாயிகள் மத்தியிலிருந்து புதிய செஞ்சேனைப் படைப் பிரிவுகளைச் சிருஷ்டிப்பது.

## கண்மூடித்தனவாதத்தின் மிச்சசொச்சங்கள் பற்றி

செஞ்சேனையின் கட்சி ஸ்தாபனம் கண்மூடித்தனவாதத்துக்கு எதிராக ஏற்கெனவே போராட்டங்கள் தொடுத்துள்ளது. ஆனுல் அவை இன்னும் போதாதனவாய் உள்ளன. எனவே, இந்தச் சித்தாந்தத்தின் மிச்சசொச்சங்கள் செஞ்சேனையில் இன்னும் இருக்கின்றன. அவற்றின் வெளிப்பாடுகள் பின்வருமாறு:- *(1)* அக, புற நிலைமைகளைப் பொருட்படுத்தாத குருட்டு நடவடிக்கை. *(2)* நகரங்களுக்கான கொள்கைகளைப் போதிய அளவிலும் உறுதியாகவும் அமுல்நடத்தாமை. *(3)* தளர்ந்த ராணுவக் கட்டுப்பாடு, சிறப்பாகத் தோல்வியடைந்த சமயங்களிற் இத்தன்மையிருப்பது. *(4)* சில படைப்பிரிவுகளின்

வீடுகொழுத்தும் செய்கைகள். (5) படையை விட்டு நீங்கு வோரைச் சுடுவது, உடற்தண்டனை விதிப்பது போன்ற நடை முறைகள், இவை இரண்டும் கண்மூடித்தனவாதத்தின் தன்மை உடையவை. கண்மூடித்தனவாதத்தின் சமுதாய ஊற்று மூலம் உதிரிப் பாட்டாளி வர்க்க சித்தாந்தம், குட்டி பூர்ஷுவா வர்க்க சித்தாந்தம் இரண்டின் சேர்க்கையாகும்.

இவற்றைத் திருத்தும் வழிமுறைகள் பின்வருமாறு:-

1. சித்தாந்தரீதியிற் கண்மூடித்தனவாதத்தை ஒழித்துக்கட்டுவது.

2. விதிகள், கொள்கைகள் மூலம் கண்மூடித்தனவாத நடவடிக்கைகளைத் திருத்துவது.

## குறிப்புகள்

1. 1927லான புரட்சியின் தோல்விக்குப் பின்னர் ஒரு குறுகிய காலகட்டத்தில் கம்யூனிஸ்ட் கட்சியில் ஓர் ''இடதுசாரி''க் கண்மூடித்தனவாதப் போக்கு எழுந்தது. சில தோழர்கள் சீனப் புரட்சியை ஒரு ''நிரந்தரப் புரட்சி'' என்றும் சீனவிலான புரட்சிகர நிலைமையை ஒரு ''நிரந்தரப் பேரெழுச்சி'' என்றும் கருதினர்; ஆகையால் ஒழுங்கு முறையான பின்வாங்கலை ஏற்பாடு செய்ய மறுத்து, ஆணையிடும் போக்கான முறைகளைத் தவறுகக் கைக்கொண்டும் ஒரு சிறு தொகைக் கட்சி அங்கத்தினர்களிலும், பொதுமக்களிலும் தங்கியிருந்தும், நாடுபூராவும் வெற்றிக்குச் சாத்தியப்பாடே இல்லாத அடுக்கான ஸ்தல எழுச்சிகளை நடத்த முயன்றனர். இத்தகைய் கண்மூடித்தனவாத நடவடிக்கைகள் 1927ன் இறுதியிற் பரவலாக இருந்தன; 1928ன் ஆரம்பம் வரையில் அவை சிறிது சிறிதாக நிறுத்தப்பட்டு இல்லாமற்செய்யப்பட்டபோதிலும் கண்மூடித்தனவாத உணர்ச்சிகள் சில கட்சி அங்கத்தினர்கள் மத்தியில் இன்னும் இருந்தே வந்தன. கண்மூடித்தனவாதம் என்பது துணிச்சல்வாதமேயாகும்.

2. அன்றைய செஞ்சேனையின் கொலம் ரெஜிமெண்டு ஒன்றுக்குச் சமமாகும். (மொழிபெயர்ப்பாளர் குறிப்பு)

3. ஹுவாங் சாஒ, தாங் ராஜவம்ச காலத்தின் இறுதியளவிலான விவசாயி எழுச்சிகளின் தலைவர். அவர் சாஒசௌளவிலான யுவன் ஜு (இப்பொழுது ஷன்துங் மாகாணத்திலுள்ள ஹொசே மாவட்டம்) என்ற இடத்தில் பிறந்தவர். கி.பி. 875ம் ஆண்டில் வாங் சியென்-சி தலைமையிலான விவசாயி எழுச்சியை ஆதரிக்க ஹுவாங் சாஒ வெகுஜனங்களை அணிதிரட்டினார். சமர் ஒன்றில் வாங் சியென்-சி கொல்லப்பட்ட பின்னர், ஹுவாங் சாஒ வாங் சியென்-சியின் எஞ்சிய அணியினரைச் சேர்த்துக் கொண்டு, தன்னை ''விண்ணைச் சாடும் தளபதி'' என அழைத்தார். ஹுவாங் சாஒ எழுச்சிப் படைகளுக்குத் தலைமை தாங்கி இரு முறை ஷன்துங்கிலிருந்து ஆரம்பித்து, அலைந்து திரியும் யுத்தம் நடத்தினார். முதலில் ஷன்துங்கை விட்டு ஹோனான், அன்ஹுய், ஹுபெய் ஆகிய மாகாணங்களுக்குச் சென்று, பின்னர் ஹுபெயிலிருந்து ஷன்துங்குக்குத் திரும்பினார். இரண்டாவதாக, ஷன்துங்கிலிருந்து தொடங்கி, ஹோனான், கியாங்சி, கிழக்கு செகியாங், ஃபூகியன், குவாங்துங், குவாங்சி, ஹுனன், ஹுபெய் ஆகிய மாகாணங்களுக்குச் சென்றார். பின்னர் ஹுபெயிலிருந்து கிழக்குத் திசையை நோக்கி, அன்ஹுய், செகியாங் முதலிய இடங்களுக்குச் சென்றார். பின்னர் ஹுவய் நதியைக் கடந்து ஹோனானுக்குள் பிரவேசித்து, லோயாங்கை வென்றெடுத்தார். பின்னர் துங்குவான் கணவாய் வழியாகப் புகுந்து சாங்ஆனை (தற்போதைய ஷென்சி மாகாணத்திலான சீஆன்—மொழிபெயர்ப்பாளர்)க் கைப்பற்றியதும், ஹுவாங் சாஒ சீ சக்கரவர்த்தியாக முடிசூட்டப்பட்டார். உள் பிளவுகளினாலும் (அவரது தளபதி சூ வென் தாங் சக்கரவர்த்தியின் படைக்குச் சரணடைந்து விட்டார்), சாதோ பழங்குடியினர் அதிபர் லீ கே-யுங் துருப்புக்களின் தாக்குதலினாலும் ஹுவாங் சாஒ சாங்ஆனைக் கைவிட்டு ஹோனானுக்குள் புகுந்து, அங்கிருந்து ஷன்துங்குக்குத் திரும்பினார். இறுதியில் தோல்வியடைந்து தற்கொலை செய்து கொண்டார். ஹுவாங் சாஒ நடத்திய யுத்தம் பத்து ஆண்டுகளாக நீடித்திருந்தது. அது சீன வரலாற்றிலான புகழ்பெற்ற விவசாயி யுத்தங்களில் ஒன்றாகும். பழைய ஆளும் வர்க்கத்தின் வரலாற்றாசிரியர்கள், அப்போது ''கடும் வரிப் பளுவால் துன்புற்ற மக்கள் அனைவரும் அவருக்குப் பின்னால் திரண்டனர்'' என எழுதியுள்ளனர். ஆனால் அவர் ஒருபோதும் ஒப்பீட்டளவில் ஸ்திரப்படுத்தப்பட்ட தளப்பிரதேசங்களை ஸ்தாபிக்காது, வெறுமனே அலைந்து திரியும் யுத்தமே நடத்தினாராகையால்,

அவரது படைகள் ''அலைந்து திரியும் கிளர்ச்சிக்காரர் கூட்டங்கள்'' என அழைக்கப்பட்டன.

4. லீ சுவாங் என்பது லீ சு-செங்கின் இன்னொரு பெயர். அவர் மிங் வம்சத்தின் ஆட்சியின் இறுதி ஆண்டுகளில் நடந்த விவசாயிக் கிளர்ச்சியின் தலைவர். அவர் ஷென்சியின் மிச்சி என்ற இடத்திற் பிறந்தார். கி. பி. 1628ம் ஆண்டு வட ஷென்சியில் விவசாயி கிளர்ச்சி ஓட்டம் ஒன்று தோன்றியது. லீ, கௌ யிங்-சியாஙாற் தலைமை தாங்கப்பட்ட கிளர்ச்சிப்படையிற் சேர்ந்து, ஹோனுன், அன்ஹுய் மாகாணங்களுக்கூடாகப் படையெடுத்து ஷென்சிக்குத் திரும்பினர். 1636ம் ஆண்டில் கௌ இறந்த பின்னர், லீ அவரது பதவியை ஏற்று சுவாங் மன்னராக வந்தார். ''சுவாங் மன்னரை ஆதரியுங்கள்! தானியவரிகள் செலுத்தாதீர்கள்!'' என்பதை அவர் மக்கள் மத்தியிற் பிரதான சுலோகமாகப் பரப்பினர். தனது படைகள் மத்தியிற் கட்டுப்பாட்டை வலியுறுத்துவதற்காக, ''எவரைக் கொன்றாலும் அது என்னுடைய தந்தையைக் கொன்றதற்குச் சமம். எவரைக் கற்பழித்தாலும் அது என்னுடைய தாயைக் கற்பழித்ததற்குச் சமம்'' என்ற சுலோகத்தைப் பரப்பினர். இவ்வாறு அவர் பரந்துபட்ட பொதுமக்களின் ஆதரவைப் பெற்றார். அவர் தலைமை தாங்கிய கிளர்ச்சி நாடு முழுவதும் பரந்தோடிய விவசாயிக் கிளர்ச்சி ஓட்டத்தின் பிரதான ஓட்டமாகியது. ஆனல் அவர் ஒப்பீட்டளவில் ஸ்திரப்படுத்தப்பட்ட தளப்பிரதேசங்களை என்றுமே ஸ்தாபிக்காமல் அங்குமிங்கும் அலைந்துதிரிந்தார். சுவாங் மன்னராகிய பின் அவர் படையைக் கொண்டு சுச்சுவான் சென்று தெற்கு ஷென்சியை நோக்கித் திரும்பி ஹுபெய் மாகாணத்துக்கூடாகச் சென்று ஹோனுனுக்கு மீண்டும் சென்றார். பின்னர் ஹுபெய் மாகாணத்துக்குத் திரும்பி வந்து சியாங்யாஙைக் கைப்பற்றி இன்னொரு முறை ஹோனுன் மாகாணத்துக்கூடாகச் சென்று ஷென்சியைத் தாக்கி சீஆனை வசப்படுத்தினர். 1644ம் ஆண்டில் ஷன்சிக்கூடாகச் சென்று பீக்கிஙைக் கைப்பற்றினர். சிறிது காலத்திற்குப் பின் அவர், மிங் வம்சத் தளபதி வூ சன்-குவெய் சிங் வம்சத் துருப்புக்களுடன் சேர்ந்து தாக்கியதால் தோற்கடிக்கப்பட்டார்.

# சிறு பொறி பெருங் காட்டுத் தீயை மூட்டமுடியும்*

(1930, ஜனவரி 5)

எமது கட்சியிலுள்ள தோர்ழர்கள் சிலர் தற்போதைய நிலைமை பற்றிய மதிப்பீடும் அதையொட்டிய நமது நடவடிக்கையும் என்ற பிரச்சினையைப் பொறுத்தமட்டில் இன்னும் சரியான கருத்துக்கு வரவில்லை. புரட்சிப் பேரெழுச்சி தவிர்க்கப்பட முடியாதது என்று அவர்கள் நம்பியபோதிலும் அது கூடிய சீக்கிரத்தில் நிகழக் கூடியதென்பதை நம்பமறுக்கின்றனர். அதனால், அவர்கள் கியாங்சி மாகாணத்தை வென்றெடுக்கும் திட்டத்தை ஏற்றுக்கொள்ளாமல் ஃபூகியன், குவாங்துங், கியாங்சி ஆகிய மாகாணங்களுக்கிடையிலான எல்லைப் பிரதேசங்கள் மூன்றிலும் அலைந்துதிரியும் கொரில்லா நடவடிக்கைகளை மேற்கொள்வதொன்றனை மாத்திரமே ஏற்றுக்கொள்கின்றனர்; அதே வேளையில், கொரில்லாப் பிரதேசங்களிற் சிவப்பு அரசியல் அதிகாரத்தை ஸ்தாபிக்கவேண்டுமென்பதை ஆழமாகப் புரிந்து

*இது தோழர் மாஓ சேதுங் அவர்களால் அச்சமயத்திற் கட்சிக்குள் நிலவிய நம்பிக்கையற்ற சிந்தனையை விமர்சனம் செய்வதற்காக எழுதப்பட்ட ஒரு கடிதம்.

கொள்ளாமையால் இந்தச் சிவப்பு அரசியல் அதிகாரத்தை ஸ்திரப்படுத்துவதன் மூலமும் விரிவுபடுத்துவதன் மூலமும் நாடு முழுவதிலும் புரட்சிப் பேரெழுச்சியைத் துரிதப்படுத்த வேண்டும் என்பதையும் ஆழமாகப் புரிந்துகொள்ளவில்லை. புரட்சிப் பேரெழுச்சி இன்னும் தொலைவில் இருக்கும்போது கஷ்டப்பட்டு அரசியல் அதிகாரத்தை ஸ்தாபிக்க முயல்வது வீண் முயற்சியென அவர்கள் கருதுகிறார்கள்போலத் தெரிகிறது. அதற்குப் பதில், எமது அரசியற் செல்வாக்கை அலைந்துதிரியும் கொரில்லா நடவடிக்கைகள் என்ற இலகுவான முறையின் மூலம் விரிவாக்கி, நாடு பூராவுமுள்ள வெகுஜனங்களை வென்றெடுத்த பின்னர் அல்லது கிட்டத்தட்ட வென்றெடுத்த பின்னர் நாடு முழுவதிலும் ஆயுதக் கிளர்ச்சி தொடுக்க விரும்புகின்றனர். அதிற் செஞ்சேனையும் பங்குபற்றுவதோடு அது நாடுபரந்த மாபெரும் புரட்சியாகலாம் என நம்புகின்றனர். நாடு முழுவதும் எல்லாப் பிரதேசங்களிலும் முதலிற் பொது மக்களை வென்றெடுத்துப் பின்னர் அரசியல் அதிகாரத்தை ஸ்தாபிக்கவேண்டுமென்ற அவர்களுடைய தத்துவம் சீனப் புரட்சியின் யதார்த்த நிலைமையுடன் ஒத்துப்போகவில்லை. இந்தத் தத்துவத்தின் ஊற்றுமூலம் பிரதானமாக, சீனு அதற்காகப் பல ஏகாதிபத்திய வல்லரசுகள் போட்டிபோடுகின்ற ஒரு அரைக்காலனித்துவ நாடு என்பதைத் தெளிவாக உணர்ந்துகொள்ளத் தவறியதிலிருந்து ஏற்படுகிறது. இதைத் தெளிவாகப் புரிந்துகொண்டால், முதலாவதாக, ஆளும் வர்க்கங்களுக்கிடையேயுள்ள நீடித்த, சிக்கலான யுத்தமென்ற அசாதாரண நிகழ்ச்சி உலகம் முழுவதிலும் சீனுவில் மாத்திரம் காணப்படுவதற்கான காரணத்தையும் இந்த யுத்தம் நாளுக்குநாட் தீவிரமாகுவதற்கும் விரிவடைவதற்குமான காரணத்

தையும் ஒருமைப்பாடுடைய ஆட்சி ஒன்று என்றும் நிலவாத தற்கான காரணத்தையும் புரிந்துகொள்ளலாம். இரண்டாவதாக, விவசாயிப் பிரச்சினையின் பாரதூரத்தையும் அதன் மூலம் கிராமியக் கிளர்ச்சிகள் தற்போது நாடுபரந்த அளவில் வளர்ச்சியடைவதற்கான காரணத்தையும் புரிந்துகொள்ளலாம். மூன்றாவதாக, தொழிலாளர்-விவசாயிகள் ஜனநாயக அரசியலதிகாரம் என்ற சுலோகத்தின் சரியான தன்மையையும் புரிந்துகொள்ளலாம். நான்காவதாக, உலகம் முழுவதிலும் சீனாவில் மாத்திரமே காணப்படுகின்ற, ஆளும் வர்க்கங்களுக்கிடையேயுள்ள நீடித்த, சிக்கலான யுத்தமென்ற அசாதாரண நிகழ்ச்சியின் தொடர்ச்சியான இன்னொரு அசாதாரண நிகழ்ச்சியையும், அதாவது, செஞ்சேனையினதும் கொரில்லாப் படைகளினதும் வாழ்வையும் வளர்ச்சியையும் அவற்றைத் தொடர்ந்து ஏற்பட்ட, வெள்ளையாட்சியாற் சூழப்பட்ட சிறிய செம்பிரதேசங்களின் வாழ்வையும் வளர்ச்சியையும் புரிந்து கொள்ளலாம் (இத்தகைய அசாதாரண நிகழ்ச்சி சீனாவிற்கு வெளியே இல்லை). ஐந்தாவதாக, செஞ்சேனை, கொரில்லாப் படைகள், செம்பிரதேசங்கள் ஆகியவற்றின் ஸ்தாபிதமும் வளர்ச்சியும் அரைக்காலனித்துவ சீனாவிற் பாட்டாளிவர்க்கத்தின் தலைமையிலான விவசாயிப் போராட்டத்தின் மிக உயர்ந்த் வடிவமாகவும் அரைக்காலனித்துவ விவசாயிப் போராட்டத்தின் வளர்ச்சியின் தவிர்க்கப்படமுடியாத விளைவாகவும் விளங்குவதோடு அவை நாடு பூராவும் புரட்சியின் பேரெழுச்சியைச் சந்தேகமின்றித் துரிதப்படுத்தும் மிக முக்கிய அம்சமாகவும் விளங்குகின்றன எனவும் புரிந்துகொள்ளலாம். ஆறாவதாக, அலைந்துதிரியும் கொரில்லா நடவடிக்கைகளை மாத்திரம் விரும்பும் கொள்கையால் நாடுபரந்த புரட்சிப் பேரெழுச்சியைத்

துரிதப்படுத்தும் இந்தக் கடமையை நிறைவேற்றமுடியாது என்பதையும் புரிந்துகொள்ளலாம். ஆனல், சு தேயும் மாஓ சேதுங்கும், ஃபாங் சி-மின்[1]னுங்கூட, கைக்கொண்ட கொள்கை, அதாவது, தளப்பிரதேசங்களை ஸ்தாபித்தல்; அரசியலதிகாரத்தைத் திட்டமிட்டு நிறுவுதல்; நிலப்புரட்சியை ஆழமாக நடத்துதல்; முதலில் வட்டாரச் செங்காவலர்படை, பின்னர் குறிச்சிச் செங்காவலர்படை, பின்னர் மாவட்டப் பொதுச் செங்காவலர்படை அதன் பின்னர் ஸ்தலச் செஞ்சேனை என கிரமமான செஞ்சேனையாக்கும் வரை கட்டியமைக்கும் தொடர்ச்சியான முறையில் மக்கள் ஆயுதப் படைகளை விரிவாக்குதல்; அலையலையாக முன்னேறுவதன் மூலம் அரசியல் அதிகாரத்தைப் பரப்புதல், இவைபோன்ற இன்னும்பிற பற்றிய கொள்கை ஐயமின்றி சரியானதென்பதையும் புரிந்துகொள்ளலாம். இதன் மூலந்தான், சோவியத் யூனியன் உலகம் முழுவதுமுள்ள புரட்சிகர வெகுஜனங்களின் நம்பிக்கையைப் பெற்றுள்ளதுபோல, நாமும் நாடு பூராவும் உள்ள புரட்சிகர வெகுஜனங்களின் நம்பிக்கையைப் பெறமுடியும். இதன் மூலந்தான் பிற்போக்கு ஆளும் வர்க்கங்களுக்குப் பிரமாண்டமான கஷ்டங்களை உண்டாக்குவதும் அவற்றின் அத்திவாரத்தை ஆட்டங்காணச் செய்து அவற்றின் உட்சிதைவைத் துரிதப்படுத்துவதும் சாத்தியமாகும். இதன் மூலந்தான் வருங்கால மாபெரும் புரட்சியின் பிரதான ஆயுதமாக விளங்கக்கூடியதான செஞ்சேனையொன்றை உருவாக்குவது உண்மையிற் சாத்தியமாகும். சுருங்கக்கூறின், இதன் மூலந்தான் புரட்சிகரப் பேரெழுச்சியைத் துரிதப்படுத்துவது சாத்தியமாகும்.

புரட்சியில் அவசரத்தன்மை என்ற நோயாற் பீடிக்கப்பட்டுள்ள தோழர்கள் தகாத முறையிற் புரட்சியின் அகநிலைச்

சக்தி[2]களைக் கூட்டியும் எதிர்ப்புரட்சிச் சக்திகளைக் குறைத்தும் மதிப்பிடுகிறார்கள். இப்படியானதொரு மதிப்பீடு பிரதான மாக அகநிலைவாதத்திலிருந்து தோன்றுகிறது. முடிவில், அது சந்தேகமின்றிக் கண்மூடித்தனவாதத்திற்கு வழிநடத்திச் செல் கிறது. மறுபுறம், புரட்சியின் அகநிலைச் சக்திகளைக் குறைத் தும் எதிர்ப்புரட்சிச் சக்திகளைக் கூட்டியும் மதிப்பிடுவதுங்கூட ஒரு தகாத மதிப்பீடாகும். அது இன்னொரு வகையான தீய விளைவைத் தோற்றுவிப்பதும் நிச்சயம். ஆகவே சீனாவின் அரசியல் நிலைமையை அனுமானிக்கும்போது பின்வரும் முக் கியமான அம்சங்களைப் புரிந்துகொள்வது அவசியம்.

(1) சீனாவிலுள்ள புரட்சியின் அகநிலைச் சக்திகள் தற்போது பலவீனமானவையாக இருப்பினும் சீனாவின் பின்தங்கியதும் தகர்ந்துபோகக்கூடியதுமான சமூக பொருளாதார அமைப்பிற் தங்கியிருக்கும் பிற்போக்கு ஆளும் வர்க்கங்களின் நிறுவனங் கள் அனைத்தும் (அரசியல் அதிகார உறுப்புகள், ஆயுதப்படை கள், அரசியற் கட்சிகள், இன்னபிற) கூடப் பலவீனமானவை யாகவே இருக்கின்றன. இது, மேற்கு ஐரோப்பிய நாடுகளிற் புரட்சியின் அகநிலைச் சக்திகள் தற்போது ஒருவேளை சீனாவிலுள் ளவற்றைவிடப் பலம்வாய்ந்தனவாக இருக்கின்றபோதிலும் அவற்றின் பிற்போக்கு ஆளும் வர்க்க சக்திகள் சீனாவிலுள்ள வற்றைவிடப் பலமடங்கு பலம்வாய்ந்தனவாக இருப்பதனால் அங்கே இன்னும் புரட்சி உடனடியாக வெடிக்கமுடியாததாயுள் ளது என்பதை விளக்குவதற்கு உதவிசெய்கிறது. சீனாவிற் புரட்சியின் அகநிலைச் சக்திகள் தற்போது பலவீனமானவை யாக இருக்கின்றபோதிலும் எதிர்ப்புரட்சி சக்திகளும் ஒப்பிடு மிடத்துப் பலவீனமானவையாயுள்ளதாற் சீனப் புரட்சி மேற்கு ஐரோப்பிய நாடுகளிலுள்ள புரட்சியைவிட வெகுதுரிதமாகப்

பேரெழுச்சியொன்றனை நோக்கிச் செல்வது திண்ணம்.

(2) 1927ற் புரட்சி தோல்வியுற்றது முதல் புரட்சியின் அகநிலைச் சக்திகள் உண்மையிற் பெரிதும் பலவீனப்படுத்தப் பட்டுவிட்டன. எஞ்சியுள்ள சக்திகள் மிகவும் சிறியனவாக உள்ளன. தோற்றங்களைக் கொண்டு மட்டும் மதிப்பிடும் தோழர்கள் இயற்கையாகவே நம்பிக்கையிழந்த இயல்புடையவராக உள்ளனர். ஆனால், நாங்கள் சாராம்சத்தைக் கொண்டு மதிப்பிடுவோமானால் அது முற்றிலும் வேறாகும். நாம் இவ் விடத்திற் ''சிறு பொறி பெருங் காட்டுத் தீயை மூட்டமுடியும்'' என்ற சீனப் பழமொழியை பிரயோகிக்கலாம். வேறு வார்த்தைகளிற் கூறின், எமது சக்திகள் தற்போது சிறியனவாக இருப்பினும் அவை வெகுவிரைவில் வளரும். சீனவில் நிலவும் நிலைமைகளில் அவற்றின் வளர்ச்சி சாத்தியமானது மட்டுமல்ல உண்மையிற் தவிர்க்கப்பட முடியாததுங்கூட. மே 30 இயக்கம்[3]ம் அதைத் தொடர்ந்த மாபெரும் புரட்சி இயக்கமும் இதை முற்றாக நிரூபித்துள்ளன. ஒரு விஷயத்தை நோக்கும் போது, நாம் அதன் சாராம்சத்தை ஆராயவேண்டும். அதன் தோற்றத்தை வாயிலுக்கு இட்டுச்செல்லும்படியாக மட்டுமே கருதவேண்டும். ஒருகால் அந்த வாயிலைக் கடந்து விட்டால், நாம் அவ்விஷயத்தின் சாராம்சத்தைக் கிரகித்துக்கொள்ள வேண்டும். நம்பகமான விஞ்ஞானரீதியான ஆராய்ச்சிமுறை என்பது இதுவே.

(3) இதுபோலவே, எதிர்ப்புரட்சி சக்திகளை மதிப்பீடு செய்யும்பொழுது நாம் ஒருபோதும் அவற்றின் தோற்றத்தை மட்டும் பார்க்கக்கூடாது; அவற்றின் சாராம்சத்தை ஆராயவேண்டும். ஹுனன்-கியாங்சி எல்லைப் பிரதேசத்திலிருந்த எமது சுதந்திர ஆட்சியின் தொடக்ககாலத்தில், தோழர்கள் சிலர்

ஹூனன் மாகாணக் கமிட்டி அப்பொழுது செய்த தவமுன மதிப்பீட்டை உண்மையில் நம்பி, வர்க்க எதிரி ஒரு அடிக்குக் கூட நிற்கமுடியாதவனெனக் கருதினர். இன்றும் நகைப் பிற்கிடமானவையாயிருக்கும் வர்ணனைச் சொற்றொடர்களான ''கடுமையாக ஆட்டங்காண்பவன்'', ''மிகவும் பீதியடைந் தவன்'' என்பன இரண்டும் ஹூனன் ஆட்சியாளர் லூ தி-பிங்[4]கை மதிப்பிடுமிடத்து அப்போது (1928ம் ஆண்டு மே-ஜூன்) ஹூனன் மாகாணக் கமிட்டியால் உபயோகிக்கப்பட் டவை. இந்த மதிப்பீடு அரசியல்ரீதியிற் தவிர்க்கப்படமுடி யாதபடி கண்மூடித்தனவாதத்திற்கு இட்டுச்சென்றது. ஆனால் அந்த ஆண்டின் நவம்பர் முதற் கடந்த ஆண்டு பெப்ரவரிக்கு (சியாங் கை-ஷேக்கிற்கும் குவாங்சி யுத்தப்பிரபுக்களுக்குமிடை யில் யுத்தம்[5] வெடிப்பதற்கு முன்) இடைப்பட்ட ஏறக்குறைய நான்கு மாத காலத்தில், சிங்காங் மலைகளுக்கெதிரான எதிரி யின் மூன்றாவது ''கூட்டு அடக்குமுறைப் படையெடுப்''[6]பை எதிர்நோக்கிய சமயத்திற் சில தோழர்கள் ''எவ்வளவு காலத் திற்கு எமது செங்கொடி பறக்கும்?'' என்ற சந்தேகத்தை எழுப்பினர். உண்மையில் அப்பொழுது, சீனுவிலே பிரித்தானி யா, அமெரிக்கா, ஜப்பான் ஆகியவற்றிற்கு இடையிலிருந்த போராட்டம் மிகவும் வெளிப்படையானதாயிற்று, அத்துடன் சியாங் கை-ஷேக், குவாங்சி யுத்தப்பிரபுக்கள், ஃபுங் யு-சியாங் ஆகியோருக்கு இடையிற் சிக்கலான போர் நிலைமை உருவாகியது; எதிர்ப்புரட்சி எழுச்சி தணியவும் புரட்சிகர எழுச்சி திரும்பத்தோன்றவும் தொடங்கிய காலம் உண்மை யில் இந்தக் காலந்தான், ஆனால் அப்பொழுது செஞ்சேனை யிலும் ஸ்தலக் கட்சி நிறுவனங்களிலும் மாத்திரம் நம்பிக்கை யற்ற கருத்துக்கள் காணப்படவில்லை, மத்திய கமிட்டிகூடத்

தோற்றங்களாற் தவருக வழிகாட்டப்பட்டு, ஒரு நம்பிக்கை யற்ற தொனியுடையதாயிற்று. அதன் பெப்ரவரிக் கடிதம்[7] அப்போது கட்சியிலேற்படுத்தப்பட்ட நம்பிக்கையற்ற ஆராய் விற்குச் சான்ருக விளங்குகின்றது.

(4) இன்றுள்ள புறநிலே நிலேமை தற்போதைய மேலோட் டமான தோற்றத்தை மட்டும் பார்த்துச் சாராம்சத்தைப் பார்க்காத தோழர்களே இலகுவிற் தவருக வழிநடத்தக்கூடிய ஒன்ருகவே இன்னும் உள்ளது. குறிப்பாக, செஞ்சேனேயில் வேலே செய்யும் எமது தோழர்கள் போரிற் தோல்வியுற்ருலோ சுற்றிவளேக்கப்பட்டாலோ அல்லது பலம்வாய்ந்த எதிரிப்ப டையாற் துரத்தப்பட்டாலோ, தற்காலிகமானதும் விசேஷ மானதும் குறுகியதுமான நிலேயைத் தம்மையறியாது அடிக்கடி பொதுவானதாக்கி மிகைப்படுத்துவர். அவர்களின் கண்க ளுக்குச் சீனுவிலும் உலகிலும் உள்ள நிலேமை முற்றிலும் நம் பிக்கைக்கிடம் அளிக்காதது போலவும் புரட்சியின் வெற்றிக்கான வாய்ப்புகள் நிச்சயமற்றவை போலவும் இருக்கின்றன. விஷ யங்களேப் பார்க்கும்போது அவற்றின் தோற்றத்தைப் பிடித் துக்கொண்டு அவற்றின் சாராம்சத்தை ஒதுக்கித் தள்ளுவதற் கான காரணம் என்னவென்ருல் அவர்கள் பொதுவான நிலே மையின் சாராம்சத்தை விஞ்ஞானரீதியாக ஆராயாமையே யாம். சீனுவிற் புரட்சிப் பேரெழுச்சியொன்று விரைவிற் தோன்றுமா என்று கேட்டால், புரட்சியின் பேரெழுச்சியை ஏற்படுத்தும் பலவித முரண்பாடுகள் உண்மையிற் தொடர்ந்து வளர்கின்றனவா என்பதை அலசி ஆராய்வதன் மூலந்தான் அதற்குத் தீர்வுகாணமுடியும். உலகில் ஏகாதிபத்தியங்களுக் கிடையிலும் ஏகாதிபத்தியங்களுக்கும் அவற்றின் காலனிகளுக் குமிடையிலும் ஏகாதிபத்தியங்களுக்கும் அவற்றின் சொந்த

நாடுகளிலேயேயுள்ள பாட்டாளிவர்க்கத்திற்குமிடையிலுமுள்ள முரண்பாடுகள் வளர்கின்றதனுல் ஏகாதிபத்தியங்களுக்குச் சீனு விற்காகப் போட்டியிடும் தேவை மேலும் அவசரமாகிறது. சீனுவிற்காக ஏகாதிபத்தியங்களுக்கிடையே ஏற்படும் போட்டி மிகவும் உக்கிரமடைந்ததும் ஏகாதிபத்தியத்திற்கும் சீன தேசம் முழுவதற்குமிடையிலுள்ள முரண்பாடும் ஏகாதிபத்தியவாதிக ளுக்கிடையேயுள்ள முரண்பாடும் சீன மண்ணிலேயே ஒருங்கு வளர்ந்து வருவதனுல், சீனுவின் பல்வேறுபட்ட பிற்போக்கு ஆளும் கும்பல்களுக்கிடையே நாளுக்கு நாள் விரிவடைந்தும் தீவிரமடைந்தும் வருகின்ற சிக்கலான யுத்த நிலைமை உண்டா கியும் அவற்றிற்கிடையேயுள்ள முரண்பாடுகள் நாளாந்தம் வளர்ந்தும் வருகின்றன. பல்வேறுபட்ட பிற்போக்கு ஆளும் கும்பல்களுக்கிடையேயுள்ள முரண்பாடுகளை — யுத்தப் பிரபுக் களுக்கிடையேயுள்ள சிக்கலான யுத்தத்தை — தொடர்ந்து வரி அதிகரிக்கின்றது. இதனுல் வரி கொடுக்கும் பரந்துபட்ட பொதுமக்களுக்கும் பிற்போக்கு ஆட்சியாளருக்கும் இடை யிலுள்ள முரண்பாடு நாளுக்குநாள் வளர்ந்து வருகிறது. ஏகா திபத்தியத்திற்கும் சீனுவின் தேசிய தொழிலுக்கும் இடையி லுள்ள முரண்பாட்டினைத் தொடர்ந்து ஏகாதிபத்தியம் சீனத் தேசியத் தொழிலுக்கு இடம்விட்டுக்கொடுக்கவில்லை என்ற உண் மை ஏற்படுகின்றது. இதனுலே சீன பூர்ஷுவா வர்க்கத்திற் கும் சீனத் தொழிலாளி வர்க்கத்திற்குமிடையிலுள்ள முரண் பாடு வளர்கிறது. சீன முதலாளிகள் தொழிலாளரை வெறித் தனமாகச் சுரண்டுவதன் மூலம் தமது வளர்ச்சிக்கு வழியைக் கண்டுபிடிக்க முயல, அதனைச் சீனத் தொழிலாளர் எதிர்க்கின் றனர். ஏகாதிபத்திய வர்த்தக ஆக்கிரமிப்பு, சீன வர்த்தக முதலாளிகளின் கொள்ளையடிப்பு, அரசாங்கத்தின் பளுவான

வரி, இன்ன பிறவற்றினைத் தொடர்ந்து நிலப்பிரபுவர்க்கத் திற்கும் விவசாயிகளுக்குமிடையிலுள்ள முரண்பாடு மேலும் ஆழமாகின்றது, அதாவது குத்தகை, கடும் வட்டி ஆகியவற்றின் மூலமான சுரண்டல் மேலும் கொடூரமானதாக, விவசாயி களுக்கு நிலப்பிரபுக்கள் மீதுள்ள வெறுப்பு மேலும் வளர்கிறது. பிற நாட்டுப் பொருட்களின் சுமையினுலும் பரந்துபட்ட தொழி லாளரும் விவசாயிகளும் பொருட்களை வாங்குவதற்குச் சக் தியற்றவராயிருப்பதனுலும் அரசாங்கத்தின் வரியதிகரிப்பினு லும் சீனப் பொருட்களில் வியாபாரம் செய்வோரும் தனிப் பட்ட உற்பத்தியாளரும் நாளுக்குநாட் பங்கலோட்டுத்தனத் தையடைகின்றனர். தானியமும் நிதியும் குறைவாயிருந்த நிலைமையிலும் பிற்போக்கு அரசாங்கம் தமது படைகளை முடி வின்றி விஸ்தரித்து, அதன் மூலம் போர்களை நாளுக்குநாள் விரிவாக்கியதாற் பரந்துபட்ட போர்வீரர்கள் மாருத வறு மைக்குள்ளாயினர். அரசாங்க வரி அதிகரித்ததனுலும் நிலப் பிரபுக்களின் குத்தகையிலும் வட்டியிலும் அதிகரிப்பேற்பட்ட தனுலும் யுத்த நாசங்கள் நாளாந்தம் பெருகியதாலும் நாட் டில் எங்கும் பஞ்சமும் கொள்ளையுமாயிருக்கின்றது; பரந்து பட்ட விவசாயிகளும் நகரிலுள்ள வறிய மக்களும் உயிர்வாழ முடியாமலிருக்கின்றனர். பாடசாலைகளிற் பணமில்லாமையாற் பல மாணவர்கள் தமது கல்விக்குக் குந்தகம் ஏற்படலாம் எனக் கவலைப்படுகின்றனர்; உற்பத்தி பின்தங்கியதாயிருப்பதாற் பல பட்டதாரிகள் வேலை பெறும் நம்பிக்கையின்றியிருக்கின்றனர். நாம் இம்முரண்பாடுகளையெல்லாம் ஒருகாற் புரிந்துகொள்வோ மாஞல், சீன எவ்வளவு அச்சமும் ஏக்கமும் கவலையும் கொள் ளும் நிலையிலும் எவ்வளவு குழப்பமான நிலையிலும் இருக்கி றதென்பதை அறிந்துகொள்வோம். ஏகாதிபத்தியங்களுக்கும்

யுத்தப்பிரபுக்களுக்கும் நிலப்பிரபுக்களுக்கும் எதிரான புரட்சிப் பேரெழுச்சியை எப்படியும் தவிர்க்கமுடியாதென்பதையும் அது வெகுவிரைவில் ஏற்படும் என்பதையும் உணர்ந்து கொள்வோம். சீனு முழுவதும் காய்ந்த விறகுகள் பரவப்பட்டிருக்கின்றன; அவை சட்டெனப் பெருஞ்சுவாலை விட்டெரியும். ''சிறு பொறி பெருங் காட்டுத் தீயை மூட்டமுடியும்'' என்ற பழமொழி தற்போதைய நிலைமை வளரும் வகையைக் கூறுவதற்கான பொருத்தமான வர்ணனையேயாகும். பல இடங்களிலும் வளர்ந்துவரும் தொழிலாளர்களின் வேலை நிறுத்தங்களையும் விவசாயிகளின் கிளர்ச்சிகளையும் போர்வீரர்களின் கலகங்களையும் மாணவர்களின் பாடநிறுத்தங்களையும் மாத்திரம் கொண்டே இந்தப் ''பொறி'' ''பெருங் காட்டுத் தீயை மூட்டு''வதற்கு அதிக நேரமாகாது என்பதில் எதுவித ஐயத்திற்குமிடமில்லை என்பதை நாம் அறிந்துகொள்ளலாம்.

மேற் கூறப்பட்டதன் பிரதான அம்சம் முன்னணிக் கமிட்டியிலிருந்து கடந்த ஆண்டு ஏப்ரல் 5ந் திகதி மத்திய கமிட்டிக்கு வந்த கடிதத்தில் ஏற்கெனவே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதன் ஒரு பகுதி பின்வருமாறு:

''மத்திய கமிட்டியின் இந்தக் கடிதம் (1929, பெப்ரவரி 9 எனத் திகதியிடப்பட்டது) புறநிலை நிலைமை, எமது அகநிலை சக்திகள் ஆகியவை பற்றிச் செய்த மதிப்பீடு மிக நம்பிக்கையற்றதாக உள்ளது. சிங்காங் மலைகளுக்கெதிரான கோமிந்தாங்கின் மூன்றுவது 'அடக்குமுறை' நடவடிக்கை எதிர்ப்புரட்சிப் பேரெழுச்சியின் மிக உயர்ந்த மட்டத்தைக் காட்டுகின்றது. ஆனுல், அவ்வுயர் மட்டம் அத்துடன் நின்றுவிட்டது. அது முதல் எதிர்ப்புரட்சிப் பேரெழுச்சி படிப்படியாகத் தணிந்துவந்துள்ளது; புரட்சிப் பேரெழுச்சி படிப்படியாக உயர்ந்து வந்துள்ளது. கட்சியின் போராற்றலும் ஸ்தா

பனரீதியான வலிமையும் மத்திய கமிட்டியாற் கூறப்பட்ட அள விற்குப் பலவீனப்படுத்தப்பட்டிருப்பினும் எதிர்ப்புரட்சிப் பேரெழுச்சி படிப்படியாகத் தணியத் தணிய அவை விரைவாக மீட்கப்படுவதோடு, கட்சி ஊழியர்களிடையேயுள்ள ஊக்கமற்ற மனேபாவமும் விரைவாக மறைந்துவிடும். வெகுஜனங்கள் நிச்சயமாக எம் பக்கம் வருவார்கள். படுவதைவாதம்[8] உண்மையில் 'மீன்களை ஆழமான நீருக்குள் ஓடச் செய்வது' போலுள்ளது. அத்துடன் சீர்திருத்தவாதத்தால் இனிமேலும் பொதுமக்களை ஈர்க்கமுடியாது. பொதுமக்கள் கோமிந்தாங் பற்றிய பிரமைகளை விரைவிற் களைந்துவிடுவர் என்பதில் ஐயமில்லை. இனித் தோன்றும் நிலைமையிற் பொதுமக்களை வென்றெடுப்பதிற் கம்யூனிஸ்ட் கட்சியுடன் வேறெந்தக் கட்சியும் போட்டியிட இயலாது. கட்சியின் ஆருவது தேசியக் காங்கிரஸ்[9] முன்வைத்த அரசியல் மார்க்கமும் ஸ்தாபன மார்க்கமும் சரியானவை. அவை: தற்போதைய கட்டத்திலுள்ள புரட்சி ஜனநாயக ரீதியானதேயொழிய சோஷலிஸரீதியானதல்ல. கட்சியின் தற்போதைய கடமை ('பெரிய நகரங்களில்' என்ற வார்த்தைகள் இங்கே சேர்க்கப்பட்டிருக்கவேண்டும்) பொதுமக்களை வென்றெடுப்பதே அல்லாமல் உடனடியான கிளர்ச்சிகளைத் தோற்றுவிப்பதல்ல. எப்படியிருப்பினும் புரட்சி தீவிரமாக வளர்ச்சியடையும். ஆயுதக் கிளர்ச்சிகளுக்கான பிரச்சாரத்திலும் தயாரிப்புகளிலும் நாம் ஒரு ஊக்கமான மனேபாவத்தை மேற்கொள்ளவேண்டும். தற்போதைய அல்லோலகல்லோலமான நிலைமையில் நாம் ஊக்கமான சுலோகங்களாலும் ஊக்கமான மனேபாவத்திஞலும் மாத்திரமே பொதுமக்களை வழிநடத்தமுடியும். இப்படியானதோர் ஊக்கமான மனேபாவத்தைக் கொள்வதனுல் மாத்திரமே கட்சி தனது போராற்றலைத் திரும்பப் பெறமுடியும். ...பாட்டாளிவர்க்கத் தலைமையே புரட்சியின் வெற்றிக்கான ஒரே திறவுகோல். கட்சிக்குப் பாட்டாளிவர்க்க அத்திவாரமிடுதல், கேந்திர பிரதேசங்களிலுள்ள தொழில் முயற்சிகளிற் கட்சிக் கிளைகளைக் கட்டியமைத்தல் ஆகியனவே ஸ்தாபனரீதியிற் கட்சியின் தற்போதைய முக்கியமான கடமைகளாகும்; ஆனல்

அதே வேளையில், நகரங்களிலுள்ள போராட்டத்திற்கு உதவிசெய்வதற்கும் புரட்சிப் பேரெழுச்சியைத் துரிதப்படுத்துவதற்குமான பிரதான முன்கூட்டிய தேவைகள் எல்லாவற்றிற்கும் மேலாக நாட்டுப்புறங்களிற் போராட்டத்தின் வளர்ச்சியும் சிறிய பிரதேசங்களிற் சிவப்பு அரசியலதிகார ஸ்தாபிதமும் செஞ்சேனையின் உருவாக்கமும் விரிவாக்கமுமாம். ஆகவே, நகரங்களிற் போராட்டத்தைக் கைவிடுவது தவறாகும். அத்துடன் எமது அபிப்பிராயப்படி, விவசாயிகளின் பலம் வளர்ந்து, தொழிலாளர் பலத்தை விஞ்சி, புரட்சிக்கு ஊறு விளைவிக்கலாம் என எமது கட்சி அங்கத்தவர்கள் யாராவது அஞ்சுவதும் தவறாகும். ஏனெனில், விவசாயிப் போராட்டம் தொழிலாளர் தலைமையைப் பெறாததனால் அரைக்காலனித்துவ சீனாவின் புரட்சி தோல்வியுற்றிருக்கிறதேயொழிய விவசாயிகளின் போராட்டத்தின் வளர்ச்சி தொழிலாளர் சக்திகளை விஞ்சியதனாற் புரட்சிக்கு என்றும் ஊறு விளைந்திருக்கின்றது என்று இல்லை.''

இந்தக் கடிதம் செஞ்சேனையின் நடவடிக்கைத் தந்திரோபாயம் பற்றிய கேள்விக்கான பின்வரும் விடையையும் கொண்டிருந்தது:

''செஞ்சேனையைப் பேணிப்பாதுகாப்பதற்கும் பொதுமக்களைத் தட்டியெழுப்புவதற்குமாகப் பிரதான இலக்குகளை மறைப்பதற்கு எமது படைகளை மிகச் சிறு யுனிட்டுகளாகப் பிரித்து நாட்டுப்புறத்தில் அவற்றைப் பரந்திருக்கச் செய்யவேண்டுமெனவும் சு தேயையும் மாஓ சேதுங்iையும் ராணுவத்திலிருந்து வாபஸ் பெறச் செய்ய வேண்டுமெனவும் மத்திய கமிட்டி எம்மைக் கேட்கிறது. இது உண்மைக்குப் புறம்பான ஒரு கருத்து. எமது படையின் ஒவ்வொரு கம்பெனியையும் அல்லது ஒவ்வொரு பட்டாளத்தையும் தானாகவே செயற்படச் செய்து நாட்டுப்புறத்திற் பரவியிருக்கச் செய்வது மூலமும் பொதுமக்களைத் தட்டியெழுப்புவதற்குக் கொரில்லாத் தந்திரோபாயங்களைக் கையாள்வது மூலமும் எதிரிக்கு இலக்காகாமல்

இருக்க 1927ம் ஆண்டுக் குளிர்காலம் முதற் திட்டமிட்டோம். நாம் இதைப் பல தடவை முயற்சித்துப் பார்த்தோம்; ஆனல், ஒவ்வொரு முறையும் தோல்வியடைந்தோம். அதற்கான காரணங்களாவன: (1) பிரதான சக்தியாகிய செஞ்சேனையின் போர்வீரர்களுட் பெரும்பான்மையினர் பிற பிரதேசங்களிலிருந்து வந்தவர்கள். ஆகவே அவர்கள் ஸ்தலச் செங்காவலர்படையினரிலிருந்தும் வேறுபட்ட பின்னணியையுடையவர்களாயுள்ளனர்; (2) சிறிய யுனிட்டாகப் பிரித்தமை பலவீனமான தலைமைக்கும் பாதகமான நிலைமைகளைச் சமாளிக்கும் திறமையின்மைக்கும் காரணமாகிறது. இது தோல்விக்குச் சுலபமாக இட்டுச் செல்கிறது; (3) யுனிட்டுகள் எதிரியால் எளிதில் ஒவ்வொன்ருக அழிக்கப்படக் கூடியனவாயிருக்கின்றன; (4) நிலைமைகள் எவ்வளவிற்குப் பாதகமானவையாயிருக்கின்றனவோ அவ்வளவிற்கு எமது படைகளை ஒன்றுகுவிப்பதற்கும் எமது தலைவர்கள் போராட்டத்தில் உறுதியாக நிற்பதற்குமான தேவை அதிகரிக்கிறது. இதன் மூலந்தான் எம்மிடையே எதிரிக்கெதிராக உள் ஐக்கியம் நிலவமுடியும். சாதகமான நிலைமைகளில் மாத்திரமே கொரில்லா நடவடிக்கைகளுக்காகப் படைகளைப் பிரிப்பது புத்திசாலித்தனமானதாகும். அந்த நேரங்களில் மாத்திரம் தலைவர்கள் பாதகமான நிலைமைகளில் இருந்தது போல அணிகளுடன் எப்பொழுதும் இருக்கவேண்டியதில்லை.''

இந்தப் பந்தியின் குறைபாடு என்னவென்ருல் இதிற் படைகளைப் பிரிக்க இயலாமைக்காகக் காட்டப்பட்ட காரணங்கள் ஊக்கமற்றவையாகவும் பெரிதும் போதாதனவாகவும் உள்ளன. எமது படையை ஒன்றுகுவிப்பதற்கான ஊக்கமான காரணமென்னவென்ருல் ஒன்றுகுவிப்பது மூலம் நாம் ஒப்பீட்டளவிற் பெரிய எதிரி யுனிட்டுகளைத் துடைத்தொழிக்கவும் மாநகர்களையும் பட்டினங்களையும் கைப்பற்றவும் முடியும். ஒப்பீட்டளவிற் பெரிய எதிரி யுனிட்டுகளைத் துடைத்தொழித்த

பின்னரும் மாநகர்களையும் பட்டினங்களையும் கைப்பற்றிய பின்னருமே எம்மால் வெகுஜனங்களைப் பரந்துபட்ட அளவிற் தட்டியெழுப்பவும் அருகருகாயமைந்துள்ள பல மாவட்டங்களை ஒன்றுசேர்க்கும் அரசியல் அதிகாரத்தை அமைக்கவும் முடியும். இதன் மூலம் மாத்திரமே பரவலான பாதிப்பை ஏற்படுத்தவும் (எம்மாற் கூறப்பட்ட எமது அரசியற் செல்வாக்கை விரிவுபடுத்தல்) புரட்சிப் பேரெழுச்சியைத் துரிதப்படுத்துவதற்கு உருப்படியான, பயனுள்ள முறையில் உதவவும் முடியும். உதாரணமாக, சென்ற ஆண்டிற்கு முந்திய ஆண்டில் ஹுனன்-கியாங்சி எல்லைப் பிரதேசத்தில் அமைத்த ஆட்சியும் கடந்த ஆண்டு மேல் ஃபூகியனில் அமைத்த ஆட்சி[10]யும் எமது படைகளை ஒன்றுகுவிப்பது என்ற கொள்கையின் விளைவாகும். இது ஒரு பொதுக் கோட்பாடு. அப்படியானல் எமது படைகள் பிரிக்கப்படுவதற்குரிய நேரங்களில்லையா? அவையும் இருக்கின்றன. முன்னணிக் கமிட்டியிலிருந்து மத்திய கமிட்டிக்கு வந்த கடிதம் ஒரு குறுகிய சுற்றுவட்டத்திற்குட் படைகளைப் பிரிப்பது உட்படச் செஞ்சேனைக்கான கொரில்லாத் தந்திரோபாயங்களைப் பற்றிக் கூறுகிறது:

> "கடந்த மூன்றுண்டுகாலப் போராட்டத்திலிருந்து நாம் பெற்ற தந்திரோபாயங்கள் பண்டைய அல்லது தற்கால தந்திரோபாயங்களிலிருந்தும் சீனவின் இதர தந்திரோபாயங்களிலிருந்தும் அந்நிய நாட்டுத் தந்திரோபாயங்களிலிருந்தும் உண்மையில் வேறுபட்டன. எமது தந்திரோபாயங்களால் நாளுக்குநாள் விரிவடையும் அளவிற் பொதுமக்களைப் போராட்டத்திற்குத் தட்டியெழுப்பலாம். அத்துடன் எவ்வளவு வலிமையுடைய எந்த எதிரியும் எம்முடன் போராடமுடியாது. நமது தந்திரோபாயங்கள் கொரில்லாத் தந்திரோபாயங்கள். அவை பிரதானமாகப் பின்வரும் அம்சங்களை அடக்கி

யவை: 'மக்களைத் தட்டி எழுப்ப நமது படைகளைப் பிரிப்பது; எதிரியைச் சமாளிக்க நமது படைகளை ஒன்றுகுவிப்பது.' 'எதிரி முன்னேறும்போது, நாம் பின்வாங்குவது; எதிரி முகாமடிக்கும்போது நாம் தொல்லை கொடுப்பது; எதிரி களைத்திருக்கும்போது நாம் தாக்குவது; எதிரி பின்வாங்கும்போது நாம் துரத்துவது.' 'ஸ்திரமான தளப்பிரதேச[11]ங்களை விஸ்தரிக்க, அலைஅலையாக முன்னேறும் கொள்கையைப் பிரயோகிப்பது; பலம்வாய்ந்த எதிரியாற் துரத்தப்படும்போது வட்டமிட்டுச் செல்லும் கொள்கையைப் பிரயோகிப்பது.' 'மிகக் குறுகிய காலத்திற் சாத்தியமான மிகச் சிறந்த வழிகளில் மிகப் பெரிய அளவில் மக்களைத் தட்டி எழுப்புவது.' இந்தத் தந்திரோபாயங்கள் எல்லாம் வலைவீசுவது போன்றவை; எந்த நேரத்திலும் நாம் அதை வீசவும் இழுக்கவும் கூடியவர்களாக இருக்கவேண்டும். மக்களை வென்றெடுப்பதற்கு நாம் அதை அகல விரிக்கிறோம்; எதிரியைச் சமாளிப்பதற்கு நாம் அதைச் சுருக்கி இழுக்கின்றோம். கடந்த மூன்றாண்டுகளாக நாம் கையாண்ட தந்திரோபாயங்கள் இவையே.''

இங்கே, ''வலையை அகல விரிப்பது'' என்பது எமது படைகளைக் குறுகிய சுற்று வட்டத்திற்குட் பிரிப்பதைக் குறிக்கிறது. உதாரணமாக, நாம் ஹூனன்-கியாங்சி எல்லைப்பிரதேசத்திலுள்ள யுங்ஸின் மாவட்ட நகரத்தை முதற்தடவை கைப்பற்றிய போது 29ம் 31ம் ரெஜிமென்டுகளின் படைகளை யுங்ஸின் மாவட்டத்தின் எல்லைக்குட் பிரித்தோம். மூன்றாவது முறையாக யுங்ஸினைக் கைப்பற்றிய போது 28ம் ரெஜிமென்டை அன்ஃபு மாவட்டத்தின் எல்லைக்கும் 29ம் ரெஜிமென்டை லியன்ஹூவாவிற்கும் 31ம் ரெஜிமென்டை கிஆன் மாவட்ட எல்லைக்கும் அனுப்புவதன் மூலம் எமது படைகளை இன்னொரு முறை பிரித்தோம். கடந்த ஏப்ரலிலும் மேயிலும் தென் கியாங்சியின் மாவட்டங்களிலும் கடந்த ஜூலையில்

மேல் ஃபூகியனின் மாவட்டங்களிலும் எமது படைகளைத் திரும்பப் பிரித்தோம். நிலைமைகள் ஒப்பீட்டளவில் உகந்தனவாகவும் தலைமை உறுப்புகள் கணிசமான அளவு வலிமைமிக்கதாகவும் இருக்கும் இவ்விரண்டு நிலைமைகளிலுந்தான் நாம் எமது படைகளை விரிந்த சுற்று வட்டத்திற்குட் பிரிப்பது சாத்தியமாகும். ஏனென்றால், படைகளைப் பிரிப்பதற்கான எமது நோக்கம் பொதுமக்களை வென்றெடுப்பதையும் நிலப்புரட்சியை ஆழமாக நடத்தி அரசியல் அதிகாரத்தை ஸ்தாபிப்பதையும் செஞ்சேனையையும் ஸ்தல ஆயுதப் படைகளையும் விரிவாக்குவதையும் மேலும் சாத்தியமாக்குவதேயாம். ஆகையால், இந்த நோக்கம் நிறைவேற்றப்பட முடியாவிட்டால் அல்லது படைகளைப் பிரிப்பது இரண்டு வருடங்களுக்கு முன் ஆகஸ்டிற் சென்சௌமீது தாக்குதல் தொடுப்பதற்காக ஹுனன்-கியாங்சி எல்லையில் எமது படைகளைப் பிரித்தபோது நடந்ததுபோலத் தோல்விக்கும் செஞ்சேனை பலவீனப்படுவதற்கும் வழிநடத்திச் சென்றால் எமது படைகளைப் பிரிக்காமல் இருப்பது சிறந்தது. இதற்கு முன்னர் குறிப்பிடப்பட்ட இரண்டு நிலைமைகளும் ஏற்படும் போது நாம் எமது படைகளைக் கட்டாயம் பிரிக்கவேண்டும். இதில் எதுவித சந்தேகத்திற்குமிடமில்லை. ஏனென்றால், அப்பொழுது ஒன்றுகுவிப்பதை விடப் பிரிப்பதுதான் மிகவும் சாதகமானது.

மத்திய கமிட்டியின் பெப்ரவரிக் கடிதம் சரியான உணர்வைக் கொண்டதாயில்லாததோடு நான்காவது சேனையிலிருந்த கட்சித் தோழர்கள் பலர் மீது ஒரு தீய பாதிப்பையும் ஏற்படுத்தியது. அந்த நேரத்தில் மத்திய கமிட்டி சியாங் கை-ஷேக்குக்கும் குவாங்சி யுத்தப்பிரபுக்களுக்குமிடையே ஒருசமயம் போர் ஏற்படாது என்று தெரிவித்து ஒரு சுற்றறிக்கையும்

றுகள் ஒப்பீட்டளவிற் குறைவானவை. செகியாங்ின் நிலைமை பற்றி
எமக்குத் தெளிவாகத் தெரியாதேதவிர, கியாங்சியிலும் ஃபூகிய
னிலும் கட்சியின் ஸ்தாபன, வெகுஜன அடிப்படைகள் ஹூனனிலி
ருப்பவற்றைவிட ஓரளவு சிறந்ததாயிருக்கின்றன. உதாரணத்திற்
குக் கியாங்சியை எடுப்போம். வட கியாங்சியில் தேஆனிலும்
சியூஷூயிலும் துங்குவிலும் எமக்கு இன்னும் கணிசமான அளவு
அடிப்படைகளுள; மேல் கியாங்சியில் நிங்காங்கிலும் யுங்ஸினிலும்
லியன்ஹூவாவிலும் சுய்ச்சுவானிலும் கட்சிக்கும் செங்காவலர்
படைக்கும் இன்னும் ஓரளவு பலம் உண்டு; கிஆன், யுங்ஃபுங்,
சிங்கோ ஆகிய மாவட்டங்களிற் செஞ்சேனையின் இரண்டாவது
ரெஜிமென்டும் நான்காவது ரெஜிமென்டும் நாளுக்கு நாள் வளர்ச்சி
யடைந்து வருவதாற் தென் கியாங்சியில் எதிர்காலம் மேலும் பிர
காசமானதாயுள்ளது. இன்னும் என்ன, ஃபாங் சி-மின்னின் தலை
மையிலிருந்த செஞ்சேனைகூட இன்னும் துடைத்தொழிக்கப்படவில்லை.
இவையெல்லாம் நான்சாங்கைச் சுற்றி நெருங்கத்தக்க ஒரு நிலைமையை
ஏற்படுத்துகின்றன. இதனால், கோமிந்தாங் யுத்தப்பிரபுக்களுக்
கிடையிலான நீண்டகால யுத்தகாலத்திற் கியாங்சியை வென்றெ
டுக்க நாம் சியாங் கை-ஷேக்குடனும் குவாங்சி யுத்தப் பிரபுக்களு
டனும் போட்டியிடும் அதேவேளையில் மேல் ஃபூகியனுக்காகவும்
மேல் செகியாங்கிற்காகவுங்கூடப் போட்டியிடவேண்டுமெனவும் இந்த
மூன்று மாகாணங்களிலும் நாம் செஞ்சேனையை விரிவுபடுத்தி, பொது
மக்களின் சுதந்திர ஆட்சியொன்றை நிறுவவேண்டுமெனவும் இத்
திட்டம் ஒரு வருடகாலத்திற்குள் நிறைவேற்றப்படவேண்டுமெ
னவும் நாம் மத்திய கமிட்டிக்கு எடுத்துரைக்கிறோம்.''

மேலே கூறப்பட்ட, கியாங்சியை வென்றெடுப்பது என்ற
பிரேரணையிற் தவறு என்னவென்றால், ஒரு வருட கால வரை
யறை வகுத்ததேயாகும். கியாங்சியை வென்றெடுப்பது
கியாங்சி மாகாணத்திலுள்ள நிலைமைகளைக் கொண்டு மாத்தி
ரம் நிர்ணயிக்கப்படவில்லை, ஒரு நாடுபரந்த புரட்சிப் பேரெ

முச்சி விரைவில் ஏற்படும் என்ற நிலைமையைக் கொண்டும் நிர்ணயிக்கப்பட்டது. ஏனென்றால், புரட்சிப் பேரெழுச்சி யொன்று விரைவில் ஏற்படும் என்பதில் நம்பிக்கை கொண்டி ருந்திருக்காவிடில் கியாங்சியை ஒரு வருடத்திற்குள் வென்றெ டுக்கமுடியும் என்று முடிவு கட்டுவது ஒரு போதும் சாத்திய மானதாயிருந்திராது. இந்தப் பிரேரணையின் ஒரேயொரு குறை பாடு ஒரு வருடகாலத்திற்குள் எனக் காலவரையறை வகுத் ததே; இப்படிக் காலவரையறை வகுத்திருக்கக்கூடாது. இத னால் அது ''புரட்சிப் பேரெழுச்சியொன்று விரைவில் ஏற் படும்'' என்ற வாக்கியத்திலுள்ள ''விரைவில்'' என்ற சொல் லிற்குத் தவிர்க்கப்பட முடியாதபடி ஒரு அவசரத் தன்மையைக் கொடுத்துவிட்டது. கியாங்சியிலுள்ள அகநிலை நிலைமைகளையும் புறநிலை நிலைமைகளையும் பொறுத்தவரை, அவை மிகவும் கவனத்திற்குரியவை. மத்திய கமிட்டிக்கெழுதிய கடிதத்திற் காட்டப்பட்ட அகநிலை நிலைமைகளுடன் புறநிலை நிலைமைக ளில் மூன்றும் இப்போது தெளிவாகச் சுட்டிக்காட்டப்படலாம். முதலாவதாக, கியாங்சியின் பொருளாதாரம் பிரதானமாக நிலப்பிரபுத்துவப் பொருளாதாரம், வர்த்தக முதலாளிவர்க் கம் ஒப்பீட்டளவிற் பலவீனமானது, நிலப்பிரபுக்களின் ஆயு தசக்திகள் மற்றெல்லாத் தென் மாகாணங்களிலுள்ளவற்றினை யும்விடப் பலவீனமானவை. இரண்டாவதாக, கியாங்சியிடம் அதற்கெனத் தனிப்பட்ட மாகாணத் துருப்புக்கள் இருக் கவில்லை. அது எப்பொழுதும் பிற மாகாணங்களின் துருப்புக் களாலேயே பாதுகாக்கப்பட்டது. ''கம்யூனிஸ்டுகளை அடக் குவதற்கோ'', ''கொள்ளைக்காரரை அடக்குவதற்கோ'' அனுப் பப்படும் இத்துருப்புக்கள் ஸ்தல நிலைமைகளுடன் பரிச்சயமற்ற வையாயிருப்பதோடு, அவற்றின் நலன்கள் ஸ்தலத் துருப்புக்

யப்பட்டனர். மே 30ந் தேதி இரண்டாயிரத்திற்கு மேலான ஷாங்ஹாய் மாணவர்கள் தொழிலாளிகளை ஆதரிக்கும்படியும், அந்நிய ''குத்தகைப் பிரதேசங்க''ளை மீட்டெடுக்கும்படியும் அந்நிய ''குத்தகைப் பிரதேசங்க''ளில் மக்களை அறைகூவி அழைத்தனர். அத்துடன், ''ஏகாதிபத்தியம் வீழ்க!'' ''அகில சீன மக்களே ஐக்கியப்படுங்கள்!'' போன்ற ஸ்லோகங்களைக் கோஷித்தபடி, அவர்கள் பிரித்தானிய பொலீஸ் ஆணைப்பகுதிக்கு முன்னுற் பத்தாயிரத்திற்கு மேற்பட்ட மக்களை அணிதிரட்டினர். பிரித்தானிய ஏகாதிபத்தியப் பொலீஸ் சுட ஆரம்பித்து, பல மாணவர்களை கொல்லவும் காயப்படுத்தவும் செய்தது. இது மே 30 படுகொலை எனப்பட்டது. இது உடனடியாக நாடு தழுவிய வெறுப்பைக் கிளப்பியது. தொழிலாளரும், மாணவரும், கடைக்காரரும் எங்கும் வேலைநிறுத்தங்களும், ஆர்ப்பாட்டங்களும் நடத்தி ஒரு பிரமாண்டமான ஏகாதிபத்திய-எதிர்ப்பு இயக்கத்தை உருவாக்கினுர்கள்.

4. லூ தி-பிங் என்பவன் கோமிந்தாங் யுத்தப்பிரபு. அவன் 1928ல், ஹுனுன் மாகாணத்திற் கோமிந்தாங் கவர்னராக இருந்தான்.

5. 1929 மார்ச்-ஏப்ரலில், நான்கிங் கோமிந்தாங் யுத்தப்பிரபுவான சியாங் கை-ஷேக்கிற்கும் குவாங்சி யுத்தப்பிரபுக்களான லீ சுங்-ழென், பய் சுங்-சி ஆகியோருக்குமிடையில் நடந்த யுத்தம்.

6. 1928 இறுதி முதல் 1929 ஆரம்பம் வரை நிலைத்த, ஹுனுன், கியாங்சியிலுள்ள கோமிந்தாங் யுத்தப்பிரபுக்களின், செஞ்சேனையின் தளப்பிரதேசமான சிங்காங் மலைகளின் மீதான மூன்றுவது படையெடுப்பு.

7. ''மத்திய கமிட்டியின் பெப்ரவரிக் கடிதம்'' என்பது முன்னணிக் கமிட்டிக்கான சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் 1929, பெப்ரவரி 9ந் திகதிய கடிதத்தைக் குறிக்கின்றது. இக்கட்டுரையில் மேற்கோள் காட்டப்பட்ட, மத்திய கமிட்டிக்கான முன்னணிக் கமிட்டியின் 1929, ஏப்ரல் 5ந் திகதிய கடிதத்தில் அக்கடிதத்தின் (மத்திய கமிட்டியின் கடிதத்தின்) உள்ளடக்கம் பொதுவாகக் கூறப்பட்டுள்ளது. அதில் அப்போதைய நிலைமை பற்றிய மதிப்பீடும் செஞ்சேனை எடுக்கவேண்டிய நடவடிக்கை பற்றிய தந்திரோபாயங்களும் என்ற பிரச்சினை பிரதானமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பிரச்சினை பற்றி மத்திய கமிட்டியின் கடிதம் முன்வைத்த கருத்துக்கள் சரியானவையாயிருக்காததால் முன்னணிக் கமிட்டி மத்திய கமிட்டிக்கான தன் கடிதத்தில் வேறுபாடான கருத்துக்களைத் தந்துள்ளது.

8. எதிர்ப்புரட்சி சக்திகள் மக்களின் புரட்சிகர சக்திகளுக்கெதிராகப் படு

கொலை முறையை உபயோகித்ததைக் குறிக்கின்றது.

9. ''கட்சியின் ஆருவது தேசிய காங்கிரஸ்'' என்பது 1928 ஜூலையில் நடைபெற்ற சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆருவது தேசிய காங்கிரஸாகும். 1927ம் ஆண்டுப் புரட்சியின் தோல்விக்குப் பின்னர், சீனப் புரட்சி ஏகாதிபத்திய-எதிர்ப்பும் நிலப்பிரபுத்துவ-எதிர்ப்பும் உடைய பூர்ஷுவா ஜனநாயகப் புரட்சியின் தன்மையையுடையதாக இருக்கின்றதெனவும் புதிய புரட்சிப் பேரெழுச்சி தவிர்க்கப்பட முடியாதது, ஆனல் அது இன்னும் நிகழவில்லை, ஆகவே அச்சமயத்திற் புரட்சிக்கான பொதுமார்க்கம் பொதுமக்களை வென்றெடுப்பதாகவே இருக்கவேண்டுமெனவும் அந்தக் காங்கிரஸ் சுட்டிக்காட்டியது. ஆருவது காங்கிரஸ் சென் து-சியூவின் 1927 வலதுசாரிச் சரணடைதல்வாதத்துடன் கணக்கு முடித்தது; 1927ம் ஆண்டுப் புரட்சித் தோல்விக்குப் பின்னர், 1927ம் ஆண்டின் முடிவிலும் 1928ம் ஆண்டின் ஆரம்பத்திலும் கட்சியில் ஏற்பட்ட ''இடதுசாரி''க் கண்மூடித்தனவாதத்தையும் விமர்சித்து நிராகரித்தது.

10. 1929ல், செஞ்சேனை சிங்காங் மலைகளிலிருந்து கிழக்குப் பக்கமாக ஃபூகியனை நோக்கிப் படையெடுத்துச் சென்று அங்கே புதிய புரட்சிகரத் தளப் பிரதேசமொன்றைத் திறந்துவைத்து, மேல் ஃபூகியனிலுள்ள லுங்யென், யுங்திங், ஷாங்ஹாங் ஆகிய மாவட்டங்களில் மக்களின் புரட்சிகர அரசியலதிகாரத்தை ஸ்தாபித்தது.

11. ஸ்திரமான தளப்பிரதேசங்கள் என்பவை தொழிலாளர்-விவசாயிகள் செஞ்சேனையால் நிறுவப்பட்ட ஒப்பீட்டளவில் ஸ்திரமான புரட்சிகரத் தளப்பிரதேசங்கள்.

12. சியாங் போ-செங் அப்பொழுது செகியாங் மாகாணத்தின் கோமிந்தாங் அமைதிப் பேணும் படையின் தளபதியாயிருந்தவன்.

13. சென் கோ-ஹுய்யும் லூ சிங்-பாங்கும் ஃபூகியனிலிருந்த பேர்பெற்ற கொள்ளைக்காரர்கள். அவர்களது படைகள் கோமிந்தாங் ராணுவத்திற் சேர்த்துக் கொள்ளப்பட்டன.

14. சாங் சென் கோமிந்தாங் ராணுவத்தின் டிவிஷன் கமாண்டராக இருந்தான்.

15. சு பெய்-தே என்பவன் கோமிந்தாங் யுத்தப்பிரபு. அவன் அப்பொழுது கியாங்சி மாகாணத்திற் கோமிந்தாங் கவர்னராக இருந்தான்.

16. சியுங் ஷு-ஹுய் அப்போது கியாங்சி மாகாணத்திலிருந்த கோமிந்தாங் படையின் டிவிஷன் கமாண்டராக இருந்தான்.

தீர்ப்பதற்குரிய அதியுயர்ந்த போராட்ட வடிவம்; தனியுடைமைமுறையும் வர்க்கங்களும் தோன்றியது முதல் யுத்தமும் இருந்துவருகின்றது. யுத்தத்தின் சூழ்நிலைகளையும் அதன் இயல்பையும் பிற காரியங்களுடனுன அதன் உறவுகளையும் புரிந்துகொண்டாலன்றி, யுத்தத்தின் விதிகளை அறிந்துகொள்ளவோ, யுத்தத்தை எவ்வாறு வழிநடத்துவதென்பதை அறிந்துகொள்ளவோ, வெற்றியை ஈட்டவோ முடியாது.

புரட்சிகர யுத்தம், புரட்சிகர வர்க்க யுத்தமாயினும் புரட்சிகரத் தேசிய யுத்தமாயினும், பொதுவான யுத்தத்தின் சூழ்நிலைகளோடும் இயல்போடும் கூடவே அதன் சொந்த, விசேஷமான சூழ்நிலைகளையும் இயல்பையும் கொண்டிருக்கிறது. ஆகவே யுத்தத்தின் பொது விதிகளோடு கூடவே அது அதன் சொந்த, விசேஷமான விதிகளையும் கொண்டிருக்கிறது. அதன் விசேஷமான சூழ்நிலைகளையும் இயல்பையும் புரிந்துகொண்டாலன்றி, அதன் விசேஷமான விதிகளைப் புரிந்துகொண்டாலன்றி, ஒரு புரட்சிகர யுத்தத்தை வழிநடத்தவும் அதில் வெற்றி பெறவும் முடியாது.

சீனுவின் புரட்சிகர யுத்தம், உள்நாட்டு யுத்தமாயினும் தேசிய யுத்தமாயினும், சீனுவின் விசேஷமான சூழலில் நடத்

---

டோபரில் மத்தியக் கமிட்டி வடஷென்சிக்கு நகர்ந்த பின்னர், டிசம்பரில் தோழர் மாஓ சேதுங் அவர்கள் ''ஜப்பானிய ஏகாதிபத்திய-எதிர்ப்புத் தந்திரோபாயங்கள் பற்றி'' என்ற அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்து, இரண்டாவது புரட்சிகர உள்நாட்டு யுத்தத்தில் கட்சியின் அரசியல் மார்க்கம் சம்பந்தமான பிரச்சினைகளை ஒழுங்குமுறையாகத் தீர்த்துவைத்தார். இந்தக் கட்டுரையை அவர் சீனுவின் புரட்சிகர யுத்தத்திலான யுத்ததந்திரப் பிரச்சினைகளை ஒழுங்குமுறையாக விளக்குவதற்காக, ஒரு வருடம் பின்னர், 1936, டிசம்பரில் எழுதினர்.

தப்பெறுகிறது, ஆகவே அதனைப் பொதுவான யுத்தத்திலிருந்தும் பொதுவான புரட்சிகர யுத்தத்திலிருந்தும் வேறுபடுத்தும் அதன் சொந்த, விசேஷமான சூழ்நிலைகளையும் இயல்பையும் கொண்டிருக்கிறது. ஆகவே, பொதுவான யுத்தத்தின் விதிகளுடனும் பொதுவான புரட்சிகர யுத்தத்தின் விதிகளுடனும் கூடவே, அது அதன் சொந்த விசேஷமான விதிகளையும் கொண்டிருக்கிறது. இவற்றைப் புரிந்துகொண்டாலன்றி, சீனுவின் புரட்சிகர யுத்தத்தில் வெல்ல முடியாது.

ஆகவே, நாம் பொதுவான யுத்தத்தின் விதிகளை ஆராயவேண்டும், புரட்சிகர யுத்தத்தின் விதிகளையும் ஆராயவேண்டும், இறுதியாகச் சீனுவின் புரட்சிகர யுத்தத்தின் விதிகளையும் ஆராயவேண்டும்.

சிலர், நாம் நெடுங்காலத்திற்கு முன்னரே மறுத்துரைத்த ஒரு தவறுன கருத்தைக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் பொதுவான யுத்தத்தின் விதிகளை மட்டும் ஆராய்வதே போதும், அல்லது மேலும் திட்டவட்டமாகக் கூறுவதாயின், பிற்போக்குச் சீன அரசாங்கத்தாலோ அல்லது சீனுவிலுள்ள பிற்போக்கு ராணுவக் கலாசாலைகளாலோ பிரசுரிக்கப்படும் ராணுவ நூல்களை மட்டும் பின்பற்றுவதே போதும் என்கின்றனர். இந்த நூல்கள் பொதுவான யுத்தத்தின் விதிகளை மட்டுமே தருவதோடு அவை முற்றுக வெளிநாடுகளிலிருந்து அப்படியே எடுக்கப்பட்டவை என்பதையும், நாம் அவற்றை வடிவிலோ உள்ளடக்கத்திலோ எந்த மாற்றமுமின்றி அப்படியே எடுத்துப் பிரயோகிப்போமானுல், நாம் ''சப்பாத்துகளுக்கு அளவாகக் கால்களை வெட்டிக்கொள்''பவர்களாகித் தோல்வியடைவோம் என்பதையும் அவர்கள் காண்கின்றனரில்லை. அவர்களின் வாதம்: இரத்தத்தை விலைகொடுத்துப் பெறப்பட்ட அறிவு

ஏன் உபயோகமற்றதாக இருக்கவேண்டும் என்பதாகும். அவ்வாறு பெறப்பட்ட முந்திய அனுபவத்தை நாம் பெருந்தனமாகக் கொள்ளவேண்டுமாயினும், எமது சொந்த இரத்தத்தை விலைகொடுத்துப் பெறப்பட்ட அனுபவத்தையும் நாம் பெருந்தனமாகக் கொள்ளவேண்டும் என்பதை அவர்கள் காணத் தவறுகின்றனர்.

பிறர் அதுவும் நாம் நெடுங்காலத்திற்கு முன்னரே மறுத்துரைத்ததான இரண்டாவதொரு தவறான கருத்தைக் கொண்டுள்ளனர். இவர்கள் ரஷ்யாவிலான புரட்சிகர யுத்தத்தின் அனுபவத்தை மட்டும் ஆராய்ந்தாலே போதும், அல்லது மேலும் திட்டவட்டமாகக் கூறுவதானால், சோவியத் யூனியனிலான உள்நாட்டு யுத்தம் எந்த விதிகளால் வழிநடத்தப்பட்டதோ அந்த விதிகளையும் சோவியத் ராணுவ ஸ்தாபனங்களால் பிரசுரிக்கப்படும் ராணுவ நூல்களையும் மட்டும் பின்பற்றினாலே போதும் என்கின்றனர். இந்த விதிகளும் நூல்களும் சோவியத் யூனியனின் உள்நாட்டு யுத்தத்தினதும் சோவியத் செஞ்சேனையினதும் குறிப்பான குணாதிசயங்களை உள்ளடக்குகின்றன என்பதையும், நாம் எந்த மாற்றத்தையும் அனுமதியாமல் அவற்றை அப்படியே எடுத்துப் பிரயோகிப்போமானால் நாம் ''சப்பாத்துகளுக்கு அளவாகக் கால்களை வெட்டிக்கொள்''பவர்களாகித் தோல்வியடைவோம் என்பதையும் இவர்கள் காண்கின்றனரில்லை. இவர்களின் வாதம்: எமது யுத்தம் சோவியத் யூனியனின் யுத்தத்தைப் போல் ஒரு புரட்சிகர யுத்தமாகையாலும், சோவியத் யூனியன் வெற்றியீட்டியதாகையாலும், சோவியத் உதாரணத்தைப் பின்பற்றுவதைவிட மாற்று வழி எதுவும் எப்படி இருக்க முடியும் என்பதாகும். சோவியத் யூனியனின் யுத்த அனுபவமே புரட்சிகர யுத்தத்தின் மிக

அண்மைக் கால அனுபவமாகையாலும், அது லெனினினதும் ஸ்டாலினினதும் வழிகாட்டலின்கீழ்ப் பெறப்பட்ட அனுபவ மாகையாலும் நாம் அதை மிக பெருந்தனமாகக் கொள்ள வேண்டுமாயிருக்கையில், சீனப் புரட்சிக்கும் சீனச் செஞ்சேனைக் கும் குறிப்பானவையான பல அம்சங்கள் உள்ளனவாகையால் நாம் அதேபோலச் சீனுவின் புரட்சிகர யுத்தத்தின் அனுபவத் தையும் பெருந்தனமாகக் கொள்ளவேண்டும் என்பதை இவர் கள் காணத் தவறுகின்றனர்.

இன்னும் சிலர், அதேபோல நாம் நெடுங்காலத்திற்கு முன்பே மறுத்துரைத்ததான மூன்ருவதொரு தவருன கருத்தைக் கொண்டுள்ளனர். அவர்கள், மிக மதிப்புவாய்ந்த அனுபவம் 1926-27ன் வட படையெடுப்பு யுத்த[1]த்தின் அனுபவமென்றும் நாம் அதிலிருந்து கற்றுக்கொள்ளவேண்டும், அல்லது மேலும் திட்டவட்டமாகக் கூறுவதானுல், நாம் வட படையெடுப்பு யுத்தத்தின் மாதிரியைப் பின்பற்றி, ஒரேயடியாக முன்னேக்கிச் செல்லவும் பெரிய நகரங்களைக் கைப்பற்றவும் வேண்டும் என் றும் கூறுகின்றனர். நாம் வட படையெடுப்பு யுத்தத்தின் அனுபவத்திலிருந்து கற்றுக்கொள்ள வேண்டுமாயினும், எமது தற்போதைய யுத்தத்தின் சூழ்நிலைகள் வேறுவிதமானவையா கையால் அது யாந்திரிக ரீதியில் எடுத்துப் பிரயோகிக்கப்படக் கூடாது என்பதை அவர்கள் காணத் தவறுகின்றனர். நாம் வட படையெடுப்பு யுத்தத்திலிருந்து இன்று இன்னும் பொருந் துவதை மட்டுமே எடுக்கவும், தற்போதைய சூழ்நிலைகளின் பிரகாரம் எமது சொந்தமான விஷயங்களைத் தீர்மானிக்கவும் வேண்டும்.

இவ்வாருக, வெவ்வேறு யுத்தங்களை வழிநடத்துவதற்கான வெவ்வேருன விதிகள் அந்த யுத்தங்களின் வெவ்வேருன சூழ்

நிலைகளால் — அவற்றின் காலம், இடம், இயல்பு ஆகியவற்றிலான வித்தியாசங்களால் — நிர்ணயிக்கப்படுகின்றன. கால அம்சத்தைப் பொறுத்தவரையில், யுத்தம், அதை வழிநடத்தும் விதிகள் இரண்டுமே அபிவிருத்தியடைகின்றன; ஒவ்வொரு வரலாற்றுக் கட்டமும் அதன் விசேஷ குணாதிசயங்களைக் கொண்டுள்ளது. ஆகவே, ஒவ்வொரு வரலாற்றுக் கட்டத்திலும் யுத்தத்தின் விதிகள் அவற்றின் விசேஷ குணாதிசயங்களைக் கொண்டவையாக இருக்கின்றன; அவை மற்றொரு கட்டத்தில் யாந்திரிக ரீதியிற் பிரயோகிக்கப்பட முடியாது. யுத்தத்தின் இயல்பைப் பொறுத்த வரையில், புரட்சிகர யுத்தம், எதிர்ப்புரட்சிகர யுத்தம் இரண்டும் அவ்வவற்றின் விசேஷ குணாதிசயங்களைக் கொண்டவையாகையால், அவற்றை ஆட்சி செய்யும் விதிகளும் அவ்வவற்றின் சொந்தக் குணாதிசயங்களைக் கொண்டிருக்கின்றன; ஒன்றிற்குப் பொருந்தும் விதிகள் யாந்திரிக ரீதியில் மற்றதற்குக் கொண்டு பொருத்தப்பட முடியாது. இட அம்சத்தைப் பொறுத்தவரையில், ஒவ்வொரு நாடும் அல்லது தேசமும், விசேஷமாகப் பெரியதான ஒரு நாடு அல்லது தேசம், அதன் சொந்தக் குணாதிசயங்களைக் கொண்டுள்ளதாகையால், ஒவ்வொரு நாட்டுக்கும் அல்லது தேசத்திற்குமான யுத்தத்தின் விதிகளும் அவற்றின் சொந்தக் குணாதிசயங்களைக் கொண்டுள்ளன; இங்கும் ஒன்றிற்குப் பொருந்தும் விதிகள் யாந்திரிக ரீதியில் மற்றதற்குக் கொண்டு பொருத்தப்பட முடியாது. வெவ்வேறு வரலாற்றுக் கட்டங்களில் நிகழ்பவையும், இயல்பில் வேறுபடுபவையும், வெவ்வேறு இடங்களிலும் வெவ்வேறு தேசங்களாலும் நடத்தப்படுபவையுமான யுத்தங்களை வழிநடத்துவதற்கான விதிகளை ஆராய்வதில் நாம் ஒவ்வொன்றினதும் குணாதிசயங்களுக்கும் அபிவிருத்திக்கும் எமது கவனத்தைச்

செலுத்தவும், யுத்தப் பிரச்சினையைப் பொறுத்து யாந்திரிகமான அணுகுமுறையை மேற்கொள்வதை எதிர்க்கவும் வேண்டும்.

இவ்வளவு மட்டுமல்ல. தொடக்கத்தில் ஒரு சிறு படைப் பிரிவிற்கு மட்டுமே ஆணை தர வல்லவரான ஒரு தளபதி பெரிய படைப்பிரிவிற்கு ஆணை தர வல்லவராக ஆகினுல், அது அவரின் முன்னேற்றத்தையும் அபிவிருத்தியையும் குறிக்கிறது. ஒரு ஸ்தலத்தில் இயங்குவதற்கும் பல இடங்களில் இயங்குவதற்கும் இடையிலும் ஒரு வித்தியாசம் உள்ளது. தொடக்கத்தில் தனக்கு நன்கு தெரிந்த ஒரு ஸ்தலத்தில் மட்டும் போர்நடத்த வல்லவரான ஒரு தளபதி மற்றும் பல ஸ்தலங்களில் போர்நடத்த வல்லவராஞராயின் அதுவும் அவரின் முன்னேற்றத்தையும் அபிவிருத்தியையும் குறிக்கிறது. எதிரித் தரப்பிலும் எம் சொந்தத் தரப்பிலுமான தொழில்நுட்ப, தந்திரோபாய, யுத்ததந்திர அபிவிருத்திகள் காரணமாக, ஒரு குறிப்பிட்ட யுத்தத்திற்குள்ளேயும் கட்டத்திற்குக் கட்டம் சூழ்நிலைகள் வேறுபடுகின்றன. ஒரு யுத்தத்தின் தாழ்ந்த கட்டங்களில் அதற்கு ஆணை தர வல்லவரான ஒரு தளபதி அதன் உயர்ந்த கட்டங்களில் அதற்கு ஆணை தர வல்லவராஞராயின் அது அவரின் இன்னும் அதிக முன்னேற்றத்தையும் அபிவிருத்தியையும் குறிக்கிறது. ஒரு குறிப்பிட்ட அளவான படைப்பிரிவிற்கு மட்டும், ஒரு குறிப்பிட்ட ஸ்தலத்திலும் ஒரு யுத்தத்தின் அபிவிருத்தியில் ஒரு குறிப்பிட்ட கட்டத்திலும் மட்டும் ஆணை தர வல்லவராகவே இருந்துவிடும் ஒரு தளபதி, தான் எந்த முன்னேற்றத்தையுமோ, அபிவிருத்தியையுமோ அடையவில்லை என்பதைக் காண்பிக்கிறுர். தனி ஒரு திறமையுடனே நுனிப்புல் மேய்ந்த அறிவுடனே திருப்திப்பட்டு, ஒருபோதும் எந்த முன்னேற்றமும்

அடையாதிருப்பவர்கள் சிலர் உள்ளனர்; அவர்கள் புரட்சியில், ஒரு குறிப்பிட்ட இடத்திலும் சமயத்திலும் ஏதேனும் ஒரு பங்கை வகிக்கக்கூடும், ஆனால் முக்கியத்துவமுள்ள பங்கை அல்ல. எமக்கு முக்கியத்துவமுள்ள ஒரு பங்கை வகிக்கக்கூடியவர்களான யுத்தத்தை வழிநடத்துவோர் தேவை. யுத்தத்தை நிர்வகிப்பதற்கான விதிகள் எல்லாம் வரலாறு அபிவிருத்தியடைவதோடும் யுத்தம் அபிவிருத்தியடைவதோடும் கூடவே அபிவிருத்தியடைகின்றன; மாற்றமற்றது எதுவுமேயில்லை.

## 2. யுத்தத்தின் குறிக்கோள் யுத்தத்தை ஒழித்தல்

யுத்தம், மனிதர் தம்மைத் தாமே பரஸ்பரம் வதைசெய்து கொள்ளும் பிசாசு, இது மனித சமுதாயத்தின் முன்னேற்றத்தால் இறுதியில் ஒழிக்கப்படும். இது ஒழிக்கப்படும் காலமும் வெகு தூரத்தில் இல்லை. ஆனால் இதை ஒழிக்கும் ஒரே ஒரு வழி யுத்தத்தை யுத்தத்தால் எதிர்ப்பது, எதிர்ப்புரட்சி யுத்தத்தைப் புரட்சி யுத்தத்தால் எதிர்ப்பது, தேசிய எதிர்ப்புரட்சி யுத்தத்தைத் தேசியப் புரட்சி யுத்தத்தால் எதிர்ப்பது, எதிர்ப்புரட்சி வர்க்க யுத்தத்தைப் புரட்சிகர வர்க்க யுத்தத்தால் எதிர்ப்பது ஆகும். வரலாறு இரண்டு வகையான, நீதியானவை, அநீதியானவை ஆகிய யுத்தங்களைத்தான் கண்டுள்ளது. நாம் நீதியான யுத்தங்களை ஆதரித்து அநீதியான யுத்தங்களை எதிர்க்கிறோம். எதிர்ப்புரட்சிகர யுத்தங்கள் எல்லாம் அநீதியானவை; புரட்சிகர யுத்தங்கள் எல்லாம் நீதியானவை. மனித குலத்தின் யுத்த சகாப்தம் எமது சொந்தப் பிரயத்தனங்களால் முடிவுக்குக் கொண்டுவரப்படும்; ஐயத்திற்கிட

மின்றி, நாம் நடத்தும் யுத்தம் இவ்விறுதிப் போரில் ஒரு பகுதியாகும். ஆனல் சந்தேகத்திற்கிடமின்றி, நாம் எதிர் நோக்கும் யுத்தம் எல்லா யுத்தங்களிலும் மிகப் பெரியதும் மிகத் தாட்சணியமற்றதுமான யுத்தத்தின் ஒரு பகுதியாகவும் இருக்கும். அநீதியான எதிர்ப்புரட்சிகர யுத்தங்களிலெல்லாம் மிகப் பெரியதும் மிகத் தாட்சணியமற்றதுமான யுத்தம் எம்மைப் பயமுறுத்துகிறது; நாம் நீதியான யுத்தமாகிய துவஜத்தை உயர்த்தாவிட்டால் மனித குலத்தின் மிகுந்த பெரும்பான்மை விநாசமுறும். மனித குலத்தின் நீதியான யுத்தத் துவஜமே மனித குலத்தின் ஈடேற்றத் துவஜம். சீனுவின் நீதியான யுத்தத் துவஜமே சீனுவின் ஈடேற்றத் துவஜம். மனித குலத்தினதும் சீன மக்களினதும் மிகுந்த பெரும்பான்மையினரால் நடத்தப்படும் ஒரு யுத்தம் ஐயத்திற்கிடமின்றி நீதியான ஒரு யுத்தமும், மனித குலத்தினதும் சீனுவினதும் ஈடேற்றத்திற்கான மிக உயரியதும் புகழ்செறிந்ததுமான பணியும் உலக வரலாற்றில் ஒரு புதிய சகாப்தத்திற்கான பாலமும் ஆகும். மனித சமுதாயம் வர்க்கங்கள் ஒழிக்கப்பட்ட, அரசுகள் ஒழிக்கப்பட்ட ஒரு கட்டத்துக்கு முன்னேறியதும், அங்கு எந்த விதமான யுத்தங்களும் இருக்கமாட்டா. எதிர்ப்புரட்சி யுத்தங்களோ, புரட்சி யுத்தங்களோ, அநீதியான யுத்தங்களோ, நீதியான யுத்தங்களோ இருக்கமாட்டா. இது மனித குலத்துக்கு நித்திய சமாதான சகாப்தமாக இருக்கும். புரட்சி யுத்தங்களின் விதிகள் பற்றிய நமது ஆராய்வு எல்லா யுத்தங்களையும் ஒழிக்கும் நமது ஆசையிலிருந்து தோன்றுகின்றது; கம்யூனிஸ்டுகளாகிய நம்மையும் எல்லாச் சுரண்டும் வர்க்கங்களையும் வேறுபடுத்திக் காட்டும் எல்லைக்கோடு இதுவே.

### 3. யுத்ததந்திரமென்பது ஒரு முழுமையான யுத்த நிலைமையின் விதிகளை ஆராய்வதாகும்

யுத்தமுள்ள போதெல்லாம் முழுமையான யுத்த நிலைமை ஒன்றுள்ளது. ஒரு முழுமையான யுத்த நிலைமை உலகம் முழுவதையும் அடக்கக்கூடும், ஒரு நாடு முழுவதையும் அடக்கக் கூடும், அல்லது ஒரு சுதந்திரக் கொரில்லாப் பிராந்தியத்தையோ ஒரு சுதந்திரமான பெரிய போர் நடவடிக்கை முனையையோ அடக்கவுங்கூடும். தன் பல்வேறு அம்சங்களினதும் கட்டங்களினதும் கூட்டு மொத்தமான கணிப்பிடுதலைப் பெறும் எந்த யுத்த நிலைமையும் ஒரு முழுமையான யுத்த நிலைமை ஆகிறது.

யுத்ததந்திர விஞ்ஞானத்தின் பணி ஒரு முழுமையான யுத்த நிலைமையை ஆட்சி செய்வதான, யுத்தத்தை வழிநடத்தும் விதிகளை ஆராய்வதாகும். போரியக்க விஞ்ஞானத்தினதும் தந்திரோபாய விஞ்ஞானத்தினதும் பணி ஒரு பகுதி நிலைமையை ஆட்சி செய்வதான, யுத்தத்தை வழிநடத்தும் விதிகளை ஆராய்வதாகும்.

ஒரு போர் நடவடிக்கையின், அல்லது ஒரு தந்திரோபாய ரீதியான நடவடிக்கையின் தளபதி ஒருவர் யுத்ததந்திர விதிகளை ஓரளவிற்குப் புரிந்துகொள்ளவேண்டியது ஏன் அவசியம்? ஏனெனில், முழுமையைப் பற்றிய ஒரு விளக்கம் ஒரு பகுதியை நன்கு கையாள்வதற்குத் துணைசெய்கிறது; பகுதி முழுமைக்குக் கீழ்ப்பட்டதாக இருக்கிறது. யுத்ததந்திர ரீதியான வெற்றி தந்திரோபாய ரீதியான வெற்றிகளால் நிர்ணயிக்கப்படுகிறது என்ற கருத்து தவறானது; ஏனெனில், அது ஒரு யுத்தத்தில் வெற்றி அல்லது தோல்வி, முதலாவதாயும் முக்கியமாயும்,

முழுமையான நிலைமையும் அதன் பல்வேறு கட்டங்களும் தகுந்தவாறு கணக்கில் எடுக்கப்பட்டுள்ளனவா இல்லையா என்ற பிரச்சினையில் தங்கியிருக்கிறது என்பதைப் புறக்கணிக்கிறது. முழுமையான நிலைமையையும் அதன் பல்வேறு கட்டங்களையும் கணக்கில் எடுப்பதில் பாரதூரமான குறைபாடுகள் அல்லது பிழைகள் இருந்தால், அந்த யுத்தம் நிச்சயமாகத் தோற்கும். ''ஒரு கவனயீனமான செயல் ஆட்டம் முழுவதையும் தோல்வி யாக்குகிறது'' என்பது நிலைமையை முழுமையாகப் பாதிக் கும் ஒரு செயலையே, நிலைமை முழுமைக்கும் தீர்க்கமான ஒரு செயலையே குறிப்பிடுகிறது, பகுதி இயல்பினதான ஒரு செயலை, நிலைமை முழுமைக்கும் தீர்க்கமானதல்லாத ஒரு செயலை அல்ல. சதுரங்கத்தில் எப்படியோ, யுத்தத்திலும் அப்படியே.

ஆனுல் முழுமையான நிலைமை அதன் பகுதிகளிலிருந்து துண் டிக்கப்பட்டு தனியானதாக இயலாது; ஏனெனில், அது அதன் பகுதிகள் எல்லாவற்றுலும் ஆனதே. சில சமயங்களில், சில பகுதிகள் முழுமையான நிலைமைக்குத் தீர்க்கமான முக்கியத் துவம் உடையவை அல்லவாகையால் இந்தப் பகுதிகள் அழி வையோ தோல்வியையோ உற்றுலும் முழுமையான நிலைமை யைப் பாரதூரமாகப் பாதிக்காமல் இருக்கக்கூடும். யுத்தத்தில் தந்திரோபாய ரீதியான நடவடிக்கைகளில் அல்லது போர் நடவடிக்கைகளிலான சில தோல்விகள், வெற்றிபெறுமை ஆகி யவை தீர்க்கமான முக்கியத்துவம் உடையவை அல்லவாகை யால், பல சமயங்களில் முழுமையான யுத்த நிலைமையில் மோசமடைதலை ஏற்படுத்துவதில்லை. ஆனுல் முழுமையான யுத்த நிலைமையை ஆக்கும் போர் நடவடிக்கைகளில் அனேக மானவற்றின், அல்லது ஓரிரு தீர்க்கமான போர் நடவடிக்கை களின் தோல்வி உடனே முழுமையான யுத்த நிலைமையை

தெரிந்துவிடுவது மட்டுமே பின்னர் ஏற்படும் ஒரு சண்டையில் தோல்வியை ஏற்படுத்தக் கூடும், ஆனால் செம் பிரதேசங்களில் தகவல் வெளிப்படுதல் பல சமயம் மிகப் பாரதூரமான ஒரு விஷயமாக இருப்பதில்லை. உயர் தளபதிகள் சில போர் நடவடிக்கைகளில் தாமே நேரடியாகப் பங்குபற்றுவது அவசியம், பிறவற்றில் அவசியமில்லை. ஒரு ராணுவக் கல்லூரியைப் பொறுத்தவரை, ஒரு அதிபரையும், போதகாசிரியர்களையும் தேர்ந்தெடுப்பதும், ஒரு கல்விக் கொள்கையை வகுப்பதும் மிக முக்கியமான பிரச்சினையாகும். வெகுஜனக் கூட்டமொன்றிற்குப் பிரதான காரியம் அதிற் பங்குபற்ற வெகுஜனங்களை அணிதிரட்டுவதும் தகுந்த கோஷங்களை முன்வைப்பதுமாகும். இப்படியே ஒவ்வொன்றிற்கும். ஒரு வார்த்தையிற் கூறினால், கோட்பாடு என்பது என்னவென்றால், நிலைமை முழுமைக்கும் சம்பந்தப்பட்ட முக்கிய இணைப்புகளில் எமது கவனத்தை மையப்படுத்திச் செலுத்துவது என்பதாகும்.

ஒரு முழுமையான யுத்த நிலைமையை ஆட்சி செய்யும் விதிகளைப் படிப்பதற்குள்ள ஒரே வழி சிறிதளவு கடும் சிந்தனை செய்வதுதான். ஏனெனில், நிலைமை முழுமையும் சம்பந்தப்பட்ட விஷயம் கண்ணுக்குப் புலப்படாது; நாம் அதைக் கடும் சிந்தனையின் மூலம் மட்டுமே புரிந்துகொள்ள முடியும்; கடும் சிந்தனை செய்யாவிட்டால் அதைப் புரிந்துகொள்ளமுடியாது. ஆனால் முழுமையான நிலைமை பகுதிகளால் ஆனதாகையால், பகுதிகள் பற்றி அனுபவம், போர் நடவடிக்கைகளையும் தந்திரோபாயங்களையும் பற்றி அனுபவம் உடையவர்கள், அவர்கள் கடுமையாகச் சிந்திக்க மனமுடையவர்களாக இருக்கும் பட்சத்தில், இன்னும் உயர்ந்த தரத்து விஷயங்களைப் புரிந்துகொள்ள இயலும். யுத்ததந்திரப் பிரச்சினைகளிற் பின்வருவன அடங்கும்:

எதிரிக்கும் எமக்கும் இடையிலான உறவைத் தகுந்தபடி கருத்திற்கொள்வது;

பல்வேறு போர் நடவடிக்கைகளுக்கிடையிலோ, பல்வேறு போர் நடவடிக்கைக் கட்டங்களுக்கிடையிலோ ஆன உறவைத் தகுந்தபடி கருத்திற்கொள்வது;

நிலைமை முழுமைக்கும் சம்பந்தப்பட்ட (தீர்க்கமானவையான) பகுதிகளைத் தகுந்தபடி கருத்திற்கொள்வது;

பொதுவான நிலைமையில் அடங்கியிருக்கும் விசேஷ தன்மைகளைத் தகுந்தபடி கருத்திற்கொள்வது;

முன்னணிக்கும் பின்னணிக்கும் இடையிலான உறவைத் தகுந்தபடி கருத்திற்கொள்வது;

இழப்புகளுக்கும் அவற்றை நிரப்புதலுக்கும் இடையிலும், சண்டையிடுவதற்கும் இளைப்பாறுவதற்கும் இடையிலும், ஓரிடத்திற் குவிப்பதற்கும் சிதறலாகப் பரவுவதற்கும் இடையிலும், தாக்குதலுக்கும் தற்காப்புக்கும் இடையிலும், முன்னேறுவதற்கும் பின்வாங்குவதற்கும் இடையிலும், மறைந்திருப்பதற்கும் வெளிப்படையாயிருப்பதற்கும் இடையிலும், பிரதான தாக்குதலுக்கும் துணைத் தாக்குதல்களுக்கும் இடையிலும், சாடுதலுக்கும் கட்டுப்படுத்தும் நடவடிக்கைக்கும் இடையிலும், மத்தியப்படுத்திய ஆணைக்கும் பன்முகப்படுத்திய ஆணைக்கும் இடையிலும், நீண்ட யுத்தத்திற்கும் விரைவில் வெற்றி தோல்வி காணும் யுத்தத்திற்கும் இடையிலும், ஸ்தான யுத்தத்திற்கும் நடமாட்ட யுத்தத்திற்கும் இடையிலும், எமது படைகளுக்கும் நேசப் படைகளுக்கும் இடையிலும், ஒரு ராணுவ அங்கத்திற்கும் மற்றொரு ராணுவ அங்கத்திற்கும் இடையிலும், மேல் மட்டங்களுக்கும் கீழ் மட்டங்களுக்கும் இடையிலும், இயக்குனர்களுக்கும் சாதா

ரண படையினருக்கும் இடையிலும், 'பழைய படைவீரர் களுக்கும் புதிய படைவீரர்களுக்கும் இடையிலும், சிரேஷ்ட இயக்குனர்களுக்கும் கனிஷ்ட இயக்குனர்களுக்கும் இடையிலும், பழைய இயக்குனர்களுக்கும் புதிய இயக்குனர்களுக் கும் இடையிலும், செம்பிரதேசங்களுக்கும் வெண்பிரதே சங்களுக்கும் இடையிலும், பழைய செம்பிரதேசங்களுக்கும் புதிய செம்பிரதேசங்களுக்கும் இடையிலும், ஒரு குறிப்பிட்ட தளப்பிரதேசத்தின் மத்திய டிஸ்திரிக்டிற்கும் எல்லைப் பகு திகளுக்கும் இடையிலும், உஷ்ணகாலத்திற்கும் குளிர்காலத் திற்கும் இடையிலும், வெற்றிக்கும் தோல்விக்கும் இடை யிலும், பெரிய படைப் பிரிவுகளுக்கும் சிறிய படைப் பிரி வுகளுக்கும் இடையிலும், கிரமமான சேனைக்கும் கொரில் லாப் படைகளுக்கும் இடையிலும், எதிரியை அழிப்பதற்கும் வெகுஜனங்களை வென்றெடுப்பதற்கும் இடையிலும், செஞ் சேனையை விரிவுபடுத்துவதற்கும் அதை ஸ்திரப்படுத்துவதற் கும் இடையிலும், ராணுவ வேலைக்கும் அரசியல் வேலைக்கும் இடையிலும், கடந்த காலப் பணிகளுக்கும் தற்போதைய பணிகளுக்கும் இடையிலும், தற்போதைய பணிகளுக்கும் எதிர்காலப் பணிகளுக்கும் இடையிலும், ஒரு சூழ்நிலைக ளிலிருந்து எழும் பணிகளுக்கும் மற்றொரு சூழ்நிலைகளிலி ருந்து எழும் பணிகளுக்கும் இடையிலும், நிலையான முனை களுக்கும் நிலையற்ற முனைகளுக்கும் இடையிலும், உள்நாட்டு யுத்தத்திற்கும் தேசிய யுத்தத்திற்கும் இடையிலும், வர லாற்று ரீதியான ஒரு கட்டத்திற்கும் மற்றொரு கட்டத்திற் கும் இடையிலும், இத்தியாதி பிறவற்றிற்கு இடையிலுமான வேற்றுமைகளையும் தொடர்புகளையும் தகுந்தபடி கருத்திற் கொள்வது.

இந்த யுத்ததந்திரப் பிரச்சினைகளில் எதுவும் கண்ணுக்குப் புலப் படாது; ஆயினும் நாம் கடுமையாகச் சிந்தித்தால் எம்மால் இவை அனைத்தையும் தெளிந்து கொள்ளவும் கிரகித்துக்கொள் ளவும் அவற்றில் தேர்ச்சி பெறவும் முடியும், அதாவது, நாம் யுத்தம் சம்பந்தமானவையும் போர் நடவடிக்கைகள் சம்பந் தமானவையுமான முக்கிய பிரச்சினைகளை ஒப்புநோக்காக உயர்ந்த மட்டமான கோட்பாட்டு மட்டத்திற்கு உயர்த்தி அவற்றைத் தீர்க்கமுடியும். யுத்ததந்திரப் பிரச்சினைகளனைத் தையும் ஆராய்வதில் எமக்குள்ள பணி இந்த இலக்கை அடை வதாகும்.

## 4. முக்கியமான காரியம் கற்பதிற் சிறந்தவர்களாக இருப்பதே

நாம் ஏன் செஞ்சேனையை அணிதிரட்டியுள்ளோம்? எதிரி யைத் தோற்கடிக்கும் நோக்கத்திற்காக. நாம் ஏன் யுத்தத் தின் விதிகளைக் கற்கிறோம்? அவற்றை யுத்தத்திற் பிரயோ கிப்பதற்காக.

கற்பது இலகுவான வேலையல்ல, கற்றதைப் பிரயோகிப்பது இன்னும் கடினமானது. பல பேர் வகுப்பறைகளில் அல்லது புத்தகங்களில் ராணுவ விஞ்ஞானத்தைப் பற்றி வியாக்கியா னம் செய்யும் போது காத்திரமாகத் தோன்றுகின்றனர். ஆனல் உண்மையிற் போர் செய்வதென்று வரும்போதோ சிலர் சண் டைகளில் வெல்கின்றனர், பிறர் தோற்கின்றனர். யுத்தத் தின் வரலாறு, யுத்தத்தில் எமது அனுபவம் இரண்டும் இந்த விஷயத்தை நிரூபித்துள்ளன.

அப்படியானால் விஷயத்தின் கேந்திர அம்சம் எதில் உள்ளது?

நிஜ வாழ்வில் ''என்றும் வெற்றிகொள்ளும் தளபதி'' வேண்டுமென எதிர்பார்க்க முடியாது. ஏனென்றால் வரலாற்றில் இப்படிப்பட்டவர்கள் காணக் கிடைப்பது அரிது. நாம் வேண்டுமென எதிர்பார்க்கக்கூடியது ஒரு யுத்தத்தின்போது தங்கள் சண்டைகளில் பொதுவாக வெல்பவர்களும் துணிவும் அறிவாற்றலும் உடையவர்களுமான தளபதிகளையே, அறிவையும் துணிவையும் ஒருங்கு கொண்ட தளபதிகளையே. அறிவு துணிவு இரண்டுமுடையவராவதற்கு ஒரு முறையை, கற்பதிலும் அதே போல் கற்றதைப் பிரயோகிப்பதிலும் உபயோகிக்கப்படுவதற்கான ஒரு முறையைக் கற்றுக்கொள்ளவேண்டும்.

என்ன முறை? எதிரியின் நிலைமையினதும் எம் சொந்த நிலைமையினதும் சகல அம்சங்களுடனும் எம்மைப் பரிச்சயப்படுத்திக்கொள்வதும், இரு தரப்புகளினதும் செய்கைகளை ஆட்சி செய்யும் விதிகளைக் கண்டுபிடிப்பதும், இந்த விதிகளை எம் சொந்த நடவடிக்கைகளில் உபயோகப்படுத்திக் கொள்வதுமே இந்த முறையாகும்.

பல நாடுகளில் வெளியாகும் ராணுவ நூல்கள் ''சூழ்நிலைகளுக்கிணங்கக் கோட்பாடுகளை வளைந்து கொடுக்கும் விதத்தில் பிரயோகிப்ப''தன் அவசியம், தோல்வி ஏற்படும் பட்சத்தில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் இரண்டையும் சுட்டுகின்றன. அவை கோட்பாடுகளை அளவிற்கதிகம் கறாராகப் பிரயோகிப்பதன் மூலம் அகநிலைப்பட்ட ரீதியில் தவறுகள் இழைப்பது குறித்து ஒரு தளபதியை எச்சரிக்க முன்னையதையும், தான் அகநிலைப்பட்ட தவறுகளை இழைத்துவிட்ட பின்னரோ, அல்லது புறநிலையான சூழ்நிலைகளில் எதிர்பாராதவையும் தடுக்க முடியாதவையுமான மாற்றங்கள் நிகழ்ந்து

விட்ட பின்னரோ, நிலைமையைச் சமாளிப்பதற்கு அவரை வல்லவராக்கப் பின்னையதையும் சுட்டுகின்றன.

அகநிலைப்பட்ட தவறுகள் ஏன் செய்யப்படுகின்றன? அவை ஒரு யுத்தத்திலோ அல்லது ஒரு சண்டையிலோ படைகள் செலுத்தப்படும் அல்லது வழிநடத்தப்படும் விதம் குறித்த காலத்தினதும் இடத்தினதும் நிலைமைகளுக்குப் பொருந்தாமையாலும் அகநிலையான வழிநடாத்தல் புறநிலையான உண்மையான நிலைமைகளுடன் இணங்காதமையாலும் அல்லது வேறுபட்டிருப்பதாலும், வேறு வார்த்தைகளிற் கூறுவதாயின், அகநிலையானதற்கும் புறநிலையானதற்கும் இடையிலான முரண்பாடு தீர்க்கப்படாமையாலும் ஏற்படுத்தப்படுகின்றன. மனிதர்கள் தாம் எதைச் செய்யும் போதும் இத்தகைய நிலைமைகளைத் தவிர்ப்பது அரிது; ஆனல் சிலர் பிறரைவிட அதிகம் திறனுடையவர்களாகத் தம்மை நிரூபித்துக்கொள்கின்றனர். எந்த வேலையிலும் நாம் ஒப்புநோக்காக உயர்ந்த மட்டத் திறனைக் கோருவது போல், அவ்வாறே யுத்தத்திலும் நாம் கூடுதலான வெற்றிகளை அல்லது மறுபுறமாகக் கூறுவதாயின், குறைவான தோல்விகளைக் கோருகின்றேம். இங்கு கேந்திரமான அம்சம் அகநிலையானதையும் புறநிலையானதையும் ஒன்றுடன் ஒன்று உரிய இணக்கத்திற்குக் கொண்டுவருவதாகும்.

தந்திரோபாயங்களில் ஒரு உதாரணத்தை எடுத்துக்கொள்வோம். தாக்குதலுக்குத் தெரிந்தெடுக்கப்பட்ட ஸ்தானம் எதிரியின் பக்கவாடுகளில் ஒன்ருகவும் அது சரியாக அவனது பலவீனமான ஸ்தானமாகவும் இருந்து, அதன் விளைவாகத் தாக்குதல் வெற்றியடைந்தால், அப்போது அகநிலையானது புறநிலையானதுடன் இணங்குகிறது, அதாவது, தளபதியின் ஒற்றறிதலும் அனுமானமும் தீர்மானமும் எதிரியின் உண்மை

யான நிலைமையோடும் அணிவகுப்போடும் இணங்கியுள்ளன எனக் கூறப்படுகிறது. தாக்குதலுக்குத் தெரிந்தெடுக்கப்பட்ட ஸ்தானம் மற்றொரு பக்கவாட்டில் அல்லது மத்தியில் இருந்து, தாக்குதல் ஒரு தடங்கலை எதிர்ப்பட்டு முன்னேறத் தவறினால், அப்போது இத்தகைய இணக்கம் இல்லை எனப்படுகிறது. தாக்குதல் உரிய நேரத்திற் செய்யப்பட்டு, கையிருப்புப்ப டைகள் ஆக முந்தியுமல்லாமல் ஆகப் பிந்தியுமல்லாமல் உப யோகிக்கப்பட்டு, போரில் மற்றைய அணிவகுப்புகளும் நடவ டிக்கைகளும் எல்லாம் எதிரிக்கல்லாமல் எமக்கே சாதகமான வையாக இருந்தால், அப்போது போர் முழுவதினூடும் அகநி லையான வழிகாட்டல் புறநிலையான நிலைமையுடன் முற்றாக இணங்குகிறது. யுத்தம் அல்லது சமர் ஒன்றில் இத்தகைய முற்றான இணக்கம் மிக மிக அரிதாகும், ஏனெனில் சண் டையிடுவோர் ஆயுதந்தாங்கியவர்களும் தங்கள் தங்கள் இர கசியங்களை ஒருவரிடமிருந்து ஒருவர் மறைத்து வைத்துக்கொள் பவர்களுமான உயிருள்ள மனிதர்களாக உள்ளனர். இது சடப் பொருட்களை அல்லது கிரமமான காரியங்களைக் கையாள் வதிலிருந்து மிக வேறானது. ஆனால் தளபதியால் தரப்பட்ட வழிகாட்டல் பெரும்பாலும் உள்ள நிலைமையோடு இணங் கினால், அதாவது, வழிகாட்டலிலான தீர்க்கமான அம்சங்கள் உள்ள நிலைமையோடு இணங்கினால், அப்போது வெற்றிக்கான அடிப்படை உள்ளது.

ஒரு தளபதியின் சரியான படை அணிவகுத்தல் அவருடைய சரியான தீர்மானங்களிலிருந்து வருகின்றது; அவருடைய சரி யான தீர்மானங்கள் அவருடைய சரியான அனுமானங்களிலி ருந்து பிறக்கின்றன; அவருடைய சரியான அனுமானங்கள் ஒரு பூரணமான, தேவையான ஒற்றறிதலிலிருந்தும், ஒற்றறி

தல் மூலம் சேகரித்த பல்வேறு வகையான தரவுகளையும் துருவி ஆராய்ந்து செப்பனிடுவதிலிருந்தும் தோன்றுகின்றன. அவர் சாத்தியமான, அவசியமான ஒற்றறியும் எல்லா முறைகளையும் பிரயோகித்து, எதிரியின் நிலைமை சம்பந்தமாகச் சேகரித்த தகவலிற் சக்கையை நீக்கிச் சாராம்சத்தை எடுத்து, பொய்மையை விலக்கி மெய்மையைக் கொண்டு, ஒன்றிலிருந்து இன்னென்றுக்கும், புறத்திலிருந்து அகத்துக்கும் சென்று, துருவித் துருவி ஆராய்கிறுர்; பின்னர் தனது பக்கத்திலுள்ள நிலைமைகளைக் கணக்கில் எடுத்து, இருதரப்பின் பலாபலத்தையும் அவற்றின் பரஸ்பர உறவுகளையும் ஆராய்ந்து, முடிவுகளுக்கு வந்து, மனதைத் திடப்படுத்தி தனது திட்டங்களை வகுக்கிறுர். ஒரு ராணுவ தந்திரி ஒரு யுத்ததந்திரத் திட்டத்தை, ஒரு போர்த் திட்டத்தை அல்லது ஒரு சமர்த் திட்டத்தை வகுப்பதற்கு முன், அவர் ஒரு நிலைமை பற்றி அறியும் பூரணமான போக்கு இத்தகையதே. ஆனுல் இதைச் செய்வதற்குப் பதிலாகக் கவனயீனமான ஒரு ராணுவ தந்திரி தனது ராணுவத் திட்டங்களைத் தன் சொந்த வீணுசையின் அடிப்படையில் அமைக்கிறுர், ஆகவே அவரது திட்டங்கள் கற்பனையானவை, யதார்த்தத்துடன் இணங்குவதில்லை. தனிய உற்சாகத்தில் தங்கிநிற்கும் கண்மூடித்தனமான ஒரு ராணுவ தந்திரி எதிரியால் ஏமாற்றப்பட்டு, அல்லது எதிரியின் நிலைமையின் மேலெழுந்தவாரியான அல்லது பகுதியான அம்சமொன்றினுல் பிழையான பாதையில் ஈர்க்கப்பட்டு, அல்லது தனக்குக் கீழுள்ளவர்களிடமிருந்து வருகின்ற, உண்மையான அறிவையோ ஆழ்ந்த திருஷ்டியையோ அடிப்படையாகக் கொண்டவையல்லாத பொறுப்பற்ற ஆலோசனைகளால் திசை திருப்பப்பட்டு தன் தலையைக் கற்சுவரில் முட்டிக்கொண்டே தீருவார். ஏனென்றுல், அவர்

ஒவ்வொரு ராணுவத் திட்டமும் அவசியமான ஒற்றறிதலையும், எதிரியின் நிலைமை, தன் சொந்த நிலைமை, அவற்றின் இடைச் சம்பந்தங்கள் ஆகியவற்றைக் கவனமாகக் கருத்திற் கொள்வதையும் அடிப்படையாகக் கொண்டிருக்கவேண்டும் என்பதை அறியவில்லை; அல்லது அறிய விரும்பமாட்டார்.

ஒரு நிலைமையை அறிதலாகிய நிகழ்வு ஒரு ராணுவத் திட்டத்தை உருவாக்கு முன்னர் மட்டுமல்ல, உருவாக்கிய பின்னரும் நடைபெறுகிறது. திட்டம் அமுலிலிடப்பட்ட கணத்திலிருந்து போர் நடவடிக்கையின் பூர்த்திவரை திட்டத்தை நிறைவேற்றுவதில் இன்னுமொரு அறிதலாகிய நிகழ்வு, அதாவது நடைமுறையாகிய நிகழ்வு இருக்கிறது. இப்பொழுது முந்திய நிகழ்வில் உருவாக்கப்பட்ட திட்டம் யதார்த்தத்துடன் இணங்குகிறதா இல்லையா என இந்த நிகழ்வின் ஊடு மறுபடியும் பரிசீலிப்பது அவசியம். அது யதார்த்தத்துடன் இணங்காவிட்டால் அல்லது பூரணமாக இணங்காவிட்டால், அப்போது எமது புதிய அறிவின் ஒளியில் புதிய கணிப்பீடுகளைச் செய்துகொள்வதும் புதிய முடிவுகளை எடுப்பதும் புதிய நிலைமைக்கு இணங்கும்படி ஆதியிலிடப்பட்ட திட்டத்தை மாற்றுவதும் அவசியமாகிறது. திட்டம் கிட்டத்தட்ட ஒவ்வொரு போர் நடவடிக்கையிலும் ஒரு பகுதியளவுக்கு மாற்றப்படுகிறது; சில சமயங்களில் முற்றாகக்கூட மாற்றப்படுகிறது. இத்தகைய மாற்றங்களுக்கான தேவையைப் புரிந்துகொள்ளாத, அல்லது இவற்றைச் செய்ய மனமில்லாத, கண்மூடித்தனமாகச் செயலாற்றுகின்ற ஒருவன் தவிர்க்க முடியாதபடி தன் தலையைக் கற்சுவரில் மோதிக்கொள்வான்.

மேற் கூறியது ஒரு யுத்ததந்திர நடவடிக்கைக்கும் அல்லது போர் நடவடிக்கைக்கும் சண்டைக்கும் பொருந்துவது. அடக்

கமுடையவராயும் கற்க மனமுள்ளவராயும் இருக்கும் பட்சத்தில் அனுபவமிக்க ராணுவ தந்திரி ஒருவர் தன்னைத் தன் சொந்தப் படைகளின் தன்மையுடன் (தளபதிகள், வீரர்கள், ஆயுதங்கள், பண்டங்கள் இத்தியாதியினவும் இவற்றின் கூட்டு மொத்தமும்) பரிச்சயப்படுத்திக்கொள்ளவும், எதிரிப் படைகளின் தன்மையுடன் (அவ்வாறே, தளபதிகள், வீரர்கள், ஆயுதங்கள், பண்டங்கள் இத்தியாதியினவும் இவற்றின் கூட்டு மொத்தமும்) பரிச்சயப்படுத்திக்கொள்ளவும், அரசியல், பொருளாதாரம், புவியியல், காலநிலை ஆகியன போன்ற யுத்தத்திற்குச் சம்பந்தமுள்ள மற்றெல்லா நிலைமைகளோடும் பரிச்சயப்படுத்திக்கொள்ளவும் வல்லவராயிருப்பார்; இத்தகைய ஒரு ராணுவ தந்திரி ஒரு யுத்தத்தை வழிநடத்துவதிலும் அல்லது போர் நடவடிக்கை ஒன்றில் ஈடுபடுவதிலும் கூடிய தெளிவைப் பெற்றிருப்பார், கூடுதலாக வெற்றிகளை ஈட்டுபவராயுமிருப்பார். ஏனெனில் ஒரு நீண்ட காலகட்டத்தின் ஊடாக அவர் எதிரித் தரப்பிலும் தன் சொந்தத் தரப்பிலுமான நிலைமையை அறிந்து கொண்டும், நடவடிக்கையின் விதிகளைக் கண்டுபிடித்தும், அகநிலையானவற்றிற்கும் புறநிலையானவற்றிற்கும் இடையிலான முரண்பாடுகளைத் தீர்த்தும் விட்டார். அறிதலின் இந்த நிகழ்வு மிக மிக முக்கியமானது; இத்தகைய ஒரு நீண்ட கால அனுபவமில்லாவிடில், ஒரு முழு யுத்தத்தினதும் விதிகளைப் புரிந்து கொள்வதும் கிரகித்துக்கொள்வதும் கடினமாயிருக்கும், புதிதாகத் தொடங்கும் ஒருவரோ, காகிதத்தில் மட்டும் போர் செய்யும் ஒருவரோ உண்மையிற் திறமையுள்ள ஒரு உயர் மட்டத் தளபதியாக முடியாது; யுத்தத்தில் உண்மையிற் சண்டை செய்வதன் மூலம் கற்றுள்ள ஒருவர் மட்டுமே அவ்வாறு ஆக முடியும்.

கோட்பாடுகளின் இயல்பினவாக உள்ளவையான ராணுவ

விதிகள், ராணுவத் தத்துவங்கள் எல்லாம் முற்காலத்தவர்களால் அல்லது தற்காலத்தவர்களால் தொகுக்கப்பட்டுள்ள கடந்தகால யுத்தங்களின் அனுபவமே. கடந்தகால யுத்தங்களின் ஒரு பிதிரார்ஜிதமான, இரத்தத்தை விலைகொடுத்துப் பெறப்பட்ட இப்பாடங்களை நாம் பொறுப்புடன் கற்கவேண்டும். இது ஒரு அம்சம். ஆனால் இன்னுமொன்றும் உள்ளது, அதாவது நாம் இந்த முடிவுகளை எம் சொந்த அனுபவத்தின் சோதனையிலிட்டு, உபயோகமானதைக் கிரகித்துக்கொள்ளவும் உபயோகமற்றதைத் தள்ளவும், எமக்கு மட்டும் சொந்தமானவற்றைச் சேர்க்கவும் வேண்டும். பின்னையது மிக முக்கியமானது; ஏனெனில் இன்றேல் எம்மால் ஒரு யுத்தத்தை வழிநடத்த இயலாது.

வாசிப்பு என்பது படிப்பாகும். பிரயோகிப்பதும் படிப்பே; அத்துடன், இது படிப்பில் மிக முக்கியமானதொன்றாகவுமுள்ளது. நமது முக்கியமான முறை யுத்தத்தை யுத்தத்தின் மூலம் படிப்பது. பாடசாலைக்குச் செல்லும் வாய்ப்புக் கிடையாத ஒருவர்கூட யுத்தம் பற்றிப் படிக்க முடியும்—அவர் யுத்தத்தில் போரிடுவதன் மூலம் படிக்கமுடியும். புரட்சி யுத்தம் என்பது ஒரு வெகுஜன முயற்சி; இது வழமையாக முதலில் படித்து பின்னர் செய்யும் ஒரு விஷயமல்ல, மாறாக, முதலில் செய்து, பின்னர் படிப்பது, காரணம் செய்வதே படிப்பு ஆகும். சாதாரண பிரஜைக்கும் படைவீரனுக்கும் இடையில் ஒரு வெளி இருந்தாலும், அது ஒரு பெரும் சுவரல்ல, அதை விரைவில் அடைத்துவிட முடியும். அதை அடைக்கும் வழி யாதெனில், புரட்சியில், யுத்தத்தில் பங்குபற்றுவதேயாகும். ஒன்றைப் படிப்பதும் பிரயோகிப்பதும் எளிதல்ல என்று நாம் கூறும் போது, அதைப் பூரணமாகப் படிப்பதும், தேர்ச்சி பெற்ற முறை

யில் பிரயோகிப்பதும் கஷ்டம் என்று நாம் கருதுகின்றோம். சாதாரண பிரஜைகள் விரைவில் படைவீரர் ஆகமுடியும் என்று கூறும்போது, நுழைவாயிலைக் கடப்பது கஷ்டமானதல்ல என்று நாம் கருதுகின்றோம். இவ்விரண்டு கூற்றுகளையும் ஒன்றாகச் சேர்த்து கூறினால், ''மனதைத் திடப்படுத்திக் கொண்ட ஒரு வனுக்கு உலகில் கஷ்டமானது ஒன்றுமே இல்லை'' என்ற சீன முதுமொழியை மேற்கோள் காட்டலாம். நுழைவாயிலைக் கடப்பது கஷ்டமானது அல்ல; தேர்ச்சி பெறுவதுகூடக் கடமை யில் மனதைச் செலுத்தி, படிப்பதில் நன்றாக இருந்தால், சாத்தியமானதே.

மற்றெல்லாக் காரியங்களினதும் விதிகளைப் போலவே ராணுவ விதிகளும் எமது மனங்களில் புறநிலையான யதார்த்தங் க[2]ளின் பிரதிபலிப்புகளே; மனதுக்கு வெளியே உள்ள யாவும் புறநிலை யதார்த்தம். எனவே, கற்கவும் அறியவும் பட வேண் டியதில் எதிரித் தரப்பிலும் எம் தரப்பிலும் உள்ள நிலைமை கள் அடங்குகின்றன; இவையிரண்டும் ஆராய்வு செய்யப்படும் பொருட்களாகக் கருதப்பட வேண்டும்; மனம் (சிந்திக்கும் ஆற்றல்) மட்டுமே ஆராய்வைச் செய்வது. சிலர் தம்மை அறிந்துகொள்வதில் சிறந்தவராயும் தம் எதிரியை அறிந்து கொள்வதில் குறைபாடுடையவர்களாயும் இருக்கின்றனர்; வேறு சிலர் மறுபுறமாக இருக்கின்றனர்; இவ்விரு சாராரில் எவராலும் யுத்தத்தின் விதிகளைக் கற்பதும் பிரயோகிப்பதுமான பிரச்சினையைத் தீர்க்கமுடியாது. புராதன சீனுவின் பெரும் ராணுவ விஞ்ஞானியான சுன் வு சு[3]வின் நூலில், ''பகைவனை அறிந்து, தன்னையும் அறிந்து கொண்டால், தோல்வியே இல்லாமல் நூறு சமர்களையும் நடத்தமுடியும்'' என்றொரு வாக்கியம் உள்ளது; இது கற்கும் கட்டம், பிரயோகிக்கும்

கட்டம் இரண்டையும், புறநிலை யதார்த்தத்தின் அபிவிருத்தியின் விதிகளை அறிவது, எம்மை எதிர்ப்பட்டுள்ள எதிரியை வெல்ல வேண்டி இவ்விதிகளின் பிரகாரம் எம் சொந்தச் செயலை முடிவு செய்வது இரண்டையும் குறித்தது. இவ்வாக்கியத்தை நாம் லேசாக எடுக்கக்கூடாது.

யுத்தம் தேசங்கள், அரசுகள், வர்க்கங்கள், அரசியற் கோஷ்டிகளுக்கு இடையிலான போராட்டத்தின் மிக உயர்ந்த வடிவம்; யுத்தத்தின் விதிகள் எல்லாம் போரிடும் தேசங்களால், அரசுகளால், வர்க்கங்களால், அரசியல் கோஷ்டிகளால் தத்தமக்கு வெற்றியை ஈட்டிக்கொள்ளும் நோக்கத்திற்காகப் பிரயோகிக்கப்படுகின்றன. யுத்தத்தின் வெற்றியும் தோல்வியும், பிரதானமாக இரு தரப்புகளினதும் ராணுவ, அரசியல், பொருளாதார, இயற்கை நிலைமைகளால் நிர்ணயிக்கப்படுகின்றன என்பதில் கேள்விக்கே இடமில்லை. ஆனால் இவற்றால் மாத்திரம் நிர்ணயிக்கப்படுவதில்லை; யுத்தத்தை நடத்துவதில் இரு தரப்புகளினதும் அகத்திறமையாலும் இது நிர்ணயிக்கப்படுகின்றது. ராணுவ தந்திரி ஒருவர் ஒரு யுத்தத்தின் வெற்றிக்காகச் செய்யும் தனது முயற்சியில், பொருளாயதச் சூழ்நிலைகள் போடும் எல்லைகளைத் தாண்ட முடியாது; இருந்தும், இந்த எல்லைகளுக்குள் நின்று, அவர் வெற்றிக்காகப் பாடுபட முடியும், பாடுபடவும் வேண்டும். ராணுவ தந்திரியின் செயல் அரங்கு புறநிலைப் பொருளாயதச் சூழ்நிலைகளின் அடிப்படையில் கட்டப்பட்டுள்ளது; ஆனால் இந்த அரங்கில் அவன் ஒலியும் வண்ணமும் ஆற்றலும் கம்பீரமும் நிறைந்த பல நாடக நிகழ்ச்சிகளை அரங்கேற்ற முடியும். ஆகவே, உள்ள புறநிலையான லௌகீக அஸ்திவாரங்கள், அதாவது, ராணுவ, அரசியல், பொருளாதார, இயற்கை நிலைமைகள் இருக்கையில், எமது செஞ்சே

னைத் தளபதிகள் தேசிய, வர்க்க எதிரிகளை நசுக்கவும் இந்தத் தீய உலகை மாற்றியமைக்கவும், தங்கள் திறனைக் காண்பித்து, தங்கள் படைகளை எல்லாம் திரட்டவேண்டும். இதிற்தான் யுத்தத்தை நடத்துவதிலான எமது அகநிலையான திறமை பிரயோகிக்கப்பட முடியும்; பிரயோகிக்கப்படவும் வேண்டும். நாம் எமது செஞ்சேனைத் தளபதிகளில் எவரையும் தவறுக்கு மேல் தவறிழைக்கும் மூர்க்கனுக அனுமதிப்பதில்லை; நாம் நிச்சயமாக ஒவ்வொரு செஞ்சேனைத் தளபதியும் துணிவு, அறிவாற்றல் இரண்டுமுள்ளவரும், அனைத்தையும் வெற்றிகொள்ளும் துணிவு, யுத்தம் முழுவதிலுமான மாற்றங்கள், ஏற்ற இறக்கங்கள் அனைத்திற்கும் ஊடேயும் நிலைமையைத் தன் கைக்குள் வைத்திருக்கும் திறமை இரண்டுமுடையவருமான தீரராக வேண்டும் என விரும்புகிறோம். யுத்தமாகிய கடலில் நீந்தும் அவர் அலைப்புற்று விடாதிருக்க வேண்டும் என்பது மட்டுமல்லாமல், அளந்து கணக்காக நீந்தி மறு கரையை அடைவதை நிச்சயமாக்கிக் கொள்ளவும் வேண்டும். யுத்தத்தை வழிநடத்துவதற்கான விதிகள் யுத்தமாகிய கடலில் நீந்தும் கலையாக அமைகின்றன.

இவ்வளவுதான் எங்களுடைய முறைகள்.

## அத்தியாயம் II

## சீனக் கம்யூனிஸ்ட் கட்சியும் சீனுவின் புரட்சிகர யுத்தமும்

1924ல் ஆரம்பமான சீனுவின் புரட்சிகர யுத்தம், 1924ல் இருந்து 1927வரை முதலாவதும் 1927ல் இருந்து 1936வரை இரண்டாவதுமாக, இரண்டு கட்டங்களைக் கடந்துள்ளது; ஜப்

பானிய-எதிர்ப்புத் தேசியப் புரட்சிகர யுத்தக் கட்டம் இப்பொழுது தொடங்கும். இந்தப் புரட்சிகர யுத்தம் இதன் கட்டங்கள் மூன்றிலும் சீனப் பாட்டாளி வர்க்கத்தினதும் அதன் அரசியற் கட்சியான சீனக் கம்யூனிஸ்ட் கட்சியினதும் தலைமையின் கீழ் நடத்தப்பட்டுள்ளது, நடத்தப்பட்டு வருகிறது, நடத்தப்பட்டு வரும். சீனுவின் புரட்சிகர யுத்தத்தில் பிரதான எதிரிகள் ஏகாதிபத்தியமும் நிலப்பிரபுத்துவ சக்திகளுமாகும். சீனப் பூர்ஷுவா வர்க்கம் சிற்சில வரலாற்றுக் கட்டங்களில் புரட்சிகர யுத்தத்தில் பங்குபற்றக் கூடுமாயினும் அதன் சுயநலத் தன்மையும் அரசியல், பொருளாதார சுதந்திரமின்மையும் அதைச் சீனுவின் புரட்சிகர யுத்தத்தைப் பூரண வெற்றிக்கான பாதையில் தலைமைதாங்கி நடத்த மனமில்லாததாயும் இயலாததாயும் ஆக்குகின்றன. சீனுவின் விவசாயி வெகுஜனங்களும் நகரக் குட்டி பூர்ஷுவா வர்க்க வெகுஜனங்களும் புரட்சிகர யுத்தத்தில் தீவிரப் பங்குகொள்ளவும் அதைப் பூரண வெற்றிக்குக் கொண்டுசெல்லவும் விரும்புகின்றனர். அவர்களே புரட்சிகர யுத்தத்தில் பிரதான சக்திகள், ஆனுல், சிறு ரீதியான உற்பத்தியாளர்களாக இருப்பதால் அவர்கள் குறுகிய அரசியற் திருஷ்டாந்தத்தைக் கொண்டவர்களாகவும் (வேலையற்றிருக்கும் வெகுஜனங்களிற் சிலர் அராஜகவாதக் கருத்துக்களைக் கொண்டுமுள்ளனர்), ஆகவே யுத்தத்தில் சரியான தலைமை கொடுக்க இயலாதவர்களாகவும் உள்ளனர். ஆகவே, பாட்டாளி வர்க்கம் ஏற்கனவே அரசியல் அரங்கில் தோன்றிவிட்ட ஒரு சகாப்தத்தில், சீனுவின் புரட்சிகர யுத்தத்திற்குத் தலைமை தாங்கும் பொறுப்பு தவிர்க்க முடியாதபடி சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் தோளில் விழுகிறது. இந்தச் சகாப்தத்தில் எந்தப் புரட்சிகர யுத்தமும் பாட்டாளி வர்க்கத்தினதும் கம்யூனிஸ்ட்

கட்சியினதும் தலைமை அற்றதாக இருந்தாலோ அல்லது அதற்கு எதிராகச் சென்ருலோ அது நிச்சயமாகத் தோல்வியிற்தான் முடியும். அரைக் காலனித்துவ சீனுவிலான சமுதாய வர்க்கத் தட்டுகள் அரசியற் கோஷ்டிகள் எல்லாவற்றிலும் பாட்டாளி வர்க்கமும் கம்யூனிஸ்ட் கட்சியுமே குறுகிய மனப்பான்மை யிலும் சுயநலத் தன்மையிலுமிருந்து மிக அதிகம் விடுபட்ட வையும், அரசியல் ரீதியில் மிகத் தூரதிருஷ்டியுடையவையும், மிக நன்கு ஸ்தாபன அமைப்புற்றவையும், உலகெங்கும் உள்ள முன்னேறிய வர்க்கமாகிய பாட்டாளி வர்க்கத்தினதும் அதன் அரசியற் கட்சியினதும் அனுபவத்திலிருந்து அடக்கத்துடன் கற்கவும் இந்த அனுபவத்தைத் தம் சொந்த இலட்சியத்திற்கு உபயோகப்படுத்தவும் மிகத் தயாராக உள்ளவையும் ஆகும். எனவே பாட்டாளி வர்க்கமும் கம்யூனிஸ்ட் கட்சியும் மட்டுமே விவசாயி, நகரக் குட்டிப் பூர்ஷுவா வர்க்கம், பூர்ஷுவா வர்க்கம் ஆகியவற்றிற்குத் தலைமை தாங்கி, விவசாயிகளினதும் குட்டிப் பூர்ஷுவாக்களினதும் குறுகிய மனப்பான்மையையும், வேலையற்ற வெகுஜனங்களின் அழிவுகரத் தன்மையையும், அத்துடன் (கம்யூனிஸ்ட் கட்சி அதன் கொள்கையிற் தவறிழைக்காத பட்சத்தில்) பூர்ஷுவா வர்க்கத்தின் ஊசலாட்டத்தையும் ஒன்றை முற்ருகச் செய்து முடிக்கும் தன்மை இன்மையையும் கடந்து இதனுல் புரட்சியையும் யுத்தத்தையும் வெற்றிப் பாதைக்கு இட்டுச்செல்ல முடியும்.

அடிப்படையாகப் பேசுவதானுல், 1924-27லான புரட்சிகர யுத்தம், சர்வதேசப் பாட்டாளி வர்க்கமும் சீனப் பாட்டாளி வர்க்கமும் அதன் அரசியல் கட்சியும் சீனத் தேசிய பூர்ஷுவா வர்க்கத்தின்மீதும் அதன் கட்சியின்மீதும் அரசியற் செல்வாக்குச் செலுத்தி, அவற்றுடன் அரசியல்ரீதியில் ஒத்துழைத்த

சூழ்நிலைகளில் நடாத்தப்பட்டது. இருப்பினும் இப்புரட்சிகர யுத்தம் தோல்வியடைந்தது, ஏனெனில், புரட்சியினதும் யுத்தத்தினதும் நெருக்கடியான தருணத்தில் எல்லாவற்றிற்கும் முதலில், பெரும் பூர்ஷுவா வர்க்கம் துரோகம் செய்தது, அதே நேரத்தில் புரட்சிகர அணிகளுக்குள் இருந்த சந்தர்ப்பவாதிகளும் புரட்சியின் தலைமையைத் தாமாக விட்டுவிட்டனர்.

1927ல் இருந்து தற்போதுவரை நீடித்துள்ள நிலப்புரட்சி யுத்தம், புதிய சூழ்நிலைகளின்கீழ் நடத்தப்பட்டுள்ளது. இந்த யுத்தத்தில் எதிரி ஏகாதிபத்தியம் மாத்திரமல்ல, பெரும் பூர்ஷுவா வர்க்கத்தினதும் பெரும் நிலப்பிரபுக்களினதும் கூட்டணியுமாகும். தேசியப் பூர்ஷுவா வர்க்கமும் பெரும் பூர்ஷுவா வர்க்கத்தின் வாலாக ஆகியுள்ளது. இந்தப் புரட்சிகர யுத்தம் இதன்மீது தன் அறுதியான தலைமையை நிலைநாட்டிக் கொண்டுள்ள கம்யூனிஸ்ட் கட்சியினால் மட்டுமே தலைமை தாங்கப்படுகிறது. இந்த அறுதியான தலைமையே புரட்சிகர யுத்தம் இறுதிவரை உறுதியுடன் நடத்தி முடிக்கப்படக்கூடியதாக இருப்பதற்கான மிக முக்கியமான நிபந்தனை. இது இல்லாமல் புரட்சிகர யுத்தம் இத்தனை விடாமுயற்சியுடன் நடத்திச் செல்லப்பட்டிருக்க முடியும் என்று எண்ணவும் இடமில்லை.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சி சீனாவின் புரட்சிகர யுத்தத்தை வீரத்துடனும் உறுதியுடனும் வழிநடத்தியும், நீண்ட பதினைந்து வருட[4] காலமாக, தான் எல்லாச் சமயங்களிலும் மக்களின் நலன்களைப் பாதுகாக்கவும் அவர்களின் சுதந்திரத்திற்கும் விடுதலைக்குமாகவும் புரட்சிகர யுத்தத்தின் முன்முனையிற் போரிடும் மக்களின் நண்பன் என்பதை முழு நாட்டு மக்களுக்கும் காண்பித்தும் உள்ளது.

தனது சிரமமிக்க போராட்டங்களாலும் தன் வீரமிக்க அங்

கத்தினர் பல லட்சத்தினரதும் தன் வீரமிக்க இயக்குனர்கள் பல பத்தாயிரத்தினரதும் பரித்தியாகத்தாலும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி நாடு எங்கணுமுள்ள பல பத்துக் கோடி மக்கள் மத்தியில் ஒரு பெரும் போதமூட்டும் பங்கை ஆற்றியுள்ளது. சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் புரட்சிகரப் போராட்டங்களில் அதன் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பெரும் சாதனைகள், சீனுவில் ஒரு தேசிய எதிரி படையெடுக்கும் இந்த நெருக்கடியான கட்டத்தில் சீனு பிழைத்திருப்பதற்கும் அதன் ஈடேற்றத்திற்குமான முற்தேவையைப் பூர்த்தி செய்கின்றன; மக்களில் மிகுந்த பெரும்பான்மையினரின் நம்பிக்கைக்குப் பாத்திரமானதும் அவர்களால் நீண்டகால சோதனைக்குப் பின் தெரிந்தெடுக்கப்பட்டதுமான ஓர் அரசியற் தலைமை இருப்பதுதான் இந்த முற்தேவை. இன்று மக்கள் மற்றெந்த அரசியற் கட்சி கூறுவதையும்விடக் கம்யூனிஸ்ட் கட்சி கூறுவதையே விரைந்து ஏற்கின்றனர். கடந்த பதினைந்து ஆண்டுகளிலான சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் சிரமமிகுந்த போராட்டங்கள் இருந்திராவிட்டால், அடிமைப்படுவதாகிய புதிய அபாயத்தின் முன்னிலையில் சீனுவைக் காப்பாற்றுவது அசாத்தியமாகியிருக்கும்.

சென் து-சியூ[5]வின் வலதுசாரிச் சந்தர்ப்பவாதமும் லீ லி-சன்[6]னின் ''இடதுசாரி''ச் சந்தர்ப்பவாதமுமாகிய தவறுகள் போக, சீனக் கம்யூனிஸ்ட் கட்சி புரட்சிகர யுத்தத்தின்போது மற்றும் இரு தவறுகளை இழைத்துள்ளது. இவற்றில் முதலாவது தவறு, 1931 லிருந்து 1934 வரையான காலத்திய ''இடதுசாரி''ச் சந்தர்ப்பவாத[7]மாகும். இந்தத் தவறு, நாம் எதிரியின் ஐந்தாவது ''சுற்றிவளைத்து அடக்கும்'' படையெடுப்பைத் தோற்கடிப்பதற்குப் பதிலாக எமது தளப்பிரதேசங்களை இழந்து

செஞ்சேனையும் பலவீனமுறும்படியாக நிலப் புரட்சி யுத்தத்தில் பாரதூரமான இழப்புகளில் போய் முடிந்தது. இந்தத் தவறு 1935 ஜனவரியில் சுன்யியில் நடந்த மத்திய கமிட்டியின் அரசியற் குழுவின் விஸ்தரிக்கப்பட்ட கூட்டத்தில் திருத்தப்பட்டது. இரண்டாவது தவறு, 1935-36லான, சாங் கோ-தௌ[8]வின் வலதுசாரிச் சந்தர்ப்பவாதமாகும். இந்தத் தவறு கட்சியினதும் செஞ்சேனையினதும் கட்டுப்பாட்டை வேரறுத்துச் செஞ்சேனையின் பிரதான படைகளில் ஒரு பகுதிக்குப் பாரதூரமான இழப்புகளை விளைவிக்கும் அளவிற்கு வளர்ந்தது. ஆனால் மத்திய கமிட்டியின் சரியான தலைமை, செஞ்சேனையிலான கட்சி அங்கத்தினர்களினதும் தளபதிகளினதும் போராளிகளினதும் அரசியல் அறிவுணர்வு ஆகியவற்றின் நற்பயனாக, இந்தத் தவறும் இறுதியிற் திருத்தப்பட்டது. இந்தத் தவறுகள் எல்லாம் எமது கட்சிக்கும் எமது புரட்சிக்கும் யுத்தத்திற்கும் தீங்கானவையாகத்தான் இருந்தன, ஆனால் இறுதியில் நாம் இவற்றைக் கடந்ததோடு, அவ்வாறு செய்ததில் எமது கட்சியும் எமது செஞ்சேனையும் தம்மைப் புடம்போட்டெடுத்துப் பலமிக்கவையும் ஆக்கின.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சி, கொந்தளிப்பதும் மகோன்னதமானதும் வெற்றிகரமானதுமான புரட்சிகர யுத்தத்திற்குத் தலைமை தாங்கியுள்ளது, தொடர்ந்தும் தலைமை தாங்கிவருகிறது. இந்த யுத்தம் சீனவின் விடுதலைத் துவஜம் மட்டுமல்ல, சர்வதேசப் புரட்சிகர முக்கியத்துவம் கொண்டதும்கூட. உலகெங்கணும் உள்ள புரட்சிகர மக்களின் பார்வை எம்மீதுள்ளது. புதிய கட்டத்தில், ஜப்பானிய-எதிர்ப்புத் தேசியப் புரட்சிகர யுத்தக் கட்டத்தில், நாம் சீனப் புரட்சியைப் பூர்த்

திக்கு வழிநடத்திச் சென்று, கீழைத் தேசங்களிலும் முழு உல கிலுமான புரட்சியின்மீது ஆழ்ந்த ஒரு செல்வாக்கைச் செலுத் துவோம். எமக்குச் சரியான ஒரு மார்க்ஸிஸ அரசியல் மார்க் கத்தோடு சரியான ஒரு மார்க்ஸிஸ ராணுவ மார்க்கமும் தேவை என எமது கடந்த புரட்சிகர யுத்தம் நிரூபித்துள்ளது. பதினைந்து ஆண்டு காலப் புரட்சியும் யுத்தமும் இத்தகைய அரசியல், ராணுவ மார்க்கங்களை உருவாக்கியுள்ளன. இப் போதிருந்து, யுத்தத்தின் புதிய கட்டத்தில் இந்த மார்க்கங் கள் புதிய சூழ்நிலைகளில் மேற்கொண்டு அபிவிருத்தி செய் யப்படும், குறைகள் நிரப்பப்பெற்று வளப்படுத்தப்படும், அவ் வாருக நாம் தேசிய எதிரியைத் தோற்கடிப்பதாகிய எம் குறிக்கோளை அடையக் கூடியதாகும் என நாம் நம்புகிருேம். சரியான அரசியல், ராணுவ மார்க்கங்கள் தம்மியல்பாயும் சமாதானமாயும் தோன்றி விருத்தியடைவதில்லை, போராட் டத்தின் ஊடாக மட்டுமே தோன்றி விருத்தியடைகின்றன என வரலாறு எமக்குத் தெரிவிக்கிறது. இந்த மார்க்கங்கள் ஒரு புறம் ''இடதுசாரி''ச் சந்தர்ப்பவாதத்தையும், மறுபு றம் வலதுசாரிச் சந்தர்ப்பவாதத்தையும் எதிர்த்துப் போராட வேண்டும். புரட்சிக்கும் புரட்சிகர யுத்தத்திற்கும் ஊறுவிளை விப்பவையான இந்தத் தீங்கான போக்குகளை எதிர்த்துப் போ ராடி அவற்றை முற்ருகக் கடக்காவிடில், சரியான மார்க்கம் ஒன்றை நிலைநாட்டுவதும் புரட்சிகர யுத்தத்தில் வெற்றியீட்டு வதும் அசாத்தியமாயிருக்கும். இக்காரணம் பற்றியே நான் இப்பிரசுரத்தில் பல சமயம் தவருன கருத்துக்களைப் பற்றிப் பிரஸ்தாபிக்கிறேன்.

# அத்தியாயம் III

## சீனுவின் புரட்சிகர யுத்தத்தின் குணதிசயங்கள்

### 1. இவ்விஷயத்தின் முக்கியத்துவம்

சீனுவின் புரட்சிகர யுத்தம் அதன் சொந்தக் குணதிசயங்களைக் கொண்டுள்ளது என்பதை ஒப்புக்கொள்ளாத, அல்லது அறியாத, அல்லது அறிய விரும்பாத நபர்கள், கோமிந்தாங் படைகளுக்கு எதிராகச் செஞ்சேனையால் நடத்தப்படும் யுத்தத்தைப் பொதுவான யுத்தத்துடனே அல்லது சோவியத் யூனியனின் உள்நாட்டு யுத்தத்துடனே சமப்படுத்தியுள்ளனர். லெனினுலும் ஸ்டாலினுலும் வழிநடத்தப்பட்ட, சோவியத் யூனியனின் உள்நாட்டு யுத்தத்தின் அனுபவம் உலக விசால முக்கியத்துவமுடையது. சீனக் கம்யூனிஸ்ட் கட்சியுட்படச் சகல கம்யூனிஸ்ட் கட்சிகளும் இந்த அனுபவத்தையும் லெனினுலும் ஸ்டாலினுலும் செய்யப்பட்ட இதன் தத்துவரீதியான தொகுப்புரையையும் தம் வழிகாட்டியாகக் கருதுகின்றன. ஆனுல் நாம் இதை எமது சொந்தச் சூழ்நிலைகளுக்கு யாந்திரிக ரீதியில் பிரயோகிக்க வேண்டும் என்று இதற்கு அர்த்தமல்ல. சீனுவின் புரட்சிகர யுத்தம் அதன் அம்சங்கள் பலவற்றில் அதைச் சோவியத் யூனியனின் உள்நாட்டு யுத்தத்திலிருந்து வேறுபடுத்தும் குணதிசயங்களைக் கொண்டுள்ளது. இந்தக் குணதிசயங்களைக் கணக்கெடாது விடுவதோ அல்லது இவை இருப்பதை மறுப்பதோ இயற்கையாகவே தவறுதான். இந்த

விஷயம் எமது பத்து வருட கால யுத்தத்தில் பூரணமாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

எமது எதிரியும் இதே போன்ற தவறுகளைச் செய்திருக்கிறான். செஞ்சேனைக்கு எதிராகப் போர் செய்வதற்கு, பிற படைக ளுக்கு எதிராகப் போர் செய்வதில் உபயோகிக்கப்படும் யுத் ததந்திரத்திலும் தந்திரோபாயங்களிலுமிருந்து வித்தியாசமான ஒரு யுத்ததந்திரமும் தந்திரோபாயங்களும் தேவை என்பதை அவன் உணரவில்லை. பல்வேறு வகைகளிலான தனது மேம் பாட்டை நம்பி, அவன் எம்மை லேசாக எடுத்து, தனது பழைய யுத்தமுறைகளில் ஊன்றி நின்றான். எதிரியின் 1933 லான நான்காவது ''சுற்றிவளைத்து அடக்கும்'' நடவடிக்கை யின்போதும் அதற்கு முன்னரும் விஷயம் இதுவாகவே இருந் தது; இதன் விளைவாக அவன் அடுக்காகப் பல தோல்விகளை உற்றான். கோமிந்தாங் சேனையில் முதலில் பிற்போக்குக் கோமிந்தாங் தளபதியான லியூ வெய்-யுவானாலும் பின்னர் தாய் யுயெயாலும் இப்பிரச்சினைக்குப் புதிய ஒரு அணுகு முறை பிரேரிக்கப்பட்டது. அவர்களின் யோசனை இறுதியில் சியாங் கை-ஷேக்கினால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இவ்வா றாகத்தான் சியாங் கை-ஷேக்கின் லூஷனிலான ராணுவ அதி காரி பயிற்சிக் கோர்[9] தோன்றியது, ஐந்தாவது ''சுற்றிவளைத்து அடக்கும்'' நடவடிக்கையில் பிரயோகிக்கப்பட்ட புதிய பிற் போக்கு ராணுவக் கோட்பாடுகளும்[10] உருவாக்கப்பட்டன.

ஆனால் எதிரி செஞ்சேனைக்கு எதிராகப் போர் செய்வதற்குப் பொருந்தத் தன் ராணுவக் கோட்பாடுகளை மாற்றிக்கொண்ட போது, எமது அணிகளில் ''பழைய வழிக''ளுக்குத் திரும்பிச் சென்ற ஒரு கோஷ்டியினர் தோன்றினர். அவர்கள் காரியங்

களின் பொதுவான போக்கிற்குப் பொருத்தமான வழிகளுக்குத் திரும்பிச் செல்வதை வற்புறுத்தி, ஒவ்வொரு விஷயத்தினதும் குறிப்பான சூழ்நிலைகளை ஆராய மறுத்து, செஞ்சேனையின் இரத்தம் சிந்திய போர் வரலாற்றில் பெறப்பட்ட அனுபவத்தை நிராகரித்து, ஏகாதிபத்தியத்தினதும் கோமிந்தாங்கினதும் பலத்தையும் கோமிந்தாங் சேனையின் பலத்தையும் சிறிதுபடுத்தி, எதிரியாற் கைக்கொள்ளப்பட்ட புதிய பிற்போக்குக் கோட்பாடுகளுக்கும் கண்களை மூடிக்கொண்டனர். இதன் விளைவாக, ஷென்சி-கன்சு எல்லைப் பிரதேசம் நீங்கலாகப் புரட்சிகரத் தளப்பிரதேசங்கள் எல்லாம் இழக்கப்பட்டன, செஞ்சேனை மூன்று லட்சத்திலிருந்து சில பத்தாயிரம் வீரர்களாகக் குறைக்கப்பட்டது; சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் அங்கத்தவர்கள் தொகை மூன்று லட்சத்திலிருந்து சில பத்தாயிரமாகக் குறைந்தது; கோமிந்தாங் பிரதேசங்களிலிருந்த கட்சி ஸ்தாபனங்கள் கிட்டத்தட்ட எல்லாம் அழிக்கப்பட்டன. சுருங்கக் கூறினுல், நாம் வரலாற்று முக்கியத்துவம் கொண்ட கடும் தண்டனையை உற்ருேம். இந்தக் கோஷ்டியினர் தம்மை மார்க்ஸிஸ்ட்-லெனினிஸ்டுகள் என அழைத்துக்கொண்டனர்; ஆனுல் உண்மையில் அவர்கள் தினையளவும் மார்க்ஸிஸம்-லெனினிஸத்தைக் கற்றிருக்கவில்லை. மார்க்ஸிஸத்தில் மிகச் சாராம்சமான விஷயம், மார்க்ஸிஸத்தின் ஜீவாத்மா, ஸ்தூலமான நிலைமைகளின் ஸ்தூலமான ஆராய்வாகும் என்ருர் லெனின்.[11] எம்முடைய இந்தத் தோழர்கள் மறந்தது சரியாக இதைத்தான்.

எனவே, சீனுவின் புரட்சிகர யுத்தத்தின் குணுதிசயங்கள் பற்றி விளக்கம் இல்லாமல், அதனை வழிநடத்துவதும் வெற்றிக்கு இட்டுச்செல்வதும் அசாத்தியம் என்பதைக் காணமுடிகிறது.

## 2. சீனுவின் புரட்சிகர யுத்தத்தின் குணதிசயங்கள் எவை?

அப்படி எனின், சீனுவின் புரட்சிகர யுத்தத்தின் குணதிசயங்கள் எவை?

பிரதானமானவை நான்கு உள்ளன என நான் நினைக்கிறேன்.

முதலாவது, சீனு அரசியல்ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் ஏற்றத்தாழ்வாக அபிவிருத்தி அடைந்துள்ளதும், 1924 முதல் 1927வரையான புரட்சியின் ஊடாகச் சென்றுள்ளதுமான ஒரு பிரமாண்டமான அரைக் காலனித்துவ நாடு என்பதாகும்.

சீனுவின் புரட்சிகர யுத்தம் அபிவிருத்தியடைந்து வெற்றியீட்டுவது சாத்தியம் என இந்தக் குணதிசயம் சுட்டுகிறது. 1927ம் ஆண்டுக் குளிர் காலத்திலும் 1928ம் ஆண்டு வசந்த காலத்திலும், சீனுவில் கொரில்லா யுத்தம் தொடங்கப்பட்ட சற்றைக்குப் பின், ஹுனன்-கியாங்சி எல்லைப் பிரதேசத்தில் உள்ள சிங்காங் மலைகளில் சில தோழர்கள், ''நாம் எவ்வளவு காலத்திற்குச் செங்கொடியை உயர்த்தி வைத்திருக்க முடியும்?'' என்ற கேள்வியை எழுப்பியபோதே நாம் இதை ஏற்கனவே (ஹுனன்-கியாங்சி எல்லைப் பிரதேசத்தின் முதலாவது கட்சி மாநாட்டில்)[12] சுட்டிக்காட்டிவிட்டோம். ஏனெனில், இக் கேள்வி மிக அடிப்படையான ஒன்றுக இருந்தது. சீனுவின் புரட்சிகரத் தளப்பிரதேசங்களும் சீனச் செஞ்சேனையும் பிழைத்திருக்கவும் அபிவிருத்தியடையவும் முடியுமா என்ற இந்தக் கேள்விக்கு விடையளிக்காமல் நாம் தனியொரு அடிகூட முன்னேறியிருக்க முடியாது. 1928ல் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின்

ஆருவது தேசிய மாநாடு இக்கேள்விக்கு மீண்டும் விடையளித்தது. அப்போதிருந்து சீனுவின் புரட்சிகர இயக்கம் சரியான ஒரு தத்துவரீதியான அடிப்படையை உடையதாக இருந்து வந்துள்ளது.

இனி நாம் இந்தக் குணுதிசயத்தைப் பகுத்தாராய்வோம்.

சீனுவின் அரசியல், பொருளாதார அபிவிருத்தி ஏற்றத் தாழ்வானது — பலவீனமான ஒரு முதலாளித்துவப் பொருளாதாரம் மேலாதிக்கம் பெற்றுள்ள ஒரு அரை நிலப்பிரபுத்துவப் பொருளாதாரத்துடன் ஒருங்கிருக்கிறது; சில நவீன தொழில், வர்த்தக நகரங்கள் தேக்க நிலையில் உள்ள பிரமாண்டமான நாட்டுப்புறத்துடன் ஒருங்கிருக்கின்றன; பல பத்து லட்சம் தொழிற்துறைத் தொழிலாளர்கள் பழைய அமைப்பின் ஆதிக்கத்தின் கீழ் உள்ள பல பத்துக்கோடி விவசாயிகளோடும் கைப்பணிக்காரர்களோடும் ஒருங்கிருக்கின்றனர்; மத்திய அரசாங்கத்தைக் கட்டுப்பாடு செய்யும் பெரிய யுத்தப்பிரபுக்கள் மாகாணங்களைக் கட்டுப்பாடு செய்யும் சிறிய யுத்தப்பிரபுக்களோடு ஒருங்கிருக்கின்றனர்; இரு ரகமான பிற்போக்குச் சேனைகள், சியாங் கை-ஷேக்கின் கீழ் உள்ள கூறப்படும் ''மத்திய சேனை''யும் மாகாணங்களில் யுத்தப்பிரபுக்களின்கீழ் உள்ள கூறப்படும் ''பல ரகத் துருப்புக''ளும் அருகருகே இருக்கின்றன; சில புகையிரதப் பாதைகளும் நீராவிக் கப்பல் மார்க்கங்களும் மோட்டார் வாகன வீதிகளும் பெருந்தொகையான தள்ளுவண்டிப் பாதைகளோடும் நடைபாதைகளோடும் கால்நடையாகக் கூடக் கடப்பது கஷ்டமான பாதைகளோடும் அருகருகே இருக்கின்றன.

சீனு ஓர் அரைக் காலனித்துவ நாடு — ஏகாதிபத்திய வல்லரசுகள் மத்தியில் ஒற்றுமையின்மை சீனுவில் ஆளும் கோஷ்

டிகள் மத்தியில் ஒற்றுமையின்மையை ஏற்படுத்துகின்றது. பல நாடுகளால் கட்டுப்பாடு செய்யப்படும் ஓர் அரைக் காலனித்துவ நாட்டிற்கும் தனியொரு நாட்டால் கட்டுப்பாடு செய்யப்படும் ஒரு காலனிக்கும் இடையில் ஒரு வேறுபாடு உள்ளது.

சீனு ஒரு பிரமாண்டமான நாடு — ''கிழக்கில் இருளாயிருக்க மேற்கில் இன்னும் பகலொளி இருக்கிறது; தெற்கில் எல்லாம் இருட்டியிருக்க வடக்கில் இன்னும் ஒளியிருக்கிறது'', எனவே, நகர்ந்து செயல்பட இடம் போதாதென்று கவலைப்பட வேண்டியதில்லை.

சீனு ஒரு பெரும் புரட்சியின் ஊடாகச் சென்றுள்ளது — இது செஞ்சேனை முளைத்தெழுவதற்கான வித்துகளைத் தந்தும், செஞ் சேனையின் தலைவனை, அதாவது சீனக் கம்யூனிஸ்ட் கட்சியைத் தந்தும், ஒரு புரட்சியிற் பங்குபற்றிய வெகுஜனங்களைத் தந்தும் உள்ளது.

ஆகவே நாம், சீனுவின் புரட்சிகர யுத்தத்தின் முதலாவது குணதிசயம் அது அரசியல், பொருளாதார ரீதிகளில் ஏற்றத் தாழ்வாக அபிவிருத்தியடைந்துள்ளதும் ஒரு புரட்சியினூடாகச் சென்றுள்ளதுமான ஒரு பிரமாண்டமான அரைக் காலனித்துவ நாட்டில் நடத்தப்படுகிறது என்பதாகும் எனக் கூறுகிறோம். இந்தக் குணதிசயம் எமது அரசியல் ரீதியான யுத்ததந்திரத்தையும் தந்திரோபாயங்களையும் போலவே, எமது ராணுவ ரீதியான யுத்ததந்திரத்தையும் தந்திரோபாயங்களையும் அடிப்படையாக நிர்ணயிக்கிறது.

இரண்டாவது குணதிசயம் எமது எதிரி பெரியவனும் சக்திமிக்கவனும் என்பது.

செஞ்சேனையின் எதிரியான கோமிந்தாங்கின் நிலைமைகள் எப்படி இருக்கின்றன? அது அரசு அதிகாரத்தைக் கைப்பற்றிக்

கொண்டும், ஏறத்தாழத் தன் அதிகாரத்தை நிலைப்படுத்திக் கொண்டும் உள்ள ஒரு கட்சி. அது உலகின் பிரதான எதிர்ப் புரட்சிகர அரசுகளின் ஆதரவைப் பெற்றுள்ளது. அது தன் சேனையைப் புது வடிவில் அமைத்துக் கொண்டுள்ளது; அச் சேனை அவ்வாறுகச் சீன வரலாற்றிலான மற்றெந்தச் சேனை யிலுமிருந்து வேறுபட்டதாயும், மொத்தத்தில் உலகில் நவீன அரசுகளின் சேனைகளைப் போன்றதாயும் ஆகியுள்ளது; இந்தச் சேனை செஞ்சேனையைவிட மிகச் சிறப்பான ஏராளமான ஆயு தங்களும் ஏனைய ராணுவத் தளபாடங்களும் பெறுவதும், சீன வரலாற்றில் எந்தச் சேனையையும் பார்க்கப் போனுல், உலகில் மற்றெந்த நாட்டினதும் நிரந்தரச் சேனையையும்விடப் பெரியதும் ஆகும். கோமிந்தாங் சேனைக்கும் செஞ்சேனைக் கும் இடையில் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம் உள் ளது. கோமிந்தாங் சீனுவின் அரசியலிலும் பொருளாதாரத் திலும் போக்குவரத்து மார்க்கங்களிலும் கலாசாரத்திலும் கேந்திர ஸ்தானங்களை அல்லது ஜீவநாடிகளைக் கட்டுப்பாடு செய்கிறது; அதன் அரசியல் அதிகாரம் தேச விசாலமானது.

இவ்வாறுகச் சீனச் செஞ்சேனை பெரிய, சக்திமிக்க ஒரு எதிரியை எதிர்ப்பட்டுள்ளது. இது சீனுவின் புரட்சிகர யுத் தத்தின் இரண்டாவது குணுதிசயம். இது நிச்சயமாக செஞ் சேனையின் போர் நடவடிக்கைகளைப் பொதுவான யுத்தங்கள், சோவியத் யூனியனின் உள்நாட்டு யுத்தம், வட படையெடுப்பு யுத்தம் ஆகியவற்றிலான போர் நடவடிக்கைகளிலிருந்து பல வகைகளில் வேறுபட்டவையாக்குகின்றது.

மூன்ருவது குணுதிசயம் செஞ்சேனை சிறியதும் பலவீனமா னதும் என்பதாகும்.

கொரில்லாக் கூறுகளாக ஆரம்பித்த சீனச் செஞ்சேனை முத

லாவது பெரும் புரட்சியின் தோல்விக்குப் பின்னர் ஜனித்தது. இது சீனவிற் பிற்போக்கும், உலகின் பிற்போக்கு முதலாளித்துவ நாடுகளில் அரசியல், பொருளாதார ரீதியில் ஒப்புநோக்கான ஸ்திர நிலையிருந்ததுமான ஒரு காலகட்டத்தில் நிகழ்ந்தது. எமது அரசியல் அதிகாரம் அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சிதறியும் தனிப்பட்டும் உள்ள மலைப் பிரதேசங்களிலும் அல்லது ஒதுக்குப்புறப் பிரதேசங்களிலும் இருக்கிறது, அதற்கு வெளி உதவி எதுவுமே கிடைப்பதில்லை. கோமிந்தாங் பிரதேசங்களில் உள்ளவற்றோடு ஒப்பிடுகையில், புரட்சிகரத் தளப்பிரதேசங்களில் பொருளாதார, கலாசார நிலைமைகள் பின்னடைந்தவையாக உள்ளன. புரட்சிகரத் தளப்பிரதேசங்கள் கிராமங்களையும் சிறு பட்டினங்களையும் மட்டுமே தழுவியவை. இந்தப் பிரதேசங்கள் தொடக்கத்தில் மிக மிகச் சிறிதாக இருந்தன, பிற்பாடும் அவ்வளவு அதிகம் பெரிதாக வளர்ந்துவிடவில்லை. மேலும், அவை மாற்றமுறும் இயல்பின, நிலையானவை அல்ல; செஞ்சேனைக்கு உண்மையில் ஸ்திரப்படுத்தப்பட்ட தளப்பிரதேசங்கள் எதுவும் இல்லை.

செஞ்சேனை எண்ணிக்கையில் சிறியது, அதன் ஆயுதங்கள் தரங் குறைந்தவை, உணவு, படுக்கைகள், உடைகள் போன்ற பண்டங்கள் பெறுவதும் அதற்குப் பெரும் கஷ்டமாக உள்ளது.

இந்தக் குணதிசயம் முன் சொன்ன குணதிசயத்திற்குக் கண்கூடான எதிர் நிலையாக உள்ளது. இந்தக் கண்கூடான வேறுபாட்டிலிருந்துதான் செஞ்சேனையின் யுத்ததந்திரமும் தந்திரோபாயங்களும் தோன்றியுள்ளன.

நான்காவது குணதிசயம் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையும் நிலப்புரட்சியுமாகும்.

இந்தக் குணுதிசயம் முதற் குணுதிசயத்தின் தவிர்க்க முடியாத விளைவு. இது இரு தன்மைகளைத் தோற்றுவித்துள்ளது. ஒருபுறம், சீனுவின் புரட்சிகர யுத்தம் சீனுவிலும் முதலாளித்துவ உலகம் பூராவிலும் பிற்போக்குக் காலகட்டமொன்றில் இடம் பெறுகின்றது என்ற உண்மை இருக்கவும், அது கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையின்கீழும், விவசாயிகளின் ஆதரவைப் பெற்றதாயும் உள்ளதால், வெற்றி சாத்தியம். இந்த ஆதரவு காரணமாக, எமது தளப்பிரதேசங்கள் இவ்வளவு சிறியவையாக இருந்தும், அவை அரசியல்ரீதியில் சக்திமிக்கவையாக உள்ளன; பிரமாண்டமான கோமிந்தாங் ஆட்சிக்கு எதிராக உறுதியாக நிற்கின்றன, ராணுவ ரீதியிலோ கோமிந்தாங் தாக்குதல்களுக்குப் பெரும் தடங்கல்களை இடுகின்றன. செஞ்சேனை இவ்வளவு சிறியதாக இருப்பினும், கம்யூனிஸ்ட் கட்சியினுற் தலைமைதாங்கப்படுபவர்களான அதன் உறுப்பினர்கள் நிலப்புரட்சியில் ஜனித்தவர்களும் தம் சொந்த நலன்களுக்காகப் போராடுபவர்களுமாகையாலும், அதன் தளபதிகளும் போராளிகளும் அரசியல்ரீதியில் ஒருமைப்பட்டிருக்கின்றனராகையாலும், அதற்குப் பெரும் போரிடும் வலிமை இருக்கிறது.

மறுபுறம், கோமிந்தாங் இதற்குக் கண்கூடான ஓர் எதிர்நிலையில் உள்ளது. அது நிலப்புரட்சியை எதிர்க்கிறது, ஆகவே விவசாயிகளிடமிருந்து அதற்கு எந்த ஆதரவும் இல்லை. கோமிந்தாங் பெரும் சேனையொன்றைக் கொண்டுள்ளபோதும் அதனுல் தனது படைவீரர்களையும் ஆதியில் சிறு உற்பத்தியாளர்களாக இருந்த பல தாழ்ந்த தரத் தளபதிகளையும் தனக்காக மனமுவந்து உயிரைக் கொடுக்கும்படி செய்ய இயலாது. அதன் அதிகாரிகளும் வீரர்களும் அரசியல்ரீதியில் பிளவுபட்டிருக்கின்றனர்; இது அதன் போரிடும் வலிமையைக் குறைக்கிறது.

## 3. இந்தக் குணுதிசயங்களிலிருந்து பிறக்கும் எமது யுத்ததந்திரமும் தந்திரோபாயங்களும்

இவ்வாறுகச் சீனுவின் புரட்சிகர யுத்தத்தின் நான்கு பிரதான குணுதிசயங்களாவன: அரசியல்ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் ஏற்றத்தாழ்வான அபிவிருத்தியடைந்துள்ளதும் ஒரு பெரும் புரட்சியின் ஊடாகச் சென்றுள்ளதுமான ஒரு பிரமாண்டமான அரைக் காலனித்துவ நாடு, பெரிய சக்திமிக்க எதிரி, சிறிய பலவீனமான செஞ்சேனை, நிலப்புரட்சி ஆகியனவாம். இக்குணுதிசயங்கள் சீனுவின் புரட்சிகர யுத்தத்தை வழிநடத்துவதற்கான மார்க்கத்தையும் அத்துடன் அதன் யுத்ததந்திர தந்திரோபாயக் கோட்பாடுகள் பலவற்றையும் நிர்ணயிக்கின்றன. முதலாம், நான்காம் குணுதிசயங்களிலிருந்து, சீனச் செஞ்சேனை வளர்வதும் அதன் எதிரியைத் தோற்கடிப்பதும் சாத்தியம் என்பது பெறப்படுகிறது. இரண்டாம், மூன்றும் குணுதிசயங்களிலிருந்து, சீனச் செஞ்சேனை மிகத் துரிதமாக வளர்வதோ அதன் எதிரியை விரைவிற் தோற்கடிப்பதோ அசாத்தியம் என்பது, அதாவது, யுத்தம் நீண்டதாயிருக்கும், தவருகக் கையாளப்பட்டால் தோற்கடிக்கப்படவுங் கூடும் என்பது பெறப்படுகிறது.

இவையே சீனுவின் புரட்சிகர யுத்தத்தின் இரு அம்சங்கள். இவை ஒருங்கு இருக்கின்றன, அதாவது, சாதகமான அம்சங்களும் உள்ளன, பாதகமான அம்சங்களும் உள்ளன. இதுவே சீனுவின் புரட்சிகர யுத்தத்தின் அடிப்படை விதி, இதினின்றும் வேறு பல விதிகள் பிறக்கின்றன. எமது பத்து வருடகால யுத்த வரலாறு இந்த விதியின் சரியான தன்மையை நிரூபித்துள்ளது. கண்ணிருந்தும் இந்த அடிப்படை விதியைக் காணத் தவறும்

ஒருவரால் சீனுவின் புரட்சிகர யுத்தத்தை வழிநடத்த இயலாது, செஞ்சேனையை வெற்றிகளுக்கு வழிநடத்த இயலாது.

பின்வரும் கோட்பாட்டு ரீதியான பிரச்சினைகள் எல்லாவற்றையும் நாம் சரியாகத் தீர்க்க வேண்டும் என்பது தெளிவு:

எமது யுத்ததந்திர ரீதியான திசைமார்க்கத்தைச் சரியாக நிர்ணயிப்பதும், தாக்குதலில் ஈடுபட்டிருக்கையில் துணிச்சல்வாதத்தை எதிர்ப்பதும், தற்காப்பில் ஈடுபட்டிருக்கையில் பத்தாம்பசலிவாதத்தை எதிர்ப்பதும், ஒரு இடத்திலிருந்து மற்ருென்றுக்கு நகரும்போது பயந்தோடும் தன்மையை எதிர்ப்பதும்.

செஞ்சேனையில் கொரில்லாவாதத்தை எதிர்க்கையில், செஞ்சேனையின் நடவடிக்கைகளின் கொரில்லாத் தன்மையை அங்கீகரிப்பது.

நீண்ட போர் நடவடிக்கைகளையும் விரைவில் வெற்றி தோல்வி காணும் யுத்ததந்திரத்தையும் எதிர்ப்பதும், நீண்ட யுத்ததந்திரத்தையும் விரைவில் வெற்றி தோல்வி காணும் போர் நடவடிக்கைகளையும் அங்கீகரிப்பதும்.

நிலையான போர் முனைகளையும் ஸ்தான யுத்த முறையையும் எதிர்ப்பதும், மாற்றமடையும் போர் முனைகளையும் நடமாட்ட யுத்த முறையையும் அங்கீகரிப்பதும்.

எதிரியை வெறுமனே புறங்காணப் போரிடுவதை எதிர்ப்பதும், எதிரியை அழித்தொழிக்கப் போரிடுவதை அங்கீகரிப்பதும்.

இரண்டு ''முஷ்டிகளால்'' இரண்டு திசைகளில் ஒரே நேரத்தில் தாக்கும் யுத்ததந்திரத்தை எதிர்ப்பதும், ஒரு

சமயத்தில் ஒரு ''முஷ்டியால்'' ஒரு திசையில் தாக்கும் யுத்ததந்திரத்தை அங்கீகரிப்பதும்.

பின் பிரதேசத்தில் பெரிய சேவை நிறுவனங்களை வைத்திருக்கும் கோட்பாட்டை எதிர்ப்பதும், சிறு சேவை நிறுவனங்களை வைத்திருக்கும் கோட்பாட்டை அங்கீகரிப்பதும்.[13]

அறவே மத்தியப்படுத்திய படைத்தலைமையை எதிர்ப்பதும், ஒப்புநோக்காக மத்தியப்படுத்திய படைத்தலைமையை அங்கீகரிப்பதும்.

சுத்த ராணுவக் கண்ணோட்டத்தையும் அலைந்து திரியும் கிளர்ச்சிக்காரர் சித்தாந்தத்தையும் எதிர்ப்பதும்,[14] செஞ்சேனை சீனப் புரட்சியின் பிரசாரகனும் ஸ்தாபன அமைப்பாளனும் ஆகும் என்பதை அங்கீகரிப்பதும்.

கொள்ளைக்காரப் போக்குக[15]ளை எதிர்ப்பதும், கறாரான அரசியற் கட்டுப்பாட்டை அங்கீகரிப்பதும்.

யுத்தப்பிரபுப் போக்குகளை எதிர்ப்பதும், சேனையில் உரிய வரம்புகளுக்குட்பட்ட ஜனநாயகம், அதிகாரம் பொருந்திய ராணுவக் கட்டுப்பாடு இரண்டையும் அங்கீகரிப்பதும்.

இயக்குனர் பற்றிய தவறான, கோஷ்டிவாதக் கொள்கையை எதிர்ப்பதும், இயக்குனர் பற்றிய சரியான கொள்கையை அங்கீகரிப்பதும்.

தனிமைப்படும் கொள்கையை எதிர்ப்பதும், சாத்தியமான சகல சகாக்களையும் வென்றெடுக்கும் கொள்கையை அங்கீகரிப்பதும்.

செஞ்சேனையை அதன் பழைய கட்டத்தில் வைத்திருப்பதை எதிர்ப்பதும், அதை ஒரு புதிய கட்டத்திற்கு அபிவிருத்தி செய்ய முயற்சிப்பதும்.

யுத்ததந்திரப் பிரச்சினைகள் பற்றிய எமது தற்போதைய விவாதம், சீனுவின் பத்து வருட கால இரத்தம் பெருகிய புரட்சிகர யுத்தத்தில் பெறப்பட்ட வரலாற்று ரீதியான அனுபவத்தின் ஒளியில் இந்த விஷயங்களைக் கவனமாகத் தெளிவுபடுத்துவதை நோக்கமாகக் கொண்டதே.

## அத்தியாயம் IV

### ''சுற்றிவளைத்து அடக்குத''லும் அதற்கு எதிரான நடவடிக்கைகளும் — சீனுவின் உள்நாட்டு யுத்தத்தின் பிரதான வடிவம்

எமது கொரில்லா யுத்தம் தொடங்கியதன் பின்பான பத்து ஆண்டுகளில் ஒவ்வொரு சுதந்திரச் செங்கொரில்லாப் படைக் கூறும், ஒவ்வொரு செஞ்சேனைக் கூறும், ஒவ்வொரு புரட்சிகரத் தளப்பிரதேசமும் எதிரியால் அடிக்கடி ''சுற்றிவளைத்து அடக்குத''லுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. எதிரி செஞ்சேனையை ஒரு பிசாசெனக் கருதி, அது தன்னைக் காட்டிக்கொள்ளும் கணமே அதைப் பிடித்துவிட முயல்கிறுன். அவன் எந்நேரமும் செஞ்சேனையைத் துரத்திக்கொண்டும் எந்த நேரமும் அதனைச் சுற்றிவளைக்க முயன்று கொண்டும் இருக்கிறுன். பத்து ஆண்டுகளாக இந்த வடிவிலான யுத்தம் மாற்றமடையவில்லை; உள்நாட்டு யுத்தத்தின் இடத்தில் தேசிய யுத்தம் வந்தால் அல்லாமல், இந்த வடிவம் எதிரி பலவீனமானவனுயும் செஞ்சேனை பலமானதாயும் ஆகும் நாள் வரை இப்படியே இருந்தும் வரும்.

செஞ்சேனையின் நடவடிக்கைகள் ''சுற்றிவளைத்து அடக்குத'' லுக்கு எதிரான நடவடிக்கைகளின் வடிவத்தை எடுக்கின்றன. எம்மைப் பொறுத்த வரை வெற்றி என்பதன் அர்த்தம் பிரதானமாக ''சுற்றிவளைத்து அடக்குத''லுக்கு எதிராகப் போரிடுவதில் பெறும் வெற்றியே, அதாவது, யுத்ததந்திர ரீதியான வெற்றியும் போர் நடவடிக்கைகளிலான வெற்றியுமே. ஒவ்வொரு ''சுற்றிவளைத்து அடக்கும்'' நடவடிக்கைக்கும் எதிரான போராட்டம் வழமையாகப் பெரியவையும் சிறியவையுமான பல அல்லது ஸ்கோர் கணக்கிற்கூட ஆன சண்டைகளைக் கொண்டதான ஒரு போரியக்கமாகிறது. பல சண்டைகள் வெல்லப் பட்டிருந்தபோதும்கூட ஒரு ''சுற்றிவளைத்து அடக்கும்'' நடவடிக்கை அடிப்படையாகத் தகர்க்கப்படும்வரை யுத்ததந்திர ரீதியான வெற்றியை அல்லது போர் நடவடிக்கையில் பெற்ற முழுமையான வெற்றியைப் பற்றிப் பேச இயலாது. செஞ்சேனையின் ஒரு தசாப்த யுத்தத்தின் வரலாறு, ''சுற்றிவளைத்து அடக்குத''லுக்கு எதிரான நடவடிக்கைகளின் வரலாறாகும்:

எதிரியின் ''சுற்றிவளைத்து அடக்கும்'' நடவடிக்கைகளிலும் அவற்றுக்கு எதிரான செஞ்சேனையின் நடவடிக்கைகளிலும் சண்டையிடுதலின் இரு வடிவங்களும், தாக்குதல், தற்காப்பு இரண்டும் உபயோகிக்கப்படுகின்றன; இவை புராதனமானதோ நவீனமானதோ, சீனுவிலானதோ வேறெங்குமானதோ ஆன யுத்தத்திலுள்ளவற்றிலிருந்து எந்த வேற்றுமையும் கொண்டிருக்கவில்லை. இருப்பினும் சீனுவின் உள்நாட்டு யுத்தத்தின் விசேஷ குணுதிசயம் இவ்விரு வடிவங்களும் ஒரு நீண்ட காலகட்டத்திற்குத் திரும்பத் திரும்ப ஒன்று மாறி ஒன்று இடம்பெறுவதாகும். ஒவ்வொரு ''சுற்றிவளைத்து அடக்கும்'' நடவடிக்கையிலும் எதிரி செஞ்சேனையின் தற்காப்பிற்கு எதிராகத் தாக்குதலை உபயோ

கிக்கிறுன், அவனது தாக்குதலுக்கு எதிராகச் செஞ்சேனே தற்காப்பை உபயோகிக்கிறது; இதுவே ''சுற்றிவளேத்து அடக்குத''லுக்கு எதிரான நடவடிக்கையின் முதற்கட்டம். பின்னர் எதிரி செஞ்சேனேயின் தாக்குதலுக்கு எதிராகத் தற்காப்பை உபயோகிக்கிறுன், செஞ்சேனே அவனது தற்காப்பிற்கு எதிராகத் தாக்குதலே உபயோகிக்கிறது; இது ''சுற்றிவளேத்து அடக்குத''லுக்கு எதிரான நடவடிக்கையின் இரண்டாவது கட்டம். ஒவ்வொரு ''சுற்றிவளேத்து அடக்கும்'' நடவடிக்கைக்கும் இந்த இரு கட்டங்களும் உள்ளன; இவை நீண்ட காலகட்டத்திற்கு ஒன்று மாறி ஒன்று இடம்பெறுகின்றன.

நீண்ட கால கட்டத்திற்குத் திரும்பத் திரும்ப ஒன்று மாறி ஒன்று இடம்பெறுவது என்பதால் நாம் யுத்தத்தினதும் சண்டையிடுதலினதும் இந்த வடிவங்கள் திரும்பத் திரும்ப இடம்பெறுவதையே கருதுகிறேம். இது ஒரு உண்மை, இது அனேவருக்கும் பிரத்தியட்சமாக உள்ளது. ஒரு ''சுற்றிவளேத்து அடக்கும்'' நடவடிக்கையும் அதற்கு எதிரான நடவடிக்கையும் — இத்தகையதே இந்த யுத்தத்தின் திரும்பத் திரும்ப இடம்பெறும் வடிவம். ஒவ்வொரு ''சுற்றிவளேத்து அடக்கும்'' நடவடிக்கையிலும் சண்டையிடுதலின் வடிவங்கள் ஒன்று மாறி ஒன்று இடம்பெறுவது, எமது தற்காப்பிற்கு எதிராக எதிரி தாக்குதலே உபயோகிப்பதும் நாம் அவனது தாக்குதலே எம்து தற்காப்பைக் கொண்டு எதிர்ப்பதுமான முதலாவது கட்டமொன்றும், எமது தாக்குதலுக்கு எதிராக எதிரி தற்காப்பை உபயோகிப்பதும் நாம் அவனது தற்காப்பை எமது தாக்குதலேக் கொண்டு எதிர்ப்பதுமான இரண்டாவது கட்டமொன்றும் சேர்ந்ததாகும்.

ஒரு யுத்தத்தின் அல்லது ஒரு சண்டையின் உள்ளடக்கத்தைப்

பொறுத்த வரையில், அது வெறுமனே திரும்பத் திரும்ப இடம்பெறுவதால் ஆனதல்ல, மாறாக ஒவ்வொரு தடவையும் வேறுவிதமானதாகும். இதுவும் ஒரு உண்மையும், சகலருக்கும் பிரத்தியட்சமாக உள்ளதுமாகும். இது சம்பந்தமாக, ஒவ்வொரு ''சுற்றிவளைத்து அடக்கும்'' நடவடிக்கையோடும் ஒவ்வொரு ''சுற்றிவளைத்து அடக்குத''லுக்கெதிரான நடவடிக்கையோடும் அளவு மேலும் பெரிதாகிறது, நிலைமை மேலும் சிக்கலானதாகிறது, சண்டை மேலும் உக்கிரமானதாகிறது என்பது ஒரு விதியாகிவிட்டது.

ஆனல், ஏற்ற இறக்கங்கள் எதுவும் இல்லையென்று அதற்கு அர்த்தமல்ல. எதிரியின் ஐந்தாவது ''சுற்றிவளைத்து அடக்கும்'' நடவடிக்கையின் பின்னர், செஞ்சேனை பெருமளவு பலவீனப்படுத்தப்பட்டும், தெற்கிலிருந்த தளப்பிரதேசங்கள் எல்லாம் இழக்கப்பட்டும் இருந்தன; வடமேற்கிற்கு நகர்ந்துகொண்டுள்ள செஞ்சேனை இனியும் தெற்கில் இருந்தது போல் உள்நாட்டு எதிரியை அச்சுறுத்தும் ஜீவாதாரமான ஸ்தானமொன்றைக் கொண்டில்லை; இதன் விளைவாகச் ''சுற்றிவளைத்து அடக்கும்'' நடவடிக்கைகளின் அளவு சிறியதாகியும், நிலைமை எளிமையானதாகியும், சண்டை உக்கிரம் குறைந்ததாகியும் உள்ளது.

செஞ்சேனைக்கு ஒரு தோல்வியாக அமைவது என்ன? யுத்த தந்திர ரீதியிற் பேசுவதாயின், ''சுற்றிவளைத்து அடக்குத'' லுக்கு எதிரான நடவடிக்கை முற்றாகத் தோல்வியடையும் போது மட்டுமே அது ஒரு தோல்வி எனப்படுகிறது, ஆனல் அப்போதும்கூடத் தோல்வி பகுதிவாரியானதும் தற்காலிகமானதும் மட்டுமே. ஏனெனில் செஞ்சேனை முற்றாக அழிக்கப்படுவது மட்டுமே உள்நாட்டு யுத்தத்தில் முற்றான தோல்வியாக

அமையும், ஆனால் இது ஒருபோதும் நிகழவில்லை. விசாலமான தளப்பிரதேசங்கள் இழக்கப்பட்டதும் செஞ்சேனையின் நகர்வும் தற்காலிகமானதும் பகுதிவாரியானதுமான ஒரு தோல்வியாகவே அமைந்தன, இந்தப் பகுதிவாரியான தோல்வி கட்சி அங்கத்துவத்திலும் ஆயுதப் படைகளிலும் தளப்பிரதேசங்களிலும் 90 சத விகிதத்தின் இழப்பைக் கொணர்ந்ததென்றபோதும் கூட, இறுதியானதும் முற்றானதுமான தோல்வியாக அமையவில்லை. நாம் இந்த நகர்வை எமது தற்காப்பின் தொடர்ச்சியென்றும் எதிரியின் துரத்துதலை அவனது தாக்குதலின் தொடர்ச்சியென்றும் கூறுகிறோம். அதாவது, எதிரியின் ''சுற்றிவளைத்து அடக்குத''லுக்கும் அதற்கெதிரான எமது நடவடிக்கைக்கும் இடையிலான போராட்டத்தின்போது நாம் தற்காப்பிலிருந்து தாக்குதலுக்கு மாறுவதற்குப் பதிலாக எமது தற்காப்பு எதிரியின் தாக்குதலால் தகர்க்கப்பட அனுமதித்துவிட்டோம்; எனவே எமது தற்காப்பு பின்வாங்குதலாக மாறிற்று, எதிரியின் தாக்குதல் துரத்துதலாக மாறிற்று. ஆனால் செஞ்சேனை புதிய ஒரு பிரதேசத்தை அடைந்தபோது, உதாரணமாக நாம் கியாங்சி மாகாணத்திலும் மற்றும் பல்வேறு பிரதேசங்களிலுமிருந்து ஷென்சி மாகாணத்திற்கு நகர்ந்தபோது, ''சுற்றிவளைத்து அடக்கும்'' நடவடிக்கைகள் திரும்பத் திரும்ப இடம்பெறுவது மறுபடி புதிதாக ஆரம்பமாகியது. எனவேதான் நாம் செஞ்சேனையின் யுத்ததந்திர ரீதியான பின்வாங்கல் (நீண்ட படைநடப்பு) அதன் யுத்ததந்திர ரீதியான தற்காப்பின் தொடர்ச்சியும், எதிரியின் யுத்ததந்திர ரீதியான துரத்துதல் அவனது யுத்ததந்திர ரீதியான தாக்குதலின் தொடர்ச்சியுமாகும் எனக் கூறுகிறோம்.

புராதனமானவையும் நவீனமானவையும், சீனாவிலானவை

யும் பிற நாடுகளிலானவையுமான மற்றெல்லா யுத்தங்களிலும் போலவே சீன உள்நாட்டு யுத்தத்திலும் சண்டையிடுதலின் அடிப்படையான வடிவங்கள், தாக்குதலும் தற்காப்புமாக, இரண்டு மட்டுமே உள்ளன. சீனுவின் உள்நாட்டு யுத்தத்தின் விசேஷ குணுதிசயம் ''சுற்றிவளைத்து அடக்கும்'' நடவடிக்கைகளும் அவற்றிற்கு எதிரான எமது நடவடிக்கைகளும் நீண்ட காலமாகத் திரும்பத் திரும்ப இடம்பெறுவதும், அத்துடன் தாக்குதலும் தற்காப்புமான சண்டையிடுதலின் வடிவங்கள் இரண்டும் நீண்ட காலமாக ஒன்று மாறி ஒன்று இடம்பெறு வதுமாகும்; இதில் பத்தாயிரம் கிலோமீட்டர்களுக்கு மேற் பட்ட பெரும் யுத்ததந்திர ரீதியான நகர்வும் (நீண்ட படை நடப்பு)[16] சேர்ந்துள்ளது.

எதிரிக்கு ஒரு தோல்வியும் பெரும்பாலும் இதேதான். எதி ரியின் ''சுற்றிவளைத்து அடக்கும்'' நடவடிக்கை எங்களால் தகர்க்கப்பட்டு எமது தற்காப்பு தாக்குதலாகும்போது, எதிரி தற்காப்பிற்கு மாறி, மற்றொரு ''சுற்றிவளைத்து அடக்கும்'' நடவடிக்கையைத் தொடுப்பதற்கு முன் மீண்டும் அணிதிரட்ட வேண்டியிருக்கும்போது, அது எதிரிக்கு யுத்ததந்திர ரீதியான ஒரு தோல்வியாகிறது. எதிரி நாடு முழுவதையும் ஆள்கிரு ஞகையாலும் அவன் எம்மைவிட மிகப் பலமானவனுக இருப் பதாலும் நாம் செய்துள்ளதுபோல் பத்தாயிரம் கிலோமீட் டர்களுக்கு மேற்பட்ட யுத்ததந்திர ரீதியான நகர்வொன்றை அவன் செய்ய வேண்டி இருக்கவில்லை. ஆனுல் அவனது படை களின் பகுதிவாரியான நகர்வுகள் இருந்துள்ளன. சில சமயங் களில், சில தளப்பிரதேசங்களில் செஞ்சேனையால் சுற்றிவளைக் கப்பட்ட வெள்ளைப் பலக்கொத்தளங்களில் இருந்த எதிரிப் படைகள் எமது சுற்றிவளைப்பை உடைத்துக் கொண்டு, புதிய

கியாங்சியிலான மத்திய பிரதேசத்தில் ஐந்தாவது ''சுற்றி வளைத்து அடக்கும்'' நடவடிக்கைக்கு எதிரான போராட்டங்களிலும் கைக்கொள்ளப்பட்ட தவறான மார்க்கத்தின் தோற்றுவாய்; இது செஞ்சேனையை எதிரியின் இந்த உக்கிரமான நடவடிக்கைகளின் முன்னால் ஆற்றுறததாக்கி, சீனப் புரட்சிக்குப் பிரமாண்டமான இழப்புகளை ஏற்படுத்தியது.

''சுற்றிவளைத்து அடக்கும்'' நடவடிக்கைகள் திரும்பத் திரும்ப இடம்பெறுவதை மறுத்த ''இடதுசாரி''ச் சந்தர்ப்பவாதத்துடன் நேரடியாகச் சம்பந்தப்பட்ட, செஞ்சேனை எந்தச் சூழ்நிலைகளின்கீழும் தற்காப்பு முறைகளைக் கைக்கொள்ளக் கூடாது என்ற கருத்தும் முற்றுகத் தவறானது.

ஒரு புரட்சி அல்லது புரட்சிகர யுத்தம் ஒரு தாக்குதல் என்ற கூற்றுச் சரியானது தான். ஒரு புரட்சி அல்லது புரட்சிகர யுத்தம் அது தோன்றுவதிலும், ஒரு சிறு சக்தியாக இருந்து பெரும் சக்தியாகவும், அரசியல் அதிகாரம் இன்மையிலிருந்து அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கும், செஞ்சேனை ஒன்று இன்மையிலிருந்து செஞ்சேனை ஒன்றைச் சிருஷ்டிப்பதற்கும், புரட்சிகரத் தளப்பிரதேசங்கள் இன்மையிலிருந்து அவற்றை ஸ்தாபிப்பதற்குமாக வளர்ச்சியடைவதிலும் தாக்குதலையே கைக்கொள்ளவேண்டும், பத்தாம்பசலியாக இருக்கமுடியாது; பத்தாம்பசலிவாதப் போக்குகள் எதிர்க்கப்படவும் வேண்டும்.

முற்றிலும் சரியான ஒரே கூற்று, ஒரு புரட்சி அல்லது புரட்சிகர யுத்தம் ஒரு தாக்குதல், ஆனால் அது தற்காப்பையும் பின்வாங்குதலையும் உள்ளடக்குவதுமாகும் என்பதே. தாக்க வேண்டித் தற்காத்துக்கொள்வது, முன்னேற வேண்டிப் பின்வாங்குவது, நேர்முக முன்னணியைத் தாக்கவேண்டிப் பக்கவாடுகளைத் தாக்குவது, நேர்ப்பாதைக்கு வர வேண்டிச் சுற்றுப்

பாதையை எடுப்பது — இது பல காரியங்களின், விசேஷமாக ராணுவ நடமாட்டங்களின் அபிவிருத்தியில் தவிர்க்கமுடியா தது.

மேலே கூறப்பட்ட இரு கூற்றுக்களில் முதலாவது கூற்று அரசியற் துறையில் சரியானதாக இருக்கலாம், ஆனல் ராணு வத் துறைக்குக் கொண்டுவரப்படும்போது அது தவறுனது. மேலும், அரசியல் ரீதியிலும் ஒரு நிலைமையில் (புரட்சி முன் னேறுகையில்) மட்டுமே அது சரியானது, ஆனல் மற்றெரு நிலைமைக்கு (புரட்சி பின்வாங்குகையில், ரஷ்யாவில் 1906ம் ஆண்டிலும்[17] சீனவில் 1927ம் ஆண்டிலும் போல் பூரண மாகப் பின்வாங்குகையிலும், ரஷ்யாவில் 1918ல் பிரெஸ்ட்-லிடொவ்ஸ்க் உடன்படிக்கை[18]ச் சமயத்தில் போல் பகுதிவாரி யாகப் பின்வாங்குகையிலும்)க் கொண்டு செல்லப்படும்போது தவறுனது. இரண்டாவது கூற்று மட்டுமே முற்றிலும் சரி யான ஒரு உண்மையாகும். தற்காப்பு ராணுவ நடவடிக்கை கள் கையாளப்படுவதை யாந்திரிக ரீதியில் எதிர்த்த 1931-34 காலத்திய ''இடதுசாரி''ச் சந்தர்ப்பவாதம் சிறுபிள்ளைத்தன மான சிந்தனையே தவிர வேறில்லை.

''சுற்றிவளைத்து அடக்கும்'' நடவடிக்கைகள் திரும்பத் திரும்ப இடம்பெறும் வடிவம் எப்போது முடிவுக்கு வரும்? எனது அபிப்பிராயத்தில், உள்நாட்டு யுத்தம் நீடித்தால், இந் தத் திரும்பத் திரும்ப இடம்பெறுதல் எதிரியினதும் எமதும் சக்திகளின் பலாபலத்தில் அடிப்படையான மாற்றமொன்று நிகழும்போது முடிவுறும். செஞ்சேனை எதிரியைவிடப் பலம் வாய்ந்ததாக ஆகும்போது அது முடிவுறும். அப்போது நாம் எதிரியைச் சுற்றிவளைத்து அடக்குவோம். அவன் சுற்றிவளைத்து அடக்குதலுக்கு எதிரான நடவடிக்கைகளை நாடுவான்; ஆனல்

அரசியல், ராணுவ நிலைமைகள் அவனைச் செஞ்சேனை ''சுற்றி வளைத்து அடக்குத''லுக்கு எதிரான அதன் நடவடிக்கைகளில் அடையும் அதே ஸ்தானத்தை அடைய அனுமதிக்க மாட்டா. அப்போதளவில் ''சுற்றிவளைத்து அடக்கும்'' நடவடிக்கைகள் திரும்பத் திரும்ப இடம்பெறும் வடிவம் முற்றாக இல்லாவிட்டாலும் பெரும்பாலுமாவது முடிவுக்கு வந்துவிடும் என நிச்சயமாகக் கூறலாம்.

## அத்தியாயம் V

## யுத்ததந்திர ரீதியான தற்காப்பு

இந்தத் தலைப்பின் கீழ் நான் பின்வரும் பிரச்சினைகளை விளக்கிக்கூற விரும்புகிறேன்: (1) செயற்படும் தற்காப்பும் செயற்படாத் தற்காப்பும்; (2) ''சுற்றிவளைத்து அடக்கும்'' நடவடிக்கைகளை எதிர்த்துப் போரிடுவதற்கான தயாரிப்புகள்; (3) யுத்த தந்திர ரீதியான பின்வாங்கல்; (4) யுத்ததந்திர ரீதியான எதிர்த்தாக்குதல்; (5) எதிர்த்தாக்குதலைத் தொடங்குதல்; (6) துருப்புகளைக் குவித்தல்; (7) நடமாட்ட யுத்தம்; (8) விரைவில் வெற்றி தோல்வி காணும் யுத்தம்; (9) அழித்தொழிக்கும் யுத்தம்.

### 1. செயற்படும் தற்காப்பும் செயற்படாத் தற்காப்பும்

நாம் ஏன் தற்காப்பை விளக்கிக்கூறுவதில் தொடங்குகிறோம்? சீனாவின் 1924 முதல் 1927 வரையான முதலாவது தேசிய ஐக்கிய முன்னணி தோல்வியானதன் பின்னர், புரட்சி

மிக உக்கிரமானதும் தயை தாட்சண்யமற்றதுமான ஒரு வர்க்க யுத்தமாக ஆயிற்று. எதிரி நாடு முழுவதையும் ஆண்ட போதில், நாம் சிறு ஆயுதப் படைகளை மட்டுமே கொண்டிருந்தோம்; இதன் விளைவாக, ஆரம்பந் தொட்டே நாம் அவனது ''சுற்றி வளைத்து அடக்கும்'' நடவடிக்கைகளுக்கு எதிராகக் கடுமை யான போராட்டமொன்றை நடத்த வேண்டி இருந்துள்ளது. எமது தாக்குதல்கள் அந்நடவடிக்கைகளைத் தகர்ப்பதுடன் நெருக்கமாகப் பிணைந்தவையாக இருந்துள்ளன; அவ்வாறு செய்ய எம்மால் இயலுமா இல்லையா என்பதிற்தான் எமது கதி முற்றுகத் தங்கியுள்ளது. ஒரு ''சுற்றிவளைத்து அடக்கும்'' நடவடிக்கையைத் தகர்க்கும் போக்கு வழமையாகச் சுற்று வழியானது, ஒருபோதும் நேரடியானதல்ல. பிரதானமானதும் பாரதூரமான ஒன்றும் கூட ஆன பிரச்சினை, எவ்வாறு எமது பலத்தைப் பேணிக் கொண்டு, எதிரியைத் தோற்கடிக்க ஒரு சந்தர்ப்பத்திற்காகக் காத்திருப்பது என்பதே. ஆகவே, யுத்த தந்திர ரீதியான தற்காப்புத்தான் செஞ்சேனை அதன் போர் நடவடிக்கைகளில் எதிர்நோக்கும் மிகச் சிக்கலானதும் மிக முக்கியமானதுமான பிரச்சினை.

எமது பத்து வருட கால யுத்தத்தில் யுத்ததந்திர ரீதியான தற்காப்புச் சம்பந்தமாக இரு பிறழ்வுகள் பல சமயம் எழுந் தன; ஒன்று எதிரியைச் சிறிதுபடுத்துவது, மற்றது அவனைப் பற்றிப் பீதியடைவது.

எதிரியைச் சிறிதுபடுத்தியதன் விளைவாகப் பல கொரில் லாக் கூறுகள் தோல்வியை உற்றன; செஞ்சேனையும் எதிரி பல தடவை நடத்திய ''சுற்றிவளைத்து அடக்குத''லைத் தகர்க்க முடியாது போயிற்று.

புரட்சிகரக் கொரில்லாப் படைக் கூறுகள் முதலில் தோன்

றிய பொழுது அவற்றின் தலைவர்கள் பல சமயம் எதிரியின் நிலைமையையும் எம் சொந்த நிலைமையையும் சரியாக மதிப்பிடத் தவறினர். அவர்கள் ஓர் இடத்தில் சடுதியான ஆயுதமேந்திய எழுச்சிகளை அல்லது வெள்ளைத் துருப்புகள் மத்தியில் சிப்பாய்க் கலகங்களை ஒழுங்குபடுத்துவதில் வெற்றியடைந்திருந்தனராகை யால், அவர்கள் கணநேர சாதகமான சூழ்நிலைகளை மட்டுமே கண்டனர், அல்லது உண்மையிற் தம்மை எதிர்நோக்கிய மிக மோசமான நிலைமையைக் காணத் தவறினர்; எனவே சாதா ரணமாக எதிரியைக் குறைத்து மதிப்பிட்டனர். மேலும், அவர்கள் தமது சொந்தப் பலவீனங்களையும் (அதாவது, அனு பவமின்மையையும் படைகளின் பலவீனத்தையும் சிறிய அள வையும்) விளங்கிக்கொள்ளவில்லை. எதிரி பலமாகவும் நாம் பலவீனமாகவும் இருந்தது ஒரு புறநிலையான உண்மை; இருந் தும் சிலர் இதில் சிந்தனை செலுத்த மறுத்து, ஒருபோதும் தற் காப்பையோ பின்வாங்குதலையோ பற்றிப் பேசாமல் தாக்கு தலைப் பற்றி மட்டுமே பேசி, அவ்வாறாகத் தற்காப்பின் விஷயத் தில் தம்மை மனதளவில் நிராயுதபாணிகளாக்கிக் கொண்ட னர்; எனவே தம் செய்கைகளையும் தவறாக வழிநடத்தினர். இதன் காரணமாகப் பல கொரில்லாப் படைக்கூறுகள் தோற் கடிக்கப்பட்டன.

இக்காரணத்தால் செஞ்சேனை எதிரியின் ''சுற்றிவளைத்து அடக்கும்'' நடவடிக்கைகளைத் தகர்க்கத் தவறிய உதாரணங் கள் 1928ல் குவாங்துங் மாகாணத்தின் ஹாய்ஃபெங்-லூஃபெங் பிரதேசத்தில் அது தோற்கடிக்கப்பட்டதும்[19] 1932ல் கோமிந் தாங் சேனை வெறுமனே ஒரு துணைப்படைதான் என்ற தத்துவத்தின் வழிகாட்டலில் ஹூபெய்-ஹோனான்-அன்ஹூய் எல்லைப் பிரதேசத்தில் செஞ்சேனை எதிரியின் நான்காவது

''சுற்றிவளைத்து அடக்குத''லுக்கு எதிரான நடவடிக்கையில் செயல்படும் சுதந்திரத்தை இழந்ததுமாகும்.

எதிரியைப் பற்றி பீதிகொண்டிருந்ததன் காரணமாக ஏற்பட்ட பின்னடைவுகளுக்குப் பல உதாரணங்கள் உள்ளன. எதிரியைக் குறைத்து மதிப்பிட்டவர்களுக்கு மாறுகச் சிலர் அவனை மிகுதியாகப் பெரிதுபடுத்தி மதிப்பிட்டு, எம் சொந்தப் பலத்தையும் மிகுதியாகக் குறைத்து மதிப்பிட்டனர்; இதன் விளைவாக இவர்கள் தேவையற்ற ஒரு பின்வாங்கல் கொள்கையைக் கைக்கொண்டு, எதிரியைக் குறைத்து மதிப்பிட்டவர்களைப் போலவே தற்காப்பின் விஷயத்தில் தம்மை மனதளவில் நிராயுதபாணிகளாக்கியும் கொண்டனர். இது சில கொரில்லாப் படைக் கூறுகள் தோற்கடிக்கப்பட்டதிலோ, சிற்சில செஞ்சேனைப் போரியக்கங்கள் தோல்வியுற்றதிலோ, தளப்பிரதேசங்கள் இழக்கப்பட்டதிலோ போய் முடிந்தது.

ஒரு தளப்பிரதேசம் இழக்கப்பட்ட மிகக் கண்கூடான உதாரணம் ஐந்தாவது ''சுற்றிவளைத்து அடக்குத''லுக்கு எதிரான நடவடிக்கையின்போது கியாங்சியிலிருந்த மத்திய தளப்பிரதேசம் இழக்கப்பட்டதாகும். இங்கு தவறு ஒரு வலதுசாரிக் கருத்துநிலையிலிருந்து எழுந்தது. தலைவர்கள் எதிரி ஏதோ புலி என்பது போன்று அவனுக்கு அஞ்சி, எங்கும் தற்காப்புகள் நிறுவி ஒவ்வொரு அடியிலும் தற்காப்புச் சண்டைகள் நடத்தியதோடு, எமக்குச் சாதகமாக இருந்திருக்கக் கூடிய விதத்தில் எதிரியின் பின்புறத்திற்கு நகர்ந்து அவனை அங்கு தாக்குவதற்கோ, அல்லது எதிரித் துருப்புகளைச் சுற்றிவளைத்து அழித்தொழிக்கக் கூடியதாகத் துணிகரமாக அவர்களை நெடுந்தூரம் உள்ளுக்கு இழுத்துச் செல்லவோ துணியவில்லை; இதன் விளைவாகத் தளப்பிரதேசம் முழுவதும் இழக்கப்பட்டு, செஞ்

சேனை 12,000 கிலோமீட்டர்களுக்கு மேற்பட்ட நீண்ட படை நடப்பை மேற்கொள்ளவும் வேண்டியதாயிற்று. இருப்பினும், இந்த வகையான தவறுக்கு முன் எதிரியைக் குறைத்து மதிப் பிடும் ''இடதுசாரி''த் தவறு ஒன்று இருப்பது வழமை. 1932ல் கேந்திர நகரங்களைத் தாக்கிய ராணுவத் துணிச்சல்வாதமே பின்னர் எதிரியின் ஐந்தாவது ''சுற்றிவளைத்து அடக்கும்'' நடவடிக்கையைச் சமாளிப்பதில் கைக்கொள்ளப்பட்ட செயற் படாத் தற்காப்பு மார்க்கத்துக்கு மூல காரணம்.

எதிரியைப் பற்றிப் பீதியடைவதற்கு மிக அதியந்தமான உதாரணம் ''சாங் கோ-தௌ மார்க்க''த்தின் பின்வாங்கல் வாதமாகும். மஞ்சள் நதிக்கு மேற்கே செஞ்சேனையின் நான் காவது முன்னணிப்படையின் மேற்கு வியூகம் தோற்கடிக்கப் பட்டது[20] இந்த மார்க்கத்தின் இறுதியான பங்கலோட்டுத் தனத்தைக் குறித்தது.

செயற்படும் தற்காப்பிற்குத் தாக்குதற் தற்காப்பு, அல்லது தீர்க்கமான சண்டைகளைப் பெறுவதற்கான தற்காப்பு என் றும் பெயர். செயற்படாத் தற்காப்பிற்குச் சுத்த தற்காப்பான தற்காப்பு, அல்லது சுத்த தற்காப்பு என்றும் பெயர். செயற் படாத் தற்காப்பு உண்மையில் போலியான தற்காப்பே; உண் மையான ஒரு தற்காப்பு செயற்படும் தற்காப்பே, திருப்பித் தாக்குவதும் தாக்குதலில் இறங்குவதுமான நோக்கத்திற்கான தற்காப்பே. நான் அறிந்த வரையில், யுத்ததந்திரத்திலாயி னும் தந்திரோபாயங்களிலாயினும் செயற்படாத் தற்காப்பை எதிர்க்காத புராதன, நவீன, சீன, அல்லது அந்நிய, பெறு மதியுள்ள ராணுவ நூல் எதுவுமோ, ஒப்பீட்டளவில் புத்தி யுள்ள ராணுவ நிபுணர் எவருமோ கிடையாது. ஒரு முழு மூடன் அல்லது பைத்தியக்காரன்தான் செயற்படாத் தற்காப்

பை ஒரு சஞ்சீவியெனக் கொண்டு பாராட்டுவான். எனினும் இத்தகைய காரியங்களைச் செய்யும் பேர்வழிகள் இந்த உலகில் இருக்கின்றனர். இது யுத்தத்தில் ஒரு தவறு, ராணுவ விவகாரங்களில் பத்தாம்பசலிவாதத்தின் ஒரு வெளிப்பாடு; இதனை நாம் உறுதியாக எதிர்க்க வேண்டும்.

புதிய, விரைவாக அபிவிருத்தியுறும் ஏகாதிபத்திய நாடுகளான ஜெர்மனியினதும் ஜப்பானினதும் ராணுவ நிபுணர்கள் யுத்ததந்திர ரீதியான தாக்குதலின் சாதகங்களைப் பறைசாற்றியும் யுத்ததந்திர ரீதியான தற்காப்பை எதிர்த்தும் வருகின்றனர். இந்த விதமான ராணுவ சிந்தனை சீனுவின் புரட்சிகர யுத்தத்திற்கு அறவே பொருத்தமற்றது. இந்த ராணுவ நிபுணர்கள் தற்காப்பின் பாரதூரமான பலவீனம் அது பொதுஜன தைரியத்தைத் தூண்டுவதற்குப் பதிலாக உலுப்பிவிடுகிறது என்பதாகும் என வலியுறுத்துகின்றனர். இது வர்க்க முரண்பாடுகள் கூர்மையாக உள்ளவையும் யுத்தம் பிற்போக்கு ஆளும் படிவங்களுக்கு அல்லது அதிகாரத்தில் உள்ள பிற்போக்கு அரசியல் கோஷ்டிகளுக்கு மட்டும் நன்மை செய்வதுமான நாடுகளுக்குப் பொருந்துகிறது. ஆனுல் எமது நிலைமை வேறுவிதமானது. புரட்சிகரத் தளப்பிரதேசங்களைப் பாதுகாப்பதும் சீனுவைப் பாதுகாப்பதும் என்ற கோஷத்தைக் கொண்டு நாம் மக்களில் மிகுந்த பெரும்பான்மையினரை ஒரு மனதோடும் ஒரு இதயத்தோடும் போரிட ஐக்கியப்படுத்தலாம், ஏனென்னில் நாமே ஒடுக்கப்படுவோரும் ஆக்கிரமிப்பிற்கு இலக்கானவர்களுமாவோம். சோவியத் யூனியனின் செஞ்சேனை உள்நாட்டு யுத்தத்தின் போது அதன் எதிரிகளைத் தோற்கடித்ததும் தற்காப்பு வடிவத்தை உபயோகித்ததன் மூலந்தான். ஏகாதிபத்திய நாடுகள் வெள்ளைக் காவலர்களைத் தாக்குதலுக்குத் திரட்

எமது கொள்கை யுத்ததந்திர ரீதியான தாக்குதலாக மட்டுமே இருக்கும். இந்த மாற்றம் எதிரியினதும் எமதும் சக்திகளின் சமன்பாட்டிலான ஒரு பொதுவான மாற்றத்திற் தங்கியுள்ளது. அந்தச் சமயமளவில் எஞ்சியிருக்கும் தற்காப்பு நடவடிக்கைக ளும் பகுதிவாரியான இயல்பினவாக இருக்கும்.

### 2. ''சுற்றிவளைத்து அடக்கும்'' நடவடிக்கைகளை எதிர்த்துப் போரிடுவதற்கான தயாரிப்புகள்

எதிரியின் ஒரு திட்டமிட்ட ''சுற்றிவளைத்து அடக்கும்'' நடவடிக்கைக்கு எதிராக நாம் அவசியமான, போதுமான தயா ரிப்புகளைச் செய்திருந்தால் அல்லாமல் நாம் நிச்சயம் செயலற்ற ஒரு நிலைக்கு நிர்ப்பந்தித்துத் தள்ளப்படுவோம். அவசரத்தில் சண்டையில் ஈடுபடுவது வெற்றியில் நிச்சயமின்றிச் சண்டை யிடுவதாகும். ஆகவே எதிரி ஒரு ''சுற்றிவளைத்து அடக்கும்'' நடவடிக்கைக்குத் தயாராகிக் கொண்டிருக்கையில் நாம் எமது எதிர் நடவடிக்கைக்குத் தயாராவது அறவே அவசியம். ஒரு காலத்தில் எமது அணிகளிற் சிலர் இருந்ததைப் போல், இத் தகைய தயாரிப்புகளுக்கு எதிராக இருப்பது சிறுபிள்ளைத் தனமானதும் கேலிக்கிடமானதுமாகும்.

இங்கு இலகுவில் தகராறு எழக் கூடிய கஷ்டமான பிரச்சினை ஒன்று உள்ளது. நாம் எப்போது எமது தாக்குதலை முடித்துக் கொண்டு, ''சுற்றிவளைத்ரு அடக்குத''லுக்கு எதிரான எமது எதிர் நடவடிக்கைக்குத் தயாராகும் கட்டத்திற்கு மாறவேண் டும்? நாம் வெற்றிகரமாகத் தாக்குதலிலும் எதிரி தற்காப்பிலும் ஈடுபட்டுள்ள போது, அடுத்த ''சுற்றிவளைத்து அடக்கும்''

நடவடிக்கைக்கான அவனது தயாரிப்புகள் இரகசியமாக நடத்தப்படும்; ஆகவே அவனது தாக்குதல் எப்போது தொடங்கும் என அறிவது எமக்குக் கஷ்டமானது. ''சுற்றிவளைத்து அடக்குத''லுக்கு எதிரான நடவடிக்கைக்குத் தயாராகும் எமது வேலை தேவைக்கு மேல் முந்தித் தொடங்கினால் அது எமது தாக்குதலிலிருந்து கிடைக்கக் கூடிய பயன்களைக் குறைத்தே தீரும், சில சமயங்களில் செஞ்சேனைமீதும் மக்களின்மீதும் சிற்சில தீய பாதிப்புகளைக் கூட ஏற்படுத்தும். ஏனெனில், தயாரிப்புக் கட்டத்தில் பிரதானமான நடவடிக்கைகள் வாபஸாவதற்கான ராணுவத் தயாரிப்புகளும் அவற்றிற்கான அரசியல் ரீதியான அணிதிரட்டலுமே. சில சமயங்களில், நாம் ஆக முந்தித் தயாராகத் தொடங்கிவிட்டால், இது எதிரிக்காகக் காத்துக்கொண்டிருப்பதாக மாறிவிடும்; எதிரி எதிர்ப்படாமல் நாம் நீண்ட காலத்திற்குக் காத்துக்கொண்டிருந்த பின்னர், நாம் எமது தாக்குதலை மீண்டும் தொடங்க வேண்டி ஏற்படும். சில சமயங்களில் எமது புதிய தாக்குதல் தொடங்குகின்ற அதே சமயத்தில், எதிரி தனது தாக்குதலைத் தொடங்கி, அவ்வாறாக நாம் கஷ்டமான ஒரு நிலையில் இடப்படக் கூடும். எனவே, எமது தயாரிப்புகளைத் தொடங்குவதற்குச் சரியான தருணத்தைத் தெரிந்தெடுப்பது முக்கியமான ஒரு பிரச்சினை. சரியான தருணம் எதிரியின் நிலைமை, எம் சொந்த நிலைமை இரண்டிற்கும், அவற்றிற்கிடையிலான உறவிற்கும் உரிய கவனம் தந்து தெரிந்தெடுக்கப்பட வேண்டும். எதிரியின் நிலைமையை அறிய நாம் அவனது அரசியல், ராணுவ, நிதி நிலைமைகளைப் பற்றியும் அவனது பிரதேசத்தில் பொதுஜன அபிப்பிராயம் எந்த நிலையில் உள்ளதென்பதைப் பற்றியும் தகவல் சேகரிக்க வேண்டும். இத்தகைய தகவலைப் பரிசீலிப்பதில் நாம் எதிரியின்

மொத்த பலத்தைப் பூரணமாகக் கணக்கில் எடுக்கவும், அவனது கடந்த காலத் தோல்விகளின் அளவை மிகைப்படுத்தாதிருக்கவும் வேண்டும்; ஆனால், மறு புறம், அவனது உள் முரண்பாடுகள், அவனது நிதிக் கஷ்டங்கள், அவனது கடந்த காலத் தோல்விகளின் பாதிப்பு முதலானவற்றைக் கணக்கில் எடுக்க நாம் தவறக் கூடாது. எமது தரப்பைப் பொறுத்த வரையில், நாம் எமது கடந்த கால வெற்றிகளின் அளவை மிகைப்படுத்தக் கூடாது, அன்றி அவற்றின் பாதிப்பைப் பூரணமாகக் கணக்கில் எடுக்கத் தவறவும் கூடாது.

இருப்பினும், பொதுவாகக் கூறினால், தயாரிப்புகளுக்கான தருணத்தின் பிரச்சினையில், அவற்றை ஆகப் பிந்தி ஆரம்பிப்பதைவிட ஆக முந்தி ஆரம்பிப்பதே நல்லது. ஏனெனில் முந்தி ஆரம்பிப்பது பிந்தி ஆரம்பிப்பதைவிடச் சிறிய இழப்புகளையே கொணர்வதும், தயார் நிலையானது ஆபத்தை விலக்கி எம்மை அடிப்படையாகத் தோற்கடிக்கப்பட முடியாத நிலையில் இடுகிறது என்ற சாதக அம்சத்தை உடையதும் ஆகும்.

தயாரிப்புக் கட்டத்தில் பிரதானமான பிரச்சினைகள் செஞ்சேனையை வாபஸ்பெறுவதற்கான தயாரிப்புகள், அரசியல் ரீதியான அணிதிரட்டல், சேனைக்கு ஆள்சேர்த்தல், நிதிக்கும் தானியங்களுக்கும் ஒழுங்குகள், அரசியல் ரீதியில் விரோதமான நபர்களைக் கையாள்தல் ஆகியன.

செஞ்சேனையை வாபஸ்பெறுவதற்கான தயாரிப்புகள் என்பதால் நாம் கருதுவது அது வாபஸாவதற்குக் குந்தகமான திசையில் நகராதபடியும், தன் தாக்குதல்களில் அளவிற்கதிக தூரம் முன்னேறிவிடாதபடியும், அளவிற்கதிகம் களைப்புற்றுவிடாதபடியும் இருக்கக் கவனமெடுப்பதையே. இவையே பெரும் ரீதியான எதிரித் தாக்குதலொன்று தொடங்கவிருக்கும் தறுவா

யில் பிரதான சக்தியாகிய செஞ்சேனை கையாள வேண்டிய காரியங்கள். அத்தகைய ஒரு சமயத்தில் செஞ்சேனை அதன் கவனத்தைப் பிரதானமாகப் போர்க்களங்களைச் சிருஷ்டிப் பது, பண்டங்கள் கொள்வனவு செய்வது, தன் சொந்தப் படைகளை விஸ்தரிப்பதும் பயிற்றுவதும் ஆகியவற்றைத் திட் டமிடுதலுக்கு அர்ப்பணிக்க வேண்டும்.

''சுற்றிவளைத்து அடக்குத''லுக்கு எதிரான போராட்டத்தில் அரசியல் ரீதியான அணிதிரட்டல் முதல் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பிரச்சினை. அதாவது, செஞ்சேனைக்கும் தளப்பிரதேசத்தில் உள்ள மக்களுக்கும் நாம் எதிரியின் தாக்குதல் தவிர்க்க முடி யாதது, உடனடியாக நிகழப் போகிறது, மக்களுக்குப் பாரதூ ரமான தீங்கை விளைக்கும் எனத் தெளிவாகவும் உறுதியாகவும் பூரணமாகவும் தெரிவிக்கவும், அதே நேரத்தில் அவர்களுக்கு எதிரியின் பலவீனங்களையும் செஞ்சேனைக்குச் சாதகமாயுள்ள அம்சங்களையும் வெல்வதென்ற எமது தளர்வுறுத உறுதியை யும் எமது பொதுவான வேலைத்திட்டத்தையும் பற்றிக் கூற வும் வேண்டும். எதிரியின் ''சுற்றிவளைத்து அடக்கும்'' நட வடிக்கையை எதிர்க்கவும் தளப்பிரதேசத்தைப் பாதுகாக்கவும் போரிடும்படி நாம் செஞ்சேனையையும் மக்கள் எல்லோரையும் அறைகூவ வேண்டும். ராணுவ இரகசியங்கள் சம்பந்தப்பட் டவிடங்களிற் தவிர மற்றப்படி அரசியல் அணிதிரட்டல் பகிரங் கமாக நடத்தப்படவும், மேலும், அது புரட்சிகர இலட்சியத்தை ஒருவேளை ஆதரிக்கக்கூடிய அனைவருக்கும் விரிவுபடுத்த முயற் சிக்கப்படவும் வேண்டும். இதில் கேந்திரமான காரியம் இயக்கு னர்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்துவதாகும்.

புதிய படைவீரர்களைச் சேர்ப்பது இரு விஷயங்களை, முத லாவதாக மக்களின் அரசியல் அறிவுணர்வின் மட்டத்தையும்

ஜனத்தொகையின் அளவையும், இரண்டாவதாக செஞ்சேனை யின் அப்போதைய நிலையையும், ''சுற்றிவளைத்து அடக்குத'' லுக்கு எதிரான நடவடிக்கை முழுவதின் போதும் அதன் இழப்புகளின் சாத்தியமான அளவையும் கருத்திற்கொள்ள வேண்டும்.

நிதி, உணவு ஆகிய பிரச்சினைகள் ''சுற்றிவளைத்து அடக்குத'' லுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு மிகுந்த முக்கியத்துவமு டையவை என்பதைக் கூறத் தேவையில்லை. நாம் ''சுற்றி வளைத்து அடக்கும்'' எதிரி நடவடிக்கை நீண்ட நேரம் நீடித் திருக்கும் சாத்தியக்கூறைக் கணக்கில் எடுக்க வேண்டும். எதி ரியின் ''சுற்றிவளைத்து அடக்கும்'' நடவடிக்கைக்கு எதிரான போராட்டம் முழுமைக்குமான குறைந்தபட்ச பொருட் தேவை களின் — பிரதானமாக செஞ்சேனையின் தேவைகளின், ஆனால் அத்துடன் புரட்சிகர தளப்பிரதேசங்களில் உள்ள மக்களுடை யவற்றினதும் — மதிப்பீடு ஒன்றைச் செய்வது அவசியம்.

அரசியல் ரீதியில் விரோதமான நபர்கள் சம்பந்தமாக, நாம் எச்சரிக்கையின்றி இருந்துவிடக் கூடாது, ஆனால் நாம் அவர் களின் பங்கில் துரோகத்தை எதிர்பார்த்து அனுவசியமான அள வுக்குப் பயப்படவும் மித மிஞ்சிய முன்னெச்சரிக்கை நடவடிக் கைகளைக் கைக்கொள்ளவும் கூடாது. நிலப்பிரபுக்களுக்கும் வியா பாரிகளுக்கும் பணக்கார விவசாயிகளுக்கும் இடையில் வேற்று மை காணப்பட வேண்டும்; அவர்களின்மீது கண்காணிப்பு வைத்துக்கொள்ள வெகுஜனங்களை அணிதிரட்டும் அதே வேளை யில், பிரதான காரியம் அவர்களுக்கு விஷயங்களை அரசியல் ரீதியில் விளங்கப்படுத்தி, அவர்களை நடுநிலைமைக்கு வென் றெடுப்பதுதான். வெகு அபாயகரமானவர்களான மிகச் சில

நபர்களுக்கு எதிராக மட்டுமே கைதுசெய்தல் போன்ற கடும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

''சுற்றிவளைத்து அடக்குத''லுக்கு எதிரான போராட்டத்தில் வெற்றியின் அளவு, தயாரிப்புக் கட்டத்தின் பணிகள் எந்த அளவிற்குப் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்பதுடன் நெருங்கிய சம்பந்தமுடையதாகும். எதிரியைக் குறைத்து மதிப்பிடுவதன் காரணமாக ஏற்படுவதான, தயாரிப்பு வேலையைத் தளர்த்துதல், எதிரியின் தாக்குதல்களைப் பற்றிப் பயங்கொண்டிருப்பது காரணமாக ஏற்படுவதான பீதி, இரண்டும் தீங்கான போக்குகள், இரண்டும் உறுதியாக எதிர்க்கப்பட வேண்டும். நமக்குத் தேவையானது ஒரு உற்சாகமான, ஆனால் அமைதியான மனேநிலை; தீவிரமான, ஆனல் ஒழுங்கான வேலை முறை.

### 3. யுத்ததந்திர ரீதியான பின்வாங்கல்

யுத்ததந்திர ரீதியான ஒரு பின்வாங்கல், பலங் குறைந்த ஒரு படை தான் தன்னல் விரைவில் தகர்க்க முடியாத தாக்குதலைத் தொடுக்கும் பலங் கூடிய ஒரு படையை எதிர்ப்பட்டிருக்கக் காணும்போது, அது தன் பலத்தைப் பேணிக் கொள்வதும் எதிரியைத் தோற்கடிக்கத் தருணம் பார்த்துக் காலத்தைக் கடத்துவதுமான நோக்கத்திற்காக எடுக்கும் ஒரு திட்டமிட்ட யுத்ததந்திர ரீதியான நடவடிக்கையாகும். ஆனல் ராணுவத் துணிச்சல்வாதிகள் இத்தகைய ஒரு நடவடிக்கையை முரண்டுப் பிடியாக எதிர்த்து, ''எதிரியை வாயிலுக்கு வெளியில் சந்தித்துப் போரிடுவ''தை ஆதரிக்கின்றனர்.

இரு குத்துச்சண்டை வீரர்கள் சண்டையிடும் பொழுது, புத்திசாலியானவன் முதலில் சிறிது விட்டுக் கொடுக்கிறான், முட்டாளானவனே அவசரமாக முழு மூச்சாக இறங்கித் தன் சக்தி முழுவதையும் தொடக்கத்திலேயே உபயோகித்து முடித்து விட்டுப் பல சமயம் விட்டுக் கொடுத்தவனால் இறுதியில் தோற் கடிக்கப்படுகிறான் என்பது அனைவருக்கும் தெரிந்ததே.

''ஷுய் ஹு சுவான்'' என்ற நவீனத்தில் உடற் பயிற்சி ஆசிரியன் ஹுங், லின் சுங்கை சாய் சின்னின் வீட்டில் சண் டையிடச் சவால் விட்டு, ''வா! வா! வா!'' என்று கத்துகி றான். கடைசியில், பின்வாங்கிய லின் சுங் தான் ஹுங்கின் பலவீனமான அம்சத்தைக் கண்டுகொண்டு அவனை ஒரே அடி யில் வீழ்த்துகிறான்.[22]

வசந்த இலையுதிர்கால சகாப்தத்தில் லு, சீ ஆகிய அரசு கள்[23] யுத்தம் செய்துகொண்டிருந்த போது, லுவின் ராஜா சுவாங், சீ துருப்புகள் முற்றாகக் களைத்துப் போக முன்னமே தாக்க விரும்பினான், ஆனால் ஷாஓ குவெய் அவனைத் தடுத்தார். அதற்குப் பதிலாக அவர் ''எதிரி களைத்திருக்கும் போது நாம் தாக்குவோம்'' என்ற தந்திரோபாயத்தைக் கைக்கொண்ட போது, அவர் சீ சேனையைத் தோற்கடித்தார். இது சீனாவின் யுத்த வரலாற்றில் பலவீனமான ஒரு படை பலமான ஒரு படையைத் தோற்கடிப்பதற்கு ஓர் அருமையான உதாரணம். வரலாற்றாசிரியர் சுவோசியூ மிங்[24] தரும் வர்ணனை பின்வரு மாறு:

> வசந்தத்தில் சீ துருப்புகள் எம்மீது படையெடுத்தன. ராஜா சண்டையிடத் தயாராகிவிட்டார். ஷாஓ குவெய் அவரின் சமூகங் காண வேண்டினார். அவரது அயலவர்கள், ''இது மாமிசம் புசிக்கும் தளபதிகளின் வேலை, இதில் ஏன நாம் தலையிட வேண்டும்?'' என்

றனர். க்ஷாஓ, ''மாமிசம் புசிப்பவர்கள் முட்டாள்கள், அவர்க ளால் முன்கூட்டித் திட்டமிட இயலாது'' எனப் பதிலளித்தார். எனவே அவர் ராஜாவைக் கண்டார். கண்டு, அவர் ராஜாவிடம் ''நீங்கள் போரிடும் போது எதிற் தங்கி நிற்பீர்கள்?'' என வினவி னார். ''நான் ஒருபோதும் என் உணவு, உடைகள் முழுவதையும் நானே அனுபவிக்க வைத்துக்கொள்ளத் துணிவதில்லை, அவற்றை எப்போதும் பிறரோடு பங்கிட்டுக்கொள்கிறேன்'' என ராஜா பதி லளித்தார். ''இத்தகைய சில்லறைத் தான தருமம் எல்லோருக்கும் கிடைக்க முடியாது. மக்கள் உங்களைப் பின்தொடர மாட்டார்கள்'' என க்ஷாஓ கூறினார். ''நான் ஒருபோதும் கடவுள்களுக்குப் பலிமிரு கங்களையோ ரத்தினங்களையோ பட்டையோ அவர்களுக்குச் சேர வேண்டியதிற் குறைவாகக் கொடுப்பதில்லை, பயபக்தியுடன் நடந்து கொள்கிறேன்'' என்றார் ராஜா. ''இத்தகைய சிறு பயபக்தி நம் பிக்கையை வென்றெடுப்பதில்லை. கடவுள்கள் உங்களை ஆசீர்வதிக்க மாட்டார்கள்'' என்றார் க்ஷாஓ. ''சிறியவையும் பெரியவையுமான எல்லா வழக்குகளினதும் விபரங்களையெல்லாம் நேரடியாகக் கவ னிக்க இயலாத போதும் நான் எப்போதும் உண்மைகளை அறியக் கோருகிறேன்'' என்றார் ராஜா. ''அது உங்கள் கடமையில் உங்கள் விசுவாசத்தைக் காட்டுகிறது. நீங்கள் போரிடலாம். அப்படிச் செய்யும் போது உங்களை நான் பின்தொடர்ந்து வர வேண்டிக் கொள்கிறேன்'' என்றார் க்ஷாஓ. ராஜாவும் அவரும் ஒரே தேரில் சென்றனர். சாங்ஷௌவில் சேனைகள் கைகலந்தன. ராஜா தாக்குதலுக்குப் பறை முழங்கப் போன போது க்ஷாஓ ''இன்னும் வேண்டாம்'' என்றார். சீ வீரர்கள் மும்முறை பறை முழங்கிய பின்னர் க்ஷாஓ ''இனி நாம் பறை முழங்கலாம்'' என்றார். சீ சேனை தோற்கடிக்கப்பட்டு புறமுதுகிட்டது. ராஜா துரத்திச் செல்ல விரும்பினார். மீண்டும் க்ஷாஓ ''இன்னும் வேண்டாம்'' என்றார். அவர் தேரிலிருந்து இறங்கி எதிரியின் தேர்ச்சில்லுகளின் தடங்களைப் பரிசீலித்துவிட்டுப் பின்னர் தேரின் கைப்பிடியில் ஏறித் தூரத்திற்குப் பார்வையைச் செலுத்தினார். ''இப்போது துரத்த

லாம்'' என்றுர் அவர். இப்படியாக சீ துருப்புகளைத் துரத்துவது ஆரம்பமாயிற்று. வெற்றிக்குப் பின்னர் ராஜா க்ஷாஓவிடம் அவர் ஏன் இத்தகைய ஆலோசனை தந்தார் என வினவினுர். அதற்கு க்ஷாஓ ''ஒரு போர் துணிவிற் தங்கியுள்ளது. முதற் பறை முழங்கத் தான் துணிவு பிறக்கிறது, இரண்டாவது முழக்கத்தில் அது தளர் கிறது, மூன்றுவதோடு அது இறங்கியேவிடுகிறது. எதிரியின் துணிவு இறங்கிவிட்ட போது எம்முடையது இன்னும் அதிகமாகவே இருந் தது, எனவே நாம் வென்றேம். ஒரு பெரும் அரசின் செய்கைகளை ஆழங்காண்பது கடினம்; அவர்கள் மறைந்திருந்து திடீரெனத் தாக் கக் கூடுமென அஞ்சினேன். ஆனுல் நான் எதிரியின் சில்லுத் தடங் களைப் பரிசீலித்து அவை குறுக்கும் நெடுக்குமாகப் போவதையும், தூரப் பார்த்து அவர்களின் கொடிகள் தாழ்ந்திருப்பதையும் கண்ட போது, துரத்தலாம் என ஆலோசனை கூறினேன்'' எனப் பதிலளித் தார்.

அது பலவீனமான ஓர் அரசு பலமான ஓர் அரசை எதிர்த்து நின்ற ஒரு நிலைமை. இந்தக் கதை ஒரு போருக்கு முன்பான அர சியற் தயாரிப்புகளை — மக்களின் நம்பிக்கையை வென்றெடுப் பதை — பற்றிப் பேசுகிறது; அது எதிர்த்தாக்குதலுக்கு மாறு வதற்குச் சாதகமான ஒரு போர்க்களத்தை — சாங்ஷௌ வை — பற்றிப் பேசுகிறது; அது எதிர்த்தாக்குதலை ஆரம்பிப் பதற்குச் சாதகமான தருணத்தை — எதிரியின் துணிவு இறங் கியும் எம் துணிவு உயர்ந்தும் இருக்கும் தருணத்தை — சுட்டு கிறது; அது துரத்தலைத் தொடங்குவதற்கான தருணத்தை யும் — எதிரியின் தடங்கள் குறுக்கும் நெடுக்குமாகப் போவ தும் அவனது கொடிகள் தாழ்ந்திருப்பதுமான தருணத்தை யும் — சுட்டிக்காட்டுகிறது. அச்சண்டை பெரியதொன்றல் லாவிடினும் அது யுத்ததந்திர ரீதியான தற்காப்பின் கோட் பாடுகளை விளக்கிக் காட்டுகிறது. சீனுவின் யுத்த வரலாறு

இந்தக் கோட்பாடுகளின் அடிப்படையில் வெற்றிகள் ஈட்டப் பட்ட எண்ணிறந்த உதாரணங்களைக் கொண்டுள்ளது. சூ, ஹான் அரசுகளுக்கிடையில் செங்காவோவிலான போர்[25], ஸின், ஹான் அரசுகளுக்கிடையில் குன்யாங்கிலான போர்[26], யுஅன் ஷாவோவிற்கும் கஷாஓ கெஷளவிற்கும் இடையில் குவான்டூவிலான போர்[27], வூ, வெய் அரசுகளுக்கிடையில் சிபியிலான போர்[28], வூ, ஷு அரசுகளுக்கிடையில் யிலிங்கிலான போர்[29], சின், ஜின் அரசுகளுக்கிடையில் ஃபெய்ஷுயிலான போர்[30] ஆகியன போன்ற புகழ்பெற்ற போர்களில் ஒவ்வொன்றிலும் போரிட்ட தரப்புகள் சமமற்றவையாக இருந்ததோடு, பலங் குறைந்த தரப்பு முதலில் சிறிது விட்டுக் கொடுத்து, எதிரி தாக்கிய பின் னரே தாக்கி மேல்நிலையடைந்து, அவ்வாறுகப் பலங்கூடிய தரப்பைத் தோற்கடித்தது.

எமது யுத்தம் 1927 இலையுதிர்காலத்தில் ஆரம்பமாகியது; அப்போது எமக்கு எந்த அனுபவமுமே இருக்கவில்லை. நான் சாங் எழுச்சி[31]யும் குவாங்சௌ எழுச்சி[32]யும் தோல்வியுற் றன; இலையுதிர்கால அறுவடை எழுச்சி[33]யில் ஹூனான்-ஹூ பெய்-கியாங்சி எல்லைப் பிரதேசத்திலிருந்த செஞ்சேனையும் பல தோல்விகளை உற்று, ஹூனான்-கியாங்சி எல்லைப் பிரதேசத்தில் உள்ள சிங்காங் மலைப்பிரதேசத்துக்கு நகர்ந்தது. அடுத்த ஏப் ரலில் நான்சாங் எழுச்சியின் தோல்வியிற் தப்பியிருந்த கூறுக ளும் தெற்கு ஹூனான் வழியாக சிங்காங் மலைப்பிரதேசத்துக்கு நகர்ந்தன. இருப்பினும், 1928 மேயளவில், அக்காலத்திய சூழ்நிலைகளுக்கு உகந்தவையும் இயல்பில் எளிமையானவையு மான கொரில்லா யுத்தத்தின் அடிப்படைக் கோட்பாடுகள், அதாவது, ''எதிரி முன்னேறும்போது நாம் பின்வாங்குவோம்; எதிரி முகாமடிக்கும்போது நாம் தொல்லைகொடுப்போம்; எதிரி

களைத்திருக்கும்போது நாம் தாக்குவோம்; எதிரி பின்வாங்கும் போது நாம் துரத்துவோம்'' என்ற பதினாறு-அட்சர சூத்திரம், ஏற்கனவே வகுக்கப்பட்டாயிற்று. ராணுவக் கோட்பாடுகளின் இந்தப் பதினாறு-அட்சர சூத்திரம் லீ லி-சன் மார்க்கத்துக்கு முன்னர் மத்திய கமிட்டியால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. பின்னர் எமது போர் நடவடிக்கைக் கோட்பாடுகள் மேலும் ஒரு அடி அபிவிருத்தி செய்யப்பட்டன. கியாங்சித் தளப்பிரதேசத்திலான ''சுற்றிவளைத்து அடக்குத''லுக்கு எதிரான எமது முதலாவது நடவடிக்கையின் சமயத்தில் ''எதிரியை வெகு தூரம் உள்ளே இழுத்துச் செல்லும்'' கோட்பாடு முன்வைக்கப்பட்டதோடு, வெற்றிகரமாகப் பிரயோகிக்கவும் பட்டது. எதிரியின் மூன்றாவது ''சுற்றிவளைத்து அடக்கும்'' நடவடிக்கை தோற்கடிக்கப்பட்ட சமயமளவில் செஞ்சேனைக்கான ஒரு பூரண தொகுப்பான நடவடிக்கைக் கோட்பாடுகள் உருப்பெற்றிருந்தன. இது, உள்ளடக்கத்தில் பெருமளவு வளப்படுத்தப்பட்டவையும் வடிவில் பல மாற்றங்களை உற்றவையுமான எமது ராணுவக் கோட்பாடுகளின் அபிவிருத்தியில் ஒரு புதிய கட்டத்தைக் குறித்தது. பிரதானமாக, அவை அவற்றின் ஆதியிலிருந்த எளிமையான இயல்பைக் கடந்தனவென்ற போதிலும் அடிப்படையில் பதினாறு-அட்சர சூத்திரத்திலான அதே கோட்பாடுகளாகவே இருந்தன. பதினாறு-அட்சர சூத்திரம் ''சுற்றிவளைத்து அடக்குத''லை எதிர்த்துப் போரிடுவதற்கான அடிப்படைக் கோட்பாடுகளை அடக்கியது; அது யுத்ததந்திர ரீதியான தற்காப்பும் யுத்ததந்திர ரீதியான தாக்குதலுமாகிய இரு கட்டங்களையும் அடக்கியதோடு, தற்காப்பிற்குள்ளேயே யுத்ததந்திர ரீதியான பின்வாங்கலும் யுத்ததந்திர ரீதியான எதிர்த் தாக்குதலுமாகிய இரு கட்டங்களையும் அடக்கியது. பின்னர்

ஏற்பட்டது இந்தச் சூத்திரத்தின் ஒரு அபிவிருத்தி மட்டுமே.

ஆனால், பாரதூரமான கோட்பாட்டுத் தவறுகளைக் கொண்டிருந்ததான ''மூன்றாவது 'சுற்றிவளைத்து அடக்கும்' நடவடிக்கையைத் தகர்த்த பின்னர் முதலில் ஒரு மாகாணத்தில் அல்லது பல மாகாணங்களில் வெற்றிக்காகப் போரிடுக'' என தலைப்பிடப்பட்ட கட்சியின் தீர்மானம் பிரசுரிக்கப்பட்ட பின், 1932, ஜனவரியிற் தொடங்கி, ''இடதுசாரி''ச் சந்தர்ப்பவாதிகள் இந்தச் சரியான கோட்பாடுகளைத் தாக்கி, இறுதியில் அவற்றின் தொகுப்பு முழுமையையும் ரத்துச்செய்து, அவற்றிற்கு முரணான ''புதிய கோட்பாடுகள்'' அல்லது ''கிரமமான கோட்பாடுக''ளின் பூரண தொகுப்பொன்றைப் புகுத்தினர். அப்போதிருந்து பழைய கோட்பாடுகள் இனியும் கிரமமானவையாகக் கருதப்படும் கோட்பாடுகளாயில்லாமல், நிராகரிக்கப்பட வேண்டிய ''கொரில்லாவாத''மாக இருந்தது. ''கொரில்லாவாத''த்திற்கு எதிரான சூழ்நிலை முழுதாக மூன்று ஆண்டுகள் ஆட்சி செலுத்தியது. அதன் முதற் கட்டம் ராணுவத் துணிச்சல்வாதமாக இருந்தது; இரண்டாவது கட்டத்தில் அது ராணுவப் பத்தாம்பசலிவாதமாக மாறியது; இறுதியாக மூன்றாவது கட்டத்தில் அது பயந்தோடும்வாதமாகியது. 1935, ஜனவரியில் குவெய்சௌ மாகாணத்தில் சுன்யியில் மத்தியக் கமிட்டி அரசியற் குழுவின் விஸ்தரிக்கப்பட்ட கூட்டத்தை நடத்தியபோது தான் இந்தத் தவறான மார்க்கம் பங்கலோட்டானதெனப் பிரகடனம் செய்யப்பட்டுப் பழைய மார்க்கத்தின் சரியான தன்மை மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டது. ஆனால், கொடுக்கப்பட்ட விலைதான் எவ்வளவு!

''கொரில்லாவாத''த்தைத் தீவிரமாகத் தாக்கிய தோழர்கள் பின்வரும் ரீதியில் வாதிட்டனர். எதிரியை நெடுந்தூரம்

உள்ளே இழுப்பது தவறு, ஏனெனில் நாம் எவ்வளவோ பிர தேசத்தைக் கைவிட வேண்டி இருக்கிறது. இந்த விதமாகச் சண்டைகள் வெல்லப்பட்டனவாயினும், நிலைமை இப்போது வேறுவிதமாக இல்லையா? மேலும், பிரதேசத்தைக் கைவிடா மல் எதிரியைத் தோற்கடிப்பது இன்னும் நல்லதில்லையா? எதி ரியை அவனது சொந்தப் பிரதேசங்களிலேயோ அல்லது அவனது பிரதேசங்களுக்கும் எம்முடையவற்றிற்கும் இடையிலான எல் லைப் பிரதேசங்களிலோ தோற்கடிப்பது அதையும்விட நல்லதில் லையா? பழைய நடைமுறைகள் ''கிரமமான தன்மை'' எதுவும் கொண்டவையல்ல, அவை கொரில்லாக்களால் மட்டுமே உப யோகிக்கப்படும் முறைகள். இப்போது எமது சொந்த அரசு நிறுவப்பட்டு விட்டது, எமது செஞ்சேனையும் ஒரு கிரமமான படையாக ஆகிவிட்டது. சியாங் கை-ஷேக்கிற்கு எதிரான எமது போராட்டம் இரு அரசுகளுக்கிடையிலான, இரு பெரும் சேனை களுக்கிடையிலான ஒரு யுத்தமாக ஆகிவிட்டது. வரலாறு பழையபடி திரும்ப நிகழக் கூடாது; ''கொரில்லாவாத''த் தோடு சம்பந்தப்பட்ட அனைத்தும் முற்றாக விட்டொழிக்கப்பட வேண்டும். புதிய கோட்பாடுகள் ''முற்றாக மார்க்ஸிஸ''க் கோட்பாடுகளாயிருக்கையில், பழைய கோட்பாடுகளோ மலை களிலிருந்த கொரில்லாக் கூறுகளால் உருவாக்கப்பட்டவை; மலைகளில் மார்க்ஸிஸமே இல்லை. புதிய கோட்பாடுகள் பழைய வற்றின் எதிர்மறைகளாக இருந்தன. அவையாவன: ''ஒருவர் பத்துப் பேருக்கு எதிராகப் போரிடுவது, பத்துப் பேர் நூறு பேருக்கு எதிராகப் போரிடுவது, துணிவுடனும் உறுதியுடனும் போரிடுவது, வெற்றிகளைப் பயன்படுத்திக் கையோடு துரத்து வது''; ''எல்லா முனைகளிலும் தாக்குவது''; ''கேந்திர நக ரங்களைக் கைப்பற்றுவது''; ''இரண்டு 'முஷ்டிகளால்' இரண்டு

திசைகளில் ஒரே நேரத்தில் தாக்குவது'' என்பவையாகும். எதிரி தாக்கிய போது அவனைச் சமாளிக்கும் முறைகளாவன: ''எதிரியை வாயிலுக்கு வெளியில் சந்தித்துப் போரிடுவது'', ''முதலில் தாக்குவதன் மூலம் மேல்நிலையை அடைவது'', ''எமது பானை சட்டிகள் உடைக்கப்பட விடாதிருப்பது'', ''ஒரு அங்குல பிரதேசத்தைக் கூட விட்டுக்கொடுக்காதிருப்பது'', ''படைகளை ஆறு மார்க்கங்களாகப் பிரிப்பது'' ஆகியன. அந்த யுத்தம் ''புரட்சிப் பாதைக்கும் காலனிசப் பாதைக்கும் இடையிலான தீர்க்கமான போர்''. குறுகிய, விரைவான தாக்குதல்களின் யுத்தம், கோட்டை முறை யுத்தம், தேய்க்கும் யுத்தம், ''நீண்டகால யுத்தம்''. மேலும், ஒரு பின்பிரதேசத்தில் பெரும் சேவை நிறுவனத்தையும் அறுதியாக மத்தியப்படுத்தப்பட்ட படைத் தலைமையையும் வைத்திருப்பதான கொள்கைகளும் இருந்தன. இறுதியாக, பெரும் ரீதியான ''வீடு-மாறுவது'' ஒன்றும் இருந்தது. இந்தக் காரியங்களை ஏற்காத எவரும் தண்டிக்கப்படவும், சந்தர்ப்பவாதியெனப் பெயர் சூட்டப்படவும் வேண்டியதாயும், இத்தியாதி பலவுமிருந்தன.

சந்தேகத்திற்கிடமின்றி, இந்தத் தத்துவங்களும் நடைமுறைகளும் எல்லாம் தவறு. இவை அகநிலைவாதமேயன்றி வேறல்ல. சாதகமான சூழ்நிலைகளின் கீழ் இந்த அகநிலைவாதம் புரட்சி பற்றிய குட்டி பூர்ஷுவாப் பித்துப் போக்கும் அவசரத் தன்மையுமாக வெளிப்பாடடைந்தது; ஆனால் பாதகமான சமயங்களில் நிலைமை மோசமடைந்த போது, நிர்க்கதியான துணிச்சல்வாதமாகவும் பத்தாம்பசலிவாதமாகவும் பயந்தோடும்வாதமாகவும் அடுத்தடுத்து மாற்றமுற்றது. இவை மூர்க்கர்களினதும் அறிவிலிகளினதும் தத்துவங்களும் நடைமுறைகளுமாகும்;

இவை மார்க்ஸிஸத்தின் வாடை சிறிதும் கொண்டவையல்ல; இவை மார்க்ஸிஸ-விரோதமானவை.

இங்கு நாம் கியாங்சியில் ''எதிரியை நெடுந்தூரம் உள்ளே இழுத்துச் செல்வது'' எனவும் சுச்சுவானில் ''முனையைச் சுருக்குவது'' எனவும் அழைக்கப்பட்டதான யுத்ததந்திர ரீதியான பின்வாங்கலை மட்டும் விவாதிப்போம். இதுவே பலமான ஒரு சேனைக்கு எதிராகப் போர் செய்யும் பலவீனமான ஒரு சேனை யுத்தத்தின் ஆரம்பக் கட்டத்தில் கைக்கொள்ள வேண்டிய கொள்கை என்பதை முந்திய ராணுவ தத்துவாசிரியரோ நடைமுறைகர்த்தாவோ எவரும் என்றும் மறுத்ததில்லை. ''யுத்த தந்திர ரீதியாகத் தற்காப்பான நடவடிக்கைகளில் பாதகமான தீர்க்கமான சண்டைகள் வழமையாக ஆரம்பத்தில் தவிர்க்கப் படுகின்றன; சூழ்நிலைகள் சாதகமானவையாகிவிட்ட போதே அவை நாடப்படுகின்றன'' என அந்நிய ராணுவ நிபுணர் ஒருவர் கூறியுள்ளார். இது முற்றிலும் சரி, இதற்கு நாம் மேற்கொண்டு கூற எதுவும் இல்லை.

யுத்ததந்திர ரீதியான பின்வாங்கலின் குறிக்கோள் ராணுவ பலத்தைப் பேணிக்கொள்வதும் எதிர்த் தாக்குதலுக்குத் தயாராவதுமாகும். பின்வாங்கல் அவசியம்; ஏனெனில் பலமான ஒரு எதிரியின் தாக்குதலின் எதிரில் ஒரு அடி பின்வாங்காதிருப்பது தவிர்க்க முடியாதபடி சொந்தப் படைகளைப் பேணுவதற்குக் குந்தகம் விளைப்பதாக இருக்கும். இருப்பினும் கடந்த காலத்தில் பலர் பின்வாங்கலை ''சுத்த தற்காப்பான ஒரு சந்தர்ப்பவாத மார்க்கம்'' எனக் கருதி, அதை முரண்டுப் பிடியாக எதிர்த்தனர். அவர்களின் எதிர்ப்பு முற்றுகப் பிழையானது என எமது வரலாறு நிரூபித்துள்ளது.

ஒரு எதிர்த் தாக்குதலுக்குத் தயாராவதற்கு நாம் எதிர்த்

தாக்குதலில் இறங்குமுன்பாக எதிரிக்கும் நமக்குமிடையிலான பலாபலத்தில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தக்கூடியதாக, எமக்குச் சாதகமான, ஆனால் எதிரிக்குச் சாதகமற்ற சில சூழ்நிலைகளைத் தெரிந்தெடுக்க அல்லது சிருஷ்டித்துக் கொள்ள வேண்டும்.

எமது கடந்த கால அனுபவத்தின் ஒளியில், பின்வாங்கும் கட்டத்தின் போது நிலைமை எமக்குச் சாதகமானதும் எதிரிக்குச் சாதகமற்றதும் எனக் கருத முடிவதற்கு முன்பாகவும் நாம் எதிர்த் தாக்குதலுக்கு மாற முடிவதற்கு முன்பாகவும் பின்வரும் நிலைமைகளில் குறைந்தபட்சம் இரண்டு இருப்பதை நாம் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். இந்த நிலைமைகளாவன:

(1) செஞ்சேனையை மக்கள் தீவிரமாக ஆதரிப்பது.

(2) தரையமைப்பு போர் நடவடிக்கைகளுக்குச் சாதகமாக இருப்பது.

(3) செஞ்சேனையின் பிரதான படைகளெல்லாம் ஒருங்கு குவிந்திருப்பது.

(4) எதிரியின் பலவீனமான ஸ்தானங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பது.

(5) எதிரி களைப்பும் மனச்சலிப்புமுற்ற நிலைக்கு வந்திருப்பது.

(6) எதிரி தவறுகள் செய்யத் தூண்டப்பட்டிருப்பது.

மக்களின் தீவிர ஆதரவு என்ற முதலாவது நிலைமையே செஞ்சேனைக்கு மிக முக்கியமானது. இதன் அர்த்தம் தளப் பிரதேசமொன்றைக் கொண்டிருக்க வேண்டும் என்பதாகும். மேலும், இந்தச் சூழ்நிலை இருந்தால் 4ம், 5ம், 6ம் நிலைமைகளை அடைவது அல்லது கண்டுபிடிப்பது இலகு. ஆகவே, எதிரி

பெரும் அளவிலான ஒரு தாக்குதலைத் தொடுக்கும் போது, செஞ்சேனை பொதுவாக வெள்ளைப் பிரதேசத்திலிருந்து தளப் பிரதேசத்துக்குள் வாபஸாகிறது; ஏனெனில் அங்குதான் மக்கள் வெள்ளைச் சேனைக்கு எதிராகச் செஞ்சேனையை ஆதரிப்பதில் மிகத் தீவிரமாக இருக்கின்றனர். அத்துடன், ஒரு தளப்பிர தேசத்தின் எல்லைப் பிராந்தியங்களுக்கும் மத்திய டிஸ்திரிக் டிற்கும் இடையிலும் ஒரு வேறுபாடு உள்ளது; முன்னதை விடப் பின்னதில் மக்கள் எதிரிக்குத் தகவல் செல்வதைத் தடுப்ப திலும், வேவுபார்ப்பதிலும், பண்டங்களை ஓரிடத்திலிருந்து மற் றொன்றிற்குக் கொண்டுசெல்வதிலும், சண்டையில் சேர்ந்து கொள்வதிலும், இத்தியாதியினவற்றிலும் அதிகம் சிறந்தவர் களாக உள்ளனர். இவ்வாறாக, நாம் கியாங்சியில் முதலாம், இரண்டாம், மூன்றும் ''சுற்றிவளைத்து அடக்கும்'' நடவடிக் கைகளை எதிர்த்துப் போரிட்ட போது, ''பின்வாங்கலுக்கு அந்தங்க''ளாகத் தெரிந்தெடுக்கப்பட்ட இடங்கள் எல்லாம் மக்களின் ஆதரவு திறமாக அல்லது ஒப்பீட்டளவில் சிறப்பாக இருந்த பிராந்தியங்களிற்தான் அமைந்திருந்தன. எமது தளப் பிரதேசங்களின் இந்தக் குணுதிசயம் செஞ்சேனையின் போர் நடவடிக்கைகளைச் சாதாரண நடவடிக்கைகளிலிருந்து மிக வேறு பட்டவையாக்கியது; இதுவே எதிரி பின்னர் கோட்டை முறை யுத்தம் என்ற கொள்கையை நாட வேண்டி இருந்ததற்கான பிர தான காரணமுமாகும்.

உட்புற முனைகளில் போரிடுவதன் ஒரு சிறந்த சூழ்நிலை அது பின்வாங்கும் சேனை தனக்குச் சாதகமான தரையமைப் பைத் தெரிந்தெடுப்பதையும் தான் தெரிந்தெடுத்த நிலைமைக ளில் போர் செய்யும்படி தாக்கும் சேனையை நிர்ப்பந்திப்ப தையும் சாத்தியமாக்குகிறது என்பதாகும். பலமான ஒரு

சேனையைத் தோற்கடிப்பதற்குப் பலவீனமான ஒரு சேனை கவனமாகச் சாதகமான ஒரு தரையமைப்பைப் போர்க்களமாகத் தெரிந்தெடுக்க வேண்டும். ஆனால் இந்தச் சூழ்நிலை மட்டும் போதாது, இதனுடன் பிற சூழ்நிலைகளும் இருக்க வேண்டும். இவற்றில் முதலாவது மக்களின் ஆதரவு. அடுத்தது எளிதில் தோற்கடிக்கப்படக் கூடிய நிலையிலுள்ள எதிரி, உதாரணமாக, களைப்படைந்துவிட்ட அல்லது தவறுகள் செய்துள்ள எதிரி, அல்லது போரிடும் வல்லமை ஒப்புநோக்காகக் குறைந்ததான முன்னேறும் எதிரிப் படை வியூகம் ஒன்று. இந்தச் சூழ்நிலைகள் இல்லாவிடில் நாம் நல்ல தரையமைப்பைக் கண்டுபிடித்திருந்தாலும் கூட நாம் அதைப் புறக்கணித்துவிட்டு இந்தச் சூழ்நிலைகளைப் பெறுவதற்காகத் தொடர்ந்தும் பின்வாங்க வேண்டும். வெள்ளைப் பிரதேசங்களில் நல்ல தரையமைப்புகளுக்குப் பஞ்சமில்லை, ஆனால் எமக்கு மக்களின் தீவிர ஆதரவாகிய சாதகமான சூழ்நிலை இராது. பிற சூழ்நிலைகள் இன்னும் பூர்த்திபெறவில்லையானல், அல்லது கண்டுபிடிக்கவில்லையானல், செஞ்சேனைக்கு அதன் தளப்பிரதேசத்தை நோக்கி வாபுஸாவதைத் தவிர மாற்று வழி எதுவும் இல்லை. வெள்ளைப் பிரதேசங்களுக்கும் செம்பிரதேசங்களுக்கும் இடையிலானவற்றைப் போன்ற வேறுபாடுகள் வழமையாக ஒரு தளப்பிரதேசத்தின் எல்லைப் பிராந்தியங்களுக்கும் மத்திய டிஸ்திரிக்டிற்கும் இடையிலும் இருக்கின்றன.

ஸ்தலப் படைகளும் எதிரியை வரம்புகளுக்குள் வரைப்படுத்தி வைத்திருக்கும் சக்திகளும் நீங்கலாக எமது தாக்குதல் துருப்புகள் எல்லாம், கோட்பாடளவில் ஒன்ருகக் குவிக்கப்பட்டிருக்க வேண்டும். யுத்ததந்திர ரீதியில் தற்காப்பில் ஈடுபட்டுள்ள ஒரு எதிரியைத் தாக்குகையில் செஞ்சேனை வழக்கமாகத் தன்

சொந்தப் படைகளைப் பரப்பிச் செலுத்துகிறது. ஒருகால் எதிரி பெரும் அளவிலான தாக்குதலொன்றைத் தொடுத்ததும் செஞ் சேனை ''மையத்தை நோக்கிப் பின்வாங்கல்'' ஒன்றை நடத்து கிறது. பின்வாங்கலுக்குத் தெரிந்தெடுக்கப்படும் அந்தம் வழமை யாக தளப்பிரதேசத்தின் மத்திய பிரிவில் இருக்கும், ஆனால் சில சமயங்களில் அது சூழ்நிலைகள் அவசியமாக்குகின்றபடி, முன் அல்லது பின் பிரிவுகளில் இருக்கும். மையத்தை நோக்கிய இத்தகைய ஒரு பின்வாங்கலினால் செஞ்சேனையின் பிரதான படைகள் எல்லாம் ஒன்றாகக் குவிக்கப்பட இயலும்.

பலமான ஒரு சேனையுடன் போரிடும் பலவீனமான ஒரு சேனைக்கு அத்தியாவசியமான மற்றொரு சூழ்நிலை தாக்குத லுக்கு எதிரியின் கூறுகளிற் பலங் குறைந்தவற்றைத் தெரிந் தெடுப்பதாகும். ஆனால் எதிரியின் தாக்குதல் நடவடிக்கையின் ஆரம்பத்தில் எமக்கு அவனது முன்னேறும் வியூகங்களில் மிகப் பலமானது எது, அடுத்தபடியாகப் பலமானது எது, மிகப் பலவீனமானது எது, அடுத்தபடியாகப் பலவீனமானது எது என்பவை சாதாரணமாகத் தெரியாது, ஆகவே வேவு பார்க்கும் வேலை ஒன்று தேவைப்படுகிறது. இந்த நோக்கத்தை அடைவதற்குப் பல சமயம் கணிசமானளவு காலம் பிடிப்ப துண்டு. இது யுத்ததந்திர ரீதியான பின்வாங்கல் அவசியமா வதற்கு மற்றொரு காரணம்.

தாக்கும் எதிரி எம்மைவிட மிக அதிகம் எண்ணிக்கையும் பலமும் கொண்டிருந்தால், எதிரி எமது தளப்பிரதேசத்திற்குள் நெடுந்தூரம் ஊடுருவி, அது அவனுக்கு வைத்திருக்கும் கசப்பு முழுவதையும் அனுபவித்த பின் மட்டுமே எம்மால் சக்திகளின் சமன்பாட்டில் ஒரு மாற்றத்தை ஈட்ட முடியும். மூன்றாவது ''சுற்றிவளைத்து அடக்கும்'' நடவடிக்கையின் போது சியாங்

கை-ஷேக்கின் பிறிகேடுகளில் ஒன்றின் தளகர்த்தர் குறிப்பிட்டாற் போல, ''எமது தடித்த வீரர்கள் களைத்து மெலிந்து விட்டனர், மெலிந்த வீரர்கள் களைத்துச் செத்தேவிட்டனர்'', அல்லது, கோமிந்தாங்கின் ''சுற்றிவளைத்து அடக்கும்'' சேனையின் மேற்கு மார்க்கத்தின் தலைமைத் தளபதியான சென் மிங்-ஷூவின் வார்த்தைகளில், ''எங்கும் தேசிய சேனை இருட்டில் தட்டித் தடவித் தடுமாறுகையில், செஞ்சேனை பகல் வெளிச்சத்தில் உலாவுகிறது''. அவ்வளவில் எதிரிச் சேனை, இன்னும் பலமானது தான் எனினும், பெருமளவு பலவீனப்படுத்தப்பட்டு, அதன் படைவீரர்கள் களைப்புற்று அதன் தைரியம் தளர்ந்து, அதன் பலவீனமான ஸ்தானங்களிற் பலவும் வெளிப்பட்டு விடுகின்றன. ஆனுற் செஞ்சேனையோ, பலவீனமானதெனினும், தன் பலத்தைப் பேணியும் சக்தியைத் தேக்கியும் கொண்டு, களைப்புற்ற எதிரியை எதிர்நோக்கி ஆற அமரக் காத்திருக்கிறது. இத்தகைய ஒரு சமயத்தில் பொதுவாக இரு தரப்புகளுக்குமிடையில் ஒருவாறுன சமநிலையை அடைவது, அல்லது எதிரியின் அறுதியான உயர்ச்சியை ஒப்புநோக்கான உயர்ச்சியாகவும் எமது அறுதியான தாழ்ச்சியை ஒப்புநோக்கான தாழ்ச்சியாகவும் மாற்றுவதும், ஓரொரு சந்தர்ப்பங்களில் எதிரி எம்மைவிடத் தாழ்ச்சி அடைவதும் நாம் எதிரியை விட உயர்வாக ஆவதும் கூடச் சாத்தியம். கியாங்சியிலான மூன்முவது ''சுற்றிவளைத்து அடக்கும்'' நடவடிக்கையை எதிர்த்துப் போரிடுகையில் செஞ்சேனை மிக அதீதமான அந்தத்திற்கு (தளப்பிரதேசத்தின் பின் பிரிவில் ஒன்றுகக் குவிவதற்கு) பின்வாங்கலொன்றை நடத்தியது; அது அப்படிச் செய்திராவிடில் அதனுல் எதிரியைத் தோற்கடிக்க முடிந்திராது; ஏனெனில் அப்போது எதிரியின் ''சுற்றிவளைத்து அடக்கும்'' படைகள் செஞ்சேனையைப் போல் பத்து மடங்

கும். சில சமயங்களில், கியாங்சியிலான ''சுற்றிவளைத்து அடக்குத''லுக்கு எதிரான எமது முதலாவது நடவடிக்கையிற் போல, அது தளப்பிரதேசத்தின் நடுப் பிரிவில் இருக்கவேண்டும். பிற சமயங்களில், கியாங்சியிலான எமது மூன்ருவது ''சுற்றிவளைத்து அடக்குத''லுக்கு எதிரான நடவடிக்கையிற் போல, அது தளப்பிரதேசத்தின் பின் பிரிவில் முடிவுசெய்யப்பட வேண்டும். இந்தச் சந்தர்ப்பங்கள் எல்லாவற்றிலும் முடிவு பகுதி வாரியான நிலைமையை முழுமையான நிலைமையுடன் இணைவு படுத்துவதன் மூலம் எடுக்கப்பட்டது. ஆனல் கியாங்சியிலான ''சுற்றிவளைத்து அடக்குத''லுக்கு எதிரான எமது ஐந்தாவது நடவடிக்கையின் போது எமது சேனை பகுதிவாரியான நிலைமையையோ அன்றி முழுமையான நிலைமையையோ கணக்கில் எடுக்காததால், அது பின்வாங்குதலில் சற்றுமே கருத்துச் செலுத்தவில்லை; இது உண்மையில் கண்மூடித்தனமான, முட்டாள்தனமான நடத்தையாகவும் இருந்தது. ஒரு நிலைமை பல அம்சங்களால் ஆனது; நிலைமையின் ஒரு பகுதிக்கும் அதன் முழுமைக்கும் இடையிலான உறவைக் கருத்திற் கொள்வதில் நாம் அப்பகுதிவாரியான நிலைமை, முழுமையான நிலைமை இரண்டிலும் வெளிப்பாடடைகின்றவாறுன, எதிரி தரப்பிலும் எம் தரப்பிலுமான அம்சங்கள், நாம் தாக்குதலொன்றை ஆரம்பிப்பதற்கு ஓரளவிற்குச் சாதகமாக உள்ளனவா என்பதை எமது கணிப்பீடுகளுக்கு அடிப்படையாகக் கொள்ளவேண்டும்.

ஒரு தளப்பிரதேசத்தில் பின்வாங்கலுக்கான அந்தங்கள் பொதுவாகத் தளப்பிரதேசத்தின் முன் பிரிவில் உள்ளவையும் நடுப் பிரிவில் உள்ளவையும் பின் பிரிவில் உள்ளவையுமென மூன்று வகைகளாகப் பிரிக்கப்படலாம். ஆனல் இதற்கு வெள்ளைப் பகுதிகளில் சண்டை செய்ய ஒரேயடியாக மறுப்பது என்று

அர்த்தமா? இல்லை. நாம் பெரும் ரீதியான எதிரிச் ''சுற்றி வளைத்து அடக்கும்'' நடவடிக்கையைச் சமாளிக்க வேண்டியுள்ள போது மட்டுமே நாம் வெள்ளைப் பகுதிகளில் சண்டை செய்ய மறுக்கிறோம். எதிரியின் பலத்திற்கும் எம்முடையதற்கும் இடையில் பெரிய ஏற்றத் தாழ்வு உள்ள போது மட்டுமே நாம் எமது பலத்தைப் பேணிக்கொள்வதும் எதிரியைத் தோற்கடிக்கத் தருணம் பார்த்துக் காலத்தைக் கடத்துவதுமென்ற கோட்பாட்டின்படி செயல்பட்டு, தளப்பிரதேசத்துக்குப் பின்வாங்கி அவனை வெகுதூரம் உள்ளே இழுத்துச் செல்வதை வேண்டுகிறோம், ஏனெனில் அவ்வாறு செய்வதன் மூலம் மட்டுமே நாம் எமது எதிர்த்தாக்குதலுக்குச் சாதகமான சூழ்நிலைகளைச் சிருஷ்டித்துக்கொள்ள அல்லது கண்டுபிடிக்க முடியும். நிலைமை அவ்வளவு பாரதூரமாக இல்லாவிடிலோ, அல்லது செஞ்சேனை அதன் எதிர்த்தாக்குதலைத் தளப்பிரதேசத்தில் கூடத் தொடங்க இயலாத அளவுக்கு நிலைமை பாரதூரமாக இருந்தாலோ, அல்லது எதிர்த்தாக்குதல் நன்றாக நடைபெறாமலிருந்து நிலைமையில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த மேற்கொண்டும் பின்வாங்கல் அவசியமாக இருந்தாலோ, அப்போது, இந்த விதமான அனுபவம் எமக்கு மிக அற்பமாகவே ஏற்பட்டுள்ளது என்ற போதிலும், பின்வாங்கலுக்கான அந்தம் ஒரு வெள்ளைப் பகுதியில் முடிவு செய்யப்படலாம் என்பதை நாம், குறைந்த பட்சம் தத்துவ ரீதியிலாவது, அங்கீகரிக்க வேண்டும்.

பொதுவில் ஒரு வெள்ளைப் பகுதியில் பின்வாங்கலுக்கான அந்தங்களும் மூன்று வகைகளாகப் பிரிக்கப்படலாம்: (1) எமது தளப்பிரதேசத்துக்கு முன்னால் உள்ளவை, (2) அதன் பக்கவாடுகளில் உள்ளவை, (3) அதன் பின்னால் உள்ளவை. முதலாவது வகைக்கு ஒரு உதாரணம் இதோ:

கியாங்சியிலான ''சுற்றிவளேத்து அடக்குத''லுக்கு எதிரான எமது முதலாவது நடவடிக்கையின்போது, செஞ்சேனக்குள் இருந்த ஐக்கியமின்மையும் ஸ்தல கட்சி ஸ்தாபனத்திலிருந்த பிளவும் அதாவது லீ லி-சன் மார்க்கத்தாலும் ஏ-பி கோஷ்டி[34]யாலும் சிருஷ்டிக்கப்பட்ட இரு கஷ்டமான பிரச்சினைகள் இல்லாதிருந்திருந்தால், நாம் எமது படைகளே கிஆன், நான்ஃெபாங், சாங்ஷு ஆகியவற்ருல் ஆக்கப்படும் முக்கோணத்திற்குள் குவித்து எதிர்த்தாக்குதலொன்றைத் தொடுத்திருக்கலாம் என்று கருத இடமுண்டு. ஏனெனில், கான், ஃபு நதிகளுக்கிடையிலான பகுதி[35]யிலிருந்து முன்னேறிய எதிரிப் படை பலத்தில் செஞ்சேனையை விட மிக அதிகம் உயர்வாக இருக்கவில்லே (40,000த்திற்கு எதிராக 100,000ந் தான் இருந்தது). அங்கு மக்களின் ஆதரவு தளப்பிரதேசத்திற் போல், அவ்வளவு தீவிரமாக இல்லாவிடினும், தரையமைப்புச் சாதகமாக இருந்தது; மேலும், தனித்தனி மார்க்கங்களில் முன்னேறிவந்த எதிரிப் படைகளே ஒன்றன் பின் ஒன்ருகத் துகளாக்குவது சாத்தியமாக இருந்திருக்கும்.

இனி இரண்டாம் வகைக்கு ஒரு உதாரணம்:

கியாங்சியிலான எமது மூன்ருவது ''சுற்றிவளேத்து அடக்குத''லுக்கு எதிரான நடவடிக்கையின்போது, எதிரியின் தாக்குதல் அத்தனே பெரிதாக இல்லாமலும், எதிரியின் வியூகங்களில் ஒன்று ஃபூகியன்-கியாங்சி எல்லேயில் உள்ள ஜியென்னிஙிலும் லீச்சுவானிலும் தைனிஙிலுமிருந்து முன்னேறியும், அந்த வியூகம் நாம் தாக்கமுடியாதபடி ஆகப் பெரியதாக இல்லாமலும் இருந்திருந்தால், செஞ்சேனே மெய்

சினிலிருந்து சிங்கோவிற்கு ஆயிரம் லீ சுற்றுவழி நடக்க வேண்டியதில்லாமல், தன் படைகளை மேற்கு ஃபூகியனிலான வெள்ளைப் பகுதியில் குவித்து, அந்த வியூகத்தை முதலில் தகர்த்திருக்கலாம் என்று கருதவும் அவ்வாறே இடமுண்டு.

இறுதியாக, மூன்றுவது வகைக்கு ஒரு உதாரணம்:

கியாங்சியிலான அதே மூன்றுவது ''சுற்றிவளைத்து அடக்குத''லுக்கு எதிரான நடவடிக்கையின்போது எதிரியின் பிரதான படை மேற்கு நோக்கிச் சென்றதற்குப் பதிலாகத் தெற்கு நோக்கிச் சென்றிருந்தால், எதிரியைத் தெற்கு நோக்கி மேலும் நகரும்படி தூண்டுவதற்காக (ஒரு வெள்ளைப் பகுதியான) ஹுய்சாங்-சியுன்வூ-அன்யுயென் பகுதிக்கு வாபஸாக நாம் நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கக் கூடும்; அதன் பின் செஞ்சேனை வடக்கு நோக்கித் தளப்பிரதேசத்துக்குள் சென்றிருக்க முடியும்; அவ்வளவில் தளப்பிரதேசத்தின் வடக்கிலான எதிரிப் படை மிகப் பெரிதாக இருந்திராது.

எனினும் மேற் கூறியவை உண்மையான அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டவையல்லாத கற்பனை உதாரணங்கள்; அவை விதிவிலக்குகளாகக் கருதப்பட வேண்டும், பொதுக் கோட்பாடுகளாகப் பாவிக்கப்படக் கூடாது. எதிரி பெரும் ரீதியான ஒரு ''சுற்றிவளைத்து அடக்கும்'' நடவடிக்கையைத் தொடுக்கும் போது எமது பொதுக் கோட்பாடு அவனை வெகு தூரம் உள்ளே இழுத்துச் செல்வதும், தளப்பிரதேசத்திற்குள் வாபஸாகி அவனுடன் அங்கு சண்டையிடுவதுமாகும், ஏனெனில் இதுவே அவனது தாக்குதலைத் துகளாக்க எமக்கு மிக நிச்சயமான முறை.

''எதிரியை வாயிலுக்கு வெளியே சந்தித்துப் போரிடுவ'' தைக் கோருவோர், பின்வாங்குதல் என்பது பிரதேசத்தை இழப்பதும், மக்களுக்குத் தீங்கைக் கொணர்வதும் (அவர்கள் கூறும் விதமாக, ''எங்கள் சட்டி பானைகள் உடைக்கப்பட அனுமதிப்பது''ம்), வெளியில் பாதகமான பிரதிகூலங்களைத் தோற்றுவிப்பதுமாகும் என வாதிட்டு, யுத்ததந்திர ரீதியான பின்வாங்கலை எதிர்க்கின்றனர். எமது ஐந்தாவது ''சுற்றிவளைத்து அடக்குத''லுக்கு எதிரான நடவடிக்கையின்போது இவர்கள், நாம் ஒவ்வொரு தடவையும் ஒரு அடி பின்வாங்க எதிரி தனது கோட்டைகளை ஒரு அடி முன்னே தள்ளுவான், அவ்வாறாக எமது தளப்பிரதேசங்கள் தொடர்ச்சியாகச் சுருங்கும், எமக்கு இழந்த பிரதேசத்தைத் திரும்பப் பிடிக்க எந்த வழியும் இராது என வாதிட்டனர். எதிரியை எமது பிரதேசத்திற்குள்ளே வெகுதூரம் இழுத்துச் செல்வது கடந்த காலத்தில் உபயோகமுள்ளதாக இருந்திருக்கக் கூடுமெனினும், எதிரி கோட்டை முறை யுத்தக் கொள்கையைக் கைக்கொண்ட அவனது ஐந்தாவது ''சுற்றிவளைத்து அடக்கும்'' நடவடிக்கைக்கு எதிராக அது பயனற்றதாக இருக்கும். இந்த நடவடிக்கையைக் கையாள்வதற்கு ஒரே வழி எமது படைகளை எதிர்ப்பிற்காகப் பகுதி பகுதியாகப் பிரித்து, எதிரியின் மீது குறுகிய, துரிதமான தாக்குதல்கள் செய்வதுதான் என இவர்கள் கூறினர்.

இத்தகைய கருத்துக்களுக்குப் பதிலளிப்பது இலகு; எமது வரலாறு ஏற்கனவே அதைச் செய்துமுள்ளது. பிரதேசம் இழக்கப்படுவது சம்பந்தமாக, பல சமயம் இழப்பின் மூலம் மட்டுமே இழப்பு தவிர்க்கப்பட முடியும் என்று ஏற்படுவதுண்டு; இதுவே ''எடுப்பதற்காகக் கொடுப்பது'' என்ற கோட்பாடு. நாம் இழப்பது பிரதேசம், நாம் ஈட்டுவது எதிரியின் மீது

வெற்றியும் அத்துடன் எமது பிரதேசத்தைத் திரும்பக் கைப் பற்றுவதும் அதை விஸ்தரிப்பதும் கூட என்ருல், அப்போது அது இலாபகரமான காரியமே. ஒரு வியாபாரத்தில், வாங் குபவர் சிறிது பணத்தை ''இழ''க்காவிட்டால் அவர் பண் டங்களைப் பெற முடியாது; விற்பவர் சிறிது பண்டங்களை ''இழ''க்காவிட்டால் அவர் பணத்தைப் பெற முடியாது. ஒரு புரட்சிகர இயக்கத்தில் உறப்படும் இழப்புகள் அழிவு உள்ளடங்கியவை; அதில் பெறப்படுவது முற்போக்கான இயல் பினதான நிர்மாணம். நித்திரையும் ஓய்வும் நேரம் இழக்கப் படுவதை உள்ளடக்குகின்றன; ஆனுல் அவற்ருல் மறு நாளைய வேலைக்குச் சக்தி பெறப்படுகிறது. எந்த மடையனுவது இதை விளங்கிக்கொள்ளாமல், தூங்க மறுத்தானுனுல், மறு நாள் அவ னுக்குச் சக்தி இராது; அது நஷ்டப்படும் காரியம். சரியாக இதே போன்ற காரணங்களால் தான் நாம் ஐந்தாவது ''சுற் றிவளைத்து அடக்குத''லுக்கு எதிரான நடவடிக்கையில் தோற் ருேம். எமது பிரதேசத்தில் ஒரு பகுதியை விட்டுக் கொடுக்கத் தயங்கியது அது முழுவதும் இழக்கப்படுவதில் போய் முடிந்தது. அபிஸினியாவும் எதிரியுடன் நேராக மோதிப் போரிட்டதனுல், அதன் தோல்விக்கு இது ஒரே காரணமல்லாவிடினும், தன் பிரதேசம் முழுவதையும் இழந்தது.

மக்களுக்குத் தீங்கைக் கொண்டுவருவதென்ற பிரச்சினைக்கும் இதுவே பொருந்தும். சில குடித்தனங்களின் சட்டி பானைகள் குறுகிய காலத்திற்கு உடைக்கப்படுவதை அனுமதிக்க நீங்கள் மறுத்தீர்களானுல், நீங்கள் எல்லா மக்களினதும் சட்டி பானை கள் நீண்ட காலத்திற்குத் தொடர்ந்து உடைக்கப்படுவதை விளைவிப்பீர்கள். நீங்கள் பாதகமான குறுகிய கால அரசியற் பிரதிகூலங்களுக்கு அஞ்சினீர்களானுல், அதற்கு நீங்கள் பாத

கமான நீண்ட கால பிரதிகூலங்கள் ஏற்படுவதை விலையாகக் கொடுக்க வேண்டியிருக்கும். அக்டோபர் புரட்சியின் பின்னர் ரஷ்ய பொல்ஷிவிக்குகள் ''இடதுசாரிக் கம்யூனிஸ்டுக''ளின் அபிப்பிராயங்களின்படி செயல்பட்டு, ஜெர்மனியுடனான சமாதான உடன்படிக்கையைக் கைச்சாத்திட மறுத்திருந்தால், புதிதாக ஜனித்திருந்த சோவியத்துகள் விரைவில் மரணமுறும் அபாயத்திற்கு உட்பட்டிருக்கும்.[36]

தோற்றத்திற் புரட்சிகரமான இத்தகைய ''இடதுசாரி'' அபிப்பிராயங்கள் குட்டிப் பூர்ஜுவா புத்திஜீவிகளின் புரட்சி பற்றிய அவசரத் தன்மையிலிருந்தும் அத்துடன் விவசாயிச் சிறு உற்பத்தியாளர்களின் குறுகிய பத்தாம்பசலிவாதத்திலிருந்தும் பிறக்கின்றன. இத்தகைய அபிப்பிராயங்களைக் கொண்டவர்கள் பிரச்சினைகளை ஒருபக்க ரீதியில் மட்டுமே பார்க்கின்றனர், முழுமையான நிலைமையை முற்றும் ஒருசேர நோக்க இயலாதவர்களாக இருக்கின்றனர்; அவர்கள் இன்றைய நலன்களை நாளைய நலன்களுடனோ, அன்றிப் பகுதியின் நலன்களை முழுமையின் நலன்களுடனோ இணைக்க மனமில்லாதவர்களாக, பகுதிவாரியானதையும் தற்காலிகமானதையும் மரணப் பிடியாகப் பிடித்துக்கொண்டு தொங்குகின்றனர். பகுதிவாரியானதும் தற்காலிகமானதும் அப்போதைக்குத் திட்டவட்டமாக உள்ள சூழ்நிலைகளில் நிலவும் நிலைமை முழுவதற்கும் காலகட்டம் முழுவதற்கும் சாதகமானவையாக உள்ள போது, விசேஷமாக தீர்க்கமானவையாக உள்ள போது நிச்சயமாக நாம் அவற்றை விடாப்பிடியாகப் பற்றிக்கொள்ள வேண்டுந்தான், இல்லையேல் நாம் காரியங்களை நழுவவிட்டு அவை பற்றி எதுவும் செய்யாதிருப்பதை ஆதரிப்பவர்களாவோம். ஆகவேதான் பின்வாங்கலுக்கு ஒரு அந்தம் இருக்க வேண்டும். நாம் சிறு உற்

பத்தியாளனின் குறுகிய பார்வையைக் கொண்டு நடந்து கொள்ளக் கூடாது. நாம் பொல்ஷிவிக்குகளின் அறிவைப் பெற்றுக் கொள்ள வேண்டும். வெறும் கண் பார்வை போதாது, எமக்குத் தூரதரிசினியினதும் நுண்தரிசினியினதும் உதவியும் இருக்க வேண்டும். மார்க்ஸிஸ முறையே அரசியல், ராணுவ விவகாரங்களில் எமது தூரதரிசினியும் நுண்தரிசினியுமாகும்.

இயற்கையாகவே யுத்ததந்திர ரீதியான பின்வாங்கலில் கஷ்டங்கள் இருக்கத்தான் செய்கின்றன. பின்வாங்கலை ஆரம்பிப்பதற்கான சமயத்தைத் தெரிவு செய்வது, அதற்கான அந்தத்தைத் தெரிவு செய்வது, இயக்குனர்களுக்கும் மக்களுக்கும் அரசியல் ரீதியில் நம்பிக்கை ஏற்படுத்துவது — இவை தீர்வுகோரும் கஷ்டமான பிரச்சினைகள்.

பின்வாங்குதலை ஆரம்பிப்பதற்கான தருணத்தை முடிவு செய்யும் பிரச்சினை மிக முக்கியமானது. கியாங்சி மாகாணத்திலான ''சுற்றிவளைத்து அடக்குத''லுக்கு எதிரான எமது முதலாவது நடவடிக்கையின்போது எமது பின்வாங்கல் சரியாக அது செய்யப்பட்ட சமயத்தில் செய்யப்படாமலிருந்திருந்தால், அதாவது, அது தாமதமடைந்திருந்தால், அப்போது ஆகக் குறைந்த பட்சம் எமது வெற்றியின் அளவாவது பாதிக்கப்பட்டிருக்கும். ஆக முந்திய பின்வாங்கல், ஆகப் பிந்திய பின்வாங்கல் இரண்டும் இழப்புகளை ஏற்படுத்தத்தான் செய்யும். ஆனல் பொதுவாகக் கூறினல், ஆகப் பிந்திய பின்வாங்கல் ஆக முந்திய பின்வாங்கலை விட அதிக இழப்புகளை ஏற்படுத்தும். முன்னேட்டம் முழுவதையும் எம்மிடம் வைத்துக்கொள்ளக் கூடியதாக்கும் நன்கு தருணம் பார்த்துச் செய்யப்படும் ஒரு பின்வாங்கல், நாம் அதற்கான அந்தத்தை அடைந்து எமது படைகளைப் புனரணிவகுத்துக்கொண்டு களைப்புற்ற எதிரிக்காக ஆற அமரக்

காத்துக்கொண்டிருக்கும் போது நாம் எதிர்த்தாக்குதலுக்கு மாறுவதில் எமக்குப் பெரும் உதவியாக இருக்கும். கியாங் சியிலான எதிரியின் முதலாம், இரண்டாம், நான்காம் ''சுற்றி வளைத்து அடக்கும்'' நடவடிக்கைகளைத் தகர்க்கையில் எம்மால் அவனைத் தன்னம்பிக்கையுடனும் அவசரமின்றியும் கையாள முடிந்தது. மூன்றாவது நடவடிக்கையின்போது மட்டுமே, எதிரி இரண்டாவது நடவடிக்கையில் அவ்வளவு கடுமையான ஒரு தோல்வியை உற்ற பின் அவ்வளவு விரைவில் புதிய தாக்குதலொன்றைத் தொடுப்பான் என நாம் எதிர்பார்க்காததால் (நாம் எமது இரண்டாவது ''சுற்றிவளைத்து அடக்குத''லுக்கு எதிரான நடவடிக்கையை 1931, மே 29ந் திகதி முடித்தோம்; சியாங் கை-ஷேக் தனது மூன்றாவது ''சுற்றிவளைத்து அடக்கும்'' நடவடிக்கையை ஜூலை 1ந் திகதி ஆரம்பித்தார்) செஞ்சேனை ஒன்றுகுவிவதற்காக அவசர அவசரமாகச் சுற்று வழியில் திரும்பிச் சென்றதால் மிகக் களைப்புற்றிருந்தது. ஒரு பின்வாங்கலுக்கான தருணமும் முன்னர் விளக்கப்பட்ட, ஒரு எதிரான நடவடிக்கையின் தயாரிப்புக் கட்டத்திற்கான தருணம் முடிவு செய்யப்படும் அதே முறையில்தான் முடிவு செய்யப்படுகிறது, அதாவது நாம் சேகரித்துள்ள அவசியமான தகவலினதும் எதிரித் தரப்பிலும் எம் தரப்பிலுமான பொதுவான நிலைமை பற்றிய கணிப்பீட்டினதும் அடிப்படையில்தான் முற்றிலும் முடிவுசெய்யப்படுகிறது.

இயக்குனர்களும் மக்களும் இன்னும் யுத்ததந்திர ரீதியான பின்வாங்கலில் எந்த அனுபவமும் பெறாதிருக்கும் போதும், சேனைத் தலைமை யுத்ததந்திர ரீதியான பின்வாங்கலை முடிவு செய்யும் அதிகாரத்தை ஒரு சிலரினதோ அல்லது தனி ஒருவரினதோ கைகளில் முற்றும் விட்டு, அதே நேரத்தில் இயக்கு

னர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாகவும் இருக்கக் கூடிய அளவிற்குச் சேனைத் தலைமையின் நன்மதிப்பு உயர்ந்ததாக இன்னும் இல்லாத போதும், யுத்ததந்திர ரீதியான பின்வாங் கலின் அவசியத்தில் இயக்குனர்களுக்கும் மக்களுக்கும் நம் பிக்கை ஏற்படுத்துவது மிக மிகக் கடினமானது. இயக்குனர்கள் அனுபவமற்றவர்களாயும் யுத்ததந்திர ரீதியான பின்வாங்கலில் நம்பிக்கை இல்லாதவர்களாயும் இருந்ததால் எமது முதலாம், நான்காம் ''சுற்றிவளைத்து அடக்குத''லுக்கு எதிரான நடவடிக் கைகளின் தொடக்கத்திலும் ஐந்தாம் ''சுற்றிவளைத்து அடக் குத''லுக்கு எதிரான நடவடிக்கை முழுவதின் போதும் பெரும் கஷ்டங்கள் எதிர்நோக்கப்பட்டன. முதலாவது ''சுற்றிவ ளைத்து அடக்குத''லுக்கு எதிரான நடவடிக்கையின்போது லீ லி-சன் மார்க்கத்தின் செல்வாக்கின் கீழ் இயக்குனர்கள், மறு புறமாக நம்பிக்கை ஊட்டப்படும் வரை, பின்வாங்கலை யல்லாமல் தாக்குதலையே ஆதரித்தனர். நான்காவது ''சுற்றி வளைத்து அடக்குத''லுக்கு எதிரான நடவடிக்கையில் ராணுவத் துணிச்சல்வாதத்தின் செல்வாக்கின் கீழ் இயக்குனர்கள், பின் வாங்கலுக்குத் தயாரிப்புகள் செய்வதை ஆட்சேபித்தனர். ஐந் தாவது ''சுற்றிவளைத்து அடக்குத'' லுக்கு எதிரான நடவடிக் கையில் அவர்கள் முதலில் எதிரியை நெடுந் தூரம் உள்ளே இழுத்துச் செல்வதை எதிர்த்த ராணுவ துணிச்சல்வாதக் கருத்தில் விடாப்பிடியாக இருந்துவிட்டுப் பின்னர் ராணுவப் பத்தாம்பசலிவாதத்துக்கு மாறினர். மற்றேருதாரணம், எமது தளப்பிரதேசங்களைத் திபெத்திய, ஹுய் இன மக்களின்[37] பிர தேசங்களில் ஸ்தாபிப்பதன் அசாத்தியத்தைக் கற்சுவரில் போய் முட்டிக்கொள்ளும் வரை ஒப்புக்கொள்ளாதிருந்த சாங் கோ-தௌ மார்க்கத்தின் ஆதரவாளர்களின் விஷயமாகும். இயக்

குனர்களுக்கு அனுபவம் அத்தியாவசியம்; தோல்வி உண்மையில் வெற்றிக்குத் தாய்தான். ஆனால் பிறரின் அனுபவத்திலிருந்து திறந்த மனதுடன் கற்றுக்கொள்வதும் அவசியம்; எல்லா விஷயங்களிலும் ஒருவர் தன் சொந்த நேரடி அனுபவத்தை மட்டுமே பிடிவாதமாக வேண்டுவதும் அது இல்லாத போது தனது சொந்த அபிப்பிராயங்களிலேயே முரண்டுத்தனமாக நிற்பதும் பிறரின் அனுபவத்தை நிராகரிப்பதும் வெறும் ''குறுகிய நேரனுபவவாத''மாகும். இதன் காரணமாக எமது யுத்தம் பாதிப்புற்றது கொஞ்சமல்ல.

யுத்ததந்திர ரீதியான பின்வாங்கலின் அவசியத்தில், மக்களின் அனுபவமின்மை காரணமான, அவர்களின் நம்பிக்கையீனம், கியாங்சியிலான எமது முதலாவது ''சுற்றிவளைத்து அடக்குத''லுக்கு எதிரான நடவடிக்கையின்போது இருந்ததைவிட ஒருபோதும் அதிகமாக இருந்ததில்லை. அந்தச் சமயத்தில் கிஆன், சிங்கோ, யுங்ஃபுங் மாவட்டங்களிலான ஸ்தலக் கட்சி ஸ்தாபனங்களும் வெகுஜனங்களும் எல்லாம் செஞ்சேனை வாபஸாவதை எதிர்த்தனர். ஆனால் முதலாவது ''சுற்றிவளைத்து அடக்குத''லுக்கு எதிரான நடவடிக்கைகளின் அனுபவத்தின் பின்னர், பிந்திய ''சுற்றிவளைத்து அடக்குத''லுக்கு எதிரான நடவடிக்கைகளில் இத்தகைய பிரச்சினை எதுவும் எழவில்லை. அனைவரும் தளப்பிரதேசத்தில் பிரதேசம் இழக்கப்படுவதும் மக்களின் துன்பங்களும் தற்காலிகமானவை என நம்பிக்கை கொண்டும், செஞ்சேனையால் எதிரியின் ''சுற்றிவளைத்து அடக்குத''லைத் துகளாக்க இயலும் என நம்பிக்கை கொண்டும் இருந்தனர். இருப்பினும் மக்கள் நம்பிக்கை கொண்டுள்ளனரா இல்லையா என்பது, இயக்குனர்கள் நம்பிக்கை கொண்டுள்ளனரா இல்லையா என்பதோடு நெருங்கிப் பிணைந்துள்ளது; எனவே

முதலாவதும் அதிமுக்கியமானதுமான பணி இயக்குனர்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்துவதாகும்.

யுத்ததந்திர ரீதியான பின்வாங்கல் எதிர்த்தாக்குதலுக்கு மாறுவதையே ஒரே குறிக்கோளாகக் கொண்டதும், வெறுமனே யுத்ததந்திர ரீதியான தற்காப்பின் முதற் கட்டமுமாகும். யுத்ததந்திரமுழுவதிலும் தீர்க்கமான இணைப்பு, இதைத் தொடர்ந்துவரும் எதிர்த்தாக்குதல் கட்டத்தில் வெற்றி ஈட்டப்பட முடியுமா இல்லையா என்பதுதான்.

## 4. யுத்ததந்திர ரீதியான எதிர்த்தாக்குதல்

அறுதியான உயர்ச்சியை உடையவனுன ஒரு எதிரியின் தாக்குதலைத் தோற்கடிக்க நாம் எமது யுத்ததந்திர ரீதியான பின்வாங்கலின் கட்டத்தின்போது சிருஷ்டிக்கப்பட்ட, எமக்குச் சாதகமானதும் எதிரிக்குச் சாதகமற்றதும் அவனது தாக்குதலின் ஆரம்பத்தில் இருந்ததினின்றும் வேறுபட்டதுமான நிலைமையில் தங்கி நிற்கிருேம். இத்தகைய ஒரு நிலைமையை ஆக்கப் பல அம்சங்கள் தேவை. இவை யாவும் மேலே விளக்கப்பட்டுவிட்டன.

இருப்பினும், எமக்குச் சாதகமானதும் எதிரிக்குச் சாதகமற்றதுமான சூழ்நிலைகளும் நிலைமையும் இருப்பதன் அர்த்தம் நாம் ஏற்கனவே எதிரியைத் தோற்கடித்துவிட்டோம் என்பதாகாது. இத்தகைய சூழ்நிலைகளும் இத்தகைய ஒரு நிலைமையும் எமது வெற்றிக்கும் அவனது தோல்விக்குமான சாத்தியக்கூறைத் தருகின்றன; ஆனுல் இவை யதார்த்தமான வெற்றியை அல்லது தோல்வியை ஆக்குவதில்லை; இவை இன்னும் இரண்டில் எந்தச்

சேனைக்கும் உண்மையான வெற்றியையோ தோல்வியையோ கொண்டுவரவில்லை. வெற்றியை அல்லது தோல்வியை ஏற் படுத்த இரு சேனைகளுக்கும் இடையில் ஒரு தீர்க்கமான சண்டை அவசியம். எந்தச் சேனை வெற்றியடையும், எந்தச் சேனை தோற்கடிக்கப்படும் என்ற பிரச்சினையை ஒரு தீர்க்கமான சண் டை மட்டுமே முடிவாக்க இயலும். இதுவே யுத்ததந்திர ரீதி யான எதிர்த்தாக்குதல் கட்டத்திலான ஒரே பணி. எதிர்த் தாக்குதல் ஒரு நீண்ட போக்கும், ஒரு தற்காப்புப் போர்நட வடிக்கையின் மிக விந்தையூட்டுவதும் மிக இயக்க ரீதியானது மான கட்டமும், அத்துடன் அதன் இறுதிக் கட்டமும் ஆகும். செயல்படும் தற்காப்பு என அழைக்கப்படுவது, தீர்க்கமான ஒரு கைகலப்பு என்ற இயல்பினதான இந்த யுத்ததந்திர ரீதியான எதிர்த்தாக்குதலையே பிரதானமாகக் குறிக்கிறது.

சூழ்நிலைகளும் நிலைமையும் யுத்ததந்திர ரீதியான பின்வாங்கல் கட்டத்தில் மட்டும் சிருஷ்டிக்கப்படுவதில்லை, எதிர்த்தாக்குதல் கட்டத்திலும் தொடர்ந்து சிருஷ்டிக்கப்படுகின்றன. வடிவிலா யினும் இயல்பிலாயினும் அவை முந்திய கட்டத்திற் போல் பிந்திய கட்டத்திலும் சரியாக அதே விதமானவையல்ல. வடிவிலும் இயல்பிலும் அப்படியே இருந்துவரக்கூடியது எது வெனில், உதாரணமாக, எதிரித் துருப்புகள், வெறுமனே முந் திய கட்டத்திலான அவற்றின் களைப்பினதும் வீரர் தொகைக் குறைவினதும் தொடர்ச்சியாக, இன்னும் அதிகமாகக் களைப் புற்றும் வீரர் தொகை குறைந்தும் இருக்கும் என்பதாகும்.

ஆனல் முற்ருகப் புதிய சூழ்நிலைகளும் முற்ருகப் புதிய ஒரு நிலைமையும் தோன்றியே தீர வேண்டும். உதாரணமாக எதிரி ஒரு தோல்வியையோ, ஒன்றுக்கு மேற்பட்ட தோல்விகளையோ உற்றுவிட்ட போது எமக்குச் சாதகமானவையும் எதிரிக்குப்

பாதகமானவையுமான சூழ்நிலைகள் அவனது களைப்பு முதலான வை மட்டுமாக இரா, மாருக அவன் தோல்விகளை உற்றுள் ளான் என்ற ஒரு புதிய அம்சமும் சேர்ந்திருக்கும். நிலைமையி லும் புதிய மாற்றங்கள் ஏற்படும். எதிரி தனது துருப்புக்களை ஒழுங்கீனமான முறையில் நகர்த்தவும் பிழையான காரியங் களைச் செய்யவும் தொடங்கும் போது இரு சேனைகளினதும் ஒப்புநோக்கான பலங்கள் இயற்கையாகவே இனியும் முன்பி ருந்த அதே விதமாக இரா.

ஆனல் ஒரு தோல்வியையோ பல தோல்விகளையோ உற்றது எதிரியின் படைகள் அல்ல, எமது படைகளே என்ருல், அப் போது சூழ்நிலைகள், நிலைமை இரண்டும் எதிர்த் திசையில் மாற் றமுறும். அதாவது, எதிரிக்குப் பாதகமான அம்சங்கள் குறை யும்; எமது பக்கத்தில் பாதகமான அம்சங்கள் தோன்றவும் வளரவுங்கூட நேரும். அதுவும் முற்றும் புதியதும் வேறுவித மானதுமான ஒன்ருக இருக்கும்.

இரண்டில் ஒரு தரப்புக்குத் தோல்வி நேரடியாகவும் துரி தமாகவும் தோற்கடிக்கப்பட்ட தரப்பின் பங்கில் விநாசத்தைத் தவிர்க்கவும், தன்னைத் தனக்குச் சாதகமற்றவையும் எதிரிக்குச் சாதகமானவையுமான புதிய சூழ்நிலைகளிலும் புதிய நிலைமை யிலும் இருந்து விடுவித்துக்கொள்ளவும், எதிரியின் மீது நிர்ப் பந்தம் செலுத்த வேண்டித் தனக்குச் சாதகமானவையும் எதி ரிக்குச் சாதகமற்றவையுமான சூழ்நிலைகளையும் நிலைமையையும் மீண்டும் சிருஷ்டிக்கவுமான ஒரு புதிய பிரயத்தனத்திற்கு இட்டுச் செல்லும்.

வெல்லும் தரப்பின் பிரயத்தனம் இதற்கு நேர் எதிரானதாக இருக்கும். அது தனது வெற்றியைப் பயன்படுத்தி எதிரிக்கு இன்னும் பெரிய சேதத்தை உண்டுபண்ணவும், தனக்குச்

எதிரி தனது முதலாவது ''சுற்றிவளைத்து அடக்கும்'' நடவடிக்கையில் செஞ்சேனையின் தளப்பிரதேசத்துக்கு எதிராகக் கிஆன்-ஜியென்னிங் மார்க்கத்திலிருந்து தெற்கு முகமாக முன்னேற எட்டுக் கொலங்களாகப் பிரிக்கப்பட்ட சுமார் 100,000 வீரர்களை உபயோகித்தான். அப்போதைய செஞ்சேனை சுமார் 40,000 வீரர்களைக் கொண்டும், கியாங்சி மாகாணத்தின் நிங்து மாவட்டத்திலுள்ள ஹுவாங்பீ, ஸியாஓபூ பிரதேசத்தில் குவிந்தும் இருந்தது.

நிலைமை பின்வருமாறு இருந்தது:

(1) ''அடக்கும்'' படைகள் 100,000 வீரர்களுக்கு மேற்படவில்லை; இவற்றில் எதுவும் சியாங் கை-ஷேக்கின் சொந்தத் துருப்புகளல்ல; பொதுவான நிலைமையும் மிக மோசமாக இருக்கவில்லை.

(2) லோ லின்னின் கீழான எதிரி டிவிஷன், கிஆனைப் பாதுகாத்துக்கொண்டு, கான் நதிக்கு அப்பால் மேற்குப் புறமாக இருந்தது.

(3) குங் பிங்-ஃபான், சாங் ஹுய்-சான், தான் தௌ-யுவன் ஆகியோரின் கீழான மூன்று எதிரி டிவிஷன்களும் முன்னேறிக் கிஆனுக்குத் தென்கிழக்கிலும் நிங்துவிற்கு வடமேற்கிலுமான ஃபுதியென்-துங்கூ-லுங்காங்-யுவான்தோ பிரிவைக் கைப்பற்றியிருந்தன. சாங் ஹுய்-சானின் டிவிஷனின் பிரதான பகுதி லுங்காங்கிலும் தான் தௌ-யுவனின் டிவிஷனின் பிரதான பகுதி யுவான்தோவிலும் இருந்தன. ஃபுதியெனினதும் துங்கூவினதும் வாசிகள், ஏ-பி கோஷ்டியால் ஏமாற்றப்பட்டு, சிறிது காலத்திற்குச் செஞ்சேனை மீது சந்தேகங் கொண்டும் அதற்கு எதிராகவும் இருந்தனராகை

யால், அந்த இடங்களைப் போர்க் களங்களாகத் தெரிவு செய்வது புத்தியாக இருந்திராது.

(4) லியூ ஹோ-திங்கின் கீழான எதிரி டிவிஷன் வெகு தூரத்திற்கப்பால் ஃபூகியனின் வெள்ளைப் பகுதியிலுள்ள ஜியென்னிங்கில் இருந்தது; அது கியாங்சிக்குள் புகுவது துர்லபம் போல் இருக்கிறது.

(5) மாஓ பிங்-வென், ஷி கே-சியாங் ஆகியோரின் கீழான இரு எதிரி டிவிஷன்களும் குவாங்சாங்கிற்கும் நிங்துவிற்கும் இடையில் உள்ள தோபீ-லோகோ-துங்ஷாஓ பிரிவில் பிரவேசித்திருந்தன. தோபீ ஒரு வெள்ளைப் பகுதியாகவும் லோகோ ஒரு கொரில்லாப் பிரதேசமாகவும், ஏ-பி கோஷ்டி நபர்கள் இருந்த துங்ஷாஓ தகவல் வெளியே சென்று விடக் கூடிய ஒரு இடமாகவும் இருந்தன. மேலும், நாம் மாஓ பிங்-வென்னையும் ஷி கே-சியாங்கையும் தாக்கிவிட்டுப் பின்னர் மேற்கு நோக்கிச் செல்வதாக இருந்தால், மேற்கிலிருந்த, சாங் ஹுய்-சான், தான் தெள-யுவன், குங் பிங்-ஃபான் ஆகியோரின் கீழான எதிரி டிவிஷன்கள் மூன்றும் ஒன்றுபட்டு, அவ்வாறாக எமக்கு வெற்றியீட்டுவதைக் கஷ்டமாக்கியும் பிரச்சினைக்கு இறுதித் தீர்வைக் காண்பதை அசாத்தியமாக்கியும் விடக் கூடும்.

(6) எதிரியின் ''சுற்றிவளைத்து அடக்கும்'' பிரதான படையை ஆக்கிய, சாங் ஹுய்-சான், தான் தெள-யுவன் ஆகியோரின் கீழான டிவிஷன்கள் இரண்டும் இந்தச் ''சுற்றிவளைத்து அடக்கும்'' நடவடிக்கையின் தலைமைத் தளபதியும் கியாங்சி மாகாணத்தின் கவர்னருமான லூ தி-பிங்கிற்குச் சொந்தமான துருப்புகள்; சாங் ஹுய்-சான் தலைமைக் களத் தளகர்த்தர். இந்த இரு டிவிஷன்களையும் அழித்

தொழிப்பது ''சுற்றிவளைத்து அடக்கும்'' நடவடிக்கையையே தகர்ப்பதற்கு நிகராகும். ஒவ்வொரு டிவிஷனிலும் சுமார் பதினைன்காயிரம் வீரர்கள் இருந்தனர்; சாங்கின் டிவிஷன் இரு இடங்களில் பிரிவுபட்டிருந்தது; ஆகவே நாம் ஒவ்வொரு சமயத்தில் ஒவ்வொரு டிவிஷனைத் தாக்கினால் நாம் அறுதியான உயர்ச்சியை உடையவர்களாக இருப்போம்.

(7) சாங், தான் டிவிஷன்களின் பிரதான படைகள் நின்றிருந்த இடமான லுங்காங்-யுவான்தோ பிரிவு எமது படைக் குவிப்புகளுக்கு அருகாமையிலிருந்தது, நாம் அணுகுவதை மறைக்க நல்ல மக்கள் ஆதரவும் இருந்தது.

(8) லுங்காங்கில் தரையமைப்பு நல்லது. யுவான்தோ தாக்க இலகுவானதல்ல. ஆனால் எதிரி எம்மைத் தாக்க ஸியாஓபூவிற்கு முன்னேறினானால், அங்கும் எமக்கு நல்ல தரையமைப்பு இருக்கும்.

(9) நாம் மிகப் பெருந்தொகையான துருப்புகளை லுங்காங் பிரிவில் குவிக்க முடியும். லுங்காங்கிற்குத் தென்மேற்கே பல பத்து லீ தூரத்திற்குள்ளாக, சிங்கோவில் எமக்கு ஆயிரத்திற்கு மேற்பட்ட வீரர்களைக் கொண்ட ஒரு சுதந்திரமான டிவிஷன் இருந்தது; அது எதிரியின் பின்புறத்தில் நடவடிக்கைகளெடுக்க முடியும்.

(10) எமது துருப்புகள் நடுவில் பிளந்து சென்று எதிரியின் முனையை உடைத்து விட்டால், கிழக்கிலும் மேற்கிலுமான அவனது கொலங்கள் அதிக தூரம் பிரிக்கப்பட்ட இரு கோஷ்டிகளாகத் துண்டிக்கப்படும்.

மேற்கூறிய காரணங்களினால் நாம் எமது முதற் சண்டை சாங் ஹுய்-சானின் பிரதான படைக்கு எதிராக இருக்க

வேண்டுமென முடிவு செய்து, அவரது பிறிகேடுகளில் இரண்டையும் டிவிஷன் தலைமை ஸ்தானத்தையும் வெற்றிகரமாகத் தாக்கி ஒன்பதாயிரம் வீரர்களடங்கிய படையை, டிவிஷன் தளபதி உட்பட, தனியொரு வீரனே குதிரையோகூடத் தப்ப அனுமதியாமல், முழுவதையும் கைப்பற்றினோம். இந்த ஒரு வெற்றி தானின் டிவிஷனை துங்ஷாஒவை நோக்கியும் ஷிவின் டிவிஷனை தோபீயை நோக்கியும் ஓடும்படி பயமுறுத்தியது. பின் எமது துருப்புக்கள் தானின் டிவிஷனைத் துரத்திச் சென்று அதில் பாதியை அழித்தொழித்தன. நாம் ஐந்து நாட்களில் (1930, டிசம்பர் 27 முதல் 1931, ஜனவரி 1 வரை) இரு சண்டைகள் செய்தோம்; தோல்விக்கு அஞ்சி ஃபுதியெனிலும் துங்கூவிலும் தோபீயிலுமிருந்த எதிரிப் படைகள் ஒழுங்கு குலைந்து பின்வாங்கின. முதலாவது ''சுற்றிவளைத்து அடக்கும்'' நடவடிக்கை இப்படியாக முடிவடைந்தது.

இரண்டாவது ''சுற்றிவளைத்து அடக்கும்'' நடவடிக்கையில் நிலைமை பின்வருமாறு இருந்தது:

(1) 200,000 வீரர்களைக் கொண்டவையான ''அடக்கும்'' படைகள் நான்சாஙில் தலைமை ஸ்தானத்தைக் கொண்டிருந்த ஹோ யிங்-சின்னின் ஆணையின் கீழ் இருந்தன.

(2) எதிரியின் முதலாவது ''சுற்றிவளைத்து அடக்கும்'' நடவடிக்கையிற் போல் இப்படைகளிலும் எதுவும் சியாங் கை-ஷேக்கின் சொந்தத் துருப்புக்கள் அல்ல. இவற்றில் சாய் திங்-கையின் கீழான 19ம் மார்க்கச் சேனையும் ஸுன் லியென்-சுங்கின் கீழான 26ம் மார்க்கச் சேனையும் சு ஷெள-லியாஙின் கீழான 8ம் மார்க்கச் சேனையும் பலமானவை,

அல்லது கணிசமானளவு பலமானவை, எஞ்சியவை எல்லாம் ஓரளவு பலவீனமானவை.

(3) ஏ-பி கோஷ்டி ஒழிக்கப்பட்டிருந்தது; தளப்பிரதேசத்தின் ஜனத்தொகை முழுவதும் செஞ்சேனையை ஆதரித்தது.

(4) வடக்கிலிருந்து புதிதாக வந்து சேர்ந்திருந்த, வாங் சின்-யூவின் கீழான 5ம் மார்க்கச் சேனை எமக்குப் பயந்திருந்தது; பொதுவாகக் கூறினால் அதன் இடது பக்கவாட்டிலிருந்த, கோ ஹுவா-சொங், ஹாஓ மூங்-லிங் ஆகியோரின் கீழான இரு டிவிஷன்களும் அவ்வாறே.

(5) எமது துருப்புக்கள் முதலில் ஃபுதியெனைத் தாக்கிப் பின்னர் குறுக்காகக் கிழக்கே விரைந்தனவானால், அடுத்த "சுற்றிவளைத்து அடக்கும்" நடவடிக்கையைத் துகளாக்க உதவியாக நாம் எமது தளப்பிரதேசத்தை ஃபூகியன்-கியாங்சி எல்லையிலான ஜியென்னிங்-லீச்சுவான்-தைனிங் பிரிவுக்கு விஸ்தரிக்கவும் பண்டங்கள் பெறவும் முடியும். ஆனால் நாம் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி நகர்ந்தோமானால், நாம் கான் நதியை எதிர்ப்பட்டுச் சண்டையின் பின் விசாலிப்பதற்கு இடமில்லாதிருப்போம். சண்டையின் பின்னர் மீண்டும் கிழக்கே திரும்புவது எமது துருப்புக்களைக் களைக்கச் செய்து காலத்தையும் விரயமாக்கும்.

(6) எமது சேனை (30,000த்திற்கு மேற்பட்ட வீரர்களைக் கொண்டது) முதலாவது போர் நடவடிக்கையிலிருந்ததைக் காட்டிலும் ஓரளவு சிறிதாக இருந்தாலும், அதற்கு இளைப்பாறவும் சக்தியைச் சேமித்துக்கொள்ளவும் நான்கு மாதங்கள் கிடைத்திருந்தன.

இக்காரணங்களினுல் நாம் எமது முதற் சண்டைக்கு ஃபுதியென் பிரிவிலிருந்த வாங் சின்-யூவினதும் குங் பிங்-ஃபானினதும் (மொத்தம் 11 ரெஜிமென்டுகளைக் கொண்ட) படைகளோடு கைகலக்க முடிவுசெய்தோம். இந்தச் சண்டையில் வென்ற பின்னர் நாம் அடுத்தடுத்து கோ ஹு-வா-சொங், ஸுன் லியென்-சுங், சு ஷெள-லியாங், லியூ ஹோ-திங் ஆகியோரைத் தாக்கினேம். பதினைந்து நாட்களில் (1931, மே 16 முதல் மே 30 வரை) நாம் எழுநூறு லீ தூரம் நகர்ந்து, ஐந்து சண்டைகள் செய்து, இருபதாயிரத்திற்கு மேற்பட்ட துப்பாக்கிகளைக் கைப் பற்றி, எதிரியின் ''சுற்றிவளைத்து அடக்கும்'' நடவடிக்கையைச் செம்மையாகத் தகர்த்தெறிந்தோம். வாங் சின்-யூவுடன் சண்டையிடுகையில் நாம் சாய் திங்-கையின் கீழும் கோ ஹு-வா-சொங்கின் கீழுமான இரு எதிரிப் படைகளுக்கும் இடையில், பின்னதிலிருந்து பத்துக்கு மேலான லீ தொலைவிலும் முன்னதிலிருந்து நாற்பதுக்கு மேலான லீ தொலைவிலும் இருந்தோம்; சிலர் நாம் வெளிப்பட வழியில்லாத ஒரு முடுக்கில் புகுகிறேம் என்றனர்; ஆனல் நாம் அப்போதும் வெளிப்படவே செய் தோம். இதற்குக் காரணம் பிரதானமாக தளப்பிரதேசத்தில் எமக்கிருந்த மக்கள் ஆதரவும் எதிரிப் படைக் கூறுகள் மத்தியி லான ஒன்றிணைப்பின்மையுமாகும். கோ ஹு-வா-சொங்கின் டிவிஷன் தோற்கடிக்கப்பட்ட பின் ஹாஓ மூங்-லிங்கின் டிவி ஷன் இரவோடு திரும்பி யுங்ஃபுங்கிற்கு ஓடி, அவ்வாருக விநா சத்தைத் தவிர்த்துக் கொண்டது.

மூன்ருவது ''சுற்றிவளைத்து அடக்கும்'' நடவடிக்கையில் நிலைமை பின்வருமாறு இருந்தது:

(1) சியாங் கை-ஷேக் தானே நேரில் தலைமைத் தளபதி

யாகக் களத்துக்கு வந்தார். அவருக்குக் கீழ் இடது, வலது, நடு வியூகங்கள் மூன்றில் ஒவ்வொன்றுக்கும் பொறுப்பாக மூன்று தளபதிகள் இருந்தனர். நடு வியூகம் சியாங் கை-ஷேக்கைப் போல் நான்சாங்கில் தலைமை ஸ்தானத்தைக் கொண்டிருந்தவரான ஹோ யிங்-சின்னின் ஆணையிலும், வலது வியூகம் கிஆனில் தலைமை ஸ்தானத்தைக் கொண்டிருந்தவரான சென் மிங்-ஷுவின் ஆணையிலும், இடது வியூகம் நான்ஃபோங்கில் தலைமை ஸ்தானத்தைக் கொண்டிருந்தவரான சு ஷௌ-லியாங்கின் ஆணையிலும் இருந்தன.

(2) ''அடக்கும்'' படைகள் 300,000 வீரர்களைக் கொண்டிருந்தன. மொத்தம் சுமார் 100,000 வீரர்களைக் கொண்ட பிரதான படைகள் சியாங் கை-ஷேக்கின் சொந்தத் துருப்புக்கள்; அவை முறையே சென் செங், லோ சுவோ-யிங், சௌ குவான்-தௌ, வெய் லி-ஹுவாங், சியாங் திங்-வென் ஆகியோரின் ஆணையின் கீழான ஒவ்வொன்றும் 9 ரெஜிமென்டுகளைக் கொண்ட 5 டிவிஷன்களால் ஆனவை. இவை போக, சியாங் குவாங்-நை, சாய் திங்-கை, ஹான் தே-சின் ஆகியோரின் கீழான மொத்தம் 40,000 வீரர்களைக் கொண்ட 3 டிவிஷன்கள் இருந்தன. இன்னும் ஸுன் லியென்-சுங்கின் 20,000 வீரர்களைக் கொண்ட சேனையும் இருந்தது. இவற்றோடு, அதே போல் சியாங் கை-ஷேக்கின் சொந்தத் துருப்புகள் அல்லாத, பலவீனமான படைகள் பிறவும் இருந்தன.

(3) இந்த ''அடக்கும்'' நடவடிக்கையில் எதிரியின் யுத்ததந்திரம் அவன் இரண்டாவது ''சுற்றிவளைத்து அடக்கும்'' நடவடிக்கையில் உபயோகித்த ''ஒவ்வொரு அடியிலும் ஸ்திரப்படுத்திக் கொள்ளும்'' யுத்ததந்திரத்திலிருந்து பெரிதும்

வேறுபட்ட ''நேராகவும் ஆழமாகவும் ஊடுருவும்'' யுத்ததந்திரமாக இருந்தது. இதன் குறிக்கோள் செஞ்சேனையை கான் நதிக் கரைக்குப் பின்னுேக்கித் தள்ளி, அதை அங்கு வைத்து அழித்தொழிப்பதாகும்.

(4) இரண்டாவது எதிரி ''சுற்றிவளைத்து அடக்கும்'' நடவடிக்கையின் முடிவுக்கும் மூன்ருவதின் ஆரம்பத்திற்குமிடையில் ஒரு மாத இடைவெளி மட்டுமே இருந்தது. (அப்போது சுமார் 30,000 வீரர்களைக் கொண்டிருந்த) செஞ்சேனை பெருமளவு கடும் சண்டைக்குப் பின்னர் ஓய்வோ காலியான இடங்களை நிரப்ப ஆட்களோ பெருதிருந்ததோடு, அப்போது தான் தெற்கு கியாங்சி தளப்பிரதேசத்தின் மேற்குப் பாகத்திலுள்ள சிங்கோவில் குவிவதற்காக ஓராயிரம் லீ சுற்றுவழிப் பயணமொன்றைச் செய்தும் இருந்த சமயத்தில் எதிரி பல திசைகளிலிருந்து அதற்கு அண்மையில் வந்தான்.

இந்த நிலைமையில் நாம் முதலில் முடிவு செய்த திட்டம் சிங்கோவிலிருந்து வாந்ஆன் வழியாக நகர்ந்து, ஃபுதியெனில் எதிரி அணிகளைப் பிளந்துகொண்டு கடந்து, பின்னர் மேற்கிலிருந்து கிழக்காக எதிரியின் பின்புறத் தொடர்பு மார்க்கங்களுக்குக் குறுக்கே விரைந்து, அவ்வாருக எதிரியின் பிரதான படைகளைத் தெற்கு கியாங்சியிலான எமது தளப்பிரதேசத்துக்குள் ஆழமான ஆனுல் பயனற்ற ஊடுருவலைச் செய்ய விடுவதாகும்; இது எமது நடவடிக்கையின் முதற் கட்டமாக இருக்கும் என்றிருந்தது. பின்னர் எதிரி வடக்கு நோக்கித் திரும்பி, தவிர்க்க முடியாதபடி மிகக் களைப்புறும் போது நாம் இச்சந்தர்ப்பத்தை உபயோகித்து அவனது பாதிக்கப்படக் கூடிய கூறுகளைத் தாக்குவதாக இருந்தோம்; இது எமது நடவடிக்கையின் இரண்

டாவது கட்டமாக இருக்கும் என்றிருந்தது. இந்தத் திட்டத் தின் ஜீவ நாடி எதிரியின் பிரதான படைகளைத் தவிர்த்து விலகி அவனது பலவீனமான ஸ்தானங்களிற் தாக்குவதாகும். ஆனால் எமது படைகள் ஃபுதியெனை நோக்கி நகர்ந்துகொண்டிருக் கையில் நாம் எதிரியால் கண்டுபிடிக்கப்படவே அவன் சென் செங்கின் கீழும் லோ சுவோ-யிங்கின் கீழுமான இரு டிவிஷன் களையும் ஸ்தலத்துக்கு விரைந்து அனுப்பினான். நாம் எமது திட்டத்தை மாற்றி, அப்போது எமது துருப்புகள் குவிவதற்கு இருந்த ஒரே இடமான, சுற்றுடலில் பல பத்து சதுர லீக்குக் குறைந்த பரப்பைக் கொண்டதான, சிங்கோ மாவட்டத்தின் மேற்குப் பகுதியில் உள்ள, கௌசிங்ஸிவிற்குப் பின்வாங்க வேண் டியதாயிற்று. நாம் குவிந்ததற்கு மறுநாள் கிழக்கு சிங்கோ மாவட்டத்தில் உள்ள லியென்தாங், தெற்கு யுங்ஃபுங் மாவட் டத்திலுள்ள லியாங்ஸுன், வடக்கு நிங்து மாவட்டத்திலுள்ள ஹுவாங்பீ ஆகியவற்றை நோக்கிக் கிழக்கு முகமாக விரைந்து நகர நாம் முடிவுசெய்தோம். அதே இரவு இருளின் மறைவில் நாம் சியாங் திங்-வென்னின் டிவிஷனுக்கும் சியாங் குவாங்-நை, சாய் திங்-கை, ஹான் தே-சின் ஆகியோரின் படைகளுக் கும் இடையிலிருந்த நாற்பது லீ இடைவெளிக் கூடாகக் கடந்து, லியென்தாங்கை நோக்கித் திரும்பினோம். இரண்டாவது நாள் நாம் (தன் சொந்த டிவிஷனுக்கும் ஹாஓ மூங்-லிங்கின் டிவி ஷனுக்கும் ஆணையாளராக இருந்த) ஷாங்குவான் யுன்-சியா ஙின் கீழான முன் கூறுகளுடன் கைகலந்தோம். முதலாவது சண்டை மூன்றாவது நாள் ஷாங்குவான் யுன்-சியாங்கின் டிவி ஷனோடு நடந்தது, இரண்டாவது சண்டை நான்காம் நாள் ஹாஓ மூங்-லிங்கின் டிவிஷனோடு நடந்தது; மூன்று நாட்கள் நகர்ந்த பின்னர் நாம் ஹுவாங்பீயை அடைந்து மாஓ பிங்-

வென்னின் டிவிஷனுக்கு எதிராக எமது மூன்ருவது சண்டையைச் செய்தோம். நாம் இச்சண்டைகள் மூன்றிலும் வென்று, பத்தாயிரம் துப்பாக்கிகளுக்கு மேல் கைப்பற்றினேம். இந்தக் கட்டத்தில், மேற்கு நோக்கியும் தெற்கு நோக்கியும் முன்னேறிக்கொண்டிருந்த பிரதான எதிரிப் படைகள் எல்லாம் கிழக்கு நோக்கித் திரும்பின. ஹுவாங்பீயைக் குறியாகக் கொண்டு அவை எம்முடன் சண்டையிடுவதற்காகக் கடும் வேகத்துடன் குவிந்து வந்து, பெரிய ரீதியிலான இறுக்கமான சுற்றிவளைப் பொன்றில் எம்மைச் சூழ நெருங்கின. நாம் ஒரு பக்கத்தில் சியாங் குவாங்-நை, சாய் திங்-கை, ஹான் தே-சின் ஆகியோரின் படைகளுக்கும் மறு பக்கத்தில் சென் செங், லோ சுவோ-யிங் ஆகியோரின் படைகளுக்கும் இடையிலான இருபது லீ இடைவெளியில் இருந்த உயரமான மலைகளுக்கூடாகத் தப்பி வெளியேறி, அவ்வாருக, கிழக்கிலிருந்து மேற்கிற்குத் திரும்பி வந்து சேர்ந்து, சிங்கோ மாவட்டத்தின் எல்லைகளுக்குள் புனரணி திரண்டோம். இந்த விபரத்தை எதிரி கண்டுபிடித்து மீண்டும் மேற்கு நோக்கி முன்னேறத் தொடங்கிய அளவில் எமது படைகள் ஏற்கனவே இரு வார காலம் ஓய்வு பெற்றிருந்தவிடத்து, எதிரிப் படைகளோ பட்டினியாயும் முற்ருகக் களைத்துப் போயும் மனவலியிழந்தும், சண்டையிட உதவாதவையாயும் இருந்ததால் அவை பின்வாங்க முடிவுசெய்தன. அவர்களின் பின்வாங்கலைச் சாதகமாகக் கொண்டு நாம் சியாங் குவாங்-நை, சாய் திங்-கை, சியாங் திங்-வென், ஹான் தே-சின் ஆகியோரின் படைகளைத் தாக்கி, சியாங் திங்-வென்னின் பிறிகேடுகளில் ஒன்றையும் ஹான் தே-சின்னின் டிவிஷன் முழுவதையும் அழித்தொழித்தோம். சியாங் குவாங்-நை, சாய் திங்-கை ஆகியோரின் கீழான டிவிஷன்களைப் பொறுத்த வரை

யில் சண்டை வெற்றி தோல்வி ஏற்பட முடியாததாகி, அவை தப்பிச் சென்றன.

நான்காவது ''சுற்றிவளைத்து அடக்கும்'' நடவடிக்கையில் நிலைமை பின்வருமாறு இருந்தது. எதிரி மூன்று வியூகங்களாகக் குவாங்சாங் நோக்கி முன்னேறிக்கொண்டிருந்தான்; கிழக்கு வியூகமே அவனது பிரதான படையாக இருந்தது; அவனது மேற்கு வியூகத்தை ஆக்கிய டிவிஷன்கள் இரண்டும் எம் தாக்குதலுக்கு வாய்ப்பாக வெளிப்பட்டு இருந்ததோடு எமது படைகள் குவிந்திருந்த பகுதிக்கு மிக அண்மையிலும் இருந்தன. அவ்வாறாக எமக்கு முதலில் அவனது மேற்கு வியூகத்தைத் தெற்கு யீஹுவாங் மாவட்டத்தில் தாக்கச் சந்தர்ப்பம் கிடைத்து, நாம் ஒரே அடியில் லீ மிங், சென் ஷு-சி ஆகியோரின் கீழான டிவிஷன்கள் இரண்டையும் அழித்தொழித்தோம். எதிரி பின்னர் தனது நடு வியூகத்திற்கு ஆதரவு தரக் கிழக்கு வியூகத்திலிருந்து இரு டிவிஷன்களை அனுப்பியதோடு மேற்கொண்டும் முன்னேறியதால், எம்மால் மீண்டும் ஒரு டிவிஷனைத் தெற்கு யீஹுவாங் மாவட்டத்தில் அழித்தொழிக்க முடிந்தது. இந்த இரு சண்டைகளிலும் நாம் பத்தாயிரத்திற்கு மேற்பட்ட துப்பாக்கிகளைக் கைப்பற்றி, இந்தச் ''சுற்றிவளைத்து அடக்கும்'' நடவடிக்கையையும் அடிப்படையில் தூளாக்கினோம்.

எதிரி தனது ஐந்தாவது ''சுற்றிவளைத்து அடக்கும்'' நடவடிக்கையில் கோட்டைகள் கட்டுவதான தனது புதிய யுத்த தந்திரத்தைக் கொண்டு முன்னேறி, முதலில் லீச்சுவானைக் கைப்பற்றினான். ஆனால் லீச்சுவானைத் திரும்பப் பிடிக்கவும் எதிரியோடு தளப்பிரதேசத்துக்கு வெளியில் கைகலக்கவும் முயன்றதில் நாம் லீச்சுவானுக்கு வடக்கே எதிரியின் பல ஸ்தானமும் அத்தோடு வெள்ளைப் பகுதியில் இருந்ததுமான சியௌ

ஷுவின் மீது தாக்குதலொன்றைச் செய்தோம். இச்சண்டையில் வெல்லத் தவறி, நாம் சியௌஷுக்குத் தென்கிழக்கில், அதுவும் வெள்ளைப் பகுதியிலிருந்த ஒரு எதிரிப் பல ஸ்தானமான ஸெஸிச்சியௌவிற்கு எமது தாக்குதலைத் திருப்பி, மீண்டும் தோல்வியடைந்தோம். பின்னர் சண்டையைத் தேடி நாம் எதிரியின் பிரதான படைகளுக்கும் அவனது கோட்டைகளுக்கும் இடையில் வளைய வந்து, முற்றுகச் செயலற்ற நிலைக்குத் தள்ளப்பட்டோம். ஒரு முழு வருடம் நீடித்ததான, ''சுற்றிவளைத்து அடக்குத''லுக்கு எதிரான எமது ஐந்தாவது நடவடிக்கை பூராவிலும் நாம் சிறிதளவேனும் முன்னேற்றத்தையோ வேகத்தையோ காண்பிக்கவில்லை. இறுதியில் நாம் எமது கியாங்சித் தளப்பிரதேசத்திலிருந்து வாபஸாக வேண்டியதாயிற்று.

''சுற்றிவளைத்து அடக்குத''லுக்கு எதிரான இந்த ஐந்து நடவடிக்கைகளிலுமான எமது சேனையின் அனுபவம், தற்காப்பில் ஈடுபட்டிருக்கும் செஞ்சேனை பெரியதும் சக்திமிக்கதுமான ஒரு எதிரி ''அடக்கும்'' படையைத் துகளாக்குவதாக இருந்தால் அதற்கு எதிர்த்தாக்குதலிலான முதற் சண்டை மிகப் பெரும் முக்கியத்துவம் வாய்ந்தது என நிரூபிக்கிறது. முதற் சண்டையில் வெற்றியோ தோல்வியோ இறுதிக் கைகலப்பு வரை நிலைமை முழுவதன் மீதும் பிரமாண்டமான ஒரு பாதிப்பை ஏற்படுத்துகிறது. எனவே நாம் பின்வரும் முடிவுகளுக்கு வருகிறோம்.

முதலாவதாக, முதற் சண்டை வெல்லப்பட வேண்டும். எதிரியின் நிலைமை, தரையமைப்பு, மக்கள் ஆதரவு ஆகியன எல்லாம் எமக்குச் சாதகமாக இருக்கின்றன, எதிரிக்குச் சாதகமாக இல்லை என்று அறுதியாக நிச்சயமாக உள்ள போது மட்

போரியக்கங்களுக்குமான திட்டத்திற்குப் பீடிகையாகவும் அதில் இணைவாக அடங்கிய ஒரு பகுதியாகவும் இருக்க வேண்டும். முழுப் போரியக்கங்களுக்குமான நல்ல திட்டமொன்று இல்லாமல் உண்மையில் நல்ல ஒரு முதற் சண்டையை நடத்துவது அசாத்தியம். அதாவது, முதற் சண்டையில் வெற்றி ஈட்டப்பட்டாலும் கூட, அச்சண்டை போரியக்கம் முழுமைக்கும் உதவியாயிருப்பதன்றித் தீங்கே செய்ததென்றால், அத்தகைய ஒரு வெற்றி (ஐந்தாவது ''சுற்றிவளைத்து அடக்கும்'' நடவடிக்கையில் ஸுன்கோவிலான சண்டையின் விஷயத்திற் போல்) ஒரு தோல்வியாகவே கருதப்பட வேண்டும். எனவே, முதற் சண்டையைச் செய்யுமுன் ஒருவர் இரண்டாம், மூன்றும், நான்காம் சண்டைகளும் இறுதிச் சண்டையும் கூட எவ்வாறு செய்யப்படும் என்பது பற்றிப் பொதுவான ஒரு கருத்தைக் கொண்டிருக்கவும், அடுத்தடுத்து வரும் சண்டைகளில் ஒவ்வொன்றிலும் நாம் வென்றால், அல்லது தோற்றால், எதிரியின் நிலைமை முழுமையிலும் என்னென்ன மாற்றங்கள் ஏற்படும் என்பதில் சிந்தனை செலுத்தவும் வேண்டும். முடிவு நாம் எதிர்பார்க்கின்றபடி சரியாக அப்படியே இல்லாமல் போனாலும் கூட — உண்மையில் நிச்சயமாக அப்படியே இருக்கவும் மாட்டாது—நாம் அனைத்தையும் இரு தரப்புகளிலுமான பொதுவான நிலைமையின் பின்னணியில் வைத்துக் கவனமாகவும் யதார்த்தமான முறையிலும் சிந்தித்து வைத்திருக்க வேண்டும். ஒரு நிலைமை முழுமையையும் தேர்ந்து கொள்ளாமல் சதுரங்கப் பலகையில் உண்மையாக நல்ல ஆட்டம் எதையும் ஆடுவது அசாத்தியம்.

மூன்றாவதாக, யுத்தத்தின் யுத்ததந்திர ரீதியான அடுத்த கட்டத்தில் என்ன நடக்கும் என்பதையும் ஒருவர் சிந்தித்துப்

பார்க்க வேண்டும். யுத்ததந்திரத்தை வழிநடத்தும் எவரும் தன்னை எதிர்த்தாக்குதலில் மட்டும் ஈடுபடுத்திக் கொண்டு, அது வெற்றிபெற்ற பின்னர், அல்லது அது தோல்வியுறும் பட்சத்தில், எடுக்கப்படுவதற்கான நடவடிக்கைகளைப் புறக்கணித்தால், அவர் தன் கடமையைச் செய்பவராகார். ஒரு குறிப்பிட்ட யுத்ததந்திர ரீதியான கட்டத்தில் அவர் அடுத்து வரும் கட்டங்களை, அல்லது ஆகக் குறைந்த பட்சம் அடுத்த ஒரு கட்டத்தையாவது கருத்திற் கொள்ள வேண்டும். எதிர் கால மாற்றங்களை முன்னறிவது கடினம், ஒருவர் எவ்வளவு அதிக தூரம் முன்னே பார்க்கிறாரோ அவ்வளவுக்குக் காரியங்கள் அதிகம் தெளிவற்றுத் தோன்றுகின்றன என்ற போதிலும், பொதுவான ஒரு கணிப்பீடு சாத்தியமும், தூர எதிர்காலச் சாத்தியப்பாடுகளின் ஒரு மதிப்பீடு அவசியமும் ஆகும். அரசியலில் போலவே யுத்தத்திலும் ஒருவர் போகப் போக ஒரு சமயத்தில் ஒவ்வொரு அடியை மட்டும் திட்டமிட்டுக்கொண்டு போவது காரியங்களை நிர்வகிக்கத் தீமையான ஒரு முறை. ஒவ்வொரு அடியும் எடுத்துவைத்த பின், அதைத் தொடர்ந்து ஏற்படும் திட்டவட்டமான மாற்றங்களைப் பரிசீலிப்பதும் அவற்றின் பிரகாரம் ஒருவரின் யுத்ததந்திர, போரியக்கத் திட்டங்களை மாற்றுவது அல்லது அபிவிருத்தி செய்வதும் அவசியம்; இன்றேல் ஒருவர் அபாயத்தைப் பொருட்படுத்தாது நேராக முன்னே விரையும் தவற்றைச் செய்ய இடமிருக்கும். இருப்பினும், யுத்ததந்திர ரீதியான கட்டம் முழுவதையுமோ யுத்ததந்திர ரீதியான பல கட்டங்களைக் கூடவோ தழுவுவதும் பொதுவான வடிவில் சிந்தித்து ஆக்கப்பட்டதுமான ஒரு நீண்ட காலத் திட்டம் இருப்பது அறவே இன்றியமையாதது. இத்தகைய ஒரு திட்டத்தைத் தீட்டிக்கொள்ளத் தவறுவது, தயங்

குவதும் தன்னைச் செயலின்றிக் கட்டிப் போட அனுமதிப்பது மான, உண்மையில் எதிரியின் யுத்ததந்திர ரீதியான நோக் கங்களுக்குப் பயன்படுவதும் தன்னைச் செயலற்ற நிலைக்குத் தள்ளுவதுமான தவறுக்கு இட்டுச் செல்லும். எதிரியின் உயர் ஆணைப்பகுதி யுத்ததந்திர ரீதியான அறிவுக்குப் பஞ்சப்பட் டில்லை என்பது நினைவில் வைத்திருக்கப்பட வேண்டும். நாம் எதிரியைவிட ஒரு அடி தூரம் முன்னே நிற்க எம்மைப் பயிற் சிப்படுத்திக்கொண்டுவிட்ட போது மட்டுமே யுத்ததந்திர ரீதி யான வெற்றிகள் சாத்தியமாக இருக்கும். இவ்வாறு செய்யத் தவறியமையே எதிரியின் ஐந்தாவது ''சுற்றிவளைத்து அடக் கும்'' நடவடிக்கையின் போது, ''இடதுசாரி''ச் சந்தர்ப்பவாத, சாங் கோ-தௌ மார்க்கங்களின் கீழ் யுத்ததந்திர ரீதியான வழி காட்டலில் இழைக்கப்பட்ட தவறுகளுக்கான பிரதான காரண மாகும். சுருங்கக் கூறினால், பின்வாங்கலின் கட்டத்திலேயே நாம் எதிர்த்தாக்குதல் கட்டத்தைக் காண வேண்டும், எதிர்த் தாக்குதல் கட்டத்திலேயே நாம் தாக்குதற் கட்டத்தைக் காண வேண்டும், தாக்குதல் கட்டத்திலேயே மீண்டும் நாம் ஒரு பின்வாங்கல் கட்டத்தைக் காண வேண்டும். இவ்வாறு செய்யாமல், எம்மை அவ்வக்கணத்தின் நலன்களோடு மட்டும் நிறுத்திக்கொள்வது தோல்வியை வலியத் தேடுவதாகும்.

முதற் சண்டை வெல்லப்பட வேண்டும். முழுப் போரியக் கத்திற்குமான திட்டம் கணக்கில் எடுக்கப்பட வேண்டும். அடுத்து வரும் யுத்ததந்திர ரீதியான கட்டமும் கணக்கில் எடுக்கப்பட வேண்டும். இவையே நாம் ஒரு எதிர்த்தாக்குதலைத் தொடங்கும் போது, அதாவது முதற் சண்டையைச் செய்யும் போது, ஒருபோதும் மறக்கக் கூடாத மூன்று கோட்பாடுகள்.

## 6. துருப்புகளைக் குவித்தல்

துருப்புகளைக் குவிப்பது இலகு போலத் தோன்றுகிறது; ஆனால் நடைமுறையில் மிகக் கடினமானது. மிகச் சிறந்த முறை ஒரு சிறிய படையைத் தோற்கடிக்கப் பெரிய படையொன்றை உபயோகிப்பதே என்பதை அனைவரும் அறிவர்; இருந்தும் பலர் அவ்வாறு செய்யத் தவறி, அதற்கு நேர் மாருகப் பல சமயம் தங்கள் படைகளைப் பிரித்துவிடுகின்றனர். இதற்குக் காரணம் இத்தகைய ராணுவத் தலைவர்கள் யுத்ததந்திரத்திற்கு ஏற்ற மூளை இல்லாதவர்களாக இருப்பதும் சிக்கலான சூழ்நிலைகளால் குழப்பமுற்றுவிடுவதும், எனவே அவர்கள் இந்தச் சூழ்நிலைகளுக்குக் கட்டுப்பட்டு இருப்பதும் தங்கள் முன்னேற்டத்தை இழந்து செயலற்ற ரீதியில் இயங்குவதை நாடுவதுமாகும்.

சூழ்நிலைகள் எவ்வளவுதான் சிக்கலாயும் மோசமாயும் கடினமாயும் இருந்தாலும் பொருட்டல்ல, ஒரு ராணுவத் தலைவருக்கு அனைத்திற்கும் மேலாக அவசியமானது தன் ஆணையின் கீழான படைகளை ஒழுங்குபடுத்துவதிலும் உபயோகிப்பதிலும் சுதந்திரமாகச் செயல்படும் திறமையாகும். அவர் பல சமயம் எதிரியால் செயலற்ற நிலைக்கு நிர்ப்பந்தித்துத் தள்ளப்படக் கூடும்; ஆனல் முக்கியமான காரியம் விரைவில் முன்னேற்டத்தை மீண்டும் பெறுவதாகும். அவ்வாறு செய்யத் தவறுவது தோல்வியில் முடியும்.

முன்னேற்டம் கற்பனையான ஒன்றல்ல, திட்டவட்டமான, உண்மையாக உள்ள காரியமாகும். இங்கு மிக முக்கியமான விஷயம் சாத்தியமானளவு பெரியதும் போரிடும் உணர்வு நிரம்

பியதுமான ஆயுதந் தரித்த படையொன்றைப் பேணுவதும் ஒன்ருகக் குவிப்பதுமாகும்.

முன்னேட்டத்தைப் பூரணமாகப் பிரயோகிப்பதற்கு தாக்குதல் யுத்தம் தருவதைவிட மிகக் குறைவாகவே வாய்ப்புத் தருவதான தற்காப்பு யுத்தத்தில் செயலற்ற ஒரு நிலையில் வீழ்ந்துவிடுவது இலகு. இருப்பினும் வடிவில் செயல்படாத தன்மையானதாகிய தற்காப்பு யுத்தம் உள்ளடக்கத்தில் செயல்படும் தன்மையானதாக இருக்கவும், அது வடிவில் செயல்படாத தன்மையானதாக இருக்கும் கட்டத்திலிருந்து வடிவம், உள்ளடக்கம் இரண்டிலும் செயல்படும் தன்மையானதாக இருக்கும் கட்டத்திற்கு மாற்றப்படவும் முடியும். முற்ருகத் திட்டமிடப்பட்ட ஒரு யுத்ததந்திர ரீதியான பின்வாங்கல் தோற்றத்தில் நிர்ப்பந்தத்தின் கீழ் செய்யப்படுவதாகக் காண்கிறது; ஆனல் உண்மையில் அது எமது பலத்தைப் பேணிக்கொண்டு எதிரியைத் தோற்கடிக்கத் தருணம் பார்த்துக் காலத்தைக் கடத்தவும், எதிரியை வெகு தூரம் உள்ளே இழுத்துச்செல்லவும் எமது எதிர்த்தாக்குதலுக்குத் தயாராகவும் செய்யப்படுவது. மறுபுறம், பின்வாங்க மறுப்பதும் அவசரமாக (சியௌஷு சண்டையிற் போல்) சண்டைக்கு இழுபடுவதும் முன்னேட்டத்தைப் பெறுவதற்கான ஒரு பாரதூரமான முயற்சியாகத் தோன்றலாம்; ஆனல் உண்மையில் அது செயலற்ற தன்மையானது. யுத்ததந்திர ரீதியான ஒரு எதிர்த்தாக்குதல் உள்ளடக்கத்தில் செயல்படும் தன்மையானது மட்டுமல்லாமல், வடிவிலும் கூட அது பின்வாங்கல் காலகட்டத்தின் செயல்படாத் தன்மையைக் கைவிட்டுவிடுகிறது. எதிரியைப் பொறுத்த வரை எமது எதிர்த்தாக்குதல் அவனை முன்னேட்டத்தைக் கைவிடச் செய்

யவும் அவனைச் செயலற்ற ஒரு நிலையில் இடவுமான எமது பிரயத்தனத்தைப் பிரதிநிதித்துவம் செய்கிறது.

இந்தக் குறிக்கோளைப் பூரணமாக அடைவதற்குத் துருப் புகளைக் குவிப்பது, நடமாட்ட யுத்தம், விரைவில் வெற்றி தோல்வி காணும் யுத்தம், அழித்தொழிக்கும் யுத்தம் எல்லாமே அவசியமான சூழ்நிலைகள். இவற்றில், துருப்புகளைக் குவித் தலே முதலாவதும் மிக அத்தியாவசியமானதும் ஆகும்.

துருப்புகளைக் குவித்தல் எதிரிக்கும் எமக்கும் இடையிலான நிலைமையை மறுபுறமாகத் ·திருப்பும் நோக்கத்திற்கு அவசியமா னது. முதலாவதாக, அதன் நோக்கம் முன்னேறுதலும் பின் வாங்குதலும் சம்பந்தமாக நிலைமையை மறுபுறமாகத் திருப்பு வது. முன்னர் முன்னேறிக்கொண்டிருந்தது எதிரி, பின்வாங் கிக்கொண்டிருந்தது நாம்; இப்போது நாம் முன்னேறுவதும் எதிரி பின்வாங்குவதுமான ஒரு நிலைமையை ஏற்படுத்த நாம் முயல்கிறோம். நாம் எமது துருப்புகளைக் குவித்து ஒரு சண் டையை வெல்லும் போது, நாம் அந்தச் சண்டையில் மேற் கூறிய நோக்கத்தை அடைகிறோம்; இது போரியக்கம் முழு வதிலும் பாதிப்பைச் செலுத்துகிறது.

இரண்டாவதாக, அதன் நோக்கம் தாக்குதலும் தற்காப்பும் சம்பந்தமாக நிலைமையை மறுபுறமாகத் திருப்புவது. தற் காப்பு யுத்தத்தில் முன்பே குறித்த அந்தத்திற்குப் பின்வாங் குவது அடிப்படையில் செயல்படாத, அல்லது ''பாதுகாப்பு''க் கட்டத்தைச் சேர்ந்தது. எதிர்த்தாக்குதல் செயல்படும், அல் லது ''தாக்கும்'' கட்டத்தைச் சேர்ந்தது. யுத்ததந்திர ரீதி யான தற்காப்பு நீடிக்கும் காலம் முழுவதிலும் எதிர்த்தாக் குதல் தன் தற்காப்பு இயல்பைக் கொண்டே இருந்துவருகிறது என்ற போதிலும் கூட, பின்வாங்கலுடன் ஒப்பிடுகையில் அது

ஏற்கனவே வடிவத்தில் மட்டுமன்றி உள்ளடக்கத்திலும் ஒரு மாற்றத்தைப் பிரதிநிதித்துவம் செய்கிறது. எதிர்த்தாக்குதல் யுத்ததந்திர ரீதியான தற்காப்பிற்கும் யுத்ததந்திர ரீதியான தாக்குதலுக்கும் இடையிலான மாறுகின்ற கட்டமும், யுத்ததந்திர ரீதியான தாக்குதலுக்கு ஒரு பீடிகையான இயல்பினதும் ஆகும்; துருப்புகள் குவிக்கப்படுவது சரியாக யுத்ததந்திர ரீதியான தாக்குதலுக்காகவே.

மூன்றுவதாக, அதன் நோக்கம் உட்புற முனைகளும் வெளிப்புற முனைகளும் சம்பந்தமாக நிலைமையை மறுபுறமாகத் திருப்புவதாகும். யுத்ததந்திர ரீதியில் உட்புறமான முனைகளில் செயல்படும் ஒரு சேனை குறிப்பாகச் ''சுற்றிவளைத்து அடக்குத''லை எதிர்ப்பட்டிருக்கும் செஞ்சேனை பல பாதக அம்சங்களால் பாதிக்கப்படுகிறது. ஆனால் போரியக்கங்களிலும் சண்டைகளிலும் நாம் இந்த நிலைமையை மாற்ற முடியும், முற்றாக மாற்றியே தீரவும் வேண்டும். எதிரியால் எமக்கு எதிராக நடத்தப்படும் பெரும் ''சுற்றிவளைத்து அடக்கும்'' நடவடிக்கை ஒன்றை நாம் எம்மால் எதிரிக்கு எதிராக நடத்தப்படும் பல, சிறிய தனித்தனியான சுற்றிவளைத்து அடக்கும் நடவடிக்கைகளாக மாற்ற முடியும். யுத்ததந்திர மட்டத்தில் எதிரியால் எமக்கு எதிராகச் செலுத்தப்படும் குவிந்த தாக்குதலை நாம் போரியக்கங்களினதும் சண்டைகளினதும் மட்டத்தில் எம்மால் எதிரிக்கு எதிராகச் செலுத்தப்படும் குவிந்த தாக்குதல்களாக மாற்ற முடியும். எமக்கு மேலாக எதிரிக்குள்ள யுத்ததந்திர ரீதியான உயர்ச்சியை நாம் போரியக்கங்களிலும் சண்டைகளிலும் அவனுக்கு மேலாக எமது உயர்ச்சியாக மாற்ற முடியும். யுத்ததந்திர ரீதியில் பலமான ஸ்தானத்திலுள்ள எதிரியை நாம் போரியக்கங்களிலும் சண்டைகளிலும் பலவீனமான ஒரு ஸ்தானத்தில்

இட முடியும். அதே நேரத்தில் நாம் யுத்ததந்திர ரீதியில் பலவீனமான எமது சொந்த ஸ்தானத்தைப் போரியக்கங்களிலும் சண்டைகளிலும் பலமான ஒரு ஸ்தானமாக மாற்ற முடியும். இதுவே உட்புற முனை நடவடிக்கைகளுக்குள் வெளிப்புற முனை நடவடிக்கைகள் எனவும், ''சுற்றிவளைத்து அடக்குத''லுக்குள் சுற்றிவளைத்து அடக்குதல் எனவும், முற்றுகைக்குள் முற்றுகையெனவும், தற்காப்புக்குள் தாக்குதலெனவும், தாழ்ச்சிக்குள் உயர்ச்சியெனவும், பலவீனத்திற்குள் பலமெனவும், பாதக அம்சத்திற்குள் சாதக அம்சமெனவும், செயலற்ற நிலைக்குள் முன்னோட்டம் எனவும் அழைக்கப்படுவது. யுத்ததந்திர ரீதியான தற்காப்பில் வெற்றியை ஈட்டுவது அடிப்படையாக இந்த நடவடிக்கையில் — துருப்புகளைக் குவிப்பதில் — தங்கி நிற்கிறது.

சீனச் செஞ்சேனையின் யுத்த வரலாற்று ஏடுகளில் இது பல சமயம் ஒரு முக்கியமான தகராறுக்குரிய பிரச்சினையாக இருந்துள்ளது. 1930, அக்டோபர் 4ந் திகதிய கிஆன் சண்டையில் எமது முன்னேறுதலும் தாக்குதலும் எமது படைகள் பூரணமாகக் குவிக்கப்படுமுன் தொடங்கப்பட்டன; ஆனால் அதிர்ஷ்டவசமாக எதிரிப்படை (தெங் யிங்கின் டிவிஷன்) தன் சொந்த விருப்பப்படி ஓடிவிட்டது; தன்னளவில் எமது தாக்குதல் பயனற்றதாகவே இருந்தது.

1932ல் தொடங்கி, தளப்பிரதேசத்திலிருந்து எல்லாத் திசைகளிலும் — வடக்கேயும் தெற்கேயும் கிழக்கேயும் மேற்கேயும் — தாக்குதல்கள் நடத்தப்படக் கோரிய ''சகல முனைகளிலும் தாக்குதல்கள்'' என்ற கோஷம் இருந்துவந்தது. இது யுத்ததந்திர ரீதியான தற்காப்பிற்கு மட்டுமன்றி, யுத்ததந்திர ரீதியான தாக்குதலுக்கும் தவறானது. பெரும்படியான சக்திகளின் சமன்பாட்டில் அடிப்படையான மாற்றம் இல்லாத வரை,

யுத்ததந்திரம், தந்திரோபாயங்கள் இரண்டும் தற்காப்பையும் தாக்குதலையும், எதிரியை வரம்புகளுக்குள் வரைப்படுத்தி வைத்திருக்கும் நடவடிக்கைகளையும் தாக்குதல்களையும் உள்ளடக்குகின்றன; ''சகல முனைகளிலும் தாக்குதல்கள்'' உண்மையில் மிக மிக அரிதானவை. இந்தக் கோஷம் ராணுவத் துணிச்சல் வாதத்துடன் கூடவே காணப்படும் ராணுவ சமத்துவவாதத்தை வெளியிடுகிறது.

1933ல் ராணுவ சமத்துவவாதிகள் ''இரண்டு 'முஷ்டிக'ளால் தாக்கும்'' தத்துவத்தை முன்வைத்து, செஞ்சேனையின் பிரதான படைகளை இரண்டாகப் பிரித்து ஒரே நேரத்தில் யுத்ததந்திர ரீதியான இரு திக்குகளில் வெற்றிகளீட்ட முயன்றனர். இதன் விளைவாக ஒரு முஷ்டி வேலையின்றி வாளா கிடக்கையில், மற்றது சண்டையிட்டுக் களைத்துப் போய், நாம் அந்தச் சமயத்தில் சாத்தியமாக இருந்த மிகப் பெரிய வெற்றியை ஈட்டத் தவறினோம். எனது அபிப்பிராயத்தில், நாம் ஒரு சக்திமிக்க எதிரியை எதிர்நோக்கும் போது, எமது சேனையை, அதன் அளவு எவ்வளவாக இருந்தாலும் சரிதான், ஒரு சமயத்தில் ஒரு பிரதான திக்கில் மட்டுமே உபயோகிக்க வேண்டும், இரண்டு திக்குகளில் அல்ல. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட திக்குகளில் போரிடுவதை நான் ஆட்சேபிக்கவில்லை, ஆனால் எந்த ஒரு குறிப்பிட்ட சமயத்திலும் ஒரு பிரதான திக்கு மட்டுமே இருக்க வேண்டும். சிறியதும் பலவீனமானதுமான ஒரு படையாக உள்நாட்டு யுத்த அரங்கிற் பிரவேசித்த சீன செஞ்சேனை அப்போதிருந்து அதன் சக்திமிக்க எதிரியைத் திரும்பத் திரும்பத் தோற்கடித்தும், உலகைப் பிரமிக்கச் செய்துள்ள வெற்றிகளை ஈட்டியும் உள்ளது; இதை அது ஒன்றுகக் குவிக்கப்பட்ட படை பலத்தை உபயோகிப்பதில் பிர

தானமாகத் தங்கி நிற்பதன் மூலம்தான் செய்துள்ளது. அதன் பெரும் வெற்றிகளில் எந்த ஒன்றும் இந்த விஷயத்தை நிரூபிக்கும். நாம், ''ஒருவர் பத்து பேருக்கு எதிராகப் போரிடுவது, பத்துபேர் நூறு பேருக்கு எதிராகப் போரிடுவது'' என்று கூறும் போது நாம் யுத்ததந்திரத்தைப் பற்றியே, முழு யுத்தத்தையும் முழுமையையுந் தழுவிய சக்திகளின் பலாபலத்தையும் பற்றியே பேசுகிறோம்; யுத்ததந்திர ரீதியான அர்த்தத்தில் நாம் செய்து வந்துள்ளதும் அதே தான். எனினும் இதில் நாம் போரியக்கங்களையும் தந்திரோபாயங்களையும் பற்றிப் பேசவில்லை; அவற்றில் நாம் ஒருபோதும் இவ்வாறு செய்யக் கூடாது. எதிர்த்தாக்குதல்களிலாயினும் தாக்குதல்களிலாயினும் நாம் எப்போதும் எதிரிப்படைகளின் ஒரு பகுதியைத் தாக்கப் பெரிய படையொன்றைக் குவிக்க வேண்டும். 1931, ஜனவரியில் கியாங்சி மாகாணத்தில் நிங்து மாவட்டத்தின் துங்ஷாஓ பகுதியில் தான் தௌ-யுவனுக்கு எதிரான சண்டை, 1931, ஆகஸ்டில் கியாங்சியில் சிங்கோ மாவட்டத்தின் கௌசிங்ஸி பகுதியில் 19ம் மார்க்கச் சேனைக்கு எதிரான சண்டை, 1932, ஜூலையில் குவாங்துங் மாகாணத்தில் நான்ஸியுங் மாவட்டத்தின் ஷுய்கோஸி பகுதியில் சென் சி-தாங்குக்கு எதிரான சண்டை, 1934, மார்ச்சில் கியாங்சியில் லீச்சுவான் மாவட்டத்தின் துவான்ஸுன் பகுதியில் சென் செங்கிற்கு எதிரான சண்டை ஆகியவற்றிற் போல, நாம் எமது துருப்புகளை ஒன்முகக் குவிக்காத ஒவ்வொரு தடவையும் நாம் துன்பப்பட்டோம். கடந்தகாலத்தில், ஷுய்கோஸி சண்டை, துவான்ஸுன் சண்டை ஆகியன போன்ற சண்டைகள் பொதுவாக வெற்றிகளாகவோ, பெரும் வெற்றிகளாகவோ கூடக் கருதப்பட்டன (முன்னதில் நாம் சென் சி-தாங்கின் கீழான இருபது ரெஜி

செஞ்சேனை எங்கிருக்கிறது என்பதிற்தான் நிலைத்திருக்கிறது; அவன் அருமையாகவே அதிலிருந்து பார்வையைத் திருப்பித் தளப்பிரதேசத்தில் மட்டும் கவனத்தைச் செலுத்துகிறான். செஞ்சேனை தற்காப்பில் ஈடுபட்டுள்ள போதுங் கூட அதுவே எதிரியின் கவனத்தின் மையமாக இருக்கிறது. அவனது முழு மையான திட்டத்தின் ஒரு பகுதி எமது தளப்பிரதேசத்தின் பெருப்பத்தைக் குறைப்பதாகும்; ஆனால் செஞ்சேனை அவனது வியூகங்களில் ஒன்றை அழித்தொழிக்கத் தனது பிரதான பலத்தைக் குவித்தால் எதிரியின் உயர் ஆணைப் பீடம் செஞ்சேனையில் மேலும் அதிக கவனத்தைச் செலுத்தவும் அதற்கு எதிராக மேலும் பெரிய படைகளைக் குவிக்கவும் நிர்ப்பந்திக்கப்படும். எனவே, ஒரு தளப்பிரதேசத்தின் பெருப்பத்தைக் குறைப்பதற்கான எதிரித் திட்டமொன்றைத் தகர்த்தெறிவது சாத்தியம்.

''கோட்டை யுத்த முறையைக் கொண்டு நடத்தப்படும் ஐந்தாவது 'சுற்றிவளைத்து அடக்கும்' நடவடிக்கையில் நாம் ஒன்றுகக் குவித்த படைகளைக் கொண்டு செயல்படுவது அசாத்தியம்; நாம் செய்யக் கூடியதெல்லாம் தற்காப்பிற்கும் குறுகிய, விரைவான தாக்குதல்களுக்குமாக படைகளைப் பிரிப்பதுதான்'' என்றதும் தவறுகும். ஒரு சமயத்தில் 3,5,8 அல்லது 10 லீ தூரம் முன்னேறுவதும் ஒவ்வொரு தடவையும் நிற்கும் போது கோட்டைகள் கட்டுவதுமான எதிரியின் தந்திரோபாயங்கள் முற்றிலும் அடுத்தடுத்த ஒவ்வொரு ஸ்தலத்திலும் தற்காப்பு ரீதியான சண்டைகள் செய்வதான செஞ்சேனையின் நடைமுறையின் விளைவே. எமது உட்புற முனைகளில் அடுத்தடுத்த ஒவ்வொரு ஸ்தலத்திலும் தற்காப்பாகிய தந்திரோபாயங்களைக் கைவிட்டு, அவசியமும் சாத்தியமுமான போது திரும்பி

எதிரியின் உட்புற முனைகளுக்குள் புகுந்திருந்தால் நிலைமை நிச்சயம் வேறுவிதமாக இருந்திருக்கும். படைகளைக் குவிப்பதான கோட்பாடே சரியாக எதிரியின் கோட்டை முறை யுத்தத்தைத் தோற்கடிப்பதற்கான வழிவகை.

நாம் கோரும் விதமான படைகளைக் குவித்தலுக்கு மக்களின் கொரில்லா யுத்தத்தைக் கைவிடுவதென அர்த்தமில்லை. லீ லி-சன் மார்க்கத்தால் கோரப்பட்டவாறு சிறு அளவிலான கொரில்லா யுத்தத்தைக் கைவிட்டுத் ''தனி ஒவ்வொரு துப்பாக்கியையும் செஞ்சேனையிற் திரட்டிக் குவிப்பது'' தவறு என நெடுங்காலத்திற்கு முன்பே நிரூபிக்கப்பட்டுவிட்டது. புரட்சி யுத்தத்தை முழுப்படியாக நோக்கினால், மக்கள் கொரில்லாக்களும் பிரதான சக்தியாகிய செஞ்சேனையும் மனிதனின் வலக்கையும் இடக்கையும் போல ஒன்றுக்கொன்று உதவியானவை. எம்மிடம் மக்கள் கொரில்லாக்களில்லாமல் பிரதான சக்தியாகிய செஞ்சேனை மாத்திரமே இருந்தால் நாம் ஒரு கை மாத்திரமுடைய படை வீரனுக்குச் சமமாவோம். திட்டவட்டமான பதங்களில், விசேஷமாக போர் நடவடிக்கைகள் சம்பந்தமாக, நாம் தளப்பிரதேசத்திலுள்ள மக்களை ஒரு அம்சமாகக் குறிப்பிடுகையில் நாம் கருதுவது, நாம் ஆயுதபாணிகளான மக்களைக் கொண்டுள்ளோம் என்பதையே. அதுவே எதிரி எமது தளப்பிரதேசத்தை அணுக அஞ்சுவதற்குப் பிரதான காரணம்.

செஞ்சேனைப் பிரிவுகளை இரண்டாம் பட்சமான திக்குகளிலான போர் நடவடிக்கைகளுக்கு உபயோகிப்பதும் அவசியம்; செஞ்சேனையின் படைகள் எல்லாமே ஒன்ருகக் குவிக்கப்படக் கூடாது. நாம் கோரும் வகையான குவிப்பு போர்க் களத்தில் அறுதியான அல்லது ஒப்புநோக்கான உயர்ச்சியை உத்தரவாதப்

நாம் பலரைத் தோற்கடிக்கச் சிலரை உபயோகிக்கிறோம் — இதை நாம் சீனுவின் முழு ஆட்சியாளர்களுக்கும் கூறுகிறோம். நாம் சிலரைத் தோற்கடிக்கப் பலரை உபயோகிக்கிறோம் — இதை நாம் போர்க் களத்தில் தனித்தனியான ஒவ்வொரு எதிரிப் படைக்கும் கூறுகிறோம். இது இனியும் ஒரு ரகசியமல்ல, பொதுவில் எதிரி இப்போதளவில் எமது முறையோடு நன்கு பரிச்சயப்பட்டுள்ளான். இருப்பினும் நாம் எப்போது, எங்கு செயல்படுவோம் என அவன் அறியாதத்தால் அவனுல் எமது வெற்றிகளைத் தடுக்கவும் இயலாது தனது இழப்புகளைத் தவிர்க் கவும் இயலாது. இதை நாம் இரகசியமாக வைத்துக் கொள் கிறோம். செஞ்சேனை பொதுவாகத் திடீர்த் தாக்குதல்கள் மூலம் செயல்படுகிறது.

## 7. நடமாட்ட யுத்த முறை

நடமாட்ட யுத்த முறையா ஸ்தான யுத்த முறையா? எமது பதில் நடமாட்ட யுத்த முறை என்பதே. எமக்கு ஒரு பெரும் சேனையோ வெடிமருந்துக் கையிருப்புகளோ இல்லாத வரையும், ஒவ்வொரு தளப்பிரதேசத்திலும் சண்டை செய்வதற்கு ஒரே யொரு செஞ்சேனைப் படை மட்டுமே உள்ள வரையும் எமக்கு ஸ்தான யுத்த முறை பொதுவாக உபயோகமற்றது. எமக்கு ஸ்தான யுத்த முறை தற்காப்பிலும் அதே போல் தாக்குதலி லும் பொதுவாக உபயோகிக்க முடியாதது.

செஞ்சேனையின் நடவடிக்கைகளின் தனித்திலங்கும் குண திசயங்களில் ஒன்று, எதிரி சக்திமிக்கவனுக இருக்கச் செஞ்சேனை யந்திர நுட்ப சாதனங்கள் குறைந்ததாக உள்ளது என்ற உண்

மைகளினின்றும் பிறப்பதான, நிலையான சண்டை முனைகள் இன்மையாகும்.

செஞ்சேனையின் சண்டை முனைகள் அது செயல்படும் திக்கினுல் நிர்ணயிக்கப்படுகின்றன. அதன் நடவடிக்கையின் திக்கு பல சமயம் மாறுகிறதாகையால் அதன் சண்டை முனைகளும் மாற்றமடைபவையாக உள்ளன. பிரதான திக்கு ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் மாறுவதில்லையாயினும் அதன் எல்லைகளுக்குள்ளாக இரண்டாம் பட்சமான திக்குகள் எந்தக் கணத்திலும் மாறக் கூடும்; நாம் ஒரு திக்கில் தடுக்கப்பட்டிருக்கக் காணும் போது நாம் மற்றொரு திக்கிற்குத் திரும்ப வேண்டும். சிறிது காலத்தின் பின்னர் நாம் பிரதான திக்கிலும் தடுக்கப்பட்டிருக்கக் கண்டால், அப்போது நாம் அதையும் மாற்ற வேண்டும்.

புரட்சிகர உள்நாட்டு யுத்தமொன்றில் நிலையான சண்டை முனைகள் இருக்க முடியாது; சோவியத் யூனியனிலும் விஷயம் இவ்வாறே இருந்தது. சோவியத் சேனைக்கும் எமது சேனைக்கும் இடையிலான வித்தியாசம் அதன் சண்டை முனைகள் எம்முடையவற்றைப் போல அவ்வளவு மாற்றமடைபவையாக இருக்கவில்லை என்பதாகும். அறுதியாக நிலையான சண்டை முனைகள் எந்த யுத்தத்திலும் இருக்கமுடியாது; ஏனெனில் வெற்றி தோல்வியினதும் முன்னேறுதல் பின்வாங்குதலினதும் மாற்றங்கள் அதை விலக்குகின்றன. ஆனுல் ஒப்புநோக்காக நிலையான சண்டை முனைகள் பொதுவான யுத்தங்களிற் பல சமயம் காணக் கிடைக்கின்றன. சீனச் செஞ்சேனையின் தற்போதைய கட்டத்தில் அதன் விஷயம் உள்ளதைப் போல ஒரு சேனை அதைவிட மிகப் பலங்கூடிய ஒரு எதிரியை எதிர்நோக்கும் போது மட்டுமே விதிவிலக்குகள் காணப்படுகின்றன.

சண்டை முனைகளின் மாற்றமடையும் தன்மை எமது தளப் பிரதேசங்களின் பருப்பத்தில் மாற்றமடையும் தன்மைக்கு இட்டுச் செல்கின்றது. எமது தளப்பிரதேசங்கள் இடையருது விரிந்தும் சுருங்கியும் கொண்டு இருக்கின்றன; பல சமயம் ஒரு தளப்பிரதேசம் வீழ்ச்சியுற, மற்றொன்று தோன்றுகின்றது. பிரதேசத்தின் இந்த மாற்றமடையும் தன்மை முற்றாக யுத்தத்தின் மாற்றமடையும் தன்மையின் ஒரு விளைவே.

யுத்தத்திலும் எமது பிரதேசத்திலுமான மாறும் தன்மை எமது தளப்பிரதேசங்களில் சகல துறைகளிலுமான நிர்மாணத்தில் மாறும் தன்மையைத் தோற்றுவிக்கின்றது. பல ஆண்டுகளைத் தழுவும் நிர்மாணத் திட்டங்களுக்கு இடமே இல்லை. திட்டத்தில் அடிக்கடி மாற்றங்கள் நாளாந்தம் உள்ளவை.

இந்தக் குணாதிசயத்தைக் கண்டுகொள்வது எமக்குச் சாதகமாக இருக்கும். நாம் எமது திட்டமிடுதலுக்கு இதை அடிப்படையாகக் கொள்ள வேண்டும், பின்வாங்கல்கள் எதுவுமில்லாத முன்னேறும் யுத்தமொன்றைப் பற்றிய பிரமைகளைக் கொண்டிருக்கவும் எமது பிரதேசத்தினதோ எமது சேனையின் பின்னணிப் பிரதேசங்களினதோ தற்காலிக மாற்றமடைவு எதனுலும் கலவரமடையவுமோ, அன்றி விபரமாக நீண்ட காலத் திட்டங்கள் தீட்ட முயலவோ கூடாது. நாம் எமது சிந்தனையையும் எமது வேலையையும் சூழ்நிலைகளுக்குப் பொருத்தமாக்கிக் கொள்ளவும், உட்கார்ந்திருக்கவும் அதே போல் நகர்ந்து கொண்டே செல்லவும் தயாராயிருக்கவும், எப்போதும் நகரும் போதிற்கான எமது உணவுப் பண்டங்களைக் கையோடு வைத்துக்கொள்ளவும் வேண்டும். இன்றைய மாற்றமடையும் வாழ்க்கை முறையில் எம்மைப் பிரயாசைப்படுத்திக் கொள்வதன் மூலம் மட்டுமே நாளைக்கு நாம் ஒப்புநோக்கான ஸ்தி

ரத்தையும் இறுதியில் பூரண ஸ்திரத்தையும் ஈட்ட முடியும்.

எமது ஐந்தாவது ''சுற்றிவளைத்து அடக்குத''லுக்கெதிரான நடவடிக்கையை ஆதிக்கம் செய்த ''கிரமமான யுத்த முறை'' யுத்ததந்திரத்தின் பிரசாரகர்கள் இந்த மாறும் தன்மையை மறுத்துத் தாம் ''கொரில்லாவாதம்'' என அழைத்ததை எதிர்த்தனர். மாற்றமடைவை எதிர்த்த தோழர்கள் தாம் ஒரு பெரும் அரசின் ஆட்சியாளர்கள் என்பது போன்ற ரீதியில் விவகாரங்களை நிர்வகித்தனர்; அதன் விளைவு அசாதாரண மானதும் பிரமாண்டமானதுமான ஒரு மாற்றமடைவாக — 25,000 லீ தூர நீண்ட படைநடப்பாக — இருந்தது.

எமது தொழிலாளர் விவசாயிகளின் ஜனநாயகக் குடியரசு ஒரு அரசு; ஆனல் இன்று அது இன்னும் முற்றுக முதிர்ந்த ஒரு அரசு அல்ல. இன்று நாம் இன்னும் உள்நாட்டு யுத்தத்தில் யுத்ததந்திர ரீதியான தற்காப்பின் கட்டத்திற்தான் இருக் கிருேம்; எமது அரசியல் அதிகாரத்தின் வடிவம் இன்னும் முற்றுக முதிர்ந்த ஒரு அரசினுடையதிலிருந்து வெகுதூரமாக உள்ளது; எமது சேனை இன்னும் எண்ணிக்கைகள், யந்திர நுட்ப சாதனங்கள் இரண்டிலும் எதிரியை விடப் பெருமளவு தாழ் வாகவே உள்ளது; எமது பிரதேசம் இன்னும் மிகச் சிறிதாகவே உள்ளது; எமது எதிரியும் இடையருது எம்மை அழிப்பதில் முனைந்திருக்கிருன்; அவன் அவ்வாறு செய்யும் வரை ஒருபோதும் திருப்தியுற்று ஓயவும் மாட்டான். இந்த உண்மைகளின் அடிப் படையில் எமது கொள்கையை வரைவில்க்கணப்படுத்துவதில் நாம் கொரில்லாவாதத்தைப் பொதுவாக நிராகரிக்கக் கூடாது, மாருகச் செஞ்சேனையின் கொரில்லாத் தன்மையை நேர்மை யுடன் ஒப்புக்கொள்ள வேண்டும். இது பற்றி வெட்கப்படுவதில் பயனில்லை. அதற்கு நேர்மாருக, சரியாக இந்தக் கொரில்லாத்

தன்மைதான் எமது தனித்துவமான லட்சணமும் எமது சிறப்பம்சமும் எதிரியைத் தோற்கடிக்கும் எமது வழிவகையும் ஆகும். நாம் இதைக் களைந்துவிடத் தயாராக இருக்க வேண்டும்; ஆனால் இன்றே அவ்வாறு செய்துவிட முடியாது. எதிர்காலத்தில் இந்தக் கொரில்லாத் தன்மை வெட்கப்படுவதற்கும் களையப்படுவதற்குமான ஒன்றாக நிச்சயமாக ஆகும்; ஆனால் இன்று அது மதிப்பிடற்கரியது; நாம் அதை விடாதிருக்க வேண்டும்.

''எம்மால் வெல்ல முடியும் போது நாம் போரிடுவோம், முடியாத போது அகன்று விடுவோம்'' — இதுவே இன்று எமது நடமாட்ட யுத்த முறையை வர்ணிப்பதற்கான பொது வாக்கியம். நாம் செய்கின்ற அளவு நகருதலைச் செய்வோர் அரிதெனினும், சண்டையிடுவதை மட்டுமே ஏற்பவரும் நகருவதை ஒருபோதும் ஏற்காதவருமான ஒரு ராணுவ நிபுணர் உலகில் எங்கும் இல்லை. நாம் பொதுவில் சண்டையிடுவதிலும் பார்க்க நகருவதில்தான் அதிக காலத்தைச் செலவிடுகின்றோம்; சராசரி ஒரு மாதத்தில் கணக்கிடக்கூடிய அளவான ஒரு சண்டையைச் செய்தோமானால் நாம் நன்றாகச் செயல்படுகிறோம் என்று கூற வேண்டும். எமது ''நகருதல்'' எல்லாம் ''சண்டையிடும்'' நோக்கத்திற்கானதும், எமது யுத்ததந்திரமும் தந்திரோபாயங்களும் ''சண்டையிடுத''லின் அடிப்படையில் அமைந்தவையுமாகும். இருப்பினும் நாம் சண்டையிடுவது புத்தியல்லாததாயிருக்கும் சமயங்களும் உண்டு. முதலிடத்தில், எம்மை எதிர்நோக்கும் எதிரிப்படை ஆகப் பெரிதாக உள்ள போது சண்டையிடுவது புத்தியல்ல; இரண்டாவதாக, எம்மை எதிர்நோக்கும் எதிரிப்படை அவ்வளவு பெரிதாக இல்லாவிடினும் அது பிற எதிரிப்படைகளுக்கு மிக அருகாமையில் உள்ள போது சில சமயங்களில் சண்டையிடுவது புத்தியல்ல; மூன்று

வதாக, தனிப்பட்டில்லாததும் பலமாக நிலைபெற்று உள்ளது மான ஒரு எதிரிப்படையுடன் சண்டையிடுவது பொதுவாகப் புத்தியல்ல; நான்காவதாக, வெற்றிக்குச் சாத்தியப்பாடு இல் லாத ஒரு கைகலப்பைத் தொடர்வது புத்தியல்ல. மேற்கூறிய நிலைமைகளுள் எந்த ஒன்றிலும் நாம் விலகிச் சென்றுவிடத் தயாராக உள்ளோம். இத்தகைய விலகிச் செல்லுதல் அனு மதிக்கக் கூடியதும் அவசியமானதும் ஆகும். ஏனெனில், வில கிச் செல்வதன் அவசியத்தை நாம் அங்கீகரிப்பது, சண்டை யிடுவதன் அவசியத்தை நாம் அங்கீகரிப்பதையே அடிப்படை யாகக் கொண்டதாகும். இங்குதான் செஞ்சேனையின் நடமாட்ட யுத்த முறையின் அடிப்படையான குணுதிசயம் உள்ளது.

நடமாட்ட யுத்த முறை அடிப்படையானது; ஆனுல் ஸ்தான யுத்த முறை அவசியமும் சாத்தியமுமானவிடத்து நாம் அதை நிராகரிப்பதில்லை. யுத்ததந்திர ரீதியான தற்காப்புக் கட்டத் தின் போது வரைப்படுத்தி வைத்திருக்கும் நடவடிக்கை ஒன் றிற் குறிப்பிட்ட கேந்திர ஸ்தலங்களின் விடாப்பிடியாகப் பாது காக்கும் போதும், யுத்ததந்திர ரீதியான தாக்குதலின் போது நாம் தனிப்பட்டதும் உதவியிலிருந்து துண்டிக்கப்பட்டதுமான ஒரு எதிரிப்படையை எதிர்ப்படும் போதும், ஸ்தான யுத்த முறை உபயோகிக்கப்பட வேண்டுமென்பது ஒப்புக்கொள்ளப்பட வேண்டும். எதிரியை இத்தகைய ஸ்தான யுத்த முறையால் தோற்கடிப்பதில் நாம் கணிசமானளவு அனுபவம் பெற்றுள் ளோம்; நாம் பல எதிரி நகரங்களையும் கோட்டைகளையும் கொத் தளங்களையும் உடைத்துத் திறந்தும், கணிசமானளவு நன்கு பந்தோபஸ்துச் செய்யப்பட்ட எதிரிக் கள நிலைகளுக்கூடாகப் பிளந்துகொண்டு சென்றும் உள்ளோம். எதிர்காலத்தில் நாம் இந்த வகையில் எமது பிரயாசைகளைக் கூட்டி, எமது குறை

களையும் திருத்துவோம். சூழ்நிலைகள் ஸ்தானத் தாக்குதலையோ ஸ்தானத் தற்காப்பையோ தேவையாக்கும் போதும் அனும திக்கும் போதும் நாம் எவ்வகையாலும் அதைக் கோர வேண் டும். தற்போது நாம் எதிர்ப்பது ஸ்தான யுத்த முறையைப் பொதுவாக உபயோகிப்பதை, அல்லது அதனை நடமாட்ட யுத்தத்தோடு சமமான ஒரு ஸ்தானத்தில் வைப்பதை ஆகும்; இது அனுமதிக்கவே முடியாதது.

பத்து ஆண்டு கால உள்நாட்டு யுத்தத்தின் போது, செஞ் சேனையின் கொரில்லாத்தன்மையில், அதற்கு நிலையான சண்டை முனைகள் இன்மையில், அதன் தளப்பிரதேசங்களின் மாறும் தன்மையில், அல்லது அதன் தளப்பிரதேசங்களிலான நிர் மாண வேலையின் மாறும்தன்மையில் மாற்றங்கள் எதுவுமே இருந்ததில்லையா? ஆம், மாற்றங்கள் இருந்திருக்கின்றன. சிங் காங் மலைகளிலிருந்த நாட்களிலிருந்து கியாங்சியிலான ''சுற்றி வளைத்து அடக்குத''லுக்கு எதிரான எமது முதலாவது நடவடிக் கை வரையான காலகட்டமே முதலாவது கட்டம்; செஞ்சேனை அதன் இளம் பருவத்திலும் தளப்பிரதேசங்கள் இன்னும் கொ ரில்லாப் பிராந்தியங்களாகவும் இருந்ததால் கொரில்லாத் தன் மையும் மாறும்தன்மையும் மிகக் கண்கூடாக இருந்த கட்டம் ஆகும். முதலாவது ''சுற்றிவளைத்து அடக்குத''லுக்கெதிரான நடவடிக்கையிலிருந்து மூன்றுவது நடவடிக்கை வரையான கால கட்டத்தால் ஆன இரண்டாவது கட்டத்தில், முன்னணிப்படை கள் உருவாக்கப்பட்டும் பல பத்துலட்சம் ஜனத்தொகை கொண்ட தளப்பிரதேசங்கள் ஸ்தாபிக்கப்பட்டும் இருந்ததால், கொரில்லாத்தன்மை, மாறும்தன்மை இரண்டும் கணிசமா னளவு குறைக்கப்பட்டிருந்தன. மூன்றுவது ''சுற்றிவளைத்து அடக்குத''லுக்கெதிரான நடவடிக்கையின் முடிவிலிருந்து ஐந்

தாவது நடவடிக்கை வரையான காலகட்டத்தால் ஆன மூன் ருவது கட்டத்தில், கொரில்லாத் தன்மையும் மாறும்தன்மையும் மேற்கொண்டு குறைக்கப்பட்டும், மத்திய அரசாங்கமொன் றும் புரட்சிகர ராணுவக் கமிஷன் ஒன்றும் ஏற்கனவே நிறு வப்பட்டும் இருந்தன. நான்காவது கட்டம் நீண்ட படைநடப் பாகும். ஒரு சிறு ரீதியிலான கொரில்லா யுத்த முறையும் மாற் றமடைவும் பிழையாக நிராகரிக்கப்பட்டது பெரும் ரீதியிலான கொரில்லா யுத்த முறையிலும் மாற்றமடைவிலும் போய் முடிந்திருந்தது. இப்போது நாம் ஐந்தாவது கட்டத்தில் உள் ளோம். ஐந்தாவது ''சுற்றிவளைத்து அடக்கும்'' நடவடிக் கையைத் துகளாக்க நாம் தவறியதன் காரணமாகவும், இந் தப் பெரும் மாற்றமடைவு காரணமாகவும் செஞ்சேனையும் தளப்பிரதேசங்களும் பெருமளவு குறைக்கப்பட்டுள்ளன; ஆனுல் நாம் எமது கால்களை வடமேற்கில் ஊன்றிக்கொண்டும் இங்கு எமது தளப்பிரதேசமான ஷென்சி-கன்சு-நிங்சியா எல்லைப்பி ரதேசத்தை ஸ்திரப்படுத்தியும் அபிவிருத்தி செய்தும் உள் ளோம். செஞ்சேனையின் பிரதான படைகளை ஆக்கும் மூன்று முன்னணிப்படைகளும் முன்னென்றுமில்லாதபடி ஒருமுகப்ப டுத்திய ஆணையின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.

எமது யுத்ததந்திரத்தின் இயல்பைக் கொண்டு கூறுவதா னுல், சிங்காங் மலைகளிலிருந்த நாட்களிலிருந்து எமது நான்கா வது ''சுற்றிவளைத்து அடக்குத''லுக்கெதிரான நடவடிக்கை வரையான காலகட்டம் ஒரு கட்டம், ஐந்தாவது ''சுற்றிவ ளைத்து அடக்குத''லுக்கெதிரான நடவடிக்கையின் காலகட் டம் மற்ருெரு கட்டம், நீண்ட படைநடப்பிலிருந்து தற்போது வரையான காலகட்டம் மூன்ருவது கட்டம் என்றும் நாம் கூறலாம். ஐந்தாவது ''சுற்றிவளைத்து அடக்குத''லுக்கெதிரான

நடவடிக்கையின் போது கடந்த காலத்திய சரியான கொள்கை தவருகக் கைவிடப்பட்டது; இன்று நாம் ஐந்தாவது ''சுற்றி வளைத்து அடக்குத''லுக்கெதிரான நடவடிக்கையின் போது கைக்கொள்ளப்பட்ட தவருன கொள்கையைச் சரியாகக் கைவிட்டும் அதற்கு முந்திய சரியான கொள்கையை மீண்டும் கைக்கொண்டும் உள்ளோம். இருப்பினும் நாம் ஐந்தாவது எதிரான நடவடிக்கையிலான சகலதையும் தூர வீசிவிடவோ, அன்றி அதற்கு முன்பிருந்த சகலதையும் மீண்டும் கைக்கொள்ளவோ இல்லை. நாம் கடந்த காலத்தியவற்றில் நல்லது எதுவோ அதை மட்டுமே மீண்டும் கைக்கொண்டும், ஐந்தாவது எதிரான நடவடிக்கைக் காலகட்டத்தின் தவறுகளை மட்டுமே கைவிட்டும் உள்ளோம்.

கொரில்லாவாதத்திற்கு இரண்டு அம்சங்கள் உள்ளன. ஒன்று கிரமமின்மை, அதாவது, பன்முகப்பாடு, ஒரு சீரான தன்மை இன்மை, கருரான கட்டுப்பாடின்மை, எளிமையான வேலை முறைகள் ஆகியன. இந்த இயல்புகள் செஞ்சேனையின் இளமையினின்றும் தோன்றியவை; இவற்றிற் சில சரியாக அந்தச் சமயத்தில் தேவைப்பட்டவையும் ஆகும். செஞ்சேனை மேலும் உயர்ந்த ஒரு கட்டத்தை எட்டுகையில் நாம் செஞ் சேனையை மேலும் மத்திப்பட்டதாகவும், மேலும் ஒரு சீரான தன்மைப்பட்டதாகவும், மேலும் கட்டுப்பாடுடையதாகவும், அதன் வேலையில் மேலும் செம்மையுடையதாகவும் — சுருங்கக் கூறினல், தன்மையில் மேலும் கிரமமானதாக — ஆக்கக் கூடியதாக இவற்றைச் சிறிது சிறிதாகவும் அறிவுபூர்வமாகவும் இல்லாமற் செய்ய வேண்டும். போர் நடவடிக்கைகளை வழி நடத்துவதில் நாம் மேலும் உயர்ந்த ஒரு கட்டத்தில் இனியும் தேவைப்படாத கொரில்லாக் குணதிசயங்களையும் சிறிது சிறி

தாகவும் அறிவுபூர்வமாகவும் குறைக்கவும் வேண்டும். இந்த வகையில் முன்னேற்றமடைய மறுப்பதும் பழைய கட்டத்தில் முரண்டுப்பிடியாக நிற்பதும் அனுமதிக்க முடியாதவையும், தீங்கானவையும், பெரும் ரீதியிலான போர் நடவடிக்கைகளுக்கு ஊறு செய்பவையும் ஆகும்.

கொரில்லாவாதத்தின் மற்ற அம்சம் நடமாட்ட யுத்த முறைக் கோட்பாடு, தற்போது இன்னும் அவசியமானதான, யுத்ததந்திர ரீதியான போர் நடவடிக்கைகள், தந்திரோபாய ரீதியான போர் நடவடிக்கைகள் இரண்டினதும் கொரில்லாத் தன்மை, எமது தளப்பிரதேசங்களின் தவிர்க்க முடியாத மாறும் தன்மை, தளப்பிரதேசங்களின் நிர்மாணத்தைத் திட்டமிடுத லில் வளைந்துகொடுக்கும் தன்மை, செஞ்சேனையைக் கட்டி வளர்ப்பதில் காலம் வருமுன்பான கிரமப்படுத்தலை நிராகரித் தல் ஆகியவற்றுல் ஆனது. இது சம்பந்தமாக, வரலாற்றின் உண்மைகளை மறுப்பதும், உபயோகமானதைத் தொடர்ந்து வைத்திருப்பதை எதிர்ப்பதும், இன்னமும் எட்டாத தொலை வில் உள்ளதும் யதார்த்தமான முக்கியத்துவம் எதுவும் அற் றதுமான ஒரு ''புதிய கட்ட''த்தை நோக்கிக் குருட்டுத்த னமாக ஓடுவதற்காகக் கண்மூடித்தனமாகத் தற்போதைய கட் டத்தை விட்டுச் செல்வதும் அதேயளவு அனுமதிக்க முடியா தவையும், பாதகமானவையும், எமது தற்போதைய போர் நடவடிக்கைகளுக்குத் தீங்கானவையுமாகும்.

இப்போது நாம் செஞ்சேனையின் யந்திர நுட்ப சாதன வசதி யும் ஸ்தாபன அமைப்பும் சம்பந்தமாக ஒரு புதிய கட்டம் ஆரம் பமாகும் தறுவாயில் உள்ளோம். நாம் இந்தப் புதிய கட்டத் திற்கு மாறிச் செல்லத் தயாராக இருக்க வேண்டும். எம்மைத் தயார்படுத்திக் கொள்ளாமலிருப்பது தவறுகவும் எம்து எதிர்

கால யுத்தத்திற்குத் தீங்காகவும் இருக்கும். எதிர்காலத்தில், செஞ்சேனையில் யந்திர நுட்ப, ஸ்தாபன ரீதியான சூழ்நிலைகள் மாறியும் செஞ்சேனையைக் கட்டிவளர்த்தல் ஒரு புதிய கட்டத் திற் பிரவேசித்தும் விட்டிருக்கும் போது, செஞ்சேனையின் போர் நடவடிக்கைத் திக்குகளும் சண்டை முனைகளும் ஒப்பீட்டளவில் ஸ்திரமாக இருக்கும்; ஸ்தான யுத்தம் கூடுதலாக இருக்கும்; யுத்தத்தினதும் எமது பிரதேசத்தினதும் எமது நிர்மாண வேலை யினதும் மாறும்தன்மை பெருமளவு குறைக்கப்பட்டு, இறுதி யில் மறைந்துவிடும். உயர்ச்சியுள்ள எதிரியும் அவனது பலமாக நிலைபெற்ற ஸ்தானங்களும் போன்ற தற்போதைய வரம்புக ளால் நாம் பின்னும் பாதிக்கப்பட்டிருக்க மாட்டோம்.

தற்போது நாம் ''இடதுசாரி''ச் சந்தர்ப்பவாதத்தின் ஆதிக் கக் காலகட்டத்தின் தவறான நடவடிக்கைகள், செஞ்சேனை அதன் இளம் பருவத்திற் கொண்டிருந்த, ஆனால் இப்போது அனுவசியமான, கிரமமல்லாத இயல்புகளிற் பல மீண்டும் கைக்கொள்ளப்படுவது இரண்டையும் எதிர்க்கிறோம். ஆனால் செஞ்சேனை நிலையாக அதன் வெற்றிகளை எந்தக் கோட்பாடு களால் ஈட்டியதோ அந்த, சேனையைக் கட்டிவளர்ப்பதினதும் யுத்ததந்திரம், தந்திரோபாயங்கள் ஆகியவற்றினதும் பெறு மதி வாய்ந்த பல கோட்பாடுகளை மீண்டும் நிலைநாட்டுவதில் நாம் உறுதியாக இருக்க வேண்டும். இன்று எதிரியை வெல்லவும் எதிர்காலத்தில் புதிய கட்டத்திற்கு மாறிச் செல்வதற்குத் தயாராகவும் வேண்டி நாம், கடந்த காலத்தியவற்றில் நல் லவையான அனைத்தையும் ஓர் ஒழுங்கு முறையான, மேலும் நன்கு அபிவிருத்தி செய்யப்பட்ட, மேலும் வளமான ராணுவ மார்க்கமாகத் தொகுக்க வேண்டும்.

நடமாட்ட யுத்தத்தை நடாத்துவதாகிய செயல், வேவு

பார்த்தல், மதிப்பிடல், முடிவு செய்தல், சண்டைக்குப் படை களை அணிவகுத்தல், ஆணை, மறைப்பு, குவித்தல், முன்னேறல், படைக் கூறுகளை அணிவரிசைப்படுத்துவது, தாக்குதல், துரத் துதல், திடீர்த்தாக்குதல், ஸ்தானத் தாக்குதல், ஸ்தானத் தற்காப்பு, எதிர்ப்படும் போர், பின்வாங்கல், இரவுச் சண்டை, விசேஷ போர்கள், பலமானவற்றிலிருந்து விலகிச்செல்வதும் பலவீனமானவற்றைத் தாக்குவதும், எதிரியின் உதவிக்கு வரும் படைகளைத் தாக்குவதற்காக எதிரியை முற்றுகையிடுவது, தாக் குவது போன்ற நடிப்பு, விமானங்களுக்கு எதிராகத் தற்காப்பு, பல எதிரிப்படைகளின் மத்தியில் செயல்படுதல், எதிரெதிரே சந்திப்பதை விலக்கித் தாக்குவது, அடுத்தடுத்த போர்நட வடிக்கைகள், பின்னணிப் பிரதேசம் இல்லாமல் செயல்படுதல், ஓய்வினதும் சக்தியைச் சேகரித்துக்கொள்வதினதும் அவசியம் ஆகியன போன்ற பல பிரச்சினைகள் சம்பந்தப்பட்டது. இந் தப் பிரச்சினைகள் செஞ்சேனையின் வரலாற்றில் பல குறிப்பான இயல்புகளை, போர் நடவடிக்கைகள் பற்றிய விஞ்ஞானத்தில் ஒழுங்கு முறையாகக் கையாளவும் தொகுத்துக் காணவும் பட வேண்டிய இயல்புகளைக் காண்பித்தன; இங்கு நான் அவற் றைக் கையாளப் புகவில்லை.

### 8. விரைவில் வெற்றி தோல்வி காணும் யுத்தம்

யுத்ததந்திர ரீதியில் அமைந்த ஒரு நீண்டகால யுத்தமும் விரைவில் வெற்றி தோல்வி காணும் போரியக்கங்கள் அல்லது சண்டைகளும் ஒரே காரியத்தின் இரு அம்சங்களாகும், உள் நாட்டு யுத்தங்களில் ஒரே நேரத்தில் சமமான வலியுறுத்தல் தரப்பட வேண்டியவையும் ஏகாதிபத்திய-எதிர்ப்பு யுத்தங்

களுக்கும் பொருந்துபவையுமான இரு கோட்பாடுகளாகும்.

பிற்போக்கு சக்திகள் மிகப் பலமானவையாகையால் புரட்சிகர சக்திகள் சிறிது சிறிதாக மட்டுமே வளர்கின்றன; இந்த உண்மை எமது யுத்தத்தின் நீண்ட தன்மையையும் நிர்ணயிக்கிறது. இங்கு பொறுமையின்மை தீங்கானதும் ''விரைவில் வெற்றி தோல்வி காணுவ''தைக் கோருவது தவறானதும் ஆகும். நாம் செய்துள்ளவாறு, பத்து வருடங்களுக்கு ஒரு புரட்சிகர யுத்தத்தை நடத்துவது பிற நாடுகளில் ஆச்சரியப்படத் தக்கதாக இருக்கலாம்; ஆனால் எமக்கு அது ஒரு ''எட்டுக் கால் கட்டுரை''யின் ''அறிமுகம் செய்தல், விரித்துக் கூறல், ஆரம்ப விளக்கம்''[38] ஆகியவை போன்றது; பல பரபரப்பான பகுதிகள் பிறகு தான் வர இருக்கின்றன. எதிர்காலத்தில் அபிவிருத்திகள் உள்நாட்டு, சர்வதேசச் சூழ்நிலைகளின் தாக்கத்தின் கீழ் பெரிதும் துரிதப்படுத்தப்படும் என்பதில் ஐயமில்லை. சர்வதேச, உள்நாட்டு நிலைமையில் ஏற்கனவே மாற்றங்கள் நிகழ்ந்துள்ளதுடன் இன்னும் பெரிய மாற்றங்கள் வருகின்றனவுமாகையால், நாம் மெதுவாக அபிவிருத்தியடைவதும் தனித்துச் சண்டையிடுவதுமான கடந்த கால நிலையைத் தாண்டி வளர்ந்துவிட்டோம் எனக் கூறப்படலாம். ஆனால் நாம் இரவோடிரவாக வெற்றியை எதிர்பார்க்கக் கூடாது. ''காலைச் சாப்பாட்டுக்கு முன் எதிரியை அழித்தொழித்துவிடும்'' அபிலாசை பாராட்டத்தக்கது; ஆனால் அவ்வாறு செய்வதற்குத் திட்டவட்டமான திட்டங்கள் தீட்டுவது தீது. சீனாவின் பிற்போக்குச் சக்திகள் பல ஏகாதிபத்திய வல்லரசுகளால் ஆதரிக்கப்படுகின்றனவாகையால், எமது புரட்சிகர யுத்தம், சீனாவில் புரட்சிகரச் சக்திகள் எமது உள்நாட்டு, வெளிநாட்டு எதிரிகளின் பிரதான ஸ்தானங்களைப் பிளக்கப் போதிய பலத்தைக் கட்டி வளர்த்துக்

கொள்ளும் வரையும், சர்வதேசப் புரட்சிகர சக்திகள் சர்வதேசப் பிற்போக்கு சக்திகளில் அனேகமானவற்றை நசுக்கி, அல்லது வரையறைக்குட்படுத்தி வைத்துவிடும் வரையும், தொடர்ந்து நீண்ட ஒரு யுத்தமாகவே இருந்துவரும். இந்த விஷயத்திலிருந்து ஆரம்பித்து எமது நீண்ட கால யுத்ததந்திரத்தை உருப்படுத்துவது எமது யுத்ததந்திரத்தை வழிநடத்தும் முக்கிய கோட்பாடுகளில் ஒன்று.

இதற்கு நேர்மாருனதே போரியக்கங்களுக்கும் சண்டைகளுக்கும் பொருந்தும் — இங்கு கோட்பாடு நீண்டிருத்தல் அல்ல, விரைவில் வெற்றி தோல்வி காணுதலே. போரியக்கங்களிலும் சண்டைகளிலும் விரைவான வெற்றி தோல்வி வேண்டப்படுகிறது; இது எல்லாக் காலங்களிலும் எல்லா நாடுகளிலும் சமமானதுமாகும். முழுமையான ஒரு யுத்தத்திலும் கூட எல்லாக் காலங்களிலும் எல்லா நாடுகளிலும் விரைவான வெற்றி தோல்வியே வேண்டப்படுகிறது; நீண்டு இழுபடும் யுத்தம் தீங்கானதெனக் கருதப்படுகிறது. இருப்பினும் சீனுவின் யுத்தம் மிகுந்த பொறுமையுடன் கையாளப்படவும் நீண்ட ஒரு யுத்தமாகப் பாவிக்கப்படவும் வேண்டும். லீ லி-சன் மார்க்கத்தின் காலகட்டத்தின் போது சிலர் நாம் காரியங்களைச் செய்யும் முறையை ''குத்துச் சண்டைப் பயிற்சித் தந்திரோபாயங்கள்'' (பெரிய நகரங்களைக் கைப்பற்றப் போகுமுன் முன்னும் பின்னுமாகப் பல சண்டைகளைச் செய்வதான எமது தந்திரோபாயங்களை இவ்வாறு குறிப்பிட்டு) எனக் கிண்டல் செய்து, நாம் எம் தலைகள் நரைக்கும் வரை புரட்சியின் வெற்றியைக் காண மாட்டோம் என்றனர். இத்தகைய பொறுமையின்மை நெடுங்காலத்திற்கு முன்பே தவறென நிரூபிக்கப்பட்டது. ஆனுல் அவர்களின் விமர்சனம் யுத்ததந்திரத்திற்கல்லாமல், போரியக்

கங்களையும் சண்டைகளையும் குறித்துச் செய்யப்பட்டிருந்தால், பின்வரும் காரணங்களுக்காக அவர்கள் முற்றும் சரியாக இருந் திருப்பர். முதலாவதாகச் செஞ்சேனைக்கு அதன் இழக்கப்பட்ட ஆயுதங்களையும், விசேஷமாக, வெடி மருந்தையும் நிரப்புவ தற்கு எந்த வழிதுறைகளும் இல்லை; இரண்டாவதாக, வெள்ளைப் படைகள் பல சேனைகளால் ஆனவையாயிருக்கையில் செஞ் சேனை ஒன்று மட்டுமே உள்ளது, அது ஒவ்வொரு ''சுற்றிவ ளைத்து அடக்கும்'' நடவடிக்கையையும் துகளாக்க வேண்டி ஒரு நடவடிக்கையின் பின் மற்றொன்றாக விரைவில் அடுத்த டுத்துச் சண்டையிடத் தயாராக இருக்க வேண்டும்; மூன்றா வதாக, வெள்ளைச் சேனைகள் தனித் தனியாக முன்னேறுகின் றன என்ற போதிலும் அவற்றில் அனேகமானவை ஒன்றுக் கொன்று கணிசமானளவு அருகாமையிலேயே இருக்கின்றன, நாம் அவற்றில் ஒன்றைத் தாக்குவதில் விரைவாக வெற்றி தோல்வியை முடிவாக்கத் தவறினோமானால் மற்றவை எல்லாம் எம்மை நோக்கிக் குவிந்து வந்துவிடும். இக்காரணங்களால் நாம் விரைவில் வெற்றி தோல்வி காணும் சண்டைகளைச் செய்ய வேண்டியுள்ளது. நாம் ஒரு சண்டையைச் சில மணித் தியாலங்களில் அல்லது ஒரு நாள், இரண்டு நாட்களில் முடித் துக் கொள்வது வழமை. எமது திட்டம் ''எதிரியின் உதவிக்கு வரும் படைகளைத் தாக்குவதற்காக எதிரியை முற்றுகையிடுவ'' தாக உள்ள போதும் எமது நோக்கம் முற்றுகையிடப்பட்ட எதிரியை அல்லாமல் அவனது உதவிக்கு வரும் படைகளையே தாக்குவதாக இருக்கும் போதும் மட்டுமே நாம் எமது முற்றுகை நடவடிக்கை ஒரு அளவிற்கு நீண்டிருப்பதற்குத் தயாராக இருக் கிறோம்; ஆனால் அப்போதும் கூட உதவிக்கு வரும் படைகளுக்கு எதிராக நாம் விரைவான வெற்றி தோல்வி காணவே முயல்கி

ரேம். நாம் யுத்ததந்திர ரீதியில் தற்காப்பில் ஈடுபட்டிருக்கையில் எதிரியை வரைப்படுத்துவதற்கான முனை ஒன்றில் ஸ்தானங்களை விடாப்பிடியாகப் பாதுகாக்கும் போதோ, அல்லது யுத்ததந்திர ரீதியான ஒரு தாக்குதலில் நாம் உதவியிலிருந்து துண்டிக்கப்பட்டிருக்கும் தனிமைப்பட்ட எதிரிப் படைகளைத் தாக்குகையிலோ, அல்லது எமது தளப்பிரதேசங்களுக்குள்ளே வெள்ளைப் பலக் கொத்தளங்களை ஒழிக்கும் போதோ நீண்ட நடவடிக்கைகளின் கோட்பாடு போரியக்கங்களில் அல்லது சண்டைகளில் பல சமயம் பிரயோகிக்கப்படுகிறது. ஆனால் இந்த விதமான நீண்ட நடவடிக்கைகள் பிரதான சக்தியாகிய செஞ்சேனைக்கு அதன் விரைவில் வெற்றி தோல்வி காணும் சண்டைகளில் தடங்கல் செய்வதற்குப் பதில் உதவியே செய்கின்றன.

விரைவான வெற்றி தோல்வி வெறுமனே அதை விரும்புவதால் மட்டும் அடையப்பெற முடியாது, அதற்குப் பல குறிப்பான நிபந்தனைகள் தேவை. பிரதான நிபந்தனைகளாவன: போதிய தயாரிப்புகள், வாய்ப்பான தருணத்தைப் பற்றிக்கொள்வது, உயர்வான படைகளைக் குவிப்பது, சுற்றிவளைப்பதும் பக்கவாடுகளைச் சுற்றி வளைப்பதுமான தந்திரோபாயங்கள், சாதகமான தரையமைப்பு, எதிரி நகர்ந்துகொண்டிருக்கையில், அல்லது நிலையாக இருக்கையில் ஆனால் இன்னும் தன் ஸ்தானங்களை ஸ்திரப்படுத்திக் கொள்ளுமுன் தாக்குவது ஆகியன. இந்த நிபந்தனைகள் பூர்த்திசெய்யப்பட்டாலன்றி, ஒரு போரியக்கத்திலோ சண்டையிலோ விரைவான வெற்றி தோல்வியை அடைவது அசாத்தியம்.

எதிரியின் ''சுற்றிவளைத்து அடக்குத''லொன்றைத் துகளாக்குவது ஒரு பிரதான போரியக்கம்; ஆனால் அதற்கும் விரைவில் வெற்றி தோல்வி காணும் கோட்பாடே பொருந்தும், நீண்டி

ருப்பதென்ற கோட்பாடல்ல. ஏனெனில் ஒரு தளப்பிரதேசத்தின் மனித சக்தி, நிதி வசதிகள், ராணுவ பலம் ஆகியன நீண்டிருப்பதற்கு இடமளிப்பதில்லை.

விரைவில் வெற்றி தோல்வி காண்பதே பொதுக் கோட்பாடாயிருக்கையில், அனுவசியமான பொறுமையீனத்தை நாம் எதிர்க்க வேண்டும். ஒரு புரட்சிகரத் தளப்பிரதேசத்தின் மிக உயர்ந்த ராணுவ, அரசியல் தலைமை அங்கம் தனது தளப்பிரதேசத்திலான சூழ்நிலைகளையும் எதிரி நிலைமையையும் கணக்கில் எடுத்துக்கொண்டு, அவனது மூர்க்கத்தனத்தால் மிரண்டுவிடவோ, தாங்கிக்கொள்ளக்கூடிய கஷ்டங்களால் உற்சாகமிழந்துவிடவோ, பின்னடைவுகளால் மனம் விட்டுப்போகவோ செய்யாமல், மாறாகத் தேவையான பொறுமையும் திராணியும் உடையதாக இருப்பது முற்றும் அவசியம். கியாங்சியிலான முதலாவது எதிரிச் ''சுற்றிவளைத்து அடக்கும்'' நடவடிக்கையைத் துகளாக்குவதற்கு முதலாவது சண்டையிலிருந்து கடைசிச் சண்டை வரை ஒருவாரம் மட்டுமே பிடித்தது; இரண்டாவது இரண்டே வாரங்களுக்குள்ளாகத் துகளாக்கப்பட்டது; மூன்றுவது மூன்று மாதங்கள் இழுபட்ட பின்னரே துகளாக்கப்பட்டது; நான்காவது மூன்று வாரங்கள் பிடித்தது; ஐந்தாவது ஒரு முழுவருடத்திற்கு எமது திராணியைச் சோதித்தது. எதிரியின் ஐந்தாவது நடவடிக்கையைத் துகளாக்கத் தவறியதன் பின்னர் நாம் எதிரியின் சுற்றிவளைப்புக்கு ஊடாகப் பிளந்துகொண்டு வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்ட போது நாம் தேவையற்ற அவசரத்தைக் காண்பித்தோம். அப்போது இருந்த சூழ்நிலைகளில் நாம் நன்றாக இன்னும் இரண்டு அல்லது மூன்று மாதங்கள் பொறுத்திருந்து, துருப்புக்களுக்கு ஓய்வுக்கும் புனரணிவகுப்பதற்கும் சிறிது காலம் தந்திருக்கலாம். அது செய்

யப்பட்டும், நாம் பிளந்துகொண்டு வெளியேறியதன் பின்னர் தலைமை சற்று அதிக புத்திசாலித்தனமாக இருந்தும் இருப்பின் விளைவு மிக வேறுபட்டதாக இருந்திருக்கும்.

இத்தனைக்கும், ஒரு போரியக்கத்தின் காலத்தைச் சாத்தியமான சகல வழிகளிலும் குறுக்கும் கோட்பாடு பொருந்துவதாகவே இருக்கிறது. உட்புற முனைகளில் (அதாவது, தளப் பிரதேசத்துக்குள்) எதிரியின் வினைத்திறனுடைய பலத்தை அழிப்பதையும், அவனது ''சுற்றிவளைத்து அடக்கும்'' நடவடிக்கையை விரைவிற் தோற்கடிப்பதையும் உறுதிப்படுத்தக் கூடியதாகப் போரியக்கம், சண்டைத் திட்டங்கள் துருப்புக்களைக் குவித்தல், நடமாட்ட யுத்தம் இத்தியாதியினவற்றில் மிகக் கூடிய பட்ச முயற்சியைக் கோர வேண்டும்; ஆனால் போரியக்கம் எமது உட்புற முனைகளில் முடிவுக்குக் கொண்டுவரப்பட முடியாது எனத் தெளிவாயிருக்கும் இடத்து நாம் செஞ்சேனையின் பிரதான படையை உபயோகித்து எதிரியின் சுற்றிவளைப்புக்கூடாகப் பிளந்துகொண்டு சென்று, எமது வெளிப்புற முனைகளில், அதாவது, எதிரியின் உட்புற முனைகளில் அவனைத் தோற்கடிப்பதற்காக அவற்றிற்கு மாற வேண்டும். இப்பொழுது எதிரி தனது கோட்டை முறை யுத்தத்தை உயர்ந்த ஒரு தரத்துக்கு விருத்தி செய்துள்ளதால், இதுவே எமது வழமையான போரிடும் முறையாக ஆகும். எமது ஐந்தாவது ''சுற்றிவளைத்து அடக்குத''லுக்கெதிரான நடவடிக்கை ஆரம்பமாகி இரு மாதங்களின் பின்னர், ஃபூகியன் சம்பவ[39]த்தின் சமயத்தில், செஞ்சேனையின் பிரதான படைகள் சந்தேகமின்றி, செகியாங்கை மையமாகக்கொண்ட கியாங்ஸு-செகியாங்-அன்ஹுய்-கியாங்சி பிரதேசத்திற்குள் புகுந்து, ஹங்சௌ, ஸுசௌ, நான்கிங், வூஹு, நான்சாங், ஃபூசௌ ஆகியவற்றிற்கு இடையிலான

பகுதி முழுவதும் வியாபித்துச் சென்று, எமது யுத்ததந்திர ரீதியான தற்காப்பை யுத்ததந்திர ரீதியான தாக்குதலாக மாற்றியும் எதிரியின் ஜீவாதாரமான மையங்களை அச்சுறுத்தியும், கோட்டைகள் இல்லாதிருந்த பாரிய பிரதேசங்களில் சண்டைகளைத் தேடியுமிருக்க வேண்டும். இத்தகைய முறையால் நாம் தெற்கு கியாங்சியையும் மேற்கு ஃபூகியனையும் தாக்கிக்கொண்டிருந்த எதிரியைத் தனது ஜீவாதாரமான மையங்களைப் பாதுகாக்கத் திரும்பும்படி நிர்ப்பந்தித்தும், கியாங்சி தளப்பிரதேசத்தின் மீதான அவனது தாக்குதலைத் தகர்த்தும், ஃபூகியன் மக்கள் அரசாங்கத்திற்கு உதவி தந்தும் — இந்த முறையால் நாம் நிச்சயமாக அதற்கு உதவி செய்திருக்கலாம் — இருக்க முடியும். இந்தத் திட்டம் நிராகரிக்கப்பட்டதால் எதிரியின் ஐந்தாவது ''சுற்றிவளைத்து அடக்கும்'' நடவடிக்கை தகர்க்கப்பட முடியவில்லை; ஃபூகியன் மக்கள் அரசாங்கமும் தவிர்க்க முடியாதபடி தகர்ந்தது. ஒரு வருடம் சண்டை செய்த பின்னருங்கூட, நாம் செகியாங் நோக்கி முன்னேறுவது வாய்ப்பற்றதாக ஆகிவிட்டிருந்ததெனினும், அப்போதும் நாம் மற்றொரு திக்கில் யுத்ததந்திர ரீதியான தாக்குதலுக்கு மாறியிருக்க — எமது பிரதான படைகளை ஹூனானை நோக்கி நகர்த்துவதன் மூலம், அதாவது ஹூனானுக்கூடாகக் குவெய்சௌவிற்குச் செல்வதற்குப் பதிலாக மத்திய ஹூனானுக்குள் நகர்வதன் மூலம் கியாங்சியிலான எதிரியை ஹூனானுக்குள் இழுத்துச் சென்று அவனை அங்கு வைத்து அழித்தொழிக்க முடியும். இந்தத் திட்டமும் நிராகரிக்கப்பட்டதால் எதிரியின் ஐந்தாவது ''சுற்றிவளைத்து அடக்கும்'' நடவடிக்கையைத் தகர்க்கும் நம்பிக்கை முழுவதும் இறுதியாக அழிக்கப்பட்டு, எமக்கு நீண்ட படைநடப்பில் இறங்குவதைத் தவிர வேறு வழி ஏதும் இல்லாது போயிற்று.

## 9. அழித்தொழிக்கும் யுத்தம்

இன்று சீனச் செஞ்சேனையைப் பொறுத்தவரை ''தேய்க்கும் பலப் பரீட்சை'' ஒன்றைக் கோருவது பொருத்தமற்றது. ட்ரேகன் ராஜா[40]க்களுக்கிடையில் அல்லாமல், ஒரு ட்ரேகன் ராஜாவுக்கும் ஒரு பிச்சைக்காரனுக்கும் இடையில் நடக்கும் ''ஐசுவரியப் போட்டி'' கேலிக்கூத்தாகவே இருக்கும். தனக்கான பண்டங்களில் கிட்டத்தட்ட முழுவதையும் எதிரியிடமிருந்தே பெறும் செஞ்சேனைக்கு, அழித்தொழிக்கும் யுத்தமே அடிப்படைக் கொள்கை. எதிரியின் வினைத்திறனுடைய பலத்தை அழித்தொழிப்பதன் மூலம் மட்டுமே நாம் அவனது ''சுற்றிவளைத்து அடக்கும்'' நடவடிக்கைகளைத் துகளாக்கவும் எமது தளப்பிரதேசங்களை விரிவுபடுத்தவும் முடியும். இழப்புகளை ஏற்படுத்துவது எதிரியை அழித்தொழிக்கும் ஒரு வழிவகை, இல்லாவிடில் அதில் அர்த்தமே இராது. எதிரிக்கு இழப்புகளை ஏற்படுத்துவதில் நாமும் தேய்வுகளை உறுகிறோம்; ஆனல் அவனது கூறுகளை அழித்தொழிப்பதன் மூலம் எமது கூறுகளை நிரவிக்கொள்கிறோம். அவ்வாறாக எமது இழப்புகளை நிரவிக்கொள்வது மட்டுமல்லாமல் எமது சேனையின் பலத்தைக் கூட்டியும் கொள்கிறோம். மிகப் பலம் வாய்ந்த எதிரியுடனுள்ள போட்டியில் எதிரியைச் சிதறியோடச் செய்த போர் அடிப்படையில் முடிவை நிர்ணயிப்பதல்ல. அழித்தொழிக்கும் போர் எந்த எதிரியின் மீதும் பெரிய உடனடியான தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. ஒரு மனிதனின் பத்து விரல்களையும் காயப்படுத்துவது அவற்றிலொன்றைக் கொத்தியெறிவது போன்று பயனுடையதாகாது; எதிரியின் டிவிஷன்கள் பத்தைச் சிதறியோடச் செய்வது

அவற்றிலொன்றினை அழித்தொழிப்பது போன்று பயனுடையதாகாது.

எதிரியின் முதலாம், இரண்டாம், மூன்றும், நான்காம் ''சுற்றிவளைத்து அடக்கும்'' நடவடிக்கைகளைக் கையாள்வதற்கான எமது கொள்கை அழித்தொழிக்கும் யுத்தமாக இருந்தது. ஒவ்வொரு நடவடிக்கையிலும் அழித்தொழிக்கப்பட்ட படைகள் அவனது மொத்த பலத்தில் ஒரு பகுதியையே ஆக்கின; இருப்பினும் இந்தச் ''சுற்றிவளைத்து அடக்கும்'' நடவடிக்கைகள் எல்லாம் துகளாக்கப்பட்டன. இருப்பினும், எமது ஐந்தாவது ''சுற்றிவளைத்து அடக்குத''லுக்கெதிரான நடவடிக்கையில் இதற்கு நேரெதிரான கொள்கை பின்பற்றப்பட்டது; அது உண்மையில் எதிரிக்கே அவனது நோக்கங்களை அடைய உதவி செய்தது.

அழித்தொழிக்கும் யுத்தமும் உயர்வான படைகள் குவிக்கப்படுவது, சுற்றிவளைக்கும், அல்லது பக்கவாடுகளைச் சுற்றிவளைக்கும் தந்திரோபாயங்கள் கைக்கொள்ளப்படுவது ஆகியவையும் சமமான முக்கியத்துவம் வாய்ந்தவை. பின்னதில்லாமல் முன்னது இருக்க முடியாது. அழித்தொழிப்பதான நோக்கத்திற்கு மக்கள் ஆதரவு, சாதகமான தரையமைப்பு, பாதிக்கப்படக்கூடிய எதிரிப் படையொன்று, திடீர்த்தாக்குதலின் சாதகத் தன்மை ஆகியன போன்ற சூழ்நிலைகள் எல்லாம் இன்றியமையாதவை.

வெறுமனே எதிரிப் படையைப் புறங்காணுவது அல்லது அதைத் தப்பிச் செல்ல அனுமதிப்பது, முழுமையான சண்டை அல்லது போரியக்கத்தில் எமது பிரதான படை மற்றொரு எதிரிப் படைக்கு எதிராகத் தன் அழித்தொழிக்கும் நடவடிக்கைகளைச் செறிவாக நடத்திக்கொண்டிருக்கின்றது என்றால் மட்

டுமே அர்த்தமுடையதாக இருக்கும்; இல்லாவிடில் அது அர்த்தமற்றது. இங்கு இழப்புகள் இலாபங்களால் சரியெனக் காட்டப்படுகின்றன.

எமது சொந்த யுத்ததளபாடக் கைத்தொழிலை ஸ்தாபிப்பதில் நாம் எம்மை அதில் தங்கிநிற்கும் நிலைக்குச் சென்றுவிட அனுமதிக்கக் கூடாது. எமது அடிப்படைக் கொள்கை ஏகாதிபத்திய நாடுகளினதும் எமது உள்நாட்டு எதிரியினதும் யுத்ததளபாடக் கைத்தொழில்களில் தங்கிநிற்பதுதான். எமக்கு ஹன்யாங்கின் ஆயுதக் களரிகளின் உற்பத்தியிலும் அதே போல் லண்டனின் ஆயுதக் களரிகளின் உற்பத்தியிலும் ஒரு பாத்தியதை உள்ளது; அது மட்டுமன்றி அது எமக்கு எதிரியின் பண்டப் போக்கு வரத்துக் கோர்களாலேயே கொணர்ந்து வினியோகிக்கவும் படுகிறது. இதுவே உள்ளபடியான உண்மை, வெறும் கிண்டலல்ல.

## குறிப்புகள்

1. வட படையெடுப்பு யுத்தம், 1926-27ல் ஏகாதிபத்திய, நிலப்பிரபுத்துவ-எதிர்ப்பிற்காகச் சீன மக்கள் நடத்திய மகத்தான புரட்சி யுத்தமாகும். வட யுத்தப்பிரபு ஆட்சியைப் பூரணமாகத் தூக்கியெறியும் பொருட்டு, 1926 ஜூலை, குவாங்துங் முழுவதையும் கைப்பற்றிய பின்னர் தேசியப் புரட்சிப்படை புரட்சிகரத் தளப்பிரதேசமான குவாங்துங்கிலிருந்து வடக்கு நோக்கிப் படையெடுத்துச் சென்றது. சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியற் தலைமையிலும் பரந்துபட்ட தொழிலாளர் விவசாயிகளின் மனமார்ந்த ஆதரவிலும் 1926ன் பிற்பாதியிலும் 1927ன் முற்பாதியிலும் தேசிய புரட்சிப்படை விரைவில் யாங்சி, மஞ்சள் நதிகளையொட்டிய பிரதேசங்களை அடைந்து, சீனுவின் அரைப் பகுதியைக்

கைப்பற்றியது; ஏகாதிபத்தியமும் நிலப்பிரபுத்துவ சக்தியும் பலத்த அடி பெற்றன. வட படையெடுப்பு யுத்தம் வெற்றிகரமாக விரைந்து முன்னேறிய வேளையில் சியாங் கை-ஷேக்கைப் பிரதிநிதியாகக் கொண்ட கோமிந்தாங் வலதுசாரிகள் (இவர்கள் தரகு பூர்ஷுவா வர்க்கத்தினதும் பெரும் நிலப்பிரபு வர்க்கத்தினதும் நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்தினர்) ஏகாதிபத்தியங்களின் ஆதரவுடன் 1927 ஏப்ரலில் எதிர்ப்புரட்சி ஆட்சிக் கவிழ்ப்பை ஏற்படுத்தினார்கள். அதேவேளையில், சீனக் கம்யூனிஸ்ட் கட்சியில் சென் து-சியூவைப் பிரதிநிதியாகக் கொண்ட வலதுசாரிச் சந்தர்ப்பவாதிகள் கட்சியின் தலைமையை அபகரித்துத் தோழர் மாஒ சேதுங் அவர்களின் பாட்டாளி வர்க்கப் புரட்சி மார்க்கத்தை மறுத்துச் சரணடைவு மார்க்கத்தை அமுல்நடத்தி, புரட்சிக்கான தலைமை அதிகாரத்தை, குறிப்பாக, ஆயுத சக்திகள்மீதான தலைமையைக் கைவிட்டார்கள். இவற்றின் காரணமாகப் புரட்சி தோல்வியடைந்தது. (மொழிபெயர்ப்பாளர் குறிப்பு)

2. ''யதார்த்தம்'' என்ற சொல் சீன மொழியில் இரு வகை அர்த்தம் கொண்டது: ஒரு அர்த்தம் உண்மையான நிலைமை என்பதாகும்; மற்றொன்று மக்களின் செயல் (அதாவது, பொதுவாக கூறப்படும் நடைமுறை) என்பதாகும். தோழர் மாஒ சேதுங் அவர்கள் தன் படைப்புகளில் இச்சொல்லைப் பாவிக்கும் சமயத்தில் அடிக்கடி இரண்டு அர்த்தங்களும் அடங்குகின்றன.

3. சுன் வு சு, அல்லது சுன் வு, கி.மு. 5ம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு புகழ் பெற்ற சீன ராணுவ விஞ்ஞானி; அவர் ''சுன் சு''என்ற, பதின்மூன்று அத்தியாயங்களைக் கொண்ட, யுத்தம் பற்றிய நூலொன்றை எழுதினார். இந்த மேற்கோள் ''தாக்குதலுக்கான தந்திரம்'' என்ற 3ம் அத்தியாயத்திலிருந்து எடுக்கப்பட்டது.

4. தோழர் மாஒ சேதுங் அவர்கள் 1936ல் இக்கட்டுரையை எழுதிய போது, 1921,ஜூலையில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி ஸ்தாபிக்கப்பட்டதிலிருந்து சரியாகப் பதினைந்து ஆண்டுகள் ஆகியிருந்தன.

5. சென் து-சியூ, முதலில் பீக்கிங் பல்கலைக் கழகத்தில் ஒரு பேராசிரியனாக இருந்தான்; ''புதிய வாலிபர்'' என்ற இதழின் ஆசிரியரான காரணத்தால், அவன் பெயர் போனவனானான். சென் து-சியூ கம்யூனிஸ்ட் கட்சி ஸ்தாபகர்களுள் ஒருவனானான். மே 4 இயக்ககாலத்தில் அவனுக்குக் கிடைத்த புகழாலும், ஆரம்ப கட்டத்தில் கட்சி பக்குவமடையாததாயிருந்ததாலும் அவன் கட்சியின் பொதுச் செயலாளராகினான். 1924-1927ப் புரட்சியின் பிற்பகுதியில் கட்சியில் சென் து-சியூவாற் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட வலதுசாரிச் சிந்தனை சர

ணுகதிவாத மார்க்கமாக வளர்ந்தது. அப்போதைய ''சரணுகதிவாதிகள் கட்சியின், விவசாயி வெகுஜனங்களுக்கும் நகரக் குட்டி பூர்ஷுவா வர்க்கத்திற்கும் மத்திய பூர்ஷுவா வர்க்கத்திற்குமான தலைமையைத் தாமாகவே கைவிட்டு, குறிப்பாக, கட்சியின், ஆயுதசக்திகளுக்கான தலைமையைக் கைவிட்டுப் புரட்சியைத் தோல்விக்குள்ளாக்கினர்'' (மாஓ சேதுங், ''இன்றைய நிலைமையும் நமது கடமைகளும்''). 1927ப் புரட்சியின் தோல்விக்குப் பின்னர் சென் து-சியூவும் இதர ஒருசில சரணுகதிவாதிகளும் புரட்சியின் எதிர்காலத்தில் நம்பிக்கையிழந்து இல்லாதொழிப்புவாதிகளாயினர். அவர்கள் பிற்போக்கு ட்ரொஸ்கியவாத நிலைப்பாட்டை மேற்கொண்டு, ட்ரொஸ்கியவாதிகளுடன் கூடி ஒரு சிறிய கட்சி-எதிர்ப்புக் கும்பலை உருவாக்கினர். இதனுல் 1929 நவம்பரிற் சென் து-சியூ கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டான். 1942ல் அவன் இறந்தான். சென் து-சியூ வலதுசாரிச் சந்தர்ப்பவாதம் பற்றி ''தேர்ந்தெடுக்கப்பட்ட மாஓ சேதுங் படைப்''பின் முதலாவது தொகுதியில் ''சீன சமுதாயத்திலுள்ள வர்க்கங்கள் பற்றிய ஆராய்வு'', ''ஹுனுன் விவசாயி இயக்கப் பரிசீலனை பற்றிய அறிக்கை'' ஆகிய கட்டுரைகளின் அடிக்குறிப்பையும், ''தேர்ந்தெடுக்கப்பட்ட மாஓ சேதுங் படைப்''பின் இரண்டாவது தொகுதியில் '''கம்யூனிஸ்'டை அறிமுகம் செய்வது'' என்ற கட்டுரையையும் பார்க்கவும்.

6. லீ லி-சன்னின் ''இடதுசாரி''ச் சந்தர்ப்பவாதம் பொதுவாக ''லீ லி-சன் மார்க்கம்'' எனப்படுகிறது. அது, 1930 ஜூன்முதல் கிட்டத்தட்ட நான்கு மாதங்கள் கட்சியில் நிலைத்திருந்ததும் அப்போது சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியில் பிரதான தலைமை உறுப்பினராயிருந்த தோழர் லீ லி-சன்னைப் பிரதிநிதியாகக் கொண்டதுமான ''இடதுசாரி''ச் சந்தர்ப்பவாத மார்க்கத்தைக் குறிக்கிறது. லீ லி-சன் மார்க்கம் பின்வரும் இயல்புகளைக் கொண்டிருந்தது: அது கட்சியின் ஆருவது தேசிய மாநாட்டுக் கொள்கையை மீறி நடந்தது. புரட்சிக்கு மக்கள் பலத்தைக் கட்டிவளர்க்கவேண்டும் என்பதையும் புரட்சியின் வளர்ச்சி சமமானதல்ல என்பதையும் ஏற்கவில்லை. தோழர் மாஓ சேதுங் அவர்களின், பிரதானமாகக் கிராமியத் தளப்பிரதேசங்களை உருவாக்குவதில் நாம் நீண்டகாலம் எமது கவனத்தைச் செலுத்தவேண்டும்; நகரங்களைச் சுற்றிவளைப்பதற்குக் கிராமியத் தளப்பிரதேசங்களை உபயோகிக்க வேண்டும்; நாடு பரந்த புரட்சிப் பேரெழுச்சியொன்றை முன்னடத்துவதற்கு இந்தத் தளப்பிரதேசங்களை உபயோகிக்கவேண்டும் என்ற கருத்துக்களை ''மிகவும் தவருனது'' ''விவசாயி மனப்போக்கின் சிறுபகுதிக்குரிய இயல்பும் பழை

மைபோற்றும் பண்பும்'' என்று கருதியது. நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் உடனடியான கிளர்ச்சிக்கான ஆயத்தங்கள் செய்யப்படவேண்டும் என்றும் கருதியது. இந்தத் தவருன மார்க்கத்தின் அடிப்படையில், தோழர் லீ லி-சன் நாடு முழுவதுமுள்ள முக்கிய நகரங்களில் உடனடியான ஆயுதக் கிளர்ச்சிகளை ஏற்படுத்துவதற்குத் துணிச்சல்வாதத் திட்டமொன்றைத் தீட்டினர். அதே சமயத்தில், லீ லி-சன் மார்க்கம் உலகப் புரட்சியின் வளர்ச்சி சமமானதல்ல என்பதை ஏற்க மறுத்து, சீனப் புரட்சியின் பொது வெடிப்பு தவிர்க்கமுடியாதபடி ஒரு உலகப் புரட்சியின் பொது வெடிப்புக்கு வழிகோலும் எனவும் உலகப் புரட்சியின் பொது வெடிப்பிலேதான் சீனப் புரட்சி வெற்றி பெறமுடியுமெனவும் கருதியது; அத்துடன், சீனவின் பூர்ஷுவா-ஜனநாயகப் புரட்சியின் நீடித்த தன்மையையும் ஏற்றுக்கொள்ள மறுத்து, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மாகாணங்களில் ஏற்படும் வெற்றியின் ஆரம்பங்களே சோஷலிசப் புரட்சிக்கு மாறுவதற்கான ஆரம்பத்தைக் குறிக்கின்றன எனக் கருதி, இதன் காரணமாக, காலத்திற்கேற்காத பல ''இடதுசாரி''த் துணிச்சல்வாதக் கொள்கைகளை வகுத்தது. தோழர் மாஒ சேதுங் அவர்கள் இந்தத் தவருன மார்க்கத்தை எதிர்த்தார்; முழுக் கட்சியினதும் மிகப் பரந்துபட்ட ஊழியர்களும் அங்கத்தவர்களுங்கூட அதைத் திருத்த வேண்டுமெனக் கோரினர். 1930 செப்டம்பரில் நடந்த கட்சி ஆருவது மத்திய கமிட்டியின் மூன்ருவது பிளீனக் கூட்டத்திலே சுட்டிக்காட்டப்பட்ட தவறுகளைத் தோழர் லீ லி-சன் ஏற்றுக்கொண்டார். அதன் பின்னர், மத்திய கமிட்டியிலிருந்த தன் தலைமைப் பதவியைக் கைவிட்டார். தோழர் லீ லி-சன் நீண்டகால நேரத்திலே தன் தவருன கருத்துகளைத் திருத்தினர்; ஆகவே அவர் கட்சியின் ஏழாவது தேசிய காங்கிரஸின்போது மத்திய கமிட்டி அங்கத்தவராகத் திரும்பத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

7. 1930, செப்டம்பரில் நடந்த கட்சியின் ஆருவது மத்திய கமிட்டியின் மூன்ருவது பிளீனக் கூட்டமும் அதன் பின்பான மத்திய கமிட்டியும் லீ லி-சன் மார்க்கத்துக்கு முடிவுகட்டப் பல ஆக்கமான நடவடிக்கைகளைக் கைக்கொண்டன. ஆனல் அக்கூட்டத்தின் பின்னர், நடைமுறைப் புரட்சிகரப் போராட்டத்தில் அனுபவமற்றிருந்த பல கட்சித் தோழர்கள், சென் ஷாஒ-யு (வாங் மிங்), சின் பாங்-சியென் (பொ கு) ஆகியோரின் தலைமையில், மத்திய கமிட்டியின் நடவடிக்கைகளை எதிர்த்தனர். ''இரு மார்க்கங்கள்'' அல்லது ''சீனக் கம்யூனிஸ்ட் கட்சியை மேற்கொண்டும் பொல்ஷிவிஸமயப்படுத்துவதற்காகப் போராடுக'' என்ற பிரசுரத்தில் அவர்கள் அப்போது கட்சியில் இருந்துவந்த பிரதான

அபாயம் ''இடதுசாரி''ச் சந்தர்ப்பவாதமல்ல, ''வலதுசாரிச் சந்தர்ப்பவாத''மே என வன்மையாகப் பிரகடனம் செய்து, தங்கள் சொந்த நடவடிக்கைகளை நியாயப்படுத்துவதற்காக லீ லி-சன் மார்க்கத்தை ''வலதுசாரி'' எனவும் ''விமர்சனம்'' செய்தனர். அவர்கள் லீ லி-சன் மார்க்கத்தையும் பிற ''இடதுசாரி''க் கருத்துகளையும் கொள்கைகளையும் ஒரு புதிய வேடத்தில் தொடர்ந்த, புத்துயிர் அளிக்கப்பட்ட, அல்லது அபிவிருத்தி செய்யப்பட்ட புதிய அரசியல் வேலைத் திட்டமொன்றை முன்வைத்து, தோழர் மாஓ சேதுங் அவர்களின் சரியான மார்க்கத்தை எதிர்த்தனர். பிரதானமாக இந்தப் புதிய ''இடதுசாரி''ச் சந்தர்ப்பவாத மார்க்கத்தின் ராணுவத் தவறுகளை விமர்சிக்கவே தோழர் மாஓ சேதுங் அவர்கள் ''சீனாவின் புரட்சிகர யுத்தத்தில் யுத்ததந்திரப் பிரச்சினைகள்'' என்ற இந்நூலை எழுதினார். இந்த மார்க்கம் 1931, ஜனவரியிலான கட்சியின் ஆறாவது மத்திய கமிட்டியின் நான்காவது பிளீனக் கூட்டத்தில் இருந்து 1935, ஜனவரியில் குவெய்சௌவிலுள்ள சுன்யியில் மத்திய கமிட்டியினால் கூட்டப்பட்டு, இத்தவறான மார்க்கத்தின் ஆதிக்கத்திற்கு முடிவுகட்டித் தோழர் மாஓ சேதுங் அவர்களின் தலைமையிலான புதிய மத்திய தலைமையை நிலைநாட்டிய அரசியல் குழுவின் கூட்டம் வரை கட்சியில் ஆதிக்கம் வகித்தது. இத்தவறான ''இடதுசாரி'' மார்க்கம் குறிப்பாக நீண்டகாலமாக (நான்கு வருடங்களாக) கட்சியில் ஆதிக்கம் வகித்து, கட்சிக்கும் புரட்சிக்கும் விநாசகரமான விளைவுகளை ஏற்படுத்திய மிக மிகப் பெரும் நஷ்டங்களைக் கொணர்ந்தது. சீனக் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் சீனச் செஞ்சேனைக்கும் அதன் தளப்பிரதேசங்களுக்கும் கிட்டத்தட்ட 90 சதவிகித இழப்பு ஏற்படுத்தப்பட்டது, புரட்சிகரத் தளப்பிரதேசங்களில் கோடிக்கணக்கான மக்கள் கோமிந்தாங்கின் குரூர அடக்கு முறைக்கு உட்படுத்தப்பட்டனர்; சீனப் புரட்சியின் முன்னேற்றமும் பெரிதும் தடைப்படுத்தப்பட்டது. இத்தவறிழைத்த தோழர்களில் மிகுந்த பெரும்பான்மையானோர் அனுபவத்திலிருந்து கற்கும் ஒரு நீண்ட இயக்கத்தினூடாகத் தம் தவறுகளை உணர்ந்து திருத்தியும், கட்சிக்கும் மக்களுக்கும் பெருமளவு சிறந்த வேலை செய்தும் உள்ளனர். தோழர் மாஓ சேதுங் அவர்களின் தலைமையின் கீழ் அவர்கள் அப்போது கட்சியிலுள்ள ஏனைய பரந்த தோழர்களுடன் ஒரு பொதுவான அரசியல் விளக்கத்தின் அடிப்படையில் ஐக்கியமுற்றுள்ளனர்.

8. சாங் கோ-தௌ சீனப் புரட்சியின் ஒரு துரோகியாவான். அவன் புரட்சியில் லாபம் பெற எண்ணித் தன் வாலிபத்திலேயே சீனக் கம்யூனிஸ்ட் கட்சியிற் சேர்ந்து கொண்டான். கட்சியில் அவன் பல தவறுகளை இழைத்துப் பாரதூர

மான குற்றங்கள் புரிந்தான். மிகவும் கேடுகெட்டது என்னவென்றால், 1935ல் அவன் செஞ்சேனை வடக்கு நோக்கிச் செல்லுவதை எதிர்த்து, செஞ்சேனை சுச் சுவான்-சீகாங் (இந்த மாகாணம் 1955ல் இல்லாமற் செய்யப்பட்டது. அதன் ஆட்சியிலிருந்த பிரதேசங்கள் சுச்சுவான் மாகாணத்தோடும் திபெத் சுயாட்சிப் பிரதேசத்தோடும் இணைக்கப்பட்டன — மொழிபெயர்ப்பாளர்) எல்லையிலுள்ள சிறுபான்மைத் தேசிய இனப் பிரதேசங்களுக்குப் பின்வாங்க வேண்டுமென்ற தோல்விவாத, இல்லாதொழிப்புவாதக் கொள்கையொன்றை முன்வைத்து, கட்சிக்கும் மத்திய கமிட்டிக்கும் எதிராகத் துரோக நடவடிக்கைகளில் பகிரங்கமாக ஈடுபட்டு, தனது போலி மத்திய கமிட்டியை அமைத்து, கட்சியினதும் செஞ்சேனையினதும் ஒற்றுமையைச் சீர்குலைத்து, செஞ்சேனையின் நான்காவது முன்னணிப்படைக்குப் பெரும் இழப்புகளைக் கொண்டுவந்ததாகும். தோழர் மாஓ சேதுங் அவர்களதும் மத்திய கமிட்டியினதும் பொறுமையான போதனையினால் செஞ்சேனையின் நான்காவது முன்னணிப்படையும் அதன் பரந்துபட்ட ஊழியர்களும் விரைவாகத் திரும்பவும் கட்சி மத்திய கமிட்டியின் சரியான தலைமையின் கீழ் வந்து, தொடர்ந்து நடந்த போராட்டங்களில் ஒரு புகழ் மிக்க பாத்திரம் வகித்தனர். எப்படியாயினும், சாங் கோ-தௌ தான் திருத்தப்பட முடியாதவனென நிரூபித்து, 1938 வசந்த காலத்தில் ஷென்சி-கன்சு-நிங்சியா எல்லைப் பிரதேசத்திலிருந்து தானாகவே தப்பி, கோமிந்தாங்கின் ரகசியப் பொலீஸிற் சேர்ந்தான்.

9. லூஷனிலான ராணுவ அதிகாரி பயிற்சிக் கோர் கம்யூனிஸ்ட் கட்சி-எதிர்ப்பு ராணுவ இயக்குனர்களைப் பயிற்றுவதற்காகச் சியாங் கை-ஷேக்கினால் 1933, ஜூலையில் கியாங்சி மாகாணத்தில் கியூகியாங் மாவட்டத்திலுள்ள லூஷன் மலையில் நிறுவப்பட்ட ஒரு ஸ்தாபனம். சியாங் கை-ஷேக்கின் ஆயுதப்படைகளின் அதிகாரிகள் ஜெர்மன், இத்தாலிய, அமெரிக்க பயிற்சியாசிரியர்களிடமிருந்து பாஸிஸ ராணுவ, அரசியல் பயிற்சி பெற அங்கு மாறி மாறி அனுப்பப்பட்டனர்.

10. இந்தப் புதிய ராணுவக் கோட்பாடுகள் பெருமளவுக்குச் சியாங் கை-ஷேக் கொள்ளைக் கூட்டத்தின் ''கோட்டை முறை'' யுத்தக் கொள்கையைக் குறிக்கின்றன; இதன் பிரகாரம் அது கோட்டைகளை அமைத்து சிறிது சிறிதாக முன்னேறி, ஒவ்வொரு அடியிலும் தன்னை ஸ்திரப்படுத்திக் கொண்டது.

11. லெனின் எழுதிய ''கம்யூனிஸம்'' என்ற கட்டுரையைப் பார்க்கவும். இக்கட்டுரையில் லெனின் ஹங்கேரியக் கம்யூனிஸ்டான பெலா குன்னை விமர்சிக்கையில், ''அவர் மார்க்ஸிஸத்தில் மிக அடிப்படையான விஷயமும் மார்க்ஸிஸத்

தின் ஜீவாத்மாவுமான ஸ்தூலமான நிலைமைகளின் ஸ்தூலமான ஆராய்வைக் கைவிட்டுவிடுகிறூர்'' எனக் கூறினுர்.

12. ஹுனுன்-கியாங்சி எல்லைப் பிரதேசத்தின் முதலாவது கட்சி மாநாடு 1928, மே 20ந் திகதி நிங்காங் மாவட்டத்தில் மாஓபிங்கில் நடத்தப்பட்டது.

13. பின்னணிப் பிரதேசத்தில் பெரிய சேவை நிறுவனங்களை வைத்திருக்கும் கோட்பாடு என்பது அன்றைய போர் கால நிலைமைக்கு இணங்காத பெரிய பல பிரிவுகளைக் கொண்ட பின்னணிப் பிரதேச சேவை நிறுவனங்களை அமைப்பதைக் குறிக்கிறது. பின்னணிப் பிரதேசத்தில் சிறிய சேவை நிறுவனங்களை வைத்திருக்கும் கோட்பாடு என்பது போர் இயக்கத்துக்கு ஏற்றதான சிறந்த சிறிய பின்னணிப் பிரதேச சேவை நிறுவனங்களை அமைப்பதைக் குறிக்கிறது. (மொழி பெயர்ப்பாளர் குறிப்பு)

14. இந்நூலில் ''கட்சியில் நிலவும் தவறுன கருத்துக்களைத் திருத்துவது பற்றி'' என்ற கட்டுரையின் 3ம், 4ம் குறிப்புகளைப் பார்க்கவும்.

15. ''கொள்ளைக்காரப் போக்குகள்'' என்பது கட்டுப்பாடும் ஸ்தாபனமும் தெளிவான அரசியற் திசைமார்க்கமும் இல்லாமையிலிருந்து தோன்றும் கொள்ளையடித்தலையும் சூறையாடலையும் குறிக்கிறது.

16. செஞ்சேனை கியாங்சியிலிருந்து வட ஷென்சிவரையான 25,000 லீ (12,500 கிலோமீட்டர்) தூரம் நடந்த நீண்ட படைநடப்பைக் குறிக்கிறது. 1934ம் ஆண்டு அக்டோபர், சீனத் தொழிலாளர்-விவசாயி செஞ்சேனையின் முதலாவது, மூன்ருவது, ஐந்தாவது படைப்பிரிவுகள் (அதாவது செஞ்சேனையின் முதலாவது முன்னணிப்படை, இது மத்திய செஞ்சேனை என்றும் கூறப்பட்டது) மேற்கு ஃபூகியனின் சாங்திங், நிங்ஹுவா, தென் கியாங்சியின் ஜெய்சின், யூது ஆகிய பிரதேசங்களிலிருந்து யுத்ததந்திரரீதியிற் பெரும் நகர்வைத் தொடங்கின. இவை, ஃபூகியன், கியாங்சி, குவாங்துங், ஹுனுன், குவாங்சி, குவெய்சௌ, சுச்சுவான், யுன்னுன், சீகாங், கன்சு, ஷென்சி ஆகிய பதினெரு மாகாணங்களுக்கூடாக, ஆண்டு முழுவதும் பனியால் மூடப்பட்டிருக்கும் உயர்ந்த மலைகளிலெல்லாம் ஏறி இறங்கி, ஜனசஞ்சாரமற்ற புல்லடர்ந்த சதுப்பு நிலங்களுக்கூடாகச் சென்று, கசப்பான கஷ்டங்கள் எல்லாவற்றையும் கடந்து, எதிரியாற் பல தடவையாக ஏற்படுத்தப்பட்ட சுற்றிவளைப்பையும் துரத்துதலையும் தடையையும் இடைமறித்தலையும் முறியடித்து, தொடர்ச்சியாக 25,000 லீ (12,500 கிலோமீட்டர்) தூரம் நடந்து, ஈற்றில் 1935ம் ஆண்டு அக்டோபர், வட ஷென்சியிலிருந்த புரட்சித் தளப்பிரதேசங்களை வெற்றிகரமாக அடைந்தன.

17. 1905ம் ஆண்டின் டிசம்பர் எழுச்சி தோற்கடிக்கப்பட்ட பின்பான, ரஷ்யாவில் புரட்சிகரப் பெருக்குச் சிறிது சிறிதாகக் குறைந்த காலகட்டம். "சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி (பொல்ஷிவிக்) வரலாற்றின் சுருக்கமான படைப்பு", அத்தியாயம் 3, பகுதிகள் 5ஐயும் 6ஐயும் பார்க்கவும்.

18. பிரெஸ்ட்-லிடொவ்ஸ்க் சமாதான உடன்படிக்கை 1918, மார்ச்சில் சோவியத் ரஷ்யாவுக்கும் ஜெர்மனிக்கும் இடையில் செய்யப்பட்டது. பிரத்தியட்சமாக உயர்வான எதிரிப் படைகளை எதிர்ப்பட்டுப் புரட்சிகர சக்திகள், இன்னும் தன் சொந்தச் சேனையொன்றைக் கொண்டிராத புதிதாக ஜனித்த சோவியத் குடியரசின்மீது தாக்குதலொன்றைத் தொடுப்பதிலிருந்து ஜெர்மன் ஏகாதிபத்தியவாதிகளைத் தடுப்பதற்காக, தற்காலிகமான ஒரு பின்வாங்கலைச் செய்ய வேண்டியிருந்தது. இந்த உடன்படிக்கை செய்யப்பட்டது சோவியத் குடியரசிற்குப் பாட்டாளி வர்க்கத்தின் அரசியல் அதிகாரத்தை ஸ்திரப்படுத்துவதற்கும் தன் பொருளாதாரத்தைப் புனரமைப்பதற்கும் செஞ்சேனையைக் கட்டி வளர்ப்பதற்கும் காலம் பெற்றுத் தந்தது. இது பாட்டாளி வர்க்கம் விவசாயிகளின்மீதான அதன் தலைமையை நிலைப்படுத்திக் கொள்ளவும் 1918-20ம் ஆண்டுகளில் வெள்ளைக் காவலர்களையும் பிரித்தானியா, அமெரிக்கா, பிரான்ஸ், ஜப்பான், போலந்து ஆகியவற்றினதும் பிற நாடுகளினதும் ஆயுதத் தலையீட்டையும் தோற்கடிக்கப் போதிய பலத்தைக் கட்டிவளர்க்கவும் கூடியதாக்கிற்று.

19. 1927, அக்டோபர் 30ம் திகதி குவாங்துங் மாகாணத்தின் ஹாய்ஃபெங்-லூஃபெங் பிரதேசத்தின் விவசாயிகள் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையின் கீழ் தங்கள் மூன்றாவது எழுச்சியை ஆரம்பித்தனர். அவர்கள் ஹாய்ஃபெங்கையும் லூஃபெங்கையும் சுற்றுப் புறங்களையும் கைப்பற்றி, செஞ்சேனையொன்றை உருவாக்கி, தொழிலாளர் விவசாயிகளின் ஜனநாயக அரசியல் அதிகாரத்தையும் ஸ்தாபித்தனர். அவர்கள் எதிரியைக் குறைத்து மதிப்பிடும் தவறைச் செய்ததனால் பின்னர் தோற்கடிக்கப்பட்டனர்.

20. செஞ்சேனையின் நான்காவது முன்னணிப்படையும் இரண்டாவது முன்னணிப்படையும் 1936ம் ஆண்டின் இலையுதிர் காலத்தில் ஒன்று சேர்ந்து, சீகாங்கின் வடகிழக்குப் பகுதியிலிருந்து வடக்கு நோக்கி நகர்ந்தன. சாங் கோ-தௌ அப்போது இன்னும் தனது கட்சி-எதிர்ப்பு நிலையிலும் பின்வாங்கலும் இல்லாதொழிப்புவாதமுமான தன் கொள்கையிலும் விடாப்பிடியாக இருந்து வந்தார். அதே ஆண்டு அக்டோபரில், இரண்டாவது, நான்காவது முன்னணிப்படைகள் கன்சு சென்றடைந்த போது, அவர் 20,000 வீரர்களுக்கு மேற்

பட்ட நான்காவது முன்னணிப்படையின் முன் கூறுகளை, மஞ்சள் நதியைக் கடப்பதற்கும் மேற்குமுகமாகச் சிங்ஹாய்க்கு முன்னேறுவதற்கும் மேற்கு வியூகத்தை ஒழுங்கு செய்யுமாறு உத்தரவிட்டார். இந்த வியூகம் 1936, டிசம்பரில் சண்டைகளில் அடிகள் பட்ட பின்னர் அடிப்படையில் தோற்கடிக்கப் பட்டு, 1937, மார்ச்சில் முற்றாகத் தோற்கடிக்கப்பட்டது.

21. பாரிஸ் கம்யூனைப் பற்றிய, எல். குகெல்மானுக்கான கார்ல் மார்க்ஸின் கடிதத்தைப் பார்க்கவும்.

22. ''ஷுய் ஹு சுவான்'' விவசாயி யுத்தமொன்றை வர்ணிக்கும் பிரபல்ய மிக்க ஒரு சீன நவீனம். இந்நவீனம் யுவான் ராஜவம்ச காலத்தின் இறுதியையும் மிங் ராஜவம்ச காலத்தின் ஆரம்பத்தையும் சுற்றி (14ம் நூற்றுண்டில்) வாழ்ந்தவரான ஷு நை-அன்னுல் எழுதப்பட்டதாகக் கருதப்படுகிறது. லின் சுங், சாய் சின் இருவரும் இந்நவீனத்திற் கதாநாயகர்கள். ஹுங், சாய் சின்னின் வீட்டில் உடற் பயிற்சி ஆசிரியர்.

23. லூவும் சீயும் வசந்த, இலையுதிர் கால சகாப்தத்திலான (கி.மு.722-481) இரு நிலப்பிரபுத்துவ அரசுகள். சீ தற்போதைய ஷன்துங் மாகாணத்தின் நடுப்பகுதியிலிருந்த ஒரு பெரிய அரசும், லூ அதன் தெற்குப் பகுதியிலிருந்த ஒரு சிறிய அரசுமாகும். ராஜா சுவாங் கி.மு. 693ல் இருந்து 662வரை லூவை ஆட்சி செய்தார்.

24. சுவோசியூ மிங், சோ ராஜவம்ச காலத்து வரலாற்று நூலான ''சோ சுவான்''னின் ஆசிரியராவார். மேற்கோள் காட்டப்பட்டுள்ள பகுதிக்கு ''சோ சுவான்''னில் ''ராஜா சுவாங்கின் பத்தாவது வருடம்'' என்ற தலைப்பிட்ட பிரிவைப் பார்க்கவும்.

25. செங்காஓ (தற்போதைய ஹோனுன் மாகாணத்திலுள்ள சிங்யாங் மாவட்டத்தில் அமைந்துள்ளது — மொழிபெயர்ப்பாளர்) பெரும் ராணுவ முக்கியத்துவமுடையதாக இருந்தது. அதுவே ஹன் அரசன் லியூ பாங்கிற்கும் சூ அரசன் சியாங் யூவிற்கும் இடையில் கி.மு. 203ல் நடந்த சண்டைகளின் அரங்காகும். முதலில் சியாங் யூ சிங்யாங்கையும் செங்காஓவையும் கைப் பற்றினன். லியூ பாங்கின் துருப்புக்கள் கிட்டத்தட்டப் புறமுதுகிடச் செய்யப் பட்டன. லியூ பாங் வாய்ப்பான தருணத்துக்காக, சியாங் யூவின் துருப்புக்கள் சுஷுய் நதியைக் கடக்கையில் நட்டாற்றுக்கு வரும் வரை காத்திருந்து, அப்போது அவற்றை நசுக்கிச் செங்காஓவையும் திரும்பப் பிடித்தான்.

26. புராதன பட்டினமான குன்யாங் தற்போதைய ஹோனுன் மாகாணத்தில்

யெஸியென் மாவட்டத்திலிருந்தது. அது கிழக்கு ஹன் ராஜவம்சத்தின் ஸ்தாபகரான லியூ சியூ, கி.பி. 23ல் ஸின் ராஜவம்சத்துச் சக்கரவர்த்தியான வாங் மாங்கின் துருப்புகளைத் தோற்கடித்த இடம். லியூ சியூவின் துருப்புகள் மொத்தம் 8,000 முதல் 9,000 வரையான வீரர்களையும், வாங் மாங்கின் படைகள் 400,000க்கு மேலான வீரர்களையும் கொண்டவையாக, இரு தரப்புகளுக்குமிடையில் எண்ணிக்கையில் பிரமாண்டமான ஏற்றத்தாழ்வு இருந்தது. ஆனால், எதிரியைக் குறைத்து மதிப்பிட்ட வாங் சியுன், வாங் யீ என்ற வாங் மாங்கின் தளபதிகளின் கவனயீனத்தைச் சாதகமாகக் கொண்டு லியூ சியூ, பொறுக்கி எடுத்த 3,000 துருப்பினரை மட்டும் உபயோகித்து வாங் மாங்கின் பிரதான படைகளைப் புறமுதுகிடச் செய்தார். இந்த வெற்றியைத் தொடர்ந்து அவர் எஞ்சிய எதிரிப் படைகளையும் நசுக்கினர்.

27. குவான்டூ ஹோனன் மாகாணத்தில் தற்போதைய சுங்மௌ மாவட்டத்தின் வடகிழக்குப் பகுதியில் இருந்ததும், கி.பி. 200ல் ஷாஓ கெஷளவினதும் யுஅன் ஷாஓவினதும் சேனைகளுக்கிடையிலான சண்டையின் அரங்கமுமாகும். யுஅன் ஷாஓவிடம் 100,000 வீரர்களடங்கிய சேனை இருந்தவிடத்து, ஷாஓ கெஷள அற்பமான ஒரு படையை மட்டுமே உடையவராயும் பண்டங்கள் பற்றுக்குறையுள்ளவராயுமிருந்தார். எதிரியைச் சிறுமைப்படுத்திய யுஅன் ஷாஓவின் துருப்புகளின் பங்கிலான விழிப்பின்மையைச் சாதகமாகக் கொண்டு ஷாஓ கெஷள, விரைவாக வீரர்களை அனுப்பி அவற்றின்மீது திடீர்த் தாக்குதலொன்றைத் தொடுத்து, அவற்றின் பண்டங்களுக்கும் தீயிடுவித்தார். யுஅன் ஷாஓவின் சேனை குழப்பத்தில் ஆழ்த்தப்பட்டு, அதன் பிரதான படை அழித்தொழிக்கப்பட்டது.

28. வூ ராஜ்யம் சுன் சுவானாலும், வெய் ராஜ்யம் ஷாஓ கெஷளவினாலும் ஆளப்பட்டன. சிபி ஹூபெய் மாகாணத்தின் சியாயூ மாவட்டத்திற்கு வடகிழக்கில், யாங்சி நதியின் தெற்குக் கரையில் அமைந்துள்ளது. கி.பி. 208ம் ஆண்டில் ஷாஓ கெஷள சுன் சுவான்மீது தாக்குதல் தொடுக்க 500,000 வீரர்களுக்கு மேற்கொண்ட சேனையொன்றை, அது 800,000 வீரர்களைக் கொண்டதெனப் பிரகடனம் செய்துகொண்டு, நடத்திச் சென்றார். சுன் சுவான் ஷாஓ கெஷளவின் எதிரியான லியூ பெய்யுடன் கூட்டுச் சேர்ந்து 30,000 வீரர்களைக் கொண்ட படையொன்றைத் திரட்டினர். ஷாஓ கெஷளவின் சேனை தொற்று நோய்களால் பீடிக்கப்பட்டிருந்ததையும் அது நீரில் மிதந்தவாறே சண்டையிடுவதில் பரிச்சயமற்றது என்பதையும் அறிந்திருந்த சுன் சுவானினதும் லியூ

பெய்யினதும் கூட்டுப் படைகள் ஷாஓ ஷௌவின் படகுகளுக்குத் தீயிட்டு அவரது சேனையை நசுக்கின.

29. யிலிங் தற்போதைய ஹுபெய் மாகாணத்தில் யீசாங்கிற்குக் கிழக்கில் இருந்தது. அது வூ ராஜ்யத்தின் ஒரு தளபதியான லூ சியுன் கி.பி. 222ம் ஆண்டில் ஷு ராஜ்யத்தை ஆண்ட லியூ பெய்யின் சேனையைத் தோற்கடித்த இடமாகும். லியூ பெய்யின் துருப்புகள் யுத்தத்தின் ஆரம்பத்தில் அடுக்கடுக்காக வெற்றிகளை ஈட்டி, வூ பிரதேசத்திற்குள் ஐந்நூறு அல்லது அறுநூறு லீ தூரம், யிலிங் வரை முன்னேறின. யிலிங்கைப் பாதுகாத்துக்கொண்டிருந்த லூ சியுன் ஏழு மாதங்களுக்கு மேலாக, லியூ பெய் ''செய்வதின்னதெனத் தெரியாமலும் அவனது துருப்புகள் களைத்தும் தைரியமிழந்தும் போகும்'' வரை சண்டையிடுவதைத் தவிர்த்தார். பின்னர் அவர் சாதகமான காற்றொன்றைப் பயன்படுத்தி லியூ பெய்யின் துருப்புகளின் பாசறைகளுக்குத் தீ வைத்து, அவர்களை நசுக்கினர்.

30. கிழக்கு ஜின் ராஜவம்சத்தின் ஒரு தளபதியான சியெ ஸுவான் கி.பி. 383ம் ஆண்டில் சின் ராஜ்யத்தை ஆண்ட ஃபூ சியென்னை அன்ஹுய் மாகாணத்திலுள்ள ஃபெய்ஷுய் நதியடியில் தோற்கடித்தார். ஃபூ சியென்னிடம் 600,000 வீரர்களுக்கு மேற்பட்ட காலாட் படையும் 270,000 வீரர்களைக் கொண்ட குதிரைப் படையும் 30,000 வீரர்களுக்கு மேற்பட்ட காவலர் படையும் இருந்தவிடத்து கிழக்கு ஜின்னின் தரை, நதிப் படைகள் மொத்தமாக 80,000 வீரர்களை மட்டுமே கொண்டிருந்தன. இச்சேனைகள் ஃபெய்ஷுய் நதியின் எதிரெதிர்க்கரைகளில் அணிவகுத்து நின்ற போது சியெ ஸுவான் எதிரித் துருப்புகளின் மிதமிஞ்சிய தன்னம்பிக்கையையும் அகம்பாவத்தையும் சாதகமாகக் கொண்டு, ஃபூ சியென்னை, கிழக்கு ஜின் துருப்புகள் நதியைக் கடந்து கரையிறங்கிச் சண்டையிடுவதற்கு இடம் விடும் முகமாக ஃபெய்ஷுய் நதிக்கு வடக்கில் இருந்த அவனது துருப்புகளைப் பின்னல் நகர்த்தும்படி கேட்டுக் கொண்டார். ஃபூ சியென் இதற்கு இணங்கி, தன் துருப்புகளை வாபஸாக உத்தரவிட்ட போது அவை பயமடைந்து தடுத்து நிறுத்த முடியாதபடி ஓடத் தொடங்கின. இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு கிழக்கு ஜின் துருப்புகள் நதியைக் கடந்து, தாக்குதலொன்றைத் தொடுத்து, எதிரியை நசுக்கின.

31. சியாங் கை-ஷேக்கினதும் வாங் சிங்-வெய்யினதும் எதிர்ப்புரட்சியை எதிர்க்கவும் 1924-27ம் ஆண்டுகளின் புரட்சியைத் தொடரவும் வேண்டிச் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி 1927, ஆகஸ்ட் 1ம் திகதி கியாங்சி மாகாணத்தின் தலைநகரான

நான்சாங்கில் புகழ்பெற்ற எழுச்சிக்குத் தலைமை தாங்கியது. தோழர்கள் சோ என்-லாய், சு தே, ஹோ லுங், யெ திங் ஆகியோரால் தலைமைதாங்கப்பட்ட இவ்வெழுச்சியில் முப்பத்தாயிரத்துக்கு மேற்பட்ட துருப்பினர் பங்குபற்றினர். எழுச்சிச் சேனை திட்டமிட்டபடி ஆகஸ்ட் 5ம் திகதி நான்சாங்கிலிருந்து வாபஸாகியது, ஆனுல் குவாங்துங் மாகாணத்திலுள்ள ஸாஓசௌவையும் ஷன்ட்டோவையும் நெருங்குகையில் ஒரு தோல்வியை உற்றது. தோழர்கள் சு தே, சென் யீ, லின் பியௌ ஆகியோரின் தலைமையில் துருப்புகளின் ஒரு பகுதி பின்னர் வழியிற் சண்டை செய்துகொண்டே சிங்காங் மலைகளுக்குச் சென்று, தோழர் மாஓ சேதுங் அவர்களின் கீழான தொழிலாளர்-விவசாயிப் புரட்சிகரச் சேனையின் முதலாவது சேனையின் முதலாவது டிவிஷனுடன் சேர்ந்து கொண்டது.

32. இந்நூலில் ''சீனுவில் சிவப்பு அரசியல் அதிகாரம் இருக்க முடிவது ஏன்?'' என்ற கட்டுரையின் குறிப்பு 9ஐப் பார்க்கவும்.

33. 1927, செப்டம்பரில் ஹுனன்-கியாங்சி எல்லையிலான சியூஷுய், பிங்சியாங், பிங்கியாங், லியூயாங் மாவட்டங்களின் மக்களின் ஆயுதப்படைகள் தோழர் மாஓ சேதுங் அவர்கள் தலைமையின்கீழ் புகழ்பெற்ற இலையுதிர்கால அறுவடை எழுச்சியொன்றை நடத்தி, தொழிலாளர்-விவசாயிப் புரட்சிகரச் சேனையின் முதலாவது சேனையின் முதலாவது டிவிஷனை உருவாக்கின. தோழர் மாஓ சேதுங் அவர்கள் இப்படையைச் சிங்காங் மலைகளுக்கு நடத்திச் சென்ருர்; அங்கு ஹுனன்-கியாங்சி எல்லைப் புரட்சித் தளப்பிரதேசம் ஸ்தாபிக்கப்பட்டது.

34. ஏ-பி (இவை ''பொல்ஷிவிக்-எதிர்ப்பு'' எனப் பொருள்படும் ஆங்கிலப் பதத்தின் முதலிரு ஆங்கில எழுத்துக்கள்) கோஷ்டி செம்பிரதேசங்களில் மறைவாக இயங்கிய கோமிந்தாங் ஒற்றர்களின் ஒரு எதிர்ப்புரட்சிகர ஸ்தாபனம்.

35. கியாங்சி மாகாணத்தின் மத்திய பகுதியிலுள்ள கான் நதிக்கும் கிழக்கு பகுதியிலுள்ள ஃபு நதிக்கும் இடையிலான பிரதேசத்தைக் குறிக்கிறது.

36. வி. ஐ. லெனின், ''தனியானதும் பிரதேசங்கள் இணைக்கப்படுவதை ஏற்பதுமான ஒரு சமாதான ஒப்பந்தம் உடனடியாக முடிக்கப்படும் பிரச்சினை பற்றிய ஆய்வுரை'', ''விந்தையானதும் விகாரமானதும்'', ''பாரதூரமான ஒரு படிப்பினையும் பாரதூரமான ஒரு பொறுப்பும்'', ''யுத்தத்தையும் சமாதானத்தையும் பற்றிய அறிக்கை'' ஆகிய கட்டுரைகளைப் பார்க்கவும், ''சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி (பொல்ஷிவிக்) வரலாற்றின் சுருக்கமான படைப்பு'', 7ம் அத்தியாயம், 7ம் பிரிவைப் பார்க்கவும்.

37. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள திபெத்திய, ஹுய் இன மக்கள் சீகாங்

மாகாணத்திலுள்ள திபெத்தியர்களும், கன்சு, சிங்ஹாய், ஸின்கியாங் மாகாணங்களிலுள்ள ஹுய் மக்களுமாகும்.

*38.* "எட்டுக் கால் கட்டுரை" நிலப்பிரபுத்துவ சீனுவில் 15ம் நூற்றுண்டு முதல் 19ம் நூற்றுண்டு வரை ராசாங்கப் போட்டிப் பரீட்சைகளுக்கு விதிக்கப்பட்ட விசேஷ கட்டுரை வடிவமாகும். இக்கட்டுரை அமைப்பு முறையில் எட்டுப் பகுதிகளை — அறிமுகம் செய்தல், விரித்துக்கூறல், ஆரம்பவிளக்கம், ஆரம்ப ஆராய்வு, ஆரம்பப் பந்தி, நடுப் பந்தி, பின் பந்தி, முடிவுப் பந்தி ஆகியவற்றைக் கொண்டிருக்கின்றது. இரண்டு வசனங்களைக் கொண்ட அறிமுகம் செய்தல் என்ற பகுதி கட்டுரையின் பொருளை அறிமுகம் செய்கிறது. மூன்று அல்லது நான்கு வசனங்களைக் கொண்ட விரித்துக்கூறல் என்ற பகுதி அறிமுகம் செய்தல் என்ற பகுதியின் பொருளைத் தொடர்ந்து விரித்துக் கூறுகின்றது. ஆரம்பவிளக்கம் என்ற பகுதியில் கட்டுரையின் பிரதான விஷயம் தொகுத்து விளக்க ஆரம்பிக்கப்படுகின்றது. ஆரம்ப ஆராய்வு என்ற பகுதி விளக்கத்தை ஆரம்பித்து வைக்கிறது. ஆரம்பப் பந்தி, நடுப் பந்தி, பின் பந்தி, முடிவுப் பந்தி என்ற நான்கு பகுதிகளுந்தான் கட்டுரையின் விளக்கப் பகுதிகளாக விளங்குகின்றன; நடுப் பந்தி முழுக் கட்டுரையினதும் பிரதான பகுதியாகும். இந்த நான்கு பகுதிகளிலொவ்வொன்றும் இரண்டு கால்களை அதாவது இரு நேர்மாறுன பந்திகளைக் கொண்டிருக்கின்றன; இதனுற்தான் "எட்டுக் கால் கட்டுரை" என்ற பெயர் ஏற்பட்டது. இங்கு தோழர் மாஓ சேதுங் அவர்கள் இந்த விதமான கட்டுரையில் பொருள் விருத்தி செய்யப்படும் முறையைப் புரட்சி அதன் பல்வேறு கட்டங்களுக்கும் ஊடாக விருத்தியுறுவதற்கு உதாரணமாக உபயோகிக்கின்றுர். இருப்பினும் தோழர் மாஓ சேதுங் அவர்கள் பொதுவாக "எட்டுக் கால் கட்டுரை" என்ற பதத்தை வரட்டுத் தத்துவவாதத்தைக் கிண்டல் செய்யவே உபயோகிப்பது வழக்கம்.

*39. 1933*, நவம்பரில், சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஜப்பானிய-எதிர்ப்புக் கொள்கையின் செல்வாக்கின் கீழும் பரந்த அதிகாரிகள் போராளிகளது தூண்டுதலின் கீழும், கோமிந்தாங்கின் 19வது மார்க்கச் சேனையின் தலைவர்களான சியாங் குவாங்-நை, சாய் திங்-கை முதலியவர் செஞ்சேனையுடன் போரிடுவதில் வெற்றி பெற வழியில்லை என உணர்ந்து, லீ சி-ஷென்னின் கீழான கோமிந்தாங் படைகளுடன் கூட்டுச் சேர்ந்து, சியாங் கை-ஷேக்கைப் பகிரங்கமாக நிராகரித்து, ஃபூகியனில் "சீனக் குடியரசின் மக்களின் புரட்சிகர அரசாங்க"த்தை ஸ்தாபித்து, சியாங் கை-ஷேக்கைத் தாக்கவும் ஜப்பானை எதிர்க்கவும் செஞ்

சேனையுடன் ஓர் ஒப்பந்தத்தைச் செய்தனர். இச்சம்பவம் ஃபூகியன் சம்பவம் என அழைக்கப்பட்டது. பின்னர், 19வது மார்க்கச் சேனையும் ஃபூகியன் மக்கள் அரசாங்கமும் சியாங் கை-ஷேக்கின் துருப்புகளின் தாக்குதல்களின் கீழ் வீழ்ச்சியடைந்தன.

40. ட்ரேகன் ராஜா சீனுவின் கர்ண பரம்பரைக் கதையிலுள்ள ஒரு கதாநாயகன். அவன் கடல்களை ஆட்சி செய்தவனும் எண்ணற்ற ஐசுவரியங்களை உடையவனும் இருந்தான்.

# ஜப்பானிய-எதிர்ப்புக் கொரில்லா யுத்தத்தில் யுத்ததந்திரப் பிரச்சினைகள்*

(1938, மே)

## அத்தியாயம் I

### கொரில்லா யுத்தத்திலான யுத்ததந்திரம் என்ற பிரச்சினையை ஏன் எழுப்ப வேண்டும்?

ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தத்தில் கிரமமான யுத்தம் பிரதானமானது, கொரில்லா யுத்தம் இரண்டாம் பட்சமானது. இந்த விஷயம் ஏற்கனவே சரியாகத் தீர்க்கப்பட்டுவிட்டது. எனவே, கொரில்லா யுத்தத்தில் தந்திரோபாய ரீதியான பிரச்சினைகள் மட்டுமே உள்ளன எனத் தோன்றுகிறது. அப்படியானால் யுத்ததந்திரமென்ற பிரச்சினையை ஏன் எழுப்ப வேண்டும்?

*ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தத்தின் ஆரம்ப நாட்களில், கட்சிக்கு உள்ளேயும் வெளியேயும் பலர் கொரில்லா யுத்தத்தின் முக்கியமான யுத்ததந்திர ரீதியான பங்கைச் சிறிதுபடுத்தி, தமது நம்பிக்கைகளைத் தனியக் கிரமமான யுத்தத்திலும், குறிப்பாகக் கோமிந்தாங் படைகளின் நடவடிக்கைகளிலும் வைத்தனர். தோழர் மாஓ சேதுங் அவர்கள் இக்கருத்தை மறுத்துரைத்து, ஜப்பானிய-எதிர்ப்புக் கொரில்லா யுத்தத்திற்கான சரியான அபிவிருத்திப் பாதையைக் காண்பிக்க இக்

கொரில்லா யுத்தத்தின் பங்கு சிறு தூரங்களில் கிரமமான சேனையின் போர் நடவடிக்கைகளுக்கு நேரடியான ஆதரவு தருவது மட்டுமாக உள்ள சிறிய ஒரு நாடாகச் சீனு இருந்தால், இயல்பாகவே, தந்திரோபாய ரீதியான பிரச்சினைகள் மட்டுமே இருக்கும், யுத்ததந்திர ரீதியான பிரச்சினைகள் எதுவும் இரா. மறு புறத்தில் சீனு சோவியத் யூனியனளவு பலமுள்ள ஒரு நாடாக இருந்து, படையெடுத்துவரும் எதிரி விரைவாக விரட்டப்பட முடியுமானுல், அல்லது, அவனை விரட்ட ஒப்புநோக்காகக் கூடுதலான காலம் பிடிக்குமாயினும் அவனுல் விசாலமான பிரதேசங்களைக் கைப்பற்ற முடியாவிட்டால், அப்போதும் கொரில்லா யுத்தம் வெறுமனே போர் நடவடிக்கைகளில் ஆதரவளிக்கும் ஒரு பங்கை வகிக்கும், இயற்கையாகவே யுத்ததந்திரப் பிரச்சினைகள் இல்லாமல் தந்திரோபாயப் பிரச்சினைகளை மட்டுமே உள்ளடக்கும்.

இருப்பினும், சீனு சிறியதுமல்லாமல் சோவியத் யூனியனைப் போன்றதுமல்லாமல், பெரியதும் அத்துடன் பலவீனமானதுமான ஒரு நாடாக உள்ளது. இவ்வாருன நிலைமையில், கொரில்லா யுத்தத்திலான யுத்ததந்திரமென்ற பிரச்சினை எழவே செய்கிறது. இந்தப் பெரியதும் பலவீனமானதுமான நாடு சிறியதும் பலமானதுமான ஒரு நாட்டால் தாக்கப்படுகிறது, ஆனுல் இப்பெரியதும் பலவீனமானதுமான நாடு ஒரு

---

கட்டுரையை எழுதினுர். இதன் பயனுக, ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தக் காலத்தில் 40,000 வீரர்களுக்குச் சற்றே அதிகம் கொண்டிருந்தவையான எட்டாவது மார்க்க ராணுவமும் புதிய நான்காவது சேனையும் 1945ல் ஜப்பான் சரணடைந்த சமயமளவில் பத்து லட்சம் வீரர்களைக் கொண்ட ஒரு மாபெரும் சேனையாக வளர்ச்சியுற்று, புரட்சிகரத் தளப்பிரதேசங்கள் பலவற்றை நிறுவி, ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தத்தில் ஒரு பெரும் பங்கை வகித்து, அவ்வாருக இக்காலகட்டம்

முன்னேற்ற சகாப்தத்தில் உள்ளது; இதுவே பிரச்சினை முழுமைக்கும் தோற்றுவாய். இந்தச் சூழ்நிலைகளில் தான் பிரமாண்டமான பகுதிகள் எதிரிக் கைப்பற்றலுக்குட்பட்டுள்ளன, யுத்தமும் நீண்ட ஒன்ருக ஆகியுள்ளது. எதிரி எம்முடைய இந்தப் பெரிய நாட்டில் விசாலமான பகுதிகளைக் கைப்பற்றி வைத்திருக்கிருன்; ஆனுல் அவனுடைய நாடு சிறியதொன்று, அதனிடம் போதிய படைவீரர்கள் இல்லை, எனவே அது கைப்பற்றப்பட்ட பகுதிகளில் பெரிய இடைவெளிகளை விட வேண்டியதாக உள்ளது; ஆகவே எமது ஜப்பானிய-எதிர்ப்புக் கொரில்லா யுத்தம் பிரதானமாகக் கிரமமான துருப்புக்களின் போர்நடவடிக்கைகளுக்கு ஆதரவான உட்புற முனை நடவடிக்கைகளால் அல்லாமல், வெளிப்புற முனைகளிலான சுதந்திரமான நடவடிக்கைகளாலேயே ஆனது. மேலும், சீனு முற்போக்கானது, அதாவது, அது கம்யூனிஸ்ட் கட்சியினுல் தலைமைதாங்கப்படுகின்ற திடமுள்ள ஒரு சேனையையும் பரந்த வெகுஜனங்களையும் கொண்டுள்ளது; ஆகவே, ஜப்பானிய-எதிர்ப்புக் கொரில்லா யுத்தம் சிறிய ரீதியிலானதாக இருப்பதற்கு நேர் மாருக உண்மையில் பெரிய ரீதியிலான ஒரு யுத்தமே. எனவேதான் யுத்ததந்திர ரீதியான தற்காப்பு, யுத்ததந்திர ரீதியான தாக்குதல் முதலானவை போன்ற ஒரு முழுத் தொடரான பிரச்சினைகள் எழுகின்றன. யுத்தத்தின்

---

பூராவிலும் சியாங் கை-ஷேக்கை ஜப்பானுக்குப் பணிந்து போகவோ அல்லது தேச விசால உள்நாட்டு யுத்தமொன்றைத் தொடுக்கவோ அஞ்சும்படி செய்தன. 1946ல், சியாங் கை-ஷேக் தேச விசால உள்நாட்டு யுத்தமொன்றைத் தொடுக்கவே செய்த போது, எட்டாவது மார்க்க, புதிய நான்காவது சேனைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மக்கள் விடுதலைச் சேனை அவனது தாக்குதல்களைக் கையாளப் போதிய பலமுடையதாக இருந்தது.

நீண்ட தன்மையும் அதனுடன் கூடவே வருவதான அதன் ஈவிரக்கமற்ற இயல்பும், கொரில்லா யுத்தம் அசாதாரணமான பணிகள் பலவற்றை மேற்கொள்வதை இன்றியமையாததாக் கியுள்ளன; எனவே தான் தளப்பிரதேசங்களின் பிரச்சினைகள், கொரில்லா யுத்தம் நடமாட்ட யுத்தமாக அபிவிருத்தியடை யும் பிரச்சினைகள் முதலானவை போன்ற பிரச்சினைகள் எழுகின் றன. இக்காரணங்கள் எல்லாவற்ருலும், சீனுவின் ஜப்பானிய-எதிர்ப்புக் கொரில்லா யுத்தம் தந்திரோபாயங்களின் எல்லே களை மீறி யுத்ததந்திரத்தின் வாயிலேத் தட்டுகிறது, யுத்ததந் திரத்தின் கண்ணேட்டத்திலிருந்து கொரில்லா யுத்தத்தின் பிரச் சினை பரிசீலிக்கப்படுவதையும் தேவையாக்குகிறது. எமது குறிப்பான கவனத்திற்கு உரிய விஷயம் இத்தகைய விரிவா னதும் நீண்டதுமான கொரில்லா யுத்தம், மனிதகுலத்திலான யுத்தத்தின் வரலாறு முழுவதிலுமே முற்றும் புதிதான ஒன்று என்பதாகும். இது நாம் இப்பொழுது 20வது நூற்ருண்டின் 30ம், 40ம் ஆண்டுகளில் உள்ளோம், எம்மிடம் இப்பொழுது கம்யூனிஸ்ட் கட்சியும் செஞ்சேனையும் உள்ளன என்ற உண் மையோடு பிணைந்துள்ளது. இங்குதான் விஷயத்தின் குவி மையம் உள்ளது. எமது எதிரி அனேகமாக இன்னும் ஸொங் ராஜவம்சத்தை யுவான் ராஜவம்சம் வென்றடக்கியதையும், மிங் ராஜவம்சத்தை சிங் ராஜவம்சம் வென்றடக்கியதையும், வட அமெரிக்காவையும் இந்தியாவையும் பிரித்தானியா வென்ற டக்கியதையும், மத்திய, தென் அமெரிக்காவை லத்தீன் நாடு கள் வென்றடக்கியதையும் இத்தியாதியின்வற்றையும் தானும் பின்பற்றிச் செய்யும் ஆசைக் கனவுகளைக் கண்டு கொண்டி ருக்கக்கூடும். இன்றைய சீனுவில் அத்தகைய கனவுகள் நடை முறைச் சாத்தியப்பாடற்றவை; ஏனென்ருல் இன்றைய சீனு

வில் அந்த வரலாற்று உதாரணங்களில் இல்லாதிருந்த சிற்சில அம்சங்கள் உள்ளன. அவற்றில் ஒன்று, முற்றும் புதிய ஒரு காரியமான கொரில்லா யுத்தமாகும். எமது எதிரி இந்த அம்சத்தைப் புறக்கணித்தாளுல் அவன் நிச்சயமாகப் பெரிதும் விசனப்படுவான்.

எமது ஜப்பானிய-எதிர்ப்புக் கொரில்லா யுத்தம் ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தம் முழுமையிலும் இரண்டாம் பட்சமான ஒரு இடத்தை மட்டுமே வகிக்கின்ற போதிலும் கூட அது யுத்த தந்திரத்தின் கண்ஞேட்டத்திலிருந்து பரிசீலிக்கப்பட வேண்டியமைக்குக் காரணங்கள் இவையே.

அப்படியாயின், கொரில்லா யுத்தத்திற்கு ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தத்தின் பொதுவான யுத்ததந்திரக் கோட்பாடுகளை ஏன் பிரயோகிக்கக் கூடாது?

ஜப்பானிய-எதிர்ப்புக் கொரில்லா யுத்தத்தின் யுத்ததந்திரம் என்ற பிரச்சினை, முழுமையான ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தத்தின் யுத்ததந்திரம் என்ற பிரச்சினையுடனும் உண்மையில் நெருக்கமாகப் பிணைந்துள்ளது. காரணம், இவ்விரண்டிலும் பல அம்சங்கள் பொதுவானவையாக உள்ளன. மறு புறத்தில், கொரில்லா யுத்தம் கிரமமான யுத்தத்திலிருந்து வேறுபட்டதும் தன் சொந்தத் தனித் தன்மைகளைக் கொண்டதுமாகும்; இதன் விளைவாகக் கொரில்லா யுத்தத்திலான யுத்ததந்திரப் பிரச்சினையில் பல அலாதியான அம்சங்கள் அடங்குகின்றன. பொதுவில் ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தத்தின் பொது யுத்ததந்திரக் கோட்பாடுகளை மாற்றமின்றித் தன் சொந்தத் தனித் தன்மைகளைக் கொண்டதான கொரில்லா யுத்தத்திற்குப் பிரயோகிப்பது அசாத்தியம்.

## அத்தியாயம் II

### யுத்தத்தின் அடிப்படைக் கோட்பாடு
### தன்னைப் பேணிக் கொண்டு எதிரியை அழித்தல்

கொரில்லா யுத்தத்திலான யுத்ததந்திரத்தின் பிரச்சினையைத் திட்டவட்டமான பதங்களில் விவாதிப்பதற்கு முன்பாக, யுத்தத்தின் அடிப்படைப் பிரச்சினை பற்றிச் சில வார்த்தைகள் கூறுவது அவசியம்.

ராணுவ நடவடிக்கைகளை வழிநடத்தும் எல்லாக் கோட்பாடுகளும், ''தனது சொந்தப் பலத்தைப் பாதுகாக்கவும், எதிரியின் பலத்தை அழிக்கவும் இயன்ற அளவு பாடுபடுவது'' என்ற ஒரு அடிப்படைக் கோட்பாட்டிலிருந்து வளர்கின்றன. ஒரு புரட்சிகர யுத்தத்தில் இந்தக் கோட்பாடு அடிப்படையான அரசியற் கோட்பாடுகளுடன் நேரடியாகப் பிணைந்துள்ளது. உதாரணமாக, சீனுவின் ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தத்தின் அடிப்படை அரசியற் கோட்பாடு, அதாவது, அதன் அரசியற் குறிக்கோள், ஜப்பானிய ஏகாதிபத்தியத்தை விரட்டியடித்துச் சுதந்திரமான, விடுதலையான, மகிழ்ச்சிகரமான புதிய சீனுவைக் கட்டியெழுப்புவது ஆகும். ராணுவ நடவடிக்கை ரீதியில் இந்தக் கோட்பாட்டின் பொருள் எமது தாய்நாட்டைப் பாதுகாக்கவும் ஜப்பானியப் படையெடுப்பாளர்களை விரட்டியடிக்கவும் ஆயுத பலத்தை உபயோகிப்பது என்பதாகும். இந்தக் குறிக்கோளை அடைவதற்கு, ஆயுதந்தரித்த கூறுகளின் நடவடிக்கைகள் ஒரு புறம் தம் சொந்தப் பலத்தைப் பேணுவதற்கும் மறுபுறம் எதிரியின் பலத்தை அழிப்பதற்கும் தம்

மாலியன்றதையெல்லாம் செய்வதான வடிவத்தை எடுக்கின்றன. அப்படியென்ருல், யுத்தத்தில் வீரத்தியாகத்துக்கு ஊக்கமளிப்பதை எப்படி நியாயப்படுத்த முடியும்? ஒவ்வொரு யுத்தமும் ஒவ்வொரு விலையை, சில வேளைகளில் மிக உயர்ந்த விலையைப் பெறுகின்றது. இது ''சுய-பாதுகாப்பு''க்கு முரண்பட்டதில்லையா? உண்மையில் இங்கு முரண்பாடே இல்லை. மேலும் சரியாகச் சொன்னால், தியாகமும் சுய-பாதுகாப்பும் ஒன்றுக்கு ஒன்று எதிரானவையாகவும், ஒன்றை ஒன்று நிறைவு செய்பவையாகவும் விளங்குகின்றன. காரணம், எதிரியை அழிப்பதற்கு மாத்திரமல்ல, தன்னைப் பாதுகாப்பதற்குக் கூட இத்தகைய தியாகம் இன்றியமையாதது; அரை-குறை அல்லது தற்காலிக ''பாதுகாப்பு-இன்மை'' (தியாகம் அல்லது விலை கொடுத்தல்) என்பது பொதுவான, நிரந்தரப் பாதுகாப்புக்குத் தேவையான ஒன்று. இந்த அடிப்படைக் கோட்பாட்டிலிருந்து, ராணுவ நடவடிக்கைகள் அனைத்தையும் வழிநடத்தும் வரிசை வரிசையான பல கோட்பாடுகள் உதிக்கின்றன; அதாவது, சுடும் கோட்பாடு முதல் (தன்னைப் பாதுகாப்பதற்கு ஒதுக்கிடம் தேடுவதும், சூட்டு ஆற்றலைப் பூரணமாகப் பயன்படுத்தி, எதிரியை அழிப்பதும்) யுத்ததந்திரக் கோட்பாடுகள் வரை எல்லாவற்றிலும் இந்த அடிப்படைக் கோட்பாட்டின் உணர்வு வியாபித்திருக்கின்றது. நுட்பவியல் கோட்பாடுகள் எல்லாம், தந்திரோபாயங்கள், போரியக்கங்கள், யுத்ததந்திரம் சம்பந்தமான கோட்பாடுகள் எல்லாம், இந்த அடிப்படைக் கோட்பாட்டின் பிரயோகமாக விளங்குகின்றன. தன்னைப் பாதுகாப்பது, எதிரியை அழிப்பது இரண்டும் ராணுவக் கோட்பாடுகள் அனைத்தினதும் அடிப்படையாகும்.

# அத்தியாயம் III

## ஜப்பானிய-எதிர்ப்புக் கொரில்லா யுத்தத்திலான ஆறு குறிப்பான யுத்ததந்திரப் பிரச்சினைகள்

இனி நாம் எம்மைப் பேணிக்கொண்டு எதிரியை அழிப்பதான குறிக்கோளை அடைய முடிவதற்கு முதலில் ஜப்பானிய-எதிர்ப்புக் கொரில்லா யுத்த நடவடிக்கைகளில் என்ன கொள்கைகள் அல்லது கோட்பாடுகள் கைக்கொள்ளப்பட வேண்டும் என்பதைப் பார்ப்போம். ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தத்திலான (மற்றெல்லாப் புரட்சிகர யுத்தங்களிலுமான) கொரில்லாக் கூறுகள் பொதுவாக ஒன்றுமில்லாததிலிருந்து தோன்றி, சிறிய படையாக இருந்து பெரிய படையாக வளர்கின்றனவாகையால் அவை தம்மைப் பேணிக் கொள்ளவும், அத்துடன், விரிவடையவும் வேண்டும். எனவே பிரச்சினை, எம்மைப் பேணிக்கொள்வதும் விரிவுபடுத்திக்கொள்வதும் எதிரியை அழிப்பதுமான குறிக்கோளை நாம் அடைய முடிவதற்கு முதலில் என்ன கொள்கைகள் அல்லது கோட்பாடுகள் கைக்கொள்ளப்பட வேண்டும் என்பதாகும்.

பொதுவாகக் கூறினால், பிரதான கொள்கைகள் பின்வருமாறு: (1) தற்காப்பிற்குள் தாக்குதல்களும், நீண்டகால யுத்தத்திற்குள் விரைவில் வெற்றி தோல்வி காணும் சண்டைகளும், உட்புற முனை நடவடிக்கைகளுக்குள் வெளிப்புற முனை நடவடிக்கைகளும் நடத்துவதில் முன்முயற்சி, வளைந்துகொடுக்கும் தன்மை, திட்டமிடல் ஆகியவற்றை உபயோகிப்பது; (2) கிரமமான யுத்தத்துக்கு இசைவாக்குவது; (3) தளப்பி

ரதேசங்களை நிறுவுவது; (4) யுத்ததந்திர ரீதியான தற்காப்பும் யுத்ததந்திர ரீதியான தாக்குதலும்; (5) கொரில்லா யுத்தம் நடமாட்ட யுத்தமாக அபிவிருத்தியடைதல்; (6) படைத் தலைமையின் சரியான உறவு. இந்த ஆறு விஷயங்களும் ஜப்பானிய-எதிர்ப்புக் கொரில்லா யுத்தத்திற்கான யுத்ததந் திரச் செயற் திட்டம் முழுமையையும் ஆக்குபவையும், தம்மைப் பேணுவதற்கும் விரிவுபடுத்துவதற்கும், எதிரியை அழிப் பதற்கும் விரட்டியடிப்பதற்கும், கிரமமான யுத்தத்துடன் இணைப்படுத்துவதற்கும், இறுதி வெற்றியை ஈட்டுவதற்கும் அவ சியமான வழிவகைகளுமாகும்.

## அத்தியாயம் IV

### தற்காப்பிற்குள் தாக்குதல்களும், நீண்டகால யுத்தத்திற்குள் விரைவில் வெற்றி தோல்வி காணும் சண்டைகளும், உட்புற முனை நடவடிக்கைகளுக்குள் வெளிப்புற முனை நடவடிக்கைகளும் நடத்துவதில் முன்னோட்டமும் வளைந்துகொடுக்கும் தன்மையும் திட்டமிடுதலும்

இங்கு விஷயம் பின்வரும் நான்கு தலைப்புகளின் கீழ் கையாளப்படலாம்: (1.) தற்காப்புக்கும் தாக்குதலுக்குமிடையிலும், நீண்ட தன்மைக்கும் விரைவில் வெற்றி தோல்வி காண்பதற்கும் இடையிலும், உட்புற முனைகளுக்கும் வெளிப்புற முனை

களுக்கும் இடையிலுமான உறவுகள்; (2) எல்லா நடவடிக் கைகளிலுமான முன்னோட்டம்; (3) படைகளை வளைந்துகொ டுக்கும் முறையில் உபயோகப்படுத்துதல்; (4) எல்லா நடவ டிக்கைகளிலும் திட்டமிடுதல்.

முதலாவதில் ஆரம்பிப்போம்.

ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தத்தை முழுமையாக எடுத்துக் கொண்டோமானால், பலமான நாடான படையெடுக்கும் ஜப் பான் தாக்குகையில் பலவீனமான நாடான சீனா தற்காக் கிறது என்றமை எமது யுத்தத்தை யுத்ததந்திர ரீதியில் தற் காப்பானதும் நீண்டதுமான ஒரு யுத்தமாக்குகிறது. நடவ டிக்கை முனைகள் சம்பந்தப்பட்ட வரையில், எதிரிகள் வெளிப் புற முனைகளில் இயங்குகின்றனர், நாம் உட்புற முனைகளில் இயங்குகிறோம். இது நிலைமையின் ஒரு அம்சம். ஆனால் சரி யாக இதற்கு நேர் மாறான மற்றொரு அம்சமும் உள்ளது. எதிரிப் படைகள் பலமானவை (ஆயுதங்களிலும், அவற்றின் வீரர்களின் சிற்சில தகைமைகளிலும், மற்றும் சிற்சில அம் சங்களிலும்) என்ற போதிலும் அவை எண்ணிக்கையில் சிறி யவையாயிருக்குமிடத்து, எமது படைகளோ பலவீனமானவை (அதே போல் ஆயுதங்களிலும், எமது வீரர்களின் சிற்சில தகைமைகளிலும், மற்றும் சிற்சில அம்சங்களிலும் மட்டும்) என்ற போதிலும் எண்ணிக்கையில் மிகப் பெரியவையாக உள் ளன. இது, எதிரி எமது நாட்டிற் படையெடுத்துள்ள ஒரு மாற்றுத் தேசமாயிருக்க நாமோ அவனது படையெடுப்பை எம் சொந்த மண்ணில் எதிர்க்கிறோம் என்ற உண்மையோடு சேர்ந்து, பின்வரும் யுத்ததந்திரத்தை நிர்ணயிக்கிறது: யுத் ததந்திர ரீதியான தற்காப்பிற்குள் போர் நடவடிக்கைகளி லும் சண்டைகளிலுமான தாக்குதல்களை உபயோகிப்பதும்,

யுத்ததந்திர ரீதியில் நீண்டகால யுத்தத்திற்குள் விரைவில் வெற்றி தோல்வி காணும் போர்நடவடிக்கைகளையும் சண்டைகளையும் நடத்துவதும், யுத்ததந்திர ரீதியான உட்புற முனைகளுக்குள் வெளிப்புற முனைகளிலான போர்நடவடிக்கைகளையும் சண்டைகளையும் நடத்துவதும் சாத்தியமானவையும் அவசியமானவையுமாகும். முழுமையான ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தத்திற் கைக்கொள்ளப்பட வேண்டிய யுத்ததந்திரம் இத்தகையது. இது கிரமமான யுத்தம், கொரில்லா யுத்தம் இரண்டிற்குமே பொருந்துவது. கொரில்லா யுத்தம் அளவிலும் வடிவிலும் மட்டுமே வேறுபட்டது. கொரில்லா யுத்தத்தில் தாக்குதல்கள் பொதுவாக எதிர்பாராத் தாக்குதல்களின் வடிவத்தை எடுக்கின்றன. கிரமமான யுத்தத்திலும் எதிர்பாராத் தாக்குதல்கள் உபயோகிக்கப்பட முடியும், உபயோகிக்கப்படவும் வேண்டும் என்ற போதிலும், அவற்றில் எதிர்பாராத் தன்மையின் அளவு குறைவானதே. கொரில்லா யுத்தத்தில், நடவடிக்கைகளை விரைவில் வெற்றி தோல்விக்குக் கொணர வேண்டிய தேவை மிகப் பெரியதும், போர்நடவடிக்கைகளிலும் சண்டைகளிலும் எதிரியைச் சுற்றிவளைக்கும் எமது வெளிப்புற முனை வளையம் மிகச் சிறியதும் ஆகும். இவையனைத்தும் அதைக் கிரமமான யுத்தத்திலிருந்து வேறுபடுத்துகின்றன.

இவ்வாறாக, கொரில்லாக் கூறுகள் தங்கள் நடவடிக்கைகளில் மிகக் கூடிய பட்சப் படைகளை ஒன்றுகுவிக்கவும், இரகசியமாகவும் துரிதமாகவும் செயல்படவும், எதிரியை எதிர்பாராத விதமாகத் தாக்கவும், சண்டைகளை விரைவில் வெற்றி தோல்விக்குக் கொணரவும் வேண்டும் என்பதும், செயற்படாத் தற்காப்பையும், இழுத்தடித்துச் செயல்படுவதையும், கைகலப்புகளுக்கு முன் படைகளைச் சிதறலாகப் பரவுவதை

யும் கட்டாயமாகத் தவிர்க்க வேண்டும் என்பதும் புலப்ப டுகின்றன. கொரில்லா யுத்தம் யுத்ததந்திர ரீதியான தற் காப்பை மட்டுமன்றித் தந்திரோபாய ரீதியான தற்காப்பை யும் உள்ளடக்குகின்றதுதான். சண்டைகளின் போதான எதி ரிப் படைகளை எல்லைகளுக்குட்படுத்தி வைத்திருக்கும் நடவ டிக்கைகளும் புறக்காவல் நடவடிக்கைகளும்; எதிரியைத் தொ கையிற் குறைக்கவும் களைப்புறச் செய்யவும் வேண்டி ஒடுங்கிய கணவாய்களில், கேந்திர ஸ்தானங்களில், நதிகளில், அல்லது கிராமங்களில் எதிர்த்துப் போரிடப் படைகளை அனுப்புதல்; வாபஸாவதற்கு மறைப்புத் தருவதற்கான நடவடிக்கைகள் ஆகியவையும் கொரில்லா யுத்தத்தில் தந்திரோபாய ரீதியான தற்காப்புகளாகும். ஆனுல் கொர்ரில்லா யுத்தத்தின் அடிப் படைக் கோட்பாடு தாக்குதலாகவே இருக்க வேண்டும்; கொரில்லா யுத்தம் தன்மையில் கிரமமான யுத்தத்தைவிட அதிகம் தாக்குதல் ரீதியானது. மேலும், தாக்குதலானது எதிர்பாராத் தாக்குதல்களின் வடிவத்தை எடுக்கவும் வேண் டும்; எமது படைகளைப் பகட்டாக வெளிக்காட்டிக் கொள்வது கிரமமான யுத்தத்தைக் காட்டிலும் கொரில்லா யுத்தத்தில் இன்னும் அனுமதிக்க முடியாதது. உதவியிலிருந்து துண்டிக் கப்பட்ட சிறியதும் தனிமைப்பட்டதுமான எதிரிப் படையொன் றின் மீதான ஒரு தாக்குதலிற் போல் சில சந்தர்ப்பங்களில் கொரில்லாச் சண்டை பல நாட்களுக்கு நீடித்து நடத்தப் படக் கூடுமாயினும், பொதுவாகக் கிரமமான யுத்தத்திற் பார்க் கிலும் கூட அதிகமாகக் கொரில்லா யுத்தத்தில் சண்டைகள் விரைவில் வெற்றி தோல்விக்குக் கொண்டுவரப்பட வேண்டும் என்பது எதிரி பலமானவனும் நாம் பலவீனமானவர்களும் என்ற நிலைமையால் நிர்ணயிக்கப்படுவதாகும். கொரில்லா

யுத்தம், அதன் சிதறலாகப் பரவிய இயல்பின் காரணமாக, எல்லா இடங்களுக்கும் பரவ முடியும்; எதிரியைத் தொந் தரவு செய்வது, வரையறைகளுக்குள் வைத்திருப்பது, சீர் குலைப்பது ஆகியவற்றிலும் வெகுஜன வேலையிலும் போன்று அதன் பணிகளில் பலவற்றில் கொரில்லா யுத்தத்தின் கோட் பாடே படைகளைச் சிதறலாகப் பரவுதல் ஆகும்; ஆனால் கொரில் லாக் கூறொன்று, அல்லது கொரில்லா வியூகமொன்று எதிரியை அழிப்பதில் ஈடுபட்டுள்ள போது, விசேஷமாக எதிரித் தாக் குதலொன்றைத் தகர்க்க முயன்றுகொண்டிருக்கும் போது, அது தன் பிரதான படைகளை ஒன்றுகுவிக்க வேண்டும். "எதிரிப் படையின் சிறு பிரிவொன்றைச் சாடுவதற்குப் பெரிய படை யொன்றை ஒன்றுகுவிப்பது" கொரில்லா யுத்தத்தில் கள நட வடிக்கைகளின் ஒரு கோட்பாடாகவே இருக்கிறது.

இவ்வாறாக, நாம் ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தத்தை முழு மையாக எடுத்துக் கொண்டோமானால், கிரமமான யுத்தம், கொரில்லா யுத்தம் இரண்டிலுமான பல தாக்குதல் போர் நடவடிக்கைகளினதும் சண்டைகளினதும் கூட்டு மொத்தமான விளைவின் மூலமாக, அதாவது, தாக்குதல் நடவடிக்கைகளி லான பல வெற்றிகளின் கூட்டு மொத்தமான விளைவின் மூல மாக மட்டுமே நாம் எமது யுத்ததந்திர ரீதியான தற்காப்பின் குறிக்கோளை அடையவும் ஜப்பானிய ஏகாதிபத்தியத்தை இறு தியாகத் தோற்கடிக்கவும் முடியும் என்பதும் புலப்படுகிறது. விரைவில் வெற்றி தோல்வி காணும் போர்நடவடிக்கைகள், சண்டைகள் பலவற்றின் கூட்டு மொத்தமான விளைவின், அதா வது, தாக்குதல் போர்நடவடிக்கைகளிலும் சண்டைகளிலும் விரைவில் வெற்றி தோல்வியை முடிவாக்குவதன் மூலம் ஈட் டப்படும் பல வெற்றிகளின் கூட்டு மொத்தமான விளைவின்

மூலமாக மட்டுமே, யுத்ததந்திர ரீதியான நீண்ட தன்மை யாகிய எமது குறிக்கோளை நாம் அடைய முடியும்; இதன் பொருள், யுத்ததந்திர ரீதியான எதிர்த் தாக்குதலொன்றைத் தொடுத்து ஜப்பானியப் படையெடுப்பாளர்களைச் சீனுவிலிருந்து விரட்டியடிக்கக் கூடியதாயிருக்க வேண்டி, எதிர்த்துப் போரிடும் எமது வலிமையை அதிகரிக்கக் காலம் பெறுவதோடு சர்வதேச நிலைமையில் மாறுதல்களையும் எதிரி உள்ளூரத் தகர்வதையும் துரிதப்படுத்தி எதிர்பார்த்துக் காத்திருப்பதாகும். எதிரிப் படைகளைச் சுற்றிவளைக்கவும் அழிக்கவும், அவை எல்லாவற்றையுமில்லாவிடிலும் அவற்றில் ஒரு பகுதியையாவது சுற்றிவளைக்கவும், நாம் சுற்றிவளைத்த படைகள் எல்லாவற்றையுமில்லாவிடிலும் அவற்றில் ஒரு பகுதியையாவது அழிக்கவும், சுற்றிவளைக்கப்பட்ட படைகளை எம்மால் பெருந் தொகையில் கைப்பற்ற முடியாவிட்டால் அவற்றுக்குப் பெரும் உயிர்ச் சேதங்களை ஏற்படுத்தவும் வேண்டி, நாம் ஒவ்வொரு சண்டையிலும் உயர்வான படைகளைக் குவிக்கவும் யுத்ததந்திர ரீதியான தற்காப்புக் கட்டத்திலாயினும் சரி யுத்ததந்திர ரீதியான எதிர்த்தாக்குதற் கட்டத்திலாயினும் சரி, ஒவ்வொரு போர்நடவடிக்கையிலும் சண்டையிலும் வெளிப்புற முனை நடவடிக்கைகள் நடத்தவும் வேண்டும். இத்தகைய அழித்தொழிக்கும் சண்டைகள் பலவற்றின் கூட்டு மொத்தமான விளைவின் மூலமாக மட்டுமே நாம் எதிரிக்கும் எமக்குமிடையிலான ஒப்புநோக்கான ஸ்தானத்தை மாற்றவும், எதிரியின் யுத்த தந்திர ரீதியான சுற்றிவளைப்பை — அதாவது அவனது வெளிப்புற முனை நடவடிக்கைத் திட்டத்தை — முற்றுகத் தகர்க்கவும், இறுதியாக, சர்வதேச சக்திகளோடும் ஜப்பானிய மக்களின் புரட்சிகரப் போராட்டங்களோடும் இணைவாக ஜப்பானிய ஏகா

திபத்தியவாதிகளைச் சுற்றிவளைத்து அவர்களுக்கு இறுதி மரண அடி கொடுக்கவும் முடியும். கொரில்லா யுத்தம் இரண்டாம் பட்சமான ஒரு பங்கை ஆற்ற, பிரதானமாகக் கிரமமான யுத்தத்தின் மூலம் இந்த விளைவுகள் அடையப்பட உள்ளன. இருப்பினும் இரண்டிற்கும் பொதுவானது என்னவெனில் ஒரு பெரும் வெற்றியை ஆக்குவதற்குப் பல சிறு வெற்றிகள் ஒன்று சேர்க்கப்படுவதாகும். இதுதான் ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தத்தில் கொரில்லா யுத்தத்தின் பெரும் யுத்ததந்திர ரீதியான பங்கு.

இனி நாம் கொரில்லா யுத்தத்திலான முன்னோட்டம், வளைந்து கொடுக்கும் தன்மை, திட்டமிடுதல் ஆகியவற்றை விவாதிப்போம்.

கொரில்லா யுத்தத்தில் முன்னோட்டம் என்பது என்ன?

எந்த யுத்தத்திலும் எதிராளிகள், ஒரு போர்க் களத்திலாயினும், ஒரு போர்ப் பிரதேசத்திலாயினும், ஒரு யுத்தப் பிராந்தியத்திலாயினும், அன்றி முழு யுத்தத்திலுமாயினும், முன்னோட்டத்திற்காக வலு போட்டியிடுகின்றனர், இத்தகைய முன்னோட்டம் ஒரு சேனை செயல்படுவதற்கான சுதந்திரம் தான். முன்னோட்டத்தை இழந்து, செயலற்ற ஒரு நிலைக்குத் தள்ளப்பட்டு, செயல்படச் சுதந்திரம் அற்றதாகும் எந்தச் சேனையும் தோற்கடிக்க அல்லது அழித்தொழிக்கப்படும் அபாயத்தை எதிர்நோக்குகிறது. இயற்கையாகவே, முன்னோட்டத்தைப் பெறுவது யுத்ததந்திர ரீதியான தற்காப்பு நடவடிக்கைகளிலும் உட்புற முனை நடவடிக்கைகளிலும் ஒப்புநோக்காக கடினமானதும், தாக்குதல் வெளிப்புற முனை நடவடிக்கைகளில் ஒப்புநோக்காக இலகுவானதுமாகும். இருப்பினும் ஜப்பானிய ஏகாதிபத்தியம் அடிப்படையான இரு பலவீனங்களை, அதாவது,

அதன் துருப்புக்கள் பற்ருக்குறையையும் அது அந்நிய மண்ணிற் சண்டையிடுகிறது என்றமையையும் உடையது. மேலும், அது சீனுவின் பலத்தைக் குறைத்து மதிப்பிடுவதாலும் ஜப்பானிய யுத்தப்பிரபுகள் மத்தியிலான உள் முரண்பாடுகளாலும் படைத் தலைமையில், சிறுகச் சிறுகப் பலப்படுத்துதல், யுத்ததந்திர ரீதியான ஒன்றிணைப்பு இன்மை, சிற்சில சமயங்களில் தாக்குதலுக்கு ஒரு பிரதான திசை இல்லாதிருப்பது, சில நடவடிக்கைகளில் சந்தர்ப்பங்களைப் பற்றிக்கொள்ளத் தவறுவது, சுற்றிவளைக்கப்பட்ட படைகளை அழித்தொழிக்கத் தவறுவது ஆகியன போன்ற பல தவறுகளைத் தோற்றுவித்துள்ளன. இவை எல்லாம் அதனது மூன்ருவது பலவீனமெனக் கருதப்படக் கூடியவை. இவ்வாருக, தாக்குதலில் ஈடுபட்டிருப்பதினதும் வெளிப்புற முனைகளில் செயல்படுவதினதும் சாதகம் இருந்தும் கூட ஜப்பானிய யுத்தப்பிரபுகள் அவர்களின் துருப்புக்கள் பற்ருக்குறை (அவர்களின் சிறிய பிரதேசம், சிறிய ஜனத்தொகை, போதாத வளங்கள், நிலப்பிரபுத்துவத் தன்மையான ஏகாதிபத்தியம், இத்தியாதியின) காரணமாகவும், அவர்கள் அந்நிய மண்ணிற் சண்டையிடுகின்றனர் (அவர்களின் யுத்தம் ஏகாதிபத்திய, மிலேச்சத்தனமானது) என்றமை காரணமாகவும், படைத் தலைமையில் அவர்களின் அசட்டுத்தனங்கள் காரணமாகவும், சிறிது சிறிதாக முன்ஞேட்டத்தை இழந்து வருகின்றனர். ஜப்பான் தற்போது யுத்தத்துக்கு முடிவுகட்ட மனமுள்ளதாயும் இல்லை வல்லதாயும் இல்லை, அன்றி அதன் யுத்ததந்திர ரீதியான தாக்குதல் இன்னும் முடிவுக்கு வந்துவிடவும் இல்லை, ஆனல், பொதுவான போக்கு காண்பிப்பது போல், அதன் மூன்று பலவீனங்களினதும் தவிர்க்க முடியாத விளைவாக அதன் தாக்குதல் சிற்சில வரையறைகளுக்குள்

அடங்கியுள்ளது; அதனுல் சீன முழுவதையும் தான் கபளீ கரம் செய்யும் வரை முடிவின்றித் தொடர்ந்து யுத்தம் செய்ய இயலாது. ஒரு நாள் ஜப்பான் தான் அறவே செயலற்ற ஒரு நிலையிலிருக்கக் காணும் என்பதற்கு ஏற்கனவே அறிகுறி கள் உள்ளன. மறு புறத்திற் சீன யுத்தத்தின் ஆரம்பத்தில் ஓரளவு அதிகமாகச் செயலற்ற ஒரு நிலையிலேயே இருந்தது, ஆனுல், அனுபவம் பெற்றுக்கொண்டு, இப்போது நடமாட்ட யுத்தமாகிய புதிய கொள்கைக்கு, அதாவது போர்நடவடிக் கைகளிலும் சண்டைகளிலும் தாக்குதலில் இறங்குவதும் விரை வில் வெற்றி தோல்வியை முடிவாக்க முயல்வதும் வெளிப்புற முனைகளில் செயல்படுவதுமான கொள்கைக்குத் திரும்புகிறது; இது, பரவலான கொரில்லா யுத்தத்தை விருத்தி செய்யும் கொள்கையோடு சேர்ந்து, நாளுக்கு நாள் ஒரு முன்னேற்ட ஸ்தானத்தைக் கட்டியெழுப்பிக் கொள்ளச் சீனுவுக்கு உதவுகி றது.

கொரில்லா யுத்தத்திலுள்ள முன்னேட்டத்தின் பிரச்சினை இன்னும் அதிகமாக ஜீவாதாரமானது. ஏனெனில் அனே கமான கொரில்லாக் கூறுகள், பின்புறமொன்று இன்றிச் சண் டையிடுவதும், தம் சொந்தப் பலவீனமான படைகள் எதிரி யின் பலமான படைகளை எதிர்நோக்கியிருப்பதும், (கூறுகள் புதிதாக அணிதிரட்டப்பட்டவையாக உள்ள போது) அனுப வமற்றிருப்பதும், ஒருமைப்பாடற்ற நிலைமையிலிருப்பதும், இத் தியாதியினவுமாக, மிகக் கஷ்டமான சூழ்நிலைகளில் இயங்குகின் றன. இருப்பினும், கொரில்லா யுத்தத்தில் முன்னேட்டத்தைக் கட்டியெழுப்பிக் கொள்வது சாத்தியம்; இதற்குப் பிரதான மான நிலைமை எதிரியின் மூன்று பலவீனங்களையும் பயன்ப டுத்திக் கொள்வதாகும். எதிரியின் துருப்புக்கள் பற்ருக்குறை

யை (யுத்தம் முழுமையினதும் கண்ணேட்டத்திலிருந்து பார்க் கையில்) சாதகமாக்கிக்கொண்டு கொரில்லாக் கூறுகள் துணி கரமாகத் தங்கள் நடவடிக்கைகளுக்குப் பரந்த பிரதேசங்களை வென்றெடுக்க முடியும்; எதிரி ஒரு விதேசப் படையெடுப் பாளன், அவன் மிக மிலேச்சத்தனமான ஒரு கொள்கையைப் பின்பற்றுகிறுன் என்றமையைச் சாதகமாக்கிக் கொண்டு, கொரில்லாக் கூறுகள் துணிகரமாகக் கோடானுகோடி மக் களின் ஆதரவைத் திரட்டிக்கொள்ளலாம்; எதிரியின் படைத் தலைமையின் அசட்டுத்தனங்களைச் சாதகமாக்கிக் கொண்டு, கொரில்லாக் கூறுகள் தங்கள் சாதுரியத்தைப் பூரணமாகச் செயல்படுத்தலாம். கிரமமான சேனையும் எதிரியின் இந்தப் பலவீனங்கள் எல்லாவற்றையும் பற்றிக்கொள்ளவும் அவனைத் தோற்கடிக்க வேண்டி அவற்றை நன்கு பயன்படுத்திக் கொள் ளவும் வேண்டுமாக இருக்கையில், அவ்வாறு செய்வது கொரில் லாக் கூறுகளுக்கு அதையும் விட அதிக முக்கியமானதாகும். கொரில்லாக் கூறுகளின் சொந்தப் பலவீனங்களைப் பொறுத்த வரையில், அவை போராட்டத்தின் ஊடே சிறிது சிறிதாகக் குறைக்கப்பட முடியும். மேலும், இந்தப் பலவீனங்களே சில சமயங்களில் முன்னேட்டத்தைப் பெறுவதற்கான நிலை மையாயும் அமைகின்றன. உதாரணமாக, கொரில்லாக் கூறு கள் சிறியவையாக இருப்பதனுல்தான் அவை எதிரியின் முனை களுக்குப் பின்புறத்திலான தம் நடவடிக்கைகளில், எதிரி எது வும் செய்ய இயலாதிருக்கும் விதத்தில், மாயமாகத் தோன் றவும் மறையவும் முடிகிறது. பிரமாண்டமான கிரமமான சேனைகள் இவ்வாருன சுதந்திரத்தை ஒருபோதும் அனுபவிக்க முடியாது.

எதிரி பல திசைகளிலிருந்து குவிந்த ஒரு தாக்குதலைச் செய்

யும் பொழுது ஒரு கொரில்லாக் கூறு கஷ்டத்துடன்தான் முன்னேட்டத்தைப் பிரயோகிக்க இயலும், அதை மிக இலகு வில் இழந்துவிடவும் கூடும். இத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில் அதன் கணிப்பீடுகளும் பணிகளை வகுத்தலும் தவறென்றுல் அது செயலற்ற ஒரு ஸ்தானத்தில் இடப்படவும் அதன் விளை வாகக் குவிந்த எதிரித் தாக்குதலைத் தகர்க்கத் தவறவும் கூடும். இது எதிரி தற்காப்பிலும் நாம் தாக்குதலிலும் ஈடுபட்டுள்ள போது கூட நடைபெறலாம். அதனுல் முன்னேட்டம் நிலை மையின் (எம்முடையதினதும் எதிரியினதும்) சரியான கணிப் பீடொன்றைச் செய்வதிலிருந்தும் ராணுவ, அரசியல் பணி களைச் சரியாக வகுத்தலிலிருந்துமே கிடைக்கின்றது. புறநிலை யான நிலைமைகளுடன் இணங்காத நன்னம்பிக்கையீனமான ஒரு கணிப்பீடும், அதனின்றும் பிறக்கும் செயலற்ற தன்மை யான பணிகள் வகுத்தலும் ஐயமின்றி முன்னேட்டம் இழக் கப்படுவதில் முடிந்து, ஒருவரைச் செயலற்ற ஒரு நிலைக்குத் தள்ளிவிடும். மறுபுறத்தில், புறநிலையான நிலைமைகளுடன் இணங்காத மிதமிஞ்சிய நன்னம்பிக்கையான ஒரு கணிப்பீடும் அதினின்றும் பிறக்கும் அபாயத்தில் (அனுவசியமான அபாயத் தில்) இறங்கும் தன்மையான பணிகள் வகுத்தலும் கூட முன் னேட்டம் இழக்கப்படுவதிற் தான் போய் முடிந்து, இறுதியில் ஒருவரை நன்னம்பிக்கையீனர்களின் நிலையைப் போன்ற நிலைக்கே இட்டுச் செல்லும். முன்னேட்டம் மேதாவிலாசத்தின் ஓர் உள்ளியல்பு அல்ல, மாருக புத்திசாலியான ஒரு தலைவர் புறநிலையான நிலைமைகளைத் திறந்த மனதுடன் ஆராய்வதி னதும் சரியாகக் கணிப்பிடுவதினதும் மூலமும், ராணுவ, அர சியற் பணிகளைச் சரியாக வகுப்பதன் மூலமும் அடையும் ஒன்றே. ஆகவே, முன்னேட்டம் ஏற்கனவே தயாராக உள்ள

மாற்றிக் கொள்வது அவசியம். சிதறலாகப் பரவுதல், ஒன்று குவித்தல், ஸ்தானத்தை மாற்றுதல் ஆகியனவே கொரில்லா யுத்தத்தில் படைகளை வளைந்துகொடுக்கக் கூடியதாக உபயோகிக்கும் மூன்று முறைகளாகும்.

பொதுவாகக் கூறுவதானால், கொரில்லாக் கூறுகளைச் சிதறலாகப் பரவுதல், அதாவது ''முழுமையைப் பகுதிகளாகப் பிரித்தல்'', பிரதானமாகப் பின்கண்ட சில நிலைகளில் செய்யப் படுகின்றது: (1) எதிரி தற்காப்பில் ஈடுபட்டிருப்பதாலும் எமக்கு எமது படைகளை நடவடிக்கைக்கு ஒன்று திரட்டத் தற்காலிகமாக வாய்ப்பில்லாததாலும் நாம் எதிரியை விசாலமான நேர்முகத் தாக்குதல் செய்யப் போவதாக அச்சுறுத்த விரும்பும் போது; (2) எதிரியின் படைகள் பலவீனமாக உள்ள பகுதி பூராவிலும் நாம் எதிரியைத் தொந்தரவு செய்யவும் சீர்குலைக்கவும் விரும்பும்போது; (3) எம்மால் எதிரியின் சுற்றிவளைப்பை உடைக்க இயலாதிருக்கையில் நாம் எம்மை அவ்வளவு தோற்றுதபடி செய்துகொள்வதன் மூலம் எதிரியை விட்டு வெளியேறிவிட முயலும் போது; (4) தரையமைப்பால் அல்லது பண்டங்கள் கிடைப்பதிலான கஷ்டங்களால் நாம் செயல்படுவதில் வரையறைகளுக்குட்பட்டிருக்கும் போது; அல்லது (5) நாம் பரந்த ஒரு பகுதியில் வெகுஜன இயக்கம் நடத்தும் போது. ஆனால், சூழ்நிலைகள் எதுவாயினும், நடவடிக்கைக்காகச் சிதறலாகப் பரவும் போது நாம் பின்வருவனவற்றில் கவனம் செலுத்த வேண்டும்: (1) நாம் ஒருபோதும் படைகளை முற்றாகச் சமமாகப் பிரித்துப் பரவிவிடக் கூடாது, சாத்தியமான எந்தத் திடீர் நிலைமையும் சமாளிக்கப்படவும் பரவிச் செய்யப்படும் பணிக்கு ஒரு ஈர்ப்பு மையம் இருக்கவும் கூடியதாகக் கணிசமான பெரிய பிரிவொன்றைச் செயல்பட வசதியான

ஒரு பகுதியில் வைத்துக்கொள்ள வேண்டும்; (2) நாம் சிதற லாகப் பரவப்பட்ட கூறுகளுக்குத் தெளிவாக வரைவிலக்கணப் படுத்திய பணிகளேயும் நடவடிக்கைக் களங்களேயும் நடவடிக் கைகளுக்கான கால எல்லேகளேயும் திரும்ப ஒன்று கூடுவதற்கான இடங்களேயும் தொடர்பு வைத்துக் கொள்வதற்கான வழி வகைகளேயும் விதிக்க வேண்டும்.

படைகளேக் குவிப்பது, அல்லது ''பகுதிகளே ஒன்று சேர்த்து முழுதாக்குவது'', வழமையாக எதிரி தாக்குதலில் ஈடுபட்டி ருக்கையில் அவனே அழிப்பதற்கும் சில சமயங்களில் அவன் தற்காப்பில் ஈடுபட்டிருக்கும் போது நிலேயாக இருக்கும் அவனது படைகளிற் சிலவற்றை அழிப்பதற்கும் பிரயோகிக்கப்படும் முறையாகும். படைகளேக் குவிப்பதென்பதன் அர்த்தம் அறவே எல்லாவற்றையும் ஒன்றுகுவிப்பதென்பதல்ல, மாறுக, பிரதான படைகளே ஒரு முக்கிய திசையில் உபயோகிப்பதற்காக ஒன்று திரட்டுகையில், படைகளில் ஒரு பகுதியை எதிரியை கட்டுப் படுத்தி வைத்திருக்கவோ தொந்தரவு செய்யவோ சீர்குலேக் கவோ, அல்லது வெகுஜன இயக்கம் நடத்தவோ வேறு திசை களில் உபயோகிக்கப்பட வைத்துக்கொள்வது அல்லது அனுப் புவது என்பதேயாகும்.

சூழ்நிலேகளுக்கு இணங்கப் படைகளே வளேந்துகொடுக்கும் விதத்தில் பரவுதல் அல்லது குவித்தல்தான் கொரில்லா யுத் தத்திலான பிரதான முறை என்ற போதிலும் எமது படை களே எவ்வாறு வளேந்துகொடுக்கும் விதத்தில் நகர்த்துவது (அல்லது இடம் மாற்றுவது) என்பதையும் நாம் அறிந்திருக்க வேண்டும். எதிரி தான் கொரில்லாக் கூறுகளால் பாரதூரமாக அச்சுறுத்தப்படுவதாக உணரும் போது அவன் அவற்றை அடக்க அல்லது தாக்கத் துருப்புக்களே அனுப்புவான், எனவே கொரில்

லாக் கூறுகள் நிலைமையைக் கணிப்பீடு செய்ய வேண்டியதாக இருக்கும். தாம் உள்ள இடத்திலேயே சண்டையிடுவது புத்தியென்றால் அவை அவ்வாறு செய்ய வேண்டும், புத்தியல்லவென்றால் அவை கால தாமதம் செய்யாது வேறோரிடத்திற்கு விரைவாக நகர்ந்துவிட வேண்டும். சில சமயங்களில், எதிரிக் கூறுகளை ஒவ்வொன்றாக நசுக்க வேண்டி, ஓரிடத்தில் எதிரிப் படையொன்றை அழித்துவிட்ட கொரில்லாக் கூறுகள் இரண்டாவதொரு எதிரிப் படையை அழித்தொழிப்பதற்காக உடனே மற்றோரிடத்திற்கு நகரக் கூடும்; சில சமயங்களில், ஒரு இடத்தில் சண்டை செய்வது புத்தியல்லவெனக் கண்டு, அவை விரைவில் கைகலப்பிலிருந்து விலகி வேறோரிடத்தில் எதிரியுடன் சண்டையிட வேண்டியிருக்கலாம். குறிப்பிட்ட ஓரிடத்திலுள்ள எதிரியின் படைகள் குறிப்பாகப் பாரதூரமான அபாயமாக உள்ளனவென்றால் கொரில்லாக் கூறுகள் அங்கேயே அதிக காலம் தங்கியிருக்கக் கூடாது, மாறாக மின்னல் வேகத்தில் நகர்ந்து சென்றுவிட வேண்டும். பொதுவாக, ஸ்தானத்தை நகர்த்துவது இரகசியமாகவும் விரைவாகவும் செய்யப்பட வேண்டும். எதிரியைப் பிழையான எண்ணம் கொள்ளச் செய்யவும் பிழையான திசையில் இழுத்துவிடவும் குழப்பமுறச் செய்யவும் வேண்டி அவை கிழக்கில் பாசாங்கு காட்டிவிட்டு மேற்கில் தாக்குவதும், ஒருகால் தெற்கிலும் மறுகால் வடக்கிலும் தென்படுவதும், சாடிவிட்டு ஓடிவிடும் தாக்குதல்கள், இரவு நடவடிக்கைகள் ஆகியன போன்ற தந்திரங்களை இடையறாது உபயோகிக்க வேண்டும்.

பரவுவதிலும் குவிவதிலும் ஸ்தானத்தை நகர்த்துவதிலும் வளைந்துகொடுக்கும் தன்மை கொரில்லா யுத்தத்தில் முன்னேட்டத்தின் திட்டவட்டமான ஒரு வெளிப்பாடாகையில், இறு

கிய தன்மையும் செயல்படுவதிற் சிரமமும் தவிர்க்க முடியாத படி செயலற்ற தன்மைக்கு இட்டுச் சென்று அனுவசியமான இழப்புகளை விளைவிக்கின்றன. ஆனால் தளகர்த்தரொருவர் தன்னை அறிவாற்றலுடையவராக நிரூபித்துக் கொள்வது வெறு மனே தனது படைகளை வளைந்துகொடுக்கும் விதத்தில் உப யோகிப்பதன் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்வதால் மட்டு மல்ல, மாறாகக் குறிப்பான சூழ்நிலைகளுக்கு இணங்கக் காலத் தோடு அவற்றைப் பரவுவதில், குவிப்பதில் அல்லது நகர்த்து வதில் திறமை காண்பிப்பதாலாகும். மாற்றங்களை உணர்ந்து கொண்டு செயல்படச் சரியான தருணத்தைத் தெரிந்தெடுப் பதிலான இந்த அறிவாற்றல் இலகுவில் அடையப்படுவதல்ல; இது கிரகிக்கும் மனதுடன் கற்பவர்களும் சிரத்தையுடன் ஆராய் பவர்களும் சிந்தித்துப் பார்ப்பவர்களுமானோரால் மட்டுமே ஈட் டப்படுகிறது. சூழ்நிலைகளைக் கவனத்துடன் சந்தித்துப் பார்ப் பது, வளைந்துகொடுக்கும் தன்மை கணச்சித்தத்தில் செயலாற் றுதலாக மாறி விடாதபடி தடுப்பதற்கு அத்தியாவசியம்.

கடைசியாக, நாம் திட்டமிடுதலுக்கு வருகிறோம்.

திட்டமிடுதலின்றிக் கொரில்லா யுத்தத்தில் வெற்றிகள் அசாத்தியம். கொரில்லா யுத்தம் கண்ட கண்டபடி நடத்தப் பட முடியும் என்ற எண்ணமெதுவும் ஒன்றில் ஒரு பொறுப் பற்ற கண்ணோட்டத்தை அல்லது கொரில்லா யுத்தம் பற்றி அறியாமையைக் காண்பிக்கிறது. ஒரு கொரில்லாப் பிராந் தியம் முழுமையிலுமான, அல்லது ஒரு கொரில்லாக் கூறின் அல்லது வியூகத்தின் நடவடிக்கைகளுக்கு முன்பாகச் சாத்திய மானளவு பரிபூரணமான திட்டமிடல், ஒவ்வொரு நடவடிக் கைக்கும் முன்கூட்டியே தயாரிப்பு இருக்க வேண்டும். நிலை மையைத் தேர்ந்து கொள்வது, பணிகளை வகுப்பது, படைக

ளேச் செலுத்துவது, ராணுவ, அரசியற் பயிற்சியளிப்பது, பண்டங்கள் பெறுவது, சாதனங்களை நல்ல நிலேயில் இடுவது, மக்களின் உதவியைத் தகுந்தபடி உபயோகித்துக் கொள்வது, இத்தியாதியின—இவையாவும் கொரில்லாத் தளகர்த்தர்களின் வேலேயின் ஒரு பகுதி; இதை அவர்கள் கவனமாகச் சிந்தித்துப் பார்க்கவும் மனம் வைத்துச் செய்யவும் சரிபார்த்துக் கொள்ளவும் வேண்டும். அவர்கள் அவ்வாறு செய்தாலல்லாமல் முன்ஞேட்டமோ, வளேந்துகொடுக்கும் தன்மையோ, தாக்குதலோ இருக்க முடியாது. இயல்பாகவே, கிரமமான யுத்தத்தில் உயர்ந்த அளவிற்குத் திட்டமிடமுடியும். கொரில்லா யுத்தத்தின் சூழ்நிலேகள் உயர்ந்த அளவிற்குத் திட்டமிடுவதை அனுமதிப்பதில்லே, கொரில்லா யுத்தத்தில் மிகப் பரிபூரணமாகத் திட்டமிட முயல்வதும் தவருகும்; ஆனல் புறநிலேயான சூழ்நிலேகள் எவ்வளவு அனுமதிக்கின்றனவோ அவ்வளவு பரிபூரணமாகத் திட்டமிடுவது அவசியம், ஏனெனில் எதிரியுடன் போர் செய்வது ஒரு வேடிக்கையல்ல என்பது விளங்கிக்கொள்ளப்பட வேண்டும்.

மேற் கூறியவை கொரில்லா யுத்தத்தின் யுத்ததந்திர ரீதியான கோட்பாடுகளில் முதலாவது கோட்பாட்டை, தற்காப்பிற்குள் தாக்குதல்களேயும் நீண்டகால யுத்தத்திற்குள் விரைவில் வெற்றி தோல்வி காணும் சண்டைகளேயும் உட்புற முனே நடவடிக்கைகளுக்குள் வெளிப்புற முனே நடவடிக்கைகளேயும் நடத்துவதில் முன்ஞேட்டம், வளேந்து கொடுக்கும் தன்மை, திட்டமிடுதல் ஆகியவற்றை உபயோகிப்பதான கோட்பாட்டை விளக்குகின்றன. இதுவே கொரில்லா யுத்தத்தின் யுத்ததந்திரத்தில் கேந்திரமான பிரச்சினே. இப்பிரச்சினேயின் தீர்வு, ராணுவத் தலேமையளித்தல் சம்பந்தப்பட்ட வரையில், கொரில்

லா யுத்தத்தில் வெற்றிக்கான பிரதான உத்தரவாதத்தைத் தருகிறது.

இங்கு பல்வகைப்பட்ட விஷயங்கள் எடுத்தாளப்பட்டுள்ள னவெனினும் அவை யாவும் போர்நடவடிக்கைகளிலும் சண் டைகளிலுமான தாக்குதலைச் சுற்றிச் சுழல்பவையே. ஒரு தாக்குதலில் வெற்றிக்குப் பின்னர் மட்டுமே முன்னேட்டம் தீர்க்கமாகப் பற்றிக் கொள்ளப்பட முடியும். ஒவ்வொரு தாக்குதல் நடவடிக்கையும் எமது சொந்த முன்னேட்டத்தில் ஒழுங்கு செய்யப்பட வேண்டும், நிர்ப்பந்தத்தின் கீழ் தொடுக் கப்படக் கூடாது. படைகளை உபயோகிப்பதில் வளைந்துகொ டுக்கும் தன்மை தாக்குதலில் இறங்குவது என்ற மையத்தைச் சுற்றிச் சுழல்கிறது, அது போலவே திட்டமிடுதலும் பிரதான மாகத் தாக்குதல் நடவடிக்கைகளில் வெற்றியை உறுதிப்படுத் தவே அவசியமானது. தந்திரோபாய ரீதியான தற்காப்பு வழிவகைகள், ஒரு தாக்குதலுக்கு ஒன்றில் நேரடியான அல்லது மறைமுகமான ஆதரவு தருவதான அவற்றின் பங்கிலிருந்து பிரிக்கப்பட்டிருந்தால் அவை அர்த்தமற்றவை. விரைவில் வெற்றி தோல்வி காண்பது என்பது ஒரு தாக்குதலின் கால நீடிப்பைக் குறிப்பிடுகிறது, வெளிப்புற முனைகள் என்பது தாக் குதலின் விசாலத்தைக் குறிக்கிறது. தாக்குதலே எதிரியை அழிக்கும் ஒரே வழிவகையாகவும், தற்பேணுதலின் பிரதான வழிவகையாகவும் இருக்கையில், சுத்த தற்காப்பும் பின்வாங் கலும் தற்பேணுதலில் தற்காலிகமானதும் பகுதிவாரியான துமான ஒரு பங்கை மட்டுமே வகிக்க வல்லவையும் எதிரியை அழிப்பதில் முற்றும் உபயோகமற்றவையுமாகும்.

மேலே கூறப்பட்ட கோட்பாடு அடிப்படையில் கிரமமான யுத்தம், கொரில்லா யுத்தம் இரண்டிற்கும் ஒன்றே; அது ஓர

ளவுக்கு வேறுபடுவது அது வெளிப்படுத்தப்படும் வடிவில் மட்டுமே. ஆனால் கொரில்லா யுத்தத்தில் இந்த வேற்றுமையைக் கவனிப்பது முக்கியமானதும் அவசியமானதுமாகும். சரியாக வடிவிலான இந்த வித்தியாசமே கொரில்லா யுத்தத்தின் நடவடிக்கை முறைகளைக் கிரமமான யுத்தத்தின் நடவடிக்கை முறைகளிலிருந்து வேறுபடுத்துகிறது. நாம் இக்கோட்பாடு வெளிப்படுத்தப்படும் வெவ்வேறான வடிவங்கள் இரண்டையும் ஒன்ருகக் குழப்பினேமானல், கொரில்லா யுத்தத்தில் வெற்றி அசாத்தியமாயிருக்கும்.

## அத்தியாயம் V

### கிரமமான யுத்தத்துக்கு இசைவாக நடத்தல்

கொரில்லா யுத்தத்தில் யுத்ததந்திரத்தின் இரண்டாவது பிரச்சினை அது கிரமமான யுத்தத்துக்கு இசைவாக நடத்தலாகும். அது உருப்படியான கொரில்லா நடவடிக்கைகளின் இயல்பின் ஒளியில், நடவடிக்கை மட்டத்தில் கொரில்லா யுத்தத்திற்கும் கிரமமான யுத்தத்திற்கும் இடையிலான உறவைத் தெளிவுபடுத்தும் விஷயமாகும். பயனுள்ள முறையில் எதிரியைத் தோற்கடிப்பதற்கு இந்த உறவு பற்றிய ஒரு விளக்கம் மிக முக்கியமானது.

கொரில்லா யுத்தத்திற்கும் கிரமமான யுத்தத்திற்குமிடையில் மூன்று வகையான இசைவாக நடத்தல்கள்—யுத்ததந்திரத்தில் இசைவாக நடத்தல், போரியக்கங்களில் இசைவாக

நடத்தல், சண்டைகளில் இசைவாக நடத்தல் ஆகியன உள்ளன.

கொரில்லா யுத்தம் முழுமையாக எடுக்கப்படும் போது, எதிரியின் முனைகளுக்குப் பின்புறம் எதிரியை முடமாக்கி, அவனை நகரவிடாது தடுத்து வைத்து, அவனது பண்ட வினியோக மார்க்கங்களைச் சீர்குலைத்து, நாடு பூராவிலுமுள்ள கிரமமான படைகளுக்கும் மக்களுக்கும் ஊக்கம் தருவது, கிரமமான யுத்தத்துடன் யுத்ததந்திரத்தில் இணைப்படுத்தப்பட்டதாகும். வடகிழக்கு மாகாணங்கள் மூன்றிலுமான கொரில்லா யுத்தத்தின் விஷயத்தை எடுத்துக் கொள்ளுங்கள். இயற்கையாகவே, தேச விசால ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தத்திற்கு முன் இசைவாக நடக்கும் பிரச்சினை எழவில்லைத் தான், ஆனால் அந்த யுத்தம் தொடங்கியதிலிருந்து இத்தகைய இசைவாக நடத்தலின் முக்கியத்துவம் பிரத்தியட்சமானதாகி உள்ளது. அங்கு கொரில்லாக் கூறுகள் எதிரிப் படையில் ஒருவரைக் கூடுதலாகக் கொல்லும் போதும், எதிரியின் துப்பாக்கிக் குண்டு ஒன்றைக் கூடுதலாகச் செலவிடச் செய்யும் போதும், பெருஞ் சுவருக்குத் தெற்கே முன்னேறுதபடி எதிரிப் படையில் ஒருவரைக் கூடுதலாகத் தடுக்கும் போதும் அவை ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தத்தின் மொத்த பலத்திற்குத் தமது சாதனை ஒன்றைக் கூடுதலாக வழங்குவதாகக் கணிக்கப்படலாம். மேலும், அவை எதிரிப் படை முழுவதின் மீதும் அகில ஜப்பான் மீதும் மனவலியிழக்கச் செய்யும் பாதிப்பொன்றையும், எமது சேனை முழுவதின் மீதும் மக்கள் அனைவர் மீதும் ஊக்குவிக்கும் பாதிப்பொன்றையும் ஏற்படுத்துகின்றன என்பதும் தெளிவு. பெய்ப்பிங்-சுய்யுவான், பெய்ப்பிங்-ஹன்கோ, தியென்சின்-பூகோ, தாதொங்-பூசௌ, செங்திங்-தையுவான், ஷாங்ஹாய்-ஹங்சௌ

புகையிரத மார்க்கங்கள் நெடுகிலும் கொரில்லா யுத்தம் யுத்ததந்திர ரீதியான இசைவாக நடத்தலில் வகிக்கும் பங்கு இன்னும் அதிக தெளிவாக உள்ளது. எதிரி யுத்ததந்திர ரீதியான தாக்குதலில் ஈடுபட்டிருக்கையில், கொரில்லாக் கூறுகள் தற்போதைய எமது யுத்ததந்திர ரீதியான தற்காப்பில், கிரமமான படைகளுக்கு இசைவாக நடத்தலாகிய தம் கருமத்தைச் செய்து வருவது மட்டுமல்ல; எதிரி அவனது யுத்ததந்திர ரீதியான தாக்குதலை முடித்துக் கொண்டு தான் வென்றவற்றைப் பாதுகாப்பதற்கு மாறிய பின்னர், அவை கைப்பற்றப்பட்ட பிரதேசத்தின் மீதான அவனது பிடியைச் சீர்குலைப்பதில் கிரமமான படைகளுக்கு இசைவாக நடக்கும் என்பது மட்டுமல்ல; கிரமமான படைகள் யுத்ததந்திர ரீதியான எதிர்த் தாக்குதலைத் தொடுக்கும் போதும் அவை எதிரிப் படைகளை விரட்டியடித்து, இழக்கப்பட்ட பிரதேசங்கள் எல்லாவற்றையும் திரும்பப் பிடிப்பதிலும் கிரமமான படைகளுடன் இணைந்து இயங்கும். யுத்ததந்திர ரீதியான இசைவாக நடத்தலில் கொரில்லா யுத்தத்தின் பெரும் பங்கு புறக்கணிக்கப்படக் கூடாது. கொரில்லாக் கூறுகள், கிரமமான படைகள், இரண்டினதும் தளகர்த்தர்கள் இப்பங்கைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

மேலும், கொரில்லா யுத்தம் கிரமமான யுத்தத்துக்குப் போர் நடவடிக்கைகளில் இசைவாக நடக்கும் கருமத்தையும் ஆற்றுகிறது. உதாரணமாக, தையுவான் வடக்கே சின்கோ போர்நடவடிக்கையில் யென்மென்குவான் வடக்கேயும் தெற்கேயும் கொரில்லாக்கள் தாதொங்-பூசௌ புகையிரத மார்க்கத்தையும் பிங்சிங்குவான் யாங்ஃபாங்கோ ஊடாகச் செல்லும் மோட்டார் வாகன வீதிகளையும் நாசம் செய்ததன் மூலம்

இசைவாக நடத்தலில் பெரும் பங்கை வகித்தனர். அல்லது போர்நடவடிக்கை ரீதியான மற்றுமொரு உதாரணத்தை எடுத்துக் கொள்ளுங்கள். எதிரி ஃபங்லிங்துவைக் கைப்பற்றிய பின்னர், ஏற்கனவே ஷன்சி மாகாணம் பூராவிலும் பரவலாக இருந்த (பிரதானமாகக் கிரமமான படைகளால் நடத்தப் பட்ட) கொரில்லா யுத்தம் ஷென்சி மாகாணத்தில் மஞ்சள் நதிக்கு மேற்கிலும் ஹோனுன் மாகாணத்தில் மஞ்சள் நதிக் குத் தெற்கிலுமான தற்காப்புப் போர்நடவடிக்கைகளுக்கு இசை வாக நடத்தல் மூலம் இன்னும் பெரிதான ஒரு பங்கை வகித் தது. மீண்டும், எதிரி தெற்கு ஷன்துங்கைத் தாக்கிய போது, வட சீனுவின் ஐந்து மாகாணங்களிலுமான கொரில்லா யுத்தம் தெற்கு ஷன்துங்கில் எமது சேனையின் போர்நடவடிக்கைகளுக்கு இசைவாக நடத்தல் மூலம் பெருமளவு சேவை செய்தது. இந்த விதமான ஒரு பணியை ஆற்றுவதில் எதிரியின் முனை களுக்குப் பின்புறத்திலான ஒவ்வொரு கொரில்லாத் தளத் தினதும் தலைவர்கள், அல்லது தற்காலிகமாக அங்கு அனுப் பப்படும் ஒரு கொரில்லா வியூகத்தின் தளகர்த்தர்கள், தங்கள் படைகளை நன்கு செலுத்தவும், சமயத்திற்கும் இடத்திற்கும் உகந்தவையான வெவ்வேறு முறைகளைக் கைக்கொள்வதன் மூலம், எதிரியை முடமாக்கவும், அவனை ஓரிடத்தில் நகராதபடி தடுத்துவைக்கவும், அவனது பண்ட வினியோக மார்க்கங்க ளைச் சீர்குலைக்கவும் உட்புற முனைகளில் போர்நடவடிக்கையி லீடுபட்டிருக்கும் எமது சேனைகளுக்கு ஊக்கமளிக்கவும் வேண்டி எதிரியின் மிக ஜீவாதாரமானவையும் பாதிக்கப்படக் கூடி யவையுமான ஸ்தானங்களுக்கு எதிராகத் தீவிரமாக நடவ டிக்கை எடுக்கவும், அவ்வாருகப் போர்நடவடிக்கைக்கு இசை வாக நடத்தலான தங்கள் கடமையை நிறைவேற்றவும் வேண்

டும். ஒவ்வொரு கொரில்லாப் பிராந்தியமும் அல்லது கூறும் கிரமமான படைகளின் போர்நடவடிக்கைக்கு இசைவாக நடத்தலில் கவனமெதுவும் செலுத்தாமல் தானே தனியாகச் செயல்பட்டதென்றால், அது இன்னமும் பொதுவான யுத்த தந்திர நடவடிக்கையில் ஏதேனும் இசைவாக நடக்கும் ஒரு பங்கை வகிக்குமேயாயினும், போர்நடவடிக்கையில் இசைவாக நடத்தலின்மையால் யுத்ததந்திர ரீதியான அதன் இசைவாக நடத்தலிலுள்ள முக்கியத்துவம் குறைந்துவிடும். எல்லாக் கொரில்லாத் தளகர்த்தர்களும் இந்த விஷயத்திற்குப் பார தூரமான கவனம் தரவேண்டும். போர்நடவடிக்கைகளில் இசைவாக நடத்தலை அடைவதற்கு, ஒப்புநோக்காக எல்லாப் பெரிய கொரில்லாக் கூறுகளும் கொரில்லா வியூகங்களும் ரேடியோ சாதனங்களைக் கொண்டிருப்பது அறவே அவசியம்.

இறுதியாக, சண்டைகளில், அதாவது, போர்க்களத்தில் உண்மையான சண்டையிடலில், கிரமமான படைகளுக்கு இசைவாக நடத்தல் உட்புற முனைப் போர்க்களமொன்றின் அருகாமையில் உள்ள கொரில்லாக் கூறுகள் எல்லாவற்றினதும் பணியாகும். இயல்பாகவே, இது கிரமமான படைகளுக்கு அருகாமையில் இயங்குகின்ற கொரில்லாக் கூறுகளுக்கு அல்லது தற்காலிகமாகக் கிரமமான படைகளிலிருந்து அனுப்பப்பட்ட கொரில்லாக் கூறுகளுக்கு மட்டுமே பொருந்தும். இத்தகைய சந்தர்ப்பங்களில், கொரில்லாக் கூறொன்று கிரமமான படைகளின் தளகர்த்தரின் உத்தரவின்படி அதற்குக் கொடுக்கப்படுகின்ற பணி எதுவானாலும் அதை ஆற்ற வேண்டும்; அது பொதுவாக எதிரியின் படைகளிற் சிலவற்றை நகராதபடி தடுத்து வைப்பது, அவனது பண்ட வினியோக மார்க்கங்களைச் சீர்குலைப்பது, வேவுபார்த்தல் நடத்துவது, அல்லது

கிரமமான படைகளுக்கு வழிகாட்டிகளாகப் பயன்படுவது ஆக இருக்கும். இப்படிக் கிரமமான படைத் தளகர்த்தரால் பணியொன்று ஒதுக்கப்படாதவிடத்தும் கூட ஒரு கொரில் லாக் கூறு தன் சொந்த முன்னேட்டத்தில் இப்பணிகளை நடத்த வேண்டும். நகராமலும் சண்டையிடாமலும் வாளா பார்த்துக் கொண்டிருப்பது, அல்லது சண்டையிடாமல் அலைந்து திரி வது கொரில்லாக் கூறென்றிற்குப் பொறுத்துக்கொள்ள முடி யாத ஒரு கண்ணேட்டமாக இருக்கும்.

## அத்தியாயம் VI

### தளப்பிரதேசங்களை ஸ்தாபித்தல்

ஜப்பானிய-எதிர்ப்புக் கொரில்லா யுத்தத்தில் யுத்ததந்திரத் தின் மூன்ருவது பிரச்சினை தளப்பிரதேசங்களை ஸ்தாபித்தலா கும். யுத்தத்தின் நீண்ட தன்மையும் ஈவிரக்கமின்மையும் காரணமாக இந்தப் பிரச்சினையின் முக்கியத்துவமும் அத்தியா வசியமும் வந்துள்ளன. இழக்கப்பட்ட எமது பிரதேசங்களைத் திரும்பப் பிடிப்பது தேச-விசால யுத்ததந்திர ரீதியான எதிர்த் தாக்குதல் வரை காத்திருக்க வேண்டியிருக்கும்; இதற்கு முன் னர் எதிரியின் முனை மத்திய சீனவுக்குள் ஆழமாக விரிவடைந் தும் அதனை வடக்குத் தெற்காக இரண்டாகத் துண்டித்தும் விடும், எமது பிரதேசத்தில் சிறு பகுதி, அல்லது பெரும் பகுதி கூட, எதிரியின் கைகளில் சிக்கி அவனது பின்புறமாக ஆகிவிட் டிருக்கும். நாம் எதிரியாற் கைப்பற்றப்பட்ட இந்தப் பாரிய பகுதி எங்கணும் கொரில்லா யுத்தத்தை விஸ்தரிக்கவும் எதி

ரியின் பின்புறத்தை அவனது முனையாக்கவும், அவனை அவன் கைப்பற்றி வைத்திருக்கும் பிரதேசம் பூராவிலும் இடைய றுது சண்டையிட நிர்ப்பந்திக்கவும் வேண்டும். எமது யுத்ததந்திர ரீதியான எதிர்த்தாக்குதல் தொடுக்கப்படும் சமயம் வரையும், இழக்கப்பட்ட எமது பிரதேசங்கள் திரும்பக் கைப் பற்றப்படாதிருக்கின்ற வரையும், ஒருவர் நிச்சயமாக எவ்வளவு காலத்திற்கு என்று கூற இயலாதெனினும் நிச்சயமாகக் கணிசமானளவு நீண்ட காலத்திற்கு, எதிரியின் பின்புறத்தில் கொரில்லா யுத்தத்தில் விடாப்பிடியாக இருப்பது அவசியமாயிருக்கும். இதனுல்தான் யுத்தம் நீண்டதாக இருக்கும். அத்துடன், கைப்பற்றப்பட்ட பகுதிகளில் தான் வென்றவற்றைப் பாதுகாத்துக் கொள்ள எதிரி தனது கொரில்லா யுத்தத்துக்கு எதிரான நடவடிக்கைகளை நாளாந்தம் உக்கிரப்படுத்தியே தீருவான்; விசேஷமாகத் தனது யுத்ததந்திர ரீதியான தாக்குதலை நிறுத்திய பின்னர், கொரில்லாக்களை ஈவிரக்கமின்றி அடக்குவதில் இறங்கியே தீருவான். இவ்வாறுக நீண்ட தன்மையோடு ஈவிரக்கமற்ற தன்மையும் சேர்க்கப்படும் போது, தளப் பிரதேசங்கள் இல்லாமல் எதிரி முனைகளுக்குப் பின்புறத்தில் கொரில்லா யுத்தத்தை நீடிப்பது அசாத்தியமாக இருக்கும்.

அப்படியெனின், கொரில்லா தளப்பிரதேசங்கள் என்பவை என்ன? கொரில்லாப் படைகள் தங்கள் யுத்ததந்திர ரீதியான பணிகளை ஆற்றுவதிலும் தம்மைப் பேணியும் விரிவுபடுத்தியும் கொள்வதும் எதிரியை அழிப்பதும் விரட்டியடிப்பதுமான குறிக்கோளை அடைவதிலும் தங்கி நிற்கும் யுத்ததந்திர ரீதியான தளங்கள் இவை. இத்தகைய யுத்ததந்திர ரீதியான தளங்கள் இல்லாவிடில், எமது யுத்ததந்திர ரீதியான பணிகள் எதையும் நிறைவேற்றுவதிலோ யுத்தத்தின் குறிக்கோளை அடை

வதிலோ தங்கி நிற்பதற்கு எதுவுமிராது. எதிரி முனைகளுக்குப் பின்புறத்திலான கொரில்லா யுத்தத்தின் ஒரு குணுதிசயம் அது பின்புறமொன்று இல்லாமல் செய்யப்படும் ஒரு யுத்தம் என்பதாகும், ஏனெனில் கொரில்லாப் படைகள் நாட்டின் பொதுவான பின்புறத்திலிருந்து துண்டிக்கப்பட்டிருக்கின்றன. ஆனுல் தளப்பிரதேசங்கள் இல்லாமல் கொரில்லா யுத்தம் நெடுங்காலம் நீடிக்கவோ வளரவோ இயலாது. இத்தகைய தளப்பிரதேசங்கள் உண்மையில் கொரில்லா யுத்தத்தின் பின் புறமாகும்.

அலைந்து திரியும் கிளர்ச்சிக்காரர் ரகமான விவசாயி யுத் தங்கள் பலவற்றை வரலாறு அறியும், ஆனுல் அவற்றில் எது வும் ஒருபோதும் வெற்றியீட்டியதில்லை. போக்குவரத்தும் தொழில்நுட்பமும் முன்னேறிய தற்போதைய சகாப்தத்தில், அலைந்து திரியும் கிளர்ச்சிக்காரர்களின் முறையில் சண்டை யிடுவதன் மூலம் வெற்றியீட்ட முயல்வது மேலும் எவ்வித ஆதாரமுமற்ற கற்பனையாகும். இருப்பினும், இந்த அலைந்து திரியும் கிளர்ச்சிக்கார எண்ணம் வறுமை பீடித்த விவசாயிகள் மத்தியில் இன்னும் இருந்து வருகிறது. அவர்களின் மனப் பான்மை கொரில்லாத் தளகர்த்தர்களின் மனங்களில் தளப் பிரதேசங்கள் அவசியமுமல்ல முக்கியமுமல்ல என்ற கருத்தாக ஆகிறது. ஆகவே கொரில்லாத் தளகர்த்தர்களின் மனங்களிலி ருந்து அலைந்து திரியும் கிளர்ச்சிக்காரத் தத்துவார்த்தத்தை அகற்றுவது, தளப்பிரதேசங்களை ஸ்தாபிப்பதான ஒரு கொள் கையை முடிவு செய்வதற்கு ஒரு முற்தேவையாக உள்ளது. தளப்பிரதேசங்களை வைத்திருப்பதா இல்லையா என்பதும் அவற் றை முக்கியமானவையாகக் கருதுவதா இல்லையா என்பதுமான பிரச்சினை, அதாவது வேறு வார்த்தைகளில் கூறினுல், தளப்

பிரதேசங்களை ஸ்தாபிக்கும் கருத்திற்கும் அலைந்து திரியும் கிளர்ச்சிக்காரர்கள் கருத்திற்கும் இடையிலான மோதுதல் என்ற பிரச்சினை, எல்லாக் கொரில்லா யுத்தங்களிலும் எழுகிறது; ஓரளவிற்கு ஜப்பானிய-எதிர்ப்புக் கொரில்லா யுத்தமும் இதற்கு விதிவிலக்கல்ல. ஆகவே அலைந்து திரியும் கிளர்ச்சிக்காரத் தத்துவார்த்தத்திற்கு எதிரான போராட்டம் இன்றியமையாத ஒரு போக்காகும். அலைந்து திரியும் கிளர்ச்சிக்காரத் தத்துவார்த்தம் முற்றுகக் கடக்கப்பட்டு, தளப்பிரதேசங்களை அமைக்கும் கொள்கை தொடக்கவும் பிரயோகிக்கவும் படும் போது மட்டுமே நீண்ட ஒரு காலகட்டத்திற்குக் கொரில்லா யுத்தத்தை நீடித்து நடத்துவதற்குச் சாதகமான சூழ்நிலைகள் இருக்கும்.

தளப்பிரதேசங்களின் அவசியமும் முக்கியத்துவமும் தெளிவாக்கப்பட்டுவிட்டதால், நாம், தளப்பிரதேசங்களை ஸ்தாபிப்பதை நிறைவேற்றும் போது புரிந்து கொள்ளவும் தீர்க்கவும் படவேண்டியவையான பின்வரும் பிரச்சினைகளுக்குச் செல்வோம். இப்பிரச்சினைகளாவன, தளப்பிரதேசங்களின் ரகங்கள், கொரில்லாப் பிராந்தியங்களும் தளப்பிரதேசங்களும், தளப்பிரதேசங்களை ஸ்தாபிப்பதற்கான நிபந்தனைகள், தளப்பிரதேசங்களை ஸ்திரப்படுத்தலும் விரிவுபடுத்தலும், நாமும் எதிரியும் ஒருவரையொருவர் சுற்றிவளைக்கும் வடிவங்கள் ஆகியன.

## 1. தளப்பிரதேசங்களின் ரகங்கள்

ஜப்பானிய-எதிர்ப்புக் கொரில்லா யுத்தத்திலான தளப்பிரதேசங்கள் பிரதானமாக, மலைகளிலானவை, சமதரைகளிலானவை, நதி-ஏரி-ஜலசந்திப் பிரதேசங்களிலானவை என மூன்று ரகங்களைச் சேர்ந்தவையாகும்.

மலைகளடர்ந்த பகுதிகளில் தளப்பிரதேசங்களை ஸ்தாபிப்ப தன் சாதகத் தன்மை பிரத்தியட்சமானது; சாங்பய்[1], வூதை[2], தைஹங்[3], தைஷன்[4], யென்ஷன்[5], மாஓஷன்[6] மலைகளில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள, ஸ்தாபிக்கப்பட்டு வருகின்ற அல்லது ஸ்தாபிக்கப்படப் போகின்ற தளப்பிரதேசங்கள் எல்லாம் இந்த ரகத்தைச் சேர்ந்தவை. இவை எல்லாம் ஜப்பானிய-எதிர்ப்புக் கொரில்லா யுத்தம் மிக நீண்ட காலத்திற்கு நடத்தப்படக் கூடிய இடங்களும் ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தத்திற்கான முக்கிய கொத்தளங்களும் ஆகும். நாம் எதிரி முனைகளுக்குப் பின்புறமுள்ள மலைகளடர்ந்த பிரதேசங்கள் எல்லாவற்றிலும் கொரில்லா யுத்தத்தை விருத்தி செய்யவும் தளப்பிரதேசங்களை ஸ்தாபிக்கவும் வேண்டும்.

இயல்பாகவே சமதரைகள் மலைகளைவிடக் குறைவாகவே உகந்தவை, ஆனால் அவற்றில் கொரில்லா யுத்தத்தை விருத்தி செய்வதோ தளப்பிரதேசம் எதையும் ஸ்தாபிப்பதோ எந்த வகையிலும் அசாத்தியமானதல்ல. உண்மையில், ஹோபெயினதும் வட, வடமேற்கு ஷன்துங்கினதும் சமவெளிகளில் விருத்தி செய்யப்பட்டுள்ள பரவலான கொரில்லா யுத்தம் சமதரைகளில் கொரில்லா யுத்தத்தை விருத்தி செய்வது சாத்தியம் என நிரூபிக்கிறது. சமவெளிகளில் தளப்பிரதேசங்களை ஸ்தாபித்து அவற்றை நீண்ட காலத்திற்கு வைத்திருப்பதன் சாத்தியத்திற்கு இதுவரை சான்று எதுவும் இல்லாதிருப்பினும், தற்காலிகத் தளப்பிரதேசங்களை ஸ்தாபிப்பது சாத்தியம் என நிரூபிக்கப்பட்டுள்ளது, சிறு கூறுகளுக்கான அல்லது ஒவ்வொரு பருவ காலத்தில் மட்டும் உபயோகிப்பதற்கான தளப்பிரதேசங்களை ஸ்தாபிப்பதும் சாத்தியமாக இருக்க வேண்டும். ஏனென்றால் ஒருபுறம் எதிரியிடம் கைவசம் போதிய துருப்

தேசங்களில் கொரில்லா யுத்தத்தை விருத்தி செய்வதினதும் தளப்பிரதேசங்களை ஸ்தாபிப்பதினதும் சாத்தியப்பாட்டிற்குச் சான்று பகர்கின்றன. இருப்பினும் இதுவரை ஜப்பானை எதிர்க்கும் அரசியற் கட்சிகளும் வெகுஜனங்களும் இவற்றில் சிறிதே கவனம் செலுத்தியுள்ளனர். அகநிலைப்பட்ட சூழ்நிலைகள் இன்னும் இல்லையாயினும், நாம் ஐயத்திற்கிடமின்றி எமது கவனத்தை இந்தச் சாத்தியப்பாட்டிற்குத் திருப்பவும் இதில் வேலை செய்யத் தொடங்கவும் வேண்டும். எமது தேச-விசாலக் கொரில்லா யுத்தத்தின் அபிவிருத்தியில் ஒரு அம்சமாக நாம் யாங்சி நதிக்கு வடக்கிலான ஹொங்சே ஏரிப் பிரதேசத்திலும் யாங்சி நதிக்குத் தெற்கிலான தைஹு ஏரிப் பிரதேசத்திலும் நதிகள் நெடுகிலும் கடற்கரையோரத்திலும் எதிரி கைப்பற்றியுள்ள பகுதிகளில் உள்ள எல்லா நதி-ஏரி-ஜலசந்திப் பிரதேசங்களிலும் பயனுள்ள விதத்தில் கொரில்லா யுத்தத்தை ஒழுங்கு செய்யவும், நதி-ஏரி-ஜலசந்திப் பிரதேசங்களிலும் இவற்றிற்கு அருகாமையிலும் நிரந்தரத் தளப்பிரதேசங்களைச் சிருஷ்டிக்கவும் வேண்டும். இந்த அம்சத்தைப் புறக்கணிப்பதன் மூலம் நாம் பயனளவில் எதிரிக்கு நீர் மார்க்கப் போக்குவரத்து வசதிகளை அளிக்கிறோம்; இது ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தத்திற்கான எமது யுத்ததந்திரத் திட்டத்தில் உள்ள ஒரு இடைவெளியாகும், காலத்தோடு நிரவப்பட வேண்டும்.

### 2. கொரில்லாப் பிராந்தியங்களும் தளப்பிரதேசங்களும்

எதிரி முனைகளுக்குப் பின்புறமான கொரில்லா யுத்தத்தில், கொரில்லாப் பிராந்தியங்களுக்கும் தளப்பிரதேசங்களுக்கும் இடையில் ஒரு வேற்றுமை உள்ளது. வூதை மலைப் பிரதேசத்

திலான சில மாவட்டங்களேயும் (அதாவது, ஷன்சி-சஹார்-ஹோபெய் எல்லேப் பகுதியையும்) தைஹங், தைஷன் மலேப் பிர தேசங்களிலான சில இடங்களேயும் போன்று எதிரியால் சுற் றிவளேக்கப்பட்டவையான, ஆனுல் மத்திய பாகங்கள் எதி ரியால் கைப்பற்றப்படாத அல்லது எம்மால் திரும்பப் பிடிக் கப்பட்டுவிட்ட பகுதிகள், கொரில்லா யுத்தத்தை விருத்தி செய்வதில் கொரில்லாக் கூறுகள் வசதியாக உபயோகிக்கக் கூடியதாக ஏற்கனவே தயாராக உள்ள தளங்களாகும். ஆனுல் இந்தத் தளப்பிரதேசங்களிற் பிற இடங்களில், உதாரணமாக, மேற்கு ஹோபெயினதும் தெற்கு சஹாரினதும் சில பகுதிகளே உள்ளடக்குபவையான வூதை மலேப் பிரதேசத்தின் கிழக்கு, வடக்குப் பிரிவுகளிலும் பாஓதிஙிற்குக் கிழக்கேயும் ஷாங்செள விற்கு மேற்கேயும் உள்ள பல இடங்களிலும் போல, நிலேமை வேறு விதமானது. கொரில்லா யுத்தம் ஆரம்பமான போது கொரில்லாக் கூறுகளால் இந்த இடங்களேப் பூரணமாகக் கைப் பற்ற முடியவில்லே, அடிக்கடி இவற்றில் தாக்குதல்கள் செய்ய மட்டுமே முடிந்தது; இவை கொரில்லாக்கள் அங்கு உள்ள போது கொரில்லாக்களினதும், கொரில்லாக்கள் அங்கிருந்து போய் விட்ட போது கைப்பொம்மை ஆட்சியினதும் கைவசமிருக் கும் பகுதிகளும், ஆகவே இன்னும் கொரில்லாத் தளங்கள் அல்லாத, கொரில்லாப் பிராந்தியங்கள் என மட்டுமே அழைக் கப்படக் கூடிய பகுதிகளுமாகும். இத்தகைய கொரில்லாப் பிராந்தியங்கள் அவசியமான இயக்கமான கொரில்லா யுத் தத்தினூடாகச் சென்ற பின்னர், அதாவது எதிரித் துருப்புக் களில் பெருந்தொகையானவை அங்கு அழித்தொழிக்க அல் லது தோற்கடிக்கப்பட்டு, கைப்பொம்மை ஆட்சி அழிக்கப் பட்டு, வெகுஜனங்கள் நடவடிக்கைக்கு எழுச்சியுறுத்தப்பட்டு,

ஜப்பானிய-எதிர்ப்பு வெகுஜன ஸ்தாபனங்கள் உருவாக்கப் பட்டு, மக்களின் ஸ்தல ஆயுதப்படைகள் அபிவிருத்தி செய் யப்பட்டு, ஜப்பானிய-எதிர்ப்பு அரசியல் அதிகாரமும் ஸ்தா பிக்கப்படும் போது, இவை தளப்பிரதேசங்களாக மாற்றப் படும். ஏற்கனவே ஸ்தாபிக்கப்பட்டுவிட்ட தளப்பிரதேசங் களுடன் இத்தகைய தளப்பிரதேசங்களும் சேர்க்கப்பட்டது தளப்பிரதேசங்களை விஸ்தரித்துள்ளது என்று கூறலாம்.

சில இடங்களிலுள்ள கொரில்லா யுத்தத்தைப் பொறுத் தவரை, நடவடிக்கைகளின் பகுதி முழுமையும் ஆரம்பத்திலி ருந்தே ஒரு கொரில்லாப் பிராந்தியமாக இருந்துவந்துள்ளது. கிழக்கு ஹோபெயிலுள்ள கொரில்லா யுத்தம் ஒரு உதாரண மாகும். அங்கு கைப்பொம்மை ஆட்சி நீண்ட காலமாக இருந்துவந்துள்ளது, ஆரம்பந்தொட்டே அப்பகுதி முழுமை யும் ஸ்தல எழுச்சிகளினின்றும் வளர்ந்துள்ள மக்களின் ஆயு தப்படைகளுக்கும் வூதை மலைகளிலிருந்து அனுப்பப்பட்ட கொரில்லாப் படைப் பிரிவுகளுக்குமான ஒரு கொரில்லாப் பிராந்தியமாக இருந்துவந்தும் உள்ளது. தம் நடவடிக்கைகளின் ஆரம்பத்தில் அவர்களால் செய்ய முடிந்ததெல்லாம் அங்கு ஓரளவு நல்ல இடங்களைத் தற்காலிகப் பின்னணிப் பிரதேசங் களாக அல்லது தற்காலிகத் தளப்பிரதேசங்களாகத் தெரிந் தெடுத்துக் கொள்வதுதான். இத்தகைய இடங்கள், எதிரிப் படைகள் அழிக்கப்பட்டு மக்களை எழுச்சியுறுத்தும் வேலை முழு வேகத்தில் நடைபெறும் சமயம் வரை கொரில்லாப் பிராந்தி யங்களாக இருப்பதில்ருந்து ஒப்புநோக்காக நிலையான தளப் பிரதேசங்களாக மாற்றப்படமாட்டா.

இவ்வாறாக, கொரில்லாப் பிராந்தியமொன்றை ஒரு தளப் பிரதேசமாக மாற்றுவது சிரமமிகுந்ததும் சிருஷ்டிகரமானது

மான இயக்கமும், அது கொரில்லாப் பிராந்தியத்திலிருந்து தளப்பிரதேசமாக மாற்றப்பட்டு விட்டதா இல்லையா என்பது எந்த அளவிற்கு எதிரி அழிக்கவும் வெகுஜனங்கள் எழுச்சி யுறுத்தவும் படுகின்றனர் என்பதிற் தங்கியுள்ளதுமாகும்.

பல பிரதேசங்கள் நீண்ட காலத்திற்கு கொரில்லாப் பிராந் தியங்களாகவே இருந்துவரும். இந்தப் பிரதேசங்களில், எதிரி தனது கட்டுப்பாட்டை நிலைத்து வைத்திருக்க எவ்வளவு தான் முயன்ற போதிலும் அவனுல் நிலையான கைப்பொம்மை ஆட்சி களை நிறுவ இயலாதிருக்கையில், நாம் எவ்வளவுதான் கொரில் லா யுத்தத்தை விருத்தி செய்தாலும், எம்மாலும் ஜப்பானிய-எதிர்ப்பு அரசியல் அதிகாரத்தை ஸ்தாபிப்பதான குறிக்கோளை அடைய இயலாதிருக்கும். இந்த விதமான உதாரணங்கள் புகையிரத மார்க்கங்கள் நெடுகிலும் பெரிய நகரங்களின் சுற் றுடல்களிலும் சமவெளிகளில் சிற்சில பகுதிகளிலுமான, எதி ரியாற் கைப்பற்றப்பட்டுள்ள பிரதேசங்களிற் காணக்கிடைக் கின்றன.

எதிரியாற் பலமாகப் பாதுகாப்புச் செய்யப்பட்டவை யான பெரிய நகரங்கள், புகையிரத நிலையங்கள், சமவெளி களிலான சில இடங்கள் ஆகியவற்றைப் பொறுத்தவரையில், கொரில்லா யுத்தம் ஒப்புநோக்காக நிலையான கைப்பொம்மை ஆட்சிகளைக் கொண்டவையான இந்த இடங்களுக்கு உள்ளே விரிவடைய முடியாது, இவற்றின் எல்லைகள் வரை மட்டுமே விரிவடைய முடியும். இது மற்ருெரு விதமான நிலைமை.

எமது தலைமையில் தவறுகள் அல்லது எதிரியின் பலமான நிர்ப்பந்தம், மேலே வர்ணிக்கப்பட்ட நிலைமையில் ஒரு திருப் பத்தை ஏற்படுத்தக் கூடும், அதாவது, கொரில்லாத் தளப்பி ரதேசமொன்று கொரில்லாப் பிராந்தியமாக மாறக் கூடும்,

கொரில்லாப் பிராந்தியமொன்று ஒப்புநோக்காக நிலையான எதிரிக் கைப்பற்றலின் கீழான பகுதியாக மாறக் கூடும். இத்தகைய மாற்றங்கள் சாத்தியம், இவை கொரில்லாத் தளகர்த்தர்களின் விசேஷ விழிப்பிற்குரியவை.

ஆகவே, கொரில்லா யுத்தத்தினதும் எமக்கும் எதிரிக்கும் இடையிலான போராட்டத்தினதும் விளைவாக, எதிரியால் கைப்பற்றப்பட்டுள்ள பிரதேசம் முழுவதும் பின்வரும் மூன்று வகை இடங்களாக மாறும்: முதலாவது, எமது கொரில்லாக் கூறுகளினதும் எமது அரசியல் அதிகார அங்கங்களினதும் கைவசமான ஜப்பானிய-எதிர்ப்புத் தளப்பிரதேசங்கள்; இரண்டாவது, ஜப்பானிய ஏகாதிபத்தியத்தினதும் அதன் கைப்பொம்மை ஆட்சிகளினதும் கைவசமான பகுதிகள்; மூன்றாவது, இரு தரப்புகளும் போட்டி போடும் இடைப்பட்ட பிராந்தியங்கள், அதாவது கொரில்லாப் பிராந்தியங்கள். முதலாம், மூன்றாம் வகையானவற்றைக் கூடிய பட்சம் விரிவுபடுத்துவதும் இரண்டாவது வகையானவற்றைக் குறைந்த பட்சமாகக் குறைப்பதுமான கடமை கொரில்லாத் தளகர்த்தர்களுக்கு உள்ளது. இதுவே கொரில்லா யுத்தத்தின் யுத்ததந்திர ரீதியான பணி.

### 3. தளப்பிரதேசங்களை ஸ்தாபிப்பதற்கான சூழ்நிலைகள்

தளப்பிரதேசமொன்றை ஸ்தாபிப்பதற்கான அடிப்படைச் சூழ்நிலைகளாவன ஜப்பானிய-எதிர்ப்பு ஆயுதப் படை ஒன்று இருக்க வேண்டும், இந்த ஆயுதப் படையைக் கொண்டு எதிரிக்குத் தோல்விகளை ஏற்படுத்த வேண்டும், மக்களை எழுச்சியுறுத்த வேண்டும் என்பனவாகும். இவ்வாறாகத் தளப்பிர

தேசமொன்றை ஸ்தாபிப்பது முதலாவதாக ஆயுதப் படையொன்றைக் கட்டியெழுப்பும் விஷயமே. கொரில்லா யுத்தத்தின் தளகர்த்தர்கள் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கொரில்லாக் கூறுகளைக் கட்டியெழுப்புவதற்கும் அவற்றைப் போராட்டத்தினூடாகச் சிறிது சிறிதாகக் கொரில்லா வியூகங்களாகவோ அல்லது கிரமமான துருப்புக்களின் கூறுகளும் வியூகங்களுமாகவோ கூட அபிவிருத்தி செய்வதற்கும் தங்கள் சக்தியை அர்ப்பணிக்க வேண்டும். ஆயுதப் படையொன்றைக் கட்டியெழுப்புதலே தளப்பிரதேசமொன்றின் ஸ்தாபிதத்திற்குக் கேந்திரமான காரியம்; ஆயுதப் படையொன்று இல்லாவிட்டால் அல்லது உள்ள ஆயுதப் படை பலவீனமானதாக இருந்தால், எதுவுமே செய்யப்பட முடியாது. இது முதல் சூழ்நிலையாகிறது.

தளப்பிரதேசமொன்றை ஸ்தாபிப்பதற்கு இன்றியமையாத இரண்டாவது சூழ்நிலை, ஆயுதப் படைகள் மக்களுடன் இணைவாக எதிரியைத் தோற்கடிக்க உபயோகிக்கப்பட வேண்டும் என்பது. எதிரியின் கட்டுப்பாட்டின் கீழுள்ள இடங்கள் எல்லாம் எதிரித் தளப்பிரதேசங்களே, கொரில்லாத் தளப்பிரதேசங்களல்ல; பிரத்தியட்சமாக அவை, எதிரி தோற்கடிக்கப்பட்டாலன்றிக் கொரில்லாத் தளப்பிரதேசங்களாக மாற்றப்பட முடியாது. நாம் எதிரியின் தாக்குதல்களை முறியடித்து அவனைத் தோற்கடித்தாலன்றிக் கொரில்லாக்களின் கைவசமுள்ள இடங்கள் கூட எதிரியின் கட்டுப்பாட்டின் கீழ் வந்து விடும்; அப்போது தளப்பிரதேசங்களை ஸ்தாபிப்பது அசாத்தியமாக இருக்கும்.

தளப்பிரதேசமொன்றை ஸ்தாபிப்பதற்கு இன்றியமையாத மூன்றாவது சூழ்நிலை, ஜப்பானுக்கு எதிராகப் போராட வெகு

ஜனங்களை எழுச்சியுறுத்துவதற்கு எமது ஆயுதப் படைகளுள்ளிட்ட எமது பலம் முழுவதையும் உபயோகிப்பதாகும். இந்தப் போராட்டத்தினூடே நாம் மக்களை ஆயுதபாணிகளாக்க வேண்டும், அதாவது, தற்காப்புக் கோர்களையும் கொரில்லாக் கூறுகளையும் ஏற்படுத்த வேண்டும். இந்தப் போராட்டத்தினூடாக நாம் வெகுஜன ஸ்தாபனங்களை உருவாக்க வேண்டும், தொழிலாளர்கள், விவசாயிகள், வாலிபர்கள், பெண்கள், சிறுவர் சிறுமியர், வர்த்தகர்கள், சுயதொழிலுடையவர் ஆகியோரை — அவர்களின் அரசியல் அறிவுணர்வினதும் போரிடும் உற்சாகத்தினதும் அளவின் பிரகாரம் — ஜப்பானிய ஆக்கிரமிப்பிற்கு எதிரான போராட்டத்திற்கு அவசியமான பல்வேறு வெகுஜன ஸ்தாபனங்களிலும் அணிதிரட்டவும் அந்த ஸ்தாபனங்களைச் சிறிது சிறிதாக விரிவுபடுத்தவும் வேண்டும். ஸ்தாபனங்களில்லாமல் மக்களால் தங்கள் ஜப்பானிய-எதிர்ப்புப் பலத்தை வெளிக்காட்ட முடியாது. இந்தப் போராட்டத்தினூடாக நாம் வெளிப்படையானவர்களும் மறைந்திருப்பவர்களுமான தேசத் துரோகிகளைக் களைபிடுங்கி எறிய வேண்டும்; இது மக்களின் பலத்தில் தங்கி நிற்பதன் மூலம் மட்டுமே சாதிக்கப்படக் கூடிய ஒரு பணி. இந்தப் போராட்டத்தில், மக்களைத் தங்கள் ஸ்தல ஜப்பானிய-எதிர்ப்பு அரசியல் அதிகார அங்கங்களை ஸ்தாபிக்க அல்லது ஸ்திரப்படுத்த எழுச்சியுறுத்துவது குறிப்பாக முக்கியமானது. ஆதியிலிருந்த சீன அரசியல் அதிகார அங்கங்கள் எதிரியால் அழிக்கப்படாதிருக்கும் இடங்களில் நாம் பரந்த வெகுஜனங்களின் ஆதரவுடன் அவற்றைப் புனரமைக்கவும் பலப்படுத்தவும், அவை எதிரியால் அழிக்கப்பட்டுள்ள இடங்களில் வெகுஜனங்களின் பிரயாசைகளைக் கொண்டு அவற்றைத் திரும்பக் கட்டியெழுப்ப

வும் வேண்டும். அவை ஜப்பானிய-எதிர்ப்புத் தேசிய ஐக்கிய முன்னணிக் கொள்கையை நிறைவேற்றுவதற்கான அரசியல் அதிகார அங்கங்கள், அவை எமது ஒரே எதிரியான ஜப்பானிய ஏகாதிபத்தியத்தையும் அதன் ஒநாய்களான தேசத் துரோகிகளேயும் பிற்போக்காளர்களேயும் எதிர்த்துப் போரிட மக்களின் சக்திகள் அனைத்தையும் ஐக்கியப்படுத்த வேண்டும்.

இந்த மூன்று அடிப்படைச் சூழ்நிலைகளும் சிறுகச் சிறுகப் பூர்த்தியாகும் போது மட்டுமே, அதாவது, ஜப்பானிய-எதிர்ப்பு ஆயுதப் படைகளைக் கட்டியெழுப்பி, எதிரியைத் தோற்கடித்து, மக்களை எழுச்சியுறுத்தி விட்ட பின்னர் மட்டுமே, கொரில்லா யுத்தத்திற்கான எல்லா தளப்பிரதேசங்களும் உண்மையில் ஸ்தாபிக்கப்பட முடியும்.

புவியியல், பொருளாதார சூழ்நிலைகளும் பிரஸ்தாபிக்கப்பட வேண்டும். புவியியல் சூழ்நிலையைப் பொறுத்தவரையில், நாம் ஏற்கனவே ''தளப்பிரதேசங்களின் ரகங்கள்'' பற்றிய முந்திய பகுதியில் மூன்று வேறுபட்ட வகைகளை விவாதித்து விட்டோம்; இங்கு நாம் ஒரு பிரதான தேவையை, அதாவது, பிரதேசம் விசாலமானதாக இருக்க வேண்டும் என்பதை மட்டுமே பிரஸ்தாபிக்க வேண்டியுள்ளது. எல்லாப் பக்கங்களிலும், அல்லது மூன்று பக்கங்களில், எதிரியால் சுற்றிவளைக்கப்பட்டுள்ள இடங்களில், மலையடர்ந்த பகுதிகள், இயற்கையாகவே, நீண்ட காலத்திற்கு நின்று பிடிக்கக் கூடிய தளப்பிரதேசங்களை நிறுவுவதற்கு மிகச் சிறப்பான சூழ்நிலைகளைத் தருகின்றன. ஆனால் பிரதானமான காரியம் கொரில்லாக்கள் நகர்ந்து செயல்படப் போதிய இடம் இருக்க வேண்டும், அதாவது, பிரதேசங்கள் விசாலமானவையாக இருக்க வேண்டும் என்பதே. விசாலமான

பிரதேசமொன்று இருக்கும் பட்சத்தில் கொரில்லா யுத்தம் சமவெளிகளிற் கூட விருத்திசெய்யப்படவும் நீடித்து நடத்தப் படவும் முடியும்; நதி-ஏரி-ஜலசந்திப் பிரதேசங்களைப் பற்றிக் கூறத் தேவையில்லை. பெரும்படியாகக் கூறுகையில், சீனுவின் பிரதேசத்தின் விசாலத் தன்மையும் எதிரியின் துருப்புக்கள் பற்றுக்குறையும் சீனுவில் கொரில்லா யுத்தத்திற்கு இந்தச் சூழ்நிலையைத் தருகின்றன. கொரில்லா யுத்தம் நடத்தும் சாத்தியப்பாடு சம்பந்தப்பட்ட வரை இது ஒரு முக்கியமான சூழ்நிலை, தலையாய சூழ்நிலையும் கூட ஆகும்; இந்தச் சூழ்நிலை அற்றவையான பெல்ஜியம் போன்ற சிறிய நாடுகளுக்கு இத் தகைய சாத்தியப்பாடுகள் அரிது, அல்லது இல்லை. சீனுவில் இந்தச் சூழ்நிலை முயன்று பெறவேண்டிய ஒன்றுமல்ல, அன்றி இது ஒரு தீர்க்கப்படவேண்டிய பிரச்சினையுமல்ல; இது அப் படியே இங்கு இருக்கின்றது, பயன்படுத்தப்படுவது மட்டும் தான் பாக்கி.

பௌதிக ரீதியில் பொருளாதாரச் சூழ்நிலைகள் புவியியல் சூழ்நிலைகளைப் போன்றவையே. ஏனெனில் நாம் இப்போது விவாதிப்பது எதிரி எவனும் இல்லாத ஒரு வனுந்தரத்தில் தளப்பிரதேசங்களை ஸ்தாபிப்பதையல்ல, எதிரி முனைகளின் பின் புறத்தில் அவற்றை ஸ்தாபிப்பதையே; எதிரி ஊடுருவக் கூடிய ஒவ்வொரு இடமும் ஏற்கனவே அதனதன் சீன வாசிகளையும் வாழ்வதற்கான பொருளாதார அடித்தளத்தையும் கொண் டுள்ளதால், தளப்பிரதேசங்களை ஸ்தாபிப்பதில் பொருளாதா ரச் சூழ்நிலைகளைத் தெரிந்தெடுக்கும் பிரச்சினை, எழவே இல்லை. பொருளாதாரச் சூழ்நிலைகள் எவ்வாருயினும், சீன வாசிகளும் எதிரிப் படைகளும் காணக் கிடைக்கும் இடங்

கள் எல்லாவற்றிலும் கொரில்லா யுத்தத்தை விருத்தி செய்யவும் நிரந்தரமான அல்லது தற்காலிகமான தளப்பிரதேசங்களை நிறுவவும் நாம் எம்மாலியன்றதையெல்லாம் செய்ய வேண்டும். இருப்பினும் அரசியல் ரீதியில் நிலைமை வேறுவிதமானது. இதில் பிரச்சினை உண்டு. அது தளப்பிரதேசங்களின் ஸ்தாபிதத்திற்குப் பிரமாண்டமான முக்கியத்துவமுடைய ஒரு பொருளாதாரக் கொள்கைப் பிரச்சினையாகும். கொரில்லாத் தளப்பிரதேசங்களின் பொருளாதாரக் கொள்கை நிதிச் சுமையை நியாயமாகப் பங்கிட்டு விதிப்பதன் மூலமும் வர்த்தகத்தைப் பாதுகாப்பதன் மூலமும் ஜப்பானிய-எதிர்ப்புத் தேசிய ஐக்கிய முன்னணியின் கோட்பாடுகளைப் பின்பற்ற வேண்டும். ஸ்தல அரசியல் அதிகார அங்கங்களோ அன்றிக் கொரில்லாக் கூறுகளோ இந்தக் கோட்பாடுகளை மீறக் கூடாது, இன்றேல் தளப்பிரதேசங்களின் ஸ்தாபிதமும் கொரில்லா யுத்தம் நீடித்து நடத்தப்படுவதும் பாதிக்கப்படும். நிதிச் சுமையை நியாயமாகப் பங்கிட்டு விதிப்பதென்பதன் பொருள் ''பணமுள்ளவர்கள் பணம் செலுத்த வேண்டு''மாகையில், விவசாயிகள் சிற்சில வரையறைகளுக்குள்ளாகக் கொரில்லாக் கூறுகளுக்குத் தானியம் அளிக்க வேண்டும் என்பதாகும். வர்த்தகத்தைப் பாதுகாப்பதென்பதன் பொருள் கொரில்லாக் கூறுகள் மிகக் கட்டுப்பாடாக இருக்க வேண்டுமென்பதும், நிரூபணமான தேசத்துரோகிகளின் உடைமைகளானவை நீங்கலாக ஏனைய கடைகள் பறிமுதல் செய்யப்படுவது கறாராகத் தடை செய்யப்பட வேண்டும் என்பதுமாகும். இது கஷ்டமான விஷயம், ஆனால் கொள்கை முடிவாகிவிட்டது, அது அமுலிலிடப்பட்டாக வேண்டும்.

**4. தளப்பிரதேசங்களின் ஸ்திரப்படுத்தலும் விரிவுபடுத்தலும்**

சீனுவில் படையெடுக்கும் எதிரியை ஒரு சில கொத்தளங்களோடு மட்டும், அதாவது பெரிய நகரங்களோடும் பிரதான போக்குவரத்து மார்க்கங்கள் நெடுகிலும் மட்டும், அடக்கி வைத்திருக்க வேண்டிக் கொரில்லாக்கள் தங்கள் தளப்பிரதேசங்களிலிருந்து கொரில்லா யுத்தத்தைச் சாத்தியமானளவு பரவலாக விரிவுபடுத்தவும் எதிரியின் கொத்தளங்கள் எல்லாவற்றையும் இறுக வளைத்துப் பிடிக்கவும் எதிரியின் வாழ்வைப் பயமுறுத்தி, அவனது மனத்திடத்தை உலுப்புகையிலேயே கொரில்லா யுத்தத்தின் தளப்பிரதேசங்களை விரிவுபடுத்தவும் தம்மாலியன்ற அனைத்தையும் செய்ய வேண்டும். இது அத்தியாவசியம். இங்கு, நாம் கொரில்லா யுத்தத்தில் பத்தாம் பசலிவாதத்தை எதிர்க்க வேண்டும். சொகுசான வாழ்விற்கான அவாவிலிருந்து பிறப்பதாயினும் எதிரியின் பலத்தை மிகைப்படுத்தி மதிப்பிடுவதிலிருந்து பிறப்பதாயினும், பத்தாம் பசலிவாதம் ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தத்தில் இழப்புகளை மட்டுமே கொண்டுவரக் கூடியதும் கொரில்லா யுத்தத்திற்கும் தளப்பிரதேசங்களுக்குமே கூடத் தீங்கானதுமாகும். அதே நேரத்தில் நாம் தளப்பிரதேசங்களை ஸ்திரப்படுத்துவதை மறக்கக் கூடாது; இதிற் பிரதான பணி வெகுஜனங்களை எழுச்சியுறுத்துவதும் அணிதிரட்டுவதும் கொரில்லாக் கூறுகளையும் ஸ்தல ஆயுதப் படைகளையும் பயிற்றுவதுமாகும். இத்தகைய ஸ்திரப்படுத்தல் நீண்டகால யுத்தத்தை நடத்துவதற்கும் அத்துடன் விரிவுபடுத்தலுக்கும் அவசியமானது; ஸ்திரப்படுத்தல் இல்லாவிடில் தீவிரமாக விரிவுபடுத்தல் அசாத்தியம். நாம் எமது கொரில்லா யுத்தத்தில் விரிவுபடுத்தலில் மட்டும் கவனம் செலுத்தி ஸ்திரப்படுத்தல் பற்றி மறந்து விடுவோமானுல்,

நாம் எதிரியின் தாக்குதல்களுக்கு நின்றுபிடிக்க இயலாதவர்களாகி, அதன் விளைவாக விரிவுபடுத்தும் சாத்தியக்கூறைப் பறிகொடுப்பது மட்டுமல்லாமல் தளப்பிரதேசங்கள் இருந்து வருவதையே அபாயத்திலிட்டும் விடுவோம். சரியான கோட்பாடு ஸ்திரப்படுத்தலோடு விரிவுபடுத்தலும் என்பதே; இது எம்மை நாம் தெரிந்தெடுக்கின்ற பிரகாரம் தாக்குதலிலோ தற்காப்பிலோ இறங்க செய்யக் கூடிய ஒரு சிறந்த முறையாகும். நீண்ட கால யுத்தமொன்று உள்ள பட்சத்தில், அதன் விளைவாகத் தளப்பிரதேசங்களை ஸ்திரப்படுத்துவதும் விரிவுபடுத்துவதுமான பிரச்சினை ஒவ்வொரு கொரில்லாக் கூறுக்கும் அடிக்கடி எழுகின்றது. திட்டவட்டமான தீர்வு, இயற்கையாகவே, சூழ்நிலைகளைப் பொறுத்ததுதான். ஒரு சமயத்தில் வலியுறுத்தல் விரிவுபடுத்தலில், அதாவது, கொரில்லாப் பிராந்தியங்களை விஸ்தரிப்பதிலும் கொரில்லாக்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதிலும் இருக்கலாம். மற்ருெரு சமயத்தில் வலியுறுத்தல் ஸ்திரப்படுத்தலில், அதாவது மக்களை ஸ்தாபன அணிதிரட்டுவதிலும் துருப்புக்களைப் பயிற்றுவதிலும் இருக்கலாம். விரிவுபடுத்தலும் ஸ்திரப்படுத்தலும் இயல்பில் வேறுபடுகின்றனவாகையாலும், ராணுவப் பணிகள் வகுத்தலும் பிற பணிகளும் அதன் பிரகாரம் வேறுபடுமாகையாலும் வலியுறுத்தலை நாம் காலத்திற்கும் சூழ்நிலைகளுக்கும் இணங்க மாற்றி மாற்றி வைத்தால் மட்டுமே இந்தப் பிரச்சினையின் பயனுள்ள தீர்வு சாத்தியம்.

### 5. நாமும் எதிரியும் ஒருவரையொருவர் சுற்றிவளைக்கும் வடிவங்கள்

ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தத்தை முழுமையாக எடுத்துக் கொண்டால், நாம் யுத்ததந்திர ரீதியில் எதிரியினுல் சுற்றிவளைக்கப்பட்டிருக்கின்ருேம் என்பதில் ஐயமில்லை, ஏனெனில்

அவன் யுத்ததந்திர ரீதியான தாக்குதலில் ஈடுபட்டும் வெளிப் புற முனைகளில் செயல்பட்டுக்கொண்டும் இருக்கையில் நாம் யுத்ததந்திர ரீதியான தற்காப்பில் ஈடுபட்டும் உட்புற முனைக ளில் செயல்பட்டுக்கொண்டும் இருக்கின்றோம். இதுவே எதிரி எம்மைச் சுற்றிவளைப்பதன் முதலாவது வடிவம். நாம் தனித் தனியான மார்க்கங்கள் வழியே எம்மீது படையெடுத்து வரும் எதிரிப் படை அணிகள் ஒவ்வொன்றையும் சுற்றிவளைக்கின் றோம், ஏனெனில் நாம் வெளிப்புற முனைகளிலிருந்து எம்மீது படையெடுத்து வரும் இந்த எதிரிப் படை அணிகளுக்கு எதி ராக எண்ணிக்கையில் மிகையான படைகளை உபயோகிப்ப தன் மூலம் போர்நடவடிக்கைகளிலும் சண்டைகளிலும் தாக் குதலும் வெளிப்புறமுனை நடவடிக்கைகளுமாகிய கொள்கை யைப் பிரயோகிக்கின்றோம். இதுவே எதிரியை நாம் சுற்றிவ ளைப்பதின் முதலாவது வடிவம். அடுத்து, எதிரியின் பின் புறத்திலான கொரில்லாத் தளப்பிரதேசங்களை எடுத்துக் கொண் டோமானால், தனித் தனியாக எடுத்துக் கொள்ளப்படும் போது ஒவ்வொரு தளப்பிரதேசமும், வூதை மலைப் பிரதேசத்தைப் போல் எல்லாப் பக்கங்களிலும், அல்லது வடமேற்கு ஷன்சிப் பகுதியைப் போல் மூன்று பக்கங்களில், எதிரியால் சூழப் பட்டிருக்கின்றது. இதுவே எதிரி எம்மைச் சுற்றிவளைக்கும் இரண்டாவது வடிவம். இருப்பினும், ஒருவர் கொரில்லாத் தளப்பிரதேசங்கள் எல்லாவற்றையும் ஒன்றாகவும் கிரமமான படைகளின் சண்டை முனைகளுடனான அவற்றின் தொடர் பிலும் எடுத்துக்கொண்டாரெனில், நாம் பெருந் தொகை யான எதிரிப் படைகளைச் சூழ்ந்திருக்கின்றோம் என்பதை அவர் காண்பார். உதாரணமாக, ஷன்சி மாகாணத்தில் நாம் தா தொங்-பூசௌ புகையிரத மார்க்கத்தை மூன்று பக்கங்களிலும்

(கிழக்கு, மேற்குப் பக்கவாடுகளிலும் தெற்கு அந்தத்திலும்), தையுவான் நகரை எல்லாப் பக்கங்களிலும் சூழ்ந்துள்ளோம்; ஹோபெய், ஷன்துங் மாகாணங்களிலும் இவைபோன்ற உதாரணங்கள் பல உள்ளன. இதுவே நாம் எதிரியைச் சுற்றிவளைப்பதின் இரண்டாவது வடிவம். இவ்வாருக எதிரிப் படைகள் சுற்றிவளைப்பதன் வடிவங்கள் இரண்டும், எம் சொந்தப் படைகள் சுற்றிவளைப்பதன் வடிவங்கள் இரண்டும் — பெரிதும் ஒரு வெய்சி[8] ஆட்டத்திற் போல — உள்ளன. இரு தரப்புகளும் நடத்தும் போர்நடவடிக்கைகளும் சண்டைகளும் ஒருவர் மற்றவரின் ஆட்டக் காய்களைக் கைப்பற்றுவதை ஒத்திருக்கின்றன, எதிரி கொத்தளங்கள் ஸ்தாபிப்பதும் நாம் கொரில்லாத் தளப்பிரதேசங்கள் ஸ்தாபிப்பதும் ஆட்டப்பலகையில் கட்டங்களை ஆதிக்கம் செய்ய காய்களை நகர்த்துவதை ஒத்திருக்கின்றன. ''கட்டங்களை ஆதிக்கம் செய்யும்'' விஷயத்தில் தான் எதிரியின் பின்புறத்திலான கொரில்லாத் தளப்பிரதேசங்களின் யுத்ததந்திரரீதியான பெரும் பங்கு வெளிப்படுகிறது. ஒருபுறம் தேசத்தின் ராணுவ அதிகாரிகளும் இன்னொரு புறம் சகல பகுதிகளிலுமுள்ள கொரில்லாத் தளகர்த்தர்களும் எதிரி முனைகளுக்குப் பின்புறத்தில் கொரில்லா யுத்தத்தை விருத்தி செய்வதையும் சாத்தியமான இடங்களிலெல்லாம் தளப்பிரதேசங்களை ஸ்தாபிப்பதையும் நிகழ்ச்சி நிரலில் இடவும், இதனை யுத்ததந்திர ரீதியான ஒரு பணியாக நிறைவேற்றவும் வேண்டியே நாம் ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தத்தில் இப்பிரச்சினையை எழுப்புகின்றோம். சர்வதேச மட்டத்தில் எம்மால் சீனவை ஒரு யுத்ததந்திர ரீதியான கூருகவும் சோவியத் யூனியனையும் சேரக்கூடிய பிற நாடுகளையும் பிற யுத்ததந்திர ரீதியான கூறுகளாகவும் கொண்டு பசிபிக் பிராந்தியத்தில் ஜப்பானிய-எதிர்ப்பு

ஐக்கிய முன்னணியொன்றைச் சிருஷ்டிக்க முடிந்தால், அப்போது எமக்கு எதிராக எதிரியிடம் உள்ள சுற்றிவளைத்தல் வடிவங்களை விடக் கூடுதலாக அவனுக்கு எதிராக எம்மிடம் ஒரு சுற்றிவளைத்தல் வடிவம் இருக்கும்; நாம் பாஸிஸ ஜப்பானைச் சுற்றிவளைக்கவும் அழிக்கவுமான வெளிப்புறமுனை நடவடிக்கைகளைப் பசிபிக் பிராந்தியத்தில் ஏற்படுத்துவோம். இயல்பாக, இது தற்போது இன்னும் நடைமுறை முக்கியத்துவம் கொண்டதாகவில்லை. ஆனால் இத்தகைய ஒரு சாத்தியப்பாடு அசாத்தியமானதல்ல.

## அத்தியாயம் VII

## கொரில்லா யுத்தத்தில் யுத்ததந்திர ரீதியான தற்காப்பும் யுத்ததந்திர ரீதியான தாக்குதலும்

கொரில்லா யுத்தத்தில் யுத்ததந்திரத்தின் நான்காவது பிரச்சினை யுத்ததந்திர ரீதியான தற்காப்பும் யுத்ததந்திர ரீதியான தாக்குதலும் சம்பந்தமானது. இது நாம் முதற் பிரச்சினை பற்றிய எமது விவாதத்தில் பிரஸ்தாபித்த தாக்குதல் யுத்தக் கொள்கை நாம் ஜப்பானிய-எதிர்ப்புக் கொரில்லா யுத்தத்தில் தற்காப்பில் ஈடுபட்டிருக்கையிலும் தாக்குதலில் ஈடுபட்டிருக்கையிலும் எவ்வாறு நடைமுறையில் நிறைவேற்றப்படுவது என்ற பிரச்சினையாகும்.

தேச-விசால யுத்ததந்திர ரீதியான தற்காப்பிற்குள் அல்

லது யுத்ததந்திர ரீதியான தாக்குதலுக்குள் (மேலும் சரியாகக் கூறுவதானால், யுத்ததந்திர ரீதியான எதிர்த்தாக்குதலுக்குள்), ஒவ்வொரு கொரில்லாத் தளப்பிரதேசத்துக்குள்ளும் அதைச் சுற்றியும் சிறிய அளவிலான யுத்ததந்திர ரீதியான தற்காப்புகளும் தாக்குதல்களும் இடம்பெறுகின்றன. யுத்ததந்திர ரீதியான தற்காப்பு என்பதால் நாம் கருதுவது எதிரி தாக்குதலிலும் நாம் தற்காப்பிலும் ஈடுபட்டிருக்கையிலான எமது யுத்ததந்திர ரீதியான நிலைமையையும் கொள்கையையுமாகும்; யுத்ததந்திர ரீதியான தாக்குதல் என்பதால் நாம் கருதுவது எதிரி தற்காப்பிலும் நாம் தாக்குதலிலும் ஈடுபட்டிருக்கையிலான எமது யுத்ததந்திர ரீதியான நிலைமையையும் கொள்கையையுமாகும்.

## 1. கொரில்லா யுத்தத்தில் யுத்ததந்திர ரீதியான தற்காப்பு

கொரில்லா யுத்தம் வெடித்துக் கணிசமான ஒரு அளவுக்கு வளர்ந்த பின்னர் எதிரி, விசேஷமாக எமது நாடு முழுமைக்கும் எதிரான அவனது யுத்ததந்திர ரீதியான தாக்குதல் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு அவன் தான் கைப்பற்றிய பகுதிகளைப் பாதுகாத்துக்கொள்ளும் கொள்கையைக் கைக்கொள்ளும் காலகட்டத்தில், தவிர்க்க முடியாதபடி கொரில்லாத் தளப்பிரதேசங்களைத் தாக்குவான். இத்தகைய தாக்குதல்கள் தவிர்க்க முடியாதவை என்பதை உணர்வது அத்தியாவசியம், ஏனெனில் இன்றேல் கொரில்லாத் தளகர்த்தர்கள் முற்றாகக் காத்திராப் பிரகாரம் அகப்பட்டுக் கொண்டு, கடுமையான எதிரித் தாக்குதல்களின் முன்னிலையில் ஐயத்திற்கிடமின்றி அச்

சமும் குழப்பமும் உறுவர், அவர்களின் படைகளும் தோற் கடிக்கப்படும்.

கொரில்லாக்களேயும் அவர்களின் தளப்பிரதேசங்களேயும் அழித்தொழிப்பதற்கு எதிரி பல சமயம் குவிந்த தாக்குதல்களே நாடுகிறுன். உதாரணமாக, வூதை மலேப் பிரதேசத்திற்கு எதிராக நடத்தப்பட்ட நான்கைந்து ''தண்டிக்கும் படையெடுப்புக''ளில் ஒவ்வொன்றிலும் எதிரி ஒரே நேரத்தில் மூன்று, நான்கு, அல்லது ஆறு, ஏழு வியூகங்களில் கூடத் திட்டமிட்டு முன்னேறினுன். எவ்வளவுக்குக் கொரில்லா யுத்தத்தின் அளவு பெரிதாயும் தளப்பிரதேசங்களின் ஸ்தானம் அதிக முக்கியமான தாயும், எதிரியின் யுத்ததந்திர ரீதியான தளங்களுக்கும் ஜீவா தாரமான தொடர்பு மார்க்கங்களுக்கும் அபாயம் பெரிதாகவும் உள்ளதோ அவ்வளவுக்கு கொரில்லாக்களுக்கும் தளப்பிரதே சங்களுக்கும் எதிரான எதிரியின் தாக்குதல்கள் அதிக உக்கிர மாக இருக்கும். ஆகவே, கொரில்லாப் பகுதியொன்றின் மீதான எதிரியின் தாக்குதல்கள் எவ்வளவு அதிகம் உக்கிரமான தாக இருக்கின்றதோ அவ்வளவுக்கு அங்கு கொரில்லா யுத்தம் வெற்றிகரமாயுள்ளது என்பதற்கும் கிரமமான சண்டையிடுதலோடு பயனுள்ள விதத்தில் இணேப்படுத்தப்படுகின்றது என் பதற்கும் அது அறிகுறியாகும்.

எதிரி பல வியூகங்களாக ஒரு குவிந்த தாக்குதலேத் தொடுக் கும் போது கொரில்லாக் கொள்கை அதை எதிர்த்தாக்குதலால் துகளாக்குவதாக இருக்க வேண்டும். பல திசைகளிலிருந்து முன்னேறும் எதிரி வியூகம் ஒவ்வொன்றும், பெரியதோ சிறியதோ, ஒரு கூறினுல் மட்டும் ஆனதாகவும் பின் தொடர்ந்து வரும் கூறுகள் இல்லாததாகவும், முன்னேறும் வழி நெடுகில் துருப்புக்களே நிறுத்தி வைக்கவோ, கோட்டைகள் கட்டவோ,

மோட்டார் வாகன வீதிகள் கட்டவோ இயலாததாகவும் இருந் தால் இத்தகைய குவிந்த தாக்குதல் இலகுவாகத் துகளாக்கப் படமுடியும். எதிரி குவிந்த தாக்குதலொன்றைத் தொடுக்கும் போது, அவன் தாக்குதலிலீடுபட்டும் வெளிப்புறமுனைகளில் இயங்கிக்கொண்டும் இருக்கையில் நாம் தற்காப்பிலீடுபட்டும் உட்புற முனைகளில் இயங்கிக்கொண்டும் இருக்கின்றோம். எமது பணி-வகுத்தல்கள் சம்பந்தப்பட்ட வரையில், நாம் எமது இரண்டாம் பட்சமான படைகளை எதிரி வியூகங்கள் பலவற்றை நகரவிடாது தடுத்து வைத்திருக்க உபயோகிக்கையில் எமது பிரதான படை தனி ஒரு எதிரி வியூகத்திற்கு எதிரான ஒரு போர் நடவடிக்கையில் அல்லது சண்டையில், அது நகர்ந்து கொண்டிருக்கும் போது அதைச் சாடி, எதிர்பாராத் தாக்குதல் கள் (பிரதானமாகக் காத்திருந்து தாக்கும் வடிவில்) தொடுக்க வேண்டும். எதிரி பலமானவனுனலும், திரும்பத் திரும்பச் செய்யப்படும் எதிர்பாராத் தாக்குதல்களினுல் அவன் பலவீ னப்படுத்தப்படுவான், பல சமயங்களில் பாதி வழியில் வாப ஸாகியும் விடுவான்; கொரில்லாக் கூறுகள் துரத்திச் செல் கையில் மேலும் எதிர்பாராத் தாக்குதல்கள் செய்து அவனை மேற்கொண்டும் பலவீனப்படுத்தலாம். எதிரி பொதுவாகத் தன் தாக்குதலை நிறுத்த, அல்லது வாபஸாகத் தொடங்க முன்னம் எமது தளப்பிரதேசங்களிலான மாவட்டப் பட்டி னங்களை அல்லது பிற பட்டினங்களைக் கைப்பற்றுகிறுன்; நாம் இம்மாவட்டப் பட்டினங்களையும் பட்டினங்களையும் சுற்றிவ ளைத்து, அவனது தானிய வரத்தை நிறுத்தவும் அவனது தொடர்புகளைத் துண்டிக்கவும் வேண்டும். அவன் தாக்குப் பிடிக்க முடியாது போய்ப் பின்வாங்கத் தொடங்கும் போது நாம் அச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அவனைத் துரத்தித்

தாக்க வேண்டும். ஒரு வியூகத்தைத் துகளாக்கிய பின்னர் நாம் மற்றொன்றைத் துகளாக்குவதற்கு எமது படைகளை நகர்த்தவும், அவற்றை ஒவ்வொன்றாகத் துக்ளாக்குவதன் மூலம் எதிரியின் குவிந்த தாக்குதலைத் தகர்க்கவும் வேண்டும்.

ஊதை மலைப் பிரதேசம் போன்ற ஒரு பெரிய தளப்பிரதேசம், ஒவ்வொன்றும் சுதந்திரமாக இயங்குபவையான தன் சொந்த ஆயுதப் படைகளைக் கொண்டவையான நான்கு அல்லது ஐந்து அல்லது அதற்கும் மேற்பட்ட ''ராணுவ உப-பகுதிக''ளாகப் பிரிக்கப்பட்ட ஒரு ராணுவப் பகுதியை ஆக்குகிறது. மேலே வர்ணிக்கப்பட்ட தந்திரோபாயங்களைப் பிரயோகித்ததன் மூலம் இப்படைகள் பல சமயம், ஒரே நேரத்திலோ அல்லது அடுத்தடுத்தோ, எதிரியின் தாக்குதல்களைத் துகளாக்கியுள்ளன.

எதிரியின் குவிந்த தாக்குதலொன்றிற்கு எதிரான எமது நடவடிக்கைத் திட்டத்தில் நாம் பொதுவாக எமது பிரதான படையை உட்புற முனைகளில் இடுகிறோம். ஆனால் எமக்கு மேல் மிச்சமாகப் பலம் உள்ள போது நாம் (மாவட்ட அல்லது டிஸ்திரிக்ட் கொரில்லாக் கூறுகளை, அல்லது பிரதான படையின் பிரிவுகளையே கூட) எமது இரண்டாம் பட்சமான படைகளை எதிரியின் தொடர்புகளைச் சீர்குலைப்பதற்கும் அவனது மேலதிகப் படை பலத்தை நகரவிடாது தடுத்து வைப்பதற்குமாக வெளிப்புற முனைகளில் உபயோகிக்க வேண்டும். எதிரி எமது தளப்பிரதேசத்தில் நகராது தங்கிவிட்டால் நாம் மேல் கூறப்பட்ட தந்திரோபாயங்களை மறுபுறமாகத் திருப்பிப் பிரயோகிக்கலாம், அதாவது, எதிரியைச் சுற்றிவளைக்க எமது படைகளிற் சிலவற்றைத் தளப்பிரதேசத்தில் விட்டுவிட்டு, எதிரியை வாபஸாகி எமது பிரதான படையைத் தாக்கும்படி

தூண்டுவதற்காக அவன் எங்கிருந்து வந்தாளே அந்தப் பிர தேசத்தைத் தாக்கவும் அங்கு எமது நடவடிக்கைகளைத் தீவி ரப்படுத்தவும் பிரதான படையை உபயோகிக்கலாம்; இது தான் ''வெய் ராஜ்யத்தை முற்றுகையிடுவதன் மூலம் சாஓ ராஜ்யத்தை விடுபடச் செய்யும்''9 தந்திரோபாயம்.

குவிந்த தாக்குதலொன்றிற்கு எதிரான நடவடிக்கைகளின் போது, ஸ்தல ஜப்பானிய-எதிர்ப்புத் தற்காப்புக் கோர்களும் எல்லா வெகுஜன ஸ்தாபனங்களும் நடவடிக்கைக்கு அணிதி ரளவும் எதிரிக்கெதிராகச் சண்டை செய்ய எமது துருப் புக்களுக்குச் சகல வழிகளிலும் உதவவும் வேண்டும். எதிரி யுடன் சண்டை செய்வதில், ஸ்தல ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்துவது, சாத்தியமானவரை ''எமது தற்காப்பு ஏற் பாடுகளைப் பலப்படுத்துவதும் வயல்களைத் துப்புரவாக்குவதும்'' இரண்டும் முக்கியம். முன்னையதன் நோக்கம் தேசத் துரோகி களை அடக்கி, எதிரி தகவல் பெருதபடி தடுப்பதும், பின்னை யதின் நோக்கம் (எமது தற்காப்பு ஏற்பாடுகளைப் பலப்படுத் துவதால்) எம் சொந்த நடவடிக்கைகளுக்குத் துணை செய் வதும் (வயல்களைத் துப்புரவாக்குவதால்) எதிரி உணவு பெரு தபடி தடுப்பதும் ஆகும். வயல்களைத் துப்புரவாக்குவது என் பதன் பொருள் பயிர்களை, அவை முதிர்ந்ததும், அறுவடை செய்வது என்பதாகும்.

எதிரி பின்வாங்கும் போது, அவன் பல சமயம் கொரில் லாத் தளப்பிரதேசங்களை அழிக்கும் நோக்கத்துடன், தான் கைப்பற்றிய நகரங்களிலும் பட்டினங்களிலுமுள்ள வீடுகளை எரித்து, தன் பாதை நெடுகிலுமுள்ள கிராமங்களையும் தரை மட்டமாக்குகின்றுன்; ஆனுல் அவ்வாறு செய்வதில் அவன் தனது அடுத்த தாக்குதலில் தனக்கே தங்குமிடங்களும் உண

வும் இல்லாமற் செய்து கொள்கின்ருன், சேதம் அவன் தலை யிலேயே போய் விடிகிறது. இது ஒரே காரியம் முரண்பாடான இரு அம்சங்களைக் கொண்டிருக்கிறது என்று நாம் கருதுவதற் குத் திட்டவட்டமான ஒரு உதாரணமாகும்.

திரும்பத் திரும்ப நடவடிக்கைகளெடுத்த பின்னும் எதிரி யின் கடும் குவிந்த தாக்குதல்களைத் தகர்ப்பது அசாத்தியமாகப் போனாலன்றிக் கொரில்லாத் தளகர்த்தர் ஒருவர் தன் தளப் பிரதேசத்தைக் கைவிட்டு மற்ருென்றிற்கு நகர எண்ணக் கூடாது. இந்தச் சூழ்நிலைகளில் அவர் நன்னம்பிக்கையீனத் திற்கு எதிராக எச்சரிக்கையாக இருக்க வேண்டும். தலைவர்கள் கோட்பாட்டு விஷயங்களில் பெருந் தவறுகளிழைக்காதவரை, மலைகளடர்ந்த பிரதேசங்களில் குவிந்த தாக்குதல்களைத் துக ளாக்கி தளப்பிரதேசங்களை விடாது வைத்திருப்பது பொது வாகச் சாத்தியம். சமவெளிகளில் மட்டுமே கடுமையான குவிந்த தாக்குதலொன்றை எதிர்ப்பட்ட போது கொரில்லாத் தளகர்த்தர் குறிப்பான சூழ்நிலைகளின் ஒளியில் பின்வரும் விஷ யங்களை அதாவது, அங்கு உதிரியான நடவடிக்கைகளுக்குப் பல சிறு கொரில்லாக் கூறுகளை விட்டுவிட்டு, எதிரியின் பிரதான படைகள் ஒருகால் வெளியேறியதும் திரும்பி வந்து சமதரை களிலான தம் நடவடிக்கைகளைத் திரும்பத் தொடங்கக் கூடி யதாயிருக்கப் பெரிய கொரில்லா வியூகங்களை ஏதேனுமொரு மலையடர்ந்த பகுதிக்குத் தற்காலிகமாக நகர்த்துவதை யோசிக்க வேண்டும்.

பொதுவாகக் கூறினுல், கோமிந்தாங் உள்நாட்டு யுத்தக் காலத்தில் உபயோகித்த கோட்டை யுத்த முறையை ஜப்பானி யரால் கைக்கொள்ள முடியாது, ஏனெனில் சீனுவின் பிரமாண் டமான பிரதேசத்தோடு பார்க்கையில் அவர்களின் படைகள்

போதாது. இருப்பினும், அவர்கள் தங்கள் ஜீவாதாரமான ஸ்தானங்களுக்குக் குறிப்பான ஒரு ஆபத்தை ஏற்படுத்துபவையான கொரில்லாத் தளப்பிரதேசங்களுக்கு எதிராக அதை ஓரளவுக்கு உபயோகிக்கக் கூடும் என்ற சாத்தியக்கூறையும் கணக்கிலெடுக்க வேண்டும், ஆனால் அத்தகைய சூழ்நிலைகளில் கூட நாம் அப்பகுதிகளில் கொரில்லா யுத்தத்தைத் தொடர்ந்து நடத்தத் தயாராக இருக்க வேண்டும். உள்நாட்டு யுத்தத்தின் போது கொரில்லா யுத்தத்தைத் தொடர்ந்து நடத்த இயன்ற அனுபவம் எமக்கு இருந்துள்ளதாகையால், இயற்கையாக தேசிய யுத்தமொன்றில் அவ்வாறு செய்ய எமக்கு இன்னும் அதிக வலிமை இருப்பதையிட்டுச் சிறிதும் ஐயமில்லை. ஏனெனில் ஒப்புநோக்கான ராணுவ பலத்தைப் பொறுத்தவரை எதிரியால் எமது தளப்பிரதேசங்களிற் சிலவற்றிற்கு எதிராக அளவிலும் தரத்திலும் மிக உயர்வான படைகளைச் செலுத்த இயலுமாயினும், எமக்கும் எதிரிக்குமிடையிலான தீர்க்க முடியாத தேசிய முரண்பாடும் அவனது படைத் தலைமையின் தவிர்க்க முடியாத பலவீனங்களும் எஞ்சியிருக்கவே செய்கின்றன. எமது வெற்றிகள் வெகுஜனங்கள் மத்தியிலான பூரணமான வேலையையும் எமது நடவடிக்கைகளிலான வளைந்து கொடுக்கும் தந்திரோபாயங்களையும் அடித்தளமாகக் கொண்டவை.

## 2. கொரில்லா யுத்தத்தில் யுத்ததந்திர ரீதியான தாக்குதல்

நாம் எதிரித் தாக்குதலொன்றைத் தகர்த்த பின், எதிரி புதிய தாக்குதலொன்றைத் தொடுக்குமுன், அவன் யுத்ததந்

திர ரீதியான தற்காப்பிலும் நாம் யுத்ததந்திர ரீதியான தாக்குதலிலும் ஈடுபட்டிருக்கின்றோம்.

இத்தகைய சமயங்களில் எமது நடவடிக்கைக் கொள்கை, தற்காப்பு ஸ்தானங்களில் நிலைகொண்டுள்ளவையும் நாம் தோற்கடிப்பது நிச்சயமில்லாதவையுமான எதிரிப் படைகளைத் தாக்குவதல்ல, மாருக, சிற்சில பகுதிகளிலுள்ள சிறியவையும் அவற்றைக் கையாள எமது கொரில்லாக் கூறுகளின் பலம் போதுமாயுள்ளவையுமான எதிரிக் கூறுகளையும் தேசவிரோதப் படைகளையும் ஒழுங்குமுறையாக அழிப்பது அல்லது விரட்டியடிப்பதும், எமது கைவசமுள்ள பகுதிகளை விஸ்தரிப்பதும், ஜப்பானுக்கு எதிரான போராட்டத்திற்கு வெகுஜனங்களை எழுச்சியுறுத்துவதும், எமது துருப்புக்களில் குறைந்தவற்றை நிரப்புவதும் பயிற்றுவதும், புதிய கொரில்லாக் கூறுகளை அணிதிரட்டுவதுமே. இந்தப் பணிகள் ஓரளவுக்கு நிறைவேற்றப்பட்டிருக்கும் போது எதிரி இன்னும் தற்காப்பிலேயே ஈடுபட்டிருந்தாளுல் நாம் எமது கைவசமுள்ள புதிய பகுதிகளை மேற்கொண்டும் விரிவுபடுத்தவும், எதிரி பலவீனமாக அரண் செய்யப்பட்ட நகரங்களையும் தொடர்பு மார்க்கங்களையும் தாக்கவும், சூழ்நிலைகளுக்கேற்ப நீண்டகாலமாக அல்லது தற்காலிகமாக அவற்றைப் பிடித்து வைத்திருக்கவும் கூடும். இவை எல்லாம் யுத்ததந்திர ரீதியான தாக்குதலின் பணிகள்; இவற்றின் நோக்கம் நாம் எமது சொந்த ராணுவ, வெகுஜன பலத்தைப் பயனுள்ள விதத்தில் கட்டி வளர்க்கவும், எதிரியின் பலத்தைப் பயனுள்ள விதத்திற் குறைக்கவும், எதிரி மீண்டும் தாக்குதலொன்றைத் தொடுக்கும் போது அவனை ஒழுங்குமுறையாகவும் தீவிரமாகவும் துகளாக்குவதற்குத் தயார்செய்யவும் கூடி

யதாக, எதிரி தற்காப்பில் ஈடுபட்டிருக்கின்றமையைச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்வது தான்.

எமது துருப்புக்களை இளைப்பாறச்செய்வதும் பயிற்றுவதும் அத்தியாவசியம்; அவ்வாறு செய்வதற்கு மிகச் சிறந்த சமயம் எதிரி தற்காப்பில் ஈடுபட்டுள்ள சமயமே. இது இளைப்பாறுதலுக்கும் பயிற்சிக்குமாக நாம் மற்றெல்லாவற்றிலுமிருந்து ஒதுங்கிக் கொள்வதல்ல, மாறாக எமது பகுதிகளை விரிவுபடுத்துகையிலும் சிறு எதிரிக் கூறுகளை அழிக்கையிலும் மக்களை எழுச்சியுறுத்துகையிலும் இளைப்பாறுதலுக்கும் பயிற்சிக்கும் காலம் தேடிக் கொள்வது தான். இதுவே சாதாரணமாக உணவுப் பண்டங்கள், படுக்கைகள், ஆடைகள் முதலியன பெறுவதான கஷ்டமான பிரச்சினையைக் கையாள்வதற்கான சமயமும் ஆகும். இது எதிரியின் தொடர்பு மார்க்கங்களைப் பெரிய அளவில் அழிப்பதற்கும் அவனது போக்குவரத்தைத் தடங்கல்படுத்துவதற்கும் கிரமமான படைகளின் போர்நடவடிக்கைகளில் அவற்றுக்கு நேரடியான ஆதரவு தருவதற்குமான சமயமும் ஆகும்.

இத்தகைய சமயங்களில் கொரில்லாத் தளப்பிரதேசங்களும் கொரில்லாப் பிராந்தியங்களும் கொரில்லாக் கூறுகளும் மிகுந்த உற்சாகத்துடனிருக்கின்றன, எதிரியால் விநாசம் செய்யப்பட்ட பகுதிகளும் சிறிது சிறிதாக புனரமைக்கவும் புனர்வாழ்வளிக்கவும் படுகின்றன. எதிரியாற் கைப்பற்றப்பட்டிருக்கும் பிரதேசங்களின் மக்களும் மகிழ்ச்சியுடனிருக்கின்றனர், கொரில்லாக்களின் கீர்த்தி எங்கும் பரவுகின்றது. மறுபுறத்தில், எதிரியினதும் அவனது ஏவல் நாய்களான தேசத் துரோகிகளினதும் முகாமில், பயப்பிராந்தியும் சீரழிவும் வளர்கையில், அவர்களுக்குக் கொரில்லாக்களிடத்தும் அவர்களின் தளப்பிரதேசங்கள்

மீதும் குரோதமும் வளர்கிறது, கொரில்லா யுத்தத்திற்கு எதிரான அவர்களின் தயாரிப்புகள் உக்கிரப்படுத்தப்படுகின்றன. ஆகவே, யுத்ததந்திர ரீதியான தாக்குதலின் போது கொரில்லாத் தளகர்த்தர்கள் எதிரியைக் குறைத்து மதிப்பிட்டும், தங்கள் சொந்த அணிகளில் ஐக்கியத்தைப் பலப்படுத்தவும் தங்கள் தளப்பிரதேசங்களையும் தங்கள் படைகளையும் ஸ்திரப்படுத்தவும் மறந்தும் விடுகின்ற அளவுக்கு மகிழ்ச்சிப் போதையுற்று விடுவது அனுமதிக்க முடியாதது. இத்தகைய சமயங்களில் அவர்கள், எமக்கு எதிரான புதிய தாக்குதல் எதுவும் வரும் கணமே தாம் தமது யுத்ததந்திர ரீதியான தாக்குதலை ஒழுங்குடன் முடித்துக் கொண்டு யுத்ததந்திர ரீதியான தற்காப்பிற்கு மாறவும் அவ்வாறாக எதிரியின் தாக்குதலைத் துகளாக்கவும் கூடியதாயிருக்க, அந்தத் தாக்குதலுக்கான அறிகுறிகள் தென்படுகின்றனவா என்று பார்க்க எதிரியின் ஒவ்வொரு செய்கையையும் திறமையுடன் அவதானிக்க வேண்டும்.

## அத்தியாயம் VIII

### கொரில்லா யுத்தம் நடமாட்ட யுத்தமாக அபிவிருத்தியடைதல்

ஜப்பானிய-எதிர்ப்புக் கொரில்லா யுத்தத்தில் யுத்ததந்திரத்தின் ஐந்தாவது பிரச்சினை நடமாட்ட யுத்தமாக அது அபிவிருத்தியடைவதாகும். யுத்தம் நீண்டதும் ஈவிரக்கமற்றதுமாகையால் இந்த அபிவிருத்தியின் அவசியமும் சாத்தியமும் ஏற்படுகின்

றன. சீனு விரைவாக ஜப்பானிய படையெடுப்பாளர்களைத் தோற்கடிக்கவும் இழக்கப்பட்ட தன் பிரதேசங்களைத் திரும்பக் கைப்பற்றவும் முடியுமானுல், யுத்தமும் நீண்டதுமல்லாமல் ஈவிரக்கமற்றதுமல்லாமல் இருந்தால், கொரில்லா யுத்தம் நடமாட்ட யுத்தமாக அபிவிருத்தியடைதல் அவசியமாக இராது. ஆனுல் அதற்கு மாருக யுத்தம் நீண்டதும் ஈவிரக்கமற்றதுமாக இருப்பதால், கொரில்லா யுத்த முறை நடமாட்ட யுத்த முறையாக அபிவிருத்தியடைவதாற் தவிரத் தன்னை இத்தகைய ஒரு யுத்தத்திற்கு ஏற்ப மாற்றிக்கொள்ள முடியாது. யுத்தம் நீண்டதும் ஈவிரக்கமற்றதுமாகையால், கொரில்லாக் கூறுகள் அவசியமான புடமிடலுக்கு உட்பட்டுத் தம்மைச் சிறிது சிறிதாகக் கிரமமான படைகளாக மாற்றிக்கொள்வதும், அவ்வாருக அவற்றின் நடவடிக்கை முறைகள் சிறிது சிறிதாகக் கிரமப்படுத்தப்படுவதும் கொரில்லா யுத்தம் நடமாட்ட யுத்தமாக அபிவிருத்தியடைவதும் சாத்தியம். கொரில்லாத் தளகர்த்தர்கள் கொரில்லா யுத்தத்தை நடமாட்ட யுத்தமாக மாற்றும் கொள்கையில் விடாப்பிடியாக இருக்கவும் அதை ஒழுங்குமுறையாக நிறைவேற்றவும் வேண்டுமாயிருந்தால், அவர்கள் இந்த அபிவிருத்தியின் அவசியமான தன்மையையும் சாத்தியமான தன்மையையும் தெளிவாக உணர வேண்டும்.

வூதை மலைப் பிரதேசம் போன்ற பல இடங்களில் தற்போதைய கொரில்லா யுத்தத்தின் வளர்ச்சிக்குக் காரணம் கிரமமான படைகளால் அங்கு அனுப்பப்பட்ட பலமான படைப் பிரிவுகளாகும். அங்கான நடவடிக்கைகள், பொதுவிற் கொரில்லாத் தன்மையானவையாயினும், ஆரம்பந் தொட்டே நடமாட்ட யுத்தத்தின் அம்சத்தையும் உள்ளடக்கியிருந்துள்ளன. இந்த அம்சம் யுத்தம் நடைபெறுகையில் சிறிது சிறிதாக அதி

கரிக்கும். இதுதான் தற்போதைய ஜப்பானிய-எதிர்ப்புக் கொரில்லா யுத்தத்தின் சாதக அம்சம்; இச்சாதக அம்சம் கொரில்லா யுத்தத்தின் விரைவான விஸ்தரிப்பை மட்டுமின்றி, அது மேலும் உயர்ந்த ஒரு மட்டத்திற்கு அபிவிருத்தியடைவதையும் சாத்தியமாக்கும். இவ்வாருக, கொரில்லா யுத்தத்திற்கான சூழ்நிலைகள் மூன்று வடகிழக்கு மாகாணங்களிலுமிருந்தவற்றைவிட மிக உயர்வாக உள்ளன.

கொரில்லா யுத்தம் நடத்தும் கொரில்லாக் கூறுகளை நடமாட்ட யுத்தம் நடத்தும் கிரமமான படைகளாக மாற்றுவதற்கு, எண்ணிக்கையில் அதிகரிப்பு, தரத்திற் சிறப்படைவு ஆகிய இரு நிபந்தனைகளும் பூர்த்திபெற வேண்டும். படைகளிற் சேர மக்களை நேரடியாக அணிதிரட்டுவது போக, சிறு கூறுகளை ஒன்று சேர்ப்பதாலும் கூடிய எண்ணிக்கை அடையப்படலாமாகையில், மேலும் சிறந்த தரம் யுத்தத்திஞூடாகப் போராளிகளை உரமேற்றுவதிலும் அவர்களின் ஆயுதங்களைச் சிறப்பாக்குவதிலும் தங்கியுள்ளது.

சிறு கூறுகளை ஒன்று சேர்ப்பதில் நாம் ஒருபுறம், கவனம் பிரத்தியேகமாக ஸ்தல நலன்களிற் செலுத்தப்பட்டு மத்திப்படுத்தல் தடங்கலுறுவதான ஸ்தலவாதத்திற்கு எதிராகவும், மறுபுறம் ஸ்தல நலன்கள் சட்டை செய்யாது ஒதுக்கித் தள்ளப்படுவதான சுத்த ராணுவக் கண்ணேட்டத்திற்கு எதிராகவும் எச்சரிக்கையுடனிருக்க வேண்டும்.

ஸ்தலவாதம் ஸ்தலக் கொரில்லாக் கூறுகள் மத்தியிலும் ஸ்தல அரசாங்கங்கள் மத்தியிலும் இருக்கின்றது; அவை பல சமயம் ஸ்தல நலன்களிற் கண்ணும் கருத்துமாகப் பொதுவான நலன்களைப் புறக்கணித்து, அல்லது பெரிய குழுக்களாகச் சேர்ந்து செயலாற்றுவதிற் பரிச்சயமற்றிருப்பதால் ஒவ்வொன்

றும் தனியாகச் செயல்படுவதை விரும்புபவையாக இருந்து விடுகின்றன. பிரதான கொரில்லாக் கூறுகளின் அல்லது கொரில் லா வியூகங்களின் தளகர்த்தர்கள் இச்சூழ்நிலைகளைக் கணக்கில் எடுக்கவும், ஸ்தலங்களை அவற்றின் படைகளில் சிறிதளவை வைத்துக்கொள்ளவும் அவற்றின் கொரில்லா யுத்தத்தை தொடர்ந்து விரிவுபடுத்தவும் விட்டுவிட்டு, ஸ்தலக் கூறுகளில் ஒரு பகுதியைச் சிறிது சிறிதாக ஒன்று சேர்ப்பதான முறை யைக் கைக்கொள்ளவும் வேண்டும்; தளகர்த்தர்கள் முதலில் சிறு குழுக்கள் உராசலின்றிப் பெரிய கோஷ்டியில் ஒன்றக் கூடியதாக இந்தக் கூறுகளைக் கூட்டான நடவடிக்கைகளில் ஈடுபடுத்தவும், பின்னர் அவற்றின் ஆதியிலிருந்த அமைப்பைத் தகர்க்காமலும் அவற்றின் இயக்குனர்களை இட, பதவி மாற் றங்கள் செய்யாமலும் அவற்றின் ஒன்றுபடுத்தலை நடத்த வேண் டும்.

ஸ்தலவாதத்திற்கு மாருக, சுத்த ராணுவக் கண்ணேட்டம் பிரதான படைகளில் தங்கள் சொந்த பலத்தை வளர்ப்பதில் மட்டும் நாட்டமாயுள்ளவர்களும் ஸ்தல ஆயுதந் தரித்த கூறு களுக்கு உதவி செய்வதைப் புறக்கணிப்பவர்களுமானேர் கொண்டுள்ள தவருன கண்ணேட்டமாகும். கொரில்லா யுத் தம் நடமாட்ட யுத்தமாக அபிவிருத்தியடைவதென்பதன் அர்த்தம் கொரில்லா யுத்தம் கைவிடப்படுவதல்ல, மாருகப் பரவலான கொரில்லா யுத்தத்தின் மத்தியில், நடமாட்ட யுத் தம் நடத்த வல்லதான பிரதான படையொன்று, தன்னைச் சுற்றி இன்னும் விரிவான கொரில்லா யுத்தம் நடாத்தும் எண்ணிறந்த கொரில்லாக் கூறுகளைக் கொண்டே இருக்க வேண் டியதான படையொன்று, சிறிது சிறிதாக உருவாக்கப்படுவதே

என்பதை இவர்கள் உணர்கின்றனரில்லை. இந்த எண்ணிறந்த கொரில்லாக் கூறுகள் பிரதான படைக்குச் சக்திமிக்கவையான துணைப்படைகளும், அதன் தொடர்ச்சியான வளர்ச்சிக்கான முடிவுறுத கையிருப்புப் படைகளாகப் பயன்படுபவையுமாகும். ஆகவே, பிரதான படையொன்றின் தளகர்த்தரொருவர் சுத்த ராணுவக் கண்ணோட்டமொன்றின் விளைவாக ஸ்தல ஜனங்களினதும் ஸ்தல அரசாங்கத்தினதும் நலன்களைப் புறக் கணிப்பதான தவறைச் செய்துள்ளாரெனில், பிரதான படையின் விஸ்தரிப்பு, ஸ்தல ஆயுதந் தரித்த கூறுகளின் அதிகரிப்பு இரண்டுமே உரிய கவனத்தைப் பெற வேண்டி அவர் அதைத் திருத்திக்கொள்ள வேண்டும்.

கொரில்லாக் கூறுகளின் தரத்தை உயர்த்துவதற்கு, அவை சிறிது சிறிதாகத் தம்மைக் கிரமமான படைகளின் மாதிரியில் அமைத்துக்கொள்ளவும் தம் கொரில்லாப் போக்குகளைக் களையவும் கூடியதாக, அவற்றின் அரசியல், ஸ்தாபன மட்டத்தை உயர்த்துவதும் அவற்றின் சாதனைகள், ராணுவ நுட்பம், தந்திரோபாயங்கள், கட்டுப்பாடு ஆகியவற்றைச் சிறப்பாக்குவதும் இன்றியமையாதவை. அரசியல் ரீதியில், தளகர்த்தர்களையும் போராளிகளையும் கொரில்லாக் கூறுகளைக் கிரமமான படைகளின் மட்டத்திற்கு உயர்த்துவதன் அவசியத்தை உணரும்படி செய்வதும், அவர்களை இந்தக் குறிக்கோளுக்காகப் பிரயாசைப்பட ஊக்குவிப்பதும், அரசியல் வேலையைக் கொண்டு அது அடையப்படுதலை உத்தரவாதம் செய்வதும் இன்றியமையாதன. ஸ்தாபன ரீதியில், பின்வரும் வகைகளில் கிரமமான வியூகமொன்றிற்கு அவசியமான தன்மைகளனைத்தையும் சிறிது சிறிதாகப் பூர்த்தி செய்வது இன்றியமையாதது — ராணுவ

அரசியல் அங்கங்கள் உத்தியோகத்தர் வேலை முறைகள், கிரமமான பண்ட வரத்து ஒழுங்கு, வைத்திய சேவை இத்தியாதியின. சாதனுதிகளின் விஷயத்தில், மேலும் சிறந்தவையும் மேலும் பல ரகப்பட்டவையுமான ஆயுதங்களைப் பெற்றுக் கொள்வதும் அவசியமான தொடர்பு சாதனங்களின் வரத்தை அதிகரிப்பதும் இன்றியமையாதவை. ராணுவ நுட்பத்தினதும் தந்திரோபாயங்களினதும் விஷயத்தில், கொரில்லாக் கூறுகளைக் கிரமமான வியூகமொன்றிற்குத் தேவையான மட்டத்திற்கு உயர்த்துவது இன்றியமையாதது. கட்டுப்பாட்டின் விஷயத்தில் ஒரு சீரான தராதரங்கள் கடைப்பிடிக்கவும், ஒவ்வொரு உத்தரவும் தவருது நிறைவேற்றவும், பொறுப்பற்ற தன்மையும் தளர்ச்சியும் முற்ருக ஒழிக்கவும்படக் கூடியதாகக் கட்டுப்பாட்டின் மட்டத்தை உயர்த்துவது இன்றியமையாதது. இந்தப் பணிகளையெல்லாம் சாதிப்பதற்கு நீண்ட பிரயாசை தேவை, அது இரவோடிரவாகச் செய்து முடிக்கப்பட இயலாது; ஆனுல் இதுவே நாம் அபிவிருத்தியடைய வேண்டிய திசை. இவ்வாருக மட்டுமே ஒவ்வொரு கொரில்லாத் தளப்பிரதேசத்திலும் பிரதான படையொன்று கட்டியெழுப்பப்படவும் எதிரியின் மீது மேலும் பயனுள்ள விதமான தாக்குதல்களுக்காக நடமாட்ட யுத்த முறை தோன்றவும் முடியும். கிரமமான படைகளால் படைப் பிரிவுகள் அல்லது இயக்குனர்கள் அனுப்பப்பட்டுள்ளவிடத்து இவ்விலக்கு ஒப்புநோக்காக இலகுவாக அடையப்பட முடியும். ஆகவே கொரில்லாக் கூறுகளுக்கு அவை கிரமமான கூறுகளாக அபிவிருத்தியடைய உதவி செய்யும் பொறுப்புக் கிரமமான படைகள் எல்லாவற்றுக்கும் உண்டு.

# அத்தியாயம் IX

## படைத்தலைமையின் உறவு

ஜப்பானிய-எதிர்ப்புக் கொரில்லா யுத்தத்தில் யுத்ததந்திரத்தின் இறுதிப் பிரச்சினை படைத்தலைமையின் உறவு பற்றியதாகும். இந்தப் பிரச்சினையின் சரியான தீர்வு, கொரில்லா யுத்தத்தின் தங்கு தடையற்ற அபிவிருத்திக்கான முற்தேவைகளில் ஒன்ருகும்.

கொரில்லாக் கூறுகள் சிதறலாகப் பரவிய நடவடிக்கைகளைக் குணுதிசயமாகக் கொண்ட ஒரு தாழ்ந்த மட்டத்திய ஆயுதந்தரித்த அமைப்பாகையால், கொரில்லா யுத்தத்திலான படைத்தலைமை முறைகள் கிரமமான யுத்தத்திற் போன்று அதே உயர்ந்த அளவு மத்திப்படுத்தலை அனுமதிப்பதில்லை. கிரமமான யுத்தத்தின் படைத்தலைமை முறைகளைக் கொரில்லா யுத்தத்திற்குப் பிரயோகிக்க எந்த முயற்சியும் செய்யப்பட்டால் அதன் மிகுந்த வளைந்துகொடுக்கும் தன்மை தவிர்க்க முடியாதபடி குறுக்கப்பட்டு, அதன் வீரியமும் போக்கப்படும். உயர்ந்த அளவுக்கு மத்திப்படுத்தப்பட்ட படைத்தலைமை கொரில்லா யுத்தத்தின் மிகுந்த வளைந்துகொடுக்கும் தன்மையுடன் நேரடியாக முரண்பட்டதாகும். இப்படிப்பட்ட மிகுந்த வளைந்து கொடுக்கும் தன்மையுடைய கொரில்லா யுத்தத்திற்கு உயர்ந்த அளவுக்கு மத்திப்படுத்தப்பட்ட படைத்தலைமை பிரயோகிக்கப்படக் கூடாததும் முடியாததுமாகும்.

இருப்பினும் மத்திப்படுத்திய படைத்தலைமை சிறிதளவு இன்றிக் கொரில்லா யுத்தம் வெற்றிகரமாக விருத்தி செய்யப்பட முடியாது. விரிவான கிரமமான யுத்தமும் விரிவான கொரில்லா

யுத்தமும் ஒரே சமயத்தில் நடைபெறும் போது, அவை ஒன்றுக் கொன்று இசைவாக நடக்க வேண்டும்; எனவேதான் இரண்டையும் ஒன்றுக்கொன்று இசைவாக நடத்தும் படைத்தலைமையொன்று, அதாவது, தேசிய பொதுத்தலைமைப் பகுதிகளாலும் யுத்தப்பிராந்தியத் தளகர்த்தர்களாலும் அளிக்கப்படும் ஒருமைப்படுத்திய யுத்ததந்திர ரீதியான படைத்தலைமையொன்று தேவைப்படுகின்றது. பல கொரில்லாக் கூறுகளைக் கொண்ட கொரில்லாப் பிராந்தியம் அல்லது கொரில்லாத் தளப்பிரதேசம் ஒன்றில், சாதாரணமாக, பிரதான படையை ஆக்கும் ஒரு, அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கொரில்லா வியூகங்களும் (சில சமயம் கிரமமான வியூகங்களோடு கூடவே), துணைப் படையைப் பிரதிநிதித்துவம் செய்பவையான, பெரியவையும் சிறியவையுமான பிற கொரில்லாக் கூறுகள் பலவும், உற்பத்தியிலிருந்து விலகாத மனிதர்களால் ஆன ஆயுதந் தரித்த கூறுகள் பலவும் இருக்கின்றன; அங்குள்ள எதிரிப் படைகள் சாதாரணமாகக் கொரில்லாக்களுக்கு எதிரான தங்கள் நடவடிக்கைகளை ஒருமித்துச் செய்ய ஒன்றுபடுத்திய அமைப்பொன்றாக அமைகின்றன. இதன் விளைவாக, இத்தகைய கொரில்லாப் பிராந்தியங்கள் அல்லது தளப்பிரதேசங்களில் ஒன்றுபடுத்தப்பட்ட அதாவது மத்திப்படுத்தப்பட்ட படைத்தலைமையொன்றை நிறுவும் பிரச்சினை எழுகின்றது.

எனவே, அறவே மத்திப்படுத்தல், அறவே பன்முகப்படுத்தல் இரண்டிற்கும் எதிரான வகையில், கொரில்லா யுத்தத்தில் படைத்தலைமையின் கோட்பாடு மத்திப்படுத்திய யுத்ததந்திர ரீதியான படைத்தலைமையும் போர்நடவடிக்கைகளிலும் சண்டைகளிலும் பன்முகப்படுத்திய படைத்தலைமையுமாக இருக்க வேண்டும்.

மத்திப்படுத்திய யுத்ததந்திர ரீதியான படைத்தலைமை அரசிஞல் கொரில்லா யுத்தம் முழுமையும் திட்டமிடவும் நடத்தவும் படுதலையும், ஒவ்வொரு யுத்தப் பிராந்தியத்திலும் கொரில்லா யுத்தம் கிரமமான யுத்தத்துக்கு இசைவாக நடத்தலையும், ஒவ்வொரு கொரில்லாப் பிராந்தியத்திலும் அல்லது தளப்பிர தேசத்திலும் ஜப்பானிய-எதிர்ப்பு ஆயுதப் படைகள் எல்லாம் ஒருமுகப்படுத்தி நடத்தப்படுதலையும் உள்ளடக்குகின்றது. இங்கு இசைவு, ஐக்கியம், மத்திப்படுத்தல் ஆகியன இன்மை தீங்கானது, அவை மூன்றையும் உறுதிப்படுத்தச் சகல பிரயத்தனங்களும் செய்யப்பட வேண்டும். பொதுவான விஷயங்களில், அதாவது, யுத்ததந்திர விஷயங்களில், ஒருமித்த நடவடிக்கையை உறுதிப்படுத்தக் கூடியதாயிருக்கத் தாழ்ந்த மட்டங்கள் உயர்ந்த மட்டங்களுக்குத் தகவல் தெரிவிக்கவும் அவற்றின் உத்தரவுகளைப் பின்பற்றவும் வேண்டும். இருப்பினும், மத்திப்படுத்தல் இந்த அளவோடு நிற்கின்றது; இதற்கு அப்பாலும் சென்று, ஒரு போர்நடவடிக்கைக்கு அல்லது சண்டைக்கு ஆன குறிப்பான பணிகள் வகுத்தல் போன்ற விபர விஷயங்களில் தாழ்ந்த மட்டங்களிற் தலையிடுவதும் அவ்வாறே தீங்கானதாக இருக்கும். ஏனெனில் இத்தகைய விபரங்கள், காலத்துக்குக் காலமும் இடத்துக்கிடமும் மாறுபவையும் தூரத்திலுள்ள உயர்ந்த படைத்தலைமை மட்டங்களின் அறிவிற்கு அப்பாற்பட்டவையுமான குறிப்பான சூழ்நிலைகளின் ஒளியில் தீர்மானிக்கப்பட வேண்டியவை. போர்நடவடிக்கைகளிலும் சண்டைகளிலும் பன்முகப்படுத்திய படைத்தலைமைக் கோட்பாடு என்பதன் அர்த்தம் இது தான். கிரமமான நடவடிக்கைகளிலும், விசேஷமாகத் தொடர்புகள் போதாத போது, பொதுவாக இதே கோட்பாடே பொருந்தும். ஒரு வார்த்தையிற்

கூறினுல், இதன் பொருள், ஒன்றுபடுத்தப்பட்ட ஒரு யுத்ததந் திரத்தின் வரம்புகளுக்குள்ளாகச் சுதந்திரமாகவும் எம் கையில் முன்ஞேட்டத்துடனும் நடத்தப்படும் கொரில்லா யுத்தம் என் பதாகும்.

கொரில்லாத் தளப்பிரதேசமொன்று, ஒவ்வொன்றும் டிஸ் திரிக்டுகளாகப் பிரிக்கப்பட்டவையான பல மாவட்டங்களால் ஆன உப-பகுதிகளாகப் பிரிக்கப்பட்ட ஒரு ராணுவப் பகுதியை ஆக்குமிடத்து, ராணுவப் பகுதியினதும் உப-பகுதிகளினதும் ஆணைப்பகுதிகள் தொட்டு மாவட்ட, டிஸ்திரிக்ட் அரசாங்கங் கள் வரையான பல்வேறு மட்டங்களுக்கும் இடையிலான உறவு அடுக்கடுக்காகக் கீழ்ப்பட்டிருப்பதான ஒன்ருகும்; ஒவ்வொரு ஆயுதப் படையும் அதன் இயல்பிற்கேற்ப இவற்றில் ஒன்றின் நேரடியான ஆணையின் கீழ் இருக்க வேண்டும். மேலே எடுத்து ரைக்கப்பட்டுள்ள கோட்பாட்டின்படி, இந்த மட்டங்களிலான படைத்தலைமையின் உறவில், பொதுவான கொள்கை சம்பந் தப்பட்ட விஷயங்கள் உயர் மட்டங்களில் மத்திப்படுத்தப்பட்டி ருக்க வேண்டுமாகையில், குறிப்பிட்ட நடவடிக்கைகள் தாழ்ந்த மட்டங்களால் குறிப்பான சூழ்நிலைகளின் ஒளியில் நடத்தப்பெ றவும், இத்தாழ்ந்த மட்டங்கள் சுதந்திரமாகச் செயலாற்ற உரிமை பெற்றிருக்கவும் வேண்டும். உயர்ந்த மட்டத்திற்குத் தாழ்ந்த மட்டத்தில் மேற்கொள்ளப்படும் குறிப்பிட்ட நட வடிக்கைகள் பற்றிக் கூற எதுவும் இருந்தால் அது தன் கருத் துக்களை ''வழிகாட்டல்க''ளாக முன்வைக்கலாம், அவ்வாறு செய்யவும் வேண்டும், ஆனுல் கருரான ''ஆணைகள்'' பிறப் பிக்கக் கூடாது. எவ்வளவுக்குப் பிரதேசம் அதிக விசால மானதாயும், நிலைமை அதிக சிக்கலாயும், உயர்ந்த மட்டங் களுக்கும் தாழ்ந்த மட்டங்களுக்கும் இடையிலான தூரம் அதி

கமாயும் உள்ளனவோ, அவ்வளவுக்குத் தாழ்ந்த மட்டங்களும் ஸ்தல ஆட்களும் சுதந்திரமாக வேலை செய்யவும், சிக்கலான நிலைமைகளைச் சமாளிக்கவும், கொரில்லா யுத்தத்தை வெற்றி கரமாக விரிவுபடுத்தவுமான திறமையை விருத்திசெய்து கொள்ளக் கூடியதாக, தாழ்ந்த மட்டங்களுக்கு அவற்றின் குறிப்பிட்ட நடவடிக்கைகளில் அதிக சுதந்திரமளிப்பதும், அவ்வாறாக அந்த நடவடிக்கைகளுக்கு ஸ்தலத் தேவைகளுடன் அதிகம் நெருக்கமான தன்மையை அளிப்பதும் மேலும் புத்தியாகிறது. ஒன்றுகுவிந்த நடவடிக்கையொன்றில் ஈடுபட்டுள்ள ஒரு ஆயுதந் தரித்த கூறிற்கு அல்லது வியூகத்திற்கு, அது பிரயோகிப்பதற்குள்ள கோட்பாடு, நிலைமை தெளிவாக உள்ளதால், தனது படைத்தலைமையின் உள் உறவில் மத்திப்படுத்தலாகும்; ஆனால் இந்தக் கூறு அல்லது வியூகம் சிதறலாகப் பரந்த நடவடிக்கைக்காகப் பிரிந்து செல்லும் கணமே பொதுவான விஷயங்களில் மத்திப்படுத்தலும் விபரங்களில் பன்முகப்படுத்தலுமான கோட்பாடு பிரயோகிக்கப்பட வேண்டும், ஏனெனில் அப்போது குறிப்பான நிலைமை தெளிவாக இருக்க முடியாது.

மத்திப்படுத்தல் தேவையான இடத்து அது இல்லாவிட்டால் அதன் அர்த்தம் உயர்ந்த மட்டங்கள் கடமையில் தவறியுள்ளன என்பது, அல்லது தாழ்ந்த மட்டங்கள் தமக்குரியதல்லாத அதிகாரத்தைத் தம் கையில் எடுத்துள்ளன என்பதே; இவ்விரண்டில் எதுவும் உயர்ந்த மட்டங்களுக்கும் தாழ்ந்த மட்டங்களுக்கும் இடையிலான உறவில், விசேஷமாக ராணுவத் துறையில் அனுமதிக்கப்பட முடியாது. பன்முகப்படுத்தல் செய்யப்பட வேண்டிய இடத்து அது செய்யப்படாவிட்டால் அதன் அர்த்தம் உயர்ந்த மட்டங்கள் அதிகாரத்தை ஏகபோகப்படுத்திக்கொண்டுள்ளன, அல்லது தாழ்ந்த மட்டங்கள் தம் பங்கில் முன்னேற்

டமின்றியிருக்கின்றன என்பதாகும்; இவ்விரண்டில் எதுவும் உயர்ந்த மட்டங்களுக்கும் தாழ்ந்த மட்டங்களுக்கும் இடையிலான உறவில், விசேஷமாகக் கொரில்லா யுத்தத்தின் படைத் தலைமையில் அனுமதிக்கப்பட முடியாது. மேற்படிக் கோட்பாடுகள் படைத்தலைமையின் உறவாகிய பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஒரே சரியான கொள்கையை ஆக்குகின்றன.

## குறிப்புகள்

1. சாங்பய் மலைத்தொடர் சீனாவின் வடகிழக்கு எல்லையில் அமைந்துள்ளது. 1931, செப்டம்பர் 18ந் திகதிய ஜப்பானியப் படையெடுப்பின் பின்னர் இப்பிரதேசம் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையிலான ஜப்பானிய-எதிர்ப்புக் கொரில்லாத் தளப்பிரதேசமாக ஆகியது.

2. வூதை மலைத்தொடர் ஷன்சி, சஹார், ஹோபெய் ஆகிய மூன்று மாகாணங்களுக்கு இடையிலான எல்லைகளில் அமைந்துள்ளது (சஹார் மாகாணம் இல்லாமற் செய்யப்பட்டது. வூதை மலை தற்போதைய ஷன்சி, ஹோபெய் ஆகிய இரு மாகாணங்களுக்கிடையிலான எல்லைகளிலிருக்கிறது — மொழிபெயர்ப்பாளர்). 1937, அக்டோபரில், சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையிலான எட்டாவது மார்க்க ராணுவம் வூதை மலைப்பிரதேசத்தை மையமாகக் கொண்டு ஷன்சி-சஹார்-ஹோபெய் ஜப்பானிய-எதிர்ப்புத் தளப்பிரதேசத்தைக் கட்டியெழுப்பத் தொடங்கியது.

3. தைஹங் மலைத்தொடர் ஷன்சி, ஹோபெய், பிங்யுஅன் மாகாணங்களுக்கிடையிலான எல்லைகளில் அமைந்துள்ளது (பிங்யுஅன் மாகாணம் இல்லாமற் செய்யப்பட்டது. தைஹங் மலை தற்போதைய ஷன்சி, ஹோபெய், ஹோனன் ஆகிய மூன்று மாகாணங்களுக்கிடையிலான எல்லைகளில் இருக்கிறது—மொழிபெயர்ப்பாளர்). 1937, நவம்பரில், எட்டாவது மார்க்க ராணுவம் தைஹங் மலைப் பிரதேசத்தை மையமாகக் கொண்டு தென்கிழக்கு ஷன்சி ஜப்பானிய-எதிர்ப்புத் தளப்பிரதேசத்தைக் கட்டியெழுப்பத் தொடங்கியது.

4. தைஷன் மலை மத்திய ஷன்துங்கிலுள்ள தை-யீ மலைத்தொடரின் பிரதான சிகரங்களில் ஒன்று. 1937ம் ஆண்டின் பனிகாலத்திற் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையிலான கொரில்லாப் படைகள் தை-யீ மலைப் பிரதேசத்தை மையமாகக் கொண்டு மத்திய ஷன்துங் ஜப்பானிய-எதிர்ப்புத் தளப்பிரதேசத்தைக் கட்டி யெழுப்பத் தொடங்கின.

5. யென்ஷன் மலைத்தொடர் ஹோபெயினதும் ஜெஹோ மாகாணத்தினதும் எல்லையில் அமைந்துள்ளது (ஜெஹோ மாகாணம் இல்லாமற் செய்யப்பட்டது. யென்ஷன் மலை தற்போதைய வட கிழக்கு ஹோபெய் மாகாணத்தில் இருக்கிறது—மொழிபெயர்ப்பாளர்). 1938 கோடைகாலத்தில் எட்டாவது மார்க்க ராணுவம் யென்ஷன் மலைப் பிரதேசத்தை மையமாகக் கொண்டு கிழக்கு ஹோபெய் ஜப்பானிய-எதிர்ப்புத் தளப்பிரதேசத்தைக் கட்டியெழுப்பத் தொடங்கியது.

6. மாஓஷன் மலைகள் தெற்கு கியாங்ஸூவில் உள்ளன. 1938, ஜூனில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையிலான புதிய நான்காவது சேனை மாஓஷன் மலைப் பிரதேசத்தை மையமாகக் கொண்டு தெற்கு கியாங்ஸூ ஜப்பானிய-எதிர்ப்புத் தளப்பிரதேசத்தை கட்டியெழுப்பத் தொடங்கியது.

7. ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தத்தில் பெறப்பட்ட அனுபவம் சமவெளிகளில் நீண்டகாலத் தளப்பிரதேசங்களையும், பல இடங்களில், நிலையான தளப்பிர தேசங்களையும் ஸ்தாபிப்பது சாத்தியமென நிரூபித்தது. இதற்குக் காரணம் அவற்றின் பெரும் விசாலமும் பெரும் ஜனத்தொகைகளும், கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கைகளின் சரியான தன்மையும், மக்கள் விரிவான ரீதியில் அணிதிரட்டப் பட்டதும், எதிரியின் துருப்புக்கள் பற்றாக்குறையுமாகும். தோழர் மாஓ சேதுங் அவர்கள் பின்னைய பணித்தல்களில் இச்சாத்தியக்கூறை மேலும் தெளிவாக வலி யுறுத்தினார்.

8. வெய்சி ஒரு பழைய சீன ஆட்டம்; அதில் ஆட்டக்காரர்கள் இருவரும் ஆட்டப் பலகையில் ஒருவர் மற்றவரின் காய்களைத் தன் காய்களால் சுற்றிவ ளைக்க முயல்வர். ஒருவரின் காய்கள் சுற்றிவளைக்கப்படும் போது அவை ''செத்த'' தாக (கைப்பற்றப்பட்டுவிட்டதாக) கணிக்கப்படும். ஆனால் சுற்றிவளைக்கப்பட்ட காய்களுக்கிடையில் (ஆட்டப் பலகையில்) போதிய வெற்றுக் கட்டங்கள் இருந் தால் அப்போது அக்காய்கள் இன்னும் ''உயி''ராகத்தான் (கைப்பற்றப்படாது) இருக்கின்றன.

9. கி.மு. 353ல் வெய் ராஜ்யம் சாஓ ராஜ்யத்தின் தலைநகரான ஹான்தானை முற்றுகையிட்டது. சாஓ ராஜ்யத்தின் சகாவான சீ ராஜ்யத்தின் அரசன் தன்

தளபதிகளான தியென் சீயையும் சுன் பின்னையும் தம் துருப்புக்களைக் கொண்டு சாஓவுக்கு உதவி செய்யுமாறு உத்தரவிட்டான். வெய்யின் திறம் படைகள் தம் சொந்தப் பிரதேசத்தைப் பலவீனமான பாதுகாப்புடன் விட்டுவிட்டுச் சாஓவிற் பிரவேசித்திருந்ததை அறிந்திருந்த தளபதி சுன் பின் வெய் ராஜ்யத்தைத் தாக்க, வெய்யின் துருப்புக்கள் தம் சொந்த நாட்டைப் பாதுகாப்பதற்காக (சாஓவிலிருந்து) வாபஸாகின. அவை களைப்புற்றிருந்ததைச் சாதகமாகக் கொண்டு சீயின் துருப்புக்கள் அவற்றைக் குவெய்லிங்கில் (ஷன்துங்கிலுள்ள தற்போதைய ஹொாசே மாவட்டத்தின் வடகிழக்கில்—மொழிபெயர்ப்பாளர்) தடுத்துத் தோற்கடித்தன, சாஓவின் தலைநகர் ஹான்தான் மீதான முற்றுகை இவ்வாறாக நிறுத்தப்பட்டது. அப்போதிருந்து சீன யுத்ததந்திர நிபுணர்கள் இதுபோன்ற தந்திரோபாயங்களை ''வெய் ராஜ்யத்தை முற்றுகையிடுவதன் மூலம் சாஓ ராஜ்யத்தை விடுவிப்பது'' எனக் குறிப்பிட்டு வந்துள்ளனர்.

# நீண்டகால யுத்தம் பற்றி*

(1938, மே)

## பிரச்சினையை எடுத்துக்கூறல்

*1.* விரைவில், மகத்தான ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தத்தின் முதலாவது ஆண்டு நிறைவான ஜுலை 7ந் திகதியாகிவிடும். கிட்டத்தட்ட ஒரு வருடமாக முழுத் தேசத்தினதும் சக்திகள் ஐக்கியமுற்றுத் திரண்டும், பதிற்தாக்குதல் யுத்தத்திலும் ஐக்கிய முன்னணியிலும் ஊன்றி நின்றும், எதிரியுடன் தீரமாகப் போரிட்டும் வந்துள்ளன. கிழக்குலகின் வரலாற்றில் முன்னுதாரணமற்றதும் உலக வரலாற்றிலும் ஒரு மாபெரும் யுத்தமாக இடம் பெறப் போவதுமான இந்த யுத்தத்தை முழு உலகினதும் மக்கள் கவனமாக அவதானித்து வருகின்றனர். யுத்தத்தின் அழிவுகளால் துன்புற்றும் தன் தேசத்தின் வாழ்விற்காகப் போரிட்டும் வருகின்ற ஒவ்வொரு சீன மகனும் தினமும் வெற்றிக்காக ஆவலுடன் காத்திருக்கின்றான். ஆனால், யுத்தத்தின் போக்கு உண்மையில் எப்படி இருக்கும்? எம்மால்

---

*இந்த விரிவுரைத்தொடர் தோழர் மாஓ சேதுங் அவர்களால், 1938 மே 26 முதல் ஜுன் 3 வரை, ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தத்தை ஆராய்வதற்கான யென்ஆன் சங்கத்தில் ஆற்றப்பட்டது.

வெல்ல முடியுமா முடியாதா? எம்மால் விரைவில் வெல்ல முடியுமா முடியாதா? பலர் ஒரு நீண்டகால யுத்தத்தைப் பற்றிப் பேசுகின்றனர்; ஆனல், எதற்காக இது ஒரு நீண்டகால யுத்தம்? நீண்டகால யுத்தமொன்றை எப்படி நடத்துவது? பலர் இறுதி வெற்றியைப் பற்றிப் பேசுகின்றனர், ஆனல் இறுதி வெற்றி ஏன் எமதாக இருக்க வேண்டும்? நாம் எவ்வாறு இறுதி வெற்றிக்காக முயல்வது? இந்த விஞக்களுக்கு எல்லோருமே விடை கண்டுவிடவில்லை; உண்மையில் இது நாள்வரை அனேகமானேர் இவற்றுக்கு விடை காணவில்லை. ஆகவே தேசிய அடிமைப்பாட்டுத் தத்துவத்தின் தோல்விவாதிகளான பிரசாரகர்கள் சீன அடிமைப்படுத்தப்படும் என்றும், இறுதி வெற்றி சீனவினுடையதாக இராதென்றும் மக்களுக்குக் கூற முன்வந்துள்ளனர். மறுபுறத்தில், பதட்டக்கார நண்பர்கள் சிலர், சீன பெரிய பிரயாசையெதுவும் எடாமலே மிக விரைவில் வெற்றியீட்டும் என மக்களுக்குக் கூற முன்வந்துள்ளனர். ஆனல் இக்கருத்துக்கள் சரியானவை தான? இவை சரியானவை அல்ல என நாம் எப்போதும் கூறி வந்துள்ளோம். இருப்பினும் பல பேர் நாம் கூறி வந்துள்ளதை இன்னும் தேர்ந்துகொள்ளவில்லை. இதற்குக் காரணம் ஓரளவு நாம் போதிய பிரசார, விளக்க வேலை செய்யாததும், ஓரளவு புறநிலையான நிகழ்ச்சிகளின் அபிவிருத்தி இன்னும் அவற்றின் உள்ளியல்பான தன்மையையும் அவற்றின் குணவியல்புகளையும் மக்களுக்குப் பூரணமாயும் தெளிவாயும் வெளிக்காட்டாததால் அவர்களால் முழுப்படியான போக்கையும் இறுதி விளைவையும் முன்னறியவும் முழுத் தொகுப்பான கொள்கைகளையும் தந்திரோபாயங்களையும் முடிவு செய்யவும் கூடிய நிலையில் இல்லாததுமாகும். இப்போது விஷயங்கள் சற்று நன்ருயிருக்கின்றன. பத்து மாதகால யுத்தத்தின்

அனுபவம் அறவே அடிப்படையற்றதான தேசிய அடிமைப் பாட்டுத் தத்துவத்தை உடைத்துக் காட்டுவதற்கும் எமது பதட்டக்கார நண்பர்களை அவர்களின் விரைவான வெற்றித் தத்துவத்தைக் கைவிடும்படி செய்வதற்கும் முற்றும் போதிய தாக இருந்துள்ளது. இந்தச் சூழ்நிலைகளில், பலர் தொகுத்துக் கூறும் வடிவில் ஒரு விளக்கம் வேண்டுமென்கின்றனர். தேசிய அடிமைப்பாடும் விரைவான வெற்றியுமாகிய, நீண்டகால யுத் தத்துக்கெதிரான தத்துவங்கள் காரணமாக மட்டுமல்லாமல், நீண்டகால யுத்தம் பற்றிய ஆழமற்ற விளக்கம் காரணமாகவும் இவ்வேண்டுதல் நீண்டகால யுத்தம் சம்பந்தமாக மேலும் கூடுதலாகவே உள்ளது. ''எமது நாற்பது கோடி மக்கள் லூ கோச்சியௌ சம்பவ[1]த்தின் பின்பிருந்து ஒருமித்த பிரயாசை எடுத்து வருகின்றனர்; எனவே இறுதி வெற்றி சீனுவினுடைய தாகவே இருக்கும்.'' இந்தச் சூத்திரம் பரந்துபட்ட மக்கள் மத்தியில் அடிபட்டு வருகின்றது. இது சரியான ஒரு சூத்திரம்; ஆனுல் இது இன்னும் பூர்த்தி செய்யப்பட வேண்டும். ஜப் பானிய-எதிர்ப்பு யுத்தத்திலும் ஐக்கிய முன்னணியிலும் நாம் திடமாக நின்றுள்ளமை சாத்தியமானதற்குப் பல அம்சங்கள் காரணம். உள்நாட்டு ரீதியில், இவை கம்யூனிஸ்ட் கட்சி முதல் கோமிந்தாங் வரை நாட்டிலுள்ள எல்லா அரசியற் கட்சிகளை யும், தொழிலாளர், விவசாயிகள் முதல் முதலாளித்துவ வர்க் கத்தினர் வரை எல்லா மக்களையும், பிரதான படைகள் முதல் கொரில்லாப் படைகள் வரை எல்லா ஆயுதப் படைகளையும் உள்ளடக்குபவை; வெளி நாட்டு ரீதியில், இவை சோஷலிஸ நாட்டிலிருந்து சகல நாடுகளினதும் நீதி விரும்பும் மக்கள் வரை தழுவியவை; எதிரி நாட்டில், இவை யுத்தத்திற்கு எதிராயுள்ள ஜப்பானிய மக்களிலிருந்து போர் முனையிலுள்ள ஜப்பானிய

படைவீரர்களில் யுத்தத்தை எதிர்ப்போர் வரை தழுவியவை. சுருங்கக்கூறினுல், இந்தச் சக்திகள் எல்லாம் பல்வேறு அளவுகளில் எமது பதிற்தாக்குதல் யுத்தத்திற்குச் சேவையாற்றியுள்ளன. மனச்சாட்சியுள்ள ஒவ்வொரு மனிதனும் இவற்றிற்கு அஞ்சலி செலுத்த வேண்டும். மற்றெல்லா ஜப்பானிய-எதிர்ப்பு அரசியல் கட்சிகளோடும் முழு நாட்டு மக்களோடும் கம்யூனிஸ்டுகளாகிய எமக்குச் சகல சக்திகளையும் ஐக்கியப்படுத்திப் பாதகமிகுந்த ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களைத் தோற்கடிக்க முயலுவதைத் தவிர வேறு மார்க்கம் கிடையாது. இவ்வாண்டு ஜுலை 1ந் திகதி சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஸ்தாபிதத்தின் 17வது ஆண்டு நிறைவாகும். ஒவ்வொரு கம்யூனிஸ்டையும் ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தத்தில் மேலும் சிறந்த, மேலும் பெரிய பங்கை ஆற்றக் கூடியவனுக்குவதற்கு நீண்டகால யுத்தம் பற்றிய பொறுப்பான ஆராய்வொன்று அவசியம். ஆகவே என் விரிவுரைகள் இத்தகைய ஒரு ஆராய்வாக இருக்கும். நீண்டகால யுத்தத்துடன் சம்பந்தமுடைய பிரச்சினைகள் எல்லாவற்றையும் பற்றிக் கூற நான் முயல்வேன்; ஆனுல் ஒரு விரிவுரைத் தொடரில் நான் எல்லா விஷயங்களையும் ஆராய்வது சாத்தியமல்ல.

2. பத்து மாதகால பதிற்தாக்குதல் யுத்தத்தின் அனுபவம் முழுமையும் சீனுவின் தவிர்க்க முடியாத அடிமைப்பாட்டுத் தத்துவம், சீனுவின் விரைவான வெற்றித் தத்துவம் இரண்டினதும் தவமுன தன்மையை நிரூபிக்கின்றது. முன்னையது சமரசப்படும் போக்கையும், பின்னையது எதிரியைக் குறைத்து மதிப்பிடும் போக்கையும் தோற்றுவிக்கும் தத்துவங்கள். இப் பிரச்சினையை அணுகும் முறைகளிரண்டும் அகநிலைவாத ரீதியானவையும் ஒரு தலைப்பட்சப் போக்கானவையும், ஒரு

வார்த்தையில் கூறினுல், விஞ்ஞான ரீதியற்றவையாகும்.

3. பதிற்தாக்குதல் யுத்தத்திற்கு முன்பு, தேசிய அடிமைப் பாடு பற்றிப் பெருமளவு பேச்சு அடிபட்டது. உதாரணமாக ''சீஞ ஆயுத பலத்தில் குறைவானது, யுத்தத்தில் தோற்றே தீரும்'' என்றனர் சிலர். ''சீஞ ஆயுதந் தரித்து எதிர்ப்புக் காண்பித்தால் அது மற்ருெரு அபிஸினியா ஆவது நிச்சயம்'' என்றனர் வேறு சிலர். யுத்தம் தொடங்கியதன் பின்பிருந்து தேசிய அடிமைப்பாடு பற்றி வெளிப்படையான பேச்சு மறைந்து விட்டது. ஆனுல் இரகசியப் பேச்சு, அதுவும் பெருமளவு, இன்னும் தொடர்கின்றது. உதாரணமாக, காலத்துக்குக் காலம் ஒரு சமரசப்பாட்டுச் சூழல் உருவாகிறது; சமரசப்பாட் டைக் கோருவோர் ''தொடர்ந்து போரிட்டால் நிச்சயம் அழிவு''[2] என வாதிடுகின்றனர். ஹுனனிலிருந்து ஒரு மாண வன் கடிதமொன்றில்,

''நாட்டுப்புறத்தில் எல்லாமே கஷ்டமாகத் தோன்றுகின் றது. தனித்துப் பிரசார வேலை செய்கின்ற நான் மனிதர்களை எங்கு எப்பொழுது கண்டாலும் அவர்களுடன் பேச வேண் டும். நான் பேசியுள்ளவர்கள் எந்த வகையிலும் பாமர மக்களல்ல; அவர்கள் எல்லோருக்கும் நடைபெறும் நிகழ்ச்சி பற்றி ஓரளவு விளக்கமுள்ளது. எல்லோரும் நான் கூறுப வற்றில் மிக அக்கறை கொண்டுள்ளனர். ஆனுல் நான் என் சொந்த உறவினர்களை எதிர்ப்படும் போது அவர்கள் எப் போதும், 'சீனுவால் வெல்ல இயலாது; அது வெல்லப்படு வது விதி' என்கின்றனர். இவர்கள் எனக்கு அருவருப்பூட் டுகின்றனர்! அதிர்ஷ்டவசமாக இவர்கள் தங்கள் கருத்துக் களைப் பரப்பித் திரிவதில்லை; அப்படிச் செய்தார்களாஞல்

நிலைமை உண்மையில் மோசமாகிவிடும். விவசாயிகள் இயற்கையாகவே இவர்கள் கூறுவதையே அதிகமாக நம்பத் தலைப்படுவார்கள்'' என எழுதியுள்ளார்.

சீனுவின் தவிர்க்க்முடியாத அடிமைப்பாட்டுத் தத்துவக்காரர்களே சமரசப்படும் போக்கின் சமூக அடித்தளமாக அமைகின்றனர். இவர்கள் சீனுவில் எங்கும் காணப்படுகின்றனர்; எனவே சமரசப்பாட்டுப் பிரச்சினை ஜப்பானிய-எதிர்ப்பு முன்னணிக்குள் எந்நேரமும் எழக் கூடும்; அத்துடன் அது அனேகமாக யுத்தத்தின் இறுதிவரை எம்முடன் இருந்தேவரும். இப்போது ஷிசௌ வீழ்ந்துவிட்டதாலும் வூஹன் அபாயத்திலுள்ளதாலும், தேசிய அடிமைப்பாட்டுத் தத்துவத்திற்கான ஆதாரத்தை உடைத்துக் காட்டுவது பயன் அளிக்காமல் போகாது என நான் நினைக்கின்றேன்.

4. இந்தப் பத்து மாத யுத்த காலத்தில் அவசரத்தன்மையைக் காட்டுபவையான சகல விதமான கருத்துக்களும் எழுந்துள்ளன. உதாரணமாக, யுத்தத்தின் ஆரம்பத்தில் பலர் ஜப்பானைக் குறைத்து மதிப்பிட்டும், ஜப்பானியரால் ஷன்சி வரை கூட வர இயலாதெனக் கூட நம்பியும் அகாரணமாய் நன்நம்பிக்கைப்பட்டனர். சிலர் ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தத்தில் கொரில்லா யுத்தத்தின் யுத்ததந்திர ரீதியான பங்கை சிறிதுபடுத்தி, ''முழுமையும் சம்பந்தப்பட்ட மட்டில் நடமாட்ட யுத்தம் முதன்மையானது, கொரில்லா யுத்தம் இரண்டாம் பட்சமானது, ஒவ்வொரு பகுதியும் சம்பந்தப்பட்ட மட்டில் கொரில்லா யுத்தம் முதன்மையானது, நடமாட்ட யுத்தம் இரண்டாம் பட்சமானது'' என்ற கூற்றில் ஐயப்பட்டனர். அவர்கள் எட்டாவது மார்க்க ராணுவத்தின், ''கொரில்லா யுத்தம் அடிப்ப

டையானது, ஆனால் சாதகமான சூழ்நிலைகளின்கீழ் நடமாட்ட யுத்தம் நடத்தக் கிடைக்கும் சந்தர்ப்பமெதையும் நழுவவி டுவதில்லை'' என்ற யுத்ததந்திரக் கோட்பாட்டுடன் இணங் காதிருந்தனர். அது ஒரு ''யாந்திரிகரீதியான'' அணுகுமுறை எனக் கருதினர்.[3] ஷாங்ஹாயப் போரின் போது சிலர், ''எம் மால் ஆக மூன்று மாதங்களுக்குச் சண்டையிட முடிந்தால், சர்வதேச நிலைமை மாறியே தீரும், சோவியத் யூனியன் துருப் புக்களை அனுப்பியே தீரும், யுத்தம் முடிந்துவிடும்'' என் றனர். அவர்கள் பதிற்தாக்குதல் யுத்தத்தின் எதிர்காலத் திற்கான தமது நம்பிக்கைகளைப் பிரதானமாக அந்நிய உதவியில் வைத்தனர்.[4] தைஅல்ச்சுவாங் வெற்றி[5]க்குப் பின்னர் சிலர் ஷிசௌ போரியக்கம் ''கிட்டத்தட்ட தீர்க்கமான ஒரு போர் நடவடிக்கையாக'' நடத்தப்பட வேண்டுமென்றும், நீண்டகால யுத்தக்கொள்கை மாற்றப்பட வேண்டுமென்றும் வாதிட்ட னர். ''இந்தப் போர்நடவடிக்கை எதிரியின் இறுதி மூச்சான போராட்டத்தைக் குறிக்கின்றது'', அல்லது, ''நாம் வென் றோமானால் ஜப்பானிய யுத்தப்பிரபுக்கள் தைரியமிழந்து, தங் கள் கதி முடிவாகும் நாளுக்குக் காத்திருக்க மட்டுமே கூடியவர் களாகிவிடுவர்'' என்பன போன்ற கூற்றுக்களை மொழிந்தனர்.[6] பிங்சிங்குவானிலான வெற்றி சிலரின் புத்தியைப் பேதலிக்கச் செய்தது, தைஅல்ச்சுவாங்கிலான இன்னொரு வெற்றி மேலும் சிலரின் புத்தியைப் பேதலிக்கச் செய்துள்ளது. எதிரி வூஹானைத் தாக்குவானா என்பது பற்றி ஐயங்கள் தலையெடுத்துள்ளன. பலர், ''அனேகமாகத் தாக்கமாட்டான்'' என்றும், வேறு பலர், ''நிச்சயமாகத் தாக்கமாட்டான்'' என்றும் நினைக்கின் றனர். இத்தகைய ஐயங்கள் பிரதான பிரச்சினைகள் எல்லாவற் றையும் பாதிக்கின்றன. உதாரணமாக, எமது ஜப்பானிய-

எதிர்ப்பு பலம் ஏற்கனவே போதுமானதா? சிலர் ஆம் என்று அழுத்தமாக, எமது தற்போதைய பலம் எதிரியின் முன்னேற்றத்தைத் தடுக்க ஏற்கனவே போதுமானது, எனவே அதை ஏன் அதிகரிக்க வேண்டும் எனப் பதிலளிக்கக் கூடும். அல்லது, உதாரணமாக, ''ஜப்பானிய-எதிர்ப்புத் தேசிய ஐக்கிய முன்னணியை ஸ்திரப்படுத்தி விரிவுபடுத்துங்கள்'' என்ற கோஷம் இன்னும் சரியானது தானு? சிலர் இல்லையென, ஐக்கிய முன்னணி அதன் தற்போதைய நிலையில் எதிரியை விரட்ட ஏற்கனவே போதிய பலமுடையது, எனவே அதை ஸ்திரப்படுத்துவானேன், விஸ்தரிப்பானேன் எனப் பதிலளிக்கக் கூடும். அல்லது, உதாரணமாக, ராஜதந்திரத்திலும் சர்வதேசப் பிரசாரத்திலும் எமது பிரயாசைகள் உக்கிரப்படுத்தப்பட வேண்டுமா? இங்கும் பதில் இல்லையென்பதாக இருக்கக் கூடும். அல்லது, உதாரணமாக, நாம் பொறுப்புணர்வுடன் ராணுவ, அரசியல் அமைப்புகளைச் சீர்திருத்துவதிலும், வெகுஜன இயக்கத்தை விருத்தி செய்வதிலும், தேசிய பாதுகாப்பிற்கான கல்வியை அமுல்படுத்துவதிலும், தேசத்துரோகிகளையும் ட்ரொஸ்கியவாதிகளையும் அடக்குவதிலும், ராணுவத் தொழில்களை விருத்தி செய்வதிலும், மக்களின் வாழ்வைச் சீர்ப்படுத்துவதிலும் முனைய வேண்டுமா? அல்லது, உதாரணமாக, வூஹனையும் குவாங்சௌவையும் வடமேற்கையும் பாதுகாப்பதும், எதிரியின் பின்புறத்தில் கொரில்லா யுத்தத்தை வீறுடன் விருத்தி செய்வதுமான கோஷங்கள் இன்னும் சரியானவை தானு? பதில்கள் எல்லாம் இல்லையென்றிருக்கக் கூடும். யுத்த நிலைமையில் சற்றே சாதகமான ஒரு திருப்பம் நிகழ்ந்த கணமே கோமிந்தாங்குக்கும் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் இடையிலான மோதலை உக்கிரப்படுத்திக் கவனத்தை வெளிநாட்டு விவகாரங்களிலிருந்து உள்நாட்டு விவகாரங்களுக்

குத் திருப்பிவிடத் தயாராயுள்ளவர்கள் கூடச் சிலர் இருக்கின் றனர். ஒப்புநோக்காகப் பெரிய போர் ஒன்று வெல்லப்படும் போது, அல்லது எதிரியின் தாக்குதல் தற்காலிகமாக நிற்கும் போது எல்லாம் இது கிட்டத்தட்டத் தவருமல் நிகழ்கின் றது. மேற்கூறிய எல்லாம் அரசியல், ராணுவ குறுகிய பார்வை எனப்படலாம். எவ்வளவு நம்பக்கூடியதாகத் தென்பட்டா லும் இத்தகைய பேச்சு உண்மையில் ஆதாரமற்றதும் சந்தே கத்திற்கிடமானதும் ஆகும். இத்தகைய வார்த்தை ஜாலங் கள் கூட்டி எறியப்படுவது ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தம் வெற்றி கரமாக நடத்தப்படுவதற்கு உதவியாயிருக்கும்.

5. இப்போது பிரச்சினை: சீனு அடிமைப்படுத்தப்படுமா? என்பதாகும். பதில்: இல்லை, அது அடிமைப்படுத்தப்படாது, மாருக இறுதி வெற்றியை ஈட்டும் என்பதே. சீனு விரைவில் வெற்றியடைய முடியுமா? பதில்: இல்லை, அது விரைவில் வெல்ல முடியாது, ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தம் நீண்டகால யுத்த மாக இருக்கும் என்பதே.

6. இரண்டு ஆண்டுகட்கு முன்பளவிலேயே நாம் இப்பிரச்சி னைகள் பற்றிய பிரதான நியாயங்களைப் பெரும்படியாகச் சுட் டிக்காட்டினேம். 1936 ஜுலை 16ந் திகதி, சீஆன் சம்பவ[7]த் திற்கு ஐந்து மாதங்கள் முன்பும் லூகோச்சியௌ சம்பவத்திற் குப் பன்னிரண்டு மாதங்கள் முன்பும், அமெரிக்க நிருபர் திரு எட்கர் ஸ்னேவுடனுன பேட்டி ஒன்றில் நான் சீனுவுக்கும் ஜப் பானுக்குமிடையில் யுத்தம் சம்பந்தமான நிலைமையைப் பற்றிய பொதுவான கணிப்பீடொன்றைச் செய்து, வெற்றியை ஈட் டுவதற்கான பல்வேறு கோட்பாடுகளையும் முன்வைத்தேன். அப்பேட்டியின் பின்வரும் பகுதிகள் நினைவூட்டுபவையாகப் பயன்படலாம்:

கேள்வி: எத்தகைய நிலைமைகளின்கீழ் சீனுவால் ஜப்பானிய ஏகாதிபத்தியத்தின் சக்திகளைத் தோற்கடிக்கவும் அழிக்கவும் முடியும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?

பதில்: மூன்று நிலைமைகள் தேவை: முதலாவது, சீனுவில் ஜப்பானிய-எதிர்ப்புத் தேசிய ஐக்கிய முன்னணி ஏற்படுவது; இரண்டாவது, சர்வதேசிய ஜப்பானிய-எதிர்ப்பு ஐக்கிய முன்னணியொன்று உருவாவது; மூன்ருவது, ஜப்பானிலும் ஜப்பானியக் காலனிகளிலுமுள்ள மக்கள் மத்தியில் புரட்சிகர இயக்கம் எழுவது. சீன மக்களின் கண்ணேட்டத்திலிருந்து பார்க்கையில் இவற்றில் மிக முக்கியமானது சீன மக்களின் பெரும் ஐக்கியமாகும்.

கேள்வி: இத்தகைய ஒரு யுத்தம் எவ்வளவு காலம் நீடிக்கும் என நீங்கள் நினைக்கிறீர்கள்?

பதில்: அது சீன மக்களின் ஜப்பானிய-எதிர்ப்பு ஐக்கிய முன்னணியின் பலத்திலும் சீனுவையும் ஜப்பானையும் சம்பந்தப்படுத்தும் பிற தீர்க்கமான அம்சங்கள் பலவற்றிலும் தங்கியுள்ளது. அதாவது, பிரதான காரியமான சீனுவின் சொந்தப் பலம் போக, சீனுவுக்கு அளிக்கப்படும் சர்வதேச உதவியும் ஜப்பானிலான புரட்சியால் தரப்படும் உதவியும் முக்கியமானவையாகவும் உள்ளன. சீன மக்களின் ஜப்பானிய-எதிர்ப்பு ஐக்கிய முன்னணி சக்திமிக்கதாய் விருத்தி செய்யப்பட்டு, அது விசாலத்திலும் ஆழத்திலும் நல்லபடியாக அணிதிரட்டப்பட்டால், தம் சொந்த நலன்களுக்கு ஜப்பானிய ஏகாதிபத்தியத்தின் அச்சுறுத்தலை உணரும் பல்வேறு நாட்டு அரசாங்கங்களிடமும் மக்களிடமும் இருந்து சீனுவுக்குத் தேவையான உதவி கிடைத்தால், ஜப்பானிலும் புரட்சி விரைவில் ஏற்பட்டால் யுத்தம் துரிதமாக முடிவிற்குக் கொண்டுவரப்பட்டு, சீனு விரைவில் வெற்றி ஈட்டும். இந்த நிலைமைகள் விரைவில் அடையப்படாவிட்டாலோ யுத்தம் மிக நீண்டதாக இருக்கும், ஆனுல் அப்போதும்கூட இறுதியில் ஜப்பான் தோற்கடிக்கப்பட்டுச் சீனு நிச்சயம் வெல்லும். ஆனுல் தியாகங்கள்தான் பெரிதாக இருக்கும், துன்பமிகுந்த காலகட்டமொன்றும் இருக்கும், அவ்வளவே.

கேள்வி: அரசியல், ராணுவ ரீதிகளில் இத்தகைய ஒரு யுத்தத்தின் அபிவிருத்திப் பாதை அனேகமாக எதுவாயிருக்கும் என நீங்கள் அபிப்பிராயப்படுகிறீர்கள்?

பதில்: ஜப்பானின் கண்டக்கொள்கை ஏற்கனவே தீர்மானமாகி விட்டது, மேலும் சீனப் பிரதேசத்தையும் அரசுரிமையையும் பலியிட்டு ஜப்பானுடன் சமரசங்களைச் செய்வதால் தம்மால் ஜப்பான் தாக்குவதைத் தடுத்துவிட இயலும் எனக் கற்பனை செய்பவர்கள் வெறும் பகற் கனவே காண்கின்றனர். ஆனால் கீழ் யாங்சி பள்ளத் தாக்கும் எமது தெற்கத்திய துறைமுகங்களும் ஏற்கனவே ஜப்பானின் கண்டக் கொள்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன என்பதை நாம் திட்டவட்டமாக அறிவோம். மேலும், பிற நாடுகளைச் சீனாவிலிருந்து துண்டிக்கவும் தென்மேற்குப் பசிபிக்கை ஏகபோகம் செய்யவும் வேண்டி ஜப்பான் பிலிப்பைனையும் ஸியாமையும் வியட்நாமையும் மலேக் குடாநாட்டையும் டச்சுக் கிழக்கிந்தியப் பிராந்தியங்களையும் கைப்பற்ற விரும்புகின்றது. இதுவே ஜப்பானின் கடற் பகுதிக் கொள்கை. இத்தகைய ஒரு காலகட்டத்தில், சீனா மிக மிகக் கஷ்டமான ஒரு நிலையில் இருக்குமென்பதில் ஐயத்திற்கிடமில்லை. ஆனாற் சீன மக்களிற் பெரும்பான்மையினர், இத்தகைய கஷ்டங்கள் கடக்கப் பட முடியும் என நம்புகின்றனர்; பெரிய துறைமுக நகரங்களில் உள்ள செல்வந்தர்கள் மட்டுமே தம் உடைமைகளை இழக்க நேரிடு மென்ற அச்சத்தில் தோல்விவாதிகளாக உள்ளனர். ஒருகால் சீனாவின் கரையோரம் ஜப்பானால் முற்றுகை இடப்பட்டதும் சீனா ஜப்பானுக்கு எதிரான தன் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துவது அசாத்தியமாயிருக்கும் எனப் பலர் நினைக்கின்றனர். இது அர்த்தமற்றது. இதை மறுத்துரைக்க நாம் செஞ்சேனையின் போராட்ட வரலாற்றைக் குறிப்பிட்டாலே போதும். தற்போதைய ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தத்தில் சீனாவின் நிலைமை உள்நாட்டு யுத்தத்திற் செஞ்சேனைக்கிருந்த நிலைமையைவிட மிக உயர்வானது. சீனா மிகப் பெரிய ஒரு நாடு; ஜப்பான் சீனாவின் பத்துக் கோடி அல்லது இரு பது கோடி மக்கள் உள்ள பகுதியைப் பிடித்துக்கொண்டாலும்

கூட நாம் இன்னும் தோற்கடிக்கப்பட்டதாகவே இராது. எமக்கு இன்னும் ஜப்பானிய யுத்தப்பிரபுக்களுக்கு எதிராகப் போரிடப் பெரும் பலம் மிஞ்சியிருக்கும், ஜப்பான் யுத்தம் முழுவதிலும் தன் சொந்தப் பின்புறப் பகுதிகளில் தற்காப்புப் போர்கள் செய்த வண்ணமிருக்க வேண்டியதாயிருக்கும். சீனுவின் பொருளாதாரம் ஒருமைப்பாடற்றதாகவும் ஏற்றத்தாழ்வானதாகவும் உள்ளது. ஆனுல் இது ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தத்திற்குச் சாதகமாகவே இருக்கின்றது. உதாரணமாக, சீனுவின் எஞ்சிய பாகத்திலிருந்து ஷாங்ஹாய் துண்டிக்கப்படுவது, அமெரிக்காவின் எஞ்சிய பாகத்திலிருந்து நியூ யோர்க் துண்டிக்கப்படுவதளவு நாட்டிற்கு விநாசகரமாயிராது. சீனுவின் கரையோரம் ஜப்பானுல் முற்றுகையிடப்பட்டாலும் கூட சீனுவின் வடமேற்கையும் தென்மேற்கையும் மேற்கையும் முற்றுகையிடுவது ஜப்பானுக்கு அசாத்தியமாயிருக்கும். இவ்வாருக, மறுபடியும் பிரச்சினையின் மையமான அம்சம் முழுச் சீன மக்களினதும் ஐக்கியமும் தேச-விசால ஜப்பானிய-எதிர்ப்பு முன்னணி ஒன்றைக் கட்டி எழுப்புவதுமே. நாம் நீண்டகாலமாகக் கோரி வந்துள்ளது இதைத் தான்.

*கேள்வி:* யுத்தம் நீண்டகாலம் இழுபட்டு, ஜப்பான் முற்ருகத் தோற்கடிக்கப்படாமலுமிருந்தால் கம்யூனிஸ்ட் கட்சி ஜப்பானுடன் சமாதானம் பேச இணங்குமா? அதோடு வடகிழக்குச் சீனுவில் ஜப்பானின் ஆட்சியை அங்கீகரிக்குமா?

*பதில்:* இல்லை. நாடு முழுவதினதும் மக்களைப் போலவே சீனக் கம்யூனிஸ்ட் கட்சியும் ஜப்பானை ஒரு அங்குலம் சீனப் பிரதேசத்தைத் தானும் வைத்துக்கொள்ள அனுமதியாது.

*கேள்வி:* உங்கள் அபிப்பிராயத்தில், இந்த விடுதலை யுத்தத்தில் பின்பற்றப்பட வேண்டிய பிரதான யுத்ததந்திரக் கோட்பாடுகள் எவை?

*பதில்:* எமது யுத்ததந்திரக் கோட்பாடு எமது பிரதான படைகளை விசாலித்த, சலனமுறும் முனையில் போரிடப் பிரயோகித்தலாக இருக்க வேண்டும். வெற்றியடைவதற்குச் சீனத் துருப்புக்கள்

விசாலமான போர்க்களங்களில், துரித முன்னேற்றங்களும் பின் வாங்கல்களும், துரிதப் படைக்குவிப்புகளும் சிதறிப் பரவுதல்களுமாக உயர்ந்த அளவான நடமாட்ட யுத்தத்தை நடத்த வேண்டும். இதன் பொருள் முற்றுகத் தற்காப்பு அமைப்புகளிலும் ஆழ்ந்த போர் அகழிகளிலும் உயர்ந்த கோட்டைகளிலும் அடுத்தடுத்துள்ள தற்காப்பு ஸ்தானங்களிலும் தங்கி நிற்பதான ஸ்தான யுத்தம் அல்லாமல், பெரும் அளவிலான நடமாட்ட யுத்தமாகும். இதன் அர்த்தம் ராணுவ ரீதியில் ஜீவாதாரமான ஸ்தலங்கள் எல்லாம் கைவிடப்படுவதென்பதல்ல, அவை சாதகமாயுள்ள வரை ஸ்தான யுத்தத்தால் பாதுகாக்கப்பட வேண்டும். ஆனால் யுத்தம் முழுமைக்கும் கேந்திரமான யுத்ததந்திரக் கோட்பாடு நடமாட்ட யுத்தமாகவே இருக்க வேண்டும். ஸ்தான யுத்தமும் அவசியம், ஆனால் யுத்ததந்திர ரீதியில் அது துணை செய்வதும் இரண்டாம் பட்சமானதும் ஆகும். புவியியல் ரீதியில் யுத்த அரங்கு இத்தனை பாரியதாயிருப்பதால் நாம் நடமாட்ட யுத்தத்தை மிகத் திறம்பட நடத்துவது சாத்தியம். எமது வீறுமிக்க நடவடிக்கைகளின் எதிரில் ஜப்பானிய சேனை கவனத்துடன் செயல்பட வேண்டியிருக்கும். அதனுடைய யுத்த யந்திரம் பளுவானதும், ஆடியசைந்து மெதுவாக நகர்வதும் வரைப்பட்ட திறனுடையதுமாக உள்ளது. நாம் ஒரு ஒடுங்கிய முனையில் எம் படைகளைக் குவித்துச் சிறுகச் சிறுக உராசி அரிக்கும் தற்காப்பு யுத்தம் நடத்துவோமானால், அது நாம் எமது புவியியலினதும் பொருளாதார ஒழுங்கினதும் சாதகத்தன்மைகளெல்லாவற்றையும் வீணே உதறித் தள்ளிவிட்டு, அபிஸினியர்களிழைத்த தவறை நாமும் திரும்ப இழைப்பதாக இருக்கும். யுத்தத்தின் முற்கட்டங்களில் நாம் பெரிய தீர்க்கமான போர்கள் எதையும் தவிர்க்கவும் முதலில் எதிரியின் துருப்புக்களின் துணிவையும் போர்த்திறனையும் சிறிது சிறிதாக அழிக்க நடமாட்ட யுத்தத்தை உபயோகிக்கவும் வேண்டும்.

நடமாட்ட யுத்தம் நடத்தப் பயிற்றப்பட்ட சேனைகளை உபயோகிப்பது போக நாம் விவசாயிகள் மத்தியில் பெருந்தொகையான

கொரில்லாக் கூறுகளை அணிதிரட்ட வேண்டும். வடகிழக்கு மாகாணங்கள் மூன்றினதும் ஜப்பானிய-எதிர்ப்பு தொண்டர் படைகள் முழு நாட்டினதும் விவசாயிகளிலிருந்து அணிதிரட்டப்படக்கூடிய மறைந்துகிடக்கும் எதிர்ப்பு வலிமையின் ஒரு சின்னஞ்சிறு எடுத்துக் காட்டு மட்டுமே என்பதை அறிந்திருக்க வேண்டும். சீனாவின் விவசாயிகளில் மிகப் பெரும் வலிமை மறைந்துள்ளது; சரியானபடி அணிதிரட்டி வழிநடத்தப்பட்டால் அவர்களால் ஜப்பானிய சேனைக்குத் தினமும் இருபத்திநான்கு மணிநேரமும் வேலை கொடுத்துக் கொண்டிருக்கவும் தொல்லை கொடுத்தே சாகடிக்கவும் இயலும். யுத்தம் சீனாவில் நடத்தப்படும் என்பது நினைவிலிருக்க வேண்டும், அதாவது ஜப்பானிய சேனை அதற்கு விரோதமான சீன மக்களால் முற்றும் சூழப்பட்டிருக்கும்; ஏன் தேவைப் பண்டங்கள் அனைத்தையும் வெளியிலிருந்து கொணரவும் அவற்றுக்குக் காவல்போட்டு வைத்திருக்கவும் நிர்ப்பந்திக்கப்படும்; தன் தொடர்பு மார்க்கங்களைப் பாது காக்கவும் இடையறாது திடீர் தாக்குதல்களுக்கு எதிராக விழிப்பாயிருக்கவும் பெரும் தொகையான துருப்புக்களை உபயோகிக்கவும் வேண்டியதாயிருக்கும்; அத்துடன் மஞ்சூரியாவிலும், ஜப்பானிலும் அதற்குப் பெரும் தளக்காவற்படைகள் தேவை.

யுத்தத்தின் ஊடே சீனாவால் பல ஜப்பானியக் கைதிகளையும், தொகையான ஆயுதங்களையும் வெடிமருந்துகளையும் கைப்பற்றித் தன்னை ஆயுதபாணியாக்கக் கூடியதாக இருக்கும். அதே நேரத்தில் சீனா தனது துருப்புக்களின் சாதனைகளைச் சிறிது சிறிதாகப் பலப்படுத்த அந்நிய உதவியையும் பெறும். ஆகவே சீனாவால் யுத்தத்தின் பிற்காலகட்டத்தில் ஸ்தான யுத்தம் நடத்தவும் ஜப்பான் கைப்பற்றியுள்ள பகுதிகள் மீது ஸ்தானத் தாக்குதல்கள் செய்யவும் கூடியதாக இருக்கும். அவ்வாறாகச் சீனாவின் நீண்டகால எதிர்ப்பின் பளுவின்கீழ் ஜப்பானின் பொருளாதாரம் முறியும்; எண்ணிலடங்காத போர்களினால் ஜப்பானியப் படைகள் தேய்வுற்று அவற்றின் துணிவு தகரும். சீனத் தரப்பிலோ, மறைவான எதிர்ப்பு சக்தி நாளுக்கு நாள் கொந்தளித்து ஓங்கி வளர்வதோடு, பெருந்தொகையான

புரட்சிகர மக்கள் தங்கள் விடுதலைக்காகப் போரிட எம் முன்னணி களுக்குள் வந்து குவிந்து கொண்டேயிருப்பர். இவையாவும் பிற அம்சங்களும் சேர்ந்து நாம் ஜப்பான் கைப்பற்றியுள்ள பகுதிகளி லுள்ள கொத்தளங்கள் மீதும் தளங்கள் மீதும் தீர்க்கமான இறுதித் தாக்குதல்களைத் தொடுத்து, ஜப்பானிய ஆக்கிரமிப்புப் படைகளைச் சீனுவிலிருந்து விரட்டக்கூடியதாக்கும்.

மேற்படி கருத்துக்கள் பத்து மாத கால யுத்தத்தின் அனு பவத்தின் ஒளியில் சரியானவையென நிரூபணமாகியுள்ளன. எதிர்காலத்திலும் சரியானவையாக நிரூபணமாகும்.

7. லூகோச்சியௌ சம்பவத்திற்குப்பின் இரண்டு மாதங் களுக்குள்ளாக, 1937 ஆகஸ்ட் 25ந் திகதி சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டி அதன் ''இன்றைய நிலைமையையும் கட்சியின் கடமைகளையும் பற்றிய முடி''வில் தெளிவாகச் சுட்டிக் காட்டியதாவது:

> லூகோச்சியௌவிலான ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களின் ரா ணுவ ஆத்திரமூட்டலும் அவர்கள் பெய்ப்பிங்கையும் தியென்சினையும் கைப்பற்றியதும் சீனுவிற் பெருஞ்சுவருக்குத் தெற்கேயான அவர் களின் பெரும் ரீதியான படையெடுப்பின் ஆரம்பம் மட்டுமே. அவர்கள் ஏற்கனவே யுத்தத்திற்கான தங்கள் தேசிய படைதிரட்ட லைத் தொடங்கிவிட்டனர். தமக்கு ''நிலைமையை மோசமாக்கும் எந்த அவாவும் கிடையாது'' என்ற அவர்களின் பிரசாரம் மேற் கொண்டு தாக்குதல்கள் செய்வதற்கு ஒரு திரை மறைப்பு மட்டுமே.
>
> ஜூலை 7ந் திகதி லூகோச்சியௌவிலான எதிர்ப்பு சீனுவின் தேச விசாலமான பதிற்தாக்குதல் யுத்தத்தின் தொடக்கத்தைக் குறித் தது.
>
> இவ்வாறுகச் சீனுவின் அரசியல் நிலைமையில் ஒரு புதிய கட்டம், பதிற்தாக்குதல் யுத்தத்தை நடத்தும் கட்டம் தொடங்கியுள்ளது. பதிற்தாக்குதலுக்கான தயாரிப்புகளின் கட்டம் முடிந்துவிட்டது.

தற்போதைய கட்டத்தின் கேந்திரமான பணி பதிற்தாக்குதல் யுத்தத்தில் வெற்றிக்காகத் தேசத்தின் சகல சக்திகளையும் அணிதிரட்டுவதாகும்.

யுத்தத்தில் வெற்றிக்கான திறவுகோல் இப்போது, ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுவிட்ட பதிற்தாக்குதல் யுத்தத்தை முழுத் தேசத்தினதும் ஒரு மொத்தப்படியான பதிற்தாக்குதல் யுத்தமாக விருத்தி செய்வதுதான். இத்தகைய முழுத் தேசத்தினதும் ஒரு மொத்தப்படியான பதிற்தாக்குதல் யுத்தத்தின் மூலம் மட்டுமே இறுதி வெற்றி ஈட்டப்பட முடியும்.

தற்போதைய பதிற்தாக்குதல் யுத்தத்தில் பாரதூரமான பலவீனங்கள் இருக்கின்றனவாகையால் யுத்தத்தின் போக்கில் பல பின்னடைவுகள், பின்வாங்குதல்கள், உட்பிளவுகள், துரோகங்கள், தற்காலிகமான, ஒரு பகுதியளவான சமரசங்கள் முதலிய பாதக நிலைமைகள் ஏற்படக் கூடும். ஆகவே யுத்தம் சிரமமிக்க, நீண்ட ஒரு யுத்தமாக இருக்கும் என உணர்ந்துகொள்ளப்பட வேண்டும். ஆனால், எமது கட்சியினதும் முழு மக்களினதும் பிரயாசைகள் மூலம், ஏற்கனவே ஆரம்பித்துவிட்ட பதிற்தாக்குதல் யுத்தம் சகல தடைகளையும் கடந்து, தொடர்ந்தும் முன்னேறுவதும் விருத்தியுறுவதும் நிச்சயமென நாம் திடமாக நம்புகின்றோம்.

மேற்படி கருத்தும் பத்து மாத கால யுத்தத்தின் அனுபவத்தின் ஒளியிற் சரியானதென நிரூபணமாகியுள்ளது, எதிர்காலத்திலும் சரியானதென நிரூபணமாகும்.

8. அறிவு பற்றிய தத்துவ ரீதியிற் பேசுவதாயின், யுத்தம் பற்றிய தவறான கருத்துக்கள் அனைத்திற்கும் தோற்றுவாய் இப்பிரச்சினையிலான கருத்துமுதல்வாத, யாந்திரிகவாதப் போக்குகளிற் தான் உள்ளது. இத்தகைய போக்குகளையுடையவர்கள் பிரச்சினைகளைக் குறித்து அகநிலைப்பட்டதும் ஒருதலைப்பட்சத் தன்மையானதுமான அணுகுமுறையொன்றைக் கொண்டுள்ள

னர். அவர்கள் ஒன்றில் ஆதாரமற்ற, சுத்த அகநிலைப்பட்டரீதியான பேச்சில் ஈடுபடுகின்றனர், அல்லது தனியொரு அம்சத்தையோ தற்காலிகமான வெளிப்பாடடைவு ஒன்றையோ தம் அடிப்படையாகக் கொண்டு அதேவிதமான அகநிலைவாதத்தால் அதைப் பெரிதுபடுத்தி அதையே பிரச்சினையின் முழுமையுமாக ஆக்குகின்றனர். ஆனால் இருவகையான தவறான கருத்துக்களுள்ளன: ஒருவகை அடிப்படையான, ஆகவே நிலையான, திருத்தக் கடினமான தவறுகள்; மற்றவகை தற்செயலான, ஆகவே தற்காலிகமான, திருத்த இலகுவான தவறுகள். இரண்டு வகைகளும் தவறானவையாகையால் இரண்டும் திருத்தப்பட வேண்டியவை. ஆகவே, யுத்தப் பிரச்சினையிலான கருத்துமுதல்வாத, யாந்திரிகவாதப் போக்குகளை எதிர்த்து, யுத்தம் பற்றிய ஆராய்வொன்றைச் செய்வதிற் புறநிலைப்பட்ட, சகல-அம்ச நோக்கொன்றை கொள்வதன் மூலம் மட்டுமே நாம் யுத்தமாகிய பிரச்சினை பற்றிச் சரியான முடிவுகளை எடுக்க முடியும்.

## பிரச்சினையின் அடிப்படை

9. ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தம் ஏன் ஒரு நீண்டகால யுத்தம்? இறுதி வெற்றி ஏன் சீனாவினுடையதாக இருக்கும்? இந்தக் கூற்றுக்களுக்கு அடிப்படை என்ன?

சீன-ஜப்பானிய யுத்தம் வேறெந்த யுத்தத்தையும் போன்றதல்ல, அது குறிப்பாக அரைக்காலனித்துவ அரைநிலப்பிரபுத்துவ சீனாவிற்கும் ஏகாதிபத்திய ஜப்பானுக்குமிடையில்,

20வது நூற்றுண்டின் முப்பதாவது ஆண்டுகளில் நடைபெறு கின்ற ஒரு ஜீவமரண யுத்தமாகும். இதிற்தான் இந்தப் பிரச் சினை முழுமையினதும் அடிப்படை உள்ளது. இவ்யுத்தத்திலான இரு தரப்புகளும் பல எதிரெதிரான குணும்சங்களைக் கொண் டவை; இக்குணும்சங்கள் கீழே வரிசைக் கிரமமாக விவாதிக்கப் படும்.

10. ஜப்பானியத் தரப்பு. முதலாவதாக, ஜப்பான் ராணுவ, பொருளாதார, அரசியல்-ஸ்தாபன வலிமையில் கிழக்கில் முதல் ஸ்தானம் வகிப்பதும் உலகின் மிகப் பிரதானமான ஐந்தோ ஆறு ஏகாதிபத்திய நாடுகளில் ஒன்றுமான சக்திமிக்க ஒரு ஏகாதிபத்திய நாடு. இவையே ஜப்பானின் ஆக்கிரமிப்பு யுத்தத்தில் அடிப்படையான அம்சங்கள். யுத்தத்தின் தவிர்க்க முடியாத தன்மைக்கும் சீனுவிற்கு விரைவான வெற்றி அசாத் தியமாயிருப்பதற்கும் காரணங்கள் ஜப்பானின் ஏகாதிபத்திய அமைப்பும் அதன் பெரும் ராணுவ, பொருளாதார, அரசியல்-ஸ்தாபன வலிமையுமாகும். எனினும், இரண்டாவதாக, ஜப் பானின் சமூகப் பொருளாதாரத்தின் ஏகாதிபத்திய இயல்பு அதன் யுத்தத்தின், பிற்போக்குத் தன்மையானதும் மிலேச்சத் தனமானதுமான யுத்தத்தின் ஏகாதிபத்திய இயல்பை நிர் ணயிக்கின்றது. 20வது நூற்றுண்டின் முப்பதாவது ஆண்டு களில் ஜப்பானிய ஏகாதிபத்தியத்தின் உள், வெளி முரண்பா டுகள் அதை அளவில் ஒப்புவமையற்றதான ஒரு துணிச்சல்வாத யுத்தத்திற் குதிக்க மட்டுமல்லாமல் அதன் இறுதிச் சரிவை நெருங்கவும் தள்ளியுள்ளன. சமூக அபிவிருத்தியின் கோணத் திலிருந்து பார்த்தால் ஜப்பான் இனியும் செழிப்புறும் நாடல்ல; யுத்தம் அதன் ஆளும் வர்க்கங்கள் தேடிய சுபீட்சத்திற்கல்ல, அதற்கு நேரெதிரான, ஜப்பானிய ஏகாதிபத்தியத்தின் அழி

விற்கே இட்டுச் செல்லும். ஜப்பானின் யுத்தத்தின் பிற்போக்குத் தன்மை என்பதால் நாம் கருதுவது இதைத்தான். இந்தப் பிற்போக்குத் தன்மைதான் ஜப்பானிய ஏகாதிபத்தியத்தின் ராணுவ-நிலப்பிரபுத்துவ இயல்புடன் சேர்ந்து ஜப்பானின் யுத்தத்தின் அலாதியான மிலேச்சத்தன்மையைத் தோற்றுவிக்கின்றது. இவையாவும் ஜப்பானுக்குள்ளேயான வர்க்க விரோதப் பாடுகளையும், ஜப்பானிய, சீன தேசங்களுக்கிடையிலான விரோதப்பாட்டையும், ஜப்பானுக்கும் உலகின் ஏனைய நாடுகளில் அனேகமானவற்றிற்கும் இடையிலான விரோதப்பாட்டையும் ஆகக் கூடிய மட்டத்திற்குக் கிளப்பிவிடும். ஜப்பானின் யுத்தத்தின் பிற்போக்கு, மிலேச்ச இயல்பே அதன் தவிர்க்கமுடியாத தோல்விக்கான முதன்மையான காரணமாக அமைகின்றது. மேலும் மூன்றாவதாக, ஜப்பானின் யுத்தம் அதன் பெரும் ராணுவ, பொருளாதார, அரசியல்-ஸ்தாபன வலிமையினடிப்படையில் நடத்தப்படுகின்றது, ஆனால் அதே சமயத்தில் அது போதியதல்லாத ஒரு இயற்கை வளத்திலும் தங்கியுள்ளது. ஜப்பானின் ராணுவ, பொருளாதார, அரசியல்-ஸ்தாபன வலிமை பெரியது, ஆனால் தொகையளவிற் போதாதது. ஜப்பான் ஒப்புநோக்காகச் சிறிய, மனித சக்தியும் ராணுவ, நிதி, பொருள் வளங்களும் போதாக்குறையுடைய ஒரு நாடு, அதனால் நீண்ட ஒரு யுத்தத்தில் நின்றுபிடிக்க இயலாது. ஜப்பானின் ஆட்சியாளர்கள் இக்கஷ்டத்தை யுத்தத்தின் மூலம் தீர்த்துக்கொள்ள முயல்கின்றனர், ஆனால் மீண்டும் அவர்கள் தாம் விரும்புவதற்கு நேர் எதிரானதையே பெறுவர்; அதாவது, அவர்கள் இந்தக் கஷ்டத்தைத் தீர்ப்பதற்கு யுத்தத்தைத் தொடுத்துள்ளனர், ஆனால் இந்த யுத்தம் இந்தக் கஷ்டத்தைப் பெருக்குவதிலும் ஜப்பானின் ஆதியிலிருந்த வளங்களையும் தீர்த்துவிடு

வதிலும் கூடப் போய் முடியும். நான்காவதும் கடைசியுமாக, ஜப்பான் பாஸிஸ நாடுகளிடமிருந்து சர்வதேச ஆதரவு பெற முடிகையில், அது எதிர்ப்பட்டே தீர வேண்டிய சர்வதேச எதிர்ப்பு அதன் சர்வதேச ஆதரவைவிடப் பெரிதாயிருக்கும். இந்த எதிர்ப்பு சிறிது சிறிதாக வளர்ந்து இறுதியில் அந்த ஆதரவை இல்லாமல் செய்வது மட்டுமல்லாமல் ஜப்பானின் மீதே தாக்கத்தையும் ஏற்படுத்தும். அநீதியான லட்சிய மொன்று அற்ப ஆதரவே பெறுமென்ற நியதி இத்தகையதே; ஜப்பானின் யுத்தத்தின் இயல்பின் பெறுபேறு இத்தகையதே. தொகுத்துக் கூறுவதானல், ஜப்பானின் சாதக நிலைமை யுத்தம் நடத்த அதற்குள்ள பெரும் வல்லமையிலடங்கியுள்ளது, அதன் பாதக நிலைமைகள் அதன் யுத்தத்தின் பிற்போக்கு, மிலேச்ச இயல்பிலும், அதன் மனித சக்தி, பொருள் வளங்கள் போதா மையிலும், அதன் அற்ப சர்வதேச ஆதரவிலும் அடங்கியுள் ளன. இவையே ஜப்பானியத் தரப்பிலான குணும்சங்கள்.

11. சீனத் தரப்பு. முதலாவதாக, நமது நாடு ஓர் அரைக் காலனித்துவ, அரைநிலப்பிரபுத்துவ நாடு. அபினி யுத்தம்,[8] தைப்பிங் விண்ணுலக சாம்ராச்சியப் புரட்சி,[9] 1898ன் சீர் திருத்த இயக்கம்,[10] 1911ம் ஆண்டுப் புரட்சி,[11] வட படை யெடுப்பு — சீனுவை அதன் அரைக்காலனித்துவ, அரைநிலப் பிரபுத்துவ நிலையிலிருந்து மீட்பதைக் குறிக்கோளாகக் கொண்ட புரட்சிகர, அல்லது சீர்திருத்த இயக்கங்கள் — எல்லாமே பார தூரமான பின்னடைவுகளை உற்றன, ஆகவே சீனு அரைக்கா லனித்துவ, அரைநிலப்பிரபுத்துவ நாடாகவே இருந்து வருகி றது. நமது நாடு இன்னும் பலவீனமான ஒரு நாடும், ராணுவ, பொருளாதார, அரசியல்-ஸ்தாபன வலிமையில் எதிரியைவிடத் தாழ்வான ஒரு நாடும் ஆகும். இதிலும் ஒருவர் யுத்தத்தின்

தவிர்க்க முடியாத தன்மைக்கும் சீனுவிற்கு விரைவான வெற்றி அசாத்தியமாயிருப்பதற்குமான அடிப்படையைக் காணலாம். எனினும், இரண்டாவதாக, கடந்த நூறு ஆண்டுகளிலான வர வர அதிகரித்த அபிவிருத்தியை உற்றுள்ளதான சீனுவின் விடுதலை இயக்கம் இப்போது முந்திய எந்தக் காலகட்டத்திலிருந்ததையும் விட வேறுபட்டதாக உள்ளது. அதை எதிர்த்த உள்நாட்டு, அந்நிய சக்திகள் அதற்குப் பாரதூரமான பின்னடைவுகளை ஏற்படுத்தியுள்ளனவெனினும் அதே வேளையில் அவை சீன மக்களுக்கு உரமேற்றியுமுள்ளன. இன்று சீனு ராணுவ, பொருளாதார, அரசியல், கலாச்சார ரீதிகளில் ஜப்பானளவு பலமுடையதல்லவெனினும், சீனுவில் அதன் வரலாற்றின் மற்றெந்தக் காலகட்டத்திலுமிருந்தவற்றைக் காட்டிலும் அதிக முற்போக்கான அம்சங்கள் உள்ளன. சீனக் கம்யூனிஸ்ட் கட்சியும் அதன் தலைமையின் கீழுள்ள சேனையும் இந்த முற்போக்கான அம்சங்களைப் பிரதிநிதித்துவம் செய்கின்றன. இந்த முன்னேற்றத்தின் அடிப்படையில் தான் சீனுவின் தற்போதைய விடுதலை யுத்தம் நீண்டதாயிருக்கவும் இறுதி வெற்றி ஈட்டவும் முடியும். நலிவடைகின்ற ஜப்பானிய ஏகாதிபத்தியத்துக்கு நேர்மாருகச் சீனு காலைச் சூரியனைப் போல உயரும் ஒரு நாடு. சீனுவின் யுத்தம் முற்போக்கானது, எனவே அது நியாயமானது. அது ஒரு நியாயமான யுத்தமாகையால் அது தேசத்தை ஐக்கியமுறத் தட்டியெழுப்பவும், ஜப்பானிலுள்ள மக்களின் அனுதாபத்தைத் தூண்டிப் பெறவும், உலகிலுள்ள நாடுகளில் அனேகமானவற்றின் ஆதரவை வென்றெடுக்கவும் வல்லது. மூன்ருவதாக, மீண்டும் ஜப்பானுடன் வேறுபாடாக, சீனு மிகப் பெரிதான, பாரிய பிரதேசத்தையும் செழித்த வளங்களையும் பெரும் ஜனத்தொகையை

யும் ஏராளமான படைவீரர்களேயும் கொண்ட ஒரு நாடும் நீண்ட யுத்தமொன்றை நடத்த வல்லதுமாகும். நான்காவதும் கடைசியுமாக, சீனுவிற்கு அதன் யுத்தத்தின் முற்போக்கும் நியாயமுமான இயல்பினின்றும் எழுவதான பரந்த சர்வதேச ஆதரவு உள்ளது; இதுவும் ஜப்பானின் அநீதியான லட்சியத் திற்குள்ள அற்ப ஆதரவிற்கு நேர்மாறுனது. தொகுத்துக் கூறுவதானுல், சீனுவின் பாதக நிலைமை அதன் ராணுவ ரீதி யான பலவீனத்திலடங்கியுள்ளது, அதன் சாதக நிலைமைகள் அதன் யுத்தத்தின் முற்போக்கான, நியாயமான இயல்பிலும், அதன் விசாலமான நிலப்பரப்பிலும், அதற்குள்ள ஏராளமான சர்வதேச ஆதரவிலும் அடங்கியுள்ளன. இவையே சீனுவின் குணும்சங்கள்.

12. இவ்வாருக, ஜப்பான் பெரும் ராணுவ, பொருளா தார, அரசியல்-ஸ்தாபன வலிமையுடையது, ஆனுல் அதன் யுத்தம் பிற்போக்கானதும் மிலேச்சத்தனமானதும், அதன் மனித சக்தி, பொருள் வளங்கள் போதாதவை, அது சர்வ தேச ரீதியில் பாதகமான நிலைமையில் உள்ளது என்பதைக் காணமுடிகின்றது. அதற்கு மாருகச் சீனு குறைந்த ராணுவ, பொருளாதார, அரசியல்-ஸ்தாபன வலிமையுடையது, ஆனுல் அது முன்னேற்ற சகாப்தத்திலுள்ளது, அதன் யுத்தம் முற் போக்கானதும் நியாயமானதும், அத்துடன் அது பெரிய ஒரு நாடு, அந்த அம்சம் அதை நீண்ட ஒரு யுத்தத்தை நடத்த வல்ல தாக்குகின்றது, அது உலகில் அனேகமான நாடுகளால் ஆதரிக் கப்படும். மேற்கூறியவையே சீன-ஜப்பானிய யுத்தத்தின் அடிப் படையான, பரஸ்பரம் முரண்பாடான குணும்சங்கள். அவை இரு தரப்புகளினதும் அரசியற் கொள்கைகளேயும் ராணுவ யுத்ததந்திரங்களேயும் தந்திரோபாயங்களேயும் எல்லாம் நிர்ண

யித்துள்ளன, நிர்ணயிக்கின்றன; அவை யுத்தத்தின் நீண்ட தன்மையையும் இறுதி வெற்றி ஜப்பானையல்ல, சீனவையே சாரும் என்றமையையும் நிர்ணயித்துள்ளன, நிர்ணயிக்கின்றன. இவ்யுத்தம் இந்தக் குணம்சங்களுக்கிடையிலான ஒரு போட்டி. இவை ஒவ்வொன்றும் அதனதன் இயல்பிற்கேற்ப, யுத்தத்தின் போக்கில் மாற்றமடையும், இதிலிருந்து மற்ற அனைத்தும் தொடரும். இந்தக் குணம்சங்கள் புறநிலையாக உள்ளவை, மனிதர்களை ஏமாற்றப் புனைந்து கூறப்படுபவையல்ல; இவை யுத்தத்தின் எல்லா அடிப்படை அம்சங்களையும் ஆக்குகின்றன, பூர்த்தியற்ற துண்டுகளல்ல; இவை இரு தரப்புகளினதும் பெரியவையும் சிறியவையுமான பிரச்சினைகளெல்லாவற்றிலும் யுத்தத்தின் எல்லாக் கட்டங்களிலும் இழையோடுகின்றன, பொருட்டற்ற விஷயங்களல்ல. சீன-ஜப்பானிய யுத்தத்தை ஆராய்வதில் எவரும் இக்குணம்சங்களை மறந்துவிட்டால் அவர் நிச்சயம் தவறுகிவிடுவார்; அவரது கருத்துக்கள் சில சிறிது காலத்திற்கு நம்பப்பட்டு, சரியானவையாகத் தோற்றமளிக்கக்கூடும் எனினும் அவை யுத்தத்தின் போக்கால் தவறானவை என நிச்சயம் நிரூபிக்கப்படும். இந்தக் குணம்சங்களின் அடிப்படையில் இனி நாம் கையாளப்பட வேண்டிய பிரச்சினைகளை விளக்குவோம்.

## தேசிய அடிமைப்பாட்டுத் தத்துவத்திற்கு மறுப்புரை

13. எதிரியின் பலத்திற்கும் எமது பலவீனத்திற்கும் இடையிலான வேறுபாட்டைத் தவிர வேறெதையும் காணுதவர்களான தேசிய அடிமைப்பாட்டுத் தத்துவக்காரர்கள், ''எதிர்த்

துப் போரிட்டால் நிச்சயம் அழிவு'' என்று கூறி வந்தனர், இப் போது, ''தொடர்ந்து போரிட்டால் நிச்சயம் அழிவு'' எனக் கூறுகின்றனர். ஜப்பான் பலமானதாளுலும் சிறியது, சீன பலவீனமானதாளுலும் பெரியது எனக் கூறுவதால் மட்டும் நாம் அவர்களை மனம் மாற்றிவிட முடியப் போவதில்லை. சிறிய ஆனுற் பலமான ஒரு நாடு பெரிய ஆனுற் பலவீனமான ஒரு நாட்டைத் தோற்கடிக்க முடியும் என்றும், மேலும், பின் னடைந்த ஒரு நாடு முன்னேறிய ஒரு நாட்டைத் தோற்க டிக்க முடியும் என்றும் நிரூபிக்க அவர்களால் யுவான் ராஜவம் சத்தால் ஸொங் ராஜவம்சம் அழிக்கப்பட்டதும் சிங் ராஜவம் சத்தால் மிங் ராஜவம்சம் அழிக்கப்பட்டதும் போன்ற வர லாற்று உதாரணங்களைக் காட்ட முடியும். இச்சம்பவங்கள் நெடுங்காலத்திற்கு முன் நிகழ்ந்தவை, இவை இதை நிரூபிக்க வில்லை என நாம் கூறிளுல் அவர்களால் சிறிய ஆனுற் பலமான ஒரு முதலாளித்துவ நாடு பெரிய ஆனுற் பலவீனமானதும் பின் னடைந்ததுமான ஒரு நாட்டைத் தோற்கடிக்க முடியும் என நிரூபிக்கப் பிரித்தானியா இந்தியாவை அடிமைப்படுத்தியதை எடுத்துக்கூற முடியும். எம்மால் அடிமைப்பாட்டுவாதிகள் எல்லோருடைய வாயையும் அடைத்து, மனம் மாற்றவும், இன்னும் குழப்பமுற்று அல்லது உறுதியற்று உள்ள எல்லோ ரையும் மனம் மாற்றி அவ்வாருகப் பதிற்தாக்குதல் யுத்தத்தில் அவர்களின் நம்பிக்கையைப் பலப்படுத்தப் பிரசார வேலையில் ஈடுபட்டுள்ளோர் அனைவருக்கும் போதிய ஆதாரங்களை அளிக் கவும் முடிவதற்கு முதலில் நாம் வேறு காரணங்களைக் காட்டி யாக வேண்டும்.

14. அப்படியாளுல், நாம் முன்வைக்க வேண்டிய காரணங் கள் எவை? சகாப்தத்தின் குணும்சங்களே இவை. இந்தக்

குணும்சங்கள் ஜப்பானின் பிற்போக்குத்தன்மையும் அற்ப ஆதரவுமாகவும் சீனுவின் முன்னேற்றமும் அமோக ஆதரவுமாகவும் திட்டவட்டமாகப் பிரதிபலிக்கப்படுகின்றன.

15. எமது யுத்தம் வேறெந்த ஒரு யுத்தத்தையும் போன்றதல்ல, அது குறிப்பாகச் சீனுவுக்கும் ஜப்பானுக்குமிடையில் 20வது நூற்ருண்டின் முப்பதாவது ஆண்டுகளில் நடைபெறும் ஒரு யுத்தம். எமது எதிரியான ஜப்பான் அனைத்திற்கும் முதலில் மரண விளிம்பிலுள்ள ஒரு ஏகாதிபத்திய வல்லரசு; அது ஏற்கனவே தன் நலிவடைவுச் சகாப்தத்தில் உள்ளது, அது இந்தியாவின் அடிமைப்படுத்தல் சமயத்தில், பிரித்தானிய முதலாளித்துவம் இன்னும் அதன் ஓங்குதசையிலிருந்த போதான பிரித்தானியாவினின்றும் வேறுபட்டது மட்டுமல்லாமல், இருபதாண்டுகளுக்கு முன் முதலாம் உலக யுத்த சமயத்திற் தானிருந்த நிலையிலிருந்தும் வேறுபட்டதாகும். தற்போதைய யுத்தம் உலக ஏகாதிபத்தியத்தினதும், அனைத்திற்கும் மேலாகப் பாஸிஸ நாடுகளினதும் பொதுவான வீழ்ச்சி ஏற்படவிருக்கும் தறுவாயில் தொடுக்கப்பட்டது; அதுவேதான் எதிரி கடைசி மூச்சான போராட்டமென்ற இயல்பினதான இந்த துணிச்சல்வாத யுத்தத்தைத் தொடுத்துள்ளதற்குக் காரணம். ஆகவே, யுத்தத்தின் விளைவாக அழிக்கப்படப் போவது சீனுவல்ல, ஜப்பானிய ஏகாதிபத்தியத்தின் ஆளும் வட்டாரங்களே என்பது தவிர்க்க முடியாத விளைவு. மேலும், ஜப்பான் இந்த யுத்தத்தைப் பிற நாடுகள் யுத்தத்தில் அகப்பட்டுள்ள, அல்லது அகப்படப் போகும் தறுவாயில் மேற்கொண்டுள்ளது. ஆகவே நாம் எல்லோரும் மிலேச்சத்தனமான ஆக்கிரமிப்பிற்கு எதிராகப் போரிடுகின்றோம், அல்லது போரிடத் தயாராகின்றோம், சீனுவின் கதி உலகின் அனேகமான நாடுகளினதும் மக்களினதும் கதியோடு

பிணைந்துள்ளது. இதுவே அந்நாடுகள் மத்தியிலும் மக்கள் மத்தியிலும் ஜப்பான் கிளறிவிட்டுள்ள, வர வரக் கூடுதலாகக் கிளறிவிடப் போகின்ற எதிர்ப்புக்கு மூலகாரணம்.

16. சீனுவின் விஷயம் என்ன? இன்றைய சீனு வேறெந்த வரலாற்றுக் காலகட்டத்தினதும் சீனுவுடன் ஒப்பிட முடியாதது. ஒரு அரைக்காலனித்துவ அரைநிலப்பிரபுத்துவ சமுதாயம் அதன் சிறப்பியல்பு, எனவே அது பலவீனமான ஒரு நாடாகக் கருதப்படுகின்றது. இதே நேரத்தில் அது வரலாற்று ரீதியிற் தன் முன்னேற்ற சகாப்தத்திலுள்ளது; இதுவே ஜப்பானைத் தோற்கடிக்கும் அதன் வல்லமைக்கான முதன்மையான காரணம். ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தம் முற்போக்கானது என நாம் கூறும்போது நாம் சாதாரண, அல்லது பொதுவான அர்த்தத்தில் முற்போக்கானதென்றோ அன்றி, இத்தாலிக்கு எதிரான அபிஸினிய யுத்தமோ தைப்பிங் விண்ணுலக சாம்ராச்சியப் புரட்சியோ 1911ம் ஆண்டுப் புரட்சியோ முற்போக்கானவையென்ற அர்த்தத்தில் முற்போக்கானதென்றோ கூறவில்லை, சீனு இன்று முற்போக்கானது என்ற அர்த்தத்திலேயே நாம் முற்போக்கு என்கின்றோம். இன்றைய சீனு எந்த வகையில் முற்போக்கானது? அது இனியும் முற்றுக ஒரு நிலப்பிரபுத்துவ நாடல்ல, ஏற்கனவே சீனுவில் முதலாளித்துவம் இருக்கின்றது, முதலாளித்துவ வர்க்கமொன்றும் தொழிலாளி வர்க்கமொன்றும் இருக்கின்றன, விழிப்புற்றுள்ள அல்லது விழிப்புற்று வருகின்ற பெருந்தொகையான மக்களுள்ளனர், கம்யூனிஸ்ட் கட்சியொன்றுள்ளது, அரசியல் ரீதியில் முற்போக்கான சேனையொன்று — கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையிலான சீனச் செஞ்சேனை — இருக்கின்றது, பல தசாப்தங்களின் புரட்சியின் பாரம்பரியமும் அனுபவமும், விசேஷமாக, சீனக் கம்

யூனிஸ்ட் கட்சியின் ஸ்தாபிதத்தின் பின்பான பதினேழு ஆண்டு களின் அனுபவமும் உள்ளன. ஆகையால் அது முற்போக்கா னது. இந்த அனுபவம் சீனுவின் மக்களுக்கும் அரசியற் கட்சி களுக்கும் போதனை ஊட்டியுள்ளது, ஜப்பானுக்கெதிரான தற் போதைய ஐக்கியத்தின் அடிப்படையாக அமைகின்றது. ரஷ் யாவில் 1905ம் ஆண்டின் அனுபவமின்றி 1917ம் ஆண்டின் வெற்றி அசாத்தியமாயிருந்திருக்கும் எனக் கூறப்பட்டால், அப் போது நாமும் கடந்த பதினேழு ஆண்டுகளின் அனுபவமின் றேல் எமது பதிற்தாக்குதல் யுத்தத்தில் வெல்வது அசாத்திய மாயிருக்கும் எனக் கூறலாம். இத்தகையதே உள்நாட்டு நிலைமை.

தற்போதுள்ள சர்வதேச நிலைமையிற் சீனு யுத்தத்தில் தனித் தில்லை; இந்த உண்மையும் வரலாற்றில் முன்னுதாரணமற் றது. கடந்த காலத்திற் சீனுவின் யுத்தங்களும் இந்தியாவின் யுத்தங்களும் கூடத் தனித்து நடத்தப்பட்ட யுத்தங்களாக இருந் தன. இன்று மட்டுமே நாம் எழுந்துள்ள, அல்லது எழுந்து வருகின்ற, சீனுவை ஆதரிக்கின்ற, விசாலத்திலும் ஆழத்திலும் முன்னுதாரணமற்ற, உலகம் பரந்த மக்களியக்கங்களை எதிர்ப் படுகின்றோம். 1917ம் ஆண்டின் ரஷ்யப் புரட்சியும் சர்வ தேச ஆதரவைப் பெற்றது, எனவே ரஷ்யத் தொழிலாளர்களும் விவசாயிகளும் வெற்றியீட்டினர்; ஆனுல் அந்த ஆதரவு இன்று எம்முடையதைப் போல் அத்தனை அளவில் விசாலமானதும் இயல்பில் ஆழமானதுமல்ல. இன்று உலகில் மக்களியக்கங் கள் முன்னுதாரணமற்ற அளவிலும் ஆழத்துடனும் விருத்தி யுறுகின்றன. சோவியத் யூனியன் இருப்பது இந்நாளைய சர்வ தேச அரசியலில் மிக முக்கியமான ஒரு அம்சம், அத்துடன் சோவியத் யூனியன் நிச்சயமாக மிகப் பெரும் உற்சாகத்துடன்

சீனுவை ஆதரிக்கும்; இருபது ஆண்டுகளுக்கு முன்போ இத்தகைய நிலைமை இருந்ததில்லை. இந்த அம்சங்களெல்லாம் சீனுவின் இறுதி வெற்றிக்கு இன்றியமையாத முக்கிய நிலைமைகளைச் சிருஷ்டித்துள்ளன, சிருஷ்டித்து வருகின்றன. பெரும் ரீதியான நேரடி ஆதரவு இன்னும் இல்லாதிருக்கின்றது, எதிர்காலத்தில் மட்டுமே வரும், ஆனுல் சீனு முற்போக்கானது, பெரிய ஒரு நாடு, இவை அதைச் சர்வதேச உதவியைத் தூண்டவும் அதற்காகக் காத்திருக்கவும் யுத்தத்தை நீட்டக் கூடியதாக்கும் அம்சங்கள்.

17. ஜப்பான் சிறு பிரதேசமும் குறைவான வளங்களும் சிறு ஜனத்தொகையும் வரைப்பட்ட எண்ணிக்கையான படைவீரர்களும் மட்டுமே உள்ள சிறிய நாடாயிருக்கையில் சீனு பாரிய பிரதேசமும் செழித்த வளங்களும் பெரும் ஜனத்தொகையும் ஏராளமான படைவீரர்களுமுள்ள பெரிய நாடு என்ற மற்ருெரு அம்சமுமிருப்பதால், பலத்திற்கும் பலவீனத்திற்கு மிடையிலான வேறுபாடு போக, சிறு நாடு, பின்னடைதல், அற்ப ஆதரவு ஆகியவற்றிற்கும் பெரிய நாடு, முன்னேற்றம், அமோக ஆதரவு ஆகியவற்றிற்கும் இடையிலான வேறுபாடும் உள்ளது. சீனு ஒருபோதும் அடிமைப்பட மாட்டாது என்பதற்கு இதுவே காரணம். பலத்திற்கும் பலவீனத்திற்கும் இடையிலான வேறுபாட்டிலிருந்து ஜப்பான் சிறிது காலத்திற்கும் சிறிதளவிற்கும் சீனுவை மிதித்துத் துவைத்து அட்டகாசம் செய்யலாம், சீனு தவிர்க்க முடியாதபடி சிறிது தூரம் கடினமான பாதையிற் பிரயாணம் செய்ய வேண்டும், ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தம் நீண்டகால யுத்தமாக இருக்கும், விரைவில் வெற்றி தோல்வி முடிவாகும் யுத்தமாக இராது என்பவை பெறப்படுகின்றன; இருப்பினும் கூட, மற்ற வேறு

பாட்டிலிருந்து — சிறிய நாடு, பின்னடைதல், அற்ப ஆதரவு ஆகியவற்றிற்கும் பெரிய நாடு, முன்னேற்றம், அமோக ஆதரவு ஆகியவற்றிற்கும் இடையிலான வேறுபாட்டிலிருந்து — ஜப்பான் சீனுவைக் காலவரையறையின்றி மிதித்துத் துவைத்து அட்டகாசம் செய்துகொண்டேயிருக்க முடியாது, மாருக அது இறுதித் தோல்வியை உற்றே தீரும், சீனுவோ ஒருபோதும் அடிமைப்படுத்தப்பட முடியாது, இறுதி வெற்றியை ஈட்டியே தீரும் என்பவை பெறப்படுகின்றன.

18. அபிஸினியா ஏன் அடிமைப்படுத்தப்பட்டது? முதலாவதாக, அது பலவீனமானதாக மட்டுமல்லாமல் சிறியதாகவும் இருந்தது. இரண்டாவதாக, அது சீனு அளவு முற்போக்கானதாக இருக்கவில்லை; அது அடிமைமுறையிலிருந்து பண்ணை அடிமைமுறைக்கு மாறிக்கொண்டிருந்த ஒரு பழைய நாடாகவும், கம்யூனிஸ்ட் கட்சி இல்லாதது ஒரு புறமிருக்க முதலாளித்துவமோ முதலாளித்துவ அரசியற் கட்சிகளோ கூட இல்லாததும், எட்டாவது மார்க்க ராணுவத்தைப் போன்ற ஒரு சேனை இல்லாதது ஒருபுறமிருக்கச் சீனச் சேனையைப் போன்ற ஒரு சேனை கூட இல்லாததுமான ஒரு நாடாகவுமிருந்தது. மூன்ருவதாக, அது நின்றுபிடித்துச் சர்வதேச உதவிக்குக் காத்திருக்க இயலாததாய், தன் யுத்தத்தைத் தனித்து நின்று நடத்த வேண்டியதாய் இருந்தது. நான்காவதும் அனைத்திலும் மிக முக்கியமானதுமாக, இத்தாலிக்கெதிரான அதன் யுத்தத்தின் வழிநடத்தலிற் தவறுகளிருந்தன. ஆகவே அபிஸினியா அடிமைப்படுத்தப்பட்டது. ஆனுல் இன்னும் அபிஸினியாவில் கணிசமாகப் பரந்த கொரில்லா யுத்தம் நடக்கிறது, விடாப்பிடியாக நடத்தப்பட்டால் அது உலக நிலைமை மாறும்போது அபிஸினியர்கள் தம் நாட்டை மீட்டுக்கொள்ளக் கூடியதாக்கும்.

19. முதலில் ''எதிர்த்துப் போரிட்டால் நிச்சயம் அழிவு'' என்றதும் பின்னர் ''தொடர்ந்து போரிட்டால் நிச்சயம் அழிவு'' என்றதுமான தங்கள் கூற்றுக்களை நிரூபிப்பதற்கு அடிமைப்பாட்டுவாதிகள் நவீன சீனாவிலான விடுதலை இயக்கங்களின் தோல்வியின் வரலாற்றை எடுத்துக்காட்டாகக் கூறுவார்களாயின், இதற்கும் எமது பதில், காலம் மாறிவிட்டது என்பதேயாகும். சீனாவும், ஜப்பானிலான உள்நாட்டு நிலைமையும், சர்வதேசச் சூழ்நிலையும் எல்லாமே இப்போது மாறிவிட்டன. ஜப்பான் முன்பைவிடப் பலமானதாக இருக்கையிற் சீனா அதன் மாற்றமடையாத அரைக்காலனித்துவ, அரைநிலப்பிரபுத்துவ நிலையில் இன்னும் கணிசமாகப் பலவீனமானதாகவே இருக்கிறது என்பது பாரதூரமான ஒரு விஷயம். தற்போதைக்கு ஜப்பானால் இன்னும் உள்நாட்டிற் தன் மக்களைக் கட்டுப்படுத்தவும் சீனாவை ஆக்கிரமிக்க வேண்டி சர்வதேச முரண்பாடுகளைப் பயன்படுத்திக்கொள்ளவும் முடியும் என்பதும் உண்மை. ஆனால் நீண்ட ஒரு யுத்தத்தின் போது இந்தக் காரியங்கள் நேரெதிரான திசையில் மாறியே தீரும். இத்தகைய மாற்றங்கள் இன்னும் சாதனையாகிவிட்ட உண்மைகளல்ல, ஆனால் எதிர்காலத்தில் அவை அப்படி ஆகும். அடிமைப்பாட்டுவாதிகள் இந்த விஷயத்தை ஒதுக்கிவிடுகின்றனர். சீனாவைப் பொறுத்தவரையில் எமக்கு ஏற்கனவே புதிய மக்களும் புதிய ஒரு அரசியற் கட்சியும் புதிய ஒரு சேனையும் புதிய ஜப்பானிய-எதிர்ப்புக் கொள்கையும் ஒரு தசாப்தத்திற்கு மேல் முன்பாக இருந்த நிலைமையினின்றும் பெரிதும் வேறுபட்ட ஒரு நிலைமையும் உள்ளன; மேலும், இவையாவும் தவிர்க்க முடியாதபடி மேற்கொண்டு முன்னேற்றமும் அடையும். வரலாற்று ரீதியில் விடுதலை இயக்கங்கள் திரும்பத் திரும்பப் பின்

னடைவுகளை உற்று, அதன் விளைவாகச் சீனுவால் தற்போதைய ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தத்திற்கு இன்னும் பெரிய பலத்தைத் திரட்டிக்கொள்ளமுடியாது போயிற்று என்பது உண்மையே — இது மிகத் துன்பகரமான ஒரு வரலாற்றுப் படிப்பினை, மீண்டும் ஒருபோதும் எமது புரட்சிகர சக்திகளைதையும் அழிக்கக் கூடாது. இருந்தும் தற்போதுள்ள அடிப்படையிற் கூட, பெரும் பிரயத்தனங்கள் செய்வதன் மூலம் எம்மால் நிச்சயமாகச் சிறிது சிறிதாக முன்னேறவும், எமது பதிற்தாக்குதலின் பலத்தை அதிகரிக்கவும் முடியும். இத்தகைய பிரயத்தனங்கள் எல்லாம் பெரும் ஜப்பானிய-எதிர்ப்புத் தேசிய ஐக்கிய முன்னணியிற் குவிய வேண்டும். சர்வதேசிய ஆதரவைப் பொறுத்தவரை, நேரடியான, பெரும் ரீதியான ஆதரவு இன்னும் புலப்படவில்லையெனினும், சர்வதேச நிலைமை முன்பிருந்ததினின்றும் அடிப்படையாக வேறுபட்டிருப்பதால், அது உருவாகிவருகின்றது. நவீன சீனுவின் விடுதலை இயக்கத்திலான எண்ணிறந்த தோல்விகளுக்கு அவற்றின் அகநிலைப்பட்ட, புறநிலைப்பட்ட காரணங்கள் இருந்தன, ஆனுல் இன்று நிலைமை முற்றிலும் வேறுவிதமானது. இன்று, ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தத்தைச் சிரமமிக்கதாக்குபவையான — எதிரியின் பலமும் எமது பலவீனமும், அவனது கஷ்டங்கள் இப்போது தான் தொடங்குகையில் எமது முன்னேற்றம் போதுமானதாவதற்கு வெகுதூரமுள்ளது என்ற உண்மை ஆகியன போன்ற — பல கஷ்டங்கள் உள்ளனவெனினும், எதிரியைத் தோற்கடிக்கச் சாதகமான சூழ்நிலைகள் பல இருக்கவே செய்கின்றன; நாம் எமது அகநிலைப்பட்ட பிரயாசைகளையும் சேர்த்தால் மட்டும் போதுமானது, எம்மால் கஷ்டங்களைக் கடந்து வெற்றியை ஈட்ட இயலுமாகும். இவை எமது வரலாற்றில் முன்னர் எந்தக்

காலகட்டத்திலும் என்றும் இல்லாதவாறான சாதகமான சூழ் நிலைகள், எனவேதான் கடந்த காலத்திய விடுதலை யுத்தங் களைப் போலல்லாமல் ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தம் தோல்வி யில் முடிவடையாது.

## சமரசமா எதிர்ப்பா? சீரழிவா முன்னேற்றமா?

20. தேசிய அடிமைப்பாட்டுத் தத்துவம் அடிப்படையற் றது என்பது மேலே பூரணமாக விளக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்தத் தத்துவத்தை ஆதரிக்காத பலர் இருக்கின்றனர், இவர்கள் நல்ல, நேர்மையான தேசபக்தர்கள், இருப்பினும் தற்போதைய நிலைமை பற்றி ஆழ்ந்த கவலை கொண்டுள்ள வர்கள். இரு காரியங்கள், ஜப்பானுடன் ஒரு சமரசமேற் படுமென்ற அச்சமும் அரசியல் முன்னேற்றத்தின் சாத்தியக் கூறுபற்றி ஐயங்களும், இவர்களுக்குக் கவலையளிக்கின்றன. இந் தக் கவலைக்கிடமான பிரச்சினைகளிரண்டும் பரவலாக விவா திக்கப்படுகின்றன, இவற்றின் தீர்வுக்குத் திறவுகோல் எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை. இனி நாம் இவற்றைப் பரிசீலிப் போம்.

21. முன்னர் விளக்கப்பட்டவாறு, சமரசப் பிரச்சினைக்குச் சமூக வேர்கள் உள்ளன, இந்த வேர்கள் உள்ளவரை இப்பிரச் சினை எழவே செய்யும். ஆனால் சமரசம் சரிவராது. இந்த விஷயத்தை நிரூபிக்க ஆதாரத்திற்கு நாம் மீண்டும் ஜப்பானை யும் சீனாவையும் சர்வதேச நிலைமையையும் பார்த்தாலே போ தும். முதலில் ஜப்பானை எடுத்துக்கொள்வோம். பதிற்தாக்

குதல் யுத்தத்தின் ஆரம்பத்திலேயே நாம் சமரசத்திற்கு அனு கூலமான சூழல் ஒன்று எழும் சமயம் வரும் என வேறு வார்த் தைகளிற் கூறினல், வட சீனவையும் கியாங்ஸுவையும் செகி யாங்கையும் கைப்பற்றிய பின் ஜப்பான் அனேகமாகச் சீன வைப் பணிந்துவிடத் தூண்டும் சூழ்ச்சியை நாடும் என மதிப் பிட்டோம். அது சரியாகி, ஜப்பான் அச்சூழ்ச்சியை நாடவே செய்தது, ஆனல் அந்நெருக்கடி விரைவில் அகன்றுவிட்டது; இதற்கு ஒரு காரணம் எதிரி எங்கும் ஒரு மிலேச்சத்தனமான கொள்கையைப் பின்பற்றி அப்பட்டமான சூறையாடலை நடத் தியதாகும். சீன பணிந்திருந்தால் ஒவ்வொரு சீன மகனும் நாடற்ற அடிமையாகியிருப்பான். எதிரியின் கொள்ளேயடிக் கும் கொள்கை, சீனவை அடிமைப்படுத்தும் கொள்கை லௌ கீக ஆத்மீக அம்சங்களேக் கொண்டது, இரண்டுமே தாழ்ந்த படிவங்களின் மக்களுக்கு மட்டுமல்லாமல் உயர்ந்த படிவங் களின் அங்கத்தினர்களுக்கும் சேர்த்துச் சகல சீனர்களுக்கும் சர்வவியாபகமாகப் பிரயோகிக்கப்படுபவை. உயர்ந்த படி வங்களின் அங்கத்தினர்கள் சிறிது கூடிய மரியாதையுடன் நடத் தப்படுகின்றனர் தான், ஆனல் வேற்றுமை அளவில் மட்டுந் தான் கோட்பாட்டிலல்ல. பெரும்பாலும் எதிரி மூன்று வட கிழக்கு மாகாணங்களிலும் கைக்கொள்ளப்பட்ட அதே பழைய நடவடிக்கைகளேயே சீனவின் உட்பகுதிக்குள்ளும் கொணர்ந்து புகுத்துகிருன். லௌகீக ரீதியில் அவன் சாதாரண மக்களிட மிருந்து அவர்களின் உணவையும் உடையையும் கூடக் கொள் ளேயடித்து, அவர்களேப் பசியாலும் குளிராலும் அலறச் செய் கிருன், அவன் உற்பத்தி சாதனங்களேச் சூறையாடி, அவ்வா ருகச் சீனவின் தேசிய கைத்தொழில்களே நாசமாக்கியும் அடி மைப்படுத்தியும் வருகின்ருன். ஆத்மீக ரீதியில் அவன் சீன

மக்களின் தேசிய உணர்வை அழிக்க முயல்கிறுன். ''சூரியக் கொடி''யின்கீழ் எந்தச் சீன மகனும் பணிந்த பிரஜையாக, சீன தேசிய உணர்வின் சிறு சாயலைத் தானும் காண்பிக்காது தடை செய்யப்பட்டு பொதி மிருகமாக இருக்க நிர்பந்திக்கப்படுகின்றுன். எதிரியின் இந்த மிலேச்சத்தனமான கொள்கை சீனுவின் உட்புறத்திற்குள் இன்னும் ஆழக் கொண்டுவரப்படும். அசுரப் பசிகொண்ட ஜப்பான் யுத்தத்தை நிறுத்த மனமின்றியிருக்கின்றது. தவிர்க்கமுடியாதவாறு, ஜப்பானிய மந்திரிசபையின் 1938, ஜனவரி 16ந் திகதிய அறிக்கையில் எடுத்துரைக்கப்பட்ட கொள்கை[12] இன்னும் முரண்டுத்தனமாக அமுல்படுத்தப்பட்டு வருகின்றது; இது சகல வர்க்கத் தட்டுகளைச் சேர்ந்த சீன மக்களையும் ஆத்திரமுறச் செய்துள்ளது. இந்த ஆத்திரம் ஜப்பானின் யுத்தத்தின் பிற்போக்கு, மிலேச்ச இயல்பால் கிளறிவிடப்படுகின்றது — ''விதியிலிருந்து தப்ப வழியில்லை''; எனவே அறுதியான விரோதம் இறுகிக் கட்டிபட்டுள்ளது. எதிர்காலத்தில் ஏதேனுமொரு சந்தர்ப்பத்தில் எதிரி மீண்டும் ஒருமுறை சீனுவைப் பணிந்துவிடத் தூண்டும் சூழ்ச்சியை நாடுவானென்பதும் சில அடிமைப்பாட்டுவாதிகள் மீண்டும் ஊர்ந்து வெளியே வருவர், அனேகமாய்ச் சில அந்நிய (பிரித்தானியாவிலும் அமெரிக்காவிலும் பிரான்ஸிலும் விசேஷமாகப் பிரித்தானியாவிலுள்ள மேற்படிவத்தினர் மத்தியில் காணப்படும்) நபர்களுடன் கள்ளக் கூட்டுச் சேர்ந்து செயல்படுவர் என்பதும் எதிர்பார்க்கப்பட வேண்டும். ஆனுல் சம்பவங்களின் பொதுவான போக்குப் பணிந்துபோதலை அனுமதிக்காது; ஜப்பானின் யுத்தத்தின் முரண்டான, அலாதியான மிலேச்ச இயல்பு பிரச்சினையின் இந்த அம்சத்தை முடிவு செய்துவிட்டது.

22. இரண்டாவதாக, சீனுவை எடுப்போம். சீனு பதிற் தாக்குதல் யுத்தத்தில் ஊன்றி நிற்பதற்கு மூன்று அம்சங்கள் துணைசெய்கின்றன. முதன்முதலில், கம்யூனிஸ்ட் கட்சி. இது ஐப்பானை எதிர்க்க மக்களுக்குத் தலைமை தாங்கும் நம்பகமான சக்தி. அடுத்து, கோமிந்தாங். இது பிரித்தானியாவையும் அமெரிக்காவையும் சார்ந்திருக்கின்றது, ஆகவே அவை சொன் ஞலொழிய ஐப்பானைச் சரணடையாது. இறுதியாக, இதர அரசியற் கட்சிகளும் குழுக்களும். இவற்றுட் பெரும்பாலா னவை சமரசத்தை எதிர்த்து, பதிற்தாக்குதல் யுத்தத்தை ஆதரிக்கின்றன. இம்மூன்றுக்குமிடையில் ஐக்கியம் நிலவுகை யில், சமரசம் செய்யும் எவனும் தேசத் துரோகியாவான், ஆகவே அவனைத் தண்டிக்க எவருக்கும் உரிமை இருக்கும். தேசத் துரோகிகளாக விரும்பாதோருக்கு ஐக்கியப்பட்டு, பதிற் தாக்குதல் யுத்தத்தை மேற்கொள்வதைத் தவிர வேறுவழி யில்லை. ஆகவே சமரசம் உண்மையில் வெற்றி பெருது.

23. மூன்ருவதாக, சர்வதேச அம்சத்தை எடுத்துக்கொள் வோம். ஐப்பானின் நேச நாடுகளும் பிற முதலாளித்துவ நாடுகளின் உயர் படிவங்களிலுள்ள சில நபர்களும் நீங்கலாக உலகம் முழுமையும் சீனுவின் எதிர்ப்பிற்கே சாதகமாயுள்ளது, சீனு சமரசப்படுவதற்கல்ல. இந்த அம்சம் சீனுவின் நன்நம் பிக்கைகளுக்குப் பக்கபலமாகிறது. இன்று நாடு முழுவதிலு முள்ள மக்கள், சர்வதேச சக்திகள் சீனுவிற்குச் சிறிது சிறிதாக அதிகமான உதவி தருமென்ற நம்பிக்கை பாராட்டுகின்றனர். இது வீண் நம்பிக்கையல்ல; குறிப்பாகச் சோவியத் யூனியன் இருப்பது சீனுவை அதன் பதிற்தாக்குதல் யுத்தத்தில் ஊக்கு விக்கின்றது. இப்போது முன்னென்றுமில்லாதளவு பலம் பெற் றுள்ள சோஷலிஸ சோவியத் யூனியன் எப்போதும் சீனுவின்

இன்பதுன்பங்களில் பங்கெடுத்து வந்துள்ளது. இலாபங்களைத் தவிர வேறெதையுமே வேண்டாதவர்களான சகல முதலாளித்துவ நாடுகளிலுமுள்ள உயர் வர்க்கங்களின் நபர்களை போலல்லாமல் சோவியத் யூனியன் பலவீனமான தேசங்களெல்லாவற்றிற்கும் புரட்சிகர யுத்தங்களெல்லாவற்றிற்கும் உதவி செய்வதைத் தன் கடமையாகக் கருதுகின்றது. சீனா தன் யுத்தத்தைத் தனித்து நடத்தவில்லை என்பதற்கு அடிப்படை பொதுவாகச் சர்வதேச உதவியில் மட்டுமல்லாமல், குறிப்பாக சோவியத் உதவியிலும் உள்ளது. சீனாவும் சோவியத் யூனியனும் புவியியல் ரீதியில் மிக அணித்தாக உள்ளன; இது ஜப்பானின் நெருக்கடியை மோசமாக்கி, சீனாவின் பதிற்தாக்குதல் யுத்தத்திற்கு அனுசரணையாகிறது. புவியியல் ரீதியில் ஜப்பானுக்கு அருகாமையிலிருப்பது சீனாவின் பதிற்தாக்குதல் யுத்தத்தின் கஷ்டங்களைக் கூட்டுகின்றது. மறுபுறத்தில், சோவியத் யூனியனுக்கு அருகாமையிலிருப்பது சீனாவின் பதிற்தாக்குதல் யுத்தத்திற்கு ஒரு சாதகமான சூழ்நிலை.

24. எனவே, சமரசப்படும் அபாயம் இருக்கின்றது, ஆனால் அது கடக்கப்படமுடியும் என்ற முடிவிற்கு நாம் வரலாம். ஏனென்றால் எதிரி தன் கொள்கையை ஓரளவுக்கு மாற்றிக் கொள்ளக் கூடுமாயினும் அவனால் அதை அடிப்படையாக மாற்ற முடியாது. சீனாவில் சமரசத்தின் சமூக வேர்கள் உள்ளன, ஆனால் சமரசத்தை எதிர்ப்போர் பெரும்பான்மையாக உள்ளனர். சர்வதேச ரீதியிலும் சில சக்திகள் சமரசத்தை ஆதரிக்கின்றன, ஆனால் பிரதான சக்திகள் பதிற்தாக்குதல் யுத்தத்தை ஆதரிக்கின்றன. இந்த மூன்று அம்சங்களினதும் சேர்க்கை சமரச அபாயத்தைக் கடப்பதையும் பதிற்தாக்குதல்

யுத்தத்தில் இறுதிவரை ஊன்றி நிற்பதையும் சாத்தியமாக்குகின்றது.

25. இனி நாம் இரண்டாவது பிரச்சினைக்குப் பதிலளிப்போம். உள்நாட்டில் அரசியல் முன்னேற்றமும் பதிற்தாக்குதல் யுத்தத்தில் விடாப்பிடியாக இருப்பதும் பிரிக்க முடியாதவை. அரசியல் முன்னேற்றம் எவ்வளவு அதிகமோ அவ்வளவிற்கு அதிகமாக நாம் யுத்தத்தில் விடாப்பிடியாக இருக்க முடியும்; யுத்தத்தில் நாம் எவ்வளவு அதிகமாக விடாப்பிடியாக இருக்கிறோமோ அவ்வளவிற்கு அரசியல் முன்னேற்றம் அதிகமாக இருக்கும். ஆனால் அடிப்படையாக எல்லாமே நாம் பதிற்தாக்குதல் யுத்தத்தில் விடாப்பிடியாக இருப்பதிற் தான் தங்கியுள்ளன. கோமிந்தாங் ஆட்சியின் கீழ் பல்வேறு துறைகளிலுமான ஆரோக்கியமற்ற தோற்றப்பாடுகள் மிகப் பாரதூரமானவை, இந்த நியாயமற்ற அம்சங்கள் ஆண்டாண்டாகச் சேர்ந்தமை எமது பரந்த தேசபக்தர்களின் மத்தியில் பெரும் கவலையையும் உளைவையும் ஏற்படுத்தியுள்ளது. சீன மக்கள் சென்ற பத்து மாதங்களில் கடந்த காலத்தில் அத்தனை வருடங்களிலும் அடைந்தளவு முன்னேற்றத்தை அடைந்துள்ளனரெனப் பதிற்தாக்குதல் யுத்தத்திலான அனுபவம் ஏற்கனவே நிரூபித்துள்ளதாகையால், நம்பிக்கையீனப்படக் காரணமில்லை. பல வருடகாலத்து ஊழலின் திரண்ட பாதிப்புகள் ஜப்பானை எதிர்ப்பதற்கான மக்களின் பலத்தின் வளர்ச்சியைப் பாரதூரமாகத் தடைப்படுத்தி, அவ்வாறாக யுத்தத்தில் எமது வெற்றிகளின் அளவைக் குறைத்தும் எமக்கு நஷ்டங்களேற்படுத்தியும் வருகின்றன என்ற போதிலும், சீனாவிலும் ஜப்பானிலும் உலகிலுமான மொத்தப்படியான நிலைமை சீன மக்கள் முன்னேற்றமடையாது போக இயலாதபடி உள்ளது.

முன்னேற்றத்தைத் தடைப்படுத்துவதான ஊழலாகிய அம்சம் காரணமாக இந்த முன்னேற்றம் மெதுவானதாகவே இருக்கும். முன்னேற்றமும் முன்னேற்றத்தின் குறைந்த வேகமும் தற்போதைய நிலைமையின் இரு குணும்சங்கள், இவற்றில் இரண்டாவதான குணும்சம் யுத்தத்தின் அவசரத் தேவைகளுடன் இணங்காதது, இது தேசபக்தர்களுக்குப் பெரும் கவலையைத் தோற்றுவிப்பதாயிருக்கின்றது. ஆனுல் நாம் ஒரு புரட்சிகர யுத்தத்தின் நடுவில் உள்ளோம், புரட்சி யுத்தம் என்பது நஞ்சைப் போக்கும் ஒரு எதிர் நஞ்சு. அது எதிரியின் நஞ்சைப் போக்குவது மாத்திரமல்ல, நமது சொந்த அழுக்கைக் கூட சுத்திகரிக்கின்றது. நீதியான ஒவ்வொரு புரட்சி யுத்தத்துக்கும் பிரமாண்டமான ஆற்றல் உண்டு. அது பல பொருட்களை மாற்றக் கூடியது; அல்லது அவற்றின் மாற்றத்துக்கான பாதையைத் திறக்கக் கூடியது. சீன-ஜப்பானிய யுத்தம் சீனு, ஜப்பான் இரு நாடுகளையும் மாற்றும்; சீனு பதிற்தாக்குதல் யுத்தத்திலும், ஐக்கிய முன்னணியிலும் அழுத்தமாக நின்ருல், பழைய ஜப்பான் புதிய ஜப்பானுக மாறுவதும், பழைய சீனு புதிய சீனுவாக மாறுவதும் நிச்சயம். சீனு, ஜப்பான் இரு நாட்டு மக்களும், இதர ஒவ்வொரு விஷயமும் இந்த யுத்தத்தின் போக்கிலும், யுத்தத்தின் பின்னும் மாற்றமடைவது திண்ணம். ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தத்தையும் எமது தேசிய புனர் நிர்மாணத்தையும் ஒன்றுடனென்று தொடர்புபட்டவையாக நாம் கருதுவது தகும். ஜப்பானும் மாற்றியமைக்கப்பட முடியும் எனக் கூறுவதன் பொருள் அதன் ஆட்சியாளர்களின் ஆக்கிரமிப்பு யுத்தம் தோல்வியில் முடியும், ஜப்பானிய மக்களின் புரட்சியொன்றிற்கு இட்டுச் செல்லக் கூடும் என்பதாகும். ஜப்பானிய மக்களின் புரட்சியின் வெற்றித்தினமே ஜப்பான்

மாற்றியமைக்கப்படும் தினமாயிருக்கும். இவையாவும் சீனு வின் பதிற்தாக்குதல் யுத்தத்துடன் நெருங்கிப் பிணைந்தவையும் நாம் கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டிய ஒரு சாத்தியப் பாடுமாகும்.

## தேசிய அடிமைப்பாட்டுத் தத்துவம் தவறு, விரைவான வெற்றித் தத்துவமும் அவ்வாறே தவறு

26. எதிரிக்கும் எமக்குமிடை பலம் பலவீனம், சிறிய நாடு பெரிய நாடு, பிற்போக்கு முற்போக்கு, அற்ப ஆதரவு அமோக ஆதரவு ஆகியன போன்ற அடிப்படையான முரண்பட்ட குணும்சங்களை ஒப்புநோக்கான முறையில் ஆராய்ந்து ஏற்கன வே தேசிய அடிமைப்பாட்டுத் தத்துவத்தை மறுத்துரைத்தும், சமரசம் ஏன் அனேகமாக ஏற்படாது, அரசியல் முன்னேற்றம் ஏன் சாத்தியம் என்பவற்றை விளக்கியும் உள்ளோம். அடி மைப்பாட்டுவாதிகள் பலத்திற்கும் பலவீனத்திற்கும் இடை யிலான முரண்பாட்டை வலியுறுத்தி, அதுவே இப்பிரச்சினை பற்றிய தங்கள் தர்க்கம் முழுவதினதும் அடிப்படையாக ஆகும் வரை அதை மிகைப்படுத்தி, மற்றெல்லா முரண்பாடுகளையும் புறக்கணித்துவிடுகின்றனர். பலத்திலான வேறுபாட்டில் அவர் கள் முற்ருகத் திளைத்துவிடுவது அவர்களின் ஒருதலைப்பட்சத் தன்மையைக் காட்டுகின்றது; விஷயத்தின் இந்தப் பக்கத்தை அவர்கள் முழுமையாகப் பெரிதுபடுத்துவது அவர்களின் அக நிலைவாதத்தைக் காட்டுகிறது. இவ்வாருக, விஷயத்தை முழு

மையாக எடுத்து நோக்கினுல், அவர்களுக்குத் தங்கி நிற்க ஆதாரம் எதுவுமில்லே, அவர்கள் தவறு என்பது புலப்படும். அடிமைப்பாட்டுவாதிகளுமல்லாத முற்றிப்போன நம்பிக்கை யீனர்களுமல்லாத, ஆனுல் ஒரு குறிப்பிட்ட சமயத்திலும் சிற் சில அம்சங்களிலும் எமது பலத்திற்கும் எதிரியின் பலத்திற் குமிடையிலான ஏற்றத்தாழ்வாலோ அல்லது நாட்டிலுள்ள ஊழலாலோ வெறுமனே குழப்பமுற்றிருப்பதால் தற்போ தைக்கு நம்பிக்கையீன மனப்பான்மையுடனிருப்பவர்களானே ரைப் பொறுத்தவரையில் நாம் அவர்களுக்கு அவர்களின் அணு குமுறையும் ஒருதலேப்பட்சத்தன்மை, அகநிலேவாதம் ஆகிய போக்குகளிலிருந்து எழுகின்றது என்பதைச் சுட்டிக்காட்ட வேண்டும். ஆனுல் இவர்கள் விஷயத்தில் திருத்தம் ஒப்பீட் டளவிற் சுலபமானது, ஒருகால் இவர்களுக்குப் புத்திமதி கூறப் பட்டதும் இவர்கள் புரிந்துகொள்வார்கள், ஏனெனில் இவர் கள் தேசபக்தர்கள், இவர்களின் தவறு தற்காலிகமானது மட் டுமே.

27. விரைவான வெற்றித் தத்துவக்காரர்களும் இவ்வாறே தவருனவர்கள். அவர்கள் ஒன்றில் பலத்திற்கும் பலவீனத் திற்குமிடையிலான முரண்பாட்டை முற்முக மறந்துவிட்டு மற்ற முரண்பாடுகளே மட்டுமே நினேவில் வைத்திருக்கின்றனர், அல்லது சீனுவின் சாதக அம்சங்களே யதார்த்தத்தின் சாயலே யெல்லாம் கடந்தும் உள்ளதோடு ஒற்றுமையே இல்லாதபடி யும் பெரிதுபடுத்துகின்றனர், அல்லது, ''கண் எதிரில் உள்ள சிறு இலே தைஷன் மலேயையே மறைத்துவிடுகின்றது'' என்ற பழமொழிப்படி கண்மூடித்தனமாக ஒரு சமயத்திலும் இடத் திலுமான சக்திகளின் பலாபலத்தை முழுமையான நிலேமை யெனக் கொண்டுவிடுகின்றனர். ஒரு வார்த்தையில் கூறினுல்,

அவர்கள் எதிரி பலமாக இருக்கையில் நாம் பலவீனமாக இருக் கின்ருேம் என்ற உண்மையை ஒப்புக்கொள்ளத் துணிவற்றிருக் கின்றனர். அவர்கள் பல சமயம் இந்த விஷயத்தை மறுத்து, அவ்வாருக உண்மையின் ஒரு அம்சத்தை மறுப்பவர்களாகின் றனர். அன்றி அவர்கள் எமது சாதகத் தன்மைகளின் வரம் புகளை ஒப்புக்கொள்ளவும் துணிவற்றவர்களாய், அவ்வாருக உண்மையின் மற்ருெரு அம்சத்தையும் மறுக்கின்றனர். இதன் விளைவாக அவர்கள் பெரிதும் சிறிதுமான தவறுகளை இழைக் கின்றனர்; இங்கும் மறுபடி குழப்பத்தை ஏற்படுத்துபவை அகநிலைவாதமும் ஒருதலைப்பட்சத்தன்மையுமே. இந்த நண் பர்களின் இதயங்கள் சரியான இடத்திலிருக்கின்றன, இவர் களும் தேசபக்தர்கள். ஆனுல் ''இந்தக் கனவான்களின் அபி லாசைகள் உண்மையிற் சிறந்தவை''யாக இருக்கையில், அவர் களின் கருத்துக்கள் தவருனவை, அவற்றின் பிரகாரம் செய லாற்றுவது நிச்சயமாகக் கற்சுவரில் முட்டிக்கொள்வதாக முடி யும். ஏனெனில், கணிப்பீடு யதார்த்தத்துடன் இணங்கவில் லையாளுல் செயல் அதன் குறிக்கோளை அடைய முடியாது, அப்படியிருக்கவும் பொருட்படுத்தாமல் செயலாற்றுவது சேனை யின் தோல்வியும் தேசத்தின் அடிமைப்பாடுமாக முடிந்து, அவ்வாருக விளைவு தோல்விவாதிகளின் விஷயத்திற் போன்றே இருக்கும். எனவே துரித வெற்றித் தத்துவமும் சரிப்படாது.

28. தேசிய அடிமைப்பாட்டு அபாயமிருப்பதை நாம் மறுக் கிருேமா? இல்லை, அதை நாம் மறுக்கவில்லை. சீனு இரு சாத் தியக்கூறுகளை, விடுதலை அல்லது அடிமைப்பாட்டை எதிர் நோக்குகின்றது என்பதையும் இரண்டும் கடுமையாக மோது கின்றன என்பதையும் நாம் அங்கீகரிக்கின்ருேம். எமது பணி விடுதலையை அடைவதும் அடிமைப்பாட்டைத் தவிர்ப்பதுமா

கும். விடுதலைக்கான நிலைமைகள் அடிப்படையானதான சீனு வின் முன்னேற்றமும், அதே வேளையில் எதிரியின் கஷ்டங்களும் எமது சர்வதேச ஆதரவுமாகும். நாம் அடிமைப்பாட்டுவா திகளிலிருந்து வேறுபட்டவர்கள். புறநிலைப்பட்ட, பல அம்சப் பார்வையைக் கொண்டு நாம் தேசிய அடிமைப்பாடும் விடு தலையுமாகிய இரு சாத்தியக்கூறுகளையும் அங்கீகரித்து, விடு தலையே மேலோங்கியுள்ள சாத்தியக்கூறென்பதை வலியுறுத்தி, அது அடையப்படுவதற்கான நிலைமைகளைச் சுட்டிக்காட்டி, அவற்றை ஈட்டப் பிரயாசைப்படுகின்றோம். அடிமைப்பாட் டுவாதிகளோ மறுபுறத்தில் அகநிலைப்பட்ட, ஒருதலைபட்சப் பார்வையைக் கொண்டு, ஒரே ஒரு சாத்தியக்கூறை, அதாவது, அடிமைப்பாட்டை மட்டுமே அங்கீகரிக்கின்றனர்; அவர்கள் விடுதலையின் சாத்தியக்கூறை ஒப்புக் கொள்வதில்லை, விடுத லைக்கு அவசியமான நிலைமைகளைச் சுட்டிக்காட்டுவதோ அவற் றை ஈட்ட முயல்வதோ அறவே இல்லை. மேலும், சமரசப்ப டும் போக்கையும் ஊழலையும் அங்கீகரிக்கையில் நாம் பிற போக்குகளையும் பிற தோற்றப்பாடுகளையும் காண்பதோடு, நாம் பின்னையவை சிறிது சிறிதாக மேலோங்கப் போபவையும் ஏற்கனவே முன்னையவற்றுடன் கடுமையாக மோதுபவையும் எனச் சுட்டிக்காட்டுகின்றோம். அத்துடன் நாம் ஆரோக்கி யமான போக்குகளும் தோற்றப்பாடுகளும் மேலோங்குவ தற்குத் தேவையான நிலைமைகளையும் சுட்டிக்காட்டி, சமரசப் படும் போக்கைக் கடக்கவும் ஊழல் நிலையை மாற்றவும் பிர யாசைப்படுகின்றோம். ஆகவே, அடிமைப்பாட்டுவாதிகளுக்கு நேர்மாருக, நாம் நம்பிக்கையீனமுடையவர்களேயல்ல.

**29.** விரைவான வெற்றி எமக்கு விருப்பமில்லை என்பதல்ல; ''பிசாசுகளை'' இரவோடிரவாக விரட்டியடித்து விடுவதை எவ

ரும் வரவேற்பர். ஆனுல் சிற்சில திட்டவட்டமான நிலைமைகள் இல்லாத போது துரித வெற்றி புறநிலையான யதார்த்தத்தில் இல்லாமல் எமது மனங்களில் மட்டுமே உள்ள ஒன்று, அது ஒரு வெறும் பிரமை, ஒரு போலித் தத்துவம் என்பதை நாம் சுட்டிக்காட்டுகின்ஞேம். எனவே புறநிலைப்பட்ட, பல அம்சப் பார்வையைக் கொண்டு எதிரியுடனும் எம்முடனும் சம்பந்தப்பட்ட சகல சூழ்நிலைகளையும் கணக்கிலெடுத்து நாம் இறுதி வெற்றிக்கான ஒரே மார்க்கம் நீண்டகால யுத்தமாகிய யுத்ததந்திரம் தான் எனச் சுட்டிக்காட்டுகின்ஞேம், துரித வெற்றியென்ற சிறிதும் ஆதாரமற்ற தத்துவத்தை நிராகரிக்கிஞேம். இறுதி வெற்றிக்கு இன்றியமையாதவையான நிலைமைகள் எல்லாவற்றையும் பெற்றுக்கொள்ள நாம் முயல வேண்டுமென்றும், இந்த நிலைமைகள் எவ்வளவு பூரணமாயும் விரைவாயும் பெறப்படுகின்றனவோ அவ்வளவுக்கு வெற்றி நிச்சயமாயிருக்கும், அதை நாம் அவ்வளவுக்கு விரைவாக ஈட்டுவோம் என நாம் கொள்கின்ஞேம். இந்த விதமாக மட்டுமே யுத்தத்தின் பாதை குறுக்கப்பட முடியும் என நாம் கருதுகிஞேம், வெறும் வீண் பேச்சும் விஷயங்களை மலிவாக முடித்துக் கொள்வதற்கான ஒரு முயற்சியுமான துரித வெற்றித் தத்துவத்தை நிராகரிக்கின்ஞேம்.

## ஏன் ஒரு நீண்டகால யுத்தம்?

30. இனி நாம் நீண்டகால யுத்தப் பிரச்சினையைப் பரிசீலிப்போம். ''ஏன் ஒரு நீண்டகால யுத்தம்?'' என்ற கேள்விக்குச் சரியான பதில் சீனுவுக்கும் ஜப்பானுக்குமிடையிலான

அடிப்படையான வேறுபாடுகள் எல்லாவற்றினதும் அடிப்படை யில் மட்டுமே பெறப்பட முடியும். உதாரணமாக நாம் வெறு மனே, எதிரி ஒரு பலமான ஏகாதிபத்திய வல்லரசாக இருக்கை யில் நாமோ ஒரு பலவீனமான அரைக்காலனித்துவ, அரை நிலப்பிரபுத்துவ நாடு என்று மட்டும் கூறினேமானல் நாம் தேசிய அடிமைப்பாட்டுத் தத்துவத்தில் வீழ்ந்துவிடும் அபாயம் உள்ளது. ஏனெனில் தத்துவத்திலோ அன்றி நடைமுறை யிலோ வெறுமனே பலவீனமானதைப் பலமானதற்கு எதிராக நிறுத்துவதால் போராட்டம் நீண்டதாக்கப்பட முடியாது. அதுபோல வெறுமனே பெரியதைச் சிறியதற்கு எதிராக வோ, முற்போக்கானதைப் பிற்போக்கானதற்கு எதிராகவோ, அமோக ஆதரவுடையதை அற்ப ஆதரவுடையதற்கு எதிராக வோ நிறுத்துவதாலும் அது நீண்டதாக்கப்பட முடியாது. சிறு நாடொன்று பெரிய நாடொன்ருலோ, பெரிய நாடொன்று சிறிய நாடொன்ருலோ வல்லிணைப்புச் செய்யப்படுவது சாதா ரண நிகழ்ச்சி. பலமானதல்லாத முற்போக்கான நாடொன்று பெரிய பிற்போக்கான நாடொன்ருல் அழிக்கப்படுவதும் பல சமயம் உண்டு; முற்போக்கான ஆனுல் பலமற்ற சகலதிற்கும் இதுவே பொருந்தும். அமோக ஆதரவு அல்லது அற்பமான ஆதரவு ஒரு முக்கியமான, ஆனுல் இரண்டாம் பட்சமான அம் சம், அதன் பாதிப்பின் அளவு இரு தரப்புகளிலுமான அடிப் படையான அம்சங்களிற் தங்கியுள்ளது. ஆகவே, ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தம் ஒரு நீண்டகால யுத்தம் என நாம் கூறும் போது அது இரு தரப்புகளிலும் செயல்படுகின்ற சகல அம் சங்களினதும் பரஸ்பரத் தொடர்புகளினின்றும் பெறப்பட்ட ஒரு முடிவாகும். எதிரி பலமானவன், நாம் பலவீனமானவர்கள்; அடிமைப்பாட்டு அபாயம் இருக்கத் தான் செய்கின்றது. ஆனுல்

பிற வகைகளில் எதிரி குறைபாடுகளைக் கொண்டுள்ளான், நாம் சாதக அம்சங்களைக் கொண்டுள்ளோம். எமது பிரயாசைகளால் எதிரியின் சாதக அம்சங்கள் குறைக்கவும் அவனது குறைபாடுகள் மோசமாக்கவும் பட முடியும். மறுபுறத்தில், எமது பிரயாசைகளால் எமது சாதக அம்சங்கள் வளர்க்கவும் எமது குறைபாடுகள் நிவர்த்திக்கவும் பட முடியும். எனவே, எம்மால் இறுதி வெற்றியை ஈட்டவும் அடிமைப்பாட்டைத் தவிர்க்கவும் இயலுமாகையில், எதிரி இறுதியிற் தோற்கடிக்கப்படுவான், அவனால் தன் ஏகாதிபத்திய அமைப்பு முழுவதும் தகர்வதைத் தவிர்க்க இயலாது.

**31.** எதிரிக்கு ஆக ஒரு சாதக அம்சமும் மற்றெல்லா வகைகளிலும் குறைபாடுகளும் உள்ளனவாகையாலும் எமக்கு ஒரு வகையில் மட்டும் குறைபாடுகளும் மற்றெல்லா வகைகளிலும் சாதக அம்சங்களும் உள்ளனவாகையாலும் இது ஏன் ஒரு சமன்பாட்டை ஏற்படுத்தாமல், அதற்கு மாறாகத் தற்சமயம் எதிரிக்கு உயர்வான ஸ்தானத்தையும் எமக்குத் தாழ்வான ஸ்தானத்தையும் ஏற்படுத்தியுள்ளது? பிரச்சினையை நாம் இத்தகைய ஒரு சம்பிரதாயமான முறையில் ஆராய முடியாதென்பது மிகத்தெளிவு. உண்மை என்னவெனில் எதிரியின் பலத்திற்கும் எம்முடைய பலத்திற்கும் இடையிலான ஏற்றத்தாழ்வு அத்தனை பெரிதாக இருப்பதால் எதிரியின் குறைபாடுகள் தற்போதைக்கு அவனது பலத்தை ரத்துச் செய்யப் போதுமான அளவிற்கு விருத்தியடையவில்லை, விருத்தியடையவும் முடியாது, எமது சாதக அம்சங்களும் தற்போதைக்கு எமது பலவீனத்தை நிவர்த்திக்கப் போதுமான அளவிற்கு விருத்தியடையவில்லை, விருத்தியடையவும் முடியாது. ஆகவே இன்னும் சமன்பாடு ஏற்பட முடியாது, ஏற்றத்தாழ்வே இருக்க முடிகிறது.

32. எதிரி பலமானவனுகவும் உயர்வானவனுகவும் நாம் பல வீனமானவராகவும் தாழ்வானவராகவும் உள்ள நிலைமை பதிற் தாக்குதல் யுத்தத்திலும் ஐக்கிய முன்னணியிலும் விடாப்பி டியாக இருப்பதிலான எமது பிரயாசைகளால் ஓரளவு மாற் றப்பட்டுள்ளதெனினும், இதுவரை அடிப்படையான மாற்ற மெதுவும் ஏற்படவில்லை. எனவே யுத்தத்தின் குறிப்பிட்ட ஒரு கட்டத்தின்போது, குறிப்பிட்ட ஒரு அளவிற்கு எதிரி வெற்றி யடையக்கூடும், நாம் தோல்வி உறுவோம். ஆனுல் எதிரியின் வெற்றிகளும் எமது தோல்விகளும் நிச்சயமாக இந்தக் குறிப் பிட்ட கட்டத்திலும் அளவிலும் வரையறைப்பட்டு இருப்பதும், அவற்றைக் கடந்த பூரண வெற்றி அல்லது பூரண தோல்வி ஏற்பட முடியாததும் ஏன்? இதற்குக் காரணம், முதலாவதாக, ஆரம்பத்திலிருந்தே எதிரியின் பலமும் எமது பலவீனமும் அறு தியானவையாக அல்லாமல் ஒப்புநோக்கானவையாக மட்டுமே இருந்து வந்துள்ளமையும், இரண்டாவதாக, பதிற்தாக்குதல் யுத்தத்திலும் ஐக்கிய முன்னணியிலும் விடாப்பிடியாக இருப் பதிலான எமது பிரயாசைகள் இந்த ஒப்புநோக்கான தன்மை யை மேலும் வலுப்படுத்தியுள்ளமையுமே. ஆதியிலிருந்த நிலை மையுடன் ஒப்பிடுகையில், எதிரி இன்னும் பலமாகவே உள் ளான், ஆனுல் பாதகமான அம்சங்கள் அவனது பலத்தை, இன்னும் அவனது உயர்வை அழித்துவிடப் போதிய அளவிற்குக் குறைக்காதபோதும் ஓரளவிற்குக் குறைத்துள்ளன; அதே போல, நாம் இன்னும் பலவீனமாகவே உள்ளோம். ஆனுல் சாதகமான அம்சங்கள் எமது பலவீனத்தை, இன்னும் எமது தாழ்வை மாற்றிவிடப் போதிய அளவிற்கு நிவர்த்தி செய் யாத போதும் ஓரளவிற்கு நிவர்த்தி செய்துள்ளன. இவ்வா றுக எதிரி ஒப்புநோக்காகப் பலமானவனுயும் நாம் ஒப்புநோக்

காகப் பலவீனமானவர்களாயும், எதிரி ஒப்புநோக்காக உயர் வான ஸ்தானத்திலும் நாம் ஒப்புநோக்காகத் தாழ்வான ஸ்தா னத்திலும் இருக்கின்றோம். இரு தரப்புகளிலும் பலமும் பல வீனமும், உயர்வும் தாழ்வும், ஒருபோதும் அறுதியானவையாக இருந்ததில்லை; அதுபோக, யுத்தத்தின் போது ஜப்பானை எதிர்ப் பதிலும் ஐக்கிய முன்னணியிலும் விடாப்பிடியாக இருப்பதி லான எமது பிரயாசைகள் எமக்கும் எதிரிக்குமிடையில் ஆதி யிலிருந்த சக்திகளின் பலாபலத்தில் மேற்கொண்டும் மாற் றங்களை ஏற்படுத்தியுள்ளன. ஆகவே, இரு தரப்புகளினது வெற் றியும் தோல்வியும் நிச்சயமாக குறிப்பிட்ட கட்டத்திலும் அளவிலும் வரையறைப்பட்டவையே, எனவே யுத்தம் நீண் டதாகிறது.

33. ஆனல் சூழ்நிலைகள் தொடர்ச்சியாக மாறிக் கொண்டே இருக்கின்றன. யுத்தத்தின் போக்கில், நாம் சரியான ராணுவ, அரசியல் தந்திரோபாயங்களைக் கையாண்டு, கோட்பாட்டுத் தவறுகளெதையும் இழைக்காது, மிக சிறந்த பிரயாசைகளை எடுக்கும் பட்சத்தில், யுத்தம் இழுபட இழுபட எதிரியின் பாதக அம்சங்கள், எமது சாதக அம்சங்கள் இரண்டுமே வளரும்; அதன் தவிர்க்க முடியாத விளைவு எமக்கும் எதிரிக்குமிடையில் ஆதியிலிருந்த சக்திகளின் பலாபலத்திலும் இரு தரப்புகளி னதும் ஏற்றத்தாழ்வின் ஸ்தானத்திலும் தொடர்ச்சியான மாற் றம் ஏற்படுவதாயிருக்கும். புதிய கட்டமொன்று அடை யப்படும் போது, இரு தரப்புகளினது சக்திகளின் பலாபலத்தி லும் ஏற்றத்தாழ்வின் ஸ்தானத்திலும் ஒரு பெரும் மாற்றம் ஏற்பட்டு அதன் விளைவாக எதிரிக்குத் தோல்வியும் எமக்கு வெற்றியும் கிட்டும்.

34. தற்போது எதிரியால் இன்னும் தன் பலத்தை எப்படி

யோ பயன்படுத்திக்கொள்ள இயலும், எமது பதிற்தாக்குதல் யுத்தம் இன்னும் அவனை அடிப்படையாகப் பலவீனப்படுத்திவிடவில்லை. மனித சக்தியிலும் பொருள் வளங்களிலுமான அவனது பற்றுக்குறை இன்னும் அவனது தாக்குதலைத் தடை செய்யும் படியானதாக இல்லை; அதற்கு மாறாக அவை இன்னும் ஓரளவிற்கு அவனது தாக்குதலுக்கு ஆதாரமாகக் கூடியவையாகவே உள்ளன. ஜப்பானுக்குள் வர்க்க விரோதப் பாடுகளையும் சீன தேசத்தின் எதிர்ப்பையும் உக்கிரப்படுத்தும் ஒரு அம்சமான அவனது யுத்தத்தின் பிற்போக்கு மிலேச்ச இயல்பு இன்னும் அவனது தாக்குதலை அடியந்தமாகத் தடைப்படுத்துவதான நிலைமையொன்றை ஏற்படுத்தவில்லை. எதிரியின் சர்வதேசத் தனிமைப்பாடு அதிகரிக்கின்றது, ஆனால் இன்னும் பூரணமானதாக ஆகவில்லை. எமக்குத் தாம் உதவி செய்வதாக தெரிவித்துள்ள நாடுகள் பலவற்றில் ஆயுதங்களிலும் யுத்த தளபாடங்களிலும் வர்த்தகம் செய்யும் முதலாளிகள் ஆக இலாபமொன்றிலேயே மயங்கி இன்னும் ஜப்பானுக்குப் பெருந்தொகைகளில் யுத்தப் பண்டங்கள் வழங்கி வருகின்றனர்,[13] அவர்களின் அரசாங்கங்கள்[14] இன்னும் ஜப்பானுக்கு எதிராக நடைமுறைப் பகிஷ்காரங்கள் நடத்துவதில் சோவியத் யூனியனுடன் சேர்ந்து கொள்ளத் தயங்குகின்றன. இவையனைத்திலுமிருந்து, எமது பதிற்தாக்குதல் யுத்தம் விரைவில் வெல்லப்பட முடியாது, ஒரு நீண்டகால யுத்தமாக மட்டுமே இருக்க வேண்டும் என்பது பெறப்படுகின்றது. சீனாவைப் பொறுத்தவரையில், பதிற்தாக்குதலின் பத்து மாதங்களில், ராணுவ, பொருளாதார, அரசியல், கலாச்சாரத் துறைகளிலான அதன் பலவீனங்கள் ஓரளவிற்குச் சீர்ப்படுத்தப்பட்டுள்ளன எனினும் அது எதிரியின் தாக்குதலைத் தடுக்கவும் எமது

எதிர்த்தாக்குதலைத் தயார் செய்யவும் தேவையானதிலிருந்து இன்னும் வெகுதூரத்திற்தான் உள்ளது. மேலும், தொகை ரீதியிற் கூறுகையில், நாம் சிற்சில இழப்புகளை உற வேண்டி இருந்துள்ளது. எமக்குச் சாதகமான அம்சங்களெல்லாம் ஆக்கமான பாதிப்பை ஏற்படுத்துகின்றன என்ற போதிலும், அது எதிரியின் தாக்குதலைத் தடுக்கவும் எம்மை எதிர்த்தாக்குதலுக்குத் தயார்ப்படுத்தவும் போதுமான அளவுக்கு வர நாம் இன்னும் பிரமாண்டமான பிரயாசையெடுக்க வேண்டும். உள்நாட்டில் ஊழலை ஒழிப்பதும் முன்னேற்றத்தைத் துரிதப்படுத்துவதுமோ, அன்றி வெளி நாட்டில் ஜப்பானிய-சார்புச் சக்திகள் கட்டுப்படுத்தப்படுவதும் ஜப்பானிய-எதிர்ப்பு சக்திகள் விரிவடைவதுமோ இன்னும் நிதர்சனமாகவில்லை. இவை அனைத்திலுமிருந்து, எமது யுத்தம் விரைவாக வெல்லப்பட முடியாது, மாறாக ஒரு நீண்டகால யுத்தமாக மட்டுமே இருக்க வேண்டும் என்பது பெறப்படுகின்றது.

## நீண்டகால யுத்தத்தின் மூன்று கட்டங்கள்

35. சீன-ஜப்பானிய யுத்தம் நீண்ட ஒன்றாகையாலும், இறுதி வெற்றி சீனாவினுடையதாக இருக்குமாகையாலும் இந்த நீண்டகால யுத்தம் மூன்று கட்டங்களினூடாகச் செல்லும் என நியாயமாக அனுமானிக்கலாம். முதலாவது கட்டம் எதிரியின் யுத்ததந்திர ரீதியான தாக்குதலும் எமது யுத்ததந்திர ரீதியான தற்காப்பும் அடங்கியதாயிருக்கும். இரண்டாவது கட்டம் எதிரியின் யுத்ததந்திர ரீதியான பாதுகாப்பினதும் எமது

எதிர்த்தாக்குதலுக்கான தயாரிப்பினதும் காலகட்டமாக இருக்கும். மூன்றுவது கட்டம் எமது யுத்ததந்திர ரீதியான எதிர்த் தாக்குதலினதும் எதிரியின் யுத்ததந்திர ரீதியான பின்வாங்கலினதும் காலகட்டமாயிருக்கும். மூன்று கட்டங்களிலுமான திட்டவட்டமான நிலைமைகளை முன்னறிந்து கூறுவது அசாத்தியம், ஆனுல் தற்போதைய சூழ்நிலைகளின் ஒளியில் யுத்தத்தில் சில பிரதான போக்குகள் சுட்டிக்காட்டப்படலாம். புறநிலையான நிகழ்ச்சிகளின் போக்குப் பல வளைவுசுழிவுகளும் திருப்பங்களும் கொண்டதாய் மிக மிக வனப்புடையதும் பல்வகைப்பட்டதுமாக இருக்கும், சீன-ஜப்பானிய யுத்தத்திற்கு எவரும் ''ஜாதகம்'' கணிக்க இயலாது; இருப்பினும் யுத்தத்தின் போக்குகளின் பெரும்படியான படமொன்றை வரைந்து கொள்வது அதன் யுத்ததந்திர வழிகாட்டலுக்கு அவசியம். ஆகவே எமது படம் பின்னர் வரும் உண்மைகளுடன் பூரணமாக இணங்காது போகவும் அவற்ருல் திருத்தப்படவும் கூடுமெனினும், அப்போதும் நீண்டகால யுத்தத்திற்கு உறுதியான, குறிக்கோளுடன் கூடிய யுத்ததந்திர வழிகாட்டல் தருவதற்கு இத்தகைய படமொன்றை வரைந்து கொள்வது அவசியம்.

36. முதலாவது கட்டம் இன்னும் முடிவடையவில்லை. எதிரியின் திட்டம் குவாங்செளவையும், வூஹனையும், லன்செளவையும் கைப்பற்றி, இந்த மூன்று ஸ்தலங்களையும் இணைப்பதாகும். இந்த நோக்கத்தை அடைவதற்கு எதிரி குறைந்த பட்சம் ஐம்பது டிவிஷன்களை, அல்லது சுமார் பதினைந்து லட்சம் வீரர்களை உபயோகிக்கவும், ஒன்றரை வருடங்கள் முதல் இரண்டு வருடங்கள் வரையான காலத்தையும் ஆயிரம் கோடி ஜப்பானிய யென்னுக்கு மேற்பட்ட பணத்தையும் செலவிடவும் வேண்டியிருக்கும். இத்தனை ஆழ ஊடுருவுவதில் எதிரி பிரமாண்

டமான கஷ்டங்களை எதிர்ப்பட்டு கற்பனைக்கு எட்டாதளவு விநாசகரமான விளைவுகளுக்குள்ளாகிவிடுவான். குவாங்சௌ-ஹன்கோ புகையிரத மார்க்கத்தினதும் சீஆன்-லன்சௌ பெரு வீதியினதும் முழு நீளத்தையும் கைப்பற்ற முயல்வதைப் பொறுத்தவரையில், அதற்கு அவன் மிக அபாயகரமான போர்கள் செய்ய வேண்டியிருக்கும், அப்படியும் கூட அவன் தன் நோக்கத்தைப் பூரணமாக அடையாது போகலாம். ஆனால் எமது போர்நடவடிக்கைத் திட்டத்தை வரைவதில் நாம், எதிரி இம்மூன்று ஸ்தலங்களையும் இன்னும் சில பகுதிகளையும் கூடக் கைப்பற்றி, அவற்றை இணைக்கக் கூடும் என்ற அனுமானத்தை எமது அடிப்படையாகக் கொண்டு, நீண்ட ஒரு யுத்தத்திற்காகப் படைப்பிரயோகங்கள் செய்ய வேண்டும். இதனால் எதிரி அவ்வாறு செய்தாலும் எம்மால் அவனைச் சமாளிக்க முடியும். இந்தக் கட்டத்தில் நாம் கைக்கொள்ள வேண்டிய யுத்தத்தின் வடிவம் பிரதானமாக நடமாட்ட யுத்தமும் துணையாகக் கொரில்லா யுத்தமும் ஸ்தான யுத்தமுமாகும். கோமிந்தாங் ராணுவ அதிகாரிகளின் அகநிலைப்பட்ட தவறுகள் மூலம் ஸ்தான யுத்தத்திற்கு இந்தக் கட்டத்தின் முதற் பகுதியில் முதன்மையான பங்கு அளிக்கப்பட்டது, ஆனால் அப்படியும் கூட இக்கட்டம் முழுமையையும் எடுத்து நோக்குகையில் அது இரண்டாம் பட்சமானதே. இந்தக் கட்டத்தில் சீனா ஏற்கனவே ஒரு பரந்த ஐக்கிய முன்னணியைக் கட்டியெழுப்பியும், முன்னென்றுமில்லாத ஐக்கியத்தை அடைந்தும் உள்ளது. எதிரி அதிக பிரயாசையின்றி விரைவான வெற்றி தோல்வியை முடிவாக்கும் தன் திட்டத்தை நிறைவேற்றவும் சீனா முழுவதையும் கைப்பற்றவும் சீனாவைச் சரணடையத் தூண்டுவதற்குக் கேவலமான, வெட்கங்கெட்ட வழிவகைகளை உபயோகித்துள்ளான்,

தொடர்ந்தும் உபயோகிப்பான் என்ற போதிலும் அவன் இது வரை தோல்வியே கண்டுள்ளான், எதிர்காலத்திலும் வெற்றி யடைவது துர்லபம். இந்தக் கட்டத்தில், கணிசமான இழப் புகளிருக்கவும், சீஞ கணிசமான முன்னேற்றத்தை அடைந்துள் ளது; இந்த முன்னேற்றம் இரண்டாவது கட்டத்தில் தொடர்ந்து எதிர்ப்பு யுத்தத்தை நடத்துவதற்கான பிரதான அடித்தளமாக ஆகும். தற்போதைய கட்டத்தில் சோவியத் யூனியன் சீஞ விற்கு ஏற்கனவே கணிசமான உதவி தந்துள்ளது. எதிரித் தரப்பில் ஏற்கனவே தொய்ந்த துணிவின் அறிகுறிகள் காண் கின்றன, அவனது தரைச் சேனையின் தாக்குதலின் வேகம் இக்கட்டத்தின் முதற் பகுதியிலிருந்ததைவிட நடுப்பகுதியில் குறைவாக உள்ளது, இறுதிப் பகுதியில் மேற்கொண்டும் குறை யும். அவனது நிதி வசதிகளும் பொருளாதாரமும் ஏற்கனவே தீர்ந்து போகும் அறிகுறிகளைக் காட்டுகின்றன; அவனது மக் கள் மத்தியிலும் துருப்புக்கள் மத்தியிலும் யுத்தச் சலிப்புத் தட்ட ஆரம்பித்துள்ளது; யுத்தத்தை வழிநடத்தும் கும்பலுக் குள்ளும் ''யுத்த விரக்திகள்'' வெளிப்பாடடையத் தொடங் கியுள்ளன, யுத்தத்தின் எதிர்காலம் பற்றி நம்பிக்கையீனம் வளர்கின்றது.

37. இரண்டாவது கட்டம் யுத்ததந்திர ரீதியான தேக்க நிலைக் கட்டம் எனப்படலாம். முதலாவது கட்டத்தின் இறுதி அளவில் எதிரி அவனது துருப்புக்கள் பற்ருக்குறையும் எமது உறுதியான எதிர்ப்பும் காரணமாக அவனது யுத்ததந்திர ரீதி யான தாக்குதலுக்குச் சில அந்தங்களை விதிக்க நிர்ப்பந்திக்கப் படுவான்; அந்த அந்தங்களை அடைந்ததும் அவன் தன் யுத்த தந்திர ரீதியான தாக்குதலை நிறுத்திக்கொண்டு, தான் கைப்பற் றிய பகுதிகளைப் பாதுகாக்கும் கட்டத்திற்குள் பிரவேசிப்பான்.

இரண்டாவது கட்டத்தில் எதிரி கைப்பற்றிய பகுதிகளைப் பாது காக்கவும் சீன மக்களை முடிந்த அளவு சூறையாடிக் கொண்டே கைப்பொம்மை அரசாங்கங்களை நிறுவுவதான ஏமாற்றுமு றையால் அவற்றைத் தனதாக்கிக் கொள்ளவும் முயல்வான்; ஆனால் அதிலும் அவன் விடாப்பிடியான கொரில்லா யுத்தத்தை எதிர்நோக்குவான். எதிரியின் பின்புறம் காவலற்றிருக்கின்றது என்ற உண்மையைச் சாதகமாகக் கொண்டு எமது கொரில்லா யுத்தம் முதலாவது கட்டத்தில் விரிவாக விருத்தியடையும், பல தளப்பிரதேசங்கள் ஸ்தாபிக்கப்படும், இதனால் எதிரி கைப்பற்றிய பகுதிகளைப் பாதுகாப்பதற்கு அடிப்படையில் அச் சுறுத்தல் ஏற்படும்; அவ்வாறாக இரண்டாவது கட்டத்தில் இன்னும் பரவலான சண்டை நடைபெறும். இந்தக் கட்டத்தில் எமது சண்டையிடும் வடிவம் பிரதானமாகக் கொரில்லா யுத் தமும் துணையாக நடமாட்ட யுத்தமுமாக இருக்கும். சீனா அப்போதும் ஒரு பெரிய கிரமமான சேனையை வைத்திருக்கும், ஆனால் ஒரு புறத்தில் எதிரி தான் கைப்பற்றி வைத்திருக்கும் பெரிய நகரங்களிலும் பிரதான தொடர்பு மார்க்கங்கள் நெடு கிலும் யுத்ததந்திர ரீதியான தற்காப்பு நிலையொன்றைக் கைக் கொள்வானாகையாலும், மறுபுறத்தில் சீனா இன்னும் தொழில் நுட்ப ரீதியில் போதியளவு முன்னேற்றமடையாதிருப்பதாலும் சீனாவிற்கு உடனடியாக யுத்ததந்திர ரீதியான எதிர்த்தாக்குத லைத் தொடுப்பது கடினமாயிருக்கும். எதிரிக்கெதிராக நேர்முகத் தற்காப்பிலீடுபட்டிருக்கும் துருப்புக்கள் நீங்கலாக எமது படை கள் பெருந்தொகையில் ஒப்புநோக்காகச் சிதறிப் பரந்த படைப் பிரிவுகளாக எதிரியின் பின்புறத்திற்கு நகர்த்தப்பட்டு, உண் மையில் எதிரியால் கைப்பற்றி வைத்திருக்கப்படாத பகுதி களையெல்லாம் தம் தளங்களாகக் கொண்டு மக்களின் ஸ்தல

ஆயுதப் படைகளுக்கு இசைவாகச் செயல்பட்டு, எதிரியாற் கைப்பற்றப்பட்டிருக்கும் இடங்களுக்கு எதிராக விரிவான, உக்கிரமான கொரில்லா யுத்தம் தொடுத்து, இப்போது ஷன்சி மாகாணத்தில் செய்யப்பட்டு வருவது போல் எதிரியை நடமாட்ட யுத்தத்தில் அழிப்பதற்காக அவனைச் சாத்தியமானவரை இடம் விட்டு இடம் நகரும் வண்ணமாக வைத்திருக்கும். இரண்டாவது கட்டத்திலான சண்டை ஈவிரக்கமற்றதாயிருக்கும், பல பிரதேசங்கள் பாரதூரமான அழிவை உறும். ஆனால் கொரில்லா யுத்தம் வெற்றிகரமானதாக இருக்கும், அது நன்கு நடத்தப்பட்டால் எதிரியால் தான் கைப்பற்றிய பிரதேசத்தில் சுமார் மூன்றிலொன்றை மட்டுமே வைத்திருக்கக் கூடியதாகி, எஞ்சிய சுமார் மூன்றிலிரண்டு பாகம் எம் கைவசம் இருக்கும்; இது எதிரிக்கு ஒரு பெரும் தோல்வியாகவும் சீனுவுக்கு ஒரு பெரும் வெற்றியாகவும் இருக்கும். அச்சமயமளவில் எதிரி கைப்பற்றியிருக்கும் பிரதேசம் முழுமையும் மூன்று வகைகளாகப் பிரிபடும்: முதலாவது, எதிரித் தளப்பகுதிகள்; இரண்டாவது, கொரில்லா யுத்தத்திற்கான எமது தளப்பிரதேசங்கள்; மூன்றுவது, இரு தரப்புகளும் போட்டியிடும் கொரில்லாப் பிராந்தியங்கள். இந்தக் கட்டத்தின் கால அளவு எமக்கும் எதிரிக்குமிடையிலான சக்திகள் சமன்பாட்டிலான மாற்றத்தின் அளவிலும் சர்வதேச நிலைமையிலான மாற்றங்களிலும் தங்கியிருக்கும்; பொதுவாகக் கூறினுல், நாம் இந்தக் கட்டம் ஒப்புநோக்காக நீண்டகாலம் நீடிப்பதை எதிர்நோக்கவும் இதன் கஷ்டங்களுக்கு ஈடுகொடுக்கவும் தயாராக இருக்க வேண்டும். இது சீனுவிற்கு மிகத் துன்பகரமான ஒரு காலகட்டமாக இருக்கும்; பொருளாதாரக் கஷ்டங்களும் தேசத்துரோகிகளின் சீர்குலைவு நடவடிக்கைகளும் இரண்டு மிகப் பெரும் பிரச்சினைக

ளாக இருக்கும். எதிரி சீனுவின் ஐக்கிய முன்னணியைச் சிதைக்க முழு மூச்சாக முயல்வான், எதிரியால் கைப்பற்றப்பட்ட எல்லா பகுதிகளிலுமான தேசத்துரோக ஸ்தாபனங்கள் ''ஒருமைப் பட்ட அரசாங்கம்'' எனப்படும் ஒன்ருக இணையும். பெரிய நகரங்கள் இழக்கப்படுவதும் யுத்தத்தின் கஷ்டங்களும் கார ணமாக எமது அணிகளுக்குள் உள்ள ஊசலாடும் நபர்கள் சமர சத்திற்காகக் கூச்சலிடுவர், நம்பிக்கையீனவாதம் பாரதூரமான அளவிற்கு வளரும். அப்போது எமது பணி முழு நாட்டு மக் களையும் ஒரு மனிதன்போல் ஐக்கியமுற்று யுத்தத்தைத் தளர்ந் துகொடுக்காத விடா உறுதியுடன் தொடர்ந்து நடத்த அணி திரட்டுவதும், ஐக்கிய முன்னணியை விசாலப்படுத்தி ஸ்திரப் படுத்துவதும், நம்பிக்கையீனவாதத்தையும் சமரசக் கருத்துக்க ளையுமெல்லாம் துடைத்துத் தள்ளுவதும், கடும் போராட்டத் திற்கான துணிவை ஊக்குவிப்பதும், புதிய யுத்தகாலக் கொள் கைகளை அமுல்படுத்துவதும், அவ்வாருகக் கஷ்டங்களுக்கு ஈடு கொடுப்பதுமாக இருக்கும். இரண்டாவது கட்டத்தில் நாம் நாடு முழுவதையும் உறுதியுடன் ஓர் ஐக்கியமுற்ற அரசாங்கத் தை நிலைநிறுத்திக் கொள்ளுமாறும் பிளவுகளை எதிர்க்குமாறும் எமது போர் நுட்பத்தை ஒழுங்குமுறையாக விருத்திசெய்யு மாறும், ஆயுதப் படைகளைப் புனரமைக்குமாறும், முழு மக்க ளையும் அணிதிரட்டுமாறும், எதிர்த்தாக்குதலுக்குத் தயாரா குமாறும் அறைகூவல் விடுக்க வேண்டியிருக்கும். இக்கட்டத் தில் சர்வதேச நிலைமை ஜப்பானுக்கு மேலும் பாதகமானதா கும், ''முடிந்தவற்றை'' அப்படியே ஏற்றுக்கொள்ளும் சம் பேர்லின் ரக ''யதார்த்தவாதம்'' பற்றிய பேச்சு இருக்கக் கூடுமெனினும் பிரதான சர்வதேச சக்திகள் சீனுவிற்கு அதிக உதவி தருவதற்குச் சாதகமாக மாறும். தென் கிழக்கு ஆசி

யாவிற்கும் சைபிரியாவிற்குமான ஜப்பானின் அச்சுறுத்தல் மேலும் பெரிதாகும், மற்றுமொரு யுத்தம் கூட ஏற்படக் கூடும். ஜப்பான் சம்பந்தப்பட்டவரை அதன் பல பத்து டிவிஷன்கள் சீனுவில் வெளிப்பட முடியாதபடி சேற்றில் அமுங்கிக் கிடக்கும். பரவலான கொரில்லா யுத்தமும் மக்களின் ஜப்பானிய-எதிர்ப்பு இயக்கமும் இந்தப் பெருந் தொகையான ஜப்பானியப் படையைத் தேய்த்துத் தேய்த்துப் பெரிதும் குறைத்து, வீடு திரும்பும் அவாவினதும் யுத்தச் சலிப்பினதும் வளர்ச்சியையும் ஏன் யுத்த-எதிர்ப்பு உணர்வினதும் வளர்ச்சியையும் கூடத் தூண்டிவிட்டு அதன் துணிவைச் சிதைக்கும். ஜப்பான் சீனுவைச் சூறையாடுவதில் எந்தப் பயன்களையும் பெருது எனக் கூறுவது தவருயிருக்குமெனினும், மூலதனம் பற்ருக்குறையுடையதாயிருப்பதாலும் கொரில்லா யுத்தத்தால் தொல்லைப்படுத்தப்படுவதாலும், துரிதமான பயன்களையோ கணிசமான பயன்களையோ பெறுவது அதற்குச் சாத்தியமாயிராது. இந்த இரண்டாவது கட்டம் முழு யுத்தத்தினதும் மாற்ற கட்டமாக இருக்கும்; இதுவே சிரமமான காலகட்டமாயும், ஆனுல் அத்துடன் மாறுதலுக்கு மிகக் கேந்திரமான காலகட்டமாயும் இருக்கும். சீனு ஒரு சுதந்திர நாடாகுமா அல்லது ஒரு காலனியாகத் தாழுமா என்பது முதலாவது கட்டத்தில் பெரிய நகரங்கள் வைத்திருக்கப்படுவதாலோ இழக்கப்படுவதாலோ அல்ல, இரண்டாவது கட்டத்தில் முழுத்தேசமும் எந்த அளவிற்குப் பிரயாசைப்படுகின்றது என்பதாலேயே நிர்ணயிக்கப்படும். எம்மால் பதிற்தாக்குதல் யுத்தத்திலும் ஐக்கிய முன்னணியிலும் நீண்டகால யுத்தத்திலும் விடாப்பிடியாக இருக்க இயலுமாயின் சீனு அந்தக் கட்டத்தில் பலவீனமான நிலையிலிருந்து பலமானதாக மாறுவதற்கான வலிமையைப் பெறும். அது சீனுவின்

பதிற்தாக்குதல் யுத்தமாகிய மூன்று அங்க நாடகத்தில் இரண்டாம் அங்கமாக விளங்கும். பாத்திரங்களனைவரதும் பிரயாசைகள் மூலம் மிகத் திறம்பட்ட கடைசி அங்கத்தை நடத்தக் கூடியதாயிருக்கும்.

38. மூன்முவது கட்டம் நாம் இழந்த பிரதேசங்களை மீட்பதற்கான எதிர்த்தாக்குதலின் கட்டமாக இருக்கும். இவற்றை மீட்பது பிரதானமாக முந்திய கட்டத்தில் சீனு கட்டிவளர்ப்பதும் மூன்ரும் கட்டத்தில் தொடர்ந்து அதிகரிப்பதுமான பலத்தில் தங்கியிருக்கும். ஆனல் சீனுவின் பலம் மட்டும் போதியதாயிராது, நாம் சர்வதேச சக்திகளின் ஆதரவிலும் ஜப்பானுக்குள் ஏற்படப் போகும் மாற்றங்களிலும் தங்கிநிற்கவும் வேண்டியிருக்கும்; இல்லையேல் எம்மால் வெல்ல இயலாது போகும்; இது சர்வதேசப் பிரசாரத்திலும் ராஜதந்திரத்திலுமான சீனுவின் பணிகளைக் கூட்டுகிறது. மூன்முவது கட்டத்தில் எமது யுத்தம் யுத்ததந்திர ரீதியான தற்காப்பு யுத்தமாக இராது, மாருக யுத்ததந்திர ரீதியான தாக்குதல்களாக வெளிப்பாடடையும் ஒரு யுத்ததந்திர ரீதியான எதிர்த்தாக்குதலாக மாறும்; அது இனியும் யுத்ததந்திர ரீதியாக உட்புறமுனைகளில் நடத்தப்பட மாட்டாது, மாருகச் சிறிது சிறிதாக யுத்ததந்திர ரீதியாக வெளிப்புற முனைகளுக்கு நகரும். நாம் போரிட்டு யாலு நதிவரை முன்னேறும் வரை இந்த யுத்தம் முடிவுற்றதாகக் கருதப்பட முடியாது. மூன்முவது கட்டமே நீண்டகால யுத்தத்தில் கடைசிக் கட்டமாக இருக்கும்; நாம் யுத்தத்தில் இறுதி வரை விடாப்பிடியாக இருப்பது பற்றிப் பேசும் போது நாம் கருதுவதும் இந்தக் கட்டத்தினூடாக இறுதிவரை செல்வதையே. இந்தக் கட்டத்தில் எமது முதன்மையான போரிடும் வடிவம் இன்னும் நடமாட்ட யுத்தமாகவே இருக்கும், ஆனல்

ஸ்தான யுத்தம் முக்கியத்துவம் பெறும். நிலவும் சூழ்நிலைகள் காரணமாக முதலாவது கட்டத்தில் ஸ்தான தற்காப்பு முக்கியமானதாகக் கருதப்பட முடியாதிருக்கையில், மாறிவிட்ட சூழ்நிலைகளும் பணியின் தேவைகளும் காரணமாக மூன்றுவது கட்டத்தில் ஸ்தான தாக்குதல் கணிசமான முக்கியத்துவமுடையதாக ஆகும். மூன்றுவது கட்டத்தில் கொரில்லா யுத்தம் இன்னும் நடமாட்ட யுத்தத்திற்கும் ஸ்தான யுத்தத்திற்கும் துணையாக இருந்து யுத்ததந்திர ரீதியான ஆதரவு தரும், ஆனுல் இரண்டாவது கட்டத்திற் போல் முதன்மையான வடிவமாக இராது.

39. இவ்வாருக யுத்தம் நீண்டது, எனவே இயல்பில் ஈவிரக்கமற்றது என்பது பிரத்தியட்சம். எதிரியால் சீனு முழுவதையும் கபளீகரம் செய்ய முடியப் போவதில்லை, ஆனுல் பல இடங்களைக் கணிசமானளவு காலத்திற்குக் கைப்பற்றி வைத்திருக்க இயலும். சீனுவினுல் ஜப்பானியர்களை விரைவாக வெளியேற்ற முடியப் போவதில்லை, ஆனுல் அதன் பிரதேசத்தின் பெரும் பகுதி சீனுவின் கைவசமே இருக்கும். இறுதியில் எதிரி தோற்பான், நாம் வெல்வோம், ஆனுல் எமக்குப் பிரயாணம் செய்யக் கடினமான பாதையொன்று இருக்கும்.

40. சீன மக்கள் இந்த நீண்ட, ஈவிரக்கமற்ற யுத்தத்தில் உரமேற்றப்படுவர். யுத்தத்தில் பங்குபற்றும் அரசியல் கட்சிகளும் உருக்கி உரமேற்றப்பட்டு சோதிக்கப்படும். ஐக்கிய முன்னணி விடாப்பிடியாக வைத்திருக்கப்பட வேண்டும்; ஐக்கிய முன்னணியில் விடாப்பிடியாக இருப்பதன் மூலம் மட்டுமே நாம் யுத்தத்தில் விடாப்பிடியாக இருக்க முடியும்; ஐக்கிய முன்னணியிலும் யுத்தத்திலும் விடாப்பிடியாக இருப்பதன் மூலம் மட்டுமே நாம் இறுதி வெற்றியை ஈட்டமுடியும். இவ்வாருக

மட்டுமே சகல கஷ்டங்களும் கடக்கப்பட முடியும். கடின மான பாதையிற் பிரயாணம் செய்த பின் நாம் வெற்றிக்கான பாதையை அடைவோம். இதுவே யுத்தத்தின் இயற்கையான தர்க்கவியல்.

41. மூன்று கட்டங்களிலும் எதிரிக்கும் எமக்குமிடையிலுள்ள பலத்தின் மாற்றங்கள் பின்வரும் நெறிகளில் நிகழும். முதற் கட்டத்தில், பலத்தில் எதிரி உயர்ந்தவன், நாம் தாழ்ந்தவர் கள். எமது தாழ்ச்சி சம்பந்தமாக நாம் பதிற்தாக்குதல் யுத்தம் தொடங்கும் தறுவாயிலிருந்து இக்கட்டத்தின் இறுதி வரையில் இரு வேறுபட்ட வகையான மாற்றங்கள் ஏற்படலாமெனக் கணக்கிட வேண்டும். முதலாவது வகை, மோசமுறுவதான மாற்றம். சீனுவின் ஆதியிலுள்ள தாழ்ச்சி முதலாவது கட் டத்தின் யுத்த இழப்புகளால், அதாவது, பிரதேசம், ஜனத் தொகை, பொருளாதார பலம், ராணுவ பலம், கலாசார நிறுவனங்கள் ஆகியன குறைவுறுவதால் மேலும் மோசமாக்கப்ப டும். முதற்கட்டத்தின் இறுதிவாக்கில் குறைவு, விசேஷமாகப் பொருளாதார அம்சத்தில், அனேகமாகக் கணிசமானதாயி ருக்கும். இந்த விஷயம் சிலரால் தங்கள் தேசிய அடிமைப் பாட்டு, சமரச தத்துவங்களுக்கு ஒரு அடிப்படையாகப் பயன் படுத்தப்படும். ஆனால் இரண்டாவது வகையான மாற்றமும், அதாவது சிறப்படைவதான மாற்றமும் கவனிக்கப்பட வேண் டும். அது யுத்தத்தில் பெறப்படும் அனுபவத்தையும், ஆயுதப் படைகளால் அடையப் பெறும் முன்னேற்றத்தையும், அரசி யல் முன்னேற்றத்தையும், மக்கள் அணிதிரட்டப்படுவதையும், கலாசாரம் புதிய ஒரு திசையில் அபிவிருத்தியடைவதையும், கொரில்லா யுத்தம் தோன்றுவதையும், சர்வதேச ஆதரவு அதிகரிப்பதையும், இத்தியாதி பிறவற்றையும் உள்ளடக்குகின்

றது. முதலாவது கட்டத்தில், குறைவுறுவது பழைய தொகையும் பழைய தரமுமாகும், வெளிப்பாடுகளும் பிரதானமாக தொகையிலேயே இருக்கும். வளர்வது புதிய தொகையும் புதிய தரமுமாக இருக்கும், வெளிப்பாடுகளோ பிரதானமாகத் தரத்திலேயே இருக்கும். இரண்டாவது வகையான மாற்றமே நீண்டகால யுத்தமொன்றை நடத்துவதற்கும் இறுதி வெற்றியை ஈட்டுவதற்குமான எமது வல்லமைக்கான ஒரு அடிப்படையாக அமைகிறது.

42. முதலாவது கட்டத்தில், எதிரியின் தரப்பிலும் இரு வகையான மாற்றங்கள் நிகழ்கின்றன. முதலாவது வகையான மாற்றம் மோசமடைவதும், லட்சக்கணக்கான வீரர் கொல்லவும் காயப்படுத்தவும் படுவதிலும், ஆயுதங்களும் வெடிமருந்தும் குறைவதிலும், துருப்புக்களின் துணிவுகெடுவதிலும், உள்நாட்டிற் பொதுஜன அதிருப்தியிலும், வியாபாரம் சுருங்குவதிலும், ஆயிரம் கோடி ஜப்பானிய யென்னுக்கு மேற் செலவிடப்படுவதிலும், ' உலக அபிப்பிராயத்தால் கண்டிக்கப் படுவதிலும், இத்தியாதி பிறவற்றிலும் வெளிப்பாடடைவது மாகும். இந்தப் போக்கும் நீண்ட ஒரு யுத்தத்தை நடத்தவும் இறுதி வெற்றியை ஈட்டவுமான எமது வல்லமைக்கான ஒரு அடிப்படையைத் தருகின்றது. ஆனுல் நாம் முன்போலவே எதிரியின் தரப்பில் இரண்டாவது வகையான மாற்றத்தையும், சிறப்புறுவதான மாற்றத்தையும், அதாவது அவன் பிரதேசத்திலும் ஜனத்தொகையிலும் வளங்களிலும் விசாலிப்பதையும் கணக்கிட வேண்டும். இதுவும் எமது பதிற்தாக்குதல் யுத்தத்தின் நீண்ட இயல்பிற்கும் விரைவான வெற்றியின் அசாத்தியத்திற்குமான ஒரு அடிப்படை, அதே வேளையில் சிலர் அதைத் தமது தேசிய அடிமைப்பாட்டு, சமரசத் தத்துவங்க

ளுக்கு ஒரு அடிப்படையாகவும் உபயோகிப்பர். இருப்பினும் நாம் எதிரியின் தரப்பிலான சிறப்புறும் இந்த மாற்றத்தின் தற்காலிகமான, ஒரு பகுதியளவிற்கேயான இயல்பையும் கணக்கிலெடுக்க வேண்டும். ஜப்பான் தகர்வை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் ஒரு ஏகாதிபத்தியம், அது சீனுவின் பிரதேசத்தைக் கைப்பற்றி வைத்திருப்பது தற்காலிகமானது. சீனுவில் கொரில்லா யுத்தத்தின் தீவிர வளர்ச்சி ஜப்பானின் உண்மையான கைப்பற்றலை ஒடுங்கிய பகுதிகளுக்குக் குறுக்கிவிடும். மேலும், ஜப்பான் சீனப் பிரதேசத்தைக் கைப்பற்றுவது ஜப்பானுக்கும் பிற நாடுகளுக்கும் இடையில் முரண்பாடுகளைச் சிருஷ்டித்து உக்கிரப்படுத்துகின்றது. இவை போக, பொதுவாகக் கூறினுல், வட கிழக்கு மாகாணங்கள் மூன்றிலுமான அனுபவம் காண்பிக்கின்றவாறு, இத்தகைய கைப்பற்றி வைத்திருத்தல், ஜப்பான் முதலீடுகள் செய்துவிட்டு இலாபங்கள் பெருமல் கணிசமான காலத்திற்கு இருப்பதைத் தேவையாக்குகின்றது. இவையாவும் எமக்கு மீண்டும் தேசிய அடிமைப்பாட்டு, சமரசத் தத்துவங்களைத் தகர்ப்பதற்கும், நீண்டகால யுத்தமும் இறுதி வெற்றியுமான தத்துவங்களை நிலைநாட்டுவதற்குமான ஒரு அடிப்படையைத் தருகின்றன.

43. இரண்டாவது கட்டத்தில், இரு தரப்புகளிலுமான மேற்படி மாற்றங்கள் தொடர்ந்து விருத்தியுறும். நிலைமை விபரமாக முன்னறிந்து கூறப்பட முடியாதிருக்கையில், மொத்தத்தில் ஜப்பான் தொடர்ந்து தாழ்வுறும், சீனு தொடர்ந்து உயர்வுறும்.[15] உதாரணமாக, ஜப்பானின் ராணுவ, நிதி வளங்கள் சீனுவின் கொரில்லா யுத்தத்தால் பாரதூரமாகத் தீர்ந்துபோகச் செய்யப்படும், ஜப்பானில் பொதுஜன அதிருப்தி மேலும் வளரும், அதன் துருப்புக்களின் துணிவு மேற்கொண்டும் தள

ரும், சர்வதேச ரீதியில் அது மேலும் தனிமைப்படும். சீனு வைப் பொறுத்தவரையில் அது அரசியல், ராணுவ, கலாச்சா ரத் துறைகளிலும் மக்களின் அணிதிரட்டலிலும் மேற்கொண் டும் முன்னேற்றமடையும்; கொரில்லா யுத்தம் மேற்கொண் டும் அபிவிருத்தியடையும்; உட்புறப் பகுதிகளிலான சிறு கைத் தொழில்களினதும் பரவலான விவசாயத்தினதும் அடிப்படை யில் புதிய பொருளாதார வளர்ச்சி குறிப்பிட்ட அளவில் ஏற் படும்; சர்வதேச ஆதரவு சிறிது சிறிதாக அதிகரிக்கும்; நிலைமை முழுவதும் இப்போதுள்ளதிலிருந்து மிக வேறுபட்டதாயிருக் கும். இந்த இரண்டாவது கட்டம் கணிசமானளவு நீண்ட காலம் நீடிக்கக் கூடும்; இக்காலத்தில் சீனு சிறிது சிறிதாக உயர் வதும் ஜப்பான் சிறிது சிறிதாகத் தாழ்வதுமாக, எதிரிக்கும் எமக்குமிடை சக்திகளின் பலாபலத்தில் நேர்மாறுன பெரும் மாற்றம் ஏற்படும். சீனு அதன் தாழ்ந்த நிலையிலிருந்து மீளும், ஜப்பான் அதன் உயர்ந்த நிலையை இழக்கும்; முதலில் இரு நாடு களும் சமமான பலமுடையவையாக ஆகும், பின்னர் அவற்றின் சக்திகளின் பலாபலத்தில் மறுபுறமாகத் திருப்பம் ஏற்படும். அதன் மேல் சீனு பொதுவாக யுத்ததந்திர ரீதியான எதிர்த் தாக்குதலுக்கான அதன் தயாரிப்புகளைப் பூர்த்தியாக்கிக் கொண்டு, எதிர்த்தாக்குதலினதும் எதிரியைச் சீனுவிலிருந்து வெளியேற்றுவதினதும் கட்டத்திற்குள் பிரவேசிக்கும். தாழ் விலிருந்து உயர்வுக்கு மாறுவதும் எதிர்த்தாக்குதலுக்கான தயா ரிப்புகளைப் பூர்த்தி செய்வதும் மூன்று காரியங்களை, அதாவது, சீனுவின் சொந்தப் பலத்தின் அதிகரிப்பு, ஜப்பானின் கஷ் டங்களின் அதிகரிப்பு, சர்வதேச ஆதரவின் அதிகரிப்பு ஆகி யவற்றை உள்ளடக்கும் என்பது மீண்டும் வலியுறுத்தப்பட வேண்டும்; இச்சக்திகள் அனைத்தினதும் சேர்க்கை சீனுவின்

உயர்ச்சியையும் எதிர்த்தாக்குதலுக்கான அதன் தயாரிப்புகளின் பூர்த்தியையும் கொண்டுவரும்.

44. சீனுவின் அரசியல், பொருளாதார அபிவிருத்தியின் ஏற்றத்தாழ்வு காரணமாக மூன்ருவது கட்டத்தின் யுத்ததந்திர ரீதியான எதிர்த்தாக்குதல் அதன் முதற் பகுதியில் நாடு பூராவிலும் ஒரே சீரான, சமமான தோற்றத்தை அளிக்காது, மாருக இங்கு உயர்ந்தும் அங்கு தாழ்ந்தும் பிரதேசவாரியான இயல்புடையதாயிருக்கும். இந்தக் கட்டத்தின் போது எதிரி சீனுவின் ஐக்கிய முன்னணியைத் தகர்ப்பதற்கான அவனது பிளவுபடுத்தும் தந்திரங்களைத் தளர்த்த மாட்டான்; எனவே சீனுவில் உள்நாட்டு ஐக்கியத்தை நிலேத்து வைத்திருக்கும் பணி அதிக முக்கியமானதாகும், நாம் யுத்ததந்திர ரீதியான எதிர்த்தாக்குதல் உள்பூசல் காரணமாக இடைவழியில் தகர்ந்துவிடாதிருக்கப் பார்த்துக்கொள்ள வேண்டியிருக்கும். இந்தக் காலகட்டத்தில் சர்வதேச நிலேமை சீனுவிற்கு மிகச் சாதகமானதாக ஆகும். சீனுவின் பணி பூரண விடுதலேயை அடையவும் ஒரு சுதந்திர, ஜனநாயக அரசை ஸ்தாபிக்கவும் வேண்டி, இதைப் பூரணமாகப் பயன்படுத்திக் கொள்வதாக இருக்கும், அதுவே இதேவேளேயில் உலக பாஸிஸ-எதிர்ப்பு இயக்கத்திற்கு உதவி செய்வதாகவும் இருக்கும்.

45. சீனு தாழ்விலிருந்து சமன்பாட்டுக்கும் பின்னர் உயர்விற்கும் செல்வது, ஜப்பான் உயர்விலிருந்து சமன்பாட்டுக்கும் பின்னர் தாழ்விற்கும் செல்வது; சீனு தற்காப்பிலிருந்து சமநிலேக்கும் பின்னர் எதிர்த்தாக்குதலுக்கும் செல்வது, ஜப்பான் தாக்குதலிலிருந்து தான் பெற்ற வெற்றிகளேப் பாதுகாப்பதற்கும் பின்னர் பின்வாங்குதலுக்கும் நகர்வது — சீன-

ஜப்பானிய யுத்தத்தின் போக்கும் அதன் தவிர்க்க முடியாத முடிவும் இவ்வாறுதான் இருக்கும்.

46. எனவே, பிரச்சினைகளும் முடிவுகளும் பின்வருமாறு: சீனு அடிமைப்படுத்தப்படுமா? இல்லை, அது அடிமைப்படுத்தப் பட மாட்டாது, மாருக இறுதி வெற்றியை ஈட்டும் என்பதே பதில். சீனு விரைவாக வெற்றியீட்ட முடியுமா? இல்லை, அது விரைவாக வெற்றியீட்ட முடியாது, யுத்தம் நீண்ட ஒன்ருகவே இருந்தாக வேண்டும் என்பதே பதில். இந்த முடிவுகள் சரி யானவையா? சரியானவை என்றே நான் நினைக்கின்றேன்.

47. இதைப்பற்றிப் பேசும் போது, தேசிய அடிமைப்பாட்டி னதும் சமரசத்தினதும் பிரச்சாரகர்கள் மீண்டும் ஓடிவந்து, ''தாழ்விலிருந்து சமநிலைக்குச் செல்வதற்குச் சீனுவுக்கு ஜப்பா னுடையதளவான ராணுவ, பொருளாதார வலிமை தேவை; சமநிலையிலிருந்து உயர்ச்சிக்குச் செல்வதற்கு அதற்கு ஜப்பானு டையதைவிடக் கூடுதலான ராணுவ, பொருளாதார வலிமை தேவைப்படும். ஆனுல் இது அசாத்தியம், எனவே மேற்படி முடிவுகள் சரியானவையல்ல'' என்பர்.

48. இது ''ஆயுதங்களே அனைத்தையும் நிர்ணயிக்கின்றன என்ற தத்துவம்''[16] ஆகும். யுத்தமாகிய பிரச்சினைக்கு யாந் திரிகமான ஒரு அணுகுமுறையும் அகநிலைப்பட்டதும் ஒருதலைப் பட்சமானதுமான ஒரு கருத்துமாகும். எமது கருத்து இதற்கு எதிரானது. நாம் ஆயுதங்களை மட்டுமல்ல, மனிதர்களையும் காண்கிருேம். யுத்தத்தில் ஆயுதங்கள் ஒரு முக்கியமான அம் சம்; ஆனுற் தீர்க்கமான அம்சம் அல்ல. தீர்க்கமான அம்சம் மக்கள் அன்றிப் பொருட்கள் அல்ல. பலப்போட்டி என்பது ராணுவ பலம், பொருளாதார பலம் இவற்றின் போட்டி மாத்திரமல்ல, மனித பலம், ஆத்மீக பலம் இவற்றின் போட்டி

யுமாகும். ராணுவ, பொருளாதார பலங்கள் மக்களாற் தான் ஓச்சப்படுகின்றன. சீனர்களிலும் ஐப்பானியர்களிலும் பிற நாடுகளின் மக்களிலும் மிகுந்த பெரும்பான்மையினர் எமது ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தத்தின் பக்கம் நின்ருல், மிகச் சிறுபான்மையினரால் பலாத்காரமாக எடுத்தாளப்படுவதான ஜப்பானின் ராணுவ, பொருளாதார பலம் எவ்வாறு உயர்ச்சி யெனக் கொள்ளப்பட முடியும்? முடியாதென்ருல், அப்போது ஒப்புநோக்காகத் தாழ்வான ராணுவ, பொருளாதார பலத் தையே கொண்டதெனினும் சீஞ உயர்வானதாகாதா? சீஞ பதிற்தாக்குதல் யுத்தத்திலும் ஐக்கிய முன்னணியிலும் விடாப் பிடியாயிருக்கும் பட்சத்தில் அது ராணுவ, பொருளாதார வலிமையில் சிறிது சிறிதாக வளரும் என்பதில் ஐயமில்லை. எமது எதிரியைப் பொறுத்தவரையில் அவன் நீண்ட யுத்தத்தா லும் உள், வெளி முரண்பாடுகளாலும் பலவீனப்படுத்தப்படப் போவதால் அவனது ராணுவ, பொருளாதார வலிமை நேர் மாருன திசையில் மாற்றமடைந்தே தீரும். இந்தச் சூழ்நிலை களில், சீஞ உயர்வானதாக ஆக முடியாது போகக் காரணம் ஏதும் இருக்கின்றதா? இவ்வளவு மட்டுமல்ல எம்மால் இன்னும் பிற நாடுகளின் ராணுவ, பொருளாதார வலிமையை வெளிப் படையாகவும் பெரிய அளவிலும் எம் பக்கம் உள்ளதாகக் கணக்கிட இயலாதபோதும், நாம் எதிர்காலத்திலும் அவ் வாறு கணக்கிட இயலாமற் போக எந்தக் காரணமும் இருக்கின் றதா? ஜப்பானின் எதிரி ஆகச் சீஞ மட்டுமல்லாவிடில், எதிர் காலத்திற் பிற நாடு ஒன்ருே பலவோ தம் கணிசமான ராணுவ, பொருளாதார வலிமையை ஜப்பானுக்கு எதிராகத் தற்காப் பாகவோ தாக்குதலாகவோ வெளிப்படையாக உபயோகப்ப டுத்தி, எமக்கும் வெளிப்படையாக உதவிஞல், அப்போது எமது

உயர்வு இன்னும் அதிகமாயிருக்காதா? ஜப்பான் ஒரு சிறு நாடு, அதன் யுத்தம் பிற்போக்கானதும் மிலேச்சத்தனமானதும், அது சர்வதேச ரீதியில் வர வர அதிகமாகத் தனிமைப்படும்; சீனு ஒரு பெரிய நாடு, அதன் யுத்தம் முற்போக்கானதும் நியாயமானதும், அது சர்வதேச ரீதியில் வர வர அதிக ஆதரவைப் பெறும். இந்த அம்சங்களின் நீண்டகால அபிவிருத்தி எதிரிக்கும் எமக்குமிடையிலான ஒப்புநோக்கான நிலையைத் திட்டவட்டமாக மாற்றுது போகக் காரணம் ஏதும் இருக்கின்றதா?

49. இருப்பினும், விரைவான வெற்றியின் பிரசாரகர்கள் யுத்தம் ஒரு பலப்போட்டி என்பதையும், யுத்தம் செய்யும் தரப்புகளின் சக்திகளின் பலாபலத்தில் ஒரு குறிப்பிட்ட மாற்றம் நிகழ்வதற்கு முன் யுத்ததந்திர ரீதியிற் தீர்க்கமான போர்கள் செய்யவும் விடுதலைக்கான பாதையைக் குறுக்கவும் முயல்வதற்கு அடிப்படையெதுவும் கிடையாது என்பதையும் உணர்கின்றனரில்லை. அவர்களின் கருத்துக்களின்படி செயல்பட்டால் நாம் தவிர்க்க முடியாதபடி எம் தலைகளைக் கற்சுவரில் முட்டிக் கொள்வோம். அல்லது ஒரு வேளை அவர்கள் தங்கள் கருத்துக்களை உண்மையில் நடைமுறையிலிடக் கருதாமல் வெறுமனே தங்கள் சொந்தச் சந்தோஷத்திற்காகப் பேசிக் கொண்டிருக்கிறார்களாக இருக்கலாம். கடைசியில் திருவாளர் உண்மை வந்து இந்தப் பேச்சு வீரர்கள் தலையில் தண்ணீரைக் கொட்டி, இவர்களை லேசாகக் காரியங்கள் செய்யவும், உடம்பு நோகாமல் பயன் பெறவும் விரும்புகின்ற வெற்றுப் பேச்சு வீரர் என காட்டுவார். இத்தகைய வெற்றுப் பேச்சு முன்பும் இருந்தது, இப்போதும் இருக்கின்றது; ஆனுலும் இதுவரை அவ்வளவு அதிகமாக இல்லை. ஆனுல் யுத்தம் தேக்கநிலைக் கட்

டத்திற்கும் பின்னர் எதிர்த்தாக்குதல் கட்டத்திற்கும் விருத்தி யடையும் போது அதிக வெற்றுப் பேச்செழலாம். ஆனால் இதற் கிடையில் முதலாவது கட்டத்தில் சீனவின் நஷ்டங்கள் கணி சமாகப் பெரிதாயிருந்து, இரண்டாவது கட்டமும் மிக நீண்ட காலம் இழுபட்டால், தேசிய அடிமைப்பாட்டு, சமரசத் தத்து வங்கள் மிகப் பரவலாகும். ஆகவே எமது தாக்குதல் பிரதான மாக இத்தத்துவங்களுக்கு எதிராயும், இரண்டாம் பட்சமாக மட்டுமே விரைவான வெற்றி பற்றிய வெற்றுப் பேச்சுக்கு எதிராயும் செலுத்தப்பட வேண்டும்.

50. யுத்தம் நீண்டதாயிருக்கும் என்பது நிச்சயம், ஆனல் அது சரியாக எத்தனை மாதங்கள் அல்லது வருடங்கள் நீடிக்கும் என்பது முற்றுகச் சக்திகள் பலாபலத்திலான மாற்றத்தின் அளவிற் தங்கியிருக்குமாகையால் இதை எவரும் முன்னறிந்து கூறமுடியாது. யுத்தத்தின் காலத்தைக் குறுக்க விரும்பும் அனைவருக்கும் எம் சொந்தப் பலத்தை அதிகரிக்கவும் எதிரி யின் பலத்தைக் குறைக்கவும் கடுமையாகப் பாடுபடுவதைத் தவிர வேறுவழி கிடையாது. குறிப்பாகக் கூறினல், உள்ள ஒரே வழி கூடுதலான போர்களை வென்று எதிரியின் படை களைத் தேய்த்து ஒழிக்கவும் கொரில்லா யுத்தத்தை விருத்தி செய்து, எதிரி கைப்பற்றியிருக்கும் பிரதேசத்தை ஆகக் குறைந் தபட்சத்திற்குக் குறைக்கவும், ஐக்கிய முன்னணியை ஸ்திரப் படுத்தியும் விரிவுபடுத்தியும் முழு நாட்டினதும் சக்திகளைத் திரட்டவும், புதிய சேனைகளைக் கட்டிவளர்க்கவும் புதிய ராணுவத் தொழில்களை விருத்தி செய்யவும், அரசியல், பொரு ளாதார, கலாசார முன்னேற்றத்தைத் தூண்டவும், தொழி லாளர்களையும் விவசாயிகளையும் வர்த்தகர்களையும் புத்திஜீவி களையும் மக்களின் பிற பிரிவுகளையும் அணிதிரட்டவும், எதிரிப்

படைகளைச் சிதைவுறச் செய்து அவற்றின் வீரர்களை எம் பக்கம் வென்றெடுக்கவும், அந்நிய ஆதரவைப் பெறச் சர்வதேசப் பிரசாரம் நடத்தவும், ஜப்பானிய மக்களினதும் பிற ஒடுக்கப்பட்ட மக்களினதும் ஆதரவை வென்றெடுக்கவும் முயல்வதே. இவை அனைத்தையும் செய்வதன் மூலம் மட்டுமே நாம் யுத்தத்தின் காலத்தைக் குறுக்க முடியும். மாயக் குறுக்கு வழி எதுவும் கிடையாது.

## திருகுவாள் வடிவிலான யுத்தம்

**51.** நீண்டகால ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தம் மனிதகுலத்தின் யுத்த வரலாற்றிலேயே அலாதியான ஒரு உன்னத அத்தியாயத்தைப் பொறிக்குமென நாம் திடமாகக் கூறலாம். திருகுவாள் வடிவம் இந்த யுத்தத்தின் விசேஷ குணம்சங்களில் ஒன்று. இது ஒருபுறம் ஜப்பானின் மிலேச்சத்தனமும் அதன் துருப்புக்கள் பற்றாக்குறையும், மறுபுறம் சீனாவின் முற்போக்குத் தன்மையும் அதன் பிரதேசத்தின் விசாலத்தன்மையும் போன்ற முரண்பாடான அம்சங்களினின்றும் பிறக்கின்றது. வரலாற்றில் திருகுவாள் வடிவிலான யுத்தங்கள் பிற இருந்தன; ஒரு உதாரணம் ரஷ்யாவில் அக்டோபர் புரட்சியின் பின்பான மூன்றாண்டு கால உள்நாட்டு யுத்தம். ஆனால் சீனாவிலான இந்த யுத்தத்தை மற்றவற்றினின்றும் வேறாக்குவது என்னவெனில் வரலாற்றிலேயே காணாததாகவிருக்கும் அதன் மிக நீண்டதும் விரிவானதுமான இயல்பாகும். அதன் திருகுவாள் வடிவம் பின்வருமாறு வெளிப்பாடடைகிறது.

52. உட்புற முனைகளும் வெளிப்புற முனைகளும். முழுமையாக ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தம் உட்புற முனைகளில் நடத்தப்படுகின்றது; ஆனால் பிரதான படைகளுக்கும் கொரில்லாப் படைகளுக்கும் இடையிலான உறவு சம்பந்தப்பட்டவரை, முன்னையவை உட்புற முனைகளிலும் பின்னையவை வெளிப்புற முனைகளிலும் இயங்கி, எதிரியைச் சுற்றி கொடுக்குகளாக வளைப்பதான வியக்கத்தக்க காட்சியைத் தருகின்றன. பல்வேறு கொரில்லாப் பிராந்தியங்களுக்குமிடையிலான உறவைப் பற்றியும் இவ்வாறே கூறலாம். ஒவ்வொரு கொரில்லாப் பிராந்தியமும் தன் சொந்தப் பகுதியை உட்புற முனையாகவும் ஏனையவற்றை வெளிப்புற முனையாகவும் கொள்ளுகின்றது, அவை எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து, எதிரியைக் கொடுக்குகளிலிடுக்கி வைத்திருக்கும் பல போர் முனைகளாக அமைகின்றன. யுத்தத்தின் முதற் கட்டத்தில், யுத்ததந்திர ரீதியில் உட்புற முனைகளில் இயங்குகின்ற கிரமமான சேனை வாபஸாகிறது, ஆனால் யுத்ததந்திர ரீதியில் வெளிப்புற முனைகளில் இயங்கும் கொரில்லாப் படைகள் பெரும் அடிகளெடுத்து விசாலப் பிரதேசங்களைக் கடந்து எதிரியின் பின்புறத்திற்கு முன்னேறி — இரண்டாவது கட்டத்தில் அவை இன்னும் அதிக உக்கிரத்துடன் முன்னேறும் — அவ்வாறாக வாபஸாவதும் முன்னேறுவதுமான ஒரு வியக்கத்தக்க காட்சியைத் தரும்.

53. பின்னணிப் பிரதேசமொன்றைக் கொண்டிருப்பதும் இல்லாதிருப்பதும். நாடு முழுமையினதும் பின்னணிப் பிரதேசத்தைக் கொண்டு போர் முனைகளை எதிரியின் கைப்பற்றிய பகுதியின் வெளி அந்தங்கள் வரை விரிவாக்குகின்றன, பிரதான படைகள். நாடு முழுமையினதும் பின்னணிப் பிரதேசத்திலிருந்து பிரிந்திருந்து போர் முனைகளை எதிரியின் பின்னணிப் பிர

தேசத்துக்கு உள்ளே விரிவடையச் செய்கின்றன, கொரில்லாப் படைகள். ஆனால் ஒவ்வொரு கொரில்லாப் பிராந்தியத்துக்கும் அதனதன் சிறிய பின்னணிப் பிரதேசமொன்று உள்ளது. அதிற் தங்கிநின்று அது தன் சலனமுறும் போர்முனைகளை ஆக்கிக் கொள்கின்றது. கொரில்லாப் பிராந்தியமொன்றால் அதே பகுதியில் எதிரியின் பின்புறத்தில் குறுகியகால நடவடிக்கைக ளுக்காக அனுப்பப்படும் கொரில்லாப் படைப்பிரிவுகளின் விஷ யம் வேறு; இத்தகைய படைப்பிரிவுகளுக்குப் பின்னணிப் பிர தேசம் கிடையாது, அன்றிப் போர்முனையொன்றும் கிடை யாது. ''பின்னணிப் பிரதேசமொன்று இல்லாமல் போரிடு வது'' புதிய சகாப்தத்தில் விசாலப் பிரதேசமும் முற்போக்கான மக்களும் முன்னேறிய ஒரு அரசியல் கட்சியும் சேனையும் உள்ள நிலைமையிலான புரட்சிகர யுத்தத்தின் ஒரு விசேஷ குணும்சமா கும்; இதிற் பயப்பட எதுவுமில்லை, மாறாகப் பயன் பெருமளவு உள்ளது, இது பற்றி ஐயங்கள் கொள்வதற்கு நேர்மாறாக நாம் இதை ஆதரிக்க வேண்டும்.

54. சுற்றிவளைப்பும் எதிர்ச் சுற்றிவளைப்பும். யுத்தத்தை முழு மையாக எடுத்துக்கொண்டால், எதிரி யுத்ததந்திர ரீதியான தாக்குதலில் ஈடுபட்டும் வெளிப்புற முனைகளில் இயங்கிக் கொண்டுமிருக்கையில் நாம் யுத்ததந்திர ரீதியான தற்காப்பில் ஈடுபட்டும் உட்புற முனைகளில் இயங்கிக் கொண்டுமிருக்கின்றோ மாகையால், நாம் எதிரியால் யுத்ததந்திர ரீதியாகச் சுற்றி வளைக்கப்பட்டிருக்கிறோம் என்பதில் எந்த ஐயமுமில்லை. இதுவே எதிரிச் சுற்றிவளைப்பின் முதலாவது வடிவம். நாம் யுத்ததந்திர ரீதியாக வெளிப்புற முனைகளிலிருந்து எம் மீது படையெடுத்துத் தனித் தனியாக முன்னேறும் எதிரி வியூகங்களுக்கெதிராக எண் ணிக்கையில் மேம்பாடான படைகளை உபயோகிப்பதன் மூலம்

போரியக்கங்களையும் சமர்களையும் தந்திரோபாய ரீதியாக வெளிப்புற முனைகளில் நடத்தும் கொள்கையைக் கடைப்பிடிக்கிறோமாகையால், நாம் இத்தகைய எதிரி வியூகங்களில் ஒன்றையோ அதற்கு மேற்பட்டவற்றையோ சுற்றிவளைக்க முடியும். இதுவே எதிரிக்கெதிராக நாம் செய்யும் எதிர்ச் சுற்றிவளைப்பின் முதல் வடிவம். அடுத்து, நாம் எதிரியின் பின்புறத்திலான கொரில்லாத் தளப்பிரதேசங்களை எடுத்துக் கொள்ளுவோமானால் ஒவ்வொரு தளப்பிரதேசமும், தனித்தனியாக எடுத்துக்கொள்ளப்படுகையில் வூதை மலைப் பகுதியைப் போல் எல்லாப் பக்கங்களிலுமோ, அல்லது, வடமேற்கு ஷன்சி பகுதியைப் போல் மூன்று பக்கங்களிலோ, எதிரியால் சுற்றிவளைக்கப்பட்டுள்ளது. இது எமக்கு எதிரான எதிரியின் சுற்றிவளைப்பின் இரண்டாவது வடிவம். இருப்பினும் எல்லாக் கொரில்லாத் தளப்பிரதேசங்களையும் ஒருங்கேயும், கிரமமான படைகளின் ஸ்தானங்களுடனுன அவற்றின் சம்பந்தத்திலும் எடுத்துக் கொண்டால், நாமும் பெருந்தொகையான எதிரிப் படைகளைச் சுற்றிவளைத்திருக்கின்றோம் என்பதைக் காண முடியும். உதாரணமாக ஷன்சி மாகாணத்தில் நாம் தாதொங்-பூசௌ புகையிரத மார்க்கத்தை மூன்று பக்கங்களிலும் (கிழக்கு, மேற்குப் பக்கவாடுகளிலும் தெற்கு அந்தத்திலும்), தையுவான் நகரை எல்லாப் பக்கங்களிலும் சுற்றிவளைத்துள்ளோம்; ஹோபெய், ஷன்துங் மாகாணங்களிலும் இத்தகைய பல உதாரணங்கள் உள்ளன. இதுவே எதிரிக்கெதிராக நாம் செய்யும் எதிர்ச் சுற்றிவளைப்பின் இரண்டாவது வடிவம். இவ்வாறுக எதிரிப் படைகளின் சுற்றிவளைப்பின் வடிவங்களிரண்டும் எமது படைகளின் சுற்றிவளைப்பின் வடிவங்களிரண்டும் — பொதுவாக ஒரு வெய்சி ஆட்டத்தைப் போல் — உள்ளன. இரு

தரப்புகளாலும் நடத்தப்படும் போரியக்கங்களும் சமர்களும் ஒருவர் மற்றவரின் காய்களைப் பிடிப்பதை ஒத்திருக்கின்றன, எதிரிக் கொத்தளங்களும் (தையுவான் போன்றவை) எமது கொரில்லாத் தளப்பிரதேசங்களும் (வூதை மலைகள் போன்றவை) ஸ்தாபிக்கப்படுவது ஆட்டப்பலகையில் கட்டங்களை ஆதிக்கம் செய்ய நகர்வதைப் போன்றிருக்கின்றது. வெய்சி ஆட்டம் உலகை உள்ளடக்குவதாக விஸ்தரிக்கப்பட்டால், எமக்கும் எதிரிக்குமிடையில் மூன்ருவதொரு வடிவான சுற்றிவளைப்பும், அதாவது, ஆக்கிரமிப்பு முன்னணிக்கும் சமாதான முன்னணிக்கும் இடையிலான சம்பந்தா சம்பந்தமும் இருக்கும். எதிரி தனது ஆக்கிரமிப்பு முன்னணியைக் கொண்டு சீனுவையும் சோவியத் யூனியனையும் பிரான்ஸையும் செக்கோஸ்லாவாக்கியாவையும் சுற்றிவளைத்திருக்கையில், நாம் எமது சமாதான முன்னணியைக் கொண்டு ஜெர்மனியையும் ஜப்பானையும் இத்தாலியையும் பதிலுக்குச் சுற்றிவளைத்திருக்கிருேம். ஆனுல் எமது சுற்றிவளைப்பு புத்தரின் கையைப் போல் அண்டத்தில் விரிந்து கிடக்கும் பஞ்சபூத மலைகளாக மாறும், நவீன ஸுன் வூ-குங்களான பாஸிஸ ஆக்கிரமிப்பாளர்கள் ஒருபோதும் திரும்ப எழுந்திராதபடி அதன் கீழ் இறுதியாகப் புதைபடுவர்.[17] ஆகவே, சர்வதேச மட்டத்தில் எம்மால் சீனுவை யுத்ததந்திர ரீதியான ஒரு கூருகவும் சோவியத் யூனியனையும் அதிற் சேரக்கூடிய பிற நாடுகளையும் யுத்ததந்திர ரீதியான பிற கூறுகளாகவும் ஜப்பானிய மக்களின் இயக்கத்தை இன்னும் ஒரு கூருகவும் கொண்டு பசிபிக் பிராந்தியத்தில் ஜப்பானிய-எதிர்ப்பு ஐக்கிய முன்னணியொன்றை சிருஷ்டிக்கவும் அவ்வாருகப் பாஸிஸ ஸுன் வூ-குங்கள் தப்பிக்க முடியாத ஒரு பிரமாண்டமான வலையை விரிக்கவும் முடிந்தால், அது எமது எதிரியின்

கதி நாசத் தினமாக இருக்கும். உண்மையில் இந்தப் பிரமாண்டமான வலை கிட்டத்தட்ட விரிக்கப்படும் தினம் ஐயத்திற்கிடமின்றி ஜப்பானிய ஏகாதிபத்தியம் முற்றுக வீழ்த்தப்படும் தினமாக இருக்கும். நாம் வேடிக்கை செய்யவில்லை; இதுதான் யுத்தத்தின் தவிர்க்க முடியாத போக்கு.

55. பெரிய பகுதிகளும் சிறிய பகுதிகளும். எதிரி பெருஞ்சுவருக்குத் தெற்கிலான சீனப் பிரதேசத்தில் பெரும் பகுதியைப் பிடித்துவிடுவதும், சிறிய பகுதியே வீழாமல் வைத்திருக்கப்படுவதுமான சாத்தியக்கூறென்று உள்ளது. இது நிலைமையின் ஒரு அம்சம். ஆனால் வட கிழக்கு மாகாணங்கள் மூன்றையும் உள்ளடக்காத இந்தப் பெரும் பகுதிக்குள்ளே எதிரியால் பெரிய நகரங்களையும் பிரதான தொடர்பு மார்க்கங்களையும் சமவெளிகளிற் சிலவற்றையும் மட்டுமே உண்மையாகக் கைப்பற்றிவைத்திருக்க இயலும் — இவை முக்கியத்துவத்தில் முதன்மை வகிக்கலாம், ஆனால் அனேகமாக அளவிலும் ஜனத்தொகையிலும் கைப்பற்றப்பட்ட பகுதிகளில் சிறிய பாகத்தையே ஆக்கும், பெரிய பாகமோ எங்கும் வளரப்போகும் கொரில்லாப் பகுதிகளால் எடுக்கப்பட்டுவிடும். இது நிலைமையின் மற்றொரு அம்சம். நாம் பெருஞ்சுவருக்குத் தெற்கிலான மாகாணங்களுக்கு அப்பாலும் சென்று மொங்கோலியாவையும் ஸின்கியாங்கையும் சிங்ஹாயையும் திபெத்தையும் சேர்த்து எடுத்துக்கொள்ளுவோமானால் அப்போது சீனவின் பிரதேசத்தில் இடங்கொள்ளப்படாத பகுதி பெரும் பகுதியாக இருக்கும், வட கிழக்கு மாகாணங்கள் மூன்றையும் சேர்த்தும் கூடக் கைப்பற்றப்பட்ட பகுதி சிறிய பகுதியாகவே இருக்கும். இது நிலைமையின் இன்னுமொரு அம்சம். வீழாமல் வைத்திருக்கப்படும் பகுதி ஐயத்திற்கிடமின்றி முக்கியமானது,

அதை அரசியல், ராணுவ, பொருளாதார் ரீதிகளில் மட்டு மல்லாமல், அதுவும் முக்கியமானதேயான கலாசார ரீதியிலும் அபிவிருத்தி செய்வதற்கு நாம் பெரும் பிரயத்தனங்கள் எடுக்க வேண்டும். எதிரி எமது முன்னைய கலாசார மையங்களைக் கலாசார ரீதியில் பின்னடைந்த பகுதிகளாக மாற்றிவிட்டான், நாமோ முன்னர் கலாசார ரீதியில் பின்தங்கியிருந்த பகுதி களைக் கலாசார மையங்களாக மாற்ற வேண்டும். அதே நேரத்தில் எதிரி அணிகளுக்குப் பின்னால் விசாலமான கொரில் லாப் பகுதிகளை விருத்தி செய்யும் வேலையும் முக்கியமானது, நாம் கலாசாரத்துறை உள்ளிட்ட அவற்றின் சகல துறை களினதும் வளர்ச்சியில் கவனம் செலுத்த வேண்டும். மொத் தத்தில், சீனாவின் பிரதேசத்தின் பெரிய துண்டுகள், அதாவது, கிராமியப் பகுதிகள், முன்னேற்றமும் ஒளியும் உடைய பிர தேசங்களாக மாற்றப்படுகையில், சிறு துண்டுகள், அதாவது எதிரி கைப்பற்றிய பகுதிகளும் விசேஷமாக, பெரிய நகரங் களும், தற்காலிகமாகப் பின்னடைவினதும் இருளினதும் பிர தேசங்களாக ஆகும்.

56. இவ்வாறாக, நீண்டதும் பரந்துவிரிந்ததுமான ஜப்பா னிய-எதிர்ப்பு யுத்தம் ராணுவ, அரசியல், பொருளாதார, கலாசார ரீதிகளில் திருகுவாள் வடிவிலான ஒரு யுத்தம் என் பதைக் காணமுடிகிறது. இது யுத்தத்தின் வரலாற்றில் அற் புதமான ஒரு நிகழ்ச்சி, சீன தேசத்தின் வீரமிக்க ஒரு முயற்சி, உலகையே அசைக்கின்ற ஒரு மகத்தான சாதனை. இந்த யுத்தம் சீனா, ஜப்பான் இரண்டையும் முன்னேறும்படி பலமாக உந்திப் பாதிக்கப் போவது மட்டுமல்லாமல், எல்லாத் தேசங் களையும் முதன்முதலாக இந்தியாவைப் போன்ற ஒடுக்கப்பட்ட தேசங்களையும் முன்னோக்கி நடக்கும்படி உந்தி, உலகம் முழு

வதையும் பாதிக்கவும் போகிறது. ஒவ்வொரு சீன மகனும் உணர்வுபூர்வமாக இந்த திருகுவாள் வடிவிலான யுத்தத்தில் குதிக்க வேண்டும், ஏனெனில் இதுவே சீன தேசம் தன்னை விடுதலையாக்கிக் கொள்ளும் யுத்த வடிவம், பெரிய அரைக் காலனித்துவ நாடொன்றால் 20வது நூற்றாண்டின் முப்பதாம், நாற்பதாம் ஆண்டுகளில் நடத்தப்படும் விடுதலை யுத்தத்தின் விசேஷ வடிவம் ஆகும்.

## நிரந்தரச் சமாதானத்திற்காகப் போரிடுவது

57. சீனாவின் ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தத்தின் நீண்டதன்மை சீனாவிலும் முழு உலகிலும் நிரந்தரச் சமாதானத்துக்கான போராட்டத்துடன் பிரிக்கமுடியாதபடி தொடர்பு பட்டது. யுத்தம் நிரந்தரச் சமாதானத்திற்கு இவ்வளவு நெருங்கியிருக்கும் தற்போதைப் போன்ற வரலாற்றுக் காலகட்டமொன்று என்றுமே இருந்ததில்லை. வர்க்கங்கள் தோன்றியதிலிருந்து பல்லாயிரம் ஆண்டுகளாக மனிதகுலத்தின் வாழ்வு யுத்தங்கள் நிரம்பியதாக இருந்துவந்துள்ளது; ஒவ்வொரு தேசமும் ஒன்றில் உள்ளுக்குள்ளோ அல்லது பிற தேசங்களுடனோ எண்ணிலடங்காத யுத்தங்களை நடத்தியுள்ளது. முதலாளித்துவ சமுதாயத்தின் ஏகாதிபத்திய சகாப்தத்தில் யுத்தங்கள் குறிப்பாக விசாலமான ரீதியிலும் அலாதியான ஒரு குரூரத்துடனும் நடத்தப்படுகின்றன. இருபதாண்டுகளுக்கு முன்பான முதலாவது ஏகாதிபத்திய மகா யுத்தம் வரலாற்றிலேயே முன்னுதாரணமற்றது, ஆனால் கடைசியல்ல. இப்போது தொடங்கி

யுள்ள யுத்தம் மட்டுமே கடைசி யுத்தமாக இருப்பதற்குக் கிட்ட வருகிறது, அதாவது மனிதகுலத்தின் நிரந்தரச் சமாதானத் திற்குக் கிட்ட வருகிறது. இப்போதளவில் உலக ஜனத் தொகையில் மூன்றிலொன்று யுத்தத்தில் பிரவேசித்துவிட்டது. பாருங்கள்! இத்தாலி, பின்னர் ஜப்பான்; அபிஸினியா, பின் னர் ஸ்பெயின், பின்னர் சீனு. யுத்தத்திலீடுபட்டுள்ள நாடு களின் ஜனத்தொகை இப்போது கிட்டத்தட்ட 60 கோடிக்கு, அல்லது உலகின் மொத்த ஜனத்தொகையில் கிட்டத்தட்ட மூன்றில் ஒன்றிற்கு வருகிறது. தற்போதைய யுத்தத்தின் குணதிசயங்கள் அதன் இடையீடற்ற தன்மையும் நிரந்தரச் சமாதானத்தை அது அண்மி வருவதுமாகும். இது ஏன் இடை யீடற்றதாக இருக்கிறது? அபிஸினியாவைத் தாக்கிய பின் இத்தாலி ஸ்பெயினைத் தாக்கியது, ஜெர்மனியும் சேர்ந்து கொண்டது; பின்னர் ஜப்பான் சீனுவைத் தாக்கியது. அடுத்து என்ன நடக்கும்? ஐயத்திற்கிடமின்றி, ஹிட்லர் பெரிய வல்லர சுகளுடன் போர் செய்வார். ''பாஸிஸமென்பது யுத்தம்''18, இது முற்றுக உண்மை. தற்போதைய யுத்தம் ஓர் உலக யுத்தமாக விருத்தியடைவதில் இடையீடெதுவும் இருக்காது; மனிதகுலத்தால் யுத்த விநாசத்தைத் தவிர்க்க இயலப் போவ தில்லே. அப்படியாயின் நாம் ஏன் தற்போதைய யுத்தம் நிரந் தரச் சமாதானத்திற்குக் கிட்டியதாக உள்ளது என்கிரும்? தற்போதைய யுத்தம் முதலாம் உலக யுத்தத்துடன் ஆரம்பித்த உலக முதலாளித்துவத்தின் பொது நெருக்கடியின் அபிவிருத் தியின் அடிப்படையில் ஏற்பட்டதாகும்; இந்தப் பொது நெருக் கடி முதலாளித்துவ நாடுகளேப் புதிய யுத்தமொன்றிற்குத் தள்ளுகிறது, அனைத்திற்கும் மேலாகப் பாஸிஸ நாடுகளேப் புதிய யுத்த துணிச்சல்வாத நடவடிக்கைகளுக்குத் தள்ளுகிறது. இந்த

யுத்தம் முதலாளித்துவத்தைக் காப்பாற்ருது, மாருக அதன் தகர்வைத் துரிதப்படுத்தும் என எம்மால் முன்னறிந்து கொள்ள முடிகிறது. இது இருபதாண்டுகளுக்கு முந்திய யுத்தத்தைவிட அளவில் பெரியதாயும் அதிகம் ஈவிரக்கமற்றதாயுமிருக்கும், எல்லாத் தேசங்களும் தவிர்க்கமுடியாதபடி இதற்குள் இழுப டும், இது நீண்ட காலம் இழுபடும், மனிதகுலம் பெரிதும் துன்புறும். ஆனல் சோவியத் யூனியன் இருப்பதும் உலக மக்களின் வளர்ந்துவரும் அரசியல் அறிவுணர்வும் காரணமாக ஐயத்திற்கிடமின்றி, இந்த யுத்தத்திலிருந்து எல்லா எதிர்ப் புரட்சிகர யுத்தங்களையும் எதிர்க்கும் பெரும் புரட்சிகர யுத் தங்கள் தோன்றி, அவ்வாருக இந்த யுத்தத்திற்கு நிரந்தரச் சமாதானத்திற்கான ஒரு போராட்டத்தின் தன்மையைக் கொடுக்கும். பின்னர் இன்னுமொரு யுத்த காலகட்டம் இருப் பதாலுைம் கூட, நிரந்தர உலக சமர்தானம் அதிக தூரத்தி லிராது. ஒருகால் மனிதகுலத்தில் முதலாளித்துவம் ஒழிக் கப்பட்டதும் நிரந்தரச் சமாதான சகாப்தம் வரும், அப்போது யுத்தம் தேவையே இராது. அப்போது சேனைகளோ, யுத்தக் கப்பல்களோ, ராணுவ விமானங்களோ, அன்றி விஷவாயுவோ தேவையே படாது. அதன் பின், என்றென்றைக்கும், மனி தகுலம் மீண்டும் ஒருபோதும் யுத்தத்தையே அறியாது, ஏற் கனவே தொடங்கிவிட்ட புரட்சிகர யுத்தங்கள் நிரந்தரச் சமா தானத்திற்கான யுத்தத்தின் ஒரு பகுதி. இரண்டும் சேர்ந்து 50 கோடிக்கு மேற்பட்ட ஜனத்தொகையைக் கொண்டவை யான சீனுவுக்கும் ஜப்பானுக்கும் இடையிலான யுத்தம் நிரந் தரச் சமாதானத்திற்கான இந்த யுத்தத்தில் ஒரு முக்கிய இடத் தைப் பெறும், அதினின்றும் சீன தேசத்தின் விடுதலையும் பிறக்கும். எதிர்காலத்தில் விடுதலையான நவ சீனு எதிர்காலத்

தின் விடுதலையான புது உலகினின்றும் பிரிக்க முடியாததாக இருக்கும். எனவே எமது ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தம் நிரந்தரச் சமாதானத்திற்கான ஒரு போராட்டமென்ற தன்மையைப் பெறுகிறது.

58. வரலாற்றிலுள்ள யுத்தங்கள் நீதியான யுத்தங்கள் அநீதியான யுத்தங்கள் என இரண்டு வகையாகப் பிரிக்கப்படுகின்றன. முற்போக்கான எல்லா யுத்தங்களும் நீதியானவை; முற்போக்கைத் தடுக்கும் எல்லா யுத்தங்களும் அநீதியானவை. கம்யூனிஸ்டுகளாகிய நாம் முற்போக்கைத் தடுக்கும் அநீதியான யுத்தங்கள் எல்லாவற்றையும் எதிர்க்கின்றோம். ஆனால், முற்போக்கான, நீதியான யுத்தங்களை நாம் எதிர்ப்பதில்லை. கம்யூனிஸ்டுகளாகிய நாம் நீதியான யுத்தங்களை எதிர்க்காதது மாத்திரமல்ல, அவற்றில் ஊக்கமாகப் பங்கும் பற்றுகின்றோம். அநீதியான யுத்தங்களைப் பொறுத்தவரையில், முதலாவது உலக மகா யுத்தம் ஒரு உதாரணமாகும். இதில் இரு தரப்பும் ஏகாதிபத்திய நலன்களுக்காகப் போரிட்டன. எனவே உலகக் கம்யூனிஸ்டுகள் அனைவரும் அந்த யுத்தத்தை உறுதியாக எதிர்த்தார்கள். இத்தகைய ஒரு யுத்தத்தை எதிர்க்கும் வழி, அது வெடித்தெழுவதற்கு முன், அதைத் தடுக்கச் சாத்தியமான அனைத்தையும் செய்வதே. அது ஒருகால் வெடித்ததும், சாத்தியமான போதெல்லாம் யுத்தத்தை யுத்தத்தால் எதிர்க்க வேண்டும்; அநீதியான யுத்தத்தை நீதியான யுத்தத்நால் எதிர்க்க வேண்டும். ஜப்பானின் யுத்தம் முன்னேற்றத்தைத் தடைசெய்கின்ற ஒரு அநீதியான யுத்தம், உலகின் மக்கள், ஜப்பானிய மக்களுட்பட அதை எதிர்க்க வேண்டும், எதிர்த்துக் கொண்டுமிருக்கின்றனர். எமது நாட்டில் மக்களும், அரசாங்கமும், கம்யூனிஸ்ட் கட்சியும், கோமிந்தாங்கும், எல்லாமே ஆக்

கிரமிப்பிற்கு எதிரான தேசிய புரட்சிகர யுத்தத்தில் நீதித் துவஜத்தை உயர்த்தியுள்ளனர். எமது யுத்தம் புனிதமானது, நீதியானது, முற்போக்கானது, அதன் நோக்கம் சமாதானம். எமது நோக்கம் ஆக ஒரு நாட்டிலல்ல, உலகமெங்கும் சமாதானத்தை நிலவச் செய்வதும், ஆகத் தற்காலிக சமாதானத்தையன்றி, நிரந்தரச் சமாதானத்தைப் பெறுவதுமாகும். இந்த நோக்கத்தை அடைவதற்கு நாம் ஜீவமரணப் போராட்டம் நடத்தவும் எந்தத் தியாகத்திற்கும் தயாராயிருக்கவும் இறுதி வரை விடாப்பிடியாக இருக்கவும் வேண்டும், ஒருபோதும் இலக்கை அடையமுன் நின்றுவிடக் கூடாது. நிரந்தரச் சமாதானமும் ஒளியும் நிறைந்த புதிய உலகமொன்றை அடைவதற்குத் தேவையான தியாகம் எத்தனை பெரிதானாலும் காலம் எத்தனை நீண்டதானாலும் அது ஏற்கனவே எம்முன் தெளிவாகத் தெரிகிறது. இந்த யுத்தத்தை நடத்துவதில் எமது நம்பிக்கை நாம் அடையப் பிரயாசைப்படும் நிரந்தரச் சமாதானமும் ஒளியும் நிறைந்த நவ சீனவையும் புதிய உலகையும் அடிப்படையாகக் கொண்டது. பாஸிஸமும் ஏகாதிபத்தியமும் யுத்தத்தைக் காலவரையின்றி நீடிக்க விரும்புகின்றன, ஆனல் நாம் அதற்கு அண்மிய எதிர்காலத்தில் முடிவுகட்ட விரும்புகின்றோம். மனிதகுலத்தின் மிகுந்த பெரும்பான்மையினர் இந்த நோக்கத்திற்காகத் தங்கள் அதீத பிரயத்தனங்களைச் செய்ய வேண்டும். சீனவின் 45 கோடி மக்கள் உலகின் ஜனத்தொகையில் காற்பங்கை ஆக்குகின்றனர், அவர்கள் தங்கள் ஒருமித்த பிரயாசைகளால் ஜப்பானிய ஏகாதிபத்தியத்தை வீழ்த்திச் சுதந்திரமும் சமத்துவமும் உள்ள நவ சீன ஒன்றைச் சிருஷ்டிப்பார்களானல் நிச்சயமாக அவர்கள் நிரந்தர உலக சமாதானத்திற்கான போராட்டத்திற்கு ஒரு பெரும் சேவையை ஆற்றுவர்.

இது வீண் நம்பிக்கையல்ல, ஏனெனில் உலகம் முழுவதும் அதன் சமூக, பொருளாதார அபிவிருத்திப் பாதையில் இந்தக் கட்டத்தை நெருங்கிக் கொண்டிருக்கின்றது, மனிதகுலத்தின் பெரும்பான்மையினர் ஒருமித்து முயலும் பட்சத்தில் எமது இலக்கு நிச்சயம் பல தசாப்தங்களின் காலத்தில் அடையப் பெறும்.

## யுத்தத்தில் மனிதனின் இயக்கப் பாத்திரம்

59. இதுவரை நாம் இந்த யுத்தம் ஏன் நீண்ட ஒரு யுத்தம் என்பதையும் இறுதி வெற்றி ஏன் சீனவினுடையதாக இருக்கும் என்பதையும் விளக்கியுள்ளோம். ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தம் எப்படி இருக்கும், அது எப்படி இருக்காது என்பதைப் பொதுவாகக் கூறியுள்ளோம். இனி நாம் என்ன செய்வது, என்ன செய்யக் கூடாது என்ற பிரச்சினைக்கு வருவோம். நீண்டகால யுத்தத்தை எவ்வாறு நடத்துவது? இறுதி வெற்றியை எவ்வாறு ஈட்டுவது? இவையே கீழே பதில் தரப்படும் பிரச்சினைகள். எனவே நாம் பின்வரும் பிரச்சினைகளை ஒன்றன் பின் ஒன்றாக விவாதிப்போம்: யுத்தத்தில் மனிதனின் இயக்கப் பாத்திரம், யுத்தமும் அரசியலும், பதிற்தாக்குதல் யுத்தத்திற்கான அரசியல் அணிதிரட்டல், யுத்தத்தின் குறிக்கோள், தற்காப்பிற்குள் தாக்குதல், நீண்டகால யுத்தத்திற்குள் விரைவான வெற்றி தோல்விகள், உட்புற முனைகளுக்குள் வெளிப்புற முனைகள், முன்னோட்டம், வளைந்துகொடுக்கும் தன்மை, திட்டமிடல், நடமாட்ட யுத்தம், கொரில்லா யுத்தம், ஸ்தான யுத்தம்,

அழித்தொழிக்கும் யுத்தம், தேய்வு யுத்தம், எதிரியின் தவறுகளைப் பயன்படுத்திக் கொள்ளும் சாத்தியப்பாடுகள், ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தத்தில் தீர்க்கமான கைகலப்புகளின் பிரச்சினை, சேனையும் மக்களுமே வெற்றியின் அஸ்திவாரம். நாம் மனிதனின் இயக்கப் பாத்திரம் என்ற பிரச்சினையுடன் ஆரம்பிப்போம்.

**60.** நாம் பிரச்சினைகளை அகநிலைப்பட்ட விதத்தில் அணுகுவதை எதிர்க்கின்றோம் என நாம் கூறும்போது, அதன் அர்த்தம் புறநிலையான உண்மைகளை அடிப்படையாகக் கொள்ளாத, அல்லது அவற்றுடன் பொருந்தாத கருத்துக்கள் கற்பனையானவையும் பொய்யானவையும் பின்பற்றிச் செயலாற்றினுல் தோல்விக்கு இட்டுச் செல்பவையுமாகுமாகையால் நாம் அவற்றை எதிர்க்க வேண்டும் என்பதாகும். ஆனுல் செய்யப்படும் எதுவும் மனிதர்களாற்தான் செய்யப்பட வேண்டும்; நீண்டகால யுத்தமும் இறுதி வெற்றியும் மனிதச் செயலின்றி ஏற்படமாட்டா. இத்தகைய செயல் பயனுள்ளதாக இருப்பதற்குப் புறநிலையான உண்மைகளிலிருந்து எண்ணங்களையும் தத்துவங்களையும் கருத்துக்களையும் தருவித்து, திட்டங்களையும் கோட்பாடுகளையும் கொள்கைகளையும் யுத்ததந்திரங்களையும் தந்திரோபாயங்களையும் முன்வைப்பவர்கள் தேவை. கருத்துக்கள் முதலானவை அகநிலைப்பட்டவை, செயல்கள் அல்லது நடவடிக்கைகள் அகநிலைப்பட்டதைப் புறநிலையாக மாற்றியவை, இவ்விரண்டும் மனிதர்களுக்கே பிரத்தியேகமான இயக்கப் பாத்திரத்தைப் பிரதிநிதித்துவம் செய்கின்றன. இத்தகைய இயக்கப் பாத்திரத்தை நாம் ''மனிதனின் உணர்வுபூர்வமான இயக்கப் பாத்திரம்'' என அழைக்கிறோம்; இது மனிதனை மற்றெல்லா ஜீவன்களிலுமிருந்து வேறுபடுத்தும் ஒரு குண

திசயம். புறநிலையான உண்மைகளை அடிப்படையாகக் கொண்டவையும் அவற்றுடன் பொருந்துபவையுமான கருத்துக்களெல்லாம் சரியான கருத்துக்கள், சரியான கருத்துக்களின் அடிப்படையிலான செயல்கள் அல்லது நடவடிக்கைகள் எல்லாம் சரியான நடவடிக்கைகள். இத்தகைய கருத்துக்களுக்கும் நடவடிக்கைகளுக்கும் நாம் பூரண வாய்ப்பளிக்க வேண்டும், இத்தகைய மனிதனின் உணர்வுபூர்வமான இயக்கப் பாத்திரத்துக்கு நாம் பூரண வாய்ப்பளிக்க வேண்டும். ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தம் ஏகாதிபத்தியத்தை விரட்டவும் பழைய சீனாவைப் புதிய ஒரு சீனாவாக மாற்றவும் நடத்தப்படுகிறது; இது முழுச் சீன மக்களும் அணிதிரட்டவும் ஜப்பானை எதிர்ப்பதில் அவர்களின் உணர்வுபூர்வமான இயக்கப் பாத்திரத்துக்குப் பூரண வாய்ப்பளிக்கவும்படும்போது மட்டுமே அடையப்பட முடியும். நாம் வெறுமனே பார்த்துக்கொண்டு எந்த நடவடிக்கையும் எடுக்காமலிருந்தால் அடிமைப்பாடு மட்டுமே எமக்குக் காத்திருக்கும், நீண்டகால யுத்தமுமிருக்காது, இறுதி வெற்றியுமிருக்காது.

61. உணர்வுபூர்வமான இயக்கப் பாத்திரம் ஒரு மனித இயல்பு. யுத்தத்தில் மனிதன் இந்தக் குணாதிசயத்தை வன்மையாகக் காண்பிக்கின்றான். யுத்தத்தில் வெற்றியோ தோல்வியோ இரு தரப்புகளிலுமான ராணுவ, அரசியல், பொருளாதார, புவியியல் சூழ்நிலைகளாலும், ஒவ்வொரு தரப்பும் நடத்தும் யுத்தத்தின் இயல்பாலும், ஒவ்வொரு தரப்பும் கொண்டுள்ள சர்வதேச ஆதரவாலும் நிர்ணயிக்கப்படுகின்றது என்பது உண்மைதான், ஆனால், அது இவற்றால் மட்டும் நிர்ணயிக்கப்படுவதில்லை; தம்மளவில் இவையாவும் வெற்றி அல்லது தோல்வியின் சாத்தியக்கூறை மட்டுமே தருகின்றன, வெற்றியையோ

தோல்வியையோ முடிவாக்குவதில்லை. வெற்றி தோல்வியை முடிவாக்க அகநிலைப்பட்ட பிரயாசையும், அதாவது, யுத்தத்துக்கு வழிகாட்டுவதும் நடத்துவதும், யுத்தத்தில் மனிதனின் உணர்வுபூர்வமான இயக்கப் பாத்திரமும் சேர வேண்டும்.

62. ஒரு யுத்தத்தை நடத்துபவர்கள் புறச் சூழ்நிலைகள் இடும் எல்லைக் கோடுகளைத் தாண்டிச் சென்று யுத்தத்தில் வெற்றி பெற முடியாது. இருந்தும், இந்த எல்லைகளுக்குள் நின்று ஆற்றலுடன் யுத்தத்தில் வாகை சூட முடியும்; சூடவும் வேண்டும். ஒரு யுத்தத்தில் தளபதிகளுக்கான செயல் அரங்கு புறநிலைச் சாத்தியப்பாடுகளில் கட்டியமைக்கப்பட வேண்டும். ஆனல் அந்த அரங்கில் ஒலியும் வண்ணமும், ஆற்றலும் கம்பீரமும் நிறைந்த பல நாடக நிகழ்ச்சிகளை அவர்கள் அரங்கேற்ற முடியும். புறநிலையான லௌகீக அஸ்திவாரங்களுள்ள பட்சத்தில், ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தத்தில் தளகர்த்தர்கள் தங்கள் திறமையை வெளிப்படுத்தவும், தங்கள் சக்திகளனைத்தையும் திரட்டிப் பிரயோகித்துத் தேசிய எதிரியை நசுக்கவும், எமது நாடும் சமுதாயமும் ஆக்கிரமிப்பாலும் அடக்குமுறையாலும் துன்புறுவதான தற்போதைய நிலைமையை மாற்றவும், சுதந்திரமும் சமத்துவமும் நிலவும் புதிய சீன ஒன்றைச் சிருஷ்டிக்கவும் வேண்டும்; இதில் தான் யுத்தத்தை வழிநடத்துவதற்கான எமது அகநிலைப்பட்ட திறமைகள் பிரயோகிக்கப்பட முடியும், பிரயோகிக்கப்படவும் வேண்டும். நாம் ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தத்திலான எமது தளகர்த்தர்களிலெவரும் தன்னைப் புறநிலையான சூழ்நிலைகளினின்றும் பிரித்துக்கொண்டு தவறுக்கு மேல் தவறிழைக்கும் மூர்க்கனவதை விரும்பவில்லை, ஆனல் ஒவ்வொரு தளகர்த்தரும் துணிவு, சாதுர்யம் இரண்டுமுடைய தளபதியாக வேண்டுமென நிச்சயம் விரும்புகின்

றோம். எமது தளகர்த்தர்களுக்கு எதிரியை மிஞ்சும் துணிவு மட்டுமல்லாமல், யுத்தம் முழுவதினதும் மாற்றங்கள் ஏற்ற இறக்கங்கள் அனைத்தினூடும் நிலைமையைத் தன் கட்டுக்குள் வைத்திருக்கும் திறமையும் இருக்க வேண்டும். யுத்தமாகிய கடலில் நீந்தும் அவர்கள் அலைப்புற்றுவிடாது, ஒழுங்கான வலிப்புடன் நீச்சலடித்து மறுகரையை அடைவதை நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும். யுத்தத்தை வழிநடத்துவதற்கான நியதிகளென்ற வகையில் யுத்ததந்திரமும் தந்திரோபாயங்களும் யுத்தக்கடலில் நீந்தும் கலையாக அமைகின்றன.

## யுத்தமும் அரசியலும்

63. ''அரசியலின் நீடிப்பே யுத்தம் என்பது''. இந்த அர்த்தத்தில், யுத்தம் அரசியலாகவும், யுத்தம் தானே அரசியல் நடவடிக்கையாகவும் விளங்குகின்றது. புராதன காலம் முதல் அரசியல் குணும்சம் இல்லாத யுத்தமே இருந்ததில்லை. ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தம் முழுத் தேசத்தாலும் நடத்தப்படும் ஒரு புரட்சிகர யுத்தம், அதன் வெற்றி யுத்தத்தின் அரசியல் குறிக்கோளிலிருந்து — ஜப்பானிய ஏகாதிபத்தியத்தை விரட்டியடித்துச் சுதந்திரமும் சமத்துவமுமுள்ள புதிய சீனு ஒன்றைக் கட்டியெழுப்புவதிலிருந்து பிரிக்க முடியாததும், பதிற்தாக்குதல் யுத்தத்திலும் ஐக்கிய முன்னணியிலும் விடாப்பிடியாக இருப்பதான பொதுக் கொள்கையிலிருந்தும், முழு மக்களையும் அணிதிரட்டுவதிலிருந்தும், தளகர்த்தர்களுக்கும் வீரர்களுக்குமிடையில் ஐக்கியம், சேனைக்கும் மக்களுக்குமிடையில்

ஐக்கியம், எதிரிப் படைகளைச் சிதைவுறச் செய்வது ஆகியன போன்ற அரசியற் கோட்பாடுகளிலிருந்தும் பிரிக்கமுடியாததும், ஐக்கிய முன்னணிக் கொள்கையின் திறமையான அமுலாக்கத்திலிருந்தும், கலாசார முனையிலான அணிதிரட்டலிலிருந்தும், சர்வதேச ஆதரவையும் ஜப்பானுக்குள் உள்ள மக்களின் ஆதரவையும் வென்றெடுப்பதற்கான பிரயாசைகளிலிருந்தும் பிரிக்கமுடியாததுமாகும். ஒரு வார்த்தையில் கூறினால், யுத்தம் தனியொரு கணத்திற்குத் தானும் அரசியலிலிருந்து பிரிக்கப்பட முடியாது. ஜப்பானிய-எதிர்ப்பு ஆயுதப் படைகளுக்குள் யுத்தத்தை அரசியலிலிருந்து தனிப்படுத்துவதன் மூலமும் ''யுத்தம் அறுதியானது'' என்ற கருத்தை ஆதரிப்பதன் மூலமும் அரசியலைச் சிறிதுபடுத்துவதற்கான போக்கு எதுவும் தவறானது, திருத்தப்பட வேண்டியது.

64. ஆனால் யுத்தத்துக்கு அதற்குரிய விசேஷ குணும்சங்கள் உண்டு. இந்த அர்த்தத்தில், யுத்தத்தைச் சாதாரண அரசியலுடன் சமப்படுத்த முடியாது. ''விசேஷ நடவடிக்கைகள் மூலம் அரசியலின் நீடிப்பே யுத்தம் என்பது''.[19] அரசியல் அதன் வழக்கமான வழிகளில் மேற்கொண்டு முன்னேற முடியாத ஒரு குறிப்பிட்ட கட்டத்துக்கு வளர்ச்சியடைந்ததும், அதன் பாதையிலுள்ள தடைகளை நீக்குவதற்காக யுத்தம் வெடிக்கின்றது. உதாரணமாகச் சீனவின் அரைச் சுதந்திர அந்தஸ்து ஜப்பானிய ஏகாதிபத்தியத்தின் அரசியல் வளர்ச்சிக்கு ஒரு தடை, எனவே ஜப்பான் அத்தடையை அகற்றுவதற்கு ஒரு ஆக்கிரமிப்பு யுத்தத்தைக் கட்டவிழ்த்துவிட்டுள்ளது. சீனவின் விஷயம் என்ன? ஏகாதிபத்திய அடக்குமுறை சீனவின் முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சிக்கு நீண்டகாலமாக ஒரு தடையாக இருந்துவந்துள்ளது, எனவே அதை அகற்றும் முயற்

சியில் பல விடுதலை யுத்தங்கள் நடத்தப்பட்டுள்ளன. ஜப்பான் இப்போது சீனவை ஒடுக்குவதும் சீனப் புரட்சியின் முன்னேற்றத்தை முற்றுகத் தடுப்பதுமான நோக்கத்திற்காக யுத்தத்தை உபயோகிக்கிறது, எனவே சீன இந்தத் தடையை அகற்றுவதென்ற அதன் தீர்மானத்தில் பதிற்தாக்குதல் யுத்தத்தை நடத்த நிர்ப்பந்திக்கப்படுகிறது. தடைகள் அகற்றப்பட்டு, அரசியல் குறிக்கோள் நிறைவேற்றப்பட்டதும் யுத்தமும் முடிவடைகின்றது. ஆனல் அத்தடைகள் முற்றுக நீக்கப்படா விட்டால், அக்குறிக்கோள் பூரணமாக நிறைவேற்றப்படும் வரையில் யுத்தமும் தொடர்ந்து நடைபெறும். இவ்வாறுக, ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தத்தின் பணி பூர்த்தியாகுமுன்பு ஒரு சமரசத்தை நாடுகின்ற எவரும் தோல்வியடைந்தே தீருவார், ஏனெனில் ஒரு காரணத்தாலோ மற்ருெரு காரணத்தாலோ ஒரு சமரசம் ஏற்பட்டாலும் கூடப் பரந்த வெகுஜனங்கள் நிச்சயம் அடிபணியமாட்டார்கள், மாறுக யுத்தத்தை அதன் அரசியற் குறிக்கோள் அடையப் பெறும்வரை தொடர்ந்து நடத்துவார்களாகையால் யுத்தம் மறுபடி வெடிக்கும். எனவே, அரசியலை இரத்தம் சிந்தாத யுத்தம் என்றும், யுத்தத்தை இரத்தம் சிந்தும் அரசியல் என்றும் கூறலாம்.

**65.** யுத்தத்தின் குறிப்பான குணதிசயங்களினின்றும் குறிப்பான ஸ்தாபனங்களின் தொகுதியொன்றும் குறிப்பான முறைகளின் தொகுப்பொன்றும் குறிப்பான ஒரு வகையான போக்கும் தோன்றுகின்றன. இந்த ஸ்தாபனங்கள் ஆயுதப் படைகளும் அவற்றோடு சம்பந்தப்பட்ட அனைத்துமாகும். இம்முறைகள் யுத்தத்தை வழிநடத்துவதற்கான யுத்ததந்திரமும் தந்திரோபாயங்களுமாகும். இந்தப் போக்கு எதிரெதிரான ஆயுதப் படைகள் தத்தமக்குச் சாதகமானவையும் எதிரிக்குப் பாத

கமானவையுமான யுத்ததந்திரத்தையும் தந்திரோபாயங்களை யும் உபயோகித்து ஒன்றை ஒன்று தாக்குவது அல்லது ஒன்று மற்றதற்கெதிராகத் தன்னைத் தற்காத்துக் கொள்வதான சமூக நடவடிக்கையின் குறிப்பான வடிவமாகும். எனவே யுத்த அனுபவம் குறிப்பான ஒரு வகையான அனுபவமாகும். யுத்தத்தில் பங்குபற்றும் சகலரும் தங்கள் வழக்கமான பழக் கங்களைக் கைவிட்டுத் தம்மை யுத்தத்திற்குப் பழக்கப்படுத் திக் கொள்ள வேண்டும், அதன் பின்பே அவர்களால் வெற்றி யீட்ட இயலும்.

## ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தத்திற்கான அரசியல் அணிதிரட்டல்

**66.** எம்முடைய இத்தனை மகத்தான ஒரு தேசியப் புரட்சிகர யுத்தம் சர்வவியாபகமான ஆழமான அரசியல் அணிதிரட் டலின்றி வெல்லப்பட முடியாது. ஜப்பானிய-எதிர்ப்பு யுத் தத்திற்கு முன் ஜப்பானை எதிர்ப்பதற்கான அரசியல் அணிதி ரட்டல் இருக்கவில்லை, அது ஒரு பெரும் குறைபாடு; அதன் விளைவாகச் சீனு எதிரியிடம் ஏற்கனவே ஒரு ஆட்டம் தோற் றும் விட்டது. யுத்தம் தொடங்கிய பின் அரசியல் அணிதி ரட்டல் ஆழமாக இல்லாதது ஒரு புறமிருக்க, விரிவானது என்பதற்கே வெகுதூரமிருந்தது. எதிரியின் துப்பாக்கி வெடி களும் எதிரி விமானங்களால் வீசப்பட்ட குண்டுகளுமே மக்க ளில் மிகப் பெரும்பாலாஞேருக்கு யுத்தச் செய்தியை அறி வித்தன, அதுவும் ஒருவித அணிதிரட்டல்தான், ஆனுல் அது

எமக்கு எதிரியினுல் செய்து தரப்பட்டது, அதை நாமே செய்து கொள்ளவில்லை. இப்போதும் கூடத் துப்பாக்கிச் சத்தம் கேட்காத தூரப் பிரதேசங்களில் மக்கள் வழமை போல் அமைதியாக வாழ்கின்றனர். இந்த நிலைமை மாற வேண்டும், இன்றேல் நாம் எமது ஜீவமரணப் போராட்டத்தில் வெல்லமுடியாது. நாம் ஒருபோதும் எதிரியிடம் இன்னுமொரு ஆட்டம் தோற்கக் கூடாது; அதற்கு மாருக நாம் இந்த ஆட்டத்தை, அரசியல் அணிதிரட்டலை, பூரணமாகப் பயன்படுத்தி அவனிலும் ஓங்கிவிட வேண்டும். இந்த ஆட்டம் கேந்திரமானது; இது உண்மையில் முதன்மையான முக்கியத்துவமுடையதாக இருக்கையில், ஆயுதங்களிலும் பிற விஷயங்களிலும் எமது தாழ்ச்சி இரண்டாம் பட்சமானது மட்டுமே. நாடு பூராவிலுமுள்ள சாதாரண மக்கள் அணிதிரட்டப்படுவது எதிரியை மூழ்கடிக்கப் பெருங் கடலொன்றைச் சிருஷ்டிக்கும், ஆயுதங்களிலும் பிற விஷயங்களிலுமான எமது தாழ்ச்சியை நிவர்த்திக்கக் கூடிய நிலைமைகளைச் சிருஷ்டிக்கும், யுத்தத்தில் சகல கஷ்டங்களையும் கடப்பதற்கான முற்தேவைகளையும் சிருஷ்டிக்கும். வெல்வதற்கு நாம் பதிற்தாக்குதல் யுத்தத்திலும் ஐக்கிய முன்னணியிலும் நீண்டகால யுத்தத்திலும் விடாப்பிடியாக இருக்க வேண்டும். ஆனுல் இவையெல்லாம் சாதாரண மக்களை அணிதிரட்டுதலின்றும் பிரிக்க முடியாதவை. வெல்ல விரும்புவது, ஆனுல் அரசியல் அணிதிரட்டலைப் புறக்கணிப்பது ''தேரை வடக்கே செலுத்தித் தெற்குக்குப் போக'' விரும்புவது போலாகும், அதன் விளைவு தவிர்க்க முடியாதபடி வெற்றியைப் பறிகொடுப்பதாகவே இருக்கும்.

**67.** அரசியல் அணிதிரட்டல் என்ருல் என்ன? முதலாவதாக, அதன் பொருள் சேனைக்கும் மக்களுக்கும் யுத்தத்தின்

அரசியல் குறிக்கோளைப் பற்றிக் கூறுவதாகும். ஒவ்வொரு படைவீரனும் பிரஜையும் யுத்தம் ஏன் நடத்தப்பட வேண்டுமென்பதையும் அது தன்னோடு எப்படிச் சம்பந்தப்பட்டது என்பதையும் புரிந்துகொள்வது அவசியம். ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தத்தின் அரசியல் குறிக்கோள் ''ஜப்பானிய ஏகாதிபத்தியத்தை விரட்டியடித்துச் சுதந்திரமும் சமத்துவமுமுள்ள புதிய சீனு ஒன்றைக் கட்டியெழுப்புவ''தாகும்; நாம் இந்தக் குறிக்கோளை அனைவருக்கும், சகல வீரர்களுக்கும் பிரஜைகளுக்கும் பிரகடனம் செய்தால் மட்டும் நாம் ஒரு ஜப்பானிய-எதிர்ப்புப் பேரெழுச்சியைச் சிருஷ்டிக்கவும் பல பத்துக் கோடியினரை ஒரு மனிதன் போல ஐக்கியமுறுத்தி யுத்தத்திற்குத் தம் அனைத்தையும் அர்ப்பணிக்கச் செய்யவும் முடியும். இரண்டாவதாக, அவர்களுக்கு வெறுமனே குறிக்கோளை விளக்குவது மட்டும் போதாது, அதை அடைவதற்கான நடவடிக்கைகளும் கொள்கைகளும் தரப்படவும் வேண்டும், அதாவது, அரசியல் வேலைத் திட்டமொன்று இருக்க வேண்டும். எம்மிடம் ஏற்கனவே ''ஜப்பானை எதிர்ப்பதற்கும் தேசத்தைக் காப்பதற்குமான பத்து அம்ச வேலைத்திட்டமும்'', ''ஆயுதந்தரித்த எதிர்ப்பினதும் தேசிய புனர்நிர்மாணத்தினதும் வேலைத்திட்டமும்'' இருக்கின்றன; நாம் அவற்றைச் சேனையிலும் மக்கள் மத்தியிலும் பிரபல்யப்படுத்தவும் அவற்றை நிறைவேற்றச் சகலரையும் அணிதிரட்டவும் வேண்டும். தெள்ளத் தெளிவான, திட்டவட்டமான அரசியல் வேலைத்திட்டமொன்று இல்லாமல், ஜப்பானுக்கெதிரான போரை இறுதிவரை நடத்தி முடிக்கச் சகல ஆயுதப் படைகளையும் முழு மக்களையும் அணிதிரட்டுவது அசாத்தியம். மூன்றுவதாக, நாம் அவர்களை எவ்வாறு அணிதிரட்ட வேண்டும்? வாய்ச்சொல் மூலமும், துண்டுப் பிரசுரங்கள் விளம்

பரம் மூலமும், செய்திப் பத்திரிகைகள் புத்தகங்கள் மூலமும், நாடகங்கள் திரைப்படங்கள் மூலமும், பாடசாலைகள் மூலமும், வெகுஜன ஸ்தாபனங்கள் மூலமும் எமது இயக்குனர்கள் மூலமும் அணிதிரட்ட வேண்டும். கோமிந்தாங் பகுதிகளில் இது வரை செய்யப்பட்டுள்ளது ஆழ்கடலில் ஒரு நீர் துளிக்கே சமானம்; மேலும், அது மக்களின் ரசனைக்குப் பொருத்தமற்ற ஒரு விதத்திலும் அவர்களுக்கு இணக்கமற்ற ஒரு உணர்விலும் செய்யப்பட்டுள்ளது; இது அடியந்தமாக மாற்றப்பட வேண்டும். நான்காவதாக, ஒரு முறை அணிதிரட்டினுல் போதாது, ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தத்திற்கான அரசியல் அணிதிரட்டல் தொடர்ச்சியானதாக இருக்க வேண்டும். எமது வேலை எமது அரசியல் வேலைத்திட்டத்தை மக்களுக்கு யாந்திரிக ரீதியில் பாராயணம் செய்வதல்ல, ஏனெனில் அத்தகைய பாராயணங்களுக்கு எவரும் செவிசாய்க்க மாட்டார்கள்; நாம் யுத்தத்திற்கான அரசியல் அணிதிரட்டலை யுத்தத்திலான அபிவிருத்திகளுடனும் படைவீரர்களினதும் மக்களினதும் வாழ்வுடனும் இணைக்கவும், அதைத் தொடர்ச்சியான ஓர் இயக்கமாக ஆக்கவும் வேண்டும். இது யுத்தத்தில் எமது வெற்றி பிரதானமாகத் தங்கிநிற்கும் பிரமாண்டமான முக்கியத்துவமுடைய ஒரு விஷயம்.

## யுத்தத்தின் குறிக்கோள்

68. இங்கு நாம் யுத்தத்தின் அரசியற் குறிக்கோளைப் பற்றிப் பேசவில்லை; ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தத்தின் அரசியற் குறிக்கோள் ''ஜப்பானிய ஏகாதிபத்தியத்தை விரட்டியடித்துச் சுதந்

திரமும் சமத்துவமுமுள்ள புதிய சீனு ஒன்றைக் கட்டியெழுப் புவது'' என மேலே கூறப்பட்டுவிட்டது. இங்கு நாம் மனிதனின் ரத்தம் சிந்தும் அரசியல் என்ற வகையில், எதிரெதிரான சேனை களின் பரஸ்பர படுகொலை என்ற வகையில் யுத்தத்தின் அடிப் படையான குறிக்கோளைப் பற்றிப் பேசுகிறோம். யுத்தத்தின் நோக்கம் குறிப்பாகத் ''தன்னைப் பாதுகாத்து, எதிரியை அழிப் ப''தாகும் (எதிரியை அழிப்பது என்றால், அவனை நிராயு தபாணியாக்குவது, அதாவது, ''எதிர்க்கும் ஆற்றலை அவனி டமிருந்து பறிமுதல் செய்வது'' அன்றி, அவனுடைய படைகள் முழுவதையும் பௌதீகரீதியில் அழிப்பது அல்ல). புராதன யுத்த முறையில், ஈட்டியும் கேடயமும் உபயோகிக்கப்பட்டன. அதாவது, எதிரியைத் தாக்கி அழிப்பதற்கு ஈட்டியும், தன்னைப் பேணிக் காப்பதற்குக் கேடயமும் உபயோகிக்கப்பட்டன. இன் றைய காலத்தில் எல்லா ஆயுதங்களும் இவை இரண்டின் வளர்ச்சியாகவே இருக்கின்றன. குண்டு வீசும் விமானம், யந்திரத் துப்பாக்கி, நீண்ட தூரப் பீரங்கி, விஷவாயு எல்லாம் ஈட்டியின் விருத்திகளாகவும், விமானப்பாதுகாப்பு அகழி, உருக் குக் கவசம், கன்கிறீட் கோட்டை, விஷவாயு பாதுகாப்பு முக மூடி ஆகியவை கேடயத்தின் விருத்திகளாகவும் விளங்குகின் றன. டாங்கி என்பது ஈட்டி, கேடயம் இரண்டின் பணிகளும் இணைக்கப்பட்ட ஒரு நவீன ஆயுதம். தாக்குதல் என்பது எதி ரியை அழிக்கும் பிரதான சாதனம். ஆனால் தற்காப்பும் மிக இன்றியமையாத ஒன்றாகும். தாக்குதலில் உடனடி நோக்கம் எதிரியை அழிப்பது. அதே சமயத்தில் அது சுய-பாதுகாப்பாக வும் விளங்குகின்றது. காரணம், எதிரியை அழிக்காவிட்டால், நீ அழிக்கப்படுவாய். தற்காப்பின் உடனடி நோக்கம் தன்னைப் பாதுகாப்பதாகும். ஆனால் அதே சமயத்தில் தற்காப்பு என்

பது தாக்குதலைப் பூர்த்தி செய்யும் ஒரு சாதனமாக அல்லது தாக்குதலுக்குச் செல்லும் தயாரிப்புக் கட்டமாகத் திகழ்கிறது. பின்வாங்குவது என்பது தற்காப்பின் வகையைச் சேர்ந்தது; தற்காப்பின் நீடிப்பு. அதே வேளையில், துரத்துவது தாக்குதலின் நீடிப்பாகும். யுத்தத்தின் பிரதான நோக்கம் எதிரியை அழிப்பது; சுய-பாதுகாப்பு இரண்டாந்தரமானது என்பது சுட்டிக்காட்டப்பட வேண்டும். காரணம் பெரும் தொகையில் எதிரியை அழிப்பதன் மூலம் தான் பயனுள்ள முறையில் தன்னைப் பாதுகாக்க முடியும். எனவே எதிரியை அழிப்பதில் பிரதான சாதனமாக விளங்கும் தாக்குதல் முதன்மையானது. அதே வேளையில் எதிரியை அழிப்பதில் பூர்த்தி செய்யும் சாதனமாக, ஒரு சுய-பாதுகாப்பு சாதனமாக விளங்கும் தற்காப்பு இரண்டாந்தரமானது. உண்மையான யுத்தத்தில், கூடிய அளவு காலம் தற்காப்பும், எஞ்சிய காலம் தாக்குதலும் பிரதான பாத்திரம் வகிக்கின்றன. ஆனுல் யுத்தத்தைப் பூரணமாக நோக்கினுல், தாக்குதல் முதன்மையானது.

69. யுத்தத்தில் வீரத் தியாகத்தை ஊக்குவிப்பதை நாம் எப்படி நியாயப்படுத்துவது? இது ''தற்பேணு'' தலுடன் முரண்படவில்லையா? இல்லை, முரண்படவில்லை; தியாகமும் தற்பேணுதலும் ஒன்றுக்கொன்று எதிரானவையும் துணையானவையுமாகும். யுத்தம் இரத்தம் சிந்தும் அரசியல், அது தன் விலையை, சில சமயம் மிக மிக உயர்ந்த விலையை எடுத்தே தீரும். பகுதியளவானதும் தற்காலிகமானதுமான தியாகம் (பேணுமை) பொதுவானதும் நிரந்தரமானதுமான பேணுதலுக்காக உறப்படுகின்றது. அடிப்படையாக, எதிரியை அழிக்கும் ஒரு வழிவகையான தாக்குதல் தற்பேணுதலாகிய கருமத்தையும் உடையது என நாம் கூறுவதற்குக் காரணம் இதுவேதான். தற்

காப்புடன் கூடவே தாக்குதலும் இருக்க வேண்டும்; வெறுமனே சுத்த தற்காப்பு மட்டும் இருக்கக் கூடாது என்பதற்குக் காரணமும் இதுவேதான்.

70. தன்னைப் பேணிக்கொண்டு எதிரியை அழித்தல் என்ற யுத்தத்தின் குறிக்கோள் யுத்தத்தின் சாராம்சமும் யுத்த நடவடிக்கைகள் அனைத்தினதும் அடிப்படையுமாகும். போர் நுட்ப ரீதியானவை தொட்டு யுத்ததந்திர ரீதியானவை ஈறுக எல்லா யுத்த நடவடிக்கைகளிலும் இந்தச் சாராம்சம் ஊறிக்கிடக்கின்றது. யுத்தத்தின் குறிக்கோள் தான் யுத்தத்தின் அடிப்படையான கோட்பாடு, போர் நுட்பவியல், தந்திரோபாயம், போரியக்கம், யுத்ததந்திரம் ஆகியவை சம்பந்தமான தத்துவங்களோ கோட்பாடுகளோ எதுவும் அதனின்றும் விலகமுடியாது. உதாரணமாக, சுடுவதில் ''மறைவிடம் தேடிக் கொள்ளுவதும் சுடும் சக்தியைப் பூரணமாகப் பயன்படுத்துவது''மான கோட்பாட்டின் பொருள் என்ன? முன்னையதன் நோக்கம் தற்பேணுதல், பின்னையதன் நோக்கம் எதிரியை அழித்தல். முன்னையது தரையமைப்பையும் அதன் தோற்றங்களையும் உபயோகப்படுத்துவது, பாய்ந்து முன்னேறுவது, சிதறலாக அணிவரிசைப்படுத்துவது ஆகியன போன்ற போர் நுட்பங்களைத் தோற்றுவிக்கிறது. பின்னையது துப்பாக்கிச் சூட்டு பகுதியிற் தடங்கல்களை அகற்றுவதும் சூட்டு வலையொன்றை அமைத்தலும் போன்ற வேறு போர் நுட்பங்களைத் தோற்றுவிக்கிறது. தந்திரோபாயரீதியான நடவடிக்கையில் தாக்குதல் படையையும் எதிரியை நகராதபடி வரையறைக்குட்படுத்தும் படையையும் கையிருப்புப் படையையும் பொறுத்தவரையில், முதலாவது எதிரியை அழித்தொழிப்பதற்கும், இரண்டாவது தன்னைப் பேணிக்கொள்வதற்கும், மூன்றுவது

சூழ்நிலைகளுக்கேற்றபடி இரண்டில் ஒரு நோக்கத்திற்கும்—ஒன்றில் எதிரியை அழித்தொழிப்பதற்கு (இப்படியானால் அது தாக்குதல் படைக்கு உதவி செய்யும் படையாகிறது, அல்லது துரத்தும் படையாகப் பயன்படுகிறது) அல்லது தற்பேணுதலுக்கு (இப்படியானால் அது எதிரியை நகராதபடி வரையறைக்குட்படுத்தியிருக்கும் படைக்கு உதவி செய்யும் படையாகிறது, அல்லது பின்வாங்குதலுக்கு மறைப்புத் தரும் படையாகப் பயன்படுகிறது) — ஆனவையாகும். இவ்வாறாக, போர் நுட்பவியல், தந்திரோபாயம், போரியக்கம், யுத்ததந்திரம் ஆகியவை சம்பந்தமான கோட்பாடுகளோ நடவடிக்கைகளோ எவையும் எவ்விதத்திலும் யுத்தத்தின் குறிக்கோளிலிருந்து விலக முடியாது, இக்குறிக்கோள் யுத்தம் முழுவதிலும் ஊறிக்கிடக்கிறது, யுத்தத்திற் தொடக்கம் முதல் இறுதிவரை இழையோடுகிறது.

71. ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தத்தை வழிநடத்துவதில் சகல மட்டங்களிலுமான தலைவர்கள் சீனா, ஜப்பான் இரு நாடுகளுக்கிடை நேர்மாறான அடிப்படை அம்சங்களையோ இந்த யுத்தத்தின் குறிக்கோளையோ மறந்துவிடக் கூடாது. போர் நடவடிக்கைகளின் போது, இந்த இரு நாடுகளுக்கிடை நேர் மாறான அடிப்படை அம்சங்கள் தன்னைப் பேணிக்கொள்ளவும் மற்றத் தரப்பை அழிக்கவுமான ஒவ்வொரு தரப்பினதும் போராட்டத்தில் வெளிப்பாடடைகின்றன. எமது யுத்தத்தில் நாம் ஒவ்வொரு கைகலப்பிலும் பெரியதோ, சிறியதோ ஒரு வெற்றியை ஈட்டவும் எதிரியின் படைகளில் ஒரு பகுதியை நிராயுதபாணியாக்கவும், அவனது வீரர்களிலும் சாதனங்களிலும் ஒரு பகுதியை அழிக்கவும் பிரயாசைப்படுகிறோம். எதிரியைப் பகுதியளவாக அழிக்கும் இந்தப் பயன்களை நாம் சேர்த்

துத் திரட்டிப் பிரதான யுத்ததந்திர ரீதியான வெற்றிகளாக்கவும், அவ்வாறாக எதிரியை விரட்டியடித்துத் தாய்நாட்டைக் காப்பாற்றிப் புதிய சீனு ஒன்றைக் கட்டியெழுப்புவதான அரசியற் குறிக்கோளை அடையவும் வேண்டும்.

## தற்காப்பிற்குள் தாக்குதல், நீண்டகால யுத்தத்திற்குள் விரைவான வெற்றி தோல்விகள், உட்புற முனைகளுக்குள் வெளிப்புற முனைகள்

72. இனி நாம் ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தத்தின் குறிப்பான யுத்ததந்திரக் கோட்பாட்டைப் பரிசீலிப்போம். நாம் ஏற்கனவே, ஜப்பானை எதிர்ப்பதற்கான எமது யுத்ததந்திரக் கோட்பாடு நீண்டகால யுத்தமாகுமெனக் கூறியுள்ளோம், இது உண்மையாக முற்றும் சரியானது. ஆனால் இந்தக் கோட்பாடு பொதுவானது, குறிப்பானதல்ல. குறிப்பாக, நீண்டகால யுத்தம் எவ்வாறு நடத்தப்பட வேண்டும்? இனி நாம் இந்தப் பிரச்சினையை விவாதிப்போம். எமது பதில் பின்வருமாறு: யுத்தத்தின் முதலாம், இரண்டாம் கட்டங்களில், அதாவது எதிரியின் தாக்குதலினதும் அவன் தன் வெற்றிகளைப் பேணுதலினதும் கட்டங்களில், நாம் யுத்ததந்திர ரீதியான தற்காப்பிற்குள் தாக்குதல் போரியக்கங்களும் சமர்களும், யுத்ததந்திர ரீதியில் நீண்டதான யுத்தத்திற்குள் விரைவாக வெற்றி தோல்வி முடிவாகும் போரியக்கங்களும் சமர்களும், யுத்ததந்திர ரீதியான உட்புற முனைகளுக்குள் வெளிப்புற முனைகளிலான போரியக்கங்களும் சமர்களும் நடத்த வேண்டும். மூன்றாவது

கட்டத்தில் நாம் யுத்ததந்திர ரீதியான எதிர்த்தாக்குதலைத் தொடுக்க வேண்டும்.

73. ஜப்பான் ஒரு பலமான ஏகாதிபத்திய வல்லரசும் நாம் பலவீனமான ஒரு அரைக் காலனித்துவ, அரை நிலப்பிரபுத்துவ நாடுமாகையால் அது யுத்ததந்திர ரீதியான தாக்குதற் கொள்கையொன்றைக் கைக்கொண்டிருக்கையில் நாம் யுத்த தந்திர ரீதியான தற்காப்பில் ஈடுபட்டுள்ளோம். ஜப்பான் விரைவாக வெற்றி தோல்வி முடிவாகும் ஒரு யுத்தமாகிய யுத்ததந்திரத்தைப் பிரயோகிக்க முயல்கிறது, நாம் நீண்ட கால யுத்தமாகிய யுத்ததந்திரத்தை உணர்வுபூர்வமாகப் பிரயோகிக்க வேண்டும். ஜப்பான் கணிசமானளவு உயர்ந்த போர்த் திறன் கொண்ட பல பத்து (இப்போது முப்பது) சேனை டிவிஷன்களையும் தன் கடற் படையில் ஒரு பகுதியையும் சீனவை நிலத்திலும் கடலிலுமிருந்து சுற்றிவளைக்கவும் முற்றுகையிடவும் உபயோகித்தும், தன் விமானப் படையைச் சீனவிற் குண்டு வீச உபயோகித்தும் வருகின்றது. அதன் தரைப் படை ஏற்கனவே பாஒதொவிலிருந்து ஹங்சௌ வரை விரிந்த ஒரு முனையை நிலைநாட்டிக்கொண்டுள்ளது, அதன் கடற்படை ஃபூகியனையும் குவாங்துங்கையும் எட்டிவிட்டது; இவ்வாருகப் பிரமாண்டமான ரீதியில் வெளிப்புற முனை போர் நடவடிக்கைகள் உருப்பெற்றுள்ளன. நாமோ உட்புற முனைப் போர் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளோம். இவையாவும் எதிரி பலமானவனுயிருக்கையில் நாம் பலவீனமாயிருக்கிறேம் என்ற குணுதிசயத்திலிருந்து எழுந்தன. இது நிலைமையின் ஒரு அம்சம்.

74. ஆனல் இதற்கு நேர் எதிரான மற்றெரு அம்சமும் உள்ளது. ஜப்பான் பலமானதெனினும் அதனிடம் போதிய படைவீரர்களில்லை. சீன பலவீனமானதெனினும் அதனிடம்

விசாலப் பிரதேசமும் பெரும் ஜனத்தொகையும் ஏராளமான படைவீரர்களும் உள்ளனர். இதிலிருந்து முக்கியமான இரு விளைவுகள் எழுகின்றன. முதலாவது, தனது சிறு படைகளைப் பாரிய ஒரு நாட்டிற்கெதிராகப் பிரயோகிக்கும் எதிரியால் சில பெரிய நகரங்களையும் பிரதான தொடர்பு மார்க்கங்களையும் சமவெளிகளில் ஒரு பகுதியையும் மட்டுமே கைப்பற்ற இயலும். இவ்வாறாக தான் கைப்பற்றிய பிரதேசத்தில் அவன் காவற் படையின்றி விட வேண்டிய விசாலமான பகுதிகள் உள்ளன, அவை எமது கொரில்லா யுத்தத்திற்குப் பாரிய ஒரு அரங்கைத் தருகின்றன. சீனவை முழுமையாக எடுத்துக்கொண்டால், எதிரி குவாங்சௌவையும் வூஹனையும் லன்சௌவையும் தொடுக்கும் மார்க்கத்தையும் அதற்கு அணித்தான பகுதிகளையும் ஒருபடி கைப்பற்றிக்கொண்டாலும் கூட, அப்பாலுள்ள பிரதேசங்களை அவன் கைப்பற்றுவது துர்லபம்; இது சீனவுக்கு நீண்டகால யுத்தத்தை இறுதி வெற்றிவரை நடத்துவதற்கான ஒரு பொதுவான பின்னணிப் பிரதேசத்தையும் ஜீவாதாரமான தளங்களையும் தருகின்றது. இரண்டாவதாக, தன் சிறு படைகளைப் பெரிய படைகளுக்கு எதிராக நிறுத்தியதில் எதிரி எமது பெரிய படைகளால் சுற்றிவளைக்கப்பட்டுள்ளான். எதிரி எம்மைப் பல மார்க்கங்களில் தாக்குகிறான், யுத்ததந்திர ரீதியில் அவன் வெளிப்புற முனைகளில் இயங்குகையில் நாம் உட்புற முனைகளில் இயங்குகின்றோம், யுத்ததந்திர ரீதியில் அவன் தாக்குதலில் ஈடுபட்டிருக்கையில் நாம் தற்காப்பிலீடுபட்டிருக்கிறோம்; இவையெல்லாம் பெரிதும் எமக்குப் பாதகமாயிருப்பதாகத் தோன்றுகின்றன. இருப்பினும், எமது பெரிய பிரதேசமும் பெரிய படைகளுமாகிய எமது இரு சாதக அம்சங்களையும் நாம் பயன்படுத்தி, முரண்டுப்பிடியான ஸ்தான

யுத்தத்திற்குப் பதிலாக, ஒரு எதிரி டிவிஷனுக்கு எதிராக எமது பல டிவிஷன்களையும், அவனது பத்தாயிரம் வீரர்களுக்கு எதிராக எமது பல பத்தாயிரம் வீரர்களையும் அவனது வியூகங்களில் ஒன்றிற்கெதிராக எமது பல வியூகங்களையும் உபயோகித்தும், தனியொரு வியூகத்தைப் போர்க்களத்தின் வெளிப்புற முனைகளிலிருந்து திடீரெனச் சுற்றிவளைத்துத் தாக்கியும் வளைந்துகொடுக்கும் நடமாட்ட யுத்தத்தை நடத்த இயலும். இந்த விதமாக, யுத்ததந்திர ரீதியான நடவடிக்கைகளில் எதிரி வெளிப்புற முனைகளிலும் தாக்குதலிலீடுபட்டுமிருக்கையில், போரியக்கங்களிலும் சமர்களிலும் அவன் உட்புற முனைகளிலும் தற்காப்பாகவும் சண்டையிட நிர்ப்பந்திக்கப்படுவான். எமக்கோ, யுத்ததந்திர ரீதியான நடவடிக்கைகளில் உட்புற முனைகளும் தற்காப்பும் போரியக்கங்களிலும் சமர்களிலும் வெளிப்புற முனைகளாகவும் தாக்குதலாகவும் மாற்றப்படும். இதுவே முன்னேறும் எதிரி வியூகம் ஒன்றையோ, உண்மையில் எதையுமோ சமாளிப்பதற்கான முறை. மேலே விவாதித்த விளைவுகள் இரண்டும் எதிரிப் படைகள் சிறியவையாயிருக்க எம்முடையவை பெரியவை என்பதிலிருந்து எழுகின்றன. மீண்டும், சிறியவையானாலும் எதிரிப் படைகள் (ஆயுதங்களிலும் பயிற்சியிலும்) பலமானவையாயிருக்கையில் எம் படைகளோ பெரியவையானாலும் (ஆயுதங்களிலும் பயிற்சியிலும், ஆனல் போர்த் துணிவிலல்ல) பலவீனமானவை; ஆகவே போரியக்கங்களிலும் சமர்களிலும் நாம் சிறு படைகளுக்கு எதிராகப் பெரும் படைகளை உபயோகிக்கவும் உட்புற முனைகளுக்கு எதிராக வெளிப்புற முனைகளிலிருந்து இயங்கவும் வேண்டியது மட்டுமல்லாமல், விரைவான வெற்றி தோல்வி முடிவுகளைப் பெற முயலும் கொள்கையைப் பின்பற்றவும் வேண்டும். பொது

வாக, விரைவாக வெற்றி தோல்வியை முடிவாக்குவதற்கு நாம் நகர்ந்துகொண்டிருக்கும் எதிரியையே தாக்க வேண்டும், நிலையாக இருக்கும் எதிரியையல்ல. எதிரி கட்டாயம் செல்லப் போகும் பாதையருகே நாம் முன்கூட்டியே மறைவில் பெரிய படையொன்றைக் குவித்துக்கொண்டு அவன் நகர்ந்துகொண்டிருக்கையில், என்ன நடக்கிறதென்று அவன் அறிவதற்குள்ளாகத் திடீரென முன்னேறி அவனைச் சுற்றிவளைத்துத் தாக்கி, அவ்வாறாகப் போரை விரைவில் முடித்துவிட வேண்டும். நாம் நன்கு சண்டை செய்தோமானால் நாம் எதிரிப் படை முழுவதையுமோ, அல்லது அதிற் பெரும் பகுதியையோ ஏதுமொரு பகுதியையோ அழிக்கக் கூடும்; நாம் அவ்வளவு நன்றாகச் சண்டை செய்யாவிட்டாலும்கூட அப்போதும் நாம் அவனுக்குக் கடும் சேதங்களை ஏற்படுத்தக் கூடும். இது எமது போர்களில் ஒவ்வொன்றிற்கும் பொருந்தும். ஒவ்வொரு மாதமும் நாம் பிங்சிங்குவானில் அல்லது தைஅல்ச்சுவாங்லானதைப் போன்ற ஒரு கணிசமான வெற்றியை, பலவற்றையென்றால் கூறவே வேண்டாம், ஈட்ட முடிந்தால், அது எதிரியைப் பெரிதும் தைரியமிழக்கச் செய்து, எமது சொந்தப் படைகளின் துணிவைத் தூண்டிவிட்டு சர்வதேச ஆதரவையும் வரவழைக்கும். இவ்வாறாக, யுத்ததந்திர ரீதியில் எமது நீண்டகால யுத்தம் போர்க்களத்தில் விரைவாக வெற்றி தோல்வி முடிவாகும் போர்களாக மாற்றப்படுகிறது. எதிரியின் யுத்ததந்திர ரீதியில் விரைவாக வெற்றி தோல்வி முடிவாகும் யுத்தம், அவன் பல போரியக்கங்களிலும் சமர்களிலும் தோற்கடிக்கப்பட்ட பின் ஒரு நீண்டகால யுத்தமாக மாறியே தீர வேண்டும்.

75. ஒரு வார்த்தையில் கூறினால், போரியக்கங்களும் சமர்களும் நடத்துவதற்கான மேற்படி நடவடிக்கைக் கோட்பாடு

''வெளிப்புற முனைகளில் விரைவாக வெற்றி தோல்வி முடிவாக்கும் தாக்குதல் யுத்த''மாகிய கோட்பாடாகும். அது ''உட்புற முனைகளில் நீண்ட தற்காப்பு யுத்த''மாகிய எமது யுத்த தந்திரக் கோட்பாட்டின் எதிரிடை, இருந்தும் அதுவே இந்த யுத்ததந்திரக் கோட்பாட்டை நிறைவேற்றுவதற்கு இன்றியமையாத கோட்பாடுமாகும். பதிற்தாக்குதல் யுத்தத்தின் தொடக்கத்தில் நாம் செய்தது போல ''உட்புற முனைகளில் நீண்ட தற்காப்பு யுத்த''த்தைப் போரியக்கங்களுக்கும் சமர்களுக்குமான கோட்பாடாகவும் நாம் உபயோகிப்போமாயின் அது எதிரி சிறிதாயிருக்கையில் நாம் பெரிதாயிருப்பதும் எதிரி பலமாயிருக்கையில் நாம் பலவீனமாயிருப்பதுமான சூழ்நிலைகளுக்கு முற்றிலும் பொருத்தமற்றதாயிருக்கும்; அப்போது எம்மால் நீண்டகால யுத்தமாகிய எமது யுத்ததந்திர ரீதியான குறிக்கோளை ஒருபோதும் அடையமுடியாது போகும், நாம் எதிரியால் தோற்கடிக்கவும்படுவோம். எனவேதான், நாம் முழு நாட்டினதும் படைகளை ஒவ்வொன்றும் எதிரியின் களச் சேனைகளில் ஒன்றிற்கு எதிராக ஆனல் அதைவிட இரண்டு, மூன்று, அல்லது நான்கு மடங்கு பலங்கூடிய பல பெரிய களச் சேனைகளாக அமைக்க வேண்டும் என்பதையும் இவ்வாறு மேலே எடுத்துரைக்கப்பட்ட கோட்பாட்டின் பிரகாரம் எதிரியை விரிவான யுத்த அரங்குகளில் போரிலீடுபடுத்தி வைத்திருக்க வேண்டும் என்பதையும் நாம் எப்போதும் கோரி வந்துள்ளோம். ''வெளிப்புற முனைகளில் விரைவாக வெற்றி தோல்வி முடிவாகும் தாக்குதல் யுத்த''மாகிய இக்கோட்பாடு கிரமமான யுத்தத்திற் போலவே கொரில்லா யுத்தத்திலும் பிரயோகிக்கப்பட முடியும், பிரயோகிக்கப்படவும் வேண்டும். இது யுத்தத்தின் குறிப்பிட்ட ஒரு கட்டத்திற்கு மட்டுமல்லாமல்,

அது முழுமைக்கும் பொருந்துவதாகும். யுத்ததந்திர ரீதியான எதிர்த்தாக்குதல் கட்டத்தில், நாம் போர் நுட்ப ரீதியில் முன்பைவிட நன்ருகச் சாதன வசதி கொண்டு பலமானவனை எதிர்க்கும் பலவீனனின் நிலையில் இல்லாமல் இருக்கும்போதும் நாம் தொடர்ந்தும் வெளிப்புற முனைகளிலிருந்து செய்யும் விரைவாக வெற்றி தோல்வி முடிவாகும் தாக்குதற் போர்களில் பெரிய படைகளை ஈடுபடுத்துவோமாஞல் அத்தனைக்கு அதிகம் பயனுள்ள விதத்தில் எம்மால் பெரும் அளவில் கைதிகளையும் பொருட்களையும் கைப்பற்ற இயலும். உதாரணமாக, நாம் யந்திரமயப்படுத்திய ஒரு எதிரி டிவிஷனுக்கு எதிராக இரண்டு, மூன்று, அல்லது நான்கு யந்திரமயப்படுத்திய டிவிஷன்களை உபயோகிப்போமாஞல் அதை அழிப்பது அதிக நிச்சயமாயிருக்கும். பல தடியர்கள் ஒரு தடியனை இலகுவில் தோற்கடிக்கலாம் என்பது எல்லோருக்கும் தெரிந்ததே.

76. நாம் ஒரு போர்க்களத்தில் ''வெளிப்புற முனையில் விரைவாக வெற்றி தோல்வி முடிவாகும் தாக்குதல் யுத்த''த்தை உறுதியுடன் பிரயோகிப்போமாஞல் நாம் அந்தப் போர்க்களத்திலான சக்திகளின் பலாபலத்தை மாற்றுவது மட்டுமல்லாமல் பொதுவான நிலைமையையும் சிறிது சிறிதாக மாற்றுவோம். போர்க்களத்தில் நாம் தாக்குதலிலீடுபட்டிருப்போம், எதிரி தற்காப்பிலீடுபட்டிருப்பான்; நாம் வெளிப்புற முனைகளில் உயர்வான எண்ணிக்கையான வீரர்களை உபயோகிப்போம், எதிரி உட்புற முனைகளில் தாழ்ந்த எண்ணிக்கையான வீரர்களை உபயோகிப்பான்; நாம் விரைவான வெற்றி தோல்வி முடிவிற்காக முயல்வோம், எதிரியோ உதவிக்கு வரும் படைகளை எதிர்பார்த்துச் சண்டையை நீடிக்க எவ்வளவுதான் முயன்ருலும் அப்படிச் செய்ய இயலாதிருப்பான்; இக்காரணங்கள் எல்லாவற்ருலும்

எதிரியின் நிலை பலமானதிலிருந்து பலவீனமானதற்கும் உயர்ச்சியிலிருந்து தாழ்ச்சிக்கும் மாறுகையில், எமது படைகளின் நிலை பலவீனமானதிலிருந்து பலமானதற்கும் தாழ்ச்சியிலிருந்து உயர்ச்சிக்கும் மாறும். இத்தகைய பல போர்கள் வெற்றிகரமாக நடத்தப்பட்ட பின் எமக்கும் எதிரிக்குமிடையிலான பொதுவான நிலைமை மாற்றமடையும். அதாவது, பல போர்க்களங்களில் வெளிப்புற முனைகளிலான விரைவாக வெற்றி தோல்வி முடிவாகும் தாக்குதல் யுத்தத்தின் வெற்றிகள் திரள்வதன் மூலம் நாம் சிறிது சிறிதாக எம்மைப் பலப்படுத்திக்கொண்டு எதிரியைப் பலவீனப்படுத்துவோம், அது அவசியம் பொதுவான சக்திகளின் பலாபலத்தைப் பாதித்து அதில் மாற்றங்களைக் கொண்டு வரும். அது நடைபெறும்போது இந்த மாற்றங்கள் எமக்குச் சாதகமான பிற அம்சங்களோடும் எதிரி முகாமிற்குள்ளேயான மாற்றங்களோடும் சாதகமான சர்வதேச நிலைமையோடும் சேர்ந்து, எமக்கும் எதிரிக்குமிடையிலான மொத்தப்படியான நிலைமையை முதலில் சமத்துவத்திற்கும் பின்னர் எமக்கு உயர்ச்சிக்கும் எதிரிக்குத் தாழ்ச்சிக்கும் மாற்றும். அதுவே நாம் எதிர்த்தாக்குதலைத் தொடுத்து எதிரியை எமது நாட்டிலிருந்து வெளியேற்றுவதற்கான தருணமாக இருக்கும்.

77. யுத்தம் ஒரு பலப்போட்டி, ஆனால் ஆதியிலுள்ள பல நிலைமை யுத்தத்தினூடே மாற்றமுறுகின்றது. இதில் தீர்க்கமான அம்சம் அகநிலைப்பட்ட பிரயாசை — கூடுதலான வெற்றிகளை ஈட்டுவதும் குறைவான தவறுகளை இழைப்பதும் — ஆகும். புறநிலையான அம்சங்கள் இத்தகைய மாற்றத்திற்கான சாத்தியக்கூறைத் தருகின்றன, ஆனால் இந்தச் சாத்தியக்கூறை யதார்த்தமாக மாற்றுவதற்குச் சரியான கொள்கை, அகநிலைப்பட்ட பிரயாசை இரண்டும் தேவை. இச்சந்தர்ப்பத்தில் அகநிலைப்பட்ட பிரயாசை தீர்க்கமான பங்கை வகிக்கின்றது.

## முன்னேட்டமும் வளைந்துகொடுக்கும் தன்மையும் திட்டமிடுதலும்

78. மேலே விவாதிக்கப்பட்டவாறு, வெளிப்புற முனைகளிலான விரைவாக வெற்றி தோல்வி முடிவாகும் தாக்குதற் போரியக்கங்களிலும் சமர்களிலும் கேந்திரமான அம்சம் ''தாக்குதல்'' ஆகும்; ''வெளிப்புற முனைகள்'' தாக்குதலின் விசாலத்தையும், ''விரைவாக வெற்றி தோல்வி முடிவாவது'' அதன் கால நீடிப்பையும் குறிப்பிடுபவை. எனவேதான் ''வெளிப்புற முனைகளிலான விரைவாக வெற்றி தோல்வி முடிவாகும் தாக்குதல் யுத்தம்'' என்ற பெயர் ஏற்படுகின்றது. இதுவே ஒரு நீண்டகால யுத்தத்தை நடத்துவதற்கான மிகச் சிறந்த கோட்பாடு, நடமாட்ட யுத்தமாக அழைக்கப்படுவதற்கான கோட்பாடும் இதுவே. ஆனால் இது முன்னேட்டமும் வளைந்து கொடுக்கும் தன்மையும் திட்டமிடுதலுமின்றி நடைமுறைப் படுத்தப்பட முடியாது. இனி நாம் இந்த மூன்று பிரச்சினைகளையும் ஆராய்வோம்.

79. நாம் ஏற்கனவே மனிதனின் உணர்வுபூர்வமான இயக்கப் பாத்திரத்தை விவாதித்துவிட்டோம், எனவே நாம் ஏன் மறுபடியும் முன்னேட்டத்தைப் பற்றிப் பேச வேண்டும்? மனிதனின் உணர்வுபூர்வமான இயக்கப் பாத்திரம் என்பது மனிதனுக்கே அலாதியான ஒரு குணதிசயமான உணர்வுபூர்வமான செயலையும் பிரயாசையையும் குறிக்கிறது, இந்த மனித குணதிசயம் யுத்தத்தில் தான் மிக வலுவுடன் வெளிப்பாடடைகிறது. இவையெல்லாம் ஏற்கனவே விவாதிக்கப்பட்டுவிட்டன. இங்கு முன்னேட்டம் என்பதன் பொருள், புற நிர்ப்பந்தம்

காரணமாகச் சுதந்திரம் இழக்கப்படுவதற்கு எதிரிடையாக, ஒரு சேனையின் செயல்படும் சுதந்திரமாகும். செயல்படும் சுதந்திரமே ஒரு சேனையின் ஜீவன், ஒருகால் அது இழக்கப்பட்டுவிட்டதும் அச்சேனை தோல்வியையோ அழிவையோ நெருங்கிவிடுகிறது. ஒரு படைவீரன் நிராயுதபாணியாக்கப்படுவது அவன் செயல்படும் சுதந்திரத்தை இழப்பதினதும், செயலற்ற நிலைக்குத் தள்ளப்படுவதினதும் விளைவு. ஒரு சேனையின் தோல்விக்கும் இதுவே பொருந்தும். இக்காரணத்தால் யுத்தத்தில் இரு தரப்புகளும் முன்னோட்டத்தைப் பெறுவதற்கும் செயலற்ற நிலையைத் தவிர்ப்பதற்கும் தம்மாலியன்ற அனைத்தையும் செய்யும். நாம் கோரும் வெளிப்புற முனைகளிலான விரைவாக வெற்றி தோல்வி முடிவாகும் தாக்குதல் யுத்தமும் அதை நடைமுறைப்படுத்துவதற்கு அவசியமான வளைந்துகொடுக்கும் தன்மையும் திட்டமிடலும், முன்னோட்டத்தைப் பெறுவதையும், அவ்வாறாக எதிரியைச் செயலற்ற ஒரு நிலைக்கு நிர்ப்பந்தித்துத் தள்ளி, எம்மைப் பேணிக்கொள்வதும் எதிரியை அழிப்பதுமான குறிக்கோளை அடைவதையும் நோக்கமாகக் கொண்டவை. ஆனால் முன்னோட்டமும் செயலின்மையும் யுத்தம் நடத்துவதற்கான வல்லமையிலுள்ள உயர்ச்சியிலும் தாழ்ச்சியிலுமிருந்து பிரிக்கமுடியாதவை. எனவே அவை யுத்தத்தின் அகநிலைப்பட்ட வழிநடத்தலின் சரியான தன்மையிலும் பிழையான தன்மையிலும் இருந்து பிரிக்கமுடியாதவை. மேலும், முன்னோட்டத்தைப் பெறுவதற்கும் எதிரியைச் செயலற்ற நிலைக்குத் தள்ளுவதற்கும் எதிரியின் தவறான விளக்கங்களையும் தயாரற்ற நிலையையும் உபயோகப்படுத்திக்கொள்ளும் பிரச்சினையும் இருக்கின்றது. இந்த அம்சங்கள் கீழே ஆராயப்படுகின்றன.

80. முன்னோட்டம் யுத்தத்தை நடத்துவதற்கான வல்லமை

யின் உயர்ச்சியிலிருந்து பிரிக்கமுடியாதது, செயலின்மை யுத்தத்தை நடத்துவதற்கான வல்லமையின் தாழ்ச்சியிலிருந்து பிரிக்கமுடியாதது. இத்தகைய உயர்ச்சி அல்லது தாழ்ச்சிதான் முன்னேற்றத்தின் அல்லது செயலின்மையின் புறநிலையான அடிப்படை. யுத்ததந்திர ரீதியான முன்னேற்றம் யுத்ததந்திர ரீதியான தாக்குதலின் மூலமே அதிகம் நன்றாகப் பற்றிக்கொள்ளவும் விருத்தி செய்யவும்பட முடியுமென்பது இயற்கையே, ஆனால் எப்போதும் எங்கும் முன்னேற்றத்தை வைத்துக்கொள்வது, அதாவது, அறுதியான முன்னேற்றத்தைக் கொண்டிருப்பது, அறுதியான உயர்ச்சி அறுதியான தாழ்ச்சிக்கு எதிராக நிற்கும்போது மட்டுமே சாத்தியம். பலமான, ஆரோக்கியமான ஒருவன் கடும் நோயாளியான ஒருவனுடன் மல்யுத்தம் செய்யும் போது அவனுக்கு அறுதியான முன்னேற்றம் உள்ளது. ஜப்பான் தீர்க்கமுடியாத முரண்பாடுகளால் சல்லடையாகத் துளைபடாமலிருந்தால், உதாரணமாக, அதனால் ஒரேயடியாகப் பல பத்து லட்சம் அல்லது ஒரு கோடி வீரர்களடங்கிய பிரமாண்டமான படையொன்றை யுத்தத்தில் இறக்கமுடிந்தால் அதன் நிதி வசதிகள் உள்ளதைப் போல் பல மடங்குகளாக இருந்தால், அதற்குத் தன் சொந்த மக்களிடமிருந்தோ பிற நாடுகளிடமிருந்தோ எந்த எதிர்ப்பும் இல்லாவிட்டால், அது சீன மக்களின் முழு மூச்சான எதிர்ப்பைத் தூண்டிவிடுபவையான மிலேச்சத்தனமான கொள்கைகளைக் கடைப்பிடிக்காமலுமிருந்தால், அப்போது அதனால் அறுதியான உயர்ச்சியைக் கொண்டிருக்கவும் எப்போதும் எங்கும் அறுதியான முன்னேற்றத்தை வைத்துக்கொள்ளவும் இயலும். வரலாற்றில் இத்தகைய அறுதியான உயர்ச்சி ஒரு யுத்தத்தினதோ ஒரு போர் இயக்கத்தினதோ ஆரம்பக் கட்டங்களில் அரிதாகவே காணக்

கிடைக்கிறது, ஆனல் அவற்றின் இறுதிவாக்கில் காணப் படுகிறது. உதாரணமாக, முதலாம் உலக யுத்தத்தில் ஜெர்மனி யின் சரணுகதி ஏற்படவிருந்த தறுவாயில் உடன்படிக்கை வல்ல ரசுகள் அறுதியாக உயர்வானவையாகின, ஜெர்மனி அறுதி யாகத் தாழ்வானதாயிற்று, எனவே ஜெர்மனி தோற்கடிக்கப் பட்டது, உடன்படிக்கை வல்லரசுகள் வெற்றியீட்டின; இது யுத்தத்தின் இறுதிவாக்கிலான அறுதியான உயர்ச்சிக்கும் தாழ்ச் சிக்கும் ஒரு உதாரணம். மீண்டும், எமது படை தைஅல்ச்சு வாங்கில் வெற்றி பெறுவதற்குமுன் அங்கிருந்த தனிமைப்படுத் தப்பட்ட ஜப்பானியப் படைகள் கடும் சண்டைக்குப் பின் அறுதியான தாழ்ச்சிக்குத் தள்ளப்பட்டன, எமது படைகள் அறுதியான உயர்ச்சியை அடைந்தன, எனவே எதிரி தோற் கடிக்கப்பட்டான், நாம் வெற்றியீட்டினேம்; இது ஒரு போரி யக்கத்தின் இறுதிவாக்கிலான அறுதியான உயர்ச்சிக்கும் தாழ்ச் சிக்கும் ஒரு. உதாரணம். ஒரு யுத்தம் அல்லது போரியக்கம் ஒப்புநோக்கான உயர்ச்சி, அல்லது சமத்துவம் உள்ள நிலே மையிலும் முடிவுறக் கூடும், அப்போது யுத்தத்தில் சமரசம் அல்லது போரியக்கத்தில் தேக்க நிலே ஏற்படுகிறது. ஆனல் பொதுவாக அறுதியான உயர்ச்சியும் தாழ்ச்சியுமே வெற்றி யையும் தோல்வியையும் முடிவாக்குகின்றன. இவையெல்லாம் ஒரு யுத்தத்தின் அல்லது போரியக்கத்தின் இறுதிக்கே பொருந் தும், ஆரம்பத்திற்கல்ல. சீன-ஜப்பானிய யுத்தத்தின் இறுதிப் பலாபலன் ஜப்பான் அறுதியான தாழ்ச்சியுடையதாகித் தோற் கடிக்கப்படுவதும் சீஞ அறுதியான உயர்ச்சியுடையதாகி வெற் றியீட்டுவதுமாகவே இருக்கும் என முற்கூறலாம். ஆனல் தற்போது உயர்ச்சி அல்லது தாழ்ச்சி இரண்டில் எந்தத் தரப் பிற்கும் அறுதியானதல்ல, ஒப்புநோக்கானதே. ஜப்பான் அதன்

ராணுவ, பொருளாதார, அரசியல்-ஸ்தாபன வலிமையின் சாத கத் தன்மைகளைக் கொண்டு ராணுவ, பொருளாதார, அரசியல்-ஸ்தாபன பலவீனத்தையுடைய எம்மைவிட உயர்ச்சியை அனு பவிக்கின்றது, இது அதன் முன்னேட்டத்திற்கான அடிப்படை யைத் தருகின்றது. ஆனல் அதன் ராணுவ சக்தியும் இதர சக்தியும் தொகையளவில் அதிகமாயில்லாததாலும் அதற்கு வேறு பாதகமான அம்சங்கள் இருப்பதாலும், அதன் உயர்ச்சி அதன் சொந்த முரண்பாடுகளாலேயே குறைக்கப்பட்டுள்ளது. சீனவிற்குள்ளே, அது எமது பாரிய பிரதேசத்தையும் பெரும் ஜனத்தொகையையும் பெருந்தொகையான துருப்புக்களையும் உறுதியான தேச விசால எதிர்ப்பையும் எதிர்ப்பட்டுள்ளதால், அதன் உயர்ச்சி மேற்கொண்டும் குறைக்கப்பட்டுள்ளது. எனவே ஜப்பானின் பொதுவான நிலைமை ஒப்புநோக்கான உயர்ச்சி மட்டுமேயாக ஆகியுள்ளது, அதனல் அதன் முன்னேட்டத்தைப் பிரயோகிக்கவும் பேணவுமான வல்லமையும் வரையறைப் படுத்தப்பட்டு அவ்வாறே ஒப்புநோக்கானதாக ஆகியுள்ளது. சீனவைப் பொறுத்தவரை, அதன் தாழ்வான பலம் காரண மாக யுத்ததந்திர ரீதியில் ஓரளவு செயலற்ற நிலையிலிடப் பட்டிருந்தாலும் அது பிரதேசத்திலும் ஜனத்தொகையிலும் துருப்புக்களிலும் அளவால் உயர்வானதோடு, அதன் மக்களி னதும் சேனையினதும் துணிவாலும் எதிரியிடத்தில் அவர்கள் கொண்டுள்ள தேசபக்த வெறுப்பாலும் உயர்வானதாகும்; இந்த உயர்ச்சி, பிற சாதக அம்சங்களுடன் சேர்ந்து, ராணுவ, பொருளாதார, பிற வலிமைகளிலான அதன் தாழ்ச்சியின் அளவைக் குறைத்து, அதை ஒப்புநோக்கான யுத்ததந்திர ரீதி யான தாழ்ச்சியாக மாற்றுகின்றது. இது சீனவின் செயலின் மையின் அளவையும் குறைக்கிறது, எனவே அதன் யுத்ததந்திர

ரீதியான நிலை ஒப்புநோக்கான செயலின்மை நிலை மட்டுமே. இருப்பினும் எந்த விதச் செயலின்மையும் ஒரு பாதக அம்சம், அதை உதறி எறிந்துவிட கடுமையாக முயல வேண்டும். ராணுவ ரீதியில், இவ்வாறு செய்வதற்கான வழி உறுதியுடன் வெளிப் புற முனைகளில் விரைவாக வெற்றி தோல்வி முடிவாகும் தாக்குதல் யுத்தம் நடத்துவதும், எதிரியின் பின்புறத்தில் கொரில்லா யுத்தம் தொடுப்பதும், அவ்வாருக பல நடமாட்ட, கொரில்லா யுத்தப் போரியக்கங்களில் ஸ்தல வாரியாக மிகுதியான உயர்ச்சியையும் முன்னேட்டத்தையும் ஈட்டிக்கொள்வதுமே. பல போரியக்கங்களில் இத்தகைய ஸ்தல வாரியான உயர்ச்சியினதும் முன்னேட்டத்தினதும் மூலம் எம்மால் சிறிது சிறிதாக யுத்ததந்திர ரீதியான உயர்ச்சியையும் யுத்ததந்திர ரீதியான முன்னேட்டத்தையும் சிருஷ்டித்துக்கொள்ளவும் எம்மை யுத்ததந்திர ரீதியான தாழ்ச்சியிலும் செயலின்மையிலுமிருந்து மீட்டுக் கொள்ளவும் இயலும். முன்னேட்டத்திற்கும் செயலின்மைக்குமிடையிலும் உயர்ச்சிக்கும் தாழ்ச்சிக்கும் இடையிலுமான உட் தொடர்பு இத்தகையதே.

81. இதிலிருந்து நாம் முன்னேட்டம் அல்லது செயலின்மைக்கும் யுத்தத்தின் அகநிலைப்பட்ட வழிநடத்தலுக்கும் இடையிலான சம்பந்தத்தையும் விளங்கிக் கொள்ள முடிகிறது. ஏற்கனவே விளக்கப்பட்டுள்ளவாறு, யுத்ததந்திர ரீதியில் எமது ஒப்புநோக்கான தாழ்ச்சியும் செயலின்மையுமாகிய நிலைமையிலிருந்து மீள்வது சாத்தியம்; அதற்கான முறை பல இடங்களில் ஸ்தல வாரியான உயர்ச்சியையும் முன்னேட்டத்தையும் சிருஷ்டித்து, அவ்வாருக எதிரிக்கு ஸ்தல வாரியாக உயர்ச்சியும் முன்னேட்டமும் இல்லாமற் செய்து அவனைத் தாழ்ச்சியிலும் செயலின்மையிலும் ஆழ்த்துவதாகும். இந்த ஸ்தல வாரியான வெற்

றிகள் ஒன்ருகச் சேர்ந்து எமக்கு யுத்ததந்திர ரீதியான உயர்ச்சியும் முன்னேற்றமுமாகவும் எதிரிக்கு யுத்ததந்திர ரீதியான தாழ்ச்சியும் செயலின்மையுமாகவும் ஆகும். இத்தகைய ஒரு மாற்றம் சரியான அகநிலைப்பட்ட வழிகாட்டலில் தங்கியுள்ளது. ஏன்? காரணம், நாம் உயர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் முயல்கையில் எதிரியும் அவ்வாறே செய்கிருன்; இந்தக் கோணத்திலிருந்து பார்க்கையில் யுத்தம் ராணுவ சக்திகளும் நிதி வசதிகளும் போன்ற லௌகீக நிலைமைகளின் அடிப்படையில் உயர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்குமான எதிரெதிரான சேனைகளின் போராட்டத்தில் அவற்றின் தளகர்த்தர்களிடையிலான அகநிலைப்பட்ட திறமைப் போட்டியாகும். இப்போட்டியினின்றும் வெற்றியாளர் ஒருவரும் தோல்வியுற்றவரொருவரும் வருகின்றனர்; புறநிலையான லௌகீக நிலைமைகளிலுள்ள வேறுபாட்டை ஒருபுறம் விட்டுவிட்டுப் பார்த்தால், வெற்றியாளரின் வெற்றிக்குக் காரணம் அவசியம் சரியான அகநிலைப்பட்ட வழிநடத்தலும் தோல்வியாளரின் தோல்விக்குக் காரணம் அவசியம் தவருன அகநிலைப்பட்ட வழிநடத்தலுமாக இருக்கும். யுத்தமாகிய காரியம் மற்றெந்தச் சமூகக் காரியத்தையும் விட அதிகம் புதிரானதும் அதிக நிச்சயமின்மையைக் குணுதிசயமாகக் கொண்டதுமாகும், அதாவது, வேறு வார்த்தைகளில் கூறினுல், அது ''நிகழக் கூடியது'' என்ற ஒரு விஷயம் என்பதை நாம் ஒப்புக்கொள்கிறேம். இருப்பினும் யுத்தம் இயற்கைக்கு அப்பாற்பட்ட எதுவுமல்ல, நியதியால் ஆட்சி செய்யப்படும் ஒரு உலக நடப்பே. எனவேதான், ''பகைவனை அறிந்து, தன்னையும் அறிந்து கொண்டால், தோல்வியே இல்லாமல் நூறு சமர்களையும் நடத்த முடியும்'' என்ற சுன் வு சுவின் வாக்கியம்[20] ஒரு விஞ்ஞான ரீதியான உண்மையாக

விளங்குகிறது. தவறுகள் எதிரியையும் எம்மையும் பற்றி அறி யாமையினின்றும் எழுகின்றன; மேலும், யுத்தத்தின் அலாதி யான இயல்பு பல சமயம் இரு தரப்புகளையும் பற்றிப் பூரண அறிவு பெறுவதை அசாத்தியமாக்குகிறது; எனவேதான் ராணு வச் சூழ்நிலைகளையும் நடவடிக்கைகளையும் பற்றிய நிச்சயமின்மை எழுகிறது, தவறுகளும் தோல்விகளும் ஏற்படுகின்றன. ஆனால், ஒரு யுத்தத்திலான சூழ்நிலையும் நடவடிக்கைகளும் எவையா யிருந்தாலும் ஒருவர் அவற்றின் பொதுவான அம்சங்களையும் சாராம்சமான விஷயங்களையும் அறிய முடியும். ஒரு தளகர்த்தர் முதலாவதாகச் சகல விதமான வேவுபார்த்தல் மூலமும் பின் னர் சாதுரியமான அனுமானத்தினதும் கணிப்பீட்டினதும் மூல மும் தவறுகளைக் குறைப்பதும் பொதுவாகச் சரியான வழி காட்டல் தருவதும் சாத்தியம். ''பொதுவாகச் சரியான வழி காட்ட''லாகிய ஆயுதத்தைக் கையிற் கொண்டு நாம் கூடுத லான போர்களில் வெல்லவும் எமது தாழ்ச்சியை உயர்ச்சி யாகவும் எமது செயலின்மையை முன்னேட்டமாகவும் மாற் றவும் முடியும். இவ்வாறுதான் முன்னேட்டம் அல்லது செய லின்மை யுத்தத்தின் சரியான அல்லது தவருன அகநிலைப்பட்ட வழிகாட்டலுடன் தொடர்புபட்டுள்ளது.

82. பெரிய, சக்திமிக்க சேனைகள் தோற்கடிக்கப்பட்டதும் சிறிய, பலவீனமான சேனைகள் வெற்றிகள் ஈட்டியதுமான வர லாற்று உண்மையைப் பார்க்கும்போது, தவருன அகநிலைப்பட்ட வழிகாட்டல் உயர்ச்சியையும் முன்னேட்டத்தையும் தாழ்ச் சியாகவும் செயலின்மையாகவும் மாற்றமுடியும், சரியான அக நிலைப்பட்ட வழிகாட்டல் அதற்கு எதிர்ப்புறமான மாற்றத்தை ஏற்படுத்தமுடியும் என்பது மேலும் நம்பக்கூடியதாக ஆகிறது. சீன, அந்நிய வரலாற்றில் இத்தகைய உதாரணங்கள் பல உள்

ளன. சீனுவிலான உதாரணங்கள் ஜின், சூ அரசுகளுக்கிடையிலான செங்பூ போர்,[21] சூ, ஹன் அரசுகளுக்கிடையிலான செங்காஓ போர், சாஓ சேனைகளை ஹான் சின் தோற்கடித்த போர்,[22] ஸின், ஹன் அரசுகளுக்கிடையிலான குன்யாங் போர், யுஅன் ஷாஓவிற்கும் க்ஷாஓ க்ஷெளவிற்குமிடையிலான குவான்டு போர், வூ, வெய் அரசுகளுக்கிடையிலான சிபி போர், வூ, ஷு அரசுகளுக்கிடையிலான யிலிங் போர், சின், ஜின் அரசுகளுக்கிடையிலான ஃபெய்ஷுய் போர் முதலியன வாகும். வெளிநாடுகளிற் காணக் கிடைக்கும் உதாரணங்களில் நெப்போலியனின் போர் நடவடிக்கைகளில் அனேகமானவை[23] யும் சோவியத் யூனியனில் அக்டோபர் புரட்சியின் பின்பான உள்நாட்டு யுத்தமும் உள்ளன. இந்த உதாரணங்கள் எல்லாவற்றிலும் வெற்றி சிறிய படைகளால் பெரிய படைகளின் மேலாகவும், தாழ்வான படைகளால் உயர்வான படைகளுக்கு மேலாகவும் ஈட்டப்பட்டது. ஒவ்வொரு உதாரணத்திலும் பலவீனமான படை எதிரியின் ஸ்தல வாரியான தாழ்ச்சிக்கும் செயலின்மைக்கும் எதிராக தனது ஸ்தல வாரியான உயர்ச்சியையும் முன்னேட்டத்தையும் பிரயோகித்து, முதலில் எதிரிக்கு ஒரு கடும் தோல்வியை ஏற்படுத்திவிட்டு, பின்னர் அவனது எஞ்சிய படைகள் மேற்சென்று அவற்றை ஒவ்வொன்ருகத் துகளாக்கி, அவ்வாருக முழுப்படியான நிலைமையை உயர்ச்சியும் முன்னேட்டமும் சேர்ந்த ஒன்ருக மாற்றியது. ஆதியில் உயர்ச்சியுடையவனும் முன்னேட்டத்தைக் கொண்டவனுமிருந்த எதிரியின் விஷயம் மறுபுறமாக இருந்தது; அகநிலைப் பட்ட தவறுகளும் உள் முரண்பாடுகளும் காரணமாகச் சில சமயங்களில் அவன் தான் உயர்ச்சியையும் முன்னேட்டத்தையும் அனுபவித்த மிகத் திறமான அல்லது கணிசமானளவு

நல்ல ஸ்தானத்தை முற்ருக இழந்து, சேனையில்லாத தளபதி யாகவே ராஜ்யமில்லாத ராஜாவாகவே ஆனது உண்டு. இவ் வாருக, யுத்தம் நடத்தும் வலிமையில் உயர்ச்சி அல்லது தாழ்ச் சியே முன்னேற்றத்தை அல்லது செயலின்மையை நிர்ணயிக் கும் புறநிலையான அடித்தளமென்ற போதிலும், அது தன்ன ளவிலேயே உண்மையான முன்னேற்றமோ செயலின்மையோ அல்ல என்பதைக் காண முடிகிறது; ஒரு போராட்டத்தின், ஒரு திறமைப் போட்டியின் மூலம் மட்டுமே உண்மையான முன் னேற்றமோ செயலின்மையோ தோன்ற முடியும். போராட் டத்தில், சரியான அகநிலைப்பட்ட வழிகாட்டல் தாழ்ச்சியை உயர்ச்சியாகவும் செயலின்மையை முன்னேற்றமாகவும் மாற்ற முடியும், தவருன அகநிலைப்பட்ட வழிகாட்டல் அதற்கு எதி ரானதைச் செய்யமுடியும். ஒவ்வொரு ஆளும் ராஜவம்சமும் புரட்சிகரச் சேனைகளால் தோற்கடிக்கப்பட்டது என்ற உண் மை, வெறுமனே சிற்சில அம்சங்களிலான உயர்ச்சி மட்டும் முன்னேற்றத்தையோ, அதிலும் மேலாக, இறுதி வெற்றி யையோ உத்தரவாதம் செய்வதில்லை எனக் காட்டுகின்றது. தாழ்ச்சியும் செயலின்மையுமுள்ள தரப்பு உள்ள சூழ்நிலைகளுக் கேற்ப தீவிரமான அகநிலைப்பட்ட பிரயாசையினூடாகச் சிற் சில நிலைமைகளை ஏற்படுத்திக்கொள்வதன் மூலம் உயர்ச்சியும் முன்னேற்றமும் உடைய தரப்பிடமிருந்து முன்னேற்றத்தை யும் வெற்றியையும் பறித்துக் கொள்ளமுடியும்.

83. தவருன விளக்கத்தைக் கொண்டிருப்பதும் காத்திராப் பிரகாரம் அகப்பட்டுக்கொள்வதும் மேம்பாட்டையும் முன் முயற்சியையும் இழப்பதில் முடியலாம். எனவே, எதிரிக்கு வேண்டுமென்றே தவருன விளக்கத்தை ஏற்படுத்துவதும் பின் னர் அவன் மீது எதிர்பாராத் தாக்குதல்களைத் தொடுப்பதும்

உயர்ச்சியை அடைவதற்கும் முன்னேட்டத்தைப் பற்றிக் கொள்வதற்குமான ஒரு வழி — உண்மையில், ஒரு முக்கிய மான வழி. தவறுன விளக்கம் என்பது யாது? ''பாகுங் மலை யிலுள்ள ஒவ்வொரு புதரையும் மரத்தையும் ஒரு எதிரிப் படைவீரனுகக் காண்பது''[24] தவறுன விளக்கத்திற்கு ஓர் உதாரணம். ''கிழக்கு முகமாகப் பாசாங்கு காட்டிவிட்டு மேற்கில் தாக்குவது'' எதிரியிடத்தில் தவறுன விளக்கத்தை ஏற்படுத்தும் ஒரு வழி. வெகுஜன ஆதரவு தகவல் வெளிப் படுவதைத் தடுக்கப் போதியளவு நன்ருக உள்ளபோது பல சமயம் பல்வேறு எதிரியை ஏமாற்றும் தந்திரங்களைக் கையாண்டு எதிரி அவனது மேம்பாட்டையும் முன்முயற்சியையும் இழக்கும் விதத்தில் அவனைத் தவறுன கணிப்பீடுகளினதும் செயல்களி னதும் குழப்பத்திற்குள் இட்டுச் செல்வதில் வெற்றி காண்பது சாத்தியம். ''யுத்தத்தில் எவ்வளவு ஏமாற்றும் அதிகமில்லை'' என்ற முதுமொழியின் பொருள் சரியாக இதுவே தான். காத் திராப் பிரகாரம் அகப்பட்டுக்கொள்வது என்பதன் பொருள் என்ன? அதன் பொருள் தயாரின்றியிருப்பது என்பதாகும். தயாரிப்பு இல்லாவிட்டால் மேம்பாடென்பது உண்மையான மேம்பாடாக இருக்காது; முன்முயற்சியும் இருக்க முடியாது. இந்த அம்சத்தைக் கிரகித்துக்கொண்டால், தாழ்ந்ததாக இருக் கும் படை தயாராக இருந்தால், திடீர்த் தாக்குதல் மூலம் மேம்பாடான எதிரிகளை அடிக்கடி தோற்கடிக்க முடியும். நகர்ந்து கொண்டிருக்கும் ஒரு எதிரியைத் தாக்குவது சுலப மானது என நாம் கூறுவது சரியாக அவன் அப்போது எச்சரிக்கை யற்று, அதாவது, தயாரின்றி இருக்கின்றமையால்தான். இந்த இரு காரியங்களும் — எதிரியிடத்துத் தவறுன விளக்கத்தை ஏற் படுத்துவதும் அவன் மீது எதிர்பாராத் தாக்குதல்கள் தொடுப்

பதும் — யுத்தத்தின் நிச்சயமின்மையை எதிரிக்குத் தள்ளி விட்டு எமக்குச் சாத்தியமானளவு மிகக்கூடிய நிச்சயத்தைப் பெற்றுக்கொள்வதும், அவ்வாறாக மேம்பாட்டையும் முன் முயற்சியையும் வெற்றியையும் பெறுவதுமாகும். இவையனைத்தையும் அடைவதற்கு வெகுஜனங்களை மிகச் சிறந்த முறையில் ஸ்தாபனப்படுத்துவதே முற்தேவை. ஆகவே, எதிரிக்கு எதிரான மக்கள் அனைவரும் ஆயுதபாணிகளாகி, எதிரிமீது பரவலான திடீர்த் தாக்குதல் நடத்தவும், செய்தி வெளியேறுவதைத் தடுத்து, எம் சொந்தப் படைகளுக்கு மறைப்புத் தரவும் கூடியதாக அவர்களனைவரையும் எழுச்சியுறுத்துவது மிக மிக முக்கியம்; அவ்வாறாக எதிரி எமது படைகள் எங்கு, எப்போது தாக்கும் என்பதை அறியாமல் வைத்திருக்கப்படுவான், அவனின் தவறான விளக்கத்திற்கும் தயாரின்மைக்கும் ஒரு புறநிலையான அடித்தளமும் சிருஷ்டிக்கப்படும். நிலப் புரட்சி யுத்தக் காலகட்டத்தில் பலவீனமான சிறிய படையான சீனச் செஞ்சேனை ஸ்தாபன அணிதிரண்ட, ஆயுதமேந்திய வெகுஜனங்களின் பெரும் ஆதரவு பெற்றதால் அடிக்கடி போர்களை வெல்லக்கூடியதாயிருந்தது. தர்க்க ரீதியாக, தேசிய யுத்தமொன்று நிலப் புரட்சி யுத்தமொன்றைவிடப் பரவலான வெகுஜன ஆதரவைப் பெற்றிருக்க வேண்டும்; ஆனால், கடந்த காலத் தவறுகள்[25]ளின் விளைவாக மக்கள் ஸ்தாபனரீதியில் அணிதிரளாத நிலையிலும் எமது இலட்சியத்திற்குச் சேவை செய்ய உடனடியாகக் கவரப்பட முடியாமலும் இருக்கின்றனர், சில சமயம் எதிரியால் உபயோகிக்கக்கூடப்படுகின்றனர். மக்களைப் பரந்த அளவில் உறுதியுடன் அணிதிரட்டுவதே யுத்தத்தின் சகல தேவைகளையும் பூர்த்திசெய்ய எடுக்க எடுக்கக் குறைவுறாத வளங்களைப் பெற்றுக் கொள்வதற்கான ஒரே வழி.

மேலும், அது எதிரியை ஏமாற்றுவதன் மூலமும் காத்திராப் பிரகாரம் அகப்படுத்துவது மூலமும் அவனைத் தோற்கடிப்பதான எமது தந்திரோபாயங்களை அமுல்படுத்துவதிலும் நிச்சயம் ஒரு பெரும் பங்கை வகிக்கும். நாம் ஸொங்கின் ராஜா ஸியாங் அல்ல, அவனது மந்த புத்தித் தர்மங்கள்[26] எமக்கு உபயோகமில்லை. வெற்றியை ஈட்டுவதற்கு நாம் எதிரியின் கண்களையும் காதுகளையும் அடைத்து அவனைக் குருடும் செவிடுமாக்கவும், அவனது தளகர்த்தர்களின் மனங்களில் குழப்பத்தைச் சிருஷ்டித்து அவர்களைப் பைத்திய நிலைக்குத் தள்ளவும் வேண்டும். மேற் கூறியது எல்லாம் முன்னேட்டம் அல்லது செயலின்மை யுத்தத்தின் அகநிலைப்பட்ட வழிகாட்டலுடன் கொண்ட தொடர்பு ஆகும். இத்தகைய அகநிலைப்பட்ட வழிகாட்டல் ஜப்பானைத். தோற்கடிப்பதற்கு இன்றியமையாதது.

84. ஜப்பான் தன் ராணுவ வலிமை, எமது கடந்த கால, தற்கால அகநிலைப்பட்ட தவறுகளைப் பயன்படுத்திக் கொள்வது ஆகியவை காரணமாகத் தன் தாக்குதற் கட்டத்தில், பெரும்படியாக, முன்னேட்டத்தை வைத்திருந்துள்ளது. ஆனல், அதன் உள்ளியல்பான பல பாதக அம்சங்களும் அதுவும் யுத்தத்தின்போது இழைத்துள்ள அகநிலைப்பட்ட தவறுகளும் (இவை பற்றிப் பின்னர் விவரமாகக் கூறுவோம்) காரணமாகவும், எமது பல சாதக அம்சங்கள் காரணமாகவும் அதன் முன்னேட்டம் ஓரளவிற்குக் குறையத் தொடங்குகின்றது. தைஅல்ச்சுவாங்கிலான எதிரியின் தோல்வியும் ஷன்சி மாகாணத்தில் அவனது இக்கட்டும் இதைத் தெளிவாக நிரூபிக்கின்றன. எதிரியின் பின்புறத்தில் கொரில்லா யுத்தத்தின் பரவலான அபிவிருத்தி இடங்கொண்ட பகுதிகளிலான அவனது காவல் படைகளை முற்றுகச் செயலற்ற ஒரு நிலையில்

இட்டுள்ளது. அவன் இன்னும் யுத்ததந்திர ரீதியில் தாக்குதலிலீடுபட்டுள்ளான், இன்னும் முன்னேட்டத்தைக் கொண்டிருக்கிறன் என்ற போதிலும் அவனது யுத்ததந்திர ரீதியான தாக்குதல் முடிவிற்கு வரும்போது அவனது முன்னேட்டமும் முடிவிற்கு வரும். எதிரியின் துருப்புக்கள் பற்றுக்குறை அவன் தாக்குதலை எல்லையின்றி நடத்திக்கொண்டே போவதை அசாத்தியமாக்கும். இது எதிரியால் முன்னேட்டத்தை நிலையாக வைத்துக்கொள்ள முடியப் போவதில்லையென்றமைக்கு முதற் காரணம். போரியக்கங்களிலான எமது தாக்குதல் யுத்தமும் எதிரி அணிகளுக்குப் பின்புறத்திலான எமது கொரில்லா யுத்தமும், பிற அம்சங்களுடன் சேர்ந்து, எதிரி ஏதோ குறிப்பிட்ட ஒரு அந்தத்தில் தன் தாக்குதலை நிறுத்த வேண்டியாவதற்கும் தன் முன்னேட்டத்தை நிலையாக வைத்துக்கொள்ள முடியாமற் போவதற்குமான இரண்டாவது காரணமாக அமைகின்றன. சோவியத் யூனியன் இருப்பதும் சர்வதேச நிலைமையிலான இதர மாற்றங்களும் மூன்ருவது காரணமாக அமைகின்றன. இவ்வாருக, எதிரியின் முன்னேட்டம் வரையறைப்பட்டது, அது தகர்க்கப்பட முடியும் என்பதைக் காண முடிகிறது. ராணுவ நடவடிக்கைகளில் சீனுவினுல் போரியக்கங்களிலும் சமர்களிலும் தன் பிரதான படைகளின் தாக்குதல் யுத்தத்தைத் தளரவிடாது நடத்தவும், எதிரியின் பின்புறத்தில் கொரில்லா யுத்தத்தைத் தீவிரமாக விருத்தி செய்யவும், மக்களை அரசியல் ரீதியில் பரந்த அளவில் அணிதிரட்டவும் முடிந்தால், நாம் சிறிது சிறிதாக யுத்ததந்திர ரீதியான முன்னேட்டம் உள்ள நிலையொன்றைக் கட்டிவளர்த்துக்கொள்ள இயலும்.

85. இனி நாம் வளைந்துகொடுக்கும் தன்மையை விவாதிப்போம். வளைந்துகொடுக்கும் தன்மை என்பது என்ன? அது

முன்னேட்டம் ராணுவ நடவடிக்கைகளிற் திட்டவட்டமாகச் செயற்படுத்தப்படுவதாகும்; ஆயுதப் படைகளின் வளைந்துகொடுக்கும் விதத்திலான பிரயோகப்படுத்தலாகும். ஆயுதப் படைகளின் வளைந்துகொடுக்கும் விதத்திலான பிரயோகப்படுத்தலே ஒரு யுத்தத்தை வழிநடத்துவதில் மையமான, நன்கு செய்ய மிகக் கடினமான பணியாகும். யுத்தமாகிய காரியம், சேனையையும் மக்களையும் ஸ்தாபன ரீதியில் அணிப்படுத்துவதும் போதனையூட்டுவதும் போக, துருப்புக்களைச் சண்டையில் உபயோகிப்பதுமாகும்; இக்காரியங்களெல்லாம் சண்டையில் வெல்வதற்காகச் செய்யப்படுபவை. சேனையொன்றை அணிதிரட்டுவது முதலானவை கஷ்டம் என்பது உண்மைதான், ஆனுல் அதை உபயோகப்படுத்துவது, குறிப்பாக, பலவீனமானவர்கள் பலமானவர்களுக்கு எதிராகச் சண்டையிடும் போது உபயோகப்படுத்துவது இன்னும் அதிக கடினமானது. அவ்வாறு செய்வதற்கு மிக உயர்ந்த தரமான அகநிலைப்பட்ட திறமை தேவை, யுத்தத்திற்கே அலாதியான குழப்பத்தையும் விளக்கமின்மையையும் நிச்சயமின்மையையும் கடப்பதும் அதில் ஒழுங்கையும் தெளிவையும் நிச்சயத்தையும் கண்டுபிடிப்பதும் தேவை; அவ்வாருக மட்டுமே ஆணையிடலில் வளைந்துகொடுக்கும் தன்மை அடையப் பெற முடியும்.

86. ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தத்திற்கான கள நடவடிக்கைகளின் அடிப்படைக் கோட்பாடு வெளிப்புற முனைகளிலான விரைவாக வெற்றி தோல்வி முடிவாகும் தாக்குதல் யுத்தமாகும். இந்தக் கோட்பாட்டை நடைமுறைப்படுத்துவதற்குப் படைகளைச் சிதறலாகப் பரவுவதும், ஒன்ருகக் குவிப்பதும், விரிந்த முறையில் முன்னேறுவதும் குவிந்து வந்து தாக்குவதும், தாக்குதலும் தற்காப்பும், சாடுதலும் நகராதபடி தடுத்து வைத்த

லும், சுற்றிவளைத்தலும் பக்கவாடுகளைச் சுற்றி அடைப்பதும், முன்னேறுவதும் பின்வாங்குவதும் ஆகியன போன்ற பல்வேறு தந்திரோபாயங்களும் முறைகளும் உள்ளன. இந்தத் தந்திரோபாயங்களை விளங்கிக்கொள்வது இலகு, ஆனல் இவற்றை வளைந்துகொடுக்கும் விதத்தில் உபயோகப்படுத்துவதும் மாற்றிக் கையாள்வதும் இலகுவேயல்ல. இதில் கேந்திரமான மூன்று இணைப்புகள் காலமும் இடமும் துருப்புக்களுமாகும். காலமும் இடமும் துருப்புக்களும் நன்கு தெரிந்தெடுக்கப்பட்டாலன்றி எந்த வெற்றியும் ஈட்டப்பட முடியாது. உதாரணமாக, நகர்ந்துகொண்டிருக்கும் எதிரிப் படையொன்றைத் தாக்குவதில் நாம் ஆக முந்தித் தாக்கிவிட்டோமானுல் நாம் எம்மை வெளிக்காட்டிக் கொண்டு எதிரிக்குத் தயாராவதற்கு ஒரு சந்தர்ப்பத்தை அளித்துவிடுவோம், ஆகப் பிந்தித் தாக்கினேமானுல் எதிரி முகாமிட்டுத் தன் படைகளைக் குவித்துக்கொண்டு விட்டிருக்கவும் அவ்வாருக எமக்கு வேலை கடினமாகிவிட்டிருக்கவும் கூடும். இதுவே காலம் பற்றிய பிரச்சினை. நாம் எதிரியின் இடது பக்கவாட்டில் ஒரு ஸ்தானத்தைத் தாக்குதலுக்குத் தெரிந்தெடுத்து அதுவே உண்மையில் எதிரியின் பலவீனமான ஸ்தானமாகவுமிருந்தால், வெற்றி இலகுவாயிருக்கும்; ஆனுல் நாம் வலது பக்கவாட்டைத் தெரிந்தெடுத்துத் தாக்கி ஒரு தடங்கலை எதிர்ப்பட்டோமானுல் ஒன்றுமே சாதிக்கப்பட மாட்டாது. இது இடம் பற்றிய பிரச்சினை. எமது படைகளின் குறிப்பிட்ட கூறென்று குறிப்பிட்ட ஒரு பணிக்கு உபயோகிக்கப்பட்டால் வெற்றி இலகுவாக இருக்கக் கூடும்; ஆனுல் அதே பணிக்கு மற்றெரு கூறு உபயோகிக்கப்பட்டால் பயன்களை ஈட்டுவது கடினமாக இருக்கக்கூடும். இது துருப்புக்கள் பற்றிய பிரச்சினை. நாம் தந்திரோபாயங்களை உபயோகிப்பது எவ்வாறு என்பதை

மட்டுமல்லாமல் அவற்றை மாற்றிக் கையாள்வது எவ்வாறு என்பதையும் அறிந்திருக்க வேண்டும். ஆணையிடுதலில் வளைந்து கொடுக்கும் தன்மைக்கு முக்கியமான பணி தாக்குதலிலிருந்து தற்காப்பிற்கோ தற்காப்பிலிருந்து தாக்குதலுக்கோ, முன்னேறுவதிலிருந்து பின்வாங்குவதற்கோ பின்வாங்குவதிலிருந்து முன்னேறுவதற்கோ, எதிரியை நகராதபடி தடுத்து வைத்திருப்பதிலிருந்து சாடுவதற்கோ சாடுவதிலிருந்து தடுத்து வைத்திருப்பதற்கோ, சுற்றிவளைப்பதிலிருந்து பக்கவாடுகளைச் சுற்றி அடைப்பதற்கோ பக்கவாடுகளைச் சுற்றி அடைப்பதிலிருந்து சுற்றிவளைப்பதற்கோ ஆகியன போன்ற மாற்றங்களைச் செய்வதும், அத்தகைய மாற்றங்களை இரு தரப்புகளிலுமான துருப்புக்களினதும் தரையமைப்பினதும் சூழ்நிலைகளின் பிரகாரம் தகுந்த விதத்திலும் சரியான காலத்திலும் செய்வதும் ஆகும். இது சமர்களில் ஆணையிடலுக்கும், போரியக்கங்களில் ஆணையிடலுக்கும், யுத்ததந்திர ரீதியான ஆணையிடலுக்கும் பொருந்தும்.

87. ''தந்திரோபாயங்களை மாற்றிக் கையாள்வதிலுள்ள திறமை சாமர்த்தியத்திற் தங்கியுள்ளது'' என்றனர் பண்டையோர்; இந்தத் ''திறமை''யை நாம் வளைந்துகொடுக்கும் தன்மையென்றும் கூறுகின்றோம். இது புத்திசாலியான தளகர்த்தரின் சாதனையாகும். வளைந்துகொடுக்கும் தன்மையென்றால் அதற்குக் கண்மூடித்தனமென்று பொருளல்ல; கண்மூடித்தனம் நிராகரிக்கப்பட வேண்டும். வளைந்துகொடுக்கும் தன்மை புறநிலையான சூழ்நிலைகளின் அடிப்படையில் ''தருணத்தைக் கணிப்பிட்டு, நிலைமையை மதிப்பீடு செய்துகொண்ட'' (இந்த ''நிலைமை'' என்றது எதிரியின் நிலைமையையும் எமது நிலைமையையும் தரையமைப்பையும் இன்னும் பிறவற்றையும் உள்

ளடக்குகிறது) பின், காலத்தோடு தகுந்த நடவடிக்கைகளை எடுக்கும் புத்திசாலியான தளகர்த்தரொருவரின் ஆற்றலாகும்; இந்த வளைந்துகொடுக்கும் தன்மையே ''தந்திரோபாயங்களை மாற்றிக் கையாள்வதிலுள்ள திறமை'' ஆகும். இந்தத் திற மையினடிப்படையில் நாம் வெளிப்புற முனைகளிலான விரை வாக வெற்றி தோல்வி முடிவாகும் தாக்குதல் யுத்தத்தில் அதிகமான வெற்றிகளை ஈட்டவும் சக்திகளின் பலாபலத்தை எமக்குச் சாதகமாக மாற்றவும், எதிரியின் மேலாக முன் ஞேட்டம் பெறவும், அவனை வென்று நசுக்கவும் இயலும், இவ்வாருக இறுதி வெற்றி எமக்கே உரியதாகும்.

88. இனி நாம் திட்டமிடுதல் பற்றி விவாதிப்போம். யுத் தத்திற்கே அலாதியான நிச்சயமின்மை காரணமாகப் பிற விஷயத்திற் காட்டிலும் யுத்தத்தைத் திட்டப்பிரகாரம் நடத் துவது மிக அதிகம் கடினமானது. இருப்பினும், ''தயாரிப்பு வெற்றியை உத்தரவாதம் செய்ய தயாரிப்பின்மை தோல் வியை விளைவிப்ப''தால் முற்கூட்டியே திட்டமிடுதலும் தயா ரிப்புகள் செய்தலுமின்றி யுத்தத்தில் வெற்றிபெற முடியாது. யுத்தத்தில் அறுதியான நிச்சயமெதுவும் கிடையாது, ஆயினும் கூட அது ஏதோ ஓரளவு ஒப்புநோக்கான நிச்சயம் இல்லாத தல்ல. நாம் எம் சொந்த நிலைமை பற்றி ஒப்புநோக்காக நிச்ச யமாக உள்ளோம். எதிரியின் நிலைமை பற்றி நாம் பெரிதும் நிச்சயமற்றிருக்கிருேம், ஆனுல் இதிலும் கூட நாம் அனுமா னிக்க அறிகுறிகளும், பின்பற்றத் தடயங்களும், யோசித்துப் பார்க்க தொடர்புகளும் நிகழ்ச்சிகளும் உள்ளன. இவை நாம் ஏதோ ஓரளவு ஒப்புநோக்கான நிச்சயமென அழைப் பதை ஆக்குகின்றன, அது யுத்தத்தில் திட்டமிடுதலுக்குப் புறநிலையான அடிப்படையொன்றைத் தருகின்றது. நவீன

தொழில் நுட்ப அபிவிருத்திகள் (தந்தித் தொடர்பு, ரேடியோ, விமானங்கள், மோட்டார் வாகனங்கள், புகையிரதங்கள், நீராவிக் கப்பல்கள் முதலியன) யுத்தத்தில் திட்டமிடலுக்கான சாத்தியப்பாடுகளைக் கூட்டியுள்ளன. இருப்பினும், யுத்தத்தில் மிக வரைப்பட்டதும் தற்காலிகமானதுமான நிச்சயம் மட்டுமே இருக்கின்றதாகையால், பூரணமான திட்டமிடலோ நிலையான திட்டமிடலோ கடினம்; திட்டமிடுதல் யுத்தத்தின் நகர்வுடன் (ஓட்டத்துடன், அல்லது மாற்றத்துடன்) மாறவும், யுத்தத்தின் விசாலத்தின் பிரகாரம் அளவில் வேறுபடவும் வேண்டும். சிறு அணிகளின் அல்லது கூறுகளின் தாக்குதலுக்கு அல்லது தற்காப்பிற்கு ஆன திட்டங்கள் போன்ற தந்திரோபாய ரீதியான திட்டங்கள் பல சமயம் ஒரு நாளிற் பல தடவைகள் மாற்றப்பட வேண்டியிருப்பதுண்டு. ஒரு போரியக்கத்திட்டம், அதாவது பெரிய வியூகங்களின் நடவடிக்கைத் திட்டம், பொதுவாகப் போரியக்கம் முடியும்வரை அப்படியே இருக்க இயலும், எனினும் அப்போரியக்கத்தின் போது அது பல சமயம் பகுதியளவிற்கும், சில சமயம் முற்றாகவும் கூட மாற்றப்படுவதும் உண்டு. சண்டையிடும் இரு தரப்புகளினதும் பொதுவான நிலைமையை அடிப்படையாகக் கொண்ட ஒரு யுத்ததந்திரத் திட்டம் இன்னும் அதிகம் நிலையானது, ஆனால் அதுவும் கூடக் குறிப்பிட்ட ஒரு யுத்ததந்திர ரீதியான கட்டத்திற்கு மட்டுமே பொருந்துவதும், யுத்தம் புதிய ஒரு கட்டத்தை நோக்கி நகரும்போது மாற்றப்பட வேண்டியதுமாகும். யுத்தத்தின் அளவிற்கும் சூழ்நிலைகளுக்கும் ஏற்றபடி தந்திரோபாய, போரியக்க, யுத்ததந்திர திட்டங்களை ஆக்குவதும் மாற்றுவதும் யுத்தத்தை வழிநடத்துவதில் ஒரு கேந்திர அம்சமாகும்; அதுவே யுத்தத்தில் வளைந்துகொடுக்கும் தன்மையின் திட்டவட்டமான

வெளிப்பாடு, வேறு வார்த்தைகளிற் கூறினல், அதுவும் தந்திரோபாயங்களை மாற்றிக் கையாள்வதில் திறமை. ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தத்தில் சகல மட்டங்களிலுமுள்ள தளகர்த்தர்கள் இதைக் கவனித்துக்கொள்ளவேண்டும்.

89. யுத்தத்தின் மாறும்தன்மை காரணமாகச் சிலர் யுத்தத் திட்டங்களோ கொள்கைகளோ ஒப்புநோக்காக நிலையானவையாக இருக்க முடியும் என்பதை முற்றிலும் மறுத்து, அத்தகைய திட்டங்களையும் கொள்கைகளையும் ''யாந்திரிக''மானவையென வர்ணிக்கின்றனர். இந்தக் கருத்துத் தவறானது. முந்திய பத்தியில் விளக்கியவாறு யுத்தத்தின் சூழ்நிலைகள் ஒப்புநோக்காக மட்டுமே நிச்சயமானவையும் யுத்தத்தின் ஓட்டம் (அல்லது நகர்வு, அல்லது மாற்றம்) துரிதமானதுமாகையால் யுத்தத் திட்டங்கள் அல்லது கொள்கைகள் ஒப்புநோக்காக மட்டுமே நிலையானவையாக இருக்க முடியும், அவை மாறும் சூழ்நிலைகளுக்கும் யுத்தத்தின் ஓட்டத்திற்கும் ஏற்பக் காலத்தோடு மாற்றிக் கொள்ள அல்லது திருத்திக்கொள்ளப்பட வேண்டும், இல்லையேல் நாம் யாந்திரிகவாதிகளாகிவிடுவோம் என்பதை நாம் பூரணமாக அங்கீகரித்தோம். ஆனல் ஒருவர் குறித்த காலகட்டங்களினூடே ஒப்புநோக்காக நிலையான யுத்தத்தின் திட்டங்களோ கொள்கைகளோ தேவை என்பதை மறுக்கக்கூடாது; இதை மறுப்பது தன்னையே மறுப்பதோடு யுத்தம் உட்பட அனைத்தையும் மறுப்பதாகும். யுத்தத்தின் சூழ்நிலைகள், நடவடிக்கைகள் இரண்டும் ஒப்புநோக்காக நிலையானவையாகையால் நாம் அவற்றினின்றும் பிறக்கும் யுத்தத் திட்டங்களுக்கும் கொள்கைகளுக்கும் ஒப்புநோக்காக நிலையான தன்மையைக் கொடுக்க வேண்டும். உதாரணமாக, வட சீனவில் யுத்தத்தின் சூழ்நிலைகள், எட்டாவது மார்க்க ராணு

வத்தின் சிதறிப் பரவிய போர் நடவடிக்கைகள் இரண்டுமே ஒரு குறிப்பிட்ட கட்டத்திற்கு ஒப்புநோக்காக நிலையானவை யாகையால் இக்கட்டத்தின்போது எட்டர்வது மார்க்க ராணு வத்தின் யுத்ததந்திர ரீதியான நடவடிக்கைக் கோட்பாட்டின், அதாவது, ''கொரில்லா யுத்தம் அடிப்படையானது, ஆனால் சாதகமான சூழ்நிலைகளின்கீழ் நடமாட்ட யுத்தம் நடத்துவதற் கான வாய்ப்பு எதையும் நழுவவிடுவதில்லை'' என்ற கோட்பாட் டின், ஒப்புநோக்காக நிலையான தன்மையை அங்கீகரிப்பது அறவே அவசியம். ஒரு போரியக்கத்துக்கான கோட்பாடு செல்லுபடியானதாக இருந்துவரும் காலகட்டம் மேற்சொன்ன யுத்ததந்திரக் கோட்பாடொன்றினதை விடக் குறுகியதும், ஒரு தந்திரோபாயக் கோட்பாட்டினது அதையும் விடக் குறு கியதும் ஆகும், ஆனால் ஒவ்வொன்றும் ஒரு குறித்த காலகட் டத்திற்கு நிலையானது. இந்த விஷயத்தை மறுக்கும் எவருக் கும் யுத்தத்தைக் கையாள எந்த வழியுமிராது, அவர், இதுவும் சரியானதல்ல, அதுவும் சரியானதல்ல, அல்லது இதுவும் சரி, அதுவும் சரி எனக் கொள்ளும், திடமான கருத்துக்களற்ற, யுத்தம் பற்றிய ஒரு ஒப்புநோக்குவாதியாகிவிடுவார். குறித்த ஒரு காலகட்டத்திற்குச் சரியான ஒரு கோட்பாடு கூடச் சல னமுறுவதுதான் என்பதை எவரும் மறுக்கவில்லை; அப்படி யில்லாவிடில் ஒருபோதும் ஒரு கோட்பாடு கைவிடப்பட்டு மற் றொன்று கைக்கொள்ளப்பட மாட்டாது. ஆனால் அது வரை யறைகளுக்குள் சலனமுறுவது, அதாவது அதை நிறைவேற்ற மேற்கொள்ளப்படும் பல்வேறு யுத்த நடவடிக்கைகளினதும் எல்லைகளுக்குள் சலனமுறுவது, ஆனால் அது அதன் சாராம் சத்தைப் பொறுத்தவரை சலனமுறுவதல்ல; வேறு வார்த் தைகளிற் கூறினால், அது அளவில் சலனமுறுவது ஆனால் தன்

மையில் சலனமுறுவதல்ல. இத்தகைய ஒரு குறித்த காலகட்டத்திற்குள் இந்தச் சாராம்சம் நிச்சயமாகச் சலனமுறுவதில்லை; ஒரு குறித்த காலகட்டத்திற்குள் ஒப்புநோக்காக நிலையான தன்மை என்பதன் பொருள் இதுவே. சலனமடைவு அறுதியானதாக விளங்கும் முழுமையான யுத்தமாகிய பெரும்நதிக்குள், ஒவ்வொன்றும் ஒப்புநோக்காக நிலையானவையான பல்வேறு கட்டங்கள் உள்ளன; இதுவே யுத்தத் திட்டங்களின் அல்லது கொள்கைகளின் சாராம்சத்தைப் பற்றிய எமது கருத்து.

90. யுத்ததந்திரத்தில் உட்புற முனைகளிலான நீண்ட தற்காப்பு யுத்தத்தையும் போரியக்கங்களிலும் சமர்களிலும் வெளிப்புற முனைகளிலான விரைவாக வெற்றி தோல்வி முடிவாகும் தாக்குதல் யுத்தத்தையும், அத்துடன் முன்னோட்டம், வளைந்து கொடுக்கும் தன்மை, திட்டமிடல் ஆகியவற்றையும் எடுத்தாண்டுவிட்டதால் நாம் இனிச் சுருக்கமாகத் தொகுத்துக் கூறலாம். ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தத்திற்குத் திட்டமொன்று இருக்க வேண்டும். யுத்தத் திட்டங்கள், அதாவது யுத்ததந்திரத்தினதும் தந்திரோபாயங்களினதும் திட்டவட்டமான பிரயோகம் யுத்தத்தின் சூழ்நிலைகளுக்கு ஏற்ப மாற்றிக்கொள்ளப்படக் கூடியதாக அவை வளைந்துகொடுக்கும் தன்மையுடையவையாயிருக்கவேண்டும். எதிரிக்கும் எமக்குமிடையிலான நிலைமையை மாற்றக் கூடியதாயிருக்க நாம் எமது தாழ்ச்சியை உயர்ச்சியாகவும் செயலின்மையை முன்னோட்டமாகவும் மாற்றிக்கொள்ளுவதில் எப்போதும் கவனம் செலுத்த வேண்டும். அவை அனைத்தும் போரியக்கங்களிலும் சமர்களிலும் வெளிப்புற முனைகளிலான விரைவாக வெற்றி தோல்வி முடிவாகும் தாக்குதல் யுத்தத்திலும் யுத்ததந்திரத்தில் உட்புற முனைகளிலான நீண்ட தற்காப்பு யுத்தத்திலும் வெளிப்பாடடைகின்றன.

## நடமாட்ட யுத்தம்,
## கொரில்லா யுத்தம், ஸ்தான யுத்தம்

**91.** உள்ளடக்கத்தில் எமது யுத்தம், யுத்ததந்திர ரீதியான உட்புற முனைகளும் நீண்டகால யுத்தமும் தற்காப்புமாகிய கட்டமைப்பிற்குள்ளாகப் போரியக்கங்களிலும் சமர்களிலும் வெளிப்புற முனைகளிலான விரைவாக வெற்றி தோல்வி முடிவாகும் தாக்குதல் யுத்தமாகும்; வடிவில் அது நடமாட்ட யுத்தமாகும். நடமாட்ட யுத்தமே கிரமமான சேனைகள் விசாலமான முனைகள் நெடுகிலும் பெரிய நடவடிக்கைப் பிரதேசங்களிலும் வெளிப்புற முனைகளில் விரைவாக வெற்றி தோல்வி முடிவாகும் தாக்குதல் போரியக்கங்களையும் சமர்களையும் நடத்தும் வடிவம். அதே நேரத்தில் அது இத்தகைய தாக்குதற் போர்களுக்கு அனுசரணை செய்ய அவசியமான போது நடத்தப்படுவதான ''நடமாட்டத் தற்காப்''பையும் உள்ளடக்குகின்றது; அது இரண்டாம் பட்சமான பங்கை வகிக்கும் ஸ்தானத் தாக்குதலையும் ஸ்தானத் தற்காப்பையும் உள்ளடக்குகின்றது. அதன் குணதிசயங்கள் கிரமமான சேனைகளும், போரியக்கங்களிலும் சமர்களிலும் மேம்பாடான படைபலமும், தாக்குதலும், மாறும் தன்மையுமாகும்.

**92.** சீனவிடம் பிரமாண்டமான பிரதேசமும் பெருந்தொகையான படைவீரர்களுமுண்டு, ஆனல் அதன் துருப்புக்கள் போதாத சாதன வசதியும் பயிற்சியுமுடையவை; மறுபுறத்தில், எதிரியின் படைகள் எண்ணிக்கையிற் போதாதவை, ஆனல் நன்கு சாதன வசதியும் பயிற்சியும் பெற்றவை. இந்த நிலைமையில் நாம் எமது பிரதான போர்நடவடிக்கை முறை

யாகத் தாக்குதல் நடமாட்ட யுத்தத்தைக் கைக்கொள்ளவும், அதற்குத் துணையாகப் பிற யுத்தமுறைகளைக் கைகொள்ளவும் அவற்றை எல்லாம் நடமாட்ட யுத்தமாக ஒன்றிணைக்கவும் வேண்டுமென்பதில் ஐயமே கிடையாது. நாம் ''பின்வாங்குவது மட்டுமே, ஒருபோதும் முன்னேறுவதில்லை'' என்ற பயந்தோடும்வாதத்தை எதிர்க்கவும், அதே நேரத்தில் ''முன்னேறுவது மட்டுமே, ஒருபோதும் பின்வாங்குவதில்லை'' என்ற வெறும் அசட்டுத்துணிச்சல்வாதத்தையும் எதிர்க்கவும் வேண்டும்.

**93.** நடமாட்ட யுத்தத்தின் குணாதிசயங்களில் ஒன்று மாறும் தன்மையாகும், ஒரு களச்சேனையைப் பெரும் அடிகளெடுத்து முன்னேறவும் பின்வாங்கவும் அனுமதிப்பது மட்டுமல்லாமல், அது அவ்வாறு செய்வது தேவையானதுமாகும். இருப்பினும், அதற்கும் ஹான் ஃபூ-சி ரகமான பயந்தோடும்வாத[27]த்திற்கும் எந்தச் சம்பந்தமுமில்லை. யுத்தத்தின் முதன்மையான தேவை எதிரியை அழிப்பது, மற்றத் தேவை தன்னைப் பேணுவது. தன்னைப் பேணுவதன் நோக்கம் எதிரியை அழிப்பது, மறுபுறம், எதிரியை அழிப்பதே தன்னைப் பேணுவதற்கான மிகப்பயன் தரும் வழிவகை. எனவே நடமாட்ட யுத்தம் எந்த வகையிலும் ஹான் ஃபூ-சி போன்ற நபர்களுக்கு ஒரு சாக்குப் போக்குமல்ல, ஒருபோதும் முன்னோக்கியே செல்லாமல் பின்னோக்கி மட்டுமே நகர்வதென என்றுமே பொருள்படுவதுமல்ல; நடமாட்ட யுத்தத்தின் அடிப்படையாகத் தாக்குதலாகிய இயல்பை நிராகரணம் செய்வதான அந்த வகையான ''நகர்தல்'' நடைமுறையில் சீனவை, அது பாரியதாக இருப்பினும்கூட, இல்லாமற் போகும்படி ''நகர்த்தி''விடும்.

**94.** இருப்பினும், நாம் வெறும் அசட்டுத் துணிச்சல்வா

தமென அழைக்கும், ''முன்னேறுவது மட்டுமே, ஒருபோதும் பின்வாங்குவதில்லை'' என்ற மற்றக் கருத்தும் தவறானது. நாம் போரியக்கங்களிலும் சமர்களிலும் வெளிப்புற முனைகளிலான விரைவாக வெற்றி தோல்வி முடிவாகும் தாக்குதல் யுத்தத்தைச் சாராம்சமாகக் கொண்டதான நடமாட்ட யுத்தத்தைக் கோரு கிறோம்; அது இரண்டாம் பட்சமான பங்கை வகிக்கும் ஸ்தான யுத்தத்தையும், ''நடமாட்டத் தற்காப்''பையும், பின்வாங் குதலையும் உள்ளடக்குகிறது; இவையின்றி நடமாட்ட யுத்தம் பூரணமாக நடத்தப்பட முடியாது. வெறும் அசட்டுத் துணிச் சல்வாதம் பல சமயம் பிரதேசத்தை இழப்பதற்கு அஞ்சு வதினின்றும் எழுவதான ராணுவக் குறுகிய பார்வையாகும். வெறும் அசட்டுத் துணிச்சல்வாதி ஒருவர் நடமாட்ட யுத்தத் தின் குணதிசயங்களிலொன்று, ஒரு களச்சேனையைப் பெரும் அடிகளெடுத்து முன்னேறவும் பின்வாங்கவும் அனுமதிப்பது மட்டுமல்லாமல் அது அவ்வாறு செய்வதைத் தேவையாக்கு வதுமான மாறும் தன்மையாகும் என்பதை அறியாதவர். ஆக்கமான ஒரு அம்சத்தில், எதிரியை அவனுக்குப் பாதகமான, ஆனால் எமக்குச் சாதகமான ஒரு சண்டைக்கு இழுப்பதற்கு வழமையாக, அவன் நகர்ந்துகொண்டிருப்பதும், சாதகமான தரையமைப்பு, சேதப்படுத்தப்படக்கூடிய நிலையில் எதிரி இருப் பது, தகவல் வெளிப்படுவதைத் தடுக்கக் கூடிய உள்ளூர் மக் கள், எதிரியின் களைப்பும் தயாரின்மையும் ஆகியன போன்ற பல சாதக நிலைமைகள் எமக்கிருப்பதும் அவசியம். இதற்கு எதிரி முன்னேறுவது அவசியம், நாம் எமது பிரதேசத்தில் ஒரு பகு தியைத் தற்காலிகமாக இழக்கத் தயங்கக் கூடாது. ஏனெனில் எமது பிரதேசத்தில் ஒரு பகுதியின் தற்காலிக இழப்பு நாம் எமது பிரதேசம் முழுவதினதும் நிரந்தரப் பேணலுக்காகவும்

இழக்கப்பட்ட பிரதேசத்தை மீட்பதற்காகவும் கொடுக்கும் விலை யாகும். ஆக்கமற்ற ஒரு அம்சத்தில் நாம் எமது படைகளின் பேணலுக்கு அடிப்படையான அபாயமேற்படுத்துவதான பாத கமான நிலையொன்றிற்குத் தள்ளப்படும் போதெல்லாம், எமக்கு எமது படைகளைப் பேணிக்கொள்வதற்கும் புதிய வாய்ப்புகள் தோன்றும்போது எதிரியைத் தாக்குவதற்குமாகப் பின்வாங் கத் துணிவிருக்க வேண்டும். இந்தக் கோட்பாட்டைத் தாம் அறியாமையால் வெறும் அசட்டுத் துணிச்சல்வாதிகள் நிலைமை பிரத்தியட்சமாயும் நிச்சயமாயும் பாதகமானதாயுள்ள போது கூட ஒரு நகரத்திற்காகவோ ஒரு சிறு பிரதேசத்திற்காகவோ போரிட்டுத் தீர்ப்பர்; அதன் விளைவாக அவர்கள் நகரத்தை யோ சிறு பிரதேசத்தையோ இழப்பது மட்டுமல்லாமல் தங் கள் படைகளைப் பேணவும் தவறுவர். நாம் எப்போதும் ''எதிரியை நெடுந்தூரம் உள்ளே இழுத்துச் செல்வ''தான கொள்கையை ஆதரித்துள்ளதற்குக் காரணம் சரியாக அது யுத்ததந்திர ரீதியிற் தற்காப்பிலீடுபட்டுள்ள ஒரு பலவீன மான சேனை பலமான சேனையொன்றிற்கு எதிராகக் கைக் கொள்ள வேண்டிய மிகப் பயனுள்ள ராணுவக் கொள்கையா கும் என்பதே.

95. ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தத்திலான யுத்த வடிவங்களில் நடமாட்ட யுத்தம் முதலாவதாகவும் கொரில்லா யுத்தம் இரண் டாவதாகவும் உள்ளன. யுத்தம் முழுமையிலும் நடமாட்ட யுத்தம் முதன்மையானது, கொரில்லா யுத்தம் துணையானது என நாம் கூறும்போது நாம் கருதுவது யுத்தத்தின் பெறுபேறு பிரதானமாகக் கிரமமான யுத்தத்தில், விசேஷமாக அதன் நடமாட்ட யுத்த வடிவத்தில் தங்கியுள்ளது என்பதும், கொரில் லா யுத்தத்தால் யுத்தத்தின் பெறுபேற்றை நிர்ணயிக்கும் பிர

தான பொறுப்பை வகிக்க இயலாது என்பதுமே. இருப்பினும் இதினின்றும் கொரில்லா யுத்தத்தின் பங்கு ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தத்தின் யுத்ததந்திரத்தில் முக்கியமில்லாதது எனக் கருதவில்லை. ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தம் முழுமையினதும் யுத்த தந்திரத்தில் அதன் பங்கு நடமாட்ட யுத்தத்தின் பங்கிற்கு மட்டுமே அடுத்தபடியானது, ஏனெனில், அதன் துணையின்றி எம்மால் எதிரியைத் தோற்கடிக்க இயலாது. இதைக் கூறுவதில் நாம் கொரில்லா யுத்தத்தை நடமாட்ட யுத்தமாக அபிவிருத்தி செய்யும் யுத்ததந்திரப் பணியையும் மனதிற்கொண்டு கூறுகிறோம். கொரில்லா யுத்தம் இந்த நீண்ட, கொடிய யுத்தம் பூராவினூடும் அப்படியே இருந்துவிடாது, மாறாக, ஒரு உயர்ந்த மட்டத்திற்கு எழும், நடமாட்ட யுத்தமாக அபிவிருத்தியடையும். இவ்வாறாக, கிரமமான யுத்தத்துக்குத் துணையாயிருப்பதும் கிரமமான யுத்தமாக மாறுவதுமே கொரில்லா யுத்தத்தின் யுத்ததந்திர ரீதியான இரட்டைப் பங்கு. சீனாவின் ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தத்தில் கொரில்லா யுத்தத்தின் முன்னுதாரணமற்ற விசாலத்தையும் நீடிப்பையும் கருதுமிடத்து, அதன் யுத்ததந்திர ரீதியான பங்கு மேலும் குறைத்து மதிப்பிட முடியாதது. ஆகவே, சீனாவிலான கொரில்லா யுத்தத்திற்கு அதன் தந்திரோபாய ரீதியான பிரச்சினைகள் மட்டுமல்லாது, அதன் அலாதியான யுத்ததந்திரப் பிரச்சினைகளும் உள்ளன. இதை நான் ஏற்கனவே, ''ஜப்பானிய-எதிர்ப்புக் கொரில்லா யுத்தத்தில் யுத்ததந்திரப் பிரச்சினைகள்'' என்ற கட்டுரையில் விவாதித்துவிட்டேன். மேலே சுட்டிக்காட்டியுள்ள படி, ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தத்தின் யுத்ததந்திர ரீதியான மூன்று கட்டங்களிலுமான யுத்த வடிவங்கள் பின்வருவனவாகும்: முதலாவது கட்டத்தில் நடமாட்ட யுத்தம் பிரதானமானதாக

இருக்கையில், கொரில்லா யுத்தமும் ஸ்தான யுத்தமும் துணை யானவை. இரண்டாவது கட்டத்தில் கொரில்லா யுத்தம் முதலிடத்திற்கு நகர்ந்து கொண்டு, நடமாட்ட யுத்தத்தாலும் ஸ்தான யுத்தத்தாலும் துணை செய்யப்பெறும். மூன்ருவது கட்டத்தில் நடமாட்ட யுத்தம் மீண்டும் பிரதான வடிவமாகி, ஸ்தான யுத்தத்தாலும் கொரில்லா யுத்தத்தாலும் துணைசெய் யப்பெறும். ஆனல் மூன்ருவது கட்டத்தின் நடமாட்ட யுத்தம் தொடர்ந்து ஆதியிலிருந்த கிரமமான படைகளாற் தனியாக மேற்கொள்ளப்பட மாட்டாது, ஒரு பகுதி, ஒரு வேளை கணி சமான முக்கியத்துவமுடைய ஒரு பகுதி, ஆதியில் கொரில்லாப் படைகளாக இருந்த, ஆனல் கொரில்லா யுத்தத்திலிருந்து நடமாட்ட யுத்தத்திற்கு முன்னேற்றம் அடைந்து விட்ட படை களால் மேற்கொள்ளப்படும். மூன்று கட்டங்களையும் எடுத்து நோக்கும் பொழுது சீனவின் ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தத்தி லான கொரில்லா யுத்தம் நிச்சயமாக இன்றியமையாதது. எமது கொரில்லா யுத்தம், மனிதகுலத்தின் யுத்த வரலாற்றில் ஈடிணையற்ற ஒரு பெரும் நிகழ்ச்சியாக விளங்கும். இக்கார ணத்தால், சீனவின் பல பத்து லட்சம் கிரமமான துருப்புக் களில் குறைந்தபட்சம் பல லட்சத்தினரை எதிரியாற் கைப்பற் றப்பட்டுள்ள சகல பகுதிகளெங்கணும் பரவும்படியும், வெகு ஜனங்களை ஆயுதமேந்தத் தட்டியெழுப்பும்படியும், கொரில்லா யுத்தம் நடத்துவதில் வெகுஜனங்களுக்குத் துணையாக இருக் கும்படியும் அனுப்புவது அத்தியாவசியம். அவ்வாறு அனுப் பப்படும் கிரமமான படைகள் இந்தப் புனித கடமையை உணர்வுபூர்வமாகப் பொறுப்பேற்க வேண்டும். தாம் பெரும் போர்களைக் குறைவாகவே செய்வதாலும் தற்போதைக்குத் தேசிய வீரர்களாகத் தோற்ருததாலும் தம் அந்தஸ்துத் தாழ்த்

தப்பட்டுவிட்டதாக எண்ணக்கூடாது. இத்தகைய எண்ணமெதுவும் தவறு. கொரில்லா யுத்தம் கிரமமான யுத்தமளவு விரைவான பயன்களை ஈட்டுவதோ புகழ் பரப்புவதோ அல்ல, ஆனால் ''நெடும் பயணம் குதிரையின் பலத்தைச் சோதிக்கின்றது, நீண்ட கருமம் ஒரு மனிதனின் உள்ளத்தைச் சோதிக்கிறது''; இந்த நீண்ட, குரூர யுத்தத்தில் கொரில்லா யுத்த முறை அதன் பிரமாண்டமான வலிமையைக் காண்பிக்கும்; அது உண்மையில் எவ்வித சாதாரணப் பணியுமேயல்ல. மேலும், இத்தகைய கிரமமான படைகள், சிதறிப் பரந்திருக்கும்போது கொரில்லா யுத்தமும் ஒன்று குவிந்திருக்கும்போது நடமாட்ட யுத்தமும் நடத்தலாம். எட்டாவது மார்க்க ராணுவம் இப்படியே செய்து வந்துள்ளது. எட்டாவது மார்க்க ராணுவத்தின் கோட்பாடு, ''கொரில்லா யுத்தம் அடிப்படையானது, ஆனால் சாதகமான சூழ்நிலைகளின் கீழ் நடமாட்ட யுத்தம் நடத்துவதற்கான வாய்ப்பு எதையும் நழுவவிடுவதில்லை'' என்பதாகும். இந்தக் கோட்பாடு முற்றும் சரியானது; இதை எதிர்ப்பவர்களின் கருத்துக்கள் தவறானவை.

96. சீனாவின் தற்போதைய தொழில் நுட்ப மட்டத்தில் ஸ்தான யுத்தம், தற்காப்பானதாயினும் தாக்குதலாயினும், பொதுவாக நடைமுறைச் சாத்தியமற்றது; இதிற்தான் எமது பலவீனம் வெளிப்பாடடைகிறது. மேலும், எதிரியும் எமது பிரதேசத்தின் விசாலத்தைப் பயன்படுத்தி எமது அரண்செய்யப்பட்ட ஸ்தானங்களைத் தாண்டிச் செல்லுகிறான். எனவே, எங்களைப் பொறுத்து ஸ்தான யுத்தம் முக்கியமான வழிவகையாக இருக்கமுடியாது, அதிலும் பார்க்க, பிரதான ஒரு வழிவகையாக இருக்க மேலும் முடியாது. ஆனால், யுத்தத்தின் முதலாம், இரண்டாம் கட்டங்களில், நடமாட்ட யுத்தத்தின்

வரம்பிற்குள்ளாகப் போரியக்கங்களில் ஸ்தலவாரியான ஸ்தான யுத்தத்தை அனுசரணைசெய்யும் பங்கில் உபயோகப்படுத்துவது சாத்தியமும் அவசியமுமாகும். எதிரியை ஒவ்வொரு அடியிலும் எதிர்த்து அவ்வாருக அவனது படைகளைத் தேய்ப்பதும் மேலும் காலம் பெறுவதுமான நோக்கத்திற்காக மேற்கொள்ளப்படும் அரை-ஸ்தான''நடமாட்டத் தற்காப்பு'' நடமாட்ட யுத்தத்தின் இன்னும் கூடிய அவசியமான ஒரு பகுதியாகும். சீனு தன்னுல் யுத்ததந்திர ரீதியான எதிர்த்தாக்குதலின் கட்டத்தில் ஸ்தானத் தாக்குதலின் பணிகளைப் பூரணமாக நடத்த இயலக் கூடியதாகத் தன் நவீன ஆயுதங்களைக் கூட்டிக்கொள்ள முயல வேண்டும். இந்த யுத்ததந்திர ரீதியான எதிர்த்தாக்குதல் கட்டத்தில் ஸ்தான யுத்தம் ஐயத்திற்கிடமின்றி மேலும் பெரிய பங்கை வகிக்கும், ஏனெனில் அப்போது எதிரி தன் ஸ்தானங்களை இறுகப் பிடித்தபடியிருப்பான்; நாம் நடமாட்ட யுத்தத்திற்குத் துணையாகச் சக்திமிக்க ஸ்தானத் தாக்குதல்களைத் தொடுத்தாலல்லாமல் எம்மால் இழக்கப்பட்ட எமது பிரதேசத்தை மீட்க இயலாதிருக்கும். இருப்பினும், மூன்ருவது கட்டத்திலும் கூட நாம் நடமாட்ட யுத்தத்தையே பிரதான யுத்த வடிவமாக ஆக்கச் சகல பிரயாசைகளையும் செலுத்த வேண்டும். ஏனெனில், யுத்தத்தை வழிநடத்தும் கலையும் மனிதனின் ஊக்கமான பங்கும், மேற்கு ஐரோப்பாவில் முதலாம் உலக யுத்தத்தின் பிற் பாதியில் நடத்தப்பட்டவாருன ஸ்தான யுத்தத்தில் பெரிதும் பயனற்றதாக்கப்பட்டன. யுத்தம் சீனுவின் பாரிய பிரதேசத்தில் நடத்தப்படுகின்றதாகையாலும் எமது தரப்பு கணிசமாக நீண்ட காலத்திற்குச் சாதன ரீதியில் குறைந்த வசதியே பெற்றதாயிருந்து வருமாகையாலும் யுத்தம் ''அகழிகளுக்கு வெளியே'' கொண்டுவரப்பட வேண்டியது இயற்

கையே. சீனுவின் சாதன ரீதியான நிலைமை சிறப்புற்றிருக்கும் மூன்றுவது கட்டத்தின்போது கூட அது அந்த வகையில் அதன் எதிரியை மிஞ்சுவது அரிது, எனவே அது உயர்ந்த நடமாட்ட யுத்தத்தில் பிரதான சிரத்தையைச் செலுத்த வேண்டியதா யிருக்கும்; அது இன்றிச் சீனுவினுல் இறுதி வெற்றியை ஈட்ட இயலாது. எனவே, ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தம் பூராவி னூடும் சீனு ஸ்தான யுத்தத்தைப் பிரதானமாகக் கைக்கொள் ளாது; பிரதானமான அல்லது முக்கியமான வடிவங்கள் நட மாட்ட யுத்தமும் கொரில்லா யுத்தமுமே. இந்த இரு யுத்த வடிவங்களும் யுத்தத்தை வழிநடத்தும் கலையும் மனிதனின் ஊக்கமான பங்கும் பூரணமாகச் செயல்பட இடமளிக்கும் — எமது துர்ப்பாக்கியத்தில் இது எவ்வளவு பெரிய ஒரு நற்பாக்கி யம்!

## தேய்க்கும் யுத்தமும் அழித்தொழிக்கும் யுத்தமும்

97. நாம் முன்னர் கூறியுள்ளவாறு, யுத்தத்தின் சாராம்சம் அல்லது குறிக்கோள் தன்னைப் பேணிக்கொண்டு எதிரியை அழிப் பதாகும். இந்தக் குறிக்கோளை அடைவதற்கு நடமாட்ட யுத்தம், ஸ்தான யுத்தம், கொரில்லா யுத்தம் ஆகிய மூன்று யுத்த வடிவங்கள் உள்ளன; இவை பயன்தரும் அளவில் வேறு படுவதால், பொதுவாகத் தேய்க்கும் யுத்தத்திற்கும் அழித் தொழிக்கும் யுத்தத்திற்குமிடையிலான வேறுபாடு தோன்று கிறது.

98. முதலில் நாம், ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தம் ஏககாலத்

தில் தேய்க்கும் யுத்தமும் அழித்தொழிக்கும் யுத்தமுமாகும் எனக் கூறலாம். ஏனெனில், எதிரி இன்னும் தனது பலத்தைப் பயன்படுத்துகிருன், தனது யுத்ததந்திர ரீதியான உயர்ச்சியையும் யுத்ததந்திர ரீதியான முன்னேட்டத்தையும் கொண்டிருக்கிருன், ஆகவே நாம் அழித்தொழிக்கும் போரியக்கங்களும் சமர்களும் நடத்திஞலல்லாமல் எம்மால் அவனது பலத்தைப் பயனுள்ள விதத்திலும் விரைவாயும் குறைக்கவும் அவனது உயர்ச்சியையும் முன்னேட்டத்தையும் தகர்க்கவும் இயலாது. எமக்கு இன்னும் எமது பலவீனம் உள்ளது, நாம் இன்னும் எமது யுத்ததந்திர ரீதியான தாழ்ச்சியிலும் செயலின்மையிலுமிருந்து விடுபடவும் இல்லை, ஆகவே நாம் அழித்தொழிக்கும் போரியக்கங்களும் சமர்களும் நடத்திஞலல்லாமல் எம்மால் எமது உள்நாட்டு சர்வதேச நிலைமைகளைச் சீர்ப்படுத்தவும் எமது பாதகமான ஸ்தானத்தை மாற்றிக் கொள்ளவும் காலம்பெற இயலாது. எனவே, அழித்தொழிக்கும் போரியக்கங்களே யுத்ததந்திர ரீதியில் தேய்த்தலாகிய குறிக்கோளை அடைவதற்கான வழிவகை. இந்த அர்த்தத்தில் அழித்தொழிக்கும் யுத்தம் தேய்க்கும் யுத்தமாகும். பிரதானமாக அழித்தொழித்தல் மூலம் தேய்ப்பதான முறையை உபயோகிப்பதால் தான் சீஞ நீண்டகால யுத்தம் நடத்த முடியும்.

99. ஆஞல் யுத்ததந்திர ரீதியான தேய்த்தலாகிய குறிக்கோள் தேய்க்கும் போரியக்கங்கள் மூலமும் அடையப்பெறலாம். பொதுவாகக் கூறிஞல் நடமாட்ட யுத்தம் அழித்தொழிக்கும் பணியை ஆற்றுகிறது, ஸ்தான யுத்தம் தேய்க்கும் பணியை ஆற்றுகிறது, கொரில்லா யுத்தம் இரண்டையும் ஏககாலத்தில் ஆற்றுகிறது; யுத்தத்தின் வடிவங்கள் மூன்றும் இவ்வாறு ஒன்றிலிருந்தொன்று வேறுபடுகின்றன. இந்த அர்த்தத்தில் அழித்

தொழிக்கும் யுத்தம் தேய்க்கும் யுத்தத்திலிருந்து வேறுபட்டது. தேய்க்கும் போரியக்கங்கள் நீண்ட யுத்தத்தில் இரண்டாம் பட்சமானவை, ஆனுல் அவசியமானவை.

100. தத்துவ ரீதியிலும் தேவைகளை ஒட்டியும் பேசுவதானுல், எதிரியின் படைகளைப் பெருமளவு குறைப்பதாகிய யுத்ததந்திர ரீதியான குறிக்கோளை அடைய வேண்டிச் சீனு அதன் தற்காப்புக் கட்டத்தில் பிரதானமாக நடமாட்ட யுத்தத்தாலும் ஓரளவிற்குக் கொரில்லா யுத்தத்தாலும் வகிக்கப்படும் பாத்திரமான அழித்தொழித்தலை மட்டுமின்றி, இரண்டாம் பட்சமானதாகிய ஸ்தான யுத்தத்தால் பிரதானமாயும் கொரில்லா யுத்தத்தால் ஓரளவிற்கும் வகிக்கப்படும் பாத்திரமான தேய்த்தலையும் பயன்படுத்தவேண்டும். தேக்க நிலைக் கட்டத்தில் நாம் எதிரியின் படைகளை மேற்கொண்டு பெரும் ரீதியில் குறைப்பதற்காகக் கொரில்லா யுத்தத்தாலும் நடமாட்ட யுத்தத்தாலும் நிறைவேற்றப்படும் அழித்தொழித்தலும் தேய்த்தலுமாகிய பாத்திரங்களைத் தொடர்ந்து பயன்படுத்த வேண்டும். இவையாவும் யுத்தத்தை நீண்ட காலமானதாக்குவதையும், பொதுவான சக்திகளின் பலாபலத்தைச் சிறிது சிறிதாக மாற்றுவதையும், எமது எதிர்த்தாக்குதலுக்கான சூழ்நிலைகளைத் தயார் செய்வதையும் குறிக்கோளாகக் கொண்டவை. யுத்த தந்திரரீதியான எதிர்த்தாக்குதலின்போது நாம், இறுதியில் எதிரியை விரட்டக்கூடியதாயிருக்கத் தொடர்ந்தும் அழித்தொழித்தல் மூலம் தேய்ப்பதான முறையைப் பயன்படுத்த வேண்டும்.

101. ஆனுல் உண்மையில், கடந்த பத்து மாதங்களில் எமது அனுபவம் நடமாட்ட யுத்தப் போரியக்கங்களிற் பல, அல்லது பெரும்பாலானவை கூட, தேய்க்கும் போரியக்கங்களாகின,

ஒருசில பிரதேசங்களில் கொரில்லா யுத்தம் அழித்தொழித்த லாகிய அதன் உரிய பாத்திரத்தைப் போதியளவு வகிக்கவில்லை என்பதாகும். இந்த நிலைமையின் ஆக்கமான அம்சம் நாம் எதிரியின் படைகளைக் குறைக்கவாவது செய்தோம், அது நீண்ட யுத்தத்திற்கும் எமது இறுதி வெற்றிக்கும் முக்கியத்துவம் வாய்ந் தது; நாம் எமது இரத்தத்தை வீணில் சிந்தவில்லை என்பதா கும். ஆனால் குறைபாடுகள், முதலாவதாக, நாம் எதிரியைப் போதியளவு குறைக்காததும், இரண்டாவதாக, எம்மால் கணி சமானளவு கடுமையான நஷ்டங்களைத் தவிர்க்க முடியாது போனதும், நாம் சிறிதே யுத்த ஆதாயம் கைப்பற்றியதுமாகும். இந்த நிலைமையின் புறநிலையான காரணத்தை, அதாவது போர் நுட்ப சாதனங்களிலும் துருப்புகளின் பயிற்சியிலும் எமக்கும் எதிரிக்குமிடையிலான ஏற்றத்தாழ்வை நாம் அங்கீகரிக்க வேண் டுமெனினும், தத்துவார்த்த ரீதியிலும் நடைமுறையிலும், எமது பிரதான படைகள் சூழ்நிலைகள் சாதகமாக உள்ள போதெல் லாம் பெரும் முயற்சியுடன் அழித்தொழிக்கும் போர்கள் நடத்த வேண்டுமென வற்புறுத்துவது அவசியம். அத்துடன், எமது கொரில்லாக் கூறுகள் சீர்குலைத்தலும் தொல்லை கொடுத்தலும் போன்ற குறிப்பிட்ட பணிகளை ஆற்றுவதற்குச் சுத்த தேய்க்கும் போர்கள் நடத்த வேண்டியுள்ள போதிலும், எதிரியின் படை களைப் பெரிதும் குறைக்கவும் எமது படைகளைப் பெரிதும் கூட் டவும் கூடியதாயிருக்கச் சூழ்நிலைகள் சாதகமான போதெல் லாம் அழித்தொழிக்கும் போரியக்கங்களையும் சமர்களையும் கோ ருவதும் வீரியத்துடன் நடத்துவதும் அவசியம்.

**102.** வெளிப்புற முனைகளிலான விரைவாக வெற்றி தோல்வி முடிவாகும் தாக்குதல் யுத்தத்திலான ''வெளிப்புற முனைக''ளும் ''விரைவாக வெற்றி தோல்வி முடிவாவ''தும் ''தாக்குத''லும்,

நடமாட்ட யுத்தத்திலான ''நடமாட்டத்தன்மை''யும் போர் நடவடிக்கை வடிவில் பிரதானமாகச் சுற்றிவளைப்பதும் பக்க வாடுகளைச் சுற்றி அடைப்பதுமான தந்திரோபாயங்களை உப யோகிப்பதில் வெளிப்பாடு பெறுகின்றன; எனவேதான் உயர் வான படைகளைக் குவிப்பதன் அவசியம் ஏற்படுகிறது. ஆகவே, படைகளைக் குவித்துச் சுற்றிவளைப்பதும் பக்கவாடுகளைச் சுற்றி அடைப்பதுமான தந்திரோபாயங்களை உபயோகிப்பது நட மாட்ட யுத்தத்திற்கான, அதாவது, வெளிப்புற முனைகளிலான விரைவாக வெற்றி தோல்வி முடிவாகும் தாக்குதல் யுத்தத்திற் கான முற்தேவைகள். இவையாவும் எதிரிப் படைகளை அழித் தொழிப்பதைக் குறிக்கோளாகக் கொண்டவை.

**103.** ஜப்பானியச் சேனையின் வலிமை அம்சங்கள் அதன் ஆயுதங்களில் மட்டுமல்ல, அதன் தளகர்த்தர்களினதும் வீரர் களினதும் பயிற்சியிலும் — அதன் ஸ்தாபனப்பாட்டின் அளவு, ஒருபோதும் தோற்கடிக்கப்படாமையினின்றும் பிறக்கும் அதன் தன்னம்பிக்கை, மிகாடோவிலும் தேவதைகளிலுமான அதன் மூடநம்பிக்கை, அதன் அகங்காரம் சுயகௌரவம், சீன மக் களைக் குறித்த அதன் இழிவு மனப்பான்மை, இவை போன்ற குணதிசயங்களிலும் அடங்கியுள்ளன. இவை எல்லாமே பல ஆண்டுகளாக ஜப்பானிய யுத்தப்பிரபுக்களின் யதேச்சாதி காரமான போதனையினின்றும் ஜப்பானியத் தேசியப் பாரம்பரி யத்தினின்றும் தோன்றுகின்றன. இதுவே நாம் பெருந்தொ கையான எதிரித் துருப்புகளைக் கொன்றும் காயப்படுத்தியும் உள்ள போதும் வெகுசில கைதிகளையே பிடித்துள்ளமைக்குப் பிரதான காரணம். இது கடந்த காலத்திற் பலரால் குறைத்து மதிப்பிடப்பட்டுள்ள ஒரு விஷயம். இந்த எதிரிக் குணதி சயங்களைத் தகர்க்க நீண்ட காலம் தேவை. செய்ய வேண்டிய

முதற்காரியம் இந்த விஷயத்திற்குப் பொறுப்பான கவனம் தருவதும், பின்னர் பொறுமையுடனும் ஒழுங்கு முறையாக வும் அதைப் பொறுத்து அரசியற்துறையிலும், சர்வதேசப் பிரசாரம், ஜப்பானிய மக்களின் இயக்கம் ஆகிய துறைகளிலும் இதற்கான வேலை செய்வதுமாகும்; ராணுவத்துறையில் அழித் தொழிக்கும் யுத்தம் இயற்கையாகவே இதற்கான வழிவகை களில் ஒன்று. இந்த எதிரிக் குணதிசயங்களால் நம்பிக்கையீ னரானோர் தேசிய அடிமைப்பாட்டுத் தத்துவத்திற்கு ஒரு அடிப் படையையும், ஊக்கமற்ற மனமுடைய ர்ாணுவஸ்தர்கள் அழித் தொழிக்கும் யுத்தத்தை எதிர்ப்பதற்கு ஒரு அடிப்படையையும் காணக்கூடும். நாமோ அதற்கு மாருக, ஜப்பானியச் சேனையின் இந்த வலிமை அம்சங்கள் தகர்க்கப்பட முடியுமென்றும், அவற் றின் தகர்வு ஏற்கனவே தொடங்கிவிட்டதென்றும் கொள் கிருேம். இவற்றைத் தகர்க்கும் பிரதான முறை ஜப்பானியப் படைவீரர்களை அரசியல் ரீதியில் வென்றெடுப்பதாகும். நாம் அவர்களின் தன்மானத்தை ஊறுபடுத்துவதற்குப் பதிலாக அதை விளங்கிக்கொண்டு தகுந்த திசையில் வழிநடத்தவும், யுத்தக்கைதிகளைத் தயவாக நடத்துவதன் மூலம் ஜப்பானியப் படைவீரர்களை மக்களுக்கெதிரான ஜப்பானிய ஆட்சியாளர் களின் ஆக்கிரமிப்புத்தனத்தைக் கண்டுகொள்ளச் செய்யவும் வேண்டும். மறுபுறத்தில், ஜப்பானியப் படைவீரர்களுக்கு நாம் சீனச் சேனையினதும் சீன மக்களினதும் அடிபணியவைக்கமுடி யாத உணர்வையும் வீரமிக்க, திடமான போரிடும் வலிமையை யும் காண்பிக்க வேண்டும், அதாவது, நாம் அவர்களுக்கு அழித்தொழிக்கும் போர்களில் அடிகள் கொடுக்க வேண்டும். ராணுவ நடவடிக்கைகளில் எதிரிப் படைகளை அழித்தொழிப் பது சாத்தியமெனக் கடந்த பத்து மாதங்களின் எமது

தில்லை, நாம் எவ்வாறு தவறுகள் செய்வதைத் தடுப்பது அரிதோ அவ்வாறே எதிரியும் தவறுகள் செய்கிறான்; உண்மையில், எதிரியின் தவறுகளைப் பயன்படுத்திக்கொள்ளும் சாத்தியக்கூறு இருக்கிறது. தனது ஆக்கிரமிப்பு யுத்தத்தின் பத்து மாதங்களில் எதிரி ஏற்கனவே யுத்ததந்திரத்திலும் தந்திரோபாயங்களிலும் பல தவறுகளைச் செய்திருக்கின்றான். பிரதானமான தவறுகள் ஐந்து உள்ளன.

முதலாவது, மேலதிக படைபலம் சேர்ப்பதைச் சிறுகச் சிறுகச் செய்வது. இதற்குக் காரணங்கள் எதிரி சீனாவைக் குறைத்து மதிப்பிடுவதும் அவனது துருப்புக்கள் பற்றாக் குறையுமாகும். எதிரி எப்போதும் எம்மை இழித்து நோக்கி வந்துள்ளான். சிறு சிரமத்துடன் வடகீழ் மாகாணங்கள் நான்கையும் பிடித்த பின் அவன் கிழக்கு ஹோபெயையும் வடக்கு சஹாரையும் கைப்பற்றினான்; இவையெல்லாம் யுத்ததந்திர ரீதியாக வேவுபார்க்கும் வகையிற் செய்யப்பட்டவை. இதினின்றும் எதிரி எடுத்த முடிவு, சீனத் தேசம் வெறும் மணற்குவியல் என்பது. இவ்வாறாக, சீனா ஒரு அடிக்கும் நிற்கமுடியாது என நினைத்துக்கொண்டு, அவன் ''விரைவாக வெற்றி தோல்வி முடிவாக்கும்'' திட்டமொன்றைத் தீட்டி, மிகச் சிறிய படைகளைக் கொண்டு எம்மைக் கிலிபிடித்தோடச் செய்துவிட முயன்றான். அவன் சீனா கடந்த பத்து மாதங்களிற் காண்பித்துள்ள இத்தனை பெரும் ஐக்கியத்தையும் இத்தனை பிரமாண்டமான எதிர்ப்பு வலிமையையும் எதிர்பார்க்கவில்லை. சீனா ஏற்கனவே ஒரு முன்னேற்ற சகாப்தத்தில் உள்ளதென்பதையும் அது ஏற்கனவே ஒரு முன்னேறிய அரசியற் கட்சியையும் முன்னேறிய ஒரு

சேனையையும் முன்னேறிய மக்களையும் கொண்டுள்ளது என் பதையும் மறந்துவிட்டான். பின்னடைவுகளை எதிர்ப்பட்டு எதிரி பின்னர் தன் படைகளைச் சிறுகச் சிறுக, சுமார் ஒரு டஜன் டிவிஷன்களிலிருந்து முப்பது டிவிஷன்களாக அதிகரித் தான். அவன் முன்னேற விரும்பினால் தன் படைகளை மேற் கொண்டும் பெருக்க வேண்டியிருக்கும். ஆனால் சோவியத் யூனியனுடனான ஜப்பானின் விரோதமும் அதன் உள்ளியல் பான மனிதசக்தி, நிதிப் பற்றுக்குறைகளும் காரணமாக, அதனால் சீனாவில் குவிக்க முடியப்போகின்ற கூடிய பட்ச வீரர் களின் தொகைக்கும் அதன் முன்னேற்றத்தின் ஆகக் கூடிய அந்தத்திற்கும் தவிர்க்கமுடியாத வரையறைகளுள்ளன.

இரண்டாவது, தாக்குதலுக்குப் பிரதான திசையொன்று இல்லாமை. தைஅல்ச்சுவாங் போரியக்கத்துக்கு முன்னர் எதிரி தன் படைகளை வட சீனாவுக்கும் மத்திய சீனாவுக்கு மிடையில் கிட்டத்தட்டச் சமமாகப் பகிர்ந்தும், இப்பகுதி கள் ஒவ்வொன்றிற்குள்ளும் மீண்டும் அவற்றைச் சமமாகப் பகிர்ந்துமிருந்தான். உதாரணமாக வட சீனாவில், அவன் தன் படைகளைத் தியென்சின்-பூகோ, பெய்ப்பிங்-ஹன்கோ, தாதுங்-பூசௌ புகையிரத மார்க்கங்கள் மத்தியில் சமமாகப் பகிர்ந்திருந்தான்; இந்த மார்க்கங்கள் ஒவ்வொன்றின் நெடு கிலும் அவன் சில சேதங்களை உற்று, இடங்கொண்ட இடங் களில் சில காவற் படைகளை விட்டுவைத்தான்; அதன் பின்னர் அவனுக்கு மேற்கொண்டு முன்னேறப் படைகள் இருக்கவில்லை. தைஅல்ச்சுவாங் தோல்விக்குப் பின்னர் அதிலிருந்து படிப்பினைபெற்ற எதிரி தன் பிரதான படைகளை ஷிசௌவை நோக்கி ஒன்றுகுவித்து, அவ்வாறாக இந்தத் தவறைத் தற்காலிகமாகத் திருத்தினான்.

மூன்றுவது, யுத்ததந்திர ரீதியான ஒத்துழைப்பின்மை. மொத்தத்தில், வட சீனுவிலும் மத்திய சீனுவிலுமான எதிரிப் படைத்தொகுதிகள் ஒவ்வொன்றிற்கும் உள்ளே ஒத்துழைப்பு இருக்கிறது, ஆனுல் அவையிரண்டுக்குமிடையில் ஒத்துழைப்பு மிகக் குறைவு. தியென்சின்-பூகோ புகையிரத மார்க்கத்தின் தெற்குப் பகுதியிலான அவனது படைகள் ஸியாஓபங்பு வைத் தாக்கியபோது வடக்குப் பகுதியிலான அவனது படைகள் எந்த நடவடிக்கையுமெடுக்கவில்லை; வடக்குப் பகுதி யிலானவை தைஅல்ச்சுவாங்யைத் தாக்கிய போது தெற்குப் பகுதியிலானவை எந்த நடவடிக்கையுமெடுக்கவில்லை. இரு இடங்களிலும் எதிரி துன்பப்பட்டதன் பின்னர் ஜப்பானிய யுத்த அமைச்சர் பார்வையிடும் சுற்றுப் பிரயாணத்திற்கு வந்து சேர்ந்தார், பொதுத் தளகர்த்தப் பிரதானி ஆணை யிடும் பொறுப்பேற்க வந்து சேர்ந்தார்; அப்போதைக்கு ஒத்துழைப்பு இருந்ததாகத் தோன்றியது. ஜப்பானின் நிலப் பிரபு வர்க்கமும் முதலாளித்துவ வர்க்கமும் யுத்தப்பிரபுக் களும் கணிசமான பாரதூரமான, வளர்ந்து வருகின்ற உள் முரண்பாடுகளைக் கொண்டுள்ளனர்; ராணுவ ஒத்துழைப் பின்மை இதன் திட்டவட்டமான வெளிப்பாடுகளில் ஒன்று.

நான்காவது, யுத்ததந்திர ரீதியான வாய்ப்புகளைப் பயன் படுத்தத் தவறுவது. இந்தக் குறைபாடு எதிரி, பிரதானமாக அவனது துருப்புகள் பற்றுக்குறையும் யுத்ததந்திர ரீதியான துரத்தும் படை இன்மையும் காரணமாக, நான்கிங்யும் தையுவானையும் பிடித்தபின் நின்றதிலிருந்து கண்கூடாகத் தெரிகிறது.

ஐந்தாவது, பெரிய தொகையான துருப்புகளைச் சுற்றி வளைப்பது, ஆனுல் சிறு தொகையையே அழித்தொழிப்பது.

தைஅல்ச்சுவாங் போரியக்கத்திற்கு முன், ஷாங்ஹாய், நான் கிங், ஸாங்செள, பாஓதிங், நான்கோ, சின்கோ, லின்ஃெ பன் ஆகிய போரியக்கங்களில் பல சீனத் துருப்புகள் புற முதுகிடச் செய்யப்பட்டன, ஆனால் சிலதே சிறைப்பிடிக் கப்பட்டன. இது எதிரிப் படைத்தலைமையின் அசட்டுத் தனத்தைக் காட்டுகிறது.

இந்த ஐந்து — மேலதிக படைபலம் சேர்ப்பதைச் சிறுகச் சிறுகச் செய்வது, தாக்குதலுக்குப் பிரதான திசையொன்று இல்லாமை, யுத்ததந்திர ரீதியான ஒத்துழைப்பின்மை, வாய்ப் புகளைப் பயன்படுத்தத் தவறுவது, பெரும் தொகையான துருப் புகளைச் சுற்றிவளைப்பதும் சிறுதொகையை மட்டுமே அழித் தொழிப்பதும் ஆகிய தவறுகள் எல்லாம் தைஅல்ச்சுவாங் போரி யக்கத்துக்கு முன்பிருந்த ஜப்பானியப் படைத் தலைமையின் திறமையின்மை அம்சங்கள். அதன் பிற்பாடு எதிரி சில சீர்ப் படுத்தல்களைச் செய்துள்ளபோதிலும், அவனது துருப்புகள் பற் றுக்குறையும் அவனது உள்முரண்பாடுகளும் இத்தகைய பிற அம்சங்களும் காரணமாக இத்தவறுகளைத் திரும்பச் செய்வ தைத் தவிர்ப்பது அவனுக்குச் சாத்தியமில்லை. மேலும் அவன் ஒரு இடத்தில் ஈட்டுவதை மற்றொரு இடத்தில் இழக்கிறான். உதாரணமாக, அவன் வட சீனாவிலான தன் படைகளை ஷிசெள வை நோக்கி ஒன்றுகுவித்தபோது அவன் வட சீனாவிலான கைப்பற்றிய பகுதிகளில் பெரும் காலியிடமொன்றை விட்டு வைத்தான், அது எமக்குக் கொரில்லா யுத்தத்தைப் பூரண விருத்தி செய்ய வாய்ப்பளித்தது. இந்தத் தவறுகள் எதிரி தானாகச் செய்தவை, எம்மால் தூண்டப்பட்டவையல்ல. எம் மைப்பொறுத்தவரையில் நாம் வேண்டுமென்றே எதிரியைத்

தவறுகளிழைக்கும்படி செய்யலாம், அதாவது, நன்கு ஸ்தாபன ரீதியில் அணிப்படுத்தப்பட்ட ஒரு ஸ்தல மக்களின் திரை மறைவிலான, சாதுரியமான, திறமையான நடவடிக்கைகளால், உதாரணமாகக் ''கிழக்கு முகமாகப் பாசாங்கு காட்டிவிட்டு மேற்கிற் தாக்குவ''தால், அவனை ஏமாற்றி நாம் விரும்பும் ஸ்தானத்திற்கு வரச் செய்யலாம். இந்தச் சாத்தியக்கூறு ஏற்கனவே விவாதிக்கப்பட்டுவிட்டது. மேற்கூறியவையெல்லாம் எதிரியின் படைத்தலைமையில் கூட நாம் யுத்தத்தில் வெற்றிபெறுவதற்கான ஒருவித அடிப்படையைப் பெறமுடியுமெனக் காண்பிக்கின்றன. இயற்கையாகவே நாம் இதை எமது யுத்த தந்திரத் திட்டமிடலுக்கான ஒரு முக்கியமான அடித்தளமாகக் கொள்ளக் கூடாதுதான், அதற்கு மாறாக, உள்ள நம்பகமான ஒரே வழி எமது திட்டமிடலை எதிரி சொற்பத் தவறுகளையே செய்வானென்ற அனுமானத்தின் அடிப்படையிற் செய்வதே. மேலும், நாம் எதிரியின் தவறுகளைப் பயன்படுத்த முடிகின்ற அதே விதமாக எதிரியும் எமது தவறுகளைப் பயன்படுத்த முடியும். அவ்வாறு செய்ய அவனுக்கு மிகக் குறைந்தபட்சச் சந்தர்ப்பங்களை மட்டுமே தருவது எமது படைத்தலைமையின் கடமை. உண்மையில் எதிரிப் படைத்தலைமை தவறுகளிழைத்துள்ளது, எதிர்காலத்தில் மீண்டும் தவறுகளிழைக்கும், எம் பிரயாசைகளின் மூலம் அது அவ்வாறு செய்யும்படி செய்யப்படவும் இயலும். இந்தத் தவறுகளெல்லாவற்றையும் நாம் பயன்படுத்திக்கொள்ளலாம், பதிற்தாக்குதல் யுத்தத்திலான எமது தளபதிகள் இவற்றைவிடாது பற்றிக்கொள்ளத் தம்மாலியன்றவரை பாடுபட வேண்டும். எதிரியின் யுத்ததந்திர, போரியக்கப் படைத் தலைமையிற் பெரும்பகுதி திறமையற்றதெனினும், அவனது போர்ப் படைத் தலைமையில், அதாவது

அவனது கூறு, சிறு வியூக தந்திரோபாயங்களில், கணிசமான திறமான அம்சங்களுள்ளன; இதில் நாம் அவனிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டும்.

## ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தத்தில் தீர்க்கமான கைகலப்புகளின் பிரச்சினை

106. ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தத்தில் தீர்க்கமான கைகலப்புகளின் பிரச்சினை மூன்று கோணங்களிலிருந்து அணுகப்பட வேண்டும். நாம் வெல்வது நிச்சயமாயிருக்கும் ஒவ்வொரு போரியக்கத்திலும் அல்லது சமரிலும் நாம் உறுதியுடன் ஒரு தீர்க்கமான கைகலப்பைச் செய்ய வேண்டும்; நாம் வெல்வது நிச்சயம் இல்லாத ஒவ்வொரு போரியக்கத்திலும் சமரிலும் நாம் தீர்க்கமான ஒரு கைகலப்பைத் தவிர்க்க வேண்டும்; முழுத் தேசத்தினதும் கதி பணயம் வைக்கப்படுவதான யுத்ததந்திர ரீதியிற் தீர்க்கமான ஒரு கைகலப்பை நாம் அறுதியாகத் தவிர்க்க வேண்டும். எமது ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தத்தை மற்ற யுத்தங்கள் பலவற்றிலிருந்து வேறுபடுத்தும் குணாதிசயங்கள் தீர்க்கமான கைகலப்புகளின் பிரச்சினையிலும் வெளிக்காட்டப்படுகின்றன. எதிரி பலமானவனாகவும் நாம் பலவீனமானவராகவும் இருந்த யுத்தத்தின் முதலாம், இரண்டாம் கட்டங்களில் எதிரியின் குறிக்கோள் எம்மை எமது பிரதான படைகளை ஒரு தீர்க்கமான கைகலப்பிற்கு ஒன்றுகுவிக்கச் செய்வதாகும். எமது குறிக்கோள் அதற்கு நேர்மாறானது. நாம் எமக்குச் சாதகமான சூழ்நிலைகளைத் தெரிந்தெடுத்து, பிங்சிங்

குவானிலும், தைஅல்ச்சுவாநிலும் பிற இடங்களிலுமான போர் களிற் போல வெல்வது நிச்சயமான போது மட்டுமே உயர்வான படைகளைக் குவித்துத் தீர்க்கமான போரியக்கங்கள் அல்லது சமர்கள் நடத்த விரும்புகிறோம்; நாம் வெல்வது நிச்சயமில்லாத போது பாதகமான சூழ்நிலைகளின்கீழ் தீர்க்கமான கைகலப்பு களைத் தவிர்க்க விரும்புகிறோம், இதுவே நாம் சாங்தே போரி யக்கத்திலும் பிற போரியக்கங்களிலும் கைக்கொண்ட கொள் கையாகும். முழுத் தேசத்தினதும் கதி பணயம் வைக்கப்படு வதான யுத்ததந்திர ரீதியிற் தீர்க்கமான கைகலப்பொன்றை நடத்த அறவே மறுக்கின்றோம், அண்மையில் ஷிசௌவிலி ருந்து வாபஸானமை ஒரு உதாரணமாகும். ''விரைவான வெற்றி-தோல்வி முடிவிற்''கான எதிரியின் திட்டம் அவ்வாறு நிராசையாக்கப்பட்டது, இப்போது அவனுக்கு எம்முடன் ஒரு நீண்டகால யுத்தம் நடத்துவதைத் தவிர வேறு வழியில்லை. இந்தக் கோட்பாடுகள் சிறு பிரதேசத்தையுடைய ஒரு நாட்டில் நடைமுறைச் சாத்தியமல்ல, அரசியல் ரீதியில் மிகப் பின்ன டைந்த ஒரு நாட்டிலும் பெரிதும் அவ்வாறே. சீனு ஒரு பெரிய நாடும் முன்னேற்ற சகாப்தத்திலுள்ளதுமாகையால் இவை சீனு வில் நடைமுறைச் சாத்தியமானவை. யுத்ததந்திர ரீதியில் தீர்க்கமான கைகலப்புகள் தவிர்க்கப்பட்டால், அப்போது ''பசுமையான மலைகள் உள்ளவரை நாம் விறகுக்கு அலைய வேண்டாம்'', ஏனெனில் எமது பிரதேசத்தில் சிறிதளவு இழக்கப்பட்டாலும் கூட எமக்கு அப்போதும் நகர்ந்து செயல்பட ஏராளமான இடமிருக்கும், நாம் உள்நாட்டு முன் னேற்றத்தையும் சர்வதேச ஆதரவையும் எதிரியின் உட்சிதை வையும் துரிதப்படுத்தவும் அவை வரும்வரை காத்திருக்கவும் கூடியதாயிருக்கும்; இதுவே ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தத்தில்

எமக்கு மிகச் சிறந்த கொள்கை. ஒரு நீண்ட கால யுத்தத்தின் சோதனைகளைத் தாங்க இயலாதவர்களாயும் விரைவான வெற்றிக்கு அவாப்பட்டும் அவசரத்தன்மை நோய்வாய்ப்பட்ட துரித வெற்றித் தத்துவவாதிகள் நிலைமை சற்றே சாதகமான ஒரு மாற்றத்தை உற்ற கணமே யுத்ததந்திர ரீதியில் தீர்க்கமான ஒரு கைகலப்பிற்காகக் கூச்சலிடுகின்றனர். அவர்கள் விரும்புவதைச் செய்வது யுத்தம் முழுமைக்கும் அளப்பிட முடியாத ஊறு செய்வதாயும், நீண்டகால யுத்தத்திற்கு முடிவுகட்டுவதாயும் முடியும், எம்மை எதிரியின் அபாயகரமான பொறியில் வீழ்த்தும்; உண்மையில்,. அதுவே மிக மோசமான கொள்கையாக இருக்கும். ஐயத்திற்கிடமின்றி, நாம் தீர்க்கமான கைகலப்புகளைத் தவிர்ப்பதாயிருந்தால் நாம் பிரதேசத்தைக் கைவிடவே வேண்டியிருக்கும், அப்படிச் செய்வது முற்றும் தவிர்க்க முடியாததாகும் போது (அப்போது மட்டுமே) அப்படிச் செய்யும் துணிவும் எமக்கிருக்க வேண்டும். இத்தகைய சமயங்களில் நாம் சற்றும் கவலைப்படக்கூடாது, ஏனெனில் இது காலம் பெறுவதற்கு இடத்தை மாற்றுக் கொடுக்கும் சரியான கொள்கை. தன் காலத்தவருக்குச் சிம்ம சொப்பனமாக விளங்கிய நெப்போலியனை ரஷியா எவ்வாறு முதலில் தீர்க்கமான கைகலப்பைத் தவிர்ப்பதற்காகத் தைரியத்துடன் பின்வாங்கிவிட்டுப் பின்னர் தோற்கடித்தது என்பதை வரலாறு எமக்குத் தெரிவிக்கிறது.[28] இன்று சீனாவும் அவ்வாறு செய்ய வேண்டும்.

107. நாம் ''எதிர்க்காதவர்கள்'' என நிந்திக்கப்படுவது பற்றிப் பயப்படவில்லையா? இல்லை. சண்டையே செய்யாமல் எதிரியுடன் சமரசப்படுவது — அது நிந்திக்கப்பட வேண்டியது மட்டுமல்லாமல் ஒருபோதும் அனுமதிக்கப்படவும் கூடாத

எதிராமையாகும். நாம் பதிற்தாக்குதல் யுத்தத்தை உறுதி யுடன் நடத்த வேண்டும், ஆனுல் எதிரியின் அபாயகரமான பொறியைத் தவிர்ப்பதற்காக நாம் எமது பிரதான படைகள் ஒரே அடியில் எதிரியால் ஒழித்துக்கட்டப்படுவதையும் இதனுல் பதிற்தாக்குதல் யுத்தத்தைத் தொடருவதற்குக் கஷ்டம் ஏற்படு வதையும் அனுமதியாதிருப்பது அறவே அவசியம் — சுருங்கக் கூறினுல், அது தேசிய அடிமைப்பாட்டைத் தவிர்ப்பதற்கு அறவே அவசியம். இந்த விஷயத்தில் ஐயங்கள் கொள்வது யுத்தமாகிய பிரச்சினையில் குறுகிய பார்வைகொண்டிருப்பதாகும், அது நிச் சயம் ஒருவரை அடிமைப்பாட்டுவாதிகளின் அணிகளுக்குள் கொண்டுவிடும். ''முன்னேறுவது மட்டுமே, ஒருபோதும் பின் வாங்குவதில்லை'' என்ற வெறும் அசட்டுத் துணிச்சல்வாதத்தை நாம் விமர்சித்துள்ளது, இந்தத் தத்துவம் பிரபல்யமானுல் அது பதிற்தாக்குதல் யுத்தத்தைத் தொடருவதை அசாத்தி யமாக்கி, இறுதியில் தேசிய அடிமைப்பாடாகிய அபாயத்திற்கு இட்டுச் செல்லும் என்ற காரணம் பற்றியே.

108. நாம் போர்களிலாயினும் பெரியவையோ சிறியவை யோ ஆன போரியக்கங்களிலாயினும் சூழ்நிலைகள் சாதகமா யுள்ள போதெல்லாம் தீர்க்கமான கைகலப்புகளை ஆதரிக்கி ருேம். இந்த வகையில் செயலின்மையை நாம் ஒருபோதும் அனுமதிக்கக்கூடாது. இத்தகைய தீர்க்கமான கைகலப்புகளின் மூலம் மட்டுமே நாம் எதிரிப் படைகளை அழித்தொழிப்பது அல்லது குறைப்பதான குறிக்கோளைச் சாதனையாக்க முடியும், ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தத்தில் ஒவ்வொரு வீரனும் உறுதியு டன் இதில் தன் பங்கைச் செலுத்த வேண்டும். இந்த நோக்கத் திற்குப் பகுதியளவான கணிசமான அளவான தியாகங்கள் தேவை; எந்தத் தியாகத்தையுமே தவிர்ப்பது கோழைகளின

தும் ஜப்பானிடம் பயம் மேலிட்டவர்களினதும் கண்ணோட்டம். அது உறுதியுடன் எதிர்க்கப்பட வேண்டும். லீ ஃபூ-யிங்யுக்கும் ஹான் ஃபூ-சிக்கும் பிற பயந்தோடும்வாதிகளுக்கும் மரணதண்டனை விதித்தது நியாயமானது. சரியான யுத்தத்திட்டமிடலின் விட்டத்திற்குள்ளாகப் போரில் வீரமிக்க சுய-தியாகமும் தளர்வின்றி முன்செல்வதுமான உணர்வையும் நடவடிக்கையையும் ஊக்குவிப்பது அறவே அவசியமானதும், நீண்டகால யுத்தம் நடத்துவதிலும், இறுதி வெற்றியீட்டுவதிலுமிருந்து பிரிக்கமுடியாததுமாகும். நாம் ''பின்வாங்குவது மட்டுமே, ஒருபோதும் முன்னேறுவதில்லை'' என்ற பயந்தோடும்வாதத்தை வன்மையாகக் கண்டித்தும் கட்டுப்பாடு கறாராக அமுல்படுத்தப்படுவதை ஆதரித்தும் உள்ளோம். அதன் நேரடிக்காரணம் சரியான ஒரு திட்டத்தின்கீழ் நடத்தப்படும் வீரமிக்க தீர்க்கமான கைகலப்புகளின் மூலம் மட்டுமே நாம் சக்திமிக்க எதிரியைத் தோற்கடிக்க முடியும்; அதற்கு நேர்மாறாக பயந்தோடும்வாதம் தேசிய அடிமைப்பாட்டுத் தத்துவத்திற்கு நேரடியாக ஆதரவு தருகிறது என்பதாகும்.

109. முதலில் வீரத்துடன் சண்டை செய்துவிட்டுப் பின்னர் பிரதேசத்தைக் கைவிடுவது சுய-முரண்பாடானது அல்லவா? அது எமது வீரமிக்க போராளிகள் தம் இரத்தத்தை வீணிற் சிந்தியதாகாதா? இது பிரச்சினைகள் எழுப்புவதற்கு தகுந்த முறையே அல்ல. சாப்பிட்டுவிட்டுப் பின்னர் மலங் கழிப்பது — இது வீணிற் சாப்பிடுவதல்லவா? தூங்கிவிட்டுப் பின் விழித்தெழுவது — இது வீணிற் தூங்குவதல்லவா? இந்த விதமாகப் பிரச்சினைகள் எழுப்பப்படலாமா? இல்லையென்றே நான் கருதுவேன். சாப்பிட்டுக்கொண்டே இருப்பது, தூங்கிக்கொண்டே இருப்பது, யாலுநதிவரை முழுத்தூரமும் வீரத்

துடன் சண்டை செய்துகொண்டே வருவது — இவை அக நிலேவாத, சம்பிரதாயவாதப் பிரமைகள், வாழ்வின் யதார்த் தங்களல்ல. அனேவருமறிந்தவாறு, காலம் பெறுவதற்கும் எதிர்த்தாக்குதலுக்குத் தயார் செய்வதற்குமாகச் சண்டை செய்தபோதும் இரத்தம் சிந்தியபோதும் நாம் சிறிது பிரதேசத் தைக் கைவிட வேண்டியிருந்துள்ளபோதும் நாம் உண்மையில் காலம் பெற்றுள்ளோம், எதிரிப் படைகளே அழித்தொழிப்பதும் குறைப்பதுமான குறிக்கோளே அடைந்துள்ளோம், சண்டை யிடுவதில் அனுபவம் பெற்றுள்ளோம், இதுவரை செயலற்றி ருந்த மக்களே எழுச்சியுறுத்தியுள்ளோம், எமது சர்வதேச அந் தஸ்தை உயர்த்தியுள்ளோம். எமது இரத்தம் வீணிற் சிந்தப் பட்டதா? நிச்சயமாக இல்லே. பிரதேசம் கைவிடப்பட்டுள் ளது எமது ராணுவப் பலத்தைப் பேணுவதற்காகவும், உண் மையில் எமது பிரதேசத்தைப் பேணுவதற்காகவுமாகும், ஏனெ னில், நாம் நிலேமைகள் பாதகமாக உள்ளபோது எமது பிர தேசத்தில் ஒரு பகுதியைக் கைவிடாமல் மாருக வெல்வதென்ற நிச்சயம் சற்றுமே இல்லாது குருட்டுத்தனமாகத் தீர்க்கமான கைகலப்புகள் நடத்திஞேமாஞல் நாம் எமது ராணுவப் பலத் தை இழந்து, பின்னர் எமது பிரதேசம் முழுவதும் இழக்கப்படு வதைத் தவிர்க்க இயலாதிருப்போம், ஏற்கனவே இழக்கப்பட்ட பிரதேசத்தை மீட்பது பற்றியோ பேசவே வேண்டாம். முத லாளியொருவன் தன் தொழிலே நடத்த முதல் வைத்திருக்க வேண்டும், அவன் அது முழுவதையும் இழந்தாஞல் அதன் மேல் அவன் ஒரு முதலாளியல்ல. சூதாடியொருவன் கூடப் பணயம் வைக்கப் பணம் வைத்திருக்க வேண்டும், அவன் அது முழுவதையும் ஒரே ஆட்டத்தில் பணயம் வைத்து அவனது அதிர்ஷ்டம் கைவிட்டால் அவனுல் அதன் மேல் சூதாட இய

லாது. சம்பவங்கள் அவற்றின் நெளிவுசுளிவுகளைக் கொண்டவை, நேரான பாதையில் செல்வதில்லை, யுத்தமும் அதற்கு விதிவிலக்கல்ல; சம்பிரதாயவாதிகளால் மட்டுந்தான் இந்த உண்மையைப் புரிந்துகொள்ள முடிகின்றதில்லை.

*110.* யுத்ததந்திர ரீதியான எதிர்த்தாக்குதலின் கட்டத்திலான தீர்க்கமான கைகலப்புகளுக்கும் இதுவே பொருந்தும் என நான் நினைக்கிறேன். அவ்வளவில் எதிரி தாழ்ந்த நிலையிலும் நாம் உயர்ந்த நிலையிலும் இருப்போமென்ற போதிலும், ''பயன்தரக்கூடிய தீர்க்கமான கைகலப்புகளை நடத்துவதும், பயனற்றவற்றைத் தவிர்ப்பது''மான கோட்பாடு அப்போதும் உபயோகிக்கப்படலாம், நாம் யாலுநதிவரை போரிட்டு முன்னேறும் வரையும் தொடர்ந்து உபயோகிக்கப்படும். இவ்வாறுதான் எம்மால் எமது முன்னோட்டத்தைத் தொடக்கத்திலிருந்து இறுதிவரை வைத்துக்கொள்ள இயலும், எதிரியின் ''சவால்க''ளும் பிறரின் ''குத்தல் பேச்சுக''ளும் சம்பந்தப்பட்ட வரை நாம் அவற்றைச் சட்டைசெய்யாமல் ஒதுக்கிவிடவும் புறக்கணிக்கவும் வேண்டும். பதிற்தாக்குதல் யுத்தத்தில் இந்த விதமான உறுதி காண்பிக்கும் தளபதிகள் மட்டுமே துணிவுடையவர்களென்றும் புத்தியுடையவர்களென்றும் கருதப்பட முடியும். இது ''தொட்டால் துள்ளிக் குதிப்பவர்க''ளின் அறிவிற்கு எட்டாதது. யுத்தத்தின் முதற் கட்டத்தில் நாம் யுத்ததந்திர ரீதியில் கிட்டத்தட்ட ஒரு செயலற்ற நிலையிலிருக்கிறோமெனினும் ஒவ்வொரு போரியக்கத்திலும் நாம் முன்னோட்டத்தைக் கொண்டிருக்க வேண்டும்; அத்துடன், இயல்பாகவே, நாம் பிந்திய கட்டங்கள் பூராவினூடும் முன்னோட்டத்தைக் கொண்டிருக்கவும் வேண்டும். நாம் நீண்டகால யுத்தத்தையும் இறுதி வெற்றியையும் ஆதரிப்பவர்கள், அனைத்தையும் ஒரே ஆட்டத்தில் பணயம் வைக்கும் சூதாடிகள் அல்ல.

## சேனையும் மக்களுமே வெற்றியின் அத்திவாரம்

111. ஜப்பானிய ஏகாதிபத்தியம் புரட்சிகர சீனுவிற்கு எதிரான அதன் ஆக்கிரமிப்பிலும் அதை ஒடுக்குவதிலும் ஒருபோதும் தளராது; இது அதன் ஏகாதிபத்திய இயல்பால் நிர்ணயிக்கப்படுகிறது. சீனு எதிர்க்காவிட்டால் ஜப்பான் வடகிழக்கிலான நான்கு மாகாணங்களையும் பிடித்ததுபோல் ஒரு வேட்டுக்கூடச் சுடாமல் இலகுவாகச் சீனு முழுவதையும் பிடித்துவிடும். சீனு எதிர்த்தால், சீனுவின் எதிர்ப்பு சக்தி தன் ஒடுக்கும் சக்தியை மிஞ்சும் வரை ஜப்பான் இந்த எதிர்ப்பை ஒடுக்க முயலுமென்பது விலக்க முடியாத நியதி. ஜப்பானிய நிலப்பிரபு வர்க்கமும் முதலாளித்துவ வர்க்கமும் பேராசை கொண்டவை, தெற்கே மலேத் தீவுகளையும் வடக்கே சைபிரியாவையும் அடையவேண்டி அவை முதலில் சீனுவைத் தாக்குவதன் மூலம் நடுவில் பிளந்துகொண்டு முன்னேறுவதான கொள்கையைக் கைக்கொண்டுள்ளன. ஜப்பான் வட சீனுவையும் கியாங்ஸு செகியாங் மாகாணங்களையும் கைப்பற்றியதோடு திருப்தியடைந்து மேலும் முன்னேறமாட்டாது என நினைப்பவர்கள் ஒரு புதிய கட்டத்திற்கு விருத்தியடைந்துவிட்டதும் அழிவை நெருங்கிக் கொண்டிருப்பதுமான ஏகாதிபத்திய ஜப்பான் கடந்த காலத்திய ஜப்பானிலிருந்து வேறுபட்டதென்பதைக் காண முற்றுகத் தவறிவிடுகின்றனர். ஜப்பானுல் சீனுவில் கொணர்ந்து கொட்டக்கூடிய படைவீரர்களின் தொகை, அதன் படையெடுப்பின் அளவு இரண்டுக்குமே திட்டவட்டமான ஒரு எல்லையுண்டு என நாம் கூறும்போது நாம் கருதுவது, ஜப்பானுக்கு உள்ள வலிமையுடன் அதனுல் தன் படைகளில் ஒரு பகுதியை மட்டுமே

சீனுவில் போரிலீடுபடுத்தவும், அவற்றின் வலிமை அனுமதிக்கின்ற அளவிற்கு மட்டுமே சீனுவில் ஊடுருவவும் முடியும், ஏனெனில் அது பிற திசைகளிலும் தாக்க விரும்புகிறது, தன்னைப் பிற எதிரிகளிடமிருந்து பாதுகாத்துக்கொள்ள வேண்டியதாயுமிருக்கிறது; அதே நேரத்தில் சீனு முன்னேற்றத்திற்கும் விடாப்பிடியாக எதிர்க்கும் வலிமைக்கும் நிரூபணம் தந்துள்ளது, ஜப்பானின் உக்கிரத் தாக்குதல்களுக்குச் சீனுவின் தவிர்க்க முடியாத எதிர்ப்பு இல்லாமற் போவதென்பதைக் கற்பனையும் செய்ய முடியாது என்பதே. ஜப்பானுல் சீனு முழுவதையும் கைப்பற்ற முடியாது, ஆனுல் அது தன்னுல் எட்ட முடிகின்ற சகல பகுதிகளிலும் சீனுவின் எதிர்ப்பை அடக்க எந்தப் பிரயாசைக்கும் பின்னிற்கவும் மாட்டாது, உள்நாட்டு, வெளிநாட்டு நிலைமைகள் ஜப்பானிய ஏகாதிபத்தியத்தைப் பிணக்குழியின் விளிம்பிற்குத் தள்ளும்வரை இத்தகைய அடக்குமுறையை நிறுத்திவிட மாட்டாது. ஜப்பானிலுள்ள அரசியல் நிலைமையின் பெறுபேறுகள் இரண்டாகத்தான் இருக்கமுடியும். ஒன்றில் அதன் ஆளும் வர்க்கம் முழுவதினதும் வீழ்ச்சி விரைவாக ஏற்பட்டு, அரசியல் அதிகாரம் மக்கள் கைக்குச் சென்று, அவ்வாருக யுத்தம் முடிவிற்கு வரவேண்டும், இது தற்சமயம் அசாத்தியமானது; அல்லது அதன் நிலப்பிரபு வர்க்கமும் முதலாளித்துவ வர்க்கமும் வர வர அதிகமாகப் பாஸிஸத்தை மேற்கொண்டு, தங்கள் வீழ்ச்சிவரை யுத்தத்தை நீடிக்க வேண்டும்; இதுவே ஜப்பான் இப்பொழுது சென்றுகொண்டிருக்கும் பாதை. வேறு முடிவு எதுவுமிருக்க இயலாது. ஜப்பானிய முதலாளித்துவ வர்க்கத்தின் மத்தியிலான மிதவாதிகள் முன்னுக்கு வந்து யுத்தத்தை நிறுத்துவர் என நம்பிக்கை கொண்டிருப்பவர்கள் வெறும் பிரமைகளையே பாராட்டுகின்றனர்.

ஜப்பானின் முதலாளித்துவ மிதவாதிகள் நிலப்பிரபுக்களினதும் பணமுதலைகளினதும் கையிற் சிறைப்பட்டிருந்துள்ளனர். இதுவே பல ஆண்டுகளாக இருந்துவரும் ஜப்பானிய அரசியலின் யதார்த்தம். இப்போது ஜப்பான் சீனவிற்கெதிராக யுத்தம் தொடுத்துள்ளது, அது சீன எதிர்ப்பிடமிருந்து மரண அடியொன்றைப் பெறுமலும், இன்னும் போதிய பலமுடையதாயுமிருக்கின்றவரையும் அது மலேத் தீவுகளேயோ, சைபிரியாவையோ, அல்லது இரண்டையுமோ கூடத் தாக்கியே தீரும். ஐரோப்பாவில் யுத்தம் வெடித்ததும் அது அவ்வாறு செய்யும்; ஜப்பானின் ஆட்சியாளர்கள் தங்கள் மனப்பால் குடிக்கும் கணிப்பீடுகளில் மிக ஆடம்பரமான ரீதியில் திட்டம் தீட்டி வைத்திருக்கின்றனர். சோவியத் யூனியனின் பலங்காரணமாகவும் சீன மீது தொடுத்த யுத்தத்தாற் பாரதூரமான அளவிற்குப் பலவீனப்பட்டுள்ளதாலும் ஜப்பான் சைபிரியாவிற் படையெடுப்பதான தன் ஆதித் திட்டத்தைக் கைவிட்டு சோவியத் யூனியனைக் குறித்துப் பிரதானமாகத் தற்காப்பான நிலையைக் கைக்கொள்ள வேண்டியது சாத்தியந்தான். ஆனல் அப்படியாகும் பட்சத்தில், அதற்கு அப்போது எஞ்சியுள்ள ஒரே வழி பலவீனமானதைக் கபளீகரம் செய்வது மட்டுமேயாக இருக்குமாகையால் அது சீனவிற்கெதிரான தன் ஆக்கிரமிப்பைத் தளர்த்துவதற்கு நேர்மாறுக அதை உக்கிரப்படுத்தும். அப்போது சீனவின் பதிற்தாக்குதல் யுத்தத்திலும் ஐக்கிய முன்னணியிலும் நீண்டகால யுத்தத்திலும் ஊன்றிநிற்கும் கடமை மேலும் பளுவானதாகும், அத்துடன் எமது பிரயாசைகளைச் சற்றும் தளர்த்தாதிருப்பது இன்னும் அவசியமானதாகும்.

**112.** இந்தச் சூழ்நிலைகளின் கீழ் சீன ஜப்பானை வெல்வதற்கான முற்தேவைகள் முழுநாட்டு ஐக்கியமும் சகல துறை

களிலும் கடந்த காலத்திற் காட்டிலும் பத்துமடங்கு ஏன் நூறு மடங்குகூட அதிகமான முன்னேற்றமுமாகும். சீனு ஏற்கனவே ஒரு முன்னேற்ற சகாப்தத்தில் உள்ளது. பெரும் ஐக்கியத்தையும் ஈட்டியுள்ளது, ஆனுல் அதன் முன்னேற்ற மும் ஐக்கியமும் இன்னும் மிக மிகப் போதாது. ஜப்பான் இத்தனை விசாலப் பிரதேசத்தைக் கைப்பற்றியுள்ளதற்குக் கார ணம் அதன் பலம் மட்டுமல்ல, சீனுவின் பலவீனமுமாகும்; இந்தப் பலவீனம் முற்றிலும், கடந்த நூறு ஆண்டுகளின், விசேஷமாகக் கடந்த பத்து ஆண்டுகளின் பல்வேறு வரலாற்று ரீதியான தவறுகளின் கூட்டு மொத்தமான விளைவே. அத்த வறுகள் முன்னேற்றத்தை தற்போதைய எல்லைக்குட் கட்டுப் படுத்தி வைத்திருக்கின்றன. விரிவான, நீண்டகாலப் பிர யாசை எடுக்காமல் இத்தனை பலமான ஒரு எதிரியைத் தோற் கடிப்பது அசாத்தியம். நாம் செய்யப் பிரயாசைப்பட வேண் டிய காரியங்கள் பல உள்ளன; இங்கு நான் அடிப்படையான இரு அம்சங்களை, சேனையின் முன்னேற்றத்தையும் மக்களின் முன்னேற்றத்தையும் மட்டும் எடுத்துரைக்கிறேன்.

**113.** எமது ராணுவ அமைப்பின் சீர்திருத்தத்திற்கு அதன் நவீனமயப்படுத்தலும் மேலும் சிறப்பான போர் நுட்ப சாத னங்களும் தேவை, இவையின்றி எம்மால் எதிரியை யாலு நதிக்கப்பால் விரட்ட இயலாது. எமது துருப்புக்களின் பிர யோகத்தில் எமக்கு முற்போக்கான, வளைந்துகொடுக்கும் யுத் ததந்திரமும் தந்திரோபாயங்களும் தேவை; முன்னையதைப் போலவே இவையின்றி எம்மால் வெற்றியீட்ட இயலாது. இருப் பினும் போர்வீரர்கள் ராணுவத்தின் அடித்தளம் ஆவர். அவர் கள் முற்போக்கான அரசியல் உணர்வு ஊட்டப்பட்டால் ஒழிய, இத்தகைய உணர்வு முற்போக்கான அரசியல் வேலை மூலம்

ஊட்டப்பட்டால் ஒழிய, அதிகாரிகளுக்கும் படையினருக்கும் இடையில் உண்மையான ஐக்கியத்தை உருவாக்குவது அசாத்தியம்; எதிர்ப்பு-யுத்தத்தில், அவர்களுடைய உற்சாகத்தைக் கூடிய அளவு தட்டி எழுப்புவது அசாத்தியம்; நமது தொழில் நுட்ப சாதனங்கள், தந்திரோபாயங்கள் எல்லாவற்றையும் மிகப் பயனுள்ள முறையில் உபயோகிப்பதற்கான மிகச் சிறந்த அடிப்படையை அளிப்பது அசாத்தியம். ஜப்பான் அதன் போர் நுட்ப உயர்ச்சி இருக்கவும் இறுதியிற் தோற்கடிக்கப் படும் என நாம் கூறும்போது, நாம் அதற்கு அழித்தொழித்தல் மூலமும் உராசித் தேய்த்தல் மூலமும் கொடுக்கும் அடிகள், இழப்புகளை ஏற்படுத்துவது போக, எதிரிச் சேனையின் துணி வையும் இறுதியில் ஆட்டிவிடும், ஏனெனில் அதன் போராளிகள் அரசியலுணர்வுடன் ஆயுதமேந்தவில்லை என்று கருதுகிறோம். எம் விஷயத்தில் அதற்கு நேர்மாறாக, ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தத்தின் அரசியற் குறிக்கோள் பற்றி அதிகாரிகளும் படை யினரும் ஏகோபித்திருக்கின்றனர். இது எமக்கு ஜப்பானிய-எதிர்ப்புப் படைகள் எல்லாவற்றின் மத்தியிலும் அரசியல் வேலைக்கான அத்திவாரத்தைத் தருகிறது. ராணுவத்தில் ஒரு தகுதியான அளவு ஜனநாயகம் அமுல்நடத்தப்படவேண் டும். பிரதானமாக, இம்சித்து அடிக்கும் பிரபுத்துவ நடை முறையை ஒழித்து, அதிகாரிகளையும் படையினரையும் இன்ப துன்பங்களைப் பகிர்ந்துகொள்ளச் செய்ய வேண்டும். இது செய்யப்பட்டதும் அதிகாரிகளுக்கும் படையினருக்கும் இடை யில் ஐக்கியம் உருவாகும்; படையின் போர்த்திறன் பெரிதும் விருத்தியடையும்; நீண்டகாலக் கொடூர யுத்தத்தில் நின்று பிடிக்கும் நமது ஆற்றல் பற்றி சந்தேகமே இராது.

114. யுத்தத்தை நடத்தும் பேராற்றலின் செழுமையான

ஊற்றுமூலம் பொதுமக்கள் மத்தியில் தான் இருக்கின்றது. ஜப்பான் நம்மை இம்சிக்கத் துணியும் காரணம், பிரதானமாகச் சீன மக்கள் ஸ்தாபனரீதியாக அணிதிரட்டப்படாததே ஆகும். இந்தக் குறைபாடு ஒருகால் திருத்தப்பட்டதும், ஜப்பானிய ஆக்கிரமிப்பாளன் எழுந்து நிற்கும் நமது கோடானுகோடி மக்களால் சுற்றிவளைக்கப்படுவான். அவன் நெருப்புச் சுவாலைக்குள் பாய்ந்த வெறிமாடு போல், நாம் இடும் சத்தத்தால் அச்சுறுத்தப்பட்டு எரிந்து இறந்து விடுவான். சீனுவின் சேனைகளுக்குத் தடைப்படாத மேலதிக படைபல வரத்து இருக்க வேண்டும், இப்போது தாழ்ந்த மட்டங்களில் இருந்துவருகின்ற, ''ஆட்களைப் பலவந்தமாகத் திரட்டுவதும்'' ''பதிலாட்களைக் கூலிக்கு வாங்குவது''மான துர்வழக்கங்கள்[29] உடனடியாக ஒழிக்கப்பட்டு, அந்த இடத்தில் பரந்த, உற்சாகம் நிரம்பிய அரசியல் ரீதியான அணிதிரட்டல் வைக்கப்பட வேண்டும், இவ்வாருக, லட்சக்கணக்கான ஆட்களைத் திரட்டுவது இலகுவாக இருக்கும். இப்போது எமக்கு யுத்தத்திற்குப் பணம் திரட்டுவதில் பெரும் கஷ்டங்களுள்ளன, ஆனுல் ஒருகால் மக்கள் அணிதிரட்டப்பட்டதும் நிதியும் ஒரு பிரச்சினையாக இராது. சீனுவைப் போன்று இத்தனை பெரியதும் பெரும் ஜனத்தொகையைக் கொண்டதுமான ஒரு நாடு ஏன் நிதிப் பற்ருக்குறையால் அவஸ்தைப்பட வேண்டும்? மக்கள் தமது சொந்தப் படை என்று கருதக் கூடியமுறையில் ராணுவம் மக்களுடன் ஒன்ருக வேண்டும். இத்தகைய படை உலகில் வெல்லப்பட முடியாதது. ஜப்பானைப் போன்ற ஒரு ஏகாதிபத்திய வல்லரசு அதற்கு ஈடாகாது.

**115.** அதிகாரிகளுக்கும் படையினருக்கும் இடையில், ராணுவத்துக்கும் மக்களுக்கும் இடையில் உறவுகள் பாதிக்கப்படு

வதற்கு காரணம் தவருன வழிமுறைகள் என்று பலர் எண்ணுகின்றனர். ஆனல் படையினருக்கும் மக்களுக்கும் மதிப்புக் கொடுக்கும் அடிப்படை மனேபாவம் (அல்லது அடிப்படைக் கோட்பாடு) தழுவிய ஒரு பிரச்சினே இது என்று நான் அவர்களுக்கு எப்பொழுதும் கூறுகின்றேன். இந்த மனேபாவத்திலிருந்து தான் பல்வேறு கொள்கைகளும், வழிமுறைகளும், வடிவங்களும் பிறக்கின்றன. நாம் இந்த மனேபர்வத்திலிருந்து விலகினல் இந்தக் கொள்கைகள், வழிமுறைகள், வடிவங்கள் எல்லாம் நிச்சயம் பிழையாகி விடும்; அதிகாரிகளுக்கும் படையினருக்குமிடையில், ராணுவத்துக்கும் மக்களுக்குமிடையில் நிலவும் உறவுகள் உண்மையில் திருப்திகரமானவையாக இருக்க மாட்டா. ராணுவத்தின் அரசியல் வேலேக்கான நமது மூன்று பிரதான கோட்பாடுகளாவன:- ஒன்று, அதிகாரிகளுக்கும் படையினருக்குமிடையில் ஐக்கியம்; இரண்டு, ராணுவத்துக்கும் மக்களுக்குமிடையில் ஐக்கியம்; மூன்று, எதிரிப் படைகளேச் சீர்குலேப்பது. இந்தக் கோட்பாடுகளேப் பயனுள்ள முறையில் பிரயோகிக்க வேண்டுமானல், படையினருக்கும் மக்களுக்கும் மதிப்புக் கொடுக்கின்ற, தமது ஆயுதங்களேக் கீழேபோட்ட யுத்தக்கைதிகளின் மனித அந்தஸ்துக்கு மதிப்புக் கொடுக்கின்ற இந்த அடிப்படை மனேபாவத்துடன் நாம் தொடங்க வேண்டும். இவையனேத்தையும் ஒரு அடிப்படை மனேபாவம் தழுவிய ஒன்ருகக் கருதாமல் தொழில் நுட்ப விஷயமாகக் கருதுபவர்கள் உண்மையில் தவருனவர்கள். அவர்கள் தமது கருத்தைத் திருத்திக்கொள்ள வேண்டும்.

116. வூஹனினதும் பிற இடங்களினதும் பாதுகாப்பு அவசரமாகியுள்ள இத்தருணத்தில், யுத்தத்திற்கு ஆதரவாக முழுச் சேனேயினதும் முழு மக்களினதும் தீவிர உற்சாகத்தைப் பூர

ணமாகத் தட்டியெழுப்புவது மிக முக்கியத்துவமுள்ள ஒரு பணியாகும். வூஹனையும் பிற இடங்களையும் பாதுகாக்கும் பணி பொறுப்புடன் முன்வைக்கவும் பொறுப்புடன் ஆற்றவும் பட வேண்டும் என்பதில் ஐயமில்லை. ஆனால் அவற்றை நாம் நிச்சயமாகப் பாதுகாக்க முடியுமா என்பது எமது அகநிலைப் பட்ட அவாக்களிலல்ல, திட்டவட்டமான நிபந்தனைகளிலேயே தங்கியுள்ளது. இந்த நிபந்தனைகளில் மிக முக்கியமானவற்றி லொன்று போராட்டத்திற்கு முழுச் சேனையினதும் முழு மக்க ளினதும் அரசியல் ரீதியான அணிதிரட்டலாகும். அவசியமான நிபந்தனைகளெல்லாவற்றையும் பெற்றுக்கொள்ளக் கடும் பிரயா சை எடுக்கப்படாவிட்டால், அல்லது இந்த நிபந்தனைகளில் ஒன்று இல்லாவிட்டாலும்கூட, நான்கிங்கினதும் பிற இடங் களினதும் இழப்புப் போன்ற விநாசங்கள் திரும்பவும் நிகழ்ந்தே தீரும். நிபந்தனைகள் உள்ள இடங்களில் சீனாவுக்கு அதன் மட்ரிட்30 நகரங்கள் கிடைக்கும். இதுவரை சீனாவிற்கு ஒரு மட்ரிட் கூடக் கிடைக்கவில்லை, இப்போதிருந்து நாம் பலவற் றைச் சிருஷ்டிக்கக் கடுமையாக உழைக்க வேண்டும், ஆனால் அவையெல்லாம் நிபந்தனைகளிற்தான் தங்கியுள்ளன. இவற் றில் மிக அடிப்படையானது முழுச் சேனையினதும் மக்களினதும் விரிவான அரசியல் ரீதியான அணிதிரட்டலாகும்.

117. எமது சகல வேலைகளிலும் நாம் ஐப்பானிய-எதிர்ப்புத் தேசிய ஐக்கிய முன்னணி என்ற பொதுக் கொள்கையில் விடாப் பிடியாக இருக்க வேண்டும். ஏனெனில் இந்தக் கொள்கை யைக் கொண்டு மட்டுமே நாம் பதிற்தாக்குதல் யுத்தத்திலும் நீண்டகால யுத்தத்திலும் விடாப்பிடியாக இருக்கவும் தளகர்த் தர்களுக்கும் வீரர்களுக்குமிடையிலும் சேனைக்கும் மக்களுக்கு மிடையிலுமான உறவுகளில் பரந்த, ஆழ்ந்த முன்னேற்றத்தை

ஏற்படுத்தவும், இன்னும் எம் வசமுள்ள பிரதேசம் முழுவதினதும் பாதுகாப்புக்கும் நாம் இழந்துள்ள பிரதேசத்தின் மீட்பிற்குமான போராட்டத்தில் முழுச்சேனையினதும் முழு மக்களினதும் தீவிர உற்சாகத்தைப் பூரணமாகத் தட்டியெழுப்பவும், அவ்வாருக இறுதிவெற்றியை ஈட்டவும் முடியும்.

118. சேனையினதும் மக்களினதும் அரசியல் ரீதியான அணிதிரட்டலாகிய இந்தப் பிரச்சினை உண்மையில் மிகப் பெரும் முக்கியத்துவம் உடையது. நாம் கூறியதைத் திரும்பத் திரும்பக் கூறுகிறேமென்பதையும் பொருட்படுத்தாமல் இது பற்றி இவ்வளவு கூறுவது சரியாக இது இல்லாமல் வெற்றி அசாத்தியம் என்பதால் தான். இயற்கையாகவே, வெற்றிக்கு இன்றியமையாதவையான மற்றும் பல நிபந்தனைகளும் உள்ளன தான், ஆனல் அரசியல் ரீதியான அணிதிரட்டலே மிக அடிப்படையானது. ஜப்பானிய-எதிர்ப்புத் தேசிய ஐக்கிய முன்னணி முழுச் சேனையினதும் முழு மக்களினதும் ஓர் ஐக்கிய முன்னணியாகும், நிச்சயமாக அது வெறுமனே சில அரசியற் கட்சிகளின் தலைமை ஸ்தானங்களினதும் அங்கத்தினர்களினதும் ஓர் ஐக்கிய முன்னணியல்ல; ஜப்பானிய-எதிர்ப்புத் தேசிய ஐக்கிய முன்னணியைத் தொடக்குவதில் எமது அடிப்படை நோக்கம் முழுச் சேனையையும் முழு மக்களையும் அதிற் பங்குபற்ற அணிதிரட்டுவதுதான்.

## முடிவுகள்

119. எம் முடிவுகள் என்ன? அவையாவன:

''எத்தகைய நிலைமைகளின் கீழ் சீனவால் ஜப்பானிய ஏகாதிபத்தியத்தின் சக்திகளைத் தோற்கடிக்கவும் அழிக்கவும்

முடியும்? அதற்கு மூன்று நிலைமைகள் தேவை: முதலாவது, சீனாவில் ஜப்பானிய-எதிர்ப்புத் தேசிய ஐக்கிய முன்னணி ஏற்படுவது; இரண்டாவது, சர்வதேசிய ஜப்பானிய-எதிர்ப்பு ஐக்கிய முன்னணியொன்று உருவாவது; மூன்றாவது, ஜப்பானிலும் ஜப்பானியக் காலனிகளிலுமுள்ள மக்கள் மத்தியில் புரட்சிகர இயக்கம் எழுவது. சீன மக்களின் கண்ணோட்டத்திலிருந்து பார்க்கையில் இவற்றில் மிக முக்கியமானது சீன மக்களின் பெரும் ஐக்கியமாகும்.''

''இத்தகைய ஒரு யுத்தம் எவ்வளவு காலம் நீடிக்கும்? அது சீன மக்களின் ஜப்பானிய-எதிர்ப்பு ஐக்கிய முன்னணியின் பலத்திலும் சீனாவையும் ஜப்பானையும் சம்பந்தப்படுத்தும் பிற தீர்க்கமான அம்சங்கள் பலவற்றிலும் தங்கியுள்ளது.''

''இந்த நிலைமைகள் விரைவில் அடையப்படாவிட்டாலோ யுத்தம் மிக நீண்டதாக இருக்கும். ஆனால் அப்போதும் கூட இறுதியில் ஜப்பான் தோற்கடிக்கப்பட்டுச் சீனா நிச்சயம் வெல்லும். ஆனால் தியாகங்கள் தான் பெரிதாக இருக்கும், துன்பமிகுந்த காலகட்டமொன்றும் இருக்கும், அவ்வளவே.''

''எமது யுத்ததந்திரக் கோட்பாடு எமது பிரதான படைகளை விசாலித்த, சலனமுறும் முனையில் போரிடப் பிரயோகித்தலாக இருக்க வேண்டும். வெற்றியடைவதற்குச் சீனத் துருப்புக்கள் விசாலமான போர்க்களங்களில் உயர்ந்த அளவான நடமாட்ட யுத்தத்தை நடத்தவேண்டும்.''

''நடமாட்ட யுத்தம் நடத்தப் பயிற்றப்பட்ட சேனைகளை உபயோகிப்பது போக நாம் விவசாயிகள் மத்தியில் பெருந்தொகையான கொரில்லாக் கூறுகளை அணிதிரட்ட வேண்டும்.''

''யுத்தத்தின் ஊடே . . .சீனு தனது துருப்புக்களின் சாதனுதிகளைச் சிறிது சிறிதாகப் பலப்படுத்த முடியும். ஆகவே சீனுவால் யுத்தத்தின் பிற்காலகட்டத்தில் ஸ்தான யுத்தம் நடத்தவும் ஜப்பான் கைப்பற்றியுள்ள பகுதிகள் மீது ஸ்தானத்தாக்குதல்கள் செய்யவும் கூடியதாக இருக்கும். அவ்வாருகச் சீனுவின் நீண்டகால எதிர்ப்பின் பளுவின் கீழ் ஜப்பானின் பொருளாதாரம் முறியும்; எண்ணிலடங்காத போர்களினுல் ஜப்பானியப் படைகள் தேய்வுற்று அவற்றின் துணிவு தகரும். சீனத் தரப்பிலோ, மறைவான எதிர்ப்பு சக்தி நாளுக்கு நாள் கொந்தளித்து ஓங்கி வளர்வதோடு, பெருந்தொகையான புரட்சிகர மக்கள் தங்கள் விடுதலைக்காகப் போரிட எம் முன்னணிகளுக்குள் வந்து குவிந்து கொண்டேயிருப்பர். இவையாவும் பிற அம்சங்களும் சேர்ந்து நாம் ஜப்பான் கைப்பற்றியுள்ள பகுதிகளிலுள்ள கொத்தளங்கள் மீதும் தளங்கள் மீதும் தீர்க்கமான இறுதித்தாக்குதல்களைத் தொடுத்து, ஜப்பானிய ஆக்கிரமிப்புப் படைகளைச் சீனுவிலிருந்து விரட்டக் கூடியதாக்கும்.'' (1936 ஜூலையில் எட்கர் ஸ்னேவுக்களித்த ஒரு பேட்டியிலிருந்து எடுக்கப்பட்டது.)

''இவ்வாருகச் சீனுவின் அரசியல் நிலைமையில் ஒரு புதிய கட்டம் தொடங்கியுள்ளது. . . . தற்போதைய கட்டத்தின் கேந்திரமான பணி பதிற்தாக்குதல் யுத்தத்தில் வெற்றிக்காகத் தேசத்தின் சகல சக்திகளையும் அணிதிரட்டுவதாகும்.''

''யுத்தத்தில் வெற்றிக்கான திறவுகோல் இப்போது, ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுவிட்ட பதிற்தாக்குதல் யுத்தத்தை முழுத் தேசத்தினதும் ஒரு மொத்தப்படியான பதிற்தாக்குதல் யுத்தமாக விருத்தி செய்வது தான். இத்தகைய

முழுத் தேசத்தினதும் ஒரு மொத்தப்படியான பதிற்தாக்குதல் யுத்தத்தின் மூலம் மட்டுமே இறுதி வெற்றி ஈட்டப்பட முடியும்.''

''தற்போதைய பதிற்தாக்குதல் யுத்தத்தில் பாரதூரமான பலவீனங்கள் இருக்கின்றனவாகையால் யுத்தத்தின் போக்கில் பல பின்னடைவுகள், பின்வாங்குதல்கள், உட்பிளவுகள், துரோகங்கள், தற்காலிகமான, ஒரு பகுதியளவான சமரசங்கள் முதலிய பாதகநிலைமைகள் ஏற்படக் கூடும். ஆகவே யுத்தம் சிரமமிக்க, நீண்ட ஒரு யுத்தமாக இருக்கும் என உணர்ந்து கொள்ளப்பட வேண்டும். ஆனல், எமது கட்சியினதும் முழு மக்களினதும் பிரயாசைகள் மூலம், ஏற்கனவே ஆரம்பித்துவிட்ட பதிற்தாக்குதல் யுத்தம் சகல தடைகளையும் கடந்து, தொடர்ந்தும் முன்னேறுவதும் விருத்தியுறுவதும் நிச்சயமென நாம் திடமாக நம்புகின்றேம்.'' (''இன்றைய நிலைமையும் நமது கட்சியின் கடமைகளும் பற்றிய சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் முடிவு'' 1937, ஆகஸ்ட்)

இவையே எம் முடிவுகள். அடிமைப்பாட்டுவாதிகளின் பார்வையில் எதிரிகள் மனிதர்களுக்கு மேற்பட்டவர்களும் சீனர்களாகிய நாம் உதவாதவர்களுமாகையில், விரைவான வெற்றித் தத்துவக்காரர்களின் பார்வையிலோ சீனர்களாகிய நாம் மனிதர்களுக்கு மேற்பட்டவர்களும் எதிரிகள் உதவாக்கரைகளும் ஆகின்றேம். இருவருமே தவறு. நாம் வேறு விதமான கருத்தொன்றைக் கொண்டுள்ளோம்; ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தம் ஒரு நீண்டகால யுத்தம், இறுதி வெற்றி சீனுவினுடையதாயிருக்கும். இவையே எமது முடிவுகள்.

*120. என் விரிவுரைகள் இத்துடன் முடிவடைந்தன. மகத்தான ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தம் மலர்ந்து வருகிறது. பலர் பூரண வெற்றியை ஈட்டுவதற்கு அனுசரணையாக அனுபவத்தின் தொகுப்புரையொன்றை எதிர்பார்த்திருக்கின்றனர். நான் விவாதித்துள்ளது வெறுமனே கடந்த பத்து மாதங்களின் பொதுவான அனுபவமே; அது ஒருவேளை ஒருவித தொகுப்புரையாகப் பயன்படக்கூடும். நீண்ட கால யுத்தமென்ற பிரச்சினை பரவலான கவனத்திற்கும் விவாதத்திற்கும் உரியது; நான் தந்துள்ளது ஒரு உருவரை மட்டுமே, அதை நீங்கள் பரிசீலித்து, விவாதித்து, திருத்துவீர்கள் என்றும் விரித்துரைப்பீர்களென்றும் நம்புகிறேன்.*

## குறிப்புகள்

*1. 1937ம் ஆண்டு ஜூலை 7ந் தேதி ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர் பீக்கிங் நகரத்துக்குத் தென்மேற்கே பத்து கிலோமீட்டர்களுக்கு அப்பால் இருக்கும் லூகோச்சியௌவிலிருந்த சீனப் பாதுகாப்புப் படைமீது தாக்குதல் தொடுத்தனர். மக்களின் நாடுபரந்த விறுவிறுப்பான ஜப்பானிய-எதிர்ப்பு இயக்கத்தின் செல்வாக்கினுற் சீனத் துருப்புக்கள் எதிர்த்தாக்குதல் தொடுத்தன. ஜப்பானுக்கெதிரான சீன மக்களின் வீரஞ்செறிந்த எட்டாண்டுகாலப் போராட்டத்துக்கு இச்சம்பவம் ஒரு தொடக்கப் புள்ளியாக அமைந்தது.*

*2. இத்தேசிய அடிமைப்பாட்டுத் தத்துவமே கோமிந்தாங் கொண்டிருந்த கருத்தாகும். கோமிந்தாங் ஜப்பானை எதிர்க்க மனமற்றதாய், நிர்ப்பந்தத்தின் கீழ் மட்டுமே ஜப்பானுடன் போரிட்டது. லூகோச்சியௌ சம்பவத்திற்குப் பின், சியாங் கை-ஷேக் கும்பல் தயக்கத்துடன் பதிற்தாக்குதல் யுத்தத்தில் பங்கு பற்றியது, வாங் சிங்-வெய் கும்பல் தேசிய அடிமைப்பாட்டுத் தத்துவத்தின் பிரதிநிதியாகி, ஜப்பானிடம் பணிந்து போகத் தயாராயிருந்து, பின்னர் உண்மையில்*

அவ்வாறே செய்தது. இருப்பினும் தேசிய அடிமைப்பாட்டுக் கருத்து கோமிந்தாங்கில் இருந்தது மட்டுமல்லாமல், சமுதாயத்தின் இடைப்பட்ட படிவங்களின் சில பிரிவினரையும், உழைக்கும் மக்கள் மத்தியிலான சில பின்னடைந்த நபர்களேயும் கூடப் பாதித்தது. பதிற்றாக்குதல் யுத்தத்தில் ஊழல் மலிந்த, கையாலாகாத கோமிந்தாங் அரசாங்கம் ஒன்றுக்குப் பின் ஒன்ருகப் போர்களிற் தோற்க, ஜப்பானியத் துருப்புக்கள் யுத்தத்தின் முதலாவது ஆண்டில் வூஹனுக்கு அருகாமை வரை தடையின்றி முன்னேறவே, பின்னடைந்த சிலர் மிக மிக நம்பிக்கையீனமடைந்தனர்.

3. இந்தக் கருத்துக்கள் கம்யூனிஸ்ட் கட்சிக்குள் காணப்பட்டன. ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தத்தின் முதல் ஆறு மாதங்களின் போது, சில கட்சி அங்கத்தினர்கள் மத்தியில் எதிரியை லேசாகப் பார்க்கும் போக்கொன்று இருந்தது. அவர்கள் ஜப்பான் ஒரு அடிக்கும் நிற்கமுடியாது என்ற கருத்தைக் கொண்டிருந்தனர். இந்தக் கருத்துக்குக் காரணம் அவர்கள் எம் சொந்தப் படைகள் பலமானவையென்று எண்ணிஞர்களென்பதல்ல, ஏனெனில் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையிலான துருப்புக்களும் ஸ்தாபன ரீதியில் அணிதிரட்டப்பட்ட மக்கள் சக்திகளும் இன்னும் சிறியவையாகத்தானிருந்தன என்பதை அவர்கள் நன்கு அறிந்திருந்தனர்; மாருகக் கோமிந்தாங் ஜப்பானை எதிர்க்கத் தொடங்கியிருந்தது. அவர்களின் அபிப்பிராயத்தில், கோமிந்தாங் மிகச் சக்திமிக்கதும், கம்யூனிஸ்ட் கட்சியுடன் இணைவாக, ஜப்பானுக்கு உறைக்கும் அடிகள் கொடுக்கவல்லதுமாகும் என்பதே. அவர்கள் கோமிந்தாங்கின் ஒரு அம்சத்தை மட்டுமே, அது தற்காலிகமாக ஜப்பானை எதிர்த்தது என்பதைமட்டுமே பார்த்து, மற்ற அம்சத்தை, அது பிற்போக்கானதும் ஊழல் மலிந்ததும் என்பதைப் புறக்கணித்தனர், எனவே அவர்கள் இந்தத் தவருன கணிப்பீட்டைச் செய்தனர்.

4. சியாங் கை-ஷேக்கினதும் அவனின் கூட்டத்தினதும் கருத்து இவ்வாறிருந்தது. ஜப்பானை எதிர்க்க நிர்ப்பந்திக்கப்பட்டனராயினும் சியாங் கை-ஷேக்கும் கோமிந்தாங்கும் தங்கள் நம்பிக்கைகளைத் தனிய உடனடியான அந்நிய உதவியிலேயே வைத்தனர், தம் சொந்தப் பலத்தில் நம்பிக்கையற்றும், மக்களின் பலத்தில் மேலும் நம்பிக்கையற்றுமிருந்தனர்.

5. தைஅல்ச்சுவாங் தெற்கு ஷன்துங்கிலுள்ள ஒரு பட்டினம். அங்கு சீனச் சேனை 1938 மார்ச்சில் ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராகப் போரொன்று நடத்தியது. ஜப்பானின் 70,000 முதல் 80,000வரையான வீரர்களுக்கு எதிராக 400,000 வீரர்களை நிறுத்திச் சீனச் சேனை ஜப்பானியர்களைத் தோற்கடித்தது.

6. இந்தக் கருத்து அப்போது கோமிந்தாங்கிலான அரசியல் விஞ்ஞானக் கோஷ்டியின் ஏடான தாகுங்பாஓவில் ஒரு தலையங்கத்தில் முன்வைக்கப்பட்டது. மனப்பால் குடித்தலிலீடுபட்டு இக்கும்பல் தைஅல்ச்சுவாங் ரகமான மேலும் சில வெற்றிகள் ஜப்பானின் முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்திவிடுமென்றும், தம் சொந்த வர்க்கத்தின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாகக்கூடிய நீண்டகால யுத்தத்திற்கான மக்களின் அணிதிரட்டல் தேவைப்படாது என்றும் நம்பிக்கை பாராட்டியது. அப்போது இந்த மனப்பால் குடித்தல் கோமிந்தாங் முழுமைக்கும் பரவியது.

7. சாங் ஷியெ-லியாங் தலைமையிலான கோமிந்தாங்கின் வட கிழக்குச் சேனையும் யாங் ஹு-செங் தலைமையிலான கோமிந்தாங்கின் பதினேழாவது மார்க்க ராணுவமும் சீனச் செஞ்சேனையினதும் மக்களின் ஜப்பானிய-எதிர்ப்பு இயக்கத்தினதும் செல்வாக்கினால், சீனக் கம்யூனிஸ்ட் கட்சியால் பிரேரிக்கப்பட்ட ஜப்பானிய-எதிர்ப்புத் தேசிய ஐக்கிய முன்னணியை ஏற்றுக் கொண்டு, ஜப்பானை எதிர்ப்பதற்குக் கம்யூனிஸ்ட் கட்சியுடன் ஐக்கியப்படவேண்டும் என்று சியாங் கை-ஷேக்கைக் கோரின. சியாங் கை-ஷேக் அதை ஏற்றுக்கொள்ள மறுத்ததோடு நிற்காமல் மேலும் முறைகேடான செயலில் ஈடுபட்டு, ''கம்யூனிஸ்ட் கட்சியை அடக்கும்'' தன் ராணுவத் தயாரிப்புகளை ஊக்கமாகச் செய்து, சீஆனில் ஜப்பானிய-எதிர்ப்புடைய வாலிபரைப் படுவதைசெய்தான். சாங் ஷியெ-லியாங்கும், யாங் ஹு-செங்கும் கூட்டு நடவடிக்கையெடுத்து சியாங் கை-ஷேக்கைக் கைது செய்தனர். இதுதான் பிரசித்திபெற்ற 1936ம் ஆண்டு டிசம்பர் 12ந் தேதி சீஆன் சம்பவம். அப்போது, சீனக் கம்யூனிஸ்ட் கட்சியுடன் ஐக்கியப்பட்டு ஜப்பானை எதிர்க்கும் நிபந்தனையை ஏற்றுக்கொள்ள சியாங் கை-ஷேக் நிர்ப்பந்திக்கப்பட்டான்; அதன் பின்னர் அவன் விடுதலை செய்யப்பட்டு நான்கிங்கிற்குத் திரும்பிச் சென்றான்.

8. 18ம் நூற்றாண்டின் இறுதி முதல் பல பத்தாண்டுகளாகப் பிரித்தானியா சீனாவிற்கு மென்மேலும் பெருந் தொகையான அபினை ஏற்றுமதி செய்துவந்தது. இந்தச் செயல் சீன மக்களைப் போதைப் பொருட்களுக்காளாக்கியது. அது மாத்திரமல்ல, சீனாவின் வெள்ளியையும் கொள்ளையடித்தது. இது சீனாவில் எதிர்ப்பைக் கிளப்பிவிட்டது. 1840ல், பிரித்தானியா சீனாவுடனுள்ள தனது வர்த்தகத்தைக் காப்பாற்றுவது என்ற சாக்கில், சீனாவிற்கெதிராக ஆக்கிரமிப்பு யுத்தம் தொடுத்தது. லின் ஸெ-ஸியின் தலைமையிலான சீனத் துருப்புக்கள் எதிர்ப்பை ஏற்படுத்தின. குவாங்செள மக்கள் தன்னியல்பாகவே ''பிரித்தானியப் படைகளை

எதிர்த்துத் தாக்கும் கோஷ்டி''யை ஸ்தாபித்தனர். இது பிரித்தானிய ஆக்கிர மிப்புப் படைகளுக்குப் பலத்த அடி கொடுத்தது. இருப்பினும், 1842ல், ஊழல் நிறைந்த சிங் வம்ச ஆட்சி பிரித்தானியாவுடன் ''நான்கிங் ஒப்பந்த''த்தைச் செய்தது. இந்த ஒப்பந்தம், பிரித்தானியாவுக்கு நஷ்ட ஈடு கொடுக்கவும் ஹொங் கொங்கைப் பிரித்தானியாவிடம் ஒப்படைக்கவும் வேண்டுமெனவும், அத்துடன் ஷாங்ஹாய், ஃபூசௌ, அமொய், நிங்போ, குவாங்சௌ ஆகியவற்றை ஒப்பந்தத் துறைமுகங்களாகத் திறக்க வேண்டுமெனவும், சீனுவில் இறக்குமதி செய்யப் படும் பிரித்தானியப் பொருட்களுக்கான சுங்கவரியைப் பிரித்தானியாவும் சீனுவும் சேர்ந்து நிர்ணயிக்கவேண்டுமெனவும் வகுத்தது.

9. தைப்பிங் விண்ணுலக சாம்ராச்சியப் புரட்சி என்பது 19ம் நூற்ருண்டின் மத்தியில் சிங் வம்சத்தின் நிலப்பிரபுத்துவ ஆட்சிக்கும் தேசிய அடக்குமுறைக் குமெதிராக நடந்த புரட்சிகர விவசாயி யுத்தமாகும். 1851 ஜனவரியில் இப் புரட்சியின் தலைவர்களான ஹுங் சியூ-சுவான், யாங் சியூ-சிங் முதலியோர் குவாங்சி மாகாணத்துக் குவெய்பிங் மாவட்டத்து சின்தியென் கிராமத்தில் ஒரு எழுச்சியை ஏற்படுத்தியதோடு ''தைப்பிங் விண்ணுலக சாம்ராச்சியம்'' ஸ்தாபிக்கப்பட்டதையும் பிரகடனம் செய்தனர். 1852ல், அவர்களது விவ சாயிப் படை குவாங்சியிலிருந்து ஹுனுன், ஹுபெய், கியாங்சி, அன்ஹுய் ஆகியவற்றிற்கூடாகச் சென்று, 1853ல் நான்கிங்கைக் கைப்பற்றியது. பின்னர் படையில் ஒரு பகுதி வடக்கு நோக்கி முன்னேறி தியென்சினின் சுற்றுப்புறம்வரை தாக்கிச்சென்றது. இருப்பினும், தைப்பிங் படை தான் கைப்பற்றிய இடங்களில் நிலையான தளப்பிரதேசங்களை ஸ்தாபிக்கத் தவறியது. மேலும், நான்கிங்கிற் தனது தலைநகரை அமைத்த பின்னர், அதன் தலைமைக் குழு பல அரசியல், ராணுவத் தவறுகளை இழைத்தது. ஆகவே, அது சிங் வம்ச அரசாங்கத்தின் எதிர்ப் புரட்சிப் படைகளினதும் பிரித்தானிய, அமெரிக்க, பிரெஞ்சு ஆக்கிரமிப்பாளர தும் கூட்டுத் தாக்குதலை எதிர்த்து நிற்கமுடியாது ஈற்றில் 1864ற் தோற்கடிக்கப் பட்டது.

10. 1898ச் சீர்திருத்த இயக்கம் சுதந்திர பூர்ஷுவாக்களினதும் விழிப் புற்ற நிலப்பிரபுக்களினதும் நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்தியது. அதன் தலை வர்கள் காங் யு-வெய், லியாங் சி-சௌ, தான் சு-துங் ஆகியோராவர். இந்த இயக்கம் சக்கரவர்த்தி குவாங் ஸியின் விருப்பத்தைப் பெற்று, அவரால் ஆதரிக் கப்பட்டது. ஆனுல் இந்த இயக்கத்திற்கு வெகுஜன அடிப்படை இருக்கவில்லை. தன் கட்டுப்பாட்டில் ஒரு ராணுவத்தை வைத்திருந்த யுஅன் ஷு-கை பிடிவா

திகளின் தலைவியான சக்கரவர்த்தினி பெருங் கோப்பெண்டு சுசியிடம் சீர்திருத் தவாதிகளைக் காட்டிக்கொடுத்தார். சக்கரவர்த்தினி திரும்பவும் அதிகாரத்தைக் கைப்பற்றி, சக்கரவர்த்தி குவாங் ஸியைச் சிறையிலிட்டதோடு தான் சு-துங் ஙினதும் இன்னும் ஐவரதும் தலைகளை வெட்டினாள். இவ்வாறு அந்த இயக்கம் துன்பகரமான தோல்வியில் முடிந்தது.

11. 1911ப் புரட்சி சிங் வம்சத்தின் யதேச்சாதிகார ஆட்சியைத் தூக்கியெ றிந்த புரட்சியாகும். அந்த ஆண்டு அக்டோபர் 10ந் தேதி, பூர்ஷுவா வர்க்கத் தினதும் குட்டி பூர்ஷுவா வர்க்கத்தினதும் புரட்சிகரக் கோஷ்டிகளின் தூண்டு தலின் பேரில் சிங் வம்சத்தின் புதிய படையில் ஒரு பகுதி வூசாஙில் ஒரு கிளர்ச்சி நடத்தியது. அதைத் தொடர்ந்து வேறு பல மாகாணங்களிற் கிளர்ச்சிகள் ஏற்பட்டன. இவ்வாறு உடனேயே சிங் வம்ச ஆட்சி பொடிப் பொடியாகியது. 1912 ஜனவரி 1ந் தேதி நான்கிங்கிலே சீனக் குடியரசின் தற்காலிக அரசாங்கம் நிறு வப்பட்டது. சுன் யட்-சன் அதன் தற்காலிக ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். இப்புரட்சி பூர்ஷுவா வர்க்கத்துக்கு விவசாயிகள், தொழிலாளர்கள், நகரக் குட்டி பூர்ஷுவாக்கள் ஆகியோருடனான நேச அணியின் மூலம் தான் வெற்றி ஈட்டியது. புரட்சியின் தலைமைக் கும்பல் சமரசத் தன்மையுடையதா யிருந்ததாலும், அது விவசாயிகளுக்கு உண்மையான நலன்களைக் கொண்டுவரத் தவறியதினாலும், ஏகாதிபத்திய நிலப்பிரபுத்துவக் கட்டாயத்தினாலும் அரசாங்க அதிகாரம் வட யுத்தப்பிரபுவான யுஅன் ஷு-கையிடம் ஒப்படைக்கப்பட்டது. இதன் பயனாகப் புரட்சி தோல்வியில் முடிந்தது.

12. 1938 ஜனவரி 16ந் திகதி ஜப்பானிய அமைச்சரவை ஒரு கொள்கை அறிக்கையில் ஜப்பான் சீனாவைப் பலாத்காரத்தால் அடிமைப்படுத்துமெனப் பிரகடனம் செய்தது. அதே நேரத்தில் அது மிரட்டல்களாலும் இச்சகமொ ழிகளாலும் கோமிந்தாங் அரசாங்கத்தை அடிபணியச் செய்ய முயன்று, கோமிந்தாங் அரசாங்கம் ''தொடர்ந்தும் எதிர்ப்பிற்குத் திட்டமிடுவ'' தென்றால் ஜப்பானிய அரசாங்கம் சீனாவில் ஒரு புதிய கைப்பொம்மை ஆட்சியை வளர்த்தெ டுக்கும், பின்னும் கோமிந்தாங்கைப் பேச்சுவார்த்தைகளில் ''மறு தரப்பாக'' அங்கீகரிக்காது எனப் பிரகடனம் செய்தது.

13. பிரதானமாக அமெரிக்க முதலாளிகளைக் குறிக்கிறது.

14. பிரித்தானியா, அமெரிக்கா, பிரான்ஸ் ஆகிய ஏகாதிபத்திய வல்லரசு களின் அரசாங்கங்களைக் குறிக்கிறது.

15. ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தத்தில் தேக்க நிலைக் கட்டத்தின்போது சீனா

உயர்வுறுமென்ற தோழர் மாஒ சேதுங் அவர்களின் தீர்க்கதரிசனம் சீனக் கம்யூ னிஸ்ட் கட்சியின் தலைமையின்கீழான விடுதலைப் பிரதேசங்களில் முற்றுக மெய்ப் பட்டது. ஆனால் கோமிந்தாங் பகுதிகளில், சியாங் கை-ஷேக்கின் தலைமையிலான ஆளும் கும்பல் ஜப்பானை எதிர்ப்பதில் செயலற்றும் கம்யூனிஸ்ட் கட்சியையும் மக்களையும் எதிர்ப்பதில் தீவிரமாயும் இருந்ததன் காரணமாக, உயர்வு ஒன் றிற்குப் பதிலாக உண்மையில் தாழ்வு ஒன்றுதான் ஏற்பட்டது. இது பரந்த வெகுஜனங்கள் மத்தியில் எதிர்ப்பைத் தூண்டி, அவர்களின் அரசியல் அறி வுணர்வையும் உயர்த்தியது. இந்த உண்மைபற்றி, தோழர் மாஒ சேதுங் அவர்கள் தமது ''கூட்டரசாங்கம் பற்றி'' என்ற படைப்பில் செய்த பகுத்தா ராய்ச்சியைப் பார்க்கவும்.

16. ''ஆயுதங்களே அனைத்தையும் நிர்ணயிக்கின்றன என்ற தத்துவ''த்தின் பிரகாரம், ஆயுதங்கள் சம்பந்தப்பட்ட மட்டில் ஜப்பானுக்குத் தாழ்வாக இருந்த சீன யுத்தத்தில் தோற்கடிக்கப்பட்டே தீருமென்றிருந்தது. இந்தக் கருத்து (சியாங் கை-ஷேக் உட்பட்ட) கோமிந்தாங் பிற்போக்குவாதிகளின் தலைவர்கள் அனைவர் மத்தியிலும் நிலவியது.

17. ஸுன் வூ-குங் 16ம் நூற்றாண்டில் எழுதப்பட்ட, ''மேற்கு யாத்திரை'' என்ற சீன நவீனத்தின் குரங்குக் கதாநாயகன். அவனால் ஒரு குட்டிக்கரணமடித்து 108,000 லீ தொலைவு தாண்டமுடியும். இருந்தும் புத்தரின் உள்ளங்கையில் எடுக்கப்பட்டதும் அவனால் எத்தனை குட்டிக்கரணங்கள்தான் போட்ட போதும் அதை விட்டு வெளியேற இயலவில்லை. புத்தர் தன் உள்ளங்கையை மடித்துத் தன் விரல்களைப் பஞ்ச பூதங்களின் ஐந்து-சிகர மலையாக்கி, ஸுன் வூ-குங்கைப் புதையச் செய்தார்.

18. ''பாஸிஸம் என்பது கட்டற்ற தேசிய ஆக்கிரமிப்பு வெறியும் கொள்ளை யுத்தமுமாகும்'' எனத் தோழர் ஜோர்ஜ் டிமிட்ரோவ் 1935 ஆகஸ்டில் கம்யூ னிஸ்ட் சர்வதேசத்தின் ஏழாவது உலக மாநாட்டிற்கான, ''பாஸிஸத் தாக்கு தலும் கம்யூனிஸ்ட் சர்வதேசத்தின் கடமைகளும்'' என்ற தலைப்பிலான தமது அறிக்கையிற் கூறினார். 1937 ஜூலையில் தோழர் டிமிட்ரோவ் ''பாஸிஸம் என்பது யுத்தம்'' என்ற தலைப்பிட்ட கட்டுரையொன்றைப் பிரசுரித்தார்.

19. லெனின், ''சோஷலிஸமும் யுத்தமும்'', அத்தியாயம் 1, ''இரண்டாம் அகிலத்தின் தகர்வு'' பகுதி 3 ஆகியவற்றைப் பார்க்கவும்.

20. இந்த நூலில், ''சீனாவின் புரட்சிகர யுத்தத்தில் யுத்ததந்திர பிரச்சினைகள்'' என்ற கட்டுரைக்கான குறிப்பு 3ஐப் பார்க்கவும்.

*21. செங்பூ (தற்போதைய ஹோனன் மாகாணத்தில் ஃபான்ஸியென் மாவட்டத்தில் அமைந்துள்ளது — மொழிபெயர்ப்பாளர்) கி.மு. 632ல் ஜின், சூ அரசுகளுக்கிடையிலான பெரும் போரொன்றின் அரங்கு. போரின் தொடக்கத்தில் சூ துருப்புக்களின் கை ஓங்கிற்று. ஜின் துருப்புக்கள் 90 லீ தூரம் பின் வாங்கிய பின் சூ துருப்புக்களின் பலவீனமான ஸ்தானங்களான வலது, இடது பக்கவாடுகளைத் தெரிந்தெடுத்து, அவற்றில் கடும் தாக்குதல் தொடுத்ததால், சூ துருப்புக்கள் படுதோல்வியடைந்தன.*

*22. கி. மு. 204ல் ஹன் அரசின் ஒரு தளபதியான ஹான் சின் தன் வீரர்களுக்குச் சிங்ஸிங்கில் சௌ ஸியெவுடனுன ஒரு பெரும் போரில் தலைமை தாங்கினார். 200,000வீரர்களைக் கொண்டதெனக் கூறப்படும் சௌ ஸியெவின் சேனை ஹனினுடையதைப் போலப் பலமடங்காகும். தன் துருப்புக்களை நதிக்குப் பின்புறம் காட்டிய நிலையில் செலுத்தித் தீரப் போரிடுதலில் அவற்றிற்குத் தலைமையளித்துக்கொண்டு ஹான் சின் அதே நேரத்தில் சில கூறுகளைப் பலவீனமாகக் காவல் செய்யப்பட்ட எதிரியின் பின்புறத்தைத் தாக்கிக் கைப்பற்ற அனுப்பினார். ஓர் இடுக்கியில் அகப்பட்ட சௌ ஸியெவின் துருப்புக்கள் அறவே தோற்கடிக்கப் பட்டன.*

*23. 18ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 19ம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் பிரான்ஸைச் சேர்ந்த நெப்போலியன் பிரிட்டன், பிரஷ்யா, ஆஸ்டிரியா, ரஷியா ஆகிய நாடுகள்மீதும் இதர ஐரோப்பிய நாடுகள் பலவற்றின்மீதும் யுத்தம் தொடுத்தார். போர் பலவற்றில் நெப்போலியனது துருப்புக்களின் தொகை எதிரித் துருப்புக்களின் தொகையைவிட குறைவானதாக இருந்தபோதிலும் அவரின் துருப்புக்களுக்கே வெற்றி கிட்டியது.*

*24. கி.பி. 383ல் சின் அரசின் ஆட்சியாளனுன ஃபூ சியென் ஜின் துருப்புக்களைச் சிறுமைப்படுத்தி, அவற்றைத் தாக்கினார். ஜின் துருப்புக்கள் எதிரியின் முன்கூறுகளை அன்ஹூய் மாகாணத்தின் ஷௌயாங் மாவட்டத்திலான லோஜியெனில் தோற்கடித்து விட்டு நில மார்க்கமாகவும் நீர் மார்க்கமாகவும் முன்னேறின. ஷௌயாங் நகர்ச் சுவரிலேறிய ஃபூ சியென், ஜின் துருப்புக்களின் திறமான அணிவகுப்பை அவதானித்து, பாகுங் மலையிலான காடுகளையும் புதர்களையும் எதிரிப் படைவீரர்களென எண்ணி, எதிரியின் மிகுதியாகத் தோன்றிய பலத்தைக்கண்டு அஞ்சிவிட்டார். இந்நூலில், ''சீனவின் புரட்சிகர யுத்தத்தில் யுத்ததந்திரப் பிரச்சினைகள்'' என்ற கட்டுரைக்கான குறிப்பு 30ஐப் பார்க்கவும்.*

*25. தோழர் மாஓ சேதுங் அவர்கள் இங்கே சியாங் கை-ஷேக்கும் வாங்*

சிங்-வெய்யும் 1927ல் கோமிந்தாங்கினதும் கம்யூனிஸ்ட் கட்சியினதும் முதலாவது தேசிய ஜனநாயக ஐக்கிய முன்னணிக்குத் துரோகம் செய்துவிட்டு, மக்களுக்கு எதிராகப் பத்து வருட யுத்தமொன்றைத் தொடுத்து, அவ்வாறுகச் சீன மக்கள் பெரும் ரீதியில் அணிதிரட்டப்படுவதை அசாத்தியமாக்கினர் என்ற உண்மையைக் குறிப்பிடுகிறுர். இந்த வரலாற்றுத் தவறுகளுக்குச் சியாங் கை-ஷேக்கின் தலைமையிலான கோமிந்தாங் பிற்போக்காளர்கள் பொறுப்பாகக் கொள்ளப்பட வேண்டும்.

26. ஸொங்கின் ராஜா ஸியாங் கி.மு. 7வது நூற்றுண்டில் வசந்த, இலையுதிர் கால சகாப்தத்தில் ஆட்சி செய்தார். கி.மு. 638ல் ஸொங் அரசு சக்திமிக்க சூ அரசுடன் போர் செய்தது. சூ துருப்புக்கள் நதியைக் கடந்துகொண்டிருந்த போது ஸொங் துருப்புக்கள் ஏற்கனவே போர் ஸ்தானங்களில் நிறுத்தப்பட்டிருந்தன. ஸொங் தளகர்த்தர்களிலொருவர் சூ துருப்புக்கள் எண்ணிக்கையிற் பலங்கூடியவையாகையால், தாக்குதலுக்கான தருணம் இதுவே என யோசனை கூறினுர். ஆனுல் ராஜா, ''இல்லை, கனவானுனவன் ஒருபோதும் தயாரற்ற நிலையிலுள்ள ஒருவனைத் தாக்கக்கூடாது'' என்று கூறிவிட்டார். சூ துருப்புக்கள் நதியைக் கடந்துவிட்டு, இன்னும் தம் போர் அணிவகுப்பைப் பூர்த்திசெய்து கொள்ளாதிருந்தபோது அத்தளகர்த்தர் மீண்டும் உடனடியான தாக்குதலைப் பிரேரித்தார், ஆனுல் மீண்டும் ராஜா, ''இல்லை, கனவானுனவர் ஒருபோதும் இன்னும் தன் போர் அணிவகுப்பைப் பூர்த்தி செய்துகொள்ளாத ஒரு சேனையைத் தாக்கக்கூடாது'' என்று கூறிவிட்டார். சூ துருப்புக்கள் பூரணமாகத் தயாரான பின்பே ராஜா தாக்குதலுக்கு உத்தரவிட்டார். இதன் விளைவாக ஸொங் துருப்புக்கள் விநாசகரமான தோல்வியை உற்றன. ராஜாவும் காயமுற்றுர்.

27. ஒரு கோமிந்தாங் யுத்தப்பிரபுவான ஹான் ஃபூ-சி பல ஆண்டுகளாக ஷன்துங்கின் தேசாதிபதியாக இருந்தார். ஜப்பானியப் படையெடுப்பாளர்கள் 1937ல் பெய்ப்பிங்கையும் தியென்சினையும் கைப்பற்றிய பின் தியென்சின்-பூகோ புகையிரத மார்க்க வழியாகத் தெற்கு நோக்கி ஷன்துங்கிற்கு நகர்ந்தபோது ஹான் ஃபூ-சி தனியொரு போர் கூடச் செய்யாமல் ஷன்துங்கிலிருந்து ஹோனுன் வரை புறமுதுகிட்டோடினுர்.

28. 1812 ஆண்டில் நெப்போலியன் ஐந்து லட்சம் துருப்புக்களைக்கொண்டு ரஷியாவைத் தாக்கினுர். ரஷியப்படை மாஸ்கோவைக் கைவிட்டு அதைத் தீக்கும் இரையாக்கியது. இதனுல் நெப்போலியனது துருப்புக்கள் பட்டினியினுலும் குளிரினுலும் துன்பப்பட்டதும் படையின் பின்புறத்திற்குத் தொந்தரவு

கோட்பாடு ஒன்ருக இருந்தாலும் பாட்டாளி வர்க்கக் கட்சியால் அதன் பிரயோகம் வேறுபட்ட நிலைமைகளுக்கேற்ப வேறுபட்ட வழிகளில் வெளிப்படுகிறது. உள்நாட்டில், முதலாளித்துவ நாடுகள் தாம் பாஸிஸ்டுகளாக இல்லாமல் அல்லது யுத்தத்தில் ஈடுபடாமல் இருக்கும் வேளையில், நிலப்பிரபுத்துவத்தையல்ல பூர்ஷுவா ஜனநாயகத்தைக் கடைப்பிடிக்கின்றன; அவற்றின் வெளியுறவுகளைப் பொறுத்த வரை அவை பிற தேசங்களால் அடக்கப்படுவதில்லை, மாருக, அவை தான் இதர தேசங்களை அடக்குகின்றன. இந்தத் தனியியல்புகளின் காரணமாக, முதலாளித்துவ நாடுகளிலுள்ள பாட்டாளி வர்க்கக் கட்சியின் கடமை ஒரு சட்டபூர்வமான நீண்டகாலப் போராட்டமூலம், தொழிலாளர்களுக்குப் போதனையளித்து, பலத்தைக் கட்டி வளர்த்து, முதலாளித்துவத்தை ஈற்றிற் தூக்கியெறிய தயாரிப்புச் செய்வதாகும். இந்த நாடுகளில் பிரச்சினை ஒரு சட்டபூர்வமான நீண்டகாலப் போராட்டமும் பாராளுமன்றத்தை மேடையாக உபயோகிப்பதும் பொருளாதார, அரசியல் வேலை நிறுத்தங்கள் நடத்துவதும், தொழிற்

---

சாரிச் சந்தர்ப்பவாதத்தைச் சமாளிக்கவும், முழுக் கட்சியையும் சீனப் புரட்சியில் யுத்தத்தினதும் யுத்ததந்திரத்தினதும் பிரச்சினைகளின் முதன் முக்கியத்துவம் பற்றிய மேலும் தெளிவான விளக்கத்தைப் பெறச் செய்யவும், அதை இவ்வேலையை உணர்வுபூர்வமாகச் செய்யும்படி அணிதிரட்டவும் வேண்டித் தோழர் மாஒ சேதுங் அவர்கள் இந்தக் கூட்டத்தில் அவ்விஷயத்தைச் சீனுவின் அரசியற் போராட்டங்களின் வரலாற்றுக் கண்ணேட்டத்துடன் அணுகி மீண்டும் அதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தி, எமது ராணுவ வேலையின் அபிவிருத்தியையும் அதன் யுத்ததந்திரத்திலான குறிப்பான மாற்றங்களையும் விளக்கிக்கூறினர். இதனுல் கட்சி முழுவதிலும் தலைமையின் சிந்தனையிலும் வேலையிலும் ஏகோபித மனப்பான்மை ஏற்பட்டது.

சங்கங்களை அமைப்பதும், தொழிலாளருக்குப் போதனை அளிப்பதுமான ஒன்ருகும். அங்கே ஸ்தாபன வடிவம் சட்டபூர்வமானதாகவும், போராட்ட வடிவம் இரத்தம் சிந்தாததாக(யுத்த ரீதியற்றதாக)வும் இருக்கும். யுத்தம் பற்றிய பிரச்சினையில், முதலாளித்துவ நாடுகளிலுள்ள கம்யூனிஸ்ட் கட்சிகள் தமது நாடுகளால் நடத்தப்படும் ஏகாதிபத்திய யுத்தங்களை எதிர்க்கின்றன; இப்படியான யுத்தங்கள் ஏற்பட்டால் அந்த நாடுகளிலுள்ள பிற்போக்கு அரசாங்கங்களுக்குத் தோல்வியைக் கொண்டுவருவதே இந்தக் கட்சிகளின் கொள்கையாகும். அவை போரிட விரும்பும் ஒரே ஒரு யுத்தம் அவை தயார்செய்து கொண்டிருக்கின்ற உள்நாட்டு யுத்தம்[1] தான். ஆனல், பூர்ஷுவா வர்க்கம் உண்மையில் திறமையற்றதாக ஆகாதவரையிலும், பாட்டாளி வர்க்கத்தின் பெரும்பான்மை ஆயுதமேந்தி எழுந்து போரிடுவதென்று உறுதி பூணுத வரையிலும், விவசாயி வெகுஜனங்கள் பாட்டாளி வர்க்கத்திற்கு விருப்புடன் உதவியளிக்காத வரையிலும் இந்தக் கிளர்ச்சியும் யுத்தமும் தொடுக்கப்படக் கூடாது. இத்தகைய கிளர்ச்சியையும் யுத்தத்தையும் தொடுக்கும் காலம் வரும் போது, முதற் படி நகரங்களைக் கைப்பற்றுவதும், பின்னர் நாட்டுப்புறங்களுக்கு முன்னேறுவதுமாகவே இருக்கும், இதற்கு மற்றப் பக்கமாக நடக்கக் கூடாது. இவையனைத்தும் முதலாளித்துவ நாடுகளிலுள்ள கம்யூனிஸ்ட் கட்சிகளாற் செய்யப்பட்டுள்ளன; அத்துடன் ரஷ்யாவில் அக்டோபர் புரட்சியால் இது சரியென்று நிரூபிக்கப்பட்டுமுள்ளது.

எப்படியிருந்தாலும் சீன வித்தியாசமானது. சீனவின் தனியியல்புகள் அது ஒரு சுதந்திர ஜனநாயக நாடு அல்ல, மாருக அரைக் காலனித்துவ, அரை நிலப்பிரபுத்துவ நாடு என்பதும்,

உள்நாட்டில் அதற்கு ஜனநாயகமில்லை, மாறுக நிலப்பிரபுத் துவ அடக்கு முறையின் கீழ் உள்ளது என்பதும், வெளியு றவுகளில் அதற்குத் தேசிய சுதந்திரமில்லை, மாறுக ஏகாதிபத் தியத்தால் அடக்கியொடுக்கப்படுகிறது என்பதுமாகும். ஆகவே பயன்படுத்துவதற்கு எமக்குப் பாராளுமன்றமும் இல்லை, தொழி லாளர்களை வேலைநிறுத்தத்தில் ஸ்தாபனப்படுத்த எமக்குச் சட்டபூர்வமான உரிமையும் இல்லை. அடிப்படையில், இங் குள்ள கம்யூனிஸ்ட் கட்சியின் கடமை கிளர்ச்சியையும் யுத் தத்தையும் தொடுக்க முன் ஒரு சட்டபூர்வமான நீண்டகாலப் போராட்டத்திற்கூடாகச் செல்வதுமல்ல, முதலில் நகரங் களைப் பிடித்துப் பின்னர் நாட்டுப்புறங்களைக் கைப்பற்றுவது மல்ல, மாறுக, இதற்கு மாறுனது.

எமது நாட்டின் மீது ஏகாதிபத்தியம் ஆயுதத் தாக்குதல்கள் தொடுக்காமலிருக்கும் போது, சீனக் கம்யூனிஸ்ட் கட்சி ஒன் றில் 1924-27ல் குவாங்துங் மாகாண யுத்த[2]த்திலும் வட படையெடுப்பு யுத்தத்திலும் செய்தது போல, பூர்ஷுவா வர்க்கத்துடன் சேர்ந்து யுத்தப்பிரபுக்களுக்கு (ஏகாதிபத்தியத் தின் அடிவருடிகளுக்கு) எதிராக உள் நாட்டு யுத்தம் தொடுக் கிறது, அல்லது 1927-36 வரை நடந்த நிலப்புரட்சி யுத்தத் திற் செய்தது போல, நிலப்பிரபு வர்க்கத்திற்கும், தரகு முத லாளி வர்க்கத்திற்கும் (இவர்களும் ஏகாதிபத்தியத்தின் அடி வருடிகளே) எதிராக விவசாயிகளுடனும் நகரக் குட்டி பூர் ஷுவா வர்க்கத்துடனும் ஒன்று சேர்ந்து உள் நாட்டு யுத்தம் நடத்துகின்றது. ஏகாதிபத்தியம் சீனமீது ஆயுதத் தாக்குதல் தொடுக்கும் போது, இந்தக் கட்சி, தற்போதைய ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தத்திற் செய்து கொண்டிருப்பது போல, அந்நிய ஆக்கிரமிப்பாளரை எதிர்க்கும் எல்லா வர்க்கங்களுடனும் வர்க்

கத் தட்டுக்களுடனும் ஒன்று சேர்ந்து அந்நிய எதிரிக்கெதிராக தேசிய யுத்தமொன்றை நடத்துகின்றது.

.இவையனைத்தும் சீனாவிற்கும் முதலாளித்துவ நாடுகளுக்குமிடை வேறுபாட்டைக் காட்டுகின்றன. சீனாவில் யுத்தம் பிரதான போராட்ட வடிவமாகவும் ராணுவம் பிரதான ஸ்தாபன வடிவமாகவும் இருக்கின்றன. வெகுஜன ஸ்தாபனங்கள், வெகுஜனப் போராட்டங்கள் போன்ற பிற வடிவங்கள் அனைத்தும் அதி முக்கியமானவையும், உண்மையில் இன்றியமையாதவையும், எந்தச் சந்தர்ப்பத்திலும் புறக்கணிக்கப்படக் கூடாதவையும் ஆகும்; ஆனால் அவற்றின் நோக்கம் யுத்தத்திற்குச் சேவை செய்வதாகும். ஒரு யுத்தம் வெடிப்பதற்கு முன், எல்லா ஸ்தாபனங்களும் போராட்டங்களும், 1919 மே 4 இயக்க[3]த்திற்கும் 1925 மே 30 இயக்கத்திற்கும் இடையிலான காலகட்டத்தில் இருந்தது போல, அந்த யுத்தத்திற்கான தயாரிப்பில் இருக்கின்றன. யுத்தம் வெடித்தபின், எல்லா ஸ்தாபனங்களும் போராட்டங்களும், உதாரணமாக வட. படையெடுப்புக் காலகட்டத்தில், புரட்சிகர ராணுவத்தின் பின்னணிப் பிரதேசங்களிலிருந்த எல்லா ஸ்தாபனங்களும் போராட்டங்களும் யுத்தத்துடன் நேரடியாக இணைந்தும் வட யுத்தப்பிரபுக்கள் ஆளும் பிரதேசங்களிலிருந்தவை யுத்தத்துடன் மறைமுகமாக இணைந்தும் இருந்தது போல, நேரடியாகவோ மறைமுகமாகவோ யுத்தத்துடன் இணைகின்றன. இன்னும் நிலப் புரட்சி யுத்தக் காலகட்டத்தில், செம்பிரதேசங்களுக்குள் இருந்த எல்லா ஸ்தாபனங்களும் போராட்டங்களும் யுத்தத்துடன் நேரடியாக இணைந்திருக்க, செம்பிரதேசங்களுக்கு வெளியே இருந்தவை மறைமுகமாக இணைந்திருந்தன. மேலும், தற்போதைய ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தக் காலகட்டத்தில், ஜப்பா

னிய-எதிர்ப்புப் படைகளின் பின்னணிப் பிரதேசங்களிலும் எதிரி இடங்கொண்ட பிரதேசங்களிலும் உள்ள எல்லா ஸ்தாபனங் களும் போராட்டங்களும் ஒன்றில் நேரடியாக அல்லது மறை முகமாக யுத்தத்துடன் இணைந்துள்ளன.

''சீனவில் ஆயுதந்தாங்கிய புரட்சி ஆயுதந்தாங்கிய எதிர்ப் புரட்சியுடன் போரிடுகின்றது. அது சீனப் புரட்சியின் விசேஷ அம்சங்களிலொன்ருகவும் அதன் மேம்பாடுகளிலொன்ருகவும் இருக்கிறது.''4 தோழர் ஸ்டாலினின் இந்த ஆய்வுரை முற்றி லுஞ் சரியானது; அத்துடன் வட படையெடுப்பிற்கும், நிலப் புரட்சி யுத்தத்திற்கும், தற்போதைய ஜப்பானிய-எதிர்ப்பு யுத் தத்திற்கும் ஒரே அளவாகப் பொருந்தும். இவையனைத்தும் புரட்சிகர யுத்தங்கள்; அனைத்தும் எதிர்ப்புரட்சிவாதிகளுக்கெ திராக நடத்தப்பட்டவை; அனைத்தும் பிரதானமாக புரட்சிகர மக்களால் நடத்தப்பட்டவை. இவை ஒரு உள்நாட்டு யுத்தம் தேசிய யுத்தத்திலிருந்து வித்தியாசப்படும் அளவிலும், கம் யூனிஸ்ட் கட்சி தனித்து நடத்திய ஒரு யுத்தம் அது கோமிந் தாஙுடன் சேர்ந்து நடத்திய யுத்தத்திலிருந்து வித்தியாசப்ப டும் அளவிலும் மாத்திரமே வித்தியாசப்படுகின்றன. இயல் பாகவே இந்த வித்தியாசங்கள் முக்கியமானவை தான். இவை யுத்தத்தின் பிரதான சக்தியின் அகலத்தை (தொழிலாளர் விவசாயிகள் நேச அணியொன்றை, அல்லது தொழிலாளர் விவசாயி பூர்ஷுவா வர்க்க நேச அணியொன்றை)யும், யுத் தத்தில் எமது எதிரி உள்ளேயா, வெளியேயா இருக்கிறன் என்ப தையும் (யுத்தம் உள்நாட்டு எதிரிகளுக்கெதிரானதா, வெளி நாட்டு எதிரிகளுக்கெதிரானதா என்பதையும் உள்நாட்டு எதிரி களுக்கெதிராக என்ருல், வட யுத்தப்பிரபுக்களுக்கெதிராகவா, கோமிந்தாஙிற்கெதிராகவா என்பதையும்) காட்டுகின்றன; சீன

வின் புரட்சிகர யுத்தத்தின் அம்சம் யுத்தத்தின் வேறுபட்ட சரித்திரக் கட்டங்களில் வேறுபடுகின்றது என்றும் இவை காட்டுகின்றன. ஆனால் இந்த யுத்தங்கள் அனைத்தும் ஆயுதந்தாங்கிய புரட்சி ஆயுதந்தாங்கிய எதிர்ப்புரட்சியை எதிர்க்கும் யுத்தங்களாகும்; அத்துடன் இவையனைத்தும் புரட்சிகர யுத்தங்கள், சீனப் புரட்சியின் தனிப்பட்ட இயல்புகளையும் மேம்பாடுகளையும் காட்டுகின்றன. புரட்சிகர யுத்தம் ''சீனப் புரட்சியின் விசேஷ அம்சங்களிலொன்றாகவும், அதன் மேம்பாடுகளிலொன்றாகவும் இருக்கின்றது'' என்ற ஆய்வுரை சீன நிலைமைகளுக்கு நன்கு பொருந்துகிறது. சீனப் பாட்டாளி வர்க்கக் கட்சியின் பிரதான கடமை, கிட்டத்தட்ட அதன் ஆரம்பம் முதலே அதை எதிர்நோக்கும் கடமை, இயலுமான அளவு அதிகமான நேச அணிகளோடு ஒன்றுபட்டு, ஆயுதப் போராட்டங்களை ஸ்தாபனப்படுத்தி, சூழ்நிலைகளுக்கேற்ப உள்நாட்டு வெளிநாட்டு ஆயுதந்தாங்கிய எதிர்ப்புரட்சியை எதிர்த்து, தேசிய, சமூக விடுதலைக்காகப் போராடுவதாக இருந்து வருகிறது. ஆயுதப் போராட்டம் இல்லாவிட்டால், சீனாவிற் பாட்டாளி வர்க்கத்திற்கும் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் எதுவித அந்தஸ்தும் இருந்திராது, எந்தப் புரட்சிகரக் கடமையையும் நிறைவேற்றியிருக்க முடியாது.

எமது கட்சி தான் ஸ்தாபிக்கப்பட்ட முதல் ஐந்தாறு வருடங்களில், அதாவது 1921 முதல் 1926ல் அது வட படையெடுப்பிற் பங்குபற்றும் வரை இந்த அம்சத்தை முற்றாகக் கிரகித்துக் கொள்ளவில்லை. அப்போது அது சீனாவில் ஆயுதப் போராட்டத்தின் அதிமுக்கியத்தை உணர்ந்து கொள்ளவோ, யுத்தத்திற்குத் தயாரிப்புச் செய்வதையும், ஆயுதப்படைகளை ஸ்தாபனப்படுத்துவதையும் பாரதூரமாக எடுக்கவோ அன்றி

ராணுவ யுத்ததந்திர, தந்திரோபாயப் படிப்பில் தன்னை ஈடுப டுத்தவோ இல்லை. வட படையெடுப்பின் போது அது ராணு வத்தை வென்றெடுப்பதை அலட்சியஞ் செய்து, வெகுஜன இயக்கத்திற்கு மாத்திரமே அழுத்தங்கொடுத்தது; இதன் விளை வாக, கோமிந்தாங் பிற்போக்காக மாறியதும் வெகுஜன இயக் கம் முழுவதும் சரிந்து விழுந்தது. 1927க்குப் பின் நீண்ட காலமாக, பல தோழர்கள் நகரங்களிற் கிளர்ச்சிகளுக்கான தயாரிப்புச் செய்வது, வெண்பிரதேசங்களில் வேலை செய்வது ஆகியவற்றைத் தொடர்ந்து கட்சியின் கேந்திர கடமையாக் கினர். 1931ல் நடந்த எதிரியின் மூன்றுவது ''சுற்றிவளைப்பு அடக்குமுறை''யை எதிர்ப்பதில் நாம் வெற்றி பெற்ற பின் னரே சில தோழர்கள் இந்தப் பிரச்சினை பற்றிய தமது கண் ணேட்டத்தை அடிப்படையில் மாற்றினர். ஆனுல் கட்சி முழுவதும் அப்படி மாற்றமடையவில்லை; இங்கு எடுத்துக்கூ றப்பட்ட முறைகளிற் சிந்தியாத தோழர்கள் சிலரும் இருக்கவே செய்தனர்.

ஆயுத சக்தியின்றிச் சீனப் பிரச்சினைகள் தீர்க்கப்பட முடி யாது என அனுபவம் எமக்குக் கூறுகிறது. இந்த அம்சத்தைப் புரிந்து கொள்வது இப்போது முதல் வெற்றிகரமாக ஜப் பானிய-எதிர்ப்பு யுத்தத்தைத் தொடுக்க எமக்கு உதவிசெய் யும். முழுத் தேசமும் ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தத்தில் ஆயுத எதிர்ப்பில் எழுந்து கொண்டிருக்கின்றதென்ற உண்மை முழுக் கட்சியிலும் இந்தப் பிரச்சினையின் முக்கியத்துவத்தைப் பற்றிய மேலும் சிறந்ததொரு புரிந்து கொள்ளலை ஏற்படுத்த வேண் டும்; ஒவ்வொரு கட்சி அங்கத்தவரும் எந்த நேரத்திலும் ஆயு தமேந்தி முன்னணிக்குப் போகத் தயாராக இருக்க வேண்டும்.

மேலும், எமது தற்போதைய கூட்டம் கட்சியின் பிரதான வேலைத்தளங்கள் சமர்ப் பிரதேசங்களிலும் எதிரியின் பின்னணியிலும் இருக்கின்றன என்று தீர்மானித்ததன் மூலம் எமது முயற்சிகளுக்கான திசையைத் தெளிவாக வரையறுத்துள்ளது. இது கட்சி ஸ்தாபனங்களிலும் வெகுஜன இயக்கங்களிலும் மட்டும் வேலை செய்ய விரும்பியவரும் யுத்தத்தைப் பற்றிப் படிக்கவோ, யுத்தத்திற் கலந்து கொள்ளவோ விரும்பாதவருமான சில கட்சி அங்கத்தவர்களின் போக்கிற்கும், சில பாடசாலைகள் முன்னணிக்குச் செல்ல மாணவர்களை ஊக்குவிக்கத் தவறியமைக்கும் இவை போன்ற இதர நிகழ்ச்சிகளுக்குமான ஒரு திறம் மாற்றுமருந்துமாகும். சீனுவில் பெரும்பாலான இடங்களில் கட்சி ஸ்தாபன வேலையும், வெகுஜன இயக்க வேலையும் ஆயுதப் போராட்டத்துடன் நேரடித் தொடர்புள்ளனவாயுள்ளன; தனிமைப்பட்டும் தானுகவே நிற்பதுமான ஒரு கட்சி வேலையோ வெகுஜன இயக்கமோ கிடையாது, அப்படி இருக்கவும் முடியாது. சமர்ப் பிரதேசங்களுக்குத் தொலைவிலுள்ள பின்னணிப் பிரதேசங்க(யுன்னுன், குவெய்சௌ, சுச்சுவான் போன்றன)ளிலும், எதிரி இடங்கொண்ட பிரதேசங்க(பெய்ப்பிங், தியென்சின், நான்கிங், ஷாங்ஹாய் போன்றன)ளிலுங்கூட கட்சி ஸ்தாபன வேலையும் வெகுஜன இயக்கமும் யுத்தத்துடன் இணைந்துள்ளன, அவை கட்டாயம் முன்னணியின் தேவைகளுக்குச் சேவைசெய்யவும் வேண்டும். ஒரு வார்த்தையிற் கூறின், முழுக்கட்சியும் யுத்தத்தில் மிகக் கவனஞ்செலுத்தி, ராணுவ விஷயங்களைப் படித்துப் போரிடத் தன்னைத் தயார் செய்ய வேண்டும்.

## 2. சீனக் கோமிந்தாங்கின் யுத்த வரலாறு

கோமிந்தாங்கின் வரலாற்றைப் பார்ப்பதும் அது யுத்தத்தில் எத்தகைய கவனஞ்செலுத்தியுள்ளது என்று நோக்குவதும் எமக்குப் பிரயோசனமானது.

சுன் யட்-சன் ஒரு சிறிய புரட்சிகரக் குழுவை அமைத்தது முதலே, சிங் வம்சத்திற்கெதிராக ஆயுதக் கிளர்ச்சிகளை நடத்தினர்.[5] 1911ப் புரட்சியால் சிங் வம்சத்தை ஆயுதமேந்தி தூக்கியெறிந்தது வரை துங் மெங் ஹுய் (சீனப் புரட்சிகர சங்கம்) காலகட்டம் ஆயுதக் கிளர்ச்சிகளால் நிறைந்திருந்தது.[6] பின்னர், சீனப் புரட்சிகரக் கட்சிக் காலகட்டத்தில் அவர் யுஅன் ஷு-கைக்கெதிராக ஒரு ராணுவப் போரியக்கத்தை நடத்தினர்.[7] கடற்படை யுனிட்டுகளின் தெற்கு நகர்வு[8], குவெய்லினிலிருந்து ஆரம்பித்த வட படையெடுப்பு[9], ஹுவாங்பு ராணுவக் கழக[10]த்தை நிறுவியமை ஆகியன போன்ற அடுத்து வந்த நிகழ்ச்சிகளும் சுன் யட்-சன்னின் ராணுவ நடவடிக்கைகளுள் அடங்கும்.

சுன் யட்-சன்னுக்குப் பிறகு சியாங் கை-ஷேக் வந்தார். அவர் கோமிந்தாங்கின் ராணுவ ஆற்றலை அதன் உச்சத்திற்குக் கொண்டுவந்தார். அவர் ராணுவத்தைத் தன் உயிரைப் போல் மதித்து, வட படையெடுப்பு, உள்நாட்டு யுத்தம், ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தம் ஆகிய மூன்று காலகட்டங்களுக்கூடாகச் சென்றுள்ளார். கடந்த பத்து ஆண்டுகளாக அவர் ஒரு எதிர்ப்புரட்சிவாதியாக இருந்துவருகிறார். அவர் எதிர்ப்புரட்சி நோக்கங்களுக்காக ஒரு பெரும் ''மத்திய சேனை''யை உருவாக்கியுள்ளார். யாரிடம் படையுண்டோ அவரிடம் அதி

காரமுண்டு, யுத்தம் எல்லாவற்றையும் தீர்மானிக்கிறது என்ற ஜீவாதார அம்சத்தை இறுகப் பற்றியுள்ளார். இந்த அம்சத்தில் நாம் அவரிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டும். இந்த வகையில் சுன் யட்-சன், சியாங் கை-ஷேக் ஆகிய இருவருமே எமது ஆசிரியர்களாவர்.

1911ப் புரட்சி முதல் யுத்தப்பிரபுக்கள் அனைவரும் ராணுவத்தைத் தம் உயிரைப் போல் மதித்து, ''யாரிடம் படையுண்டோ அவரிடம் அதிகாரமுண்டு'' என்ற கோட்பாட்டிற்குப் பெருமதிப்பு அளிக்கின்றனர்.

ஹுனானில் ஏற்ற இறக்கமுடைய ஒரு வாழ்க்கையையுடையவராயிருந்த ஒரு விவேகமுள்ள அதிகாரத்துவவாதியான தான் யென்-கை[11] என்பவர் ஒருபோதும் ஒரு சிவில் கவர்னராக மாத்திரம் இருக்கவில்லை, மாறாக, ராணுவ கவர்னர், சிவில் கவர்னர் ஆகிய இரண்டுமாக இருப்பதிலேயே எப்பொழுதும் விடாப்பிடியாக நின்றார். முதலிற் குவாங்துங்கிலும் பின்னர் வூஹனிலும் தேசிய அரசாங்க ஜனாதிபதியாக வந்த போது கூட அவர் அதேசமயத்தில் இரண்டாவது சேனையின் தளபதியாகவும் இருந்தார். சீனாவின் இந்தத் தனித்துவத்தையறிந்த இவர் போன்ற பல யுத்தப்பிரபுக்கள் இன்னும் இருக்கின்றனர்.

ஒரு ராணுவத்தை வைத்திருக்கவிரும்பாத கட்சிகளும் சீனாவில் இருந்துள்ளன; இதிற் குறிப்பிடத்தக்கது முற்போக்குக் கட்சி[12]. இருந்தும் இந்தக் கட்சி கூட சில யுத்தப்பிரபுக்களின் ஆதரவின்றி அரசாங்கப் பதவிகள் பெறமுடியாதெனை உணர்ந்தது. யுஅன் ஷு-கை[13], துவன் சி-ழெய்[14], சியாங் கை-ஷேக் (முற்போக்குக் கட்சியின் ஒரு பகுதியிலிருந்து உருவாகிய அரசியல் விஞ்ஞானக் குழு[15] சியாஙுடன் தன்னை

இணைத்துக் கொண்டுள்ளது) ஆகியோரும் இதன் தொடர்ச்சியான பாதுகாவலரில் அடங்குவர்.

வாலிபர் கட்சி[16] போன்ற ஒரு குறுகிய கால வரலாற்றையுடைய ஒரு சில சிறிய அரசியற் கட்சிகளிடம் ராணுவம் இல்லை; ஆகவே அவை எவ்வித பலனும் பெற முடியவில்லை.

வேறு நாடுகளில் ஒவ்வொரு பூர்ஷுவாக் கட்சியும் தனது நேரடி ஆணையின் கீழ் ஆயுதப் படையொன்றை வைத்திருக்க வேண்டிய அவசியமில்லை. ஆனால் சீனாவில் விஷயங்கள் வேறு; இங்கு நிலப்பிரபுத்துவப் பிரிவு காரணமாக நிலப்பிரபு அல்லது பூர்ஷுவாக் குழுக்களிலோ அல்லது கட்சிகளிலோ எவை துப்பாக்கிகளை உடையனவாயிருக்கின்றனவோ அவை அதிகாரமுடையனவாயிருக்கின்றன; அதிகப்படியான துப்பாக்கி வைத்திருப்பவை அதிகப்படியான அதிகாரமுடையவையாயிருக்கின்றன. இத்தகைய சூழ்நிலையிலுள்ள ஒரு பாட்டாளி வர்க்கக் கட்சி இந்த விஷயத்தின் சாராம்சத்தைத் துருவிப் பார்க்க வேண்டும்.

கம்யூனிஸ்டுகள் தனிப்பட்ட ராணுவ அதிகாரத்திற்காகப் போரிடுவதில்லை (எந்தச் சந்தர்ப்பத்திலும் அவர்கள் அப்படிச் செய்யக்கூடாது; அத்துடன் சாங் கோ-தௌவைப் போன்று ஆக இனி எவரையும் விடக்கூடாது), ஆனால் அவர்கள் கட்சிக்கு ராணுவ அதிகாரத்திற்காக, மக்களுக்கு ராணுவ அதிகாரத்திற்காகப் போரிட வேண்டும். தற்போது ஒரு தேசிய யுத்தம் நடந்து கொண்டிருப்பதால் தேசத்துக்கு ராணுவ அதிகாரத்திற்காகவும் நாம் போரிட வேண்டும். ராணுவ அதிகாரப் பிரச்சினையில் சூதுவாதற்ற தன்மை இருந்தால் எதுவும் நிறைவேற்றப்படமுடியாது. ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகப் பிற்போக்கு ஆளும் வர்க்கங்களால் ஏமாற்றப்பட்டும், அச்சு

றுத்தப்பட்டும் வரும் உழைக்கும் மக்களை அவர்களின் கரங்களிற் துப்பாக்கிகளை வைத்திருக்கும் முக்கியத்துவத்தை உணரும்படி செய்வது மிகவும் கஷ்டம். இப்போது ஜப்பானிய ஏகாதிபத்திய அடக்குமுறையும், அதற்கான நாடு தழுவிய எதிர்ப்பும் எமது உழைக்கும் மக்களைப் போர்களத்திற்குட் தள்ளியுள்ளன. கம்யூனிஸ்டுகள் இந்த யுத்தத்தில் யாவரையும் விட அரசியல் உணர்வுமிகுந்த தலைவர்களாக விளங்க வேண்டும். ''துப்பாக்கிக்குழாயிலிருந்து அரசியல் அதிகாரம் பிறக்கின்றது'' என்ற உண்மையை ஒவ்வொரு கம்யூனிஸ்டும் கிரகித்துக்கொள்ள வேண்டும். கட்சி, துப்பாக்கி மீது ஆணை செலுத்துகிறது; கட்சி மீது துப்பாக்கி ஆணை செலுத்துவதை ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது. இதுவே நமது கோட்பாடு. ஆனால் துப்பாக்கிகளை வைத்திருந்தால் நாம் கட்சி ஸ்தாபனங்களை உருவாக்க முடியும்; உதாரணம், வட சீனாவில் எட்டாவது மார்க்க ராணுவம் உருவாக்கியுள்ள ஆற்றல்மிக்க கட்சி ஸ்தாபனங்கள். மேலும், நாம் ஊழியர்களை உருவாக்கலாம், பாடசாலைகளை உருவாக்கலாம், கலாச்சாரத்தை உருவாக்கலாம், வெகுஜன இயக்கங்களை உருவாக்கலாம். துப்பாக்கிகளைக் கொண்டிருப்பதாலேயே யென்ஆனில் அனைத்தும் உருவாக்கப் பட்டுள்ளன. எல்லாம் துப்பாக்கிக்குழாயிலிருந்தே பிறக்கின்றன. அரசு பற்றிய மார்க்ஸிஸத் தத்துவத்தின் பிரகாரம், அரசதிகாரத்தின் பிரதான பகுதி ராணுவம் ஆகும். யார் அரசதிகாரத்தைக் கைப்பற்றி, நிலைநிறுத்த விரும்பினாலும், அவர் பலமான படை ஒன்றைப் பெற்றிருக்க வேண்டும். ''யுத்தத்தின் சர்வ வல்லமைத்துவத்துக்காக வாதாடுபவர்கள்'' நாம் என்று சிலர் நம்மை நகையாடுகின்றனர். ஆம், புரட்சி யுத்தத்தின் சர்வ வல்லமைத்துவத்துக்காக வாதாடுபவர்கள்

நாம். அது தீயதல்ல, நல்லது; மார்க்ஸிஸம் தழுவியது. ரஷியக் கம்யூனிஸ்ட் கட்சியின் துப்பாக்கிகள் சோஷலிஸத்தைச் சிருஷ்டித்தன. நாம் ஒரு ஜனநாயகக் குடியரசைச் சிருஷ்டிப்போம். தொழிலாளர் வர்க்கமும் உழைப்பாளி மக்களும் துப்பாக்கிப் பலத்தைக் கொண்டுதான் ஆயுதமேந்திய பூர்ஷுவா வர்க்கத்தையும் நிலப்பிரபுக்களையும் தோற்கடிக்க முடியும் என்று ஏகாதிபத்திய சகாப்தத்தின் வர்க்கப் போராட்ட அனுபவம் நமக்குப் போதிக்கின்றது. இந்த அர்த்தத்தில், துப்பாக்கிகளாற் தான் உலகம் முழுவதும் மாற்றப்பட முடியும் என்று நாம் கூறலாம். நாம் யுத்தத்தை ஒழிப்பதற்காக வாதாடுபவர்கள். நாம் யுத்தத்தை விரும்பவில்லை, ஆனால் யுத்தத்தை யுத்தத்தின் மூலம் தான் ஒழிக்க முடியும். துப்பாக்கியை ஒழிக்க வேண்டுமானால், துப்பாக்கி ஏந்துவது அவசியம்.

## 3. சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் யுத்த வரலாறு

மூன்று நான்கு ஆண்டுகளைக் கொண்ட காலகட்டத்தில், அதாவது, 1921 (சீனக் கம்யூனிஸ்ட் கட்சி ஸ்தாபிக்கப்பட்ட ஆண்டு) முதல் 1924 (கோமிந்தாங்கின் முதலாவது தேசிய காங்கிரஸ் நடைபெற்ற ஆண்டு) வரை எமது கட்சி, யுத்த தயாரிப்புகளிலும் ஆயுதப் படைகளை ஸ்தாபிப்பதிலும் தானே நேரடியாக ஈடுபடுவதன் முக்கியத்துவத்தைக் கிரகித்துக் கொள்ளத் தவறியது; 1924-27 காலகட்டத்திலும் அதற்குப் பின்னருங்கூட அது இந்தப் பிரச்சினையைப் போதியளவு புரிந்து கொள்ளவில்லை. இருப்பினும், 1924ல் ஹுவாங்பு ராணுவக்

கழகத்திற் பங்குபற்றத் தொடங்கியது முதல் அது ராணுவ விவகாரங்களின் முக்கியத்துவத்தை உணரத் தொடங்கும் ஒரு புதிய கட்டத்திற்குட் பிரவேசித்தது. குவாங்துங் மாகாண யுத்தங்களிற் கோமிந்தாஙிற்கு உதவியது மூலமும் வட படை யெடுப்பிற் கலந்துகொண்டது மூலமும் எமது கட்சி சில ஆயுதப் படைக[17]ளுக்குத் தலைமை தாங்கக் கூடியதாயிற்று. பின்னர், புரட்சியின் தோல்வியிலிருந்து கசப்பான படிப்பினை பெற்று, கட்சி நான்சாங் கிளர்ச்சி, இலையுதிர்கால அறுவடைக் கிளர்ச்சி, குவாங்செள கிளர்ச்சி ஆகியவற்றை ஸ்தாபனப்படுத்தி, செஞ் சேனையை நிறுவியதான புதிய காலகட்டமொன்றிற்குள் நுழைந் தது. அது தான் எம்து கட்சி ராணுவத்தின் முக்கியத்துவத்தை முற்ருகப் புரிந்துகொண்ட தீர்க்கமான காலகட்டமாகும். இந் தக் காலகட்டத்தில் செஞ்சேனை இருந்திராவிட்டால், செஞ் சேனை எந்தப் போரும் நடத்தியிராவிட்டால், அதாவது கம் யூனிஸ்ட் கட்சி சென் து-சியூவின் விலக்கல்வாதத்தைக் கொண் டிருந்தால் இன்றைய ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தத்தைப் பற்றி யும் அதில் நீண்டகாலம் நின்று பிடிக்க முடியும் என்பது பற்றி யும் எண்ணியிருக்கவே முடியாது.

1927 ஆகஸ்ட் ஏழாந் தேதி நடந்த கட்சி மத்திய கமிட் டியின் அவசரகாலக் கூட்டம் அரசியற் துறையிலிருந்த வலது சாரிச் சந்தர்ப்பவாதத்தை எதிர்த்து, கட்சியை ஒரு பெரும் அடி முன்னெடுத்து வைக்கச் செய்தது. 1931 ஜனவரியில் நடந்த ஆருவது மத்திய கமிட்டியின் நாலாவது பிளீனக் கூட்டம். அர சியற் துறையிலிருந்த ''இடதுசாரி''ச் சந்தர்ப்பவாதத்தைப் பெயரளவில் எதிர்த்தது; ஆனல் உண்மையில் அது தானே புதிய ''இடதுசாரி''ச் சந்தர்ப்பவாதத் தவறை இழைத்தது. இரண்டு கூட்டங்களும் அம்சத்திலும் அவற்றின் சரித்திரப்

பாத்திரத்திலும் வேறுபட்டன, ஆனால் இரண்டில் எதுவும் யுத்தத்தையும் யுத்ததந்திரத்தையும் பற்றிய பிரச்சினைகளை அழுத்தமாக ஆராயவில்லை; இது யுத்தம் அப்போதும் கட்சி வேலையின் ஈர்ப்பு மையமாகியிருக்கவில்லை என்பதைக் காட்டியது. 1933ல் கட்சியின் மத்திய தலைமை செம்பிரதேசங்களுக்குச் சென்ற பின் இந்த நிலைமை ஒரு அடிப்படை மாற்றத்திற்குள்ளாகியது; ஆனால் யுத்தப் பிரச்சினையில் (இதர பிரதான பிரச்சினைகள் அனைத்திலும்) கோட்பாட்டுத் தவறுகள் மீண்டும் இழைக்கப்பட்டன, இதனால் புரட்சிகர யுத்தத்திற்குக் கடும் சேதங்கள் விளைவிக்கப்பட்டன[18]. மறுபுறம், 1935ல் நடந்த சுன்யிக் கூட்டம் பிரதானமாக யுத்தத்திலிருந்த சந்தர்ப்பவாதத்திற்கெதிராக நடந்த போராட்டமாக இருந்தது; அது யுத்தப் பிரச்சினைக்கு முதலிடமளித்தது; இது அந்தக் கால யுத்த நிலைமைகளின் ஒரு பிரதிபலிப்பாகும். கடந்த பதினேழு ஆண்டு காலப் போராட்டத்தில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி ஒரு திடமான மார்க்ஸிஸ அரசியல் மார்க்கத்தை மட்டுமல்ல ஒரு திடமான மார்க்ஸிஸ ராணுவ மார்க்கத்தையும் அமைத்துள்ளது என இன்று நாம் நம்பிக்கையுடன் கூற முடியும். அரசியற் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் மட்டுமல்ல யுத்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதிலும் நாம் மார்க்ஸிஸத்தைப் பிரயோகிக்கக் கூடியவராயிருந்தோம்; கட்சியையும் அரசையும் கொண்டு நடத்தக்கூடிய திறமையுடைய முதுகெலும்பான ஒரு பெரும் பிரிவு ஊழியர்களை மட்டுமல்ல படையைக் கொண்டு நடத்தக் கூடிய திறமையுடைய முதுகெலும்பான ஒரு பெரும் பிரிவு ஊழியர்களையும் பயிற்றியுள்ளோம். இந்தச் சாதனைகள் எண்ணற்ற தியாகிகளின் ரத்தத்தால் நீர்ப்பாய்ச்சப்பட்ட புரட்சியின் மலர், சீனக் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் சீன மக்களுக்கும் மட்டுமல்ல முழு

உலகிலுமுள்ள கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கும், மக்களுக்குமுரிய புகழ். முழு உலகிலும் பாட்டாளி வர்க்கத்திற்கும் உழைக்கும் மக்களுக்கும் உரிய படைகள் ஆக மூன்றே மூன்றுதான் உள் ளன. அவை, சோவியத் யூனியனினதும், சீனுவினதும், ஸ்பா னியாவினதும் கம்யூனிஸ்ட் கட்சிகளாற் தலைமை தாங்கப்படும் படைகளாகும். இதர நாடுகளிலுள்ள கம்யூனிஸ்ட் கட்சிக ளுக்கு இன்னும் ராணுவ அனுபவம் இல்லை; ஆகவே எமது ராணுவமும் எமது ராணுவ அனுபவமுந்தான் எல்லாவற்றி லும் மிக விலைமதிப்பற்றது.

தற்போதைய ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தத்தை வெற்றி நோக்கி நடத்துவதற்கு, எட்டாவது மார்க்க ராணுவத்தையும் புதிய நான்காவது சேனையையும், எமது கட்சியாற் தலைமை தாங்கப்படும் எல்லாக் கொரில்லாப் படைகளையும் விஸ்தரிப் பதும் ஸ்திரப்படுத்துவதும் அதிமுக்கியமாகும். இந்தக் கோட் பாட்டின்படி நடந்து, எமது கட்சி தனது மிகச் சிறந்த அங் கத்தவர்களிலும் ஊழியர்களிலும் போதியளவு தொகையை முன்னணிக்கு அனுப்ப வேண்டும். அனைத்தும் முன்னணியில் வெற்றிக்குச் சேவைசெய்ய வேண்டும்; அத்துடன் ஸ்தாபனக் கடமை அரசியற் கடமைக்கு அடிப்படுத்தப்படல் வேண்டும்.

## 4. உள்நாட்டு யுத்தத்திலும் தேசிய யுத்தத்திலும் கட்சியின் ராணுவ யுத்ததந்திரத்தில் ஏற்பட்ட மாற்றங்கள்

எமது கட்சியின் ராணுவ யுத்ததந்திரத்தில் ஏற்பட்ட மாற் றங்களைப் பற்றிப் படிப்பது பிரயோசனமானது. உள்நாட்டு

மூன்றுவது, ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தத்தில் கொரில்லா யுத்தத்திலிருந்து கிரமமான யுத்தத்திற்கு மாறுவது.

மூன்று மாற்றங்களிலும் முதலாவது மாற்றம் பெரும் கஷ்டங்களைச் சந்தித்தது. அது ஒரு இரட்டைக் கடமையைக் கொண்டிருந்தது. நாம் ஒருபுறம், கொரில்லாப் பழக்கவழக்கங்களிற் தொங்கிக் கொண்டிருப்பதிலும், கிரமமயமாக்குவதற்குத் திரும்ப மறுப்பதிலும் அமைந்திருந்த ஸ்தலவாத, கொரில்லாவாத வலதுசாரிப் போக்கை அதாவது எமது ஊழியர்கள் எதிரியின் நிலைமையிலும் எமது பணிகளிலும் ஏற்பட்ட மாற்றங்களைக் குறைத்து மதிப்பிட்டதனால் ஏற்பட்ட போக்கை எதிர்க்க வேண்டியிருந்தது. மத்திய செம்பிரதேசத்தில் மிக முயற்சியுடைய ஒரு போதனைக்குப் பின்னர் மாத்திரமே இந்தப் போக்கு படிப்படியாகத் திருத்தப்பட்டது. மறுபுறம், கிரமமயமாக்குவதில் மட்டுமீறிய அழுத்தங்கொடுத்த அதிகப்படியான மத்தியத்துவ, துணிச்சல்வாத ''இடதுசாரி''ப் போக்கையும், அதாவது, எமது தலைமை ஊழியர்கள் சிலர் எதிரியையும் கடமையையும் கூட்டி மதிப்பிட்டு, யதார்த்த நிலைகளைக் கவனியாது அந்நிய அனுபவங்களை யந்திரரீதியாகப் பயன்படுத்தியதால் ஏற்பட்ட போக்கையும் எதிர்க்க வேண்டியிருந்தது. மூன்று நீண்ட ஆண்டுகளாக (சுன்யி கூட்டத்திற்கு முன்) இந்தப் போக்கு மத்திய செம்பிரதேசத்தில் மிகப்பெரும் தியாகங்களை ஏற்படுத்தியது; நாம் ரத்தஞ்சிந்திப் படிப்பினைகள் பெற்ற பின் மாத்திரமே இந்தப் போக்கு திருத்தப்பட்டது. இதைத் திருத்தியமை சுன்யி கூட்டத்தின் சாதனையாகும்.

யுத்ததந்திரத்தில் இரண்டாவது மாற்றம் இரண்டு வேறுபட்ட யுத்தங்களின் சந்திப்பில், 1937 இலையுதிர் காலத்தில் (லூகோச்சியெள சம்பவத்திற்குப் பின்) ஏற்பட்டது. அப்

போது நாம் ஜப்பானிய ஏகாதிபத்தியமென்ற புதிய எதிரி யைச் சந்தித்தோம்; அத்துடன் எமது முன்னுள் எதிரியாகிய கோமிந்தாஙை (அது அப்போதும் எம்மீது பகைமை கொண் டிருந்தது) நண்பஞகக் கொண்டோம்; பரந்த வட சீனப் பிர தேசம் (இது எமது படையில் தற்காலிக முன்னணியாயிருந் தது; ஆனுல் விரைவாக எதிரியின் பின்னணியாகி, நீண்ட காலத்திற்கு அப்படியே இருக்கும்) எமது யுத்த அரங்காகி யது. இந்த விசேஷ நிலைமையில் எமது யுத்ததந்திரத்திலேற் பட்ட மாற்றம் மிகப் பாரதூரமான ஒன்ருயிருந்தது. இந்த விசேஷ நிலைமையில் எமது முன்னைய கிரமமான படையைக் கொரில்லாப் படையாக மாற்றவும் (அதன் சிதறியுள்ள போர் நடவடிக்கையைப் பொறுத்த வரையிலேயேயொழிய அதன் ஸ்தாபனம் அல்லது அதன் கட்டுப்பாட்டைப் பொறுத்தவரை யல்ல) முன்னைய நடமாட்ட யுத்தத்தைக் கொரில்லா யுத்தமாக மாற்றவும் வேண்டியிருந்தது. இதன் மூலம் நாம் எம்மை எதிர்நோக்கும் எதிரியின் நிலைமைக்கும், எம் முன்னிருந்த கடமைகளுக்கும் எம்மைப் பழக்கிக் கொள்ள முடிந்தது. ஆனுல், இந்த மாற்றம் தோற்றத்தளவில் ஒரு படி பின்னேறியதாயி ருந்தது; ஆகவே உண்மையாகவே மிகவும் கஷ்டமானதாயிருந் தது. ஜப்பானைக் குறைத்து எடைபோடுவது, அதற்கு மிகவும் அஞ்சுவது ஆகிய இரண்டுமே இத்தகைய சமயத்தில் ஏற்ப டக்கூடிய போக்குகள்; இவை உண்மையிற் கோமிந்தாங் மத் தியில் ஏற்பட்டும் இருக்கின்றது. கோமிந்தாங் உள்நாட்டு யுத் தத்திலிருந்து தேசிய யுத்தத்திற்கு மாறியபோது பிரதானமாக எதிரியைக் குறைத்து எடைபோட்டதாலும், அதேவேளையில் ஜப்பான் மீது கொண்ட அளவு கடந்த பயத்தாலும் (ஹான்

ஃபூ-சியும், லியூ சூ[19]வும் இதற்கு உதாரணம்). அது பல அவசியமற்ற இழப்புகளுக்குள்ளாகியது. ஆனுல், நாம் இந்த மாற்றத்தைக் கணிசமான அளவு சிக்கலின்றி நிகழச் செய்து, இழப்புக்களுக்குள்ளாவதற்குப் பதில் பெரும் வெற்றிகளைப் பெற்ருேம். காரணம், மத்திய கமிட்டிக்கும் சில ராணுவ ஊழியர்களுக்குமிடையிற் பலத்த விவாதங்களிருந்த போதிலும் ஏகப் பெரும்பான்மையான எமது ஊழியர்கள் மத்திய கமிட்டியின் சரியான வழிகாட்டலைத் தகுந்த நேரத்தில் ஏற்றுக்கொண்டு, யதார்த்த நிலைமையைத் திறமையுடன் மதிப்பிட்டதாகும். சீனவின் தேசிய விடுதலைப் போராட்டத்தின் தலைவிதியை நிர்ணயிப்பதில் ஜப்பானிய-எதிர்ப்புக் கொரில்லா யுத்தத்திற்குள்ள சரித்திர முக்கியத்துவத்தை எண்ணுவோமானுல், ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தம் முழுவதிலும் ஊன்றி நின்று அதை வளர்த்து, வெற்றிபெறுவதற்கும், சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் எதிர்காலத்திற்கும் இந்த மாற்றத்தின் அதிமுக்கியத்துவத்தை உடனே கண்டு கொள்ள முடியும். சீனவின் ஜப்பானிய-எதிர்ப்புக் கொரில்லா யுத்தம் அதன் அசாதாரண விரிவினுலும், நீண்டகால இயல்பினுலும் கிழக்கில் மட்டுமல்ல, சில வேளை மனித குலத்தின் முழுச் சரித்திரத்திலுங்கூடக் காணமுடியாததாயிருக்கும்.

ஜப்பானுக்கெதிராகக் கொரில்லா யுத்தத்திலிருந்து கிரமமான யுத்தத்திற்கு மாறுவதான மூன்ருவது மாற்றம் யுத்தத்தின் எதிர்கால வளர்ச்சிக்குரியது. அது புதிய சூழ்நிலைகளையும் புதிய கஷ்டங்களையும் தோற்றுவிக்கலாம். நாம் அதை இப்போது ஆராய வேண்டிய அவசியமில்லை.

## 5. ஜப்பானிய-எதிர்ப்புக் கொரில்லா யுத்தத்தின் யுத்ததந்திரப் பாத்திரம்

கிரமமான யுத்தம் மட்டுமே ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தத்தின் இறுதி விளைவைத் தீர்மானிக்க முடியுமாயிருப்பதால் ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தம் முழுமையிலும் கிரமமான யுத்தம் பிரதானமானதாகவும் கொரில்லா யுத்தம் துணையானதாகவும் இருக்கின்றது. நாடு முழுவதிலும் முழு ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தப் போக்கிலுமுள்ள மூன்று யுத்ததந்திரக் கட்டங்க(தற்காப்பு, சமநிலே, எதிர்த்தாக்குதல்)ளில் முதலாவது கட்டத்திலும் கடைசிக் கட்டத்திலும் கிரமமான யுத்தம் பிரதானமானதாகவும் கொரில்லா யுத்தம் துணையானதாகவும் இருக்கின்றது. நடுக் கட்டத்தில், எதிரி தான் கைப்பற்றிய இடங்களைப் பாதுகாத்துக் கொண்டிருக்க, நாம் எதிர்த்தாக்குதலுக்குத் தயார் செய்து கொண்டிருந்தாலும் அப்போது எதிர்த்தாக்குதல் யுத்தம் தொடுக்க நாம் இன்னும் ஆயத்தமில்லாமல் இருப்போமாதலால் இந்தக் கட்டத்தில் கொரில்லா யுத்தம் பிரதானமானதாகவும் கிரமமான யுத்தம் துணையானதாகவும் இருக்கும். பெரும்பாலும் இந்தக் கட்டம் மூன்றுக்குள்ளும் நீண்டதாயிருக்குமானாலும் இது முழு யுத்தத்திலுமுள்ள மூன்று கட்டங்களில் ஒன்முக மாத்திரமே இருக்கிறது. ஆகவே, யுத்தத்தை முழுமையாக எடுத்துப் பார்ப்போமானல், கிரமமான யுத்தம் பிரதானமானதாகவும் கொரில்லா யுத்தம் துணையாகவுமே இருக்கும். நாம் இதைப் புரிந்து கொள்ளாவிட்டாலும், கிரமமான யுத்தமே யுத்தத்தின் இறுதி விளைவைத்

தீர்மானிக்கும் என்பதை உணர்ந்து கொள்ளாவிட்டாலும், ஒரு கிரமமான படையைக் கட்டியமைப்பதிலும் கிரமமான யுத்தத்தைப் பற்றிப் படிப்பது அதை வழிநடத்துவது ஆகியவற்றிலும் கவனஞ்செலுத்தாவிட்டாலும் நாம் ஜப்பானைத் தோற்கடிக்க முடியாதவராவோம். இது இந்த விஷயத்தின் ஒரு அம்சம்.

இருப்பினும் கொரில்லா யுத்தமும் யுத்தம் முழுவதிலும் தனது முக்கிய யுத்ததந்திர இடத்தைக் கொண்டுள்ளது. கொரில்லா யுத்தம் இல்லாவிட்டாலும், கொரில்லா யுனிட்டுகளையும் கொரில்லாப் படைகளையும் கட்டியமைப்பதிலும், கொரில்லா யுத்தத்தைப் பற்றிப் படிப்பது அதை வழி நடத்துவது ஆகியவற்றிலும் நாம் போதிய கவனஞ் செலுத்தாவிட்டாலும் முன்னையது போலவே நாம் ஜப்பானைத் தோற்கடிக்க முடியாதவராவோம். காரணம், சீனாவின் பெரும் பகுதி எதிரியின் பின்னணியாக மாற்றப்படுமாதலால், மிகப் பரந்த விடாப்பிடியான கொரில்லா யுத்தம் இன்றி எதிரி பின்னாலிருந்து ஏற்படும் தாக்குதல் பற்றிய எதுவித பயமுமின்றி தன்னைப் பாதுகாப்புடன் அரண்செய்து கொண்டால், முன்னணியில் போரிடும் எமது பிரதான படைகளுக்குப் பெரும் இழப்புகளை ஏற்படுத்திக் கூடுதலான கொடிய தாக்குதல்கள் தொடுப்பான். இவ்வாறு சமநிலையைக் கொண்டுவருவது எமக்குக் கஷ்டமாகும்; அத்துடன் ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தம் தொடர்ந்து நடப்பதும் இடருக்குள்ளாகலாம். ஆனால், விஷயங்கள் இந்த முறையிலிருக்காவிட்டாலும் எமது எதிர்த்தாக்குதலுக்குப் போதிய பலத்தைக் கட்டிவளர்க்காமை, எதிர்த்தாக்குதலின் போது ஆதரவான செயல்களில்லாமல் இருத்தல், எதிரி தனது இழப்புக்களை ஈடுசெய்யக் கூடிய சாத்தியப்பாடு ஆகியன போன்ற

இதர சாதகமற்ற நிலைமைகள் ஏற்படலாம். இந்த நிலைமைகள் தோன்றி, அவை பரந்த, விடாப்பிடியான கொரில்லா யுத்தத்தைத் தக்க சமயத்தில் வளர்ப்பது மூலம் சமாளிக்கப்படாவிட்டால் இங்கும் ஜப்பானைத் தோற்கடிப்பது அசாத்தியமாகும். ஆகவே, யுத்தம் முழுமையிலும் கொரில்லா யுத்தம் துணையிடத்தைப் பெற்றாலும் உண்மையில் யுத்ததந்திரத்தில் அது அதிமுக்கிய இடமொன்றைப் பெற்றுள்ளது. ஜப்பானுக்கெதிரான யுத்தத்தை நடத்துகையில் கொரில்லா யுத்தத்தைப் புறக்கணிப்பது ஐயமின்றி ஒரு பாரதூரமான தவறாகும். இது இந்த விஷயத்தின் இன்னொரு அம்சமாகும்.

ஒரு பெரிய நாடிருந்தால் கொரில்லா யுத்தம் சாத்தியமாகும்; ஆகவே கொரில்லா யுத்தம் கடந்த காலத்திலும் இருந்தது. ஆனால் கொரில்லா யுத்தம் கம்யூனிஸ்ட் கட்சியாற் தலைமை தாங்கப்படும்போது மாத்திரமே அதில் ஊன்றி நிற்க முடியும். ஆகவேதான் கொரில்லா யுத்தம் கடந்த காலத்திற் பொதுவாகத் தோல்வியடைந்தது; நவீன காலத்தில் மாத்திரமே அதுவும் கம்யூனிஸ்ட் கட்சிகள் தோன்றியுள்ள பெரிய நாடுகளில் மாத்திரமே, சோவியத் யூனியனில் அதன் உள்நாட்டு யுத்தத்தின் போதும், சீனவிற் தற்போதும் உள்ளது போல அது வெற்றிகரமானதாயிருக்க முடியும். யுத்தத்தையொட்டி இன்றைய நிலைமைகளையும் பொது நிலைமையையும் பார்த்தால், ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தத்தில் கோமிந்தாங்கிற்கும் கம்யூனிஸ்ட் கட்சிக்குமிடை உழைப்புப் பிரிவு, அதாவது இதில் முன்னையது முன்னணியில் கிரமமான யுத்தம் நடத்துவதும், பின்னையது எதிரி அணிகளுக்குப் பின்னற் கொரில்லா யுத்தம் நடத்துவதும் அவசியமானதும் தகுந்ததும் ஆகும்; அத்துடன்

இது ஒரு பரஸ்பர தேவையும், பரஸ்பர இணைதலும், பரஸ்பர உதவியுமாகும்.

இதிலிருந்து எமது கட்சி தனது ராணுவ யுத்ததந்திரத்தை உள்நாட்டு யுத்தத்தின் இறுதிக் காலகட்டத்து கிரமமான யுத்தத்திலிருந்து ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தத்தின் முதற் காலகட்டத்து கொரில்லா யுத்தத்திற்கு மாற்றுவது எவ்வளவு முக்கியமாகவும் அவசியமாகவும் இருந்தது என்பதைப் புரிந்து கொள்ளமுடியும். இந்த மாற்றத்தின் சாதகமான விளைவுகளைக் கீழ்வரும் பதினெட்டு அம்சங்களிற் தொகுத்துக் கூற முடியும்:

(1) எதிரியாற் கைப்பற்றப்பட்ட பிரதேசங்களைக் குறைத்தல்;

(2) எமது படைகளின் தளப்பிரதேசங்களை விரிவுபடுத்தல்;

(3) தற்காப்புக் கட்டத்தில், எதிரியைக் கட்டுப்படுத்துவதற்காகக் கிரமமான முன்னணிப் போர்நடவடிக்கைகளுக்கு இசைவாயிருத்தல்;

(4) சமநிலைக் கட்டத்தில், கிரமமான முன்னணியிற் துருப்புகளைச் சீர்செய்வதை வசதியாக்க எதிரி அணிகளுக்குப் பின்னாலிருந்த தளப்பிரதேசங்களை உறுதியாக வைத்திருத்தல்;

(5) எதிர்த்தாக்குதற் கட்டத்தில், இழந்த பிரதேசங்களைத் திரும்பப் பெறுவதில் கிரமமான முன்னணிக்கு இசைவாயிருத்தல்;

(6) எமது படைகளது மிக விரைவான, மிகப் பயனுள்ள விஸ்தரிப்பு;

(7) கம்யூனிஸ்ட் கட்சியின் மிகப் பரந்த விஸ்தரிப்பு, இதனுல் ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு கட்சிக் கிளை ஸ்தாபிக்கப்படலாம்;

(8) வெகுஜன இயக்கத்தின் மிகப் பரந்த வளர்ச்சி, இதனுல் எதிரியின் அரண்களுக்குள் இருப்பவரைத் தவிர எதிரி அணிகளுக்குப் பின்னுலுள்ள மக்கள் அனைவரும் அணிதிரட்டப்படலாம்;

(9) ஜப்பானிய-எதிர்ப்பு ஜனநாயக அரசியலதிகார உறுப்புகள் மிகப் பரந்தளவில் ஸ்தாபிக்கப்படல்;

(10) ஜப்பானிய-எதிர்ப்புக் கலாச்சார, கல்வி வேலையில் மிகப் பரந்த அளவிலான வளர்ச்சி;

(11) மக்களின் வாழ்க்கையை மிகப் பரந்தளவில் சீர்ப்படுத்தல்;

(12) எதிரியின் துருப்புக்களில் மிகப் பயனுள்ள முறையிலான சீரழிவு;

(13) வெகுஜன உணர்வில் ஏற்பட்ட மிகப் பரந்த, நீடித்த பாதிப்பும், நாடு முழுவதும் மனவுறுதி தூண்டப்படலும்;

(14) நட்புறவுடைய ராணுவங்களிலும் கட்சிகளிலும் ஏற்பட்ட முன்னேற்றத்திற்கான மிகப் பரந்த உந்துதல்;

(15) நாம் குறைந்த இழைப்புகளை உறவும் கூடுதலாக வெற்றிகளை ஈட்டவும் கூடியதாக எதிரி பலமுடையவனுகவும் நாம் பலங்குறைந்தவராகவும் உள்ள நிலைமைகளுக்குத் தகுந்தபடி மாற்றம் செய்து கொள்ளுதல்;

(16) எதிரி பல இழப்புகளையும், சொற்ப வெற்றிகளையும் பெறுவதற்காக, சீனு பெரியது, ஜப்பான் சிறியது என்ற உண்மையைத் தகுந்தபடி மாற்றம் செய்து கொள்ளுதல்;

(17) தலைமைக்கான பெருந் தொகையான ஊழியர்களை மிக விரைவாகவும், மிகப் பயனுள்ள முறையிலும் பயிற்றுதல்;

(18) சப்ளைகள் பற்றிய பிரச்சினைக்கு மிகப் பயனுள்ள முறையிற் தீர்வு காணுதல்.

போராட்டத்தின் நீண்ட காலப் போக்கில் கொரில்லா யுனிட்டுகளும் கொரில்லா யுத்தமும் அப்படியே இராது ஒரு உயர் கட்டத்திற்கு வளர்ந்து கிரமமான படைகளாகவும் கிரமமான யுத்தமாகவும் படிப்படியாக மாறுமென்பது சந்தேகத்திற்கப் பாற்பட்டது. கொரில்லா யுத்த மூலம் நாம் எமது பலத்தைக் கட்டி வளர்த்து ஜப்பானிய ஏகாதிபத்தியத்தைச் சிதறடிப்பதில் எம்மை ஒரு தீர்க்கமான அம்சமாக மாற்றுவோம்.

## 6. ராணுவ விஷயங்களைப் படிப்பதில் அதிக கவனஞ்செலுத்துவது

இரண்டு விரோதப் படைகளுக்கிடைப் பிரச்சினைகள் அனைத்தும் தீர்வுக்கு யுத்தத்திலேயே தங்கியிருக்கின்றன. சீனாவின் வாழ்வு அல்லது அழிவு தற்போதைய யுத்தத்தில் அது பெறும் வெற்றியில் அல்லது தோல்வியிலேயே தங்கியிருக்கிறது. ஆகவே ராணுவ தத்துவத்தையும், யுத்ததந்திர, தந்திரோபாயத்தையும், ராணுவ அரசியல் வேலையையும் பற்றிய எமது படிப்பு ஒரு கணமேனும் தாமதப்படக் கூடாது. தந்திரோபாயங்கள் பற்றிய எமது படிப்பு இன்னும் போதாததாயிருந்தாலும் ரா

ணுவ வேலையில் ஈடுபட்டிருந்த எமது தோழர்கள் கடந்த பத்து ஆண்டுகளிற் பெரும் சாதனை சாதித்துள்ளதோடு, சீன நிலைமைகளின் அடிப்படையில் பல புதியவற்றைத் தோற்று வித்தும் உள்ளனர்; இங்கேயுள்ள குறைபாடு என்னவென்றால் பொதுத் தொகுப்பு இல்லாமையாகும். ஆனால் இது வரை ஒரு சிலர்தான் யுத்ததந்திரப் பிரச்சினைகளையும் யுத்தத் தத்து வத்தையும் பற்றிய படிப்பிலீடுபட்டுள்ளனர். எமது அரசியல் வேலைப் படிப்பில் முதற்தர சாதனைகள் பெறப்பட்டுள்ளன; அதில் அனுபவச் செழிப்பும், அதன் புதுமைகளின் அளவும் தரமும் உலகிலே சோவியத் யூனியனைப் பொறுத்தவரை மாத்திரமே இரண்டாந்தரமானதாகவுள்ளன; இங்கும் எமது குறைபாடு போதிய தொகுப்பும் ஒழுங்கு முறையுமின்மையாகும். முழுக் கட்சியினதும் முழு நாட்டினதும் தேவைக்காக ராணுவ அறிவை ஜனரஞ்சகமாக்குவது அவசர கடமையாகிவிட்டது. நாம் இந்த விஷயங்களனைத்திலும் இனிமேல் அதிக கவனஞ்செலுத் தவேண்டும். ஆனால் யுத்த, யுத்ததந்திரத் தத்துவமே இவை யெல்லாவற்றிற்கும் கேந்திரமாகும். ராணுவத்தத்துவம் பற் றிய படிப்பில் ஆர்வமுண்டாக்கி, முழுக் கட்சி அங்கத்தவர்கள தும் கவனத்தை ராணுவ விஷயங்களைப் படிப்பதிற் திருப்புவது அவசியம் என்று நான் கருதுகிறேன்.

## குறிப்புகள்

1. வி.ஐ.லெனின், ''யுத்தமும் ரஷிய சமூக ஜனநாயகக் கட்சியும்'', ''வெளி நாட்டிலுள்ள ரஷிய சமூக ஜனநாயகத் தொழிற் கட்சிக் கிளைகளின் மாநாடு'', ''ஏகாதிபத்திய யுத்தத்தில் தன் சொந்த அரசாங்கத்தின் தோல்வி'', ''ரஷி

யாவின் தோல்வியும் புரட்சியின் நெருக்கடியும்'' ஆகிய கட்டுரைகளைப் பார்க்கவும். இக்கட்டுரைகள் 1914-15ல் எழுதப்பட்டன. இவை குறிப்பாக அக்காலத்திய ஏகாதிபத்திய யுத்தத்தைப் பற்றியவை. ''சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி(பொல்ஷ்விக்)யின் வரலாற்றின் சுருக்கமான படைப்''பின் 6வது அத்தியாயம், 3வது பகுதி — ''யுத்தம், சமாதானம், புரட்சி ஆகிய பிரச்சினைகளைப்பற்றிய பொல்ஷ்விக் கட்சியின் தத்துவமும் தந்திரோபாயமும்'' — யைப் பார்க்கவும்.

2. 1924ல் டாக்டர் சுன் யட்-சன் கம்யூனிஸ்ட் கட்சியுடனும் புரட்சிகர தொழிலாளர் விவசாயிகளுடனும் சேர்ந்து பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகளுடன் கூட்டுச் சேர்ந்து குவாங்செளவில் எதிர்ப்புரட்சி நடவடிக்கைகளில் ஈடுபட்ட தரகு முதலாளிகளதும் உள்ளூர் கொடுங்கோலர் தீயபிரபுக்களதும் ஆயுதப்படையான ''வர்த்தகர் கோ''ரைத் தோற்கடித்தார். கோமிந்தாங், கம்யூனிஸ்ட் கட்சியின் கூட்டுறவின் அடிப்படையில் உருவான புரட்சிகர ராணுவம் 1925ம் ஆண்டின் ஆரம்பத்தில் குவாங்செளவிலிருந்து புறப்பட்டுக் கிழக்குப் போரியக்கத்தை நடத்தி, விவசாயிகளின் ஆதரவுடன் யுத்தப்பிரபு சென் சியுங்-மிங்கின் துருப்புக்களைத் தோற்கடித்தது. அது பின்னர் குவாங்செளவுக்குத் திரும்பி வந்து அதை அரண் கொண்டிருந்த யுன்னுன், குவாங்சி யுத்தப்பிரபுக்களைத் தூக்கியெறிந்தது. அந்த ஆண்டு இலையுதிர் காலத்தில் அது இரண்டாவது கிழக்குப் போரியக்கத்தை நடத்தி, இறுதியில் சென் சியுங்-மிங்கின் படையைத் துடைத்தொழித்தது. கம்யூனிஸ்ட் க்ட்சி அங்கத்தவர்களும் கம்யூனிஸ்ட் வாலிபர் சங்க அங்கத்தவர்களும் இப்போரியக்க முன்னணியில் நின்று வீரத்துடன் போரிட்டனர். இப்போரியக்கங்கள் குவாங்துங் மாகாணத்தில் அரசியல் ஒருமைப்பாட்டைக் கொண்டு வந்ததோடு வட படையெடுப்புக்கு வழியையும் திறந்து வைத்தது.

3. மே 4 இயக்கம், 1919 மே 4ல் ஆரம்பமாகிய ஏகாதிபத்திய-எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ-எதிர்ப்பு புரட்சிகர இயக்கம். அந்த ஆண்டின் முற்பாதியில், முதலாவது உலக யுத்தத்தில் வெற்றி பெற்ற நாடுகள், அதாவது பிரித்தானியா, பிரான்ஸ், அமெரிக்கா, ஜப்பான், இத்தாலி இதர ஏகாதிபத்திய நாடுகள், தமது வேட்டைப்பொருட்களைப் பிரிப்பதற்குப் பாரிஸிற் கூடி, சீனுவின் ஷன்துங் மாகாணத்தில் முன்பு ஜெர்மனி அனுபவித்த சலுகைகள் அனைத்தையும் ஜப்பான் பெற்றுக் கொள்ள வேண்டுமெனத் தீர்மானித்தன. பீக்கிங் மாணவர்கள் மே 4ல் கூட்டங்களையும் ஆர்ப்பாட்டங்களையும் நடத்தி இந்தத் திட்டத்திற்கெதிரான தமது திடமான எதிர்ப்பை முதலிலே தெரிவித்தார்கள். வட

யுத்தப்பிரபுத்துவ அரசாங்கம் இந்த எதிர்ப்பை அடக்கும் முயற்சியுடன் முப்பதுக்கு மேலான மாணவர்களைக் கைது செய்தது. அதை எதிர்த்துப் பீக்கிங் மாணவர்கள் பாடநிறுத்தத்தில் ஈடுபட்டனர், நாட்டின் இதர பாகங்களிலிருந்த பெருந்தொகையான மாணவர்களும் இதை ஆதரித்தனர். ஜூன் மூன்றுந்தேதி வட யுத்தப்பிரபுத்துவ அரசாங்கம் பீக்கிங்கில் மாணவர்களைப் பெருந்திரளாகக் கைதுசெய்ய ஆரம்பித்தது. இரண்டு நாட்களில் ஏறக்குறைய ஆயிரம் மாணவர்கள் காவலில் வைக்கப்பட்டனர். இது நாடு முழுவதும் மேலும் பெரிய வெறுப்பை ஏற்படுத்தியது. ஜூன் 5 முதல், ஷாங்ஹாயிலும் பிற பல நகரங்களிலும் இருந்த தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்ய, இந்த இடங்களிலிருந்த வியாபாரிக்ள் தமது கடைகளை மூடினர். இவ்வாறாக, முதலிற் பிரதானமாகப் புத்திஜீவிகளைக் கொண்டிருந்த இத்தேசபக்த இயக்கம் பாட்டாளி வர்க்கம், குட்டி பூர்ஷுவா வர்க்கம், பூர்ஷுவா வர்க்கம் ஆகியவற்றையும் தழுவிய தேசிய தேசபக்த இயக்கமாக விரைவில் வளர்ச்சியடைந்தது. இந்தத் தேசபக்த இயக்கத்துடன் கூட, ''மே 4 இயக்க''த்துக்கு முன் ஆரம்பமாகிய நிலப்பிரபுத்துவ-எதிர்ப்புக்கும் விஞ்ஞானம், ஜனநாயகம் ஆகியவற்றின் வளர்ச்சிக்குமான புதிய கலாச்சார இயக்கம் மார்க்ஸிஸ-லெனினிஸப் பிரச்சாரத்தைப் பிரதான ஓட்டமாகக் கொண்ட விறுவிறுப்பான, சக்தி வாய்ந்த புரட்சிகரக் கலாசார இயக்கமாக வளர்ந்தது.

4. ஜே.வி.ஸ்டாலின், ''சீனப் புரட்சியின் எதிர்கால வாய்ப்புகள்''.

5. 1894ல் டாக்டர் சுன் யட்-சென் ''சிங் சுங் ஹுய்'' (சீனப் புனருத்தாரணத்திற்கான சங்கம்) எனப்படும் சிறிய புரட்சிகர ஸ்தாபனமொன்றை ஹொனொலூலுவில் உருவாக்கினார். 1895ல் சீன-ஜப்பானிய யுத்தத்தில் சிங் அரசாங்கம் தோற்கடிக்கப்பட்ட பின், மக்கள் மத்தியிலிருந்த ''ஹுய் தாங்'' என்ற ரகசியச் சங்கத்தின் ஆதரவுடன் குவாங்துங் மாகாணத்தில் சிங் அரசாங்கத்திற்கெதிராக இரண்டு ஆயுதக் கிளர்ச்சிகளை நடத்தினார். ஒன்று 1895ம் ஆண்டு குவாங்சௌவில் நடந்தது; மற்றது 1900ம் ஆண்டு ஹுய்சௌவில் நடந்தது.

6. தொங் மெங் ஹுய், (சீனப் புரட்சிகர சங்கம். பூர்ஷுவாக்கள், குட்டி பூர்ஷுவாக்கள், சிங் அரசாங்கத்தை எதிர்த்த ஒரு பகுதி நிலமுடைய பிரபுக்கள் ஆகியோரின் ஐக்கிய முன்னணி), 1905ல் சிங் சுங் ஹுய் மற்றும் சிங் அரசாங்கத்தை எதிர்த்த இரு குழுக்களான ஹுவா சிங் ஹுய் (சீனப் புனருத்தாரணத்திற்கான சங்கம்), குவாங் ஃபு ஹுய் (அந்நிய நுகத்தைத் தகர்க்கும் சங்கம்)

ஆகியவற்றை ஒன்முக இணைத்து உருவாக்கப்பட்டது. அது ''டாட்டார்களை வெளியேற்றுதல், சீனுவை மீட்டெடுத்தல், ஒரு குடியரசை நிறுவுதல், சமமான நில உரிமை'' ஆகியவற்றைக் கோரும் பூர்ஷுவாப் புரட்சி வேலைத் திட்டமொன்றை முன்வைத்தது. தொங் மெங் ஹுய் சங்கக் காலகட்டத்தில் டாக்டர் சுன் யட்-சன் ஹுய் தாங் என்ற சங்கத்துடனும் சிங் அரசாங்கத்தின் புதிய ராணுவத்தின் ஒரு பகுதியுடனும் இணைந்து சிங் ஆட்சிக்கெதிராகப் பல ஆயுதக் கிளர்ச்சிகளை நடத்தினுர். இவற்றில் குறிப்பிடத்தக்கவை, 1906ல் பிங்சியாங் (கியாங்சி மாகாணம்), லியூயாங், லீலிங்(ஹுனுன் மாகாணம்)னிலும், 1907ல் ஸாஒசௌ, ஹுவாங்காங், கூினசெள (குவாங்துங் மாகாணம்), சென்னுன் குவான்(குவாங்சி மாகாணம், இப்போது யூயிகுவான் எனப்படுகிறது — மொழி பெயர்ப்பாளர் குறிப்பு)னிலும், 1908ல் யுன்னுன் மாகாணத்து ஹோகோவிலும், 1911ல் குவாங்சௌவிலும் வூசாங்கிலும் நடந்தவையாகும்.

7. 1912ல் தொங் மெங் ஹுய் கோமிந்தாங்காகப் புனரமைக்கப்பட்டு, யுஅன் ஷு-கையின் தலைமையிலான வட யுத்தப்பிரபு ஆட்சியுடன் சமரசம் செய்து கொண்டது. 1913ல் யுஅனின் துருப்புக்கள் 1911ப் புரட்சிப் போக்கில் கியாங்சி, அன்ஹுய், குவாங்துங் ஆகிய மாகாணங்களில் தோற்றம் பெற்ற சக்திகளை நசுக்கத் தெற்கு நோக்கிச் சென்றன. டாக்டர் சுன் யட்-சன்னுல் ஆயுத எதிர்ப்பு ஒழுங்கு செய்யப்பட்டது, ஆனுல் விரைவில் அது நசுக்கப்பட்டது. கோமிந்தாங்கின் சமரசக் கொள்கை தவறு என உணர்ந்து கொண்ட டாக்டர் சுன் அந்தக் காலத்துக் கோமிந்தாங் ஸ்தாபனத்திலிருந்து தனது ஸ்தாபனத்தை வேறுபடுத்திக் காட்டுவதற்காக 1914ல் ஜப்பானில் டோக்கியோவில் சுங் ஹுவா கே மிங் தாங்(சீனப் புரட்சிகரக் கட்சி)னை உருவாக்கினுர். புதிய கட்சி உண்மையில் யுஅன் ஷு-கைக்கு எதிராக இருந்த குட்டிப் பூர்ஷுவா வர்க்கத்தினதும் பூர்ஷுவா வர்க்கத்தினதும் ஒரு பகுதி அரசியற் பிரதிநிதிகளின் நேச அணியாகவே இருந்தது. இந்த நேச அணி மூலம் 1914ல் ஷாங்ஹாயில் டாக்டர் சுன் யட்-சன் ஒரு சிறிய கிளர்ச்சியை ஏற்படுத்தினுர். 1915ல் யுஅன் ஷு-கை தன்னைச் சக்கரவர்த்தியாகப் பிரகடனம் செய்த போது, சாய் வோவும் பிறரும் அவருக்கெதிராக போர் தொடுக்க யுன்னுனிலிருந்து புறப்பட்டனர். அத்துடன் டாக்டர் சுன் யட்-சன்னும் யுஅன் ஷு-கைக்கெதிராக ஆயுத எதிர்ப்பு நடத்தும்படி பிரச்சாரம் செய்வதிலும் தூண்டுவதிலும் மிக உற்சாகமாயிருந்தார்.

8. 1917ல், டாக்டர் சுன் யட்-சன் தன் செல்வாக்கிலிருந்த கடற்படைக்குத்

தலைமை தாங்கி ஷாங்ஹாயிலிருந்து குவாங்சௌவுக்குச் சென்றார். அவர் குவாங்துங்கை ஒரு தளமாகக் கொண்டு, வட யுத்தப்பிரபுவான துவன் சி-ஜெய்யை எதிர்த்த தென்மேல் யுத்தப்பிரபுக்களுடன் இணைந்து துவன் சி-ஜெய்யுக்கெதிரான ராணுவ அரசாங்கமொன்றை அமைத்தார்.

9. 1921ல் குவாங்சி மாகாணத்திலுள்ள குவெய்லினிலிருந்து ஒரு வட படையெடுப்பு நடத்த டாக்டர் சுன் யட்-சன் திட்டமிட்டார். ஆனால் வட யுத்தப்பிரபுக்களுடன் கூட்டுச் சேர்ந்திருந்த அவரது கீழ்ப்பணியாளரான சென் சியுங்-மிங்கின் கலகத்தால் அவரது திட்டம் பாழாகியது.

10. ஹுவாங்பு ராணுவக் கழகம், குவாங்சௌவுக்கருகாமையிலுள்ள ஹுவாங்புவில் அமைக்கப்பட்டது. அது கம்யூனிஸ்ட் கட்சியினதும் சோவியத் யூனியனினதும் உதவியுடன் 1924ல் கோமிந்தாங் புனரமைக்கப்பட்ட பின், டாக்டர் சுன் யட்-சன்னால் நிறுவப்பட்டது. சியாங் கை-ஷேக் 1927ப் புரட்சிக்குத் துரோகம் செய்வதற்கு முன் அந்தக் கழகம் கோமிந்தாங்காலும் கம்யூனிஸ்ட் கட்சியாலும் கூட்டாக நடத்தப்பட்டது. கம்யூனிஸ்டுகளான தோழர்கள் சோ என்-லாய், யெ சியென்-யிங், யுன் தாய்-யிங், சியௌ சூ-ஞியும் இன்னும் பிறரும் இந்தக் கழகத்தில் வெவ்வேறு காலங்களில் பொறுப்பான பதவிகள் வகித்தனர். பயிற்சிப் படையினருட் பலர் கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தவராகவோ கம்யூனிஸ்ட் வாலிபர் சங்க அங்கத்தவராகவோ இருந்தனர். அவர்கள் கழகத்தின் புரட்சிக் கேந்திரத்தை உருவாக்கினர்.

11. தான் யென்-கை ஹுனானில் பிறந்தவர். இவர் ஒரு "ஹன்லி"னாக அதாவது சிங் வம்சத்திலிருந்த உயர் அதிகாரக் கல்வி உறுப்பின் ஒரு அங்கத்தவராக இருந்தார். இவர் முதலில் அரசியலமைப்புக்குக் கட்டுப்பட்ட முடியரசுக்காக வாதாடிப் பின் லாபம் பெற எண்ணி 1911ப் புரட்சியில் பங்குபற்றினார். இவர் பின்னர் கோமிந்தாங்குடன் ஒட்டிக் கொண்டமை ஹுனான் நிலப்பிரபுக்களுக்கும் வட யுத்தப்பிரபுக்களுக்குமிடை முரண்பாட்டைப் பிரதிபலித்தது.

12. முற்போக்குக் கட்சி, குடியரசின் முதல் சில ஆண்டுகளின் போது யுஅன் ஷு-கையின் ஆதரவில் லியாங் சி-சௌ முதலியோரால் ஸ்தாபிக்கப்பட்டது.

13. யுஅன் ஷு-கை சிங் வம்சத்தின் கடைசி ஆண்டுகளில் வட யுத்தப்பிரபுக்களின் தலைவனாக இருந்தான். 1911ப் புரட்சியால் சிங் வம்சம் தூக்கியெறியப்பட்ட பின் அவன் குடியரசின் ஜனாதிபதிப் பதவியைக் கைப்பற்றி, பெரும் நிலப்பிரபு, தரகு முதலாளி வர்க்கங்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய முதலாவது வட யுத்தப்பிரபு அரசாங்கத்தை ஸ்தாபித்தான். எதிர்ப்புரட்சி ஆயுத சக்தி

யையும் ஏகாதிபத்தியவாதிகளின் ஆதரவையும் சார்ந்திருப்பது மூலமும், அந்தக் காலத்திற் புரட்சிக்குத் தலைமை தாங்கிய பூர்ஷுவா வர்க்கத்தின் சமரசத் தன்மையைப் பயன்படுத்திக்கொள்வது மூலமுமே அவன் இதைச் செய்துமுடித் தான். அவன் 1915ல், தான் சக்கரவர்த்தியாவதற்காக, ஜப்பானிய ஏகாதி பத்தியவாதிகளின் ஆதரவைப் பெற விரும்பியதினுல் ஜப்பான் முழுச் சீனுவிலும் தனியான ஆதிக்கம் பெறும் நோக்கத்தில் முன்வைத்த இருபத்தொரு கோரிக் கைகளை ஏற்றுக்கொண்டான். அதே ஆண்டு டிசம்பர் மாதம், யுன்னுன் மாகா ணத்தில் அவன் சிம்மாசனம் ஏறியதற்கெதிரான கிளர்ச்சி ஒன்று ஏற்பட்டது. அது உடனடியாக நாடுதழுவிய வரவேற்பையும் ஆதரவையும் பெற்றது. யுஅன் ஷு-கை 1916ம் ஆண்டு ஜூன் மாதம் பீக்கிங்கில் இறந்தான்.

14. துவன் சி-ஜெய், யுஅன் ஷு-கையின் பழைய கீழ்ப்பணியாளரும் வட யுத்தப்பிரபுக்களில் அன்ஹுய் கும்பலின் தலைவருமாவார். யுஅன் ஷு-கை இறந்த பின், அவர் பல தடவைகள் பீக்கிங் அரசாங்கத்தைக் கட்டுப்படுத்தி ஞர்.

15. அதீத வலதுசாரி அரசியல் விஞ்ஞானக் குழு 1916ல் முற்போக்குக் கட்சியின் ஒரு பகுதியாலும் கோமிந்தாங்கின் ஒரு பகுதியாலும் உருவாக்கப்பட் டது. அது அரசாங்கப் பதவிகளைக் கைப்பற்றிக் கொள்வதற்காக ஒரு முறை தென் யுத்தப்பிரபுக்களையும் மறுமுறை வட யுத்தப்பிரபுக்களையும் ஆதரித்தது. 1926-27 வட படையெடுப்பின் போது, அதன் ஜப்பானியச் சார்பு அங்கத்தவர் களான ஹுவாங் ஃபூ, சாங் சியுன், யாங் யுங்-தை போன்ருேர் சியாங் கை-ஷேக்குடன் கள்ளக் கூட்டுச் சேர ஆரம்பித்து, தமது பிற்போக்கு அரசியல் அனுபவத்தை உபயோகித்து ஒரு எதிர்ப்புரட்சி ஆட்சியைக் கட்டியமைக்க அவருக்கு உதவினர்.

16. ''சீன வாலிபர் கட்சி'' அல்லது ''எட்டாடிஸ்டு கட்சி'' எனவும் அழைக் கப்பட்ட ''வாலிபர் கட்சி'' வெட்கங்கெட்ட விரல்விட்டெண்ணக்கூடிய பாஸிஸ அரசியல்வாதிகளின் ஸ்தாபனமாகும். அது கம்யூனிஸ்ட் கட்சியையும் சோவியத் யூனியனையும் எதிர்ப்பதைத் தனது எதிர்ப்புரட்சி வேலையாகக் கொண்டதோடு, ஆட்சியிலிருந்த பல்வேறு பிற்போக்குவாதக் குழ்பல்களிடமிருந்தும் ஏகாதிபத்தி யவாதிகளிடமிருந்தும் படியும் பெற்றுக்கொண்டது.

17. தோழர் மாஒ சேதுங் அவர்கள் இங்கே பிரதானமாக, வட படையெ டுப்பின் போது ஒரு கம்யூனிஸ்ட் தளபதி யெ திங்கின் ஆணையின் கீழிருந்த சுயேச்சை ரெஜிமென்டையே குறிப்பிடுகிருர். இந்நூலில் ''சிங்காங் மலைகளி

லான போராட்டம்'' என்ற கட்டுரையின் 15வது குறிப்பைப் பார்க்கவும்.

18. இந்நூலில் ''சீனாவின் புரட்சிகர யுத்தத்தில் யுத்ததந்திரப் பிரச்சினைகள்'' என்ற கட்டுரைப் பார்க்கவும்.

19. ஹான் ஃபூ-சி என்பவர் ஷன்துங் மாகாணத்திலிருந்த கோமிந்தாங் யுத்தப்பிரபுவாவார். லியூ சூ, ஹோனன் மாகாணத்திலிருந்த சியாங் கை-ஷேக்கின் தனிப்பட்ட துருப்புகளுக்குத் தலைமை தாங்கிய இன்னொரு யுத்தப்பிரபுவாவார். இவர் ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தம் வெடித்த பின் ஹோபெயிலுள்ள பாஓதின் பிரதேசத்தின் பாதுகாப்புக்குப் பொறுப்பாயிருந்தார். இவர்களிருவரும் ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களின் தாக்குதலின் முன்னால் ஒரு சூடு கூடச் சுடாமல் ஓடித் தப்பினர்.

# இரண்டாவது கம்யூனிஸ்ட் கட்சி-எதிர்ப்புத் தாக்குதலை முறியடித்தது பற்றிய முடிவுகள்*

(1941, மே 8)

மத்திய கமிட்டியின் 1941 மார்ச் 18ந் திகதிய பணித்தல் கூறியுள்ளவாறு, இரண்டாவது கம்யூனிஸ்ட் கட்சி-எதிர்ப்புத் தாக்குதல் முடிவுக்கு வந்துவிட்டது. பின்னர். தொடர்ந்து நடந்துள்ளது ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தம் புதிய சர்வதேச, உள்நாட்டுச் சூழ்நிலைகளிற் தொடர்ந்து நடைபெறுவதாகும். இந்தப் புதிய சூழ்நிலைகளில் கூடுதலாக உள்ள அம்சங்கள் ஏகாதிபத்தியவாத யுத்தம் பரவியுள்ளதும், சர்வதேசப் புரட்சிகர இயக்கத்தின் பேரெழுச்சியும், சோவியத் யூனியனுக்கும் ஜப்பானுக்கும் இடையிலான நடுநிலைமை ஒப்பந்தமும்[1], கோமிந்தாங்கின் இரண்டாவது கம்யூனிஸ்ட் கட்சி-எதிர்ப்புத் தாக்குதல் தோற்கடிக்கப்பட்டதும் அதன் விளைவாகக் கோமிந்தாங்கின் அரசியல் அந்தஸ்துத் தாழ்ந்ததும் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் அந்தஸ்து உயர்ந்ததும், அத்துடன், சீனுவிற்கெதிரான புதிய ஒரு பெருமளவிலான தாக்குதலுக்கான ஜப்பானின் மிக அண்மைய தயாரிப்புகளும் ஆகும். ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தத்தில் விடாப்

*இது சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டிக்காகத் தோழர் மாஓ சேதுங் அவர்களால் எழுதப்பட்ட உட்கட்சி உத்தரவு.

பிடியாக நிற்க நாடு எங்கணுமுள்ள மக்களை ஐக்கியப்படுத்தும் நோக்கத்திற்காகவும் பெரும் நிலப்பிரபுக்களினதும் பெரும் பூர்ஷுவா வர்க்கத்தினதும் பணிந்துபோகும் அபாயத்தையும் கம்யூனிஸ்ட் கட்சி-எதிர்ப்பு எதிரோட்டத்தையும் தொடர்ந்து பயனுள்ள விதத்திற் கடந்து வரும் நோக்கத்திற்காகவும் நாம் சமீபத்திய கம்யூனிஸ்ட் கட்சி-எதிர்ப்புத் தாக்குதலுக்கு எதிரான எமது கட்சியின் வீரமிக்க, வெற்றிகரமான போராட்டத்தின் படிப்பினைகளை ஆராய்வதும் கற்பதும் முற்றிலும் அவசியம்.

1. சீனுவின் இரு பிரதான முரண்பாடுகளில், சீனுவுக்கும் ஜப்பானுக்கும் இடையிலான தேசிய முரண்பாடே இன்னும் முதன்மையானது, சீனுவிலான உள்நாட்டு வர்க்க முரண்பாடு இன்னும் கீழ்ப்பட்டது. ஒரு தேசிய எதிரி எமது நாட்டிற்குள் நெடுந்தூரம் ஊடுருவியுள்ளான் என்ற உண்மை அனைத்திலும் தீர்க்கமானது. சீனுவிற்கும் ஜப்பானுக்கும் இடையிலான முரண்பாடு தொடர்ந்து கூரியதாக உள்ளவரை, பெரும் நிலப்பிரபு பெரும் பூர்ஷுவா வர்க்கம் முழுமையும் தேசத் துரோகிகளாக மாறிச் சரணுகதியடைந்தாலும்கூட அவற்றல் ஒரு போதும் 1927ம் ஆண்டின் ஏப்ரல் 12 சம்பவ[2]மும், மே 21 சம்பவ[3]மும் திரும்ப நடைபெறும் மற்றொரு 1927ம் ஆண்டு நிலைமையை ஏற்படுத்த முடியாது. சில தோழர்களால் முதலாவது கம்யூனிஸ்ட் கட்சி-எதிர்ப்புத் தாக்குதல்[4] மற்றொரு மே 21 சம்பவமாகவும் இரண்டாவது கம்யூனிஸ்ட் கட்சி-எதிர்ப்புத் தாக்குதல் ஏப்ரல் 12, மே 21 சம்பவங்கள் திரும்ப நடைபெற்றமையாகவும் கணிக்கப்பட்டன; ஆனல் புறநிலையான உண்மைகள் இந்தக் கணிப்பீடுகளைத் தவறென நிரூபித்துள்ளன. இந்தத் தோழர்களின் தவறு தேசிய முரண்பாடே முதன்மையான முரண்பாடென்பதை மறந்துவிடுவதில்தான் உள்ளது.

2. இச்சூழ்நிலைகளில், கோமிந்தாங் அரசாங்கக் கொள்கை முழுவதையும் நிர்வகிக்கும் பிரித்தானிய-சார்பு, அமெரிக்க-சார்புப் பெரும் நிலப்பிரபுக்களும் பெரும் பூர்ஷுவா வர்க்கமும் இரட்டை இயல்பையுடைய வர்க்கங்களாகவே இருந்து வருகின்றன. ஒருபுறம் அவை ஜப்பானுக்கு எதிராயுள்ளன, மறுபுறம் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் கட்சி பிரதிநிதித்துவம் செய்யும் பரந்த வெகுஜனங்களுக்கும் எதிராயுள்ளன. ஜப்பானுக்கு அவற்றின் எதிர்ப்பு, அவற்றின் கம்யூனிஸ்ட் கட்சி-எதிர்ப்பு, இரண்டுமே ஒரு இரட்டை இயல்பை உடையவையும் கூட. அவற்றின் ஜப்பானிய-எதிர்ப்புச் சம்பந்தப்பட்டவரை, ஜப்பானுக்கு எதிராயிருக்கையில் அவை தீவிரமாக யுத்தம் நடத்தவோ, வாங் சிங்-வெய்யையும் பிற தேசத்துரோகிகளையும் தீவிரமாக எதிர்க்கவோ இல்லை, சில சமயங்களில் அவை ஜப்பானின் சமாதானத் தூதர்களுடன் சரசமாடவும் செய்கின்றன. அவற்றின் கம்யூனிஸ்ட் கட்சி-எதிர்ப்புச் சம்பந்தப்பட்ட வரை, அவை கம்யூனிஸ்ட் கட்சிக்கு எதிராயுள்ளது, மாத்திரமல்ல தெற்கு அன்ஹுய் சம்பவத்தைச் சிருஷ்டிப்பதும் ஜனவரி 17ந் திகதிய உத்தரவைப் பிறப்பிப்பதுமான அளவிற்குக்கூடச் சென்றுள்ளன; ஆனால் அவை இறுதியான பிளவொன்றை விரும்பாமல் இன்னும் தானமும் தண்டமுமான தம் கொள்கையையே வைத்திருக்கின்றன. இந்த உண்மைகள் மீண்டும் ஒருகாற் சமீபத்திய கம்யூனிஸ்ட் கட்சி-எதிர்ப்புத் தாக்குதலில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. மிக மிகச் சிக்கலாயுள்ள சீன அரசியல் எமது தோழர்களின் மிக ஆழ்ந்த கவனத்தைக் கோருகிறது. பிரித்தானிய-சார்பு, அமெரிக்க-சார்புப் பெரும் நிலப்பிரபுக்களும் பெரும் பூர்ஷுவா வர்க்கத்தினரும் இன்னும் ஜப்பானை எதிர்க்கவும் எமது கட்சியைக் கையாள்வதில் இன்னும் தானத்தையும் தண்டத்தையும் உப

யோகிக்கவும் செய்வதால், எமது கட்சியின் கொள்கை ''அவர்கள் எமக்குச் செய்கின்றவாறே நாம் அவர்களுக்குச் செய்வது''[5], தண்டத்திற்குத் தண்டமும் தானத்திற்குத் தானமும் பிரயோகிப்பது ஆகும். புரட்சிகர இரட்டைக் கொள்கை இத்தகையதே. பெரும் நிலப்பிரபுக்களும் பெரும் பூர்ஷுவா வர்க்கத்தினரும் முற்றாகத் தேசத்துரோகிகளாக மாறுதவரை எமது இந்தக் கொள்கையும் மாறாது.

3. கோமிந்தாங்கின் கம்யூனிஸ்ட் கட்சி-எதிர்ப்புக் கொள்கையை எதிர்த்துச் சமாளிக்க முழுத் தொடரான தந்திரோபாயங்கள் தேவை, கவனயீனமோ உதாசீனமோ சிறிதும் இருக்கக் கூடாது. மக்களின் புரட்சிகர சக்திகளைக் குறித்துச் சியாங் கை-ஷேக்கினால் பிரதிநிதித்துவம் செய்யப்படும் பெரும் நிலப்பிரபுக்களினதும் பெரும் பூர்ஷுவா வர்க்கத்தினதும் குரோதமும் குரூரமும் பத்து வருட கம்யூனிஸ்ட் கட்சி-எதிர்ப்பு யுத்தத்தால் எடுத்துக்காட்டப்பட்டது மட்டுமல்ல, ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தத்தின் மத்தியிலும் கம்யூனிஸ்ட் கட்சி-எதிர்ப்புத் தாக்குதல்கள் இரண்டினாலும், குறிப்பாக இரண்டாவது கம்யூனிஸ்ட் கட்சி-எதிர்ப்புத் தாக்குதலின் போதான தெற்கு அன்ஹுவாய் சம்பவத்தாலும் பூரணமாக எடுத்துக்காட்டப்பட்டுமுள்ளன. மக்களின் புரட்சிகர சக்தியொன்று தான் சியாங் கை-ஷேக்கினால் அழித்தொழிக்கப்படுவதைத் தடுக்கவும், அவனைத் தானிருப்பதை அங்கீகரிக்க நிர்ப்பந்திக்கவும் வேண்டுமானால் அதற்கு அவனது எதிர்ப்புரட்சிக் கொள்கைகளுக்கு எதிராக அடிக்கு அடி கொடுக்கும் போராட்டமொன்றை நடத்துவதைத் தவிர வேறு வழி கிடையாது. சமீபத்திய கம்யூனிஸ்ட் கட்சி-எதிர்ப்புத் தாக்குதலின் போது தோழர் சியாங் யிங்கின் சந்தர்ப்பவாதத்[6]தால் விளைந்த தோல்வி முழுக் கட்சிக்கும் ஒரு பாரதூர

மான எச்சரிக்கையாக இருக்க வேண்டும். ஆனால் போராட்டம் நியாயமான காரணங்களினடிப்படையிலும், எமக்குச் சாதக மான முறையிலும், தற் கட்டுப்பாட்டோடும் நடத்தப்பட வேண்டும்; இம்மூன்றில் எது இல்லாவிட்டாலும் நாம் பின்ன டைவுகளை உறுவோம்.

4. கோமிந்தாங் மரணப்பிடிவாதக் கும்பலுக்கு எதிரான போராட்டத்தில் பெரும் தரகுப் பூர்ஷுவா வர்க்கம் தரகுத் தன்மை சிறிதே உள்ள, அல்லது இல்லாத தேசிய பூர்ஷுவா வர்க்கத்திலிருந்து பிரித்தறியப்படவும், மிகப் பிற்போக்கான பெரும் நிலப்பிரபுக்கள் நல்லறிவு பெற்ற பிரபுக்களிலிருந்தும் சாதாரண நிலப்பிரபுக்களிலிருந்தும் பிரித்தறியப்படவும் வேண் டும். இதுவே இடைப்பட்ட கோஷ்டிகளை எம் பக்கம் வென் றெடுக்கவும் ''மும் மூன்று முறை''[7]யிலான அரசியல் அதிகார அங்கங்களை ஸ்தாபிக்கவுமான எமது கட்சியின் பிரயாசைகளின் தத்துவார்த்த ரீதியான அடித்தளம்; இது கடந்த ஆண்டு மார்ச்சிலிருந்து மத்திய கமிட்டியால் திரும்பத் திரும்பச் சுட் டிக்காட்டப்பட்டுள்ளது. இதன் சரியான தன்மை சமீபத்திய கம்யூனிஸ்ட் கட்சி-எதிர்ப்புத் தாக்குதலின் போது மறுபடியும் நிரூபிக்கப்பட்டது. எமது நவம்பர் 9ந் திகதிய தந்தி[8]யில் தெரி விக்கப்பட்டவாறுன, தெற்கு அன்ஹூய் சம்பவத்திற்கு முன் னர் நாம் எடுத்த நிலை அச்சம்பவத்தின் பின்னர் அரசியல் எதிர்த்தாக்குதலுக்கு நாம் மாறியதற்கு முற்றும் அவசியமாயி ருந்தது; இல்லையேல் எம்மால் இடைப்பட்ட கோஷ்டிகளை எம் பக்கம் வென்றெடுக்க முடிந்திராது. ஏனெனில், இடைப்பட்ட கோஷ்டிகள் ஒருமுறைக்குப் பல முறை அனுபவத்தால் படிப் பினை பெற்றிருந்தால் அல்லாமல் அவற்றால் எமது கட்சி ஏன் கோமிந்தாங் மரணப்பிடிவாதக் கும்பலுக்கு எதிராக உறு

தியான போராட்டங்களை நடத்தவேண்டும், ஐக்கியம் ஏன் போராட்டத்தின்மூலம் மட்டுந்தான் ஈட்டப்பட முடியும், போராட்டம் கைவிடப்பட்டால் ஏன் எந்த வித ஐக்கியமும் இருக்கவே முடியாது என்பவற்றைப் புரிந்துகொள்ள இயலாதிருந்திருக்கும். பிராந்திய அதிகாரக் கோஷ்டிகளிலான தலையாய நபர்கள் பெரும் நிலப்பிரபு வர்க்கத்தையும் பெரும் பூர்ஷுவா வர்க்கத்தையும் சேர்ந்தவர்களெனினும், அவர்களுக்கும் மத்திய அரசாங்கத்தைக் கட்டுப்பாடு செய்யும் பெரும் நிலப்பிரபு வர்க்கத்தினருக்கும் பெரும் பூர்ஷுவா வர்க்கத்தினருக்குமிடையில் முரண்பாடுகள் உள்ளனவாகையால் பொதுவில் அவர்களும் இடைப்பட்ட கோஷ்டியினராகவே கருதவும் நடத்தவும்பட வேண்டும். முதலாவது கம்யூனிஸ்ட் கட்சி-எதிர்ப்புத் தாக்குதலில் மிகத் தீவிரமாயிருந்த யென் சி-ஷன் இரண்டாவது கம்யூனிஸ்ட் கட்சி-எதிர்ப்புத் தாக்குதலில் ஒரு நடு நிலையை எடுத்தான்; முதலாவது தாக்குதலில் நடுநிலையை எடுத்த குவாங்சி கும்பல் இரண்டாவது தாக்குதலில் கம்யூனிஸ்ட் கட்சி-எதிர்ப்புப் பக்கம் சார்ந்ததெனினும் இது இன்னும் சியாங் கை-ஷேக் கும்பலுடன் முரண்பட்டே நிற்கிறது; அதனுடன் ஒன்றாகக் கொள்ளப்பட முடியாது. இது பிற பிராந்திய அதிகாரக் கோஷ்டிகளுக்கு மேலும் வலுவாகப் பொருந்துவதாகும். இருப்பினும் எம் தோழர்களிற் பலர் இன்னும், ஏதோ தெற்கு அன்ஹுய் சம்பவத்திற்குப்பின் முழு நிலப்பிரபு வர்க்கமும் பூர்ஷுவா வர்க்கமுமே தேசத் துரோகிகளாக மாறிவிட்டாற் போல், வெவ்வேறு நிலப்பிரபு, பூர்ஷுவா கோஷ்டிகளை ஒன்றாகக் கொள்கின்றனர்; இது சீனாவின் சிக்கலான அரசியலை எளிமைப்படுத்திக் காண்பதாகும். நாம் இந்தக் கருத்தை ஏற்று, எல்லா நிலப்பிரபுக்களையும் பூர்ஷுவா வர்க்கத்தையும் கோமிந்தாங் மரணப்பிடி

வாதக் கும்பலோடு ஒன்ருகக் கொண்டோமாளுல் நாம் எம்மைத் தனிமைப்படுத்திக்கொள்வோம். சீன சமுதாயம் நடுவில் பெரியதும் இரு அந்தங்களிலும் சிறியதும்[9] என்பதும், கம்யூனிஸ்ட் கட்சி இடைப்பட்ட வர்க்கங்களைச் சேர்ந்த வெகுஜனங்களை வென்றெடுத்தாலன்றியும், அது அவர்கள் அவர்களின் நிலைமைகளுக்குத் தக்கவாறு தம் உரிய பங்கை ஆற்றக்கூடிய தாக்கிளுலன்றியும் அதளுல் சீனுவின் பிரச்சினைகளைத் தீர்க்க இயலாது என்பதும் உணர்ந்து கொள்ளப்பட வேண்டும்.

5. சில தோழர்கள் சீனுவுக்கும் ஜப்பானுக்கும் இடையிலான முரண்பாடே முதன்மையான முரண்பாடு என்ற விஷயத்தில் ஈடாடியும், எனவே சீனுவிலான வர்க்க உறவுகளைத் தவருகக் கணிப்பிட்டும் உள்ளனராகையால் அவர்கள் ஒரொரு சமயங்களில் கட்சியின் கொள்கையில் ஈடாடியுள்ளனர். தெற்கு அன்ஹுாய் சம்பவத்தின் பின்னர் அது மற்ருெரு ஏப்ரல் 12, அல்லது மே 21 சம்பவம் என்ற தங்கள் தவருன கணிப்பீட்டைக் கொண்டு ஆரம்பித்து இத்தோழர்கள் கடந்த ஆண்டு டிசம்பர் 25ந் திகதிய மத்திய கமிட்டியின் கொள்கைப் பணித்தல் இனியும் பொருந்துவதல்ல, அல்லது குறைந்தபட்சம் முற்ருகப் பொருந்துவதல்ல என எண்ணுவதாகத் தெரிகிறது. எமக்கு இனியும் ஜப்பானிய-எதிர்ப்பிற்கும் ஜனநாயகத்திற்குமாக நிற்பவர்கள் அனைவரையும் உள்ளடக்கும் வகையான அரசு அதிகாரம் தேவையில்லை, மாருகத் தொழிலாளர், விவசாயிகள், நகரக் குட்டி பூர்ஷுவா வர்க்கத்தினர் ஆகியோரின் அரசு அதிகாரம் என அழைக்கப்படுவதே தேவை என்றும், ஜப்பானிய-எதிர்ப்புக் காலகட்டத்தின் ஐக்கிய முன்னணிக் கொள்கை இனியும் தேவையில்லை, மாருகப் பத்து ஆண்டு உள்நாட்டு யுத்தத்தின் போதைப் போன்ற நிலப் புரட்சிக் கொள்கையோன்

றே தேவை என்றும் இவர்கள் கருதுகின்றனர். இந்தத் தோழர்களின் மனங்களில் கட்சியின் சரியான கொள்கை, எப்படியும் தற்போதைக்காவது, மங்கித் தெளிவற்றுப் போய்விட்டது.

6. இந்தத் தோழர்கள் கோமிந்தாங்கால் பிளவு விளைக்கப்படும் சாத்தியப்பாட்டிற்கு எதிராக, அதாவது, நிலைமையின் சாத்தியமான மிக மோசமான அபிவிருத்திக்கு எதிராக, தயாராக இருக்கும்படி எமது கட்சியின் மத்திய கமிட்டியால் பணிக்கப்பட்டபோது, அவர்கள் மற்றச் சாத்தியக்கூறுகளை மறந்துவிட்டனர். ஆக மோசமான சாத்தியக்கூறிற்குத் தயாரிப்புச் செய்வது முற்றிலும் அவசியமாகையில், சாதகமான சாத்தியக்கூறுகளைப் புறக்கணிப்பதென்று இதற்கு அர்த்தமல்ல அதற்கு நேர்மாறாக, ஆக மோச்மான சாத்தியக்கூறிற்கான இத்தகைய தயாரிப்பே சாதகமான சாத்தியக்கூறுகளைச் சிருஷ்டிக்கவும் அவற்றை யதார்த்தமாக்கவுமான ஒரு முற்தேவையாகும் என்பதை இவர்கள் புரிந்து கொள்ளவில்லை. இந்தச் சந்தர்ப்பத்தில், கோமிந்தாங் ஒரு பிளவை விளைவிப்பதற்கு எதிராகப் பூரணமாகத் தயாராக இருந்தோம்; எனவே கோமிந்தாங் எளிதில் ஒரு பிளவை ஏற்படுத்தத் துணியவில்லை.

7. தேசியப் போராட்டத்தினதும் வர்க்கப் போராட்டத்தினதும் ஒருமையைப் புரிந்துகொள்ளத் தவறுபவர்களும், ஐக்கிய முன்னணிக் கொள்கையினதும் வர்க்கக் கொள்கையினதும் ஒருமையையும், அதன் விளைவாக ஐக்கிய முன்னணிப் போதனையினதும் வர்க்கப் போதனையினதும் ஒருமையையும் புரிந்துகொள்ளத் தவறுபவர்களுமான தோழர்கள் இன்னும் கூடுதலாகவே உள்ளனர். தெற்கு அன்ஹுாய் சம்பவத்தின் பின்னர் ஐக்கிய முன்னணிப் போதனையினின்றும் வேறுபட்ட

தாக வர்க்கப் போதனைக்கு விசேஷ வலியுறுத்தல் தரப்பட வேண்டுமென இவர்கள் கொள்கின்றனர். இப்போதுகூட இவர்கள் ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தக் காலகட்டம் முழுமைக்கும் எமது கட்சி, இன்னும் ஜப்பானை எதிர்ப்பவர்களான மேல், நடு வர்க்கத்தட்டுகளிலுள்ள அனைவரையும், அவர்கள் பெரும் நிலப்பிரபு வர்க்கத்தையும் பெரும் பூர்ஷுவா வர்க்கத்தையும் சேர்ந்தவர்களாயினும் இடைப்பட்ட வர்க்கங்களைச் சேர்ந்தவர்களாயினும், குறித்துத் தனியொரு இணைப்பட்ட கொள்கையை — ஐக்கியமும் போராட்டமுமாகிய இரு அம்சங்களையும் இணைப்படுத்துவதான (ஓர் இரட்டைத் தன்மையுடைய) தேசிய ஐக்கிய முன்னணிக் கொள்கையை — கொண்டுள்ளதென்பதைப் புரிந்துகொள்ளவில்லை. இந்த இரட்டைத் தன்மையுடைய கொள்கை, நாம் உறுதியுடன் நசுக்க வேண்டியவர்களான அறவே திருந்த மறுக்கின்றவர்கள் நீங்கலாக, கைப்பொம்மைத் துருப்புக்களுக்கும் தேசத் துரோகிகளுக்கும் ஜப்பானிய-சார்பு நபர்களைப் பொறுத்தும் பிரயோகிக்கப்பட வேண்டும். எமது கட்சி தன் சொந்த அங்கத்தினர்கள் மத்தியிலும் பொதுமக்கள் மத்தியிலும் நடத்தும் போதனையும் இவ்வாறே இந்த இரு அம்சங்களையும் தழுவுகிறது, அதாவது, அது பாட்டாளி வர்க்கத்திற்கும், விவசாயி வர்க்கத்திற்கும், குட்டி பூர்ஷுவா வர்க்கத்தின் பிற பிரிவுகளுக்கும் ஜப்பானிய-எதிர்ப்பிற்காகப் பூர்ஷுவா வர்க்கத்தினதும் நிலப்பிரபு வர்க்கத்தினதும் வெவ்வேறு வர்க்கத்தட்டுகளோடும் வெவ்வேறு விதங்களில் ஐக்கியமுறுவது எவ்வாறு என்றும், அவை சமரசப்படுகின்ற, ஊசலாடுகின்ற, கம்யூனிஸ்ட் கட்சி-எதிர்ப்பாயிருக்கின்ற வெவ்வேறு அளவுகளின் பிரகாரம் அவற்றிற்கு எதிராக வெவ்வேறு அளவுகளுக்குப் போராட்டங்கள் நடத்துவது எவ்வாறு என்றும் கற்பிக்

கிறது. ஐக்கிய முன்னணிக் கொள்கை வர்க்கக் கொள்கை யேயாகும், அவையிரண்டும் பிரிக்கப்படமுடியாதவை; இதில் தெளிவற்றிருக்கும் எவரும் வேறு பல பிரச்சினைகளிலும் தெளி வற்றிருப்பார்.

8. ஷென்சி-கன்சு-நிங்சியா எல்லைப் பிரதேசத்தினதும், வட, மத்திய சீனுவிலுள்ள ஜப்பானிய-எதிர்ப்புத் தளப்பிரதேசங்க ளினதும் சமூக இயல்பு ஏற்கனவே புதிய ஜனநாயகமானதென் பதை வேறு சில தோழர்கள் புரிந்துகொள்ளாதிருக்கின்றனர். ஒரு பிரதேசம் சமூக இயல்பில் புதிய ஜனநாயகமானதா என மதிப்பிடுவதற்கான பிரதான மூலப்பிரமாணம் அங்கு பரந்த வெகுஜனங்களின் பிரதிநிதிகள் அரசியலதிகாரத்தில் பங்கு கொள்கின்றனரா என்பதும் அது கம்யூனிஸ்ட் கட்சியினுல் தலைமைதாங்கப்படுகிறதா என்பதுமாகும். ஆகவே, கம்யூ னிஸ்ட் கட்சியின் தலைமையின்கீழான ஐக்கிய முன்னணி அர சியலதிகாரமே ஒரு புதிய ஜனநாயக சமுதாயத்தின் பிரதான அடையாளம். பத்து ஆண்டு உள்நாட்டு யுத்தக்காலத்திலுள் ளதைப் போன்றதொரு நிலப் புரட்சி இருந்தால் மட்டுமே புதிய ஜனநாயகம் அடையப்பட்டதாகக் கருதப்படலாம் எனச் சிலர் நினைக்கின்றனர், ஆனுல் அது தவறு. தற்போது தளப் பிரதேசங்களிலான அரசியல் அமைப்பு ஜப்பானிய-எதிர்ப்பை யும் ஜனநாயகத்தையும் ஆதரிப்பவர்களான மக்கள் அனை வரினதும் ஐக்கிய முன்னணியின் அரசியல் அமைப்பும், பொரு ளாதாரம் அரைக்காலனித்துவ, அரைநிலப்பிரபுத்துவ அம்சங் கள் அடிப்படையாக நீக்கப்பட்டுவிட்ட ஒன்றும், கலாசாரம் பரந்த வெகுஜனங்களின் ஓர் ஏகாதிபத்திய-எதிர்ப்பு, நிலப்பி ரபுத்துவ-எதிர்ப்பு கலாசாரமுமாகும். ஆகவே, அரசியல் ரீதி யிலோ, பொருளாதார ரீதியிலோ அல்லது கலாசார ரீதியிலோ

எப்படி நோக்கப்பட்டாலும், குத்தகையினதும் வட்டியினதும் குறைப்பை மட்டும் அமுல்படுத்தியுள்ள ஜப்பானிய-எதிர்ப்புத் தளப்பிரதேசங்கள், பூரணமான ஒரு நிலப் புரட்சிக்கு உட்பட்டுள்ள ஷென்சி-கன்சு-நிங்சியா எல்லைப் பிரதேசம் இரண்டுமே சமுதாய இயல்பில் புதிய ஜனநாயகமானவைதாம். தளப்பிரதேசங்களின் உதாரணம் நாடு பூராவிற்கும் விரிவாக்கப்படும்போது, சீனு முழுவதும் ஒரு புதிய ஜனநாயகக் குடியரசாக ஆகும்.

## குறிப்புகள்

1. இது சோவியத் யூனியனுக்கும் ஜப்பானுக்குமிடையிலான, 1941, ஏப்ரல் 13ந் திகதிய நடுநிலைமை ஒப்பந்தத்தைக் குறிக்கின்றது. இந்த ஒப்பந்தம் சோவியத் யூனியனின் கிழக்கு எல்லையில் சமாதானத்தை உறுதிப்படுத்தி, அவ்வாறாக சோவியத் யூனியன்மீது ஒரு கூட்டு ஜெர்மனிய, இத்தாலிய, ஜப்பானிய தாக்குதலுக்கான சதியைத் துகளாக்கியது. அது சோவியத் யூனியனின் சமாதான வெளிவிவகாரக் கொள்கையின் ஒரு பெரும் வெற்றியாக விளங்கியது.

2. ஏப்ரல் 12ந் திகதிய சம்பவம் சியாங் கை-ஷேக்கினுல் 1927, ஏப்ரல் 12ந் திகதி ஷாங்ஹாயில் நடத்தப்பட்ட எதிர்ப்புரட்சிகர சம்பவமாகும். இச்சம்பவத்தில் பெருந்தொகையான கம்யூனிஸ்டுகளும் புரட்சிகரத் தொழிலாளர்களும் விவசாயிகளும் புத்திஜீவிகளும் படுகொலை செய்யப்பட்டனர்.

3. மே 21ந் திகதிய சம்பவம் பற்றி இந்நூலில் ''சிங்காங் மலையிலான போராட்டம்'' என்ற கட்டுரைக்கான குறிப்பு 17ஐப் பார்க்கவும்.

4. முதலாவது கம்யூனிஸ்ட் கட்சி-எதிர்ப்புத் தாக்குதல் சியாங் கை-ஷேக்கினுல் 1939 பனிக்காலம் முதல் 1940 வசந்தம் வரை நடத்தப்பட்டது.

5. இம்மேற்கோள் ஸொங் ராஜவம்ச காலத்திய ஒரு சீனத் தத்துவஞானியான சு ஸியின் (1130-1200), ''கன்பூசியஸின் நடுப்பாதைத் தத்துவம்'', 13ம் அத்தியாயம் பற்றிய விமர்சனத்திலிருந்து எடுக்கப்பட்டது.

6. தெற்கு அன்ஹூய் சம்பவத்தின் சமயத்தில் தோழர் சியாங் யிங் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் தென் கிழக்குப் பியூரோவின் செயலாள ராகவிருந்தார். அவர் ஜப்பானிய-எதிர்ப்புத் தேசிய ஐக்கிய முன்னணிப் பிரச்சினையில் கடும் வலதுசாரிக் கருத்துக்களைக் கொண்டிருந்தார். அவர் மத்திய கமிட்டியின் கொள்கைகளை உறுதியுடன் நிறைவேற்றவில்லை; வெகுஜ னங்களைப் பூரணமாக எழுச்சியுறுத்தவும் ஜப்பான் கைப்பற்றியிருந்த பகுதிகளில் விடுதலைப்பிரதேசங்களை விஸ்தரிக்கவும் மக்களின் ஆயுதப் படைகளை விரிவு படுத்தவும் அஞ்சினார்; அவர் அண்மையில் நிகழவிருந்த கோமிந்தாங்கின் பிற் போக்குத் தாக்குதலின் பாரதூரமான தன்மையைப் போதியளவு புரிந்துகொள்ள வில்லை, எனவே மனதளவிலும் ஸ்தாபனரீதியிலும் அதற்குத் தயாரில்லாம லிருந்தார். 1940, மே 4ந் திகதி தோழர் மாஓ சேதுங் அவர்கள், மத்திய கமிட்டியின் சார்பில், ''ஜப்பானிய-எதிர்ப்புச் சக்திகளைத் துணிகரமாய் விரிவு படுத்தி, கம்யூனிஸ்ட் கட்சி-எதிர்ப்பு மரணப்பிடிவாதிகளின் தாக்குதல்களை எதிர்க் குக'' என்ற பணித்தலை எழுதினார். இந்தப் பணித்தல் தென் கிழக்குப் பியூ ரோவிற்கு எட்டியபோது, அப்பியூரோவின் ஒரு அங்கத்தினராயும் புதிய நான் காவது சேனையின் முதலாவது பிரிவின் தளபதியாயுமிருந்த தோழர் சென் யீ அதை உடனே நடைமுறைப்படுத்தினார்; ஆனால் தோழர் சியாங் யிங் அதை நிறைவேற்ற மனமில்லாதிருந்தார். அவர் தொடர்ந்தும் கோமிந்தாங்கின் தாக் குதலைச் சமாளிக்க எந்தத் தயாரிப்புகளும் செய்யாதிருந்ததால் சியாங் கை-ஷேக் 1941 ஜனவரியில் தெற்கு அன்ஹூய் சம்பவத்தை நிகழ்த்தியபோது அவரின் கீழிருந்த படைகள் வலிமையற்றிருந்தன. எமது வீரர்களில் ஒன்பதா யிரம் பேர் தெற்கு அன்ஹூயில் அழித்தொழிக்கப்பட்டனர்; தோழர் சியாங் யிங்கும் பிற்போக்காளர்களால் கொல்லப்பட்டார்.

7. ''மும் மூன்று முறை'' என்பது ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தத்தின்போது ஐக்கிய முன்னணி அரசியலதிகாரம் பற்றிய சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கையாகவிருந்தது. இக்கொள்கைப் பிரகாரம், ஜப்பானிய-எதிர்ப்பு ஜனநாயக அரசியல் அதிகார அங்கங்களிலான ஆட்களின் விகிதாசாரம் ஏறத் தாழக் கம்யூனிஸ்ட் கட்சிக்கு மூன்றிலொன்றும், இடதுசாரி முற்போக்காளர்க ளுக்கு மூன்றிலொன்றும், இடைப்பட்ட நபர்களுக்கும் பிறருக்கும் மூன்றிலொன் றும் ஆகும்.

8. 1940, நவம்பர் 9ந் திகதிய தந்தி, கோமிந்தாங் தளபதிகள் ஹோ யிங்-சின்னினதும் பய் சுங்-சியினதும் 1940, அக்டோபர் 19ந் திகதிய தந்திக்

குப் பதிலாக பதினெட்டாவது பிரிவுச் சேனையின் (எட்டாவது மார்க்க ராணுவம் — மொழிபெயர்ப்பாளர் குறிப்பு) தளபதியும் துணைத்தளபதியுமான சு தே, பெங் தே-ஹுவய் ஆகியோரினதும், புதிய நான்காவது சேனையின் தளபதியும் துணைத்தளபதியுமான யெ திங், சியாங் யிங் ஆகியோரினதும் தந்தியாகும். கம்யூனிஸ்ட் கட்சியைத் தாக்கவும் ஜப்பானிடம் சரணடையவுமான கோமிந்தாங் பிற்போக்காளர்களின் சதியை அம்பலப்படுத்தி அவை புதிய நான்காவது சேனையும் எட்டாவது மார்க்க ராணுவமும் மஞ்சள் நதிக்குத் தெற்கேயிருந்து வடக்கிற்கு நகர வேண்டுமென்ற ஹோ யிங்-சின்னினதும் பய் சுங்-சியினதும் அனர்த்தப் பிரேரணையைக் கண்டித்தன; இருப்பினும் ஜப்பானுக்கு எதிரான ஐக்கியத்தை நிலைக்கச் செய்வதற்காக விட்டுக்கொடுப்பதும் சமரசமடைவதுமான ஒரு உணர்வில் அவர்கள் தம் படைகளை யாங்சி நதிக்குத் தெற்கிலிருந்து வடக்கிற்கு நகர்த்த இணங்கினர்; அதே சமயத்தில், கோமிந்தாங்கிற்கும் கம்யூனிஸ்ட் கட்சிக்குமிடையே இருந்த சில பிரதான பிரச்சினைகளின் தீர்வைக் கோரினர். இத்தந்தி அக்காலத்தில் இடைப்பட்ட பிரிவினரின் அனுதாபத்தை வென்றெடுத்து, சியாங் கை-ஷேக்கைத் தனிமைப்படுத்த உதவியது.

9. தோழர் மாஓ சேதுங் அவர்களின் சீன சமுதாயம் பற்றிய இப்பிரஸ்தாபத்தின் பொருள் புரட்சிக்குத் தலைமைதாங்கிய சீனத் தொழிற்துறைப் பாட்டாளி வர்க்கமும், பிற்போக்குப் பெரும் நிலப்பிரபுக்களையும் பெரும் பூர்ஷுவா வர்க்கத்தினரையும் போலவே, சீனாவின் ஜனத்தொகையில் ஒரு சிறுபான்மை மட்டுமே என்பதாகும். இதைப் பற்றி, ''தேர்ந்தெடுக்கப்பட்ட மாஓ சேதுங் படைப்புகள்'' வால்யும் 3ல் ''ஷென்சி-கன்சு-நிங்சியா எல்லைப் பிரதேசக் கலந்தாலோசனைச் சபைச் சொற்பொழிவு'' என்ற கட்டுரையைப் பார்க்கவும்.

# இரண்டாவது உலக யுத்தத்தின் திருப்புமையம்*

(1942, அக்டோபர் 12)

ஸ்டாலின்கிராட் சமர் பிரித்தானிய அமெரிக்க பத்திரிகைகளால் வேர்டன் சமருடன் ஒப்பிடப்பட்டது. ''செவ்வேர்டன்'' இப்போது உலகப் பிரசித்தமானது. இந்த உவமை முற்றுகப் பொருத்தமானதல்ல. இன்றைய ஸ்டாலின்கிராட் சமர் முதலாவது உலக யுத்தத்து வேர்டன் சமரிலிருந்து இயல்பில் வேறுபட்டது. ஆனல், அவற்றுக்கு ஒரு ஒற்றுமை உள்ளது — முன்பு போலவே இப்போதும், ஜெர்மனியத் தாக்குதலில் ஏமாந்து மக்கள் பலர் ஜெர்மனியால் இன்னும் யுத்தத்தில் வெல்லமுடியும் என்று தவருக எண்ணுகின்றனர். முதலாவது உலக யுத்தம் 1918ம் ஆண்டுக் குளிர்காலத்தில் முடிவடைவதற்கு இரண்டு வருடங்களுக்கு முன், 1916ல் ஜெர்மனியப் படைகள் பிரெஞ்சுக் கோட்டையான வேர்டன் மீது பல தாக்குதல்கள் தொடுத்தன. வேர்டன் சமரில் ஜெர்மனியப் படைகளின் தளபதியாக இருந்தவர் ஜெர்மனியின் முடிக்குரிய இள

*இது யென்ஆன் ''விடுதலைத் தினசரி''க்காகத் தோழர் மாஓ சேதுங் அவர்களால் எழுதப்பட்ட தலையங்கம்.

வரசர்; சமர்புரிந்த படைகள் ஜெர்மனிய ராணுவத்தின் திற மைமிக்க பகுதி. இந்தச் சமர் தீர்க்கமான முக்கியத்துவம் வாய்ந்திருந்தது. கொடூரமான ஜெர்மனியத் தாக்குதல்கள் தோல்வி கண்டபின் ஜெர்மனிய-ஆஸ்திரிய-துருக்கிய-பல்கேரிய கும்பல் முழுவதற்குமே எதிர்காலமிருக்கவில்லை; அதுமுதல் அதற்குக் கஷ்டங்கள் கூடிக்கொண்டுபோயின; அது அதன் ஆதரவாளர்களால் கைவிடப்பட்டது; அது சீரழிந்தது; ஈற்றில் வீழ்ந்தது. ஆனால், அதே நேரத்தில், ஆங்கில-அமெரிக்க-பிரெஞ் சுக் கும்பல் ஜெர்மனிய ராணுவம் இன்னும் மிகப் பலம் வாய்ந் ததெனஎண்ணி இந்த நிலைமையைக் கிரகித்துக் கொள்ளவில்லை; அத்துடன் அவை தாம் வெற்றியை அணுகிச் செல்வதையும் அறியவில்லை. மனித வரலாற்றில் அழிவின் விளிம்பிலுள்ள எல்லாப் பிற்போக்குச் சக்திகளும் புரட்சிச் சக்திகளுக்கு எதிராக நிர்க்கதியான இறுதிப்போராட்டம் ஒன்றை நடத்துவது வழக் கம். ஆனல் புரட்சிவாதிகள் சிலர் தோற்றத்தளவில் பலமா கவும், உள்ளூரப் பலவீனமாகவும் இருக்கும் இந்தத் தோற்றப் பாட்டில் தற்காலிகமாக ஏமாந்து, எதிரி அழிவைக் கிட்டிவ ரும் அதேவேளையில், தாம் வெற்றியை நோக்கி முன்னேறும் உண்மையைக் காணத் தவறிவிடுகின்றனர். முழுப் பாஸிஸ சக் திகளின் தோற்றமும் அவை சில ஆண்டுகளாக நடத்திவந் துள்ள ஆக்கிரமிப்பு யுத்தமும் சரியாக இத்தகைய ஒரு நிர்க் கதியான இறுதிப் போராட்டத்தையே காட்டுகின்றன. தற் போதைய இந்த யுத்தத்தில் ஸ்டாலின்கிராட் மீதான தாக்கு தல் பாஸிஸத்தின் சொந்த நிர்க்கதியான இறுதிப் போராட்டத் தைக் காட்டுகிறது. இந்த வரலாற்றுத் திருப்புமையத்திலும் உலக பாஸிஸ-எதிர்ப்பு முன்னணியிலுள்ளோர் பலர் பாஸிஸத் தின் கொடிய தோற்றத்தால் ஏமாற்றப்பட்டு அதன் சாராம்

சத்தை உய்த்துணரத் தவறிவிட்டனர். முழு ஜெர்மனியப் படையும் டொன் ஆற்றுத் திருப்பத்தைக் கடந்து ஸ்டாலின் கிராட் மீதான முற்றுமுழுதான தாக்குதலை ஆரம்பித்த ஆகஸ்ட் 23ந் தேதி முதல், ஜெர்மனிய யுனிட்டுகள் சில இந்த நகரின் வடமேல் பகுதியிலிருந்த கைத்தொழிற் குறிச்சிக்குள் நுழைந்த செப்டம்பர் 15ந் தேதி ஊடாக அந்த குறிச்சியில் இருந்த ஜெர்மனியச் சுற்றிவளைப்பு அணியைச் செஞ்சேனை உடைத்து விட்டதென சோவியத் தகவல் பியூரோ தெரிவித்த அக்டோபர் 9ந் தேதி வரை மொத்தம் நாற்பத்தியெட்டு நாட்களாக மனிதகுல வரலாற்றில் ஈடிணையற்ற, வரலாறு காணாத ஒரு கசப்பான போராட்டம் நடந்தது. இறுதியில் இந்தச் சமரில் சோவியத் படைகள் வெற்றிபெற்றன. இந்த நாற்பத்தி யெட்டு நாட்களில் அந்த நகரிலிருந்து வந்த ஒவ்வொரு தோல் விச் செய்தியும் வெற்றிச் செய்தியும் பல்கோடி மக்களின் இதயங்களை ஈர்த்து, அவர்களுக்குச் சிலவேளை கவலையை ஏற் படுத்துவதும், சிலவேளை குதூகலத்தைத் தருவதுமாயிருந்தன. இந்தச் சமர் சோவியத்-ஜெர்மனியப் போரின் திருப்புமையம் மாத்திரமல்ல, தற்போதைய பாஸிஸ-எதிர்ப்பு உலக யுத்தத்தின் திருப்புமையம் மாத்திரமுமல்ல; இது முழு மனிதகுல வரலாற் றினதும் திருப்புமையமாகும். இந்த நாற்பத்தியெட்டு நாட் கள் முழுவதிலும் உலக மக்கள் கடந்த அக்டோபரில் மாஸ் கோவை அவதானித்ததைவிட இன்னும் அதிக கவனத்துடன் ஸ்டாலின்கிராட்டை அவதானித்தனர்.

மேற்கு முன்னணியில் வெற்றி பெறும்வரை ஹிட்லர் எச் சரிக்கையுடன் இருந்ததாகத் தெரிகிறது. போலந்தைத் தாக் கியபோதும், நார்வேயைத் தாக்கியபோதும், ஒல்லாந்து, பெல் ஜியம், பிரான்ஸ் ஆகியவற்றைத் தாக்கியபோதும், பால்கனைத்

தாக்கியபோதும் அவன் தன் முழுப் பலத்தையும் ஒரேநேரத்தில் ஒரு நோக்கத்தில் குவித்தான்; தன் கவனத்தைப் பல இடங்களில் செலுத்தத் துணியவில்லை. மேற்கு முன்னணியில் வெற்றி பெற்றபின் அவன் வெற்றி மமதை கொண்டு, சோவியத் யூனியனை மூன்று மாதங்களில் தோற்கடிக்க முயன்முன். இந்தப் பெரிய, சக்திவாய்ந்த சோஷலிஸ நாட்டின் மீது, வடக்கே மர்மான்ஸ்க் தொட்டு தெற்கே கிரிமியா வரை பரந்திருந்த முழு முன்னணியின் வழியாகவும் தாக்குதல் தொடுத்தான்; இவ்வாறு செய்கையில் அவன் தன் படைகளைப் பிரித்தான். கடந்த ஆண்டு அக்டோபரில் மாஸ்கோ போரியக்கத்தில் அவன் தோற்றது சோவியத்-ஜெர்மனிய யுத்தத்தின் முதலாவது கட்டத்தின் முடிவைக் காட்டியது; ஹிட்லரின் முதலாவது யுத்ததந்திரத் திட்டம் தோல்வியடைந்தது. கடந்த ஆண்டு செஞ்சேனை ஜெர்மனியத் தாக்குதலை நிறுத்தி, குளிர்காலத்தில் எல்லா முன்னணிகளிலும் ஒரு எதிர்த் தாக்குதலை நடத்தியது, இது சோவியத்-ஜெர்மனிய யுத்தத்தின் இரண்டாவது கட்டமாக அமைந்தது; இக்கட்டத்தில் ஹிட்லர் பின்வாங்குதலுக்கும் தற்காப்புக்கும் மாறினுன். இந்தக் காலகட்டத்தில், ஹிட்லர் தன் தலைமைத் தளபதி பிரூசிட்சைப் பதவி நீக்கஞ் செய்து, தானே அப்பதவியையேற்றபின், முற்றுமுழுதான தாக்குதல் திட்டத்தைக் கைவிடத் தீர்மானித்து, கிடைக்கக்கூடிய எல்லாச் சக்திகளையும் பெறுவதற்கு ஐரோப்பா முழுவதையும் அரித்தெடுத்து, தெற்கு முனைக்கு மட்டும் வரையறைப்பட்டதெனினும் சோவியத் யூனியனின் உயிர் நாடிகளைத் தாக்குமெனத் தான் கற்பனை செய்த ஒரு இறுதித் தாக்குதலுக்குத் தயார்செய்தான். அது பாஸிஸத்தின் தலைவிதியை நிர்ணயிக்கும் இயல்புடைய ஒரு இறுதித் தாக்குதலாய் இருந்ததால்,

ஹிட்லர் இயலுமானளவு மிகப் பெரும் படையை ஒன்றுகு வித்ததோடு, வட ஆபிரிக்கச் சமர்க்களத்திலிருந்த தனது விமானங்கள் டாங்கிகளில் ஒரு பகுதியைக்கூட இங்கு கொண்டு வந்தான். இந்த ஆண்டு மேயில் கொச்சியிலும் செவாஸ்தபோலிலும் நடந்த ஜெர்மனியத் தாக்குதலுடன் யுத்தம் மூன்ருவது கட்டத்திற்குள் பிரவேசித்தது. ஹிட்லர் தனது ஆகாய, டாங்கிப் படைகளின் பிரதான பகுதியின் ஆதரவுடன் கூடிய 1,500,000க்கு மேற்பட்டோரைக் கொண்ட ஒரு பெரும் படையைத் திரட்டி, ஸ்டாலின்கிராட்மீதும், காகஸஸ் மீதும் முன்பென்றுமில்லா மூர்க்கத்தனத்துடன் தாக்குதல் தொடுத்தான். அவன் வோல்காவைத் துண்டித்து, பாக்கூவைக் கைப்பற்றும் இரட்டை நோக்கத்திற்காக இவையிரண்டையும் கூடிய சீக்கிரத்தில் கைப்பற்ற முயன்ருன். அத்துடன், அதையடுத்து வடக்கே மாஸ்கோவைத் தாக்கவும், தெற்கே பாரசீக வளைகுடாவரை முன்னேறவும் எண்ணிஞன். அதே வேளையில், ஸ்டாலின்கிராடின் வீழ்ச்சிக்குப்பின் சைபிரியாவைத் தாக்கத் தயாராக மஞ்சூரியாவில் துருப்புக்களைத் திரட்டுமாறு ஜப்பானிய பாஸிஸ்டுகளுக்குக் கட்டளையிட்டான். மேற்கு முனையில் ஓர் ஆங்கில-அமெரிக்கத் தாக்குதலைச் சமாளிப்பதற்கும் சமீபக் கிழக்கின் வளங்களைப் பிடிக்கவும் ஜப்பானியர்களுடன் சந்திப்பை ஏற்படுத்திக் கொள்ளவும் ஜெர்மன் சேனையின் பிரதான படைகளைச் சோவியத் யுத்த அரங்கிலிருந்து விலக்கிக் கொண்டு செல்லத் தனக்கு இயலுமாகும் அளவிற்கே சோவியத் யூனியனைப் பலவீனப்படுத்திவிடலாமென ஹிட்லர் வீண் கனவு கண்டான்; அதே நேரத்தில் இது பிரதான ஜப்பானியப் படைகளையும் வடக்கிலிருந்து விலக்கி, பின்புறம் பந்தோபஸ்தாக இருக்க, மேற்கே சீனுவிற்கெதிராயும் தெற்கே பிரித்தானியா

விற்கும் அமெரிக்காவிற்கும் எதிராயும் நகர்த்தப்பட இடமளிக்கும். இவ்வாறு தான் ஹிட்லர் பாஸிஸ முகாமிற்கு வெற்றியீட்டக் கணக்கிட்டான். ஆனால் இந்தக் கட்டத்தில் விஷயங்கள் எப்படியாயின? ஹிட்லர் அவனது தலைவிதியைத் தீர்மானித்த சோவியத் தந்திரோபாயங்களுக்கு எதிரே வந்தான். சோவியத் யூனியன், முதலில் எதிரியை ஏமாற்றி உள்ளே ஆழமாக வரவிட்டுப் பின் ஒரு திடமான எதிர்ப்பைக் காண்பிப்பதான கொள்கையைக் கைக்கொண்டது. ஐந்து மாதகால யுத்தத்தில் ஜெர்மனியப் படை காகஸஸ் எண்ணெய் வயல்களுக்குள் ஊடுருவவோ, ஸ்டாலின்கிராட்டைக் கைப்பற்றவோ செய்யவில்லை. ஆகவே, ஹிட்லர் முன்னேறவும் முடியாமல் பின்வாங்கவும் முடியாமல், உயர்ந்த மலைகளுக்கு முன்னும் தகர்க்கப்படமுடியாத நகருக்கு வெளியேயும் தனது துருப்புக்களை நிறுத்தும்படியாக நிர்ப்பந்திக்கப்பட்டான்; அவன் பேரிழப்புகளுக்காளாகி, பெரும் நெருக்கடிக்குள் சிக்கிக்கொண்டான். அக்டோபர் வந்துவிட்டது; குளிர்காலம் நெருங்குகிறது; யுத்தத்தின் மூன்றாவது கட்டம் விரைவாக முடிந்து நான்காவது கட்டம் தொடங்கிவிடும். ஹிட்லரின் சோவியத் யூனியனைத் தாக்கும் யுத்ததந்திரத் திட்டமெதுவும் சரிவரவில்லை. இந்தக் காலகட்டத்தில், கடந்த ஆண்டு கோடை காலத்தில் தன் படைகளைப் பிரித்தபோது தான் பெற்ற தோல்வியை மனதிற்கொண்டு ஹிட்லர் தெற்கு முன்னணியில் தன் பலத்தை ஒன்றுகுவித்தான். ஆனால், அவன் இன்னும் ஒரே நேரத்தில் கிழக்கில் வோல்கா நதியைத் துண்டித்துத் தெற்கில் காகஸஸைக் கைப்பற்றும் இரட்டை நோக்கத்தை நிறைவேற்ற விரும்பியதால் அவன் மீண்டும் தன் படைகளைப் பிரித்தான். தனது பேராசைகளுக்குத் தன் பலம் போதாது என்று அவன்

உணர்ந்துகொள்ளவில்லை. இப்போது அவனுக்கு அழிவு கிட்டி விட்டது — ''காவு தடி இருமுனைகளிலும் கட்டப்படாவிட்டால் சுமைகள் விழுந்துவிடும்''. சோவியத் யூனியனைப் பொறுத் தவரை, அது எவ்வளவுக்குப் போரிடுகிறதோ, அவ்வளவுக்குப் பலமுடையதாகிறது. ஸ்டாலினின் மதிநுட்பம் வாய்ந்த யுத் ததந்திர வழிகாட்டல் முன்முயற்சியைப் பூரணமாகப் பெற்றுள் ளதோடு, எங்கும் ஹிட்லரை அழிவு நோக்கிக் கொண்டுமே செல்கிறது. இந்தக் குளிர்காலத்துடன் ஆரம்பமாகும் நான் காவது யுத்த கட்டம் ஹிட்லரின் நெருங்கிவரும் அழிவைக் குறிக்கும்.

முதலாவது யுத்தகட்டத்திலும் மூன்றாவது யுத்தகட்டத்தி லுமுள்ள ஹிட்லரின் நிலைகளை ஒப்பிடுமிடத்து, அவன் இறுதித் தோல்வியின் நுழைவாயிலில் நிற்கின்றான் என்பதை நாம் கண் டுகொள்ளலாம். ஸ்டாலின்கிராட், காகஸஸ் இரண்டிலுமே இப்போது செஞ்சேனை உண்மையில் ஜெர்மனியின் தாக்குதலை நிறுத்திவிட்டது. ஹிட்லர் இப்போது கிட்டத்தட்டக் களைப் படைந்துவிட்டான்; அவன் ஸ்டாலின்கிராட், காகஸஸ் மீது தொடுத்த தாக்குதல்களில் தோல்வியடைந்துவிட்டான். கடந்த ஆண்டு டிசம்பர் முதல் இந்த ஆண்டு மேவரையான குளிர் காலம் முழுவதும் அவனால் திரட்டிச் சேர்க்கமுடிந்த படைகள் ஏற்கெனவே உபயோகப்படுத்தப்பட்டுவிட்டன. ஒரு மாதத் திற்குக் குறைவான காலத்தில் சோவியத்-ஜெர்மனிய முன் னணியில் குளிர்காலம் தொடங்கிவிடும்; ஹிட்லர் விரைந்து தற்காப்பை மேற்கொள்ள வேண்டியிருக்கும். டொன் நதியின் மேற்குத் தெற்குப் படுக்கை முழுவதும் அவன் மிகவும் பாதிக் கப்படக்கூடிய பிரதேசம்; அங்கே செஞ்சேனை எதிர்த்தாக்கு தலுக்கு மாறும். இந்தக் குளிர்காலத்தில், எக்கணமும் நிக

ழுவிருக்கும் அழிவுகாரணமான பயத்தால் தூண்டப்பட்டு ஹிட்லர் தன் படைகளை மீண்டும் ஒருமுறை புனரொழுங்கு செய்வான். கிழக்கு மேற்கு முன்னணிகள் இரண்டிலுமுள்ள ஆபத்தைச் சமாளிக்க, அவன் ஒருவேளை தன் படைகளின் மிச்சசொச்சத்தையெல்லாம் பொறுக்கியெடுத்து ஒன்றுசேர்த்து, அவற்றை ஆயுதபாணியாக்கி, அவற்றை ஒரு சில புதிய டிவிஷன்களாய் அமைக்கக்கூடியதாய் இருக்கலாம்; அத்துடன், அவன் இத்தாலி, ருமேனியா, ஹங்கேரி ஆகிய தனது மூன்று பாஸிஸக் கூட்டாளிகளிடமும் உதவி கேட்டு, அவற்றிடமிருந்து இன்னும் கொஞ்சம் அதிகமான பீரங்கித் தீனிகளைப் பறித்தெடுப்பான். இருந்தும், அவன் கிழக்கில் குளிர்காலப் போரியக்கத்தின் பேரிழப்புகளை எதிர்நோக்க வேண்டியும் மேற்கில் இரண்டாவது முன்னணியைச் சமாளிக்கத் தயாராக இருக்கவேண்டியும் இருக்கும். இதே வேளையில், ஹிட்லரின் அனைத்தும் முடிந்துவிட்டதைக் கண்டு நம்பிக்கையீனத்திற்குள்ளாகும் இத்தாலியும் ருமேனியாவும் ஹங்கேரியும் மென்மேலும் அவனை விட்டகலும். சுருங்கக் கூறின், அக்டோபர் 9ந் தேதிக்குப் பின் ஹிட்லருக்கு ஒரேயொரு பாதைதான் திறந்திருக்கும்; அது அழிவுப் பாதையேயன்றி வேறெதுவுமல்ல.

செஞ்சேனை இந்த நாற்பத்தியெட்டு நாட்களில் ஸ்டாலின் கிராட்டைப் பாதுகாப்பது கடந்த ஆண்டு அது மாஸ்கோவைப் பாதுகாத்ததை ஓரளவு ஒத்துள்ளது. அதாவது, ஹிட்லரின் இந்த ஆண்டுத் திட்டம் அவனது கடந்த ஆண்டுத் திட்டம் போல் தோற்கடிக்கப்பட்டுவிட்டது. இருந்தும், வித்தியாசம் என்னவென்றால், சோவியத் மக்கள் மாஸ்கோவைப் பாதுகாப்பதைத் தொடர்ந்து குளிர்காலத் தாக்குதலொன்றை நடத்திய போதிலும், இந்த ஆண்டு ஜெர்மனி தொடுத்த கோடைகாலத்

தாக்குதலை எதிர்நோக்கவேண்டி இருந்தது. இதற்கு அரைவாசிக் காரணம், ஜெர்மனிக்கும் அதன் ஐரோப்பியக் கூட்டாளிகளுக்கும் அப்போதும் சிறிது திராணி மிஞ்சியிருந்ததும், அரைவாசிக் காரணம், பிரித்தானியாவும் அமெரிக்காவும் இரண்டாவது முன்னணியைத் திறந்துவைக்கத் தாமதித்ததுமாகும். ஆனால் இப்போது ஸ்டாலின்கிராட் பாதுகாப்புச் சமரைத் தொடர்ந்து நிலைமை கடந்த ஆண்டு நிலைமையிலிருந்து முற்றிலும் வேறுபடும். ஒருபுறம், சோவியத் யூனியன் பரந்த அளவில் இரண்டாவது குளிர்காலத் தாக்குதல் ஒன்றைத் தொடுக்கும்; பிரித்தானியாவும் அமெரிக்காவும் (குறிப்பிட்ட தேதியை முன்கூட்டியே சொல்ல முடியாதபோதிலும்) இரண்டாவது முன்னணியைத் திறந்துவைப்பதை இனிமேலும் தாமதிக்க முடியாதனவாகும்; ஐரோப்பிய மக்கள் அதை வரவேற்றெழத் தயாராவர். மறுபுறம், ஜெர்மனியும் அதன் ஐரோப்பியக் கூட்டாளிகளும் பெருமளவிலான தாக்குதல்கள் தொடுக்க இனிமேலும் ஆற்றலற்றவையாயிருக்கும்; கொள்கை மார்க்கம் முழுவதையும் யுத்ததந்திரத் தற்காப்பாக மாற்றுவதைத்தவிர ஹிட்லருக்கு வேறுவழி இருக்காது. ஹிட்லர் யுத்ததந்திரத் தற்காப்பிற்குச் செல்ல நிர்ப்பந்திக்கப்பட்டு விட்டானனல், பாஸிஸத்தின் தலைவிதி அவ்வளவுக்கு நிர்ணயிக்கப்பட்டுவிடும். தோற்றம்பெற்ற நாள் முதல், ஹிட்லரினுடையதைப் போன்ற ஒரு பாஸிஸ நாடு தனது அரசியல் ராணுவ வாழ்வைத் தாக்குதலைக் கொண்டே கட்டியமைக்கிறது; ஒருகால் அதன் தாக்குதல் நின்றுவிட்டால் அதன் வாழ்வுமே முடிந்துவிடுகிறது. ஸ்டாலின்கிராட் சமர் பாஸிஸத்தின் தாக்குதலை நிறுத்தும்; ஆகவே, அது ஒரு தீர்க்கமான சமராகிறது. இது முழு உலக யுத்தத்திற்கும் தீர்க்கமானது.

ஹிட்லர் சோவியத் யூனியன், பிரித்தானியாவும் அமெரிக்காவும், ஜெர்மனி கைப்பற்றிய பிரதேசங்களிலுள்ள மக்கள் ஆகிய மூன்று பலம்வாய்ந்த எதிரிகளை எதிர்ப்பட்டுள்ளான். கிழக்கு முன்னணியில், செஞ்சேனை ஒரு கற்பாறைபோல் உறுதியாக நிற்கிறது, அதன் எதிர்த்தாக்குதல் இரண்டாவது குளிர் காலம் முழுவதிலும் அதற்குப் பின்னரும் தொடரும்; இதுதான் முழுயுத்தத்தினதும் விளைவையும் மனிதகுலத்தின் தலைவிதியையும் நிர்ணயிக்கப் போகும் சக்தி. மேற்கு முன்னணியில், பிரித்தானியாவும் அமெரிக்காவும் வாளாபார்த்துக் கொண்டிருப்பதும், பின்போடுவதுமான தமது கொள்கையைத் தொடர்ந்து மேற்கொண்டாலும், செத்த புலியை அடிக்கும் காலம் வரும்போது, இரண்டாவது முன்னணி திறந்து வைக்கப்படும். அத்துடன், ஜெர்மனியிலும் பிரான்சிலும், ஐரோப்பாவின் இதர பாகங்களிலும் குமுறியெழுகின்ற மக்களின் பேரெழுச்சியாகிய உள் முன்னணியும் ஹிட்லருக்கெதிராக இருக்கிறது. சோவியத் யூனியன் ஒரு முற்றுமுழுதான எதிர்த்தாக்குதலைத் தொடுத்து, இரண்டாவது முன்னணியில் பீரங்கிகள் முழங்கும் அந்தக் கணமே அவர்கள் மூன்றுவது முன்னணியொன்றை அமைத்து அதை வரவேற்பர். இவ்வாறு, ஹிட்லர்மீது மூன்று முனையிலிருந்து தாக்குதல் வந்து குவியும் — இதுதான் ஸ்டாலின்கிராட் சமரை அடுத்து வரவிருக்கும் பெரும் வரலாற்றுப் போக்கு.

நெப்போலியனின் அரசியல் வாழ்க்கை வோட்டர்லூவில் முடிவடைந்தது; ஆனுல், தீர்க்கமான திருப்புமையம் அவன் மாஸ்கோவில் அடைந்த தோல்வி[1]யாகும். இன்று ஹிட்லர் நெப்போலியனின் பாதையைப் பின்பற்றுகிறுன்; ஸ்டாலின்கிராட் சமர்தான் அவனின் அழிவை நிர்ணயித்துள்ளது.

இந்நிலைமை தூரக்கிழக்கில் ஒரு நேரடிப் பாதிப்பொன்றை ஏற்படுத்தும். இனிவரும் ஆண்டு ஜப்பானியப் பாஸிஸத்திற்கும் நற்காலமாக இருக்கபோவதில்லை. அது சவக்குழிக்குள் இறங்கும்வரை, காலம் போகப் போக அதன் தலைவலிகூடும்.

உலக நிலைமை குறித்து நம்பிக்கையற்ற கருத்துக் கொண்டிருக்கும் அனைவரும் தம் கருத்தை மாற்றிக்கொள்ளவேண்டும்.

# குறிப்பு

*1. 1815ம் ஜூனில், நெப்போலியன் தென் பெல்ஜியத்திலான வோட்டர்லூவில் ஆங்கில-பிரஷ்யக் கூட்டுத் துருப்புக்களுடன் உக்கிரமான போரொன்றை நடத்தினன். அவன் இப்போரில் தோற்கடிக்கப்பட்டு, அத்லாந்திக் சமுத்திரத்தின் தெற்கிலுள்ள புனித ஹெலன்ஸுக்கு நாடுகடத்தப்பட்டான். 1821ல் அவன் அத்தீவில் இறந்தான். நெப்போலியன் தன் ஆட்சிக் காலத்தில் ஒரு முறை ஐரோப்பிய நாடுகள் பலவற்றைக் கைப்பற்றினன். ஆனல் 1812ல் ரஷியாவைத் தாக்கிய போரில் அவன் மாஸ்கோவில் கடும் தோல்வியடைந்தான். அவனது திறமைமிக்க படைகள் முழுவதும் நிர்மூலமாக்கப்பட்டன. இத்தோல்வியினல், அவன் போராற்றல் அனைத்தையும் இழந்து தன் அழிவை நோக்கிச் சென்ருன். மாஸ்கோவில் நெப்போலியன் அடைந்த தோல்வியைப் பற்றி, இந்நூலிலான ''நீண்டகால யுத்தம் பற்றி'' என்ற கட்டுரையிலுள்ள 28ம் குறிப்பைப் பார்க்கவும்.*

மமான சேனை கோமிந்தாங்கின் துருப்புக்களைப் (மத்திய கட்டுப் பாட்டிலுள்ளவற்றோடு ஸ்தலக் கட்டுப்பாட்டிலுள்ளவையான கோமிந்தாங் கூறுகளையும் சேர்த்துக் கணக்கிட்டால்) பார்க்கி லும் எண்ணிக்கையளவில் இன்னமும் மிகச் சிறியதாகவே இருந் தாலும் அது எதிர்த்துப்போரிடும் ஜப்பானிய, கைப்பொம் மைப் படைகளின் எண்ணிக்கையையும் அதன் போர்முனைகளின் விசாலத்தையும் கொண்டும், அதன் போர்த்திறனைக் கொண் டும், அது தன் நடவடிக்கைகளில் அனுபவிக்கும் பரந்த வெகு ஜன ஆதரவைக் கொண்டும், அதன் அரசியல் தரம், அக ஒருமைப்பாடு ஐக்கியம் ஆகியவற்றைக் கொண்டும் மதிப்பிடு கையில், அது ஏற்கனவே சீனாவின் ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தத் திலான பிரதான சக்தியாக ஆகியுள்ளது.

இந்தப் படை பலமுடையது. காரணம், இந்தப் படையைச் சேர்ந்தவர்கள் எல்லாரும் உணர்வுபூர்வமான கட்டுப்பாடு உடையவர்கள். அவர்கள் எல்லாரும் ஒருசில நபர்களின் அல்லது ஒரு குறுகிய கும்பலின் தனிநலன்களுக்காக அல்ல, பதிலுக்கு, பரந்துபட்ட மக்களின் நலன்களுக்காக, முழுத் தேசத்தின் நலன்களுக்காகவே ஒன்றுசேர்ந்து போரிடுகின்றனர். சீன மக்களின் பக்கத்தில் உறுதியாக நின்று, அவர்களுக்கு முழுமனதுடன் சேவை செய்வதே இந்தப் படையின் ஒரே நோக்கம்.

இந்த நோக்கத்தின் வழிகாட்டலில், இந்தப் படைக்கு வெற்றி கொள்ளப்பட முடியாத உணர்வு உண்டு. அது எல்லா எதிரிகளையும் தோற்கடிக்குமே தவிர ஒருபோதும் எதிரிக்கு அடிபணிய மாட்டாது. எவ்வித கஷ்டங்கள் தொல்லைகள் நேர்ந்தாலும் பரவாயில்லை; அதன் கடைசி ஒரு மனிதனும் போராடியே தீருவான்.

இந்த நோக்கத்தின் வழிகாட்டலில், இந்தப் படை, அதன் சொந்த அணிகளிலும், அதற்கு வெளியே உள்ள அணிகளுடனும் குறிப்பிடத்தக்க ஐக்கியத்தை உருவாக்கியுள்ளது. உள்ளே, அதிகாரிகளுக்கும் படையினருக்கும் இடையிலும், உயர் மட்டத்திற்கும் கீழ் மட்டத்திற்குமிடையிலும், ராணுவ வேலை, அரசியல் வேலை, பின்னணிச்சேவை இவற்றுக்கிடையிலும் ஐக்கியம் நிலவுகின்றது. வெளியே, ராணுவத்துக்கும் மக்களுக்கும் இடையிலும், ராணுவத்துக்கும் அரசாங்க நிறுவனங்களுக்கும் இடையிலும், நமது படைக்கும் நேசப்படைகளுக்கும் இடையிலும் ஐக்கியம் நிலவுகின்றது. இந்த ஐக்கியத்துக்கு ஊறுவிளைவிக்கும் எதையும் வெற்றி கொள்வது இன்றியமையாதது.

இந்த நோக்கத்தின் வழிகாட்டலில், இந்தப் படை எதிரி அதிகாரிகளையும் படையினர்களையும் தன் பக்கம் வென்றெடுப்பதற்கும் யுத்தக்கைதிகளைக் கையாள்வதற்குமான சரியான கொள்கையொன்றைக் கொண்டுள்ளது. சரணுகதியடைகின்ற, அல்லது எம் பக்கம் சேருகின்ற, அல்லது ஆயுதங்களைக் கீழே போட்ட பின்னர் பொது எதிரிக்கு எதிராகப் போரிட விரும்புகின்ற எதிரிப் படைகளின் அங்கத்தினர்கள் அனைவரும் விதிவிலக்கின்றி வரவேற்கவும் தகுந்த போதனை தரவும் படுகின்றனர். எந்த யுத்தக்கைதியையும் கொல்வதோ, துன்புறுத்துவதோ, அவமதிப்பதோ தடைசெய்யப்பட்டுள்ளது.

இந்த நோக்கத்தின் வழிகாட்டலில், இந்தப் படை மக்கள் யுத்தத்திற்கு அத்தியாவசியமான யுத்ததந்திர தந்திரோபாய முறையொன்றை உருவாக்கியுள்ளது. இது மாறுகின்ற திட்டவட்டமான சூழ்நிலைகளின் பிரகாரம் வளைந்து கொடுக்கும்

கொரில்லா யுத்தம் நடத்துவதில் திறமையுடையதும், நட மாட்ட யுத்தத்தில் திறமையுடையதும் ஆகும்.

இந்த நோக்கத்தின் வழிகாட்டலில், இந்தப் படை மக்கள் யுத்தத்திற்கு அத்தியாவசியமான அரசியல் வேலைமுறையொன் றை உருவாக்கியுள்ளது. தன் சொந்த அணிகளில் ஐக்கியத் தையும் நேசப்படைகளுடன் ஐக்கியத்தையும் மக்களுடன் ஐக் கியத்தையும் முன்னேற்றுவதற்கும் எதிரிப் படைகளைச் சீர் குலைப்பதற்கும் போரில் வெற்றியை உறுதிப்படுத்துவதற்கும் பாடுபடுவது அதன் பணியாகும்.

இந்த நோக்கத்தின் வழிகாட்டலில், இந்தப் படை முழுவ தும் கொரில்லா யுத்தச் சூழ்நிலைகளின் கீழ், பின்வருமாறு செய்யவல்லதாயும் அவ்வாறு செய்து கொண்டிருந்தும் உள் ளது: போர்களுக்கு இடையிலும் பயிற்சிக் காலகட்டங்களுக்கு இடையிலுமான காலங்களைத் தானியமும் பிற அன்றாட அவ சியப் பொருட்களும் உற்பத்தி செய்வதற்கு உபயோகித்து, அவ்வாறாக, பொருளாதாரக் கஷ்டங்கள் கடக்கவும் சேனையின் வாழ்க்கை நிலைமைகள் சிறப்பாக்கவும் மக்கள்மீதான சுமை எளிதாக்கவும் படும் வகையில், முற்றாகவோ பாதியளவிற்கோ அல்லது குறைந்த பட்சம் ஓரளவிற்கோ சுயதேவையைப் பூர்த் திசெய்து கொள்வதாக ஆகியும் உள்ளது. பல்வேறு ராணு வத் தளப்பிரதேசங்களில் சிறு அளவிலான ஆயுதச் சாலைகள் பலவற்றை நிறுவ ஒவ்வொரு சாத்தியக்கூறும் பயன்படுத்தப் பட்டுள்ளது.

மேலும் இந்தப் படை பலமுடையதாய் இருப்பதற்குக் கார ணம் இதனுடன் இசைவாகப் போரிடுகின்ற, விசாலமான ஆயு தந்தாங்கிய வெகுஜன ஸ்தாபனங்களாக விளங்கும் மக்கள் தற்காப்புப் படைகளும் குடிப்படைகளும் இருப்பதாகும். சீன

வின் விடுதலைப் பிரதேசங்களில் இளம் வயது முதல் நடுத்தர வயது வரையான ஆண்கள் பெண்கள் எல்லாரும் சுயவிருப்பத்தின் அடிப்படையிலும் ஜனநாயக அடிப்படையிலும் உற்பத்தியிலிருந்து விலகாத முறையிலும் ஜப்பானிய-எதிர்ப்பு மக்கள் தற்காப்புப் படைகளில் அணிதிரட்டப்பட்டிருக்கின்றனர். தற்காப்புப் படைகளிலுள்ள தலைசிறந்தவர்களுள், ஆயுதப்படையிலும் கொரில்லாப் பிரிவுகளிலும் சேர்பவர்களைத் தவிர எல்லாரும் குடிப்படையிற் சேர்க்கப்பட்டிருக்கின்றனர். பொதுமக்களின் இந்த ஆயுதச் சக்திகளின் ஒத்துழைப்பு இல்லாவிட்டால் எதிரியைத் தோற்கடிப்பது சாத்தியமாகாது.

இறுதியாக, இந்தப் படை பலமுடையதாய் இருப்பதற்குக் காரணம் இது பிரதான படைகள், ஸ்தலப் படைகள் என்று இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருப்பதாகும். இவற்றில் முன்னது தேவையான போதெல்லாம் எல்லா இடங்களுக்கும் சென்று தன் போர்க் கடமையைச் செய்கின்றது. பின்னதன் கடமை குடிப்படையுடனும் தற்காப்புப் படைகளுடனும் ஒத்துழைத்து, தமது சொந்த இடங்களைப் பாதுகாத்து அங்குள்ள எதிரிகளைத் தாக்குவதாகும். இந்த உழைப்புப் பங்கீடு மக்களின் மனமார்ந்த ஆதரவைப் பெற்றுள்ளது. இத்தகைய சரியான உழைப்புப் பங்கீடு இல்லாவிட்டால், உதாரணமாக பிரதான படைகளின் பாத்திரத்தில் மாத்திரம் கவனம் செலுத்தி ஸ்தலப் படைகளின் பாத்திரத்தை அலட்சியம் செய்தால் சீனாவின் விடுதலைப் பிரதேசங்களின் நிலைமையில் எதிரியை வெற்றிகொள்வதுகூடச் சாத்தியமாகாது. ஸ்தலப் படைகளின் கீழ் ஆயுதந்தாங்கிய வேலைக் குழுக்கள் பல ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. அவை நல்ல பயிற்சி பெற்றவையும் ராணுவ விவகாரங்கள், அரசியல், வெகுஜன வேலை ஆகியவற்றிற்கு மேலும்

தகுதி பெற்றவையுமாக உள்ளன. அவை எதிரி வரிசைகளின் மிகப் பின்னணியிலுள்ள பிரதேசங்களுக்குள் ஊடுருவி, எதிரியைத் தாக்கி, ஜப்பானிய-எதிர்ப்புப் போராட்டத்துக்கு மக்களைத் தட்டியெழுப்புகின்றன. இவ்வாறு பல்வேறு விடுதலைப் பிரதேசங்களின் நேரடி முனைப் போர் நடவடிக்கைகளுக்கு ஆதரவளித்து, இவற்றிற் பெரும் சாதனைகளையும் ஈட்டியுள்ளன.

சீனாவின் விடுதலைப் பிரதேசங்களில் ஜப்பானிய-எதிர்ப்பு மக்கள் அனைவரும், அவர்களின் ஜனநாயக அரசாங்கங்களின் தலைமையின்கீழ், ஆயுதப் படைகளுக்கு ஆதரவாகப் பல்வேறு பணிகளை முழு மனதுடன் செய்பவையான தொழிலாளர், விவசாயிகள், வாலிபர், மாதர் ஸ்தாபனங்களிலும் கலாச்சார, தொழிற்துறை ஸ்தாபனங்களிலும் இன்னும் இதர ஸ்தாபனங்களிலும் சேரும்படி அழைக்கப்படுகின்றனர். இந்தப் பணிகள் சேனையிற் சேர மக்களைத் திரட்டுவதோடும், சேனைக்குத் தானியம் கொண்டு செல்வதோடும், ஜப்பானிய-எதிர்ப்புப் படை வீரர்களின் குடும்பங்களைச் சலுகையுடன் நடத்துவதோடும், துருப்புக்களுக்கு அவற்றின் லெளகீகக் கஷ்டங்களைச் சமாளித்துக் கொள்வதில் உதவிசெய்வதோடும் மட்டும் வரைப்பட்டவையல்ல. கொரில்லாக் கூறுகள், குடிப்படைகள், தற்காப்புப் படைகள் ஆகியவற்றை எதிரிக்கெதிராகப் பரவலான எதிர் பாராத் தாக்குதல்கள் நடத்தவும், நிலத்திற் புதை குண்டுகள் தாழ்க்கவும், எதிரியைப் பற்றித் தகவல் சேகரிக்கவும், துரோகிகளையும் ஒற்றர்களையும் தேடிப் பிடிக்கவும், காயமுற்றோரை எடுத்துச் செல்லவும் பாதுகாக்கவும், சேனையின் நடவடிக்கைகளில் நேரடிப் பங்குகொள்ளவும் அணிதிரட்டுதலையும் இவை உள்ளடக்குகின்றன. அதே நேரத்தில், விடுதலைப் பிரதேசங்கள் முழுவதிலுமுள்ள மக்கள் உற்சாகத்துடன் பல்வேறு

வகையான அரசியல், பொருளாதார, கலாச்சார, சுகாதார வேலைகளை மேற்கொள்கின்றனர். இது சம்பந்தமான மிக முக்கியமான காரியம் தானியத்தினதும் பிற அன்றாட அவசியப் பொருட்களினதும் உற்பத்திக்கு மக்கள் அனைவரையும் அணி திரட்டுவதும், விசேஷ காரணமுள்ளவை நீங்கலாக, எல்லா அரசாங்க நிறுவனங்களும் பாடசாலைகளும், மக்களினதும் சேனையினதும் சுயதேவைப் பூர்த்தி உற்பத்தி இயக்கங்களுக்கு அனுசரணையாகத் தம் சொந்தத் தேவைக்கு உற்பத்தி செய்வதற்குத் தம் ஓய்வு நேரத்தை அர்ப்பணிப்பதை உறுதிப்படுத்துவதும், அவ்வாறாக நீண்ட ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தத்தை நிலையாக நடத்த, பெரும் உற்பத்திப் பேரெழுச்சியொன்றை ஏற்படுத்த உதவுவதுமாகும். சீனாவின் விடுதலைப் பிரதேசங்களில் எதிரி பெரும் விநாசம் விளைவித்துள்ளான்; வெள்ளங்களும் வரட்சிகளும், பூச்சிகளாலும் பிற தொல்லை தரும் பிராணிகளாலும் ஏற்படும் சேதங்களும் அடிக்கடி ஏற்பட்டுள்ளன. இருப்பினும், அங்குள்ள ஜனநாயக அரசாங்கங்கள் மக்கள் அனைவரையும் வழிநடத்தி, ஸ்தாபன ரீதியான முறையில் இக் கஷ்டங்களைக் கடந்திருந்தன, கடந்துகொண்டிருக்கின்றன. தொல்லை தரும் பிராணிகளை ஒழிப்பதற்கும் வெள்ளக் கட்டுப் பாட்டுக்கும் உற்பாத நிவாரணத்திற்குமான பெரும் வெகுஜன இயக்கங்களால் முன்னென்றுமில்லாத பயன்களும் ஈட்டப்பெற்று, அவ்வாறாக நீண்ட ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தத்தில் விடாப்பிடியாக இருப்பது சாத்தியமாக்கப்பட்டுள்ளது. ஒரு வார்த்தையிற் கூறினால், அனைத்தும் முனைக்காக, அனைத்தும் ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களைத் தோற்கடிப்பதற்கும் சீன மக்களின் விடுதலைக்குமாக — இதுவே சீனாவின் விடுதலைப்

பிரதேசங்களிலுள்ள முழுச் சேனைக்கும் முழு மக்களுக்குமான பொதுக் கோஷம், பொதுக் கொள்கை.

இத்தகையதே ஒருண்மையான மக்கள் யுத்தம். இத்தகைய மக்கள் யுத்தமொன்றை நடத்துவதால் மட்டுமே நாம் தேசிய எதிரியைத் தோற்கடிக்க முடியும். கோமிந்தாங் தோல்வி கண்டுள்ளதற்குக் காரணம் அது மக்கள் யுத்தத்தை முழு மூச்சாக எதிர்த்ததே.

சீனுவின் விடுதலைப் பிரதேசங்களின் சேனை ஒருகால் நவீன ஆயுத சாதனங்கள் பெற்றதும் அது இன்னும் அதிக சக்திமிக்கதாகும், இறுதியில் ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களைத் தோற்கடிக்க வல்லதாயிருக்கும்.

## மக்கள் படை

மக்களின் பக்கம் நிற்கும் படையொன்றில்லாமல் சீன மக்கள் விடுதலையையும் ஐக்கியப்பாட்டையும் அடைவதும் கூட்டு அரசாங்கமொன்றை நிறுவுவதும் ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களை முற்றுகத் தோற்கடிப்பதும் புதிய சீனு ஒன்றைக் கட்டியெழுப்புவதும் அசாத்தியம். தற்போது முற்றுக மக்களின் பக்கம் நிற்கும் ஆயுதப்படைகள் மிகப் பெரியவையல்லாத, விடுதலைப் பிரதேசங்களின் எட்டாவது மார்க்க ராணுவமும் புதிய நான்காவது சேனையும் மட்டுமே; இவை மிகப் போதாது. இருப்பினும், மக்களை எதிர்க்கும் கோமிந்தாங் கும்பல் விடுதலைப் பிரதேசங்களின் சேனைகளை வேரறுக்கவும் அழிக்கவும் ஒய்வொழிவின்றி சதிசெய்த வண்ணம் இருக்கிறது. 1944ல் கோமிந்தாங் அரசாங்கம், கம்யூனிஸ்ட் கட்சி ''குறிப்பிட்ட

ஒரு கால எல்லைக்குள்ளாக'' விடுதலைப் பிரதேசங்களின் ஆயுதப் படைகளில் ஐந்தில் நான்கு பங்கைக் ''கலைத்து'' விட வேண்டுமெனக் கோரி ''ஞாபகக் குறிப்பு'' எனப்பட்ட ஒன்றை முன்வைத்தது. 1945ல் மிக அண்மைக் காலத்திய பேச்சு வார்த்தைகளின்போது அது கம்யூனிஸ்ட் கட்சி விடுதலைப் பிரதேசங்களின் ஆயுதப் படைகள் எல்லாவற்றையும் கையளித்துவிட வேண்டுமென மேலும் கோரி, அதன் பின் தான் கம்யூனிஸ்ட் கட்சிக்குச் ''சட்டரீதியான அந்தஸ்து'' அளிக்கும் என்றது.

இந்த ஆட்கள் கம்யூனிஸ்டுகளைப் பார்த்து, ''உங்கள் துருப்புக்களை கையளித்துவிடுங்கள், நாங்கள் உங்களுக்குச் சுதந்திரமளிக்கிறோம்'' என்கின்றனர். அவர்களின் தத்துவப்பிரகாரம் சேனையெதையும் கொண்டதல்லாத அரசியல் கட்சியொன்று தான் சுதந்திரத்தை அனுபவிக்க முடியும். இருப்பினும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி 1924-27ல் அது ஒரு சிறு ஆயுதப் படையை மட்டுமே கொண்டிருந்தபோது அனுபவித்த சொற்ப சுதந்திரமும் கோமிந்தாங் அரசாங்கத்தின் ''கட்சி சுத்திகரிப்பு'', படுகொலைக் கொள்கைகளோடு காற்றோடு பறந்தது. இன்றும் ஆயுதப் படைகள் எதுவுமில்லாத சீன ஜனநாயக நேச அணிக்கும் கோமிந்தாஙிற்குள்ளேயான ஜனநாயகவாதிகளுக்கும் எந்தச் சுதந்திரமுமில்லை. கோமிந்தாங் ஆட்சியின் கீழுள்ள தொழிலாளர்களையும் விவசாயிகளையும் மாணவர்களையும் கலாச்சார, கல்வி, கைத்தொழில் வட்டாரங்களைச் சேர்ந்த முற்போக்கு நாட்டங்கொண்டவர்களையும் எடுத்துக்கொள்வோம் — கடந்த பதினெட்டு ஆண்டுகளாக இவர்களிலெவரிடமும் ஆயுதப் படைகளெதுவும் இருந்ததில்லை, சுதந்திரமெதுவும் இருந்ததுமில்லை. மேற்சொன்ன ஜனநாயகக் கட்சிகளும் மக்களு

மெல்லாம் சேனைகளை அணிதிரட்டி, ''நிலப்பிரபுத்துவப் பிரிவினை ஆட்சி'' நடத்தி, ''தேசத் துரோகப் பகுதிக''ளைச் சிருஷ்டித்து, ''அரசாங்க, ராணுவ உத்தரவுகளை'' மீறியதால்தான் இவர்களுக்குச் சுதந்திரம் மறுக்கப்பட்டுள்ளதாயிருக்குமோ? இல்லவே இல்லை. அதற்கு மாருக, அவர்கள் இக்காரியங்களில் எதையுமே செய்யாததால்தான் அவர்கள் சுதந்திரம் மறுக்கப் பட்டுள்ளனர்.

''சேனை அரசுக்குச் சொந்தம்'' — அது நிரம்ப உண்மை. ஒரு அரசுக்குச் சொந்தமல்லாத சேனையெதுவும் உலகிற் கிடையாது. ஆனுல் எந்தவிதமான அரசு? பெரிய நிலப்பிரபுக்களினதும் பெரிய வங்கி முதலாளிகளினதும் பெரிய தரகு முதலாளிகளினதும் நிலப்பிரபுத்துவ, பாஸிஸ சர்வாதிகாரத்தின் கீழான அரசா, அல்லது பரந்த வெகுஜனங்களின் ஒரு புதிய ஜனநாயக அரசா? சீனு ஸ்தாபிக்க வேண்டிய ஒரே ரகமான அரசு — புதிய ஜனநாயக அரசே; இந்த அடிப்படையில் அது ஒரு புதிய ஜனநாயகக் கூட்டு அரசாங்கத்தை ஸ்தாபிக்க வேண்டும்; சீனுவின் ஆயுதப் படைகள் எல்லாம், அவை மக்களின் சுதந்திரத்தைப் பாதுகாக்கவும் அந்நிய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராகப் பயனுள்ள விதமாகப் போரிடவும் கூடியதாக இத்தகைய ஒரு அரசின் இத்தகைய ஒரு அரசாங்கத்திற்குச் சொந்தமாக இருக்க வேண்டும். சீனுவில் புதிய ஜனநாயகக் கூட்டு அரசாங்கமொன்று உருவாகின்ற கணமே சீனுவின் விடுதலைப் பிரதேசங்கள் தம் ஆயுதப் படைகளை அதனிடம் கையளித்துவிடும். ஆனுல் கோமிந்தாங் ஆயுதப் படைகளுமெல்லாம் அதே சமயத்தில் அதனிடம் கையளிக்கப்பட வேண்டியிருக்கும்.

1924ல் டாக்டர் சுன் யட்-சன், ''இன்றைய தினம் தேசியப் புரட்சியில் ஒரு புதிய சகாப்தத்தின் ஆரம்பத்தைக்

குறிப்பதாக இருக்க வேண்டும். . . . முதல் நடவடிக்கை ஆயுதப் படைகளை மக்களுடன் ஐக்கியப்படுத்துவது, அடுத்த நடவடிக்கை அவற்றை மக்களின் ஆயுதப் படைகளாக மாற்றுவது''[2] எனக் கூறினர். எட்டாவது மார்க்க ராணுவமும் புதிய நான்காவது சேனையும் இந்தக் கொள்கையைப் பிரயோகித்துள்ளதனுல்தான் அவை ''மக்களின் ஆயுதப் படைகளாக'', அதாவது, மக்கள் சேனையாக ஆகியும் வெற்றிகளை ஈட்ட வல்லவையாக இருந்தும் உள்ளன. வடக்குப் படையெடுப்பின் முந்திய காலகட்டத்தில் கோமிந்தாங் சேனைகள் டாக்டர் சுன்னின் ''முதல் நடவடிக்கை''யை எடுத்தன; எனவே வெற்றிகளை ஈட்டின. வடக்குப் படையெடுப்பின் பிந்திய காலகட்டத்திலிருந்து இதுநாள்வரை அவை ''முதல் நடவடிக்கை''யைக் கூடக் கைவிட்டு, மக்களுக்கு எதிரான ஒரு நிலையை எடுத்தன; ஆகவே அந்தச் சமயத்திலிருந்து இதுநாள்வரை வர வர ஊழல் மலிந்தும் நலிவடைந்தும் வந்துள்ளன; உள் நாட்டு யுத்தம் செய்யும்போது நீரில் மீன்கள் போன்றிருக்கும் அவற்றுல் வெளிப்போர் செய்வதென்று ஏற்பட்டாலோ தரையில் விடப்பட்ட மீன்களின் நிலையில்தான் இருக்க முடிகிறது. கோமிந்தாங் சேனையிலுள்ள மனச்சாட்சியுடைய, தேசபக்தி கொண்ட அதிகாரிகள் ஒவ்வொருவரும் டாக்டர் சுன் யட்-சன் உணர்வுக்குப் புத்துயிர் அளிப்பதிலும் தன் துருப்புக்களை மாற்றுவதிலும் ஈடுபட வேண்டும்.

பழைய படைகளை மாற்றும் வேலையில், புனர் போதமூட்டப்படக்கூடியவர்களான எல்லா அதிகாரிகளுக்கும், அவர்கள் மக்கள் படையில் இருந்து தொடர்ந்து சேவைசெய்யக் கூடியதாகத் தங்கள் காலாவதியான கண்ணோட்டத்தை விட்டொ

துக்கிச் சரியான கண்ணேட்டமொன்றை அடைய அவர்களுக்கு உதவி செய்யத் தகுந்த போதனை தரப்பட வேண்டும்.

சீன மக்கள் படையின் சிருஷ்டிப்பிற்காகப் போராடுவது நாட்டு மக்கள் அனைவரினதும் கடமை. மக்கள் படை ஒன்று இல்லாவிட்டால், மக்களுக்கு ஒன்றுமே இல்லை. இந்தப் பிரச்சினையில் எந்தவித வெற்றுத் தத்துவ விசாரமுமே இருக்கக் கூடாது.

கம்யூனிஸ்டுகளாகிய நாம் சீனச் சேனையை மாற்றும் பணிக்கு எம் ஆதரவைத் தர விரும்புகின்றோம். சீனவின் விடுதலைப் பிரதேசங்களை எதிர்ப்பதற்குப் பதிலாக மக்களுடன் ஐக்கிய முறவும் ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களை எதிர்க்கவும் மனமுள்ள ராணுவப் படைகளைப் பொறுத்தவரை, எட்டாவது மார்க்க ராணுவமும் புதிய நான்காவது சேனையும் அவற்றை எல்லாம் நேசப் படைகளாகக் கருதி தகுந்த உதவி தரவேண்டும்.

## குறிப்புகள்

1. ''இக்காலகட்டம்'' 1937 ஜூலை 7ந் திகதி ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தத்தின் ஆரம்பத்திலிருந்து 1938 அக்டோபரில் வூஹன் வீழ்ந்தது வரையான ஒரு காலகட்டத்தைக் குறிக்கிறது. (மொழிபெயர்ப்பாளர் குறிப்பு)

2. சுன் யட்-சன் 1924 நவம்பர் 10ந் திகதியிட்ட ''வட புறப்பாடு பற்றிய அறிக்கை''யிலிருந்து எடுக்கப்பட்டது.

# ராணுவத்தில் சுயதேவைக்கான உற்பத்தி பற்றியும், மாபெரும் சீர்செய் இயக்கம் உற்பத்தி இயக்கம் இவற்றின் முக்கியத்துவம் பற்றியும்*

**(1945, ஏப்ரல் 27)**

எமது ராணுவம் மிக மோசமான பொருளாயதக் கஷ்டங்களை நோக்குவதும், அது பிரிந்துபட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பதுமான தற்போதைய நிலைமையில், ராணுவத்திற்கு வேண்டிய பொருட்களைச் சப்ளைசெய்யும் முழுப் பொறுப்பையும் உயர்மட்டங்களிலுள்ள தலைமை உறுப்புக்கள் ஏற்றுக்கொள்வது சிறிதும் அனுமதிக்கப்பட முடியாதது. காரணம், இப்படிச் செய்வது கீழ்மட்டங்களிலுள்ள பெருந்தொகையான அதிகாரிகள் போர்வீரர்களின் முன்முயற்சியைத் தடைசெய்யவும் அவர்களது தேவைகளைப் பூர்த்திசெய்யத் தவறவும் செய்யும். ''தோழர்களே! நாமனைவரும் செயலில் ஈடுபட்டு எமது கஷ்டங்களைச் சமாளிப்போம்'' என்று நாம் சொல்ல வேண்

*இது யென்ஆன் ''விடுதலைத் தினசரி''க்காகத் தோழர் மாஓ சேதுங் அவர்களால் எழுதப்பட்ட ஒரு தலையங்கம்.

டும். உயர்மட்டங்களிலுள்ள தலைமை கடமைகளை நன்கு அமைத்து, கீழ்மட்டங்களை அவற்றின் முயற்சி மூலம் கஷ்டங்களைச் சமாளிக்கச் சுதந்திரமாக விட்டாற்தான் பிரச்சினை தீரும்; உண்மையில், மேலும் திருப்திகரமான முறையில் தீரும். ஆனால், அதற்குப்பதில், உயர்மட்டங்கள் தம்மால் உண்மையில் சுமக்கக்கூடியதற்கதிகமான சுமைக்குத் தோள்கொடுத்து, கீழ் மட்டங்களைச் சுதந்திரமாகச் செயற்பட விடத் துணியாவிடினும், பரந்துபட்ட வெகுஜனங்கள் மத்தியில் சுயசார்புக்கான ஆர்வத்தைத் தூண்டாவிடினும், உயர்மட்டங்கள் எவ்வளவுதான் முயற்சியெடுத்தாலும், விளைவு, உயர்மட்டங்களும் கீழ் மட்டங்களும் கஷ்டங்களுக்குள்ளாகியிருப்பதாகவும், தற்போதுள்ள நிலைமையில் பிரச்சினை ஒரு போதும் தீர்க்கப்படாததாகவுமே இருக்கும். கடந்த சில ஆண்டுகால அனுபவம் இதைப் போதுமானளவு நிரூபித்துள்ளது. ''ஒருமைப்பட்ட தலைமையும், பன்முக நிர்வாகமும்'' என்ற கோட்பாடே எமது விடுதலைப் பிரதேசங்களில் தற்போதைய நிலைமைகளில் பொருளாதார வாழ்க்கை சம்பந்தப்பட்ட அனைத்தையும் ஒழுங்குசெய்வதற்கான சரியான ஒன்று என்பது நிரூபணமாகியுள்ளது.

விடுதலைப் பிரதேசங்களிலுள்ள ஆயுதப் படைகளில் ஏற்கெனவே மொத்தம் 900,000க்கு மேற்பட்டோருளர். ஜப்பானிய ஆக்கிரமிப்பாளரைத் தோற்கடிப்பதற்கு நாம் இந்தத் தொகையை மேலும் பலமடங்கு அதிகரிக்கச் செய்ய வேண்டும். ஆனால், நாம் இதுவரை வெளியிலிருந்து எதுவித உதவியும் பெறவில்லை. எதிர்காலத்தில் நாம் அதைப் பெற்றாலும் எமது வாழ்க்கைக்கானவற்றை நாமே பூர்த்திசெய்து கொள்ள வேண்டும். அதைப் பொறுத்தவரை, எந்தவிதமான பிரமைகளும் இருக்கக் கூடாது. அண்மிய எதிர்காலத்தில், நாம் பிரிந்து

பட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் படை வியூகங்களில் தேவையான தொகையை அவை இருக்கும் பிரதேசங்களிலிருந்து எடுத்து, குறிப்பிட்ட எதிரி இலக்குகளின்மீதான தாக்குதலுக்காக அவற்றை ஒன்றுகுவிக்க வேண்டும். ஒன்றுசெறிந்த செயலுக்கான இத்தகைய பெரும் படை வியூகங்கள் சுயதேவைக்காக உற்பத்தியில் ஈடுபடமுடியாது; மேலும், அவற்றிற்குப் பின்னணியிலிருந்து பெருந்தொகையான சப்ளைகள் தேவைப்படும். எஞ்சியிருக்கும் ஸ்தலத் துருப்புக்களும் பிரதேசப் படை வியூகங்களுந்தான் (அவை கணிசமானளவு தொகையினவாய் இருக்கும்) முன்பு போலப் போரிடவும் உற்பத்தியில் ஈடுபடவும் கூடியனவாயிருக்கும். நிலைமை இப்படி இருப்பதால், போரிடுவதற்கும் பயிற்சிக்கும் முட்டுக்கட்டையாக இராதவரையில் ஒன்று பாக்கியின்றி எல்லாத் துருப்புக்களும் உற்பத்தி மூலம் ஓரளவு சுயதேவைப் பூர்த்திசெய்து கொள்ளக் கற்க இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த வேண்டும் என்பதில் ஏதாவது ஐயத்திற்கு இடமுண்டா?

எமது நிலைமைகளில், சுயதேவைக்கான ராணுவ உற்பத்தி, அது வடிவத்தில் பின்தங்கியதாகவோ, பின்னடைவதாகவோ இருந்தாலும், சாராம்சத்தில் முற்போக்கானதும், பெரும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததும் ஆகும். மேலோட்டமாகக் கூறின், நாம் உழைப்புப் பிரிவினைக் கோட்பாட்டை மீறுகிறோம். இருப்பினும், எமது நிலைமைகளில்—நாட்டின் வறுமை, ஐக்கியமின்மை (இவை எல்லாம் கோமிந்தாங்கின் பிரதான ஆளும் கும்பலின் குற்றங்களிலிருந்து தோன்றின) ஆகியவற்றின் மத்தியிலும், நீண்டகால, பிரிந்துபட்ட மக்கள் கொரில்லா யுத்த நிலைமையிலும்—நாம் இப்படி செய்வது முற்போக்கானது. பாருங்கள், கோமிந்தாங் படையினர்கள் எவ்வளவு

வெளிறியும் இளைத்தும் இருக்கிறார்கள்; எமது விடுதலைப் பிர தேசப் படையினர்கள் எவ்வளவு கட்டுமஸ்தானவராகவும் பலம் வாய்ந்தவராகவும் இருக்கின்றனர்! பாருங்கள், சுயதேவைக் கான உற்பத்தி ஆரம்பிக்க முன் எமக்கு எவ்வளவு கஷ்டங்கள் இருந்தன; அது ஆரம்பித்தது முதல் நாம் எவ்வளவு நன்னி லையில் இருக்கிறோம்! இங்கே நாம் இரண்டு ராணுவ யுனிட்டு களை, இரண்டு கொம்பனிகள் என்று வைப்போம்: அவற்றைப் பின்வரும் இரண்டு வழிமுறைகளில் ஒன்றை, அதாவது, அவற் றின் வாழ்க்கைக்குத் தேவையான அனைத்தையும் உயர்மட் டங்கள் விநியோகித்தல், அல்லது அவற்றிற்கு உயர்மட்டங் கள் எதுவுங்கொடுக்காமல் அல்லது சிறிதளவு கொடுத்து, அவற் றை அவற்றுக்கு தேவையான அனைத்தையுமோ பெரும் பகுதி யையோ, அரைவாசியையோ, அரைவாசியிற் குறைவானதை யோகூடத் தாருக உற்பத்தி செய்யச் சொல்வதில் ஒன்றைத் தேர்ந்தெடுக்கும்படி சொல்வோம். எந்த முறை சிறந்த பய னைக் கொடுக்கும்? எதை அவை விரும்பும்? சுயதேவைக்கான உற்பத்தியில் ஒருவருட காலம் உணர்வுபூர்வமாக ஈடுபட்ட பின், இரண்டாவது முறை சிறந்த பயனைக் கொடுக்கிறதென வும் தாம் அதை மேற்கொள்ள விரும்புகின்றனவெனவும், முதலாவது முறை சிறந்த பயனைத் தரவில்லையெனவும் தாம் அதைக் கடைப்பிடிக்க விரும்பவில்லையெனவுமே அவை பதில ளிக்கும். அதற்குக் காரணம், இரண்டாவது முறையால் ராணுவத்திலுள்ள ஒவ்வொருவரினதும் வாழ்க்கை நிலைமையை முன்னேற்ற முடியுமாயிருப்பதும், அதேவேளையில், உயர்மட் டங்கள் எவ்வளவு தான் முயன்றபோதிலும் முதலாவது முறை யால் தற்போதைய கஷ்டமான பொருளாயத நிலைமையில் அவற்றின் தேவைகளை ஒருபோதும் பூர்த்திசெய்யமுடியாமல்

இருப்பதுமாகும். நாம் ''பின்தங்கியதும்'' ''பின்னடைகின்றதும்'' ஆகத் தோன்றும் ஒரு முறையை மேற்கொண்டதால் எமது துருப்புக்கள் வாழ்க்கைத் தேவைகளிலுள்ள பற்றுக் குறைகளைச் சமாளித்து, தமது வாழ்க்கை நிலைமையை உயர்த்தக் கூடியவையாயுள்ளன. இவ்வாறாக ஒவ்வொரு படையினரும் கட்டுமஸ்தானவராகவும், பலம் வாய்ந்தவராகவும் இருக்கின்றனர். இதன் விளைவாக, நாம் ராணுவத்தைப் போல் கஷ்டத்திலிருப்பவரான மக்களின் வரிச் சுமையைக் குறைக்கக் கூடியவராயிருக்கிறோம்; இவ்வாறு அவர்களின் ஆதரவைப் பெறுகிறோம். அத்துடன், நாம் நீண்டகால யுத்தத்தைத் தொடர்ந்து நடத்தி, எமது ஆயுதப்படைகளை விரிவுபடுத்தக்கூடியவராயுமுள்ளோம்; இதன்மூலம், நாம் விடுதலைப் பிரதேசங்களை விரிவுபடுத்தி, எதிரி கைப்பற்றிய பிரதேசங்களைக் குறைத்து, இறுதியில் ஆக்கிரமிப்பாளரை அழித்தொழித்து, முழுச் சீனவையும் விடுதலை செய்யும் நோக்கத்தை நிறைவேற்றுவோம். இது பெரும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததில்லையா?

ராணுவத்தின் சுயதேவைக்கான உற்பத்தி ராணுவத்தின் வாழ்க்கை நிலைமைகளை முன்னேற்றி, மக்களின் சுமையைக் குறைத்தது மாத்திரமல்ல, அதன் மூலம் படைகளை மேலும் விஸ்தரிப்பதையும் சாத்தியமாக்கியுள்ளது. அத்துடன் அது உடனடியான உபவிளைவுகள் பலவற்றையும் ஏற்படுத்தியுள்ளது. அவை பின்வருமாறு:-

(1) அதிகாரிகள்-படையினருக்கிடையில் உறவுகள் விருத்தியடைந்துள்ளன. அதிகாரிகளும் படையினரும் உற்பத்தியில் ஒன்றாக ஈடுபட்டு, சகோதரர்களாக மாறியுள்ளனர்.

(2) உழைப்பைப் பொறுத்த மனோபாவம் திருந்தியுள்ளது. இப்போதுள்ள எமது முறை பழைய கூலிப்படை அமைப்பு முறையுமல்ல, சர்வநாட்டு ராணுவ சேவை முறையுமல்ல, ஆனால் ஒரு மூன்றாவது அமைப்பு முறையாகும், அதாவது, தொண்டர்களை அணிதிரட்டும் முறையாகும். பெருந்தொகையான காலத்தை வீணடிக்கும் சோம்பேறிகளை உருவாக்காததால் இம்முறை கூலிப்படை அமைப்பு முறையைவிட நல்லது; ஆனால், சர்வநாட்டு ராணுவ சேவை முறையைப் பார்க்கிலும் அவ்வளவு நல்லதல்ல. இருந்தும், எமது தற்போதைய நிலைமையில் நாம் தொண்டர்களை அணிதிரட்டும் முறையைத் தான் கைக்கொள்ளமுடியுமேயொழிய சர்வநாட்டு ராணுவ சேவை முறையைக் கைக்கொள்ள முடியாது. அணிதிரட்டப்பட்ட போர்வீரர்கள் நீண்ட காலத்திற்கு ஒரு ராணுவ வாழ்க்கை நடத்த வேண்டும். இது ஒருவேளை அவர்கள் உழைப்பைப்பற்றிக் கொண்டிருக்கும் மனோபாவத்தைக் கெடுத்து, சிலரைக் காலத்தை வீணடிக்கும் சோம்பேறிகளாக்கலாம்; அல்லது யுத்தப் பிரபுத்துவ ராணுவங்களின் இயல்புடைய சில தீய பழக்க வழக்கங்களுக்காளாக்கலாம். ராணுவம் அதன் சுயதேவைக்கான உற்பத்தியில் இறங்கியது முதல், உழைப்பைப் பொறுத்த அதன் மனோபாவம் திருந்தியுள்ளது. காலத்தை வீணடிக்கும் சோம்பல் சமாளிக்கப்பட்டுவிட்டது.

(3) கட்டுப்பாடு பலப்பட்டுள்ளது. சமரிலும் படை வாழ்விலும் கட்டுப்பாடு பலவீனமாவதற்குப்பதில், உற்பத்தியில் உழைப்புக் கட்டுப்பாட்டைக் கடைப்பிடித்ததால் அது உண்மையில் பலப்பட்டுள்ளது.

(4) படைக்கும் மக்களுக்குமிடையில் உறவுகள் விருத்

தியடைந்துள்ளன. ஆயுதப்படைகள் சுயமாக ''குடும்பம் நடத்த''த் தொடங்கியதும், மக்களின் சொத்துகளைத் தீண்டுவது குறைந்துவிட்டது அல்லது இல்லாமல் போய்விட்டது. உற்பத்தியில் ராணுவமும் மக்களும் உழைப்புப் பரிவர்த்தனை செய்து, பரஸ்பரம் உதவியளித்து வருவதோடு, அவர்களுடைய நட்புறவும் பலப்பட்டு வருகின்றது.

(5) அரசாங்கம் பற்றி படையினர் மத்தியில் முணுமுணுப்பு குறைந்துள்ளதோடு, இரு தரப்பு உறவுகளும் விருத்தியடைந்துள்ளன.

(6) மக்களின் மகத்தான உற்பத்தி இயக்கம் உத்வேகம் பெற்றுள்ளது. ராணுவம் உற்பத்தியில் இறங்கியதும், அரசாங்க ஸ்தாபனங்களும் அப்படிச் செய்ய வேண்டிய அவசியம் மேலும் தெளிவாக, அவை மேலும் உற்சாகத்துடன் உற்பத்தியில் ஈடுபடுகின்றன. உற்பத்தியைப் பெருக்கும் மக்கள் அனைவரினதும் பொது இயக்கத்துக்கான தேவையும் மேலும் தெளிவாகின்றது. இது கூட மேலும் மும்முரமாக நடத்தப்படுகின்றது.

முறையே 1942இலும் 1943இலும் ஆரம்பித்த பரந்த சீர்செய் இயக்கமும் உற்பத்தி இயக்கமும் ஒன்று எமது சிந்தனை வாழ்க்கையிலும், மற்றது எமது பொருளாயத வாழ்க்கையிலுமாக ஒரு தீர்க்கமான பாத்திரம் வகித்துள்ளன, வகித்துக் கொண்டுமிருக்கின்றன. இந்த இரண்டு தொடர்களையும் நாம் சரியான நேரத்தில் கிரகித்துக் கொள்ளாவிட்டால், நாம் புரட்சியின் முழுச் சங்கிலித் தொடரையும் கிரகித்துக் கொள்ள முடியாது; எமது போராட்டமும் தொடர்ந்து முன்னேற முடியாது.

நாம் அறிந்துள்ளவாறு, 1937க்கு முன் கட்சியில் சேர்ந்த அங்கத்தவரில் ஒருசில பத்தாயிரம் அங்கத்தவர்களே இன்னும் எஞ்சியிருக்கின்றனர்; இப்போதுள்ள எமது 1,200,000க்கு மேலான கட்சி அங்கத்தவரில் பெரும்பாலோர் விவசாயிக ளிலிருந்தும், இதர குட்டி பூர்ஷுவா வர்க்கத்திலிருந்தும் வந் தவர் ஆவர். அவர்களுக்குப் போற்றற்குரிய புரட்சியார்வம் உண்டு; அத்துடன் அவர்கள் மார்க்ஸிஸப் பயிற்சி பெற விரும் புகிறார்கள். ஆனால், அவர்கள் மார்க்ஸிஸத்திற்கு ஒத்துப் போகாத அல்லது முற்றிலும் ஒத்துப்போகாத கருத்துக்களைத் தம்முடன் கட்சிக்குள் கொண்டுவந்துள்ளனர். 1937க்கு முன் கட்சியில் சேர்ந்தோர் சிலரும் இப்படியே. இது ஒரு மிகப் பாரதூரமான முரண்பாடாக, ஒரு பெரும் கஷ்டமாக அமை கிறது. இந்த நிலைமையில், ஒரு பரந்த மார்க்ஸிஸக் கல்வி இயக்கத்தை, அதாவது, சீர்செய் இயக்கத்தைத் தொடக்கியி ராவிடின் நாம் இலேசாக முன்னேறியிருக்க முடியுமா? நிச்சய மாக முடியாது. ஆனால், நாம் பெருந்தொகையான ஊழியர் மத்தியிலுள்ள இந்த முரண்பாட்டை — கட்சிக்குள் பாட்டாளி வர்க்க சிந்தனைக்கும் பாட்டாளி வர்க்கமல்லாத சிந்தனைகளுக் கும் (குட்டி பூர்ஷுவா வர்க்கத்தினதும், பூர்ஷுவா வர்க்கத் தினதும், நிலப்பிரபு வர்க்கத்தினுடையதுங் கூட, ஆனால், பிர தானமாகக் குட்டி பூர்ஷுவா வர்க்கத்தின் சிந்தனைகளுக்கும்) இடையேயுள்ள முரண்பாட்டை, அதாவது, மார்க்ஸிஸ சிந் தனைக்கும் மார்க்ஸிஸமல்லாத சிந்தனைக்கும் இடையேயுள்ள முரண்பாட்டை — தீர்த்துள்ளதால் அல்லது தீர்க்கும் போக்கி லுள்ளதால், எமது கட்சி வரலாறுகாணாத சித்தாந்த ரீதியி லும் அரசியல் ரீதியிலும் ஸ்தாபன ரீதியிலுமான ஐக்கியத்தில் (பூரணமானதல்லாத போதிலும்) பெரும், உறுதியான கவ

டிட்டு முன் செல்ல முடியும். இன்று முதல், எமது கட்சி மேலும் பெரியதாக வளர முடியும்; வளரவும் வேண்டும். மார்க்ஸிஸ சித்தாந்தக் கோட்பாடுகளால் வழிகாட்டப்பட்டு நாம் எதிர்வரும் வளர்ச்சியை இன்னும் பயனுள்ள முறையில் கிரகித்துக் கொள்ள முடியும்.

மற்றத் தொடர் உற்பத்தி இயக்கம். ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தம் எட்டாண்டுகளாக நடைபெற்றுள்ளது. அது ஆரம்பித்தபோது எமக்கு உணவும் உடையும் இருந்தன. ஆனல், பின்னர் நிலைமை வரவர மோசமடைந்து இறுதியில் நாம் தானியம் போதாமலும் சமையல் எண்ணெயும் உப்பும் போதாமலும் படுக்கையும் ஆடையும் போதாமலும் நிதி போதாமலும் போய்ப் பெரும் கஷ்டங்களில் ஆழ்ந்தோம். இவை 1940-43ல் எதிரி பெருமளவிலான தாக்குதல்களையும், கோமிந்தாங் அரசாங்கம் மக்கள்மீது தொடுத்த பெருமளவிலான மூன்று தாக்குதல் (கூறப்படும் ''கம்யூனிஸ்ட் கட்சி-எதிர்ப்புத் தாக்குதல்'') களையும் பின்தொடர்ந்து வந்த பெரும் கஷ்டமும், பெரும் முரண்பாடுமாகும். இந்தக் கஷ்டத்தைச் சமாளித்து, இந்த முரண்பாட்டைத் தீர்த்து, இந்தத் தொடரைக் கிரகித்துக் கொண்டிராவிடின் எமது ஜப்பானிய-எதிர்ப்புப் போராட்டம் முன்னேறியிருக்க முடியுமா? நிச்சயமாக முடியாது. ஆனல் நாம் உற்பத்தியை விருத்திசெய்யக் கற்றுக்கொண்டுள்ளதோடு, இன்னும் கற்றுக் கொண்டும் இருக்கிறேம். ஆகவே, நாம் மீண்டும் விறுவிறுப்பும் ஜீவசக்தியும் நிறைந்தவராயிருக்கிறேம். ஒருசில ஆண்டுகளில் நாம் எந்த எதிரிக்கும் அஞ்சாது அவர்களனைவரையும் அடக்கியாளுவோம்.

ஆக்வே, சீர்செய் இயக்கம், உற்பத்தி இயக்கம் ஆகிய இரு பெரும் இயக்கங்களும் பெரும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்

துள்ளன என்பதில் எதுவித சந்தேகமும் இருக்க முடியாது.

நாம் இவ்விரு பெரும் இயக்கங்களையும் எமது போராட்டத்தின் இதர கடமைகளை நிறைவேற்றுவதற்கான அடிப்படையாகக் கொண்டு, மேலும் அவற்றை எங்கும் பரப்புவோமாக. எம்மால் இப்படிச் செய்ய முடியுமானால், சீன மக்களின் பூரண விடுதலை உத்தரவாதஞ் செய்யப்படும்.

இப்போது வசந்த கால உழுகைக் காலம். ஒவ்வொரு விடுதலைப் பிரதேசத்திலுள்ள தலைமைத் தோழர்களும், வேலை செய்யும் ஊழியர்களும், வெகுஜனங்களும் உற்பத்தித் தொடரைச் சரியான நேரத்தில் பற்றிக் கொண்டு கடந்த ஆண்டில் பெற்றவற்றைவிட மேலும் பெரும் சாதனைகளைப் பெற முயற்சிப்பர் என நம்பப்படுகிறது. குறிப்பாக, உற்பத்தியை விருத்தி செய்ய இன்னும் கற்றுக்கொள்ளாத பிரதேசங்களில் இந்த வருடம் மேலும் பெரும் முயற்சிகள் செய்யப்பட வேண்டும்.

# எதிரிப்படைகளை ஒவ்வொன்றாக அழிப்பதற்கு மேம்பாடான படையொன்றை ஒன்றுகுவிப்பது*

(1946, செப்டம்பர் 16)

1. மேம்பாடான படையொன்றை ஒன்றுகுவிப்பது மூலம் எதிரிப் படைகளை ஒவ்வொன்றாக அழிக்கும்[1] போர் முறை ஒரு போரியக்கத்திற்கான படை அணிவகுப்பில் மட்டும் அல்ல, ஒரு சமருக்கான படை அணிவகுப்பிலும் பயன்படுத்தப்பட வேண்டும்.

2. ஒரு போரியக்கத்திற்கான அணிவகுப்பைப் பொறுத் தவரை, எதிரி பல பிறிகேடுக[2]ளுடன் (அல்லது றெஜிமென்டு களுடன்) எமது படைக்கெதிராகப் பல திக்கிலிருந்து முன்னே றும்போது, எமது படை முற்றிலும் மேம்பாடான — எதிரி யின் பலத்தைவிட ஆறோ ஐந்தோ நான்கு மடங்கு, குறைந் தபட்சம் மூன்று மடங்கான படை ஒன்றை ஒன்றுகுவித்து,

---

*இது தோழர் மாஓ சேதுங் அவர்களினால் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக் கமிட்டியின் புரட்சிகர ராணுவக் கமிஷனுக்காக எழுதப்பட்ட உட் கட்சி உத்தரவு ஆகும்.

தகுந்த சந்தர்ப்பமொன்றை மேற்கொண்டு, முதலில் ஒரு எதிரி பிறிகேட்டை (அல்லது ரெஜிமென்டை)ச் சுற்றிவளைத்துத் துடைத்தொழிக்க வேண்டும். அது எதிரியின் பிறிகேடுகளில் (அல்லது ரெஜிமென்டுகளில்) ஒப்பீட்டளவில் பலவீனமான ஒன்ருகவோ, அல்லது ஆதரவு குறைந்த ஒன்ருகவோ, அல்லது நிலத்தோற்றமும் மக்களும் எமக்கு மிகச் சாதகமாகவும் எதிரிக்குப் பாதகமாகவும் உள்ள இடத்திலுள்ள ஒன்ருகவோ இருக்கவேண்டும். நாம் சுற்றிவளைத்துத் தாக்கிக்கொண்டிருக்கும் பிறிகேட்டை (அல்லது ரெஜிமென்டை) முதலில் அழித்தொழிக்கக் கூடியதாயிருப்பதற்கு இதர எதிரிப் பிறிகேடுகள் (அல்லது ரெஜிமென்டுகள்) விரைவாகப் படைவலிபெருக்குவதைத் தடுப்பதற்கு நாம் சிறிய படைகளைக் கொண்டு அவற்றை ஒரு இடத்தில் அமர்த்தி வைத்துக்கொள்ள வேண்டும். இது நிறைவேற்றப்பட்டதும், நிலைமைகளுக்கேற்ப நாம் இன்னும் ஒரு எதிரிப் பிறிகேட்டையோ அல்லது அதற்கு மேற்பட்டதையோ துடைத்தொழிக்க வேண்டும் (இதற்கு இரண்டு உதாரணங்கள்: ஸு யூ, தான் சென்-லின் ஆகியோரின் தலைமையிலான எமது துருப்புக்கள் ஆகஸ்ட் 22ந் தேதி ழுக்கெளவிற்கு அருகே எதிரியின் போக்குவரத்துப் பொலீஸ் கோரிில் ஐயாயிரத்தையும், ஆகஸ்ட் 26ந் தேதி ஒரு எதிரிப் பிறிகேட்டையும், ஆகஸ்ட் 27ந் தேதி ஒன்றரை எதிரிப் பிறிகேட்டையும் துடைத்தொழித்தன.[4] லியூ போ-செங், தெங் ஸியெளபிங் ஆகியோரின் தலைமையில் எமது படைகள் செப்டம்பர் 3ம், 6ம் தேதிகளுக்கிடையில் திங்தாஓவிற்கு அருகே ஒரு எதிரிப் பிறிகேட்டையும், செப்டம்பர் 6ந் தேதி பிற்பகல் இன்னொன்றையும், செப்டம்பர் 7-8ல் இன்னும் இரண்டையும் நிர்மூலமாக்கின.[5]); அல்லது மேற்கொண்டு போரிடுவதற்

காக, ஓய்வு எடுக்கவும் புனருத்தாரணம் செய்யவும் ஒதுங்கிச் சென்றுவிட வேண்டும். ஒரு போரியக்கத்திற்கான அணிவகுப்பில், எதிரியைக் குறைத்து மதிப்பிடுவதன் பயனுக எல்லா எதிரி வியூகங்களையும் சமாளிப்பதற்கு எமது படைகளைப் பிரிக்கும் தவருன போர் முறையை நாம் நிராகரிக்க வேண்டும்; காரணம், இந்த முறை மூலம் நாம் ஒரு எதிரி வியூகத்தைக்கூட அழிக்க முடியாது, மாருக, நாம் செயலற்ற நிலைக்குள்ளாவோம்.

3. ஒரு சமருக்கான அணிவகுப்பில், நாம் முற்றிலும் மேம்பாடான ஒரு படையை ஏற்கனவே ஒன்றுகுவித்து எதிரியின் வியூகங்களில் ஒன்றை (ஒரு பிறிகேட்டை அல்லது ஒரு ரெஜிமென்டை)ச் சுற்றிவளைக்கும்போது, எமது தாக்கும் படை வியூகங்கள் (அல்லது யுனிட்டுகள்) சுற்றிவளைக்கப்பட்ட எதிரிகளை ஒரேநேரத்தில் ஒரேயடியாக முற்றும் அழித்தொழிக்க முயன்று, அவ்வாருக படைகளைப் பிரித்து எங்குமே போதிய பலமின்றி எல்லா இடங்களிலும் தாக்கி, காலத்தை விரயமாக்கி, நற்பயன் பெறுவதை கடினமாக்கிக்கொள்ளக் கூடாது. அதற்குப் பதில், நாம் ஒரு முற்றிலும் மேம்பாடான படையை, அதாவது, எதிரியைவிட ஆறோ ஐந்தோ நான்கு மடங்கு அல்லது குறைந்தபட்சம் மூன்று மடங்கான படையை ஒன்றுகுவித்து, எமது பீரங்கிப் படைகள் அனைத்தையும் அல்லது அதிகமானவற்றை ஒன்றுகுவித்து, எதிரி நிலையங்களில் பலவீனமான ஒன்றை (இரண்டையல்ல)த் தெரிந்தெடுத்து, அதை உக்கிரமாகத் தாக்கி நிச்சயம் வெற்றிபெற வேண்டும். இது நிறை வேற்றப்பட்டதும் வெற்றியை விரைந்து பயன்படுத்தி எதிரிப் படைகளை ஒவ்வொன்ருக அழிக்க வேண்டும்.

4. இந்தப் போர் முறையின் விளைவுகளாவன: முதலாவதாக,

முற்றுக அழித்தொழிப்பதும், இரண்டாவதாக, விரைவாக வெற்றி தோல்வி முடிவாவதுமாகும். முற்றுக அழித்தொழிப்பதுதான் எதிரிக்கு மிகப் பலத்த அடிகள் கொடுக்கும்; காரணம், நாம் ஒரு ரெஜிமென்டைத் துடைத்தொழிக்கும்போது அவனிடம் ஒரு ரெஜிமென்ட் குறையும்; நாம் ஒரு பிறிகேட்டைத் துடைத்தொழிக்கும்போது அவனிடம் ஒரு பிறிகேட் குறையும். இரண்டாவது அணித் துருப்பில்லாத எதிரியுடன் போரிடும்போது இம்முறை மிகவும் பயன் தருவதாகும். முற்றுக அழித்தொழிப்பதுதான் எமது படைகளை மிகப் பரந்த அளவிற்கு அதிகரிக்கச் செய்யும். இப்போது இது எமது ஆயுதம் வெடிமருந்துகளின் பிரதான ஊற்றுமூலம் மட்டுமல்ல, எமது படையினரின் முக்கிய ஊற்றுமூலமும் கூட. முற்றுக அழித்தொழிப்பது எதிரித் துருப்புக்களின் மனவுறுதியைக் குலைத்து, அவற்றைப் பின்பற்றுவோரையும் மனம்விட்டுப்போக செய்கிறது; அது எமது துருப்புக்களின் மனவுறுதியைக் கூட்டி எமது மக்களை உற்சாகங்கொள்ளச் செய்கிறது. விரைவாக வெற்றி தோல்வி முடிவாவது எமது துருப்புக்கள் எதிரியின் ஆதரவுப் படைகளை ஒவ்வொன்றுகத் துடைத்தொழிப்பதை, அல்லது அவற்றைத் தவிர்த்து விலகிவிடுவதைச் சாத்தியமாக்குகிறது. சமர், போரியக்கம் ஆகியவற்றின் விரைவான முடிவு ஒரு நீண்டகால யுத்ததந்திரத்திற்குத் தேவையான நிபந்தனையாகும்.

5. ராணுவ நடவடிக்கையிலீடுபட்டில்லாதபோது எதிரிப் படைகளை ஒவ்வொன்றுகத் துடைத்தொழிக்க எமது படைகளை ஒன்றுகுவிப்பது என்ற கோட்பாட்டை ஏற்று, ராணுவ நடவடிக்கையிலீடுபட்டுள்ளபோது அதைப் பிரயோகிக்க அடிக்கடி தவறும் பலர் எமது ராணுவ ஊழியர் மத்தியில் இன்னும் உள்ளனர். இதற்குக் காரணம் எதிரியைக் குறைத்து மதிப்பி

டுவதும் ஆழமான கல்வியும் படிப்பும் இன்மையுமாகும். இந்தப் போர் முறையின் சாதகங்களை மீண்டும் மீண்டும் விளக்குவதற்கும், சியாங் கை-ஷேக்கின் தாக்குதல்களைத் தோற்கடிப்பதற்கு இதுதான் பிரதான முறையெனச் சுட்டிக்காட்டுவதற்கும் கடந்த சமர்களில் நடந்த விரிவான உதாரணங்களை எடுத்துக்காட்டுவது அவசியமாகும். இந்த முறையை உபயோகித்தால் நாம் வெல்வோம். இதற்கு மாறாக நடப்பின் நாம் தோற்போம்.

6. எதிரிப் படைகளை ஒவ்வொன்றாகத் துடைத்தொழிக்க எமது படைகளை ஒன்றுகுவிப்பது என்ற கோட்பாடு ஒரு தசாப்தத்திற்கு மேலான காலத்திற்கு முன்பு எமது ராணுவம் உருவாக்கப்பட்டது முதலாக இருந்து வரும் ஒரு சிறந்த பாரம்பரியக் கோட்பாடாகும்; இப்போ தான் முதற் தடவையாக இது முன்வைக்கப்படவில்லை. இருப்பினும், ஜப்பானிய-எதிர்ப்பு யுத்தத்தின்போது கொரில்லா யுத்தத்திற்காக எமது படைகளைப் பிரிப்பது முதன்மையானதாகவும் நடமாட்ட யுத்தத்திற்காக எமது படைகளை ஒன்றுகுவிப்பது இரண்டாந்தரமானதாகவும் இருந்தது. தற்போதைய உள்நாட்டு யுத்தத்திலோ நிலைமைகள் மாற்றமடைந்துள்ளதால் போர் முறையும் மாற வேண்டும். நடமாட்ட யுத்தத்திற்காக எமது படைகளை ஒன்றுகுவிப்பது முதன்மையானதாகவும், கொரில்லா யுத்தத்திற்காக எமது படைகளைப் பிரிப்பது இரண்டாந்தரமானதாகவும் இருக்க வேண்டும். இப்போது சியாங் கை-ஷேக்கின் படை மிகச் சக்தி வாய்ந்த ஆயுதங்களையுடையதாக இருப்பதால் எமது படை எதிரிப் படைகளை ஒவ்வொன்றாகத் துடைத்தொழிக்க ஒரு மேம்பாடான படையை ஒன்றுகுவிக்கும் முறைக்கு விசேஷ அழுத்தம் கொடுக்க வேண்டும்.

7. இந்த முறை எதிரி தாக்குதலிலும் நாம் தற்காப்பிலும் இருக்ும்போது பயன்படுத்தப்பட வேண்டும். இருப்பினும், எதிரி தற்காப்பிலும் நாம் தாக்குதலிலும் இருக்கும்போது நாம் இரண்டு நிலைமைகளையும் பிரித்தறிந்து வேறுபட்ட முறைகளைக் கைக்கொள்ள வேண்டும். எமது படை பெரியதாகவும் அந்த இடத்தில் எதிரியின் படை ஒப்புநோக்காகப் பலவீனமாகவும் இருக்கும்போது அல்லது நாம் எதிரி மீது திடீர்த் தாக்குதல் தொடுக்கும்போது நாம் ஒரே நேரத்தில் அவனது பல யுனிட்டுகளைத் தாக்கலாம். உதாரணமாக, ஜூன் 5ந் தேதிக்கும் 10ந் தேதிக்குமிடையில், ஷன்துங் மாகாணத்திலுள்ள எமது துருப்புக்கள் சிங்தௌ-ஜினன், தியென்சின்-பூகோ புகையிரத மார்க்கங்களிலுள்ள பத்துக்கு மேலான பட்டினங்களை ஒரே நேரத்தில் தாக்கிக் கைப்பற்றின.[6] அல்லது இன்னொரு உதாரணத்தை எடுத்துக் கொண்டால், ஆகஸ்ட் 10ந் தேதிக்கும் 21ந் தேதிக்குமிடையில், லியூ போ-செங், தெங் ஸியௌ-பிங் ஆகியோரின் தலைமையில் எமது துருப்புக்கள் லுங்ஹாய் புகையிரத மார்க்கத்தின் கைஃபுங்-ஷிசௌவிற்கிடைப்பட்ட பகுதி நீளமுள்ள பத்துக்கு மேலான பட்டினங்களைத் தாக்கிக் கைப்பற்றின.[7] மறுபுறம், எம்மிடம் போதியளவு படையில்லாவிட்டால் நாம் எதிரி கைப்பற்றிய பட்டினங்களை ஒன்றன்பின் ஒன்றாய்ப் பிடிக்க வேண்டுமேயொழிய ஒரே நேரத்தில் எதிரியைப் பல பட்டினங்களில் தாக்கக் கூடாது. உதாரணமாக ஷன்சியிலுள்ள எமது துருப்புக்கள் தாதொங்-பூசௌ புகையிரத மார்க்க நீளமுள்ள பட்டினங்களை இவ்வாறுதான் கைப்பற்றின.[8]

8. எதிரியை நிர்மூலமாக்குவதற்காக எமது துருப்புக்களின் பிரதான படை ஒன்றுகுவிக்கப்படும்போது, அது தனது நட

வடிக்கைகளை ஸ்தலப் படைப்பிரிவினதும், ஸ்தலக் கொரில் லாக்களினதும், குடிப்படையினதும் சுறுசுறுப்பான நடவடிக் கைகளுடன் இணைக்க வேண்டும். ஸ்தலப் படைப்பிரிவுகள் (அல்லது யுனிட்டுகள்) ஒரு எதிரி ரெஜிமென்டையோ பட்டா ளத்தையோ, கொம்பனியையோ தாக்கும்போது அவை எதிரிப் படைகளை ஒவ்வொன்ருகத் துடைத்தொழிக்கத் தமது படைகளை ஒன்றுகுவிப்பது என்ற கோட்பாட்டையும் கடைப்பிடிக்க வேண் டும்.

9. எதிரிப் படைகளை ஒவ்வொன்ருகத் துடைத்தொழிக்க எமது படைகளை ஒன்றுகுவிப்பது என்ற கோட்பாடு எதிரியின் வினைத்திறனுடைய பலத்தைத் துடைத்தொழிப்பதைப் பிர தான இலக்காகக் கொள்ள வேண்டும்; ஒரு இடத்தைப் பாது காத்து வைத்திருப்பதை அல்லது கைப்பற்றுவதைப் பிரதான இலக்காகக் கொள்ளக் கூடாது. சில நிலைமைகளில், எதிரியைத் துடைத்தொழிக்க எமது படைகளை ஒன்றுகுவிப்பதற்கு அல் லது எமது பிரதான படை எதிரியின் பலத்த தாக்குதலுக்கா ளாவதைத் தடுத்து, இளைப்பாறி மேலும் போரிடத் திடம் பெறுவதற்கு குறிப்பிட்ட சில இடங்களைக் கைவிடுவது அனு மதிக்கத்தக்கது. எதிரியின் வினைத்திறனுடைய பலத்தைப் பெரு மளவில் துடைத்தொழிக்க முடியுமானவராயிருக்கும் வரை இழந்த பிரதேசங்களை மீட்டெடுத்து, புதிய பிரதேசங்களைப் பிடிப்பது சாத்தியமாகும். ஆகவே, எதிரியின் வினைத்திறனு டைய பலத்தை அழிப்பதில் வெற்றிபெறும் அனைவரையும் போற்ற வேண்டும். எதிரியின் கிரமமான படைகளை அழிப்ப வர்களுக்கு மாத்திரமல்ல அவனது அமைதி பேணும் படை, ''வீடேகும் கொன்டின்ஜென்டுகள்''9, இதர பிற்போக்கு ஸ்தல ஆயுதக் குழுக்களை அழிப்பவர்களுக்கும் இது பொருந்

தும். இருப்பினும், எதிரிக்கும் நமக்கும் இடையில் சக்திகளின் பலாபலம் இடத்தைப் பாதுகாத்து வைத்திருப்பதை அல்லது கைப்பற்றுவதைச் சாத்தியமாக்கும்போதும், அவை எமது போரியக்கங்களுக்கு அல்லது சமர்களுக்கு முக்கியமானதாகும்போதும் நாம் இடத்தைப் பாதுகாத்து வைத்திருக்க அல்லது கைப்பற்ற வேண்டும்; அதற்கு மாறாகச் செய்வது தவறாகும். ஆகவே, அத்தகைய இடத்தைப் பாதுகாத்து வைத்திருப்பவரை அல்லது கைப்பற்றுபவரையும் போற்ற வேண்டும்.

## குறிப்புகள்

1. ''எதிரியைத் துடைத்தொழிக்க'', ''எதிரியை அழிக்க'' என்ற சொற்றொடர்கள் இக்கட்டுரையில் ஒரே அர்த்தமுடைய்வையாகவே உபயோகப்படுத்தப்படுகின்றன. அவை எதிரித் துருப்புக்கள் சுட்டுக்கொல்லப்படுவதையும் காயப்படுத்தப்படுவதையும் கைப்பற்றப்படுவதையும் உள்ளடக்குகின்றன.

2. கோமிந்தாங் படையின் ஒரு கிரமமான கோர் ஆரம்பத்தில் ஒவ்வொன்றும் மூன்று ரெஜிமென்டுகளைக் கொண்ட மூன்று (சில வேளைகளில் இரண்டு) டிவிஷன்களைக் கொண்டிருந்தது. மஞ்சள் நதிக்குத் தெற்கேயிருந்த கோமிந்தாங்கின் கிரமமான துருப்புக்கள் 1946ம் ஆண்டு மேயில் தொடங்கி, கட்டங்கட்டமாக புனரொழுங்கு செய்யப்பட்டன. முன்பு ஒரு கோராக இருந்தது ஒரு புனரொழுங்கு செய்யப்பட்ட டிவிஷனாகியது; முன்னைய டிவிஷன்கள் மூன்று (சில வேளைகளில் இரண்டு) ரெஜிமென்டுகளுடன் கூடிய பிறிகேடுகளாகின. மஞ்சள் நதிக்கு வடக்கேயிருந்த ஒரு பகுதிக் கோமிந்தாங் துருப்புக்கள் புனரொழுங்கு செய்யப்படாததோடு அவற்றின் பெயர்களும் மாறாமலே இருந்தன. சில புனரொழுங்கு செய்யப்பட்ட டிவிஷன்கள் பின்னர் அவற்றின் ஆரம்பப் பெயரான கோர் என்பதையே பெற்றன.

3. கோமிந்தாங்கின் போக்குவரத்துப் பொலீஸ் கோர் 1945 மார்ச்சில் உருவாக்கப்பட்டது. ஜப்பான் சரணடைந்த பின் இந்தக் கோர் புகையிரத

மார்க்கங்களைப் பாதுகாப்பது என்ற பேரில் ரகசியப் பொலீஸ் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காகப் போக்குவரத்து மார்க்கங்கள் நீளம் ''பாதுகாப்புக் கடமை'' களுக்காக நிறுத்தப்பட்டன. உள்நாட்டு யுத்தம் நடத்தும் போது கோமிந்தாங் உபயோகித்த படைகளில் இதுவுமொன்று. (மொழிபெயர்ப்பாளர் குறிப்பு)

4. 1946 ஜூலையில் கோமிந்தாங் படை கியாங்ஸூ-அன்ஹூய் விடுதலைப் பிரதேசத்தில் பெரிய அளவிலான ஆக்கிரமிப்பை ஆரம்பித்தது; எமது படைகள் தற்காப்புக்காகத் தைரியத்துடன் போராடின. மத்திய கியாங்ஸூ விடுதலைப் பிரதேசத்தைத் தாக்கிய கோமிந்தாங் துருப்புக்கள் தாங் என்-போவின் தலைமை யில் கிட்டத்தட்ட 120,000 பேர் அடங்கிய 15 பிறிகேடுகளால் ஆனவை. ஜூலை 13ந் தேதிமுதல் ஆகஸ்ட் 27ந் தேதிவரை, கிழக்குச் சீன மக்கள் விடுதலைச் சேனையின் பதினெட்டு ரெஜிமென்டுகள் ஸூ யூ, தான் சென்-லின் முதலிய தோழர்கள் தலைமையில் மேம்பாடான படைகளை ஒன்றுகுவித்து, மத்திய கியாங்ஸூவிலுள்ள தைசிங், ருக்கௌ, ஹாய்ஆன், ஷௌபப்பாய் ஆகிய பிர தேசங்களில் தொடர்ச்சியாக ஏழு சமர்களை நடத்தி, ஆறு எதிரி பிறிகேடுகளையும் எதிரியின் போக்குவரத்துப் பொலீஸ் கோரின் ஐந்து பட்டாளங்களையும் துடைத்தொழித்தன. இவற்றில் இரண்டு சமர்களின் விளைவு பற்றிக் கட்டுரையில் கூறப்பட்டுள்ளது.

5. 1946 ஆகஸ்டில் கோமிந்தாங் படைகள் ஷிசௌ, செங்சௌ ஆகிய பகுதிகளிலிருந்து இரண்டு மார்க்கங்கள் வழியாக முன்னேறி ஷன்சி-ஹோ பெய்-ஷன்துங்-ஹோனுன் விடுதலைப் பிரதேசத்தைத் தாக்கின. இந்தப் பிரதே சத்திலிருந்த மக்கள் விடுதலைச் சேனை லியூ போ-செங், தெங் ஸியௌ-பிங் முதலிய தோழர்கள் தலைமையில், செங்சௌவிலிருந்து புறப்பட்ட எதிரி வியூகத்துடன் போராட மேம்பாடான படைகளை ஒன்றுகுவித்தது. அவை செப் டம்பர் 3ந் தேதிக்கும் 8ந் தேதிக்கும் இடையில் ஷன்துங்கிலுள்ள ஹொசே, திங்தாஓ, சாஓஸியென் ஆகிய பிரதேசங்களில் தொடர்ச்சியாக நான்கு எதிரி பிறிகேடுகளைத் துடைத்தொழித்தன.

6. 1946ம் ஆண்டு ஜூன் மாத முற்பகுதியில் ஷன்துங் மக்கள் விடுதலைச் சேனை சிங்தௌ-ஜினுன், தியென்சின்-பூகோ புகையிரத மார்க்கங்கள் நெடு கிலிருந்த கைப்பொம்மைத் துருப்புக்களுக்கெதிராக ஒரு படையெடுப்பை நடத்தி ஜியாஓஸியென், சாங்தியென், சோசுன், தேசௌ, தைஆன், சாஓச்சுவாங் உட்படப் பத்துக்கு மேலான பட்டினங்களை விடுதலை செய்தது.

7. 1946 ஆகஸ்ட் 10ந் தேதிக்கும் 21ந் தேதிக்குமிடையில் ஷன்சி-ஹோபெய்-

ஷன்துங்-ஹோனுன் மக்கள் விடுதலைச் சேனை மத்திய சமவெளி, கிழக்குச் சீன மக்கள் விடுதலைச் சேனைகளை ஆதரிக்க, பல மார்க்கங்களால் முன்னேறி, லுங் ஹாய் புகையிரத மார்க்கத்தின் கைஃபுங்-ஷிசௌ பகுதி நெடுகிலும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த எதிரித் துருப்புக்களைத் தாக்கி, தங்ஷன், லன்ஃபாங், ஹுவாங்கோ, லீச்சுவாங், யாங்ஜி உட்படப் பத்துக்கு மேலான பட்டினங்களைக் கைப்பற்றியது.

8. 1946 ஜுலையில், ஹு சுங்-நான், யென் சி-ஷன் ஆகியோர் தலைமையிலிருந்த கோமிந்தாங் படைகள் தென் ஷன்சி விடுதலைப் பிரதேசத்தைக் கூட்டாகத் தாக்கின. ஷன்சி-ஹோபெய்-ஷன்துங்-ஹோனுன் மக்கள் விடுதலைச் சேனையின் தையுயெ யுனிட்டுகளும், ஷன்சி-சுய்யுவான் மக்கள் விடுதலைச் சேனையின் ஒரு பகுதியும் தென் ஷன்சியில் எதிரிமீது எதிர்த்தாக்குதல் தொடுத்து அவனைப் பின்னடையச் செய்தன. ஆகஸ்டில் அவை தாதொங்-பூசௌ புகையிரத மார்க்கத்திலுள்ள லின்ஃபனுக்கும் லிங்ஷுவுக்கும் இடையில் எதிரி மீது தாக்குதல் தொடுத்து, ஹொங்துங், சௌசெங், ஹுஒஸியென், லிங்ஷு, ஃபன்சி ஆகிய பட்டினங்களை விடுதலை செய்தன.

9. மக்கள் விடுதலை யுத்தத்தின்போது விடுதலைப் பிரதேசங்களிலிருந்த சில நிலப்பிரபுக்களும் ஸ்தலக் கொடுங்கோலரும் கோமிந்தாங் பிரதேசங்களுக்குத் தப்பியோடினர். கோமிந்தாங் துருப்புக்களுடன் சேர்ந்து விடுதலைப் பிரதேசங்களைத் தாக்குவதற்காக அவர்கள் கோமிந்தாங்கால் ''வீடேகும் கொன்டின்ஜென்டுகள்'', ''வீடேகும் லெஜென்கள்'' முதலிய பிற்போக்கு ஆயுதக் குழுக்களாக ஸ்தாபனப்படுத்தப்பட்டனர். அவர்கள் எங்கும் கொள்ளை, கொலை, இன்னும் சகலவித அட்டூழியங்களையும் செய்தனர்.

# மூன்று மாதகாலத் தொகுப்புரை*

**(1946, அக்டோபர் 1)**

*1. மத்திய கமிட்டியின் தற்போதைய நிலைமைபற்றிய ஜூலை 20ந் தேதி உத்தரவு[1] தெரிவித்ததாவது: ''எம்மால் சியாங் கை-ஷேக்கைத் தோற்கடிக்கமுடியும். முழுக் கட்சியும் இதில் பூரண நம்பிக்கை கொண்டிருக்க வேண்டும்.'' ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர் ஆகிய மூன்று மாதங்களில் நடந்த சமர் இந்த மதிப்பீடு சரியானதென நிரூபித்துள்ளது.*

*2. சியாங் கை-ஷேக்கால் தீர்க்கமுடியாதவையும், எமது வெற்றி நிச்சயமானதாகவும் சியாங் கை-ஷேக்கின் தோல்வி தவிர்க்க முடியாததாகவும் இருப்பதற்கான அடிப்படைக் காரணமாய் விளங்குவனவுமான அடிப்படை அரசியல் பொருளாதார முரண்பாடுகளைவிட, ராணுவத் துறையில் சியாங் கை-*

---

**இது சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டிக்காகத் தோழர் மாஓ சேதுங் அவர்களால் எழுதப்பட்ட உட்கட்சி உத்தரவு. இது 1946 ஜூலையில் தேசவிசால உள்நாட்டு யுத்தம் வெடித்ததிற் தொடங்கிய மூன்று மாதங்களின் வரிசையான போர் அனுபவத்தை விபரமாகத் தொகுத்துரைத்து, மக்கள் விடுதலைச் சேனையின் எதிர்காலப் போர் நடவடிக்கைகளின் கொள்கைகளையும் கடமைகளையும் முன்வைத்து, கஷ்டகாலகட்டமொன்றைக் கடந்தபின் நாம் மக்கள் விடுதலை யுத்தத்தில் வெற்றியீட்டுவது நிச்சயமென்பதைச் சுட்டிக்காட்டியது. மக்கள்*

ஷேக்கின் அளவு மீறி விஸ்தரிக்கப்பட்ட சமர் முன்னணிகளுக்கும் அவனது துருப்புக்களின் பற்ருக்குறைக்குமிடையில் ஒரு கூர்மையான முரண்பாடும் தோன்றியுள்ளது. இந்த முரண்பாடுதான் எமது வெற்றிக்கும் சியாங் கை-ஷேக்கின் தோல்விக்குமான நேரடிக்காரணமாய் இருக்கும் என்பது நிச்சயம்.

3. கைப்பொம்மைத் துருப்புக்களையும், அமைதி பேணும் படைகளையும், போக்குவரத்துப் பொலீஸ் படைகளையும் விட்டு விடுதலைப் பிரதேசங்களைத் தாக்கும் சியாங் கை-ஷேக்கின் கிரமமான துருப்புக்களின் தொகை மொத்தம் 190 பிறிகேடுகளுக்கு மேல். இத்தொகையைத்தவிர அவனுல் கூடியபட்சம் செய்யக்கூடியது என்னவென்ருல் மீண்டும் தெற்கிலுள்ள தன் துருப்புக்களில் ஒரு பகுதியைப் படைவலிபெருக்க வடக்கிற்கு அனுப்புவதாகும்; ஆனுல் அதற்குப் பின் ப்டைவலிபெருக்க மேலும் துருப்புக்களை அனுப்புவது அவனுக்குக் கஷ்டமாயிருக்கும். 190க்கு மேற்பட்ட அப்பிறிகேடுகளில் 25 எமது ராணுவத்தால் கடந்த மூன்று மாதங்களில் துடைத்தொழிக்கப்பட்டன. இந்த ஆண்டு பெப்ரவரிமுதல் ஜூன்வரை நாம் வடகிழக்கில் துடைத்தொழித்த படைகள் இதற்குள் அடங்கவில்லை.

4. சியாங் கை-ஷேக்கின் 190க்கு மேற்பட்ட பிறிகேடுகளில் கிட்டத்தட்ட அரைவாசி காவல் கடமைகள் புரியவேண்டும்; அரைவாசிக்குக் கொஞ்சம் கூடியதுதான் களத்தில் போ

---

விடுதலை யுத்தத்திற்கு ஆதரவளிப்பதற்கும் அதனுடன் இசைவுபடுத்துவதற்குமாகத் தீர்க்கப்பட வேண்டியிருந்த, விடுதலைப் பிரதேசங்களில் நிலச் சீர்திருத்தம், உற்பத்தி அபிவிருத்தி, கோமிந்தாங் ஆளும் பிரதேசங்களிலான வெகுஜனப் போராட்டங்களில் தலைமையைப் பலப்படுத்துவது, மற்றும் சம்பந்தப்பட்ட இதர பிரச்சினைகள் ஆகியவற்றையும் இத்தஸ்தாவேஜு கோட்பாட்டளவில் விளக்கியது.

ரிட அனுப்பப்பட முடியும். இக்களப்படைகள் குறிப்பிட்ட பிரதேசங்களுக்கு முன்னேறும்போது ஒரு பகுதியோ பெரும் பான்மையோ கூடக் காவல் பணிக்கு மாற வேண்டியிருக்கும். எதிரியின் களப்படைகள் சமர் நடந்து கொண்டிருக்கும் போக்கில் குறைந்து கொண்டு போவது நிச்சயம்; காரணம், ஒருபுறம் அவை எம்மால் தொடர்ந்து துடைத்தொழிக்கப்படும்; இன்னொருபுறம் அவை பெருந்தொகையில் காவற்பணியை மேற்கொள்ளவேண்டியிருக்கும்.

5. கடந்த மூன்று மாதங்களில் நாம் துடைத்தொழித்த 25 பிறிகேடுகளில் 7 தாங் என்-போவின் தலைமையிலும் (அதற்கு முன் லீ மோ-அன்னின் தலைமையில்), 2 சியெ யுயெயின் தலைமையிலும், 7 கூ சு-தொங்கின் தலைமையிலும் (அதற்கு முன் லியூ சூவின் தலைமையில்), 2 ஹூ சுங்-நானின் தலைமையிலும், 4 யென் சி-ஷன்னின் தலைமையிலும், 2 வாங் யௌ-வூவின் தலைமையிலும், 1 டு யூ-மிங்கின் தலைமையிலும் இருந்தன. லீ சுங்-ழென், ஃபூ சுவோ-யி, மா ஹொங்-குவெய், செங் சியென் ஆகியோர் தலைமையிலுள்ள நான்கு பிரிவுகளுந்தான் இன்னும் எமது படையிடம் அழிவுதரும் அடிகளைப் பெறவில்லை. மிகுதி ஏழு பிரிவுகளும் பலத்த அடிகளைப் பெற்றுள்ளன அல்லது ஆரம்ப அடிகளைப் பெற்றுள்ளன. பலத்த அடிகள் பெற்றோர் டு யூ-மிங்கும் (இந்த ஆண்டு பெப்ரவரி முதல் ஜூன்வரை வடகிழக்கில் நடந்த சமர்களையும் சேர்த்து கணக்கிடுகையில்), தாங் என்-போவும், கூ சு-தொங்கும், யென் சி-ஷன்னும் ஆவர். ஆரம்ப அடிகள் பெற்றோர் சியெ யுயெ, ஹூ சுங்-நான், வாங் யௌ-வூ ஆகியோராவர். இவையனைத்தும் எமது ராணுவத்தால் சியாங் கை-ஷேக்கைத் தோற்கடிக்க முடியும் என்பதை நிரூபிக்கின்றன.

6. வரும் காலகட்டத்தில் எமது கடமை கிட்டத்தட்ட 25 எதிரி பிறிகேடுகளை மேலும் துடைத்தொழிப்பதாகும். இந்தக் கடமையை நிறைவேற்றுவது சியாங் கை-ஷேக்கின் தாக்குதலைத் தடுத்து நிறுத்தி, எமது இழந்த பிரதேசத்தில் ஒரு பகுதியை மீட்டெடுப்பதைச் சாத்தியமாக்கும். இந்த இரண்டாவது கூட்டம் 25 பிறிகேட் படைகளும் துடைத்தொழிக்கப்பட்ட பின் எமது படை யுத்ததந்திர முன்முயற்சி நிலையைப் பெற்றுத் தற்காப்பிலிருந்து தாக்குதலுக்குப் போகக் கூடியதாயிருப்பது நிச்சயமென முன்கூட்டியே கூறமுடியும். அப்போது எமது கடமை மூன்றாவது கூட்டம் 25 எதிரி பிறிகேடுகளை அழித்தொழிப்பதாகும். அதை நிறைவேற்றினால் நாம் எமது இழந்த பிரதேசத்தில் பெரும் பகுதியை அல்லது முழுவதையும் மீட்டெடுத்து விடுதலைப் பிரதேசங்களை விரிவுபடுத்தமுடியும். அந்தச் சமயத்தில் கோமிந்தாங்கினதும் கம்யூனிஸ்ட் கட்சியினதும் ராணுவ பலாபலத்தில் ஒரு பிரமாண்டமான மாற்றம் ஏற்பட்டிருக்கும் என்பது நிச்சயம். இந்நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு நாம் கடந்த மூன்று மாதங்களில் 25 பிறிகேடுகளைத் துடைத்தொழித்த எமது மாபெரும் சாதனையைப் பின்பற்றி வரும் மூன்று மாத அளவில் கிட்டத்தட்ட 25 பிறிகேடுகளை மேலும் அழித்தொழிக்க வேண்டும். இதுதான் எதிரிக்கும் எமக்குமிடை நிலைமையை மாற்றுவதற்கான திறவுகோல்.[2]

7. கடந்த மூன்று மாதங்களில் நாம் ஹுவய்யின், ஹொசே, செங்தே, சினிங் போன்ற சில பத்து நடுத்தர சிறிய பட்டினங்களை இழந்துள்ளோம். இந்தப் பட்டினங்களில் பெரும்பாலானவற்றைக் கைவிடுவது தவிர்க்கமுடியாததாயிருந்தது; அவற்றை நாமாகவே தற்காலிகமாகக் கைவிடுவது சரியான

தாகவும் இருந்தது. மற்றும் சிலவற்றை நாம் நன்கு போரி டாததன் காரணமாக கைவிடவேண்டியிருந்தது. எப்படியா ஞலும், இப்போது முதல் நாம் நன்கு போரிடுவோமாஞல் எம்மால் எமது இழந்த பிரதேசத்தை மீட்டெடுக்க முடியும். வருங்காலத்திலும் எதிரி சில இடங்களைக் கைப்பற்றுவதைத் தடுக்க முடியாமலிருக்கலாம்; ஆஞல் அவையனைத்தையும் எம் மால் பின்னர் மீட்டெடுக்க முடியுமாயிருக்கும். படிப்பினைக ளைப் பெற்று மீண்டும் தவறுகளைச் செய்வதைத் தவிர்க்க எல் லாப் பிரதேசங்களும் தமது கடந்த காலப் போரிடும் அனுப வத்தை விமர்சனரீதியில் திருப்பிப் பார்க்கவேண்டும்.

8. கடந்த மூன்று மாதங்களில் எமது மத்திய சமவெளி விடுதலைச் சேனை கஷ்டங்களையும் தொல்லைகளையும் சமாளிப்பதில் ஈடிணையற்ற வீரியத்தைக் காட்டியுள்ளது; பழைய விடுதலைப் பிரதேசங்களுக்குள் நகர்ந்த இந்த ராணுவத்தின் ஒரு பகுதி யைத் தவிர இதன் பிரதான படை தெற்கு ஷென்சியிலும் மேற்கு ஹுபெயிலும் இரண்டு கொரில்லாத் தளங்களை அமைத்துள்ளது.[3] மேலும், கிழக்கு ஹுபெய் மத்திய ஹுபெய் இரண்டிலும் எமது துருப்புக்கள் கொரில்லா யுத்தத்தில் ஊன் றிநிற்கின்றன. இவையனைத்தும் பழைய விடுதலைப் பிரதேசங் களிலுள்ள சமருக்குப் பெரிதும் உதவியுள்ளதோடு இன்னும் உதவுகின்றன; அத்துடன் இவை எதிர்வரும் நீண்டயுத்தத்தில் மேலும் பெரியதோர் பங்கும் ஆற்றும்.

9. கடந்த மூன்று மாத கால யுத்தத்தில் நாம் சியாங் கை-ஷேக் ஆரம்பத்தில் வடகிழக்குக்கு அனுப்பத் திட்டமிட்ட திறமான படைகள் சிலவற்றைப் பெருஞ்சுவருக்குத் தெற்கே கட்டுப்படுத்தி அதன்மூலம் வடகிழக்கில் எமது படைகளின் ஒய்வுக்கும் புனருத்தாரணத்துக்கும் வெகுஜனங்களைத் தட்டி

யெழுப்புவதற்கும் நேரத்தைப் பெற்றோம். இதுவும் எமது எதிர்காலப் போராட்டங்களுக்கு மிக முக்கியமானது.

*10.* எதிரிப் படைகளை ஒன்றொன்றாய்த் துடைத்தொழிக்க ஒரு மேம்பாடான படையை ஒன்றுகுவிப்பது என்பதே ஒரேயொரு சரியான சமர்முறை; இது நாம் கடந்த மூன்று மாதங்களில் 25 எதிரி பிறிகேடுகளை அழித்தொழிக்கப் பயன்படுத்தியுள்ள முறையாகும். எதிரிப் படையைவிட ஆறு ஐந்து நான்கு அல்லது குறைந்தது மூன்று மடங்கு பலமுடைய ஒரு படையை ஒன்றுகுவிப்பது மூலம் தான் நாம் பயனுள்ளமுறையில் அதனை அழித்தொழிக்கமுடியும். இது போரியக்கங்கள் சமர்கள் இரண்டிலும் செய்யப்படவேண்டும். இந்தச் சமர் முறையில் சகல உயர்மட்டத் தளகர்த்தர்களும் மட்டுமின்றி, சகல மத்திய, கீழ்மட்ட ஊழியர்களும் தேர்ச்சிபெறல் வேண்டும்.

*11.* கடந்த மூன்று மாதங்களில் எமது ராணுவம் எதிரியின் 25 கிரமமான பிறிகேடுகளை மட்டுமின்றி, கைப்பொம்மைத் துருப்புக்கள், அமைதி பேணும் படைகள், போக்குவரத்துப் பொலீஸ் படைகள் போன்ற பிற்போக்குப் படைகளில் கணிசமான தொகையையும் அழித்தொழித்தது. இதுவும் ஒரு பெருஞ்சாதனை. இனி நாம் தொடர்ந்து இத்தகைய துருப்புக்களைப் பெருந்தொகையாக அழித்தொழிக்க வேண்டும்.

*12.* 10,000 எதிரித் துருப்புக்களைத் துடைத்தொழிக்க நாம் 2000 முதல் 3000வரை உயிர்ச் சேதங்களை அனுபவிக்க வேண்டியிருந்ததெனக் கடந்த மூன்று மாத கால அனுபவம் நிரூபித்துள்ளது. இது தவிர்க்கப்பட முடியாதது. ஒரு நீண்டயுத்தத்தைச் சமாளிக்க (எல்லாம், எங்கும் ஒரு நீண்ட யுத்தத்தை மனதிற்கொண்டு கவனிக்கப்பட வேண்டும்) நாம் எமது ராணுவத்தை ஒரு திட்டமிட்டமுறையில் விரிவுபடுத்தி, எமது

பிரதான படைகள் எப்போதும் முழுப்பலத்துடனும் இருப்பதை உத்தரவாதம் செய்வதுடன் பெருந்தொகையான ராணுவ ஊழியர்களைப் பயிற்றவேண்டும். நாம் திட்டப்படி உற்பத்தியைப் பெருக்கி, நிதி விவகாரங்களை ஒழுங்குபடுத்தவும் எமது பொருளாதாரத்தை வளர்த்துச் சப்ளையை உத்தரவாதஞ்செய்தல், ஒருமைப்பட்ட தலைமையும் பன்முக நிர்வாகமும், ராணுவம் மக்கள் இரண்டிலும் பொது நலன் தனியார் நலன் இரண்டிலும் கவனஞ்செலுத்துதல் ஆகிய கோட்பாடுகளை உறுதியாக அமுல்நடத்தவும் வேண்டும்.

13. ஜனவரிமுதல் ஜூன்வரையான போர் நிறுத்தக் கால கட்டத்தில் மத்திய கமிட்டியின் உத்தரவுகளுக்கேற்பத் தம் ராணுவப் பயிற்சியைத் தீவிரப்படுத்திய துருப்புக்களனைத்தும் (மத்திய கமிட்டி பல்வேறு பிரதேசங்களுக்கும் துருப்புக்களைப் பயிற்றுவதையும், உற்பத்தியையும் நிலச்சீர்திருத்தத்தையும் அவற்றின் மூன்று கேந்திரக் கடமைகளாகக் கொள்ளும்படி திரும்பத் திரும்ப உத்தரவிட்டது) கூடிய போராற்றலை வெளிப்படுத்தின எனவும் நன்கு பயிற்றப்படாத துருப்புக்களனைத்தும் மிகத் தாழ்ந்த போராற்றலை வெளிப்படுத்தின எனவும் இம் மூன்று மாதகால அனுபவம் நிரூபித்துள்ளது. இப்போதுமுதல் எல்லாப் பிரதேசங்களும் ராணுவப் பயிற்சியைத் தீவிரப்படுத்த சமர்களுக்கிடை இடைவேளையைப் பயன்படுத்தவேண்டும். எல்லா ராணுவ யுனிட்டுகளும் தமது அரசியல் வேலையைப் பலப்படுத்தவேண்டும்.

14. மத்திய கமிட்டியின் மே 4 உத்தரவு[4] உறுதியாகவும் வேகமாகவும் அமுல் நடத்தப்பட்டதும், நிலப்பிரச்சினை ஆழமாகவும் முற்றாகவும் தீர்க்கப்பட்டதுமான இடமெங்கும் விவசாயிகள் சியாங் கை-ஷேக்கின் துருப்புக்களின் தாக்குதல்களை

எதிர்த்து எமது கட்சியுடனும் ராணுவத்துடனும் நின்றனர் எனவும் ''மே 4 உத்தரவு'' உறுதியாக அமுல் நடத்தப்படாத அல்லது ஒழுங்குகள் மிகவும் தாமதமாகச் செய்யப்பட்ட இடங்களில், அல்லது இந்த வேலை யாந்திரிகரீதியில் கட்டங்களாக்கப்பட்ட அல்லது யுத்தத்தில் மும்முரமாக ஈடுபட்டிருப்பது என்ற சாட்டில் நிலச்சீர்திருத்தம் புறக்கணிக்கப்பட்ட இடங்களில் விவசாயிகள் பொறுத்திருந்து பார்க்கும் கண்ணேட்டமொன்றை மேற்கொண்டனர் எனவும் இம்மூன்று மாதகால அனுபவம் நிரூபித்துள்ளது. வரும் ஒரு சில மாதங்களில் எல்லாப் பிரதேசங்களும், அவை போரில் எவ்வளவு மும்முரமாய் ஈடுபட்டிருந்தாலும் நிலப்பிரச்சினையைத் தீர்ப்பதில் விவசாயி வெகுஜனங்களுக்கு உறுதியாகத் தலைமைதாங்கி, நிலச்சீர்திருத்தத்தின் அடிப்படையில் அடுத்த வருடப் பெரும் அளவிலான உற்பத்தி வேலைக்கான தயாரிப்புக்களைச் செய்யவேண்டும்.

15. மக்கள் குடிப்படை, கொரில்லாக்கள், ஆயுதந்தாங்கிய வேலைக் குழுக்கள் உட்பட ஸ்தல ஆயுதப்படைகள் நன்கு ஸ்தாபனப்படுத்தப்பட்ட இடமெங்கும் எதிரி தற்காலிகமாகப் பல நிலையங்களையும் மார்க்கங்களையும் கைப்பற்றியிருந்தபோதும் எம்மால் பரந்த கிராமியப் பிரதேசங்களைக் கட்டுப்படுத்த முடிந்தது; ஆனல் ஸ்தலப் படைகள் பலவீனமானவையாகவும் தலைமை மோசமானதாகவும் இருந்த இடமெங்கும் எதிரிக்கு பெரும் வசதியாயிருந்தது என இம்மூன்று மாதகால அனுபவம் நிரூபித்துள்ளது. இன்றுமுதல், நாம் கட்சித் தலைமையைப் பலப்படுத்தி, எதிரி தற்காலிகமாக இடங்கொண்டுள்ள பிரதேசங்களில் ஸ்தலப் படைகளை வளர்த்து, கொரில்லா யுத்தத்தில் ஊன்றிநின்று, பொதுமக்களின் நலன்களைப் பாதுகாத்து,

பிற்போக்குவாதிகளின் நடவடிக்கைகளுக்கு அடிகொடுக்கவேண்டும்.

16. மூன்று மாதகால யுத்தம் கோமிந்தாங்கின் கையிருப்புப் படைகளைக் கிட்டத்தட்ட வற்றச் செய்து, கோமிந்தாங் ஆளும் பிரதேசங்களில் அதன் ராணுவப் பலத்தைப் பெரிதும் பலவீனப்படுத்தியுள்ளது. அதேசமயத்தில் கோமிந்தாங் கட்டாயப் படைச்சேர்ப்பையும், தானிய வரிகளையும் மீண்டும் ஆரம்பித்தமை, பொதுமக்களின் அதிருப்தியைக் கிளப்பி, வெகுஜனப் போராட்டங்களின் வளர்ச்சிக்குச் சாதகமான நிலைமையொன்றை உருவாக்கியுள்ளது. முழுக் கட்சியும் கோமிந்தாங் ஆளும் பிரதேசங்களிலுள்ள வெகுஜனப் போராட்டங்களில் தன் தலைமையைப் பலப்படுத்தி, கோமிந்தாங் ராணுவத்தைச் சின்னாபின்னப்படுத்தும் வேலையைத் தீவிரப்படுத்தவேண்டும்.

17. கோமிந்தாங் பிற்போக்குவாதிகள் அமெரிக்காவின் தூண்டுதலில் இந்த ஆண்டு ஜனவரி மாதப் போர் நிறுத்த ஒப்பந்தத்தையும், அரசியற் கலந்தாலோசனை மாநாட்டின் தீர்மானங்களையும் மீறி, மக்களின் ஜனநாயக சக்திகளை அழித்தொழிக்கும் முயற்சியில் உள்நாட்டு யுத்தத்தைத் தொடுக்கத் தீர்மானித்துள்ளனர். அவர்களின் நல்வார்த்தைகளனைத்தும் ஏமாற்றேயாகும். நாம் அமெரிக்காவினதும் சியாங் கை-ஷேக்கினதும் எல்லாச் சூழ்ச்சிகளையும் அம்பலப்படுத்த வேண்டும்.

18. தேசிய பூர்ஷுவா வர்க்கமுட்படக் கோமிந்தாங் பிரதேசங்களிலுள்ள மிகப் பரந்துபட்ட வர்க்கத்தட்டு மக்கள் கோமிந்தாங்கும் அமெரிக்க அரசாங்கமும் கூட்டுச்சேர்ந்து, உள்நாட்டு யுத்தத்தை ஆரம்பித்து மக்களை அடக்கியொடுக்குகின்றன என்று இந்த மூன்று மாதகாலத்தில் விரைவாக மேலும்

நன்கு புரிந்துகொண்டுள்ளனர். மார்ஷலின் மத்தியஸ்தம் ஒரு ஏமாற்று, கோமிந்தாங் தான் உள்நாட்டு யுத்தத்தின் முழுக் குற்றவாளி என்ற உண்மையை இப்போது வர வரக் கூடுதலான மக்கள் உணர்ந்து கொள்கின்றனர். பரந்துபட்ட வெகு ஜனங்கள் அமெரிக்காபற்றியும் கோமிந்தாங்பற்றியும் கொண்டிருந்த பிரமைகளை நீக்கி இப்போது எமது கட்சியின் வெற்றி மீது நம்பிக்கை வைத்துள்ளனர். இந்த உள்நாட்டு அரசியல் நிலைமை மிகவும் சாதகமானது. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பிற்போக்குக் கொள்கை சகல நாடுகளிலுமுள்ள பரந்துபட்ட வெகுஜனங்களின் அதிருப்தியை மென்மேலும் அதிகரிக்கச் செய்கிறது. சகல நாட்டு மக்களதும் அரசியலுணர்வு நாளுக்குநாள் உயர்ந்து வருகிறது. எல்லா முதலாளித்துவ நாடுகளிலும் மக்கள் ஜனநாயகப் போராட்டம் நாளுக்குநாள் ஓங்கிவளர்கிறது; பல்வேறு நாடுகளில் கம்யூனிஸ்ட் கட்சிகளின் பலம் பெரிதும் அதிகரித்துள்ளது, பிற்போக்குவாதிகளால் அவற்றை அடிபணியச் செய்யமுடியாது. சோவியத் யூனியனின் வல்லமையும், பல்வேறு நாட்டு மக்கள் மத்தியிலுள்ள அதன் செல்வாக்கும் நாளுக்குநாள் வளருகின்றன. அமெரிக்கப் பிற்போக்குவாதிகளும், அவர்கள் ஆதரிக்கும் இதர நாட்டுப் பிற்போக்குவாதிகளும் மென்மேலும் தனிமைப்படுவது நிச்சயம். இந்தச் சர்வதேசிய அரசியல் நிலைமை மிகவும் சாதகமானது. உள்நாட்டிலும் வெளிநாட்டிலுமுள்ள நிலைமை முதலாம் உலக மகா யுத்தத்திற்குப் பிந்திய நிலைமையிலிருந்து பெரிதும் வேறுபடுகிறது. இரண்டாம் உலக மகா யுத்தத்திற்குப்பின் புரட்சிகரச் சக்திகள் பிரமாண்டமாக வளர்ந்துள்ளன. சீனப் பிற்போக்குவாதிகளும் வெளிநாட்டுப் பிற்போக்குவாதிகளும் எவ்வளவு மூர்க்கத்தனமுடையவராலுைம் (அவர்களின் மூர்க்கத்

தனம் வரலாற்றுரீதியில் தவிர்க்கப்படமுடியாததும், ஆச்சரியப் படுவதற்கே இடமற்றதுமாகும்.) எம்மால் அவர்களைத் தோற் கடிக்கமுடியும். எல்லாப் பிரதேசங்களிலுள்ள தலைமைத் தோ ழர்களும் சாதகமான உள்நாட்டு, வெளிநாட்டு நிலைமையை நன்கு புரிந்துகொள்ளாததன் காரணமாக எதிர்காலப் போராட் டத்தைப்பற்றி நம்பிக்கையற்றிருக்கும் கட்சித் தோழர்களுக்கு இதைப் பூரணமாக விளங்கப்படுத்தவேண்டும். எதிரியிடம் இன்னும் பலமும், எம்மிடம் இன்னும் சில பலவீனங்களும் உண்டென்றும், போராட்டம் இன்னும் நீண்ட ஒன்றாகவும் கொடூரமான ஒன்றாகவும் இருக்கிறதென்றும் தெளிவுபடுத்தப் படவேண்டும். ஆனால் நாம் நிச்சயம் வெற்றி பெறமுடியும். இந்த விளக்கமும் நம்பிக்கையும் கட்சி பூராவிலும் திடமாக நிலைநாட்டப்படவேண்டும்.

19. வரும் ஒருசில மாதங்கள் ஒரு முக்கிய காலகட்டமாக வும் கஷ்டமான காலகட்டமாகவும் இருக்கும். நாம் விடா முயற்சியுடன் முழுக் கட்சியையும் அணிதிரட்டி, கவனமாகத் திட்டமிடப்பட்ட ராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டு, ராணுவ நிலைமையை அடிப்படையிலேயே மாற்ற வேண்டும். எல்லாப் பிரதேசங்களும் மேற்கூறிய கொள்கைகளை உறுதி யாக அமுல்நடத்தி, ராணுவ நிலைமையில் ஒரு அடியந்தமான மாற்றமேற்படப் பாடுபடவேண்டும்.

## குறிப்புகள்

1. "தேர்ந்தெடுக்கப்பட்ட மாஓ சேதுங் படைப்புகள்" வால்யும் 4லே "சியாங் கை-ஷேக்கின் தாக்குதலை ஒரு தற்காப்பு யுத்தத்தால் முறியடியுங்கள்" என்ற கட்டுரையைப் பார்க்கவும்.

2. 1947ம் ஆண்டு ஜூலையில் ஷன்சி-ஹோபெய்-ஷன்துங்-ஹோனுன் மக்கள் விடுதலைச் சேனை போரிட்டு மஞ்சள் நதியைக் கடந்து தாபியெ மலையை நோக்கி முன்னேறியபோது எதிரிக்கும் எமக்குமிடை நிலைமை மாறத் தொடங்கியதெனப் பின்னைய வளர்ச்சிகள் காட்டின. அப்போது வரை எமது மக்கள் விடுதலைச் சேனை பன்னிரண்டு மாதங்கள் போர்செய்து, மாதத்திற்குச் சராசரி எட்டாகக் கிட்டத்தட்ட நூறு எதிரி பிறிகேடுகளைத் துடைத்தொழித்தது. இது இந்தக் கட்டுரையில் செய்யப்பட்டுள்ள கணிப்பீட்டை மிஞ்சியது, ஏனெனில், அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆதரவுடன் சியாங் கை-ஷேக் தனக்குக் கிடைக்கக் கூடியதாயிருந்த படைகளனைத்தையும் தாக்குதலில் உபயோகித்திருந்தான்.

3. 1946ம் ஆண்டு ஜூன் மாத இறுதியில் லீ ஸியென்-நியென், செங் வெய்-சன் முதலிய தோழர்களின் தலைமையிலிருந்த மத்திய சமவெளி விடுதலைச் சேனை 300,000 கோமிந்தாங் துருப்புக்களின் சுற்றிவளைத்துத் தாக்குதலின்போது தானுகவே தன் படைகளின் யுத்ததந்திர நகர்வொன்றை மேற்கொண்டு எதிரியின் சுற்றிவளைப்பை வெற்றிகரமாக உடைத்துச் சென்றது. பழைய விடுதலைப் பிரதேசங்களுக்கு நகர்ந்தவை எனத் தோழர் மாஓ சேதுங் அவர்களால் குறிப்பிடப் பட்ட யுனிட்டுகள் வாங் சென்னுலும் இதர தோழர்களாலும் தலைமைதாங்கப் பட்டவை. அவை சுற்றிவளைப்பை உடைத்து ஷென்சி-கன்சு-நிங்சியா எல்லைப் பிரதேசத்திற்குள் சென்றன. தெற்கு ஷென்சியிலிருந்த கொரில்லாத் தளம் மத்திய சமவெளி விடுதலைச் சேனையின் பிரதான படையில் ஒரு பகுதியால் நிறுவப்பட்டது; அது மேற்கு ஹோனுனிலுள்ள லூஷு, ஸிச்சுவான் ஆகியவற்றையும் தெற்கு ஷென்சியிலிருந்த லோனுன், ஷன்யாங் ஆகியவற்றையும் உள்ளடக்கியிருந்தது. மேற்கு ஹூபெயிலிருந்த கொரில்லாத் தளம் வடமேல் ஹூபெயிலுள்ள வூடாங் மலையை அதன் மையமாகக் கொண்டு அதே சேனையின் இன்னொரு பகுதியால் அமைக்கப்பட்டது.

4. இது 1946ம் ஆண்டு மே 4ந் தேதி சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டி வெளியிட்ட ''நிலப்பிரச்சினை பற்றிய உத்தர''வைக் குறிக்கிறது. ஜப்பான் சரணடைந்தபின் விவசாயிகளின் நிலத்திற்கான ஆர்வமான கோரிக்கையைக் கருத்திற்கொண்டு சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டி ஜப்பானிய-எதிர்ப்பு யுத்த காலகட்ட நிலக் கொள்கையை மாற்றத் தீர்மானித்தது. அதாவது, அதை குத்தகையையும் வட்டியையும் குறைப்பது என்பதிலிருந்து, நிலப்பிரபுக்களின் நிலத்தைப் பறிமுதல் செய்து அதை விவசாயிகள் மத்தியில் பங்கீடுசெய்வது என்பதாக மாற்றத் தீர்மானித்தது. ''மே 4 உத்தரவு'' இம்மாற்றத்தைக் குறித்தது.

# வடமேற்கு யுத்த அரங்குக்கான போர்நடவடிக்கைக் கோட்பாடு*

**(1947, ஏப்ரல் 15)**

*1. எதிரி இப்போது பெரிதும் களைத்துவிட்டான்; ஆனால் அவன் இன்னும் முற்று முழுதாகக் களைத்துவிடவில்லை. அவன் தனது உணவுச் சப்ளை சம்பந்தமாகக் குறிப்பிடத்தக்களவு கஷ்டங்களையுடையவனாயிருக்கிறான்; ஆனால் இன்னும் மிக மோசமான கஷ்டங்களுக்காளாகவில்லை. எமது ராணுவம் எதிரியின் 31வது பிறிகேட்[1]டைத் துடைத்தொழித்த பின் பெருந்தொகையான எதிரிப் படைகளெதையும் அழித்தொழிக்காத போதிலும் கடந்த இருபது நாட்களில் நாம் அவனைப் பெரிதும் களைக்கவைப்பதும் அவனின் உணவுச் சப்ளையைக் கணிசமானளவு குறைப்பதுமான நோக்கத்தை அடைந்து, அதன் மூலம் அவனை முற்றாகக் களைக்கவைத்து அவனது உணவுச் சப்ளைகளனைத்தையும் துண்டித்து இறுதியில் அவனைத் துடைத்*

---

*இது தோழர் மாஓ சேதுங் அவர்களால் வடமேற்குக் களச்சேனைக்கு அனுப்பப்பட்ட தந்தி. அப்பொழுது வடமேற்குச் சேனை பெங் தே-ஹுவய், ஹோ லுங், ஸி சுங்-சியுன் ஆகியோரினதும் பிற தோழர்களினதும் ஆணையிலிருந்த, ஷென்சி-கன்சு-நிங்சியா விடுதலைப் பிரதேசத்திலும் ஷன்சி-சுய்யுவான் விடுதலைப் பிரதேசத்திலுமிருந்த மக்கள் விடுதலைச் சேனைப் படைகளால் அமைந்திருந்தது.

தொழிப்பதற்குச் சாதகமான நிலைமைகளை உருவாக்கியுள்ளோம்.

2. தற்போது களைப்பும் உணவுப் பற்றுக்குறையும் இருந்த போதும் எதிரியின் கொள்கை எமது பிரதான படையைக் கிழக்கே மஞ்சள் நதிக்கு அப்பால் துரத்தி, பின் சுய்தேவையும் மிச்சியையும் அடைத்து தமது துருப்புக்களைத் ''துடைத்தொழிக்கும்'' நடவடிக்கைகளுக்காகப் பிரிப்பதாகும். மார்ச் 31ந் தேதி எதிரித் துருப்புக்கள் சிங்சியெனை அடைந்தன, ஆனால் அவை உடனடியாக வடக்கு நோக்கி முன்னேறவில்லை. அவற்றின் நோக்கம் எமக்கு ஒரு தட்டுத்தடங்கலற்ற பாதையை விட்டுவைப்பதாகும். அவை மேற்கே வாயௌபாஓவை நோக்கி முன்னேறியதற்குக் காரணம் எம்மை சுய்தேவுக்கும் மிச்சிக்கும் துரத்துவதாகும். எமது துருப்புக்களைக் கண்டுபிடித்து விட்டதால் அவை இப்போது வாயௌபாஓவுக்குத் தெற்கேயும் மேற்கேயும் திரும்புகின்றன; பின் எம்மை வடக்கே துரத்துவதற்காக அவை அந்தப் பட்டினத்தை நோக்கி மீண்டும் முன்னேறும்.

3. எமது கொள்கை எமது முன்னைய முறையை, அதாவது, எதிரியைக் கொஞ்சக் காலத்திற்கு (சுமார் ஒரு மாதமளவு) இந்தப் பிரதேசத்தில் அலைந்துதிரியவைப்பதைத் தொடர்ந்து கடைப்பிடிப்பதாகும். அதன் நோக்கம் எதிரியை முற்றாகக் களைக்கவைத்து, அவனது உணவுச் சப்ளைகளைப் பெரிதும் குறைத்து, அவனை அழித்தொழிப்பதற்கான ஒரு சந்தர்ப்பத்தைப்பார்த்துக்கொள்வதாகும். எமது பிரதான படை யூலினைத் தாக்க வடக்கு நோக்கிச் செல்லவோ, எதிரியின் பின்வாங்கும் மார்க்கத்தைத் துண்டிக்கத் தெற்கு நோக்கிச் செல்லவோ அவசரப்படத் தேவையில்லை. எமது ராணுவத்தின் இந்த

முறை எதிரியை இறுதியாகத் தோற்கடிப்பதற்கு அவசியமான பாதை என்பதை அதிகாரிகளுக்கும் போராளிகளுக்கும் வெகு ஜனங்களுக்குங்கூடத் தெளிவுபடுத்த வேண்டும். நாம் எதிரியை அதீத களைப்புக்கும் பூரண பட்டினிக்கும் ஆளாக்காவிட்டால் நாம் இறுதி வெற்றி பெற முடியாது. இதை ''தேய்த்து நையச் செய்யும்'' தந்திரோபாயம், அதாவது, எதிரியைப் பூரண களைப்புக்காளாக்கி அவனை அழித்தொழிப்பது என்று கூறலாம்.

4. தற்போது நீங்கள் வாயெளபாஒவுக்குக் கிழக்கிலும் வடக்கிலும் உள்ள இடங்களில் இருப்பதால் எதிரியை வாயெள பாஒவுக்கு வடக்கே செல்லத் தூண்டுவது சிறந்தது; பின் நீங்கள் லியெள அங்[2]னின் படைகளின் பலவீனமான பகுதியைத் தாக்கி எதிரியைக் கிழக்குக்கு நகரத் தூண்டலாம்; அதன் பின் நீங்கள் அன்சாய் நோக்கித் திரும்பி எதிரியை மீண்டும் மேற்குக்கு நகரத் தூண்டலாம்.

5. ஆனால் ஒருசில நாட்களுக்குள் நீங்கள் 359வது பிறிகேட் முழுவதற்கும் ஒரு தெற்கு நோக்கிய எதிர்பாராத் தாக்குதலுக்கான அதன் தயாரிப்புகளை முடித்துவிட வேண்டுமென உத்தரவிட வேண்டும்; அப்படியானால் இன்றுமுதல் ஒரு வாரத்தில் யென்சாங்-யென்ஆன் மார்க்கத்திற்குத் தெற்கிலும், யீச்சுவான்-லோச்சுவான் மார்க்கத்திற்கு வடக்கிலுமுள்ள பிரதேசங்கள்மீது எதிர்பாராத் தாக்குதல் தொடுத்து எதிரியின் உணவுப் போக்குவரத்து மார்க்கத்தைத் துண்டிக்க அதை தெற்கு நோக்கி அனுப்ப முடியும்.

6. மேற்கூறிய கருத்துக்கள் உங்களுக்கு நியாயமானவையாகப்படுகின்றனவா இல்லையா என்று தயவு செய்து பதிலளிக்கவும்.

# குறிப்புகள்

*1. தானுகவே யென்ஆனிலிருந்து பின்வாங்கிய வடமேற்கு மக்கள் விடுதலைச் சேனை தன் பிரதான படையை யென்ஆனுக்கு வடகிழக்கிலுள்ள சிங்ஹுவா பியென் பகுதியில் எதிரிமீது மறைவுத் தாக்குதல் தொடுக்க வைத்துக்கொண்டு, எதிரியின் பிரதான படையை அன்சாய் (யென்ஆனுக்கு வடமேற்கில் இருக்கிறது) வரை கவர்ந்திழுக்க ஒரு சிறு படையை வெளியே அனுப்பியது. 1947 மார்ச் 25ந் தேதி ஹு சுங்-நானின் தலைமையிலிருந்த கோமிந்தாங் படைகளின் புனரமைக்கப்பட்ட 27வது டிவிஷனின் 31வது பிறிகேட்டின் ரெஜிமென்ட் ஒன்று பிறிகேட் ஆணைப்பகுதியின் தலைமையில் நேரடியாக இந்தப் பொறியில் சிக்கி ஒரு மணித்தியாலத்திற்குச் சற்றுக் கூடுதலான நேரம் மட்டுமே நடந்த ஒரு சமரில் எமது படைகளால் பூரணமாக அழித்தொழிக்கப்பட்டது.*

*2. லியௌ அங் ஹு சுங்-நானின் தலைமையிலிருந்த கோமிந்தாங் படைகளின் புனரமைக்கப்பட்ட 76வது டிவிஷனின் கமாண்டர். அவன் பின்னர் 1947ம் ஆண்டு அக்டோபர் 11ந் தேதி சிங்சியெனில் நடந்த ஒரு சமரில் எமது படைகளால் கைது செய்யப்பட்டான்.*

# விடுதலை யுத்தத்தின் இரண்டாவது ஆண்டுக்கான யுத்ததந்திரக் கோட்பாடு*

**(1947, செப்டம்பர் 1)**

*1.* முதலாவது ஆண்டுப் போரில் (கடந்த ஆண்டு ஜூலை முதல் இந்த ஆண்டு ஜூன்வரை) நாம் $97\frac{1}{2}$ கிரமமான பிறிகேடுகளை அல்லது 780,000 பேரையும், கைப்பொம்மைத் துருப்புக்கள், அமைதி பேணும் படைகள், ஏனையோருட்பட மொத்தம் 340,000 பேரையுமாக எல்லாமாக எதிரியில் 1,120,000 பேரைத் துடைத்தொழித்தோம். இது ஒரு மாபெரும் வெற்றி. இது எதிரிக்கு ஒரு பலத்த அடி கொடுத்து, எதிரி முகாம் முழுவதிலும் மிகவும் ஆழமான தோல்விவாத

---

*இது, தோழர் மாஓ சேதுங் அவர்களால் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டிக்காக எழுதப்பட்ட உட்கட்சி உத்தரவு. அப்போது அவரும் மத்திய கமிட்டியும் வட ஷென்சியில் சியாஸியென் மாவட்டத்தில் சூகுவாங்சாயில் இருந்தனர். இந்த உத்தரவு விடுதலை யுத்தத்தின் இரண்டாவது ஆண்டிற்கான அடிப்படைப் பணியை வகுத்தது. இப்பணி எமது பிரதான படைகளைக் கொண்டு யுத்தத்தைக் கோமிந்தாங் பிரதேசங்களுக்குக் கொண்டு சென்று, உட்புற முனைகளிற் போரிடுவதிலிருந்து வெளிப்புற முனைகளிற் போரிடுவதற்கு மாறுவது, அதாவது, யுத்ததந்திர ரீதியான தற்காப்புக் கட்டத்திலிருந்து யுத்ததந்திர ரீதியான தாக்குதல் கட்டத்திற்குச் செல்வது ஆகும். தோழர் மாஓ சேதுங் அவர்களால் வகுக்கப்பட்ட யுத்ததந்திரத் திட்டத்தின் பிரகாரம்

மனப்பான்மையை ஏற்படுத்தி, நாடு பூராவுமுள்ள மக்களுக்கு ஊக்கமளித்து, எமது படை எதிரிப் படையைப் பூரணமாக ஒழித்து, இறுதி வெற்றி பெறுவதற்கு அததிவாரமிட்டது.

2. முதலாவது ஆண்டுப் போரில் எதிரி தன் 248 கிரமமான பிறிகேடுகளில் 218ஐ அல்லது 1,600,000க்கு மேற்பட்டோரையும், விசேஷப் படைகளையும் (அதாவது, கடற்படை, ஆகாயப்படை, பீரங்கிப்படை, எஞ்சினியர் படை, கவசப் படை ஆகியவற்றையும்) கைப்பொம்மைத் துருப்புக்கள், போக்குவரத்துப் பொலீஸ் படைகள், அமைதி பேணும் படைகள் ஆகியவற்றையும் சார்ந்த கிட்டத்தட்ட 1,000,000 பேரையும் உபயோகித்து, எமது விடுதலைப் பிரதேசங்கள்மீது ஒரு பெரும் தாக்குதல் தொடுத்தான். எமது ராணுவம் உட்புற முனைகளுக்குள் போரிடும் சரியான யுத்ததந்திரத்தைக் கைக்கொண்டது; அது எந்நேரமும் எங்கும் முன்முயற்சியுடையதாய் இருப்பதற்காக, 300,000 பேருக்கு மேற்பட்ட சேதங்களுக்கு ஆளா

---

மக்கள் விடுதலைச் சேனை 1947 ஜூலை-செப்டம்பர் காலத்தின் போது தேசவிசால ரீதியில் தாக்குதலுக்கு மாறியது. ஷன்சி-ஹோபெய்-ஷன்துங்-ஹோனன் களச்சேனை ஜூன் 30ந் திகதி தென்மேற்கு ஷன்துங்கில் மஞ்சள் நதியைப் போரிட்டுக் கடந்து, ஆகஸ்ட் முற்பகுதியில் லுங்ஹாய் புகையிரத மார்க்கத்தைத் தாண்டி, தாபியெ மலைகளுக்குள் முன்னேறியது. ஷன்சி-ஹோபெய்-ஷன்துங்-ஹோனன் களச்சேனையின் தையுயெ படை வியூகம் ஆகஸ்ட் பிற்பகுதியில் தெற்கு ஷன்சியிலிருந்து மஞ்சள் நதியைப் போரிட்டுக் கடந்து, மேற்கு ஹோனனிற்குள் முன்னேறியது. எதிரியின் குவிந்த தாக்குதலொன்றைத் துகளாக்கிய பின், கிழக்குச் சீனக் களச்சேனை செப்டம்பர் ஆரம்பத்தில் தென்மேற்கு ஷன்துங்கிற்குள் முன்னேறியது. அதே மாதத்தில் கிழக்குச் சீனக் களச்சேனையின் ஷன்துங் படை வியூகம் கிழக்கு ஷன்துங்கில் இருந்த எதிரிக்கு எதிராகத் தாக்குதலொன்றைத் தொடங்கியது. வடமேற்குக் களச்சேனை ஆகஸ்ட் பிற்பகுதியில் எதிர்த்தாக்குதலுக்கு மாறியது. ஷன்சி-சஹார்-ஹோபெய் களச்சேனை செப்

குவதையும் எதிரியால் பெரும் பிரதேசங்கள் கைப்பற்றப்படு வதையும் அனுமதிக்கத் தயங்கவில்லை. இதன் விளைவாக நாம் 1,120,000 எதிரித் துருப்புக்களைத் துடைத்தொழிப்பதில் வெற்றிபெற்று, எதிரியைத் தன் துருப்புக்களைக் கலைக்க நிர்ப்பந்தித்து, எமது படையைப் புடம்போட்டெடுத்துப் பலப்படுத்தி, வட கிழக்கிலும், ஹெஹோவிலும், கிழக்கு ஹோபெயிலும், தெற்கு ஷன்சியிலும், வட ஹோனனிலும் யுத்ததந்திர ரீதியான எதிர்த் தாக்குதல்கள் தொடுத்து, பெரும் பிரதேசங்களை மீட்டெடுத்து, விசாலமான புதிய பிரதேசங்களை விடுதலை செய்தோம்.[1]

3. இரண்டாவது ஆண்டுப் போரில் எமது ராணுவத்தின் அடிப்படைக் கடமை ஒரு நாடு பரந்த எதிர்த் தாக்குதலைத் தொடுப்பதாகும். அதாவது, எமது பிரதான படைகளை உப யோகித்துப் போரிட்டுக் கொண்டே வெளிப்புற முனைகளுக் குப் போய், யுத்தத்தைக் கோமிந்தாங் பிரதேசங்களுக்குள் கொண்டு சென்று, வெளிப்புற முனைகளிலுள்ள எதிரிகளைப்

---

டம்பர் ஆரம்பத்தில் பெய்ப்பிங்-ஹன்கோ புகையிரத மார்க்கத்தின் வடக்குப் பிரிவு நெடுகிலும் இருந்த எதிரிக்கெதிராகத் தாக்குதலொன்றைத் தொடங்கியது. வட கிழக்குக் களச்சேனை வடகிழக்கு பூராவிலுமான அதன் கோடைகாலத் தாக்குதலின் பின் உடனடியாக, செப்டம்பரில் தொடங்கி, சாங்சுன்-கிலின்-சுபிங் பிரதேசத்திலும் பெய்ப்பிங்-லியௌனிங் புகையிரத மார்க்கத்தின் ஜின்சி-ஈஸியென் பிரிவு நெடுகிலும் பெருமளவிலான இலையுதிர்காலத் தாக்குதல் ஒன்றைத் தொடுத்தது. இந்த யுத்த அரங்குகள் எல்லாவற்றிலுமான தாக்குதல்கள் மக்கள் விடுதலைச் சேனை முழுவதினதும் ஒரு பொதுவான தாக்குதலாக அமைந்தன. இந்தப் பெருமளவிலான தாக்குதல் விடுதலை யுத்தத்தில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தி, யுத்த நிலைமையில் அடியந்தமான ஒரு மாற்றத்தைக் குறித்தது. ''தேர்ந்தெடுக்கப்பட்ட மாஓ சேதுங் படைப்புகள்'' வால்யும் 4 லே ''இன்றைய நிலைமையும் நமது கடமைகளும்'' என்ற கட்டுரையைப் பார்க்கவும்.

பெருந்தொகையில் துடைத்தொழிப்பதும், யுத்தத்தைத் தொடர்ந்து விடுதலைப் பிரதேசங்களுக்குள் கொண்டு சென்று, எமது மனித சக்தியையும் பொருளாயத ஊற்றுமூலங்களையும் மேலும் சேதப்படுத்தி வற்றச்செய்து, எம்மால் வெகுகாலம் நின்று பிடிக்கமுடியாதபடி செய்வதான கோமிந்தாங்கின் எதிர்ப் புரட்சி யுத்ததந்திரத்தை முற்றுகத் தகர்ப்பதுமாகும். இரண்டாவது ஆண்டுப் போரில் எமது ஒரு பகுதிக் கடமை எமது பிரதான படைகளில் ஒரு பகுதியையும், எமது பெருந்தொகையான ஸ்தலத் துருப்புக்களையும் உபயோகித்து, உட்புற முனைகளில் தொடர்ந்து போரிட்டு, அங்குள்ள எதிரியைத் துடைத்தொழித்து, எமது இழந்த பிரதேசங்களை மீட்டெடுப்பதாகும்.

4. வெளிப்புற முனைகளில் போரிட்டு, யுத்தத்தைக் கோமிந்தாங் பிரதேசத்திற்குள் கொண்டு செல்வதான கொள்கையை அமுல்நடத்துகையில் எமது ராணுவம் நிச்சயமாகப் பல கஷ்டங்களைச் சந்திக்கும். காரணம், கோமிந்தாங் பிரதேசங்களுக்குள் புதிய தளப்பிரதேசங்களை அமைக்க நாட்பிடிக்கும்; பல பின்னுக்கும் முன்னுக்கும் செல்லும் நடமாட்டப் போர்நடவடிக்கைகளில் பெருந்தொகையான எதிரிகளை அழித்தொழித்து, வெகுஜனங்களைத் தட்டியெழுப்பி, நிலத்தைப் பங்கீடுசெய்து, எமது அரசியலதிகாரத்தை ஸ்தாபித்து, மக்களின் ஆயுதப்படைகளைக் கட்டியமைத்தபின்தான் எம்மால் ஸ்திரமான தளப்பிரதேசங்களை அமைக்கமுடியும். அது வரையில், இருக்கும் கஷ்டங்கள் குறைவாயிராது. ஆனால் அவை சமாளிக்கப்பட முடியும், சமாளிக்கப்படவும் வேண்டும். காரணம், எதிரி மேலும் பரந்திருக்க நிர்ப்பந்திக்கப்பட்டு பரந்த பிரதேசங்கள் நடமாட்டப் போர்நடவடிக்கைகளுக்கான சமர்க்களங்களாக எமது ராணுவத்திற்குக் கிடைக்கும்; அதனுல் எம்

மால் நடமாட்ட யுத்தத்தை நடத்த முடியுமாயிருக்கும்; அப் பிரதேசங்களிலுள்ள வெகுஜனங்கள் கோமிந்தாங்கை வெறுக் கவும் எம்மை ஆதரிக்கவும் செய்கின்றனர்; எதிரிப் படை யின் ஒரு பகுதி ஒப்பீட்டளவில் உயர்ந்த போராற்றலையுடை யதாயிருப்பினும் பொதுவாக எதிரியின் மனவுறுதியும் போ ராற்றலும் ஒரு வருடத்திற்கு முந்தியதைவிட மிகவும் தாழ்ந் திருக்கிறது.

5. கோமிந்தாங் பிரதேசங்களில் போரில் வெற்றிபெறுவ தற்கான திறவுகோல்கள்: முதலாவது போரிடுவதற்கேற்ற சந் தர்ப்பங்களை விடாது பிடித்துக்கொள்வதும், தைரியமும் உறு தியுமுடையவராயிருப்பதும், இயலுமானளவு அதிக சமர்களில் வெற்றி பெறுவதும்; இரண்டாவது, வெகுஜனங்கள் எமது ராணுவத்தை ஆதரிப்பதற்காக வெகுஜனங்களை வென்றெடுக் கும் கொள்கையை உறுதியாக அமுல்நடத்தி, பரந்துபட்ட வெகுஜனங்களை நன்மைபெறச் செய்வது. இவ்விரு அம்சங் களும் அமுல்நடத்தப்படின் நாம் வெற்றி பெறுவோம்.

6. இந்த ஆண்டு ஆகஸ்ட் இறுதிவரை துடைத்தொழிக்கப் பட்டவை அல்லது அழிவுதரும் அடிகள் வாங்கியவை உட்பட எதிரிப் படைகளின் ஸ்தலவாரியான பங்கீடு தென்முன்னணி யில் 157 பிறிகேடுகளும், வடமுன்னணியில் 70 பிறிகேடுக ளும், கோமிந்தாங் பின்னணிப் பிரதேசங்களில் 21 பிறிகேடு களுமாம். முழு நாட்டிலும் மொத்தம் இன்னும் 248 பிறி கேடுகளும், துருப்புக்களின் உண்மையான எண்ணிக்கை சுமார் 1,500,000 உம் ஆகும். விசேஷபடைகளிலும் கைப்பொம் மைத் துருப்புக்களிலும் போக்குவரத்துப் பொலீஸ் படைகளிலும் அமைதிபேணும் படைகளிலும் உள்ள துருப்புக்களின் தொகை சுமார் 1,200,000. எதிரியின் பின்னணிப் பிரதேசங்களிலான

ராணுவ நிறுவனங்களிலுள்ள போரிடாதோர் தொகை சுமார் **1,000,000.** முழு எதிரிப் படைகளதும் மொத்தத்தொகை **3,700,000.** தென்முன்னணி துருப்புகளில் **117** பிறிகேடுகள் கூ சு-தொங்கின் குழுவையும் 7 செங் சியெனின் குழுவையும் இதர குழுக்களையும், 33 ஹு சுங்-நானின் குழுவையும் சேர்ந்தவை. கூ சு-தொங்கின் குழுவின் **117** பிறிகேடுகளில் 63 எமது படையால் துடைத்தொழிக்கப்பட்டன அல்லது அழிவுதரும் அடிகள் வாங்கியுள்ளன. இவற்றுள் சிலவற்றில் இன்னும் காலியிடங்கள் நிரப்பப்படவில்லை; மற்றவற்றில் காலியிடங்கள் நிரப்பப்பட்டாலும் அவற்றில் கொஞ்ச ஆட்களே உள்ளனர்; அவற்றின் போராற்றலும் தாழ்ந்ததாய் உள்ளது; ஏனையவற்றுக்கு மனித சக்தியும் ஆயுதமும் கணிசமானளவு நன்கு புதிதாக நிரப்பப்பட்டு அவற்றின் போராற்றல் ஓரளவு திரும்பப் பெறப்பட்டாலும் அவை முன்பிருந்ததைவிட மிகவும் பலவீனமாயிருக்கின்றன. துடைத்தொழிக்கப்படாமலும், அழிவுதரும் அடிகள் வாங்காமலும் ஆக 54 பிறிகேடுகள்தான் உள்ளன. கூ சு-தொங்கின் முழுப்படையிலும் 82 முதல் 85 பிறிகேடுகள்வரை காவற்பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன; அவை ஸ்தல நடவடிக்கைகளுக்கு மாத்திரமே உபயோகப்படுத்தப்பட முடியும்; 32 முதல் 35 பிறிகேடுகள் வரை மாத்திரமே யுத்ததந்திர ரீதியான நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்பட முடியும். செங் சியென் குழுவையும் இதர குழுக்களையும் சேர்ந்த 7 பிறிகேடுகளும் பொதுவாகக் காவற்பணிக்குத்தான் உபயோகப்படுத்தப்படமுடியும்; அவற்றுளொன்று ஏற்கெனவே அழிவுதரும் அடி வாங்கிவிட்டது. ஹு சுங்-நான் குழுவின் 33 பிறிகேடுகளில் (லன்செளவிற்குக் கிழக்கேயும் நிங்சியாவிற்கும் யூலினுக்கும் தெற்கேயும் லின்ஃபென்னிற்கும் லோயா

னிற்கும் மேற்கேயும் உள்ளவை உட்பட) 12 துடைத்தொழிக்கப்பட்டன அல்லது அழிவுதரும் அடிகள் வாங்கியுள்ளன; 7 தான் யுத்ததந்திர ரீதியான நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்பட முடியும்; ஏனையவை காவற்பணி புரிகின்றன. வட முன்னணியில் எதிரியிடம் எல்லாமாக 70 பிறிகேடுகளுள. அவற்றுள் வடகிழக்குக் குழுவிடம் 26 பிறிகேடுகளுள, அவற்றில் 16 துடைத்தொழிக்கப்பட்டன அல்லது அழிவுதரும் அடிகள் வாங்கியுள்ளன; சுன் லியென்-சுங்னின் குழுவில் 19 பிறிகேடுகள் உள்ளன, அவற்றுள் 8 துடைத்தொழிக்கப்பட்டன அல்லது அழிவுதரும் அடிகள் வாங்கியுள்ளன; ஃபூ சுவோ-யியின் 10 பிறிகேடுகளில் 2 அழிவுதரும் அடிகள் வாங்கியுள்ளன; யென் சி-ஷன்னின் 15 பிறிகேடுகளில் 9 துடைத்தொழிக்கப்பட்டன அல்லது அழிவுதரும் அடிகள் வாங்கியுள்ளன. இவ்வெதிரித் துருப்புக்கள் இப்போது பிரதானமாகத் தற்காப்பிலுள்ளன; ஒரு சிறிய பகுதி மட்டுந்தான் நடமாட்டப் போர் நடவடிக்கைகளுக்குப் பயன்படக்கூடியதாய் உள்ளது. கோமிந்தாங் பின்னணிப்பிரதேசங்களில் 21 பிறிகேடுகள் மாத்திரம் காவற்பணியில் ஈடுபட்டுள்ளன. இவற்றுள் 8 பிறிகேடுகள் சின்கியாங்கிலும் மேற்குக் கன்சுவிலும், 7 பிறிகேடுகள் சுச்சுவானிலும் சீகாங்கிலும், 2 பிறிகேடுகள் யுன்னனிலும், 2 பிறிகேடுகள் குவாங்துங்கிலும் (அதாவது, அழித்தொழிக்கப்பட்ட 69வது டிவிஷன்), 2 பிறிகேடுகள் தைவானிலும் இருக்கின்றன. ஹூனன், குவாங்சி, குவெய்சௌ, ஃபூகியன், செகியாங், கியாங்சி ஆகிய ஆறு மாகாணங்களிலும் கிரமமான துருப்புக்களேயில்லை. கோமிந்தாங் அமெரிக்க உதவியுடன் இந்த வருடம் முன்னணியில் காலியிடங்களை நிரப்ப 1,000,000 பேரைச் சேர்க்கவும் பல புதிய பிறிகேடுகளையும், காலியிடங்

களை நிரப்புவதற்கான ரெஜிமென்டுகளையும் பயிற்றவும் திட்டமிடுகிறது. இருந்தும், எமது ராணுவம் முதலாவது ஆண்டுப் போரில் செய்தது போல் மாதம் சராசரி 8 எதிரி பிறிகேடுகள் வீதம், இரண்டாவது ஆண்டில் இன்னும் 96 முதல் 100 பிறிகேடுகளையும் (ஜுலையிலும் ஆகஸ்டிலும் ஏற்கெனவே $16\frac{1}{2}$ பிறிகேடுகள் துடைத்தொழிக்கப்பட்டு விட்டன) துடைத்தொழிக்க முடியுமாயிருந்தால், எதிரி ராணுவம் மேலும் பெரிதளவு பலவீனப்படுத்தப்படும்; அதன் யுத்ததந்திர ரீதியான படைபலக் கையிருப்பு ஆகக் குறைந்தளவிற்குக் குறையும்; அது நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் தற்காப்பு நிலைக்குள் தள்ளப்பட்டு, எங்கும் எம்மால் தாக்கப்படும். கோமிந்தாங் 1,000,000 பேரைச் சேர்த்து, புதிய பிறிகேடுகளுக்கும் காலியிடங்களை நிரப்புவதற்கான ரெஜிமென்டுகளுக்கும் பயிற்சியளிக்கும் இத் திட்டத்தைக் கொண்டிருந்தாலும் அதனுல் எதுவித பலனுமேற்படாது. அதன் படைச்சேர்ப்பு கட்டாயப் படைச்சேர்ப்பு, கூலிக்குப் படைதிரட்டுவது ஆகிய முறைகளாயிருப்பதால் பத்து லட்சத்தைச் சேர்ப்பது நிச்சயம் கஷ்டமாயிருக்கும், பலர் விட்டுச் சென்றும் விடுவர். மேலும் வெளிப்புற முனைகளில் போரிடும் கொள்கையைக் கடைப்பிடிப்பது மூலம் எமது ராணுவம் எதிரியின் மனித சக்தியையும் பொருளாயத ஊற்றுமூலங்களையும் குறைக்கமுடியும்.

7. எமது ராணுவத்தின் போர்நடவடிக்கைக் கோட்பாடுகள் இன்னும் முன்பு வகுக்கப்பட்டவையாகவே இருக்கின்றன:

கலைந்து, தனிமைப்பட்டிருக்கும் எதிரிப்படைகளை முதலிற் தாக்குவது (இது இந்த ஆண்டு பெப்ரவரியிலான லாய்

ஃப் போரியக்க[2]த்தையும் ஜூலையிலான தென்மேற்கு ஷன் துங் போரியக்க[3]த்தையும் போன்ற, பல பிறிகேடுகளுக்கு எதிராக நடத்தப்படும் பெருமளவிலான அழித்தொழிக்கும் போரியக்கங்களுக்கும் பொருந்தும்); செறிந்த, பலமான எதிரிப் படைகளைப் பின்னர் தாக்குவது.

சிறிய, மத்தியதர நகரங்களையும், விசாலமான கிராமப் பிரதேசங்களையும் முதலிற் கைப்பற்றுவது; பெரிய நகரங் களைப் பின்னர் கைப்பற்றுவது.

வினைத்திறனுடைய எதிரியின் பலத்தைத் துடைத்தொ ழிப்பதைப் பிரதான இலக்காகக் கொள்ளவேண்டும்; ஒரு இடத்தைப் பாதுகாத்து வைத்திருப்பதை அல்லது கைப்பற்று வதைப் பிரதான இலக்காகக் கொள்ளக் கூடாது. ஒரு இடத்தைப் பாதுகாத்து வைத்திருப்பது அல்லது கைப்பற் றுவது, வினைத்திறனுடைய எதிரியின் பலத்தை அழிப்பதன் விளைவாகும், ஒரு இடத்தைப் பாதுகாத்து வைத்திருப்ப தற்கு அல்லது கைப்பற்றுவதற்கு முன், அது பல தடவை கைமாறுவது வழக்கம்.

ஒவ்வொரு சமரிலும் முற்றுக மேம்பாடான படைகளை ஒன்றுகுவித்து, எதிரிப்படைகளை நாலு பக்கத்தாலும் சுற் றிவளைத்து, அவற்றைப் பூரணமாகத் துடைத்தொழிக்கப் பாடுபட்டு, வலையிலிருந்து ஒருவரேனும் தப்பி ஓடாமற் பார்த்துக் கொள்வது. விசேஷ நிலைமைகளில், எதிரிக்கு அழிவுதரும் அடிகள் கொடுக்கும் முறையை உபயோகிப் பது, அதாவது, நமது பலம் முழுவதையும் ஒன்றுகுவித்து, எதிரிமீது நேர்முகத்தாக்குதல் தொடுத்தும் அவனது விலாப் புறத்தின் ஒரு புறத்தில் அல்லது இரண்டு புறங்களிலும் தாக்குதல் தொடுத்தும், அவனுடைய ஒரு பகுதியைத்

துடைத்தொழித்து, இன்னொரு பகுதியைச் சிதறி ஓடச் செய்வது; இவ்வாறு, நமது ராணுவம் இதர எதிரிப்படைகளைத் தாக்கி ஒழிப்பதற்கு, தன் துருப்புக்களை விரைவாக நகர்த்த முடியும்.

ஒரு புறம், தயார் செய்யாமல் எந்தச் சமரிலும் போரிடாதவாறும் வெற்றி நிச்சயம் இல்லாத எந்தச் சமரிலும் இறங்காதவாறும் கவனித்துக்கொள்வது; ஒவ்வொரு சமருக்கும் இயன்றவை அனைத்தையும் செய்யத் தயாராய் இருக்க வேண்டும்; எதிரிக்கும் நமக்கும் உள்ள நிலைமைகளின் பிரகாரம் நாம் வெல்லக் கூடிய போரை நடத்த வேண்டும். மறுபுறம், சமரிற் துணிவு, தியாகத்துக்கு அஞ்சாமை, களைப்புக்கு அஞ்சாமை, தொடர்ச்சியாகப் போரிடுவது (அதாவது, குறுகிய காலத்தில் அடுத்தடுத்துச் சமர் பல புரிவது) என்ற நமது சிறந்த போர் நடையைப் பூரணமாக வெளிப்படுத்துவது.

எதிரியை நடமாட்ட யுத்தத்திற்கு இழுக்க முயல்வது, ஆனால் அதே நேரத்தில் பெருமளவில் எதிரி அரண்களையும் நகரங்களையும் கைப்பற்றுவதற்காக, நிலையங்களைத் தாக்கும் தந்திரோபாயங்களைக் கற்றுக்கொள்வதற்கும், பீரங்கி, எஞ்சினியர் படைகளின் அமைப்பைப் பலப்படுத்துவதற்கும் பெரும் வலியுறுத்தல் தருவது.

பலவீனமான காவல்களையுடைய எதிரியின் அரண்கள், நகரங்கள் எல்லாவற்றையும் உறுதியாகக் கைப்பற்றுவது; சூழ்நிலைகள் அனுமதித்தால் நடுத்தரப் பலத்தாற் காவல் செய்யப்பட்டிருக்கும் எதிரியின் அரண்கள், நகரங்கள் எல்லாவற்றையும் சந்தர்ப்பங்களைப் பார்த்துக் கைப்பற்றுவது; தற்போதைக்குப் பலமான பாதுகாப்பையுடையவையான

அரண்களையும் நகரங்களையுமெல்லாம் தற்காலிகமாக அவை பாட்டிற்கு விட்டுவிடுவது.

எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்களனைத்தாலும், கைது செய்யப்பட்ட போர்வீரரில் பெரும்பான்மையோராலும் (80-90 வீதம் வீரர், கனிஷ்ட அதிகாரிகள் சிறுதொகையினர்) எமது படை பலத்தை நிரப்பிக்கொள்வது. பிரதானமாக எதிரியிடமிருந்தும் கோமிந்தாங் பிரதேசங்களிலிருந்தும் ஆயுதங்களையும் ஆட்களையும் தேடுவது; ஒரு பகுதியை மட்டுமே பழைய விடுதலைப் பிரதேசங்களிலிருந்து பெறுவது. இது குறிப்பாகத் தென் முன்னணியிலுள்ள ராணுவங்களுக்குப் பொருந்தும்.

புதிய பழைய விடுதலைப் பிரதேசங்களனைத்திலும் நாம் நிலச் சீர்திருத்தத்தை உறுதியாக நடத்தவும் (இதுதான் ஒரு நீண்ட யுத்தத்தை நடத்தி நாடு பரந்த வெற்றியைப் பெறுவதற்கு மிக அடிப்படை நிபந்தனை); உற்பத்தியைப் பெருக்கவும் சிக்கனத்தைக் கடைப்பிடிக்கவும் யுத்தக் கைத்தொழிலின் அமைப்பைப் பலப்படுத்தவும் வேண்டும்—இவையனைத்தும் முன்னணியில் வெற்றிக்கானவை. இதைச் செய்வதுமூலம் தான், நாம் ஒரு நீண்ட யுத்தத்தை நடத்தி நாடுமுழுவதும் வெற்றி பெற முடியும். நாம் இப்படிச் செய்தால் நிச்சயம் எம்மால் ஒரு நீண்ட யுத்தத்தை நடத்தி நாடு பூராவும் வெற்றி பெற முடியும்.

8. மேற்கூறியவை முடிந்த ஆண்டுப் போராட்டத்தைத் தொகுத்துக் கூறி, எதிர்காலப் போராட்டத்துக்கான கோட்பாடுகளை வகுக்கின்றன. எல்லோரும் தத்தம் கடமையைப் புரிந்துகொண்டு அதை உறுதியாகவும், ஊசலாட்டமின்றியும்

நிறைவேற்றக் கூடியதாக இருக்க, இதை ரெஜிமென்ட் மட்டத்திலும் அதற்கு மேலும், பிராந்தியக் கட்சிக் கமிட்டி[4] மட்டத்திலும் அதற்கு மேலும், பிராந்தியக் கமிஷனர் ஆபீஸ் மட்டத்திலும் அதற்கு மேலும் உள்ள ஊழியர்களனைவருக்கும் தெரியப்படுத்தும்படி எல்லாப் பிரதேசத்துத் தலைமைத் தோழர்களும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

## குறிப்புகள்

1. வடகிழக்கிலும் ஜெஹோலிலும் கிழக்கு ஹோபெயிலும் ஏற்படுத்தப்பட்ட யுத்ததந்திர ரீதியான எதிர்த்தாக்குதல் என்பது வடகிழக்கு மக்கள் விடுதலைச் சேனையின் 1947ம் ஆண்டுக் கோடைகாலத் தாக்குதலைக் குறிக்கிறது. மே 13ந் தேதி முதல் மக்கள் விடுதலைச் சேனை இம்முன்னணிகளில் ஒரே சமயத்தில் பல தாக்குதல்களை ஆரம்பித்து, ஜுலை 1ந் தேதியளவில் 80,000க்கு மேலான எதிரித் துருப்புக்களைத் துடைத்தொழித்து, 40க்கு மேலான மாவட்ட நகர்களை மீட்டெடுத்தது; இதன் மூலம் எமது வடகிழக்கு விடுதலைப் பிரதேசங்களைத் துண்டிக்கும் எதிரிப் படையின் திட்டம் முற்றாக முறியடிக்கப்பட்டது; எதிரித் துருப்புக்கள் சினச் சாங்சுன் புகையிரத மார்க்கம், பெய்ப்பிங்-லியௌனிங் புகையிரத மார்க்கம் ஆகியவற்றின் வழியாக இரண்டு ஒடுங்கிய பாதைகளுக்குள் விரட்டியடிக்கப்பட்டு, ''கேந்திர நகரங்களைப் பாதுகாக்க'' நிர்ப்பந்திக்கப்பட்டன. இது வடகிழக்குச் சீன நிலைமை முழுவதையும் மாற்றியது. தென் ஷன்சியிலும் வட ஹோனானிலும் நடந்த யுத்ததந்திர ரீதியான எதிர்த்தாக்குதல், ஷன்சி-ஹோபெய்-ஷன்துங்-ஹோனான் மக்கள் விடுதலைச் சேனை 1947 மார்ச்-மேயில் வட ஹோனானிலும் தென்ஷன்சியிலும் தாதொங்-பூசௌப் புகையிரத மார்க்கத்தின் இரு மருங்கிலும் தொடுத்த தாக்குதல்களாகும். வட ஹோனானிலிருந்த எமது படை மார்ச் 23ந் தேதி தாக்குதலை ஆரம்பித்தது. யென்சின்னையும், யாங்வூவையும்; பூயானையும்; ஃபாங்சியூவையும் ஒன்றன்பின் ஒன்றாய்ப் பிடித்த பின் எமது ராணுவம் இவ்வெற்றிகளைப் பயன்படுத்த வடக்கு நோக்கித் திரும்பியது. மே 28

அளவில் அது கூஷிஸியென், சியுன்ஸியென், ஹுவாஸியென், தாங்யின் ஆகிய பட்டினங்களைக் கைப்பற்றி, 45,000க்கு மேற்பட்ட எதிரித் துருப்புக்களைத் துடைத்தொழித்தது. தென் ஷன்சியிலிருந்த எமது துருப்புக்கள் ஏப்ரல் 4ந் தேதி தாக்குதல் நடவடிக்கைகளை ஆரம்பித்தன. மே 4ந் தேதியளவில் அவை கூஷிவுவோ, சின்சியாங், யுங்ஜி உட்பட இருபத்திரண்டு மாவட்டப் பட்டினங்களையும் மஞ்சள் நதியின் இரு முக்கிய தோணிப்பாதைகளான யூமென்கோ, ஃபெங் லிங்து ஆகியவற்றையும் கைப்பற்றி, 18,000க்கு மேற்பட்ட எதிரித் துருப்புக்களைத் துடைத்தொழித்தன.

2. லாய்ஃபு போரியக்கம் ஷன்துங் மாகாணத்து (ஜினுனுக்குத் தென்கிழக்கில்) லாய்ஃபுப் பிரதேசத்தில் கிழக்குச் சீன மக்கள் விடுதலைச் சேனை நடத்திய நடமாட்டப் போரியக்கம். 1947ம் ஆண்டு ஜனவரி இறுதியில் கோமிந்தாங் துருப்புக்கள் தெற்கிலிருந்தும் வடக்கிலிருந்தும் ஷன்துங் விடுதலைப் பிரதேசங்கள்மீது தாக்குதல் தொடுத்தன. தெற்கிலிருந்து புனரமைக்கப்பட்ட 8 கோமிந்தாங் டிவிஷன்கள் லின்யியைத் தாக்க, யிஹோ, ஷுஹோ ஆகிய நதிகள் நெடுக்காக மூன்று மார்க்கங்களால் வடக்கு நோக்கிச் சென்றன; அவற்றுக்கு இசைவாக வடக்கிலிருந்த லீ ஸியென்-செள குழுவைச் சேர்ந்த மூன்று கோமிந்தாங் கோர்கள் யிமுங் மலைப் பிரதேசத்தில் கிழக்குச் சீன மக்கள் விடுதலைச் சேனையின் பிரதான படையுடன் ஒரு தீர்க்கமான சமரில் ஈடுபடவேண்டி மிங்ஷுய், ஸெச்சுவாங், போஷன் ஆகியவற்றிலிருந்து தெற்கு நோக்கி லாய்ஃபு, சின்தை ஆகியவற்றுக்கு முன்னேறின. எமது ராணுவம் தெற்கிலிருந்து வந்த எதிரியைத் தடுக்கத் தன் படைகளில் ஒரு பகுதியையே உபயோகப்படுத்தியது; அதன் பிரதான படை லீ ஸியென்-செளவின் குழுவை அழித்தொழிக்க வடக்கே லாய்ஃபு நோக்கிச் சென்றது. பெப்ரவரி 20ந் தேதி ஆரம்பித்து பெப்ரவரி 23ந் தேதி பிற்பகல் முடிவடைந்த ஒரு சமரில் 60,000க்கு மேற்பட்ட எதிரித் துருப்புக்களனைத்தும் துடைத்தொழிக்கப்பட்டன. கோமிந்தாங்கின் ஷிசெள அமைதிப்படுத்தும் ஆணைப்பகுதியின் இரண்டாவது அமைதிப்படுத்தும் பிராந்தியத்தின் துணைத் தளபதி லீ ஸியென்-செள கைது செய்யப்பட்டான்; பதின்மூன்று பட்டினங்கள் மீட்டெடுக்கப்பட்டன.

3. தென்மேற்கு ஷன்துங் போரியக்கம் 1947 ஜுலையில் தென்மேற்கு ஷன்துங் மாகாணத்தின் ஹொசே, யுன்செங், ஜுயியெ, திங்தாஒ, சின்ஸியாங், சாஒஸியென் ஆகிய பிரதேசங்களில் ஷன்சி-ஹோபெய்-ஷன்துங்-ஹோனுன் மக்கள் விடுதலைச் சேனையால் நடத்தப்பட்ட போரியக்கமாகும். இப்போரியக்கத்தில்

4 கோமிந்தாங் டிவிஷன் ஆணைப்பகுதியும் 9½ பிறிகேடுகளும் துடைத்தொழிக்கப்பட்டன, அவற்றின் ஆட்தொகை 56,000க்கு மேல்.

4. பிராந்தியக் கட்சிக் கமிட்டி, அப்போது மாகாணக் கட்சிக் கமிட்டி மட்டத்திற்கும் பிரதேசக் கட்சிக் கமிட்டி மட்டத்திற்கும் கீழும் மாவட்டக் கட்சிக் கமிட்டி மட்டத்திற்கு மேலும் இருந்த தலைமை உறுப்பு. (மொழிபெயர்ப்பாளர் குறிப்பு)

# சீன மக்கள் விடுதலைச் சேனையின் பிரகடனம்*

(1947, அக்டோபர்)

சீன மக்கள் விடுதலைச் சேனை சியாங் கை-ஷேக்கின் தாக்குதலை முறியடித்து இப்போது பெருமளவிலான எதிர்த்தாக்குதலொன்றைத் தொடுத்துள்ளது. தெற்கு முன்னணியிலுள்ள எமது படைகள் யாங்சி நதிப் பள்ளத்தாக்கை நோக்கி முன்னேறுகின்றன; வடக்கு முன்னணியிலுள்ள எமது படைகள் சீனச் சாங்சுன் புகையிரத மார்க்கத்தையும் பெய்ப்பிங்-லியௌனிங் புகையிரத மார்க்கத்தையும் நோக்கி முன்னேறுகின்றன. எமது துருப்புக்கள் எங்கு செல்கின்றனவோ அங்கு எதிரிகள் அவற்றின் முன்னால் கதிகலங்கியோடுகின்றனர்; மக்கள் இடி

*இந்த அரசியற் பிரகடனம் சீன மக்கள் விடுதலைச் சேனையின் பொது ஆணைப் பகுதிக்காகத் தோழர் மாஓ சேதுங் அவர்களால் எழுதப்பட்டது. இது அக்காலத்தில் சீனாவில் நிலவிய அரசியல் நிலைமையை ஆராய்ந்து, ''சியாங் கை-ஷேக்கைத் தூக்கியெறிந்து முழுச் சீனாவையும் விடுதலை செய்வோம்!'' என்ற கோஷத்தை எழுப்பி, சீன மக்கள் விடுதலைச் சேனையினுடையவும் அத்துடன் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியினுடையவுமான எட்டு அடிப்படைக் கொள்கைகளையும் பிரகடனம் செய்தது. இப்பிரகடனம் 1947 அக்டோபர் 10ந் தேதி விடுக்கப்பட்டு, ''அக்டோபர் 10 பிரகடனம்'' எனப் பெயர் பெற்றது. இது வட ஷென்சியின் சியாஸியென் மாவட்டத்திலுள்ள ஷென்சியென்பாஓவில் எழுதப்பட்டது.

முழக்கம் போன்று ஆரவாரிக்கின்றனர். ஒரு ஆண்டுக்குமுன் இருந்ததோடு ஒப்பிடுமிடத்து எதிரிக்கும் எமக்குமிடை நிலைமை முழுவதும் அடிப்படையில் மாற்றமடைந்துள்ளது.

இந்த யுத்தத்தில் எமது ராணுவத்தின் நோக்கம் நாட்டிற்கும் உலகிற்கும் திரும்பத் திரும்பப் பிரகடனம் செய்தது போல சீன மக்களையும் சீன தேசத்தையும் விடுதலை செய்வதாகும். இன்று, எமது நோக்கம் முழு நாட்டு மக்களதும் அவசர கோரிக்கையை, அதாவது, மக்களையும் தேசத்தையும் விடுதலை செய்யும் பொதுக் குறிக்கோளை நிறைவேற்ற உள்நாட்டு யுத்தத்தின் தலையாய குற்றவாளியான சியாங் கை-ஷேக்கைத் தூக்கியெறிந்து, ஒரு ஜனநாயகக் கூட்டரசாங்கத்தை அமைப்பதை அமுல்நடத்துவதாகும்.

எட்டு முழு ஆண்டுகளாகச் சீன மக்கள் தமது விடுதலைக்கும் தேசிய சுதந்திரத்திற்குமாக ஜப்பானிய ஏகாதிபத்தியத்திற்கெதிராக வீரதீரத்துடன் போராடினர். ஜப்பான் சரணடைந்த பின் மக்கள் சமாதானத்தை ஆவலுடன் பார்த்திருந்தனர்; ஆனால் சியாங் கை-ஷேக் அவர்களது சமாதானத்துக்கான முயற்சிகளனைத்தையும் தகர்த்து, அவர்களுக்கு வரலாறுகாணாத உள்நாட்டு யுத்தக் கேட்டைப் பலவந்தமாக ஏற்படுத்தினான். ஆகவே நாடு முழுவதுமுள்ள சகல வர்க்கத்தட்டுக்களைச் சேர்ந்த மக்களுக்கும் சியாங் கை-ஷேக்கைத் தூக்கியெறிய ஐக்கியப்படுவதைத் தவிர வேறு வழியிருக்கவில்லை.

சியாங் கை-ஷேக்கின் தற்போதைய உள்நாட்டு யுத்தக் கொள்கை தற்செயலானதல்ல; அது அவனும் அவனது பிற்போக்குக் கும்பலும் இடைவிடாது கடைப்பிடித்த மக்களுக்கெதிரான கொள்கையின் தவிர்க்க முடியாத விளைவாகும். 1927ம் ஆண்டிலேயே சியாங் கை-ஷேக் நன்றியனைத்தையும்

மறந்து கோமிந்தாஙுக்கும் கம்யூனிஸ்ட் கட்சிக்குமிடைப் புரட்சிகர நேச அணிக்குத் துரோகஞ்செய்து, சுன் யட்-சன்னின் புரட்சிகர மூன்று மக்கட் கோட்பாடுகளுக்கும், முப்பெரும் கொள்கைக[1]ளுக்கும் துரோகஞ்செய்தான்; பின் அவன் ஒரு சர்வாதிகாரத்தை நிறுவி, ஏகாதிபத்தியத்திடம் சரணடைந்து பத்தாண்டுகள் உள்நாட்டு யுத்தம் நடத்தி ஜப்பானியக் கொள்ளைக்காரரின் ஆக்கிரமிப்பைக் கொண்டுவந்தான். 1936ச் சீஆன் சம்பவத்தின்போது, சியாங் கை-ஷேக் நடந்ததை எண்ணி வருந்தி, தன் வாழ்க்கையில் புதிய அத்தியாயத்தை ஏற்படுத்தி, ஜப்பானிய-எதிர்ப்புப் போராட்டத்தில் சேர்ந்து கொள்வான் என்ற நம்பிக்கையில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி தீமைக்கு நன்மை செய்து, தளபதிகளான சாங் ஷியெ-லியாஙுடனும், யாங் ஹு-செங்ஙுடனும் ஒத்துழைத்து அவனை விடுதலை செய்தது. ஆனால் மீண்டும் அவன் தன் நன்றிகெட்டதனத்தைக் காட்டினான்; அவன் ஜப்பானியக் கொள்ளைக்காரரை எதிர்ப்பதில் ஊக்கமற்றவனாகவும், மக்களை அடக்குவதில் ஊக்கமுடையவனாகவும் இருந்ததோடு, கம்யூனிஸ்ட் கட்சிமீது அளவுகடந்த பகைமையும் பாராட்டினான். கடந்த ஆண்டுக்கு முந்திய ஆண்டு (1945) ஜப்பான் சரணடைந்தது; சீன மக்கள் சியாங் கை-ஷேக் ஏற்கெனவே ஆரம்பித்துவிட்ட உள்நாட்டு யுத்தத்தை நிறுத்தி, ஜனநாயக அரசியலை அமுல்நடத்தி, தேசிய நிர்மாணத்தைச் சமாதான முறையில் நடத்துவதற்குச் சகல கட்சிகள் குழுக்களுடனும் ஐக்கியப்பட வேண்டும் எனக் கோரி மீண்டுமொரு முறை அவனை மன்னித்தனர். ஆனால் போர் நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு, அரசியற் கலந்தாலோசனை மாநாட்டுத் தீர்மானங்கள் அங்கீகரிக்கப்பட்டு, நான்கு வாக்குறுதிகள்[2] பிரகடனம் செய்யப்பட்டதும் முற்

றிலும் நேர்மையற்ற சியாங் கை-ஷேக் தனது வார்த்தையைப் பூரணமாக மீறினன். பொது நன்மைக்காக மக்கள் இவனைத் திரும்பத் திரும்பப் பொறுமையுடன் நடத்தினர்; ஆனால் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் உதவியுடன் சியாங் கை-ஷேக் நாட்டினதும் தேசத்தினதும் தலைவிதிபற்றிச் சிறிதும் யோசியாது மக்களுக்கெதிராக வரலாறுகாணாத முற்றுமுழுதான தாக்குதலொன்றைத் தொடுக்கத் தீர்மானித்தான். போர் நிறுத்த உடன்படிக்கை தெரிவிக்கப்பட்ட கடந்த ஆண்டு (1946) ஜனவரிமுதல் இன்றுவரை சியாங் கை-ஷேக் தனது கிரமமான துருப்புக்களில் 220க்கு மேலான பிறிகேடுகளையும், சுமார் பத்துலட்சம் பல்வகைத் துருப்புக்களையும் அணிதிரட்டி, ஜப்பானிய ஏகாதிபத்தியத்திடமிருந்து சீன மக்கள் ரத்தஞ்சிந்திப் பெற்ற விடுதலைப் பிரதேசங்கள்மீது பெருமளவிலான தாக்குதல்களைத் தொடுத்தான். அவன் ஷென்யாங், ஃபுஷுன், பென்சி, சுபிங், சாங்சுன், யுங்சி, செங்தே, சினிங், சாங்சியாகோ, ஹுவய்யின், ஹொசே, லின்யி, யென்ஆன், யென்தை ஆகிய நகரங்களையும் விசாலமான கிராமியப் பிரதேசங்களையும் தொடர்ச்சியாகக் கைப்பற்றினன். சியாங் கை-ஷேக் துருப்புக்கள் சென்றவிடமெல்லாம் கொலை செய்தன; எரித்தன; கற்பழித்தன; கொள்ளையடித்தன; மூன்று கொடுமைக் கொள்கை[3]யை மேற்கொண்டன. அவை சரியாக ஜப்பானியக் கொள்ளைக்காரரைப் போலவே நடந்துகொண்டன. கடந்த ஆண்டு நவம்பர் மாதம் சியாங் கை-ஷேக் போலித் தேசிய சபையைக் கூட்டி, போலி அரசியலமைப்பைப் பிரகடனம் செய்தான். இந்த ஆண்டு மார்ச்சில் அவன் கம்யூனிஸ்ட் கட்சிப் பிரதிநிதிகளைக் கோமிந்தாங் பிரதேசங்களிலிருந்து வெளியேற்றினன். இந்த ஆண்டு ஜூலையில் மக்களுக்கெதிரான பொது அணிதிரட்டல் உத்தரவு[4]

ஒன்றை வெளியிட்டான். உள்நாட்டு யுத்தத்துக்கெதிராகவும், பட்டினிக்கெதிராகவும், அமெரிக்க ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புக்கெதிராகவும் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் மக்கள் நடத்திய நீதியான இயக்கத்தைப் பொறுத்தும், தொழிலாளரும் விவசாயிகளும் மாணவர்களும் நகர மக்களும் அரசாங்க ஊழியர்களும் ஆசிரியர்களும் வாழ்வுக்காக நடத்திய போராட்டத்தைப் பொறுத்தும் சியாங் கை-ஷேக்கின் கொள்கை அடக்குமுறை, கைது செய்தல், படுவதை ஆகியவற்றைக் கொண்ட ஒன்ருயிருந்தது. எமது நாட்டின் சிறுபான்மைத் தேசிய இனங்களைப் பொறுத்து அவன் கொள்கை ஹன் இனவெறி, சகல வழிகளிலும் இம்சித்தல், அடக்குதல் ஆகியவற்றைக் கொண்ட ஒன்ருயிருந்தது. சியாங் கை-ஷேக் ஆட்சியிலிருந்த எல்லா பிரதேசங்களிலும் ஊழல் மலிந்திருக்கிறது; ரகசிய ஏஜண்டுகள் தறிகெட்டலைகின்றனர்; வரிகள் கணக்கற்றும் பளுவானவையாயும் இருக்கின்றன; விலைகள் நெருப்பாயிருக்கின்றன; பொருளாதாரம் திவாலாகிவிட்டது; வியாபாரமனைத்தும் நலிவடைகின்றன; கட்டாயப்படைச் சேர்ப்பும் தானியவரியும் திணிக்கப்படுகின்றன; எங்கும் மனத்திருப்தியற்ற குரல்கள் கேட்கின்றன. இவையனைத்தும் நாடு முழுவதுமுள்ள ஏகப்பெரும்பான்மை மக்களைத் துன்பச் சேற்றில் அமிழ்த்துகின்றன. அதே வேளையில் சியாங் கை-ஷேக்கின் தலைமையிலான பணமுதலைகள், ஊழல் நிறைந்த அதிகாரிகள், ஸ்தலக் கொடுங்கோலர், தீயபிரபுக்கள் ஆகிய அனைவரும் பெருநிதி குவித்துள்ளனர். சியாங் கை-ஷேக்கும் அவனையொத்தோரும் இச்செல்வத்தைத் தமது சர்வாதிகார வல்லமையை உபயோகித்து வரிகளையும் திறைகளையும் பறித்தெடுத்து, பொது நலனுக்குச் சேவை செய்வதென்ற போர்வையில் தமது நலன்களை விருத்திசெய்து சேக

ரித்தனர். தனது சர்வாதிகாரத்தை நிலைநிறுத்தவும் உள் நாட்டு யுத்தத்தைக் கொண்டு நடத்தவும் சியாங் கை-ஷேக் அந்நிய ஏகாதிபத்தியத்திற்கு எமது நாட்டின் அரசுரிமைகளை விற்கவும், அமெரிக்க ஆயுதப் படைகள் சிங்தௌவிலும் பிற இடங்களிலும் இருப்பதற்காக அவற்றுடன் கள்ளக்கூட்டுச் சேர வும், உள்நாட்டு யுத்தத்தை வழிநடத்துவதிலும் தன் சக நாட்டவரையே கொல்ல துருப்புக்களைப் பயிற்றுவதிலும் பங் குபற்ற அமெரிக்காவிலிருந்து ஆலோசகரை வரவழைக்கவும், தயங்கவில்லை. உள்நாட்டு யுத்தத்திற்காக விமானங்களும் டாங்கிகளும் துப்பாக்கிகளும் பீரங்கிகளும் வெடிமருந்துகளும் அமெரிக்காவிலிருந்து பெருந்தொகையில் கொண்டுவந்து குவிக் கப்பட்டன. உள்நாட்டு யுத்த நிதி அமெரிக்காவிடமிருந்து பெருமளவில் கடன்வாங்கப்பட்டது. அமெரிக்க ஏகாதிபத்தி யத்தின் உதவிகளுக்குப் பிரதியாகச் சியாங் கை-ஷேக் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு ராணுவத் தளங்களையும், ஆகாய, கடற் போக்குவரத்துரிமையையும் பரிசளித்து, அடிமைப்படுத்தும் ஒரு வர்த்தக ஒப்பந்த[5]த்தைச் செய்தான்; இப்படி இன்னு முண்டு—இத்தேசத்துரோகச் செயல்கள் யுஅன் ஷீ-கையுடை யவற்றைவிடப் பன்மடங்கு மோசமானவை. ஒரே வார்த் தையிற் கூறின், சியாங் கை-ஷேக்கின் இருபதாண்டுகால ஆட்சி தேசத்துரோகத்தனமானது; சர்வாதிகாரமுடையது; மக்க ளுக்கெதிரானது. இன்று வடக்குத் தொட்டுத் தெற்குவரை, இளைஞர் முதல் முதியோர் வரை நாடு முழுவதுமுள்ள ஏகப் பெரும்பான்மை மக்கள் அவனது வான்முட்டும் பாதகங்களைத் தெரிந்து கொண்டிருக்கின்றனர்; அவர்கள் எமது ராணுவம் வெகுவிரைவில் எதிர்த்தாக்குதல் யுத்தமொன்றைத் தொடுத்து

சியாங் கை-ஷேக்கைத் தூக்கியெறிந்து முழுச் சீனுவையும் விடுதலை செய்யுமென எதிர்ப்பார்க்கின்றனர்.

நாம் சீன மக்களின் படை. எல்லா விஷயத்திலும் நாம் சீன மக்களின் விருப்பத்தை எமது விருப்பமாகக் கொள்கின்ரேம். எமது ராணுவத்தின் கொள்கைகள் சீன மக்களின் அவசர கோரிக்கைகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. அவற்றில் பிரதானமானவை பின்வருமாறு:

(1) தொழிலாளரையும், விவசாயிகளையும், போர்வீரரையும், புத்திஜீவிகளையும், வர்த்தகரையும், சகல அடக்கியொடுக்கப்பட்ட வர்க்கங்களையும், சகல மக்கள் ஸ்தாபனங்களையும், ஜனநாயகக் கட்சிகளையும், சிறுப்பான்மைத் தேசிய இனங்களையும், கடல்கடந்த சீன மக்களையும், இதர தேசபக்தரையும் ஐக்கியப்படுத்துவது; ஒரு தேசிய ஐக்கிய முன்னணியை அமைப்பது; சர்வாதிகார சியாங் கை-ஷேக் அரசாங்கத்தைத் தூக்கியெறிவது; ஒரு ஜனநாயகக் கூட்டரசாங்கத்தை அமைப்பது.

(2) சியாங் கை-ஷேக் தலைமையிலான உள்நாட்டு யுத்தக் குற்றவாளிகளைக் கைதுசெய்து, விசாரணை செய்து, தண்டிப்பது.

(3) சியாங் கை-ஷேக்கின் சர்வாதிகாரத்தை ஒழித்து, மக்கள் ஜனநாயகத்தை மேற்கொண்டு, மக்களுக்குப் பேச்சு, பத்திரிகை, கூட்ட, சங்கச் சுதந்திரங்களை உத்தரவாதம் செய்வது.

(4) சியாங் கை-ஷேக் ஆட்சியின் உளுத்துப்போன நிறுவனங்களை ஒழித்து, ஊழல் நிறைந்த அதிகாரிகளனைவரையும் ஒழித்துக்கட்டி, தூய அரசாங்கமொன்றை அமைப்பது.

(5) சியாங் கை-ஷேக், டி.வி.சூங், எச்.எச்.குங், சென் சகோதரர்கள் ஆகியோரின் நாலு பெருங் குடும்பங்களினதும் இதர

பிரதான யுத்தக் குற்றவாளிகளினதும் சொத்தைப் பறிமுதல்செய்வது; அதிகார மூலதனத்தைப் பறிமுதல்செய்வது; தேசிய பூர்ஷுவா வர்க்கத்தின் கைத்தொழில் வர்த்தகத்தை வளர்ப்பது; தொழிலாளர் ஊழியரின் வாழ்க்கை நிலையை உயர்த்தி, சேதங்களுக்குள்ளானோருக்கும், வறுமைக்குள்ளானோருக்கும் நிவாரணம் அளிப்பது.

(6) நிலப்பிரபுத்துவச் சுரண்டலமைப்பை ஒழித்து பயிரிடுவோருக்கே நிலமென்ற அமைப்பை அமுல்நடத்துவது.

(7) சீன எல்லைகளுக்குள் சிறுபான்மைத் தேசிய இனங்களின் சமத்துவ சுயாட்சி உரிமையை அங்கீகரிப்பது.

(8) சர்வாதிகாரச் சியாங் கை-ஷேக் அரசாங்கத்தின் தேசத் துரோகத்தனமான வெளிநாட்டுக் கொள்கையை நிராகரிப்பதும், தேசத் துரோகமுடைய ஒப்பந்தங்களனைத்தையும் ஒழிப்பதும், உள்நாட்டு யுத்தகாலத்தில் சியாங் கை-ஷேக் வாங்கிய வெளிநாட்டுக் கடன்களனைத்தையும் மறுப்பதும். சீனவின் சுதந்திரத்திற்கு ஓர் அச்சுறுத்தலாய் விளங்கும் அமெரிக்க துருப்புக்களைச் சீனவிலிருந்து வாபஸ் பெறும்படி அமெரிக்க அரசாங்கத்தைக் கோருவது, எந்த அந்நிய நாடும் சியாங் கை-ஷேக்குக்கு உள்நாட்டு யுத்தத்தை நடத்த உதவுவதை அல்லது ஜப்பானிய ஆக்கிரமிப்புச் சக்திகளுக்குப் புத்துயிரளிக்க முயல்வதை எதிர்ப்பது. சமத்துவம், பரஸ்பர நன்மை ஆகிய அடிப்படையில் அந்நிய நாடுகளுடன் வர்த்தக நட்புறவு ஒப்பந்தங்கள் செய்வது. எம்மைச் சமமாக மதிக்கும் தேசங்களனைத்துடனும் ஒரு பொதுப் போராட்டத்தில் ஐக்கியப்படுவது.

மேற் கூறியவை எமது ராணுவத்தின் அடிப்படைக் கொள்கைகள். இவை எமது ராணுவம் எங்கு சென்றாலும் அங்கு உடனடியாகச் செயற்படுத்தப்படும். இக்கொள்கைகள் எமது

நாட்டு மக்களில் தொண்ணூறு வீதத்திற்கு மேலானவரின் கோரிக்கைகளுடன் ஒத்துப்போகின்றன.

எமது ராணுவம் சியாங் கை-ஷேக்கின் ஆட்களனைவரையும் நிராகரிக்காது. அது ஒவ்வொருவரையும் அவரவர் இயல்பிற்கேற்ப நடத்துவது என்ற கொள்கையைக் கடைப்பிடிக்கின்றது. அதாவது, பிரதான குற்றவாளிகள் நிச்சயம் தண்டிக்கப்படுவர்; கட்டாயத்தின் பேரில் சகபாடிகளானோர் தண்டிக்கப்படார்; போற்றற்குரிய செயல் புரிந்தோருக்குப் பரிசளிக்கப்படும். உள்நாட்டு யுத்தத்தை ஆரம்பித்தவனும் மிக்க கொடுங் குற்றங்களை இழைத்தவனுமான தலையாய குற்றவாளி சியாங் கை-ஷேக்கைப் பொறுத்தவரையும், சியாங் கை-ஷேக்கின் உரமான அடிவருடிகளாயிருந்து, மக்களைக் காலில் போட்டு மிதித்து, வெகுஜனங்களால் யுத்தக் குற்றவாளிகள் என முத்திரை குத்தப்பட்டவரனைவரையும் பொறுத்தவரையும் எமது ராணுவம் உலகின் நாலாதிக்கும் அவர்களைத் தேடிப்பிடித்து விசாரணைக்குக் கொண்டுவந்து தண்டிக்கும். அப்பாவி மக்களின் ரத்தத்தில் கரங்களைத் தோயாத சியாங் கை-ஷேக் ராணுவத்திலுள்ள சகல அதிகாரிகளும் போராளிகளும், அவனது அரசாங்கத்திலுள்ள சகல அதிகாரிகளும், அவனது கட்சி அங்கத்தவரனைவரும் இக்குற்றவாளிகள் செய்யும் தீய செயல்களில் ஈடுபடாது விலகியிருக்க வேண்டுமென எமது ராணுவம் அவர்களுக்கு எச்சரிக்கை விடுக்கின்றது. தீயவை செய்து வந்துள்ளோர் அவற்றை உடனடியாக நிறுத்தி, அவற்றுக்காக வருந்தி, புதிய வாழ்வை மேற்கொண்டு, சியாங் கை-ஷேக்கிடமிருந்து விலக வேண்டும். நல்ல செயல்கள் மூலம் அவர்கள் தம் குற்றங்களுக்கு ஈடுசெய்ய எமது ராணுவம் அவர்களுக்குச் சந்தர்ப்பமளிக்கும். ஆயுதங்களைக் கீழே போடும் சியாங் கை-

கமும் ஐக்கியப்படவும், அதிகாரிகளும் படையினரும் ஐக்கியப் படவும், முழு ராணுவமும் ஐக்கியப்படவும் வேண்டும்; கட்டுப் பாடு எவ்விதத்திலும் மீறப்படுவதை அனுமதிக்கக்கூடாது. நாம் மகத்தான மக்கள் விடுதலைச் சேனையைச் சேர்ந்தவர்கள், நாம் மகத்தான சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையிலுள்ள படை யினர்கள் என்பதை நமது அதிகாரிகள், படையினர் எல்லாரும் எப்பொழுதும் மனதில் வைத்திருக்க வேண்டும். கட்சியின் உத்தரவுகளை இடைவிடாது அனுசரிப்போமானால் நாம் வெற்றி பெறுவது திண்ணம்.

சியாங் கை-ஷேக் ஒழிக!

நவ சீனு நீடூழி வாழ்க!

## குறிப்புகள்

1. மூன்று மக்கட் கோட்பாடுகள், சீனுவின் பூர்ஷுவா-ஜனநாயகப் புரட்சிக்கு சுன் யட்-சன் முன்வைத்த, தேசியம், ஜனநாயகம், மக்கள் ஜீவனுேபாயம் ஆகிய மூன்று பிரச்சினைகளைப் பற்றிய கோட்பாடுகளும் வேலைத்திட்டங்களுமாகும். 1924லே ''கோமிந்தாங் முதலாவது தேசிய காங்கிரஸின் பிரகடனத்''தில் சுன் யட்-சன் மூன்று மக்கட் கோட்பாடுகளைப் புதிதாக விளங்கப்படுத்தினுர். அவர் ஏகாதிபத்தியத்தை எதிர்ப்பதே தேசியம் என்று விளக்கியதோடு, தொழி லாளி-விவசாயி இயக்கத்துக்குத் தான் உற்சாகமான ஆதரவளிப்பதாகவும் தெரிவித்தார். இதன் விளைவாக, பழைய மூன்று மக்கட் கோட்பாடுகள், ரஷியாவுடன் நேச அணி, கம்யூனிஸ்ட் கட்சியுடன் ஒத்துழைப்பு, விவசாயி தொழிலாளருக்கு உதவி ஆகிய முப்பெரும் கொள்கைகளைக் கொண்ட புதிய மூன்று மக்கட் கோட்பாடுகளாக வளர்ந்துள்ளன. முப்பெரும் கொள்கைகளைக் கொண்ட இப்புதிய மூன்று மக்கட் கோட்பாடுகள், முதலாவது புரட்சிகர உள்நாட்டு யுத்த காலகட்டத்தில், கம்யூனிஸ்ட் கட்சி கோமிந்தாஙுடன் ஒத்து

மைப்பதற்கான அரசியல் அடிப்படையாகின. ''தேர்ந்தெடுக்கப்பட்ட மாஓ சேதுங் படைப்புகள்'' வால்யூம் 2லே ''புதிய ஜனநாயகம் பற்றி'' என்ற கட்டுரையின் 10ம் பாகத்தைப் பார்க்கவும்.

2. ''நான்கு வாக்குறுதிகள்'' சியாங் கை-ஷேக்கால் 1946ல் அரசியற் கலந்தாலோசனை மாநாட்டின் ஆரம்பக் கூட்டத்தில் செய்யப்பட்டன. அவை: மக்களின் சுதந்திரத்தை உத்தரவாதம் செய்வது, அரசியற் கட்சிகளின் சட்ட பூர்வமான அந்தஸ்தை உத்தரவாதம் செய்வது, ஒரு பொதுத்தேர்தல் நடத்துவது, அரசியற் கைதிகளை விடுதலை செய்வது.

3. சியாங் கை-ஷேக் கொள்ளைக் கும்பல் சீனுவின் விடுதலைப் பிரதேசங்களில் எல்லாவற்றையும் எரிப்பது, எல்லோரையும் கொல்வது, எல்லாவற்றையும் கொள்ளையடிப்பதென்ற மூன்று கொடுங்கொள்கையை அமுல்நடத்தியதைக் குறிக்கின்றது. (மொழி பெயர்ப்பாளர்)

4. 1947 ஜூலை 4ந் தேதி பிற்போக்குக் கோமிந்தாங் அரசாங்கம் சியாங் கை-ஷேக்கின் ''முழு நாட்டுப் பொது அணிதிரட்டல் மசோதா''வை அங்கீகரித்து, அதையடுத்து உடனடியாக, கூறப்படும் ''கம்யூனிஸ்ட் கொள்ளைக்காரரின் கிளர்ச்சிகளை அடக்குவதற்கான பொது அணிதிரட்டற் கட்டளை''யைப் பிறப்பித்தது. உண்மையில் சியாங் கை-ஷேக் இதற்கு மிக முன்பாகவே தன் எதிர்ப்புரட்சி உள்நாட்டு யுத்தத்திற்கான பொது அணிதிரட்டலை மேற்கொண்டான். அந்த நேரத்தில் சீன மக்கள் விடுதலைச் சேனை நாடுபரந்த தாக்குதலை ஆரம்பித்தது. சியாங் கை-ஷேக் தானே தனது ஆட்சி ''பாரதூரமான நெருக்கடி''யிலுள்ளதென ஏற்றுக்கொண்டான். ''பொது அணிதிரட்டற் கட்டளை'' அவனின் மரண வேளை உதையேயன்றி வேறல்ல.

5. இது நான்கில் 1946 நவம்பர் 4ந் தேதி சியாங் கை-ஷேக் அரசாங்கத்திற்கும் அமெரிக்க அரசாங்கத்திற்குமிடையில் கைச்சாத்திடப்பட்ட சீனுவின் அரசுரிமையை விற்ற ''சீன-அமெரிக்க நட்புறவு வர்த்தக கடற்போக்குவரவு ஒப்பந்த''த்தைக் குறிக்கின்றது. சீனுவின் அரசுரிமையில் பெரும் பகுதியை அமெரிக்காவுக்கு விற்ற இந்த ஒப்பந்தம் முப்பது ஷரத்துக்களைக் கொண்டிருந்தது. அவற்றின் பிரதான அம்சம் பின்வருமாறு:

1) அமெரிக்க நாட்டவருக்குச் சீனுவின் ''முழுப் பிரதேச''த்திலும் வசிக்கவும், பிரயாணம் செய்யவும், வர்த்தக, உற்பத்தி, பதனிடுதல், விஞ்ஞான, கல்வி, மத, பரோபகார நடவடிக்கைகளில் ஈடுபடவும், கனிப்பொருட்களைத் தேடி வெட்டியெடுக்கவும் பயன்படுத்தவும், நிலத்தைக் குத்தகைக்கு எடுக்கவும்

வைத்திருக்கவும், பல்வேறு வேலைகளிலும் ஈடுபடவும் உரிமையுண்டு. பொருளாதார உரிமைகளைப் பொறுத்தவரை, சீனுவிலுள்ள அமெரிக்க நாட்டவருக்குச் சீன மக்களின் அதே உரிமை உண்டு.

2) சீனுவில் வரி, விற்பனை, விநியோகம், பயன்பாட்டைப் பொறுத்தவரை அமெரிக்க வாணிகப் பொருட்களுக்கு மூன்றாவது நாடு எதனதும் வாணிகப் பொருட்களுக்கோ, சீன வாணிகப் பொருட்களுக்கோ உள்ள சலுகைகளுக்குக் குறையாத சலுகைகள் அளிக்கப்பட வேண்டும். அமெரிக்காவில் பயிரிடப்பட்ட, உருவாக்கப்பட்ட, அல்லது உற்பத்தி செய்யப்பட்ட எந்தப் பொருளையும் அமெரிக்காவிலிருந்து சீனுவுக்கு இறக்குமதி செய்வதற்கு அல்லது எந்தச் சீனப் பொருளையும் அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்வதற்கு ''எவ்வித தடையுமோ கட்டுப்பாடுமோ விதிக்கப்படக்கூடாது.''

3) அந்நிய வர்த்தகத்திற்கு அல்லது கடற்போக்குவரவுக்குத் திறந்துவிடப்பட்ட சீனுவின் எந்தத் துறைமுகத்திலும் இடத்திலும் நீரிலும் போக அமெரிக்கக் கப்பல்களுக்குச் சுதந்திரமுண்டு; அவற்றின் ஆட்களுக்கும் சரக்குகளுக்கும் சீனப் பிரதேசத்தினூடாக ''மிக வசதியான மார்க்கத்தில்'' செல்ல சுதந்திரமுண்டு. ''எந்த....பாதகமான நிலைமை காரணமாகவும்'' போர்க்கப்பல்கள் உட்பட அமெரிக்கக் கப்பல்கள் அனைத்துக்கும் ''அந்நிய வர்த்தகத்திற்கோ கடற்போக்குவரத்துக்கோ திறந்துவிடப்படாத சீனுவின் எந்தத் துறைமுகத்திலும் இடத்திலும் நீரிலும் செல்ல முடியும்.''

அப்போது அமெரிக்காவில் சியாங் கை-ஷேக்கின் ஸ்தானிகராயிருந்த வெலிங்டன் கூ இவ்வொப்பந்தம் ''முழுச் சீனப் பிரதேசத்தையும் அமெரிக்க வர்த்தகர்களுக்குத் திறந்துவிடுவது'' என்று அர்த்தப்படுகிறதென்று பகிரங்கமாகவும், வெட்கமின்றியும் கூறினுன்.

# மூன்று பிரதான கட்டுப்பாட்டு விதிகளினதும் கவனத்திற்கான எட்டம்சங்களினதும் மறு வெளியீடு பற்றி — சீன மக்கள் விடுதலைச் சேனையின் பொது ஆணைப்பகுதியின் உத்தரவு

**(1947, அக்டோபர் 10)**

*1. எமது ராணுவத்தின் மூன்று பிரதான கட்டுப்பாட்டு விதிகளும் கவனத்திற்கான எட்டம்சங்களும் நீண்டகாலமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன[1]. ஆனால் வெவ்வேறு இடங்களிலுள்ள ராணுவ யுனிட்டுகளில் அவற்றின் உள்ளடக்கம் சிறிது வேறுபடுகிறது. அவை இப்போது ஒருமைப்படுத்தப்பட்டு இத்தால் மறுவெளியீடு செய்யப்படுகிறது. இதை அதிகாரபூர்வமான ஒன்றுகக் கொண்டு ஆழமான போதனை நடத்தி இதைக் கறாராக அமுலாக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஏனைய கவனத்திற்குரிய விஷயங்களைப் பொறுத்தவரை வெவ்வேறு இடங்களிலுள்ள ஆயுதப்படைகளின் உயர்தலைமை குறிப்பிட்ட நிலைமைகளுக்கேற்ப இன்னும் கூடிய அம்சங்களை முன்வைத்து அவற்றைக் கொண்டு நடத்த ஆணையிடலாம்.*

2. மூன்று பிரதான கட்டுப்பாட்டு விதிகளும் பின்வருமாறு:-

(1) நடவடிக்கைகள் எல்லாவற்றிலும் கட்டளைக்குக் கீழ்ப் படி;

(2) மக்களிடமிருந்து ஒரு ஊசியையோ அல்லது ஒரு துண்டு நூலையோ எடுக்காதே;

(3) கைப்பற்றிய எல்லாவற்றையும் வைத்திராது ஒப் படை.

3. கவனத்திற்கான எட்டம்சங்களும் பின்வருமாறு:-

(1) மரியாதையாகப் பேசு;

(2) வாங்குவதிலும் விற்பதிலும் நியாயமாக நடந்து கொள்;

(3) கடன் வாங்கியவற்றைத் திருப்பிக் கொடு;

(4) சேதங்களுக்கு நஷ்ட ஈடு செலுத்து;

(5) மக்களை அடிக்கவோ நிந்திக்கவோ கூடாது;

(6) பயிர்களை அழிக்காதே;

(7) பெண்களிடம் ஒழுங்கீனமாய் நடவாதே;

(8) கைதிகளைத் துன்புறுத்தாதே.

## குறிப்பு

1. மூன்று பிரதான கட்டுப்பாட்டு விதிகளும் கவனத்திற்கான எட்டம்சங்களும் இரண்டாவது புரட்சிகர உள்நாட்டு யுத்தத்தின் போது தோழர் மாஓ சேதுங் அவர்கள் சீனத் தொழிலாளர் விவசாயி செஞ்சேனைக்கென வகுத்த கட்டுப் பாட்டு விதிகள். அவை செஞ்சேனையின் அரசியல் வேலையில் ஒரு முக்கிய இடத்

தைப் பெற்றதோடு மக்கள் ஆயுதப்படையைக் கட்டியமைப்பதிலும், ராணு வத்திற்குள் உறவுகளைச் சரியாகக் கையாள்வதிலும், வெகுஜனங்களோடு ஐக் கியத்தை ஏற்படுத்துவதிலும், கைதிகளைப் பொறுத்து மக்கள் சேனையின் சரியான கொள்கையை வகுப்பதிலும் ஒரு பெரும் பாத்திரத்தை வகித்துமுள்ளன. செஞ்சேனையின் ஆரம்ப நாட்கள் முதலே தோழர் மாஓ சேதுங் அவர்கள் வெகுஜனங்களுடன் மரியாதையாகப் பேசும்படியும், வாங்குவதிலும் விற்பதிலும் நியாயமாக நடந்து கொள்ளும்படியும், மக்களை ஒருபோதும் கட்டாய உழைப்பி லீடுபடுத்த வேண்டாமென்றும் மக்களை அடிக்கவோ நிந்திக்கவோ செய்யவேண் டாமென்றும் போர்வீரர்களைக் கேட்டுக்கொண்டார். 1928ம் ஆண்டு வசந்த காலத்தில் தொழிலாளர் விவசாயி செஞ்சேனை சிங்காங் மலைகளிலிருந்த போது தோழர் மாஓ சேதுங் அவர்கள் பின்வரும் மூன்று பிரதான கட்டுப்பாட்டு விதி களை வகுத்தார்: (1) நடவடிக்கைகள் எல்லாவற்றிலும் கட்டளைக்குக் கீழ்ப்படி; (2) தொழிலாளர் விவசாயிகளிடமிருந்து எதையும் எடுக்காதே; (3) உள்ளூர்க் கொடுங்கோலர்களிடமிருந்து பறித்த அனைத்தையும் வைத்திராது ஒப்படை. 1928ம் ஆண்டுக் கோடைகாலத்தில் அவர் கவனத்திற்கான ஆறம்சங்களை வகுத் தார். அவை: (1) படுக்கைப் பலகைகளாக உபயோகித்த கதவுகளைத் திரும்பவும் பொருத்திவிடு; (2) படுக்கைக்கு உபயோகித்த வைக்கோலை திரும்பவும் எடுத்த இடத்தில் போடு; (3) மரியாதையாகப் பேசு; (4) வாங்குவதிலும் விற்பதிலும் நியாயமாக நடந்து கொள்; (5) கடன் வாங்கியவற்றைத் திருப்பிக் கொடு; (6) சேதங்களுக்கு நஷ்ட ஈடு செலுத்து. 1929ம் ஆண்டுக்குப்பின் தோழர் மாஓ சேதுங் அவர்கள் மூன்று பிரதான கட்டுப்பாட்டு விதிகளில் பின்வரும் மாற்றங் களைச் செய்தார்: இரண்டாவது விதி ''மக்களிடமிருந்து ஒரு ஊசியையோ அல்லது ஒரு துண்டு நூலையோ எடுக்காதே'' ஆகியது; மூன்றாவது விதி முதலில் ''சேகரித்த பணமனைத்தையும் ஒப்படை'' என்பதாகவும் பின் ''கைப்பற்றிய எல்லாவற்றையும் வைத்திராது ஒப்படை'' என்பதாகவும் மாற்றப்பட்டது. கவனத்திற்கான ஆறம்சங்களோடு மேலும் இரண்டைக் கூட்டினர். அவை: ''பெண்கள் கண்ணுக்குப் படும்படியான இடங்களில் குளியாதே'', ''கைதி களின் சட்டைப்பைகளைச் சோதனை போடாதே''. இது தான் மூன்று பிரதான கட்டுப்பாட்டு விதிகளதும், கவனத்திற்கான எட்டம்சங்களதும் மூலம்.

# இன்றைய நிலைமையும் நமது கடமைகளும்*

## (இவ்வறிக்கையின் முதல் மூன்று பகுதிகள்)

**(1947, டிசம்பர் 25)**

## I

*சீன மக்களின் புரட்சிகர யுத்தம் இப்பொழுது ஒரு திருப்பு மையத்தை அடைந்துள்ளது. அதாவது, சீன மக்கள் விடுதலைச் சேனை அமெரிக்காவின் ஏவல்நாயான சியாங் கை-ஷேக்கின் பல பத்து லட்சம் பிற்போக்குத் துருப்புக்களின் தாக்குதலை முறியடித்து விட்டுத் தாக்குதலுக்கு மாறியுள்ளது. தற்போதைய யுத்தத்தின் முதலாவது, 1946 ஜுலையிலிருந்து 1947 ஜுன் வரையான, ஆண்டிலேயே மக்கள் விடுதலைச் சேனை*

---

**இவ்வறிக்கை தோழர் மாஓ சேதுங் அவர்களால் வட ஷென்சியில் மிச்சி மாவட்டத்திலுள்ள யாங்சியாகோவில் 1947, டிசம்பர் 25-28 திகதிகளில் நடைபெற்ற சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. சமூகமளிக்கக்கூடியதாயிருந்த மத்திய கமிட்டி அங்கத்தினர்களோடும் மாற்று அங்கத்தினர்களோடும், ஷென்சி-கன்சு-நிங்சியா எல்லைப் பிரதேசத்தினதும் ஷன்சி-சுய்யுவான் எல்லைப் பிரதேசத்தினதும் பொறுப்புள்ள தோழர்களும் பிரசன்னமாயிருந்தனர். அக்கூட்டம் தோழர் மாஓ சேதுங் அவர்களது இந்த அறிக்கையையும் அவரால் எழுதப்பட்ட, ''தற்போதைய*

ஏற்கனவே பல முனைகளில் சியாங் கை-ஷேக்கின் தாக்குதலை முறியடித்து அவனைத் தற்காப்பிற்கு நிர்ப்பந்தித்துத் தள்ளியிருந்தது. 1947, ஜூலை முதல் செப்டம்பர் வரையான, யுத்தத்தின் இரண்டாவது ஆண்டின் முதல் மூன்று மாதங்களிற் தொடங்கி மக்கள் விடுதலைச் சேனை தேசிய ரீதியிற் தாக்குதலுக்கு மாறி, விடுதலைப் பிரதேசங்களை முற்றாக அழித்து விடவேண்டி யுத்தத்தை அவற்றுள் தொடர்ந்து கொண்டு செல்வதான சியாங் கை-ஷேக்கின் எதிர்ப்புரட்சிகர திட்டத்தைத் துவம்சம் செய்தது. இப்போது யுத்தம் பிரதானமாக விடுதலைப் பிரதேசங்களில் அல்ல, கோமிந்தாங் ஆளும் பிரதேசங்களிலேயே நடைபெறுகிறது; மக்கள் விடுதலைச் சேனையின் பிரதான படைகள் சண்டையைக் கோமிந்தாங் ஆளும் பிரதேசங்களுக்குள் கொண்டு சென்றுள்ளன.[1] இந்தச் சீன மண்ணில் மக்கள் விடுதலைச் சேனை எதிர்ப்புரட்சியின் — அமெரிக்க ஏகாதிபத்தியத்தினதும் அதன் அடிவருடியான சியாங் கை-

---

சர்வதேசிய நிலைமை பற்றிய மதிப்பீட்டில் ஒருசில அம்சங்கள்'' என்ற மற்றொரு சாசனத்தையும் (''தேர்ந்தெடுக்கப்பட்ட மாஓ சேதுங் படைப்புகள்'' வால்யும் 4 லே பார்க்கவும்) விவாதித்து ஏற்றுக்கொண்டது. தோழர் மாஓ சேதுங் அவர்களின் அறிக்கை சம்பந்தமாக, அக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவு கூறியதாவது, ''இந்த அறிக்கை அரசியல், ராணுவ, பொருளாதாரத் துறைகளில், பிற்போக்கு சியாங் கை-ஷேக் கும்பலை வீழ்த்துவதினதும் புதிய ஜனநாயகச் சீனாவை ஸ்தாபிப்பதினதும் காலகட்டம் முழுமைக்குமான, ஓர் வேலைத் திட்ட ரீதியான சாசனம். கட்சி முழுமையும் சேனை முழுமையும் இந்தச் சாசனத்தையும், இதோடு தொடர்பாக, 1947, அக்டோபர் 10ந் திகதி பிரசுரிக்கப்பட்ட சாசனங்களையும் (அதாவது, 'சீன மக்கள் விடுதலைச் சேனையின் பிரகடனம்', 'சீன மக்கள் விடுதலைச் சேனையின் கோஷங்கள்', 'மூன்று பிரதான கட்டுப்பாட்டு விதிகளினதும் கவனத்திற்கான எட்டம்சங்களினதும் மறு வெளியீடு பற்றிய உத்தரவு', 'சீனாவின் நிலச் சட்டச் சுருக்கம்', 'சீனாவின் நிலச் சட்டச் சுருக்

யுத்தமாகையால் நாம் அவனைத் தோற்கடிக்க வேண்டும். இரண்டாம் உலக யுத்தத்தின் முடிவுக்கும் ஜப்பானிய ஏகாதிபத்தியம் வீழ்த்தப்பட்டதற்கும் பின்னர் சீன மக்களின் பணி புதிய ஜனநாயக மாற்றத்தை அரசியல், பொருளாதார, கலாச்சார ரீதிகளிற் பூர்த்திசெய்வதும், தேசிய ஒருமைப்பாட்டையும் சுதந்திரத்தையும் அடைவதும் சீனுவை விவசாய நாடாக இருப்பதிலிருந்து கைத்தொழில் நாடாக மாற்றுவதுமாக இருந்தது. ஆனுல் அந்த நேரத்தில் பாஸிஸ-எதிர்ப்பு இரண்டாம் உலக யுத்தம் வெற்றிகரமாக முடிவுற்ற பின்னர், அமெரிக்க ஏகாதிபத்தியமும் பல்வேறு நாடுகளிலான அதன் அடிவருடிகளும் ஜெர்மனிய, ஜப்பானிய ஏகாதிபத்தியங்களினதும் அவற்றின் அடிவருடிகளினதும் ஸ்தானங்களை எடுத்துக் கொண்டு, சோவியத் யூனியனுக்கு எதிராகவும், ஐரோப்பாவிலுள்ள மக்கள் ஜனநாயக அரசுகளுக்கு எதிராகவும், முதலாளித்துவ நாடுகளிலான தொழிலாளர் இயக்கங்களுக்கு எதிராகவும், காலனிகளிலும் அரைக் காலனிகளிலுமான தேசிய இயக்கங்களுக்கு எதிராகவும், சீன மக்களின் விடுதலைக்கு எதிராகவும் ஒரு பிற்போக்கு முகாமை உருவாக்கினர். அத்தகைய ஒரு தருணத்தில் சியாங் கை-ஷேக்கின் தலைமையிலான சீனப் பிற்போக்காளர்கள், ஜப்பானிய ஏகாதிபத்தியத்தின் ஏவல்நாயான வாங் சிங்-வெய் செய்தது போலவே, அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு ஏவல் நாயாகச் செயல்பட்டு, சீனுவை அமெரிக்காவுக்கு விற்று, சீன மக்களின் விடுதலை இலட்சியத்தின் முன்னேற்றத்தைத் தடுப்பதற்காக அவர்களுக்கு எதிராக ஒரு யுத்தத்தையும் கட்டவிழ்த்துவிட்டனர். அத்தகைய ஒரு தருணத்தில் நாம் பலவீனத்தைக் காண்பித்திருந்தாலோ அல்லது இடங்கொடுத்து, எதிர்ப்புரட்சிகர யுத்தத்தைப் புரட்சிகர யுத்தத்தால் எதிர்க்க உறுதியுடன்

எழத் துணியாதிருந்திருந்தாலோ, சீனு இருண்டதோர் உல கமாகியிருக்கும், எமது தேசத்தின் எதிர்காலம் பறிகொடுக் கப்பட்டிருக்கும். சீனக் கம்யூனிஸ்ட் கட்சி சீன மக்கள் விடு தலைச் சேனைக்குச் சியாங் கை-ஷேக்கின் தாக்குதலுக்கு எதி ராக ஒரு தேசபக்த, நியாயமான, புரட்சிகர யுத்தத்தை உறுதியுடன் நடத்துவதிற் தலைமைதாங்கியுள்ளது. சீனக் கம்யூ னிஸ்ட் கட்சி, மார்க்ஸிஸ-லெனினிஸ விஞ்ஞானத்தின் அடிப் படையில் சர்வதேசிய, தேசிய நிலைமைகளைத் தெளிந்த சிந் தையுடன் மதிப்பீடு செய்து, எல்லா உள்நாட்டு வெளிநாட்டு பிற்போக்குவாதிகளின் தாக்குதல்களும் தோற்கடிக்கப்பட வேண்டும், தோற்கடிக்கப்படவும் முடியும் என்பதை உணர்ந்து கொண்டது. வானத்தில் கருமுகில்கள் தோன்றியபோது, இவை தற்காலிகமானவையே, இருள் விரைவில் நீங்கும், சூரி யன் இதோ தோன்றுவான் என்று நாம் சுட்டிக்காட்டினோம். சியாங் கை-ஷேக் கொள்ளைக் கூட்டத்தினர் 1946, ஜுலையில் நாடுபரந்த எதிர்ப்புரட்சிகர யுத்தத்தைத் தொடுத்தபோது அவர்கள் மக்கள் விடுதலைச் சேனையைத் தோற்கடிக்கத் தங் களுக்கு மூன்று முதல் ஆறு மாதங்கள் வரை மட்டுமே பிடிக் கும் என நினைத்தனர். தம்மிடம் இருபது லட்சம் வீரர்கள டங்கிய கிரமமான சேனையும், பத்து லட்சத்திற்கு மேற்பட்ட கிரமமல்லாத படையினரும், பின்னணிப் பிரதேசத்திலான ரா ணுவ நிறுவனங்களிலும் ஆயுதந்தரித்த கூறுகளிலும் மேலும் பத்து லட்சத்திற்கு மேற்பட்ட வீரர்களுமாக மொத்தம் நாற் பது லட்சம் வீரர்களுக்கு மேற்பட்ட ராணுவப்பலம் இருப்ப தாகவும், தாம் தாக்குதலுக்கான தம் தயாரிப்புகளைப் பூர்த் திசெய்ய நேரம் செலவழித்திருப்பதாகவும், தாம் பெரிய நக ரங்களைத் திரும்பத் தமது கட்டுப்பாட்டிற்குக் கொண்டு வந்

திருப்பதாகவும், தம்மிடம் 30 கோடிக்கு மேற்பட்ட ஜனத் தொகை இருப்பதாகவும், தாம் பத்து லட்சம் ஜப்பானிய ஆக்கிரமிப்புப் படைகளின் சாதனங்கள் முழுவதையும் எடுத் துக்கொண்டிருப்பதாகவும், தாம் அமெரிக்க அரசாங்கத்திட மிருந்து பிரமாண்டமான ராணுவ, நிதி உதவி பெற்றிருப் பதாகவும் அவர்கள் கணக்குப் போட்டனர். மேலும், அவர் கள் சீன மக்கள் விடுதலைச் சேனை ஜப்பானிய-எதிர்ப்பு யுத் தத்தில் எட்டு ஆண்டுகளாகப் போர் செய்ததன் பின் மிகக் களைப்புற்றும், கோமிந்தாங் சேனையைவிட எண்ணிக்கையிலும் சாதன வசதியிலும் தாழ்ந்ததாயும் இருக்கிறது எனவும், சீனு வில் விடுதலையாக்கப்பட்ட பிரதேசங்களின் ஜனத்தொகை பத் துக் கோடிக்குச் சற்றே தான் அதிகம் எனவும், இந்தப் பிர தேசங்களில் அனேகமானவற்றில் பிற்போக்கான நிலப்பிரபுத் துவ சக்திகள் இன்னும் ஒழிக்கப்படவில்லை; நிலச் சீர்திருத்தமும் இன்னும் சர்வவியாபகமாகவும் முற்றுகவும் நடத்தப்படவில்லை; அதாவது, மக்கள் விடுதலைச் சேனையின் பின்னணிப் பிரதேசம் இன்னும் ஸ்திரப்படுத்தப்படவில்லை எனவும் கணக்குப்போட் டனர். இந்தக் கணிப்பீட்டிலிருந்து ஆரம்பித்து, சியாங் கை-ஷேக் கொள்ளைக் கூட்டத்தினர் சமாதானத்திற்கான சீன மக்களின் அவாவைப் புறக்கணித்து, இறுதியில் கோமிந்தா னிலும் கம்யூனிஸ்ட் கட்சியினுலும் 1946 ஜனவரியில் கைச் சாத்திடப்பட்ட போர்நிறுத்த உடன்படிக்கையையும் சகல கட் சிகளினதும் அரசியல் கலந்தாலோசனை மாநாட்டால் நிறை வேற்றப்பட்டிருந்த தீர்மானங்களையும் கிழித்தெறிந்து துணிச் சல்வாத யுத்தமொன்றைத் தொடுத்தனர். ராணுவப் பலத் திலான சியாங் கை-ஷேக்கின் உயர்ச்சி தற்காலிகமான தோற் றமே, தற்காலிகமான ஒரு பங்கை மட்டுமே வகிக்க வல்ல

ஒரு அம்சமே; அதே போல அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் உதவியும் தற்காலிகமான ஒரு பங்கை மட்டுமே வகிக்கக்கூடிய ஒரு அம்சமே; ஆனால் சியாங் கை-ஷேக்கின் யுத்தத்தின் மக்கள்-விரோத இயல்பும் மக்களின் உணர்ச்சிகளும் நிலையான ஒரு பங்கை வகிக்கப்போகும் அம்சங்கள்; இந்த வகையில் மக்கள் விடுதலைச் சேனை உயர்வான ஒரு ஸ்தானத்தில் உள்ளது என நாம் அப்போது கூறினோம். இயல்பில் தேசபக்தியானதும் நீதியானதும் புரட்சிகரமானதுமாகையால் மக்கள் விடுதலைச் சேனையால் நடத்தப்படும் யுத்தம் நாடு முழுவதின் மக்களதும் ஆதரவை வென்றெடுத்தே தீர வேண்டியிருந்தது. அதுவே சியாங் கை-ஷேக்மீதான வெற்றிக்கான அரசியல் அத்திவாரம். பதினெட்டு மாத கால யுத்தத்தின் அனுபவம் எமது மதிப்பீட்டைப் பூரணமாக உறுதிப்படுத்தியுள்ளது.

## III

பதினேழு மாத கால (1946, ஜூலை முதல் 1947 நவம்பர் வரை; டிசம்பருக்கான புள்ளிவிபரங்கள் இன்னும் கிடைக்கப் பெறவில்லை) சண்டையிடலில் நாம் சியாங் கை-ஷேக்கின் கிரமமான, கிரமமல்லாத துருப்புக்களில் 1,690,000 வீரர்களைக் கொன்றும் காயப்படுத்தியும் கைப்பற்றியும் — கொன்றதும் காயப்படுத்தியதும் 640,000 பேரை, கைப்பற்றியது 1,050,000 பேரை — உள்ளோம். இவ்வாறாக எம்மால் சியாங் கை-ஷேக்கின் தாக்குதலை முறியடித்துப் பின்தள்ளவும் விடுதலையாக்கப்பட்ட பிரதேசங்களின் பிரதான பிரதேசங்களைப் பேணிக்

கொள்ளவும் தாக்குதலுக்கு மாறவும் முடிந்துள்ளது. ராணுவ அம்சத்தைக் கொண்டு பேசுவதானால், நாம் சரியான யுத்ததந்திரத்தை உபயோகித்ததால் எம்மால் இதைச் செய்ய முடிந்தது. நமது போர் நடவடிக்கைக் கோட்பாடுகள் பின் வருமாறு:-

1. கலைந்து, தனிமைப்பட்டிருக்கும் எதிரிப்படைகளை முதலிற் தாக்குவது; செறிந்த, பலமான எதிரிப்படைகளைப் பின்னர் தாக்குவது.

2. சிறிய, மத்தியதர நகரங்களையும், விசாலமான கிராமப் பிரதேசங்களையும் முதலிற் கைப்பற்றுவது; பெரிய நகரங்களைப் பின்னர் கைப்பற்றுவது.

3. வினைத்திறனுடைய எதிரியின் பலத்தைத் துடைத்தொழிப்பதைப் பிரதான இலக்காகக் கொள்ளவேண்டும். ஒரு நகரை அல்லது இடத்தைப் பாதுகாத்து வைத்திருப்பதை அல்லது கைப்பற்றுவதைப் பிரதான இலக்காகக் கொள்ளக் கூடாது. ஒரு நகரை அல்லது இடத்தைப் பாதுகாத்து வைத்திருப்பது அல்லது கைப்பற்றுவது, வினைத்திறனுடைய எதிரியின் பலத்தை அழிப்பதன் விளைவாகும். ஒரு நகரை அல்லது இடத்தைப் பாதுகாத்து வைத்திருப்பதற்கு அல்லது கைப்பற்றுவதற்கு முன், அது பல தடவை கைமாறுவது வழக்கம்.

4. ஒவ்வொரு சமரிலும் முற்றுக மேம்பாடான படைகளை (எதிரியின் பலத்திலும் பார்க்க இரண்டு, மூன்று, நாலு, சில சமயங்களில் ஐந்து அல்லது ஆறு மடங்கு படைகளை) ஒன்றுகுவித்து, எதிரிப்படைகளை நாலு பக்கத்தாலும் சுற்றிவளைத்து, அவற்றைப் பூரணமாகத் துடைத்தொழிக்

கப் பாடுபட்டு, வலையிலிருந்து ஒருவரேனும் தப்பி ஓடாமற் பார்த்துக் கொள்வது. விசேஷ நிலைமைகளில், எதிரிக்கு அழிவு தரும் அடிகள் கொடுக்கும் முறையை உபயோகிப்பது; அதாவது, நமது பலம் முழுவதையும் ஒன்றுகுவித்து, எதிரிமீது நேர்முகத் தாக்குதல் தொடுத்தும் அவனது விலாப் புறத்தின் ஒரு புறத்தில் அல்லது இரண்டு புறங்களிலும் தாக்குதல் தொடுத்தும், அவனுடைய ஒரு பகுதியைத் துடைத்தொழித்து, இன்னொரு பகுதியைச் சிதறி ஓடச் செய்வது; இவ்வாறு, நமது படை இதர எதிரிப்படைகளைத் தாக்கி ஒழிப்பதற்கு, தன் துருப்புக்களை விரைவாக நகர்த்த முடியும். நாம் பெறுவதிலும் பார்க்கக் கூடுதலாக இழக்கின்ற, அல்லது இரு தரப்பும் சமமாக இழக்கின்ற தேய்க்கும் சமர்களைத் தவிர்க்கப் பாடுபடுவது. இப்படிச் செய்தால், முழுமையில் (எண்ணிக்கை அளவில்) நாம் தாழ்ந்தவர்களாய் இருந்தாலும், ஒவ்வொரு பகுதியிலும், குறிப்பிட்ட ஒவ்வொரு போரியக்கத்திலும் நாம் முற்றாக மேம்பாடுடையவர்களாய் இருப்போம். இது போரியக்கத்தின் வெற்றியை உத்தரவாதம் செய்யும். காலப்போக்கில், முழுமையிலும் நாம் மேம்பாடுடையவர்களாக மாறி, இறுதியில் எதிரிகள் எல்லாரையும் துடைத்தொழிப்போம்.

5. தயார் செய்யாமல் எந்தச் சமரிலும் போரிடாதே; வெற்றி நிச்சயம் இல்லாத எந்தச் சமரிலும் இறங்காதே; ஒவ்வொரு சமருக்கும் இயன்றவை அனைத்தையும் செய்து தயாராய் இருக்க வேண்டும்; எதிரிக்கும் நமக்கும் உள்ள நிலைமைகளின் பிரகாரம் நாம் வெல்லக்கூடிய போரை நடத்த வேண்டும்.

6. சமரிற் துணிவு, தியாகத்துக்கு அஞ்சாமை, களைப்

புக்கு அஞ்சாமை, தொடர்ச்சியாகப் போரிடுவது (அதாவது, குறுகிய காலத்தில் ஓய்வு இன்றி அடுத்தடுத்துச் சமர் பல புரிவது) என்ற நமது போர் நடையைப் பூரணமாக வெளிப்படுத்துவது.

7. இயங்கிக் கொண்டிருக்கும்போது எதிரியைத் துடைத்தொழிக்கப் பாடுபடுவது; அதே சமயத்தில் நிலையங்களைத் தாக்கும் தந்திரோபாயங்களிற் கவனம் செலுத்தி, எதிரியின் அரண்களையும் நகரங்களையும் கைப்பற்றுவது.

8. நகரங்களைத் தாக்கும் பிரச்சினையில், பலவீனமான காவல்களையுடைய எதிரியின் அரண்கள், நகரங்கள் எல்லாவற்றையும் உறுதியாகக் கைப்பற்றுவது; சூழ்நிலைகள் அனுமதித்தால் நடுத்தரப் பலத்தாற் காவல் செய்யப்பட்டிருக்கும் எதிரியின் அரண்கள், நகரங்கள் எல்லாவற்றையும் சந்தர்ப்பங்களைப் பார்த்துக் கைப்பற்றுவது. பலத்த காவல்களையுடைய எதிரியின் அரண்கள், நகரங்கள் அனைத்தையும் பொறுத்தவரையில், சூழ்நிலைகள் பக்குவம் அடையும் வரை காத்திருந்து அவற்றைக் கைப்பற்றுவது.

9. எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் எல்லாவற்றையும், ஆட்களிற் பெரும்பாலானோரையும் கொண்டு, நமது பலத்தைப் பெருக்குவது. நமது படையின் ஆட்பலத்தினதும் பொருளாயத பலத்தினதும் ஊற்று மூலங்கள் பிரதானமாகப் போர்முனையில் இருக்கின்றன.

10. ஓய்வு எடுக்கவும், நமது படைகளைப் பயிற்றவும் ஸ்திரப்படுத்தவும் நல்ல முறையில் போர்களில் வரும் இடைக் காலங்களை உபயோகிப்பது. ஓய்வு எடுத்து, பயிற்சி செய்து, ஸ்திரப்படுத்தும் காலங்கள் பொதுவாக நீண்டவையாய்

இருக்கக் கூடாது. இயன்ற அளவில் எதிரிக்கு மூச்சுவிடவே அவகாசம் கொடுக்கக் கூடாது.

இவையே சியாங் கை-ஷேக்கைத் தோற்கடிப்பதில் மக்கள் விடுதலைச் சேனை பிரயோகித்துள்ள பிரதான முறைகள். இவை உள்நாட்டு, அந்நிய எதிரிகளுக்கு எதிரான நீண்ட பல ஆண்டுகளின் போரில் மக்கள் விடுதலைச் சேனை உரமேறியதன் பலாபலனும், எமது தற்போதைய நிலைமைக்கு முற்றாகப் பொருத்தமானவையுமாகும். சியாங் கை-ஷேக் கொள்ளையர் கூட்டமும் சீனாவிலுள்ள அமெரிக்க ஏகாதிபத்திய ராணுவஸ்தர்களும் எம்முடைய இந்த ராணுவ முறைகளோடு நன்கு பரிச்சயப்பட்டுள்ளனர். இவற்றுக்கு மாற்று முறைகளைத் தேடிச் சியாங் கை-ஷேக் பல சமயம் தன் தளபதிகளையும் களத்தளகர்த்தர்களையும் பயிற்சிக்காகக் கூட்டியும் அவர்கள் கற்பதற்காக எமது ராணுவ இலக்கியத்தையும் யுத்தத்திற் கைப்பற்றப்பட்ட சாசனங்களையும் விநியோகித்தும் உள்ளான். அமெரிக்க ராணுவஸ்தர்கள் சியாங் கை-ஷேக்கிற்கு மக்கள் விடுதலைச் சேனையை அழிக்க ஒன்றன் பின் மற்றொன்றாகப் பல ரக யுத்ததந்திரங்களையும் தந்திரோபாயங்களையும் சிபார்சு செய்துள்ளனர்; அவர்கள் சியாங் கை-ஷேக்குக்காகத் துருப்புக்களைப் பயிற்றியும் அவற்றிற்கு ராணுவ சாதனங்கள் தந்தும் உள்ளனர். ஆனால் இந்தப் பிரயாசைகள் எதுவும் சியாங் கை-ஷேக் கொள்ளையர் கூட்டத்தைத் தோல்வியிலிருந்து காப்பாற்ற முடியாது. இதற்குக் காரணம் எமது யுத்ததந்திரமும் தந்திரோபாயங்களும் மக்கள் யுத்தத்தின் அடிப்படையிலானவை என்பதாகும்; மக்களுக்கு எதிரான எந்தச் சேனையும் எமது யுத்ததந்திரத்தையும் தந்திரோபாயங்களையும் உபயோகிக்க முடியாது. மக்கள் விடு

தலைச் சேனை மக்கள் யுத்தத்தின் அடிப்படையிலும், ராணுவத்துக்கும் மக்களுக்குமிடை ஐக்கியம், தளபதிகளுக்கும் போராளிகளுக்குமிடை ஐக்கியம், எதிரிப்படைகளைச் சின்னுபின்னப் படுத்துவது என்ற கோட்பாட்டின் அடிப்படையிலும் அதன் சக்திவாய்ந்த புரட்சிகர அரசியல் வேலையை ஸ்தாபித்துள்ளது. எதிரியை வெற்றி கொள்வதில் இது ஒரு முக்கியமான அம்சமாய் விளங்குகின்றது. நாம் உயர்வான எதிரிப் படைகளின் மரணுபத்தான தாக்குதல்களைத் தவிர்த்து விலகவும் இயங்கிக்கொண்டிருக்கும் போது எதிரியைத் துடைத்தொழிக்கப் பாடுபட எம் படைகளை நகர்த்தவும் வேண்டி எம் சொந்த முன்னேட்டப்படி பல நகரங்களைக் கைவிட்டுச்சென்றபோது எமது எதிரிகள் ஆனந்தப்பட்டனர். அவர்கள் இதைத் தங்கள் வெற்றியென்றும் எமது தோல்வியென்றும் கொண்டனர். அவர்கள் இந்தக் கண நேர ''வெற்றி''யால் போதையுற்றனர். சியாங் கை-ஷேக் தான் சாங்சியாகோவைக் கைப்பற்றிய அதே தினம் பிற்பகலில் ஏதோ தன் பிற்போக்கு ஆட்சி அந்தக் கணத்திலிருந்து தைஷன் மலை போல் நிலைபெற்று விட்டதென்பது போல் தன் பிற்போக்குத் தேசிய சபை கூட்டப்பட உத்தரவிட்டான். அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளும் ஏதோ சீனவை ஒரு அமெரிக்க காலனியாக மாற்றுவதற்கான தங்கள் மிலேச்சத் திட்டம் இப்போது தடங்கலின்றி நிறைவேற்றிக் கொள்ளப்பட முடியும் என்பதுபோல ஆனந்தக் கூத்தாடினர். ஆனல் காலம் செல்லச் செல்லச் சியாங் கை-ஷேக்கும் அவனது அமெரிக்க எஜமானர்களும் தங்கள் இராகத்தை மாற்றத் தொடங்கினர். இப்போது எமது உள்நாட்டு, அந்நிய எதிரிகள் எல்லோரும் விரக்தியின் பீடிப்பில் உள்ளனர். அவர்கள் நீண்ட பெருமூச்சுகள் விடுகின்றனர், ஒரு நெருக்கடி பற்றிப் புலம்புகின்

றனர், மேற்கொண்டு மகிழ்ச்சிச் சாயலேயே காண்பிக்கின்ற னரில்லே. கடந்த பதினெட்டு மாதங்களில் சியாங் கை-ஷேக் கின் உயர்தர களத்தளகர்த்தர்களில் அனேகமானோர் போர் களிற் தோற்றமைக்காக மாற்றப்பட்டுள்ளனர். இவர்களில் லியூ சூ (செங்சௌ), சியெ யுயெ (ஷிசௌ), வூ சி-வெய் (வடக்கு கியாங்ஸூ), தாங் என்-போ (தெற்கு ஷன்துங்), வாங் சுங்-லியென் (வடக்கு ஹோனன்), டு யூ-மிங்கும் சியுங் ஷூ-ஹூய்யும் (ஷென்யாங்), சுன் லியென்-சுங் (பெய்ப்பிங்) ஆகி யோர் அடங்குவர். சென் செங்கும் ராணுவ நடவடிக்கைகளுக் குப் பேராணேயாளரான, சியாங் கை-ஷேக்கின் தளகர்த்தப் பிரதானி என்ற ஸ்தானத்திலிருந்து நீக்கப்பட்டு, வட கிழக் கில் தனியொரு முனேக்குத் தளகர்த்தராகப் பதவியிறக்கம் செய்யப்பட்டான்.[2] இருப்பினும், சியாங் கை-ஷேக் தானே சென் செங்கின் இடத்தில் பேராணேயை எடுத்துக்கொண்ட இந் தக் காலகட்டத்திற்தான் அவனது சேனேகள் தாக்குதலிலிருந்து தற்காப்பிற்கு மாறியதும் மக்கள் விடுதலேச் சேனே தற்காப்பி லிருந்து தாக்குதலுக்கு மாறியதுமான நிலேமையொன்று ஏற் பட்டது. இவ்வளவில் பிற்போக்குச் சியாங் கை-ஷேக் கும் பலும் அவர்களின் அமெரிக்க எஜமானர்களும் தங்கள் தவறை உணர்ந்திருக்க வேண்டும். சீனக் கம்யூனிஸ்ட் கட்சி சீன மக் களின் விருப்புகளேப் பிரதிநிதித்துவம் செய்து ஜப்பானின் சரணு கதிக்குப் பின்னர் நீண்ட காலமாகச் சமாதானத்திற்காகவும் உள்நாட்டு யுத்தத்திற்கு எதிராகவும் செய்துவந்த பிரயாசை களே எல்லாம் அவர்கள் கோழைத்தனத்தினதும் பலவீனத் தினதும் அறிகுறிகளாகக் கருதினர். அவர்கள் தம் சொந்தப் பலத்தை மிகைப்படுத்திக் கணிப்பிட்டு, புரட்சியின் பலத்தைச் சிறிதுபடுத்திக் கணிப்பிட்டு, கண்மூடித்தனமாக யுத்தத்தைத்

தொடுத்தனர், எனவே தாமே வைத்த பொறியில் சிக்கிக் கொண்டனர். எமது எதிரியின் யுத்ததந்திர ரீதியான கணிப்பீடுகள் முற்றாகத் தவறிப் போயின.

## குறிப்புகள்

1. மக்கள் விடுதலைச் சேனை பல போர்முனைகளில் இடைவிடாது தாக்குதலுக்குச் சென்று, கோமிந்தாங் ஆட்சிப் பிரதேசங்களில் பிரவேசித்து போர் நடத்தியது சம்பந்தமாக, இப்புத்தகத்திலுள்ள ''வடமேற்கில் ஈட்டிய மகத்தான வெற்றி பற்றியும், விடுதலைச் சேனையில் நடத்திய புதிய ரகச் சீர்செய் இயக்கம் பற்றியும்'' என்ற கட்டுரைக்கான குறிப்பு 4ஐப் பார்க்கவும்.

2. ஹோனுன் மாகாணத்தின் செங்சௌவிலிருந்த கோமிந்தாஙின் அமைதிப் படுத்தும் ஆணைப்பகுதியின் நிர்வாகியாக இருந்த லியூ சூ 1946, செப்டம்பரில் தென் மேற்கு ஷன்துங் மாகாணத்தில் நடந்த திங்தாஒ போரியக்கத்தில் தோல்வியடைந்தமைக்காக 1946 நவம்பரில் பதவி நீக்கம் செய்யப்பட்டான். கியாங்ஸூ மாகாணத்தில் ஷிசௌவிலிருந்த கோமிந்தாஙின் அமைதிப்படுத்தும் ஆணைப் பகுதியின் நிர்வாகியாக இருந்த சியெ யுயெ அவனது ஆணையிலான கோமிந்தாங் துருப்புக்கள் 1946, டிசம்பரில் கியாங்ஸூ மாகாணத்தில் சுஸியெனுக்கு வடக்கிலான பகுதியில் நடந்த போரியக்கத்திலும், 1947, ஜனவரியில் தெற்கு ஷன் துங்கிலான போரியக்கத்திலும், 1947 பெப்ரவரியில் மத்திய ஷன்துங்கிலான லாய்வூ போரியக்கத்திலும் உற்ற அடுக்கான கடும் தோல்விகளுக்காக 1947, மார்ச்சில் பதவி நீக்கம் செய்யப்பட்டான். ஷிசௌவிலிருந்த கோமிந்தாஙின் அமைதிப்படுத்தும் ஆணைப்பகுதியின் உதவி நிர்வாகியாக இருந்த வூ சி-வெய், 1946, டிசம்பரில் சுஸியெனுக்கு வடக்கிலுள்ள பகுதியிலான போரியக்கத்திலான அவனது தோல்விக்காக 1947, மார்ச்சில் பதவி நீக்கம் செய்யப்பட்டான். கோமிந்தாஙின் 1ம் சேனையின் தளகர்த்தராயிருந்த தாங் என்-போ, 1947 மேயில் கோமிந்தாஙின் புனரமைக்கப்பட்ட 74ம் டிவிஷன் தெற்கு ஷன்துங்கிலான மெங்லியாங்கு போரியக்கத்தில் அழித்தொழிக்கப்பட்டதால் ஜூனில் பதவி நீக்கம் செய்யப்பட்டான். கோமிந்தாஙின் 4ம் சேனையின் தளகர்த்தரா

யிருந்த வாங் சுங்-லியென், 1947, ஜூலையில் தென்மேற்கு ஷன்துங் போரி யக்கத்திலான அவனது தோல்விக்காக 1947ல் ஆகஸ்டில் பதவி நீக்கம் செய் யப்பட்டான். வடகிழக்கிலிருந்த கோமிந்தாங்கின் அமைதிபேணும் ஆணைப்பகு தியின் தளபதியாக இருந்த டு யூ-மிங்கும், கோமிந்தாங் பெருந்தளபதியின் வடகிழக்கிலான ஆணைப்பகுதியின் நிர்வாகியாக இருந்த சியுங் ஷு-ஹுய்யும் மக்கள் விடுதலைச் சேனையால் 1947, ஜூனில் வடகிழக்கிலான அதன் கோடைத் தாக்குதலில் கடுமையாகத் தோற்கடிக்கப்பட்டமைக்காகப் பதவி நீக்கம் செய்யப் பட்டனர். கோமிந்தாங்கின் 11ம் யுத்தப் பிராந்தியத்தின் தளபதியாக இருந்த சுன் லியென்-சுங் 1947 ஜூனில் சிங்-ச்சாங் போரியக்கத்திலும் பாஓதினிற்கும் வடக்கிலான ஷிஷுய் பிராந்தியத்தின் போரியக்கத்திலுமான அவனது தோல் விகளுக்காக ஹோபெய் மாகாணத்தில் பாஓதினிலிருந்த அமைதிப்படுத்தும் ஆணைப்பகுதியின் நிர்வாகியாகப் பதவியிறக்கம் செய்யப்பட்டான். சியாங் கை-ஷேக்கின் தளகர்த்தப் பிரதானியாகவிருந்த சென் செங், ஷன்துங் மாகா ணத்தில் நடத்திய போர்நடவடிக்கைகளின் அடுத்தடுத்த தோல்விகள் காரண மாக 1947, ஆகஸ்டில் வடகிழக்கின் கவர்னர்-ஜெனரலாகப் பதவியிறக்கம் செய்யப்பட்டான்.

# ராணுவத்திலான ஜனநாயக இயக்கம்*

**(1948, ஜனவரி 30)**

நமது படையில் அரசியல் வேலைக்கான கொள்கை சாதாரண போர்வீரரையும் தளபதிகளையும் எல்லா ஊழியர்களையும் பூரணமாகத் தட்டி எழுப்பி, மத்தியப்படுத்தப்பட்ட தலைமையின் கீழ் ஒரு ஜனநாயக இயக்கத்தின் மூலம் உயர்ந்த அளவு அரசியல் ஐக்கியம், ஓரளவு சிறந்த வாழ்க்கை வசதிகள், சிறந்த ராணுவ நுட்பமும் தந்திரோபாயங்களும் என்ற மூன்று பிரதான குறிக்கோள்களை நிறைவேற்றுவதாகும். நமது படை யுனிட்டுகளில் இன்று உற்சாகமாக நடத்தப்பட்டுக் கொண்டிருக்கும் மூன்று சோதனைகள், மூன்று சீர்செய்தல்கள்[1] என்ற இயக்கத்தின் நோக்கம் அரசியல், பொருளாதார ஜனநாயக முறைகள் மூலம் இந்தக் குறிக்கோள்களில் முன் இரண்டையும் நிறைவேற்றுவதாகும்.

பொருளாதார ஜனநாயகத்தைப் பொறுத்தவரை, படையினரால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளுக்குக் கம்பெனியின் சப்ளை, உணவு விஷயங்களை நடத்துவதில் கம்பெனித்

---

*இது 'தோழர் மாஓ சேதுங் அவர்களால் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் புரட்சிகர ராணுவக் கமிஷனுக்காக எழுதப்பட்ட உட்கட்சி உத்தரவு.

தலைமைக்கு உதவிசெய்யும் உரிமை இருக்கவேண்டும் (ஆனால் அதைத் தாண்டிச் செல்லக் கூடாது).

ராணுவ ஜனநாயகத்தைப் பொறுத்தவரை, பயிற்சிக் காலங்களில் அதிகாரிகளுக்கும் போர்வீரருக்கும் இடையிலும் போர் வீரர்கள் மத்தியிலும் பரஸ்பர போதனைமுறை நிலவ வேண்டும்; போர்க்காலங்களில் போர்முனையில் உள்ள கம்பெனிகள் பல்வேறு விதமான பெரிய, சிறிய கூட்டங்களை நடத்தவேண்டும். கம்பெனித் தலைமையின் வழிகாட்டலில் சாதாரண போர் வீரர்கள் எதிரி நிலைகளை எப்படித் தாக்கிக் கைப்பற்றுவது, இதர போர்க்கடமைகளை எப்படி நிறைவேற்றுவது என்பதை விவாதிக்கத் தட்டி எழுப்பப்பட வேண்டும். போர் பல நாட்கள் நீடிக்கும் பொழுது இத்தகைய பல கூட்டங்கள் நடத்தப்பட வேண்டும். வட ஷென்சி பான்லுங் சமரிலும்[2], ஷன்சி-சஹார்-ஹோபெய் பிரதேசத்தில் ஷுச்சியாச்சுவாங் சமரிலும்[3] இந்த வகையான ராணுவ ஜனநாயகம் அமுல்நடத்தப்பட்டு, பெரும் சாதனைகள் ஈட்டப்பட்டன. இந்த நடைமுறை நன்மை செய்யுமே அன்றி எவ்வித தீமையும் செய்யாது என்பது நிரூபிக்கப்பட்டுவிட்டது.

பரந்துபட்ட படையினர்களுக்கு ஊழியர் மத்தியிலுள்ள தீய பிரகிருதிகளின் தவறுகளையும் குற்றங்களையும் அம்பலப்படுத்தும் உரிமை இருக்கவேண்டும். படையினர்கள் எல்லா நல்ல ஊழியர்களையும் ஒப்பீட்டளவில் நல்ல ஊழியர்களையுமே பேணிக்காப்பார்களென நாம் நம்பிக்கையுடையவராயிருத்தல் வேண்டும். மேலும், தேவையேற்படும் போது படையினர்களுக்குத் தமது அணிகளில் தாம் நம்புவோரை கீழ்மட்ட ஊழியர் பதவிகளுக்கு மேல் மட்டத்தால் நியமனம் செய்யப்படுவதற்குத் தெரிவுசெய்யவும் உரிமையிருக்கவேண்டும்.

குறைகளை வெளியிடுவது'', ''மூன்று சோதனைகள்'' ஆகிய முறைகளைப் பயன்படுத்தி, ராணுவத்திலுள்ள புதியரகச் சீர் செய் இயக்கத்தை நடத்துவதுமூலம் தன்னை வெல்லற்கரிய தாக்கிக்கொள்ளும் என இது நிருபித்துள்ளது.

அந்தப் பேச்சாளர் கூறியதாவது: இந்தச் சம்பவத்தின் போது, வடமேற்கு மக்கள் விடுதலைச் சேனை யீச்சுவானிலி ருந்த எதிரி பிறிகேட்டொன்றைத் திடீரெனச் சுற்றிவளைத்துக் கொண்டது. ஹூ சுங்-நான், யீச்சுவானுக்கு உதவ லோச்சு வான்-யீஜியுன் மார்க்கத்திலிருந்து புனரமைக்கப்பட்ட 2 டிவி ஷன்களின் 4 பிறிகேடுகளை உடனடியாக அனுப்பும்படி தனது 29வது கோர் தளபதி லியூ கானுக்குக் கட்டளை பிறப்பித்தார். மொத்தம் 24,000க்கு மேற்பட்ட ஆட்களைக் கொண்ட அவை

---

விடுதலைச் சேனையிலான அரசியல் வேலையினதும் ஜனநாயக இயக்கத்தினதும் ஒரு முக்கிய அபிவிருத்தியாகும், சேனையில், விடுதலைப் பிரதேசங்கள் எல்லாவற் றிலும் அப்போது விறுவிறுப்பாக நடந்துகொண்டிருந்த நிலச் சீர்திருத்தத்திற்கும் கட்சிச் சீர்செய்தலுக்குமான இயக்கங்களின் பிரதிபலிப்பாகும். இந்த இயக்கம் எல்லாத் தளகர்த்தர்களினதும் படைவீரர்களினதும் அரசியல் அறிவுணர்வையும் கட்டுப்பாட்டையும் போராற்றலையும் பெரிதும் உயர்த்தியது. அதே நேரத் தில் இது பெருந்தொகையான கைப்பற்றப்பட்ட கோமிந்தாங் படைவீரர்களை விடுதலைச் சேனைப் போராளிகளாகச் சீர்திருத்தியெடுத்தலையும் மிகப் பயனுள் ளவிதத்தில் துரிதப்படுத்தியது. இவ்வாறாக அது மக்கள் விடுதலைச் சேனையை ஸ்திரப்படுத்துவதிலும் விரிவுபடுத்துவதிலும், களத்தில் வெற்றிகளை உறுதிப் படுத்துவதிலும் ஒரு முக்கிய பங்கை வகித்தது. இந்த இயக்கத்தின் முக்கியத் துவத்தைப் பற்றி இந்நூலிலான ''ராணுவத்திலான ஜனநாயக இயக்கம்'' என்ற கட்டுரையையும், ''தேர்ந்தெடுக்கப்பட்ட மாஒ சேதுங் படைப் புகள்'', வால்யும் 4ல் ''ஷன்சி-சுய்யுவான் விடுதலைப் பிரதேச ஊழியர்கள் மா நாட்டு உரை''யையும், ''செப்டம்பர் கூட்டம் பற்றி — சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் சுற்றறிக்கை''யையும் பார்க்கவும்.

புனரமைக்கப்பட்ட 27வது டிவிஷனின் 31வது, 47வது பிறிகேடுகளும், புனரமைக்கப்பட்ட 90வது டிவிஷனின் 53வது, 61வது பிறிகேடுகளுமாம். அவை யீச்சுவானின் தென்மேற் பிரதேசத்தை பெப்ரவரி 28ந் தேதி அடைந்தன். வடமேற்கு மக்கள் விடுதலைச் சேனை அழித்தொழிக்கும் சமரொன்றை ஆரம்பித்து, பெப்ரவரி 29 மார்ச் 1ந் தேதிகளுக்கிடைப்பட்ட முப்பது மணிநேரப் போராட்டத்தில் ஒரு எதிரியையும் இவ் வலையிலிருந்து தப்பியோட விடாது இத்துணைப்படைகள் அனைத்தையும் முற்றுகத் துடைத்தொழித்தது. 18,000க்கு மேலானோர் கைதுசெய்யப்பட்டனர்; 5,000க்கு மேற்பட்டோர் சுட்டுக் கொல்லப்பட்டனர் அல்லது காயப்படுத்தப்பட்டனர்; லியூ கானும், 90வது டிவிஷனின் கமாண்டரான யென் மிங்கும், இதர அதிகாரிகளும் கொல்லப்பட்டனர். பின்னர் மார்ச் 3ந் தேதி நாம் யீச்சுவானைக் கைப்பற்றி, அதிலும் நாம் நகரத்தைப் பாதுகாத்துக்கொண்டிருந்த எதிரியின் புனரமைக்கப்பட்ட 76வது டிவிஷனின் 24வது பிறிகேட்டைச் சார்ந்த 5,000க்கு மேலானோரைத் துடைத்தொழித்தோம். முற்றுகக் கூறின், இந்தப் போரியக்கத்தின்போது, நாம் எதிரியின் ஒரு கோர் ஆணைப் பகுதியையும், இரண்டு டிவிஷன் ஆணைப் பகுதிகளையும், ஐந்து பிறிகேடுகளையும், அதாவது, மொத்தம் 30,000 பேரைத் துடைத்தொழித்தோம். இது வடமேற்கு அரங்கில் எமது முதலாவது மாபெரும் வெற்றி.

அந்தப் பேச்சாளர் வடமேற்கு அரங்கின் நிலைமையை ஆராய்ந்து கூறியதாவது: ஹு சுங்-நானின் நேரடி ஆணையிலிருந்த கூறப்படும் ''மத்திய சேனை''யின் 28 பிறிகேடுகளில் எட்டு அவரது மூன்று பிரதான டிவிஷன்களான புனரமைக்கப்பட்ட 1வது, 36வது, 90வது டிவிஷன்களைச் சேர்ந்தவை.

இவற்றில் புனரமைக்கப்பட்ட முதலாவது டிவிஷனின் முத லாவது பிறிகேட் 1946 செப்டம்பரில் தென் ஷன்சியின் ஃபூஷ னில் முன்புமொரு முறை எம்மால் துடைத்தொழிக்கப்பட் டது; அதே டிவிஷனின் 167வது பிறிகேட்டின் பிரதான படை கடந்த ஆண்டு மேயில் வட ஷென்சியைச் சேர்ந்த பான் லுங் பட்டினத்தில் முன்புமொரு முறை எம்மால் துடைத் தொழிக்கப்பட்டது; புனரமைக்கப்பட்ட 36வது டிவிஷனின் 123வது, 165வது பிறிகேடுகள் கடந்த ஆண்டு ஆகஸ்டில் வட ஷென்சியின் மிச்சி மாவட்டத்திலுள்ள ஷாச்சியாத்தி யெனில் முன்னரும் எம்மால் துடைத்தொழிக்கப்பட்டன; இம் முறை புனரமைக்கப்பட்ட 90வது டிவிஷனும் முற்ருகத் துடைத் தொழிக்கப்பட்டது. ஹு சுங்-நானின் எஞ்சியுள்ள பிரதான படையில் புனரமைக்கப்பட்ட முதலாவது டிவிஷனின் 78வது பிறிகேட்டும், புனரமைக்கப்பட்ட 36வது டிவிஷனின் 28வது பிறிகேட்டுமே இன்னும் துடைத்தொழிக்கப்படவில்லை. ஆகவே ஹு சுங்-நானின் முழு ராணுவத்திலும் முதற்தர யுனிட்டுகள் பெரும்பாலும் இல்லையென்றே கூறலாம். நிர்மூலமாக்கும் யீச்சுவான் சமரின் விளைவாக, முன்பு ஹு சுங்-நானின் நேரடி ஆணையிலிருந்த 28 கிரமமான பிறிகேடுகளில் 23 தான் எஞ் சியிருக்கின்றன. இவ்விருபத்திமூன்று பிறிகேடுகளும் பின்வரும் பிரதேசங்களில் விடப்பட்டிருக்கின்றன: ஒரு பிறிகேட் தென் ஷன்சியிலுள்ள லின்ஃபெனில் செயலற்றதாக்கப்பட்டு அழி யவே வேண்டியதாக உள்ளது; 9 பிறிகேடுகள் சென் கெங், சியெ ஃபு-சி ஆகியோர் தலைமையிலான எமது களச் சேனை யைச் சமாளிப்பதற்காக ஷென்சி-ஹோனுன் எல்லையிலும், லோயாங்-துங்குவான் மார்க்கம் நீளமும் உள்ளன; மற்ருெரு பிறிகேட் தென் ஷென்சியில் ஹன்சுங் பிரதேசத்தைக் காவல்

செய்துகொண்டிருக்கிறது. மீதமுள்ள 12 பிறிகேடுகளும் துங்குவான்-பாஓச்சி வரையும், ஸியென்யாங்-யென்ஆன் வரையுமான T-வடிவப் போக்குவரத்து மார்க்கங்களில் விடப்பட்டிருக்கின்றன. இவற்றுள் 3 ''நிரப்பப்பட்ட பிறிகேடு''[1]கள், இவை முற்றிலும் புதிதாகச் சேர்ந்தோரைக் கொண்டவை; இரண்டு எமது படையால் முற்ருகத் துடைத்தொழிக்கப்பட்டு, சமீபத்தில் இட்டு நிரப்பப்பட்டுள்ளன; இன்னுமிரண்டு எம்மிடம் அழிவுதரும் அடிகள் வாங்கியுள்ளன; 5 ஒப்பீட்டளவில் சொற்ப அடிகள் வாங்கியுள்ளன. இப்படைகள் மிகவும் பலவீனமாயிருப்பது மட்டுமல்ல, அவை பெரும்பாலும் காவற்பணியில் நிற்கின்றன என்றும் கண்டுகொள்ளலாம். ஹு சுங்-நானின் படையைவிட, தெங் பாஓ-ஷன் தலைமையிலான, யூலினைப் பாதுகாக்கும் இரு பிறிகேடுகளும், நிங்சியா மாகாணத்தைச் சேர்ந்த மா ஹொங்-குவெய், சிங்ஹாய் மாகாணத்தைச் சேர்ந்த மா பூ-ஃபாங் ஆகியோர் தலைமையிலான, ஸன்பியென்[2], லுங்துங் ஆகிய பிரதேசங்களில் விடப்பட்டுள்ள 9 பிறிகேடுகளுமுள. ஹு சுங்-நான், தெங் பாஓ-ஷன், மா ஹொங்-குவெய், மா பூ-ஃபாங் ஆகியோர் தலைமையிலுள்ள கிரமமான துருப்புக்களனைத்தும் இப்போது, ஒரு முறையோ, இரண்டுமுறையோ துடைத்தொழிக்கப்பட்ட பின் இட்டு நிரப்பப்பட்ட யுனிட்டுகள் உட்பட, மொத்தம் 34 பிறிகேடுகளாகும்.

வடமேற்கில் எதிரியின் நிலைமைகள் இப்படித்தான் இருக்கின்றன. T-வடிவப் போக்குவரத்து மார்க்கங்களைப் பற்றி மீண்டும் பேசுவதானால், ஒப்பீட்டளவில் சொற்ப அடிகள் வாங்கிய 5 பிறிகேடுகளில் 2 யென்ஆனில் சுற்றிவளைக்கப்பட்டிருக்கின்றன, மூன்று தாகுவான்சுங்[3] பிரதேசத்தில் இருக்கின்

றன. அங்குள்ள இதர பிறிகேடுகளைப் பொறுத்தவரை, அவற்றுள் பெரும்பாலானவை சமீபத்தில் இட்டு நிரப்பப்பட்டுள்ளன; ஒருசில அழிவுதரும் அடிகள் வாங்கியுள்ளன. வேறு வார்த்தையில் கூறின், தாகுவான்சுங் பிரதேசம் முழுவதுமுள்ள, குறிப்பாக, கன்சு மாகாணத்திலுள்ள எதிரிப்படைகள் மிகவும் ஐதாகவும் பலவீனமாகவும், மக்கள் விடுதலைச் சேனையின் தாக்குதலை நிறுத்த மாட்டாதனவாயுமுள்ளன. இந்த நிலைமை தெற்கு முன்னணியிலுள்ள சியாங் கை-ஷேக்கின் படை அணி வகுப்புகளில் சிலதை, முதலில் ஹோனுன்-ஷென்சி எல்லையில் சென் கெங், சியெ ஃபு-சி ஆகியோர் தலைமையிலான எமது களச்சேனையை எதிர்த்து நிற்கும் அவருடைய அணிவகுப்புகளைப் பாதிப்பது நிச்சயம். எமது வடமேற்கு மக்கள் விடுதலைச் சேனையின் தற்போதைய தெற்குநோக்கிய முன்னேற்றத்தில் அதன் கொடி பறக்கத் தொடங்கியதுமே அது வெற்றி பெற்றும், எங்கும் பரவும் புகழைப் பெற்றும், வடமேற்கில் எமக்கும் எதிரிக்குமிடை சக்திகளின் பலாபலத்தை மாற்றியும் உள்ளது. இப்போது முதல் அது தெற்கு முன்னணிகளிலுள்ள மக்கள் விடுதலைச் சேனைப் படைகளுடன் இணைந்து இன்னும் சக்தியுடன் போராடக்கூடியதாயிருக்கும்.

அந்தப் பேச்சாளர் கூறியதாவது: கடந்த கோடை காலம், இலையுதிர் காலம் முதல், முறையே லியூ போ-செங், தெங் ஸியௌ-பிங் ஆகியோரதும், சென் யீ, ஸு யூ ஆகியோரதும், சென் கெங், சியெ ஃபு-சி ஆகியோரதும் ஆணையிலிருந்த எமது மூன்று களச்சேனைகள் மஞ்சள் நதியைக் கடந்து தெற்கு நோக்கி முன்னேறி, யாங்சி, ஹுவய், மஞ்சள், ஹன் ஆகிய நதிகளால் சூழப்பட்டிருந்த பிரதேசத்தின் குறுக்கும் நெடுக்கும் விரைந்து சென்று, பெருந்தொகையான எதிரித் துருப்புகளை அழித்தொ

ழித்து, தெற்கு முன்னணியில் சியாங் கை-ஷேக் கொண்டிருந்த 160க்கு மேலான பிறிகேடுகளில் ஏறக்குறைய 90 பிறிகேடுகளைத் திறமையுடன் நடத்தித் தம்பக்கம் இழுத்து, சியாங் கை-ஷேக்கின் படைகளைச் செயலற்ற நிலைக்குச் செல்ல நிர்ப்பந்தித்து, ஒரு தீர்க்கமான யுத்ததந்திரப் பாத்திரத்தை வகித்து, நாடுமுழுவதுமுள்ள மக்களின் பாராட்டைப் பெற்றன[4]. எமது வடகிழக்குக் களச்சேனை அதன் குளிர்காலத் தாக்குதலின்போது பூஜ்ஜியத்திற்குக் கீழ் முப்பது பாகையிலிருந்த கடும் குளிரைத் தாங்கி, பெரும்பாலான எதிரித் துருப்புக்களை நிர்மூலமாக்கி, பிரசித்தி பெற்ற நகர்களை ஒன்றன் பின் ஒன்ருய்க் கைப்பற்றி, நாடு முழுவதும் எங்கும் பரவும் புகழைப் பெற்றது[5]. ஷன்சி-சஹார்-ஹோபெய் பிரதேசம், ஷன்துங், வட கியாங்ஸு, ஷன்சி-ஹோபெய்-ஷன்துங்-ஹோனுன் பிரதேசம் ஆகியவற்றிலுள்ள எமது களச்சேனைகள் கடந்த ஆண்டு வீரமிக்க சமர்களில் பெருந்தொகையான எதிரித் துருப்புக்களைத் துடைத்தொழித்த பின்[6], கடந்த குளிர்காலத்தில் தமது பயிற்சியையும் ஸ்திரப்பாட்டையும் முடித்துக் கொண்டன; அத்துடன், அவை விரைவில் தமது வசந்தத் தாக்குதலையும் ஆரம்பிக்கும்[7]. இந்த முழு நிலைமையையும் திருப்பிப்பார்ப்பது ஒரு உண்மையை நிரூபிக்கிறது, அதாவது நாம் பழைமைபோற்றுவதையும் எதிரிக்கு அஞ்சுவதையும், கஷ்டங்களுக்கு அஞ்சுவதையும் உறுதியாக எதிர்ப்போமாஞலும், கட்சி மத்திய கமிட்டியின் பொது யுத்ததந்திரத்தையும், பத்துப் பிரதான போர் நடவடிக்கைக் கோட்பாடுகள்[8] பற்றிய அதன் உத்தரவையும் பின்பற்றுவோமாஞலும் நாம் எமது தாக்குதல்களைப் பெருமளவில் நடத்தி, பெருந்தொகையான எதிரித் துருப்புக்களைத் துடைத்தொழித்து, சியாங் கை-ஷேக் கொள்ளைக் கூட்டத்தின் படைகள் திருப்பித்

தாக்காது தம்மைத் தற்காலிகமாகப் பாதுகாக்க மாத்திரமே முடியுமாக, அல்லது தம்மைப் பாதுகாக்கவும் முடியாது ஒன்றன் பின் ஒன்ருய் முற்ருகத் துடைத்தொழிக்கப்பட கூடியதாகச் செய்யும் அடிகளை அவற்றுக்குக் கொடுக்க முடியும்.

அந்தப் பேச்சாளர் வற்புறுத்திக் கூறியதாவது: எமது வடமேற்குக் களச்சேனையின் போரிடுமாற்றல் கடந்த ஆண்டு எந்த நேரத்தினுடையதையும்விட மிக உயர்ந்ததாயிருக்கிறது[9]. கடந்த ஆண்டுப் போராட்டத்தில் வடமேற்குக் களச்சேனை ஒரு நேரத்தில் கூடியது 2 எதிரி பிறிகேடுகளை அழிக்க முடியுமானதாயிருந்தது; இப்போது யீச்சுவான் போரியக்கத்தில் அது ஒரு முறையில் 5 எதிரி பிறிகேடுகளைத் துடைத்தொழிக்கக் கூடியதாய் இருக்கிறது. இத்தலைசிறந்த வெற்றிக்குக் காரணங்கள் பல. இவற்றுள் நாம், முன்னணித் தலைமைத் தோழர்களின் உறுதியான, அதே வேளையில் வளைந்து கொடுக்கக்கூடிய ஆணையையும், பின்னணியிலிருந்த தலைமைத் தோழர்களதும் பொதுமக்களதும் சக்திவாய்ந்த ஆதரவையும், எதிரித் துருப்புக்களின் ஒப்பீட்டளவிலான தனிமையையும், தரையமைப்பு எமக்குச் சாதகமாயிருந்ததையும் சுட்டிக்காட்ட வேண்டும். இருந்தாலும், மிகக் குறிப்பிடத்தக்கது என்னவென்ருல், கடந்த குளிர்காலத்தில் இரண்டு மாதங்களுக்கு மேலாக மனக்குறைகளை வெளியிடுவது, மூன்று சோதனைகள் ஆகியவற்றின் மூலம் ராணுவத்தில் நடத்தப்பட்ட புதியரகச் சீர்செய் இயக்கமாகும். மனக்குறைகளை (பழைய சமுதாயத்தாலும் பிற்போக்குவாதிகளாலும் உழைப்பாளி மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளை) வெளியிடும் இயக்கமும் (வர்க்க தோற்றம், கடமை நிறைவேற்றம், போராடும் திடசித்தம் என்ற) மூன்று சோதனை இயக்கமும் சரியாக மலர்ந்து வருவது, சுரண்டப்பட்ட உழைப்

பாளி மக்களின் விமோசனத்துக்காகவும், தேசியரீதியான நிலச் சீர்திருத்தத்துக்காகவும், மக்களின் பொது எதிரியான சியாங் கை-ஷேக் கொள்ளைக் கூட்டத்தை ஒழிப்பதற்காகவும் நடத்தும் போரில் ராணுவம் முழுவதிலுமுள்ள தளபதிகள், போராளி களின் அரசியல் உணர்வைப் பெரிதும் உயர்த்தியிருக்கின்றது. அதே வேளையில் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் தளபதி கள், போராளிகள் அனைவரினதும் உறுதியான ஐக்கியத்தையும் அது பெரிதும் பலப்படுத்தியுள்ளது. இந்த அடிப்படையில், ராணுவம் அதன் அணிகளைப் பெரிதும் தூய்மைப்படுத்தி, கட் டுப்பாட்டைப் பலப்படுத்தி, பயிற்சிக்கான வெகுஜன இயக்கத் தை மலரச் செய்து, பூரணமான தலைமையிலும், ஒழுங்கான முறையிலும் அதன் அரசியல், பொருளாதார, ராணுவ ஜன நாயகத்தை மேலும் விருத்தி செய்துள்ளது. இவ்வாறு, ராணு வம் முழுவதும் ஒவ்வொருவரும் தனது கருத்துகளையும் பலத் தையும் வழங்கும் முறையில், ஒருவர் போல் ஐக்கியப்பட்டுள் ளது. இது தியாகத்துக்கு அஞ்சாத, பொருளாயதக் கஷ் டங்களை வெற்றி கொள்ளும் ஆற்றலுடைய, வெகுஜன வீர சாகஸத்தை வெளிக்காட்டுகின்ற, எதிரிகளை ஒழிக்கும் துணி வுடைய ஒரு படையாக மாறியுள்ளது. இத்தகைய படை உலகில் வெல்லப்பட முடியாத ஒரு படையாகும்.

அந்தப் பேச்சாளர் கூறியதாவது: ராணுவத்திலுள்ள இந்தப் புதியரகச் சீர்செய் இயக்கம் வடமேற்கில் மாத்திரமே நடத் தப்பட்டதென்றில்லை; அது நாடுமுழுவதும் மக்கள் விடுதலைச் சேனையில் நடத்தப்பட்டுள்ளது அல்லது நடத்தப்படுகின்றது. சமர்களின் இடைவேளையில் நடத்தப்பட்ட இந்த இயக்கம் போராட்டத்தில் குறுக்கிடவில்லை. எமது கட்சியால் இப்போது சரியாகக் கொண்டு நடத்தப்படும் கட்சி சீர்செய் இயக்கத்து

டனும் நிலச் சீர்திருத்த இயக்கத்துடனும் இணைக்கப்படும்போதும், ஏகாதிபத்தியம், நிலப்பிரபுத்துவம், அதிகார முதலாளித்துவம் ஆகியவற்றை மாத்திரமே எதிர்ப்பது, பாகுபாடின்றி, அடிப்பதையும் கொல்லுவதையும் கண்டிப்பாகத் தடுப்பது (கொலை எவ்வளவு குறைவோ அவ்வளவு நல்லது), நாட்டின் குடிசனத் தொகையில் 90 வீதத்திற்கு மேலானவராயிருக்கும் பொதுமக்களைத் திடமாக ஐக்கியப்படுத்துவது என்பனவற்றின் மூலம் எமது கட்சியின் தாக்கும் இலக்கைக் குறுக்குவது என்ற எமது கட்சியின் சரியான கொள்கையுடன் இணைக்கப்படும்போதும், எமது கட்சியின் சரியான நகரக் கொள்கையின் பிரயோகம், அதன் தேசிய பூர்ஷுவா வர்க்கத்தின் கைத்தொழிலையும் வர்த்தகத்தையும் உறுதியாகப் பாதுகாத்து வளர்ப்பது என்ற கொள்கை ஆகியவற்றுடன் இணைக்கப்படும்போதும் இந்த ராணுவத்திலான சீர்செய் இயக்கம் மக்கள் விடுதலைச் சேனையை நிச்சயம் வெல்லற்கரியதாக்கும். மகத்தான சீன மக்கள் ஜனநாயகப் புரட்சியின் போராட்டத்துக்கு எதிரான, சியாங் கை-ஷேக் கொள்ளைக் கூட்டத்தினதும் அதன் எஜமானன அமெரிக்க ஏகாதிபத்தியத்தினதும் முயற்சிகள் எவ்வளவு வெறித்தனமாயிருந்தாலும், வெற்றி நிச்சயம் எமக்கே.

## குறிப்புகள்

1. ''நிரப்பப்பட்ட பிறிகேட்'' என்பது, கோமிந்தாங் சேனையில் போர்க்களத்தில் சீன மக்கள் விடுதலைச் சேனையால் பெரும்பாலும் அழித்தொழிக்கப்பட்டபின், பின்னணிக்கு எடுக்கப்பட்டு, பெயர் மாறாமல் நிரப்பப்பட்ட பிறிகேட் ஒன்றைக் குறிக்கிறது. (மொழிபெயர்ப்பாளர் குறிப்பு)

2. ''ஸன்பியென்'' ஷென்சி மாகாணத்தின் வடமேல் எல்லைப் பிரதேசத்தைக் குறிக்கின்றது. (மொழிபெயர்ப்பாளர் குறிப்பு)

3. இது மத்திய ஷென்சி மாகாணத்தைக் குறிக்கிறது. (மொழிபெயர்ப்பாளர் குறிப்பு)

4. 1947 ஜூன் 30ந் தேதி தொடங்கி, லியூ போ-செங், தெங் ஸியௌ-பிங் ஆகியோரதும் இதர தோழர்களதும் தலைமையிலிருந்த ஷன்சி-ஹோபெய்-ஷன்துங்-ஹோனான் களச்சேனையின் ஏழு கொலங்கள் மஞ்சள் நதியைப் போரிட்டுக் கடந்து, தாபியெ மலையை நோக்கிச் சென்று, அதன் மூலம் மக்கள் விடுதலைச் சேனையின் யுத்ததந்திரத் தாக்குதலைத் தொடக்கிவைத்தன. 1948 மார்ச் இறுதியளவில் ஒன்றன்பின் ஒன்றாக 100,000க்கு மேலான எதிரித் துருப்புக்கள் துடைத்தொழிக்கப்பட்டன; ஹூபெய்-ஹோனான் எல்லையிலும், மேற்கு அன் ஹூயிலும், ஹூபெய்-ஹோனான் எல்லையிலுள்ள துங்பாய் மலைப்பிரதேசத்திலும், யாங்சி, ஹன் ஆறுகளுக்கிடைப்பட்ட சமவெளியிலும், இதர இடங்களிலும் புதிய தளப்பிரதேசங்கள் அமைக்கப்பட்டன. கிழக்குச் சீனக் களச்சேனையின் எட்டுக் கொலங்கள் சென் யீ, ஸூ யூ முதலிய தோழர்கள் தலைமையில் 1947 ஆகஸ்டில் ஷன்துங் மாகாணத்தின் மீது ஏற்பட்ட எதிரியின் ஒருமுகத் தாக்குதல்களை முறியடித்து, தென்மேல் ஷன்துங், ஹோனான்-அன்ஹூய்-கியாங்ஸூ எல்லைப் பிரதேசம் ஆகியவற்றுக்குள் விரைந்து சென்று, 100,000க்கு மேலான எதிரித் துருப்புகளைத் துடைத்தொழித்து, ஹோனான்-அன்ஹூய்-கியாங்ஸூ விடுதலைப் பிரதேசத்தை அமைத்து, எதிரியின் யுத்ததந்திரக் கேந்திரங்களான கைஃபுஙையும் செங்சௌவையும் தனிமைப்படுத்தின. ஷன்சி-ஹோபெய்-ஷன்துங்-ஹோனான் பிரதேசத்துத் தையுயெ படைவியூகத்தின் இரண்டு கொலங்களும் ஒரு கோரும் சென் கெங், சியெ ஃபு-சி முதலிய தோழர்கள் ஆணையில் 1947 ஆகஸ்டில் தென் ஷன்சியில் மஞ்சள் நதியைப் போரிட்டுக் கடந்து, மேற்கு ஹோனானுக்கு முன்னேறிச் சென்று, 40,000க்கு மேற்பட்ட எதிரித் துருப்புக்களைத் துடைத்தொழித்து, ஹோனான்-ஷென்சி-ஹூபெய் எல்லையிலும் தென் ஷென்சியிலும் தளப்பிரதேசங்களை அமைத்து, மேற்கு ஹோனான் மாகாணத்திலுள்ள எதிரியின் யுத்ததந்திரக் கேந்திரமான லோயாங்கை முற்றாகத் தனிமைப்படுத்தி, துங்குவானை அச்சுறுத்தின.

5. 1947 டிசம்பர் 15 முதல் 1948 மார்ச் 15 வரை தொண்ணூறு நாட்கள் தொடர்ந்து போரிட்டு, வடகிழக்குக் களச்சேனையின் பத்துக் கொலங்களும் பன்னிரண்டு சுதந்திர டிவிஷன்களும் லின் பியௌ, லோ ஜொங்-ஹூவான் முத

லிய தோழர்கள் தலைமையில் சீனச் சாங்சுன் புகையிரத மார்க்கத்தின் சுபிங்கை-தாஷுச்யெளப் பகுதி நீளமும், பெய்ப்பிங்-லியெளனிங் புகையிரத மார்க்கத்தின் ஷன்ஹய்குவான்-ஷென்யாங் பகுதி நீளமும் முன்னென்றுமில்லாத அளவில் ஒரு குளிர்காலத் தாக்குதலை நடத்தின; அவை 156,000க்கு மேற்பட்ட எதிரித் துருப்புக்களைத் துடைத்தொழித்து, எதிரியின் நன்கரண்செய்யப்பட்ட யுத்ததந்திரக் கேந்திரமான சுபிங்கையையும் இதர பதினெட்டு நகரங்களையும் கைப்பற்றின. யிங்கோவைக் காவல்செய்துகொண்டிருந்த எதிரி டிவிஷன் ஒன்று கிளர்ச்சி செய்து எம் பக்கம் சேர்ந்துகொண்டது. கிலின் நகரைப் பாதுகாத்துக் கொண்டிருந்த எதிரிப் படை சாங்சுனை நோக்கி ஓட்டம் பிடித்தது. இவ்வாறு, வடகிழக்கில் எதிரியின் கட்டுப்பாட்டிலிருந்த பிரதேசம் வடகிழக்கு முழுவதிலும் ஒரு வீதமாகக் குறைந்தது; சாங்சுன்-ஷென்யாங்-ஜின்செள மார்க்க நீளமிருந்த நகரங்களிலிருந்த எதிரியின் குகைகள் தனிமைப்படுத்தப்பட்டன.

6. 1947 செப்டம்பர் முற்பகுதி முதல் நவம்பர் நடுப்பகுதி வரை, நியெ ஜொங்-சென்னினதும் இதர தோழர்களினதும் தலைமையிலான ஷன்சி-சஹார்-ஹோபெய் களச்சேனையின் ஐந்து கொலங்கள் தாச்சிங் ஆற்றுக்கு வடக்கிலுள்ள பிரதேசத்திலும் சிங்ஃபெங்தியென் பிரதேசத்திலும், ஷுச்சியாச்சுவாங்கின் விடுதலைக்கான சமரிலும் தொடர்ச்சியான சமர்களை நடத்தி, எல்லாமாகச் சுமார் 50,000 எதிரித் துருப்புக்களைத் துடைத்தொழித்து, ஷன்சி-சஹார்-ஹோபெய், ஷன்சி-ஹோபெய்-ஷன்துங்-ஹோனன் ஆகிய இரண்டு விடுதலைப் பிரதேசங்களைத் தொடர்ச்சியான ஒரு பிரதேசமாக இணைத்தன. 1947 செப்டம்பர் முதல் டிசம்பர் வரை, கிழக்குச் சீனக் களச்சேனையின் ஷன்துங் படைவியூகத்தைச் சேர்ந்த மூன்று கொலங்களும் பிரதேச ஆயுதப் படையும் ஷி ஷு-யூ, தான் சென்-லின் முதலிய தோழர்கள் தலைமையில் கிழக்கு ஷன்துங் போரியக்கத்தை நடத்தி, 63,000க்கு மேலான எதிரிகளைத் துடைத்தொழித்து, பத்துக்கு மேலான மாவட்டப் பட்டினங்களை மீட்டெடுத்தன. இது ஷன்துங் மாகாணத்தில் முழு நிலைமையையுமே மாற்றியது. 1947 ஆகஸ்ட் முதல் டிசம்பர் வரை வட கியாங்ஸுவிலிருந்த கிழக்குச் சீனக் களச்சேனை யுனிட்டுக்கள் யென்செங், லீபாஓ முதலிய இடங்களில் அடுத்தடுத்துச் சமர் புரிந்து, 24,000க்கு மேற்பட்ட எதிரித் துருப்புக்களை நிர்மூலமாக்கி, வட கியாங்ஸுவில் ஒரு பெரும் பிரதேசத்தை மீட்டெடுத்தன. 1947 டிசம்பரில் ஷி ஸியாங்-சியெனினதும் இதர தோழர்களதும் தலைமையிலான ஷன்சி-ஹோபெய்-ஷன்துங்-ஹோனன் களச்சேனையின் யுனிட்டுக்கள் வடமேற்குக் களச்சேனை யுனிட்டுக்களுடன் இணைந்து போராடி,

யுன்செங்கைக் கைப்பற்றி, 13,000க்கு மேலான எதிரித் துருப்புக்களை அழித்தன. அவை தென்மேல் ஷன்சியிலிருந்த எதிரிப்படைகளனைத்தையும் துடைத்தொழித்து, எதிரியை லின்ஃபெனில் தனிமைப்படுத்தின.

7. 1948 வசந்த காலத்தில், மக்கள் விடுதலைச் சேனையைச் சேர்ந்த பல்வேறு களச்சேனைகள் அதற்கு முந்திய ஆண்டு குளிர்காலத்தில் நடந்த பயிற்சி, ஸ்திரப் படுத்தல் காலகட்டத்தைத் தொடர்ந்து, வசந்த கால தாக்குதல்களை அடுத் தடுத்து நடத்தின. மார்ச் மாதத்துக்கும் மே மாதத்துக்கும் இடையில், ஷன்சி-சஹார்-ஹோபெய் களச்சேனையும், ஷன்சி-ஹோபெய்-ஷன்துங்-ஹோனன், ஷன்சி-சுய்யுவான் களச்சேனைகளின் யுனிட்டுக்களும் தொடர்ச்சியாகத் தெற்கு சஹாரிலும், கிழக்கு சுய்யுவானிலும், ஷன்சியின் லின்ஃபென் பிரதேசத்திலும் போரியக்கத்தில் ஈடுபட்டு, 43,000க்கு மேலான எதிரித் துருப்புக்களைத் துடைத் தொழித்து, மேலும் அதிக பிரதேசத்தை மீட்டெடுத்தன. மார்ச் 8க்கும் மே 29க்கும் இடையில், மத்திய சமவெளி, கிழக்கு சீனக் களச்சேனைகளின் யுனிட்டுக்கள் லோயாங், ஸொங்ஹோ ஆகியவற்றிலும் நான்யாங்கின் மேற்கு, கிழக்குப் பகுதிகளிலும் தொடர்ச்சியான சமர்களை நடத்தி, 56,000க்கு மேலான எதிரித் துருப்புக்களைத் துடைத்தொழித்து, அதன் மூலம் மத்திய சமவெளி யிலிருந்த எதிரியின் பாதுகாப்பு அமைப்பை நொறுக்கி, அங்கிருந்த விடுதலைப் பிரதேசத்தை விஸ்தரித்து, ஸ்திரப்படுத்தின. மார்ச் 11க்கும் மே 8க்கும் இடையில், கிழக்குச் சீனக் களச்சேனையின் ஷன்துங் படைவியூகம் முதலில் சிங்தௌ-ஜினன் புகையிரத மார்க்கத்தின் மேற்குப் பகுதியிலும், பின்னர் வெய் ஸியெனிலும் சமர்களை நடத்தி, 84,000க்கு மேற்பட்ட எதிரித் துருப்புக்களைத் துடைத்தொழித்தது. இவ்வாறு, கோமிந்தாங் வசமிருந்த ஜினன், சிங்தௌ, லின்யி, யென்சௌ ஆகிய ஒருசில அரண்களைத் தவிர ஷன்துங் மாகாணம் விடுதலை செய்யப்பட்டது. மார்ச்சில் வட கியாங்ஸூப் படைவியூகம் யீலினில் ஒரு வெற்றிகரமான சமரை நடத்தியது.

8. பத்துப் பிரதான போர் நடவடிக்கைக் கோட்பாடுகளுக்கு இந்நூலில் ''இன்றைய நிலைமையும் நமது கடமைகளும்'' என்ற கட்டுரையின் மூன்றுவது பகுதியைப் பார்க்க.

9. பெங் தே-ஹுவய், ஹோ லுங், ஸி சுங்-சியுன் முதலிய தோழர்கள் தலை மையிலிருந்த வடமேற்குக் களச்சேனை இரண்டு கொலங்கள் இரண்டு பிறிகேடு களைக் கொண்டதும் எல்லாமாக 25,000 பேருக்கு மேலுடையதுமான ஒரு பிரதான படையைக் கொண்டு 1947 கோடை காலத்தில் வட ஷென்சியில்

போரை நடத்தியது. 1948 வசந்த காலமளவில் பிரதான படை ஐந்து கொலங்கள் ளாக அதிகரித்திருந்தது. அப்போது அதன் ஆட்தொகை எல்லாமாக 75,000க்கு மேல். ஒரு ஆண்டுப் போராட்டத்தில் புடமிடப்பட்டதாலும், 1947 குளிர் காலத்தில் நடைபெற்ற புதியரகச் சேனையின் சீர்செய் இயக்கத்தாலும் பரந்துபட்ட தளபதிகளதும் போராளிகளதும் அரசியலுணர்வும், ராணுவ யுனிட்டுகளின் போரிடுமாற்றலும் முன்னென்றுமில்லாத அளவுக்கு உயர்ந்தன. இது 1948 மார்ச்சில் வடமேற்குக் களச்சேனை வெளிப்புற முனைகளில் போரிடத் தொடங்குவதற்குத் தேவையான நிலைமைகளை உருவாக்கியது. வடமேற்குக் களச்சேனை தான் யீச்சுவானில் பெற்ற பிரதான வெற்றியைத் தொடர்ந்து, ஏப்ரல் 12ல் சீஃபு (சீஆனுக்கு மேற்கிலும், ஜிங்ஷுய், வெய்ஷுய் ஆறுகளுக் கிடையிலுமுள்ள பிரதேசம்)விலும் லுங்துங்கிலும் போரியக்கத்தை நடத்தி, ஜிங்ஷுய், வெய்ஷுய் ஆறுகளுக்கிடைப்பட்ட பரந்த பிரதேசத்திற்குள் முன் னேறிச் சென்று, சீஆன்-லன்சௌ நெடுஞ்சாலையைத் துண்டித்து, ஏப்ரல் 22ந் தேதி யென்ஆனை மீட்டெடுத்தது.

# லியௌசி-ஷென்யாங் போரியக்க[1]த்திற்கான நடவடிக்கைக் கோட்பாடு*

(1948, செப்டம்பரும் அக்டோபரும்)

## 1. செப்டம்பர் 7ந் தேதித் தந்தி

*1946 ஜூலை முதல் சுமார் ஐந்தாண்டுக[2]ளில் கோமிந்தாங்கை அடிப்படையில் தூக்கியெறிய நாம் தயாராக இருக்கிறோம். இது சாத்தியம். கோமிந்தாங்கின் கிரமமான துருப்புக்களில் சுமார் 100 பிறிகேடுகளை ஒவ்வோராண்டும் அல்லது சுமார் 500 பிறிகேடுகளை ஐந்து வருடங்களில் நாம் அழித்தொழிப்போமானல் எமது நோக்கம் அடையப்பெற முடியும். கடந்த இரண்டாண்டுகளில் எமது ராணுவம் வருடம் சராசரி 95½ பிறிகேடுகளாக அல்லது மாதம் சுமார் 8 பிறிகேடுகளாக*

---

*தோழர்கள் லின் பியௌவிற்கும் லோ ஜொங்-ஹுவானுக்கும் பிற தோழர்களுக்கும் அனுப்பப்பட்ட இந்தத் தந்திகள் தோழர் மாஓ சேதுங் அவர்களால் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் புரட்சிகர ராணுவக் கமிஷனுக்காக எழுதப்பட்டது. தோழர் மாஓ சேதுங் அவர்களால் லியௌசி-ஷென்யாங் போரியக்கத்துக்கு இங்கு எடுத்துரைக்கப்பட்ட போர்நடவடிக்கைக் கோட்பாடு பின்னர் பூரணமாக அமுல்படுத்தப்பட்டது. அப்போரியக்கத்தின் முடிவுகள் பின்வருமாறு:

எதிரியின் கிரமமான துருப்புக்களில் மொத்தம் 191 பிறி கேடுகளை நிர்மூலமாக்கியுள்ளது. அடுத்த மூன்று வருடங்களில் எமது ராணுவம் எதிரியின் கிரமமான துருப்புக்களில் 300க்கு மேற்பட்ட பிறிகேடுகளை அழித்தொழிக்கவேண்டும். இந்த ஆண்டு ஜூலைக்கும் வருகிற வருடம் ஜூனுக்குமிடையில் நாம் எதிரியின் கிரமமான துருப்புக்களில் சுமார் 115 பிறிகேடுகளை அழித்தொழிப்போமென எதிர்பார்க்கிறோம். இந்தத் தொகை எமது பல்வேறு களச்சேனைகள், படை வியூகங்கள்[3] மத்தியில் பிரிக்கப்பட்டுள்ளது. கிழக்குச் சீனக் களச்சேனை சுமார் 40 பிறிகேடுகளை (ஏற்கெனவே ஜூலையில் அழித்தொழிக்கப்பட்ட 7 பிறிகேடுகள் உட்பட) அழித்தொழிக்க வேண்டுமென்றும், ஜிஞனையும் வடக்கு கியாங்ஸூ, கிழக்கு ஹோ

1. 470,000 எதிரித் துருப்புக்களை அழிப்பதும் அக்காலகட்டத்தின் போதான பிற போர்க்களங்களிலான வெற்றிகளும் மக்கள் விடுதலைச் சேனையை எண்ணிக்கையிலும் கோமிந்தாங் சேனையைவிட உயர்வானதாக்கின.

2. வடகிழக்குச் சீன முழுவதும் விடுதலையாக்கப்பட்டு, பெய்ப்பிங்-தியென்சினினதும் வடக்குச் சீன முழுவதினதும் விடுதலைக்கான சூழ்நிலைகள் சிருஷ்டிக்கப்பட்டன.

3. எமது சேனை பெரும் அளவிலான அழித்தொழிக்கும் போர்நடவடிக்கைகள் நடத்துவதில் அனுபவம் பெற்றது.

4. வடகிழக்குச் சீனவின் விடுதலையின் பயனுகக் கணிசமான கைத்தொழில் அடித்தளத்தைக் கொண்ட, யுத்ததந்திர ரீதியில் ஸ்திரமான பின்னணிப் பிரதேசம் ஒன்று விடுதலை யுத்தத்திற்கு வென்றெடுக்கப்பட்டு, கட்சிக்கும் மக்களுக்கும் சிறிது சிறிதாகப் பொருளாதாரப் புனரமைப்பில் இறங்கச் சாதகமான சூழ்நிலைகள் கிடைத்தன.

லியௌசி-ஷென்யாங் போரியக்கம் சீன மக்களின் விடுதலை யுத்தத்தில் தீர்க்கமான முக்கியத்துவம் கொண்டவையான மூன்று மிகப் பெரிய போரியக்கங்களில் முதலாவதாகும். மற்ற இரண்டு, ஹூவய்-ஹாய் போரியக்கமும் பெய்ப்பிங்-தியென்சின் போரியக்கமுமாகும். நான்கு மாதங்களும் பத்தொன்பது

ஞன், வடக்கு அன்ஹுாய் ஆகியவற்றிலுள்ள பல பெரிய, நடுத்தர, சிறிய நகரங்களையும் கைப்பற்றவேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளப்படுகின்றது. மத்திய சமவெளிக் களச்சேனை சுமார் 14 பிறிகேடுகளை (ஜூலையில் அழித்தொழிக்கப்பட்ட 2 பிறிகேடுகள் உட்பட) அழித்தொழிக்கவேண்டுமென்றும், ஹுாபெய், ஹோஞன், அன்ஹுாய் ஆகிய மூன்று மாகாணங் களிலுள்ள பல நகரங்களைக் கைப்பற்ற வேண்டுமென்றும் கேட் டுக்கொள்ளப்படுகிறது. வடமேற்கு களச்சேனை சுமார் 12 பிறிகேடுகளை (ஆகஸ்டில் துடைத்தொழிக்கப்பட்ட $1\frac{1}{2}$ பிறி கேடுகள் உட்பட)த் துடைத்தொழிக்கவேண்டுமென்று கேட் டுக்கொள்ளப்படுகிறது. ஷி ஸியாங்-சியென், சோ ஷுா-தி ஆகியோர் தலைமையிலுள்ள வடசீன படை வியூகம் யென் சி-

---

நாட்களும் நீடித்த இந்த மூன்று பெரும் போரியக்கங்களிலும் எதிரியின் கிரமமான துருப்புக்களில் 144 டிவிஷன்களும் (பிறிகேடுகளும்) கிரமமல்லாத துருப்புக்களில் 29 டிவிஷன்களும், அல்லது, எல்லாமாக, 1,540,000 ற்கு மேற்பட்டோர் அழித்தொழிக்கப்பட்டனர். இந்தக் காலகட்டத்தில் பிற போர்க்களங்களி லிருந்த மக்கள் விடுதலைச் சேனையும் தாக்குதல்கள் தொடுத்து, எதிரியின் பெருந் தொகையான துருப்புக்களை அழித்தொழித்தது. யுத்தத்தின் முதலிரண்டு ஆண் டுகளில் மக்கள் விடுதலைச் சேனை மாதாந்தம் சராசரி சுமார் 8 எதிரி பிறிகேடுகள் வீதம் அழித்தொழித்திருந்தது. இப்போதோ மக்கள் விடுதலைச் சேனையால் அழித்தொழிக்கப்பட்ட எதிரித் துருப்புக்களின் தொகை மாதாந்தம் சராசரி மொத்தம் 8 பிறிகேடுகளாக அல்ல, 38 பிறிகேடுகளாக இருந்தது. இந்த மூன்று பெரும் போரியக்கங்களும், கோமிந்தாங் எதிர்ப்புரட்சிகர உள்நாட்டு யுத்தத்தை நடத்துவதற்குத் தங்கி நின்ற திறமான துருப்புக்களைக் கிட்டத்தட்ட முற்றுகத் தொலைத்துக் கட்டி, நாடு பூராவிலும் விடுதலை யுத்தத்தின் வெற்றியைப் பெரிதும் துரிதப்படுத்தின. ஹுாவய்-ஹாய் போரியக்கத்தையும் பெய்ப்பிங்-தியென்சின் போரியக்கத்தையும் பற்றி இந்நூலிலுள்ள ''ஹுாவய்-ஹாய் போரி யக்கத்துக்கான நடவடிக்கைக் கோட்பாடு'', ''பெய்ப்பிங்-தியென்சின் போரியக் கத்துக்கான நடவடிக்கைக் கோட்பாடு'' என்ற கட்டுரைகளைப் பார்க்கவும்.

ஷன்னின் தலைமையிலுள்ள சுமார் 14 பிறிகேடுகளை (ஜூலையில் துடைத்தொழிக்கப்பட்ட 8 பிறிகேடுகள் உட்பட)த் துடைத் தொழிக்கவேண்டுமென்றும், தையுவானைக் கைப்பற்றவேண் டுமென்றும் கேட்டுக்கொள்ளப்படுகிறது. நீங்கள் லோ ழெய்-சிங், யாங் செங்-வூ ஆகியோரின் தலைமையிலுள்ள இரு படை வியூகங்களுடனும் சேர்ந்து வெய் லீ-ஹுவாங், ஃபூ சுவோ-யி ஆகியோர் தலைமையிலுள்ள 2 ராணுவ பிரிவுகளின் சுமார் 35 பிறிகேடுகளை (ஜூலையில் யாங் செங்-வூவால் துடைத் தொழிக்கப்பட்ட 1 பிறிகேட் உட்பட)த் துடைத்தொழித்து, பெய்ப்பிங், தியென்சின், ஷென்யாங் ஆகியவற்றைத் தவிரப் பெய்ப்பிங்-லியௌனிங், பெய்ப்பிங்-சுய்யுவான், பெய்ப்பிங்-செங்தே, பெய்ப்பிங்-பாஓதின் ஆகிய புகையிரத மார்க்கங்கள் நீளமுள்ள நகரங்களனைத்தையும் கைப்பற்ற வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். இந்த நோக்கத்தை நிறை வேற்றுவதற்கான தீர்க்கமான அம்சங்கள் போரியக்கங்களில் சரியான படைவகுப்பு, துருப்புக்களின் தலைமை ஆகியனவும், போராட்டத்தையும் ஓய்வையும் சரிப்படுத்துவதுமாகும். செப் டம்பர், அக்டோபர் ஆகிய இரு மாதங்களில் அல்லது அதற்குச் சற்றுக் கூடிய காலத்தில் உங்களால் ஜின்சௌ முதல் தாங் ஷன்வரையான மார்க்கம் நீளம் எதிரிகளைத் துடைத்தொழித்து, ஜின்சௌ, ஷன்ஹய்குவான், தாங்ஷன் ஆகியவற்றைக் கைப் பற்றமுடியுமானல் நீங்கள் சுமார் 18 எதிரிப் பிறிகேடுகளைத் துடைத்தொழிக்கும் நோக்கத்தை அடைவீர்கள். அவர்களைத் துடைத்தொழிப்பதற்கு நீங்கள் சாங்சுன், ஷென்யாங் ஆகி யவற்றிலுள்ள எதிரிப்படைகளைக் கவனியாது, இந்த மார்க் கத்தில் உங்கள் பிரதான படையைப் பயன்படுத்த இப்போது தயார்செய்ய வேண்டும்; அதோடு நீங்கள் ஜின்சௌவைத்

தாக்கும்போது அதைக் காப்பாற்ற சாங்சுன், ஷென்யாங் ஆகியவற்றிலிருந்து வரக்கூடிய எதிரிப்படைகளைத் துடைத்தொழிக்கவும் நீங்கள் தயாராயிருக்கவேண்டும். ஜின்சௌ, ஷன்ஹய்குவான், தாங்ஷன் ஆகியவற்றிலும் அவற்றுக்கருகிலும் எதிரிப் படைகள் ஒன்றிலிருந்து ஒன்று பிரிந்திருப்பதால் அவற்றைத் தாக்கித் துடைத்தொழிப்பதில் வெற்றிபெறுவது பெரிதும் நிச்சயம்; ஜின்சௌவைக் கைப்பற்றுவதிலும், எதிரியின் படைவலிபெருக்க வந்த படைகளைத் தாக்குவதிலுங்கூட வெற்றிபெற முடியுமென்று கணிசமானளவு நம்பிக்கையுண்டு. இருந்தும், சாங்சுனிலும் ஷென்யாஙிலும் இருந்து வரக்கூடிய எதிரிப்படைகளைத் தாக்குவதற்கு ஆயத்தமாய் நீங்கள் உங்கள் பிரதான படையை ஸின்மினிலும் அதன் வட சுற்றுடலிலும் அணிவகுத்து வைத்திருந்தால், நீங்கள் மிகப் பெரும் அச்சுறுத்தலாய் விளங்குவதன் காரணமாய் எதிரி வெளியே வரத் துணியவே துணியாமலிருக்கலாம். ஒருபுறம், சாங்சுனிலும் ஷென்யாஙிலுமுள்ள எதிரி வெளிவராதிருக்கலாம். மறுபுறம், ஜின்சௌ, ஷன்ஹய்குவான், தாங்ஷன் ஆகியவற்றை நோக்கி நீங்களனுப்பிய படை மிகவும் சிறியதாய் இருப்பதால், இம் மூன்று நகரங்களிலும் அவற்றுக்கு அருகிலுமுள்ள எதிரிகள் (18 பிறிகேடுகள்) பெரும்பாலும் ஜின்சௌ, தாங்ஷன் ஆகியவற்றுக்கு பின்வாங்கலாம். இவ்வாறாக நீங்கள் அவற்றைத் தாக்குவது கஷ்டம் என்பதை உணர்ந்த போதும் இன்னும் அவற்றைத் தாக்க வேண்டியிருப்பதால் நேரத்தையும் சக்தியையும் வீணாக்கி அதன் விளைவாய் ஒருசமயம் ஒரு செயலற்ற நிலைக்குள்ளாகலாம். இக்காரணங்களுக்காக நீங்கள் சாங்சுன், ஷென்யாங் ஆகியவற்றிலுள்ள எதிரியைக் கவனியாது ஜின்சௌ, ஷன்ஹய்குவான், தாங்ஷன் ஆகியவற்றிலுள்ள எதிரிமீது

உங்கள் முழுக் கவனத்தையும் செலுத்துவது நல்லது. இன்னொரு அம்சம்: நீங்கள் செப்டம்பர் முதல் அடுத்த ஆண்டு ஜூன் வரையான பத்து மாதகாலத்தில் மூன்று பெரிய போரியக்கங்களை நடத்த, ஒவ்வொரு போரியக்கத்திலும் சுமார் இரண்டு மாதங்களாக மொத்தம் சுமார் ஆறு மாதங்களைச் செலவிட்டு நான்கு மாதங்களை ஓய்வுக்கு ஒதுக்கத் தயாராய் இருக்க வேண்டும். ஜின்சௌ-ஷன்ஹய்குவான்-தாங்ஷன் போரியக்கத்தின் போது (முதலாவது பெரிய போரியக்கம்) சாங்சுன், ஷென்யாங் ஆகியவற்றைச் சேர்ந்த எதிரி ஜின்சௌவைக் காப்பாற்ற முழுப்பலத்துடன் முன்வந்தால் (உங்கள் பிரதான படை ஸின்மினில் அணிவகுக்கப்படாது ஜின்சௌவைச் சுற்றி அணிவகுக்கப்படுவதால் வெய் லீ-ஹுவாங் பாதுகாப்பளிக்க வரத் தைரியங்கொள்வான்) நீங்கள் ஜின்சௌ-ஷன்ஹய்குவான்-தாங்ஷன் மார்க்கத்தை விட்டுச் செல்லாது உடனடியாகத் தொடர்ந்து எதிரியின் படைவலிபெருக்க வந்த படைமீது பெருமளவிலான நிர்மூலமாக்கும் தாக்குதல்களைத் தொடுத்து வெய் லீ-ஹுவாங்கின் துருப்புக்களனைத்தையும் அந்த இடத்திலேயே துடைத்தொழிக்கப் பாடுபடமுடியும். இது ஒரு மிகச் சிறந்த நிலைமையாகவிருக்கும். ஆகவே நீங்கள் பின்வருவனவற்றில் கவனஞ்செலுத்தவேண்டும்:

(1) ஜின்சௌ, ஷன்ஹய்குவான், தாங்ஷன் ஆகியவற்றைத் தாக்கிக் கைப்பற்றவும், முழு மார்க்கத்தையும் கட்டுப்பாட்டின்கீழ்க் கொண்டுவரவும் திடமாக உறுதிபூணுவது.

(2) நீங்கள் முன்னெப்போதும் நடத்தியதைவிடப் பெரிய நிர்மூலமாக்கும் சமரொன்றை நடத்தத் திடமாக உறுதி பூணுவது, அதாவது வெய் லீ-ஹுவாங்கின் ராணுவம் முழு

வதுடனும் அது பாதுகாப்பளிக்க வரும் சமயத்தில் போரிடத் துணிவது.

(3) இவ்விரு உறுதிப்பாடுகளுக்குமேற்ப உங்கள் போர் நடவடிக்கைத் திட்டங்களைத் திரும்பக் கவனத்திலெடுத்து, உங்கள் முழுப்படையினதும் ராணுவத் தேவைகளை (தானியம், வெடிமருந்து, புதிய ஆட்கள் போன்றவை)ப் பூர்த்தி செய்யவும் கைதிகள் சம்பந்தமான விஷயங்களைக் கையாளவும் ஒழுங்குகளைச் செய்வது.

மேற்கூறியவற்றைக் கவனத்திலெடுத்துப் பதிற் தந்தி அடியுங்கள்.

## 2. அக்டோபர் 10ந் தேதித் தந்தி

1. நீங்கள் ஜின்சௌவைத் தாக்க ஆரம்பிக்கும் நாள் முதல் போர் நிலைமை மிக நெருக்கடியானதாயிருக்கும் காலகட்டமொன்று ஏற்படும். நீங்கள் இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கொருமுறை எதிரியின் நிலைமைபற்றியும் (ஜின்சௌவைப் பாதுகாக்கும் அவனது படைகளின் எதிர்ப்புப் பலம், ஹுலு தீவு, ஜின்சி ஆகியவற்றிலிருந்தும், ஷென்யாங்கிலிருந்தும் படைவலிபெருக்குவதில் அவனது முன்னேற்றம், சாங்சுனிலுள்ள அவனது துருப்புக்கள் எடுக்கக் கூடிய நடவடிக்கையின் போக்கு), எமது நிலைமை பற்றியும் (நகரத்தின்மீதான எமது தாக்குதலின் முன்னேற்றம், நகரத்தைத் தாக்குவதிலும் எதிரியைப் படைவலிபெருக்காது தடுப்பதிலும் ஏற்படும் உயிர் சேதங்கள்) கம்

பியில்லாத்தந்தி மூலம் எங்களுக்குத் தெரிவிப்பீர்களென நாம் நம்புகிறோம்.

2. நீங்கள் கூறியது போல, இக்காலகட்டத்தின்போது போர் நிலைமை மிகவும் சாதகமாக வளரும், அதாவது, உங்களால் ஜின்சௌவைப் பாதுகாக்கும் எதிரிப் படைகளை மட்டுமல்ல, ஹுலு தீவிலும் ஜின்சியிலும் இருந்து படைவலிபெருக்க வரும் அவனது படைகளில் ஒரு பகுதியையும், சாங்சுனிலிருந்து தப்பியோடும் அவனது படைகளில் சிலதை அல்லது பெரும் பாலானதையுங்கூட அழித்தொழிக்க முடியுமாயிருக்கும் என்பது பெரிதும் சாத்தியமானது. நீங்கள் ஜின்சௌவைக் கைப்பற்றியவுடன் ஷென்யாஙிலிருந்து படைவலிபெருக்க வரும் எதிரிப் படைகள் தாலிங் நதிக்கு வடக்கிலுள்ள பிரதேசத்துக்கு முன்னேற, அப்போது உங்களால் அவற்றைச் சுற்றி வளைக்க உங்கள் படைகளை நகர்த்த முடியுமாயிருந்தால் இப்படைவலிபெருக்க வரும் படைகளையும் துடைத்தொழிப்பது சாத்தியம். இவற்றுக்கெல்லாம் திறவுகோல் சுமார் ஒரு வாரத்தில் ஜின்சௌவைக் கைப்பற்றப் பாடுபடுவதுதான்.

3. ஜின்சௌவிலான எமது ராணுவத்தின் தாக்குதலின் முன்னேற்றத்துக்கும் எதிரியின் படைவலிபெருக்க வரும் படைகள் கிழக்கிலிருந்தும் மேற்கிலிருந்தும் முன்னேறும் முன்னேற்றத்துக்குமேற்ப, அவற்றைத் தடுக்க உங்கள் துருப்புக்களை அணி வகுப்பதைத் தீர்மானியுங்கள். ஹுலு தீவிலும் ஜின்சியிலும் இருந்துவரும் படைவலிபெருக்கும் படைகள் ஒப்பீட்டளவில் வேகமாக முன்னேற, ஷென்யாஙிலிருந்து வரும் எதிரியின் படைவலிபெருக்கும் படைகள் ஒப்பீட்டளவில் மெதுவாக முன்னேறும் சமயத்தில் (நீங்கள் ஜின்சௌவைத் தாக்கும்போது சாங்சுனில் முற்றுகையிடப்படும் எதிரி பிளந்துகொண்டு வெளி

யேறினுலும் எமது 12வது கொலத்தாலும் இதர படைக ளாலும் பிடிக்கப்பட்டு நொறுக்கப்பட்டால், அந்தச் சமயத்தில் ஷென்யாஙிலிருந்து படைவலிபெருக்க வரும் படைகள் மிக மெதுவாக முன்னேறவோ, நிற்கவோ, சாங்சுன் படைகளைக் காப்பாற்றத் திரும்பிப் போகவோ என்று பெரிதும் குழம் பலாம்) நீங்கள் முன்னைய படைவலிபெருக்கும் படைகளில் ஒரு பகுதியைத் துடைத்தொழிக்கவும் முதலில் அவற்றின் முன் னேற்றத்தைத் தடுத்துநிறுத்தவும் 4வது 11வது கொலங்க ளோடு சேர உங்கள் பொதுக் கையிருப்புப் படையை அனுப்பத் தயாராய் இருக்கவேண்டும். ஹுலு தீவிலும் ஜின்சியிலுமிருந்து வரும் படைவலிபெருக்கும் படைகள் எமது 4வது 11வது கொலங்களால் கட்டுப்படுத்தப்பட்டுத் தடுத்து நிறுத்தப்பட்டு அதனுல் முன்னேற்றம் மிக மெதுவாக இருந்தால் அல்லது நின்றுபோனுலும், முற்றுகையிடப்படும் சாங்சுனிலுள்ள எதி ரிப் படைகள் பிளந்துகொண்டு வெளியேருவிட்டாலும், ஷென் யாஙிலிருந்து வரும் படைவலிபெருக்கும் படைகள் ஒப்பீட் டளவில் வேகமாக முன்னேறினுலும், ஜின்சௌ எதிரிப்படை களில் பெரும்பகுதி துடைத்தொழிக்கப்பட்டு, அந்நகர் முழு வதையும் கைப்பற்றுவது உடனடியாய் நிகழக்கூடியதாய் இருந் தாலும் நீங்கள் ஷென்யாஙிலிருந்து வரும் எதிரிப் படைகளை தாலிங் நதிக்கு வடக்கிலுள்ள பிரதேசத்திற்குள் ஆழமாக முன் னேற விட வேண்டும்; அப்படிச் செய்தால் நீங்கள் தகுந்த நேரத்தில் அவற்றைச் சுற்றிவளைக்க உங்கள் படைகளை நகர்த்தி, உங்கள் வசதிப்படி அவற்றைத் துடைத்தொழிக்கமுடியும்.

4. நீங்கள் உங்கள் கவனத்தைப் பிரதானமாக ஜின்சௌப் போர்நடவடிக்கையில் செலுத்தி இந்த நகரை இயலுமானளவு விரைவில் கைப்பற்றப் பாடுபடவேண்டும். வேறெந்த நோக்

கமும் நிறைவேற்றப்படாது ஜின்சௌ மட்டும் கைப்பற்றப் பட்டாலும் நீங்கள் முன்முயற்சியை வென்றெடுத்தவராவீர் கள்; அதுவே ஒரு மாபெரும் வெற்றியாகும். மேற்கூறிய விஷயங்களனைத்திலும் தகுந்தபடி கவனஞ்செலுத்துவீர்களென எதிர்பார்க்கப்படுகிறது. விசேஷமாக, ஜின்சௌவுக்கான சம ரின் முதல் ஒருசில நாட்களில் கிழக்கு மேற்கு இரண்டிலிருந்தும் வரும் எதிரியின் படைவலிபெருக்கும் படைகளும் பிரதான நகர்வு நடவடிக்கை எதையும் செய்யமாட்டா; நீங்கள் உங்கள் சக்தியனைத்தையும் ஜின்சௌ முன்னணிப் போர்நடவடிக்கை யில் ஒன்றுகுவிக்கவேண்டும்.

## குறிப்புகள்

1. லியௌசி-ஷென்யாங் போரியக்கம் லியௌனிங் மாகாணத்தின் மேற்குப் பகுதியிலும், ஷென்யாங்-சாங்சுன் பிரதேசத்திலும் 1948ம் ஆண்டு செப் டம்பர் 12ந் தேதிக்கும் நவம்பர் 2ந் தேதிக்குமிடையில் வடகிழக்கு மக்கள் விடுதலைச் சேனையால் நடத்தப்பட்ட ஒரு பிரமாண்டமான போரியக்கம். இப்போரியக்கத்திற்கு முன் வடகிழக்குச் சீனவிலிருந்த கோமிந்தாங் படைகளின் மொத்தப் பலம் 14 கோர்களை அல்லது 44 டிவிஷன்களைக் கொண்ட 4 சேனைக ளாயிருந்தது. இப்படைகள் தமது முனைகளைக் குறுக்கி, ஒன்றிலிருந்து ஒன்று பிரிந்திருந்த மூன்று பகுதிகளான சாங்சுனிலும், ஷென்யாங்கிலும், ஜின்சௌ விலும் இருந்தன. வடகிழக்கிலிருந்த எதிரித் துருப்புக்களைப் பூரணமாய்த் துடைத்தொழித்து வடகிழக்கு சீன முழுவதையும் விரைவாக விடுதலைசெய்யும் நோக்கத்தோடு வடகிழக்கு மக்கள் விடுதலைச் சேனை ஸ்தல வெகுஜனங்களின் ஆதரவோடு 1948ம் ஆண்டு செப்டம்பரில் 12 கொலங்களையுடைய ஒரு பிர தான படையும் ஒரு பீரங்கிப் படைக் கொலமும் ஸ்தல ஆயுதப் படைகளுமாக மொத்தம் 53 டிவிஷன்களை அல்லது 700,000க்கு மேற்பட்டோரைத் திரட்டிக்

கொண்டு, லியௌசி-ஷென்யாங் போரியக்கத்தை ஆரம்பித்தது. பெய்ப்பிங்-லியௌனிங் புகையிரத மார்க்கத்திலிருந்த ஜின்சௌ வடகிழக்குச் சீனுவுக்கும் வடசீனுவுக்குமிடையே யுத்ததந்திர இணைப்பாயிருந்தது. ஜின்சௌ பகுதியைக் காவல் புரிந்த எதிரிப் படைகள் கோமிந்தாங்கின் வடகீழ் ''கொள்ளைக்காரரை அடக்கும் ஆணைப்பகுதி''யின் துணைத் தலைமைத் தளபதியாக இருந்த ஃபான் ஹன்-சியெயின் தலைமையிலிருந்த 100,000க்கு மேலானோரைக் கொண்ட 8 டிவிஷன்களையுடையதாயிருந்தன. ஜின்சௌவைக் கைப்பற்றியதே லியௌசி-ஷென்யாங் போரியக்கத்தின் வெற்றிக்குத் திறவுகோலாக இருந்தது. தோழர் மாஓ சேதுங் அவர்களின் உத்தரவுகளின்படி வடகிழக்கு மக்கள் விடுதலைச் சேனை 1 கொலத்தையும் 7 சுதந்திர டிவிஷன்களையும் சாங்சுன் எதிர்க்கெதிராக முற்றுகையிடும் போர்நடவடிக்கைகளைத் தொடர்ந்து நடத்தப் பயன்படுத்தியது; ஜின்சௌவைச் சுற்றிவளைத்துத் தாக்க 6 கொலங்களையும் 1 பீரங்கிப் படைக் கொலத்தையும் 1 டாங்கிப் பட்டாளத்தையும் பயன்படுத்தியது; எதிரி ஜின்சி, ஹுலு தீவு ஆகியவற்றிலிருந்தும், ஷென்யாங்கிலிருந்தும் ஜின்சௌவைக் காப்பாற்ற அனுப்பக்கூடிய படைவலிபெருக்கும் படைகளைத் தடுக்க ஜின்சௌவுக்குத் தென்மேற்கிலிருந்த டாஷன்-கௌச்சியௌ பகுதியில் 2 கொலங்களும் ஹெய்ஷன்-தாஹுஷன்-சாங்வூ பகுதியில் 3 கொலங்களும் நிறுத்திவைக்கப்பட்டிருந்தன. ஜின்சௌ பிரதேசப் போர்நடவடிக்கை செப்டம்பர் 12ந் தேதி ஆரம்பித்தது. சரியாக எமது ராணுவம் ஈஸியெனைக் கைப்பற்றிய பின் ஜின்சௌ நகர்ப்புறத்திலிருந்த எதிரியைத் துடைத்தொழித்துக் கொண்டிருந்தபோது சியாங் கை-ஷேக் தானே போர்நடவடிக்கைகளிற்குப் பொறுப்பேற்க வடகிழக்குக்கு அவசரமாகப் பறந்துவந்து, பெய்ப்பிங்-லியௌனிங் புகையிரதப் பாதையிலிருந்த வடசீனக் ''கொள்ளைக்காரரை அடக்கும் ஆணைப்பகுதி''யின் 5 எதிரி டிவிஷன்களையும், ஷன்துங் மாகாணத்திலிருந்த 2 டிவிஷன்களையும் ஏற்கனவே ஜின்சியிலிருந்த 4 டிவிஷன்களுடனும் சேர அவசரமாக அழைத்தான். இந்த 11 டிவிஷன்களும் அக்டோபர் 10ந் தேதி டாஷனிலிருந்த எமது ஸ்தானங்கள்மீது பயங்கரத் தாக்குதல் தொடுக்கத் தொடங்கின; ஆனுல் அவற்றுல் உடைத்துச் செல்லமுடியவில்லை. இதற்கிடையில், 11 டிவிஷன்களும் 3 குதிரைப்படை பிறிகேடுகளும் அடங்கிய லியௌ யௌ-ஷியாங்கின் சேனை (கோமிந்தாங்கின் 9வது சேனை) ஷென்யாங்கிலிருந்து ஜின்சௌவைப் பாதுகாக்க விரைந்தோடிக் கொண்டிருக்கையில் ஹெய்ஷனுக்கும் தாஹுஷனுக்கும் வடகிழக்கில் எமது ராணுவத்தால் வழிமறித்துத் தாக்கப்பட்டது. எமது ராணுவம் அக்டோபர்

14ந் தேதி ஜின்சௌவைத் தாக்க ஆரம்பித்து, முப்பத்தொரு மணிநேர உக்கிரமான போரின் பின் எதிரியின் படைகளை முற்றாகத் துடைத்தொழித்து, வடகிழக்குக் ''கொள்ளைக்காரரை அடக்கும் ஆணைப்பகுதி''யின் துணைத் தலைமைத் தளபதி ஃபான் ஹன்-சியெயையும், 6வது சேனையின் கமாண்டர் லூ சுன்-சுவானையும் அவர்களின் ஆணையின் கீழிருந்த 100,000க்கு மேற்பட்டோரையும் கைதுசெய்தது. ஜின்சௌ விடுதலை செய்யப்பட்டமை சாங்சுனிலிருந்த எதிரிப் படைகளில் ஒரு பகுதியைக் கோமிந்தாங்கிற்கெதிராகக் கிளர்ச்சி செய்யவும், மிகுதியைச் சரணடையவும் நிர்ப்பந்தித்தது. வடகிழக்குச் சீனாவில் கோமிந்தாங் துருப்புக்களின் பூரண வீழ்ச்சி அப்போது முன்கூட்டியே அறிந்த முடிவாயிற்று. ஆனால் சியாங் கை-ஷேக் ஜின்சௌவைத் திரும்பக் கைப்பற்றி, வடகிழக்குச் சீனாவிற்கும் வடசீனாவிற்குமிடை தொடர்பு மார்க்கத்தை மீண்டும் திறக்கக் கனவு கண்டு, தொடர்ந்து ஜின்சௌவை நோக்கி முன்னேறும்படி லியௌ யௌ-ஸியாங்கின் சேனைக்குக் கண்டிப்பான உத்தரவிட்டான். ஜின்சௌவைக் கைப்பற்றிய பின் வடகிழக்கு மக்கள் விடுதலைச் சேனை உடனடியாக மீண்டும் வடகிழக்குக்குத் திரும்பி வடக்கில் ஹெய்ஷனிலிருந்தும் தெற்கில் தாஹுஷனிலிருந்தும் லியௌவின் படையைச் சூழ்ந்து நெருங்கியது. அக்டோபர் 26ந் தேதி மக்கள் விடுதலைச் சேனை ஹெய்ஷன்-தாஹுஷன்-ஸின்மின் பகுதியில் லியௌவின் படையைச் சுற்றிவளைப்பதில் வெற்றிகண்டு, இரண்டு பகலும் ஓரிரவும் நடந்த உக்கிரமான போரின் பின் அவர்களை முற்றாகத் துடைத்தொழித்து, எதிரிச் சேனைக் கமாண்டர் லியௌ யௌ-ஸியாங்கையும், கோர் கமாண்டர்கள் லீ தௌ, ஸியாங் ஃபுங்-வூ, செங் திங்-சி ஆகியோரையும், அவர்களின் ஆணையின்கீழிருந்த 100,000க்கு மேற்பட்டோரையும் கைதுசெய்தது. எமது ராணுவம் இந்த வெற்றியைப் பின்பற்றி விறுவிறுப்பாக எதிரியைத் துரத்தியடித்து, நவம்பர் 2ந் தேதி 149,000க்கு மேற்பட்ட எதிரித் துருப்புக்களைத் துடைத்தொழித்து ஷென்யாங்கையும், யிங்கோவையும் விடுதலை செய்தது. இவ்வாறு வடகிழக்கு முழுவதும் விடுதலைசெய்யப்பட்டது. இப்போரியக்கத்தில் எல்லாமாக 470,000க்கு மேலான எதிரித் துருப்புக்கள் துடைத்தொழிக்கப்பட்டன.

2. அந்தச் சமயத்தில் கணிப்பீடு, கோமிந்தாங் சேனை முழுவதும் சுமார் ஐந்து ஆண்டுகளில் அழித்தொழிக்கப்பட்டுவிடுமென்பதாக இருந்தது. கணிப்பிடப்பட்ட காலம் பின்னர் சுமார் மூன்றரை ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டது. இந்நூலில் ''சீனாவின் ராணுவ நிலைமையிலேற்பட்ட பிரமாண்ட மாற்றம்'' என்ற கட்டுரையைப் பார்க்கவும்.

3. 1948ம் ஆண்டு நவம்பர் 1ந் தேதி சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் புரட்சிகர ராணுவக் கமிஷன் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் அரசியற் குழுவின் செப்டம்பர் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் பிரகாரம் பெரிய யுத்ததந்திரப் பிரதேசங்களிலிருந்த துருப்புக் களனைத்தையும் களப்படைகள், ஸ்தலப்படைகள், கொரில்லாப்படைகள் எனப் பிரித்தது. களப்படைகள் களச்சேனைகளாக அமைக்கப்பட்டன. ஒரு களச்சேனை பல படைவியூகங்களையும், ஒரு படைவியூகம் பல கோர்களை (ஆரம்பத்தில் கொலம் எனப்பட்டன)யும், ஒரு கோர் பல டிவிஷன்களையும் ஒரு டிவிஷன் பல ரெஜிமெண்டுகளையும் கொண்டிருந்தன. களச்சேனைகள் அவற்றின் இடத்தின் பிரகாரம் சீன மக்கள் விடுதலைச் சேனையின் வடமேற்குக் களச்சேனை, மத்திய சமவெளிக் களச்சேனை, கிழக்குச் சீனக் களச்சேனை, வடகிழக்குக் களச்சேனை, வடசீனக் களச்சேனை என அழைக்கப்பட்டன. ஒவ்வொரு களச்சேனையிலுமான படைவியூகங்களினதும் கோர்களினதும் டிவிஷன்களினதும் எண்ணிக்கைகள் ஒவ்வொரு பெரிய யுத்ததந்திர பிரதேசத்தினதும் ஸ்தூலமான சூழ்நிலைகளின் பிரகாரம் வேறுபட்டன. பின் வடமேற்குக் களச்சேனை முதலாவது களச்சேனை எனப் புனர் பெயர் பெற்றது; அது இரண்டு படைவியூகங்களைக் கொண்டிருந்தது. மத்திய சமவெளிக் களச்சேனை இரண்டாவது களச்சேனை என மாற்றுப் பெயர்பெற்றது; அது மூன்று படைவியூகங்களைக் கொண்டிருந்தது. கிழக்குச் சீனக் களச்சேனை மூன்றாவது களச்சேனை எனப் புனர் பெயர் பெற்றது; அது நான்கு படை வியூகங்களைக் கொண்டிருந்தது. வடகிழக்குக் களச்சேனை நான்காவது களச்சேனை எனப் புனர் பெயர்பெற்றது; அது நான்கு படைவியூகங்களைக் கொண்டிருந்தது. வடசீனக் களச்சேனையை உருவாக்கிய மூன்று படைவியூகங்களும் சீன மக்கள் விடுதலைச் சேனையின் பொது ஆணைப்பகுதியின் நேரடித் தலைமையில் வைக்கப்பட்டன.

# ஹுவய்-ஹாய் போரியக்கத்திற்கான நடவடிக்கைக் கோட்பாடு*

(1948, அக்டோபர் 11)

ஹுவய்-ஹாய் போரியக்க[1]த்துக்கான படைவகுப்புச் சம்பந்தமாக உங்கள் கவனத்திற்கு ஒருசில அம்சங்கள்.

1. இப்போரியக்கத்தின் முதலாவது கட்டத்தில் கேந்திரக் கடமை படைகளை ஒன்றுகுவித்து ஹுவாங் போ-தௌவின் சேனையைத் துடைத்தொழித்து, மத்தியில் உடைத்துச் சென்று, ஸின்ஆன்சென், பெரிய கால்வாய்ப் புகையிரத நிலையம், சாஓபாஜி, யிஸியென், சாஓச்சுவாங், லின்செங், ஹன்ச்சுவாங், ஷுயாங், பேய்ஸியென், தன்செங், தைஅல்ச்சுவாங், லின்யி ஆகிய இடங்களைக் கைப்பற்றுவதாகும். இந்நோக்கங்களை

*இது சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் புரட்சிகர ராணுவக் கமிஷனுக்காகத் தோழர் மாஓ சேதுங் அவர்களால் எழுதப்பட்டுக் கிழக்குச் சீன, மத்திய சமவெளிக் களச்சேனைகளுக்கும் அப்பகுதிகளிலான சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் பியூரோக்களுக்கும் அனுப்பப்பட்ட தந்தியாகும். ஹுவய்-ஹாய் போரியக்கம் சீன மக்களின் விடுதலை யுத்தத்தில் தீர்க்கமான முக்கியத்துவமுடைய மூன்று மிகப் பெரும் போரியக்கங்களில் ஒன்றாகும். இப்போரியக்கம் கிழக்குச் சீன, மத்திய சமவெளிக் களச்சேனைகளாலும் கிழக்குச் சீன, மத்திய சமவெளிப் பகுதிகளின் ஸ்தலப் படைகளாலும் கூட்டாக நடத்தப்பட்டது. இந்தப் போரியக்கத்தில் 555,000க்கு மேற்பட்ட கோமிந்தாங்

நிறைவேற்ற நீங்கள் ஒவ்வொரு எதிரி டிவிஷனையும் துடைத் தொழிக்க இரண்டு கொலங்களை உபயோகிக்க வேண்டும், அதாவது, எதிரியின் 25வது, 63வது, 64வது டிவிஷன்களைத் தனித் தனியாகத் துண்டித்துப் பிரித்துத் துடைத்தொழிக்க ஆறேழு கொலங்களைப் பயன்படுத்த வேண்டும். எதிரியின் படை வலிபெருக்கும் படைகளைத் தடுத்து நிறுத்தித் தாக்க ஐந்தாறு கொலங்களைப் பயன்படுத்துங்கள். சியூ சிங்-சுவான், லீ மீ ஆகியோர் தலைமையிலான இரு சேனைகளும் படைவலிபெருக் கும் படைகளாக முழுப் பலத்துடனும் கிழக்குக்குச் செல் லத் துணியாதபடி ஷிசௌவை வடக்கிலிருந்து அச்சுறுத்துவ தற்காக, ஒரு அல்லது இரு கொலங்களைப் பயன்படுத்தி, லின் செனிலும் ஹன்ச்சுவானிலும் உள்ள லீ மீயின் தலைமை யிலான ஒரு பிறிகேட்டைத் துடைத்தொழித்து அப்பட்டினங் களைக் கைப்பற்றப் பாடுபடுங்கள். சியூ சிங்-சுவான் சேனையில் ஒரு பகுதியைக் கட்டுப்படுத்துவதற்காகப் புகையிரத மார்க்கத் தின் ஷிசௌ-ஷாங்சியூ பகுதி மீது ஒரு பக்கவாட்டுத் தாக்குதல் தொடுக்க ஒரு கொலத்தையும் ஸ்தலப் படைவியூகத்தையும்

---

துருப்புக்கள் அழித்தொழிக்கப்பட்டன. தோழர் மாஓ சேதுங் அவர்களால் இத்தந்தியில் எடுத்துரைக்கப்பட்ட நடவடிக்கைக் கோட்பாடு பூரண வெற்றிக்கு இட்டுச்சென்றது; உண்மையில் போரியக்கம் எதிர்பார்க்கப்பட்டதைவிட நன் ருக நடைபெற்றது. ஆகவே வெற்றி விரைவாயும் பெரிதாயும் இருந்தது. இந்தப் போரியக்கத்துக்குப் பின் பிற்போக்குக் கோமிந்தாங் அரசாங்கத்தின் தலைநகரான நான்கிங் மக்கள் விடுதலைச் சேனையின் நேரடி அச்சுறுத்தலுக்கு இலக்காகியது. ஹுவய்-ஹாய் போரியக்கம் 1949, ஜனவரி 10ந் திகதி முடிக்கப்பட்டது; ஜனவரி 21ந் திகதி சியாங் கை-ஷேக் தன் ''இளைப்பாறலை''ப் பிரகடனம் செய்தான்; அதன் பின்னர் நான்கிங்கிலான பிற்போக்குக் கோமிந் தாங் ஆட்சிக் கும்பல் சிதைந்து சரிந்தது.

தென்மேற்கு ஷன்துங்கில் நிறுத்துங்கள் (சுன் யுவான்-லியா ஙின் தலைமையிலான மூன்று எதிரி டிவிஷன்கள் கிழக்குக்குச் செல்லவிருப்பதால், லியூ போ-செங், சென் யீ, தெங் ஸியௌ-பிங் ஆகியோர் தமது துருப்புக்களை உடனடியாக அணிவகுத்துச் செங்சௌ-ஷிசௌ மார்க்கத்தைத் தாக்கி, அதன் மூலம் சுன் யுவான்-லியாஙின் சேனையைக் கட்டுப்படுத்துவர் என எதிர் பார்க்கப்படுகிறது). லீ மீயின் சேனையைத் தடுத்து நிறுத்த ஸூச்சியென்-ஸூய்னிங்-லிங்பி பிரதேசத்தில் நடவடிக்கையிலீடு பட ஓரிரு கொலங்களைப் பயன்படுத்துக. இந்தப் படைவகுப்பின் அர்த்தமென்னவென்றால் ஹூவாங் போ-தௌவின் சேனையின் மூன்று டிவிஷன்களையும் நிர்மூலமாக்கும் நோக்கத்தை நிறை வேற்றுமுன் சியூ சிங்-சுவான், லீ மீ ஆகியோரின் தலைமையி லுள்ள இரு சேனைகளுக்கெதிராக அவற்றில் ஒரு பகுதியைக் கட்டுப்படுத்தி, வழிமறித்துத் தாக்கி அழித்தொழிக்க எமது முழுப் படையிலும் பாதிக்கு மேல் பயன்படுத்தப்படவேண் டுமென்பதாகும். இப்படைவகுப்புகள் பொதுவாகக் கடந்த செப்டம்பரில் ஜிஞனைக் கைப்பற்றவும் எதிரியின் படைவலி பெருக்கும் படைகளைத் தாக்கவும் செய்யப்பட்டவை[2] போன் றிருக்க வேண்டும். இல்லாவிட்டால் ஹூவாங் போ-தௌ வின் சேனையின் மூன்று டிவிஷன்களையும் நிர்மூலமாக்கும் நோக் கத்தை நிறைவேற்றுவது அசாத்தியமாகும். நீங்கள் முதலாவது கட்டத்தை, போரியக்கம் ஆரம்பித்து இரண்டு முதல் மூன்று வாரங்களில் முடிக்க முயற்சிக்க வேண்டும்.

2. இரண்டாவது கட்டத்தில் ஹாய்சௌ, ஸின்பூ, லியென் யுன்காங், குவான்யுன் ஆகிய இடங்களிலுள்ள எதிரியைத் தாக் கித் துடைத்தொழித்து அப்பட்டினங்களைக் கைப்பற்றச் சுமார் ஐந்து கொலங்களைப் பயன்படுத்துக. அந்தச் சமயத்தில் எதி

ரியின் 54வது, 32வது டிவிஷன்கள் பெரும்பாலும் சிங்தௌ விலிருந்து ஹாய்சௌ-சின்பூ-லியென்யுன்காங் பிரதேசத்திற் குக் கடல் மார்க்கமாய் அனுப்பப்பட்டிருக்கும் என அனுமானிக் கப்படுகிறது.[3] அப்பிரதேசத்தில் ஏற்கெனவே உள்ள ஒரு டிவி ஷன் உட்பட அங்கு எல்லாமாக மூன்று எதிரி டிவிஷன்கள் இருக்கும். ஆகவே நாம் அவற்றைத் தாக்க ஐந்து கொலங்க ளைப் பயன்படுத்தி, மிகுதிப்படைகளை (எமது பிரதான பலத்தை)ச் சியூ சிங்-சுவான், லீ மீ ஆகியோர் தலைமையிலுள்ள இரு சேனைகளையும் கட்டுப்படுத்தப் பயன்படுத்தவேண்டும்; இங் கும் கடந்த செப்டம்பரில் ஜினைக் கைப்பற்றவும் எதிரியின் படைவலிபெருக்கும் படைகளைத் தாக்கவும் செய்த படைவகுப் புக் கோட்பாட்டின் பிரகாரம் நடக்க வேண்டும். இந்தக் கட் டத்தையும் நீங்கள் இரண்டு முதல் மூன்று வாரங்களில் முடிக்க முயற்சிக்க வேண்டும்.

3. மூன்றுவது கட்டத்தில் சமர் ஹுவய்யினையும் ஹுவய் ஆனையும் சுற்றி நடைபெறும் எனக் கருதலாம். அந்தச் சமயத் தில் எதிரி தன் பலத்தைச் சுமார் ஒரு டிவிஷனுல் கூட்டியிருப் பான் (யென்தையிலுள்ள புனரமைக்கப்பட்ட 8வது டிவிஷன் தெற்குக்குக் கடல் மார்க்கமாய் அனுப்பப்படுகிறது). ஆகவே நாம் மீண்டும் கிட்டத்தட்ட ஐந்து கொலங்களைத் தாக்கும் படையாகப் பயன்படுத்தவும் எமது பிரதான படையில் மிகு தியை எதிரியின் படைவலிபெருக்கும் படைகளைத் தாக்கிக் கட்டுப்படுத்தப் பயன்படுத்தவும் தயாராயிருக்க வேண்டும். இந் தக் கட்டமும் இரண்டு முதல் மூன்று வாரங்கள் பிடிக்கும்.

இம்மூன்று கட்டங்களும் சுமார் ஒன்றரை முதல் இரண்டு மாதங்கள் எடுக்கும்.

4. நீங்கள் ஹுவய்-ஹாய் போரியக்கத்தை நவம்பரும்

வடகிழக்கிலுள்ள சிங்லுங்சி-சென்குவான்ச்சுவாங் பகுதியிலிருந்த ஷிசௌவி லிருந்து மேற்கு நோக்கி ஓட்டம் பிடித்தவையும் டு யூ-மிங்கின் நேரடி ஆணையில் முறையே சியூ சிங்-சுவானாலும் லீ மீயாலும் தலைமை தாங்கப்பட்டவையுமான 2 கோமிந்தாங் சேனைகளைச் சுற்றிவளைத்து நிர்மூலமாக்கியது. டு யூ-மிங் கைது செய்யப்பட்டான்; சியூ சிங்-சுவான் கொல்லப்பட்டான்; லீ மீ மட்டும் தப்பி யோடினான். இது மாபெரும் ஹுவய்-ஹாய் போரியக்கத்தின் வெற்றிகரமான முடிவாயமைந்தது.

2. ''ஜினானைக் கைப்பற்றவும் எதிரியின் படைவலிபெருக்கும் படைகளைத் தாக்கவும்'' என்பது 1948 செப்டம்பர் மாத மத்தியில் ஜினான் போரியக்கத்தின் போது மக்கள் விடுதலைச் சேனை பயன்படுத்திய தந்திரோபாயத்தைக் குறிக்கிறது. ஜினான், ஷன்துங் மாகாணத்திலிருந்த கோமிந்தாங்கின் ஒரு முக்கிய யுத்ததந்திர ஸ்தானமாகும். கோமிந்தாங்கின் 2வது அமைதிப்படுத்தும் பிரதேசத்தைச் சார்ந்த 110,000க்கு மேலான வீரர்களால் இது காவல் செய்யப்பட்டது. அத்துடன் ஷிசௌ பிரதேசத்தில் நிறுத்தப்பட்டிருந்த சுமார் 170,000 பேரைக் கொண்ட கோமிந்தாங்கின் பிரதான படைகளின் 23 பிறிகேடுகளும் ஜினானுக்கு உதவியாக வடக்கு நோக்கிச் செல்லத் தயாராயிருந்தன. எமது கிழக்குச் சீனக் களச்சேனை நகரைத் தாக்க 7 கொலங்களைக் கொண்ட ஒரு குழுவையும், எதிரியின் படைவலிபெருக்கும் படைகளுக்கு அடிகொடுக்க 8 கொலங்களைக் கொண்ட இன்னொரு குழுவையும் உருவாக்கியது. ஜினானைக் காவல் செய்திருந்த எதிரியின் மீதான தாக்குதல் 1948ம் ஆண்டு செப்டம்பர் 16ந் தேதி மாலையில் ஆரம்பமாகியது. எட்டுப் பகலும் இரவும் நடந்த தொடர்ச்சியான போராட்டத்தின் பின் செப்டம்பர் 24ந் தேதி எதிரியின் காவற்படை முற்றாகத் துடைத்தொழிக்கப்பட்டது (1 கோர் கிளர்ச்சி செய்து எம் பக்கம் வந்தது); கோமிந்தாங்கின் 2வது அமைதிப்படுத்தும் பிரதேசத் தளபதி வாங் யௌ-வூ கைது செய்யப்பட்டான். எமது படைகள் ஜினானை வெகு வேகமாகக் கைப்பற்றியதால் ஷிசௌவிலிருந்த எதிரி அதைப் பாதுகாக்க வடக்கிற்கு வரத் துணியவில்லை.

3. உண்மையில் இந்த இரு எதிரி டிவிஷன்களும் வரத் துணியவில்லை.

# சீனுவின் ராணுவ நிலைமையிலேற்பட்ட பிரமாண்ட மாற்றம்*

**(1948, நவம்பர் 14)**

*சீனுவில் ராணுவ நிலைமை ஒரு புதிய திருப்புமையத்தை அடைந்துள்ளது, அதாவது யுத்தத்தின் இரு தரப்புகளுக்குமிடைச் சக்திகளின் பலாபலம் ஒரு அடிப்படை மாற்றத்தையடைந்துள்ளது. நீண்டகாலமாகத் தரத்தில் மேம்பாடுடையதாயிருந்த மக்கள் விடுதலைச் சேனை இப்போது எண்ணிக்கையிலும் மேம்பாடுடையதாகியுள்ளது. இது சீனப் புரட்சியின் வெற்றியும், சீனுவில் சமாதானத்தைக் கொண்டுவருவதும் கைக்கெட்டிய தூரத்திலிருக்கின்றன என்பதற்கான அறிகுறியாகும்.*

---

*இந்தக் கட்டுரை சின்ஹுவா செய்தி நிறுவனத்துக்காகத் தோழர் மாஓ சேதுங் அவர்களால் எழுதப்பட்ட ஒரு விமர்சனம். இதிற் தோழர் மாஓ சேதுங் அவர்கள் புதிய நிலைமையை, அதாவது, லியௌசி-ஷென்யாங் போரியக்கத்தின் பின் எதிரிக்கும் எமக்குமிடைப் பலாபலத்தின் மாற்றத்தை அடிப்படையாகக் கொண்டு, மக்கள் விடுதலை யுத்தத்தில் வெற்றி ஈட்டத் தேவையான காலம் பற்றிப் புதிய கணிப்பீடொன்றைச் செய்து, கோமிந்தாங்கின் பிற்போக்கு ஆட்சி 1948 நவம்பரிலிருந்து ஏறக்குறைய ஒரு வருட காலத்தில் தூக்கியெறியப்பட முடியுமெனச் சுட்டிக்காட்டினுர். சீனுவின் ராணுவ நிலைமையில் இதன் பின்பான அபிவிருத்திகள் அவரது தீர்க்கதரிசனமான கூற்றை முற்றுக நிரூபித்தன.

யுத்தத்தின் இரண்டாவது ஆண்டின் இறுதியில், அதாவது, இந்த ஆண்டு ஜூன் மாத இறுதியில் கோமிந்தாங் சேனையில் இன்னும் மொத்தம் சுமார் 3,650,000பேர் இருந்தனர். இது 1946 ஜூலையில் கோமிந்தாங் நாடுபரந்த உள்நாட்டு யுத்தத்தைத் தொடங்கியபோது அதனிடமிருந்த 4,300,000 பேரை விட 650,000 குறைவு. கோமிந்தாங் சேனை இரு ஆண்டுகளின் யுத்தத்தின்போது 2,440,000 பேரைப் புதிதாகச் சேர்த்துக்கொண்டது; இதுதான் அக்காலகட்டத்தில் துடைத்தொழிக்கப்பட்டோர், கைது செய்யப்பட்டோர் அல்லது விட்டுச் சென்றோர் (2,640,000 துடைத்தொழிக்கப்பட்டனர் அல்லது கைது செய்யப்பட்டனர்) தொகை எல்லாமாகக் கிட்டத்தட்ட 3,090,000ஆக இருந்தபோதும் குறைந்தோர் தொகை ஆக 650,000 ஆனதற்கான காரணம். சமீபத்தில் ஒரு திடீர் மாற்றம் ஏற்பட்டது. யுத்தத்தின் மூன்றாவது ஆண்டின் முதல் நான்கு மாதங்களில், அதாவது, இவ்வாண்டு ஜூலை 1ந் தேதி முதல் நவம்பர் 2ந் தேதி ஷென்யாங் விடுதலை செய்யப்பட்டதுவரை, கோமிந்தாங் ராணுவம் 1,000,000 பேரை இழந்தது. இந்நான்கு மாதங்களில் அது இழந்தோரின் இடத்தை நிரப்பியதுபற்றி நிச்சயமாகத் தெரியாது; அது 300,000 பேரைப் புதிதாகச் சேர்த்துக்கொள்ளக்கூடியதாய் இருந்தது என்று வைத்துக்கொண்டால் குறைந்தோர் தொகை 700,000 ஆகும். ஆகவே கோமிந்தாங்கின் முழு ஆயுதப் படைகளும் — தரைப்படை, கடற்படை, ஆகாயப்படை, கிரமமான படை, கிரமமல்லாத படை, போரிடும் துருப்புக்கள், பின்னணிச் சேவை நிறுவனங்களிலுள்ளோர் — இப்போது ஆக கிட்டத்தட்ட 2,900,000 பேரைக் கொண்டனவாயுள்ளன. மறுபுறம், மக்கள் விடுதலைச் சேனை 1946 ஜூனில் 1,200,000

பேரைக்கொண்டிருந்து, அது 1948 ஜூனில் 2,800,000ஆகி, இப்போது 3,000,000க்கு மேலானதாக அதிகரித்துள்ளது. இவ்வாறு கோமிந்தாங் ராணுவம் நீண்டகாலமாக அனுபவித்த எண்ணிக்கை மேம்பாடு வேகமாகத் தாழ்நிலையாகியது. இது நாட்டின் சகல யுத்த அரங்குகளிலும் கடந்த நான்கு மாதகாலத்தில் மக்கள் விடுதலைச் சேனை நடத்திய வீரமிக்க போரிடலின் விளைவாகும்; இது விசேஷமாகத் தெற்கு முன்னணியில் நடந்த ஸுய்-ஜி போரியக்க[1]த்தினதும் ஜினுன் போரியக்க[2]த்தினதும் வடக்கு முன்னணியில் நடந்த ஜின்செள, சாங்சுன், லியெளசி, ஷென்யாங் போரியக்கங்க[3]ளினதும் விளைவாகும். இந்த ஆண்டு ஜூன் மாதக் கடைசிவரை கோமிந்தாங் கிரமமான படைகளில் 285 டிவிஷன்களுக்கு இன்னும் தனித்தனிப் பெயர்களிருந்தன. இதற்குக் காரணம் அது கிரமமல்லாத படைகளை வெறித்தனமாகக் கிரமமான படைகளுக்குள் சேர்த்துக்கொண்டதாகும். இந்நான்கு மாதத்தில் மக்கள் விடுதலைச் சேனையால் துடைத்தொழிக்கப்பட்ட பட்டாலியன்களதும் அதற்கு மேற்பட்ட பெரிய யுனிட்டுகளதும் தொகை 63 முழு டிவிஷன்களுட்பட மொத்தம் 83 டிவிஷன்களாகும்.

இதன்படி, யுத்தம் நாம் ஆரம்பத்தில் கணிப்பிட்டதைவிட மிகக் குறுகியதாயிருக்கும். ஆரம்பக் கணிப்பீடு 1946 ஜூலை முதல் ஏறக்குறைய ஐந்து வருடத்தில் பிற்போக்குக் கோமிந்தாங் அரசாங்கம் முற்றுகத் தூக்கியெறியப்பட முடியுமென்பதாகும். நாம் இப்போது பார்க்குமிடத்து, அதை முற்றுகத் தூக்கியெறிய இன்னும் ஏறக்குறைய ஒரு வருடகாலம்தான் தேவைப்படலாம். இருந்தாலும், நாட்டின் சகல பாகங்களிலும் பிற்போக்குச் சக்திகளை ஒழித்து, மக்கள் விடுதலையை முற்றுனதாக்க ஒப்பீட்டளவில் நீண்டகாலம் தேவைப்படும்.

எதிரி விரைவாக வீழ்ச்சியடைகிறுன். ஆனுல் கம்யூனிஸ்டு களும், மக்கள் விடுதலைச் சேனையும், நாடு பூராவுமுள்ள சகல துறையைச் சார்ந்த மக்களும் தொடர்ந்து ஒருவர் போல் ஐக்கியப்பட்டுத் தம் முயற்சிகளை இரட்டிப்பாக்க வேண்டும். இதன் மூலந்தான் நாம் பிற்போக்கு சக்திகளை இறுதியாகவும் முற்றுகவும் துடைத்தொழித்து முழு நாட்டிலும் ஒரு ஐக்கியப் பட்ட, ஜனநாயக, மக்கள் குடியரசைக் கட்டியமைக்க முடியும்.

## குறிப்புகள்

1. ஸுய்-ஜி போரியக்கம் கிழக்கு ஹோனுன் போரியக்கமென்றும் அழைக் கப்படும். அது கிழக்கு ஹோனுனில் கைஃபுங், ஸுய்ஸியென், ஜிஸியென் ஆகி யவற்றை உள்ளடக்கிய பகுதியில் மக்கள் விடுதலைச் சேனையால் நடத்தப்பட் டது. இந்தப் போரியக்கம் 1948 ஜூன் 17ந் தேதி ஆரம்பமாகியது. ஜூன் 22ந் தேதி எமது ராணுவம் கைஃபுங்கைக் கைப்பற்றியது. சியாங் கை-ஷேக் தன் நெருக்கடியான ராணுவ நிலைமையிலிருந்து மீள்வதற்காக முன்னணிக்குச் சென்று தானே ஆணைகொடுத்து, கைஃபுங் மீது பல திக்குகளாலும் தாக்குதல் தொடுக்க சியூ சிங்-சுவான், ஓ ஷௌ-நியென், ஹுவாங் போ-தௌ ஆகியோ ரின் தலைமையிலான மூன்று சேனைகளை ஒன்றுகூட்டினுன். எமது கிழக்குச் சீனக் களச்சேனையின் ஆறு கொலமும், எமது மத்திய சமவெளிக் களச்சேனையின் இரண்டு கொலமும் எமது குவாங்துங்-குவாங்சிக் கொலமும் ஜூன் 27 முதல் ஜூலை 6வரை ஓ ஷௌ-நியெனினதும் ஹுவாங் போ-தௌவினதும் தலைமை யிலிருந்த சேனைகளை ஸுய்ஸியென்-ஜிஸியென் பகுதியில் சுற்றிவளைத்து ஒன்பது நாள் இரவுபகலாக உக்கிரமாகப் போரிட்டு ஓ ஷௌ-நியெனின் இரண்டு டிவிஷன்களை அல்லது 6 பிறிகேடுகளையும் ஹுவாங் போ-தௌவின் சேனையின் ஒரு பகுதியையும் துடைத்தொழித்தன; அவற்றின் ஆட்தொகை மொத்தம் 90,000க்கு மேல். சேனைக் கமாண்டர் ஓ ஷௌ-நியெனும், புனரமைக்கப்பட்ட 75வது டிவிஷன் கமாண்டர் ஷென் செங்-நியெனும் கைதுசெய்யப்பட்டனர்.

2. ஜினுன் போரியக்கம் பற்றி, இந்த நூலில் ''ஹூவய்-ஹாய் போரியக்கத் திற்கான நடவடிக்கைக் கோட்பாடு'' என்ற கட்டுரையின் இரண்டாவது குறிப் பைப் பார்க்கவும்.

3. இங்கு கூறப்பட்டுள்ள ஜின்சௌ, சாங்சுன், லியௌசி, ஷென்யாங் போரி யக்கங்கள் ஒன்ருக எடுக்கப்பட்டு லியௌசி-ஷென்யாங் போரியக்கம் எனப் பட்டது. இந்த நூலிலுள்ள ''லியௌசி-ஷென்யாங் போரியக்கத்திற்கான நடவ டிக்கைக் கோட்பாடு'' என்ற கட்டுரையின் முதலாவது குறிப்பைப் பார்க்கவும்.

# பெய்ப்பிங்-தியென்சின் போரியக்க[1]த்திற்கான நடவடிக்கைக் கோட்பாடு*

(1948, டிசம்பர் 11)

1. சாங்சியாகோ, ஸின்பாஒஆன், ஹுவய்லாய் ஆகியவற்றிலும் பெய்ப்பிங், தியென்சின், தாங்கூ, தாங்ஷன் ஆகிய பிரதேசங்கள் முழுவதும் உள்ள எதிரிப்படைகள்—அரண்செய்யப்பட்ட நிலையங்களைப் பாதுகாக்கக் கணிசமானளவு உயர்ந்த போராற்றலை இன்னுமுடைய 35வது, 62வது, 94வது கோர்களின் குறிப்பிட்ட சில டிவிஷன்கள் போன்ற ஒருசில யுனிட்

*இது சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் புரட்சிகர ராணுவக் கமிஷனுக்காகத் தோழர் மாஓ சேதுங் அவர்களால் எழுதப்பட்டு, லின் பியௌ, லோ ழொங்-ஹுவான், மற்றும் தோழர்களுக்கு அனுப்பப்பட்ட ஒரு தந்தியாகும். பெய்ப்பிங்-தியென்சின் போரியக்கம் சீன மக்களின் விடுதலை யுத்தத்தில் தீர்க்கமான முக்கியத்துவமுடையவையான மூன்று மிகப் பெரிய போரியக்கங்களில் கடைசியானதாகும். இந்தப் போரியக்கத்தில் நாம் 520,000க்கு மேற்பட்ட கோமிந்தாங் துருப்புக்களை அழித்தொழித்தோம், அல்லது புனரமைத்தோம். பெய்ப்பிங், தியென்சின், சாங்சியாகோ ஆகிய முக்கிய நகரங்களை விடுதலையாக்கினோம், பொதுவாக வட சீனாவின் விடுதலைக்காகப் போரிடுதலை முடித்துக்கொண்டோம். இங்கு தோழர் மாஓ சேதுங் அவர்களால் எடுத்துரைக்கப்பட்ட இப்போரியக்கத்திற்கான கோட்பாடு நடைமுறையில் பூரணமாக அடையப்பெற்றது.

டுகளைத் தவிர — சிறிதளவு தாக்குதல் உணர்வே உடையன வாய் இருக்கின்றன; அவை வெறும் நாணொலி மட்டும் கேட்டுத் திகிலடையும் பறவைகள் போலுள்ளன. குறிப்பாக நீங்கள் பெருஞ்சுவருக்குத் தெற்கே முன்னேறியது முதல் நிலைமை இது வாயிருக்கிறது. எச்சந்தர்ப்பத்திலும் நீங்கள் எதிரியின் போராற்றலைக் கூட்டி மதிப்பிடக்கூடாது. எமது தோழர்களிற் சிலர் எதிரியின் போராற்றலைக் கூட்டி மதிப்பிட்டதால் துன்புற்றுள்ளனர்; ஆனால் அவர்கள் விமர்சிக்கப்பட்ட பின் ஒரு சரியான விளக்கத்தைப் பெற்றுள்ளனர். இப்போது சாங் சியாகோ, ஸின்பாஓஆன் இரண்டிலுமுள்ள எதிரி நிச்சயம் சுற்றிவளைக்கப்பட்டு, அநேகமாக உடைத்து வெளியேறித் தப்பிச் செல்வது பெருங் கஷ்டமாயிருக்கக் காண்பான். 16வது கோரில் சுமார் பாதி விரைவாகத் துடைத்தொழிக்கப்பட்டு விட்டது. ஹுவய்லாயிலுள்ள எதிரியின் 104வது கோர் அவசர அவசரமாகத் தெற்குக்கு ஓட்டம் பிடித்துள்ளது; அது இன்றோ நாளையோ பெரும்பாலும் துடைத்தொழிக்கப்படும். இதைச் செய்த பின் நீங்கள் நான்கோவிற்கும் பெய்ப்பிங்கிற்கும் இடையிலுள்ள தொடர்பைத் துண்டிக்க 4வது கொலத்தைத் தென்மேற்கிலிருந்து[2] வடகிழக்குக்கு அனுப்பத் தயாராயிருப்பீர்கள். இதை நிறைவேற்றுவது சுலபமானதாய் இல்லாமல் இருக்கலாம் என நான் நினைக்கிறேன்; காரணம், ஒன்றில் 94வது கோரும் 16வது கோரின் மிச்சசொச்சங்களும் பெய்ப்பிங்கிற்கு விரைவாகப் பின்வாங்கும், அல்லது 94வது, 16வது, 92வது கோர்கள் கூட்டுப் பாதுகாப்புக்காக நான் கோ-சாங்பிங்-ஷாஹோசென் பிரதேசத்தில் ஒன்றுகுவியும். ஆனால் எமது 4வது கொலத்தின் இந்நடவடிக்கை பெய்ப்பிங்கின் வடமேற்கு, வடக்கு நகர்ப்புறத்தையும் நேரடியாக அச்

சுறுத்தி, அங்குள்ள எதிரிப் படைகளைக் கட்டுப்படுத்தி அவற்றை நகரத் துணியாதபடி செய்யும். அவை 35வது கோருக்குப் படைவலிபெருக்க மேலும் மேற்கு நோக்கி நகரத் துணிந்தால், நாம் ஒன்றில் நேரடியாக அவற்றின் பின்வாங்குதலுக்குப் பாதையில்லாதபடி துண்டிக்க முடியும் அல்லது பெய்ப்பிங்மீது ஒரு நேரடித் தாக்குதல் தொடுக்க முடியும்; ஆகவே அவை பெரும்பாலும் மேலும் மேற்கு நோக்கி நகரத் துணியா. யாங் தெ-சி, லோ ஜெய்-சிங், கெங் பியௌ ஆகியோர் ஆணையிலான வட சீனுவிலுள்ள சேனை, எதிரியின் 35வது கோரின் 3 டிவிஷன்களைச் சுற்றிவளைக்க 9 டிவிஷன்களை உபயோகிக்கிறது; இது முற்றிலும் மேம்பாடு. அவர்கள் இந்த எதிரி டிவிஷன்களைக் கூடிய சீக்கிரத்தில் அழித்தொழிக்கப் பிரேரித்துள்ளனர்; ஆனால் பெய்ப்பிங்கிலும் தியென்சினிலும் உள்ள எதிரியை ஆழமாக உள்ளே கவர்ந்திழுத்து, கடல் மார்க்கமாய் ஓடிச் செல்லும் ஒரு முடிவையெடுக்க அவனுக்குக் கஷ்டமாக்குவதற்காக இப்போதைக்குத் தாக்க வேண்டாமென அவர்களைக் கேட்க நாம் யோசித்திருக்கிறோம். அவர்கள் இத்தடவை 35வது கோரைச் சுற்றிவளைக்க 2 கொலங்களையும், 104வது கோரைத் தடுத்து நிறுத்த 1 கொலத்தையும் உபயோகித்து, இவ்விரு எதிரிப் படைகளையும் தாக்கிப் பின்வாங்கச் செய்துள்ளனர்.

2. நீங்கள் வடகிழக்கிலிருந்து பெய்ப்பிங்கிலும், நான்கோவிலும், ஹுவய்லோவிலுமுள்ள எதிரியை அச்சுறுத்த நான்கோவின் சுற்றுப்புறத்துக்கு 5வது கொலத்தை உடனடியாக அனுப்புவதை நாம் இப்போது ஏற்றுக்கொள்கிறோம். பின்னர் (சுமார் பத்துப் பதினைந்து நாட்களுக்குப்பின், அதாவது, யாங் தெ-சி, லோ ஜெய்-சிங், கெங் பியௌ ஆகியோர் தலை

மையிலான வட சீனுவிலுள்ள சேனை 35வது கோரை நிர்மூல மாக்கிய பின்) உங்கள் 4வது கொலத்தைக் கிழக்கில் சேவை செய்ய விடுவதற்காக இந்த 5வது கொலம் அங்கேயே தங்கியி ருக்கும். ஆகவே, 5வது கொலத்தை இன்றே மேற்கு நோக்கித் தொடர்ந்து முன்னேறும்படி தயவு செய்து கட்டளையிடுங்கள்.

3. 3வது கொலம் எக்காரணங்கொண்டும் நான்கோவிற்குப் போகக்கூடாது. மாறுக எமது 9ந் தேதித் தந்திப் பிரகாரம், கிழக்கிலிருந்து பெய்ப்பிங்ப் பயமுறுத்தவும், 4வது, 11வது, 5வது கொலங்களோடு சேர்ந்து பெய்ப்பிங்ச் சுற்றி ஒரு சுற்றிவளைப்பை ஏற்படுத்தவும் பெய்ப்பிங்கிற்குக் கிழக்கிலும் தொங்ஸியெனுக்குத் தெற்கிலுமுள்ள பிரதேசத்திற்கு நகர வேண்டும்.

4. ஆனுல் எமது உண்மையான நோக்கம் முதலில் பெய்ப் பிங்ச் சுற்றிவளைப்பதல்ல; முதலில் தியென்சின், தாங்கூ, லூதை, தாங்ஷன் ஆகியவற்றைச் சுற்றிவளைப்பதாகும்.

5. சுமார் டிசம்பர் 15ந் தேதியளவில் உங்கள் 10வது, 9வது, 6வது, 8வது கொலங்களும், உங்கள் பீரங்கிப்படைக் கொலமும், உங்கள் 7வது கொலமும் யூதியெனைச் சுற்றியுள்ள பிரதேசத்தில் ஒன்று கூடுமென நாம் மதிப்பிடுகிறேம். தியென் சின், தாங்கூ, லூதை, தாங்ஷன் ஆகிய இடங்களில் எதிரியின் நிலைமை கிட்டத்தட்ட இப்போதுள்ளது போலிருந்தால், நீங் கள் டிசம்பர் 20ம், 25ந் தேதிகளுக்கிடைப்பட்ட ஒரு சில நாட்களில் மின்னல் வேகத்தோடு நகர்ந்து, மேற்கூறிய இடங் களிலுள்ள எதிரியைச் சுற்றிவளைக்க 6 கொலங்களை — 3வது (அது பெய்ப்பிங்ன் கிழக்கு நகர்ப்புறத்திலிருந்து கிழக்கு நோக்கிச் செல்லவேண்டும்), 6வது, 7வது, 8வது, 9வது, 10வது கொலங்களை — உபயோகிக்கவேண்டுமென நாம் பிரே

ரேபிக்கிறோம். இதற்கான முறை எதிரிப் படைகளுக்கிடை யேயுள்ள தொடர்புகளைத் துண்டிக்க வூச்சிஙைச் சுற்றி — லாங்ஃபாங், ஹோசிவூ, யாங்சுன் ஆகியவற்றில் — 2 கொலங் களை நிறுத்தி வைப்பதும், தியென்சின், தாங்கூ, லூதை, தாங் ஷன், குயியெ ஆகிய எதிரி இடங்களுக்கிடையில் 5 கொலங் களை ஆப்புப் போல் உபயோகிப்பதுமாகும். இக்கொலங்கள னைத்தும் எதிரியைத் தப்பிச் செல்ல முடியாதபடி செய்ய, இரு திசைத் தடுப்பு நிலையங்களை அமைக்கவேண்டும். அதன் பின் அவை இளைப்பாறித் தமது துருப்புக்களை ஸ்திரப்படுத்தி, களைப்பு நீங்கிய பின், சில சிறிய எதிரிக் கும்பல்களைத் தாக்கித் துடைத்தொழிக்கவேண்டும். இதற்கிடையில் 4வது கொலம் பெய்ப்பிங்கிற்கு வடமேற்கிலிருந்து பெய்ப்பிங்கிற்குக் கிழக்கே நகரவேண்டும். 4வது கொலம் நகர ஆரம்பிக்குமுன் யாங் தெ-சி, லோ ஜெய்-சிங், கெங் பியௌ ஆகியோர் தலைமை யிலான வட சீனுவிலுள்ள சேனை ஸின்பாஓஆனிலுள்ள எதிரி யைத் துடைத்தொழிக்கவேண்டும். கிழக்கில் நிலைமைகளுக் கேற்ப, முதலில் தாங்கூவிலுள்ள எதிரியைத் துடைத்தொ ழித்து, அந்தக் கடற்துறையைக் கட்டுப்படுத்துவதற்கான சகல முயற்சிகளும் செய்யப்படவேண்டும். தாங்கூ (மிக முக்கியமா னது), ஸின்பாஓஆன் ஆகிய நிலையங்களிரண்டும் கைப்பற்றப் பட்டதும் முழுச் சதுரங்கப் பலகையிலும் முன்முயற்சி உங் களிடமே இருக்கும். மேற்கூறிய படைவகுப்புகள் உண்மையில் சாங்சியாகோ, ஸின்பாஓஆன், நான்கோ, பெய்ப்பிங், ஹுவய் ஜோ, ஷுன்யி, தொங்ஸியென், வான்பிங் (சுவொஸியெனும் லியாங்சியாங்கும் எம் படைகளால் கைப்பற்றப்பட்டுவிட்டன), லெஃபாங்தை, தியென்சின், தாங்கூ, லூதை, தாங்ஷன், கைப்

பிங் ஆகியவற்றிலுள்ள எதிரியை முற்றுமுழுதாய்ச் சுற்றிவளைப்பதை உள்ளடக்குகின்றன.

6. இந்த முறை பொதுவாக நீங்கள் ஈஸியென், ஜின்சௌ, ஜின்சி, சிங்செங், சுய்சுங், ஷன்ஹய்குவான், லுவான்ஸியென் ஆகியவற்றுக்கூடான மார்க்க நீளம் போரிட்ட போது உபயோகித்த அதே முறையே.[3]

7. இன்று முதல் ஆரம்பமாகும் இரண்டு வாரங்களின் (டிசம்பர் 11-25) அடிப்படைக் கோட்பாடு எமது படை வகுப்புகளைப் பூரணமாக்கி, அதன் பின் எதிரிப்படைகளை ஒன்றொன்றாய் அழித்தொழிப்பதற்காகத் தாக்காது சுற்றிவளைப்பதும் (சாங்சியாகோ, ஸின்பாஓஆன் ஆகியவற்றைப் பொறுத்து), சில சமயங்களில் சுற்றிவளைக்காது துண்டிப்பதும் (பெய்ப்பிங், தியென்சின், தொங்சௌ ஆகியவற்றைப் பொறுத்து, யுத்ததந்திரச் சுற்றிவளைப்பொன்றை மட்டும் ஏற்படுத்தி எதிரிப் படைகளுக்கிடைத் தொடர்புகளைத் துண்டிப்பதேயன்றி ஒரு தந்திரோபாயச் சுற்றிவளைப்பை ஏற்படுத்தக் கூடாது) ஆகும். குறிப்பாக, நீங்கள் சாங்சியாகோ, ஸின்பாஓஆன், நான்கோ ஆகியவற்றிலுள்ள எதிரிப்படைகளனைத்தையும் துடைத்தொழிக்கக்கூடாது; காரணம், இது நான்கோவிற்குக் கிழக்கிலுள்ள எதிரியை விரைந்து தப்பியோடும் முடிவொன்றை எடுக்க நிர்ப்பந்திக்கும். தயவு செய்து இந்த அம்சத்தை நீங்கள் கட்டாயம் நன்கு புரிந்துகொள்ளுங்கள்.

8. சியாங் கை-ஷேக் பெய்ப்பிங்-தியென்சின் பிரதேசத்திலுள்ள தன் துருப்புக்களைத் தெற்குக் கடல் மார்க்கமாய் அனுப்ப விரைந்து தீர்மானிக்காமலிருப்பதற்காக நாம் வியூ போ-செங், தெங் ஸியௌ-பிங், சென் யீ, ஸூ யூ ஆகியோருக்கு அவர்கள் ஹூவாங் வெய்யின் சேனையைத் துடைத்

தொழித்த பின், டூ யூ-மிங் வழிநடத்தும் சியூ சிங்-சுவான், லீ மீ, சுன் யுவான்-லியாங் ஆகியோரின் சேனைகளில் மிச்சத்தை (ஏற்கெனவே சுமார் பாதி அழித்தொழிக்கப்பட்டுவிட்டது) விட்டு வைத்து, இரண்டு வாரங்களுக்கு அவற்றை இறுதியாக நிர்மூலமாக்குவதற்கான படைவகுப்புக்களைச் செய்யாதிருக்கும்படி உத்தரவிடப்போகிறோம்.

9. எதிரி சிங்தௌ நோக்கித் தப்பியோடுவதைத் தடுக்க நாம் ஷன்துங்கிலுள்ள எமது துருப்புக்களுக்கு ஜினனுக்கருகிலுள்ள மஞ்சள் நதியின் ஒரு பகுதியைக் கட்டுப்படுத்தவும், சிங்தௌ-ஜினன் புகையிரத மார்க்க நீளம் தயாரிப்புகளைச் செய்யவும் குறிப்பிட்ட சில படைகளைக் குவிக்குமாறு கட்டளையிடப் போகிறோம்.

10. எதிரி ஷிசௌ, செங்சௌ, சீஆன், சுய்யுவான் ஆகிய இடங்களுக்குத் தப்பியோடுவான் என்பதற்குச் சாத்தியப்பாடு இல்லை அல்லது சிறிதளவு சாத்தியப்பாடுதானுண்டு.

11. பிரதான அல்லது ஒரே ஒரு கவலை என்னவென்றால் எதிரி கடல் மார்க்கமாய் ஓடிவிடக்கூடும் என்பதே. ஆகவே வரும் இரண்டு வாரங்களில் பொதுவான முறை தாக்குதலின்றிச் சுற்றிவளைப்பது, அல்லது சுற்றிவளையாது துண்டிப்பதாக இருக்கவேண்டும்.

12. இத்திட்டத்தை எதிரி எதிர்பார்க்கவே முடியாது; நீங்கள் உங்கள் இறுதிப் படைவகுப்புகளைப் பூர்த்தி செய்யுமுன் இதை எதிரி கண்டுபிடிப்பதும் மிகவும் கஷ்டம். தற்போது எதிரி நீங்கள் பெய்ப்பிங்கைத் தாக்குவீர்கள் எனப் பெரும்பாலும் கணக்குப் போடுகிறான்.

13. எதிரி வெறும் நாஞெலியால் திகிலடையும் பறவை போன்று இருக்கும் சமயத்திலுங்கூட எப்போதும் எமது படை

யின் முன்முயற்சியைக் குறைத்து மதிப்பிட்டுத் தன் பலத்தைக் கூட்டி மதிப்பிடுகிறான். பெய்ப்பிங்கிலும் தியென்சினிலும் உள்ள எதிரி நீங்கள் மேற்கூறிய படைவகுப்புகளை டிசம்பர் 25ந் தேதியளவில் முடித்துவிட முடியும் என ஒரு போதும் எதிர்பாரான்.

14. இந்தப் படைவகுப்புகளை டிசம்பர் 25ந் தேதியளவில் பூர்த்தி செய்ய நீங்கள் வரும் இரண்டு வாரங்களில் களைப்பைப் பொருட்படுத்தாமல் இருக்கவும் எண்ணிக்கை குறைவதால் பயப்படாதிருக்கவும், குளிருக்கும் பட்டினிக்கும் அஞ்சாதிருக்கவும் உங்கள் துருப்புக்களுக்கு உற்சாகமூட்டவேண்டும். இப் படைவகுப்புகள் முடிந்த பின்னர், அவை இளைப்பாறி, ஸ்திரப்பட்டு, தாக்குவதில் தம் போதிய நேரத்தை எடுத்துச் செயல்பட முடியும்.

15. தாக்குதல்களில் வரிசைக் கிரமம் பொதுவாகப் பின்வருமாறு இருக்கும்: முதலில், தாங்கூ-ஹூதை பகுதி; இரண்டாவதாக, ஸின்பாஒஆன்; மூன்றாவதாக, தாங்ஷன் பகுதி; நான்காவதாக, தியென்சின், சாங்சியாகோவின் இரு பகுதிகள்; கடைசியாக, பெய்ப்பிங் பகுதி.

16. இத்திட்டம் பற்றி உங்கள் கருத்து என்ன? இதன் குறைபாடுகள் யாவை? இதை நிறைவேற்றுவதில் ஏதாவது கஷ்டங்களுண்டா? இவையனைத்தையும் கவனத்திலெடுத்துப் பதிற் தந்தி அடியுங்கள்.

## குறிப்புகள்

1. பெய்ப்பிங்-தியென்சின் போரியக்கம் வடகிழக்குக் களச்சேனையாலும் வட சீனாவிலுள்ள இரு சேனைகளாலும் லின் பியௌ, லோ ஜொங்-ஹுவான், நியெ ஜொங்-சென் முதலிய தோழர்களின் ஆணையில் நடத்தப்பட்டது. அது

# புரட்சியை இறுதிவரை நடத்துக*

(1948, டிசம்பர் 30)

மகத்தான விடுதலை யுத்தத்தில் சீன மக்கள் இறுதி வெற்றி பெறுவார்கள். இதைப் பற்றி இனிமேலும் எமது எதிரிகூடச் சந்தேகம் கொள்ளமாட்டான்.

யுத்தம் வளைவு சுழிவான பாதைக்கூடாகச் சென்றுள்ளது. கோமிந்தாங் பிற்போக்கு அரசாங்கம் எதிர்ப்புரட்சி யுத்தத் தைக் கட்டவிழ்த்துவிட்டபோது, அதன் ராணுவத்தின் தொகை மக்கள் விடுதலைச் சேனையைப் போல சுமார் மூன் றரை மடங்கு; அதன் படையின் போர்க் கருவி, ஆட்பல பொருளாயத மூலாதாரங்கள் ஆகியவை மக்கள் விடுதலைச் சேனையினதைவிடப் பெரிதும் மேன்மையானவையாக இருந் தன; கோமிந்தாங் பிற்போக்கு அரசாங்கத்திடம் நவீன தொழிற்துறைகளும் நவீன போக்குவரத்துச் சாதனங்களும் இருந்தன, இவை மக்கள் விடுதலைச் சேனையிடம் குறைவு; அது அமெரிக்க ஏகாதிபத்தியத்திடமிருந்து ராணுவ, பொருளா தார ரீதியிலான, ஏராளமான உதவிகள் பெற்றிருந்தது; மேலும், அது நீண்ட காலமாகத் தயாரிப்புகளைச் செய்திருந்

*இது தோழர் மாஓ சேதுங் அவர்கள் சின்ஹுவாச் செய்தி நிறுவனத்தின் பேரில் எழுதிய 1949ம் ஆண்டுப் புத்தாண்டுச் செய்தி.

தது. இவற்றின் காரணமாகவே, யுத்தத்தின் முதலாவது ஆண்டில் (1946ம் ஆண்டு ஜூலை முதல் 1947ம் ஆண்டு ஜூன் வரை) கோமிந்தாங்கின் தாக்குதலும் மக்கள் விடுதலைச் சேனையின் தற்காப்பும் என்ற நிலைமை தோன்றியது. 1946ம் ஆண்டில் வடகிழக்கில் ஷென்யாங், சுபிங், சாங்சுன், கிலின், அன்துங்[1] முதலிய நகரங்களையும், லியௌனிங், லியௌபெய், அன்துங் ஆகிய மாகாணங்க[2]ளின் பெரும் பகுதியையும், மஞ்சள் நதிக்குத் தெற்கில் ஹூவய்யின், ஹொசே முதலிய நகரங்களையும், ஹூபெய்-ஹோனுன்-அன்ஹூய், கியாங்ஸூ- அன்ஹூய், ஹோனுன்-அன்ஹூய்-கியாங்ஸூ, தென்மேற்கு ஷன்துங் ஆகிய விடுதலைப் பிரதேசங்களின் பெரும் பகுதியையும், பெருஞ்சுவரிற்கு வடக்கில் செங்தே, சினிங், சாங்சியாகோ முதலிய நகரங்களையும், ஜெஹோ, சுய்யுவான்[3], சஹார்[4] ஆகிய மாகாணங்களின் பெரும் பகுதியையும் கோமிந்தாங் கைபற்றியது. கோமிந்தாங் வெற்றிவீரன்போல மிரட்டி அடித்து தற்பெருமை பேசி இறுமாந்து திரிந்தது. பிரதேசத்தைப் பாதுகாப்பதைப் பிரதான நோக்கமாகக் கொள்ளாது கோமிந்தாங்கின் வினைத்திறனுடைய பலத்தை அழிப்பதையே பிரதான நோக்கமாகக் கொள்ளுவதென்ற சரியான யுத்ததந்திரத்தை மக்கள் விடுதலைச் சேனை பின்பற்றியது. ஒவ்வொரு மாதத்திலும் கோமிந்தாங்கின் கிரமமான படையில் ஏறக்குறைய சராசரி எட்டு பிறிகேடுகளை (தற்போதைய எட்டு டிவிஷன்களுக்குச் சமம்) நிர்மூலமாக்கியது. இதன் விளைவாக, கோமிந்தாங் தனது பன்முகத் தாக்குதலுக்கான திட்டத்தைக் கைவிட்டு, 1947ம் ஆண்டின் முற்பாதியில் அதன் தாக்குதலின் பிரதான இலக்கைத் தென் போர்முனையின் இருபுறங்களில், அதாவது ஷன்துங்கிலும் வட ஷென்சியிலும் கட்டுப்படுத்த நிர்ப்பந்திக்கப்பட்

டது. இரண்டாவது ஆண்டில் (1947ம் ஆண்டு ஜூலை முதல் 1948ம் ஆண்டு ஜூன் வரை) யுத்தத்தில் ஒரு அடிப்படை மாற்றம் ஏற்பட்டது. பெருந்தொகையான கோமிந்தாங் கிரமமான படைகளைத் துடைத்தொழித்துள்ள மக்கள் விடுதலைச் சேனை தென் போர்முனையிலும் வட போர்முனையிலும் தற்காப்பிலிருந்து தாக்குதலுக்குச் செல்ல, கோமிந்தாங் துருப்புக்கள் தாக்குதலை விட்டுத் தற்காப்பை மேற்கொள்ள வேண்டியிருந்தது. மக்கள் விடுதலைச் சேனை வடகிழக்குச் சீனு, ஷன்துங், வடஷென்சி ஆகிய பிரதேசங்களில் இழந்த இடங்களிற் பெரும் பகுதியைத் திரும்பக் கைப்பற்றியது மட்டுமல்லாமல், போர்முனையை யாங்சி நதி, வெய்ஷுய் நதி ஆகியவற்றிற்கு வடக்கிலுள்ள கோமிந்தாங் ஆட்சிப் பிரதேசங்களுக்கு விஸ்தரித்துமுள்ளது. அதே சமயத்தில் ஷுச்சியாச்சுவாங், யுங்செங், சுபிங், லோயாங், யீச்சுவான், பாஓச்சி, வெய்ஸியென், லின்ஃபென், கைஃபுங் ஆகிய நகரங்களைத் தாக்கிக் கைப்பற்றிய போர்களில் நன்கு அரண்செய்யப்பட்ட நிலையங்களைத் தாக்கும் யுத்ததந்திரோபாயங்க[5]ளையும் மக்கள் விடுதலைச் சேனை கிரகித்துக்கொண்டது. மக்கள் விடுதலைச் சேனை தன்னுடைய பீரங்கிப் படையையும் எஞ்சினியர் படையையும் அமைத்தது. மக்கள் விடுதலைச் சேனையிடம் விமானங்களும் டாங்கிகளுமில்லை என்பதை மறக்காதீர்கள், ஆனுல் மக்கள் விடுதலைச் சேனை கோமிந்தாங் ராணுவத்தின் பீரங்கிப் படையையும் எஞ்சினியர் படையையும் விட மேன்மையான பீரங்கிப் படையையும் எஞ்சினியர் படையையும் உருவாக்கியதும், விமானங்கள், டாங்கிகள் உட்பட கோமிந்தாங்கின் தற்காப்பு அமைப்பு ஒப்பீட்டு வகையில் மிக அற்பமாகவே தோன்றியது. மக்கள் விடுதலைச் சேனை நடமாட்ட யுத்தத்தை மட்டுமல்ல, ஸ்தான

யுத்தத்தையும் நடத்த முடியுமாயிருந்தது. யுத்தத்தின் மூன்ருவது ஆண்டின் முற்பாதியில் (1948ம் ஆண்டு ஜூலை முதல் டிசம்பர் வரை) இன்னெரு அடிப்படை மாற்றம் ஏற்பட்டது. எண்ணிக்கையில் நெடுங்காலமாகத் தாழ்ந்ததாகவிருந்த மக்கள் விடுதலைச் சேனை இப்பொழுது மேலோங்கியுள்ளது. அது கோமிந்தாங்கின் நன்கு அரண்செய்யப்பட்ட நகரங்களைத் தாக்கிக் கைப்பற்றக்கூடியதாக விளங்கியது மாத்திரமல்ல, ஒரே முறையில் ஒரு லட்சம் அல்லது பல லட்சம் பேரைக் கொண்ட கோமிந்தாங்கின் பலமிக்க படைப் பிரிவுகளைச் சுற்றிவளைத்து நிர்மூலமாக்கக் கூடியதாகவும் ஏற்கனவே விளங்கியது. மக்கள் விடுதலைச் சேனை கோமிந்தாங்கின் படையைத் துடைத்தொழிக்கும் வேகம் பெரிதும் அதிகரித்துள்ளது. எம்மாற் துடைத்தொழிக்கப்பட்ட பட்டாலியன் மட்டத்திலும் அதற்கு மேலும் உள்ள கோமிந்தாங் கிரமமான படைப்பிரிவுகளின் எண்ணிக்கை பற்றிய புள்ளிவிவரங்களை (கிளர்ச்சி செய்து நம் பக்கத்துக்கு வந்த எதிரிப் படைகள் உட்பட) எடுத்துப்பார்ப்போம்: முதலாம் ஆண்டில், 97 பிறிகேடுகள், இவற்றில் 46 பிறிகேடுகள் முற்ருகத் துடைத்தொழிக்கப்பட்டன; இரண்டாவது ஆண்டில், 94 பிறிகேடுகள், இவற்றில் 50 பிறிகேடுகள் முற்ருகத் துடைத்தொழிக்கப்பட்டன; மூன்ரும் ஆண்டின் முற்பாதியில், பூர்த்தியாகாத புள்ளிவிவரங்களின் பிரகாரம், முற்ருகத் துடைத்தொழிக்கப்பட்ட 111 டிவிஷன்கள் உட்பட, 147 டிவிஷன்கள் துடைத்தொழிக்கப்பட்டன.[6] இந்த அரை ஆண்டில் முற்ருகத் துடைத்தொழிக்கப்பட்ட எதிரிப் படையின் டிவிஷன்களின் தொகை கடந்த இரண்டு ஆண்டுகளில் முற்ருகத் துடைத்தொழிக்கப்பட்ட எதிரிப் படையின் டிவிஷன்களின் மொத்த எண்ணிக்கையைவிட 15 கூடுதலாகும். முழுமையாகப் பார்ப்பின்,

எதிரியின் போர்முனை ஏற்கெனவே பூரணமாக நொறுக்கப்பட்டுள்ளது: வட கிழக்கிலுள்ள எதிரித் துருப்புக்கள் அனைத்தும் துடைத்தொழிக்கப்பட்டுவிட்டன; வட சீனுவிலுள்ள எதிரித் துருப்புக்கள் கூடிய சீக்கிரத்தில் பூரணமாகத் துடைத்தொழிக்கப்படும்; கிழக்குச் சீனுவிலும் மத்திய சமவெளியிலும் மிகச் சில எதிரிப் படைகள் மட்டும் மிஞ்சியுள்ளன. கோமிந்தாங்கின் பிரதான படைகள் யாங்சி நதிக்கு வடக்கில் ஒழிக்கப்பட்டமை, மக்கள் விடுதலைச் சேனை எதிர்காலத்தில் யாங்சி நதியைத் தாண்டி, தெற்கு நோக்கி முன்னேறி, முழுச் சீனுவையும் விடுதலை செய்வதைப் பெரிதும் எளிதாக்கும். ராணுவ முன்னணியில் வெற்றி பெறும் அதே வேளையில், சீன மக்கள் அரசியல், பொருளாதார முன்னணிகளிலும் மகத்தான வெற்றிகளை ஈட்டியுள்ளார்கள். ஆகவே சீன மக்கள் விடுதலை யுத்தத்தின் தேசந் தழுவிய வெற்றியை ஒட்டி, ஏகாதிபத்தியப் பத்திரிகைகள் அனைத்தும் உட்பட அகில உலகப் பொதுஜன அபிப்பிராயம் இப்பொழுது கருத்து வேறுபாடற்று இருக்கின்றது.

எதிரி தானுகவே அழியமாட்டான். சீனப் பிற்போக்குவாதிகளோ அல்லது சீனுவிலுள்ள அமெரிக்க ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புச் சக்திகளோ கூட வரலாற்று அரங்கிலிருந்து சுயமாக இறங்கமாட்டார்கள். ராணுவப் போராட்டமுறையை மட்டும் உபயோகித்துச் சீன மக்கள் விடுதலை யுத்தத்தின் தேசந் தழுவிய வெற்றியை இனிமேலும் தடுத்து நிறுத்தமுடியாது என்பதை உணர்ந்ததாற்தான் அவர்கள் நாளுக்கு நாள் அரசியற் போராட்ட முறையை உபயோகிப்பதிற் கவனஞ்செலுத்திவருகிருர்கள். இப்பொழுது சீனப் பிற்போக்குவாதிகளும் அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களும், ஒருபுறம், இன்று நிலவுகின்ற கோமிந்தாங் அரசாங்கத்தின் மூலம் ''சமாதான'' சூழ்ச்சியை

நடத்துகிறார்கள்; மறுபுறம், அவர்கள் தங்களுடனும் புரட்சி முகாமுடனும் தொடர்புடைய சில நபரை உபயோகிக்கச் சூழ்ச்சிசெய்து, அவர்களைத் தந்திரமாக வேலை செய்து, புரட்சி முகாமிற்குள் ஊடுருவி, அதற்குள் கூறப்படும் எதிர்க்கோஷ்டி ஒன்றை உருவாக்கும் படி தூண்டவும் ஏவவும் செய்கிறார்கள், இதன் நோக்கம் பிற்போக்குச் சக்திகளைப் பாதுகாத்து, புரட்சிச் சக்திகளுக்குக் குழிபறிப்பதாகும். நம்பகமான தகவல்களின் பிரகாரம், அமெரிக்க அரசாங்கம் இப்படிப்பட்ட சூழ்ச்சியைத் திட்டமிட்டுள்ளதோடு அதைச் சீனுவில் அமுல்நடத்தவும் தொடங்கியுள்ளது. அமெரிக்க அரசாங்கம் கோமிந்தாங்கின் எதிர்ப்புரட்சி யுத்தத்தை ஆதரிப்பதுடன் மட்டும் நிற்பது என்ற தன் கொள்கையை இருவகைப் போராட்டக் கொள்கையாக மாற்றியுள்ளது. முதலாவது வகை, யாங்சி நதிக்குத் தெற்கிலும் தொலைதூர எல்லை மாகாணங்களிலும் மக்கள் விடுதலைச் சேனையைத் தொடர்ந்து எதிர்த்துப் போரிடக் கோமிந்தாங் படையின் மிச்சசொச்சங்கள், கூறப்படும் ஸ்தலப் படைகள் ஆகியவற்றை ஸ்தாபிப்பது; இரண்டாவது வகை, புரட்சியை இன்று இருக்கும் கட்டத்திலேயே தடுத்து நிறுத்த அல்லது அது முன்னேறினுல் அதைக் கட்டுப்படுத்தி, ஏகாதிபத்தியவாதிகளினதும் அவர்களுடைய வேட்டைநாய்களினதும் நலன்களை அளவுக்கு மீறி ஊறுபடுத்தாமல் தடுப்பதற்கு இயன்ற மட்டும் பாடுபடப் புரட்சி முகாமுக்குள் எதிர்க்கோஷ்டி ஒன்றை ஸ்தாபிப்பது. பிரித்தானிய, பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகள் அமெரிக்காவின் இக்கொள்கையை ஆதரிக்கிறவர்கள். இப்பொழுது பலர் இந்த நிலைமையை இன்னும் தெளிவாகப் பார்க்கவில்லை, இருப்பினும் அவர்கள் அதைத் தெளிவாகப் பார்ப்பதற்குப் பெரும்பாலும் அதிக நாளாகாது.

இப்பொழுது சீன மக்களையும், பல்வேறு ஜனநாயகக் கட்சிகளையும், எல்லா மக்கள் ஸ்தாபனங்களையும் எதிர்நோக்கும் பிரச்சினை என்னவென்றால், புரட்சியை இறுதிவரை நடத்துவதா இடைவழியிற் கைவிடுவதா என்பதாகும். புரட்சியை இறுதிவரை நடத்தவேண்டுமானால், புரட்சிகர முறையை உபயோகித்து, பிற்போக்குச் சக்திகள் அனைத்தையும் உறுதியாகவும், முற்றாகவும், துப்புரவாகவும், பூரணமாகவும் ஒழித்துக் கட்டி, ஏகாதிபத்தியம், நிலப்பிரபுத்துவம், அதிகார முதலாளித்துவம் ஆகியவற்றைத் தோற்கடிப்பதில் அசையாமல் ஊன்றி நின்று, தேசம் பூராவும் கோமிந்தாங்கின் பிற்போக்கு ஆட்சியைத் தூக்கியெறிந்து, பாட்டாளி வர்க்கத்தாற் தலைமைதாங்கப்பட்ட, தொழிலாளி-விவசாயிக் கூட்டணியைப் பிரதான உறுப்பாகக் கொண்ட, மக்கள் ஜனநாயக சர்வாதிகாரமான குடியரசைக் கட்டியமைக்க வேண்டும். இப்படிச் செய்தால், சீன தேசம் ஒரு அரைக்காலனித்துவ நாட்டிலிருந்து உண்மையான சுதந்திர நாடாக மாறி ஒடுக்குமுறையாளனைப் பூரணமாகத் தூக்கியெறியும்; சீன மக்கள் தம்மீதான நிலப்பிரபுத்துவ அடக்குமுறை அதிகார மூலதன (அதாவது சீனாவின் ஏகபோக மூலதன) அடக்குமுறை இரண்டையும் முற்றுமுழுதாகத் தூக்கியெறிந்து பூரண விடுதலை பெறுவர்; இவ்வாறு, ஐக்கியத்தையும் ஜனநாயகத்தையும் அடிப்படையாகக் கொண்ட சமாதான நிலைமையும், சீனா ஒரு விவசாய நாட்டிலிருந்து தொழிற்துறை நாடாக மாறுவதற்கான பூர்வாங்க நிபந்தனைகளும், சீனா மனிதனை மனிதன் சுரண்டும் சமுதாயத்திலிருந்து ஒரு சோஷலிஸச் சமுதாயமாக வளர்வதற்கான சாத்தியப்பாடும் ஏற்படும். புரட்சியை இடைவழியில் கைவிட்டால், அதன் அர்த்தம் மக்களின் விருப்பத்துக்கு விரோத

மாகச் செல்வது, அந்நிய ஆக்கிரமிப்பாளர்களினதும், சீனப் பிற்போக்குவாதிகளினதும் விருப்பத்திற்குத் தலைவணங்குவது, ஒருநாள் துடித்தெழுந்து திடீரென்று புரட்சியைத் திருகிக் கொன்று நாடு முழுவதையும் மீண்டும் இருளில் மூழ்கடிக்கக் கோமிந்தாங்குக்கு அதன் புண்களை ஆற்ற வாய்ப்புக் கொடுப்பது ஆகும். இப்பொழுது பிரச்சினை எவ்வளவு தெட்டத்தெளிவா கவும் கூர்மையாகவும் இருக்கின்றது. இரண்டு பாதைகளில் எதைத் தேர்ந்தெடுப்பது? சீனுவிலுள்ள ஒவ்வொரு ஜனநா யகக் கட்சியும் ஒவ்வொரு மக்கள் ஸ்தாபனமும் இப்பிரச்சினை யைச் சிந்தித்து, தத்தம் பாதையைத் தேர்ந்தெடுக்கவும் தமது நிலைப்பாட்டைத் தெளிவாக்கிக் கொள்ளவும் வேண்டும். சீனு விலுள்ள பல்வேறு ஜனநாயகக் கட்சிகளும், எல்லா மக்கள் ஸ்தாபனங்களும் இடைவழியிற் பிரிந்துசெல்லாமல் மனப்பூர் வமாக ஒத்துழைக்க முடியுமா இல்லையா என்பது, இந்தப் பிரச்சினை சம்பந்தப்பட்ட அவர்களது அபிப்பிராயங்கள் ஒரு முகமானதா இல்லையா? சீன மக்களின் பொது எதிரிகளைத் தூக்கியெறிவதற்காக ஒருமைப்பட்ட நடவடிக்கைகளை எடுக்க முடியுமா இல்லையா என்பதைப் பொறுத்துள்ளது. இங்கு தேவையானது ஒருமைப்பாடும் ஒத்துழைப்பும் அன்றி, எவ் விதமான ''எதிர்க்கோஷ்டி''யையும் ஸ்தாபிப்பதோ எவ்வித மான ''மத்திய மார்க்க''த்தையும் மேற்கொள்வதோ அல்ல.

1927ம் ஆண்டு ஏப்ரல் 12ந் தேதிய எதிர்ப்புரட்சி ஆட்சிக் கவிழ்ப்புமுதல் இன்று வரையான இருபது ஆண்டுகளுக்கு மே லான நீண்ட காலத்தில், சியாங் கை-ஷேக்கையும் அவனைப் போன்றவர்களையும் தலைமையாகக்கொண்ட சீனப் பிற்போக் குவாதிகள், தாம் மக்களைக் கூசாமல் வதைசெய்யும் மனித ரத்தந்தோய்ந்த கொலைக்காரக் கூட்டம் என்பதையும் தாம்

ஏகாதிபத்தியத்திற்கு அடிவருடுவதையும் தேசத் துரோகத்தையும் தொழிலாகக்கொண்ட ஒரு கூட்டம் என்பதையும் நிரூபிக்கவில்லையா? எல்லாரும் யோசித்துப் பாருங்கள்! 1936ம் ஆண்டு டிசம்பர் சீஆன் சம்பவம் முதலும், 1945ம் ஆண்டு அக்டோபர் சுங்கிங் பேச்சுவார்த்தைகள் முதலும், 1946ம் ஆண்டு ஜனவரி அரசியற் கலந்தாலோசனைக் கூட்டம் முதலும், உள்நாட்டுச் சமாதானத்தை ஏற்படுத்தும் நம்பிக்கையில் இந்தக் கொள்ளையர் கூட்டத்துடன் சீன மக்கள் எவ்வளவு பெருந்தன்மையுடன் நடந்துகொண்டார்கள். ஆனால் இந்த நல்லெண்ணங்கள் எல்லாம் அவர்களின் வர்க்கத்தன்மையை ஒரு கடுகளவு அல்லது ஒரு துளியளவேனும் மாற்றினவா? இந்தக் கொள்ளையரில் எவரும் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளிலிருந்து பிரிக்கப்படமுடியாதவர் என்பதை அவர்களின் சரித்திரம் காட்டுகின்றது. அவர்கள் அமெரிக்க ஏகாதிபத்தியத்தைச் சார்ந்து 47 கோடி 50 லட்சம் சகநாட்டவர்களையும் முன்னென்றும் கண்டிராத கொடூரமான பெரும் உள்நாட்டு யுத்தத்திற்குள்ளாக்கினார்கள். அவர்கள் அமெரிக்க ஏகாதிபத்தியத்தினால் கொடுக்கப்பட்ட குண்டுவீசும்விமானம், போர்விமானம், பீரங்கி, டாங்கி, ரொக்கெட் செலுத்தி, தானியங்கி றைபிள், கஸோலின் குண்டு, காஸ் ஏவாயுதங்கள் முதலிய மனிதனைக் கொலைச் செய்யும் ஆயுதங்களால் லட்சாதி லட்சம் ஆண்களையும், பெண்களையும், முதியோரையும், இளைஞரையும் வதைசெய்தார்கள். அத்தோடு அமெரிக்க ஏகாதிபத்தியம் இவர்களைச் சார்ந்து சீனாவின் பிரதேசம், கடல், ஆகாயம், உள்நாட்டு நீர்ப்போக்குவரத்து ஆகியவற்றின்மீதான உரிமையையும், விசேஷ வர்த்தக சலுகை, உள்நாட்டு, வெளிநாட்டு விவகாரங்களில் விசேஷ சலுகை ஆகியவற்றையும் ஏன் மக்களை அடித்

துக் கொல்வது, அவர்கள் மீது வாகனங்களைச் செலுத்துவது, பெண்களைக் கற்பழிப்பது ஆகிய குற்றங்கள் செய்த பின்னர் எவ்வித தண்டனையும் பெறுமல் இருக்கும் சலுகையையுங்கூட கொள்ளையடித்துள்ளது. இவ்வளவு நீண்டகாலமாக ரத்தம் சிந்தும் யுத்தத்தை நடத்த நிர்ப்பந்திக்கப்பட்ட சீன மக்கள் இந்தப் பாதகமிகுந்த எதிரிகளை முற்றுகத் துடைத்தொழிக்கா மலும் துரத்தியடியாமலும் அவர்கள்மீது இன்னும் நேசமும் தயவும் காட்டவேண்டுமா? சீனப் பிற்போக்குவாதிகளை முற் றுகத் துடைத்தொழித்து, அமெரிக்க ஏகாதிபத்திய ஆக்கிர மிப்புச் சக்தியைச் சீனவிலிருந்து துரத்தியடித்தாற்தான் சீன சுதந்திரம், ஜனநாயகம், சமாதானம் ஆகியவற்றைப் பெறு வது சாத்தியம். இந்த உண்மை இப்பொழுது போதியளவு தெளிவாக இல்லையா?

இங்கு கவனிக்கத்தக்கது யாதெனில், இப்பொழுது சீன மக்களின் எதிரிகள் திடீரென தீங்கற்றவர்போலவும் இரங்கத் தக்கவர்போலவும் காட்சியளிக்க இயன்ற மட்டும் முயற்சி செய் கின்றனர் (வாசகர்களே! அவர்கள் வருங்காலத்தில் மீண்டும் இரங்கத்தக்கவர் போல் காட்சியளிக்க முயல்வர் என்பதை மனதில் வைத்திருக்கவேண்டும்). சமீபத்தில் கோமிந்தாங் நிர்வாகசபைத் தலைவர் பதவிக்கு வந்துள்ள சுன் கோ கடந்த ஆண்டு ஜூன் மாதம், ''ராணுவரீதியில் இறுதிவரை போரா டினுல் கடைசியில் தீர்வு ஒன்று வரலாம்'' என்று தெரிவித்தான் அல்லவா? ஆனுல் இத்தடவை பதவிக்கு வந்ததும் ''கௌரவமான சமாதான''த்தைப் பற்றிப் பகட்டாகக் கதைத்து, ''முன்பு ஒரு காலம் அரசாங்கம் சமாதானத்துக்காக முயற் சிசெய்துவந்தது; ஆனுல் சமாதானம் நிறைவேற்றப்பட முடி யாததினுற் தான் அது போரிலீடுபட நிர்ப்பந்திக்கப்பட்டது;

போரிலீடுபடுவதற்கான இறுதி நோக்கம் இன்னும் சமாதானத்தைக் கொண்டு வருவதேயாகும்'' எனக் கூறினுன். சுன் கோவினது கூற்று ''அமெரிக்க அதிகார வட்டாரங்களிலும் கோமிந்தாங் சுதந்திரவாதிகள் மத்தியிலும் பரந்தளவிலான பாராட்டைப் பெறும்'' என்று டிசம்பர் 21ந் தேதி ஷாங்ஹாயிலிருந்து வெளிவந்த ஐக்கிய செய்தி நிறுவனச் செய்தி ஒன்று உடனடியாக ஜோசியம் கூறியது. அமெரிக்க அதிகார வட்டாரங்கள், இப்பொழுது சீனுவின் ''சமாதான''த்தில் ஆழ்ந்த அக்கறை செலுத்துவது மட்டுமல்ல, 1945ம் ஆண்டு டிசம்பரில் சோவியத் யூனியன், அமெரிக்கா, பிரித்தானியா ஆகிய மூன்று நாடுகளின் வெளிநாட்டு அமைச்சர்களின் மாஸ்கோ கூட்டம் முதல், அமெரிக்கா ''சீனுவின் உள்விவகாரங்களிற் தலையிடாமை என்ற கொள்கை''யைக் கடைப்பிடித்துவருகிறது என்றும் பல தடவை கூறிவந்துள்ளன. ''துரைமார் நாட்டி''லிருந்து வரும் பெருந்தகையோரை நாம் எப்படி நடத்தவேண்டும்? இங்கு புராதன கிரேக்கக் கதையை எடுத்துக்காட்டுவது பொருத்தமாகும்:''விவசாயி ஒருவன் குளிர்காலத்தில் ஒரு நாள் குளிரால் விறைத்துக் கிடந்த ஒரு பாம்பைக் கண்டான். இரக்கமடைந்த அவன் அதை எடுத்து மார்போடு அணைத்தான். அப்பாம்பு உஷ்ணத்தால் மீண்டும் உயிர்பெற்று, தன் இயற்கைக் குணம் திரும்பவரப்பெற்றுத் தன்னைக் காப்பாற்றியவரான விவசாயியைக் கடித்தது. இதனுல் அவ்விவசாயி மரணகாயம் பெற்றுன். அவன் இறக்குமுன், நான் ஒரு கெட்ட ஜந்துவுக்கு இரக்கம் காட்டியதனுல் பெறத்தக்க முடிவைப் பெற்றுக்கொண்டேன் என்று கூறினுன்.''[8] சீன மக்களும் இந்த விவசாயியைப்போல மரணமடைவார்கள் எனவும், சீனக் கம்யூனிஸ்ட் கட்சி, சீனுவின் புரட்சிகர ஜனநாயகவாதிகள் அனை

வரும் தம்மீது இரக்கம் காட்டுவர் எனவும் அயல்நாட்டிலும் சீனுவிலுமுள்ள நச்சுப் பாம்புகள் எதிர்பார்க்கின்றன. ஆனுல் சீன மக்களும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியும் சீனுவின் உண்மையான புரட்சிகர ஜனநாயகவாதிகளும் இந்த உழைப்பாளி இறக்கும்போது கூறிய வார்த்தைகளைக் கேட்டுள்ளதோடு அவற்றை ஞாபகத்திலும் வைத்திருப்பர். அத்துடன் சீனுவின் பெரும்பகுதியைச் சூழ்ந்து பிடிக்கும் பெரிய அல்லது சிறிய பாம்புகளோ, கறுப்பு அல்லது வெள்ளைப் பாம்புகளோ, நச்சுப்பற்களைக் காட்டிய வண்ணம் இருக்கின்ற அல்லது அழகிகளைப்போல வேடம் பூண்டுள்ள பாம்புகளோ குளிர்காலப் பயமுறுத்தலை உணர்ந்தாலும் அவை இன்னும் குளிரால் விறைக்கவில்லை.

சீன மக்கள் பாம்பைப்போன்ற கெட்டவர்கள் மீது ஒருபோதும் இரக்கங்காட்டமாட்டார்கள்; அத்துடன், இத்தகைய கெட்டவர்கள் மீது இரக்கங்காட்டவேண்டும், இல்லையென்ருல் அது தேசிய பாரம்பரியத்துக்கு விரோதமானதாகவும் மகிமையற்றதாகவும் இருக்கும் என்று ஏமாற்ருகக் கூறுபவர்கள் எவரும் சீன மக்களின் விசுவாசமான நண்பர்கள் அல்ல என்று அவர்கள் நேர்மையாகக் கருதுகிருர்கள். பாம்பைப் போன்ற கெட்டவர்கள்மீது ஏன் இரக்கங்காட்டவேண்டும்? இக்கெட்டவர்களுக்கு இரக்கங்காட்ட வேண்டும் என்று எந்தத் தொழிலாளி, எந்த விவசாயி, எந்தப் படைவீரன் கருதுகிருன்? அமெரிக்காவும் கோமிந்தாங்கும் முன்வைக்கும் ''சமாதான''த்தை ஏற்றுக்கொள்ளும்படி, அதாவது ஏகாதிபத்தியம், நிலப்பிரபுத்துவம், அதிகார முதலாளித்துவம் ஆகியவற்றின் மிச்சசொச்சங்கள் உலகில் இறந்தொழியாமல் இருப்பதற்காக அவற்றைக் கடவுளாக மதித்துப் பேணிக்காக்கும்படி

சீன மக்களுக்குப் புத்திமதி கூறுபவர்களான ''கோமிந்தாங் சுதந்திரவாதிகள்'' அல்லது கோமிந்தாஙைச் சாராத ''சுதந்திரவாதிகள்'' இருக்கின்றனர் என்பது உண்மை. ஆனல் அவர்கள் எவ்விதத்திலும் தொழிலாளரோ, விவசாயிகளோ, ராணுவத்தினரோ அல்ல; அவர்கள் தொழிலாளர், விவசாயிகள், ராணுவத்தினரின் நண்பர்களும் அல்ல.

சீன மக்களின் புரட்சிகர முகாம் விஸ்தரிக்கப்படவேண்டும் என்றும், தற்போதைய புரட்சிகர லட்சியத்திற் கலந்து கொள்ள விரும்புபவர்கள் அனைவரையும் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்றும் நாம் கருதுகிறோம். சீன மக்களின் புரட்சிகர லட்சியத்திற்குப் பிரதான படை மட்டுமல்ல, நேசப் படைகளும் தேவைப்படுகின்றது. ஏனென்றல் நேசப் படைகள் இல்லாத படையால் எதிரிகளை வெல்ல முடியாது. புரட்சிப் பேரெழுச்சியிலிருக்கின்ற சீன மக்களுக்கு நண்பர்கள் தேவை; அவர்கள் தமது நண்பர்களை ஞாபகத்தில் வைத்திருக்கவேண்டும், அவர்களை மறந்துவிடக்கூடாது. மக்களின் புரட்சிகர லட்சியத்துக்கு விசுவாசமான நண்பர்களின் தொகை, மக்களின் நலன்களை முயற்சியுடன் பாதுகாத்து எதிரிகளின் நலன்களைப் பாதுகாப்பதை எதிர்க்கும் நண்பர்களின் தொகை சீனவிலே கொஞ்சமல்ல என்பதிற் சந்தேகமில்லை; அவர்களில் ஒருவரும் மறக்கப்படவும் உதாசீனமாக நடத்தப்படவும் கூடாது என்பதிலும் சந்தேகமில்லை. சீன மக்களின் புரட்சிகர முகாம் ஸ்திரப்படுத்தப்படவேண்டும்; அதில் கெட்டவர்கள் நுழைவதையும் தவருன கருத்துக்கள் மேலோங்குவதையும் அனுமதிக்கக் கூடாது என்று மேலும் கருதுகிறோம். புரட்சிப் பேரெழுச்சியிலிருக்கின்ற சீன மக்கள் தமது நண்பர்களை மட்டுமல்ல, தமது எதிரிகளையும் எதிரியின் நண்பர்களையும் உறுதியாக ஞாப

கத்தில் வைத்திருக்கவேண்டும். மேற்கூறப்பட்டது போல், எதிரி தனது தளங்களைப் பாதுகாத்துப் பலப்படுத்துவதற்காக, ''சமாதான'' முறையையும் புரட்சிகர முகாமில் நுழையும் முறையையும் சூழ்ச்சியுடன் உபயோகித்துக்கொண்டிருப்பதால், அதற்கு மாறாக, எல்லாப் பிற்போக்குச் சக்திகளையும் பூரணமாக ஒழித்து அமெரிக்க ஆக்கிரமிப்புச் சக்திகளைச் சீனாவிலிருந்து வெளியேற்றவேண்டும் என்று மக்களின் அடிப்படை நலன்கள் கோருவதால், எதிரிகள் மீது இரக்கங்காட்டி, பிற்போக்குச் சக்திகளைப் பாதுகாக்கும்படி மக்களுக்கு புத்திமதி கூறுபவர்கள் எவரும் மக்களின் நண்பர்களல்ல, மாருக, அவர்கள் எதிரிகளின் நண்பர்களாவர்.

சீறியெழும் சீனப் புரட்சிப் பேரெழுச்சி பல்வேறு சமுதாய வர்க்கத் தட்டுகளையும் அதனதன் மனோபாவத்தைத் தீர்மானிக்க நிர்ப்பந்திக்கிறது. சீன வர்க்க சக்திகளின் பலாபலத்தில் புதிய மாற்றம் ஒன்று தோன்றிக்கொண்டிருக்கின்றது. பெருந்தொகையான மக்கள் கோமிந்தாங்கின் செல்வாக்கிலிருந்தும் கட்டுப்பாட்டிலிருந்தும் விலகி, புரட்சிகர முகாமுக்கு வருகின்றார்கள். சீனப் பிற்போக்குவாதிகள் தனிமைப்படுத்தப்பட்ட, எந்த ஆதரவுமில்லாத, நம்பிக்கையற்ற நிலைக்குள் முற்றாக விழுந்துள்ளார்கள். மக்கள் விடுதலை யுத்தம் இறுதி வெற்றியை நோக்கி விரையும் போது, புரட்சிகர மக்கள் அனைவரும் மக்களின் நண்பர்கள் அனைவரும் மேலும் ஸ்திரமாக ஐக்கியப்படுவர்; சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் அவர்கள் பிற்போக்குச் சக்திகளை நிர்மூலமாக்கி, புரட்சிகர சக்திகளை முற்றாக வளர்த்து, இறுதியில் முழுச் சீனாவிலும் ஒரு மக்கள் ஜனநாயகக் குடியரசை அமைத்து, ஐக்கியம், ஜனநாயகம் இவற்றின் அடிப்படையில் சமாதானத்தை நிறை

வேற்றவேண்டும் என்று உறுதியாகக் கோருகிருர்கள். இதற்கு மாருக, அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள், சீனப் பிற்போக்குவாதிகள், அவர்களுடைய நண்பர்கள் ஆகியோர் ஸ்திரமாக ஒன்றுசேரமுடியாது; அவர்களுக்கிடையில் முடிவற்ற பரஸ்பரச் சண்டை, பரஸ்பரத் தூஷிப்பு, பரஸ்பரக் குற்றச்சாட்டு, பரஸ்பரக் கைவிடுதல் ஆகியன ஏற்படும். ஆனுலும் ஒரு அம்சத்தில், அதாவது சகல முறைகளிலும் புரட்சிகர சக்திகளைச் சீர்குலைத்து, பிற்போக்குச் சக்திகளைப் பாதுகாக்கப் பாடுபடுவதில் அவர்கள் ஒத்துழைப்பார்கள். அவர்கள் சகல வழிகளையும், அதாவது பகிரங்கமான, ரகசியமான, நேரடியான, மறைமுகமான வழிகளை உபயோகிப்பர். எப்படியிருப்பினும், அவர்களுடைய ராணுவத் தாக்குதல்களைப்போல, அவர்களுடைய அரசியற் சூழ்ச்சிகளும் தோல்வியடையும் என்று நிச்சயித்துக் கூறமுடியும். போதுமான அனுபவத்தைக்கொண்ட சீன மக்களும் அவர்களுடைய பொதுத் தலைமைப் பகுதியான சீனக் கம்யூனிஸ்ட் கட்சியும் எதிரிகளின் ராணுவத் தாக்குதல்களை முறியடித்தது போல், எதிரிகளின் அரசியற் சூழ்ச்சிகளையும் முறியடித்து, மகத்தான மக்கள் விடுதலை யுத்தத்தை இறுதிவரை நடத்துவது நிச்சயம்.

1949ல், சீன மக்கள் விடுதலைச் சேனை யாங்சி நதிக்குத் தெற்கே முன்னேறி, 1948ம் ஆண்டைவிட மேலும் மகத்தான வெற்றிகளைப் பெறும்.

1949ல் பொருளாதார முன்னணியில் 1948ம் ஆண்டைவிட நாம் மேலும் மகத்தான சாதனைகளைச் சாதிப்போம். எமது விவசாய உற்பத்தியும் தொழில் உற்பத்தியும் முன்பைவிட ஒரு உயர்ந்த மட்டத்தை அடையும். ரயில்வே, நெடுஞ்சாலைப் போக்குவரத்து பூரணமாக மீட்கப்படும். மக்கள் விடுதலைச்

சேனையின் பிரதான பிரிவுகள் போர் நடவடிக்கையில் இன்னும் நிலவுகின்ற கொரில்லா யுத்தத்தின் குறிப்பிட்ட சில மிச்ச சொச்சங்களை இல்லாமற்செய்து மேலும் உயர்ந்த தரமுடைய கிரமமான படையாக மாறும்.

1949ல் பிற்போக்குவாதிகள் கலந்து கொள்ளாத, மக்கள் புரட்சியின் கடமைகளை நிறைவேற்றுவதைக் குறிக்கோளாகக் கொண்ட அரசியற் கலந்தாலோசனைக் கூட்டம் கூட்டப்படும்; சீன மக்கள் குடியரசின் ஸ்தாபிதம் பிரகடனம் செய்யப்படும்; குடியரசின் மத்திய அரசாங்கம் அமைக்கப்படும். இவ்வரசாங்கம் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியாற் தலைமை தாங்கப்பட்ட, பல்வேறு ஜனநாயகக் கட்சிகளினதும் மக்கள் ஸ்தாபனங்களினதும் தகுதியான பிரதிநிதிகள் கலந்துகொள்ளும் ஜனநாயகக் கூட்டு அரசாங்கமாகும்.

இவை எல்லாம் சீன மக்களும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியும் எல்லாச் சீன ஜனநாயகக் கட்சிகளும் மக்கள் ஸ்தாபனங்களும் 1949ல் முயற்சியுடன் நிறைவேற்ற வேண்டிய பிரதான ஸ்தூலமான கடமைகளாகும். நாம் எந்தக் கஷ்டத்துக்கும் அஞ்சாமல், ஒருவர்போல் ஐக்கியப்பட்டு, இக்கடமைகளை நிறைவேற்றுவோம்.

பல்லாயிரம் ஆண்டுகளாக நீடித்துவரும் நிலப்பிரபுத்துவ ஒடுக்குமுறையையும் நூறாண்டுகளாக நீடித்துவரும் ஏகாதிபத்திய ஒடுக்குமுறையையும் எமது போராட்டத்தில் என்றென்றைக்குமாகத் தூக்கியெறிவோம். 1949ம் ஆண்டு அதிமுக்கியமான ஓர் ஆண்டாகும். நமது முயற்சிகளை நாம் இரட்டிப்பாக்கவேண்டும்.

# குறிப்புகள்

1. அன்துங், இப்பொழுது தாந்துங் என்று அழைக்கப்படுகிறது. (மொழி பெயர்ப்பாளர் குறிப்பு)

2. 1945ல் ஜப்பான் சரணடைந்த பின், கோமிந்தாங் அரசாங்கம் முன்னைய வடகீழ் மாகாணங்கள் மூன்றையும் (லியெளனிங், கிலின், ஹெய்லுங்கியாங்) லியெளனிங், லியெளபெய், அன்துங், கிலின், ஹொகியாங், சுங்கியாங், ஹெய் லுங்கியாங், நென்கியாங், சிங்ஆன் ஆகிய ஒன்பது மாகாணங்களாகப் பிரித்தது. 1949ல் எமது வடகீழ் நிர்வாகக் கவுன்சில் வடகீழ் மாகாணங்கள் மூன்றையும் லியெளதுங், லியெளசி, கிலின், ஹெய்லுங்கியாங், சுங்கியாங் ஆகிய ஐந்து மாகாணங்களாக மாற்றியமைத்தது. அவை ஜெஹோலுடன் சேர்ந்து ஆறு வடகீழ் மாகாணங்கள் என்று பொதுவாக அழைக்கப்பட்டன. 1954ல் மத்திய மக்கள் அரசாங்கக் கவுன்சில் கிலின் மாகாணம் பழைய மாதிரியே இருக்க, லியெளதுங் மாகாணத்தையும் லியெளசி மாகாணத்தையும் லியெளனிங் மாகா ணமாகவும், சுங்கியாங் மாகாணத்தையும் ஹெய்லுங்கியாங் மாகாணத்தையும் ஹெய்லுங்கியாங் மாகாணமாகவும் மாற்றியமைத்தது. 1955ல் ஜெஹோ மாகாணம் இல்லாமற் செய்யப்பட்டது. அதன் ஆட்சியிலிருந்த பிரதேசங்கள் ஹோபெய், லியெளனிங் மாகாணங்களோடு இணைக்கப்பட்டன.

3. சுய்யுவான் முன்பு ஒரு மாகாணமாக இருந்தது. 1954ல் அது இல்லாமற் செய்யப்பட்டது. அதன் ஆட்சியிலிருந்த பிரதேசங்கள் உள்மங்கோலிய சுயாட் சிப் பிரதேசத்துடன் சேர்க்கப்பட்டன. (மொழிபெயர்ப்பாளர் குறிப்பு)

4. சஹார் முன்பு ஒரு மாகாணமாக இருந்தது. 1952ல் அது இல்லாமற் செய்யப்பட்டது. அதன் ஆட்சியிலிருந்த பிரதேசங்கள் ஹோபெய், ஷன்சி மாகாணங்களோடு இணைக்கப்பட்டன. (மொழிபெயர்ப்பாளர் குறிப்பு)

5. ஷ்ஃச்சியாச்சுவாங் 1947 நவம்பர் 12ந் தேதியும், யுன்செங் 1947 டிசம்பர் 28ந் தேதியும், சுபிங் 1948 மார்ச் 13ந் தேதியும், லோயாங் 1948 மார்ச் 14ந் தேதியும் (முதல் தடவை) ஏப்ரல் 5ந் தேதியும் (இரண்டாவது தடவை), யீச்சுவான் 1948 மார்ச் 3ந் தேதியும், பாஒச்சி 1948 ஏப்ரல் 26ந் தேதியும், வெய்ஸியென் 1948 ஏப்ரல் 27ந் தேதியும், லின்ஃபென் 1948 மே 17ந் தேதியும், கைஃபுங் 1948 ஜூன் 22ந் தேதியும் கைப்பற்றப்பட்டன. இந்த நகர்களில் சில கூட்டங்கூட்டமான கோட்டைகள் பலவற்றால் அரண்செய்யப்பட்டிருந்தன;

சில கூட்டங்கூட்டமான கோட்டைகள் பலவற்ருலும் உயரமான தடித்த நகர்ச்சுவர்களாலும் அரண்செய்யப்பட்டிருந்தன; அத்துடன் அவற்றைச் சுற்றி வரிசை வரிசையான அகழிகள், முட்கம்பி வேலிகள், முட்டுக்கட்டைகள் முதலிய துணைப் பாதுகாப்புச் சாதனங்களும் இருந்தன. அச்சமயத்தில் எமது படையிடம் விமானம் மட்டுமின்றி டாங்கியும் இல்லை; பீரங்கியும் இருக்கவில்லை, இருந்தாலும் குறைவாகத்தான் இருந்தன. அப்படியிருந்தாலும் மேற்கூறிய நகரங்களைக் கைப்பற்றிய போர்களில், எமது படை நன்கு அரண்செய்யப்பட்ட கோட்டைகளைக் கைப்பற்றும் ஒரு கோவைத் தந்திரோபாயங்களைக் கிரகித்துக்கொண்டது. இந்த தந்திரோபாயங்கள் வருமாறு: (1) தொடர்ந்து தகர்த்தல்—வெடிமருந்துகளால் எதிரியின் பல்வேறு பாதுகாப்புச் சாதனங்களையும் தொடர்ச்சியாகத் தகர்ப்பது; (2) சுரங்கப் போர்நடவடிக்கை—எதிரியின் கோட்டைகளை அல்லது நகர்ச்சுவர்களை நோக்கியும் அவற்றுக்குக் கீழும் ரகசியமாகச் சுரங்கங்களைத் தோண்டி, அவற்றின்கீழ் வெடிமருந்து வைத்து அவற்றைத் தகர்த்தெறிந்து, அதைத் தொடர்ந்து பலத்த திடீர்த் தாக்குதல் தொடுப்பது; (3) எதிரியின் அரண்களை நோக்கிச் செல்லும் அகழிகளைத் தோண்டுதல், அதாவது, எதிரியை நெருங்கிச் செல்லும் அகழிகளைத் தோண்டுதல் — எதிரிகளின் உறுதியான பாதுகாப்பு அரண்களை நோக்கி, அகழிகளைத் தோண்டி, எதிரிகளை மறைந்து அணுகி, திடீரெனத் தாக்குதல் தொடுப்பது; (4) வெடிமருந்துப் பொட்டலம் வீசுதல்—வீசிகள், அல்லது மார்டர்கள் ஆகியவற்றின் மூலம் வெடிமருந்துப் பொட்டலங்களை வீசி, எதிரிகளின் பாதுகாப்பு அரண்களைச் சீர்குலைத்தல்; (5) ''கூரிய கத்தித் தந்திரோபாயங்கள்'' —ராணுவ சக்திகளையும் சுடும் சக்திகளையும் ஒருமுனைப்படுத்தி எதிரிகள் மத்தியில் ஊடுருவிச் சென்று அவர்களின் சக்திகளைப் பிரித்துத் தாக்குதல்.

6. இங்கே பிறிகேடுகள் புனரமைக்கப்பட்ட பிறிகேடுகளைக் குறிக்கின்றன; ஆனுல் டிவிஷன்கள், புனரமைக்கப்பட்ட டிவிஷன்களை அல்லாது, புனரமைப்பின் முன்னிருந்த கோமிந்தாங் ராணுவத்தின் டிவிஷன்களைக் குறிக்கின்றன. அந்த டிவிஷன்கள் புனரமைக்கப்பட்ட பிறிகேடுகளுக்குச் சமமாயிருந்தன.

7. மக்கள் விடுதலை யுத்தத்தின் ஆரம்ப கட்டத்தில் சில ஜனநாயகப் பிரமுகர்கள் தாம் பெரிய நிலப்பிரபுக்கள் பெரும் பூர்ஷுவாக்களின் கோமிந்தாங் சர்வாதிகாரத்தையும், சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையிலான மக்கள் ஜனநாயக சர்வாதிகாரத்தையும் விட வேறுபட்ட கூறப்படும் மூன்ருவது பாதை ஒன்றைக் கொண்டுவர முடியுமெனக் கற்பனை செய்தனர். இந்த மூன்ருவது

பாதை உண்மையில் பிரித்தானிய, அமெரிக்கவகைப் பூர்ஷுவாவர்க்க சர்வா திகாரமாகவே இருந்தது.

8. ''ஈசாப்புக் கதைக''ளில் ''நன்மைக்குத் தீமை'' என்ற கதையைப் பார்க்கவும்.

# ராணுவத்தை ஒரு வேலைப்படையாக்குக*

(1949, பெப்ரவரி 8)

உங்கள் 4ந் தேதித் தந்தி கிடைத்தது. நீங்கள் உங்கள் பயிற்சியையும் ஸ்திரப்படுத்தலையும் துரிதப்படுத்துவதும், குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு மாதம் முன்னதாக நகரத் தயாரிப்புச் செய்வது[1]ம் மிக நல்லது. தயவு செய்து இந்நெறியில் முன்னேறுங்கள்; தளர்ச்சியடையாதீர்கள். இருந்தாலும், உண்மையில் பயிற்சியும் ஸ்திரப்படுத்தலும் மார்ச்சில் தொடர்ந்து நடக்கவேண்டும்; கொள்கையைப் படிப்பது வலியுறுத்தப்பட்டு, பெரிய நகரங்களைக் கையேற்று நிர்வகிப்பதற்கான தயாரிப்புகள் செய்யப்படவேண்டும். இப்போது முதல், கடந்த இருபது வருடங்களாகப் பின்பற்றப்பட்ட, முதலில் கிராமியப் பிர

---

*இத்தந்தி தோழர் மாஓ சேதுங் அவர்களால் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் புரட்சிகர ராணுவக் கமிஷனின் சார்பில், இரண்டாவது, மூன்றாவது களச்சேனைகளின் தந்தியொன்றிற்குப் பதிலளிக்குமுகமாக எழுதப்பட்டது. அதேவேளையில் இது சம்பந்தப்பட்ட பிற களச்சேனைகளுக்கும் மத்திய கமிட்டியின் பியூரோகளுக்கும் அனுப்பப்பட்டது. லியௌசி-ஷென்யாங், ஹுவய்-ஹாய், பெய்ப்பிங்-தியென்சின் ஆகிய மூன்று பெரும் போரியக்கங்களுக்கும் பின்னர் கடும் போர்க் காலகட்டம் முடிவிற்கு வந்திருந்தமையைக் கருத்திற்கொண்டு தோழர் மாஓ சேதுங் அவர்கள் மக்கள் விடுதலைச் சேனை ஒரு போர்ப் படை மட்டுமல்ல, அதேவேளையில் வேலைப்படையாகவும் இருக்கவேண்டும்

தேசங்கள் பின் நகரங்கள் என்ற வழிமுறை மாற்றிப் போடப் பட்டு, முதலில் நகரங்கள் பின் கிராமியப் பிரதேசங்கள் என்ற வழிமுறையாக மாற்றப்படும். ராணுவம் ஒரு போர்ப்படை மட்டுமல்ல, பிரதானமாக ஒரு வேலைப்படை. எல்லா ராணுவ ஊழியர்களும் நகரங்களைக் கையேற்று நிர்வகிக்கக் கற்றுக்கொள் ளவேண்டும். நகர வேலையில் ஏகாதிபத்தியவாதிகளையும் கோமிந்தாங் பிற்போக்குவாதிகளையும் கையாள்வதில் கெட்டிக்கா ரராயிருக்கவும், பூர்ஷுவாக்களைக் கையாள்வதில் கெட்டிக்கா ரராயிருக்கவும், தொழிலாளருக்குத் தலைமை தாங்குவதிலும் தொழிற்சங்கங்களை அமைப்பதிலும் கெட்டிக்காரராயிருக்கவும்; வாலிபரை அணிதிரட்டி ஸ்தாபனப்படுத்துவதில் கெட்டிக்கா ரராயிருக்கவும், புதிய விடுதலைப் பிரதேசங்களில் ஊழியரு டன் ஐக்கியப்பட்டு அவர்களுக்குப் பயிற்சியளிப்பதில் கெட்டிக் காரராயிருக்கவும், கைத்தொழிலையும் வர்த்தகத்தையும் நடத் துவதில் கெட்டிக்காரராயிருக்கவும், பாடசாலைகள், பத்திரி கைகள், செய்தி நிறுவனங்கள், ஒலிபரப்பும் நிலையங்கள் ஆகி யவற்றை நடத்துவதில் கெட்டிக்காரராயிருக்கவும், வெளிவிவ

---

என்பதையும், சில குறிப்பிட்ட சூழ்நிலைகளின் கீழ் அது பிரதானமாக ஒரு வேலைப் படையாகவே செயல்படவேண்டுமென்பதையும் தக்க சமயத்தில் சுட் டிக்காட்டினார். இந்தக் கொள்கை அந்தக் காலகட்டத்தில் புதிய விடுதலைப் பிரதேசங்களிலான ஊழியர் பிரச்சினையைத் தீர்ப்பதிலும் மக்களின் புரட்சிகர இலட்சியத்தின் நெருடலற்ற அபிவிருத்தியை உறுதிப்படுத்துவதிலும் மிக முக் கியமான ஒரு பங்கை வகித்தது. போர்ப்படை, வேலைப்படை இரண்டுமானது என்ற மக்கள் விடுதலைச் சேனையின் இயல்பு பற்றி ''தேர்ந்தெடுக்கப்பட்ட மாஒ சேதுங் படைப்புகள்'', வால்யும் 4லே ''சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஏழாவது மத்திய கமிட்டியின் இரண்டாவது பிளீனக் கூட்டத்திற்கான அறிக்கை''யின் 2ம் பிரிவிலும் பார்க்கவும்.

காரங்களைக் கையாள்வதில் கெட்டிக்காரராயிருக்கவும், ஜன நாயகக் கட்சிகள், மக்கள் ஸ்தாபனங்கள் சம்பந்தமான பிரச்சி னைகளைக் கையாள்வதில் கெட்டிக்காரராயிருக்கவும், நகரங்க ளுக்கும் கிராமியப் பிரதேசங்களுக்குமிடை உறவுகளைச் சரிப் படுத்தி, உணவு, நிலக்கரி, இதர அன்றாடத் தேவைப் பொருட் களைப் பற்றிய பிரச்சினைகளைத் தீர்ப்பதில் கெட்டிக்காரராயி ருக்கவும், பணம், நிதி சம்பந்தமான பிரச்சினைகளைக் கையாள் வதில் கெட்டிக்காரராயிருக்கவும் கற்றுக்கொள்ள வேண்டும். சுருங்கக் கூறின், முன்பு எமது ராணுவ ஊழியர்களுக்கும் போராளிகளுக்கும் பரிச்சயமற்றிருந்த நகரப் பிரச்சினைகளனைத் திற்கும் இப்போது முதல் அவர்கள் பொறுப்பேற்கவேண்டும். நீங்கள் முன்னேறி நாலைந்து மாகாணங்களைக் கைப்பற்றவேண் டும், நகர வேலைகளோடு நீங்கள் விசாலமான கிராமியப் பிர தேச வேலைகளையும் செய்யவேண்டும். தெற்கிலுள்ள கிராமியப் பிரதேசங்களனைத்தும் புதிதாக விடுதலைச் செய்யப்படுமாத லால் வேலை வடக்கிலுள்ள பழைய விடுதலைப் பிரதேசங்களிலுள் ளதிலிருந்து அடிப்படையில் வேறுபடும். முதல் வருடத்தில் குத்தகையையும் வட்டியையும் குறைக்கும் கொள்கை அமுல் நடத்தப்படமுடியாது; குத்தகையும் வட்டியும் கிட்டத்தட்டப் பழைய மாதிரியே கொடுக்கப்படவேண்டும். எமது கிராமிய வேலை இந்நிலைமைகளில் நடத்தப்படவேண்டும். ஆகவே கிரா மிய வேலையும் புதிதாகக் கற்றுக்கொள்ளப்படவேண்டும். எப் படியாயினும், நகர வேலையுடன் ஒப்பிடுமிடத்துக் கிராமிய வேலையைக் கற்றுக்கொள்வது சுலபம். நகர வேலை கஷ்டமா னது; அது தான் நீங்கள் படித்துக்கொண்டிருக்கும் பிரதான விஷயம். எமது ஊழியர்கள் நகரங்களை நிர்வகிப்பதில் விரை வில் தேர்ச்சி பெறுவிட்டால் நாம் பாரதூரமான கஷ்டங்களைச்

சந்திப்போம். ஆகவே நீங்கள் இதர பிரச்சினைகளனைத்தையும் பெப்ரவரியில் தீர்த்து, மார்ச் மாதம் முழுவதையும் நகரங்களிலும் புதிய விடுதலைப் பிரதேசங்களிலும் வேலை செய்வது பற்றிப் படிக்கப் பயன்படுத்தவேண்டும். கோமிந்தாங்கிடம் ஆக ஒரு பத்துச் சொச்ச லட்சம் தொகையுடைய துருப்புக்களே யுண்டு; அவையும் விசாலமான பிரதேசத்தில் சிதறியிருக்கின்றன. இன்னும் பல சமர்களில் போரிட வேண்டியிருப்பது நிச்சயம்; ஆனால் ஹுவய்-ஹாய் போரியக்கத்தைப் போன்ற பெருமளவிலான போரிடுதலுக்கான சாத்தியப்பாடு சிறியளவிலேயே உண்டு; அப்படியான சாத்தியப்பாடே இல்லையென்றும், கடும் போர்க்காலம் முடிவடைந்து விட்டதென்றும்கூடக் கூறலாம். ராணுவம் இன்னும் ஒரு போர்ப் படையாய் விளங்குகிறது; ஆகவே இதைப் பொறுத்துச் சிறிதளவேனும் தளர்விருக்கக் கூடாது; தளர்ச்சியடைவது ஒரு தவருகும். இருந்தாலும், ராணுவத்தை ஒரு வேலைப்படையாக்குவதற்கான கடமையை நாம் முன்வைப்பதற்கான காலம் வந்துவிட்டது. நாம் இப்போது இந்தக் கடமையை முன்வைத்து அதை நிறைவேற்ற உறுதி பூணுவிட்டால் நாம் ஒரு மிக மிகப் பெரிய தவறிழைப்போம். நாம் ராணுவத்துடன் 53,000 ஊழியர்களைத் தெற்குக்கு அனுப்பத் தயார் செய்கிறோம்; ஆனால் இது மிகச் சிறியதொரு தொகை. எட்டொன்பது மாகாணங்களையும் பல பத்துப் பெரிய நகரங்களையும் கைப்பற்றுவதானால் பெருந்தொகையான வேலை ஊழியர்கள் வேண்டும்; இந்தப் பிரச்சினையைத் தீர்க்க ராணுவம் பிரதானமாகத் தன்னையே தான் சார்ந்திருக்கவேண்டும். ராணுவம் ஒரு கல்லூரி. 2,100,000 எண்ணிக்கையுடைய எமது களச்சேனைகள், பல்லாயிரம் சர்வகலாசாலைகளுக்கும் மத்திய பாடசாலைகளுக்கும் சமம். எமது

வேலை ஊழியர்களனைவரையும் சப்ளை செய்ய நாம் எமது ராணுவத்திலேயே பிரதானமாகத் தங்கியிருக்கவேண்டும். நீங்கள் இந்த அம்சத்தைத் தெளிவாகப் புரிந்து கொள்ளவேண்டும். கடும் போர் அடிப்படையில் முடிவடைந்துவிட்டதால் ராணுவத்தின் ஆட்பலத்தையும் சாதனங்களையும் இட்டு நிரப்புவது தகுந்த எல்லைகளுக்குக் கட்டுப்பட்டிருக்கவேண்டும்; அளவு, தரம், பூர்த்திசெய்தல் ஆகியவை குறித்து மிக அதிகம் கோரக் கூடாது; காரணம், இது நிதி நெருக்கடியை ஏற்படுத்தும். இது நீங்கள் கண்டிப்பாகக் கவனத்திலெடுக்க வேண்டிய இன்னொரு அம்சம். மேற்கூறிய கொள்கைகளனைத்தும் நான்காவது களச்சேனைக்குப் பொருந்தும்; தோழர்கள் லின் பியௌவையும் லோ ஜொங்-ஹுவானையும்கூட இவற்றில் கவனஞ்செலுத்தும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். நாங்கள் தோழர் காங் ஷெங்குடன் நீண்ட நேரம் பேசி, உங்களுடன் கலந்தாலோசிக்க 12ந் தேதியளவில் உங்கள் இடத்தை விரைந்து அடையும்படி அவரைக் கேட்டுக் கொண்டுள்ளோம். கலந்தாலோசித்த பின் உங்கள் கருத்தென்னவென்றும், நீங்கள் என்ன செய்ய எண்ணியிருக்கிறீர்களென்றும் தெரிவித்துத் தயவு செய்து உடனடியாக எமக்குத் தந்தியடியுங்கள். கிழக்குச் சீன பியூரோவும், கிழக்குச் சீன ராணுவப் பிரதேச ஆணைப்பகுதியும் பொது முன்னணிக் கமிட்டி[2]யுடனும், மூன்றுவது களச்சேனை முன்னணிக் கமிட்டியுடனும் தெற்கு நோக்கிய செல்கையைத் திட்டமிடுவதற்கான ஒருமுகப்பட்ட முயற்சியில் சேர்ந்து வேலை செய்ய உடனடியாக ஷிசௌவுக்கு நகரவேண்டும். உங்கள் பின்னணிப் பிரதேச வேலையனைத்தையும் ஷன்துங் உப பியூரோவிடம் ஒப்படையுங்கள்.

# குறிப்புகள்

1. இரண்டாவது மூன்றாவது களச்சேனைகள் யாங்சி நதியைக் கடக்கும் போர் நடவடிக்கைக் காலத்தை 1949 ஏப்ரலில் இருந்து மார்ச்சுக்கு முன்தள்ளிப் போடத் திட்டமிட்டிருந்தன. பிற்போக்குக் கோமிந்தாங் அரசாங்கத்தோடான சமாதானப் பேச்சுவார்த்தைகளால் மக்கள் விடுதலைச் சேனை யாங்சி நதியைக் கடக்கும் காலம் ஏப்ரல் பிற்பகுதிக்குத் தள்ளிப் போடப்பட்டது.

2. ஹுவய்-ஹாய் போரியக்கத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்ய, சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் புரட்சிகர ராணுவக் கமிஷன் மத்திய சமவெளிக் களச்சேனையினதும் கிழக்குச் சீனக் களச்சேனையினதும் ஒன்றிணைந்த தலைமையைப் பெறவும், ஹுவய்-ஹாய் முன்னணியில் ராணுவ விவகாரங்கள் போர்நடவடிக்கைகள் ஆகியவற்றுக்கு ஆணை செலுத்தவும் தோழர் தெங் ஸியௌ-பிங்கைக் காரியதரிசியாகக் கொண்ட தோழர் லியூ போ-செங், சென் யீ, தெங் ஸியௌ-பிங், ஸு யூ, தான் சென்-லின் ஆகியோரடங்கிய ஒரு பொது முன்னணிக் கமிட்டியை அமைக்க 1948 நவம்பர் 16ந் தேதி தீர்மானித்தது.

# நாடு தழுவிய முறையில் முன்னேறும்படி ராணுவத்திற்கு இட்ட உத்தரவு*

**(1949, ஏப்ரல் 21)**

சகல களச்சேனைகளதும் அதிகாரித் தோழர்களே, போர் வீரத் தோழர்களே, தெற்கிலுள்ள கொரில்லாப் பிரதேசங்களிலுள்ள மக்கள் விடுதலைச் சேனைத் தோழர்களே!

சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் பிரதிநிதிக் கோஷ்டிக்கும் நான்கிங் கோமிந்தாங் அரசாங்கத்தின் பிரதிநிதிக் கோஷ்டிக்குமிடையில் நீண்ட பேச்சுவார்த்தைகளுக்குப் பின் செய்யப்பட்ட உள்நாட்டுச் சமாதானம்பற்றிய உடன்படிக்கை நான்கிங் கோ

---

*இந்த உத்தரவு தோழர் மாஓ சேதுங் அவர்களால் எழுதப்பட்டது. பிற்போக்குக் கோமிந்தாங் அரசாங்கம் உள்நாட்டுச் சமாதானம் பற்றிய உடன்படிக்கையில் கைச்சாத்திட மறுத்ததன் பின், மக்கள் விடுதலைச் சேனை தலைவர் மாஓ சேதுங் அவர்களாலும் தலைமைத் தளபதி சு தேயினாலும் விடுக்கப்பட்ட இந்த உத்தரவின்படி செயல்பட்டு, இன்னும் விடுதலையாக்கப்படாதிருந்த பரந்த பிரதேசங்களுள் அளவில் முன்னுதாரணமற்றதான ஒரு பொது முன்னேற்றத்திலிறங்கியது. 1949, ஏப்ரல் 21ந் திகதி காலையில், லியூ போ-செங்ஙினதும் தெங் ஸியௌ-பிங்ஙினதும் பிற தோழர்களினதும் தலைமையிலான இரண்டாவது களச்சேனையும், சென் யீயினதும் ஸு யூவினதும் தான் சென்-லின்னினதும் பிற தோழர்களினதும் தலைமையிலான மூன்றாவது களச்சேனையும் மேற்கே கியூகியாங்ஙிற்கு வடகிழக்கிலுள்ள ஹுகோவிலிருந்து கிழக்கே கியாங்

தாங் பிற்போக்குவாதிகள் நிராகரித்தமை அவர்கள் தாம் தொடக்கிய எதிர்ப்புரட்சி யுத்தத்தை இறுதிவரை நடத்தி முடிக்கத் தீர்மானித்துள்ளனர் என்பதைக் காட்டுகிறது. இந்த உடன்படிக்கையைக் கோமிந்தாங் பிற்போக்குவாதிகள் நிராகரித்தமை அவர்கள் இந்த ஆண்டு ஜனவரி 1ந் தேதி சமாதானப் பேச்சுவார்த்தைகளைப் பிரேரேபித்தபோது மக்கள் விடுதலைச் சேனையின் முன்னேற்றத்தைத் தடுத்து, அதன் மூலம் பின்னர் மீண்டும் எழுந்திருந்து புரட்சிகரச் சக்திகளை நசுக்க மூச்சுவிட நேரம் பெற மாத்திரமே முயன்றனர் என்பதைக்

---

கோமிந்தாஙிற்கு எதிராகக் கிளர்ச்சி செய்தனர்; ஸின்கியாங் சமாதானமாக விடுதலையாக்கப்பட்டது. நவம்பர் தொடக்கத்தில், லியூ போ-செங்ஙினதும் தெங் ஸியௌ-பிங்ஙினதும் பிற தோழர்களினதும் தலைமையிலான இரண்டாவது களச்சேனை, ஹோ லுங்ஙினதும் லீ சிங்-சுவானினதும் பிற தோழர்களினதும் தலைமையிலான வட சீனக் களச்சேனையின் 18ம் படை வியூகத்தோடும் முதலாவது களச்சேனையின் ஒரு பகுதியோடும் கூட்டாக, தென் மேற்குச் சீனாவிற்குள் தம் படையெடுப்பைத் தொடங்கின. அவை நவம்பர் 15ந் திகதி குவெய்யாங்யையும் நவம்பர் 30ந் திகதி சுங்கிங்கையும் விடுதலையாக்கின. டிசம்பர் 9ந் திகதி, யுன்னான் மாகாணத்தின் கோமிந்தாங் கவர்னர் லூ ஹானும் சீகாங் மாகாணத்தின் கோமிந்தாங் கவர்னர் லியூ வென்-ஹுய்யும் தென்மேற்கிலான கோமிந்தாங் ராணுவ, நிர்வாக விவகாரங்கள் குழுவின் துணைநிர்வாகிகளான தெங் ஸி-ஹௌவும் பான் வென்-ஹுவாவும் கோமிந்தாஙிற்கு எதிராகக் கிளர்ச்சி செய்தனர்; யுன்னான், சீகாங் மாகாணங்களிரண்டும் சமாதானமாக விடுதலையாக்கப்பட்டன. தென்மேற்கிற்குள் பிரவேசித்திருந்த மக்கள் விடுதலைச் சேனை டிசம்பர் பிற்பகுதியில் செங்தூ போரியக்கம் நடத்தி, ஹு சுங்-நான் கீழிருந்த கோமிந்தாங் துருப்புக்களை முற்றாக அழித்தொழித்து, டிசம்பர் 27ந் திகதி செங்தூவை விடுதலையாக்கின. 1949 டிசம்பர் இறுதியளவில் மக்கள் விடுதலைச் சேனை சீனாவின் பெருநிலப் பகுதியிலான கோமிந்தாங் துருப்புக்கள் முழுவதையும் அழித்தொழித்து, திபெத் நீங்கலாகப் பெருநிலப் பகுதி முழுவதையும் விடுதலையாக்கியிருந்தது.

காட்டுகிறது. இந்த உடன்படிக்கையை நிராகரித்தமை நான்கிங்கிலுள்ள லீ சுங்-ஜென் அரசாங்கம் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி சமாதானத்திற்கென முன்வைத்த எட்டு நிபந்தனைகளையும் பேச்சுவார்த்தைகளுக்கு அடிப்படையாக ஏற்றுக்கொள்வதாக விருப்பம் தெரிவித்தது முற்றிலும் ஆஷாடபூதித்தனமானது எனக் காட்டுகிறது. லீ சுங்-ஜென் அரசாங்கம் யுத்தக்குற்றவாளிகளைத் தண்டிப்பது, சகல பிற்போக்குக் கோமிந்தாங் துருப்புக்களையும் ஜனநாயகக் கோட்பாடுகளின்படி புனரொழுங்கு செய்வது, நான்கிங் அரசாங்கத்தினதும், அதற்கு கீழ்ப்பட்டுள்ள சகல மட்ட அரசாங்கங்களினதும் எல்லா அதிகாரத்தையும் ஒப்படைப்பது போன்ற அடிப்படை நிபந்தனைகளனைத்தையும் ஏற்கெனவே ஏற்றுக்கொண்டுள்ளதால், அது இந்த அடிப்படை நிபந்தனைகளின் அடிப்படையில் வகுக்கப்பட்டவையும், மிகவும் தாராளமானவையுமான குறிப்பிட்ட நடவடிக்கைகளை மறுக்கக் காரணமெதுவுமில்லை. இந்த நிலைமையில் நாம் உங்களுக்குப் பின்வருமாறு உத்தரவிடுகிறோம்:

1. தைரியமாக முன்னேறி, சீன எல்லைகளுக்குளுள்ள எதிர்க்கத் துணியும் கோமிந்தாங் பிற்போக்குவாதிகளனைவரையும் உறுதியாகவும், முற்றுமுழுதாகவும், துப்புரவாகவும், பூரணமாகவும் நிர்மூலமாக்குங்கள். முழு நாட்டு மக்களையும் விடுதலை செய்யுங்கள். சீனப் பிரதேசத்தினதும் அரசுரிமையினதும் சுதந்திரம், ஒருமைப்பாடு ஆகியவற்றைப் பாதுகாருங்கள்.

2. தைரியமாக முன்னேறி, திருந்த மறுக்கின்ற யுத்தக்குற்றவாளிகளனைவரையும் கைதுசெய்யுங்கள். அவர்கள் எங்கு ஓடினாலும் பரவாயில்லை, அவர்கள் நீதிக்கு முன் கொண்டுவரப்பட்டு சட்டப்பிரகாரம் தண்டிக்கப்படவேண்டும். கொள்

துள்ளனர். நான்கிங் தேசிய அரசாங்கம் முழு மக்களதும் நம்பிக்கையைப் பூரணமாக இழந்துவிட்டது. தற்போதைய உள்நாட்டு யுத்தத்தில் அதன் துருப்புக்கள் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியால் தலைமை தாங்கப்பட்டு, சீன மக்களின் புரட்சிகர ராணுவக் கமிஷனுல் ஆணையிடப்படும் மக்கள் விடுதலைச் சேனையால் ஏற்கெனவே தோற்கடிக்கப்பட்டுவிட்டன. இந்த நிலைமையில் நான்கிங் தேசிய அரசாங்கம் உள்நாட்டு யுத்தத்திற்கு முடிவுகட்டவும் சமாதானத்தை மீண்டும் ஏற்படுத்தவும் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட வேண்டும் எனச் சீனக் குடியரசின் 38வது ஆண்டு ஜனவரி 1ந் தேதி சீனக் கம்யூனிஸ்ட் கட்சிக்குப் பிரேரேபித்தது. அதேயாண்டு ஜனவரி 14ந் தேதி சீனக் கம்யூனிஸ்ட் கட்சி நான்கிங் கோமிந்தாங் அரசாங்கத்தின் இந்தப் பிரேரணையை ஏற்று இரு தரப்புகளுக்குமிடைச் சமாதானப் பேச்சுவார்த்தைகளின் அடிப்படையாக எட்டு நிபந்தனைகளை முன்வைத்து அறிக்கையொன்றை விடுத்தது. அந்நிபந்தனைகள் வருமாறு: யுத்தக்குற்றவாளிகளைத் தண்டிப்பது; போலி அரசியலமைப்பை இல்லாமற் செய்வது; போலிச் ''சட்டபூர்வ அதிகார''த்தை இல்லாமற் செய்வது; ஜனநாயகக் கோட்பாடுகளின் அடிப்படையில் சகல பிற்போக்குத் துருப்புக்களையும் புனரமைப்பது; அதிகார மூலதனத்தைப் பறிமுதல் செய்வது; நில அமைப்பைச் சீர்திருத்துவது; தேசத்துரோக ஒப்பந்தங்களை ரத்து செய்வது; பிற்போக்குப் பிரகிருதிகளின் பங்குபற்றுதலின்றி ஒரு புதிய அரசியற் கலந்தாலோசனை மாநாட்டைக் கூட்டி, ஒரு ஜனநாயகக் கூட்டரசாங்கத்தை உருவாக்கி பிற்போக்கு நான்கிங் கோமிந்தாங் அரசாங்கத்தினதும், சகல மட்டங்களிலுமுள்ள அதற்குக் கீழ்ப்பட்ட அரசாங்கங்களினதும் சகல அதிகாரங்களையும் எடுப்பது. இந்த எட்டு அடிப்படை நிபந்தனைகளும் நான்கிங் தேசிய அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டன. ஆகவே சீனக் கம்யூனிஸ்ட் கட்சியும் நான்கிங் தேசிய அரசாங்கமும் பேச்சுவார்த்தைகளை நடத்தவும், ஒரு உடன்படிக்கை செய்துகொள்ளவும் பூரண அதிகாரமுடைய தத்தம் பிரதிநிதிக் கோஷ்டிகளை நியமித்தன. இரு தரப்புப் பிரதிநிதிகளும் பெய்ப்பிங்கில் சந்தித்து, முதலில் நான்கிங் தேசிய அரசாங்கம் தற்போதைய உள்நாட்டு யுத்தத்திற்கும் அதன் எல்லாத் தவறான கொள்கைகளுக்கும் முழுப் பொறுப்பையும் ஏற்கவேண்டும் என்று உறுதிப்படுத்தி, இந்த உடன்படிக்கையைச் செய்யச் சம்மதித்தனர்.

## பகுதி 1

ஷரத்து 1. சரியையும் பிழையையும் பிரித்துணரவும், யுத்தப் பொறுப்பு யாரைச் சார்ந்ததெனத் தீர்மானிக்கவும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சிப் பிரதிநிதிக்

கோஷ்டியும் நான்கிங் தேசிய அரசாங்கப் பிரதிநிதிக் கோஷ்டியும் (இனிமேல் இரு தரப்புக்களும் எனக் குறிப்பிடப்படும்) தற்போதைய உள்நாட்டு யுத்தத்தைத் தொடுத்து அதைத் தொடர்ந்து நடத்தப் பொறுப்பாயிருக்கும் நான்கிங் தேசிய அரசாங்கத்து யுத்தக்குற்றவாளிகள் தண்டிக்கப்படுவது ஒரு கோட்பாடாய்க் கொள்ளப்படும், ஆனால் அவர்கள் பின்வரும் நிபந்தனைகளுக்கேற்ப ஆளுக்கேற்றபடி நடத்தப்படுவர் என உறுதிப்படுத்தின:

விஷயம் 1. யாராயிருந்தாலும் யுத்தக்குற்றவாளிகளனைவரும் தாம் சரியையும் பிழையையும் பிரித்துணருவதிலும், தமது கடந்த காலத்திலிருந்து முற்றுக விலகிக் கொள்வதிலும் தாம் உண்மையில் விசுவாசமாயிருப்பதாகத் தம் உண்மையான செயல்கள் மூலம் காட்டி, அதன் மூலம் சீன மக்களின் விடுதலை லட்சியத்தின் முன்னேற்றத்தையும், உள்நாட்டுப் பிரச்சினையைச் சமாதானமாகத் தீர்ப்பதையும் எளிதாக்கினால் அவர்கள் யுத்தக்குற்றவாளிகள் என்ற குற்றச்சாட்டிலிருந்து விலக்கப்பட்டுத் தயவுடன் நடத்தப்படுவர்.

விஷயம் 2. யாராயிருந்தாலும் மக்களின் விடுதலை லட்சியத்தின் முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டை போடுபவரும், உள்நாட்டுப் பிரச்சினையைச் சமாதானமான முறையில் தீர்ப்பதற்குத் தடையாய் இருப்பவரும், கலகத்தைத் தூண்டுமளவுக்குச் செல்பவருமான திருந்த மறுக்கின்ற யுத்தக்குற்றவாளிகளனைவரும் கடுமையாகத் தண்டிக்கப்படவேண்டும். கலகத்தைத் தூண்டுவோர்களை அடக்குவதற்கு சீன மக்கள் புரட்சிகர ராணுவக் கமிஷன் பொறுப்பாயிருக்கும்.

ஷரத்து 2. நான்கிங் தேசிய அரசாங்கம் சீனக் குடியரசின் 38வது ஆண்டு ஜனவரி 26ந் தேதி சீனு மீதான ஜப்பானிய ஆக்கிரமிப்பில் யுத்தக்குற்றவாளியான ஜெனரல் யஸுஜி ஒக்கமுருவைக் குற்றமற்றவரெனப் பிரகடனஞ் செய்து, அவரை விடுதலை செய்ததோடு, அதேயாண்டு ஜனவரி 31ந் தேதி 260 இதர ஜப்பானிய யுத்தக்குற்றவாளிகளை ஜப்பானுக்குத் திரும்பிச் செல்ல அனுமதி கொடுத்தது தவறென இரு தரப்புக்களும் உறுதிப்படுத்துகின்றன. சீன ஜனநாயகக் கூட்டரசாங்கம், சீனு பூராவுமுள்ள மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் புதிய மத்திய அரசாங்கம் உருவாக்கப்பட்டதும் இந்த ஜப்பானியக் குற்றவாளிகளனைவரதும் வழக்குகள் திரும்பப் பார்க்கப்படும்.

## பகுதி 2

ஷரத்து 3. சீனக் குடியரசின் 35வது ஆண்டு நவம்பரில் நான்கிங் கோமிந்தாங் அரசாங்கத்தால் கூட்டப்பட்ட "தேசிய சபை" யால் அங்கீகரிக்கப்பட்ட

''சீனக் குடியரசின் அரசியலமைப்பு'' இல்லாமற் செய்யப்படும் என இரு தரப்புக்களும் உறுதி கூறுகின்றன.

ஷரத்து 4. ''சீனக் குடியரசின் அரசியலமைப்பு'' இல்லாமற் செய்யப்பட்டதும் சீன அரசாலும் மக்களாலும் பின்பற்றப்படவேண்டிய அடிப்படைச் சட்டம் புதிய அரசியற் கலந்தாலோசனை மாநாட்டினதும் ஜனநாயகக் கூட்டரசாங்கத்தினதும் தீர்மானங்களுக்கேற்ப தீர்மானிக்கப்படும்.

### பகுதி 3

ஷரத்து 5. நான்கிங் தேசிய அரசாங்கத்தின் சட்டபூர்வ அதிகாரம் முழுவதும் இல்லாதொழிக்கப்படுமென இரு தரப்புக்களும் உறுதி கூறுகின்றன.

ஷரத்து 6. மக்கள் விடுதலைச் சேனை சென்று பொறுப்பேற்ற இடமெங்கும் ஜனநாயகக் கூட்டரசாங்கம் அமைக்கப்பட்ட பின் மக்களின் ஜனநாயக சட்டபூர்வ அதிகாரம் அமைக்கப்படும்; சகல பிற்போக்குச் சட்டங்களும் விதிகளும் ரத்து செய்யப்படும்.

### பகுதி 4

ஷரத்து 7. நான்கிங் தேசிய அரசாங்கத்தின் கீழுள்ள ஆயுதப்படைகளனைத்தும் (எல்லாத் தரை, கடல், ஆகாயப் படைகளும், ராணுவப் பொலீஸ் படைகளும், போக்குவரத்துப் பொலீஸ் படை, ஸ்தல துருப்புக்களும், சகல ராணுவ நிறுவனங்களும், கழகங்களும், தொழிற்சாலைகளும், பின்னணிப் பிரதேச சேவை ஸ்தாபனங்களும் இன்னோரன்ன பிறவும்) ஜனநாயகக் கோட்பாடுகளின் அடிப்படையில் மக்கள் விடுதலைச் சேனையாகப் புனரமைக்கப்படும் என இரு தரப்புக்களும் உறுதிப்படுத்துகின்றன. உள்நாட்டுச் சமாதானம் பற்றிய உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதும் இந்தப் புனரமைப்பு வேலைக்குப் பொறுப்பேற்க ஒரு தேசியப் புனரொழுங்குக் கமிட்டி உடனடியாக அமைக்கப்படும். இந்தப் புனரொழுங்குக் கமிட்டியில் ஏழு முதல் ஒன்பது அங்கத்தவரிருப்பர். அதில் நான்கு அல்லது ஐந்து பேர் மக்களின் புரட்சிகர ராணுவக் கமிஷனால் நியமிக்கப்படுவர்; மூன்று அல்லது நான்கு பேர் நான்கிங் தேசிய அரசாங்கத்தால் நியமிக்கப்படுவர்; மக்களின் புரட்சிகர ராணுவக் கமிஷன் நியமித்த அங்கத்தவரில் ஒருவர் தலைவராகவும், நான்கிங் தேசிய அரசாங்கம் நியமித்த அங்கத்தவரிலொருவர் துணைத் தலைவராகவும் இருப்பர். மக்கள் விடுதலைச்

சேனை சென்று பொறுப்பேற்ற இடங்களில் தேவைப்பட்டால் புனரொழுங்குக் கமிட்டியின் பிரதேச உபகமிட்டிகள் அமைக்கப்படலாம். இரு தரப்புக்களதும் அங்கத்தவர் தொகையும் தலைவர், துணைத் தலைவர் பதவியும் தேசிய புன ரொழுங்குக் கமிட்டியில் இருப்பது போலிருக்கும். கடற்படைக்கு ஒரு புனரொ ழுங்குக் கமிட்டியும் ஆகாயப்படைக்கு இன்னொன்றும் அமைக்கப்படும். தற் போது நான்கிங் தேசிய அரசாங்கத்தால் நிர்வகிக்கப்படும் பிரதேசங்களுக்குள் மக்கள் விடுதலைச் சேனை நுழைவது அவற்றில் பொறுப்பேற்பது ஆகியன சம் பந்தமான விஷயங்களனைத்தும் சீன மக்கள் புரட்சிகர ராணுவக் கமிஷன் வெளியிட்ட உத்தரவுகளின்படி தீர்மானிக்கப்படும். நான்கிங் தேசிய அரசாங் கத்தின் கீழுள்ள ஆயுதப்படைகள் மக்கள் விடுதலைச் சேனை நுழைவதை எதிர்க்கக் கூடாது.

ஷரத்து 8. புனரமைப்புத் திட்டம் ஒவ்வொரு பிரதேசத்திலும் இரு கட்டங்களாய் நிறைவேற்றப்படுமென்பதை இரு தரப்புக்களும் ஏற்றுக்கொள் கின்றன.

விஷயம் 1. முதலாவது கட்டம் — ஒன்றுகூட்டிப் புனரொழுங்கு செய்வது.

அம்சம் 1. நான்கிங் தேசிய அரசாங்கத்தின் கீழுள்ள ஆயுதப் படைகள னைத்தும் (தரை, கடல், ஆகாயப் படைகள், ராணுவப் பொலீஸ் படை, போக்குவரத்துப் பொலீஸ் படை, ஸ்தல துருப்புக்கள் முதலியன) ஒன்றுகூட்ட ப்பட்டு புனரொழுங்கு செய்யப்படும். புனரொழுங்கு செய்வதற்கான கோட் பாடு வருமாறு: புனரொழுங்குக் கமிட்டி ஸ்தூலமான ஸ்தல நிலைமைகளின் அடிப்படையில் மக்கள் விடுதலைச் சேனை சென்று பொறுப்பேற்ற இடங்களிலுள்ள ஆயுதப் படைகளைப் பிரதேசம் பிரதேசமாகவும் கட்டங்கட்டமாகவும் அவற்றின் ஆரம்பப் பெயர்கள், அமைப்புகள், எண்ணிக்கை ஆகியவற்றுக்கேற்ப ஒன்று கூடிப் புனரொழுங்கு செய்யப்பட நிர்ணயிக்கப்பட்ட இடங்களுக்குச் செல்ல உத்தரவிடும்.

அம்சம் 2. மக்கள் விடுதலைச் சேனை சென்று பொறுப்பேற்குமுன் நான்கிங் தேசிய அரசாங்கத்தின் கீழுள்ள ஆயுதப் படைகளனைத்தும் தாம் நிற்கும் இடத் தில், அதாவது, எல்லாப் பெரிய சிறிய நகர்களிலும், பிரதான போக்குவரத்து மார்க்கங்கள், நதிகள் நீளமும், துறைமுகங்களிலும், கிராமங்களிலும் ஸ்தல ஒழுங்கை நிலைநாட்டுவதற்கும், சீர்குலைவு நடவடிக்கைகள் எதுவும் நடைபெறாமல் தடுக்கவும் பொறுப்பேற்க வேண்டும்.

அம்சம் 3. மேற்கூறிய இடங்களில் மக்கள் விடுதலைச் சேனை சென்று பொ

றுப்பேற்கும்போது நான்கிங் தேசிய அரசாங்கத்தின் கீழுள்ள ஆயுதப் படைகள் புனரொழுங்குக் கமிட்டியினதும், அதன் உபகமிட்டிகளதும் உத்தரவுகளின் பிரகாரம் சமாதானமான முறையில் ஒப்படைத்துக் குறிப்பிட்ட இடங்களுக்குச் செல்லவேண்டும். குறிப்பிட்ட இடங்களுக்கு நகரும்போதும் அந்த இடங்களை அடைந்த பின்னும் நான்கிங் தேசிய அரசாங்கத்தின் கீழுள்ள ஆயுதப் படைகள் கண்டிப்பான கட்டுப்பாட்டை அனுசரிக்கவும், ஸ்தல ஒழுங்கைக் குலைக்காமல் இருக்கவும் வேண்டும்.

அம்சம் 4. புனரொழுங்குக் கமிட்டியினதும் அதன் உபகமிட்டிகளதும் உத்தரவுகளுக்கேற்ப நான்கிங் தேசிய அரசாங்கத்தின்கீழுள்ள ஆயுதப் படைகள் தமது ஆரம்ப இடங்களை விட்டுச்செல்லும்போது அந்த இடங்களிலுள்ள ஸ்தலப் பொலீஸோ, அமைதிபேணும் படையோ வாபஸ் வாங்கக் கூடாது. அவை ஸ்தல சமாதானத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்குப் பொறுப்பாயிருக்கவும் மக்கள் விடுதலைச் சேனையின் உத்தரவுகளுக்கும் கட்டளைகளுக்கும் கட்டுப்படவும் வேண்டும்.

அம்சம் 5. நான்கிங் தேசிய அரசாங்கத்தின்கீழுள்ள ஆயுதப் படைகளனைத்தும் நகரும் அல்லது ஒன்றுகூடும்போது அவற்றுக்குத் தானியம், உணவு, படுக்கை, உடை போன்ற வேண்டிய சப்ளைகளைக் கொடுப்பதற்குப் புனரொழுங்குக் கமிட்டியும் அதன் உபகமிட்டிகளும், ஸ்தல அரசாங்கங்களும் பொறுப்பாயிருக்கவேண்டும்.

அம்சம் 6. பல்வேறு இடத்து ஸ்தூலமான நிலைமைகளுக்குமேற்பப் புனரொழுங்குக் கமிட்டியும் அதன் உபகமிட்டிகளும் பிரதேசம் பிரதேசமாகவும், கட்டங்கட்டமாகவும் நான்கிங் தேசிய அரசாங்கத்தின் ராணுவ ஸ்தாபனங்களனைத்தையும் (தேசிய பாதுகாப்பு அமைச்சுமுதல், கூட்டுப் பின்னணிச் சேவை ஆணைப் பகுதி வரை அவற்றின் சகல ஸ்தாபனங்களுக்குமுரிய நிறுவனங்கள், பாடசாலைகள், தொழிற்சாலைகள், பண்டகசாலைகள் போன்றவற்றை), சகல ராணுவ சாதன நிலையங்கள் (கடற்படைத் துறைகள், கோட்டைகள், ஆகாயப்படைத் தளங்கள் போன்றவை), சகல ராணுவச் சப்ளைகளையும் மக்கள் விடுதலைச் சேனையிடமும் பல்வேறு இடங்களிலுமுள்ள அதன் ராணுவக் கட்டுப்பாட்டுக் கமிஷன்களிடம் ஒப்படைக்கவும் அவற்றுக்கு உத்தரவிடும்.

விஷயம் 2. இரண்டாவது கட்டம் — பிரதேசம் பிரதேசமாய்ப் புனரமைத்தல்.

அம்சம் 1. நான்கிங் தேசிய அரசாங்கத்தின்கீழுள்ள தரைப்படைகள்

(காலாட் படை, குதிரைப்படை, விசேஷ படை, ராணுவப் பொலீஸ் படை, போக்குவரத்துப் பொலீஸ் படை, ஸ்தலத் துருப்புக்கள்) பிரதேசம் பிரதேசமாகவும் கட்டங்கட்டமாகவும் குறிப்பிட்ட இடங்களுக்கு நகர்ந்து ஒன்றுகூடிப் புனரொழுங்கு செய்யப்பட்ட பின் புனரொழுங்குக் கமிட்டி வெவ்வேறு இடத்து ஸ்தூலமான நிலைமைகளுக்குமேற்ப அவற்றைப் பிரதேசம் பிரதேசமாய்ப் புனரமைப்பதற்கான திட்டங்களை உருவாக்கிக் குறிப்பிட்ட காலங்களில் நிறைவேற்றும். புனரமைப்பதற்கான கோட்பாடு வருமாறு: மேற்கூறிய தரைப் படைகளனைத்தும் ஒன்று கூட்டப்பட்டு புனரொழுங்கு செய்யப்பட்டபின் அவை மக்கள் விடுதலைச் சேனையின் ஜனநாயக அமைப்பிற்கும் கிரமமான அமைப்புக்கும் இணங்க மக்கள் விடுதலைச் சேனையின் கிரமமான யுனிட்டுக்களாய்ப் புனரொழுங்கு செய்யப்படும். வயது, பலஹீனம், அல்லது அங்கஹீனம் காரணமாக உண்மையில் ஓய்வு பெற வேண்டியவராயும், ஓய்வு பெற விரும்புபவராயும் உள்ள போர்வீரர்களின் விஷயங்களையும், ஓய்வு பெற விரும்பும் அல்லது இதர வேலைகளில் ஈடுபட விரும்பும் அதிகாரிகளினதும் தனிப் பதவியமர்வு பெறாத அதிகாரிகளினதும் விஷயங்களையும் கவனிப்பதற்குப் புனரொழுங்குக் கமிட்டியும், அதன் உபகமிட்டிகளும் பொறுப்பாயிருக்க வேண்டும்; இக்கமிட்டிகள், எல்லோரும் தகுந்த இடத்தில் வைக்கப்படவும் யாரும் வாழும் வழிமுறைகள் இல்லாக் காரணத்தால் தீச்செயல்கள் புரியாதிருக்கவும் கூடியதாக அவர்களுக்கு வீடு திரும்புவதற்கும், ஜீவனோபாய வழிகளுக்குமான வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும்.

அம்சம் 2. நான்கிங் தேசிய அரசாங்கத்தின்கீழுள்ள கடற்படையும் ஆகாயப் படையும் பிரதேசம் பிரதேசமாகவும் கட்டங்கட்டமாகவும் குறிப்பிட்ட இடங்களுக்கு நகர்ந்து, ஒன்று கூட்டப்பட்டு புனரொழுங்கு செய்யப்பட்ட பின் அவை அவற்றின் ஆரம்பப் பெயர்கள், அமைப்பு, எண்ணிக்கை ஆகியவற்றின்படி மக்கள் விடுதலைச் சேனையின் ஜனநாயக அமைப்பிற்கிசைவாய் கடற்படை, ஆகாயப்படைப் புனரொழுங்குக் கமிட்டிகளால் புனரமைக்கப்படும்.

அம்சம் 3. நான்கிங் தேசிய அரசாங்கத்தின்கீழுள்ள ஆயுதப் படைகளனைத்தும் மக்கள் விடுதலைச் சேனையாகப் புனரொழுங்கு செய்யப்பட்ட பின் மக்கள் விடுதலைச் சேனையின் மூன்று பிரதான கட்டுப்பாட்டு விதிகளையும், கவனத்திற்கான எட்டம்சங்களையும் கண்டிப்பாகக் கடைப்பிடித்து, எவ்வித அத்துமீறலுமின்றி மக்கள் விடுதலைச் சேனையின் ராணுவ அரசியல் அமைப்புகளுக்கு விசுவாசத்துடன் கட்டுப்பட வேண்டும்.

அம்சம் 4. புனரமைப்புக்குப் பின் ஓய்வு பெற்ற அதிகாரிகளும் வீரர்களும் ஸ்தல மக்கள் அரசாங்கங்களை மதித்து, மக்கள் அரசாங்கத்தின் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் கீழ்ப்படிய வேண்டும். மக்கள் அரசாங்கங்களும் பல்வேறு இடத்து மக்களும் இந்த ஓய்வுபெற்ற அதிகாரிகளையும் வீரர்களையும் கவனிக்க வேண்டும்; அவர்களைப் பாரபட்சமாக நடத்தக்கூடாது.

ஷரத்து 9. உள்நாட்டுச் சமாதானம் பற்றிய உடன்படிக்கையைச் செய்த பின் நான்கிங் தேசிய அரசாங்கத்தின்கீழுள்ள சகல ஆயுதப்படைகளும் போர் வீரரையோ இதர ஊழியரையோ மீண்டும் கட்டாயமாகச் சேர்ப்பதை அல்லது திரட்டுவதை நிறுத்த வேண்டும். அவை தம் ஆயுதங்கள், வெடிமருந்து, போர்க்கருவிகள், ராணுவ ஸ்தாபனங்கள், சாதனங்கள், ராணுவப் பொருட்களெல்லாவற்றையும் பாதுகாப்பதற்குப் பொறுப்பாயிருக்க வேண்டும். அவற்றிலெதையும் அழிக்கவோ, மறைக்கவோ, கைமாற்றவோ, விற்கவோ கூடாது.

ஷரத்து 10. உள்நாட்டுச் சமாதானம் பற்றிய உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்ட பின் நான்கிங் தேசிய அரசாங்கம் அதன் ஆயுதப்படைகளில் எதுவும் புனரமைப்புத் திட்டத்தைச் செயற்படுத்த மறுக்கும் சமயத்தில் புனரமைப்புத் திட்டத்தைக் கட்டாயமாகக் கொண்டு நடத்த மக்கள் விடுதலைச் சேனைக்கு உதவி, அது பூரணமாக நிறைவேற்றப்படுவதை உத்தரவாதம் செய்ய வேண்டும்.

## பகுதி 5

ஷரத்து 11. நான்கிங் தேசிய அரசாங்கத்தின் ஆட்சிச் சமயத்தில் அரசியற் சலுகையையும், செல்வம், பதவி ஆகியவற்றின் செல்வாக்கையும் உபயோகித்துப் பெற்ற அல்லது பிடுங்கிக் கொண்ட சகல அதிகார முதலாளித்துவ முயற்சிகளும் (வங்கிகள், தொழிற்சாலைகள், சுரங்கங்கள், கப்பல்கள், கொம்பனிகள், கடைகள் உட்பட ) சொத்துக்களும் பறிமுதல் செய்யப்பட்டு அரசுக்குரிய சொத்தாக்கப்படும் என்பதை இருதரப்புக்களும் ஏற்றுக்கொள்கின்றன.

ஷரத்து 12. மக்கள் விடுதலைச் சேனை இன்னும் சென்று பொறுப்பேற்காத இடங்களில் ஷரத்து 11ல் குறிப்பிடப்பட்ட அதிகார முதலாளித்துவ முயற்சிகளையும் சொத்தையும் அவற்றில் களவோ மறைப்போ, சேதமோ, கைமாற்றமோ, ரகசிய விற்பனையோ நடக்காமலிருக்க நான்கிங் தேசிய அரசாங்கம் அவற்றை மேற்பார்வை செய்யும் பொறுப்பை ஏற்க வேண்டும். ஏற்கெனவே நகர்த்தப்பட்ட சொத்துக்கள் கண்டுபிடிக்கப்பட்ட இடங்களிலேயே வைத்

திருக்கப்பட வேண்டும்; அதன்பின் அவை திரும்பவும் நகர்த்தப்படுவது, வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுவது, அல்லது சேதப்படுத்தப்படுவது எதுவும் அனுமதிக்கப்படக்கூடாது. வெளிநாட்டில் அமைக்கப்பட்டுள்ள அதிகார முதலாளித்துவ முயற்சிகளும் சொத்தும் அரசுக்குரிய சொத்தெனப் பிரகடனஞ் செய்யப்படும்.

ஷரத்து 13. மக்கள் விடுதலைச் சேனை ஏற்கெனவே சென்று பொறுப்பேற்ற இடங்களில் ஷரத்து 11ல் கூறப்பட்ட அதிகார முதலாளித்துவ முயற்சிகளும் சொத்தும் ஸ்தல ராணுவக் கட்டுப்பாட்டுக் கமிஷன்களால் அல்லது ஜனநாயகக் கூட்டரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட நிறுவனங்களால் பறிமுதல் செய்யப் படும். அவற்றில் தனியார் பங்குகள் ஏதாவது இருந்தால் அவை பரிசீலனை செய்யப்படும்; அவை உண்மையில் தனியார் பங்குகள் தான், ரகசியமாகக் கைமாற்றப்பட்ட அதிகார மூலதனமல்ல என நிச்சயப்படுத்தப்பட்ட பின் அவை அங்கீகரிக்கப்படும்; அப்பங்குகளுக்குரியோர் பங்குதாரர்களாக இருக்க அல்லது தமது பங்குகளை வாபஸ் பெற அனுமதிக்கப்படுவர்.

ஷரத்து 14. நான்கிங் தேசிய அரசாங்க ஆட்சிக் காலத்திற்கு முன்பிருந்து இருக்கும் அல்லது நான்கிங் தேசிய அரசாங்க ஆட்சிக் காலத்திலிருந்து இருக்கும் அதிகார முதலாளித்துவ முயற்சிகள் பெரியதாகவோ, தேசியப் பொருளாதா ரத்திற்கும் மக்கள் வாழ்க்கை நிலைக்கும் தீங்கு விளைவிப்பதாகவோ இல்லாவிட் டால் அவை பறிமுதல் செய்யப்பட மாட்டா. ஆனால் அவற்றுள் மக்களால் சுட்டிக்காட்டப்பட்டு ஊர்ஜிதம் செய்யப்பட்ட மாபாதக குற்றங்களிழைத்த பிற்போக்குவாதிகள் போன்ற, குற்றங்களிழைத்த சில நபர்களுக்குரிய முயற்சி களும் சொத்தும் பறிமுதல் செய்யப்படும்.

ஷரத்து 15. மக்கள் விடுதலைச் சேனை இன்னும் சென்று பொறுப்பேற்காத நகரங்களில் நான்கிங் தேசிய அரசாங்கத்தின்கீழுள்ள மாகாண, மாநகர, மாவட்ட அரசாங்கங்கள் ஸ்தல மக்கள் ஜனநாயக சக்திகளையும் அவற்றின் நடவடிக்கைகளையும் பாதுகாப்பதற்குப் பொறுப்பாயிருக்க வேண்டும்; அவற்றை அடக்கவோ அவற்றுக்குச் சேதம் விளைவிக்கவோ கூடாது.

## பகுதி 6

ஷரத்து 16. சீனவின் கிராமியப் பிரதேசங்களிலுள்ள நிலப்பிரபுத்துவ நில உடைமைமுறை படிப்படியாகச் சீர்திருத்தப்படுமென இரு தரப்புக்களும் உறுதி கூறுகின்றன. மக்கள் விடுதலைச் சேனை வந்த பின் குத்தகையையும்

வட்டியையும் குறைப்பது பொதுவாக முதலிலும் நிலப்பங்கீடு அதன் பின்னும் அமுல்நடத்தப்படும் என இரு தரப்புக்களும் உறுதி கூறுகின்றன.

ஷரத்து 17. மக்கள் விடுதலைச் சேனை இன்னும் சென்று பொறுப்பேற்காத இடங்களில் நான்கிங் தேசிய அரசாங்கத்தின்கீழுள்ள ஸ்தல அரசாங்கங்கள் விவசாயி வெகுஜனங்களின் ஸ்தாபனங்களையும் அவற்றின் நடவடிக்கைகளையும் பாதுகாக்கும் பொறுப்பை ஏற்க வேண்டும், அவற்றை நசுக்கவோ சேதப்படுத்தவோ கூடாது.

## பகுதி 7

ஷரத்து 18. நான்கிங் தேசிய அரசாங்க ஆட்சியின்போது அந்நிய நாடுகளுடன் செய்யப்பட்ட சகல ஒப்பந்தங்கள் உடன்படிக்கைகளும், இதர ரகசிய, பகிரங்க ராஜதந்திரத் தஸ்தாவேஜுகள் பத்திரங்களும் நான்கிங் தேசிய அரசாங்கத்தால் ஜனநாயகக் கூட்டரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டு, ஜனநாயகக் கூட்டரசாங்கத்தால் பரிசீலனை செய்யப்படும் என்றும், சீன மக்களுக்கும் அவர்களின் அரசுக்கும் தீங்கான, குறிப்பாக அரசின் உரிமைகளை விற்கும் இயல்புடைய சகல ஒப்பந்தங்களும் உடன்படிக்கைகளும் நிலைமைக்கேற்ப இல்லாமற் செய்யப்படும் அல்லது திருத்தப்படும், அல்லது அவற்றுக்குப் பதில் புதிய ஒப்பந்தங்களும் உடன்படிக்கைகளும் செய்யப்படும் என்றும் இருதரப்புக்களும் இணங்குகின்றன.

## பகுதி 8

ஷரத்து 19. உள்நாட்டுச் சமாதானம் பற்றிய உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட பின்பும், ஜனநாயகக் கூட்டரசாங்கம் அமைக்கப்படும் முன்பும் நான்கிங் தேசிய அரசாங்கமும், அதன் சபை, அமைச்சுகள், கமிஷன்கள், இதர உறுப்புகள் ஆகியனவும் தற்காலிகமாகத் தொடர்ந்து இயங்கும்; ஆனால் விவகாரங்களை நடத்துவதில் சீன மக்கள் புரட்சிகர ராணுவக் கமிஷனைக் கலந்தாலோசிக்கவும் பல்வேறு இடங்களையும் பொறுப்பேற்பது, ஒப்படைப்பது ஆகியன சம்பந்தமான விஷயங்களில் மக்கள் விடுதலைச் சேனைக்கு உதவவும் வேண்டுமென்றும், ஜனநாயகக் கூட்டரசாங்கம் அமைக்கப்பட்ட பின் நான்கிங் தேசிய அரசாங்கம் ஜனநாயகக் கூட்டரசாங்கத்திடம் ஒப்படைத்து தன் முடிவைப் பிரகடனஞ்செய்ய வேண்டுமென்றும் இருதரப்புக்களும் இணங்குகின்றன.

ஷரத்து 20. நான்கிங் தேசிய அரசாங்கமும், அதன் பல்வேறு மட்ட ஸ்தல அரசாங்கங்களும், அவற்றின்கீழுள்ள சகல உறுப்புக்களும் ஒப்படைக்கப்படும் போது மக்கள் விடுதலைச் சேனையும், ஸ்தல மக்கள் அரசாங்கங்களும், சீன ஜனநாயகக் கூட்டரசாங்கமும் முன்னையவற்றின் ஊழியர்களில் தேசபக்தரும் பயனுடையோராயிருப்போருமான அனைவரையும் எடுத்து அவர்களுக்கு ஜன நாயகக் கல்வியளித்து, அவர்கள் போக்கிடமற்றவராகவும் வீடற்றவராகவும் ஆகாதிருக்க அவர்களுக்குத் தகுந்த பதவிகள் கொடுக்கப்படுமாறு கவனிக்க வேண்டும்.

ஷரத்து 21. மக்கள் விடுதலைச் சேனை சென்று பொறுப்பேற்கு முன்பு நான்கிங் தேசிய அரசாங்கமும் மாகாணங்கள், நகரங்கள், மாவட்டங்கள் ஆகியவற்றிலுள்ள அதற்குக் கீழ்ப்பட்ட ஸ்தல அரசாங்கங்களும் தத்தம் பிரதேசங்களில் சமாதானத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்கும், சகல அரசாங்க நிறுவனங்களையும் அரசுக்குரிய முயற்சிகளையும் (வங்கிகள், தொழிற்சாலைகள், சுரங்கங்கள், புகையிரத மார்க்கங்கள், தபாற் தந்திக் கந்தோர்கள், விமானங்கள், கப்பல்கள், கொம்பனிகள், பண்டகசாலைகள், சகல போக்குவரத்து வசதிகள் ஆகியன உட்பட) நாட்டுக்குரிய இதர அசையும் அசையாச் சொத்துக்களையும் மேற்பார்த்துப் பாதுகாப்பதற்கும் பொறுப்பாயிருக்க வேண்டும்; எந்த விதமான சீர்குலைவும், இழப்பும், நகர்த்தலும், மறைத்தலும், விற்பனையும் அனுமதிக்கப்படமாட்டா. நகர்த்தப்பட்ட அல்லது மறைக்கப்பட்ட நூல்கள், பத்திரங்கள், பழங்கலைப் பொருட்கள், விலை மதிப்புக்குரிய பொருட்கள், பொன்-வெள்ளிப் பாளங்கள், அந்நிய நோட்டுக்கள், சொத்துக்கள் உடைமைகள் அனைத்தும் மீண்டும் கையேற்கப்படும் வரை கண்டுபிடித்த இடத்திலேயே இருக்கவேண்டும். வெளிநாட்டுக்கு அனுப்பப்பட்ட அல்லது ஆரம்பந்தொட்டே வெளிநாட்டிலுள்ள சொத்துக்களைப் பொறுத்தவரை நான்கிங் தேசிய அரசாங்கம் அவற்றை மீட்டெடுப்பதற்கும் பாதுகாப்பதற்கும் பொறுப்பாயிருந்து அவற்றை ஒப்படைக்கத் தயாராயிருக்க வேண்டும்.

ஷரத்து 22. மக்கள் விடுதலைச் சேனை சென்று பொறுப்பேற்ற இடங்களில் சகல ஸ்தல அதிகாரமும் அரசுக்குரிய சொத்துக்களும் உடைமைகளும் ஸ்தல ராணுவக் கட்டுப்பாட்டுக் கமிஷன்கள், ஸ்தல மக்கள் அரசாங்கங்கள் அல்லது கூட்டரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட நிறுவனங்கள் ஆகியவற்றின் பொறுப்பிலிருக்கும்.

ஷரத்து 23. உள்நாட்டுச் சமாதானம் பற்றிய உடன்படிக்கை நான்கிங்

தேசிய அரசாங்கப் பிரதிநிதிக் கோஷ்டியால் கைச்சாத்திடப்பட்டு, அந்த அரசாங்கத்தால் அமுல்நடத்தப்பட்ட பின் சீனக் கம்யூனிஸ்ட் கட்சிப் பிரதிநிதிக் கோஷ்டி புதிய அரசியற் கலந்தாலோசனை மாநாட்டுத் தயாரிப்புக் கமிட்டிக்குப் பின்வரும் பிரேரணையை முன்வைக்கும் பொறுப்பை ஏற்க விரும்புகிறது: இந்த மாநாட்டுக்குப் பிரதிநிதிகளாக ஒரு தொகை தேசபக்தர்களை அனுப்ப நான்கிங் தேசிய அரசாங்கம் அனுமதிக்கப்பட வேண்டும்; புதிய அரசியற் கலந்தாலோசனை மாநாட்டுத் தயாரிப்புக் கமிட்டியின் அங்கீகாரத்தைப் பெற்ற பின் நான்கிங் தேசிய அரசாங்கத்தின் பிரதிநிதிகள் அம்மாநாட்டில் கலந்து கொள்ளலாம்.

ஷரத்து 24. நான்கிங் தேசிய அரசாங்கம் புதிய அரசியல் கலந்தாலோசனை மாநாட்டுக்குத் தன் பிரதிநிதிகளை அனுப்பிய பின், சீனக் கம்யூனிஸ்ட் கட்சி, ஒத்துழைப்பு நலன்களுக்காக நான்கிங் தேசிய அரசாங்கத்திலிருந்து ஒரு தொகைத் தேசபக்தர் ஜனநாயகக் கூட்டரசாங்கத்தில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் என்று மாநாட்டுக்கு முன்மொழியும் பொறுப்பை ஏற்க விரும்புகிறது.

இருதரப்புப் பிரதிநிதிக் கோஷ்டிகளும் பிரகடனஞ்செய்வதாவது: சீன மக்களின் விடுதலை, சீன தேசத்தின் சுதந்திரம், விடுதலை ஆகியவற்றின் பொருட்டும், யுத்தத்திற்கு விரைவாக முடிவுகட்டிச் சமாதானத்தை மீண்டும் பெறும் பொருட்டும் நாடு பரந்த அளவில் உற்பத்தியும் நிர்மாணமும் என்ற மகத்தான கடமை ஆரம்பிப்பதை எளிதாக்கவும், எமது நாடும் மக்களும் படிப்படியாகச் சுபிட்சத்தையும், பலத்தையும், நல்வாழ்வையும் பெறுவதற்காகவும் இந்த உடன்படிக்கையைக் கைச்சாத்திடும் பொறுப்பை நாம் இத்தால் ஏற்றுக் கொள்கிறோம். இந்த உடன்படிக்கை பூரணமாக நிறைவேற்றப்படுவதற்கு முழு நாட்டு மக்களும் ஒருவர் போல் ஐக்கியப்பட்டுப் போராடுவர் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டகையுடன் அமுல்நடத்தப்படும்.

# சீன மக்கள் விடுதலைச் சேனையின் அறிவிப்பு

**(1949, ஏப்ரல் 25)**

கோமிந்தாங் பிற்போக்காளர்கள் சமாதானத்திற்கான நிபந்தனைகளை நிராகரித்து விட்டுத் தேசத்திற்கும் மக்களுக்கும் எதிராக ஒரு கிராதக யுத்தத்தை நடத்துவதான தம் நிலையில் விடாப்பிடியாக உள்ளனர். நாடெங்கணுமுள்ள மக்கள், மக்கள் விடுதலைச் சேனை கோமிந்தாங் பிற்போக்காளர்களை விரைவாக அழித்தொழிக்கும் என நம்பியிருக்கின்றனர். மக்கள் விடுதலைச் சேனையைத் துணிகரமாக முன்னேறி, எதிர்க்கத் துணியும் சகல பிற்போக்குக் கோமிந்தாங் துருப்புக்களையும் அழித்தொழிக்கும்படியும், திருந்த மறுக்கின்ற யுத்தக் குற்றவாளிகள் எல்லோரையும் கைதுசெய்யும்படியும், முழு நாட்டினதும் மக்களை விடுதலையாக்கும்படியும், சீனாவின் பிரதேசத்தினதும் அரசுரிமையினதும் சுதந்திரத்தையும் ஒருமைப்பாட்டையும் பாதுகாக்கும்படியும், முழு நாட்டு மக்களும் ஆவலுடன் எதிர்பார்த்திருக்கும் நாட்டின் உண்மையான ஒருமைப்படுத்தலை ஏற்படுத்தும்படியும் உத்தரவிட்டுள்ளோம். மக்கள் விடுதலைச் சேனை செல்லுமிடங்களிலெல்லாம் சகல துறைகளையும் சேர்ந்த மக்கள் அதற்கு உதவி செய்வரென நாம் ஆவலுடன்

நம்பியிருக்கிறோம். இத்தால் நாம் முழு மக்களுடனும் சேர்ந்து கடைப்பிடித்தொழுகுவதாகப் பின்வரும் எட்டம்ச வாக்குத் தத்தத்தைப் பிரகடனம் செய்கிறோம்.

1. எல்லா மக்களதும் உயிர்களையும் உடைமைகளையும் பாது காப்பது. வர்க்கம், நம்பிக்கை, தொழில் வேறுபாடின்றிச் சகல துறைகளையும் சேர்ந்த மக்கள் அனைவரும் ஒழுங்கைப் பேண வேண்டுமெனவும் மக்கள் விடுதலைச் சேனையைக் குறித்து ஒத்துழைப்பான கண்ணோட்டத்தைக் கைக்கொள்ள வேண்டு மெனவும் எதிர்பார்க்கிறோம். மக்கள் விடுதலைச் சேனையைப் பொறுத்தமட்டில் அது சகல துறைகளிலுமான மக்களைக் குறித்து ஒத்துழைப்பான ஒரு கண்ணோட்டத்தைக் கைக்கொள் ளும். சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் குழப்பங்கள் விளைவித்துக் கொள்ளையடித்துச் சீர்குலைவு செய்யும் எதிர்ப்புரட்சியாளர் களும் பிற சீர்குலைவு செய்பவர்களும் கடுமையாக நடத்தப்படு வர்.

2. தேசிய முதலாளித்துவ வர்க்கத்தின் கைத்தொழில், வர்த் தக, விவசாய, மிருக வளர்ப்புத் தொழில் முயற்சிகளைப் பாது காப்பது. தனிப்பட்டோருடைமையான சகல தொழிற்சா லைகளும் கடைகளும் வங்கிகளும் கிட்டங்கிகளும் கலங்களும் துறைமுகங்களும் கமங்களும் மிருகப் பண்ணைகளும் பிற தொழில் முயற்சிகளும் விதிவிலக்கின்றி எந்த அத்துமீறலுக்குமெதிரா கப் பாதுகாக்கப்படும். எல்லாத் தொழில்களிலுமான தொழி லாளர்களும் ஊழியர்களும் வழமைபோல் உற்பத்தியை நடத் துவரென்றும் எல்லாக் கடைகளும் வழமைபோல் திறந்திருக் குமெனவும் நம்பப்படுகிறது.

3. அதிகாரி-மூலதனத்தைப் பறிமுதல் செய்வது. பிற்போக் குக் கோமிந்தாங் அரசாங்கத்தாலும் பெரும் அதிகாரித்துவவா

திகளாலும் நடத்தப்படும் எல்லாத் தொழிற்சாலைகளும் கடைகளும் வங்கிகளும் கிட்டங்கிகளும் கலங்களும் துறைமுகங்களும் புகையிரத மார்க்கங்களும் தபால், தந்தி, மின்சார, டெலிபோன், நீர்வினியோக சேவைகளும் கமங்களும் மிருகப் பண்ணைகளும் பிற தொழில் முயற்சிகளும் மக்கள் அரசாங்கத்தால் பொறுப்பேற்கப்படும். இத்தகைய தொழில் முயற்சிகளில், கைத்தொழிலிலும் வர்த்தகத்திலும் விவசாயத்திலும் மிருக வளர்ப்பிலும் ஈடுபட்டுள்ளவர்களான தேசிய முதலாளிகளின் உடைமையான தனிப்பட்ட பங்குகள், அவர்களின் உடைமை பரிசீலனை மூலம் நிரூபிக்கப்பட்ட பின், அங்கீகரிக்கப்படும். அதிகார-முதலாளித்துவ தொழில் முயற்சிகளில் வேலை செய்கின்ற அனைவரும் மக்கள் அரசாங்கம் பொறுப்பேற்குமுன் தத்தம் ஸ்தானங்களில் தொடர்ந்து கடமையாற்றவும் சரிபார்த்துப் பொறுப்பேற்பதற்குத் தயாரிப்பாக எல்லாச் சொத்துக்களினதும் யந்திராதிகளினதும் வரைப்படங்களினதும் கணக்குப் புத்தகங்களினதும் பதிவேடுகளினதும் இத்தியாதிபிறவற்றினதும் பாதுகாப்பிற்குப் பொறுப்பெடுக்கவும் வேண்டும். இந்த வகையில் உபயோகமான சேவையாற்றுவோர் வெகுமதியளிக்கப்படுவர்; தடங்கல் செய்கின்ற அல்லது சீர்குலைவு செய்கின்றவர்கள் தண்டிக்கப்படுவர். மக்கள் அரசாங்கம் பொறுப்பேற்ற பின் தொடர்ந்து வேலை செய்ய விரும்புபவர்கள், நாதியற்றும் வீடற்றும் போகாதபடி அவர்களின் திறமைகளுக்கு ஏற்ப வேலை தரப்படுவர்.

4. பொது, தனியார் பாடசாலைகள், வைத்தியசாலைகள், கலாச்சார, கல்வி நிறுவனங்கள், விளையாட்டு மைதானங்கள், பிற பொதுஜன நல்வாழ்வு நிறுவனங்கள் அனைத்தையும் பாதுகாப்பது. இந்த நிறுவனங்களில் உள்ள ஊழியர்கள் எல்

லோரும் தம் ஸ்தானங்களில் இருந்து வழமைபோல் கடமை யாற்றி வருவரென நம்பப்படுகிறது; மக்கள் விடுதலைச் சேனை அவர்களைத் தாக்கப்படுவதிலிருந்து பாதுகாக்கும்.

5. திருந்த மறுக்கின்ற யுத்தக்குற்றவாளிகளும் மிகக் கிராதகமான குற்றங்களிழைத்துள்ள எதிர்ப்புரட்சியாளர்களும் நீங்கலாக, கோமிந்தாங்கின் மத்திய, மாகாண, நகர, மாவட்ட அரசாங்கங்களிலான உயர்ந்த, தாழ்ந்த உத்தியோகத்தர்கள் எவரையுமோ, ''தேசிய சபை''யின் பிரதிநிதிகள் எவரையுமோ, சட்ட, கட்டுப்பாட்டு யுவான்களின் எந்த அங்கத்தினர்களையுமோ, அரசியல் கலந்தாலோசனைச் சபைகளின் அங்கத்தினர்கள் எவரையுமோ, பொலீஸ் அதிகாரிகள் எவரையுமோ, டிஸ்திரிக்ட், பட்டின, கிராம, பாஓ-ஜியா[1] உத்தியோகத்தர்கள் எவரையுமோ, அவர்கள் ஆயுதம் தரித்த எதிர்ப்பைக் காண்பிக்காமலும் சீர்குலைவுக்குச் சதிசெய்யாமலும் உள்ளவரை, மக்கள் விடுதலைச் சேனையும் மக்கள் அரசாங்கமும் கைது செய்யவோ சிறைவைத்திருக்கவோ கௌரவக் குறைவிற்குட்படுத்தவோ மாட்டா. இந்த நபர்களெல்லோரும் பொறுப்பேற்பை எதிர்பார்த்துத் தத்தம் பதவி ஸ்தானங்களிலிருக்கும்படியும் மக்கள் விடுதலைச் சேனையினதும் மக்கள் அரசாங்கத்தினதும் உத்தரவுகளுக்கும் கட்டளைகளுக்கும் அமைந்து நடக்கும்படியும் தத்தம் காரியாலயங்களின் எல்லாச் சொத்துக்களினதும் பதிவேடுகளினதும் பாதுகாப்பிற்குப் பொறுப்பெடுக்கும்படியும் பணிக்கப்படுகின்றனர். இவர்களிற் தம்மை ஏதேனுமொரு வேலைக்கு உபயோகமானவர்களாக்கிக் கொள்வோரும் மோசமான பிற்போக்குச் செயலெதையுமோ பிற பட்டவர்த்தனமான துர்ச்செயலெதையுமோ இழைக்காதவர்களுமானோரை வேலைக்கு அமர்த்துவதை மக்கள் அரசாங்கம் அனுமதிக்கும்.

சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திச் சீர்குலைவிலோ, களவிலோ, கையாடலிலோ ஈடுபடுகின்ற, அல்லது பொது நிதிகளுடனே சொத்துக்களுடனே பதிவேடுகளுடனே கம்பிநீட்டுகின்ற, அல்லது கணக்குச் சமர்ப்பிக்க மறுக்கின்ற நபர்களுக்குத் தண்டனை வழங்கப்படும்.

6. நகரங்களிலும் கிராமியப் பகுதிகளிலும் சமாதானத்தையும் பந்தோபஸ்தையும் உறுதிப்படுத்தவும் பொது ஒழுங்கைப் பேணவும் வேண்டி, அலைந்துதிரிவோர் அணிகலைக்கப்பட்ட படைவீரர்கள் அனைவரும் தத்தம் ஸ்தலங்களிலான மக்கள் விடுதலைச் சேனையிடமோ மக்கள் அரசாங்கங்களிடமோ சென்று தம்மை அறிவித்துக்கொள்ளவும் சரணடையவும் வேண்டுமெனப் பணிக்கப்படுகின்றனர். தாமாக முன்வந்து அவ்வாறு செய்து, தம் ஆயுதங்களையும் கையளித்து விடுகின்றவர்கள் எவருக்கும் எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படமாட்டாது. தம்மை அறிவித்துக்கொள்ள மறுக்கின்ற, அல்லது தம் ஆயுதங்களை மறைக்கின்றவர்கள் கைது செய்து விசாரிக்கப்படுவர். அலைந்துதிரிவோருக்கும் அணிகலைக்கப்பட்ட படைவீரர்களுக்கும் தங்க இடமளித்து, அவர்களைப்பற்றி அதிகாரிகளிடம் அறிவிக்காமலிருக்கின்ற நபர்கள் உரியபடி தண்டிக்கப்படுவர்.

7. கிராமியப் பகுதிகளிலுள்ள நிலப்பிரபுத்துவ நில உடைமைமுறை அநியாயமானது, அது ரத்தாக்கப்படும். எனினும், அது உரிய தயாரிப்பின் பின்னர் படிப்படியாகவே ரத்தாக்கப்படும். பொதுவாகக் கூறினால், குத்தகையினதும் வட்டியினதும் குறைப்பு முதலிலும் நில வினியோகம் பின்னரும் வர வேண்டும்; மக்கள் விடுதலைச் சேனை ஓரிடத்திற்கு வந்து சேர்ந்து, அங்கு கணிசமான காலத்திற்கு வேலை செய்த பின்னர் மட்டுமே

நிலப் பிரச்சினையை உண்மையாகத் தீர்ப்பது பற்றிப் பேசுவது சாத்தியம். விவசாயி வெகுஜனங்கள் தம்மை ஸ்தாபனப் படுத்தி, மக்கள் விடுதலைச் சேனைக்குப் பல்வேறு பூர்வாங்க சீர்திருத்தங்களை நடத்த உதவி செய்ய வேண்டும். அதே வேளையில், அவர்கள், தற்போதைய விவசாய உற்பத்தி மட்டம் குறைவதற்கு அனுமதியாதிருக்கக் கூடியதாகத் தம் கம வேலை யிலும் கடுமையாக உழைக்கவும், தம் சொந்த வாழ்வைச் சிறப்பாக்கிக்கொள்ளுவதற்கும், நகரங்களிலுள்ள மக்களுக்கு வர்த்தகத் தானியம் அளிப்பதற்கும் பின்னர் அதைப் படிப் படியாக உயர்த்தவும் வேண்டும். நகர நிலமும் கட்டடங்களும் கிராமிய நிலப் பிரச்சினையைப் போன்று அதே விதமாகக் கையாளப்பட மாட்டா.

8. அந்நிய நாட்டவர்களின் உயிர்களையும் உடைமைகளையும் பாதுகாப்பது. அந்நிய நாட்டவர்கள் அனைவரும் தம் வழமை யான கருமங்களை ஆற்றிவருவரென்றும் ஒழுங்கைக் கடைப் பிடிப்பரெனவும் நம்பப்படுகிறது. அந்நிய நாட்டவர்கள் அனை வரும் மக்கள் விடுதலைச் சேனையினதும் மக்கள் அரசாங்கத்தி னதும் உத்தரவுகளுக்கும் கட்டளைகளுக்கும் அமைந்து நடக்க வேண்டும்; வேவுபார்த்தலிலீடுபடவோ, சீனாவின் தேசிய சுதந் திரமும் மக்களின் விடுதலையுமாகிய இலட்சியத்திற்கெதிராகச் செயலாற்றவோ, சீன யுத்தக் குற்றவாளிகளுக்கோ எதிர்ப் புரட்சியாளர்களுக்கோ, சட்டத்தை மீறும் பிறருக்கோ புகலி டமளிக்கவோ கூடாது. இல்லையேல், அவர்கள் மக்கள் விடு தலைச் சேனையாலும் மக்கள் அரசாங்கத்தாலும் சட்டப் பிர காரம் கையாள்ப்படுவர்.

மக்கள் விடுதலைச் சேனை கறாரான கட்டுப்பாடுடையது; அது தான் வாங்குவதிலும் விற்பதிலும் நியாயமாக நடந்து

கொள்கிறது; மக்களிடமிருந்து ஒரு ஊசியையோ நூற் துண்டையோகூட எடுத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவதில்லை. நாடெங்குமுள்ள மக்கள் சமாதானமாக வாழ்ந்தும் வேலை செய்தும் வருவர், வதந்திகளை நம்பவோ பொய்யான பயங்களைக் கிளப்பவோ மாட்டார்கள் என நம்பப்படுகிறது. இவ்வறிவிப்பு இத்தால் பூரண விசுவாசத்துடனும் ஆர்வத்துடனும் விடுக்கப்படுகிறது.

மாஓ சேதுங்
சீன மக்கள் புரட்சிகர ராணுவக் கமிஷனின் தலைவர்

சு தே
சீன மக்கள் விடுதலைச் சேனையின் தலைமைத் தளபதி

# குறிப்பு

1. பாஓ-ஜியா கோமிந்தாங் பிற்போக்குவாதிகள் தம் பாஸிஸ ஆட்சியை அடிப்படை மட்டத்தில் அமுல்படுத்திய அரசியல் நிர்வாக ஸ்தாபனமாகும். 1932 ஆகஸ்ட் 1ந் திகதி சியாங் கை-ஷேக், ஹோனன், ஹுபெய், அன்ஹுய் மாகாணங்களை அடக்கிய ''மாவட்டங்களில் பாஓகளினதும் ஜியாகளினதும் அமைப்பிற்கும் ஜனத்தொகைக் கணிப்பிற்குமான பிரமாணங்க''ளைப் பிரகடனம் செய்தான். அப்பிரமாணங்கள், ''பாஓவும் ஜியாவும் குடித்தனங்களினடிப்படையில் அமைக்கப்படும், ஒவ்வொரு குடித்தனத்திற்கும், பத்துக் குடித்தனங்களாலான ஒவ்வொரு ஜியாவிற்கும், பத்து ஜியாக்களாலான ஒவ்வொரு பாஓவிற்கும் ஒவ்வொரு தலைவரிருப்பார்'' என விதித்தன. அயலவர்கள் ஒருவரொருவரின்

நடவடிக்கைகளை அவதானித்து அவற்றை அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்த வேண்டுமெனப் பணிக்கப்பட்டனர்; ஒருவர் குற்றவாளியாகக் காணப்படுமி. டத்து எல்லோரும் தண்டிக்கப்படுவர்; கட்டாய உழைப்புப் பெறுவதற்கான எதிர்ப்புரட்சிகர முறைகளும் விதிக்கப்பட்டிருந்தன. 1934 நவம்பர் 7ந் திகதி கோமிந்தாங் அரசாங்கம் இந்தப் பாஸிஸ ஆட்சி அமைப்பு தன்ஆட்சியின் கீழான எல்லா மாகாணங்களிலும் நகரங்களிலும் நிறுவப்படுமென உத்தியோகபூர்வமாக அறிவித்தது.

விடியல்